# புதுச்சிருஷ்டியின் குடும்பமும், கடமைகளும்

- ஏழாம் தூதனின் கட்டுரைகள்

# புதுச்சிருஷ்டியின் குடும்பமும், கடமைகளும்

[*தமிழாக்கம்*]

**பாஸ்டர் சார்லஸ் டேஸ் ரசல் அவர்களினால், புதுச்சிருஷ்டியின் பூலோக குடும்பம் மற்றும் அவர்கள் சார்ந்த கடமைகள் தொடர்பாக எழுதப்பட்ட கட்டுரைகள் அடங்கின தொகுதி.**

# முகவுரை

"ஒருவன் தன் சொந்த ஜனங்களையும் விசேஷமாகத் தன் வீட்டாரையும் விசாரியாமற்போனால், அவன் விசுவாசத்தை மறுதலித்தவனும், அவிசுவாசியிலும் கெட்டவனுமாயிருப்பான்."

(1 தீமோத்தேயு 5:8)

சீஷனாகிய தீமோத்தேயுவுக்கும், ஏழு காலக்கட்ட சபைகளை உள்ளடக்கின முழுச்சுவிசேஷ யுகத்திலுள்ளவர்களுக்கும் வழங்கப்பட்ட அப்போஸ்தலனாகிய பவுல் சார்பிலுள்ள ஆலோசனையாகவும், அறிவுரையாகவும் காணப்படும் இந்த வார்த்தைகளை ஒருவன் - அதாவது புதிய சிருஷ்டியாகிய கிறிஸ்தவன் கருத்தில் எடுத்துக்கொள்கையில், அவன் இந்த வார்த்தைகளை ஜெபத்துடன் தியானம்பண்ணி, அறிவுரைகளை எடுத்துக்கொள்கிறவனாய் இருக்க வேண்டும்! இதை அவன் புதுச்சிருஷ்டியிலுள்ள குடும்பத்திற்கடுத்த பொறுப்புகளினுடைய கண்ணோட்டத்தின் அடிப்படையில் விசேஷமாய்ப் பார்க்க வேண்டும்.

இது ஒவ்வொரு புதுச்சிருஷ்டியும் அவனது குடும்பத்தின் விஷயத்தில், திருமணத்தின் விஷயத்தில் மற்றும் பிள்ளைகளின் விஷயத்திலுள்ள கடமைகள் மற்றும் பொறுப்புகளை விசேஷமாய்க் குறிப்பிடுகின்றதாய் இருக்கின்றது. இவ்வசனத்தில் அப்போஸ்தலனால் குறிப்பிடப்படும், "விசுவாசம்" என்ற வார்த்தைத் தொடர்பாகச் சகோ. ரசல் அவர்கள் எழுதுகிறதாவது......

"விசுவாசம்" என்பது அன்பை, அனுதாபத்தை, மற்றவர்களுக்காக அதிலும் விசேஷமாக விசுவாச வீட்டாருக்கான அக்கறையை மற்றும் பராமரிப்பை உள்ளடக்குகின்றதாய் இருக்கின்றது.

இப்பொழுதும் அன்புக்குரிய சகோதர சகோதரிகளே, பலதரப்பட்ட சவாலான சந்தர்ப்பங்களை எதிர்க்கொள்வதற்கும், "பரத்திலிருந்து வரும் ஞானத்தை" பெருக்கிக்கொள்வதற்கு வேண்டி திருமணமானவர்களாக அல்லது திருமணமாகாதவர்களாக...... கணவனாக அல்லது மனைவியாக...... தகப்பனாக அல்லது தாயாக...... பருவ வயது பிள்ளையாக அல்லது வாலிபர்களாக...... நம் ஒவ்வொருவருக்கும் இருக்கும் தனிப்பட்ட சூழ்நிலைகளுக்கு ஏற்ப சரியான ஆலோசனையைப் பெற்றுக்கொள்வதற்கு அதிக ஜாக்கிரதையான ஆராய்ச்சிகள் நமக்கு அவசியமாய் இருக்கின்றது. (யாக்கோபு 3:17) ஆகையால் இந்த ஆராய்ச்சிக்கு, உங்களுக்கு உதவியாக இருக்கும்படிக்கு இந்தப் புத்தகத்தை நாங்கள் விசேஷமாய்த் தொகுத்து மொழியாக்கம் செய்து வழங்குகின்றோம். இப்புத்தகத்தில், இப்பாடப் பொருள் சம்பந்தமாகச் சகோ. ரசல் அவர்கள் எழுதியுள்ள விஷயங்களை ரீப்பிரிண்ட்ஸ் கட்டுரைகளிலிருந்தும், அவரிடம் கேட்கப்பட்ட கேள்விக்கு அவர் அளித்துள்ள பதில்களிலிருந்தும், அவரது வேறு சில கட்டுரைகளிலிருந்தும் பிரித்தெடுத்து, தொகுத்து மொழியாக்கம் செய்திருக்கின்றோம்.

"அவரது குமாரனுடைய சாயலாகத்தக்கதாக" நாம் தினந்தோறும் நாடிக்கொண்டிருக்கையில், இந்தப் புத்தகமானது நமக்கு ஆசீர்வாதமாகவும்...... நமது புதுச்சிருஷ்டி ஜீவியத்தை மெருகூட்டுவதாகவும் இருக்குமென்று நாங்கள் நம்புகின்றோம். (ரோமர் 8:29)

இத்தகைய சிந்தைகளுடனும்...... ஜெபத்துடனும் இந்தப் புத்தகத்தை நாங்கள் சமர்ப்பிக்கின்றோம்! நம்முடைய பரமபிதாவும், நிச்சயிக்கப்பட்ட மணவாளனுமாகிய நமது ஆண்டவரும், நம் யாவரையும் ஆசீர்வதிப்பார்களாக! தேவன் தாமே நம்முடைய இருதயங்களிலும், ஜீவியங்களிலும் இந்தப் பிரயாசங்களை ஆசீர்வதிப்பாராக!

- வெளியீட்டாளர்.

* * *

# பொருளடக்கம்


| வ. எண். | ரீப்பிரிண்ட்ஸ் | பொருள் | பக்கம் |
|---|---|---|---|
| | | ரீப்பிரிண்ட்ஸ் கட்டுரைகள் | |
| 1. | R1554 | அந்நிய நுகத்திலே பிணைக்கப்படாதிருப்பீர்களாக | 1 |
| 2. | R1551 | ஸ்திரீ மனுஷனுக்கு உதவியாவாள், துணைவியாவாள் | 10 |
| 3. | R4854 | தன் சொந்த வீட்டாரை ஆதரித்தல் | 20 |
| 4. | R3088 | பூலோக மற்றும் பரலோக மணவாளன்களுக்கு உண்மையாய்... | 23 |
| 5. | R2984 | முதலாவது தேவன் - பின்பு அவர் நியமனங்கள் | 25 |
| 6. | R4749 | சுவாரசியமான கேள்விகள் | 31 |
| 7. | R4097 | தலையைக் கனப்படுத்துதல் அல்லது கனவீனப்படுத்துதல் | 33 |
| 8. | R3826 | ஸ்திரீயானவளின் சரி மற்றும் தவறு | 37 |
| 9. | R4190 | கர்த்தருக்குச் செய்த பொருத்தனைகளை நிறைவேற்று | 45 |
| 10. | R4899 | அதிருப்தியின் ஆவி | 49 |
| 11. | R4458 | உங்களைக்குறித்தும், சபையைக்குறித்தும் எச்சரிக்கையாயிருங்கள் | 54 |
| 12. | R2488 | கேள்வி, பதில்கள் | 55 |
| 13. | R2747 | கேள்வி, பதில்கள் | 57 |
| 14. | R2100 | பொதுவான ஆர்வத்தைத் தூண்டும் கேள்விகள் | 59 |
| 15. | R797 | குடும்ப ஜெபம் | 62 |
| 16. | R4977 | நீதியான கண்டித்தல் மற்றும் தவறை மன்னித்தல் | 63 |
| 17. | R5905 | பரத்துக்குரியவைகள்பால் நமது நாட்டங்களைப் பயிற்றுவித்தல் | 71 |
| 18. | R2590 | இயேசு அவனை நோக்கி எனக்குப் பின்சென்று வா என்றார் | 74 |
| 19. | R5245 | பூரண அன்பு பயத்தைப் புறந்தள்ளும் | 77 |
| 20. | R3805 | ஆண்டவரே ஜெபம்பண்ண எங்களுக்குப் போதித்தருளும் | 77 |
| 21. | R3204 | தேவன் ஆச்சரியமான விதத்தில் செயல்படுவார் | 78 |
| 22. | R2345 | எலிசா திரும்பக்கொடுத்தலின் வேலையைச் செய்தல் | 79 |
| 23. | R4834 | தேவனுக்கு ஏற்புடையதாயிருத்தல் | 81 |
| 24. | R4917 | அன்பைக்குறித்துச் சுயபரிசோதனை | 81 |
| 25. | R5954 | சுவாரசியமான கடிதங்கள் | 82 |
| 26. | R4019 | மற்றவர்களுக்கான நமது கடமைகள் | 84 |
| 27. | R1275 | அன்பு மற்றும் நீதியின் இணைந்த கோரிக்கைகள் | 86 |
| 28. | R940 | இவைகளுக்கும் அதிகமாகவா? | 87 |
| 29. | R934 | நான் என்ன செய்யச் சித்தமாயிருக்கிறீர் | 89 |
| 30. | R5186 | தேவாலயத்தில் கொண்டிருக்கவேண்டிய நல்லொழுக்கம் | 93 |
| 31. | R2688 | அவைகளை நீங்களும் அவர்களுக்குச் செய்யுங்கள் | 96 |
| 32. | R4093 | சில சுவாரசியமான கடிதங்கள் | 101 |
| 33. | R4115 | கர்த்தருடைய சம்பத்தைக் கண்டுபிடித்தல் | 102 |
| 34. | R4199 | நன்றி மறத்தல் எனும் பாவம் | 103 |
| 35. | R5093 | பரிசுத்த ஆவியினுடைய மறுரூபப்படுத்தும் தாக்கம் | 105 |
| 36. | R5555 | இராஜரிக அன்பின் பிரமாணம் | 105 |
| 37. | R5229 | ஒருமித்து வாசம்பண்ணுதல் | 109 |
| 38. | R4871 | ஜீவியத்தின் கடமைகள் விஷயத்தில் கிறிஸ்தவனின் மனோநிலை | 110 |
| 39. | R5498 | எப்படி மற்றும் எங்கு நான் ஊழியம் புரிந்திடலாம்? | 111 |
| 40. | R2665 | எங்கள் கடனாளிகளுக்கு மன்னிக்கிறதுபோல...மன்னியும் | 114 |

| வ. எண். | ரீப்பிரிண்ட்ஸ் | பொருள் | பக்கம் |
|---|---|---|---|
| 41. | R5353 | விவாகம் கனமுள்ளதாகும் | 119 |
| 42. | R5900 | விவாகம் மீதான மேய்ப்பரது சில ஆலோசனைகள் | 120 |
| 43. | R3786 | வெற்றிக்கு இன்றியமையாதது விசுவாசம் | 123 |
| 44. | R5523 | யுரேக்கா டிராமா | 125 |
| 45. | R4776 | தன் பேரப்பிள்ளைகளைக் கொன்றாள் | 126 |
| 46. | R2068 | சாலொமோனின் பாவங்கள் | 127 |
| 47. | R5223 | சிலுவை சுமத்தலே வளருவதற்கான வழி | 128 |
| 48. | R3107 | என் உடன்படிக்கையை மீறாமல் இருப்பேன் | 129 |
| 49. | R4716 | சில சுவாரசியமான கேள்விகள் | 131 |
| 50. | R4959 | விவாகம்பண்ண வேண்டுமா (அ) விவாகம்பண்ண வேண்டாமா? | 132 |
| 51. | R4823 | சிறு பிள்ளைகள் என்னிடத்தில் வருகிறதற்கு இடங்கொடுங்கள் | 137 |
| 52. | R5613 | தாவீது இராஜாவின் கொள்ளுப்பாட்டி | 138 |
| 53. | R4697 | வாட்ச் டவரிலிருந்து ஒரு பார்வை | 139 |
| 54. | R4752 | வாட்ச் டவரிலிருந்து ஒரு பார்வை | 140 |
| 55. | R3607 | ஒரு துன்மார்க்கத் தகப்பனுடைய நல்ல குமாரன் | 142 |
| 56. | R3110 | உம்முடைய ஜனம், என்னுடைய ஜனம் | 147 |
| 57. | R2782 | சுவாரசியமான கேள்விகளுக்குப் பதில் | 148 |
| 58. | R5903/R4399 | மக்கெதோனியனின் வேண்டுகோள் | 150 |
| 59. | R5859 | முழுமையான சீர்க்கேடு எனும் உபதேசம்...முரணானது | 151 |
| 60. | R5650 | நாம் நம்மையே நியாயந்தீர்க்கக்கடவோம் | 152 |
| 61. | R5700 | நன்றியற்ற கலகவாதியான அப்சலோம் | 153 |
| 62. | R5612 | சிம்சோனின் சோகம் | 156 |
| 63. | R5571 | விவேகி ஆபத்தைக்கண்டு மறைந்துகொள்ளுகிறான் | 158 |
| 64. | R5475 | சித்தத்தில் சுயாதீனம் | 161 |
| 65. | R5487 | சுயக்கட்டுப்பாட்டின் அவசியம் | 161 |
| 66. | R4839 | திவ்விய நீதி மற்றும் இரக்கம் | 162 |
| 67. | R5250 | அழகுள்ள பிள்ளையாகிய மோசே | 164 |
| 68. | R4837 | தேவபக்தியுள்ள ஒரு வாலிப இராஜா | 165 |
| 69. | R5287 | எனக்குப் பிறன் யார்? | 168 |
| 70. | R5214 | முகாந்தரமில்லாமல் பகைக்கப்பட்டார் | 170 |
| 71. | R4521 | காவல் கோபுரத்திலிருந்து கண்ணோட்டங்கள் | 170 |
| 72. | R4090 | கர்த்தாவே சொல்லும் அடியேன் கேட்கிறேன் | 171 |
| 73. | R3921 | தேவனுடைய சாயலில் மனுஷன் சிருஷ்டிக்கப்பட்டான் | 179 |
| 74. | R3710 | பரிசுத்தர், குற்றமற்றவர், பூரணர் | 179 |
| 75. | R3598 | தன் தகப்பனுக்குக் கனவீனமாயிருந்தவன் | 181 |
| 76. | R3462 | என்னைக் கனம்பண்ணுகிறவர்களை நானும் கனம்பண்ணுவேன் | 183 |
| 77. | R3325 | விலை அதிகமுள்ள பேரம் | 184 |
| 78. | R3148 | தேவனுடைய ஊழியத்திற்கு எதுவுமே தகுதியானவையல்ல | 185 |
| 79. | R2991 | கேள்வி, பதில்கள் | 189 |
| 80. | R2558 | இயேசுவானவர் ஞானத்திலும், வளர்த்தியிலும் விருத்தியடைந்தார் | 191 |
| 81. | R2766 | சுவாரசியமான கேள்விகளுக்குப் பதிலளிக்கப்பட்டது | 192 |
| 82. | R2902 | அழகான குழந்தையாய் இருந்தார் | 193 |
| 83. | R2388 | அதை வெறுத்துவிடு,...அதை விட்டுவிலகி கடந்துபோ | 198 |

| வ. எண். | ரீப்பிரிண்ட்ஸ் | பொருள் | பக்கம் |
|---|---|---|---|
| 84. | R2319/R5135 | இழிவான கிறிஸ்தவர்களும், நல்ல அவிசுவாசிகளும் | 201 |
| 85. | R2004 | நமது பிள்ளைகளுக்காய் ஜெபங்கள் | 206 |
| 86. | R2073 | அனைத்திலும் இச்சையடக்கமுடையவர்களாய் இருங்கள் | 207 |
| 87. | R1963 | உபத்திரவ காலத்தின்போது நமது பிள்ளைகள் | 209 |
| 88. | R1142 | பிள்ளைகளுக்கான காவல் கோபுரங்கள் | 212 |
| 89. | R5908 | கடைசியாக, சகோதரரே… சிந்தித்துக்கொண்டிருங்கள் | 215 |
| 90. | R3267 | என் மகனாகிய அப்சலோமே என் மகனே | 216 |
| 91. | R2279 | யோவான்ஸ்நானன் மற்றும் அவரது கொலையாளிகள் | 217 |
| 92. | R5296 | ஏலியின் வாழ்க்கையிலிருந்த நடைமுறைப்பாடங்கள் | 218 |
| 93. | R4942 | ஆலயத்தில் அர்ப்பணிப்பு | 220 |
| 94. | R3593 | நம்முடைய அன்றாட ஜீவியத்திற்கான…கோட்பாடுகள் | 221 |
| 95. | R5832 | கர்த்தாவே ஜெபம்பண்ணக் கற்றுத்தாரும் | 221 |
| 96. | R4192 | இஸ்ரயேலின் தவறான நடத்தை | 222 |
| 97. | R3393 | ஒரு நல்ல இராஜாவின் தவறு | 223 |
| 98. | R3093 | யாரைச் சேவிப்பீர்கள் என்று இன்று தெரிந்துகொள்ளுங்கள் | 225 |
| 99. | R2337 | சுவாரசியமான கேள்விகள் | 226 |
| 100. | R1882 | குழந்தையாகிய சாமுயேல் | 227 |
| 101. | R4911 | மாபெரும் சீர்த்திருத்தவாதி | 229 |
| 102. | R2365 | யோசபாத்தின் நல்ல இராஜ்யபாரம் | 229 |
| 103. | R2847 | ஆபிரகாம் மற்றும் லோத்தின் பரீட்சைகள் | 230 |
| 104. | R1671 | உன் வாலிபப்பிராயத்தில் | 232 |
| 105. | R2895 | சிறந்த ஒரு மனுஷனுடைய வாழ்க்கையின் முடிவு | 235 |
| 106. | R5167 | சொந்த அலுவல்களைப் பார்த்தல் | 236 |
| 107. | R2880 | முகாந்தரமில்லாமல் பகைக்கப்பட்டார் | 239 |
| 108. | R2885 | துன்பம் எனும் பள்ளிக்கூடத்தில்… | 240 |
| 109. | R3971 | இவனைக் கொல்லுவோம் வாருங்கள் | 241 |
| 110. | R4401 | பகலிலே நடக்கிறவர்கள் போலச் சீராய் நடக்கக்கடவோம் | 242 |
| 111. | R5318 | யுகத்தினுடைய ஓட்டப்பந்தயமும்--அதன்…சாட்சிகளும் | 243 |
| 112. | R1096 | தேவபக்தியுள்ளவர்களென்று சொல்லிக்கொள்ளுகிற… | 245 |
| 113. | R4268 | அன்புடன்கூடிய இரக்கம் ஓ! எத்துணை மகத்துவமாய் உள்ளது! | 254 |
| 114. | R4277 | துரோகம் புரிந்தவரிடத்தில் அன்பு பாராட்டப்பட்டது | 256 |
| 115. | பாஸ்டர் ரசல் அவர்களின் பதில்கள் | | 257 |
| 116. | பாஸ்டர் ரசல் அவர்களின் மற்றக் கட்டுரைகள் | | 281 |
| 117. | அட்டவணை | | 297 |

# ரீப்பிரிண்ட்ஸ் கட்டுரைகள்

R1554

## அந்நிய நுகத்திலே பிணைக்கப்படாதிருப்பீர்களாக

பிணைக்கப்படாத நிலைமையில் இருப்பவர்களாகிய - அதாவது திருமணம்பண்ணாதவர்களாய் இருப்பவர்களாகிய, அர்ப்பணிக்கப்பட்டவர்களுக்குக் கர்த்தரிடத்திலுள்ள, தங்களது அர்ப்பணிப்பின் வாக்குறுதியினை நிறைவேற்றிடுவதற்கு, இத்தகைய நிலைமையே மிகமிக அனுகூலமானதாய் இருக்குமென அப்போஸ்தலனாகிய பவுல் அறிவுரை வழங்குகின்றார் (2 கொரிந்தியர் 6:14; 1 கொரிந்தியர் 7:25-40). ஆனாலும் திருமணம்பண்ணாதவர்களாய் இருந்துவிடுவதற்கான அறிவுரை என்பது கட்டாயமாய்ச் செய்யப்பட வேண்டியதல்ல என்று நாம் புரிந்துகொள்ளும்படிக்கு அப்போஸ்தலன் விரும்புகின்றார் (1 கொரிந்தியர் 7:35, 36). திருமணம்பண்ணிடுவதற்கு யாரும் தடைப்பண்ணப் படுகிறதில்லை; திருமணம்பண்ணிடுவதற்குத் தடைப்பண்ணுகிறவர்களாகிய கள்ளப்போதகர்கள் கடுமையாய் ஒழுங்கிற்கு மீறினவர்கள் எனக் கண்டிக்கப்பட வேண்டியவர்களாய் இருக்கின்றனர் (1 தீமோத்தேயு 4:1-3). போப்மார்க்கமானது அதன் குருமார்கள் மீது கொண்டுவந்திட்டதான இந்தத் தடையானது, அதன் நாசகரமான சரித்திரத்தைக் கருமையாக்கிட்ட நாற்றமான கறைகளில் ஒன்றாகும். தேவன் திட்டம்பண்ணியிருந்ததுபோன்று திருமண உறவானது தூய்மையிலும், பரிசுத்தத்திலும் தக்கவைக்கப்படுமானால், திருமணம் இன்னுமே கனமிக்க ஒன்றாயிருக்கும் (எபிரெயர் 13:4). திருமண பந்தத்தில் இணைந்துள்ள இருவருமே ஒரே நுகத்தில் பிணைக்கப்பட்டவர்களாய் இருப்பார்களானால் மற்றும் அவர்களின் இருதயங்களானது ஒரே பரிசுத்த நோக்கத்திற்கடுத்த காரியங்களுக்காகத் துடிக்கும்போது - அதுவும் ஒருவேளை அந்த நோக்கமானது பூமிக்குரிய தளத்திற்கடுத்ததாய் இருந்து, சந்ததியாரைப் பெருக்குவதற்கும், சந்ததியைக் கர்த்தருக்கேற்ற சிட்சையிலும், போதனையிலும் வளர்த்துவதற்கும் என்று இருந்தாலும் சரி (ஆதியாகமம் 1:28; எபேசியர் 6:4) அல்லது ஆவிக்குரிய தளத்திற்கடுத்ததாய் இருந்து தேவனுடைய ஆவிக்குரிய குடும்பத்தாருக்கென்று நுகத்தில் பிணைக்கப்பட்டுள்ள உண்மையுள்ளவர்களெனச் சேர்ந்து வேலை செய்வதாய் இருந்தாலும் சரி . . . அந்த நோக்கத்திற்கடுத்த காரியங்களுக்காக இருதயம் துடிக்கும்போது, திருமணம் இன்னுமே கனமிக்க ஒன்றாயிருக்கும்.

எனினும் மிகவும் அபூர்வமாகவே, அர்ப்பணிக்கப்பட்டவர்கள் தேவனோடு தனித்துச் சஞ்சரிப்பதன் மூலமும், எல்லா விஷயங்களில் தன் விருப்பத்தை மாத்திரமே கலந்தாலோசிக்கப் பெற்றிருப்பதன் மூலமும், குடும்பத்திற்கடுத்த அக்கறையினால் முழுவதுமாய்த் தடைப்பண்ணப்படாததன் மூலமும் தங்கள் உடன்படிக்கையினை நன்கு நிறைவேற்ற முடிகின்றவர்களாய் இருப்பார்கள். இதுவே பவுல் அடிகளாருடைய கணிப்பாக இருந்தது; மேலும் இதுவே தங்கள் வாலிபப் பிராயத்தில் தங்கள் சிருஷ்டிகரை நினைவுகூருவதற்கு மறந்துபோனவர்களும் மற்றும் பல்வேறு கவலைகளில் சிக்கிக்கொள்வதற்கு முன்னதாகவும், தங்களின் தவறான போக்கினுடைய விளைவு காரணமாய்த் தடைப்படுவதற்கு முன்னதாகவும் தங்கள் வழியினைக் கர்த்தருக்கு ஒப்புக்கொடுப்பதற்கு மறந்துபோனவர்களுமான ஆயிரக்கணக்கானோரின் சாட்சியாக இருந்துள்ளது (பிரசங்கி 12:1; சங்கீதம் 37:5; நீதிமொழிகள் 3:5, 6).

1தீமோத்தேயு 5:14-ஆம் வசனத்தின் வார்த்தைகளானது கர்த்தருக்கு அர்ப்பணம் பண்ணியுள்ள வாலிபச் சகோதரிகள் பற்றியதாயிராமல், மாறாக 3 முதல் 16-வரையிலுள்ள வசனங்களுக்கு இசைவாக, அவ்வார்த்தைகள் சபையிலுள்ள இளம் விதவைகள் குறித்துப் பேசப்பட்டவையாயிருந்தது; இவர்கள் சபைக்குப் பொருளாதார விஷயத்தில் பாரமாய் இருத்தல் கூடாது. இத்தகையவர்களில் எவரேனும், அதாவது ஜீவபலியாய் ஜீவித்திடும் அர்ப்பணிக்கப்பட்டவர்கள் அல்லாதவர்கள் எவரேனும், விசுவாச வீட்டாரின் விசுவாசிகளாய் இன்னமும் இருப்பதினால், இவர்கள் திருமணம் முதலியவைகளைச்

செய்துகொள்வார்களாக. இப்படியாய்ப் பார்க்கும்போது இந்த வேதவாக்கியமானது, புதிய ஏற்பாட்டினுடைய பொதுவான போதனைகளுக்கு இசைவாகவே உள்ளது.

நாம் யாருக்கு மாத்திரம் பேசிக்கொண்டிருக்கின்றோமோ, அந்தத் தேவனுடைய அர்ப்பணிக்கப்பட்ட பிள்ளைகள் மத்தியில், ஒரு சிறுபான்மையினர் மாத்திரமே வாலிபப் பிராயத்திலும், இந்த ஜீவியத்தின் சிக்கல்களிலிருந்து விடுபட்டவர்களாகவும் காணப்படுகின்றனர். இத்தகையவர்கள் அனைவருக்கும், மேலே இடம்பெறும் அப்போஸ்தலனால் ஏவப்பட்டு எழுதப்பட்டுள்ளவைகளுக்கும் மேலாக வேறு எந்த அறிவுரையும் நாம் கூறிடுவதற்கில்லை. அவ்வசனங்களோடுகூட நாம் கூறிடுவதாவது: "உங்கள் சிலாக்கியங்கள் குறித்துக் கவனத்தில் எடுத்துக்கொள்ளாமல் இராதேயுங்கள்; உங்கள் உக்கிராணத்துவத்தை நன்கு பயன்படுத்திடுங்கள்; உங்களுக்கு முன்பாக வைக்கப்பட்டுள்ள ஓட்டத்தில், நம்முடைய மகிமையான மணவாளனாகிய, இயேசுவைத் தேவையான கிருபை மற்றும் ஐக்கியத்திற்காய் நோக்கிப்பார்த்துப் பொறுமையோடே ஓடுங்கள்; மரணப்பரியந்தம் உண்மையுள்ளவர்களாய் இருங்கள் மற்றும் நீங்கள் சோர்ந்து போகாதிருந்தால், ஏற்ற காலத்தில் மகிமையான பலனை அறுப்பீர்கள். குமாரத்தியே கேள், நீ உன் செவியைச் சாய்த்து சிந்தித்துக்கொள்; உன் ஜனத்தையும் உன் தகப்பன் வீட்டையும் (பூமிக்குரிய ஐக்கியங்களை) மறந்துவிடு. அப்பொழுது இராஜா உன் அழகில் (குணலட்சணத்தில்) பிரியப்படுவார்; அவர் உன் ஆண்டவர், ஆகையால் அவரைப் பணிந்துகொள்." (சங்கீதம் 45:10, 11)

இந்தக் கருத்துக்களானது உலகத்தாருக்குப் பொருந்துகிறதில்லை; மேலும் இவைகள் பரிசுத்தவான்கள் மீது கட்டாயமாகவும் காணப்படுகிறதில்லை. இந்தப் பரிந்துரையானது நலம் அளிக்கிறவைகளில் ஒன்றாகும் - இது தனிப்பட்ட வளர்ச்சிக்கும், கர்த்தருடைய பொதுவான வேலை முன்னேற்றம் அடைவதற்கும் உதவுகிறதாய் இருக்கும் மற்றும் இது மத்தேயு 19:12-ஆம் வசனத்தில் இடம்பெறும் கர்த்தருடைய போதனைகளுக்கு இணையானதாகும். உலகத்தில் இருப்பவர்கள் திருமணம் செய்துகொள்ளட்டும் மற்றும் உண்மையுள்ள, அன்புள்ள கணவன்மார்களென, மனைவிமார்களென மற்றும் பெற்றோர்களென உலகில் கனமிக்க ஸ்தானங்களை எடுத்துக்கொண்டு, நிறைவேற்றிடட்டும்; மேலும் வளமையும், மகிழ்ச்சியுமுள்ள இல்லங்களின் செல்வாக்கானது கூடுமானமட்டும் கடந்துவந்து, துயர்மிகுந்தவர்களின் மற்றும் குடும்பங்களற்றவர்களின் மகிழ்ச்சியற்ற சூழ்நிலைகளை நல்லதாக்கட்டும். அப்போஸ்தலனின் விசேஷித்த அறிவுரையோ... ஜீவபலியாய்க் காணப்படுவதற்கு அர்ப்பணம் பண்ணியுள்ளவர்களுக்கு - ஆண்டவரின் பயன்படுத்துதலுக்காய் முழுமையாய் ஒப்புக்கொடுத்துவிட்டு, மகா மேன்மையான பலனை அவரிடமிருந்து பெற்றுக்கொள்ளும்படிக்குக் காத்திருப்பவர்களுக்கு மாத்திரம் உரியதாகும்.

ஆனால் ஏற்கெனவே அவிசுவாசியுடன் பிணைக்கப்பட்டுள்ள நிலைமையிலும், அநேகம் கவலைகளினால் தடையோடு இருக்கும் நிலைமையிலும், அநேகம் குழப்பமான பிரச்சனைகளினால் மனவேதனையுள்ள நிலைமையிலும் காணப்படும் அர்ப்பணிக்கப்பட்டுள்ளவர்களில் காணப்படுவோருக்கு நாங்கள் கூறுவதாவது: "தைரியமாயிருங்கள்! இருளினின்று உங்களைத் தம்முடைய ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு அழைத்தவரும், மகிமை, கனம் மற்றும் அழியாமைக்கு நேராய் வழிநடத்திடும் இடுக்கமான வழிக்குள் உங்களை நடத்தினவருமானவர், இந்த வழியானது உங்களது தற்போதைய சூழ்நிலையில் உங்களுக்கு எவ்வளவு கடினமாயிருக்கும் என்று அறிவார்; மேலும் அவரது பொங்கி வழியும் கிருபை மூலமாய் உங்கள் அழைப்பையும், தெரிந்துகொள்ளுதலையும் உறுதிப்படுத்திடுவதற்கென, உங்களையும், உங்கள் திறமைகளையும் அவர் ஏற்றுக்கொண்டிட விரும்புகின்றார் என்பதை, அவருடைய அழைப்பானது சுட்டிக்காட்டுகின்றதாய் இருக்கின்றது." எனினும் அப்போஸ்தலன் முன்னெச்சரித்தது போன்று, இத்தகையவர்களுக்கு மாம்சத்தில் பிரச்சனைக் காணப்படவே செய்யும் (1 கொரிந்தியர் 7:28).

விசுவாசியாய் இருக்கும் கணவன், அவிசுவாசியான தன் மனைவியினைத் தள்ளிவிடக்கூடாது மற்றும் விசுவாசியாய்க் காணப்படும் மனைவி, அவிசுவாசியான தன் கணவனைத் தள்ளிவிடக்கூடாது, மாறாக சமாதானமாயிருக்க நாட வேண்டும் எனும் அப்போஸ்தலனுடைய அறிவுரையை நினைவுகூருகையில் (1 கொரிந்தியர் 7:10-16) அர்ப்பணம் பண்ணியுள்ளதான விசுவாசி தேவன் முன்னிலையிலும், அந்நிய நுகத்தில் பிணைக்கப்பட்டுள்ள தன் ஜீவித துணையின் முன்னிலையிலும் எத்தனை ஜாக்கிரதையாய் நடக்க வேண்டும் என்றும் நாம் காண்கின்றோம் (மத்தேயு 19:3-10). எத்தனை தாழ்மை அவசியம் மற்றும் வரும் அநேகம் சோதனைகளை எத்துணைப் பொறுமையோடு சகித்திட வேண்டும். எனினும் அன்புக்குரியவர்களே, அப்படிச் சோதிக்கப்படும்போது, பொறுமையானது பூரண கிரியைச் செய்யக்கடவது மற்றும் ஏற்றவேளையில் நீங்கள் சுத்தமாக்கப்பட்டவர்களாகச் சூளையினின்று வெளியே வருவீர்கள். பரிசுத்த அலங்காரத்தை வெளிப்படுத்துவதற்குக் கற்றுக்கொள்ளுங்கள்; ஒருவேளை இது உங்கள் வாழ்க்கைத் துணையின் மனதை மாற்றாவிட்டாலும், இது அவனுக்கு அல்லது அவளுக்கு எதிராய்ச் சாட்சியாகவாகிலும் இருக்கும் மற்றும் பரிசுத்தமாகுதலின் தாக்கமானது, குழந்தைகள் மற்றும் அயலார்கள் மீது இல்லாமல் போகாது; தேவனுக்குத் துதி உண்டாகுவதாக!

இத்தகைய மனைவி, மனைவிக்குரிய கடமைகளைக் கவனமாய் நிறைவேற்றிடுவாளாக மற்றும் ஒருவேளை தன் கணவன் மீதான மதிப்பைப் பெரிதளவு இழந்துபோக வேண்டிய நிலைமைக் குள்ளானாலும், அவள் கணவன் என்ற உறவிற்கு மதிப்புக்கொடுப்பாளாக. மேலும் இத்தகைய கணவன், குடும்ப ஜீவிதத்திற்கடுத்த பராமரிப்பினுடைய வேலைகள் வலியுள்ளதாக இருப்பினும், கணவனுக்குரிய கடமைகளைக் கவனமாய் நிறைவேற்றிடுவானாக. "மனைவியானவளே, நீ உன் புருஷனை இரட்சிப்பாயோ அல்லவோ உனக்கு எப்படித் தெரியும்? புருஷனே, நீ உன் மனைவியை இரட்சிப்பாயோ அல்லவோ உனக்கு எப்படித் தெரியும்? ஆகிலும், அவிசுவாசி பிரிந்துபோனால் (அவன்/அவள்) பிரிந்துபோகட்டும், இப்படிப்பட்ட விஷயத்தில், சகோதரனாவது சகோதரியாவது அடிமைப்பட்டவர்களல்ல. சமாதானமாயிருக்கும்படிக்கே தேவன் நம்மை அழைத்திருக்கிறார்" (1 கொரிந்தியர் 7:16; 7:15).

ஆனால் திருமண பந்தத்தினைப் பிரித்திடும் சரியான முகாந்திரமென ஒரு காரணமானது, வேதவாக்கியங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது (மத்தேயு 19:3-10). நமது ஆண்டவருடைய இந்த வார்த்தைகளைக் கேட்டபோது, பரிசேயர்கள் போன்று சீஷர்களும் ஆச்சரியம் அடைந்து, இப்படியாகக் காரியம் இருக்குமானால்... அதாவது விவாக உடன்படிக்கையானது இப்படியாகப் பிணைக்கப்பட்டுள்ளதானால், முறிக்கப்பட முடியாததானால்... விவாகம் செய்வது நல்லதல்ல... அபாயமானதாய் இருக்குமே என்று கூறினார்கள். இப்படியான விதத்தில் கர்த்தர், நாம் இவ்வுறவினைக் கருதிட விரும்புகின்றார். குற்றமற்றவரைக் குற்றம்புரிந்தவரிடமிருந்து, உண்மையற்றவரிடமிருந்து விடுவித்திடும் அந்த ஒரே காரணம் தவிர மற்றப்படி, விவாக ஒப்பந்தத்தை மரணமானது பிரிப்பது வரையிலும், விவாக ஒப்பந்தமானது, தொடர்ந்து நீடிக்கிற ஒன்றாகும். ஜீவியத்திற்கெனப் பரஸ்பரம் ஒருவரோடொருவர் பண்ணிக்கொள்ளும் ஒப்பந்தத்தின் காரணமாய் இணைக்கப்பட்டுள்ள இருவரும், இதுமுதற்கொண்டு இருவரல்ல, மாறாக ஒரே மாம்சமாய் இருக்கின்றனர்; மேலும் தற்கால ஜீவியத்திலுள்ள அவர்களின் எதிர்கால மகிழ்ச்சி, வளமை யாவும் அவர்களுடைய நேர்மையினை, பெருந்தன்மையினை, அன்பினை, ஒருவர் இன்னொருவருக்காய்க் கொண்டிருக்கும் அக்கறையினைச் சார்ந்துள்ளதாய் இருக்கின்றது.

திருமண உறவானது அதன் அம்சங்களின் விஷயத்திலும், நீடித்திருக்கும் காலத்தின் விஷயத்திலும், கிறிஸ்து மற்றும் சபையினுடைய என்றென்றும் நிலைத்திருக்கும், உண்மையாயிருக்கும்

ஆசீர்வதிக்கப்பட்ட ஒன்றிணைதலுக்கான நிழலாய் இருக்கும்படிக்கு வடிவமைக்கப்பட்டுள்ளது. கிறிஸ்து சபையானவளை ஒருபோதும் விட்டுவிலகுவதுமில்லை, கைவிடுவதுமில்லை; மேலும் சபையானவளும் அவருக்கான தன் உண்மையினின்றும், விசுவாசத்தினின்றும் விலகிடுவதில்லை. தம்மை விட்டு விலகிடுவதற்கு விரும்புபவர்களுக்குக் கிறிஸ்து அனுமதித்துவிடுவதுபோன்று, ஒருவேளை விசுவாசியிடமிருந்து, அவிசுவாசியான ஜீவித-துணை பிரிந்துபோனால்... அவன் அல்லது அவள் பிரிந்துபோகட்டும். விசுவாசி ஒருமுறை அவிசுவாசியான ஜீவித துணையினால் விட்டுச் செல்லப்பட்டால், விட்டுச் சென்றவரை மறுபடியுமாக விவாக பந்தத்திற்குள் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று விசுவாசிக்குக் கடமை இல்லை... ஆயினும் சரியான மனந்திரும்புதல் இருப்பதற்கான ஆதாரங்களினுடைய அடிப்படையில், சீர்ப்பொருந்திவிடுவதும் நலமே - ஆனாலும் (விட்டுச் சென்ற) முதலாம் ஜீவித - துணை உயிரோடு காணப்படுவது வரையிலும், விசுவாசியான அவன் அல்லது அவள் இன்னொருவரை விவாகம் செய்திடுவதற்கும் கடமையில்லை (1 கொரிந்தியர் 7:11). தன் மனைவியின் தேவைகளை முடிந்தமட்டும் சந்திப்பதற்குக் கணவன் தவறிவிடும் காரியமானது, அவன் விவாக வாக்குறுதிகளுக்கு உண்மையற்றுப் போவதாயிருக்கும், மேலும் இப்படிக் காணப்படுகையில் அவன் ஒருவேளை அவளோடு வாழ விரும்பிட்டாலும் மற்றும் அவள் ஆதரவை அவன் பெற்றிருந்தாலும்கூட - அவளைக் கைவிட்டுவிடுவதாக இருக்கும்; கணவன் நோய்வாய்ப்பட்டு இருக்கையில் மற்றும் தேவைகளைச் சந்திக்க முடியாதிருக்கையில்... விவாக உடன்படிக்கைக்கு ஏற்ப மனைவியானவள் முடிவுவரைக் கணவனை ஆதரிப்பதில் தன்னையே ஈடுபடுத்திக்கொள்வது மனைவியின் கடமையாய் இருக்கின்றது.

விவாக உறவின் சிலாக்கியங்கள் மற்றும் கடமைகள் தொடர்புடைய விஷயத்தில் உலகத்தின் கருத்து என்னவாக இருப்பினும் (அந்தோ பரிதாபம்! இக்கருத்துக்கள் தூய்மை மற்றும் நீதிக்கு அப்பாற்பட்டதாகவும், மாம்சத்திற்கு ஏதுவானதாகவுமே காணப்படுகின்றது), கர்த்தருடன் பிணைக்கப்பட்டுள்ளவர்கள் "ஆவிக்கேற்றபடி (அல்லது கிறிஸ்துவினுடைய மனதின்படி) நடந்துகொள்ளுங்கள், அப்பொழுது மாம்ச இச்சையை நிறைவேற்றாதிருப்பீர்கள். மாம்சம் ஆவிக்கு விரோதமாகவும், ஆவி மாம்சத்துக்கு விரோதமாகவும் இச்சிக்கிறது; நீங்கள் செய்யவேண்டு மென்றிருக்கிறவைகளைச் செய்யாதபடிக்கு, இவைகள் ஒன்றுக்கொன்று விரோதமாயிருக்கிறது" (கலாத்தியர் 5:16, 17) எனும் அப்போஸ்தலனின் ஆலோசனையை நினைவுகூர வேண்டும்.

ஆனால் விவாகமான பரிசுத்தவான்கள் அனைவருமே கர்த்தருக்குள் விவாகமானவர்களல்ல மற்றும் இதன் காரணமாய் அநேகர் - இவ்வுறவினுடைய மனுஷீக கோணங்களைக் கருத்தில் எடுத்துக்கொள்வதற்கும் மற்றும் இவ்வுறவுக்கடுத்த பூலோக நோக்கங்கள், இலட்சியங்களாகிய . . . சந்ததியைப் பெருக்கிக்கொள்ளுதல், பிள்ளைகளைப் பராமரித்தல் மற்றும் பயிற்றுவித்தல் ஆகியவைகளுக்கு ஓரளவுக்குத் தங்களை ஈடுபடுத்திக்கொள்வதற்கும் கடமைப்பட்டிருக்கின்றனர்; இத்தகைய கடமைகளானது விவாக உடன்படிக்கையினால் சுட்டிக்காண்பிக்கப்பட்டுள்ளது மற்றும் இவைகளிலிருந்து கர்த்தருக்கான அர்ப்பணிப்பானது ஒருவரை ஒருபோதும் விடுவிக்கிறதில்லை. ஒருவருக்கொருவர் செய்ய வேண்டியதான கடமைகளானது, விவாகத்தில் ஏற்றுக்கொள்ளப்படுகின்றது மற்றும் இவைகளினின்று இருவரின் பரஸ்பர சம்மதத்தினால் தவிர மற்றப்படி விலகிச் சென்றிட முடியாது. இது விஷயத்தில் அப்போஸ்தலனின் அறிவுரையானது மிகத்தெளிவாகவும், விவாகம்பண்ணியுள்ளவர்கள் ஒருவருக்கொருவர் ஆற்ற வேண்டியதான கடமைகள்குறித்து நாம் சற்று முன்பு பார்த்து வந்தவைகளுக்கும் முழுமையாய் இசைவாகவும் காணப்படுகின்றது (1 கொரிந்தியர் 7:1-9). மேலும்

இருவரின் சார்பில் அறிவுறுத்தப்பட்டுள்ளதான உரிய கருணையும், தன்னடக்கமும் எந்த விதமான குடும்பப்பிரச்சனைகளையும் மற்றும் அதன் விளைவான பிரிவினைகளையும் தவிர்த்துப்போடுகிறதாய் இருந்து, ஒருவர் இன்னொருவர் மீது கொண்டிருக்கும் அன்பு மற்றும் மரியாதையின் உறுதியான அஸ்திபாரத்தின் அடிப்படையில் ஒற்றுமையினைக் கொண்டுவரவேண்டும். ஆனால் மாம்சத்தின் ஆசைகளை முழுமையாய்க் கட்டுப்பாட்டில் வைப்பதற்கும், ஆவியில் நடப்பதற்கும் முடிகிறவர்கள் மற்றும் இப்படி விரும்புபவர்கள் பாக்கியவான்களாய் இருப்பார்கள்; "(இந்தப் போதகத்தைத் தன்னுடைய நிலைமையிலும், தன்னுடைய சூழ்நிலைமையிலும்) ஏற்றுக்கொள்ள வல்லவன் ஏற்றுக்கொள்ளக்கடவன்" (மத்தேயு 19:12).

தாங்கள் உட்பிரவேசித்துள்ளதான உடன்படிக்கையினுடைய புனிதத்தன்மையினை இவ்விதம் கண்ணோக்குவதற்கும், கருத்தில் எடுத்துக்கொள்வதற்கும் உள்ள நிலைக்குக் கர்த்தருடைய அருமையான ஜனங்களில் சிலர் வருகையில், அநேகமாக இதற்கு முன்புவரை எண்ணியிருந்ததைக் காட்டிலும், எவ்வளவு அதிகமாய்த் தங்களுடைய குடும்ப வாழ்க்கையில் தேவனை மகிமைப்படுத்திடலாம் என்பதைக் காணத்துவங்குவார்கள். கடந்துபோன காலங்களிலுள்ள எக்காரியங்களைச் சரிப்படுத்திட வேண்டும் என்று அனைவரும் காணமுடியாமல் இருந்தாலும், இதில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை. சத்தியத்தினால் தங்கள் ஆத்துமாக்களைப் புத்துயிர் அடையப்பெற்ற சகோதரர்கள் மற்றும் சகோதரிகள் மற்றவர்களுக்குச் சத்தியத்தினை வைராக்கியமாய்ச் சுமந்து சென்றிருக்க, தங்கள் கணவன் அல்லது மனைவி சத்தியத்தின் மீது ஆவல் கொண்டவர்களல்ல என்று எண்ணி, இப்படிச் சாதகமாக்கிக் கொள்கின்றார்களல்லவா?

சத்தியத்தின் மீது கவனம் செலுத்த முடியாதளவுக்குத் தங்கள் மனைவிகள் குடும்பத்திற்கடுத்த காரியங்களில் மிகவும் விறுவிறுப்பாய்/busy இருக்கின்றனர் அல்லது சத்தியத்திற்கடுத்த காரியங்களில் ஈடுபடுவதால், உலகத்திடமிருந்து வரும் நிந்தனைக்குறித்துத் தங்கள் மனைவிகள் மிகவும் அச்சங்கொள்வார்கள் என்று சில கணவன்மார்கள் எண்ணி இதன் காரணமாய் அவர்களைத் தவிர்த்து, மற்றவர்களுக்குச் சத்தியத்தினைச் சுமந்து செல்கின்றனர். ஆனால் இப்படிச் செய்வது என்பது கணவனுக்குரிய பங்கினை நிறைவேற்றுவதாய் இருக்குமா? ஓர் உண்மையான கணவன் என்பவர் தேவைகளை அருளுபவராக இருப்பார் மற்றும் இவருடைய பராமரிப்பு என்பது தன் மனைவி மற்றும் குடும்பத்தாருக்கு ஆவிக்குரிய காரியங்களையும், பூமிக்குரிய உணவு, உடைகளையும் அருளுவதை உள்ளடக்குகின்றதாய் இருக்கின்றது. ஆகையால் சத்தியத்தைக் கற்றுக்கொள்ளும்போது, தன் துணைவிக்குச் சத்தியத்தைக் கொடுப்பதே கணவனுடைய முதலாம் பிரயாசமாக இருக்க வேண்டும். கணவன் மாலையில் வீடு திரும்பும்போது, மனைவி குடும்பத்திற்கடுத்த பராமரிப்புகளில் - அதாவது இரவு ஆகாரம் தயாரிப்பதிலும், பிற்பாடு வீட்டைச் சுத்தம் செய்வதிலும், சிறு குழந்தைகளைப் பார்த்துக்கொள்வதிலும், அடுத்த நாளுக்கான தேவைகளுக்கு ஆயத்தங்கள் பண்ணுவதிலும் ஈடுபட்டிருப்பதைக் காண்கையில், கணவன் தன் வேலை நேரங்கள் எல்லாம் முடிந்து காணப்படுகையில், மனைவியானவளே அந்தக் குடும்பக்காரியங்களைத் தனியே பார்த்துக்கொள்ளும்படிக்கு அவளை விட்டுவிட்டு - தகுதியான மற்றும் கனமிக்கத் துணையாக அவள் பார்க்கப்படுவதற்குப் பதிலாக, புறக்கணிக்கப்பட்டவளாக, அவமதிக்கப்பட்டவளாக, வீட்டுக்காரியங்களுக்கு மாத்திரம் உதவுபவளாக அவள் எண்ணத்தக்கதாக அவளை விட்டுவிட்டு, கணவன் சத்தியம் படிப்பதற்கென அமைதியான இடத்தைத் தேடவேண்டுமா அல்லது இரட்சிப்பின் மற்றும் சந்தோஷத்தின் நற்செய்தியை மற்றவர்களுக்கு அல்லது அயலார்களுக்குச் சுமந்து செல்வதற்கெனத் தனியே வெளியே செல்ல வேண்டுமா?

ஆ! இல்லை! தொண்டாற்றுதல்/அறம் இல்லத்திலிருந்து துவங்குவதாக! ஒருவேளை கடந்த காலங்களில் ஞானமற்று நடந்துகொண்டதன் காரணமாய்த் தன்னால் சுமப்பதற்கும் அதிகமான குடும்பப்பாரங்களின் பளுவினால் மனைவியானவள் அமிழ்த்தப்பட்டிருந்தாளானால், இன்னும் கூடுதலாய்ப் பாரத்தைக் கூட்டிவிடாதபடிக்குப் பார்த்துக்கொள்ளுங்கள், மாறாக "தோள் கொடுங்கள்" மற்றும் முடிந்தமட்டும் அக்காரியங்களில் அவளுக்கு உதவிடுங்கள். குழந்தைகளைப் பராமரிப்பதும், பாத்திரங்களைக் கழுவுவதும் பெண்களின் வேலையாய் இருக்குமானால்... அதுவும் உங்களோடோ அல்லது கர்த்தரோடோ அல்லது சத்தியத்தைத் தனக்காய் வாசித்தறிவதற்கோ நேரம் கிடைக்காமல் போகுமளவுக்கு அவ்வேலைகள் அவளுக்கு அதிகமாய்க் காணப்படுமானால் - அல்லது ஒருவேளை தொடர்ச்சியாய்க் கடமைகளைச் செய்துவரும் நிலைமையினுடைய அழுத்தத்தின்கீழ், அவள் சமூக பேச்சுகளின் சுவையினையோ, ஆவிக்குரிய காரியங்களுக்கடுத்த தன் விசுவாசத்தினையோ இழந்துபோயுள்ளாளானால் . . . அந்தந்த நாளினுடைய கடமைகளை முடித்துவிட்டு, சத்தியத்தைக் கற்றுக்கொள்ளும்படிக்குச் சேர்ந்து உட்கார முடிவதுவரையிலும், அந்தக் குடும்பத்திற்கடுத்த வேலைகளில் அவளோடு சேர்ந்து நீங்கள் பங்கெடுப்பது நலமாயிருக்கும்.

அவள் உங்கள் அன்பையும், அக்கறையையும் படிப்படியாய் உணர வரும்போது, அவளுக்கு உங்கள்மேலும், உங்கள் அன்றாட ஜீவியத்தில் வெளிப்படும் உபதேசத்தினுடைய பலன்களின்மேலும் இருக்கும் மரியாதை அதிகரித்திடும். ஆரம்பத்தில் ஒருவேளை இது ஒரு புதிய நடத்தையாய் இருக்கும்பட்சத்தில், அவள் அதை ஏதோ வழக்கத்திற்கு மாறான விநோதமான நடத்தை என்று கருதிடக்கூடும்; ஆனால் போகப்போக, தொடர்ச்சியாய் இப்படி நடந்துகொள்ளுதல் என்பது அவளது நம்பிக்கையை அதிகரித்திடும் மற்றும் அவள் இருதயத்தில் மாற்றத்தை உண்டுபண்ணிடும்; மேலும் இப்படியாகக் கவனமாய் உழப்பட்ட மற்றும் ஆயத்தம் பண்ணப்பட்ட நிலமானது, சத்தியத்தின் விதைகளை ஏற்றுக்கொள்வதற்குப் பக்குவமாயும், ஆயத்தமாயும் காணப்படும் மற்றும் நீங்களும், உங்கள் மனைவியும், குடும்பமும் ஆசீர்வதிக்கப்படுவீர்கள். கடந்த காலங்களில் இவ்விஷயத்தில் எவ்வளவேனும் அலட்சியமாய் இருந்திருப்பதை உங்களில் எவரேனும் உணர்வீர்களானால், சகோதரர்களே இதை முயற்சிப்பண்ணிப் பாருங்கள். வாட்ச் டவர் அலுவலகத்திற்குக் கடிதம் எழுதுகையில், உங்கள் கணவனோ அல்லது உங்கள் மனைவியோ சத்தியத்தின் மீது விருப்பம் அடைந்துள்ளார்களானால், அதைக் குறிப்பிடுங்கள்.

சிலசமயங்களில் மனைவியானவளே மில்லினியல் டாண் வெளியீட்டின் சத்தியங்களை முதலாவதாகக் கிரகித்துக்கொள்பவளாக இருப்பாள் மற்றும் ஒருவேளை தனக்குக் கிடைத்துள்ளதான கிருபைகளைக் குறித்துத் தன் கணவனோடு பகிருகையில், அவரின் பேச்சு நம்பிக்கை ஏதும் தராது என்பதாகத் தோன்றினாலும், அந்தக் கிருபைகளைக் கணவனிடம் சுமந்து செல்வதற்கான தன்னுடைய வாய்ப்புகளை அவள், பெரும் வாய்ப்பாகக் கருதிட வேண்டும். பாரம்பரியத்தின் பாதையினின்று தன் மனைவி விலகுவதைக் கணவன் அறிகையில், அவர் எப்போதுமே அதை ஏதோ ஒரு புதிய மத வைராக்கியம் என்று நிர்ணயித்து, தன் இருதயத்தைப் பூட்டிப்போட்டுவிடுவார் மற்றும் அதற்குத் தன் செவிகளை மூடியும் கொள்வார். இம்மாதிரியான சந்தர்ப்பத்தில் அவள் என்ன செய்ய வேண்டும்? அதை அவர்மீது திணித்திட வேண்டுமா? இல்லை, அப்படிச் செய்வது என்பது எதிர்ப்பை மாத்திரமே தூண்டுகின்றதாய் இருக்கும். முதலாவதாக அவள் அதைத் தன் அன்றாட ஜீவியத்தின், உயிருள்ள நிருபத்தில் அவர் வாசித்துக்கொள்ளத்தக்கதாக, அவரை விட்டுவிட வேண்டும். குடும்பத்தைச் சந்தோஷமாய் வைப்பதற்கு நீங்கள் கவனமாய்ச் செயல்படுவதில், சத்தியத்தின் நற்பலன்களை அவர் காணட்டும்; கணவனுடைய சோதனையில், சோர்வுகளில் அவர் மீதான உங்கள் பரிவையும், உங்களால் முடிந்தமட்டும் நீங்கள் உதவிகரமாய் இருப்பதையும் மற்றும் அவருடைய அன்பனைத்தையும் நீங்கள் உணர்ந்து மதிக்கிறதையும் . . . அவர் காணட்டும்.

கணவன் யுகங்களுக்கடுத்த திட்டத்தின்பால் ஈர்க்கப்படுவதற்குச் சிலசமயங்கள் மேற்கூறியபடி இவ்வகையான நீண்ட மற்றும் பொறுமையான பிரசங்கம் ஏறெடுக்க வேண்டியதாயிருக்கும்; பல்வேறு வழிகளில் நீங்கள் ஜீவவார்த்தையினை உங்கள் கணவனுக்கு முன்பாக உயர்த்திப் பிடித்துக் கொண்டிருக்கையில், பரிசுத்த ஜீவியத்தின் மற்றும் சீரான நடத்தையின் மற்றும் சம்பாஷணையின் ஒளியானது தொடர்ந்து பிரகாசித்துக்கொண்டிருக்கட்டும் மற்றும் ஏற்றவேளையில் அவரில் மாற்றம் வெளிப்படும். இத்தகைய மனைவிகள் (தெய்வீகத் திட்டம் குறித்து நன்கு அறிவு பெற்றவர்களாக இருப்பினும்) கர்த்தருக்கான ஊழியத்தில் பரிசுத்தவான்கள் கூடிவருவதற்கென்று வீட்டைப் பயன்படுத்திடுவதற்கோ அல்லது வேறு எதற்கேனும் பயன்படுத்திடுவதற்கோ கணவன் ஒருவேளை எதிர்ப்புத் தெரிவிப்பவராயிருக்க, வீட்டிற்குத் தலைவராக அங்கீகரிக்கப்படும் கணவனின் வீட்டினைப் பரிசுத்தவான்கள் கூடிவருவதற்கெனச் சொந்தம் கொண்டாட/கையாள முற்பட்டு, கணவனின் தலைமைத்துவத்தினைப் புறக்கணிக்கும் தவறுகளைச் செய்யாதிருப்பார்களாக. ஒருவேளை வீடானது மனைவியின் சொத்தாகவே இருப்பினும், கணவனுடைய தலைமைத்துவத்தின் உறவுமுறையானது அடையாளம் கண்டுகொள்ளப்படுவதுவரையிலும், வீட்டின் தலைவரெனக் கணவனின் விருப்பங்களுக்கு மரியாதைக் கொடுப்பது கடமையாகும். கணவன் தன் பொறுப்பினை உணருகின்றாரோ, இல்லையோ, கணவன் தேவனிடத்தில் தன் பொறுப்பிற்குக் கடமைப்பட்டிருக்கின்றார். ஆனால் மனைவியானவள் குடும்பத்தின் அனைத்துத் தேவைகளையும் பூர்த்திச்செய்வதை எப்போதும் தொடர்வதற்குக் கட்டுப்பட்டவளல்ல; ஒருவேளை இல்லத்தில் நியாயமான சிலாக்கியங்கள் அவளுக்கு மறுக்கப்படுமானால், அவள் அப்படிச் செய்வதை நிறுத்திடவேண்டும்; ஏனெனில் இப்படித் தொடர்வது என்பது அவள் தவறை ஊக்குவிப்பதாய் இருந்துவிடும். முன்பே நாம் சொல்லியுள்ளதுபோன்று . . . கணவனானவன் தன் மனைவி மற்றும் குடும்பத்தை ஆதரிப்பதற்கு அவசியமான ஆரோக்கியம் முதலானவைகளைப் பெற்றிருந்தும், அவர்களின் தேவையைச் சந்தித்திட தவறுவாரானால் . . . அவர் தன் துணைவியைப் போஷிப்பதாகவும், பராமரிப்பதாகவும் கூறிய தன் விவாக வாக்குறுதிக்கு உண்மையற்றுப் போயுள்ளார் என்பதை நிரூபித்தவராய் இருப்பார் மற்றும் நாட்டினுடைய சட்டங்களுக்கு முன்னிலையில் அவர் "நடைமுறையில் அவளைக் கைவிட்டுவிட்டவராக" இருப்பார். இம்மாதிரியான சந்தர்ப்பத்தில் காணப்படும் மனைவியானவள் ஒருவேளை அவள் விரும்பினால் தன்னைக் குறித்துக் கைவிடப்பட்டவளாகக் கருதி, இப்படிக் கைவிட்டவரை ஆதரிப்பதற்கும், தாங்கிடுவதற்கும் அவள் மறுத்திடலாம். ஆனால் இத்தகைய கைவிடுதலானது இருவரில் எவருக்கும் துணை உயிரோடு ஜீவிப்பது வரையிலும் மறுமணம் செய்வதற்கு உரிமை அளிக்கிறதில்லை.

குடும்பத்தின் காரியங்களில் தலையாயிருப்பது போலவே, "நானும், என் வீட்டாருமோ (என்னுடைய செல்வாக்கினுடைய ஆற்றலின்படி) கர்த்தரையே சேவிப்போம்" என்று கூறிடுவது கிறிஸ்தவ கணவனுடைய கடமையாக இருக்கின்றது. கணவனுடைய இந்தப் பொறுப்பினை அடையாளம் கண்டுகொள்ளும் கிறிஸ்தவ மனைவியானவள், அவளது கடமை உணர்ச்சியினால் அவளால் செய்ய முடிந்தமட்டும் மகிழ்ச்சியோடு ஒத்துழைப்புக் கொடுத்திடுவாள் மற்றும் கணவனின் வழிமுறைகளை வித்தியாசமாய் அவள் ஒருவேளை கண்ணோக்கினாலும், அவரின் வழியில் இடறலின் கற்களைப் போடமாட்டாள். சத்தியத்தின் விஷயத்தில் அவரை நம்ப வைத்திடுவதற்குக் கவனமாய்ப் பிரயாசம் எடுப்பாள்; எனினும் அவரது மனசாட்சியினையோ அல்லது தேவனிடத்திலுள்ள அவரது கடமையினையோ அவள் குறுக்கிடமாட்டாள். மனைவி விஷயத்தில் கணவனுடைய நடத்தையும் தன்னிச்சையானதாக/மனம்போன போக்கில் மற்றும் நியாயமற்றதாக இருத்தல்கூடாது. அவளது மனசாட்சியினை அவர் அசட்டைப்பண்ணிடக்கூடாது; தேவனுக்கான ஊழியத்தில் அவள் தன்

தாலந்துகள் அனைத்தையும் முழுமையாயும், சுதந்தரமாயும் செயல்படுத்திடுவதற்கு அவர் தடைப்பண்ணிடக்கூடாது; கணவனின் மனசாட்சியும் மற்றும் குடும்பத்தலைவருக்குரிய கணவனின் பொறுப்பும் கணவனை அனுமதிக்கும் மட்டும், இல்லத்தைப் பயன்படுத்திடும் விஷயத்தில் கணவன், மனைவிக்கு அதிகமான சுதந்தரத்தைக் கொடுத்திட வேண்டும்; ஏனெனில் மனைவிகளும் "உங்களுடனேகூட நித்திய ஜீவனாகிய கிருபையைச் சுதந்தரித்துக்கொள்ளுகிறவர்களாய்" இருக்கின்றனர் (1 பேதுரு 3:7). ஒருவேளை கணவன் வேறு கண்ணோட்டங்களில் காண்கிறவரானால் . . . தன் பலமான காரணங்களை அவள் கவனத்திற்கும், அங்கீகாரிப்பிற்கும் கொண்டுவர வேண்டும் மற்றும் அவளது வேறுபட்ட கண்ணோட்டங்களையும், இறுதியில் இணக்கம் வரும் என்ற நம்பிக்கையில் பொறுமையோடு செவிக்கொடுத்துக் கேட்க வேண்டும். ஆனால் ஒருவேளை இணக்கம்/இசைவானது அடையப்பட முடியவில்லையெனில், தெய்வீக நியமனத்தின் பேரில் குடும்பத்தின் தலையாகிய கணவன் மீதே குடும்பம் மற்றும் அதன் செல்வாக்கிற்கடுத்த பொறுப்பானது காணப்படும்.

## கனம்பண்ண வேண்டியவர்களைக் கனம்பண்ணுங்கள்

இந்த முழுப்பாடத்தினையும் நாம் பார்க்கையில், தேவனால் ஏற்படுத்தப்பட்ட அதிகாரங்களுடன் உள்ள தனிப்பட்ட சம்பந்தத்தின் விஷயத்தில், முழுச்சபையாருக்கான அப்போஸ்தலனின் ஆலோசனையானது நமக்குப் பலமாய் நினைப்பூட்டப்படுகின்றது - அதாவது "யாவருக்கும் செலுத்த வேண்டிய கடமைகளைச் செலுத்துங்கள்; எவனுக்கு வரியைச் செலுத்த வேண்டியதோ அவனுக்கு வரியையும், எவனுக்குத் தீர்வையைச் செலுத்த வேண்டியதோ அவனுக்குத் தீர்வையையும் செலுத்துங்கள்; எவனுக்குப் பயப்பட வேண்டியதோ அவனுக்குப் பயப்படுங்கள்; எவனைக் கனம்பண்ண வேண்டியதோ அவனைக் கனம்பண்ணுங்கள். ஒருவரிடத்திலொருவர் அன்புகூருகிற கடனேயல்லாமல், மற்றொன்றிலும் ஒருவனுக்கும் கடன்படாதிருங்கள்" (உரோமர் 13:7, 8).

இதைப்போலவே அப்போஸ்தலனாகிய பேதுருவின் ஆலோசனையும் காணப்படுகின்றது: "எல்லாரையும் கனம்பண்ணுங்கள்; சகோதரரிடத்தில் அன்புகூருங்கள்; தேவனுக்குப் பயந்திருங்கள்; இராஜாவைக் கனம்பண்ணுங்கள்" (1 பேதுரு 2:17).

இராஜாக்கள் எப்போதும் தனிப்பட்ட விதத்தில் பார்க்கப்பட்டால், அவர்கள் கனத்திற்குப் பாத்திரவான்களாய் இருப்பதில்லை; ஆனால் "தேவனால் ஏற்படுத்தப்பட்ட" ஸ்தானங்கள் எப்போதுமே கனத்திற்குப் பாத்திரமானவையே ஆகும் (உரோமர் 13:1; வேதாகமப் பாடங்களினுடைய முதலாம் தொகுதியின் 8-ஆம் அதிகாரத்தில் இவர்களின் ஏற்படுத்துதலுக்குரிய விதம் மற்றும் நோக்கம் குறித்துப் பார்க்கவும்). கர்த்தர் மற்றும் அப்போஸ்தலருடைய நாட்களில் யூதேயாவை ஆண்டுவந்திட்டதான அதிகாரிகள் தனிப்பட்ட விதத்தில் பார்க்கப்படும்போது கனம்பண்ணுவதற்கு மிகவும் அபாத்திரராகவே இருந்தனர்; எனினும் அதிகாரங்களுக்குக் கீழ்ப்பட்டு இருப்பதுகுறித்துக் கர்த்தரும், அப்போஸ்தலரும் தங்களுடைய வார்த்தைகள் வாயிலாக மாத்திரம் இல்லாமல், தங்கள் மாதிரியின் வாயிலாகவும்கூட நமக்குத் தெரிவித்திருக்கின்றனர்; கர்த்தரும், அப்போஸ்தலர்களும் மதிப்புடன் நடந்துகொண்டார்கள் மற்றும் நியாயப்பிரமாணத்திற்குக் கட்டுப்பட்டவர்களாய் இருந்தனர் (மத்தேயு 17:27; அப்போஸ்தலர் 25:8, 10, 11).

குடும்பத்தின் உறவிலும்கூட, கணவன் மற்றும் தகப்பன் எனும் ஸ்தானம், குடும்பத்தின் தலை ஸ்தானம் என்பது மனைவி மற்றும் பிள்ளைகளினால் கனப்படுத்துவதற்குப் பாத்திரமான ஸ்தானமாகும் மற்றும் குடும்பத்திற்குள் காணப்படும் அந்நியர்களினால், அதாவது அக்குடும்பத்தினுடைய பாதுகாப்பையும், உபசரிப்பையும் அனுபவிக்கும் அந்நியர்களினால்கூடக் கனப்படுத்துவதற்குப்

பாத்திரமான ஸ்தானமாகும். கனம்பண்ணிடுவதற்குப் பாத்திரமற்ற நாட்டினுடைய அதிகாரிகள் விஷயத்தில், அவர்களின் ஸ்தானத்தின் நிமித்தம் கனம்பண்ணிட வேண்டும் எனும் அதே கொள்கையின் அடிப்படையில், குடும்பத்தின் தலையானவர் தனிப்பட்ட விதத்தில் பார்க்கப்படும்போது கனம்பண்ணிடுவதற்குப் பாத்திரமற்றவராய் இருப்பினும், அவரின் ஸ்தானத்தின் நிமித்தம் கனம்பண்ணப்பட வேண்டும்.

"ஒருவரிடத்திலொருவர் அன்புகூருகிற கடனேயல்லாமல், மற்றொன்றிலும் கடன்படாதிருங்கள்" என்று கூறி கடமைப்பற்றின வெளிச்சத்தின் கீழ் அப்போஸ்தலன் இந்த அன்புகூரும் மற்றும் கனம்பண்ணிடும் மற்றும் வரி செலுத்திடும் கடமைகள் முதலானவைகளை, உடனே செலுத்தித் தீர்க்கப்பட வேண்டிய கடன்கள் என்று காண்பிக்கின்றார். ஒருவேளை அனைவரும் பூரணராய் இருந்தார்களானால் அன்பே ஆளும் கொள்கையாக இருந்திருக்கும்; எனினும் விழுந்துபோன நிலைமையில் சுயநலம் எனும் பொதுவான நோயானது குடும்பத்தின் மற்றும் இல்லத்தின் மற்றும் தொழிலின் சந்தோஷத்தினைப் பட்சித்துப்போட்டு, அழித்துப்போடுகின்றது. உண்மையான பெருந்தன்மையானது, ஆரோக்கியமான நிலைமையில் காணப்படும் ஒவ்வொரு மனுஷனையும், பெலவீன பாண்டமான பெண்களிடத்தில் மாத்திரமல்லாமல், கூட்டங்களிலும், பயணம் செய்யும் வண்டிகளிலும், அயலார்கள் மத்தியிலும் காணப்படும் வயோதிப மற்றும் தள்ளாடின நிலைமையிலுள்ள ஆண்களிடத்திலும் கரிசனையோடு இருக்கப்பண்ணிடும்; இன்னுமாக ஜீவியத்தின் பாரங்களையும், சுமைகளையும் சுமப்பதில் வீட்டிலும், வாழ்க்கை-துணையினிடத்திலும் மிக அதிகமான கரிசனைக்கூட வெளிப்படும். வீட்டிலோ, வெளியிலோ இருப்பினும் உண்மையில் உயர்பண்புள்ள புருஷன் அல்லது ஸ்திரீ யாரையும் தொந்தரவு செய்வதற்கோ அல்லது யாருக்கேனும் அசௌகரியம் உண்டுபண்ணுவதற்கோ விரும்பமாட்டார்கள்; மேலும் இவர்கள் தங்களிடம் பாராட்டப்படும் இரக்கத்தினை ஏற்றுக்கொள்வார்களானால், அது தயவு என இவர்களால் ஏற்றுக்கொள்ளப்படும் மற்றும் வெகுவாய் நன்றியுடன் ஏற்றுக்கொள்ளப்படும்.

தயவிற்குப் பதிலாய் விழுகையானது அனைவரிலும் சுயநலத்தினை வளர்த்தியுள்ளது; ஆகையால் தயவுடன் காணப்படுவதற்கு விரும்புபவர்கள், சுயநலமான நன்றியற்ற தன்மையைத் தங்களுக்கான பலனாக அடைகையில் பெரும்பாலும் சோர்வடைந்துபோய், வெகு சிலரே தயவு பாராட்டப்படுவதற்குப் பாத்திரவான்களாய் உள்ளனர் என்று கருதுகின்றனர். ஆனால் கிறிஸ்தவ புருஷனும், ஸ்திரீயும் தங்கள் மாபெரும் மீட்பரில் உள்ள சுயநலமற்ற உதாரணத்தை நினைவில்கொள்ள வேண்டும்; சுயநலமே ஒவ்வொரு பாவத்திற்கான அடிப்படை என்றும், பாவத்திற்கு எதிராய்ப் போராடுகையில், அவர்கள் சுயநலத்திற்கு எதிராய்க் கண்டிப்பாகப் போராட வேண்டும் என்றும், அன்பை வளர்த்தி விருத்தியாக்கிடுவதற்கு நாடிட வேண்டும் என்றும் நினைவில்கொள்ள வேண்டும். கனம்பண்ணிடுவதற்கு, மதித்திடுவதற்கு, சேவித்திடுவதற்கு - அதாவது கனம்பண்ணிடுவதற்குப் பாத்திரமானவர்களைக் கனம்பண்ணிடுவதற்கு அப்போஸ்தலனானவர் நீதியாய் இருத்தலையே, சரியான பாதைக்குப் போவதற்கான உதவியெனச் சுட்டிக்காட்டுகின்றார்.

தேவனுடைய ஒழுங்கு எத்துணை அருமையாய் இருக்கின்றது மற்றும் இதற்கு உண்மையாய் இசைந்து செல்பவர்கள் யாவருக்கும் நித்திய சமாதானம் மற்றும் சந்தோஷம் அடைவதற்கு அவ்வொழுங்கு எத்துணை உதவியாய் இருக்கின்றது! இப்படியாக நம்முடைய வழிகாட்டுதலுக்கென வேதவாக்கியங்களில் தேவனால் கொடுக்கப்பட்டுள்ளதான கொள்கைகளைக் கவனமாய் வேறுபடுத்திப்பார்த்து அறிந்துகொள்வோமாக மற்றும் அவரது அங்கீகரிப்பே நமக்கான மகா மேன்மையான பலனாகும் மற்றும் போகப்போக அவரது ஞானம் வெளியரங்கமாகும்.

R1551

# ஸ்திரீ மனுஷனுக்கு உதவியாவாள், துணைவியாவாள்

"பின்பு, தேவனாகிய கர்த்தர்: மனுஷன் தனிமையாயிருப்பது நல்லதல்ல, ஏற்ற துணையை அவனுக்கு உண்டாக்குவேன் என்றார். அப்படியே ஆதாம் சகலவித நாட்டு மிருகங்களுக்கும், ஆகாயத்துப் பறவைகளுக்கும், சகலவிதக் காட்டுமிருகங்களுக்கும் பேரிட்டான்; ஆதாமுக்கோ ஏற்ற துணை இன்னும் காணப்படவில்லை. தேவனாகிய கர்த்தர் தாம் மனுஷனில் எடுத்த விலா எலும்பை மனுஷியாக உருவாக்கி, அவளை மனுஷனிடத்தில் கொண்டுவந்தார். அப்பொழுது ஆதாம்: இவள் என் எலும்பில் எலும்பும், என் மாம்சத்தில் மாம்சமுமாய் இருக்கிறாள்; இவள் மனுஷனில்(*ish*) எடுக்கப்பட்டபடியினால் மனுஷி (*ishah*) என்னப்படுவாள் என்றான்." (ஆதியாகமம் 2:18, 20, 22-23).

தேவனுடைய சிருஷ்டிப்பில் ஸ்திரீக்கு நியமிக்கப்பட்டுள்ள ஸ்தானம் பற்றின நம்முடைய ஆராய்ச்சிக்கென்று, அவள் பூமிக்கும், மனுஷனுக்கும் முதலாவதாக அறிமுகப்படுத்தப்படும் காரியம்குறித்து மேல் இடம்பெறும் சுருக்கமான பதிவினிடத்திற்கு நாம் திரும்புகின்றோம்; அப்போஸ்தலன் கூறுவதுபோன்று "ஸ்திரீ புருஷனுக்காகச் சிருஷ்டிக்கப்பட்டாள்" (1 கொரிந்தியர் 11:9). பதிவுகள் சுட்டிக்காட்டுகின்றதுபோல ஸ்திரீ சிருஷ்டிக்கப்பட்டதற்கான நோக்கம், அவள் புருஷனுக்கு ஏற்ற பொருத்தமான துணையாக இருப்பதற்கேயாகும். மனுஷனுக்கு இத்தகைய துணைவியின் அவசியம் இருந்தது என்பது, "மனுஷன் தனிமையாய் இருப்பது நல்லதல்ல" என்றுள்ள தேவனுடைய அறிக்கையினால் மாத்திரமல்லாமல், மிருகங்கள் அனைத்தின் மத்தியிலும் மனுஷனுக்கான "ஏற்ற துணைக் காணப்படவில்லை" என்றுள்ள வார்த்தைகளினாலும்கூட அறிந்துகொள்கின்றோம். மிருகங்கள் அனைத்தும் மனுஷனைத் தங்களது ஆண்டவரும், எஜமானுமாக எண்ணி, பூரணமாய்க் கீழ்ப்பட்டிருந்ததும், தேவையான அனைத்தையும் மனுஷனுக்குச் செய்வதில் பூரண கீழ்ப்படிதல் கொண்டிருந்ததும் உண்மையே. மிருகங்களில் அநேகமானவைகள் மனுஷனுடைய சுமைகளைச் சுமக்கும் அளவுக்கு வலிமையானவைகளாக இருந்தன; மனுஷனுக்கான காரியங்களைச் செய்திடுவதற்குச் சில மிருகங்கள் துரிதமாய் ஓடுபவைகளாய் இருந்தன; சில மிருகங்கள் மற்றும் இறகுகள் உள்ள சில ஜீவராசிகள், தோற்றத்திலுள்ள அழகின் மீதான மனுஷனுடைய இரசனையைத் திருப்திப்படுத்தின; சில ஜீவராசிகள் மனுஷனுடைய செவிகளுக்கு இசை இசைத்தன; அனைத்து மிருகங்களும் ஏறக்குறைய அறிவையும், பாசத்தையும் வெளிப்படுத்தின; எனினும் இவைகள் எல்லாவற்றிலும் ஒன்று குறைவுப்பட்டிருந்தது. பூரண மனுஷன் சுமை சுமக்கிற ஒன்றையோ அல்லது துரிதமாய்த் தூதுகொண்டு செல்லும் ஒன்றையோ அல்லது பார்வைக்கு இனிமையான வர்ணங்களுள்ள பட்டாம் பூச்சியையோ அல்லது இசை இசைத்திடும் ஒன்றையோ பேராவலுடன் எதிர்ப்பார்க்கவில்லை; அறிவுள்ள, ஒத்த உணர்வுள்ள துணையையே பூரண மனுஷன் பேராவலுடன் எதிர்ப்பார்த்தார்; மேலும் இந்தக் குறைவை, "ஏற்ற துணையை" தேவன் பிற்பாடு கொடுத்தார்; பொருத்தமானதைக் கொடுத்தார்.

தேவன் அவளைச் சிருஷ்டித்து, ஆதாமினிடத்திற்குக் கொண்டுவந்தபோது, ஆதாம் அவளுக்கு மனுஷி என்று பெயரிட்டார். இவ்வார்த்தையானது தாய்மையின் ஆற்றலை விசேஷமாய்ச் சுட்டிக்காண்பிப்பதற்குப் பயன்படுத்தப்படவில்லை என்கிற காரியமானது... பிற்பாடு தேவன் அவள் தாயாகுவாள் என்று கூறினபோது, ஆதாம் அவள் பெயரை ஏவாள் என்று மாற்றினார், காரணம் அவள் "ஜீவனுள்ளோருக்கெல்லாம் தாயானவள்" ஆவாள் எனும் உண்மையில் வெளியாகுகின்றது. "ஆதாம் தன் மனைவிக்கு ஏவாள் என்று பேரிட்டான்; ஏனெனில், அவள் ஜீவனுள்ளோருக்கெல்லாம் தாயானவள்" (ஆதியாகமம் 3:20) என்றும் நாம் வாசிக்கின்றோம் (ஆதியாகமம் 5:2). ஆகையால் தேவனும், மனுஷனும்

இந்தப் புதியதொரு சிருஷ்டியானவளை (ஸ்திரீயை) மனுஷனுடைய சாயலாக, அதேசமயம் சரீர ரீதியிலும், அறிவு ரீதியிலும் மனுஷனிடமிருந்து வேறுபடுபவளாக அடையாளம் கண்டுகொண்டனர். அவள் இன்னொரு மனுஷனல்ல, மாறாக இன்னொரு மனித ஜீவியாக, மனுஷனுடைய தேவையைப் பூர்த்திசெய்யும் ஒரு துணையாக மற்றும் இதனால் மனுஷனுக்கு ஏற்ற உதவியாளாய் இருப்பாள்.

அவள் ஆதாமுக்குத் துணைவியாய் இருக்கும் விதத்திலேயே அவள் உதவுபவளாக இருக்கின்றாள். அவள் வருவதற்கு முன்னதாக, ஆதாம் மிருக ஜீவராசிகளினால் சூழப்பட்டிருந்தபோதிலும், அவர் தனிமையாய் இருந்தார் மற்றும் அவைகளினால் கொடுக்கமுடியாத, துணையின் உதவியினுடைய அவசியத்துடன் காணப்பட்டார். தேவைப்பட்ட அந்த உதவியானது, சந்ததியைப் பெருகப்பண்ணிடும் வேலையாக மாத்திரம் இருக்கவில்லை என்பது - அவள் துவக்கம் முதற்கொண்டும், சந்ததி பெருகப்பண்ணிடும் காரியம் குறிப்பிடப்படுவதற்கு முன்னதாகவும், அவள் ஏற்ற மற்றும் விரும்பத்தக்கத் துணைவியாக/உதவியாளாக அடையாளம் கண்டுகொள்ளப்பட்டு, ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள காரியத்திலிருந்து தெளிவாகுகின்றது - சந்ததி பெருகின காரியம் விழுகைக்கு முன்பாகத் துவங்கிடவில்லை. இது சந்ததியிலுள்ள ஒவ்வொரு அங்கத்தினனும், கிறிஸ்து மூலமான மீட்பின் ஆசீர்வாதங்களில் பங்கடைவதற்கு அப்போஸ்தலனாகிய பவுல் கூறுவதுபோன்று ஒரு கிருபையுள்ள ஏற்பாடாகும் (உரோமர் 5:12; 11:32-33).

இப்படியாக மனுஷன் ஸ்திரீயில் ஓர் அறிவுள்ள துணையை, தன் சந்தோஷங்கள் அனைத்தையும் (அவருக்குத் துக்கங்கள் இருக்கவில்லை) உணர்ந்துகொள்ள முடிகிறவளை, சந்தோஷங்களில் பங்குகொள்ள முடிகின்றவளை மற்றும் தன் நன்மைகள் அனைத்திலும் தன்னோடுகூடப் பங்குகொள்ள முடிகின்றவளைக் கண்டடைந்தான். இப்படியெல்லாம் இல்லாதவளாக அவள் இருந்திருப்பாளாகில், அவள் ஏற்ற துணையாக அல்லது உதவியாளாக இருந்திருக்கமாட்டாள் மற்றும் ஆதாமும் இன்னமும் சில விதங்களில் தனிமையாகவே இருந்திருப்பார். மனுஷனுடைய குமாரர்களும், குமாரத்திகளும் பெருகினபோதும் - இருவரும் வீழ்ச்சிக்குள்ளானார்கள் என்பது தவிர மற்றப்படி, ஆதியில் இருந்த அதே இயல்புகளானது தொடர்ந்து இருபாலினர்களையும் வேறுபடுத்திக்கொண்டு வந்தது; ஆகையால் இருபாலினரும் அதேபோல் ஒருவருக்கொருவர் தொடர்புடையவர்களாய் இருப்பார்கள் - மனுஷன் பூமிக்குரிய சிருஷ்டிப்பின் "தலையாவான்" மற்றும் மனுஷி அவனுக்கு "ஏற்ற துணையாவாள்." மேலும் இந்த நிலையானது அப்போஸ்தலன் (1 கொரிந்தியர் 11:3) சுட்டிக்காண்பித்துள்ளபடி, விவாக உறவு இல்லாமலும் நிலவுகின்றது. தேவனுடைய ரூபத்திலும், சாயலிலும் உள்ள மனுஷனானவன், பூமியின் இராஜாவாகச் சிருஷ்டிக்கப்பட்டவன் ஆவான் மற்றும் "புருஷனுடைய மகிமையாயிருக்கும்" ஸ்திரீயானவள் ஜீவியத்தின் இயல்பான உறவுகள் அனைத்திலும், விசேஷமாக மனைவியின் நிலைமையில், மனுஷனுக்கும் பாத்திரமான துணைவியாகவும், உடன் சுதந்தரவாளியாகவும், அவனுடைய இராணியாகவும் காணப்படுகின்றாள். இந்த விதத்தில் தேவன் இருவருக்கும் ஆதியில் பூமிக்குரிய ஆளுகையை மீன்கள், ஆகாயத்துப் பறவைகள், காட்டு மிருகங்கள் முதலானவைகள் மீது கொடுத்தார் (ஆதியாகமம் 1:27-28; சங்கீதம் 8:6-8).

ஆகையால் பாலினங்களின் இந்த இயற்கையான உறவுமுறையானது எப்போதும் கவனிக்கப்பட வேண்டும்; ஸ்திரீயானவள் உலக காரியங்களில் மனுஷனுடைய சரியான மற்றும் தயவான தலைமைத்துவத்தின் கீழ், தனது வல்லமைகள் யாவற்றையும் பயன்படுத்திடுவதற்கு அதிகமான வாய்ப்புகளைப் பெற்றிருக்கும் போதிலும், அவள் தலை அல்ல, அதிபதி அல்ல, வழிநடத்துபவள் அல்ல என்பதை நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும். ஜீவியத்தின் காரியங்கள் அனைத்திலும் ஸ்திரீயானவளால் செய்ய முடியுமென வெளிப்படுத்திடும் உதவிகளை மனுஷன் முழுமையாய்

அடையாளம் கண்டுகொள்வதும், அங்கீகரிப்பதும், ஏற்றுக்கொள்வதும் ஏற்றதாகவும், அவசியமாகவும் காணப்படுகின்றது. தேவன் அவளுக்குத் திறமைகளைக் கொடுத்திருந்தாரானால், அவள் மனுஷனுக்கு மிகவும் திறமிக்க உதவியாளாக/துணைவியாக இருக்கத்தக்கதாக, அத்திறமைகள் வளர்த்தி விருத்தியாக்கப்படுவதற்காகவும், பயன்படுத்துவதற்காகவும்தான் அவளுக்குக் கொடுக்கப்பட்டுள்ளது; மேலும் இத்தகைய உதவியினை மறுப்பதோ, இத்தகைய திறமைகளைக் குன்றிப்போகச் செய்வதோ மனுஷனுக்கு ஏற்ற காரியமாய் இராது, தகுதியாயும் இராது. உதவியாள்/துணைவி தற்போதைய அபூரண சூழ்நிலைமையில்கூடச் சிலசமயம் அவளது இயல்பான அல்லது அவள் சம்பாதித்துக்கொண்ட திறமைகளின் விஷயத்தில் புருஷனைவிட மிஞ்சுகிறவளாய்க் காணப்பட்டாலும்கூடக் கூடுமானமட்டும் உதவுவாளாக. ஸ்திரீயானவளின் வேலையானது தன்னடக்கத்தோடும், பெண்மைக்குரிய பாங்கோடும், தேவனால் நியமிக்கப்பட்ட தலையை அல்லது பூமியின் இராஜாவை இறுமாப்பாய் ஆண்டிடுவதற்கான மனப்பாங்கு இல்லாமலும் செய்யப்படும்வரை, அவள் தன் கைக்கு அகப்படுவது எதுவோ, அதை முழுப்பெலத்தோடு செய்வாளாக.

ஸ்திரீயானவளின் விசேஷவேலையானது பொதுவாகவே அவளை எல்லைக்குட்படுத்துகின்றதான எல்லைக்குள்ளாகவே, அவளது விசேஷித்த உதவும் தன்மைகள் செயல்படுகின்றன - அதாவது மனைவியாக, தாயாக, சகோதரியாக, தோழியாக, அவள் வீட்டிலும், பள்ளி அறையிலும், மத ரீதியான வாழ்க்கையில், சமுக ரீதியான வாழ்க்கையில் இயல்பாகவே அவளுடையதாகிடும் கடமைகளிலும் மற்றும் அவ்வப்போது தொழில் சார்ந்த பகுதிகளிலும் செயல்படுகின்றாள். இந்த உறவு வகைகள் அனைத்திலும், ஸ்திரீயானவள் அவளது உயர்பட்ச நன்னெறிகளையும், அறிவுசார்ந்த சாதனைகளையும், சிறந்த கலைத்திறன்களையும், அவளது இயல்பான திறமையும், வளர்த்திக்கொண்ட திறமையும் அருளிடும் மிகச் சிறந்த அம்சங்களையும் கொண்டுவந்திடுவாளாக மற்றும் அவள் பூமியின் இராஜாவாகிய மனுஷனுக்கு ஏற்ற மற்றும் பாத்திரமான துணைவியாக/உதவியாளாக உள்ள தன் நிலையினை நிறைவேற்றிடுவாளாக. உண்மைதான் மனுஷனும், மனுஷியும் இராஜாவெனவும், உடன்சுதந்தரவாளியெனவும் அவர்களுக்கு அருளப்பட்டிருந்த பூமியின்மீதான ஆளுகையினை இழந்துவிட்டனர்; ஆனாலும் சாபத்தின் கீழ்க் காணப்பட்டாலும், இன்னமும் பூரணத்தினை நோக்கி செல்லுவதற்குரிய போராட்டத்தில் இன்னமும் ஸ்திரீயானவள் மனுஷனுக்கு உதவியாளாகவும், துணைவியாகவும் காணப்படலாம்; மேலும் சகோதரிக்குரிய சிநேகத்தின் ஆவியில் உதவிசெய்யப்படும்போது, இந்த உதவும் தன்மையினை எந்த உண்மையான மனுஷனும் அசட்டைப்பண்ணான்.

## ஸ்திரீ ஒரு மனைவியாக

பொதுவாக மனுஷன் விஷயத்திலுள்ள ஸ்திரீயினுடைய இயல்பான அணுகுதல் என்பது ஏற்ற உதவியாளாக/துணைவியாக இருப்பதே ஒழிய, தலைவன் விதத்தில் அல்ல என்பதை பார்த்துள்ளப்படியால், இப்பொழுது ஸ்திரீ மனைவியாக இருப்பது பற்றின வேதாகம பார்வையினைப் பார்த்திடலாம். அந்தோ பரிதாபம்! அநேகருடைய விஷயத்தில் பூமியிலுள்ள இந்த அருமையான உறவானது, குடும்பத்தில் அடிமைத்தனமாகச் சீரழிந்துள்ளது. அடிமைத்தன்மையை வலியுறுத்திடும் கொடுங்கோலர்கள் பெரும்பாலும் தங்கள் நடத்தைக்கு ஆதரவாய் இருக்கும்படிக்கு அப்போஸ்தலர்களுடைய போதனைகளைத் திரித்துக்கூறுகின்றனர் அல்லது அதற்குத் தவறாய் அர்த்தம் கொடுத்து விளக்குகின்றனர் - சிலர் அறியாமல் இப்படிச் செய்கின்றனர். ஆகையால் குடும்பத்தில் கொடுங்கோல் ஆட்சி/அடக்குமுறை செய்வதற்கும், பூமிக்குரிய தளத்தில் - ஓர் உண்மையான மனைவியென அவளுக்கு இருக்கும் எல்லையில் அவளை வளர்ச்சி குன்றச்செய்வதற்கும், அவளைக் கீழ் நிலைக்குத்

தள்ளுவதற்கும் என்று அடிக்கடி வலியுறுத்தப்படுகின்றதான வேதவாக்கியங்களை, ஆராய்வது நமது நோக்கமாகியுள்ளது.

அவ்வேதவாக்கியங்கள் சரியாய்ப் பகுத்தறியப்பட்டால் அவைகள் இப்படியான எதையும் போதிப்பதில்லை எனும் காரியத்தை நாம் இங்கு முதலாவதாகத் தெரிவித்துக்கொள்கின்றோம் மற்றும் அவ்வேதவாக்கியங்களானது இப்படியாகப் போதிப்பதில்லை என்பதற்கான சிறந்த ஆதாரங்களில் ஒன்று . . . கர்த்தர் இவ்வுறவுமுறையைத்தான் தமக்கும், மகிமையடைந்த சபைக்கும் இடையிலான உறவை விவரிப்பதற்கு அடையாளமாகத் தெரிந்துகொண்டுள்ளார்; இந்த உறவுமுறையானது மிகவும் மகிமையானதாகவும், சுவிசேஷயுகம் முழுவதிலுமுள்ள உண்மையான தேவ பிள்ளைகளுக்கான பரிசாக முன்வைக்கப்பட்டுள்ளதாகவும் இருக்கின்றது; ஒவ்வொரு பூமிக்குரிய நன்மைகளும் மரணபரியந்தம் பலி செலுத்திடுவதற்குப் பாத்திரமான ஒரு பரிசாக இப்பரிசு காணப்படுகின்றது. இந்த உறவிற்கான அடையாளமானது, சில விதங்களில் வரவிருக்கும் அந்த மகிமையினை நிச்சயமாகவே வெளிப்படுத்திட வேண்டும்.

கணவன் மற்றும் மனைவியுடன் அப்போஸ்தலனால் ஒப்பிடப்படுகிறதும், யேகோவா மற்றும் கிறிஸ்து இயேசுவினுடைய உறவிலும், நமது கர்த்தராகிய இயேசு மற்றும் சபைக்கிடையிலான உறவிலும் விவரிக்கப்பட்டுள்ளதுமான - தலை மற்றும் சரீரத்தின் உறவில், தேவனுடைய குமாரர்களுடைய மகிமையான சுயாதீனத்திற்கு இசைவற்றது ஏதுமில்லை என்று நாம் ஏற்கெனவே பார்த்திருக்கின்றோம்; ஆகையால் ஸ்திரீயின் மீதான மனுஷனுடைய தலைமைத்துவமும் சரியாய்ச் செயல்படுத்தப்பட்டால், மகிமையான சுதந்தரத்திற்கு இசைவாகவே இருக்கும்.

கர்த்தருக்கான ஊழியத்தில் ஸ்திரீயானவள் ஞானமுள்ள உக்கிராணக்காரியென, அவளது தாலந்துகளை முழுமையாய் அவள் பயன்படுத்திடும் கடமை மற்றும் சிலாக்கியத்திலிருந்து அவளைத் தடைப்பண்ணிடுவதற்காக மனுஷனுடைய தலைமைத்துவமானது வடிவமைக்கப்படவில்லை, மாறாக அவளது ஆற்றல்களையும், வல்லமைகளையும், இன்னும் பலமான வல்லமையினுடைய (மனுஷனுடைய) ஒத்துழைப்புடன், அவளது பிரயோஜனமான தன்மையினை அதிகரிக்கவே ஆகும் என்பதையும் நாம் பார்த்திருக்கின்றோம்.

கணவனுக்கு மனைவி அடிமைத்தனமாகக் கீழ்ப்பட்டிருத்தல் என்பதைச் சுட்டிக்காட்டுவதாக அனுமானிக்கப்படும் அப்போஸ்தலருடைய போதனைக்கு உதாரணமாகச் சில சமயங்களில் நமக்கு எபேசியர் 5:22-24-ஆம் வசனங்கள் தெரிவிக்கப்படுகின்றன; "மனைவிகளே, கர்த்தருக்குக் கீழ்ப்படிகிறதுபோல, உங்கள் சொந்தப் புருஷருக்குக் கீழ்ப்படியுங்கள். கிறிஸ்து சபைக்குத் தலையாயிருக்கிறதுபோல, புருஷனும் மனைவிக்குத் தலையாயிருக்கிறான்; அவரே சரீரத்திற்கும் இரட்சகராயிருக்கிறார். ஆகையால், சபையானது கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படிகிறதுபோல மனைவிகளும் தங்கள் சொந்தப் புருஷர்களுக்கு எந்தக் காரியத்திலேயும் கீழ்ப்படிந்திருக்க வேண்டும்."

ஒருவேளை தலைமை ஸ்தானமானது பொதுவாய் மனுஷனில் இயற்கையாகவே அமைந்துள்ளதெனில் மற்றும் இது பொதுவாய் ஸ்திரீகளினால் கவனிக்கப்பட வேண்டுமெனில், இவ்விஷயமானது கணவன், மனைவி எனும் விசேஷித்த உறவில் ஆற்றல்மிக்கதாய்க் காணப்படும்; ஏனெனில் எதிர்பாலினர்மீது ஸ்திரீயானவளினால் இயல்பாய் உணரப்படும் பயபக்தியானது/ மரியாதையானது, அவளால் தன்னுடைய புருஷன் என்று ஏற்றுக்கொள்ளப்படுகின்ற மனுஷன் விஷயத்தில் நிச்சயமாகவே அதிகரித்திட வேண்டும். எந்த விதத்தில் மனைவியானவள் அவளது கணவனுக்குக் கீழ்ப்படிந்திட வேண்டும் என்று ஆலோசனை வழங்கப்படும் காரியமானது - "சபையானது கிறிஸ்துவுக்குக்

கீழ்ப்படிகிறதுபோல" என்று அப்போஸ்தலனால் தெளிவாக முன்வைக்கப்பட்டுள்ளது. ஆகையால் சபை எப்படிக் கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படிகிறது என்று கவனிப்பதற்கு நாம் ஏவப்படுகின்றோம். சபை கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படிவது என்பது விருப்பத்துடன்கூடிய கீழ்ப்படிதலாக இருக்கின்றது என்றும், அந்தக் கீழ்ப்படிதலானது அன்பினாலும், மரியாதையினாலும், நன்றியறிதலினாலும், நமக்கான கர்த்தருடைய அன்பு மற்றும் பராமரிப்பின் மீதான நமது முழுமையான நம்பிக்கையினாலும், விசுவாசத்தினாலும் ஏவப்படுகின்றது என்றும், இன்னுமாக நாம் நமக்குச் செய்துகொள்பவைகளைக் காட்டிலும் அதிகமாய் நமக்குச் செய்திடும் அவரது மேலான ஞானத்தின் மீதான நமது முழுமையான நம்பிக்கையினாலும், விசுவாசத்தினாலும் ஏவப்படுகின்றது என்றும் நாம் காண்கின்றோம். இந்த ஒரு மனோநிலையினையே கிறிஸ்துவின்பால் அப்போஸ்தலன் பூரணமாய்க் கொண்டவராக, ஒவ்வொரு சிந்தையையும் கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படுத்துவதற்கே தன் பிரயாசம் காணப்பட்டதாகக் கூறுகின்றார் (2 கொரிந்தியர் 10:5). இத்தகைய மனோநிலையினை மனைவியானவள், அவளது பூலோக தலைவனிடத்தில் பெற்றிருப்பது என்பது எப்போதும் கூடாத காரியம் என்பதை அப்போஸ்தலன் புருஷர்களை நோக்கி: "மனைவியும் புருஷனிடத்தில் பயபக்தியாயிருக்கத்தக்கதாக, உங்களிலும் அவனவன் தன்னிடத்தில் அன்புகூருவதுபோல, தன் மனைவியினிடத்திலும் அன்புகூரக்கடவன்" என்று கூறும்போது ஒத்துக்கொள்கின்றார். "But also you the everyone, each one the of himself wife thus let love as himself; the and wife so that she may reverence the husband" (Diaglott; எபேசியர் 5:33); "Let each one of you, individually, so love his own wife as himself, in order that (hina என்ற வார்த்தை எபேசியர் 3:10-ஆம் வசனத்தில் இப்படியாகவே மொழிப்பெயர்க்கப்பட்டுள்ளது -Diaglott) the wife may reference her husband" (எபேசியர் 5:33).

(கணவனின்) உண்மையான அன்பும், உண்மையான உயர் குணலட்சணமும் மாத்திரந்தான் இத்தகைய மரியாதை/பயபக்தியை மனைவிகொண்டிருக்க வழிநடத்திடும்; இல்லையேல் சபை கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படிந்து இருப்பதுபோல மனைவியானவளால் அவளது கணவனுக்குக் கீழ்ப்படிந்திருப்பது என்பது கூடாத காரியமாகும். இழிவானதும், பரிசுத்தமற்றதுமாய் இருக்கும் ஒன்றிற்குக் கீழ்ப்படிவது அல்லது பயபக்திகொண்டிருப்பது என்பதும்கூடச் சரியான காரியமாய் இராது. ஆனால் எந்தப் பூமிக்குரிய தலைவனிடத்தில் தன்னுடைய தவறிழைக்கும் தன்மையைத் தாழ்மையாய் ஒப்புக்கொள்ளும் உயர்குணலட்சணம் இருக்கின்றதோ மற்றும் வேதவாக்கியங்களிலுள்ள தேவனுடைய சத்தத்திற்கும், பகுத்தறிவிற்கும் கட்டுப்படும் தன்மையிருக்கின்றதோ, அத்தகையவரிடத்தில் தவறிழைக்கும் தன்மை இருப்பினும் அவருக்கு மனைவி கீழ்ப்படிவதும், பயபக்திகொண்டிருப்பதும், கூடுகிற காரியமாகவும், உள்ளார்ந்து செய்ய முடிகிற காரியமாகவும் இருக்கும்.

புருஷர்களுக்கான அப்போஸ்தலனுடைய ஆலோசனையைக் கவனிக்கையில் (வசனம் 25-29) சபைமீதான கிறிஸ்துவின் மேற்பார்வையும், அவருக்கான அவளுடைய கீழ்ப்படிதலுக்குமான நோக்கமாவது - அவளது ஆவிக்குரிய அல்லது அறிவுசார்ந்த கருத்துக்களைக் கட்டுப்படுத்துவதற்கோ, அவளது ஆற்றல்களைக் குன்றச் செய்வதற்கோ அல்லது குறைத்துப்போடுவதற்கோ, இழிவான அல்லது சுயநலமான ஆதாயத்தை அடைவதற்கோ என்று காணப்படாமல், மாறாக அவள் பரிசுத்தமானவளாகவும், குறையற்றவளாகவும், கறைதிரையற்றவளாகவும் அல்லது இவைகள் ஏதும் அற்றவளாகவும் காணப்படத்தக்கதாகத் திருவசனமாகிய தண்ணீரின் சுத்திகரிப்பினால், அவள் சுத்திகரிப்பை அடைய வேண்டும் மற்றும் முற்றும் முழுமையான பரிசுத்தமாகுதலை அடைய வேண்டும் என்பதே அவரது நோக்கமாகும். மேலும் சபையினிடத்திலுள்ள கிறிஸ்துவின் இந்த மனப்பான்மையானது, அவர் சபையை அன்புகூர்ந்து, தம்மையே சபைக்காகக் கொடுத்திட்ட சுயத்தைப் பலிசெலுத்தும் அவரது ஆவியின்மூலம்

அவளுக்கு வெளிப்படுத்தப்பட்டுள்ளது. அப்போஸ்தலன் கூறினதுபோன்று, "அப்படியே புருஷர்களும் தங்கள் மனைவிகளைத் தங்கள் சொந்தச் சரீரங்களாகப் பாவித்து அவர்களில் அன்புகூர வேண்டும்" மற்றும் இப்படியாக அவர்கள் "எந்த/எல்லாக் காரியத்திலேயும்" மனைவி தன்மீது பயபக்தி கொண்டிருக்கவும், தனக்கு அன்புடன் கீழ்ப்படியவும் எதிர்ப்பார்த்திட வேண்டும்; "எந்தக் காரியத்திலேயும்" என்று சொல்லும்போது அது நிச்சயமாகப் பரிசுத்தமற்றதும், அசுத்தமானதும், சுயநலமானதுமான எந்தக் காரியங்களையும் குறிக்காமல், மாறாக பரிசுத்தத்திற்கும், தூய்மைக்கும் மற்றும் உண்மையான உயர்குணலட்சணத்திற்கும் அடுத்த எந்த/எல்லாக் காரியத்தையும் குறிக்கின்றதாய் இருக்கும்; இவைகளின் கொள்கைகள் தேவ வசனத்தில் முன்வைக்கப்பட்டுள்ளன. அனனியாவின் மனைவியாகிய சப்பீராளின் விஷயத்தில், கணவனுக்கான மனைவியினுடைய சரியற்ற கீழ்ப்படிதலுக்கு எதிராக கர்த்தருடைய அதிருப்தியின் தெளிவான உதாரணத்தைக் காண்கின்றோம் (அப்போஸ்தல நடபடிகள் 5:7-10).

அனைத்துப் புருஷர்களும், அனைத்து மனைவிகளும் கிறிஸ்து மற்றும் சபையின் முன்மாதிரியைப் பின்பற்றிடும் மாணாக்கர்களாக இருப்பார்களானால் நிச்சயமாகவே காரியங்கள் ஆசீர்வாதமான மற்றும் சந்தோஷமான நிலைமையில் இருந்திருக்கும்; ஆனால் வெகுச் சிலரே மேற்கூறிய அறிவுரைகளைத் தங்களுடைய இருதயங்களில் செயல்படுத்துகிறவர்களாக இருக்கின்றார்கள் என்பது வருந்தத்தக்க உண்மையாகும்; மேலும் அநேகம் கணவன்மார்கள் (கிறிஸ்து மற்றும் சபையின்) முன்மாதிரியைப் பின்பற்றிடுவதற்கான அப்போஸ்தலர் பவுலினுடைய அறிவுரைகளை மறந்தவர்களாகத் தன்னிச்சையாகவும், சுயநலமாகவும் அதிகாரம் செலுத்திடுவதற்குத் தங்களுக்கு உரிமையிருப்பதாகக் கற்பனைபண்ணிக்கொள்கின்றனர் மற்றும் இதற்கு எதிராக மனைவிமார்களோ, கீழ்ப்படிதலுக்குத் தூரமாய் இருக்கும் நீதியான கோபத்தையும், எதிர்ப்பையும் காட்டுகின்றனர் மற்றும் இது விஷயம் வேதவாக்கியங்கள் கூறுபவைகளைப் புரிந்துகொள்ள கணவன்மார்கள் தவறினவர்களாகி, வேதம் குடும்பத்தில் அடிமைதனத்தையும், கொடுங்கோல் ஆட்சியையும் போதிப்பதாக வலியுறுத்துகின்றனர் மற்றும் இப்படியாக எண்ணுகின்றனர்; இப்படியாகச் சந்தேகத்திற்கும், நாத்திகத்திற்கும் நேராய் வழித்திறக்கின்றனர்.

கிறிஸ்தவ கொள்கைகளினால் வழிநடத்தப்படாதவராகவும், ஆளும் உரிமை தனக்கிருப்பதாகச் சுயநலத்தில் கற்பனைப் பண்ணிக்கொண்டு அவ்வுரிமையை வலியுறுத்துபவராகவும் காணப்படும் கணவனையுடைய கிறிஸ்தவ மனைவியானவள்: நான் என்ன செய்ய வேண்டும் என்று கேட்கின்றாள்? அது சூழ்நிலைச் சார்ந்ததாய் இருக்கும்; கர்த்தருக்குள் மாத்திரமே விவாகம்பண்ணிக்கொள்ளுங்கள் எனும் அப்போஸ்தலனுடைய ஆலோசனையை உங்கள் வாலிபப் பிராயத்தில் நீங்கள் நினைவுகூர்ந்திருந்தால் நலமாய் இருந்திருக்கும் மற்றும் உங்கள் தவறுக்காக நீங்கள் சில தண்டனைகள் இப்போது அனுபவிக்க வேண்டியுள்ளது. யார் ஒருவரையும் திருப்திப்படுத்துவதற்காக நீங்கள் உங்கள் மனச்சாட்சியினை மீறிடக்கூடாது என்பதை முதலாவது நீங்கள் நினைவில்கொண்டிருக்க வேண்டும்; ஏனெனில், "மனுஷருக்குக் கீழ்ப்படிவதைப்பார்க்கிலும், தேவனுக்குக் கீழ்ப்படிவதே அவசியமாய் இருக்கிறது" என்று அப்போஸ்தலர் பேதுரு கூறுகின்றார் (அப்போஸ்தல நடபடிகள் 5:29; 4:19-20). ஆனால் எந்தச் சூழ்நிலைகளில் மனைவிமார்களின் மனச்சாட்சியானது அதன் (மறுப்பு) கருத்தைத் தெரிவிக்கிறதில்லையோ, அத்தகைய நிலைமையில் காணப்படும் மனைவிமார்களுக்கு அப்போஸ்தலர் அநீதியான எஜமான்களைப் பெற்றிருக்கும் வேலைக்காரர்களுக்கு கொடுத்திடும் அதே ஆலோசனையைக் கொடுக்கின்றார் (1 பேதுரு 2:18-23; 3:1,2). வேலைக்காரர்களை நோக்கி அவர்: "வேலைக்காரரே (கோபமூட்டிவிடாதபடிக்கு ஜாக்கிரதையோடு) அதிகப்பயத்தோடே உங்கள்

எஜமான்களுக்குக் கீழ்ப்படிந்திருங்கள்; நல்லவர்களுக்கும், சாந்தமுள்ளவர்களுக்கும் மாத்திரமல்ல, முரட்டுக்குணமுள்ளவர்களுக்கும் கீழ்ப்பட்டிருங்கள்" என்று கூறுகின்றார்; ஏனெனில் நம்முடைய உரிமைகளாக இருப்பினும் அதற்காகப் போராடுவதற்குப் பதிலாக, அநியாயமாய்ப் பாடுபட்டு உபத்திரவங்களை அனுபவிப்பது நலம். "ஏனெனில், தேவன்மேல் பற்றுதலாயிருக்கிற மனச்சாட்சியினிமித்தம் ஒருவன் அநியாயமாய்ப் பாடுபட்டு உபத்திரவங்களைப் பொறுமையாய்ச் சகித்தால் அதுவே பிரீதியாயிருக்கும். நீங்கள் குற்றஞ்செய்து அடிக்கப்படும்போது பொறுமையோடே சகித்தால், அதினால் என்ன கீர்த்தியுண்டு? நீங்கள் நன்மைசெய்து பாடுபடும்போது பொறுமையோடே சகித்தால் அதுவே தேவனுக்குமுன்பாகப் பிரீதியாயிருக்கும்" (1 பேதுரு 2:19-20). பின்னர் இந்தக் கொள்கைகளைக் கடைப்பிடிக்கும் விஷயத்தில் கிறிஸ்துவின் மாதிரியை அப்போஸ்தலன் சுட்டிக்காட்டி "இதற்காக நீங்கள் அழைக்கப்பட்டுமிருக்கிறீர்கள்; ஏனெனில், கிறிஸ்துவும் உங்களுக்காகப் பாடுபட்டு, நீங்கள் தம்முடைய அடிச்சுவடுகளைத் தொடர்ந்துவரும்படி உங்களுக்கு மாதிரியைப் பின்வைத்துப்போனார்" (1 பேதுரு 2:21) என்று கூறுகின்றார். "சீஷன் தன் போதகனிலும், வேலைக்காரன் தன் எஜமானிலும் மேற்பட்டவனல்ல" (மத்தேயு 10:24). பின்னர் "அந்தப்படியே முரட்டுக்குணமுள்ள புருஷன்மார்களைப் பெற்றிருக்கும் மனைவிகளே உங்கள் சொந்தப் புருஷர்களுக்குக் கீழ்ப்படிந்திருங்கள்; அப்பொழுது அவர்கள் யாராவது திருவசனத்திற்குக் கீழ்ப்படியாதவர்களாய் இருந்தால், சண்டையிடாமல், அன்புடன்கூடிய சகிப்புத்தன்மையின் ஆவியினை வெளிப்படுத்திடும் (கோபமூட்டாதபடிக்கு ஜாக்கிரதையோடுகூடிய) பயபக்தியோடுகூடிய உங்கள் கற்புள்ள நடக்கையைப்பார்த்து . . . ஆதாயப்படுத்திக்கொள்ளப்படுவார்கள்" என்று கூறுகின்றார் (1 பேதுரு 3:1).

மனைவியானவள் கிறிஸ்துவின் தாழ்மையினைப் பிரதிபலித்திடும்படியாக அவளுக்கு விசேஷமாய் ஆலோசனை வழங்கப்பட்டிருக்கும் அதேவேளையில், கிறிஸ்துவின் பெருந்தன்மையினைப் பிரதிபலித்திடும்படியாகப் புருஷர்களுக்கும் வலியுறுத்தப்பட்டுள்ளது - "அந்தப்படியே புருஷர்களே, மனைவியானவள் பெலவீனபாண்டமாயிருக்கிறபடியினால் (உங்கள் பலத்தினால் அவளை ஆதரியுங்கள் மற்றும் ஊக்குவியுங்கள்; மாறாக அவளை ஒடுக்கிடுவதற்காக உங்கள் பலத்தினைப் பயன்படுத்தாதீர்கள்), நீங்கள் விவேகத்தோடு (ஞானத்தோடு மற்றும் பெருந்தன்மையோடு) அவர்களுடனே வாழ்ந்து, உங்களுடனேகூட அவர்களும் நித்திய ஜீவனாகிய கிருபையைச் (தயவுகளை மற்றும் ஆசீர்வாதங்களை) சுதந்தரித்துக்கொள்ளுகிறவர்களானபடியினால், அவர்களுக்குச் செய்ய வேண்டிய கனத்தைச் செய்யுங்கள் (அவளுடைய வளர்ச்சியிலும், அவளது அனைத்துச் சிறந்த சாதனைகளிலும், செய்கைகளிலும் மகிழ்ச்சிக்கொள்ளுங்கள்)" (1 பேதுரு 3:7).

எதிர்த்துப் போராடிடுவதற்குப் பதிலாக, இதே கீழ்ப்படியும் ஆவியே முழுச்சபையும், உலக அதிகாரிகளிடத்தில் கொண்டிருக்கும் நடக்கையில் பெற்றிருக்க வேண்டுமென வலியுறுத்தப்படுகின்றது. அப்போஸ்தலனாகிய பேதுரு கூறுவதாவது: கர்த்தருடைய ஆவி அல்லது சிந்தை உங்களில் வெளிப்படத்தக்கதாக... "நீங்கள் மனுஷருடைய கட்டளைகள் யாவற்றிற்கும் கர்த்தர்நிமித்தம் கீழ்ப்படியுங்கள்"; ஏனெனில் "நீங்கள் நன்மைசெய்கிறதினாலே புத்தியீன மனுஷருடைய அறியாமையை அடக்குவது தேவனுடைய சித்தமாயிருக்கிறது."(1 பேதுரு 2:1-17);"எந்த மனுஷனும் மேலான அதிகாரமுள்ளவர்களுக்குக் கீழ்ப்படியக்கடவன்" என்று அப்போஸ்தலனாகிய பவுல் கூறியுள்ளார் (உரோமர் 13:1, 5); மேலும் தீத்துவுக்கு எழுதுகையில், "துரைத்தனங்களுக்கும் அதிகாரங்களுக்கும் கீழ்ப்படிந்து அடங்கியிருக்கவும், சகலவிதமான நற்கிரியைகளையும் செய்ய ஆயத்தமாயிருக்கவும்" என்று கூறியுள்ளார் (தீத்து 3:1).

(குடும்ப உறவில் மனைவிக்கு விசேஷமாய்க் காணப்படும்) கீழ்ப்படிவதற்குரிய இந்தக் கடமையானது, முழுச்சபையாருக்குமே தனிப்பட்ட விதத்தில், ஒருவரோடொருவர் கொண்டிருக்கும் உறவிலும்கூட வலியுறுத்தப்பட்டுள்ளது. ஆகையாலே அப்போஸ்தலனாகிய பேதுரு: "உங்களிலுள்ள மூப்பருக்கு உடன்மூப்பனும், கிறிஸ்துவின் பாடுகளுக்குச் சாட்சியும், இனி வெளிப்படும் மகிமைக்குப் பங்காளியுமாயிருக்கிற நான் புத்தி சொல்லுகிறதென்னவென்றால்; உங்களிடத்திலுள்ள தேவனுடைய மந்தையை நீங்கள் மேய்த்து, கட்டாயமாய் அல்ல, மனப்பூர்வமாயும், அவலட்சணமான ஆதாயத்திற்காக அல்ல, உற்சாகமனதோடும், சுதந்தரத்தை இறுமாப்பாய் ஆளுகிறவர்களாக அல்ல, மந்தைக்கு மாதிரிகளாகவும், (தாழ்மைக்கு, சகோதர சிநேகத்திற்கு, பொறுமைக்கு, உண்மைத்தன்மைக்கு மாதிரிகளாகவும்) கண்காணிப்புச் செய்யுங்கள். அப்படிச் செய்தால் பிரதான மேய்ப்பர் வெளிப்படும்போது மகிமையுள்ள வாடாத கிரீடத்தைப் பெறுவீர்கள். அந்தப்படி, இளைஞரே, மூப்பருக்குக் கீழ்ப்படியுங்கள், நீங்களெல்லாரும் ஒருவருக்கொருவர் கீழ்ப்படிந்து, மனத்தாழ்மையை அணிந்துகொள்ளுங்கள்; பெருமையுள்ளவர்களுக்கு தேவன் எதிர்த்து நிற்கிறார், தாழ்மையுள்ளவர்களுக்கோ கிருபை அளிக்கிறார். ஆகையால், ஏற்றகாலத்திலே தேவன் உங்களை உயர்த்தும்படிக்கு, அவருடைய பலத்த கைக்குள் அடங்கியிருங்கள்" (1 பேதுரு 5:1-6) என்று கூறுகின்றார் (எபேசியர் 5:21).

ஒருவேளை சபையில் ஒரு பரிபூரணமான மனுஷன் இருப்பானானால், அங்கத்தினர்கள் யாவரும் அந்த மனுஷனுடைய வழிகாட்டுதலுக்கும், அறிவுரைக்கும் கீழ்ப்படியும்படி அநேகமாக ஆலோசனை வழங்கப்பட்டிருக்கும். ஆனால் சபையில் தவறிழைக்காத மனுஷனுக்குப் பதிலாக, நாம் தவறிழைக்காத தேவவசனங்களைப் பெற்றிருக்கின்றோம் மற்றும் இதைக்கொண்டே நாம் ஒவ்வொருவரும் மற்றும் அனைவரும் காரியங்களைச் சோதித்தறியும்படியாக அறிவுறுத்தப்பட்டிருக்கின்றோம். ஆகையால் எழுதப்பட்டுள்ள தேவவசனத்திற்குக் கீழ்ப்படிவதே நமது முதலாம் கடமையாகும் மற்றும் பிற்பாடு திருவசனத்தைக்கொண்டு சோதித்தறிந்து ஒருவருக்கொருவர் கீழ்ப்படிய வேண்டும்; மற்றும் கடைசியாகத் தாழ்மையின் அல்லது கீழ்ப்படிதலின் இந்த ஆவியானது எப்போதும் நம் அனைவரிலும் வெளிப்படத்தக்கதாக... நம்முடைய நடத்தையும்/பாவனையும், சம்பாஷணையும்/வார்த்தைகளும் தன்னடக்கத்தினாலும், சகோதர மற்றும் சகோதரிக்குரிய சிநேகத்தினாலும், கபடற்ற தன்மையினாலும் சாரமேற்றப்பட்டிருப்பதாக.

இப்படியே... இன்னும் ஆற்றல்மிக்க விதத்தில் குடும்ப உறவுகளில் மனைவியின் சார்பிலான கீழ்ப்படியும் கடமை குறித்து அப்போஸ்தலன் முன்வைக்கின்றார். அது அன்பின், பயபக்தியின், நம்பிக்கையின் மற்றும் தாழ்மையின் மணம்வீசும் கீழ்ப்படிதலாகும் மற்றும் அது "தேவனுடைய பிள்ளைகளுக்குரிய மகிமையான சுயாதீனத்துடன்" இசைந்து செல்லுகின்றதாய் இருக்கும் (உரோமர் 8:21) மற்றும் அது கர்த்தருடைய ஆவி எங்கெல்லாம் காணப்படுகின்றதோ அங்கெல்லாம் காணப்படும் (2 கொரிந்தியர் 3:17) மற்றும் இதில்தானே நாம் "நிலைக்கொண்டு இருக்கும்படியாகவும்" அப்போஸ்தலனாகிய பவுல் வலியுறுத்துகின்றார் (கலாத்தியர் 5:1).

ஆபிரகாமின் மனைவியாகிய சாராள்... மனைவியின் அடங்கியிருத்தலுக்கு/கீழ்ப்படிதலுக்குச் சரியான உதாரணமாய்க் காணப்படுகின்றாள் என்று அப்போஸ்தலனாகிய பேதுருவினால் நமக்குக் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆபிரகாமை ஆண்டவன் என்று சாராள் அழைப்பதிலிருந்து (ஆதியாகமம் 18:12) சுட்டிக்காண்பிக்கப்படுவது போன்று... சாராள் ஆபிரகாமை பயபக்தியோடு நடத்தினபோதிலும், தன் சொந்தத் தேசத்தையும், நண்பர்களையும் ஐயமின்றி சந்தோஷத்தோடு விட்டுவிட்டு, தன் கணவனுக்குத் தேவனால் கட்டளையிடப்பட்டவைகளுக்குச் சாராள் கீழ்ப்படிந்து, வாக்குத்தத்தத்தின் தேசத்தினை நோக்கின ஆபிரகாமின் பயணத்தில், அவரோடுகூடப் பிரயாணித்து, விசுவாசத்தோடு ஆபிரகாமோடு நடந்தபோதிலும் - அவளது அடங்கியிருத்தலானது/கீழ்ப்படிதலானது... ஆபிரகாமின் கருத்துகளுக்கு

வேறுபட்ட கருத்துக்களை அவள் வெளிப்படுத்திடுவதற்குத் தடைப்பண்ணிடும் கண்மூடித்தனமான கீழ்ப்படிதலாய் இருக்கவில்லை; இப்படிக் கண்மூடித்தனமான கீழ்ப்படிதலை ஆபிரகாம் எதிர்ப்பார்த்ததாகவும்... அவளிடத்தில் ஆபிரகாம் நடந்துகொண்ட எந்த நடத்தையிலும் தென்படுகிறதில்லை. அவள் சிந்திக்கும் ஸ்திரீயாகக் காணப்பட்டாள்; உலகத்தின்மீது ஆசீர்வாதம் கடந்துவரும் ஒரு குமாரனை அவர்கள் பெற்றுக்கொள்வார்கள் என்ற தேவனுடைய வாக்குத்தத்தத்தினை நம்பினாள்; மேலும் அவள் வயது இதற்குச் சாத்தியமற்றது போன்று தோன்றியபோது, வாக்குத்தத்தமானது நிறைவேறுவதற்கு வாய்ப்புள்ள வழி ஒன்றினை அவள் யோசனையாகத் தெரிவித்தாள். ஆகார் பெருமைப்பாராட்டி, தன் எஜமாட்டியை அற்பமாய் எண்ணினபோது சாராள் இதை ஆபிரகாமிடத்தில் முறையிட்டாள் மற்றும் இதற்கு/குற்றத்திற்கு அவரும் கொஞ்சம் பொறுப்பாளியாக இருக்கின்றாரென வலியுறுத்தினாள். ஆபிரகாமின் இருதயமானது, அவளது வேலைக்காரிக்கும் பங்குபோடப்படக்கூடாது என்று சாராள் விரும்பினாள். அத்தகைய பங்கிடுதல்கள் இல்லை என்றும், அவளது வேலைக்காரி, இன்னமும் அவளது கட்டுப்பாட்டின் கீழாகவே இருக்கின்றாள் என்றும் உள்ள ஆபிரகாமின் பதிலானது, அவளுக்கு உறுதியளித்தது. பின்னர் ஆகாரைச் சாராள் நடத்தின விதமானது, அவளது பெருமையையும், அவளது நாச்சியாரிடத்திலுள்ள அவளது சரியற்ற நடத்தையையும் சரி செய்யும் விதத்தில் இருந்தது. ஆகார் ஓடினபோது, கர்த்தருடைய தூதனானவர் அவளைச் சந்தித்து, அவள் தனது நாச்சியாரிடத்திற்குத் திரும்பிடுவதற்கும், எஜமாட்டிக்குக் கீழ்ப்படிந்திருக்கவும் கூறினார் மற்றும் அவள் இப்படியாகச் செய்தபோது, அவள் சாராளினால் ஏற்றுக்கொள்ளப்பட்டாள் (ஆதியாகமம் 16).

வேறொரு தருணத்தில்... ஈசாக்கு பிறந்தப் பிற்பாடு மற்றும் இரு சிறுவர்களும் சேர்ந்து வளர்ந்துகொண்டிருக்கும்போது, ஆகாரின் போட்டிமனப்பான்மை, மீண்டுமாக இஸ்மயேல் வாயிலாய் வெளிப்பட்டது; சாராளின் குமாரனாகிய ஈசாக்கினை இஸ்மயேல் துன்புறுத்திக்கொண்டிருந்தான் (ஆதியாகமம் 21:9; கலாத்தியர் 4:29). மீண்டும் சாராள் துயரம் அடைந்து, அடிமைப்பெண்ணையும், அவள் குமாரனையும் அனுப்பிவிடுமாறு ஆபிரகாமினிடத்தில் வேண்டிக்கொண்டாள்; ஏனெனில் இஸ்மயேலை ஆபிரகாம் தன்னுடைய குமாரனோடுகூடச் சுதந்தரவாளியாக்கிவிடுவார் என்றும், இப்படிச் செய்வது தேவனுடைய வாக்குத்தத்தத்திற்கு இசைவாய் இராது என்றும் சாராள் அஞ்சினாள் (ஆதியாகமம் 21:10-12; 15:4; 17:17-19). இதை ஆபிரகாம் செய்ய விரும்பவில்லை மற்றும் சாராள் தன் காரியத்தைக்குறித்து வலியுறுத்திக்கொண்டிருந்தபோது... இக்காரியத்தில் தேவன் தம்முடைய சித்தத்தைச் சுட்டிக்காட்டுவதுவரையிலும்... "தன் மகனைக்குறித்துச் சொல்லப்பட்ட இந்தக் காரியம் ஆபிரகாமுக்கு மிகவும் துக்கமாயிருந்தது" (ஆதியாகமம் 21:11) என்று நாம் வாசிக்கின்றோம்.

இன்னுமாக (இப்படித் தங்கள் கணவன்மார்களுக்குக் கீழ்ப்படிந்திருப்பவர்களை நோக்கி) "நன்மைசெய்து ஓர் ஆபத்துக்கும் - தீமையான விளைவுகள் எதற்கும் - பயப்படாதிருந்தீர்களானால் அவளுக்குப் பிள்ளைகளாயிருப்பீர்கள்" என்று அப்போஸ்தலனாகிய பேதுரு நமக்கு உதாரணத்தினைச் சுட்டிக்காண்பிக்கின்றார் (1 பேதுரு 3:6). அப்போஸ்தலர்களினால் அறிவுறுத்தப்படும் கீழ்ப்படிதலானது/அடங்கியிருத்தலானது... நியாயமான கீழ்ப்படிதலாகவும், மனைவியின் தாழ்மையான, தன்னடக்கமுள்ள உணர்வுகளை வெளிப்படுத்த அனுமதிக்கிறதும் மற்றும் அந்த உணர்வுகளானது கணவனினால் நியாயமாய்க் கருத்தில் எடுத்துக்கொள்ளச் செய்கிறதுமான கீழ்ப்படிதலாய் இருக்கின்றது; உண்மையுள்ள ஆபிரகாமின் சந்தர்ப்பத்தில், அவர் ஓர் அறிவிலியான மனைவியின் மனம்போன விருப்பங்களினால் எவ்விதத்திலேயும் வழிநடத்தப்படாமல், தன் மனைவியின் உணர்வுகளையும், பிரச்சனைகளையும் நியாயமாய்க் கருத்தில் எடுத்துக்கொண்டிருக்கும் அதேவேளையில், மனைவியின் விருப்பங்களுக்கு இணங்குவதற்கு முன்னதாகக் கர்த்தருடைய சித்தத்தை அறிய காத்திருந்தார்.

மேற்கூறியவைகளை வைத்துப்பார்க்கும்போது கர்த்தருக்கும், சபைக்கும் இடையிலிருக்கும் அருமையான உறவிற்கு உதாரணமாய்க் கர்த்தரினால் சுட்டிக்காண்பிக்கப்படும் கணவன், மனைவி இடையிலான மனுஷீக உறவுமுறையானது எந்தவிதத்திலும் கணவன் மனைவியாகிய இருவரில் யார் சார்பிலும் அடக்குமுறையை அல்லது கொடுங்கோலை வெளிப்படுத்திடுவதற்கு ஏதுவானதல்ல என்று வெளிப்படையாகத் தெரிகின்றது. மேலும் எங்கெல்லாம் இத்தகைய (தவறான) நிலைமை நிலவுகின்றதோ அங்கு அவரின் திவ்விய ஒழுங்கை மீறியவர்களாய் இருப்பார்கள். ஏதேனில் முதல் ஜோடியின் ஒன்றிணைதலை ஆசீர்வதித்து அவ்வுறவுமுறையை ஏற்படுத்தினபோது - இராஜா மற்றும் இராணியென . . . தலை மற்றும் துணைவியென அவர்களைப் பூமிக்குரிய ஆளுகையின் உடன்சுதந்தரவாளிகள் ஆக்கினபோது - பிற்பாடு பெற்றோர்கள் இருவரையும் கனப்படுத்தவும், அவர்களுக்குக் கீழ்ப்படியவும் பிள்ளைகளுக்குக் கட்டளையிட்டபோது - கர்த்தர் திருமணத்தின்மீது தம்முடைய அங்கீகரிப்பினால் முத்திரையிட்டார் (ஆதியாகமம் 1:27, 28; யாத்திராகமம் 20:12; எபேசியர் 6:1, 2).

பாவத்தின் சாபமானது ஸ்திரீயின்மேலும், புருஷன்மேலும் வெகுப்பரவலாய்க் காணப்படுகின்றது; ஆனால் மனைவியின்மீதுள்ள சாபத்தினுடைய பாரப்பளுவினை இலகுவாக்கிடுவதற்கும், அதைச் சுமப்பதில் அவளுக்கு உதவுவதற்கும் முயற்சிப்பதற்குப் பதிலாக, தன் மனைவியின்மீது சாபத்தினுடைய பளுவைக்கூட்டிக்கட்ட நாடிடும் கிறிஸ்தவ புருஷன் கவலைக்கிடமான விதத்தில் பரலோக மணவாளனுடைய ஆவியில் குறைவுபட்டவனாய் இருப்பான். இப்படியாகவே கிறிஸ்தவ மனைவியின் விஷயத்திலும் இருக்கும் - புருஷனுடைய உழைப்பை இலகுவாக்கிடுவதற்கும், அவனது பாரங்களில் பங்கெடுப்பதற்கும் நாடுவதற்குப் பதிலாக, மனைவியானவள் சுயநலமுடையவளாய்க் கணவனுக்குச் சாபத்தின் காரணமாய் ஏற்பட்ட முகத்தின் வேர்வையை, அளவிற்கு மிஞ்சி கேட்டுக்கொள்வாளானால் அவள் கிறிஸ்துவின் உண்மையான மணவாட்டியினுடைய அந்த ஆவியில் கவலைக்கிடமான விதத்தில் குறைவுபட்டவளாய் இருப்பாள். பாவமே நம் சந்ததியின்மீது சாபத்தைக்கொண்டுவந்தது; பாவத்திற்கு எதிராய் நாம் போராடுகையிலும், நீதிக்கும், தேவனுக்கு ஒத்த சாயலிலும் நாம் முன்னேறுகையிலும், நாம் ஒருவருக்கொருவர் சாபத்தினுடைய தீமைகளைத் தணிக்கின்றவர்களாய் இருப்போம். தேவனுக்கு நன்றி! ஏனெனில் "இனி ஒரு சாபம் இராது" என்றுள்ள காலமும், "பூமியில் தேவனும் ஆட்டுக்குட்டியானவரும் இருக்கிற சிங்காசனம்" ஸ்தாபிக்கப்படும் காலமும் இப்பொழுது வெகு அண்மையில் இருக்கின்றது; கிறிஸ்து மற்றும் உயர்த்தப்பட்ட சபைக்கு இடையில் மிகவும் அருமையாய் மாதிரியாக்கப்பட்டுள்ள அன்பின் ஆவியானது, பூமிக்குரிய தளத்திலும் (அக்காலத்தில்) மகிமையான விதத்தில் அடையப்பெற்றிருக்கும்; சாபம் முற்றிலுமாக நீக்கப்பட்டிருக்கும்போது ஸ்திரீயானவள் தனது உயர்குணமுள்ள கணவனின் அருகே தனக்கான ஸ்தானத்தையும், கனப்படுத்தப்பட்ட ஸ்தானத்தையும், புருஷனுக்கு ஏற்ற உதவியாளாகவும், துணைவியாகவும் - அப்போஸ்தலனாகிய பவுல் விவரிப்பதுபோன்று "புருஷனுக்கு மகிமையாகவும்" இருப்பாள் மற்றும் புருஷனே நியமிப்பது போன்று "நித்திய ஜீவனாகிய கிருபையைப் புருஷனோடுகூடச் சுதந்தரிக்கிறவளுமாய்" இருப்பாள் மற்றும் இந்தச் சுதந்தரிக்கும் காரியமானது, யோபுவின் நிழலான திரும்பக்கொடுத்தலில், அவர் தன் குமாரத்திகளுக்கு அவர்களது சகோதரர்கள் நடுவில் சுதந்தரவீதம் கொடுத்ததில் அருமையாய்க் காண்பிக்கப்பட்டுள்ளது (யோபு 42:15).

முடிவாகப் பார்க்கையில் திருமண உறவானது வேதவாக்கிய வெளிச்சத்தில் பார்க்கப்படும்போது கனமிக்க ஒன்றாகவும், ஆசீர்வாதமான ஒன்றாகவும் காணப்படுகின்றது; எனினும் பூமிக்குரிய ஆசீர்வாதங்களில் ஒன்றாகிய இது, அப்போஸ்தலன் காண்பிக்கிறதுபோல தேவனுடைய வரவிருக்கும் இராஜ்யத்திற்கடுத்த காரியங்களில் திசைத்திருப்பங்கள் இல்லாமல் கவனம் செலுத்திடும் இன்னும் மேலான சிலாக்கியத்திற்காக வேண்டி, பரிசுத்தவான்கள் அநேகர் துறப்பதற்குச் சிலாக்கியம் பெற்றிருக்கின்றனர் (1 கொரிந்தியர் 7:32-35). பலி செலுத்திடும் சபையானவள் இராஜாவை அழகுபொருந்தினவராய்க் காண்கையில் மற்றும் சபையைக் கர்த்தர் தமக்கு ஏற்ற மணவாட்டியாகவும், உடன்சுதந்தரவாளியாகவும் அடையாளம் கண்டுகொள்கையில், அந்த உறவில் கொடுங்கோலினுடைய

அல்லது அடிமைத்தனத்தினுடைய/அடக்குமுறையினுடைய வாசம் இருப்பதில்லை, மாறாக வார்த்தையினால் விவரிக்கமுடியாத பேரின்பம் தரும் அன்பு மற்றும் மதித்துணர்தல் சேர்ந்து காணப்படும்.

---

R4854

# தன் சொந்த வீட்டாரை ஆதரித்தல்

"தம் உறவினரை, சிறப்பாகத் தம் வீட்டாரை ஆதரியாதோர் விசுவாசத்தை மறுதலிப்பவராவர். அவர்கள் விசுவாசமற்றோரைவிடத் தாழ்ந்தோராவர்." (1 தீமோத்தேயு 5:8; திருவிவிலியம்)

தன்னைச் சார்ந்திருப்பவர்களாகிய தன் சொந்த வீட்டாரை ஆதரியாத ஒருவன் விசுவாசத்தை மறுதலித்தவனாகவும், அவிசுவாசியிலும் கேடானவனாகவும் இருப்பான் என்று, மேல் இடம்பெறும் வேதவாக்கியமானது விவரிக்கப்படலாம்.

இது குறிப்பாய்க் கிறிஸ்தவ கணவன் மற்றும் அவன் தன் மனைவி மற்றும் தன் பிள்ளைகளுக்காய்க் கொண்டிருக்கும் கடமைச் சம்பந்தப்பட்டதாகும். கணவனானவன் ஒருவேளை மனைவியை ஆதரியாமலும், அவளைப் பேணுவதை நிறுத்தியும் விடுவாரானால், மேலும் இருதயத்திலோ, பாசத்திலோ அல்லது நிஜமாகவோ அவளைக் கைவிட்டுவிடுவாரானால், இப்படி இருப்பது என்பது அவர் கர்த்தரிடமிருந்தும், ஆவியினுடைய வழிநடத்துதலிடமிருந்தும், "முதலாவது சுத்தமுள்ளதாயும், பின்பு சமாதானமும் சாந்தமும் இணக்கமுமுள்ளதாயும், இரக்கத்தாலும் நற்கனிகளாலும் நிறைந்ததாயும், பட்சபாதமில்லாததாயும், மாயமற்றதாயுமிருக்கும் பரத்திலிருந்து வருகிற ஞானத்தினிடமிருந்தும்" கவலைக்கிடையான விதத்தில் விலகிப்போயுள்ளார் என்பதைக் குறிக்கின்றதாய் இருக்கும்.

இம்மாதிரியான சூழ்நிலைகளில் இத்தகையவர் சீர்த்திருந்தாதது வரையிலும், இவர் கர்த்தரினால் "ஜெயங்கொண்டவரென" அங்கீகரிக்கப்படுவார் என்று நாம் எண்ணிட முடியாது. ஒவ்வொரு பெற்றோரும் தங்கள் பிள்ளைகள் உலகத்தில் பிறக்கத்தக்கதாக அவர்களுக்குச் செத்துக்கொண்டிருக்கும் சிறு அபூரண சரீரங்களைக் கொடுப்பது மாத்திரமல்லாமல், ஜீவியத்தை ஆரம்பிக்கத்தக்கதாக இன்னும் அதிகமானவைகளை அவர்களுக்குச் செய்திடுவதற்கும் கடமைப்பட்டிருக்கின்றனர். பிள்ளைகளை உலகத்திற்குக் கொண்டு வந்திருப்பதினால், அவர்கள் உலகில் நிலைநிற்கத்தக்கதாக அவர்களுக்கு அவசியமான, நியாயமான காரியங்களைப் பார்த்துக்கொள்வது பெற்றோரின் கடமையாகின்றது. இது குழந்தைப் பருவத்திலும், வாலிபப் பருவத்திலும் அவர்களுக்கு உணவு மற்றும் உடை வழங்குவதை மாத்திரம் உள்ளடக்காமல், இன்னுமாக நாம் அநேகம்முறை குறிப்பிட்டுள்ளது போன்று அறிவு சார்ந்த மற்றும் ஒழுக்கம் சார்ந்த அறிவுரைகளை வழங்குவதையும்கூட உள்ளடக்குகின்றதாய் இருக்கின்றது; இவை அனைத்தும், தேவைக்குத் தவிர மற்றபடி குழந்தைகளுடைய நலன்களுக்காகச் சேர்த்து வைப்பதைக் குறிக்கின்றதாய் இருக்கும்.

ஜீவியம் நிலையற்றதாய் இருப்பதைக் காண்கையில், பிள்ளைகள் முதிர்ச்சி நிலைமைக்கு வருவதற்கு முன்னதாக ஒருவேளை தான் மரித்தால், குடும்பத்தின் தேவைகளுக்கெனத் தகப்பன் முன்னதாகவே ஏதோ சிலவற்றைச் சேர்த்து வைப்பதற்கான வேதாகம அறிவுரைகளாக இவ்வார்த்தைகளைப் பொருத்திப்பார்ப்பதும் நியாயமானதே. ஆனாலும் பிள்ளைகள் சண்டையிட்டுக்கொள்ளத்தக்க விதத்திலும், பாதிப்பு அடையும் விதத்திலும் பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளுக்கென்று சொத்துக்களைச் சேர்த்து வைக்க நாடிட வேண்டும் என்ற அர்த்தத்தில் அப்போஸ்தலன் இவ்வார்த்தைகளைப் பேசியுள்ளாரென நாங்கள் எண்ணுகிறதில்லை. நற்பிறப்படைந்து, நியாயமான

கல்வியறிவையும், முதிர்ச்சிக்கு நேரான நியாயமான வழிகாட்டுதலையும் பெற்றிருக்கும் குழந்தையானவன் நல்ல நிலைமையில் இருப்பவனாகவும், தன்னில் ஐசுவரியமான சொத்தைப் பெற்றவனாகவும் இருப்பான்; மேலும் இத்தகைய ஏற்பாடுகளைத் தன் பிள்ளைக்காகச் செய்துள்ள தகப்பன், இவ்விஷயத்தில் தான் தெளிந்த புத்தியினாலும், பரிசுத்த ஆவியினாலும் ஆண்டு நடத்தப்பட்டிருப்பதாகவும், ஒருவேளை தன் குடும்பத்திற்கென்று தான் எந்தச் சொத்துக்களையும் விட்டுச் செல்லவில்லை என்றாலும் அல்லது ஓர் உறைவிடம் அல்லது வீட்டைத்தவிர வேறு ஏதும் விட்டுச்செல்லவில்லை என்றாலும்கூட, தான் கர்த்தரினால் அங்கீகரிக்கப்படும் நிலைமையில் இருப்பதாகவும் உணர்ந்துகொள்ள வேண்டும். இத்தகைய ஒரு மனுஷன் தன் உக்கிராணத்துவத்தை நிறைவேற்றியுள்ளவனாய் இருப்பான்; மற்றும் இத்தகையவருடைய பிள்ளைகள் இறுதியில் இவரது உண்மையினை நிச்சயமாய் உணர்ந்துகொள்வார்கள்.

பொதுவாய் இருக்கும் மனுக்குலத்தாரைக்காட்டிலும் நம்முடன் இரத்த பந்தத்தில் காணப்படுபவர்கள் மீது நாம் அக்கறைக்கொண்டவர்களாய் இருக்க வேண்டும். ஒருவேளை பொதுவாய் இருக்கும் மனுக்குலத்தாரிடம் நாம் இரக்கமும், பரிவும் கொண்டிருக்கத்தக்கதாக, கர்த்தருடைய ஆவியானது நம்மை வழிநடத்துமானால், நம்முடைய உறவினர்கள் மீதான நம் உணர்வுகளுக்கு நாம் விசேஷமாய்க் கவனம் செலுத்திட வேண்டும் மற்றும் நம்முடைய வாய்ப்புகளுக்கு ஏற்ப உதவிகரமாய் நாம் காணப்பட வேண்டும். எனினும் நம்முடைய கணிப்பின்படி பார்க்கையிலும், வேதவாக்கியங்களினுடைய அறிவுரைகளின்படி பார்க்கையிலும், நமது கர்த்தருடைய நடத்தையிலும், அப்போஸ்தலர்களுடைய நடத்தையிலும் நமக்கு முன்வைக்கப்பட்டுள்ளதான முன்மாதிரியின்படி பார்க்கையிலும், நம்முடைய பூமிக்குரிய உறவினர்களிடத்தில் மிக விசேஷித்த ஐக்கியத்தைக்கொண்டிருப்பதும் அல்லது விசுவாச வீட்டாரை நாம் நடத்திடுவதுபோன்று நாம் அவர்களை ஏற்றுக்கொள்வதும், நடத்திடுவதும் ஞானமாய் இராது.

"தன் சொந்த வீட்டாரை ஆதரியாதவன். . . விசுவாசத்தை மறுதலிக்கிறவனாய் இருப்பான்" எனும் அப்போஸ்தலனுடைய வார்த்தைகளுக்கு இசைவாக நம்மேல் சார்ந்திருக்கும் இத்தகைய நெருக்கமான உறவுமுறைகளை இங்கு நாம் விதிவிலக்காக்குகின்றோம். இந்த விதிவிலக்கிற்கு அப்பாற்பட்டவர்களாகிய பொதுவான ஜனங்களுக்கு "நமக்குக் கிடைக்கும் சமயத்திற்குத்தக்கதாக, யாவருக்கும், விசேஷமாக விசுவாச குடும்பத்தார்களுக்கும் நன்மை செய்யக்கடவோம்" என்ற அப்போஸ்தலனின் வார்த்தைகளை நாம் பொருத்துகின்றோம் (கலாத்தியர் 6:10). விசுவாச வீட்டாருக்கு அடுத்தே நம் தூர சொந்தங்கள் வருகின்றனர்.

ஆம்! புதுச்சிருஷ்டியினுடைய கண்ணோட்டத்தின்படி புதிய உறவுகள், கிறிஸ்துவினுடைய சரீரத்தின் அங்கங்கள் என்பவர்கள், நம்முடைய சொந்த வீட்டாரின் அங்கத்தினர்களாய் இருப்பார்கள் மற்றும் இவர்களுடைய இம்மைக்குரிய காரியங்கள் சில விதங்களில் நமக்கான பொறுப்புகளாகுகின்றது. நம்முடைய கர்த்தர் வாழ்ந்த காலத்திலிருந்து வேறுபடும் ஒரு காலகட்டத்தில் நாம் ஜீவித்துக்கொண்டிருக்கும் இக்காலங்களில் பொதுத்தர்மங்கள் இருக்கின்றன; இதன் காரணமாக இவ்வார்த்தைகளை அப்போஸ்தலன் பேசினபோது அதற்கிருந்த அதே அழுத்தத்துடன் இக்காலங்களில் பொருந்துகிறதில்லை. பொது நலன்களுக்காக தன் பங்கு வரியினை ஒருவன் செலுத்துவானானால், அது உரிய முன்னேற்பாடுகளைச் செய்கிறதாய்ச் சிலசமயங்களில் காணப்படும்; அநேகமாக இதன் இலாபங்களில் ஒரு பங்கானது பிற்காலங்களில் அவனுக்கே பயன்படும் அவசியம் ஏற்படலாம் அல்லது அவன் நண்பர்கள் யாருக்கோ - அவன் குடும்பத்தின் அங்கத்தினர்களுக்கோ பயன்படும் அவசியம் ஏற்படலாம்.

## பரிசுத்த விசுவாசத்தில் ஒருவரையொருவர் கட்டியெழுப்புதல்

கிறிஸ்து தம் சொந்த வீட்டாருக்கான தலையாக இருக்கின்றார். தம் ஜனங்கள் தேவையில்லாமல் ஒருவருக்கொருவர் பாரமாய் இராமல், மாறாக ஒவ்வொருவரும் மற்றவர் விஷயத்தில் பொறுப்பு ஒன்றினை உணர்ந்து, பலப்படுத்துவதற்கும், ஊக்குவிப்பதற்கும், ஆசீர்வதிப்பதற்கும், "ஒருவரையொருவர் மகா பரிசுத்த விசுவாசத்தில் கட்டியெழுப்புவதற்கும்" மகிழ்ச்சியோடு உதவிகரம் அளித்திட வேண்டுமெனக் கர்த்தர் நோக்கம் கொண்டுள்ளார். இதுவே நம் கர்த்தர் தம் பின்னடியார்களைப் புதிய குடும்பமென, புதிய வீட்டாரென, "விசுவாச வீட்டாரென" ஒன்றுகூட்டிடுவதற்கான நோக்கமாகும். எங்கே கர்த்தருடைய நாமத்தில் இரண்டு அல்லது மூன்று பேர்கள் கூடுகின்றார்களோ, அங்கே ஆசீர்வாதம் ஒன்றை அருளத்தக்கதாக, அவர்கள் நடுவில் அவர் விசேஷமாய்க் காணப்படுவார் என்ற வாக்குத்தத்தத்துடன்கூட, நாம் ஒருவருக்கொருவர் ஐக்கியங்கொள்ளவும், ஒருவருக்கொருவர் உதவவும், ஒருவரோடொருவர் ஒன்றுகூடவும் வேண்டும் என்பதாகவும், ஒருவரோடொருவர் ஒன்று கூடுவதற்குத் தம் ஜனங்கள் மறந்துவிடக்கூடாது என்பதாகவும் திரும்பத்திரும்ப அறிவுறுத்தப்பட்டிருப்பதையும், ஊக்குவிக்கப்பட்டிருப்பதையும் நாம் காணலாம்.

மீண்டுமாக நம் ஆதார வசனத்திற்கு நாம் திரும்புகையில், தன் சொந்தக் குடும்பத்தைப் பற்றின தன் கடமையைப் புறக்கணிக்கிற ஒருவன், விசுவாசத்தை மறுதலிக்கிறவனாக இருப்பான் என்று அப்போஸ்தலன் கூறுவதை நாம் கவனிக்கின்றோம். நாம் அறிக்கைப் பண்ணுகிற விசுவாசமானது, நாம் பெற்றுக்கொள்ளுகின்றதான சில விஷயங்களிலுள்ள விசுவாசமாக மாத்திரம் காணப்படாமல், அது ஒழுக்கம் விஷயங்களையும், நமது குணலட்சணங்களையும், பொதுவாயுள்ள ஜீவியத்தின் காரியங்கள் அனைத்தையும்கூடத் தாக்கத்திற்குள்ளாக்குகின்றதாய் இருக்கின்றது. மற்றவர்கள் தேவனை அன்புகூருவதைக் காட்டிலும் நாம் தேவனை அதிகமாய் அன்புகூருவதாக அறிக்கைப்பண்ணுகின்றோம். நம்மை நாம் அன்புகூருவதுபோன்று நம் அயலானை அன்புகூருவதாக நாம் அறிக்கைப்பண்ணுகின்றோம். இதுவே நம் தரநிலையென நாம் அறிக்கைப்பண்ணுகின்றோம். தன்னை அன்புகூருவதுபோன்று தன் அயலானை அன்புகூருவதே தன் அயலான் விஷயத்திலுள்ள ஒரு மனுஷனுடைய கடமையாகக் காணப்படுமானால், அப்படியானால் அவனுடைய சொந்தக் குடும்பத்தின் விஷயத்தில் இதுவிஷயம் இரண்டு மடங்காய்க் காணப்படும். ஒருவன் இதுவிஷயத்தில் தவறுவானானால், அவன் தான் அறிக்கைப்பண்ணுகின்ற கிறிஸ்துவின் உபதேசங்களைத் தவறாய்க் காட்டுபவனாய் இருப்பான். ஒருவன் தான் அறிக்கைப்பண்ணிடும் உபதேசங்களுக்கு முரணாய் ஜீவித்தல் என்பது, அவன் தன் விசுவாசத்தை மறுதலிக்கின்றதாய் இருக்கும். ஜீவியத்தின் விஷயத்தில் பரவலாய் அடையாளம் கண்டுகொள்ளப்பட்டுள்ள இந்த நியமங்களை மீறி வாழுதல் என்பது, உலகத்தாரைக்காட்டிலும் அதிகமாக என்ற நிலைமைக்குப் பதிலாக, உலகத்தாரைவிட கீழான நிலைமையில் ஜீவிப்பதாயிருக்கும்.

விசுவாசத்தை மறுதலித்தல் என்கிறபோது, யார் மீது அக்கறைக் காண்பிக்கப்படாமலிருக்கிறதோ, அவர்களின் நலன்களுக்கடுத்த விஷயங்களில் பரிவும், அன்பும் இல்லாமல் காணப்படும் மற்றும் இதன் அளவிற்கேற்ப விசுவாசம் மறுதலிக்கப்படுகின்றதாயிருக்கும். நமது ஆண்டவர் மாபெரும் துயரத்திலும், பிரச்சனையிலும் காணப்படுகையில், அவர் மற்றவர்களைக் குறித்துப் பரிவோடு சிந்தித்துக்கொண்டிருந்த காரியத்தில், சுயநலமின்மைக்கான எத்தகையதொரு பூரணமான உதாரணத்தை நாம் காண்கின்றோம்! தம் தாயாரை அன்புக்குரிய யோவானுடைய பராமரிப்பில் அவர் ஒப்படைத்தபோது, தம் தாயாருடைய நலனுக்கடுத்த காரியங்களுக்கான அவரது ஏற்பாட்டினை நாம் கவனிக்கின்றோம் மற்றும் இப்படியாக ஆண்டவருடைய சோதனை வேளையில் தன் ஆண்டவரோடு காணப்பட்ட யோவானில், வெளியான உயர்பண்புகளை நமது கர்த்தர் அங்கீகரித்த காரியமும் வெளியானது!

R3088 [தெரிந்தெடுக்கப்பட்ட பத்திகள்]

# பூலோக மற்றும் பரலோக மணவாளன்களுக்கு உண்மையாய் இருத்தல்

அன்புக்குரிய சகோதரர் ரசல் அவர்களே:

ஏற்ற கால சத்தியத்தினுடைய வெளிச்சத்தினை அறிந்தது முதற்கொண்டும், அதிலே நடப்பதற்குப் பிரயாசம் எடுத்தது முதற்கொண்டும், நான் அவைகளை வாசிப்பதற்கு (கணவனால்) மிகவும் தடைபண்ணப்பட்டிருக்கின்றேன் மற்றும் நடத்தப்படும் எந்தக் கூட்டங்களிலும் கலந்துகொள்வதற்கு அல்லது அன்புக்குரிய சகோதர சகோதரிகளிடம் எவ்விதமான சம்பாஷணைப்பண்ணுவதற்கு நான் அநேகந்தரம் தடைபண்ணப்பட்டிருக்கின்றேன்.

கொஞ்சம் காலம் நானும் அமைதியாகக் கீழ்ப்படிந்தவளாகக் காணப்பட்டேன் மற்றும் என் கணவன் வீட்டிற்கு வரும்போதெல்லாம் வேதாகமத்தைத் தவிர வேறு எந்தப் புத்தகங்களையும் 'நான்' என் அருகே வைத்திருக்கிறதில்லை. பின்னர் நான் தைரியமடைய ஆரம்பித்தேன் மற்றும் மறுபடியுமாகக் கைப்பிரதி ஒன்றை ஆங்காங்கே (வீட்டில்) தெரியும்படி வைத்தேன். ஆனால் ஒவ்வொரு தாக்குதலும் மோசமானதாகவே இருந்தது; பின்னர் இறுதியில் என் கணவனோ: "இந்தப் புத்தகங்களையோ அல்லது கைப்பிரதிகளையோ இனிமேலும் நான் பார்த்தேனாகில், நான் அவற்றை எரித்துப்போடுவேன்" என்றார். என் மகனிடம் சில வேதாகமங்கள் இருந்தன; இவைகளும், டாண் (volumes) புத்தகங்களும், சத்தியத்தில் காணப்படாத என் மூத்த மகனின் பராமரிப்பில் கொடுத்து வைத்திருந்தேன்.

டாண் புத்தகங்களை நான் வாசித்தாக வேண்டும் என்று எண்ணினேன்; அவைகள் என் அனுதின ஆகாரத்தைப்பார்க்கிலும் எனக்கு மேன்மையானவையாக இருந்தன; அவைகளை இரகசியமாய் நான் வாசிப்பேன்; எனினும் யாரொருவரின் கால் நடையினுடைய சத்தம் கேட்டாலே நான் நடுங்கிப்போய், அவற்றை ஒளித்து வைத்துவிடுவேன். மனுஷனுக்கல்ல, தேவனுக்கே நாம் கீழ்ப்படிய வேண்டும் என்று எனக்குச் சுட்டிக்காண்பிக்கப்பட்டுள்ளதினால், நான் மகிழ்ச்சியாய் இல்லை. கிறிஸ்து என் தலையாய் இருக்கின்றார் என்று நான் காண்கின்றபடியால், இது விஷயத்தில் என் கணவனுக்கு நான் கீழ்ப்படிய வேண்டுமா? இது விஷயத்தில் என்னை நான் ஒரு கோழையாய் உணர்கின்றேன்.

## எங்கள் பதில்:

அன்புக்குரிய சகோதரிக்கு,

உங்கள் கடிதத்தை நான் பெற்றுக்கொண்டேன். நீங்கள் உங்களைக்குறித்து வெளிப்படையாய் வெளிப்படுத்தி இருக்கின்றபடியால் நான் மகிழ்ச்சி அடைகின்றேன் மற்றும் இந்த முக்கியமான விஷயத்தில் நீங்கள் தெளிந்த புத்தியுள்ள மனதினைப் பெற்றிருக்கின்றீர்கள் என்பதை நான் கவனிக்கையில், இதிலும் மகிழ்ச்சியடைகின்றேன். அநேகமாக உறுதியான மனமுள்ள மனிதனாகக் காணப்படும் உங்கள் கணவன் இது விஷயத்தில் உங்களிடத்திலுள்ள அவரது நடக்கையானது எந்தளவுக்கு நியாயமற்றதாயும், அடக்குமுறையாயும் இருக்கின்றது என்பதை முழுவதுமாய் உணராதவராய் இருக்கின்றார். மனைவிகள் தங்கள் கணவன்மார்களுக்குக் கீழ்ப்படிந்திட வேண்டும் எனும் வேதவாக்கிய கட்டளைக்கு நாங்கள் முழுமையாய் இசைவாகவே இருக்கின்றோம்; எனினும் இவ்வசனமானது, பரலோக மணவாளனுடைய அறிவுரைகளுக்கு எதிராகவுள்ள காரியங்களில், மனைவிகள் தங்கள் கணவன்மார்களுக்குக் கீழ்ப்படிய வேண்டும் என்று நீங்கள் புரிந்திருப்பதுபோன்று சுட்டிக்காட்டுகிறதில்லை. இப்படியான கோரிக்கைகளைப் பகுத்தறிவுள்ள எந்தப் பூலோக கணவனும்

எதிர்ப்பார்க்கிறதில்லை மற்றும் உங்கள் கணவனும் காரியங்களை வித்தியாசமாய்க் கண்ணோக்குவார் என்று நாங்கள் நம்புகின்றோம். அவரை அன்பாய், பரிவாய் நடத்துவதையும் மற்றும் முறையாக மற்றும் சரியான விதங்கள் வாயிலாய் அவரைப் பிரியப்படுத்துவதற்கான உங்கள் உண்மையான பிரயாசத்தையும், அதேசமயம் மனசாட்சி சம்பந்தப்பட்ட உங்களுக்குரிய தகுதியான சுயாதீனங்கள் தொடர்புடைய விஷயங்களில் எல்லாம் உங்களது உறுதியான, உங்கள் நிலையான தீர்மானம் மற்றும் தயக்கமற்ற உறுதியான நடத்தையையும் அவர் காண்கையில், அவர் சரியான பாதையை அறிந்துகொள்வதற்கு உதவப்படுவார். ஒருவேளை நான் உங்கள் இடத்தில் காணப்பட்டிருந்தால், இல்லத்தில் என் கணவன் காணப்படுகையில் புத்தகங்களையும், கைப்பிரதிகளையும் அவர் பார்வைக்கு முன்பாக வைக்காமல் இருப்பதற்கு நான் முடிவெடுப்பேன்; ஆனாலும் அவைகளைக் குறித்துச் சிந்திக்கவோ, வாசிக்கவோ மாட்டேன் என்றோ அல்லது இந்த விலையேறப்பெற்ற விசுவாசத்தில் காணப்படும் மற்றவர்களின் கூட்டங்களில் கலந்துகொள்ள மாட்டேன் என்றோ நான் முடிவெடுக்க மாட்டேன்.

பூலோக கணவனை நான் நோக்கி: "பரலோக மணவாளனுக்கு முதலாவது கீழ்ப்படிதலே நம் கடமை என்றும், 'சபை கூடிவருதலை விட்டுவிடாதிருங்கள்' என்று பரலோக மணவாளன் கூறுகையில், எப்படியேனும் அந்தக் கட்டளையைக் கடைப்பிடிப்பது கடமையாகும் என்று நான் கருதுகின்றேன் என்றும், இதை நியாயமான மற்றும் சரியான நடத்தையாகத்தான் நீங்கள் எடுத்துக்கொள்வீர்கள் என்று நான் நம்புகின்றேன் என்றும், கணவனுக்கும், குடும்பத்தினுடைய மற்ற அங்கத்தினர்களுக்கும் நான் செய்ய வேண்டிய நியாயமான, சரியான குடும்பக் கடமைகள் மற்றும் பொறுப்புகளைப் புறக்கணிப்பதற்கான எந்த எண்ணமும் எனக்கில்லை என்றும், மாறாக நான் இப்போது பெற்றிருக்கும் நம்பிக்கை இல்லாமல் வேறு ஏதேனும் ஒருவேளை பெற்றிருந்தால், அதனுடைய தாக்கத்தின் கீழிருந்து நான் எப்படிக் காணப்படுவேனோ அதைப்போலவே இப்போதும் உண்மையாக அல்லது அதைவிட அதிகம் உண்மையாகக் காணப்படுவேன் என்றும்" தெளிவாய்ச் சொல்லிடுவேன். மேலும் கணவனை நோக்கி: "இந்த மட்டிலுமான சுயாதீனமாகிலும் எனக்கு இருக்கும் என்று விவாக உறவிற்குள் பிரவேசிக்கையில் நாம் இருவரும் தெளிவாய்ப் புரிந்திருந்தோம் என்றும், ஒருவேளை கணவனாகிய உங்கள் விவாக வாக்குறுதியில் மனசாட்சியின் சுயாதீனத்தை எனக்கு அருளிட தாங்கள் நோக்கம் கொண்டிருக்கவில்லையெனில், நீங்கள் என்னை ஏமாற்றி, வஞ்சித்திருக்கின்றீர்கள் என்றும், என்ன நடந்தாலும் இத்தகைய அடிமைத்தனத்திற்கு நான் என்னை ஒப்புக்கொடுக்கமாட்டேன் என்றும் கூறிடுவேன்; சீக்கிரமாய் இது விஷயத்தில் தீர்மானம் எடுக்கப்பட்டால் நலமாயிருக்கும் என்றும், எந்தச் சந்தர்ப்பச்சூழ்நிலையிலும், என்னுடைய இந்த நிலைப்பாடானது கர்த்தருடைய சித்தத்திற்கு இசைவானது என்று நான் கருதிடுவதுவரையிலும், என்னுடைய இந்த நிலைப்பாட்டிலிருந்து கொஞ்சமும் நான் அசையமாட்டேன் என்றும், இக்காரியமானது ஏதேனும் நமக்கிடையே விரிசல் கொண்டுவருமானால், நான் ஒருபோதும் என்னுடைய மனசாட்சியின் சுயாதீனத்தை விட்டுக்கொடுக்காத காரணத்தாலும் மற்றும் அப்படி விட்டுக்கொடுக்க ஒருபோதும் நோக்கம் கொண்டிராத காரணத்தாலும், உங்கள் மனசாட்சியினை நீங்களும் மீறும்படி நான் கேட்காத காரணத்தினாலும் - தவறும், மாற்றம் காண்பிக்க வேண்டியதும் நிச்சயமாய் உங்கள் பக்கமே என்றும், என்னுடைய இந்தக் கண்ணோட்டமானது வேதவாக்கியங்களுடைய பரீட்சையில் நிலைநிற்பது மாத்திரமல்லாமல், தெளிந்த பகுத்தறிவுள்ள மனுஷன் மற்றும் மனுஷி முன்பும் சரியானதாய்க் காணப்படுமென நான் நம்புகின்றேன் என்றும்" கூறிடுவேன்.

இதோடுகூடச் சத்தியமானது கணவனுக்குரிய நலனுக்கடுத்த காரியங்களில், என்னை அலட்சியமுள்ளவளாக்குவதற்குப் பதிலாய், மனைவியெனவுள்ள என் கடமைகள் விஷயத்தில் என்னை அதிகம் ஜாக்கிரதையுள்ளவளாக்கிடும் என்று நான் என் கணவனுக்கு உறுதிப்படுத்திடுவேன்; மேலும்

நான் செய்யத் தீர்மானித்திருப்பது போன்று கணவனாகிய தாங்கள் ஒருவேளை சரியான கண்ணோட்டம் மற்றும் நிலைப்பாடு எடுத்துக்கொள்வீர்களானால், அது நம் இருவருக்கும் மற்றும் வீட்டாருக்கும் ஆசீர்வாதத்தை அதிகரிக்கின்றதாய் இருக்கும் என்று நான் நம்புவதாகக் கணவனுக்கு உறுதிப்படுத்திடுவேன்.

ஒருவேளை என் மனசாட்சியினை விலங்கிடுவதற்குரிய இத்தனை முயற்சிகளுக்கு எதிராய் இப்படிப் பொறுமையாயும், அன்பாயும் மறுத்து விளக்கிக் கூறியும், எந்த மாற்றமும் இல்லையெனில், நான் என் கணவனால் கைவிடப்பட்டுள்ளேன் என்று கருதிடுவேன் - அதாவது அவர் என் கணவனாகக் காணப்படுவதை நிறுத்திவிட்டு, என்னை ஒடுக்குகிறவராகியுள்ளார் மற்றும் மனசாட்சிக்கு மதிப்புக் கொடுக்கப்பட்டு நடத்தப்படும் அடிமை போன்றுகூட அவர் என்னை நடத்தவில்லை என்று கருதிடுவேன். இக்காரியத்தினை நான் கர்த்தரிடத்திற்கு எடுத்துச்சென்று, விடுதலைக்காய் - கிறிஸ்து உண்டாக்கின சுயாதீனத்திற்காய்க் கர்த்தரை நோக்கிடுவேன். இது மறுமணம்பண்ணிடுவதற்கான சுயாதீனமல்ல; (மத்தேயு 19:9-ஆம் வசனத்தில் இடம்பெறும் ஒரே காரணத்தினால் தவிர மற்றப்படி) திருமணத்தினை நிரந்தரமான ஒன்றாக்கிடும் திவ்விய பிரமாணமானது, அனைவருக்கும் பொருந்தும்.

கர்த்தர் உங்கள் காரியங்களை வழிநடத்தத்தக்கதாக, கிருபையின் சிங்காசனத்தினிடத்தில் உங்களை நினைவுகூர்ந்திடுவேன்.

---

R2984 [தெரிந்தெடுக்கப்பட்ட பத்திகள்]

# முதலாவது தேவன் - பின்பு அவர் நியமனங்கள்

"இருளின் அதிகாரத்தினின்று நம்மை விடுதலையாக்கி, தமது அன்பின் குமாரனுடைய ராஜ்யத்திற்கு உட்படுத்தினவருமாயிருக்கிற பிதாவை ஸ்தோத்திரிக்கிறோம்... அவரே சபையாகிய சரீரத்திற்குத் தலையானவர்; எல்லாவற்றிலும் முதல்வராயிருக்கும்படி, அவரே ஆதியும் மரித்தோரிலிருந்து எழுந்த முதற்பேறுமானவர்." (கொலோசெயர் 1:12-18)

"முதலாவது தேவன்" என்னும் மேற்கோள் வாசகமே கர்த்தருடைய ஜனங்களுக்கு இந்த வருஷத்தில் பொருத்தமாய் இருக்குமென எங்களுக்குத் தோன்றுகின்றது. அவருக்கு ஒரு முழுமையான அர்ப்பணம், அவருடைய நியமனங்கள் யாவற்றிற்குமான முழுமையான அங்கீகரிப்பு என்பது நமது கர்த்தர் இயேசுவை அடையாளம் கண்டுகொள்கின்றதாய் இருக்கின்றது; நம்முடைய ஆதார வசனம் சொல்வது போன்று, அவரே முதல்வராவார் - அவரே அனைவர் மேலும் ஆண்டவராய் இருக்கின்றார். இந்த மேற்கோள் வாசகமானது, அலிகெனியாவிலுள்ள சபையாரால் இந்த வருஷத்திற்கான வாசகமாக எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது; தங்களால் இயன்றமட்டும் யார் இந்த மேற்கோள் வாசகத்திற்கு இசைவாய் ஜீவித்திட முயலுகின்றார்களோ, அவர்கள் அதிகமான திவ்விய தயவினை அனுபவிப்பார்கள் மற்றும் இடுக்கமான வழியில் நன்கு முன்னேற்றம் காண்பிப்பார்கள் என்பதும் உறுதியே.

ஆதார வசனமானது, தெய்வீக அரசாங்கம் என்பது ஏகாதிபத்திய/சர்வாதிகார அதிகாரமாக - "மக்களால், மக்கள் மூலமாய், மக்களுக்காக" செய்யப்படும் மக்களாட்சிக்கு நேர்மாறான ஒன்றாக தெரிவிக்கின்றது. நாகரிகமடைந்துள்ள நாடுகளினுடைய அரசாங்கங்களை நாம் பார்க்கையில், அரசாங்கம் அதிகம் எதேச்சதிகாரமாய் இருக்கையில், அது அறிவுள்ள ஜனங்களினால் அவ்வளவுக்கு ஆதரிக்கப்படுகிறதில்லை என்று காணலாம். உதாரணத்திற்கு ரஷ்யாவின் (Russian) அரசாங்கம்

சர்வாதிகாரம்/எதேச்சதிகாரம் ஆகும்; அதிகாரமானது மன்னனிடம் பெரிதும் காணப்படுகின்றது - அதுவும் அவர் ஜனங்களின் பிரதிநிதியாகிய பாராளுமன்றத்திற்கோ அல்லது காங்கிரசிற்கோ பதில் கூறும் பொறுப்பற்ற விதத்தில் மன்னனிடம் அதிகாரம் காணப்படுகின்றது. பரந்த மனப்பான்மையுடன்கூடிய ஏகாதிபதி ஆட்சிக்கு அநேகமாகச் சிறந்த உதாரணம் - கிரேட் பிரிட்டன் ஆகும்; ஏனெனில் இங்கு மன்னரின் அதிகாரங்கள் வரையறைக்குட்பட்டவைகளாகவே இருக்கின்றது; உயர்க்குடி மக்களின் பிரதிநிதியாய் மேன்மக்கள் மாமன்றமும், பொதுமக்களின் பிரதிநிதியாய் மக்கள் சட்டமன்றமும் காணப்பட்டது; இந்த இரண்டு மன்றங்களும் மன்னரோடுகூட, அரசாங்கத்தினுடைய பொறுப்புகளைப் பங்கிட்டுக்கொள்கின்றது. சம நிலையில் காணப்படும் குடிமக்களைக்கொண்டிருக்கும் அமெரிக்க ஐக்கிய நாடுகளின் அரசாங்கத்தில் . . . குடிமக்கள் அனைவரையும் சமத்துவமானவர்களாய்த் தோற்றத்தில் பெற்றிருக்கும் மற்றும் இவர்களது தெரிந்துகொள்ளுதலின்படியான ஜனாதிபதி குடிமகனை, குடியரசு தலைவராகப் பெற்றிருக்கும் அமெரிக்க ஐக்கிய நாடுகளின் அரசாங்கமானது . . . சிறந்த வகை மக்கள் அரசாங்கமாகப் பார்க்கப்படுகின்றது; இது ஜனங்களுக்கு மிகவும் ஆதரவான - குடியரசாக, மக்களாட்சியாக இருக்கின்றது.

அனுகூலமற்றதாகவும், அறிவுள்ளவர்களால் குறைவாய் மதிப்பிடப்படுகிறதாகவும் உள்ள பூமிக்குரிய அரசாட்சி வகையாகிய எதேச்சதிகாரமானது கிட்டதட்ட, சர்வ வல்லவரால் தம் முழுச்சிருஷ்டிகளின் மீதும் ஏற்படுத்தப்பட்ட ஆட்சிவகை போலிருக்கும் என்பது சிலருக்கு விநோதமாக முதலாவது தோன்றலாம். மனுஷீக சுதந்தரங்களுக்கும், மனுஷர் மத்தியில் முன்னேற்றத்திற்கும் மிகவும் சாதகமற்ற ஒன்றாக இப்பொழுது எதேச்சதிகாரம் நிரூபிக்கப்பட்டுள்ளதானால், இவ்வகையான அரசாங்கமானது அண்டசராசரத்திற்கு ஒட்டுமொத்தமாக, சதாகாலங்களிலும் சிறந்த ஓர் அரசாங்கமாக இருக்க வாய்ப்புள்ளதா? ஆம் எனில், வித்தியாசத்தினை எதில் கண்டறிவது? அனுபவம் ரீதியில் மனுஷர் மத்தியில் மோசமானதென நிரூபிக்கப்பட்டுள்ளதான ஒன்று, இறுதியில் சிறந்தது என்று நிரூபணமாகும் என்ற கூற்றினை எப்படிப் பகுத்தறிந்து புரிந்துகொள்வது? வித்தியாசம் என்னவெனில்... அனைத்து மனுஷரும் விழுந்துபோனவர்களாகவும், அபூரணர்களாகவும் காணப்படுகின்றனர்; ஆகையால் மனுஷர்கள் பாவம் மற்றும் சுயநலத்தினுடைய ஆளுகையின் கீழ் அதிகமாகவோ அல்லது குறைவாகவோ காணப்படுகின்றனர்; இன்னுமாக அனைவருடைய இருதயங்களும் ஒருவேளை நீதியைச் செய்ய முழுக்க விரும்பிட்டாலும்கூட, அறிவிலும், நிதானிப்பிலும் அபூரணர்களாகவே இருக்கின்றனர். ஆனால் சர்வவல்லவரோ தம் பண்புகளிலும், தம் அறிவிலும் பூரணராய்க் காணப்படுகின்றார்; மேலும் அவருடைய சொந்தப் பிரமாணமும், அவர் சாம்ராஜ்யத்திற்கான பிரமாணமும் - சுயநலத்திற்கு எதிர்மாறாக - அன்பின் பிரமாணமாய்க் காணப்படுகின்றது. நல்நோக்கம் உள்ள எந்தவொரு விழுந்துபோன, அபூரண ஜீவியினுடைய வல்லமையின்கீழ் ஜனங்கள் முழுமையாய்க் காணப்படுவது என்பது நிச்சயமாய் ஆபத்தானதே; ஆனால் சகல அறிவும், நீதியும், அன்பும், வல்லமையுமுள்ள ஒரு பூரண ஜீவியினுடைய வழிநடத்துதல் மற்றும் கட்டுப்பாட்டின் கீழ்க்காணப்படுவது என்பது மிகவும் விரும்பத்தக்கக் காரியமாகும். இதுதான் விஷயம்; அதாவது நம்முடைய தேவனாகிய யேகோவா ஒரு சர்வாதிகாரியாவார்; அவரது பிரமாணங்கள் பூரணமானவைகள், நீதியானவைகள், நல்லவைகள் ஆகும் மற்றும் இந்தப் பிரமாணத்தின்கீழ்க் காணப்படும் அவருடைய சிருஷ்டிகள் யாவும் ஆசீர்வதிக்கப்பட்டிருக்கும். இந்த ஒரு நிலைமைகளின்கீழ்ப் பரலோகத்தில் இப்பொழுது காணப்படும் எதேச்சதிகாரம், தேவனுடைய அரசாங்கமானது, இருக்கும் அனைத்திலும் பெரிதும் விரும்பப்படுகின்றதாகிவிடும்; ஆகையால் நம் ஆண்டவர் கூறினது போலவே, "உம்முடைய இராஜ்யம் வருவதாக; பரலோகத்தில் உம் சித்தம் செய்யப்படுவதுபோன்று பூமியிலேயும் செய்யப்படுவதாக" என்று கூறி இந்த அரசாங்கம் பூமியில் வருவதற்காக நாம் ஜெபிப்போமாக.

நம்முடைய சிருஷ்டிகராகிய யேகோவா தேவன், இந்தத் தம்முடைய ஸ்தானத்திற்குத் தெரிந்தெடுக்கப்படவில்லை என்றபோதிலும், தம் சிருஷ்டிகளுடைய சம்மதத்தின்பேரில் இந்த ஸ்தானத்தினை எடுத்துக்கொள்ளவில்லை என்றபோதிலும் . . . நீதியின் கொள்கைகளுக்கு இசைவாய்க் காணப்படும் அவருடைய சிருஷ்டிகள் அனைவரும், அவரைத் தங்கள் இராஜாவாக, ஆண்டவராக - தங்கள் மீது சர்வாதிகாரியாகப் பெற்றிருப்பதில் பிரியம் கொள்வார்கள் - இவரின் ஒவ்வொரு விருப்பங்களுக்குக் கீழ்ப்படிவது என்பது இவர்களது பிரியமாயிருக்கும். சர்வாதிகாரியென இவர், "சரீரமாகிய சபைக்குத் தலையாய்" இருக்கும்படிக்குக் கிறிஸ்து இயேசுவை நியமித்துள்ளார். சபையின் தலையாகக் கிறிஸ்து இருக்க வேண்டுமா அல்லது இல்லையா என்பது பற்றி, நாம் வாக்குகள் (vote) செலுத்தும்படிக்குக் கேட்டுக்கொள்ளப்படவில்லை என்றாலும், இது விஷயத்தில் இந்த ஏற்பாட்டினை ஏற்றுக்கொள்ளும்படிக்கு நாம் வற்புறுத்தப்படுவதில்லை எனும் அளவில், தேவன் நம் சுயாதீனத்தை மதிக்கின்றார். ஒருவேளை ஏற்றுக்கொள்ள நாம் மறுப்போமானால், நாம் சரீரமாகிய சபையின் அங்கத்தினர்களாய் இருப்பதில்லை; ஏனெனில் சர்வவல்லமையுள்ளவர் தம் திட்டங்களின்படி செயல்படுகின்றார் மற்றும் அவருடைய திட்டத்திற்குள்ளாக வராதவர்கள், அருளப்பட்ட ஆசீர்வாதங்களைத் தங்களுக்கென்று சுதந்தரித்துக்கொள்ளத் தவறுகின்றவர்களாய் மாத்திரம் காணப்படுவார்கள்.

இதுபோலவே தேவதூதர்கள் மகிமையடைந்துள்ள இயேசுவைத் தங்கள் ஆண்டவராக ஏற்றுக்கொள்வார்களா அல்லது இல்லையா என்று சர்வ வல்லமையுள்ளவர், தேவதூதர்களிடமும் கேட்கவில்லை. தேவன் தம்முடைய விருப்பத்தின் பேரில் நமது கர்த்தராம் இயேசுவை உயர்த்தினார்; காரணம் மரணபரியந்தம், ஆம் சிலுவையின் மரணபரியந்தமுமான இயேசுவின் முற்றிலுமான கீழ்ப்படிதலாகும்; "ஆதலால் (மரணபரியந்தமான இயேசுவின் கீழ்ப்படிதல் காரணமாய்) தேவன் எல்லாவற்றிற்கும் மேலாக அவரை உயர்த்தி, இயேசுவின் நாமத்தில் வானோர் பூதலத்தோர் பூமியின் கீழானோருடைய முழங்கால் யாவும் முடங்கும்படிக்கும், பிதாவாகிய தேவனுக்கு மகிமையாக இயேசு கிறிஸ்து கர்த்தரென்று நாவுகள் யாவும் அறிக்கைபண்ணும்படிக்கும், எல்லா நாமத்திற்கும் மேலான நாமத்தை அவருக்குத் தந்தருளினார்" (பிலிப்பியர் 2:9-11) என்று அப்போஸ்தலன் கூறுகின்றார். இதுபோலவே ஆதார வசனம் இடம்பெறும் அதிகாரமானது, நமது கர்த்தராம் இயேசு மனிதனாகுவதற்கு முன்னதாக... ஆரம்பம் துவங்கி... தம் பிதாவினுடைய சிருஷ்டிகள், கிரியைகள், ஏற்பாடுகள் அனைத்திற்கும் தலையாக, பிரதானமானவராக இருந்துள்ளார் என்று தெரிவிக்கின்றது. "ஏனென்றால் அவருக்குள் சகலமும் சிருஷ்டிக்கப்பட்டது; பரலோகத்திலுள்ளவைகளும் பூலோகத்திலுள்ள வைகளுமாகிய காணப்படுகிறவைகளும் காணப்படாதவைகளுமான சகல வஸ்துக்களும், சிங்காசனங்களானாலும், கர்த்தத்துவங்களானாலும், துரைத்தனங்களானாலும், அதிகாரங்களானாலும், சகலமும் அவரைக்கொண்டும் அவருக்கென்றும் சிருஷ்டிக்கப்பட்டது. அவர் எல்லாவற்றிற்கும் முந்தினவர், எல்லாம் அவருக்குள் நிலைநிற்கிறது" (கொலோசெயர் 1:16, 17). இது யோவான் எழுதின சுவிசேஷத்தினுடைய 1:1-ஆம் வசனத்தின் பின்வரும் வார்த்தைகளுக்கும் இசைவாகவே இருக்கின்றது: "ஆதியிலே வார்த்தை இருந்தது, அந்த வார்த்தை தேவனிடத்திலிருந்தது, அந்த வார்த்தை தேவனாயிருந்தது" (யோவான் 1:1).

இதிலிருந்து பரம பிதா துவக்கம் முதல் தமது எதேச்சதிகாரமுள்ள ஆளுகையையே செயல்படுத்தியுள்ளதால்... முழுச்சிருஷ்டிப்பினுடைய வேலையில் தம்முடைய பிரதிநிதியாகக் காணப்படும்படிக்குத் தம்முடைய முதற்பேறான குமாரனைத் தெரிந்தெடுத்துள்ளார் என்று பார்க்கின்றோம். இன்னுமாக இந்த முதற்பேறான குமாரனுக்குத்தான் மனுக்குலத்தின் மீட்பராகிடும்

சிலாக்கியம் அல்லது வாய்ப்பு முதலாவதாக ஒரு சிலாக்கியமென அருளப்பட்டது என்றும் பார்க்கின்றோம்; ஏனெனில் மனிதனுடைய மீட்பின் காரியமானது, மனுக்குலத்திற்கான தம்முடைய நீதியை, அன்பை, தம்முடைய ஞானத்தினை மற்றும் தம்முடைய வல்லமையினை வெளிப்படுத்திக் காண்பிக்க வேண்டும் என்று மாத்திரம் இல்லாமல், இன்னுமாக இக்காரியமானது தம்முடைய முதற்பேறான குமாரனுடைய உண்மைக்குமான ஒரு பரீட்சையாக இருக்க வேண்டும் என்றும், இப்படி முதற்பேறான குமாரன் சார்பிலான உண்மையானது முழுமையாய் நிரூபிக்கப்படுவதன் மூலம், அவர் அனைத்திலும் முதல்வராய் இருப்பதற்குரிய பாத்திரவானாய்த் தம்மை நிரூபித்துள்ளப்படியால், தம்முடைய முதற்பேறான குமாரனை இன்னும் மேலான நிலைமைக்கு - அதாவது திவ்விய சுபாவத்திற்கு, "மகிமை, கனம், அழியாமைக்குக்" கொண்டு செல்வதற்குக் காரணமாகிடும் என்றும் சர்வவல்லமையுள்ளவர் தம்முடைய எதேச்சதிகாரத்தில்/சர்வாதிகாரத்தில் திட்டம்பண்ணியிருந்தார் என்று பார்க்கின்றோம்.

பிதாவாகிய யேகோவா தமக்கும் மேலாக, கர்த்தராம் இயேசுவை முதல்வராக்கினார் என்று அப்போஸ்தலன் கூறவில்லை. பிதா குமாரனின் கீழ்ச்சகலத்தையும் கீழ்ப்படித்தின பிற்பாடு, "சகலத்தையும் (இயேசுவுக்கு) அவருக்குக் கீழ்ப்படுத்தினவர் (யேகோவா) கீழ்ப்படுத்தப்படவில்லையென்பது வெளியரங்கமாயிருக்கிறது (சொல்லிக்கொடுக்கப்பட வேண்டியதில்லை)" என்று அப்போஸ்தலன் கூறியுள்ளதை நாம் எப்போதும் நினைவில்கொள்ள வேண்டும் (1 கொரிந்தியர் 15:27). ஆகையால் தேவன் முதன்மையானவர் ஆவார் மற்றும் நமது கர்த்தராம் இயேசு நமக்குச் சபையின் தலையானவரென முதல்வராவார்; காரணம் தேவன் தாமே இந்த முதல்வர் நிலைமையினை அவருக்குக் கொடுத்திருக்கின்றார். இயேசுவின் முழுமையான அதிகாரத்தையும், சபையின் அவருடைய தலைமைத்துவத்தையும் அடையாளம் கண்டுகொள்கையில், இவரை இப்படிக் கனப்படுத்தினவரை நாம் கனப்படுத்துகின்றவர்களாய் இருப்போம்; இப்படியாக நாம் தேவனை முதன்மையாய் வைக்கின்றோம்; நமது கர்த்தர் தெரிவித்துள்ளது போன்று, "குமாரனைக் கனம்பண்ணாதவன் அவரை அனுப்பின பிதாவையும் கனம்பண்ணாதவனாயிருக்கிறான்" (யோவான் 5:23). மனுஷர் இவர்கள் இருவரையும் குழப்பிக்கொள்ளக்கூடாது, மாறாக பிதாவையும், குமாரனையும் தொழுதுகொள்ள வேண்டும், ஆராதிக்க வேண்டும் மற்றும் இவர்களுக்குக் கீழ்ப்படிந்திட வேண்டும்; ஏனெனில் குமாரன் தம்முடைய சொந்தச் சித்தத்தை நாடுகிறவரும், செய்கிறவரும் அல்ல, மாறாக இவரை அனுப்பினவரும், தம்முடைய சிருஷ்டிகள் சகலவற்றின்மீதும் இவரை முதல்வராக உயர்த்தினவருமான பிதாவின் சித்தத்தையே இவர் நாடிச் செய்கின்றார். இந்த உறவினை அப்போஸ்தலன் - ஸ்திரீக்குத் தலைப் புருஷன் மற்றும் புருஷனுக்குத் தலைக் கிறிஸ்து மற்றும் கிறிஸ்துவுக்குத் தலை யேகோவா தேவன் என்று கூறினபோது, முழுமையாகவும், அழுத்தம் திருத்தமாகவும் விவரித்துள்ளார் (1 கொரிந்தியர் 11:3).

மனுஷர்கள் மத்தியில் இன்று காணப்படும் கட்டுப்பாடுகளற்ற அரசாங்கங்களில் களிகூரப்படுகிறதைக் காண்கையில், பிரசித்திப்பெற்றுத் திகழும் அரசாங்கங்கள் தற்கால சூழ்நிலைகளின் கீழ் மிகவும் விரும்பப்படத்தக்கது என்று எண்ணப்படுவதைக் காண்கையில், காரியங்கள் இப்படியாக இருப்பதற்குக் காரணம் . . . தற்கால சூழ்நிலைகள் தீமையாய் இருப்பதினால் மாத்திரமே என்றும், சுயநலமே மனுஷர் மத்தியில் ஆளும் சட்டமாய் இருக்கின்றது என்றும், ஒரு நபருடைய அல்லது ஒரு வகுப்பாருடைய சுயநலமான சுபாவங்களைப் பார்க்கிலும், ஜனக்கூட்டத்தாரின் சுயநலமான விருப்பங்களும், சுபாவங்களும், ஒட்டுமொத்த ஜனத்திற்குப் பாதுகாப்பாய் இருக்குமென நம்பப்படலாம் என்றும் நாம் அடையாளம் கண்டுகொள்கின்றோம். ஆகையால் இந்தத் தேசங்களினுடைய அரசாங்கங்களிலும், இந்த அரசாங்கத்தின் கீழ் நமக்குக் கிடைக்கும் அனுகூலங்களிலும் நாம் களிகூருகிற அதே வேளையில், தேவன் வாக்களித்துள்ளதும், அவருடைய சித்தத்தை ஒரே சட்டமாகவும், அவருடைய பிரதிநிதியைப் பூமி எங்கும் இராஜாவாகவும் பெற்றிருக்கும் தேவனுடைய அந்த மகிமையான இராஜ்யத்திற்காகவே நாம் தொடர்ந்து ஜெபம்பண்ணிக் கொண்டிருக்கின்றோம்.

சபையில் தெய்வீகப் பிரமாணம் அல்லது தேவனுடைய ஆட்சியானது ஏற்கெனவே கொஞ்சம் நிறுவப்பட்டுள்ளது. நாம் மனுஷர்களால் ஸ்தாபிக்கப்பட்டு, சபைகள் என்று அழைக்கப்படுபவைகளைக் குறித்து இங்குப் பேசிடவில்லை, மாறாக "பரலோகத்தில் பெயர்கள் எழுதப்பட்டவர்களும்" மற்றும் சரீரமென அதன் அங்கத்துவத்தையும், தலைமைத்துவத்தையும், அவர்களுக்காக நியமிக்கப்பட்டுள்ள தலையாகிய கர்த்தர் இயேசுவினால் வழிநடத்தப்பெற்றவர்களுமான சபையைக்குறித்தே இங்குக் குறிப்பிடுகின்றோம். மனுஷர்கள் மத்தியில் காணப்படுகின்றதான மத அமைப்புகளைப் பொறுத்தமட்டில், நம் சந்ததியினருடைய பெலவீனம் காரணமாயும், சிறந்தவைகள் கூடச் சுயநலமான நோக்கங்களினால் அசுசிப்படுத்தப்பட்டுள்ள உண்மையின் காரணமாயும், பெயர்ச்சபை நிர்வாகங்களினுடைய சர்வாதிகார அமைப்பானது மிகவும் பொல்லாதவையாகவும், அந்தச்சபை நிர்வாகத்தினுடைய ஜனங்கள் அமைப்பானது கொஞ்சம் குறைவாய்ப் பொல்லாதவையாகவும், அதாவது அரசியல் அரசாங்கங்களைப் போன்றே காணப்படுகின்றது. தம்முடைய சபைக்கான கர்த்தருடைய ஏற்பாடானது, இரண்டு அமைப்புகளுடைய கூட்டமைப்பாகும். (1) வழிநடத்துபவர்களைத் தேர்ந்தெடுக்கும் காரியமானது அங்கத்தினர்களுடைய கணிப்பின் அடிப்படையில் தீர்மானிக்கப்படுகின்றது என்ற விதத்தில் அது மக்களாட்சியாய் இருக்கின்றது. (2) அங்கத்தினர்கள் தாங்கள் தேர்ந்தெடுக்கும் (வாக்குகள்/votes) விஷயத்தில் தங்கள் சொந்த விருப்பு வெறுப்புகளைச் செயல்படுத்தாமல், இது விஷயத்தில் தங்கள் தலையானவராகிய கர்த்தருடைய சித்தத்தை உறுதியாய் அறிந்துகொள்வதற்குத் தங்களது சிறந்த அறிவினைப் பயன்படுத்திட வேண்டும் என்ற விதத்தில் அது தேவனுடைய ஆட்சியாய் இருக்கின்றது. இது தற்கால சூழ்நிலைகளின் கீழ்க் காணப்படும் மற்றும் மிகவும் இணக்கமுள்ள, எளிமையுள்ள, கற்பனைப் பண்ணிப்பார்க்க முடிகிற அளவுக்கு நல்லதொரு ஏற்பாடாகும். சபையின் ஒவ்வொரு நபரும், கிறிஸ்துவின் "சரீரத்திலுள்ள" ஒவ்வொரு அங்கத்தினனும் தன் இருதயத்தில், "முதலாவது தேவன் மற்றும் தம் மந்தைக்குக் கண்காணியாக அல்லது மேய்ப்பனாகத் தேவனால் கிறிஸ்து நியமிக்கப்பட்டுள்ளப்படியால், இவரும், இவர் சித்தமும் நம்முடைய சிந்தனைகளில், நம் இருதயங்களில், நம் வார்த்தைகளில், நம் கிரியைகளில் முதன்மையாகக் காணப்பட வேண்டும்" என்று சொல்லிக்கொள்ள வேண்டும். நம்மால் முடிந்தமட்டும் அவர் சித்தத்தை அறிந்துகொண்டு, அதைப் பின்பற்றிட வேண்டும்; அவர் வார்த்தைகளை நம்மால் புரிந்துகொள்ள முடிகிற அளவிற்கேற்ப, நாம் அவர் வார்த்தைகளைப் பேசிட வேண்டும்; மேலும் வழிநடத்துபவர்களைத் தெரிந்துகொள்ளும் விஷயத்தில் நம்முடைய சொந்தச் சித்தமல்ல, அவர் சித்தமே கட்டுப்பாட்டினைப் பெற்றிருத்தல் வேண்டும். இப்படியாகவே சபையில் - சரீரத்தில் - அதன் நலனுக்கடுத்த காரியங்கள் மற்றும் விஷயங்கள் அனைத்திலும் - தேவன் முதன்மையானவராகவும், அவருடைய பிரதிநிதியாகிய கிறிஸ்து முதல்வராகவும் வரிசையில் காணப்பட வேண்டும் - அதுவும் இது கிருபையிலும், திவ்விய சித்தம் குறித்த அறிவிலும் ஒவ்வொரு அங்கத்தினனும் வளருவதற்கேற்ப ஆகும். இப்படியாகத் தேவன், தம்முடைய உண்மையுள்ளவர் வாயிலாக, தம்முடைய திருவுள சித்தத்தின்படி, அவயவங்கள் ஒவ்வொன்றையும் சபையில் வைத்தார் (1 கொரிந்தியர் 12:18). இது கர்த்தருடைய ஜனங்கள் காணப்படும் ஒவ்வொரு சிறுசிறுக் கூட்டத்திற்கும், ஒட்டுமொத்த சபைக்கும் அவர்கள் அவருடைய சித்தம் மற்றும் வசனத்திற்கு இசைவாக - தேவனை முதன்மையானவராகவும், தலையாகிய கிறிஸ்துவை முதல்வராகவும் வைத்துக்கொள்வதற்கேற்ப பொருந்துகின்றதாய் இருக்கும்.

இதே கொள்கையானது, சபையையும் தாண்டி, கர்த்தருடைய ஜனங்களின் இல்லங்களுக்கும் பொருந்துகின்றதாய் இருக்கின்றது. இங்கும் தேவன் முதன்மையானவராகவும், அவரது பிரதிநிதியாகிய கிறிஸ்து பிரதானமானவராகவும்/முதல்வராகவும் காணப்பட வேண்டும். ஒருவேளை குடும்பத்தின் தலைவன், கிறிஸ்துவினுடைய சரீரத்தின் ஓர் அங்கமாய் இருப்பாரானால் மற்றும் இவர் கிறிஸ்துவை தன்

தலையாக அடையாளம் கண்டுகொள்வாரானால் . . . குடும்பத்திலும், சபையிலும் அவரது பிரமாணங்களை இவர் அடையாளம் கண்டுகொள்பவராய் இருத்தல் வேண்டும். கிறிஸ்துவின் பிரமாணங்களை அடையாளம் கண்டுகொள்ளும் குடும்பத்தலைவன், ஒழுங்கின்மைக்கு - அக்கிரமத்திற்கு ஏதுவான அனைத்தையும் எதிர்த்திட வேண்டும்; யேகோவா தேவனாகிய சர்வாதிகாரியை - நியாயப்பிரமாணிக்கரை - அவரது சர்வாதிகார பிரதிநிதியாகிய கிறிஸ்து இயேசுவை - அவருடைய சரீரத்தின் அங்கத்தினர்கள் அனைவருக்கும் அவர் முன்வைத்திடும் அன்பின் பூரண பிரமாணத்தினை - குடும்பத்திற்கு முன்பும், தனக்கு முன்பும் குடும்பத்தலைவன் நிலைநிறுத்திட வேண்டும்; இந்த அன்பின் பூரண பிரமாணமானது, அவர்களின் இருதயங்களைப் பூரணமாயும், அழிவுக்கேதுவான சரீரங்களையும், அவர்களால் அனுமதிக்க முடிகிற மட்டும் ஆளத்தக்கதாக, இந்த பிரமாணத்தினை அவருடைய சரீரத்தின் அங்கத்தினர்கள் அனைவருக்கும் கர்த்தர் முன்வைத்துள்ளார். ஒவ்வொரு குடும்பத்திலும் பிரமாணத்தினுடைய ஆளுகையானது, வார்த்தையினாலும், மாதிரியினாலும் செயல்படுத்தப்பட வேண்டும்; அன்பினால் ஏவப்படும், அன்பினால் செயல்படுத்தப்படும் மற்றும் கூடுமானவரை எல்லா அன்பு மற்றும் உதவிபுரியும் செல்வாக்கோடுகூட வரும் அன்பின் பிரமாணமாக அது காணப்பட வேண்டும் என்பது ஒருபோதும் மறந்துபோகப்படக்கூடாது.

இதன் அர்த்தமென்னவெனில், கிறிஸ்துவைத் தனது தலையாக அடையாளம் கண்டுகொண்டுள்ள சபையின் ஒவ்வொரு அங்கத்தினனும், கூடுமான மட்டும் தன் குடும்பத்திலும் தேவனுடைய சித்தத்தைச் செய்திட நாடிட வேண்டும்; இன்னுமாக ஒருவேளை அவன் ஏற்கெனவே குடும்ப ஜெப ஒழுங்கினை ஏற்படுத்திக்கொள்ளவில்லையெனில், கூடுமானமட்டும் விரைவாய் அதைச் செய்திடுவானாக. ஒருவேளை வேலை அல்லது தொழில் காரணமாக தினந்தோறும் குடும்ப ஜெபங்களை அவனால் பெற்றிருக்க முடியவில்லையெனில், அவற்றை வாரம் ஒருமுறை அவன் பெற்றிருக்கலாம் மற்றும் இப்படியாய் வெளிப்படும் நல்நோக்கங்களையும், சிறந்த பிரயாசங்களையும் கர்த்தர் ஏற்றுக்கொள்வார் என்று நாங்கள் நம்புகின்றோம். ஒருவேளை தேவனால் குடும்பத்தின் தலைவனாக நியமிக்கப்பட்டுள்ள புருஷன், கிறிஸ்துவினுடைய சரீரத்தின் அங்கத்தினனாய் இல்லையெனில் . . . கிறிஸ்தவளாய் இருக்கும் மனைவியானவள் இது விஷயத்திலுள்ள திவ்விய பிரமாணத்தினை - அதாவது புருஷனே, மனைவி மற்றும் குடும்பத்திற்கான தலைவனாக இருக்கின்றார் என்றும், தனது கணவன் வெளிப்படுத்தியுள்ளதான விருப்பத்திற்கு எதிராக எந்த விதத்திலும் குடும்ப ஜெபத்தினை ஒழுங்குப்படுத்திடக்கூடாது என்றுமுள்ள திவ்விய பிரமாணத்தினை அடையாளம் கண்டுகொள்ள வேண்டும். தனது கணவன், ஏற்பாட்டிற்கு ஒத்துக்கொள்வதற்கென, அவள் கர்த்தருடைய ஆசீர்வாதத்தினையும், வழிநடத்துதலையும் மற்றும் நன்மைக்கேதுவாய் மாற்றிடும் வழிநடத்துதலையும் நாடி எதிர்ப்பார்த்து, பலன்களுக்காய்க் காத்திருக்க வேண்டும். கிறிஸ்தவனாய் இராத கணவன், ஆனாலும் ஒழுக்க விஷயத்திலும், பக்தி விஷயத்திலும் ஈடுபாடுள்ள கணவன் இந்தச் சூழ்நிலைகளின் கீழ்த் தனது ஸ்தானத்தினுடைய பொறுப்பினை உணர்ந்துகொள்வார்; மனைவியின் ஞானமுள்ள மற்றும் தன்னடக்கமுள்ள மற்றும் சிறந்த நடக்கையானது கணவனால் பெரிதும் மதிக்கப்படும்; காரணம் இது விஷயத்திலுள்ள அவளது தன்னடக்கமாகும்; மேலும் இது அவளும், தானும் கீழ்ப்பட்டிருக்க வேண்டியதான மேலான பிரமாணத்திற்கும், நியாயப்பிரமாணிக்கருக்கும் அவள் கீழ்ப்பட்டிருக்கின்றாள் என்று கணவனுக்குக் கிடைத்திருக்கும் நிரூபணமாகும்.

தேவனை முதன்மையானவராகவும், அவரது பிரதிநிதியாகிய கிறிஸ்துவைப் பிரதானமானவராகவும் நாம் வைத்திருத்தல் என்பது, உலகத்தில் நாம் தொடர்புக்குள் வருகிறவர்களுடனான நம்முடைய தொழில் நடவடிக்கைகளிலும்கூடத் தாக்கத்தினைக் கொண்டிருக்க வேண்டும்; இதனால் நாம் வாங்கினாலும்,

விற்றாலும் அல்லது எதைச் செய்தாலும் . . . நாம் யாரைப் பிரியப்படுத்த நாடுகின்றோமோ அவருடைய பார்வையிலும், நம்முடைய இருதயங்களில் யாரைப் பிரதானமானவராய்க் கொண்டிருக்கின்றோமோ அவருடைய பார்வையிலும் . . . பிரியமாய் இருப்பவைகளையே செய்திட எப்போதும் நாடிக்கொண்டிருக்க வேண்டும் என்பதை நினைவில் கொண்டிருக்க வேண்டும். இது சுயநலம் குறைவடைகிறதையும் மற்றும் அன்பு அதிகரிக்கிறதையும், குறுகிய மனப்பான்மை குறைவடைகிறதையும், அனைவர்மீதும் பெருந்தன்மையின் பண்பு பெருகுவதையும் குறிக்கின்றதாய் இருக்கும் மற்றும் பலனானது நமது ஆண்டவர் கூறியிருக்கிறது போன்றிருக்கும் - அதாவது "இவ்விதமாய் மனுஷர் உங்கள் நற்கிரியைகளைக் கண்டு, பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவை மகிமைப்படுத்தும்படி, உங்கள் வெளிச்சம் அவர்கள் முன்பாகப் பிரகாசிக்கக்கடவது" (மத்தேயு 5:16).

தேவனை முதன்மையாக வைத்தும், ஜீவியத்தின் காரியங்கள் அனைத்திலும் அவரது நியமங்களை, பிரமாணங்களை, சித்தங்களை அடையாளம் கண்டுகொண்டும் இருக்கும் காரியமானது மேல்கூறப்பட்டுள்ள செல்வாக்குகளை/தாக்கங்களைச் சபையின் காரியங்களிலும், இல்லம் மற்றும் குடும்பத்தினுடைய காரியங்களிலும், தொழில் காரியங்களிலும், உலகத்தோடு உள்ள தொடர்பின் காரியத்திலும் செயல்படுத்திட்டாலும், பிரதான செல்வாக்கானது நம்முடைய சொந்த இருதயங்களிலும், ஜீவியங்களிலுமே நிச்சயமாய்க் காணப்பட வேண்டும். பொதுவாழ்க்கை மற்றும் தனிப்பட்ட வாழ்க்கை சம்பந்தப்பட்டுள்ள காரியங்கள் யாவற்றிலும் கிறிஸ்துவின் சித்தமே பிரதானமாயிருக்க வேண்டும் என்ற எண்ணமும், நம்முடைய அன்பின் விஷயத்தில் தேவனுக்கே முதலிடம் கொடுக்கப்பட வேண்டும் என்ற எண்ணமும், நம்முடைய செல்வாக்கு, நம்முடைய சந்தோஷங்கள், நம்முடைய இன்பங்கள், நம்முடைய நம்பிக்கைகள், நம்முடைய இலட்சியங்கள் விஷயத்தில் அவரது ஆசீர்வாதம் காணப்பட வேண்டும் என்ற எண்ணமும் - எத்தகையதொரு ஆசீர்வாதத்தினைக் கொண்டு வருகின்றதாயிருக்கும்! எத்தகைய தேவபக்தியினையும், ஆவியினுடைய கனிகள் மற்றும் கிருபைகளினுடைய விஷயங்களில் எத்தகையதொரு வளர்ச்சியினையும் கொண்டுவருகின்றதாயிருக்கும்! கிறிஸ்துவைப் பிரதானமானவராய்க் கொண்டிருக்கும் காரியமானது, ஜீவியத்தின் கிரியைகளையும் மிகவும் விரைவாய்த் தாண்டி, நம்முடைய வார்த்தைகளிலும் அதன் தாக்கத்தினைக் கொண்டிருக்கின்றது. உண்மை கிறிஸ்தவன் என்பவன் தான் தயவுடன் நடந்துகொள்வதில் கர்த்தர் பிரியப்படுவார் என்று நம்புவது போன்று, தயவுடன் நடந்துகொள்ள மாத்திரம் நாடிடாமல், கூடவே தயவாயும், இரக்கமாயும், தன்னடக்கமாயும், தாழ்மையாயும் பேசிடவும் நாடி, இப்படியாக இருளினின்று ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு நம்மை வரவழைத்தவருடைய புண்ணியங்களை அறிவிக்கிறவனாயும் இருப்பான். கர்த்தருடைய போதனைகளை நம்முடைய வார்த்தைகளிலும், நம் ஜீவியத்தின் கிரியைகளிலும் மாதிரித்துவம் பண்ணுவதைவிட மனுஷர் மத்தியில் அவர் நாமத்திற்கு நம்மால் வேறு எந்தச் சிறந்த மரியாதையையும், துதியையும், மகா கனத்தினையும் செலுத்திட முடியாது.

---

R4749 [தெரிந்தெடுக்கப்பட்ட பத்திகள்]

# சுவாரசியமான கேள்விகள்

## சபையிலும், இல்லத்திலும் ஸ்திரீயின் ஸ்தானம்

கேள்வி: -- முற்பிதாக்களைக் குறித்துக் குறிப்பிடுகையில் வேறு யாரையும் இல்லாமல் ராகாபை (எபிரெயர் 11) மாத்திரம் பரிசுத்த பவுல் அடிகளார் குறிப்பிடுகின்றார் என்ற உண்மையின்

கண்ணோட்டத்தில் பார்க்கப்படுகையில், புதிய சுபாவம் மற்றும் பரம அழைப்பிற்கான பந்தயப் பொருளுக்குரிய ஓட்டப்பந்தயத்தில் ஸ்திரீயானவள் எவ்வாறு சமவாய்ப்பினைப் பெற்றுக்கொள்ள முடியும்?

பதில்: -- ஸ்திரீகளுக்கு எதிராய் வேதவாக்கியங்கள் வேற்றுமைப் பாராட்டும் எந்தவொரு இடத்தையும் நாங்கள் கண்டதில்லை. அவர்கள் இந்தச் சுவிசேஷ யுகத்தில் கிறிஸ்துவோடுகூட உடன் சுதந்திரர்கள் ஆகிடுவதற்கான வாய்ப்பினை உடையவர்களாய் இருக்கின்றனர்; இந்த ஒரு வாய்ப்பில் பாலின, நிற அல்லது இனப்பாகுபாடு ஏதும் இல்லை.

ஸ்திரீகளுக்கு எதிரான எதுவும் வேதவாக்கியங்களில் இல்லை. கர்த்தரானவர் சபையின் வாய்க்கருவிகளாகப் புருஷர்கள் இருக்கும்படிக்குத் தெரிந்துகொண்டது என்பது அவருடைய சொந்தக் காரியமாய் இருக்கின்றது. இந்த விஷயத்தில் கர்த்தருடைய சித்தத்தைக்குறித்துக் கேள்வி கேட்கவோ, வயதான புருஷர்களை அல்லது வாலிபர்களை அல்லது குறிப்பிட்ட வயதுள்ள ஸ்திரீகளைக் கர்த்தர் விரும்புவாரா அல்லது யாரையுமே இல்லையா என்று கேள்வி கேட்பதற்கோ யாருக்குமே உரிமை கிடையாது. தேவன் தம்முடையவர்கள் விஷயத்தில் தம்முடைய சித்தத்தின்படி செய்வார். ஆனால் அவர் இத்தகைய தெரிவைச் செய்வதற்கான காரணம் ஒன்றினை நம்மால் காணமுடிகின்றது. ஸ்திரீ சபைக்கு அடையாளமாகவும், புருஷன் சபையினுடைய தலைக்கு அடையாளமாகவும் இருக்கின்றனர். ஆகையாலே ஸ்திரீயானவள் சபையில் போதகராக இருக்கக்கூடாது என்றும், ஆண்கள் போதகராக இருக்க வேண்டும் என்றும் நமக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வேதவாக்கியங்கள் சம்பந்தப்பட்ட கேள்விகளுக்கு வெளியே, மனித விவகாரங்களிலும்கூட ஸ்திரீயினுடைய காரியங்கள் அபாயத்திற்குள்ளாகி இருக்க வாய்ப்பில்லை; ஏனெனில் ஒவ்வொரு ஸ்திரீயும் ஒன்றில் ஆணுக்குச் சகோதரியாகவோ, ஒரு ஆணுக்குத் தாயாகவோ, ஆணுக்கு மகளாகவோ இருக்கின்றாள். இப்படி இருபாலினர்களும் மிக நெருக்கமான உறவுகொண்டிருப்பதினால் வாக்களிப்பதற்கென்று வாக்குச் சாவடிக்கு முழுக்குடும்பமும் செல்லவேண்டிய அவசியம் இருப்பதில்லை, மாறாக குடும்பத்தின் பிரதிநிதியாகப் புருஷன் காணப்படுகின்றான் மற்றும் இப்படியாகப் பட்டணத்திலோ, நகரத்திலோ, நாட்டிலோ நடைபெறும் எல்லா விஷயத்திலும் அனைவரும் பங்குகொண்டவர்களாய் இருப்பார்கள்.

ஒருவேளை இப்படியாக இருக்கவில்லையெனில் சூழ்நிலைகள் மிகவும் விரும்பத்தகாததாய் இருந்திருக்கும் என நம்மால் கற்பனைபண்ணிப்பார்க்க முடிகின்றது; இது ஆணினுடைய தன்மையாய்க் காணப்படும் மிகப் பிரத்தியேகமான சிலாக்கியங்களில் ஒன்றினை ஆண் தொலைத்துவிட்டவராய் இருந்திருப்பார் என்றும்; மறுபக்கத்தில் ஸ்திரீயின் சார்பிலும் கவனக்குறைவும் இருந்திருக்கும் என்றும் காண்பித்திருக்கும். ஸ்திரீயினுடைய செயல்பாட்டு எல்லைக்குறித்து அப்போஸ்தலன் நமக்கு நினைப்பூட்டுகின்றார். தன்னை மதிக்காத புத்திரனுடைய எந்தத் தாயானவளும் மிகவும் அமைதலாய் இருக்கக்கடவள். குழந்தைப் பருவத்தின் மற்றும் வாலிபப் பருவத்தின் வருடங்கள் அனைத்திலும் அந்தப் பிள்ளை அவளிடம்தான் இருந்தது. மேலும் அத்தனை வருஷக்காலங்களும் அந்தப் பிள்ளை தனக்கு மரியாதை காண்பிக்க அவள் கட்டளையிடாமல் இருந்திருந்தாளானால், அவளே குற்றஞ்சாட்டப்பட வேண்டும்.

ஒருவேளை இந்த விஷயத்தில் ஸ்திரீயானவள் சரியான பார்வையைப் பெற்றுக்கொள்வாளானால், பெண் உரிமைக்கான குரலெழுப்புதல்கள் முடிவிற்கு வரும் என நாங்கள் நம்புகின்றோம். ஸ்திரீகள் இல்லத்தில் தங்களுக்கு ஒரு கடமை இருப்பதை உணர்ந்துகொள்வார்கள். ஒவ்வொரு சட்டத்திற்கும் விதிவிலக்குகள் உண்டு. கிறிஸ்தவ பெற்றோர்கள் பின்வருமாறு: "சத்தியமானது எனக்கு முதலிலே

கிடைத்திருந்திருக்குமானால், ஒரு சிறந்த தகப்பனாக, ஒரு சிறந்த தாயாக எப்படி இருக்க வேண்டும் என்று நான் அறிந்திருப்பேன்; ஆனால் பெற்றோரென என்மீது இருக்கும் கடமைகள் குறித்தும், குழந்தையைச் சரியாய்ப் பயிற்றுவிப்பது என்றால் என்ன என்பது குறித்தும், எதுவும் எனக்குக் கற்பிக்கப்படவில்லை" என்று கூறியிருக்கின்றனர். ஒரு தாயார் என்னிடம் பின்வருமாறு: "என்னுடைய குழந்தைகள் சிறுபிள்ளைகளாக இருந்தபோது பணம் சம்பாதிக்க வேண்டும் என்று நோக்கம் கொண்டிருந்தேன். இதற்காக வேண்டி என் கணவனோடுகூட நான் கடுமையாக உழைத்துக் கொண்டிருந்தேன். நாங்கள் கொஞ்சம் பணம் சம்பாதித்தோம். ஆனாலும் என் பிள்ளைகளைப் பயிற்றுவிக்கும் வாய்ப்பினைத் தொலைத்துவிட்டேன்; ஒருவேளை இப்பொழுது நான் அவர்களை வேறுவிதமாகப் பயிற்றுவிக்க வேண்டுமானால் நடைமுறையில் நான் அவர்களைக் கொன்றுபோடத்தான் வேண்டும்" என்று கூறினாள். அத்தாயாரிடம் நாங்கள் பின்வருமாறு: "ஆம்! இந்த உண்மைகள் அனைத்தினுடைய கண்ணோட்டத்தின்படி பார்க்கையில் நீங்கள் உங்கள் பிள்ளைகளிடத்தில் பரிவுடன் நடந்துகொள்ள வேண்டும். மேலும் பலவந்தம் படுத்துவதற்குப் பதிலாக, முன்மாதிரியினாலும், முன் உதாரணங்கள் மூலமாகவும் பிள்ளைகளைச் சரியான நிலைமைக்குக் கொண்டுவர முயற்சியுங்கள்" என்று கூறினோம். ஒருவேளை அவளது கருத்துக்களைப் பிள்ளைகள்மீது அவள் திணித்திட முற்படுவாளானால் அவர்களை அவள் கலவரம்பண்ணும், நிர்ப்பந்தம்பண்ணும் நிலைக்கு ஆக்கிடுவாள் என்றும் அத்தாயாரிடம் கூறினோம்.

அவள் திருமணத்திற்குத் தீவிரமான எதிர்ப்புத் தெரிவித்தவளாக இருந்தாள். இப்படிக் காணப்பட்டாளானால் அவள் பிள்ளைகள் அவளை எதிர்த்திடும் நிலைக்கு அவளால் வழிநடத்தப்படுவார்கள் என்றும், பிள்ளைகள் எதிர்ப்பாலின தோழமையைப் பெற்றிடுவதற்கு அவள் அனுமதித்திடுவது நலமென்றும், பிள்ளைகள் தன்னிடம் வரவும், தன் அறிவுரைகளை நாடவும், அவர்களை ஊக்குவிக்க வேண்டும் என்றும் நாங்கள் அவளிடம் கூறினோம். ஆனால் அத்தாயார் அப்படியாகச் செய்யவில்லை. இதன் விளைவாக ஒரு மகள் ஒரு மனுஷனைத் திருமணம்பண்ணினாள்; அவனோ பிற்பாடு, சிறைச்சாலைக்குச் சென்றுவிட்டான். பிற்பாடு தான் நிதானமாய்ச் செயல்பட்டிருக்கலாமே என்று அத்தாயானவள் எண்ணினாள்.

---

R4097

## தலையைக் கனப்படுத்துதல் அல்லது கனவீனப்படுத்துதல்

"ஒவ்வொரு புருஷனுக்கும் கிறிஸ்து தலையாயிருக்கிறாரென்றும், ஸ்திரீக்குப் புருஷன் தலையாயிருக்கிறானென்றும், கிறிஸ்துவுக்கு தேவன் தலையாயிருக்கிறாரென்றும், நீங்கள் அறியவேண்டுமென்று விரும்புகிறேன். ஜெபம்பண்ணுகிறபோதாவது, தீர்க்கதரிசனஞ் சொல்லுகிறபோதாவது, தன் தலையை மூடிக்கொண்டிருக்கிற எந்தப் புருஷனும் தன் தலையைக் கனவீனப்படுத்துகிறான். ஜெபம்பண்ணுகிறபோதாவது, தீர்க்கதரிசனஞ் சொல்லுகிறபோதாவது, தன் தலையை மூடிக்கொள்ளாதிருக்கிற எந்த ஸ்திரீயும் தன் தலையைக் கனவீனப்படுத்துகிறாள்; அது அவளுக்குத் தலை சிரைக்கப்பட்டதுபோலிருக்குமே. ஸ்திரீயானவள் முக்காடிட்டுக்கொள்ளாவிட்டால் தலைமயிரையும் கத்தரித்துப்போடக்கடவள்; தலைமயிர் கத்தரிக்கப்படுகிறதும் சிரைக்கப்படுகிறதும் ஸ்திரீக்கு வெட்கமானால் முக்காடிட்டுக்கொண்டிருக்கக்கடவள்." (1 கொரிந்தியர் 11:3-6)

மேல் இடம்பெறும் வேதவாக்கியத்தில் ஏதோ ஒன்று கர்த்தருடைய அருமையான மந்தையிலுள்ள சிலரைக் காயப்படுத்துவது போன்று தோற்றமளிக்கின்றது. இது குறித்து நாம் பெரிதும் வருந்துகின்றோம்;

ஆனால் அதற்காக வேதவாக்கியங்களைத் திருத்தம் அல்லது மாற்றம் செய்வதற்கான அதிகாரம் நம்முடையதல்ல. மாறாக எங்குக் கர்த்தர் தம்முடைய வார்த்தைகளில் வைத்துள்ள சில விதிமுறைகளின் நிமித்தம் இருதயம் புண்பட்டு, நம்முடைய அல்லது மற்றவர்களுடைய தவறான கண்ணோட்டங்கள் மற்றும் தவறான நடைமுறைப்படுத்துதல்களின் காரணமாய் அப்பாடப்பொருள் குறித்துச் சில தவறான கருத்துகள் காணப்படுகின்றதோ... அங்கு ஒரு வகையான மனநிலை உருவாகியுள்ளது என்றும், இந்தப் புண்படுதலின் காரணமாய் அம்மனநிலை நோய்வாய்ப்பட்ட மனநிலையாய் இருக்கின்றது என்றும் எங்களுக்குத் தெரிகின்றது. இந்தப் பாடப்பொருளின் விஷயத்தில் சிலர் மிகவும் உணர்ச்சிவசப் படுகிறவர்களாகவும், மிகவும் எளிதில் புண்படுகிறவர்களாகவும் காணப்பட்டு, வேதாகமப் பாடங்களினுடைய 6-ஆம் தொகுதியினுடைய இதழாசிரியர் மீது கசப்பு அடைந்துள்ளதையும்கூட நாங்கள் அறிவோம்; அவர் மீது கசப்பு அடைந்ததற்கான காரணம்... அவர் அப்புத்தகத்தில் அவ்வேதவாக்கியத்தினையும், அதன் சரியான அர்த்தத்தினையும் கவனத்திற்குக் கொண்டுவந்திருக்கின்றார் என்பதினாலாகும்.

ஏதேனும் வேதவாக்கியமானது நம்மைத் தொடுமானால், அவ்வேதவாக்கியத்திற்கு எதிர்க்கிற விதத்திலோ அல்லது அவ்வேதவாக்கியத்தினை நம் கவனத்திற்குக் கொண்டுவந்தவரை எதிர்க்கிற விதத்திலோ நம் மனோநிலையானது காணப்படக்கூடாது; மாறாக நம்முடைய பெலவீனம் மற்றும் புண்ணானது நம்முடைய கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டு, இப்படியாகப் புண்களின் காயத்திற்குத் தைலமாய்க் காணப்படும் உரிய மருந்தைப் போட்டுக்கொள்வதற்கு நாம் உதவப்பட்டிருப்பதற்காகவும், கர்த்தருடைய நுகம் நமக்கு எளிமையாகவும், அவரது பாரம் நமக்கு இலகுவாக்கப்பட்டதற்காகவும் நாம் நன்றியுடையவர்களாய்க் காணப்பட வேண்டும். அது நமது கர்த்தருடைய வார்த்தைகளல்ல, மாறாக அவரது அப்போஸ்தலனாகிய பரிசுத்த பவுல் அடிகளாரின் வார்த்தைகள் மாத்திரம்தான் என்று நாம் சொல்வதும் சரியல்ல; ஏனெனில் அந்தப் பன்னிரண்டு பேரையும், அவர்களது வார்த்தைகளையும் கர்த்தர் கனப்படுத்தியுள்ளார் மற்றும் அவர்கள் வாயிலாக நமக்கு ஆசீர்வாதம் வரும்படிக்கு ஜெபம்பண்ணியும் உள்ளார் - "நான் இவர்களுக்காக வேண்டிக்கொள்ளுகிறதுமல்லாமல், இவர்களுடைய வார்த்தையினால் என்னை விசுவாசிக்கிறவர்களுக்காகவும் வேண்டிக்கொள்ளுகிறேன்" (யோவான் 17:20). இன்னுமாக அவர்கள் பூமியில் கட்டுவது எதுவோ, அது பரலோகத்திலும் கட்டப்பட்டிருக்கும் என்றும், அவர்களால் பூமியில் கட்டவிழ்க்கப்படுவது எதுவோ, அது பரலோகத்திலும் கட்டவிழ்க்கப்பட்டிருக்கும் என்றும் கர்த்தர் கூறி, அவர்களுடைய வார்த்தைகளானது விசேஷமான வழிகாட்டுதல் பெற்றிருந்தது என்று நமக்குப் புரியவைக்கின்றார்; ஆகையால் அவர்கள் கட்டளையிடும் எதையும் தெய்வீகக் கட்டளையாக நாம் புரிந்துகொள்ள வேண்டும் மற்றும் கிறிஸ்துவுக்குள்ளான நம்முடைய சுயாதீனங்கள் குறித்து அவர்கள் நமக்குச் சொல்லிடும் எதுவும், தெய்வீகச் செய்தியாக நம்மால் புரிந்துகொள்ளப்பட வேண்டும். இன்னுமாக இந்த ஆசீர்வாத கால்வாய்களை/பிரதிநிதிகளைத் தம்முடைய சபையினுடைய ஆறுதலுக்காகவும், பக்திவிருத்திக்காகவும் அவர் எவ்வளவு அதிகமாய்ப் பயன்படுத்தினார் என்பதையும் நாம் நினைவுகூர வேண்டும். இன்னுமாக அவர்கள் எப்படிப் பிதாவினால், கர்த்தருக்கு விசேஷமாய்க் கொடுக்கப்பட்டார்கள் என்பதையும் நாம் நினைவுகூர வேண்டும்; இது பற்றி அவர் கூறினதாவது: "நீர் உலகத்தில் தெரிந்தெடுத்து எனக்குத் தந்த மனுஷருக்கு உம்முடைய நாமத்தை வெளிப்படுத்தினேன். அவர்கள் உம்முடையவர்களாயிருந்தார்கள், அவர்களை எனக்குத் தந்தீர், அவர்கள் உம்முடைய வசனத்தைக் கைக்கொண்டிருக்கிறார்கள்" (யோவான் 17:6). யூதாசினுடைய விலகிச்செல்லுதலின் காரணமாய், இவர் இடத்தை நிரப்பும்படிக்கு, அப்போஸ்தலனாகிய பவுல் திவ்விய தெரிந்துகொள்ளுதலின்படியானவராய்க் காணப்பட்டார் என்று நாம் பார்க்கின்றோம் மற்றும் கர்த்தருடைய வழிநடத்துதலின் பேரில், புதிய ஏற்பாட்டினுடைய பெரும்பான்மையான செய்தியானது - ஒட்டுமொத்த தெய்வீகத் திட்டத்திற்கான விளக்கமானது, சபைக்கு அப்போஸ்தலனாகிய பவுல் வாயிலாகத் தேவனால் அனுப்பப்பட்டது. உண்மையாக நமது கர்த்தருடைய வார்த்தைகளும், மற்ற அப்போஸ்தலருடைய வார்த்தைகளும் சபைக்கு

ஆசீர்வாதத்தினைக் கொண்டுவந்துள்ளது; எனினும் எண்ணிக்கை மற்றும் விளக்கத்தின் அடிப்படையில் பார்க்கும்போது, பரிசுத்த பவுல் அடிகளாருடைய வார்த்தைகளானது, மற்ற அனைவருடையவைகளைக் காட்டிலும் மேலோங்கிக் காணப்படுகின்றது. நாம் பார்த்திருக்கிறதுபோல, இது நமது கர்த்தருடைய வார்த்தைகளின் விஷயத்திலும் உண்மையே; ஏனெனில் கர்த்தருடைய பிரசங்கித்தல்களானது பரிசுத்த ஆவி இறங்கிவருவதற்கு முன்பு காணப்பட்டது; ஆகையால் ஆவியினால் ஜெநிபிக்கப்படாதவர்களிடத்திலேயே பேசப்பட்டிருந்தது மற்றும் இதன் காரணமாய் ஆவிக்குரிய காரியங்களை உணர்ந்துகொள்ளவும், புரிந்துகொள்ளவும் முடியாதவர்களாய் இருந்தனர். ஆகையால் நமது கர்த்தருடைய ஆழமான போதனைகளானது, உவமைகளாகவும், மறைபொருள்களாகவும் இருந்தது மற்றும் இவைகள் பெந்தெகொஸ்தே அனுபவத்திற்கு முன்னதாகப் பன்னிரண்டு அப்போஸ்தலர்களினாலும்கூடக் கொஞ்சமே புரிந்துகொள்ளப்பட்டிருந்தது என்பது உறுதியே.

இப்பாடப்பொருளை மீண்டும் கவனத்திற்குக் கொண்டுவருவதற்கான காரணம், இப்பாடப்பொருளுக்கு ஏற்கெனவே இருக்கும் கவனத்தைக் காட்டிலும் அதிகமான கவனம் காட்ட வைக்கப்பட வேண்டும் என்று விரும்புவதினால் இல்லை - அப்போஸ்தலரின் வார்த்தைகளை யார் மீதேனும் திணித்திட வேண்டும் என்று நாங்கள் விரும்புகின்றோம் என்பதினால் இல்லை - யாரையேனும் குற்றப்படுத்திட நாங்கள் விரும்புகின்றோம் என்பதினால் இல்லை - மாறாக இக்கருத்துக்களுக்கான பொறுப்பானது எங்கே வைக்கப்பட வேண்டுமோ, அங்கேதானே வைத்திடுவதற்காக - அதாவது வேதாகமப் பாடங்களினுடைய (volumes) ஆசிரியர் மீது வைக்கப்படாமல், மாறாக அப்போஸ்தலன்மீதும், அவரை ஏவினதான பரிசுத்த ஆவியின் மீதும் வைக்கப்பட வேண்டும் என்று நாங்கள் விரும்புகின்றோம். இப்பாடப்பொருள் விஷயத்தில் சண்டையிடுகிறவன், தான் யாரோடு சண்டையிட்டுக் கொண்டிருக்கின்றான் என்று அறிந்துகொண்டு, அதற்கேற்ப தன்னைக் காத்துக்கொள்வானாக. கர்த்தருடன் சண்டையிட்டு, யாரும் நன்மை பெற்றுக்கொள்வதில்லை. தங்களை ஞானவான்களாக்கிடும் தெளிவான/உறுதியான வார்த்தைகளைச் சாந்தத்தோடு ஏற்றுக்கொள்கின்றவர்கள், மாபெரும் ஆசீர்வாதத்தினைப் பெற்றுக்கொள்வார்கள். எழுதப்பட்டிருப்பவைகளைக் காட்டிலும் தங்களை ஞானவான்களென எண்ணிக்கொள்கிறவர்கள் மற்றும் தன்னிறைவுகொண்டவர்கள் அனைவரும், அபாயமான இடத்தில் காணப்படுகின்றனர். இத்தகையவர்கள் இக்காலம், சோதனைக்காலம் என்றும், கர்த்தர் நம் அனைவர்மீதும் அனுமதித்துக்கொண்டிருக்கும் பரீட்சைகளில் ஒன்று தாழ்மைக்கான பரீட்சை என்றும் புரிந்துகொள்ள வேண்டும். நமக்கான பரீட்சைகள் அனைத்தும் ஒன்றுபோல் இருப்பதில்லை என்றும், கர்த்தர் தாமே தம்முடைய வார்த்தைகளினுடைய பல்வேறு சாட்சியங்கள் வாயிலாக தமக்கு அர்ப்பணம்பண்ணினவர்களைச் சோதித்தறிவார் என்றும், அதுவும் அவர்களை இடறப்பண்ணுவதற்காய் இராமல், மாறாக அவர்களைப் பரீட்சிப்பதற்காகவே சோதிக்கின்றார் என்றும், ஒருவேளை சோதனையில் சரியாய்க் கடந்துசெல்லும் பட்சத்தில், அது அவர்களுக்கு மகா ஆசீர்வாதத்தினையும், திவ்விய கிருபையில் வளர்ச்சியையும் கொண்டுவருகின்றதாய் இருக்கும் என்றும் இவர்கள் நினைவில்கொள்ள வேண்டும்.

இந்த வேதவாக்கியத்தினை எதிர்க்க முற்படும் எவனும் அவ்வேதவாக்கிய முழுப்பகுதியையும், 16-ஆம் வசனம் உட்பட வாசிப்பானாக; 16-ஆம் வசனத்தில் அப்போஸ்தலன்: "ஆகிலும் ஒருவன் வாக்குவாதஞ்செய்ய மனதாயிருந்தால், எங்களுக்கும், தேவனுடைய சபைகளுக்கும், அப்படிப்பட்ட வழக்கமில்லையென்று அறியக்கடவன்" என்று கூறுகின்றார். இதுவே இப்பாடப்பொருளினுடைய விஷயத்தில் அப்போஸ்தலனுடைய இறுதி வார்த்தைகளாகும் - அப்போஸ்தலன் வாயிலான கர்த்தருடைய இறுதி வார்த்தைகளாகும். அப்போஸ்தலனுடைய வார்த்தைகளுக்கான அர்த்தம் பின்வருமாறு: "இது விஷயத்திலுள்ள சத்தியத்தினை நான் உங்கள் முன் வைத்திருக்கின்றேன்; இதற்கு நீங்கள் கீழ்ப்படியும்போது, இதனால் உங்கள் குடும்பங்களில் மாத்திரமல்லாமல், சபை கூடுகைகளில்

மாத்திரமல்லாமல், உங்கள் சொந்த இருதயங்களிலும், அனுபவங்களிலும்கூட அதிகளவிலாக தேவ ஆசீர்வாதத்தினைப் பெற்றுக்கொள்வீர்கள். இந்தப் பாதையை நீங்கள் பின்பற்றுவதினால், நீங்கள் நன்கு முன்னேற்றம் அடைவீர்கள் மற்றும் நிச்சயமாய் மகா பலனை அடைவீர்கள் மற்றும் 'நல்லது' எனும் ஆண்டவருடைய சத்தத்தைக் கேட்பீர்கள். எனினும் நான் கூறினதை நீங்கள் சட்டமாகக் கருதிட வேண்டாம்; அதைச் சட்டம் எனும் விதத்தில் நான் பேசவில்லை. அதை நான் உங்களுக்குத் தனிப்பட்ட விதத்திலும், ஒட்டுமொத்தமாகவும் நன்மை பயக்கின்ற விதத்திலும் அறிவுரையாக வழங்கியுள்ளேன். நான் முன்வைத்துள்ள கருத்தின் நிமித்தம் யாரேனும் கோபம்கொண்டு, காரியம்குறித்து வாக்குவாதம் பண்ண மற்றும் வாதாட முற்படுவானானால், அது அமைதியாக விடப்படுவதாக. என் அறிவுரையை மதிக்கிறவன், அதைப் பின்பற்றி, ஆசீர்வாதம் அடைவானாக; அதை மதிக்காதவர்கள், இது விஷயத்தில் தங்கள் வழியினைப் பின்பற்றிடுவார்களாக - அது அவர்களை நான் பாதுகாக்க விரும்பிட்டதான அனுகூலமின்மைகளை அவர்களுக்குக் கொண்டுவருகின்றதாய் இருக்கும்; மேலும் இந்த அறிவுரையைப் பின்பற்றுவதன் மூலம் அவர்கள் அடையக்கூடும் என்று நான் கருதிடும் ஆசீர்வாதத்தினை இழந்துபோகின்றவர்களாய் இருப்பார்கள்" என்பதேயாகும்.

தலையை மூடிக்கொள்வது மற்றும் மூடிக்கொள்ளாமல் இருப்பது தொடர்பான அப்போஸ்தலனுடைய அறிவுரையானது, குடும்பம் மற்றும் சபையினுடைய காரியங்களில் கணவன் மற்றும் மனைவிக்கான உறவுக்குறித்த அவரது பொதுவான போதனைகளிலுள்ள ஒரு பாகமேயாகும். ஆராதனைகளில் தன் தலையினை மூடிக்கொள்ளுகிற மனுஷன், இது விஷயத்திலுள்ள திவ்விய வார்த்தைகளை, தான் புரிந்துகொள்ளவில்லை என்று காண்பிப்பதன் மூலம் தன் தலையினைக் கனவீனப்படுத்துகின்றவனாய் இருப்பான். இல்லத்தில் குடும்பத்திற்கான தலைமைத்துவத்தின் ஸ்தானத்தினை எடுத்துக்கொள்ளாத கணவன், தன் தலைமைத்துவத்தினை மூடிக்கொள்கிறவராய் இருப்பார்; இல்லத்தில் மனைவியானவள் தன் கணவனுடைய தலைமைத்துவத்தினை அடையாளம் கண்டுகொள்ளாதபோது, அவள் கணவனைக் கனவீனப்படுத்துகிறவளாகவும், தன்னையும் கனவீனப்படுத்துகிறவளாகவும் இருந்து, குடும்பத்தின் தலைவன் எனக் கணவனை, தான் எண்ண வேண்டியிருக்க, குடும்பத்தின் தலைவன் என்று தன்னால் எண்ணமுடியாத ஒரு மனுஷனை ஞானமற்ற விதத்தில் தான் திருமணம்பண்ணியுள்ளதாகத் தெரிவிக்கிறவளாக இருப்பாள். இங்கு அப்போஸ்தலன் தெரிவித்துள்ள இந்தக் கொள்கையானது, தேவபக்தியுள்ளவர்களென்று தங்களைக்குறித்து அறிக்கைப்பண்ணுகிற ஆண்களினாலும், ஸ்திரீகளினாலும் அடையாளம் கண்டுகொள்ளப்பட்டால், அநேகமான குடும்பப் பிரச்சனைகளும், குடும்பத்தின் மகிழ்ச்சியின்மைகளும் சரியாகிடும் என்று நாங்கள் நம்புகின்றோம்; ஏனெனில் மனைவியானவள் கணவனையே எதிர்நோக்கி இருப்பாளானால், இப்படியாக அவள் குடும்பத்தினுடைய காரியங்களிலுள்ள பொறுப்புகளுடைய மகா பாரப்பளுவினைக் கணவன் மீது வைத்துவிடுபவளாக இருப்பாள் மற்றும் இப்படி இதற்கு அவள் பழகிவரும்போது, இது அவள் மனதிற்கு மிகுந்த விடுதலையைக் கொடுக்கிறதாகவும், பெண் இனத்தினை மிகவும் சோர்வுப்படுத்திடும் அழுத்தம் மற்றும் பதற்றத்தினைக் குறைத்துவிடுகிறதாகவும் இருக்கும். கணவன் தலைவனெனத் தன் சூழ்நிலையினையும், தன் பொறுப்பினையும் உணர்ந்துகொள்கையில், தன் மனைவி, தன் பிள்ளைகள் மற்றும் தன் பராமரிப்பின் கீழ்க்காணப்படுபவர்கள் அனைவரின் நலனுக்கடுத்த காரியங்களைக் கவனிப்பதில் மிகவும் ஜாக்கிரதைக்கொள்ள வேண்டும் - கணவன் இவர்களுடைய பூமிக்குரிய தேவைகளைச் சந்திப்பது மாத்திரமல்லாமல், இவர்களுடைய மேலான நன்மைகளுக்கடுத்த காரியங்கள், மனதிற்கடுத்த காரியங்கள், ஒழுக்கத்திற்கடுத்த காரியங்கள், ஆவிக்குரிய காரியங்களுக்கடுத்த காரியங்கள் தொடர்புடைய விஷயத்தில் அதிகளவிலான பொறுப்புத் தனக்கு இருக்கின்றது என்றும்

உணர்ந்துகொள்ள வேண்டும். இது விஷயமான பொறுப்பினை அப்போஸ்தலன் கிறிஸ்துவின் சபையிலுள்ள ஒவ்வொரு மனுஷன் மற்றும் ஒவ்வொரு ஸ்திரீ மீது வைத்திருக்கின்றார் என்றும், சகோதரர் 'A' அவர்கள் இது விஷயத்தில் சகோதரர் 'B'-யையோ அல்லது சகோதரி 'B'-யையோ விமர்சிக்க வேண்டிய காரியமாகவோ அல்லது சகோதரர் 'B' அவர்களும், சகோதரி 'B'அவர்களும் இது விஷயத்தில் சகோதரர் 'A' அவர்களை விமர்சிக்க வேண்டிய காரியமாகவோ, அப்போஸ்தலன் இக்காரியத்தினை வைக்கவில்லை என்றும் நாம் நினைவில்கொள்வோமாக. இம்மாதிரியான விஷயங்களிலும் மற்றும் வேறே விஷயங்களிலும் ஒவ்வொருவனும் நின்றாலும், விழுந்தாலும் தன் எஜமானுக்கே கணக்கு ஒப்புவிக்க வேண்டியவனாய் இருக்கின்றான். நாம் அதிகமாய்க் கீழ்ப்படிவோமானால், நாம் அதிகமாயும் ஆசீர்வதிக்கப்படுவோம் என்பதும், குறைவாய்க் கீழ்ப்படிவோமானால், நம் வளர்ச்சியும் மெதுவாகவே இருக்கும் என்பதும்தான் திவ்விய விதியாக இருக்கின்றது மற்றும் இதை நாம் அறிந்துகொள்வது என்பது, நாம் இந்த யுகத்தினுடைய முடிவை நெருங்கிக்கொண்டிருக்கையிலும், நம் ஓட்டத்தினை நிறைவேற்றி முடிக்கையிலும் மிகவும் முக்கியமானதாகும்.

---

R3826

## ஸ்திரீயானவளின் சரி மற்றும் தவறு

கிட்டத்தட்ட எல்லாக் கேள்விகளுக்குமே இரண்டு பக்கங்கள் காணப்படும் மற்றும் ஸ்திரீ தொடர்பான கேள்வியும் இதற்கு விதிவிலக்கல்ல. ஸ்திரீகளுக்கென்று உரிமைகள் இருக்கின்றது மற்றும் புருஷர்களுக்கென்று உரிமைகள் இருக்கின்றது; மேலும் ஒவ்வொரு சிருஷ்டியும், அதன் அறிவிற்கேற்ப சில உரிமைகளைப் பெற்றிருக்கின்றது மற்றும் அது மதிக்கப்படுவது நீதியாய் இருக்கும். எனினும் தற்போதைய சூழ்நிலைகள் மற்றும் நிலைமைகளின் கீழ் வெகு சில புருஷர்களும், ஸ்திரீகளும் அல்லது விலங்குகளும் தங்களுக்கான உரிமைகளைப் பெற்றுக்கொண்டவர்களாக அல்லது பெற்றுக்கொள்ள முடிகிறவர்களாக இருக்கின்றனர் என்பதும் உண்மையே. மனிதன் சிருஷ்டிக்கப்பட்டதான ஆதி சாயலினை எந்தளவுக்கு ஒருவர் தக்கவைத்திருக்கின்றாரோ, அவ்வளவாய் அவர்கள் மற்றவர்களுக்கு அவர்களது உரிமைகளை அளிப்பதிலும் மற்றும் தங்கள் சொந்த உரிமைகளை உணர்ந்துகொள்வதிலும் நிச்சயம் பிரியப்படுகிறவர்களாய் இருப்பார்கள்.

ஆனால் அந்தோ பரிதாபம்! அனைவருமே அந்தப் பூரண சாயலிலிருந்து, சிருஷ்டிகருடைய அந்தப் பூரண ரூபத்திலிருந்து விழுந்துபோயுள்ளனர். ஆகையால் சந்ததியினுடைய ஒவ்வொரு அங்கத்தினனிடமும் கொஞ்சம் சுயநலமும், மனதின் பல்வேறு நல்ல மற்றும் கெட்டத் தன்மைகளும், பல்வேறு அளவுகளில் காணப்படுவதினால், இனம் முழுவதுமே தெளிந்த மனமில்லாதவர்கள் என்றும், சீரான நிலைமையில் இல்லாதவர்கள் என்றும், அநீதியானவர்களாய்க் காணப்படுகின்றார்கள் என்றும் கூறப்படுகின்றது மற்றும் உலகத்தின் ஆவியானது பொதுவாகவே நீதி, நியாயத்திற்கு முரண்படுகின்றதாகவும் இருக்கின்றது என்று அப்போஸ்தலன் தெரிவிக்கின்றார். கோபம், துர்க்குணம், பகைமை, பொறாமை, சண்டை, பெருமை, பேராசை முதலானவைகள் தெளிவான பகுத்தறிவிற்கு இடர்பாடுகளாய்க் காணப்படுகின்றன. இவைகளைக் கூறுகின்றதான தேவனுடைய வார்த்தைகளானது, நாம் பரத்திலிருந்து வரும் ஞானத்தினையும், கர்த்தருடைய சிந்தையையும் நாடும்படிக்குப் புத்திகூறுகின்றதாய் இருக்கின்றது மற்றும் இது - நம்முடைய சுபாவ மனங்களும், மனவிருப்பங்களும், தன்னம்பிக்கைகளும் அழிக்கப்பட்டு, வேதாகமத்தில் நமக்குக் கொடுக்கப்பட்டுள்ளதான திவ்விய

நிலைப்பாடுகளுக்கு ஏற்ப நம்முடைய கண்ணோட்டங்கள் நெறிமுறைப்படுத்துவதன் மூலம் அடையப்பெறலாம் என்றும் புத்திகூறுகின்றதாய் இருக்கின்றது. ஆகையால் நாம் நாடிட வேண்டிய காரியமானது, ஒவ்வொரு விஷயத்திலும் சிந்தையில் உயர்வான கிறிஸ்தவ நிலைப்பாடேயாகும் மற்றும் கர்த்தருடைய பின்னடியார்கள் யாவராலும் கர்த்தருடைய சிந்தையானது, கர்த்தருடைய வார்த்தையானது, அந்தத் தரநிலையாக/நிலைப்பாடாக ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும்.

நாம் உலகத்தாரை நோக்கிப்பார்க்கையில், யாருமே நடைமுறையில் பார்க்கையில் தனது உரிமைகளைப் பெற்றிருப்பதில்லை - நிச்சயமாகவே யாரும் தனது உரிமைகள், தனக்கு உரியது என்று கருதுபவைகளைப் பெற்றுக்கொள்கிறதில்லை - தேவனுடைய தயவினாலும், இரத்தத்தினாலும் மூழ்க்கடிக்கப்பட்டிருக்கும் மிகவும் தாழ்மையான மனம் கொண்டிருப்பவர்கள், எல்லாவிதத்திலும் தங்கள் தகுதிக்கும் மிக அதிகமாகவே தாங்கள் கர்த்தரிடத்திலிருந்து ஏற்கெனவே பெற்றுக்கொண்டுள்ளதாகவும், தொடர்ந்து பெற்றுக்கொண்டிருப்பதாகவும் கூறிடுவதற்கு ஆயத்தமாய் இருக்கின்றனர். இவர்கள் நன்றியுணர்விலும் மற்றும் இதற்கேற்ப மகிழ்ச்சியாயும் காணப்படுகின்றார்கள். நன்றியற்றவர்களாகவும், மகிழ்ச்சியற்றவர்களாகவும் காணப்படுகின்ற மற்றவர்களோ, மனுக்குலத்தின் உலக ஜனங்களாகக் காணப்படுகின்றனர் - இவர்களில் பெரும்பாலானவர்கள், கிறிஸ்துவின் நாமத்தைத் தரித்துக்கொண்டிருப்பவர்களாகக் காணப்படுகின்றனர்.

தம்முடைய பின்னடியார்கள் தங்களது பூமிக்குரிய உரிமைகள் அனைத்தையும் முழுமையாய் "பலிச் செலுத்தும்படி" கர்த்தர் வலியுறுத்தி மற்றும் அது தமக்கும் மற்றும் தாம் முன்வைக்கும் பிரமாணங்களுக்குமான அவர்களது அர்ப்பணிப்புக்குறித்த சாட்சியாக தம்முடைய பார்வைக்குப் பிரியமாய்க் காணப்படும் என்று அவர்களுக்கு உறுதிப்படுத்தியும், அது அவர்களுக்குத் தற்கால ஜீவியத்திற்கு நலம் பயக்கின்றதாகவும், அவர்களுக்கு நித்தியமும் நன்மைப் பயக்கின்றதாகவும் காணப்படும் என்று உறுதிப்படுத்தியும் காணப்படுகின்றார். ஆகையால் கிறிஸ்தவ ஆண்களும், பெண்களும், சுபாவ புருஷர்கள் மற்றும் ஸ்திரீகள் என்ற தங்களது உரிமைகளானது தங்களால் கவனிக்கப்படுவதில்லை என்றும், அதற்காக உரிமைப்பாராட்டப்படுவதில்லை என்றும், அதற்காக நாடப்படுவதில்லை என்றும், அதற்காகப் போராடப்படுவதில்லை என்றும், இதற்குப் பதிலாக புதிய நம்பிக்கைகளும், புதிய குறிக்கோள்களுமுள்ள புதிய சுபாவத்தினை அவரிடமிருந்து பெற்றுக்கொள்வார்கள் என்றுமுள்ள ஓர் உடன்படிக்கையினைப் பண்ணியுள்ளனர்; இந்தப் புதிய சுபாவத்தின் உரிமைகளும், கனங்களும், சிலாக்கியங்களும், மேன்மைகளும் - முழுமையாக முதலாம் உயிர்த்தெழுதலில் வரும்போது, நிறைவானது வருகையில், குறைவானது ஒழிந்துபோகிறபோது, அவர்கள் தங்கள் கர்த்தரோடுகூட மகிமைப்படும்போது அவர்களுக்குக் கடந்துவருகின்றதாய் இருக்கும்.

## எங்கள் அனுதாபங்களும், ஆலோசனைகளும்

இந்தப் பத்திரிக்கையின் இதழாசிரியர் போன்று வெகு சிலரே, புதுச்சிருஷ்டிகள் மற்றவர்களுடன் தொடர்புக்குள் வருகையில் எதிர்க்கொள்ளும் சிரமங்கள் சிலவற்றை அறிந்துகொள்ளும் நல்வாய்ப்புடையவர்களாகக் காணப்படுகின்றனர். கர்த்தருடைய அர்ப்பணிக்கப்பட்டவர்களுக்கு வரும் ஜீவியத்தின் கடுமையான சோதனைகள் மற்றும் பிரச்சனைகள் எப்படி நன்கு எதிர்க்கொள்ளப்படுவது குறித்து ஆலோசனைகளைக் கேட்டும், சூழ்நிலைகளை விவரித்தும் எழுதப்படும் கடிதங்களைத் தொடர்ந்து பெற்றுக்கொள்கின்றவராக இதழாசிரியர் இருக்கின்றார். மற்றவர்களைக் காட்டிலும் அவருக்கு அர்ப்பணிக்கப்பட்டவர்களுடன் அதிகமான தொடர்பு காணப்படுவதினால், அநேகமாக தவிக்கும் சிருஷ்டியாகிய சுபாவ மனுஷர்களுக்காக மாத்திரமல்லாமல், புதுச்சிருஷ்டிகளுக்காகவும்

அனுதாபம் கொள்வதற்குரிய நல்வாய்ப்புப் பெற்றவராய் இருக்கின்றார். ஆகையால் புருஷர்களுக்கு அவர்களது மனைவிகளினால் அநியாயம் எப்போதும் செய்யப்படுகிறதில்லை என்றாலும், மனைவிகளுக்கு, அவர்களது புருஷர்களால் அடிக்கடி அநியாயம் செய்யப்படுவதைக்குறித்து அவர் நன்கு அறிந்தவராகவே இருக்கின்றார். இப்படியாக அநியாயமாய் நடத்தப்படுகிறவர்களுக்கு, வேதவாக்கியங்களின் பாஷையிலான அவரது பொதுவான அறிவுரை என்னவெனில் . . . "இப்படியிருக்க சகோதரரே கர்த்தர் வருமளவும் - அவரது நீதியின் இராஜ்யம் ஸ்தாபிக்கப்பட்டு, அவரது மகிமையான சாயலுக்கு ஒத்த சாயலுக்கு மாறுவது சமீபித்திருப்பதினால் - நீடிய பொறுமையாயிருங்கள்" என்பதே ஆகும் (யாக்கோபு 5:7).

சாந்தமாய்க் காணப்பட்டும், நட்புமுறையில் அறிவுரைக்கூறியும், அன்பாய்ப் பொறுமையாய் இருந்த பிற்பாடு, நிலவரமானது தாங்கமுடிகிறதாய் இருக்கும் பட்சத்தில், கர்த்தரிடம் ஞானமும், தேவையான கிருபையும் கேட்டுக்கொண்டு, அதைச் சகித்துக்கொள்ளுங்கள். இருளினின்று தம்முடைய ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு வரவழைத்தவருடைய புண்ணியங்களை அறிவித்திட நாடிடுங்கள்; நம்மிடத்தில் ஐசுவரியமாய் வாசம்செய்யும் கிறிஸ்துவினுடைய ஆவியின் வல்லமையினை, அன்பின், தயவின், பொறுமையின், நீடிய பொறுமையின் மற்றும் சகிப்புத்தன்மையின் வாயிலாக உங்களது துணையாளனுக்கு வெளிப்படுத்திட நாடிடுங்கள்; முடிந்த மட்டும் மற்றவர்களின் வார்த்தை மற்றும் செயல்களினால் அதிருப்திக்கொள்ளாமல், பாரம் சுமக்கும் மாபெரியவராகிய கர்த்தரிடம் போவதற்கு அதிகமதிகமாய்க் கற்றுக்கொள்ளுங்கள். "ஆகையால் நீங்கள் இளைப்புள்ளவர்களாய் உங்கள் ஆத்துமாக்களில் சோர்ந்துபோகாதபடிக்கு, தமக்கு விரோதமாய்ப் பாவிகளால் செய்யப்பட்ட இவ்விதமான விபரீதங்களைச் சகித்த அவரையே நினைத்துக்கொள்ளுங்கள்" (எபிரெயர் 12:3); காலம் குறைவாய்க் காணப்படுகின்றது என்று நினைவில்கொண்டு, தீமைக்குத் தீமைச் செய்யாமலும், உதாசனத்துக்கு உதாசனத்தைச் சரிக்கட்டாமலும், தூற்றுதலுக்குப் பதில் பழித்தூற்றாமலும், பட்டயத்திற்குப் பட்டயம் எடுக்காமலும் இருக்கும்படிக்குக் கூறும் வேதவாக்கியங்களின் புத்திமதிக்குச் செவிக்கொடுத்து, ஜீவியத்தின் பரீட்சைகளின் போது கர்த்தர் பொறுப்பேற்றிருக்கின்றார் என்றும், ஜீவியத்தின் பரீட்சைகளானது நம் ஒவ்வொருவருக்கும் ஆசீர்வாதத்தினை - அதாவது இதைப் பெற்றுக்கொள்வதற்குரிய சரியான இருதய நிலைமையில் நாம் காணப்படும் பட்சத்தில், ஆசீர்வாதத்தினை நமக்குக் கொண்டுவருகின்றதாய் இருக்கும் என்றுமுள்ள உணர்ந்துகொள்ளுதலில், ஜீவியத்தின் பரீட்சைகளில் நம்மை முழுமையாய்க் கீழ்ப்படுத்தி ஒப்புக்கொடுக்க நாடுகிறவர்களாக நாம் இருக்க வேண்டும்.

"இவ்வுலகத்தின் அதிபதியின்கீழ்த்" தனக்கான உரிமைகளை விழுந்துபோன மற்றும் குருடாக்கப்பட்டுள்ள தன்னுடைய அயலார்களிடம் நாடிடும் மற்றும் எதிர்ப்பார்த்திடும் ஒவ்வொரு தேவபிள்ளையும், இது விஷயத்தில் நிச்சயமாகவே இருளிலே நடக்கிறவனாகவே இருப்பான். கர்த்தருடைய ஜனங்கள் "அவரால் கற்பிக்கப்படுகையில்," தங்களது உரிமைகளுக்காக நாடவோ, அவைகளை எதிர்ப்பார்க்கவோ கூடாது என்றும், அநீதி செய்கிறவர்களிடத்தில் பொறுமையோடும், நீடிய பொறுமையோடும் மற்றும் இரக்கத்தோடும் காணப்படுவதற்கும் சீக்கிரமாய்க் கற்றுக்கொள்வார்கள். தாங்கள் கொடுமைப்படுத்தப்படாத மற்றப் பாதைகளை நாடியும் மற்றும் தங்களைத் துன்புறுத்தி மற்றும் அநியாயமாய் நடத்துபவர்களிடமிருந்து தங்கள் சூழ்நிலைகளுக்கேற்ப ஓடிப்போகிறதுமாய் இருக்க, அவர்கள் தங்கள் சத்துருக்களை அன்புகூர்ந்திடுவதற்குக் கற்றுக்கொள்வது மாத்திரமல்லாமல், தங்களால் முடிந்த நன்மை யாவற்றையும் அவர்களுக்குச் செய்திடவும் மற்றும் உலகத்தாரிடம் காணப்படுகின்றதான பெரும்பான்மையான சுயநலமும், கீழ்த்தரமான செய்கைகளும் மற்றும்

கொடுமைகளும் விழுகையின் விளைவான பாவம் மற்றும் அறியாமையின் விளைவுகளேயாகும் என்று அனுதாபத்தோடுகூட உணர்ந்துகொள்வதற்கும் கற்றுக்கொள்வார்கள். இதற்கேற்ப அவர்கள் "உங்களுடைய இராஜ்யம் வருவதாக, பூமியிலே உமது சித்தம் செய்யப்படுவதாக" என்று ஏங்குபவர்களாகவும், ஜெபிப்பவர்களாகவும் காணப்படுவார்கள் மற்றும் இப்படியாக அவர்களது தற்காலத்துச் சோதனைகளும், கஷ்டங்களும், வரவிருக்கின்ற ஆசீர்வாதங்கள் மீது ஆழமான ஆர்வத்தை ஏற்படுத்துகின்றதாயிருக்கும் மற்றும் அவர்கள் தங்கள் அழைப்பையும், தெரிந்துகொள்ளுதலையும் உறுதிப்படுத்திக்கொள்வதற்கும், மிக அதிகமான நித்திய கனமகிமையை அடைவதற்கும் உதவுகின்றதாயிருக்கும்.

## சபையில் ஸ்திரீகள் செயல்படும் எல்லை

சரி எது, தவறு எது என்பது குறித்துக் குரல் எழுப்புவதில் புருஷர்களும், ஸ்திரீகளும் அதிகமதிகம் ஆர்வம் காட்டிடும் இக்காலக்கட்டத்தில் மற்றும் சுதந்தரத்திற்கான ஒவ்வொரு கட்டுப்பாட்டிற்கும் எதிர்ப்புத்தெரிவிக்கப்படுகின்ற இக்காலக்கட்டத்தில், இது விஷயத்தில் கர்த்தருக்கும், அவரது வார்த்தைகளுக்கும் நேர்மையாய் இருப்பவர் தவறாய்ப் புரிந்துகொள்ளப்படுவதற்கு - அதாவது சுதந்தரத்திற்கும், உரிமைகளுக்கும் எதிர்ப்பவராகவும், தவறுகளை ஆதரிப்பவராகவும் புரிந்துகொள்ளப்படுவதற்கு மிகுந்த அபாயம் காணப்படுகின்றது. இப்படியாக பொது ஸ்தானங்களில் காணப்படுகின்றதான தேவனுடைய ஊழியக்காரனின் நேர்மைக்கான பரீட்சையானது அவன்மேல் திணிக்கப்படுகின்றது மற்றும் "உக்கிராணக்காரன் உண்மையுள்ளவனென்று காணப்படுவது அவசியமாம்." இம்மாதிரியான ஸ்தானத்தில்தான் இப்பத்திரிக்கையின் இதழாசிரியர்கூடக் காணப்படுகின்றார் மற்றும் இவரும் ஆண்டவருக்கும், அவரது வார்த்தைகளுக்கும் முழுமையாய் நேர்மையுடன் காணப்பட விரும்புகின்றார். இப்படிச் செய்வதினால் இவர் ஸ்திரீகளுக்கு எதிரானவர் என்றும், இப்பாலினரை அவமதிப்போர் மற்றும் இழிவுப்படுத்துவோர் பக்கத்தில் காணப்படுபவர் என்றும் சிலரால் கருதப்படுகிறதற்கு ஏதுவாயிற்று. இது மிகவும் உண்மையற்றதும் மற்றும் எல்லா விதத்திலும் அநியாயமானதுமாகும்.

உண்மையுள்ள இருதயமுடைய மற்றும் உயர் சிந்தையுடைய ஒவ்வொரு மனுஷனும், எதிர்ப்பாலினரை, அதுவும் உண்மையான பெண்மைக்குரிய நற்பண்புகளுடன், தாலந்துகளும், வரங்களும் மற்றும் பரந்த மனப்பான்மையும், திறமைகளும் விசேஷமாய்க் காணப்படும் பட்சத்தில், நிச்சயமாகவே உயர்வாய் மதிக்கிறவனாய் இருப்பான். இம்மாதிரியான நிலைமைகளில் உயர்பண்புள்ள மனுஷனானவன், கிறிஸ்துவுக்குள்ளான அச்சகோதரிகளைச் சபையில் மிகவும் முதன்மையான நிலைக்குக் கொண்டுவந்திடுவதற்கு முற்படுவது அவனது இயல்பாய் இருக்கும். மேலும் இதற்கு ஏதேனும் மறுப்புத் தெரிவிக்கப்படுகையில், இது - கர்த்தருடைய வார்த்தையிலிருந்து (இதுவிஷயமான) அவரது சத்தம் தெளிவாய்க் கேட்கப்படுவதற்கு முன்பு வரையிலும், மறுப்புத் தெரிவித்தவர்கள் சார்பில் குறுகின மனப்பான்மை காணப்படுகின்றதெனச் சந்தேகங்களானது புருஷர்கள் மற்றும் ஸ்திரீகள் இருவரின் மத்தியில் எழுப்புகின்றதாய் இருக்கும். கர்த்தருடைய சத்தம் கேட்கையில், உண்மையான ஆடுகள் அனைத்தும், மாபெரும் மேய்ப்பனின் சத்தத்திற்குச் செவிக்கொடுத்து, இவ்விஷயம் தொடர்பான தங்களது சொந்தச் சித்தங்கள் மற்றும் எண்ணங்களைத் துறந்து, அவரது செய்தியை ஏற்றுக்கொள்கின்றது; "என் ஆடுகள் என் சத்தத்திற்குச் செவிக்கொடுத்து, எனக்குப் பின்செல்லுகின்றது; அந்நியருடைய சத்தத்தை அறியாதபடியினால் அவைகள் அந்நியனுக்குப் பின் செல்கிறதில்லை."

இந்த ஒரு நிலைப்பாட்டினைத்தான் இதழாசிரியர் மில்லேனியேல் டாண், வேதாகம பாடங்களின் ஆறாம் தொகுதியில் எடுத்துக்கொள்கிறதற்குக் கடமைப்பட்டுக் காணப்பட்டார். பொறுமையாயும் மற்றும்

குறிப்பாயும் அவர் அதில் தனது சொந்தக் கருத்துக்களை முன்வைத்திடாமல், மாறாக அவர் அதில் முன்வைத்துள்ளவைகளானது, அநேக விதங்களில் அவரது சொந்த நிலைப்பாட்டிற்கு நேர்மாறானவைகளாகவே காணப்படுகின்றது. இந்த விஷயத்தில் அவர் தனது சித்தத்தினைக் கர்த்தருடைய சித்தத்திற்குக் கீழ்ப்படுத்தி ஒப்புக்கொடுத்து, தேவனுடைய பிரியமான குமாரனால், அவரது விசேஷமாய் நியமிக்கப்பட்ட அப்போஸ்தலர்கள் வாயிலாகச் சபைக்குக் கொடுத்திட்டதான செய்தியினை, அவர் கர்த்தருடைய வாய்க்கருவியெனத் திரும்பக்கூற மாத்திரம் செய்தார். "இவர் என்னுடைய நேசகுமாரன், இவருக்குச் செவிகொடுங்கள்" என்று தம்முடைய குமாரன் குறித்தப் பிதாவின் செய்தியைக்கேட்ட இதழாசிரியர், "பூலோகத்திலே நீங்கள் எவைகளைக் கட்டுவீர்களோ அவைகள் பரலோகத்திலும் கட்டப்பட்டிருக்கும்; பூலோகத்திலே நீங்கள் எவைகளைக் கட்டவிழ்ப்பீர்களோ அவைகள் பரலோகத்திலும் கட்டவிழ்க்கப்பட்டிருக்கும்" என்று தம்முடைய அப்போஸ்தலர்கள் குறித்துக் குமாரன் கூறிடும், குமாரனின் சத்தத்திற்கும் இதழாசிரியர் செவிக்கொடுத்தார் (மத்தேயு 18:18). வேறு வார்த்தைகளில் கூறவேண்டுமெனில், அப்போஸ்தலர்களின் போதனைகளானது, தேவனுடைய குமாரனால் நேரிடையாய் ஏவப்பட்டுப் பேசப்பட்ட வார்த்தைகளாக - பிதாவின் வார்த்தைகளாக ஏற்றுக்கொள்ளப்படும்படிக்கு சபைக்குக் கற்பிக்கப்பட்டுள்ளது. ஆகையால் சபையில் ஸ்திரீகளினுடைய ஸ்தானம் குறித்து அப்போஸ்தலன் நம்மிடம் பேசுகையில், அவரது வார்த்தைகளை எதிர்த்து வாதாடுவதற்கோ, அதைக்குறித்து வாக்குவாதம்பண்ணிடுவதற்கோ, அதைப் புறக்கணிப்பதற்கோ நமக்கு அனுமதியில்லை. இப்படிச் செய்கிற எவரும் ஆவியினுடைய சத்தத்தைப் புறக்கணிக்கிறவர்களாகக் காணப்பட்டு, ஏதோ விதத்தில் நிச்சயமாய்ப் பின்விளைவை எதிர்க்கொள்பவர்களாய்க் காணப்படுவார்கள்.

இது விஷயத்தில் எங்களுடைய எந்தச் சொந்தப் போதனையையும் நாங்கள் முன்வைக்கவில்லை. நாங்கள் கர்த்தருடைய அப்போஸ்தலர்கள் வாயிலாக, அவரது சத்தத்தைக் கேட்டுள்ளபடியால், கிறிஸ்துவின் சரீரமாகிய சபையிலுள்ள சகோதரிகளின் ஸ்தானம் தொடர்பாக அவர்கள் மிகவும் தெளிவாய்ச் சுட்டிக்காட்டியுள்ளவைகளை நாங்கள் கவனத்திற்குக் கொண்டுவர மாத்திரமே செய்துள்ளோம். பொதுவில் செய்யப்படும் ஊழியங்களும், போதிக்கும் ஊழியங்களும் சகோதரிகளுக்கு அருளப்படாமல், மாறாக அவைகள் குறிப்பாய் அவர்களுக்குத் தடுத்துவைக்கப்பட்டுள்ளது என்று சுட்டிக்காண்பிக்கையில், கிறிஸ்துவின் சரீரத்தில் சகோதரிகளின் ஊழியங்களானது முக்கியமில்லாத ஒன்று என்று எந்த விதத்திலும் நாங்கள் சொல்லிடவில்லை. மாறாக அவர்கள் சபையில் மிகவும் முதன்மையான இடத்தைப் பெற்றிருக்கின்றனர் என்றும், நன்மைக்கு அல்லது தீமைக்கு ஏதுவான மிகவும் பரந்த செல்வாக்கினை - கணக்கிடமுடியாத செல்வாக்கினைத் திறமையாகப் பயன்படுத்த முடிகிறவர்களாக இருக்கின்றனர் என்றும், அந்தச் செல்வாக்கானது திவ்விய வார்த்தைகளுக்கு இசைவாகவே ஒழிய, முரணாக பயன்படுத்தப்படாதபடிக்கு, அந்தச் செல்வாக்கிற்குப் பொறுப்பாளிகளாகக் காணப்படுவது, அவர்களது உக்கிராணத்துவத்தின் ஒரு பாகமாக இருக்கின்றது என்றும் நாங்கள் எண்ணுகின்றோம். திவ்விய ஒழுங்கில் சபையிலுள்ள ஆண்கள் தலையாகிய கர்த்தருக்கு அடையாளமாய்க் காணப்படுகின்றனர் மற்றும் ஸ்திரீகள் மணவாட்டியாகிய சபைக்கு அடையாளமாய்க் காணப்படுகின்றனர்.

இதுவே உண்மையுள்ள கீழ்ப்படிதலுக்கான வழிமுறையாகும்; மற்றும் "பலியைப்பார்க்கிலும் கீழ்ப்படிதலே" - அதாவது கீழ்ப்படியாமல் பொது ஊழியங்களில் கடுமையாய் உழைப்பதைப் பார்க்கிலும் கீழ்ப்படிதலே - தேவனுடைய பார்வையில் மேன்மையாய்க் காணப்பட்டது என்ற வேதவாக்கியத்தையும் நாம் நினைவுகூருகின்றோம். கர்த்தருடைய அர்ப்பணிக்கப்பட்ட ஜனங்களாகிய சகோதரர்களும்,

சகோதரிகளும், யாவரும் இது விஷயமாக டாண் தொகுதி 6-இல் இடம்பெறும் ஐந்தாம் அத்தியாயத்தை மறுபடியுமாக மிக ஜாக்கிரதையாக வாசிப்பார்கள் என்று நாம் நம்புகின்றோம். இவ்விஷயமானது இந்த அறுவடையின் காலக்கட்டத்தில், அவரது அர்ப்பணிக்கப்பட்டவர்களுக்குப் பரீட்சையின் ஒரு பாகமாகக் காணப்படத்தக்கதாக கர்த்தர் சித்தம் கொண்டுள்ளார் என்று நாங்கள் நம்புகின்றோம். இவ்விஷயத்தில் நமது சொந்த எண்ணங்களும், இது விஷயமாக மற்றவர்களிடத்திலான நம்முடைய வார்த்தைகளும், செல்வாக்கும், நம்மால் முடிந்தமட்டும் கர்த்தருடைய சிந்தையின்படியாக, அவரது வார்த்தைகள் போதிப்பவைகளுக்கு முழு இசைவாகக் காணப்படும்படிக்குத் தீர்மானித்துக்கொள்வோமாக. "இந்த வார்த்தையின்படியே சொல்லாவிட்டால், அவர்களுக்கு விடியற்காலத்து வெளிச்சமில்லை" (ஏசாயா 8:20).

## குழப்பமான போலிவாதங்களைத் தெளிவாக்குதல்

பரப்பப்படுகின்ற வஞ்சகமான போலிவாதங்கள் சிலவற்றை நாம் இங்குத் தெளிவுப்படுத்திடுவது தகுதியாய் இருக்கும் - இப்படியாக இது விஷயத்தில் கர்த்தருடைய உண்மையான ஜனங்கள் சரியான நிலைப்பாட்டினைப் பெற்றுக்கொள்ள நாம் உதவிட முடியும். இந்தப் போலிவாதங்களின் ஓர் அம்சம் என்னவெனில், கொரிந்துவிலுள்ள சபைக்கு அப்போஸ்தலனால் எழுதப்பட்டவைகளானது, அந்தத் தலைமை நகரத்தின் ஸ்திரீகளினுடைய தரக்குறைவின் கண்ணோட்டத்தில் எழுதப்பட்டது என்றும், அவர் மற்றச் சபைகளுக்கு இதே வார்த்தைகளைப் பயன்படுத்தியிருக்க மாட்டார் என்றும், சபைக்கடுத்தப் பொது ஊழியங்களில் இதேபோலச் சகோதரிகளுக்கான உரிமைகளின் கட்டுப்பாட்டினை மற்றச் சபைகளுக்குச் சொல்லியிருக்கமாட்டார் என்றும், இதனால் அவரது வார்த்தைகளானது, தற்காலத்திற்குப் பொருந்துகிறதில்லை என்றுமாகும். இது போலி வாதமாகும், தவறான நியாயமாகும். கொரிந்தியர்களுக்கு எழுதப்பட்ட நிருபங்களானது, அந்நாட்களிலுள்ள ஒழுக்கமில்லாத ஆண்களுக்கோ, பெண்களுக்கோ என்று எழுதப்படாமல், ஆண்களும், பெண்களுமாகக் காணப்பட்ட கொரிந்து பட்டணத்தின் பரிசுத்தவான்களுக்கு எழுதப்பட்டது; மேலும் கொரிந்துவிலுள்ள ஒரு பரிசுத்தவான் என்பவர், எந்த ஓர் இடத்திலும் காணப்படும் ஒரு பரிசுத்தவான் போன்றவரேயாவார்; அதாவது பாவத்திலிருந்து நீதியினிடத்திற்குத் திரும்பி, இயேசுவைத் தனது சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டு, அவருக்கு அனைத்தையும் முழுமையாய் அர்ப்பணம்பண்ணினவர் என்பவர்தான் பரிசுத்தவான்.

ஸ்திரீகளுக்கான செயல்பாடு எல்லை குறித்ததான அப்போஸ்தலனின் கட்டுப்பாடானது, மறுபக்க தரப்பினராலேயே ஏற்பட்டது என்பதாகத் தெரிகின்றது - அதாவது கொரிந்து பட்டணத்தில் இருந்த சபையார், மற்றச் சபையாரைக் காட்டிலும் தங்களை உயர்வானவர்களாக எண்ணி, மற்றச் சபைகள் சிந்தித்துக்கூடப் பார்க்காத உரிமைகளை இவர்கள் தங்கள் ஸ்திரீகளுக்குப் பெற்றுக்கொடுக்க விரும்பிட்டார்கள். ஆகையால்தான் பவுல் அவர்களைக் கடிந்துகொண்டு கேட்டதாவது, "வேதவசனம் உங்களிடத்திலிருந்தா புறப்பட்டது? [நீங்களாக அதை உண்டாக்கினீர்கள்? கொரிந்து பட்டணத்து கிறிஸ்தவர்களைச் சுவிசேஷத்தின் விளக்கமளிப்பவர்கள் என்று நாங்கள் பார்க்க வேண்டுமா?] அது உங்களிடத்துக்கு மாத்திரமா வந்தது? [மற்றவர்கள் பெற்றுக்கொண்டது போல்தானே நீங்களும் சுவிசேஷத்தினைப் பெற்றுக்கொண்டீர்கள்? அதைத் தோற்றுவித்தவர்கள் நீங்களல்ல என்று ஒத்துக்கொள்கின்றீர்களா? அதன் ஒழுங்குகளில், கூடச் சேர்ப்பதற்கோ அல்லது அதை மாற்றிடுவதற்கோ உங்களுக்கு எந்த அதிகாரமும் இல்லை. இவ்விஷயத்தினை நீங்கள் அதன் சரியான வெளிச்சத்தில் பார்க்கையில் தேவனுடைய கிருபையைப் பற்றின செய்தியினை, அவர் அனுப்பின வழியில் நீங்கள் பெற்றுக்கொள்ள வேண்டும் மற்றும் உங்கள் நடுவில் காணப்படுகின்றதான முன்னுரிமைப் பற்றி நீங்கள் ஊகித்திடும் சில போதனைகளுக்குப் பொருந்தத்தக்கதாக அச்செய்தியினைத் திருத்தம் செய்யும் எண்ணம் ஏதும் இல்லாமல், அதற்குக் கீழ்ப்படிய வேண்டும் என்று நீங்கள் ஒத்துக்கொள்வீர்கள்] (1

கொரிந்தியர் 14:36). "பரிசுத்தவான்களுக்கு ஒருவிசை ஒப்புக்கொடுக்கப்பட்டதான விசுவாசமானது" மாறுபடும் தன்மையுடையதல்ல, மாற்ற முடியாத ஒன்றாகும். ஆகையாலே "ஆகிலும் நாம் எதுவரையில் தேறியிருக்கிறோமோ, அதுமுதல் ஒரே ஒழுங்காய் நடந்துகொண்டு, ஒரே சிந்தையாயிருப்போமாக" (பிலிப்பியர் 3:16) என்று அப்போஸ்தலன் வலியுறுத்துகின்றார்.

வேதவாக்கியங்களின் போதனைகளை அவமாக்கிடும் மற்றுமொரு போலி வாதமானது வேதவசனத்தை வஞ்சனையாய்க் கையாளுவதன் மூலம் அதன் நோக்கத்தை நிறைவேற்ற நாடுகின்றது. இப்போலி வாதமானது கொலோசெயர் 3:18-ஆம் வசனத்தை எடுத்துக்கொண்டு அதற்கே உரிய அர்த்தத்திலிருந்து மாறுபட்ட ஓர் அர்த்தத்தைக் கொடுக்கத்தக்கதாகத் திரித்துவிடுகின்றது; பின்னர் இந்தத் திரித்த கோணத்தை இப்பாடம் தொடர்பான மற்ற அனைத்து வேதவாக்கியங்களுடன் சம்பந்தப்படுத்தி இணைக்கின்றது, "Wives, submit yourselves unto your own husbands, as it is fit in the Lord"; "திருமணமான பெண்களே, உங்கள் கணவருக்கு நீங்கள் பணிந்திருங்கள். ஆண்டவரைச் சார்ந்து வாழ்வோருக்கு இதுவே தகும்" (கொலோசெயர் 3:18 KJV மற்றும் திருவிவிலியம்). இவ்வார்த்தைகளுக்கான அர்த்தம் அனைவருக்கும் புரிகின்ற ஒன்றாய் இருக்கும்; அவைகள் மிகத்தெளிவாகத் தெரிவிக்கப்பட்டுள்ளன. கிறிஸ்தவ மனைவியானவளுக்குக் கர்த்தரிடம் இருக்கும் உறவானது, கிறிஸ்துவினால் உண்டான சுயாதீன நிலைமையானது - அவளது கணவன் கிறிஸ்துவுக்குள்ளானவனாக அல்லது கிறிஸ்துவுக்குள் இல்லாதவனாக இருப்பினும் கணவனிடம் இருக்கும் அவளது உறவினை இரத்துச் செய்கிறது இல்லையென்றும், அவள் இன்னமும் அவளது கணவனுக்கு, மனைவிக்குரிய கடமையினை ஆற்ற வேண்டிய கடமையில் இருக்கின்றாள் என்றும், திவ்விய ஒழுங்கில் மனைவி குடும்பத்தின் தலையாக இல்லையென்றும், (ஆரோக்கியத்தை பலமாய் உட்படுத்தும் காரியங்கள் அனைத்திலும் - மனசாட்சி சம்பந்தப்படாத காரியங்கள் அனைத்திலும்) கீழ்ப்பட்டிருப்பது/கீழ்ப்படிவது மனைவியின் கடமையென்றும் அவ்வேதவசனமானது கிறிஸ்தவ மனைவிக்குத் தெரிவிக்கின்றதாய் இருக்கின்றது.

இதைத் தகுதியான நடக்கையென்று அப்போஸ்தலன் சுட்டிக்காட்டுக்கின்றார் - இது சுபாவப்படியான மனுஷனுக்கு அல்லது ஸ்திரீக்குத் தகுதியான நடக்கையாய் இருக்குமென அப்போஸ்தலன் வேறொரு இடத்திலும் சுட்டிக்காட்டியிருக்கின்றார்; ஏனெனில் குடும்பத்தில் மனுஷனுடைய முதன்மை ஸ்தானமானது சிருஷ்டிப்பின்போது நிறுவப்பட்டது என்றும், மனுஷன் ஸ்திரீக்கான துணையாக இருக்கும்படிக்குச் சிருஷ்டிக்கப்படாமல் ஸ்திரீயே மனுஷனுக்குத் துணைவியாக இருக்கும்படிக்குச் சிருஷ்டிக்கப்பட்டாள் என்றும், அப்போஸ்தலன் தெளிவாய்த் தெரிவிக்கின்றார். இதுவே இயற்கையில்/இயல்பில் தகுதியான நடக்கையாகக் காணப்படுகின்றது மற்றும் இதுவே தேவனுடைய குடும்பத்தினுடைய சுயாதீனத்திற்குள்ளாகக் கிறிஸ்தவ மனைவி ஏற்றுக்கொள்ளப்பட்ட பின்னரும் தொடர்ந்து அவளுக்கான தகுதியான நடக்கையாய் இருக்குமென்று அப்போஸ்தலன் இந்த வசனத்தில் தெரிவித்துள்ளார். வேறு வார்த்தைகளில் சொல்லவேண்டுமெனில் இருதயத்திலும், மனசாட்சியிலும் அவள் தேவனிடத்தில் ஓர் உறவைப் பெற்றிருக்கின்றாள் மற்றும் அவளது கணவனிடத்தில் அவள் மாம்சத்தில் ஓர் உறவைப் பெற்றிருக்கின்றாள்; மேலும் இவைகள் முரணானவைகளாகப் புரிந்துகொள்ளப்படக்கூடாது. மாறாக கர்த்தருடைய ஏற்பாட்டின்கீழ் முழு இசைவில் காணப்படுகின்றன.

இவ்வசனத்தினுடைய எளிமையான அறிக்கையினைப் போலி வாதத்தினால் எப்படி மாற்றமுடியும் என்று கேட்கின்றீர்களா? "தகும்/ஏற்கும்" எனும் வார்த்தையை ஏமாற்று வித்தைப்பண்ணி மனைவியானவளுக்குத் தகுதியானது மற்றும் ஏற்றது என்று அவளது மனம் அவளுக்குச் சொல்லுகிறபடி, தனது கணவனுக்கு அவள் கீழ்ப்பட்டிருக்க வேண்டுமென்று அப்போஸ்தலன் கூறுவதாகத் தெரிவிப்பதின்மூலம் போலி விவாதமானது முயற்சிக்கின்றது என்று நாங்கள் பதில் அளிக்கின்றோம்.

தங்கள் கணவன்மார்களுக்குக் கீழ்ப்பட்டிருப்பது தகுதியான காரியம் அல்லது ஏற்றகாரியம் என்று அநேகம் ஸ்திரீகளுக்கு அவர்களது மனங்களானது ஒருபோதும் சொல்லுகிறதில்லை என்பது நிச்சயமே; மேலும் இந்தத் தவறான போலிவாத வியாக்கியானத்தின்படி இந்த வசனத்தினுடைய அப்போஸ்தலனின் வார்த்தைகளின் சாரத்திற்கு மீறி அவரது கட்டளையை இவர்கள் கைக்கொண்டு வருகிறவர்களாக இருப்பார்கள். இந்தத் தவறான கருத்தினை மனதில் பதியவைத்த பிற்பாடு மற்றும் இது சிலரின் சுபாவ மனங்களின் கவனத்தைக் கவருகின்றதாக இருக்கையில், தேவ வசனத்தின் போதனைகளுக்கு உண்மையாய்/இசைவாய் இருப்பதுபோன்று காட்சியளித்துக்கொண்டு, தேவ வசனத்தின் போதனைகளைப் புரட்டிப்போடுவதற்கு நாடுகின்றதான இக்கோட்பாடானது அடுத்தப்படியாக, மனைவிக்குக் கணவனிடத்தில் இருக்கும் உறவைக்குறித்துக் குறிப்பிடும் மற்ற வேதவாக்கியங்கள் அனைத்தையும் கையாள முற்படுகின்றது - அதாவது தகுதியானது என்று கணவன் காண்கிற விதத்தில் இல்லாமல், மனைவியின் கணிப்பில் தகுதியானது என்று அவளால் பார்க்கப்படும் "தகுதி/ஏற்கும்" என்பதற்கு இசைவாகப் புரிந்துகொள்ளப்பட வேண்டும், அர்த்தம்கொள்ளப்பட வேண்டும் என்றுகூறி, இப்படி இந்த மற்ற வேதவாக்கியங்களைக் கையாள முற்படுகின்றது. ஆனால் இதற்கு நேர்மாறாக அப்போஸ்தலனோ, மனைவியானவள் கணவனுக்குக் கீழ்ப்பட்டிருப்பது என்பது, இயற்கையில் இருப்பதுபோல, "கர்த்தருக்குள்ளும்" ஏற்ற, தகுதியான காரியமாய் இருக்கின்றது என்று கூறுகின்றார்.

நாம் ஏற்கெனவே குறிப்பிட்டிருந்ததுபோன்று, சத்தியத்தில் இருக்கும் மற்றும் சத்தியத்தில் இல்லாமல் இருக்கும் அநேகம் ஸ்திரீகள் கரிசனையற்ற மற்றும் சிலசமயங்களில் மிருகத்தனமான கணவன்மார்களின் கரங்களில் மிகுதியான கஷ்டங்களை அனுபவிக்கின்றனர்; இவ்வுண்மையினை நாங்கள் அறிந்திருந்தாலும், பொதுவாகக் கீழ்ப்படிந்திருப்பதற்கு அறிவுரை கொடுப்பதைக்காட்டிலும் எங்கள் மாம்ச சுபாவத்தில் நாங்கள் வேறு எதுவும் சொல்வதில்லை. இது விஷயத்தில் நம்முடைய மாம்ச சுபாவத்தின்படியான மனங்களானது எதிர்ப்பதற்கும், உரிமைக்குரல் எழுப்புவதற்கும், உரிமைகளுக்காய்ப் போராடுதல் முதலானவைகளுக்கும் ஏவிடும். ஆனால் நம்முடைய சொந்தக் காரியங்களில், நலனுக்கடுத்தவைகள், உரிமைகள் விஷயங்களில் நம்முடைய சொந்த விருப்பங்கள் மற்றும் கணிப்புகளின்படி செயல்படக்கூடாது என்று நாங்கள் கற்றுக்கொண்டிருப்பதால், இவ்விஷயங்களில் தங்கள் தங்கள் இலட்சியங்களின்படி, தங்கள் தங்கள் போராடும் தன்மைகளின்படி செயல்படாதபடிக்கு ஜாக்கிரதையாய் இருக்கும்படிக்கு மற்றும் ஜெயங்கொண்டவர்களாகி, கிரீடத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டுமெனில், பரத்திலிருந்து பேசுகிறவருக்குச் செவிக்கொடுக்கும்படிக்கு மற்றவர்களுக்கு ஆலோசனை வழங்கிட நாங்கள் கற்றிருக்கின்றோம் மற்றும் அதிகமதிகமாய்க் கற்றுவருகின்றோம்.

பொதுவான உலகத்தின்மீது வந்துகொண்டிருக்கின்றதான பெரும்பான்மையான பிரச்சனையானது அதிருப்தியின் விளைவாகும்; மேலும் இந்தப் பிரச்சனைகளானது, ஒழுங்கின்மையின் கொந்தளிப்பானது, தங்கள் சித்தங்களைக் கர்த்தருக்கு ஒப்புக்கொடுத்து, பூமியில் அவரது நீதி, நியாயம் ஸ்தாபிக்கப்படுவதற்காய்க் காத்துக்கொண்டிருப்பவர்களைத் தவிர, மற்ற அனைவரையும் சீர்க்குலையப்பண்ணுவதுவரையிலும் வருடாவருடம் அதிகரித்துக்கொண்டுவருமென நாம் எதிர்ப்பார்க்கின்றோம். கர்த்தருடைய ஜனங்களிலுள்ள ஆண்களும், பெண்களும், தங்களில் ஆவியின் கனிகளும், கிருபைகளுமான - சாந்தம், தயவு, பொறுமை, நீடியபொறுமை, சகோதர சிநேகம், அன்பு - அனைத்தையும் வளர்த்திடும்படிக்கு நாம் வலியுறுத்துகின்றோம். இவர்களது இத்தகைய நடக்கையானது அன்பாய் ஏற்றுக்கொள்ளப்பட்டால், மதித்துணரப்பட்டால் அல்லது இதன் நிமித்தம் சோதனைகளும், எதிர்ப்புகளும், அநீதிகளும் பெருகினால் - எப்படி இருப்பினும் இவர்களுடைய இருதயங்களில் நிலவும் நீதியின் சமாதான கனிகளானது, தற்கால ஜீவியத்தில் எல்லாப் புத்திக்கும் மேலான தேவ சமாதானத்தினை இவர்களுக்குக்கொண்டு வந்துவிடும் மற்றும் இவர்களை இராஜ்யத்திற்கும், அதன்

மகிமைகள் மற்றும் கனங்களுக்கும் ஆயத்தமாக்கிடும் என்று வேத வசனங்களுக்கு இசைவாக நாங்கள் உறுதியளிக்கின்றோம். "தன்னைத்தான் உயர்த்துகிறவனெவனும் தாழ்த்தப்படுவான், தன்னைத்தான் தாழ்த்துகிறவன் உயர்த்தப்படுவான்" (லூக்கா 14:11); "அவர் அதிகமான கிருபையை அளிக்கிறாரே, ஆதலால் தேவன் பெருமையுள்ளவர்களுக்கு எதிர்த்து நிற்கிறார், தாழ்மையுள்ளவர்களுக்கோ கிருபை அளிக்கிறாரென்று சொல்லியிருக்கிறது" (யாக்கோபு 4:6).

---

R4190 [தெரிந்தெடுக்கப்பட்ட பத்திகள்]

## கர்த்தருக்குச் செய்த பொருத்தனைகளை நிறைவேற்று

அன்புக்குரிய சகோதரன் மற்றும் பாஸ்டர் அவர்களே:--

சபையில் இருபாலினருக்கிடையிலான தகுதியான நடத்தைக்கடுத்த காரியத்தைக்குறித்துச் சில காலங்களாகவே உங்களுக்கு எழுத வேண்டுமென்றிருந்தேன். கடந்த சில மாத காலங்களுக்குள் சில விஷயங்கள் என் கவனத்திற்கு வந்தபடியால், அத்தலைப்பை/பாடப்பொருளை உங்கள் கவனத்திற்கு நினைப்பூட்டுவது என்னுடைய கடமை என்று உணர்ந்தேன். என் கவனத்திற்கு வந்த அந்தக் குறிப்பிட்ட சம்பவங்களை உங்களுக்குத் தெளிவாகவும், முழுமையாகவும் என்னால் எழுத முடியும் என்றாலும், அப்படி எழுதுவதற்கான சுயாதீனம் எனக்கடுத்ததல்ல; ஆனால் எதிராளியானவன் அனைத்து நாடுகளிலும் இப்படியான விஷயத்தின் அடிப்படையில் கடுமையான தாக்குதல்களை ஏறெடுத்துக்கொண்டிருக்கின்றான் - அதாவது மாம்சத்தில் உறவினர்களாயிராத/ உடன்பிறக்காதவர்களா யிருக்கும் சகோதரர்கள் மற்றும் சகோதரிகளுக்கு இடையில் - கட்டிப்பிடிப்பது மற்றும் முத்தங்கள் கொடுப்பது மற்றும் அதிகப்படியான நேசமான வார்த்தைகளுள்ள கடிதங்கள் எழுதுவது முதலானவைகள் ஆவிக்குரிய பாசத்தின் தகுதியான வெளிப்படுத்தல்களாகவே இருக்கின்றன என்று [மாம்சத்திலும், ஆவியிலும் போதுமான அளவுக்கு வயதில் முதிர்ந்தவர்களாகிய] அருமையான சகோதரர்களில் சிலர் எண்ணிக்கொள்ளத்தக்கதாக, எதிராளியானவன் வஞ்சிக்கின்றான் என்று நான் நம்புமளவுக்கு நான் அச்சம்பவங்களைக் குறித்துக் கேள்விபட்டுமிருக்கின்றேன் மற்றும் கண்டும் இருக்கின்றேன்.

இத்தகைய மனப்பான்மையின் நிமித்தமான விளைவானது, நிச்சயமாகவே ஆவிக்குரியவற்றில் பெலவீனமடைதலாக இருக்கும்; இன்னுமாக ஊற்றி வழியப்படும் பாசத்திற்குப் பாத்திரமான வேறு சிலரைப் புறக்கணித்துவிடும் நிலைமையையும் மற்றும் இந்த வேறு சிலரிடம் அன்பற்றுக் காணப்படும் நிலைமையையும் சிலசமயங்கள் உண்டாக்கிவிடும். ஒருவேளை எதிராளியானவன் தன் திட்டத்தில் வெற்றியடைவானாகில், மிகுந்த ஒழுக்கக்கேடும், நாம் அன்புகூருகின்றதான தேவ நோக்கங்களுக்கு வெளியரங்கமான அவமானமும் நிச்சயமாய்க் கடந்துவரும். இப்படி வர வேண்டுமா? தேவன் தடுத்திடுவாராக! அவரால் முடியும் மற்றும் அவர் நம்மை விடுவிப்பார் என்று நான் நம்புகின்றேன். அந்த அருமையான சகோதரரின் இருதய நோக்கங்கள் தூய்மையானவையாய் இருக்குமானால் (தூய்மையானது என்றே நான் நம்புகின்றேன்), அப்படியானால் இவ்விஷயமானது நிச்சயமாகவே சாத்தானுடைய வஞ்சனையே ஆகும்.

இப்பொழுதும் அருமை சகோதரர் ரசல் அவர்களே, இக்கடிதத்தில் நான் கீழே மேற்கோளிட்டுக் காட்டியுள்ள ஆறாம் தொகுதியினுடைய 651, 652-ஆம் பக்கங்களில் விவரிக்கப்பட்டுள்ள காரியங்கள் தொடர்பாக, தாங்கள் தெளிவான மற்றும் அதேசமயம் மாற்றி அர்த்தம் எடுக்க முடியாத வார்த்தைகளில்

வாட்ச் டவர் கட்டுரை ஒன்றை வெளியிட தங்களிடம் கேட்டுகொள்ள விரும்புகின்றேன். இவ்வகையான நடத்தையை விமர்சிக்கத் துணியும் எவரும், "தீமை பேசுகிறார்கள்" என்றெல்லாம் சொல்லிக் கடிந்துகொள்ளப்படுவதற்கு உங்களது எழுத்துகளையும், வேதவாக்கியங்களையும் சிலர் திரித்துப் பயன்படுத்துவதை நான் அறிந்துள்ளபடியால் நீங்கள் இப்படிச் செய்ய வேண்டும் என்று விரும்புகின்றேன்.

இக்காரியத்தை முன்வைத்ததில் நான் அதிகப்படியான துணிச்சல் காட்டியிருப்பேனாகில், அருமையான சகோதரனே, என்னை மன்னியுங்கள்; இவ்விஷயம் குறித்து நான் மிகவும் கவலைக்கொண்டுள்ளேன். மிகுந்த கிறிஸ்தவ அன்புடன், இராஜாவின் ஊழியத்தில் என்றென்றும் உங்கள், சகோ. Horace. E. Hollister.

## வரம்புமுறையற்ற சகவாசம் கூறப்படவில்லை

(தொகுதி - 6, பக்கம்: 651, 652; திருத்தம் செய்யப்பட்ட பத்திகள்)

அப்போஸ்தலர் மூலமாக, ஆண்டவர் தெளிவாகக் கற்றுக்கொடுக்கிற காரியங்களாவன: ஆண்டவருடைய கிருபையும், சிலாக்கியங்களும் எல்லாப் புதுச்சிருஷ்டிகளுக்கும் ஒரே மாதிரியாகத்தான் இருக்கின்றன; அது அவர்களுடைய வைராக்கியத்தைப் பொறுத்தும், அவர்கள் அவர்மேல் வைத்திருக்கிற அன்பைப் பொறுத்தும், அவருடைய காரியங்களின்மேல் வைக்கும் அன்பைப் பொறுத்தும் இருக்கிறது; மேலும் அழிவுக்குரிய சரீரத்தின் நிறம், பால், இனம் முதலானவை - அவர் தம்முடைய ஜனங்களை நியாயந்தீர்ப்பதிலும், அவர்களை மதிப்பீடு செய்வதிலும், இறுதியில் வெகுமதிகளை அளிப்பதிலும் எந்தவிதமான பாகுபாட்டையும் காட்டாது என்பதேயாகும். இந்த விஷயத்தில் பிதாவின் சித்தத்தை அறிந்து, புதுச்சிருஷ்டிகள் அனைவரும், இதே கருத்தைக் கொண்டிருக்கவேண்டும்; புதுச்சிருஷ்டிகள் அனைவரையும் கிறிஸ்துவுக்குள் "சகோதரர்" என்று மதிக்கவேண்டும்; எல்லாரிடமும் மிகவும் அன்பாய் இருப்பதோடு, எல்லாருக்கும் ஊழியம்செய்ய நாடவேண்டும்; ஆண்டவர் தம்முடைய காரியங்களுக்காக மிக அதிக அளவு வைராக்கியத்தைக் காட்டியவர்களுக்குத் தயவுபாராட்டிக் கனப்படுத்தினார் என்று அவர்தாமே காட்டியபடி தவிர, மற்றபடி சகோதரர்களிடையே பாகுபாடு நாம் காட்டக்கூடாது. இப்படி நிறம், பால், இனம் என்பவைகளை ஒதுக்கிவிட்டு பாகுபாடு பார்க்காமல் இருப்பது என்பது நம் புதுச்சிருஷ்டி விஷயத்திலேயே ஆகும்; ஆனாலும் இவை நம்முடைய அழிவுக்குரிய சரீரங்கள் விஷயத்திலும், உலகத்தோடு உள்ள உறவின் விஷயத்திலும், ஒருவரோடு ஒருவர் நாம் கொண்டுள்ள உறவின் விஷயத்திலும் முற்றிலும் புறக்கணிக்கப்படக்கூடாது; ஆகவே இருபாலருக்கும் இடையில் உள்ள உறவு மற்றும் நடத்தை விஷயத்தில் ஒழுக்கமானது புதுச்சிருஷ்டிகளால் காக்கப்பட வேண்டும்.

இவர்கள் தெளிந்த புத்தியின் ஆவியில் ஜெநிப்பிக்கப்பட்டிருக்கிறபடியால், உண்மையிலேயே உலகத்தாரைக்காட்டிலும் அதிக அளவு ஞானமும், முன்யோசனையும் உள்ளவர்களாக இருக்க வேண்டும். ஆகையால் தாங்கள் ஒரு புதுச்சிருஷ்டியாகக் காணப்பட்டு, மாம்சத்தின்படி நடவாமல் ஆவியின்படி நடக்க முற்படுகிறபடியால், தங்களுடைய மாம்ச பெலவீனங்களுடைய விஷயத்திலும், இருபாலருக்கும் இடையில் காணப்பட வேண்டிய சில தகுதியான நடத்தை, அடக்கம், கட்டுப்பாடு போன்றவைகளில் சில எல்லைகளை வரையறுக்கும் விஷயத்திலும், உலகத்தாரைக்காட்டிலும் இன்னும் அதிக ஜாக்கிரதை உள்ளவர்களாக இருப்பது அவர்களுக்கு நல்லது. புதுச்சிருஷ்டியானது எந்த அளவுக்கு ஆவிக்குரிய வாழ்க்கையை வாஞ்சிக்கிறதோ, புதுச்சிருஷ்டியின் நலனுக்கு எதிராக பாலிய இச்சைகள் யுத்தம் செய்கின்றன என்று எந்த அளவுக்கு உணருகின்றதோ, அவ்வளவாய் அவர்களுடைய பாதங்களுக்குச் செம்மையான பாதைகளை உண்டுபண்ணவும், அவர்களுக்கும், இச்சைகளுக்கும் இடையில் அதிகம் தடைகளை, உறுதியாக உண்டுபண்ணவும், புதுச்சிருஷ்டி உலகத்தாரைக்காட்டிலும் அதிகமாகச் செய்யவும் முயற்சிக்க வேண்டும்.

## சகோதரர் ரசல் அவர்களின் பதில்

மேலே இடம்பெற்றுள்ள கடிதத்தை அப்படியே வெளியிடுவது நமது கர்த்தருடைய சித்தமாக இருக்கும் என்று நாங்கள் நம்புகின்றோம். விசேஷமாய் உடன்படிக்கைப் பண்ணியுள்ள ஜனங்களாகிய நாம் எதிர்க்க வேண்டிய உலகளாவிய ஒரு போக்கினை - தீமையான நோக்கம் ஏதும் இல்லாமல் இக்கடிதமானது கவனத்திற்குக்கொண்டுவருகின்றதாய் இருக்கின்றது. அறுவடைக் காலத்தின் கடைசி ஏழு வருட காலங்களில் எதிராளியானவன் பல்வேறு விதமான எதிர்க்கும்/தாக்கும் தந்திரங்களை முயற்சிப்பான் என்று எதிர்ப்பார்க்கலாம் என்றும், கர்த்தர் அவனுக்குச் சுதந்திரம் கொடுப்பார் என்றும் ஏற்கெனவே கவனத்திற்குக்கொண்டு வந்திருந்தோம். சோதனை காலமானது பூமியில் குடியிருப்பவர்கள் அனைவரையும் சோதித்திடும் (வெளிப்படுத்தல் 3:10) என்று நமக்குச் சொல்லப்பட்டிருப்பினும், அது விசேஷித்த ஆற்றலுடன் அர்ப்பணிக்கப்பட்டவர்களுக்கு, ஆலய வகுப்பாருக்கு அல்லது தேவனுடைய வீட்டாருக்கு (1 பேதுரு 4:17) எதிராய் வருமானால், அதில் நாம் ஆச்சரியப்படுவதற்கில்லை.

## எதிர் பாலினரிடமிருந்து சோதனைகள்

அர்ப்பணிக்கப்பட்டவர்களைப் பொறுத்தமட்டில், சோதனைகள் வேறுபடுகின்றன. பூரண அன்பானது அடையப்பட வேண்டிய மற்றும் அதிலே தொடர்ந்து நிற்க வேண்டிய இலக்காகவும் உள்ளது; இந்த இலக்கை நோக்கி செல்வதிலிருந்து நம்மைத் தவிர்க்க முடியாது என்று காணும் எதிராளியானவன், நம்மைத் தள்ளிவிடத் துவங்குகின்றான் - இலக்கினின்று, மேல் இடம்பெறும் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதான பூமிக்குரிய அன்பிற்குள்ளாகத் தள்ளிவிடுகின்றான். இதைச் சற்றுச் சிந்தித்துப் பார்ப்பவர்களுக்கு, ஆபத்து நன்கு விளங்கும். கர்த்தருடைய அங்கத்தினர்கள் மத்தியிலுள்ள ஆவிக்குரிய அன்பு என்பது தவிர்க்க முடியாத ஒன்று என்பதினால், அது தகுதியானதேயாகும். நம்முடைய இருதயங்களைக் கிறிஸ்தவ அன்பில் கட்டுகின்றதான கட்டானது, நாங்கள் அறிந்திருக்கிறவரை அருமையானதாகவும், பலமானதாகவும் உள்ளது. இந்த அன்போடுகூட, ஒருவர் இன்னொருவருடைய நோக்கத்திலுள்ள நாணயத்தின் மீது அடையும் நம்பிக்கையும் கூடவே கடந்துவருகின்றது; இதில் விழிப்பாய் இருக்கவில்லையெனில், அனுபவம் காரணமாய் உலகத்திற்கு அவசியமானது என்று சமுதாயம் கண்டுகொண்டுள்ளதான வரையறைகள் சிலவற்றைச் சிலர் தளர்த்திவிட நேரிட்டுவிடும். கர்த்தருடைய ஜனங்கள் உலகத்தாரைக் காட்டிலும் ஒழுக்கம் விஷயத்தில் குறைவான நெறிமுறைகளைக் கொண்டிருக்கின்றார்கள் என்று நாம் சொல்லவில்லை; மாறாக உயர்வான கொள்கைகளை உடையவர்களாய் இருப்பதினால், அவர்கள் மாம்சத்தில் இல்லாமல், மாறாக ஆவியில் ஒருவரில் ஒருவர் புதிய நம்பிக்கையினை அடைந்திருக்கின்றனர் என்றே நாம் சொல்கின்றோம். அப்போது அவர்கள் மாம்சம் குறித்த அனைத்தையும் மறந்துபோய்விடுகின்றனர் மற்றும் இந்த விஷயத்திலேயே எதிராளியானவன் பதுங்கியிருந்து, அவர்களைத் தாக்கிடும் அபாயத்திற்குள்ளாக்குவான்.

இன்னொரு பக்கத்தில் கசப்பை, பொறாமையை, சண்டைகளை எழுப்புவதன் மூலம் உண்மையுள்ளவர்களை "இலக்கிலிருந்து" தள்ளிவிடுவதற்கு முயன்றுகொண்டிருக்கின்றான். இத்தகைய மேற்கூறிய விதைகளானது தானாய் முளைத்தெழுகின்றது என்று அர்ப்பணிக்கப்பட்டவர்களின் இருதயங்களில் எண்ணம் ஏற்படத்தக்கதாய் அவன் மிகவும் தந்திரமாய்ச் செயல்படுகின்றான். நாங்கள் புரிந்திருக்கிறவரை, நீதி, தூய்மை மற்றும் சத்தியம் விருத்தியடைவது போன்ற தோற்றத்தில் தீமையின் விதைகளை விதைப்பதே எதிராளியானவனின் பிரயாசமாய் இருக்கின்றது. ஆ! அவன் தந்திரமுள்ள சத்துருவாவான் மற்றும் கண்ணியில் அகப்படுத்துவதற்கான அவனது அடுத்தக்கட்ட நடவடிக்கை என்னவாக இருக்கும் என்று நம்மால் யூகிக்க அவ்வளவாக முடியாவிட்டாலும், "அவனுடைய தந்திரங்கள் நமக்குத் தெரியாதவைகள் அல்லவே."

மேல் இடம்பெறும் கடிதத்தில் சகோ. Hollister அவர்கள், தான் யாருடைய நடத்தைகளை அங்கீகரியாமல் இருந்தாரோ, அவர்களைக் குறித்துத் தீமையாய் யூகம் பண்ணிடுவதற்கான சோதனைக்குள்ளானார்; ஆனால் அவர் கண்ணியிலிருந்து தப்பித்துக்கொள்வதில் ஜெயம் கொண்டார்; ஆகையால் மற்றவர்கள் தீய நோக்கமும், அசுத்தமான உள்நோக்கமும் கொண்டிருந்தனர் என்று நியாயந்தீர்க்காமல், அவர் எங்களைப் போன்று காரியத்தைக் கண்நோக்கினவராகவும் மற்றும் கர்த்தர் எவ்வாறு கண்ணோக்குவார் என்று நாங்கள் நம்புவதுபோன்று கண்ணோக்கினவராகவும் இருக்கின்றார் - அதாவது அது எதிராளியானவனுடைய கண்ணி என்றும், அன்பில் சகோதர சகோதரிகளை எச்சரிப்பது நம்முடையதான கடமை என்றும் கண்நோக்கினவராக இருக்கின்றார்.

மத்தேயு 18:15-17-வரையிலான வசனங்களினுடைய அர்த்தத்தைக்குறித்தும், அதை எவ்வாறு சரியாய்ப் பொருத்திப்பார்ப்பது என்பதைக் குறித்தும் கற்றுக்கொள்வதற்குக் கர்த்தருடைய அருமையான பின்னடியார்கள் எத்தனை காலம்தான் எடுத்துக்கொள்வார்கள்! இந்தப் பிரமாணத்தைக் கவனிக்கவும், சரியாய்ப் பயன்படுத்தவும் தவறுவது என்பதே, எல்லாத் திசைகளிலும் சகோதரர்களுக்கிடையிலுள்ள கிட்டத்தட்ட ஒவ்வொரு பிரச்சனைக்குமான ஆணிவேராய் இருக்கின்றதென எங்களுக்குத் தோன்றுகின்றது. எங்களுக்குத் தெரிந்தவரை, இவ்விஷயத்தைக் குறித்து வேதாகம பாடங்களினுடைய ஆறாம் தொகுதியில் மிக எளிமையாய் விவரித்துள்ளோம்; எனினும் இது விஷயத்தில் கிறிஸ்துவின் அருமையான அங்கத்தினர்களிலுள்ள மிகவும் வளர்ச்சிப் பெற்றுள்ள சகோதரர்களில் சிலர் கண்மூடித்தனமாகத் தவறுவதைக் காண்பதில் எங்களுக்கு ஆச்சரியமும், மனவேதனையும் உண்டாகுகின்றது. இந்தத் திவ்விய பிரமாணத்தினை ஓரங்கட்டுவதற்குப் "பழைய மனுஷனால்" வழக்கமாய்ப் பயன்படுத்தப்படும் போலிவாதம் என்னவெனில்: "இப்பிரமாணத்தை இந்த ஒரு சம்பவத்திற்கு/விஷயத்திற்குப் பொருத்திட முடியாது;" அல்லது "தன் விஷயத்தில் இப்பிரமாணத்தினை எப்படிப் பொருத்திச் செயல்படுவது என்று தனக்குத் தெரியாது என்ற எண்ணம் கொண்டு, இதனால் மற்றவர்களுடைய ஆலோசனையைக் கேட்க வேண்டும்" என்று கூறுவதேயாகும்; "அவனிடத்தில் போய், நீயும், அவனும் தனித்திருக்கையில் அவன் குற்றத்தை அவனுக்கு உணர்த்து" எனும் கர்த்தருடைய வார்த்தைகள் எவற்றைத் தடைச்செய்துள்ளது என்று புரிந்துகொள்ள வேண்டும்.

இப்படிப்போய்ப் பேசுவது என்பது, தவறில் உள்ளவரைக் கடிந்துகொள்வதற்கோ அல்லது கண்டனம் பண்ணுவதற்கோ அல்லது அவமானப்படுத்துவதற்கோ அல்லது தண்டிப்பதற்கோ அல்ல என்பதை வெகு சிலரே புரிந்துகொண்டவர்களாய் இருக்கின்றனர். அப்படிச் செய்ய வேண்டியவற்றையெல்லாம் கர்த்தர் பார்த்துக்கொள்வார் - கர்த்தர் தம்முடைய ஜனங்களை நியாயந்தீர்ப்பார். நம்முடைய நோக்கமானது, தவற்றைத் தடுத்து நிறுத்துவதும் மற்றும் இவ்வாறாகச் "சகோதரனை ஆதாயப்படுத்துவதும்" என்பதாக மாத்திரம் காணப்பட வேண்டும். ஆகையால் "முன்பு உன் கண்ணிலிருக்கிற உத்திரத்தை எடுத்துப்போடு; பின்பு உன் சகோதரன் கண்ணிலிருக்கிற துரும்பை எடுத்துப்போட வகைப் பார்" என்ற நமது கர்த்தருடைய ஆலோசனையானது பரவலாய்த் தேவைப்படுகின்றது என்று எண்ணுவது சரியே. ஆகையால் மத்தேயு 18:15-17-வரையிலான வசனங்களைச் செயல்படுத்த முயற்சிப்பதற்கு முன்னதாக, முதல் கட்டப்பிரயாசம் எடுப்பதற்கு முன்னதாகத் தேவனுக்கு முன்பு முழங்கால்படியிடுவதும், நம்முடைய இருதயங்களை மிகவும் தாழ்மையான, அன்பான நிலைமைக்கும், கசப்பு முதலியவைகளற்ற நிலைமைக்கும் கொண்டுவருவதும் ஞானமான காரியமாய் இருக்கும். பின்னர் அவ்வேதவாக்கியங்களை (மத்தேயு 18:15-17) மீண்டுமாக வாசியுங்கள் மற்றும் வேதாகம பாடங்களின் ஆறாம் தொகுதியில் இடம்பெறும் விளக்கவுரைகளை வாசியுங்கள் மற்றும் "மிகவும் சிறியவர்களாகிய இவர்களில் ஒருவர்" சம்பந்தப்பட்ட காரியத்தில், முறையின்றி நடந்துகொள்ளக்கூடாது என்னும் அச்சம் கொண்டு, மிகவும் கவனமாய்ச் செயல்படுங்கள்.

கிறிஸ்துவினுடைய "அங்கத்தினர்களிலுள்ள" யாரும் தங்கள் சொந்த ஆவிக்குரிய பாதங்களுக்கோ அல்லது மற்றவர்களுடைய ஆவிக்குரிய பாதங்களுக்கோ விரும்பின நிலையிலும், வேண்டுமென்றும் கண்ணிகளை ஏற்படுத்திக்கொள்ளமாட்டார்கள் என்ற சகோ. Hollister அவர்களின் கருத்தை நாங்களும் ஒத்துக்கொள்கின்றோம். அவர்களது நல்நோக்கங்களிலும், மாம்சத்தின் மீதான தங்கள் கட்டுப்பாட்டின் மீதுள்ள அதிகபடியான அவர்களது நம்பிக்கையிலும் மற்றும் எதிராளியானவனுடைய தந்திரங்கள் குறித்துத் தெரிந்திருக்க, எதிராளியானவனுடைய தந்திரத்தைக்குறித்து அவர்கள் மறந்துபோனதிலும்தான், அவர்களுக்கான அபாயங்களானது பதுங்கியிருக்கின்றது எனும் கருத்தை நாங்கள் முற்றிலும் ஒப்புக்கொள்கின்றோம். தீமையாய் யூகம் பண்ணிடக்கூடாது என்று நாங்கள் வலியுறுத்திடும் அதே வேளையில், "கோணலும் மாறுபாடுமான சந்ததியின் நடுவிலே குற்றமற்றவர்களும், கபடற்றவர்களும், தேவனுடைய மாசற்ற பிள்ளைகளாய் இருங்கள்" (பிலிப்பியர் 2:15) எனும் அப்போஸ்தலனுடைய வார்த்தைகளையும்கூட வலியுறுத்துகின்றோம். சுயத்தை மேற்கொள்ளும் விஷயத்தில் நாம் நம்மைக்குறித்து ஒருவேளை நன்கு சுயக்கட்டுபாடு உடையவர்கள் என்றும், சோதனைக்குள் சிக்கவே மாட்டோம் என்றும் நம்பிக்கைக்கொண்டவர்களாக இருந்தாலும்கூட, நம்மால் எப்படி மற்றவர்களைக் கணிக்க முடியும் அல்லது நம்மை போன்றே அவர்களும் இருப்பார்கள் என்று சொல்ல முடியும்? அல்லது சத்தியத்திலுள்ள ஜனங்கள் அனைவரும் ஒவ்வொரு சிந்தைகளையும் கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படிவதன் மூலம், சிறைப்படுத்துவதன் மூலம் நன்கு வளர்ந்துள்ளார்கள் என்று வைத்துக்கொண்டாலும், அப்போதும் அவர்கள் மனுஷர்களுக்கு உதவும் வண்ணமாகவும், பரலோகத்தில் இருக்கும் தங்கள் பிதாவை மகிமைப்படுத்தும் வண்ணமாகவும் தங்கள் வெளிச்சத்தைத் தொடர்ந்து பிரகாசிப்பிக்க பண்ண வேண்டாமோ? "ஆதலால் போஜனம் என் சகோதரனுக்கு இடறலுண்டாக்கினால், நான் என் சகோதரனுக்கு இடறலுண்டாக்காதபடிக்கு, என்றைக்கும் மாம்சம் புசியாதிருப்பேன்" (1 கொரிந்தியர் 8:13) எனும் அப்போஸ்தலனின் வார்த்தைகளைக் கவனியுங்கள். நம் மாம்சம் மரித்துப்போய்விட்டது என்று நாம் எண்ணிக்கொள்ளா திருப்போமாக. இதற்கு மாறாக எண்ணிக்கொண்டிருப்பதுதான் பாதுகாப்பானதாகும்; நம்மையோ அல்லது மற்றவர்களையோ அகப்படுத்தும்படிக்கு எதிராளியானவனால் ஏற்படுத்தப்படும் ஒவ்வொரு கண்ணிக்கும் எதிராக நம்மைக் காத்துக்கொள்வதுதான் பாதுகாப்பானதாகும்.

---

R4899

## அதிருப்தியின் ஆவி

"கூடுமானால் உங்களாலான மட்டும் எல்லா மனுஷரோடும் சமாதானமாயிருங்கள்."

(உரோமர் 12:18)

மனுஷர் யாவர் மீதும் வரவிருக்கின்றதான சோதனை காலத்தைக்குறித்து வேதவாக்கியங்கள் கூறுகின்றன. (வெளி 3: 3,10). அந்தச் சோதனை காலமானது நம்மீது இருக்கின்றதென - ஏற்கெனவே துவங்கிவிட்டதென நாம் நம்புகின்றோம். உலகத்தின் விஷயத்தில் அது அதிருப்தியை, கசப்பை, தீமையான கற்பனைகளை, பகைமையை, சண்டையை, திருட்டை, கொலையைக் குறிக்கின்றதாய் இருக்கும். இந்த ஆவியே சமுதாயத்தைச் சிதைக்கப்போகின்றதாய் இருக்கின்றது. இந்த உண்மையினை வேதவாக்கியங்களானது மிகத் தெளிவாய் உறுதிப்படுத்துக்கின்றதாய் இருக்கின்றது.

இந்தச் சோதனை காலமானது சில விதங்களில் சபையாகிய நம்மிடத்தில் துவங்கிடும் என்பதை நாம் மறவாமல் இருப்போமாக. தேவனே இதை அனுமதித்துள்ளார். தேவன் தம்மைக்குறித்தும், தம் குணலட்சணம், தம் மகிமையான திட்டம் முதலானவை குறித்துமுள்ள மாபெரும் வெளிச்சத்தினை நமக்குக் கொடுத்திருக்கின்றார். திவ்விய சுபாவத்திற்குரிய நமக்கான "பரம அழைப்பு" குறித்தும் அவர் நமக்கு அறிவுரையளித்திருக்கின்றார். அவரது அழைப்பினை ஏற்றுக்கொண்டு, நாம் அவருடைய பரிசுத்த ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்டிருக்கின்றோம். நாம் கிறிஸ்துவின் பள்ளியில் பிரவேசித்திருக்கின்றோம் மற்றும் மணவாட்டி வகுப்பாரில் அங்கத்தினர்களென நாம் ஏற்றுக்கொள்ளப்படுவதற்கு அவசியமான குணலட்சணம் தொடர்புடைய படிப்பினைகளும் நமக்குக் கொடுக்கப்பட்டு வருகின்றன. அநேகம் விதங்களில் நாம் அனுகூலம் பெற்றவர்களாய் இருக்கின்றோம். இப்பொழுது Exam/பரீட்சைத்தேர்வு தொடங்கியுள்ளது. நம்மில் யார் தேர்ச்சிப் பெறுவார்கள்? முன்னோர் வழிவந்த மாம்சத்தின் அபூரணங்களை உடையவனாக இருப்பினும், தரித்திரனாக இருப்பினும், தன் இருதயத்திலும், மனதிலும் கர்த்தருக்கொத்த குணலட்சணத்தின் சாயலை அடைந்துள்ளான் என்று யார் யார் காண்பிக்கப் போகின்றனர்? இதுவே பரீட்சையாகும்.

இந்தப் பரீட்சையானது எப்படி வருமென நாம் எதிர்ப்பார்த்திடலாம்? அன்புக்குரியவர்களே, அது எவ்வாறு வருகின்றது என்று நாம் காண்கின்றோம்; கூர்ந்து கவனிப்பதன் வாயிலாகவும், மற்றவர் வாயிலான தகவல் வாயிலாகவும் அந்தப் பரீட்சைத்தேர்வானது சிலர் விஷயத்தில் அனுகூலமாகவும், மற்றவர்கள் விஷயத்தில் அனுகூலமற்ற விதமாகவும் போய்க்கொண்டிருப்பதை நாம் காண்கின்றோம். சில இடங்களில் முழுச்சபையாரும் பரீட்சைக்குள்ளாகுகின்றனர். அதிகாரம் மற்றும் சில வழிமுறைகள் (methods) சம்பந்தமாய் எழும்பும் முக்கியமற்ற கேள்விகள் கவனத்தைச் சிதறப்பண்ணி, பிரச்சனைகளை எழுப்புகின்றன. இது சத்தியத்திற்கு ஊழியம் புரிவதிலிருந்து கவனத்தைத் திருப்பிவிடுகின்றது. இது சிலருடைய ஆவல்களைத் தணித்துவிடுகின்றது; இது சிலரை மிகவும் கசப்படைய செய்துவிடுகின்றது. கோபம், துர்க்குணம், பகைமை, பொறாமை, கருத்துவேறுபாடுகள், சண்டைகளாகிய தீய ஆவியின் கனிகளானது சில விதங்களில் கட்டுப்பாடு பண்ணுகின்றதாய் இருக்கின்றது.

## ஒவ்வொருவனும் தன்னைத்தான் நிதானிப்பானாக

நாங்கள் யாரையாவது நியாயந்தீர்க்கவோ, குற்றவாளி என்று தீர்க்கவோ இல்லை; மாறாக ஒவ்வொருவனும் தன்னைத்தான் நிதானித்துக்கொள்வானாக என்றே அப்போஸ்தலனோடுகூடச் சேர்ந்து கூறுகின்றோம். ஒவ்வொருவனும் தாழ்மை, நீடியபொறுமை, சகோதர சிநேகம், அன்பு என்னும் ஆவியின் கனிகளைத் தான் பெற்றிருக்கின்றானா என்று மாத்திரம் பார்த்துக்கொள்ளாமல், இன்னுமாக இப்பண்புகள் தன் நடத்தையிலும், தன் வார்த்தைகளிலும் தன்னால் வெளிப்படுத்தப்படுகின்றதா வென்றும் பார்த்துக்கொள்வானாக. அருமையானவர்களுக்காகவும், நல்லவர்களுக்காகவும், நற்குணமுள்ளவர்களுக்காகவும் உள்ள அன்பின் அடிப்படையில் மாத்திரமில்லாமல், வழிவிலகியுள்ளவர்களுக்காகவும், சத்துருக்களுக்காகவும், பொறுமையாய், பரிவாய், அன்பாய் சகிக்கும் அன்பின் அடிப்படையிலுந்தான் கர்த்தர் பரீட்சிக்கின்றார் என்பதைக்கூட நாம் நினைவில்கொள்ள வேண்டும். அன்புபோல நீதியும் திவ்விய குணலட்சணத்தினுடைய அடிப்படை அம்சமாய் இருக்கின்றது என்பதை நாம் மனதில் வைத்திருக்க வேண்டும். ஆகையால் தேவனுக்கொத்த சாயலாக வேண்டுமெனில், தேவனுடைய அன்பின் குமாரனுக்கொத்த சாயலாக வேண்டுமெனில், நம்முடைய குணலட்சணங்களில் நீதியின் கொள்கையினை நாம் உறுதியாய்க் கொண்டிருக்க வேண்டும். நாம் அனைவரிடமும் இரக்கமாயும், தயவாயும், அன்பாயும் காணப்பட வேண்டும்; ஆனால் தயவாய் இருப்பதற்கு முன்னதாக நாம் நீதியாய் நடந்திட வேண்டும். காண்கின்ற சகோதரனை நம்மால் அன்புகூர முடியவில்லையெனில், நாம் எப்படி

அவனது பிதாவையும், நாம் கண்டிராத நம் பிதாவையும் அன்புகூருகின்றோம் என்பதைக் காண்பித்திட முடியும்?

இதே அதிருப்தியின் ஆவியானது, தேவனுடைய ஜனங்களை அவர்களது இல்லங்களிலும் சோதிக்கின்றதாய் இருக்கின்றது. சரி மற்றும் தவறு குறித்தும், நீதி மற்றும் அநீதி குறித்தும் நுணுக்கமாய் உணர்ந்துகொள்ளுதல் என்பது, நாம் நீதியாய் அல்லது அநீதியாய் நடந்திருக்கின்றோமா என்பதையும், மற்றவர்கள் நம்மிடத்தில் நீதியாய் அல்லது அநீதியாய் நடந்திருக்கின்றார்களா என்பதையும் காண நம் அனைவருக்கும் உதவுகின்றதாய் இருக்கும். இந்த அறிவின் பெருக்கமானது நம்மீது தனிப்பட்ட விதத்தில் ஒரு பொறுப்பினைக் கொண்டுவருகின்றதாய் இருக்கின்றது... அது கடந்த காலங்களில் செய்யப்பட்டுள்ள ஏதேனும் அநீதிகளின் விஷயத்தில் முழுமையாயும், உடனடியாகவும், இருதயப்பூர்வமாகவும் மன்னிப்புக் கேட்கப்பட்டு, சரிச்செய்யப்பட்டு, இனிமேல் செய்யாதபடிக்குத் தவிர்க்கப்படுதல் எனும் பொறுப்பாகும். இதை நாம் முழுமையாய்ச் செய்வோமானால், இது நம்மை முழுமையாய் ஆக்கிரமித்து வைத்திருக்கும் . . . நம்மையே சரிபடுத்திக்கொள்ளுவதிலும் மற்றும் நாம் அதிகமதிகமாய்த் திவ்விய தரநிலைகளை உணர்ந்துகொண்டு வருவதினால் நம்முடைய அழிவுக்குரிய சரீரங்களின் நடத்தைகள் மற்றும் எண்ணங்களை அந்தத் திவ்விய தரநிலைக்கு முழுக்கக் கீழ்ப்படுத்திக்கொள்வதிலும் ஆக்கிரமிக்கப்பட்டு/ஈடுபட்டு இருப்போம்.

## நம்முடைய தவறுகளைப் பார்க்கத் தவறிடும் மனப்பான்மை

நம்முடைய தவறுகளைக் கண்டுகொள்ளாமலும், அவற்றைச் சரிப்படுத்தாமலும், மாறாக மற்றவர்களுடைய தவறுகளைப் பார்ப்பதற்கும், நமக்கு மற்றவர்கள் செய்துள்ளதான அநீதிகளைக் கவனிப்பதற்கும், நம்முடைய உரிமைகள் குறித்த நம்முடைய புதிதான உணர்ந்துகொள்ளுதலை மற்றவர்கள் அங்கீகரிக்க வேண்டும், அதுவும் உடனே ஏற்றுக்கொண்டிட வேண்டும் அல்லது ஏற்றுக்கொள்ளத்தக்கதாக வற்புறுத்தப்பட வேண்டுமென்று தீர்மானிப்பதற்கும் ஏதுவான ஒரு மனநிலைக் காணப்படுகின்றது. இதுவே உலகத்தின் ஆவியாய் இருக்கின்றது மற்றும் இது மகா உபத்திரவ காலத்தை விரைவுப்படுத்துகின்றது. அதிகாரத்தில் இருப்பவர்கள், தாங்கள் பலவந்தத்தைப் பிரயோகிக்க வேண்டுமென எண்ணுகின்றனர். முன்பு ஒருபோதும் இல்லாதளவுக்குத் தொழிலாளிகள் தங்கள் வல்லமைக்குறித்து உணர ஆரம்பித்திருக்கின்றனர் மற்றும் இதினிமித்தம் அதைச் செயல்படுத்துவதற்குச் சோதனைக்குள்ளாகுகின்றனர்; மேலும் உரிமை மற்றும் நீதி விஷயத்திலுள்ள அவர்களின் தீர்ப்புகளை உலகத்தின் மீது திணித்திட தீவிரிக்கின்றனர்.

காரியங்களைப் பலவந்தம் பண்ணும் விதத்தில் கையாண்டிட வேண்டாம் என்றும், "நான் . . . எழும்பும் நாள்மட்டும் எனக்குக் காத்திருங்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்" என்றும் நாம் உலகத்தாருக்கு வலியுறுத்துகையில், கிறிஸ்துவின் சபையினிடத்திலும் நாம் வலியுறுத்துவதாவது: "உங்களிடத்தில் பூரண நீதியுடன் நடந்துகொள்ளும்வரை, உங்கள் கணவன்மார்களை, மனைவிமார்களை, பெற்றோர்களை மற்றும் பிள்ளைகளை வற்புறுத்திக்கொண்டிராதீர்கள். நம் மீதும், மனுக்குலத்தார் யாவர் மீதும் தேவன் அனுதாபம்கொண்டும், பொறுமையோடு சகித்து இருப்பதும்போல, நீங்களும் அனுதாபத்தோடும், பொறுமையோடும் காணப்படுங்கள். ஒருவேளை அநீதியானது நமக்கு நீண்டகாலமாய்ச் செய்யப்பட்டுவரும் காரியமானது - அதை நாம் விரைவாய்ச் சரிபடுத்திட நம்மை நடத்திடாமல், மாறாக நாம் தவறு செய்தவருக்குத் தவறைச் சுட்டிக்காண்பித்து, அன்பில் சத்தியத்தை எடுத்துக்கூறி, நம்மை எதிர்க்கிறவர்களுக்குச் சாந்தமாய் அறிவுரைக் கூறுகையில் நாம் நீடிய பொறுமையோடு காணப்படுவதற்கும், இரக்கம் காண்பிப்பதற்கும் நடத்துகின்றதாய் இருக்க வேண்டும்."

நீதியின் கொள்கைகளுக்கும், அன்பின் கொள்கைகளுக்கும் எதிராய் மனுக்குலத்தாரில், பாதிக்கும் மேலானவர்கள் கடுமையாய் மீறி ஜீவித்துக்கொண்டிருக்கின்றனர் என்பதில் ஐயமில்லை. சிலசமயம் கணவன் தன் மனைவியையும், பிள்ளைகளையும் அன்புகூருகிறவனாக இருந்தும் . . . அவர்கள் தன் அன்பையும், பரிவையும் சந்தேகிக்கும் அளவுக்கு அவர்களை மிகவும் நியாயமற்ற விதத்தில் ஆளுகிறவனாய் இருக்கின்றான். இத்தகைய நடத்தையானது கர்த்தருக்குள்ளான சகோதரன் ஒருவனிடத்தில் காணப்படுமானால், அது தெய்வீக ஒழுங்கைக்குறித்த தவறான புரிந்துகொள்ளுதலின் காரணமாய் இருக்கும். அவனோ வேதாகமமானது - கணவன் என்பவர் குடும்பத்தின் தலைவனாய் இருக்கின்றார் என்று போதிக்கின்றது என்பதை அறிந்தவனாய் இருப்பினும், இந்த உயர்ந்த தலைமைத்துவத்தை எவ்வாறு கையாளுவது மற்றும் செயல்படுத்துவது என்பதைக் குறித்துச் சரியாய்த் தெரிந்துகொள்ளாதவனாய் இருக்கின்றான். ஜீவியத்தின் பூமிக்குரிய காரியங்களைக் கொடுப்பது மாத்திரம் அல்லது குடும்பத்தின் நலன்களுக்குடுத்த விஷயத்தில் இறுதியான முடிவுகளை எடுக்கும் பொறுப்புள்ள தலையாகக் காணப்படுவது மாத்திரம் தலைமைத்துவத்தின் பிரதான வேலையல்ல என்று அநேகர் கற்றுக்கொள்ளவில்லை என்பதாகத் தோன்றுகின்றது. சரியான விதத்தில் பார்க்கின்றபோது, புருஷனுடைய தலைமைத்துவம் என்பது அதிகமதிகமானவைகளை உள்ளடக்கியுள்ளது. தன் குடும்பத்திற்கான ஆரோக்கியத்தினை, மகிழ்ச்சியினை, நல்லொழுக்கத்தினை மற்றும் ஆவிக்குரிய நலன்களைப் பார்த்துக்கொள்வது அவருடைய கடமையாக இருக்கின்றது. இது அவர் அவர்களுடைய சரீரப்பிரகாரமான பெலவீனங்கள் மற்றும் அபூரணங்களையும், மனரீதியிலான, ஒழுக்கரீதியிலான இயல்பான பெலவீனங்கள் மற்றும் அபூரணங்களையும் நியாயமான விதத்தில் கருத்தில் எடுத்துக்கொள்வதை உள்ளடக்குகின்றதாய் இருக்கின்றது.

## குடும்பத்தின் தலைவருடைய கடமைகள்

மகிழ்ச்சியான குடும்பத்தினுடைய ஓர் உண்மையான தலைவன் அநேகம் விஷயங்களில் தன் சொந்த விருப்பங்களையும், ஆசைகளையும் அடிக்கடி புறக்கணித்துவிடுபவனாக இருக்க வேண்டும்; ஏனெனில் இப்படிச் செய்வது என்பது குடும்பத்திற்கான அவனது கடமைக்கும், அவர்களது மகிழ்ச்சிக்கும் தேவையாய் இருக்கும். ஆகையால் வேதவாக்கியங்களினுடைய கண்ணோட்டத்தின்படி புருஷனுடைய தலைமைத்துவம் என்பது "அதிகாரம் செலுத்துபவராக/boss," விசாரிக்கிறவராக/judge, காரியங்களைத் தீர்மானிப்பவராக இருப்பதற்கும் அதிகமானவைகளை உள்ளடக்குகின்றதாய் இருக்கின்றது. இது இன்னும் அதிகமாய்க் கிறிஸ்து மற்றும் சபையும், அவர்கள் ஒருவரோடு ஒருவர் கொண்டுள்ள உறவும் - கணவன் மற்றும் மனைவிக்கு இடையில் காணப்பட வேண்டிய சரியான அன்பு, மரியாதை மற்றும் ஒத்துழைப்பிற்கான மாதிரியாய் இருக்கின்றது என்ற வேதவாக்கிய கூற்றினாலும், சித்தரிப்பினாலும்கூட நிரூபிக்கப்படுகின்றதாய் இருக்கின்றது.

நமது கர்த்தர் உண்மையில் சபைக்குத் தலையாய் இருக்கின்றார் மற்றும் எந்தளவுக்குச் சபையாகிய நாம் இந்தத் தலைமைத்துவத்தினை அடையாளம் கண்டுகொண்டு, அவர் வழிகாட்டுதல்களைப் பின்பற்றுகின்றோமோ, அவ்வளவாய் அதை ஞானமானதாகவும், உதவிகரமானதாகவும் மற்றும் அனுகூலமானதாகவும் கண்டுகொள்வோம். எந்தளவுக்கு நாம் பின்பற்றாமல் இருக்கின்றோமோ, அவ்வளவுக்கு நாம் சில ஆசீர்வாதங்களை இழந்துள்ளோமெனப் பிற்காலங்களில் உணர்ந்துகொள்வோம். தம்முடைய தலைமைத்துவத்தினை நாம் அங்கீகரித்திட வேண்டுமென நமது கர்த்தர் நம்மை வற்புறுத்துகிறதில்லை. இதை நமக்கான தேவைகளே நமக்கு வற்புறுத்துகின்றதாய் இருக்கின்றது. இப்படியாகவே சரியாய் ஒழுங்குப்படுத்தப்பட்டுள்ள குடும்பத்திலும் இருக்க வேண்டும். கணவன் மற்றும்

தகப்பனுடைய நடத்தையானது, தலைமைத்துவத்தினை வலியுறுத்துகிறதாகவும், கட்டளையிடுகிறதாகவும் அல்லது பயமுறுத்துகிறதாகவும் இராமல், மாறாக தன்னைச் சார்ந்திருப்பவர்களுக்காகச் சுயத்தைப் பலிசெலுத்தும் அன்புடன் கூடியதாகவே காணப்பட வேண்டும்.

குடும்பத்தலைவனுடைய மேற்பார்வையின் கீழ்க்காணப்படுகிறவர்கள், அவர்களுக்கான அவனது அன்பினையும், பராமரிப்பினையும் உணர்ந்துகொள்ளுவதற்கு முன்னதாக - அவற்றைக் குடும்பத்தின் தலைவன் அவர்களுக்காய் நிரூபிப்பதற்குப் பல நாட்கள் அல்லது வாரங்கள் அல்லது வருஷங்கள் தேவைப்படும். அநேகமாக அவரது அன்பானது தற்கால ஜீவியத்தில் ஒருபோதும் அடையாளம் கண்டுகொள்ளப்படாமலும்கூடப் போகலாம். அவரது அன்பானது அவரது குடும்பத்தாரால் எப்படி அடையாளம் கண்டுகொள்ளப்படுகின்றதோ அல்லது அடையாளம் கண்டுகொள்ளப்படாமல் இருக்கின்றதோ, எப்படியிருப்பினும் ஒரு தந்தையென, கணவனென, பராமரிக்கிறவரென அவருக்கு இருக்கும் கடமைகள் அனைத்தும் அவர் மீதே முழுமையாய்க் காணப்படுகின்றதாயிருக்கும். கர்த்தரிடம் வெளிப்படுவதுபோலவே, கணவனிடத்திலும் எப்போதுமே சாந்தம், நற்குணங்கள், அக்கறை வெளிப்பட்டுக்கொண்டிருக்க வேண்டும்.

இது விஷயமான வேதாகமப் பாடங்களினுடைய ஆறாம் தொகுதியின் காரியங்களானது, அருமையான சகோதரர்களில் சிலரால் தவறாய் அர்த்தங்கொள்ளப்பட்டுள்ளது என்று கேள்விப்பட்டு, வேதனையடைந்தோம் மற்றும் இப்படித் தவறாய் அர்த்தம் எடுத்துக்கொண்டதன் காரணமாய் அவர்களது ஜீவியங்கள் மிகவும் அன்பானதாகவும், தயவானதாகவும் இருப்பதற்குப் பதிலாக, நேர்மாறாய் மிகவும் சர்வாதிகாரம் செலுத்துகிறதாகவும், பரிவற்றதாகவும், அடக்குமுறையானதாகவும் ஆகியுள்ளது. இந்தத் தகவல்களானது சிலவற்றில் மிகைப்படுத்தப்பட்டிருந்தது என்று நாம் எண்ணுகின்றோம் மற்றும் இது விஷயத்தில் தெளிவான அறிவு அடைவதினால் சிலர் இன்னும் அதிகமாய்ச் சிறந்தவர்களாகியுள்ளனர் என்றும், இன்னும் அதிகமாய் உண்மையுள்ளவர்களாகியுள்ளனர் என்றும், தங்களுடைய குடும்பத்தினரால் இன்னும் அதிகமாய் மதிக்கப்படுகிறவர்களாகியுள்ளனர் என்றும்கூட நாம் நம்புகின்றோம்.

## பெண் உரிமையின் உணர்வுகள் பரவிக்கிடக்கின்றன

சகோதரிகளின் காரியமென்ன? அந்தோ பரிதாபம்! சகோதரிகளில் அனைவரும், கர்த்தர் நமக்கு மிகவும் கிருபை பாராட்டியுள்ளதான விலையேறப்பெற்ற சத்தியங்களினால் சரியாய்ப் பயிற்றுவிக்கப்படவில்லை. நீதி, அநீதி குறித்தும், புருஷன், ஸ்திரீக்கான உரிமைகள் குறித்துமுள்ள மாபெரும் அறிவானது, சகோதரர்களுக்குப்போலவே சகோதரிகளுக்கும் பரீட்சையாகியுள்ளது. சகோதரிகளும்கூடச் சோதனை காலத்தில், சோதனையில் காணவேபடுகின்றனர். "பெண் உரிமையின்" உணர்வுகளானது பரவிக்கிடக்கின்றன. இது சமாதானத்தையோ, இணக்கத்தையோ கொண்டுவருகிறதில்லை. மாறாக இது பொதுவாய் நிலவிக்கொண்டிருக்கும் அதிருப்தியின் ஆவியில் - எதிராளியானவனால் அதிகமதிகமாய்த் தூண்டிவிடப்படுகிறதான உலகத்தின் ஆவியில் ஒரு பாகமாய் இருக்கின்றது. உலகத்தில் இது உபத்திரவகாலத்தைத் தூண்டிவிட்டுக்கொண்டிருக்கின்றதுபோல, உலகத்தில் உபத்திரவம் வருவதற்கு முன்னதாகவே, இது சபையிலும், குடும்பத்திலும் உபத்திரவகாலத்தினைக் கொண்டுவருகின்றதாய் இருக்கின்றது. அந்தோ பரிதாபம்! நாம் சில உரிமைகளைப் பெற்றுக்கொள்வதினாலும் மற்றும் நாம் ஜீவித்துக்கொண்டிருப்பது வரையிலும் ஆதரிப்போம், ஆறுதல் பண்ணிடுவோம் மற்றும் தாங்கிடுவோம் என்று நாம் யாருக்காக வாக்களித்திருக்கின்றோமோ, அவர்களின் சமாதானம், சந்தோஷத்தையும் மற்றும் நம் சொந்தச் சமாதானம், சந்தோஷத்தையும் அழித்துப்போடுவதினாலும் என் அன்புக்குரிய சகோதரர்களே, சகோதரிகளே என்ன நன்மை நமக்குக் கிடைக்கப்போகின்றது?

பரிசுத்த பவுல் அடிகளார் கூறியுள்ளதுபோன்று, "நீங்கள் சுயாதீனத்திற்கு அழைக்கப்பட்டிருக்கின்றீர்கள்; அந்தச் சுயாதீனத்தை நீங்கள் மாம்சத்திற்கேதுவாக அநுசரியாமலிருங்கள்." தப்பறைகள் மற்றும் மூடநம்பிக்கைகளிலிருந்துள்ள சுதந்தரமும் - சுயநலத்தினுடைய அடிமைத்தனத்திலிருந்துள்ள சுதந்தரமும் - சகோதரர்களுக்காகவும், வாய்ப்புக் கிடைக்கும்போது யாவருக்காகவும் பலிசெலுத்துவதற்கும், ஊழியம் புரிவதற்கும், தங்கள் ஜீவியங்களை ஒப்புக்கொடுப்பதற்குமான சுதந்தரமும் மற்றும் விசேஷமாகப் பூமிக்குரிய உறவினர்களிடத்தில் நாம் ஆண்டவருடைய சாயலில் இருக்கிறோம் என்பதையும், சுயத்தை வெறுத்தல், அன்பு, பரிவு, நற்கனிகளாகிய அவர் ஆவியினைப் பெற்றிருக்கின்றோம் என்பதையும் வெளிப்படுத்துவதற்கான சிலாக்கியம் அல்லது சுதந்தரமும்தான் - நமக்கு ஆசீர்வாதத்தினையும், தெய்வீகத் தயவையும், ஆத்துமாவிற்குச் சமாதானத்தையும் கொண்டுவரும் நமக்குரிய மெய்யான சுதந்தரமாய் இருக்கின்றது.

கொள்கைகளுக்காக உறுதியாய் நிற்பதற்கும், தேவனைத் தொழுதுகொள்வதற்கான சுதந்தரத்திற்காய் உறுதியாய் நிற்பதற்குமான சந்தர்ப்பங்களும், இடங்களும் சகோதரர்களுக்கும், சகோதரிகளுக்கும் இருக்கின்றது என்பது உண்மைதான்; ஆனால் இவைகள் அடையப்பெற்ற பிற்பாடு, அற்பமான மற்றக் காரியங்கள் அனைத்தையும் நாம் தியாகம்பண்ணிட வேண்டும்; இல்லையேல் நாம் போராட வேண்டுமெனில், நமது மீட்பர் எத்தகைய காரியங்களுக்காகப் போராடியிருப்பரோ, அத்தகைய காரியங்களுக்காக மாத்திரம் போராடிடுவோமாக. இப்படியாய் அவர் நமக்கு முன்வைத்த மாதிரியில், அவர் அடிச்சுவடுகளில் நாம் நடந்திடுவோமாக (1 பேதுரு 2:21).

---

R4458 [தெரிந்தெடுக்கப்பட்ட பத்திகள்]

# உங்களைக்குறித்தும், சபையைக்குறித்தும் எச்சரிக்கையாயிருங்கள்

இங்குத் தேவனுடைய பரிசுத்த ஆவியின் செயல்பாட்டிற்கும், பரிசுத்தமில்லாத ஆவிகளாகிய விழுந்துபோன ஆவிகளின் செயல்பாட்டிற்கும் உள்ள வித்தியாசத்தைக் கவனிக்கலாம். இரண்டு விஷயங்களிலும்/பக்கத்திலும் எந்தளவுக்கு அந்த நபர் தனது சொந்தச் சித்தத்தை விட்டுக்கொடுக்கின்றாரோ, அவ்வளவாய் (ஆவியின்) கட்டுப்பாடும் காணப்படும். ஆனால், அதிர்ஷ்டவசமாக மனுக்குலமாகிய நாம் அனைவரும் நம்மை முற்றிலும் அர்ப்பணிக்க/ஒப்புக்கொடுக்க இயற்கையாகவே பயம் கொண்டுள்ளோம். இப்படியான சுபாவம் இல்லையெனில், சந்தேகத்திற்கிடமின்றி இன்று முழு உலகமும், அல்லது பெரும்பான்மையானவர்கள் விழுந்துபோன ஆவியின் கட்டுப்பாட்டிற்குள் போயிருந்திருப்பார்கள். ஆவியுலக ஊடகர்கள்கூடத் தங்கள் சித்தத்தைப் பகுதியளவே ஒப்புக்கொடுத்துள்ளபடியால், முழுமையாக ஒப்புக்கொடுக்க வேண்டும் என்று ஆவிகள் வலியுறுத்துகின்றன. முழுமையாக சித்தத்தை ஆவிகளுக்கு ஒப்புக்கொடுத்து, இதனால் தீய ஆவிகள் முழு அதிகாரத்தையும் எடுக்க ஒப்புக்கொடுப்பது என்பது மாபெரும் அபாயம் என ஆவியுலக இடையீட்டார்களுக்கு, ஆவியுலக புத்தக வெளியீடுகளில் எச்சரிக்கைக் கொடுக்கப்பட்டுள்ளது. அந்தோ பரிதாபமான ஆவியுலக இடையீட்டாளர்கள்! இவர்கள் தங்கள் மூலம் தொடர்புகொள்ளும் அனைத்து ஆவிகளும் பொல்லாத ஆவிகள் என்றும், பிசாசுகள், விழுந்துபோன ஆவிகள் என்றும், மனிதர் போன்று வேஷம் தரித்த ஆவிகள் என்றும், நம்முடைய மரித்த நண்பர்கள் போன்று வேஷம்போடும் ஆவிகள் என்றும் அறியாமலிருக்கின்றார்கள்.

புருஷர்களும், மனைவிகளும்கூடத் தங்களுடைய சித்தங்களை ஒருவருக்கொருவர் முற்றிலும் ஒப்புக்கொடுக்க துணியும் விஷயத்திலும் பாதிப்புக்கேதுவான ஆபத்தில்லாமல் இல்லை. பெற்றோர்களும்கூடத் தங்களுடைய பிள்ளைகளின் விஷயத்தில், பிள்ளைகள் தங்களுக்கென்று சொந்தச் சித்தம் வைக்காத அளவுக்கு அவர்களைக் கட்டுப்படுத்த/வற்புறுத்த முயற்சிக்கக்கூடாது. பிள்ளைகள் எவ்வளவாய்க் கட்டுப்படுத்துகிறார்களோ, அவ்வளவாய்ப் பெற்றோர்கள் அவர்களை பாதிப்புக்குள்ளாக்கி, அவர்களின் தனிமனித பண்புகளைக் குலைத்துப்போட்டு, விழுந்துபோன ஆவிகள் எளிதில் அவர்களை வஞ்சிக்கும் நிலையில் உள்ளாக்கிவிடுவார்கள்.

நாம் நம்மை முற்றும் முழுமையாக ஒப்புக்கொடுக்க வேண்டிய ஒரே ஒருவர் கர்த்தராவார். இவரே தம்மிடத்தில் முழுமையாகச் சித்தத்தை ஒப்புக்கொடுக்கும்படி அழைக்கின்றார். மேலும் நாம் அவருடைய நாமத்தினால், அவருடைய ஸ்தானாபதிகளாக இருந்து, நமது பிள்ளைகளையும், நமது நண்பர்களையும், நமது அயலகத்தாரையும் கர்த்தரிடத்தில் தங்கள் இருதயத்தை முழுமையாக ஒப்புக்கொடுக்கும்படி அழைக்கலாம். எந்தளவுக்குச் சித்தங்கள் முழுமையாக அர்ப்பணிக்கப்படுகின்றதோ, அந்தளவுக்கு ஒப்புக்கொடுத்தலும் அதிகமாயிருக்கும். அத்தகைய அனுபவமும் மிக ஆசீர்வாதமாய் இருக்கும். அதாவது, கர்த்தருடைய வேலைகளில் அதிகம் பயனுள்ளவர்களாகவும் இருப்போம். இதுவே, "ஆவியினாலே நிறைந்து," உங்களைப் பரிசுத்தப்படுத்தி, முற்றிலுமாகக் கர்த்தருக்கென்று ஒப்புக்கொடுங்கள் என்ற பரிசுத்த பவுல் அவர்களின் புத்திமதியில் உள்ள சாராம்சமாகும். இந்த அர்ப்பணிப்பு அல்லது சித்தத்தை ஒப்புக்கொடுக்கும் அளவிற்கு ஏற்ப, நாம் கர்த்தருடைய வேலைக்கு, சத்தியத்தின் வேலைக்கு, மந்தையின் வேலைக்கு ஆயத்தமாய் இருக்கும் கருவிகளாகப் பயன்படுத்தப்படலாம். கர்த்தருக்கென்று முழுமையாகச் சுயத்தை அர்ப்பணிக்கும் விஷயத்திலும், ஆவியில் நிரப்பப்படும் விஷயத்திலும், சுயசித்தத்தை வெறுமையாக்கும் விஷயத்திலும், உலகத்திற்கும் அதன் திட்டத்திற்கும் அதன் சித்தத்திற்கும் அதன் வேலைகளுக்கும் மரிக்கும் விஷயத்திலும், பரிசுத்த பவுல் சிறந்த முன்மாதிரியாக விளங்குகின்றார்.

---

R2488 [தெரிந்தெடுக்கப்பட்ட பத்திகள்]

# கேள்வி, பதில்கள்

கேள்வி: --(2) கர்த்தருடைய ஜனங்கள் ஜீவியத்தின் கடமைகளிடமிருந்து வேதாகம ஆராய்ச்சிக்கென்றும், சத்திய ஊழியத்திற்கென்றும் எவ்வளவு நேரத்தினை எடுத்துக்கொள்ள வேண்டும்?

பதில்: -- கடமைகள் என்பது சிலசமயம் ஒன்றுக்கொன்று மோதுகின்றதாய் தோன்றலாம், ஆனால் அப்படியாக உண்மையில் இருப்பதில்லை. ஒரு கிறிஸ்தவனுடைய முதலாம் கடமை . . . அவனது சிருஷ்டிகரையும், கர்த்தரையும், அவனது எல்லா வழிகளிலும் இருதயப்பூர்வமாய் அங்கீகரித்திடுவதாகும். அவனது இரண்டாவது கடமை . . . அவன் ஒருவேளை கணவனாகவும், தகப்பனாகவும் இருக்கும் பட்சத்தில் . . . அவனது மனைவி மற்றும் பிள்ளைகளுக்கானதாகும்; அல்லது அவள் மனைவியாகவும், தாயாகவும் இருப்பாளாகில், அவளது கடமை . . . அவளது கணவன் மற்றும் பிள்ளைகளிடத்தில் இருக்கும். திவ்விய ஏற்பாட்டில் கணவன் குடும்பத்திற்கான தேவைகளைச் சந்திப்பவராக ஏற்படுத்தப்பட்டிருக்கின்றார் மற்றும் அவர் நோயின் காரணமாய் இயலாதவராய் இருந்தால் தவிர மற்றபடி எந்தக் காரணங்கள்

நிமித்தமாகவும் அவர் இந்தக் கடமையினைப் புறக்கணித்தவராக இருக்கும் பட்சத்தில், அவர் திவ்விய பிரமாணத்திற்குக் கீழ்ப்படியாதவராகவே இருப்பார். அதுபோலவே மனைவியினுடைய முதலாம் கடமை பராமரிப்பதாகும்; அவளது கணவன் மற்றும் பிள்ளைகளுக்கான சௌகரியத்தையும், அவர்களை ஊக்குவிக்கிறதையும் பார்த்துக்கொள்கின்றாள். திவ்விய ஏற்பாட்டின்படி விவாக ஒப்பந்தமானது, ஒவ்வொரு கணவன் பெற்றிருக்கும் நேரத்தின் மீதும், ஒவ்வொரு மனைவி பெற்றிருக்கும் நேரத்தின் மீதும் அடமானமாகக் காணப்படுகின்றது - வெளியிலுள்ளவர்களுக்கு ஏதேனும் செய்யப்படுவதற்கு முன்னதாக, இந்த ஓர் அடமானத்தினுடைய கோரிக்கைகளானது நியாயமான விதத்தில் சந்திக்கப்பட வேண்டும்.

கர்த்தருடைய வார்த்தைகளைப் படிப்பது என்பது கிறிஸ்தவர்களுக்கான மாபெரும் சிலாக்கியமாக இருக்கின்றது; எனினும் பெரும்பான்மையாய் இப்படிப் படிப்பதாவது, எவ்வித நோக்கமின்றி செய்யப்படுகின்றது. படித்த காரியங்கள் அன்றாட வாழ்க்கையில் நடைமுறைப்படுத்தப் படவில்லையெனில், அது நேரத்தை வீணடித்ததாகவே இருக்கும். ஆண்டவருடைய சித்தத்தை அறிந்து மாத்திரம் இருப்பவனல்ல, மாறாக ஆண்டவருடைய சித்தத்தைச் செய்திடுவதற்குப் பொறுமையுடனும், விடாமுயற்சியுடனும் நாடுகிறவனே அங்கீகரிக்கப்படுவான் மற்றும் கிரீடத்தை வெல்லுவான். கிடைக்கப்பெறும் ஒவ்வொரு நியாயமான வாய்ப்புகளும் கர்த்தருடைய ஜனங்களினால், தெய்வீகத் திட்டம் குறித்த அறிவைப் பெற்றுக்கொள்வதற்காய் - அதுவும் பலிசெலுத்திகூட இவ்வறிவைப் பெற்றுக்கொள்வதற்காய்ப் பயன்படுத்தப்பட வேண்டும்; ஆனாலும் தான் பலிசெலுத்திடுவது மற்றவர்களுடைய நலன்களும், சௌகரியங்களுமாய்ப் பிரதானமாகக் காணப்படாமல், மாறாக தன்னுடைய நலன்களும், சௌகரியங்களுந்தான் பலிசெலுத்தப்படுகின்றதாவெனப் பார்த்துக்கொள்வதில் கர்த்தருடைய பிள்ளையானவன் கவனமாய் இருந்திட வேண்டும். மற்றவர்களுடைய நலன்களைப் பொருட்படுத்தாது இருந்து (நலன்களுக்கடுத்தவைகளைச் செய்யாமல்) நாம் வேதாகம ஆராய்ச்சிகளைப்பண்ணுகின்றோமானால், இது கர்த்தருடைய அன்பின் ஆவி அதிகமாய் உள்ளே வாசமாயிருக்கின்றது என்பதற்கு அறிகுறியாய் இராமல், மாறாக சுயநலத்திற்கான அறிகுறியாகவே இருக்கும்.

தெய்வீகத் திட்டம் குறித்த நம்முடைய ஆராய்ச்சிகளைக் கூடுமானமட்டும் நமக்குப் பிரயோஜனமானவைகளாக்கிட, நாம் நம்மைப் போஷிப்பதற்கென்று நேரத்தைச் செலவாக்கிடும் அதேவேளையில், மற்றவர்களுக்கும் சத்தியத்தைப் பகிர்ந்துகொடுப்பதில் தினந்தோறும் அதிகமான நேரம் செலவழித்திட வேண்டும் மற்றும் "எவன் தண்ணீர்ப் பாய்ச்சுகிறானோ, அவனுக்குத் தண்ணீர்ப் பாய்ச்சப்படும்" எனும் வேதவாக்கிய வார்த்தைகளின் உண்மையினைக் கிறிஸ்தவ அனுபவங்களானது நிரூபிக்கவே செய்துள்ளது; ஆகையால் கர்த்தருடைய ஊழியக்காரன் படிப்படியாக மற்றவர்களுக்குச் சத்தியத்தைப் பகிர்ந்துகொடுப்பதில் அதிகமதிக ஆர்வம் அடைபவனாக இருப்பான் மற்றும் மற்றவர்களுக்குச் சத்தியத்தினைப் பகிர்ந்துகொடுப்பதற்கென ஆயத்தமாகுகையில் அல்லது மற்றவர்களுக்குச் சத்தியத்தைப் பகிர்ந்துகொடுக்கையில், கிருபையிலும், அறிவிலுமுள்ள தன் சொந்த வளர்ச்சியினைக் கண்டுகொள்பவனுமாயும் இருப்பான். ஜீவியத்தின் கடமைகள் விஷயத்திலும், சத்தியத்தினை மற்றவர்களுக்கு முன்வைப்பது தொடர்புடைய வாய்ப்புகளைப் பயன்படுத்திடும் விஷயத்திலும், சோம்பேறித்தனம், அலட்சியம் முதலானவை . . . நிச்சயமாய் ஆவிக்குரிய தரித்திரத்திற்கான அறிகுறியாகும். "அசதியாயிராமல் ஜாக்கிரதையாயிருங்கள்; ஆவியிலே அனலாயிருங்கள்; கர்த்தருக்கு ஊழியஞ்செய்யுங்கள்" என்னும் வேதவாக்கிய வார்த்தைகளைக் கர்த்தருடைய ஜனங்கள் அனைவரும் எப்போதும் தங்கள் மனங்களுக்கு முன்பாகக் கொண்டிருப்பது நலமாயிருக்கும்.

எவ்வளவு நேரம் கொடுக்கப்பட வேண்டும் என்ற கேள்விக்கு, ஆவியின் அனலைப் பொறுத்தே தவிர வேறு எந்தச் சட்டமும் போடப்பட முடியாது. ஆவியில் அனலுள்ளவர் கிட்டத்தட்ட அனைத்து நேரங்களிலும் - தன்னுடைய முழுப்பலத்தோடு, தன் கைக்கு அகப்படுகிறது எதுவோ அதைச் செய்துகொண்டே இருப்பார் - அதாவது மற்றவர்களுக்குப் பூமிக்கடுத்த விஷயங்களிலும், ஆவிக்கடுத்த விஷயங்களிலும் ஊழியஞ்செய்துகொண்டே இருப்பார்.

---

R2747 [தெரிந்தெடுக்கப்பட்ட பத்திகள்]

# கேள்வி, பதில்கள்

## பரலோக மற்றும் பூலோக கணவனிடத்திலான கடமை

கேள்வி: -- நான் ஒரு கிறிஸ்தவ சபை பிரிவைச் சார்ந்த ஊழியக்காரனுடைய மனைவி ஆவேன். பல வருஷங்களாக நான் சத்தியத்தினைப் படித்துக்கொண்டு வருகின்றேன் மற்றும் வாட்ச் டவர் வெளியீடுகளானது, உண்மையான சுவிசேஷமாய்க் காணப்படுகின்றது என்ற உறுதியும் எனக்கு ஏற்பட்டிருக்கின்றது. என்ன பின்விளைவுகள் ஏற்படுவதாக இருப்பினும், என் ஆண்டவருக்கு உண்மையாய் இருந்திட நான் விரும்புகின்றேன்; ஆனால் என்னுடைய கடமை என்னவாக இருக்கின்றது என்பதை அறிந்துகொள்வதில் நான் கொஞ்சம் குழப்பத்தில் காணப்படுகின்றேன். ஓர் ஊழியக்காரனின் மனைவியாக நான் இருப்பதினால், நான் அச்சபையின் அங்கமாகவும் காணப்படுகின்றேன்; சபையாருக்கு இசைக்கருவியை வாசித்திடும் ஆர்கனாகவும், ஞாயிறு பள்ளியின் ஆசிரியராகவும் நான் காணப்படுகின்றேன். என்னுடைய கேள்வி என்னவெனில்: தேவனுடைய சத்தியம் மற்றும் குணலட்சணம் பற்றி - சுவிசேஷத்தைப் பற்றி அநேகம் விதங்களில் தவறாய் எடுத்துக்காட்டப்படுகின்றது என்று நான் புரிந்துகொண்டுள்ளதான சபையின் ஆராதனையினின்றும், அதற்கு ஒத்துழைப்புக்கொடுப்பதிலிருந்தும் நான் விலகிட - பாபிலோனை நான் விட்டு வெளியேறிட வேண்டுமா அல்லது வேண்டாமா? என்பதேயாகும்.

என்னைப் பொறுத்தமட்டில் நான் கர்த்தர் அனுமதித்திடும் எந்தப் பாடுகள்படவும் விருப்பத்துடன் இருப்பதினால், பூலோக நன்மைகளைப் பெரிதாகப்பார்த்திட விருப்பம்கொள்ளவில்லை. என்னோடுகூடக் கஷ்டப்படப்போகிற மற்றவர்கள் குறித்தே என்னுடைய தயக்கம் காணப்படுகின்றது. இதனால் தன் ஸ்தானத்தினையும், அதன் சிறிய சம்பளத்தையும் இழந்துபோக வாய்ப்புள்ளதான என் கணவனோ, சத்தியத்துடன் ஒத்துணர்வு கொண்டவரல்ல; சத்தியத்தின் மீதான அவருடைய ஆர்வத்தினைத் தூண்டிடுவதற்குரிய என் சிறந்த பிரயாசங்கள் பயனற்றதாகின. அவரும் கஷ்டத்திற்குள்ளாவார் மற்றும் எங்கள் இரண்டு பிள்ளைகளும் கஷ்டத்திற்குள்ளாவார்கள் மற்றும் நானும் கஷ்டத்திற்குள்ளாகுவேன்; என்னுடைய கேள்வி என்னவெனில் - எந்தமட்டும் மற்றவர்களை இதில் நான் சம்பந்தப்படுத்துவது சரியாயிருக்கும்? நமது கர்த்தருக்குப் பிரியமாய்க் காணப்படும் விதத்தில் நான் என்ன செய்திட வேண்டும்?

பதில்: -- அருமையான சகோதரியே, உங்கள் காரியம் அசாதாரணமான காரியமாகும். இது விஷயத்தில் கர்த்தருடைய சித்தம் என்னவாக இருக்கும் என்று நாங்கள் கருதுபவைகளை முன்வைத்து மற்றும் அதற்கான காரணங்களையும் தெரிவித்து, காரியங்களை நீங்களே முடிவெடுப்பதற்கெனக் காரியத்தினை உங்கள் சொந்த மனசாட்சியின்படி செய்ய விட்டுவிடுகின்றோம். உங்களால் அடையமுடிந்த சிறந்த வெளிச்சத்தின்படி, கர்த்தருடைய சித்தம் என்னவென்று நீங்கள் புரிந்துள்ளவைகளைச் செய்திடுவது உங்களது கடமையாக இருக்கின்றது.

ஆகையால் முதலாவதாகச் சூழ்நிலைகள் அனைத்தையும் உங்கள் கணவனிடத்தில் முழுமையாகவும், ஒளிவுமறைவு இல்லாமலும் விவரியுங்கள் மற்றும் சபையின் பிரதிநிதியாகவும், ஊழியக்காரனாகவும் காணப்படும் அவரிடம், உங்களுடைய பெயரை, பட்டியல் முதலானவைகளிலிருந்து நீக்கிட கேட்டுக்கொள்ளும் கடிதம் ஒன்றினைக் கொடுங்கள்; (இதற்கான அச்சடிக்கப்பட்ட கடிதங்களை நாமே இலவசமாய் வழங்கிடுவோம்). சபையின் பிரதிநிதியாகக் காணப்படும் உங்கள் கணவன் விரும்பினால், பெயர்ப்பட்டியலிலிருந்து உங்கள் பெயரை அழித்துவிடலாம். இக்காரியத்தினைப் பொதுப்படையாய் அறிவித்திடும்படிக்கு நீங்கள் அவரிடத்தில் கேட்டுக்கொள்ளலாம்; ஆனாலும் உங்களது வேண்டுகோளின்படியே செய்திடுவதற்கு அவருக்குக் கட்டாயமில்லை மற்றும் (வழக்கத்திற்கு மாறாக) நீங்கள் அசாதாரணமான சூழ்நிலைமையில் காணப்படுவதினால், . . . உங்கள் கணவன் விரும்பினால் தவிர, மற்றப்படி "விலகும் கடிதங்களை" சபையின் அங்கத்தினர்கள் அனைவருக்கும் நீங்கள் அனுப்பிட வேண்டாம் என்று நாங்கள் அறிவுரை வழங்குகின்றோம். பொறுப்பினைக் கணவனிடத்தில் விட்டுவிடுங்கள்.

ஞாயிறு பள்ளியில் போதித்தல் தொடர்புடைய விஷயத்தில் - ஒருவேளை வயதுவந்த பிள்ளைகளுடைய வகுப்பாய் இருக்கும்பட்சத்தில், நீங்கள் சபை பிரிவுணர்ச்சிக் கோட்பாடுகள் இல்லாமல், மாறாக வேதாகமத்தின் உண்மையான இறையியலைப் போதித்து, அந்த வகுப்புகளைத் தொடரும்படியாக நாங்கள் அறிவுரை வழங்குகின்றோம். இப்படிப் போதித்திடும் ஒரே நிபந்தனையின்படியே நீங்கள் உங்களது வகுப்புகளைத் தொடர்ந்து நடத்துவீர்கள் என்பதை, சபையின் பாஸ்டராகிய உங்கள் கணவனுக்குத் தெரியப்படுத்துங்கள். இசைக்கருவிகளை வாசிக்கும் விஷயத்தில், அதையும் நீங்கள் தொடர்ந்து செய்திடும்படி நாம் பரிந்துரைக்கின்றோம்; அதுவும் வேதவாக்கியத்திற்கு முரணானது என்று நீங்கள் நம்பிடும் தவறான கீர்த்தனைகளுக்கு இசைவாசித்திட உங்களது மறுப்பினைக் குறித்துக் கணவனிடம் விவரித்துவிடுங்கள் மற்றும் இசைக்கருவிகளை நீங்கள் தொடர்ந்து வாசித்திட கணவன் விரும்புவாரானால், கீர்த்தனைகளைத் தெரிவுச் செய்யும் விஷயத்தில் அவர் உங்களுக்குச் சில சிறு சுயாதீனங்களைக் கொடுக்கும்படிக்கு வேண்டிக்கொள்ளுங்கள். ஆனாலும் இந்த விஷயத்தில் நீங்கள் மிக அதிகமாய்க் கடுமையாய்ப் பேசுபவராகவும்/ஜாக்கிரதையானவராகவும், குற்றம் காணுகிறவராகவும் இருக்க வேண்டாம் என்று நாங்கள் அறிவுரை வழங்குகின்றோம். ஒரே வார்த்தையிலிருந்து மற்றவர்களால் சரியற்ற கருத்துகளை அடைய முடிகிறதாயிருக்க மற்றும் நம்மால் சரியான கருத்துக்களை அடைய முடிகிறதாயிருக்க, அப்படியான எந்தவொரு வார்த்தையையும் தேவனைத் துதித்திடும் விஷயத்தில், தேவ ஜனங்கள் பயன்படுத்துவதில் தவறு செய்யவில்லை என நியாயப்படுத்திடலாம் என்று நாங்கள் எண்ணுகின்றோம்.

நாங்கள் வழக்கமாய் ஆலோசனை வழங்குவதிலிருந்து இப்பொழுது வேறுபட்டு வழங்குவதற்கான எங்கள் தரப்புக் காரணங்கள் இரண்டாகும்; அவை: (1) உங்கள் கணவன் பெயர்ச்சபையினராகவும், அநேகமாக உண்மையில் ஒரு கிறிஸ்தவனாகவும் இருக்கின்றார் மற்றும் இதனால் உங்கள் மனசாட்சி சம்பந்தப்படாத விஷயத்தில் - அதாவது உதாரணத்திற்கு மேலே சொல்லப்பட்டுள்ள காரியங்களில் நீங்கள் கணவனது கணிப்புகளுக்குச் சிலவற்றை விட்டுக்கொடுத்துவிடுவது உங்களுக்குத் தகுதியானதாய் இருக்கும்.

(2) இம்மாதிரியான காரியங்களுக்குக் கணவனுடைய ஸ்தானத்திற்கும், மனைவியினுடைய ஸ்தானத்திற்கும் சிறு வித்தியாசம் உள்ளது; மனைவியானவளால் பொறுப்புகள் சிலவற்றைக் கணவன்

மீது வைத்திடலாம்; ஆனால் கணவனால் மனைவி மீது எந்தப் பொறுப்பினையும் வைத்திட முடியாது. நாம் நியாயப்பிரமாணத்தின் கீழ் இல்லை; எனினும் காரியங்களைக் குறித்த கர்த்தருடைய கண்ணோட்டங்கள் பற்றின சில புரிந்துகொள்ளுதலை நியாயப்பிரமாணமானது நிழலான விதத்தில் நமக்குக் கொடுக்கின்றதாய் இருக்கின்றது; உதாரணத்திற்கு லேவியராகமம் 30-ஆம் அதிகாரத்தினைப் பார்க்கவும். உங்களுடைய அனைத்தையும் நீங்கள் அர்ப்பணம்பண்ணியுள்ளதான கர்த்தருக்குரிய உங்களது வாக்குறுதியினை, உங்கள் கணவன் அறிவார் மற்றும் இதற்கு அவர் ஒத்துக்கொள்ளாமல் இருக்கவில்லை. ஆகையால் உங்கள் கணவன் தன்னுடைய மனசாட்சியினை மீறி நடக்காமல், உங்களது மனசாட்சியினுடைய சுயாதீனத்தில் எவ்விதத்திலும் குறுக்கிட முடியாது.

---

R2100 [தெரிந்தெடுக்கப்பட்ட பத்திகள்]

# பொதுவான ஆர்வத்தைத் தூண்டும் கேள்விகள்

## தாயாகிய ஏவாள் மீட்கப்பட்டிருக்கின்றாளா?

கேள்வி: -- மனிதனாகிய கிறிஸ்து இயேசு ஆதாமுக்காகவும், அவர் அரையிலிருந்து பிறந்திடாத சந்ததியாருக்காகவும் தம்மையே ஈடுபலியென அல்லது சரிநிகர் சமான விலையாகக் கொடுத்தார் - காரணம் ஆதாமில் பிறந்திடாத சந்ததி, அவர் கீழ்ப்படியாமல் போன காலக்கட்டத்தில் அவருடைய அரையில் காணப்பட்டு, பின்னர்ப் பிறந்தது முதற்கொண்டு அவருடைய தண்டனையின் அனைத்து அம்சங்களிலும் இயல்பாகவே பங்கடைந்தவர்களாய் இருக்கின்றனர் என்று வேதவாக்கியங்கள் போதிக்கின்றன என்று நீங்கள் நிரூபிப்பது உண்மையாக இருக்குமானால், தாயாகிய ஏவாளின் விஷயம் எப்படியாக இருக்கும்? மீறுதலின்போது அவள் ஆதாமுக்குள்ளாகக் காணப்படவில்லை, மாறாக ஒரு தனிப்பட்ட ஜீவியாக தன் சொந்தக் கிரியைகளுக்குக் கணக்கு ஒப்புவிக்க வேண்டியவளாகவும், கீழ்ப்படியாமையின் பாவத்தில் முதலாவது பங்கெடுத்தவளாகவும் காணப்பட்டாள் மற்றும் இதனால் ஆதாமுக்கு முன்னதாகவே மரணத்தண்டனைத் தீர்ப்பில் பங்கெடுப்பவளாக இருக்கின்றாள். அவளுக்கான ஈடுபலி எப்படிச் செலுத்தித்தீர்க்கப்பட்டது அல்லது எப்போதேனும் அது செலுத்தித் தீர்க்கப்பட்டதா மற்றும் தண்டனைத் தீர்ப்பினின்று அவள் எப்போதேனும் விடுவிக்கப்படுவாளா?

பதில்: -- ஆரம்பத்தில் ஏவாள் ஆதாமினுடைய சரீரத்தின் ஒருபாகமாய் இருந்தாள் மற்றும் சரீர ரீதியில் ஆதாமிடமிருந்து ஏவாள் பிரிக்கப்பட்ட பிற்பாடு, அவள் உண்மையில் ஆதாமிடமிருந்து பிரிக்கப்பட்டவளாக இல்லை; ஆதாம் கூறினதுபோல "இவள் என் எலும்பில் எலும்பும், என் மாம்சத்தில் மாம்சமுமாய்" இருக்கிறாள் - அவர்கள் இருவரல்ல, மாறாக ஒரே மாம்சமாய் இருந்தார்கள். ஏவாளுக்கு உதவிப்புரியும் துணைவனாக இருக்கும்படிக்கு ஏவாளுக்காய் ஆதாம் கொடுக்கப்படாமல், மாறாக ஆதாமுக்கு (பொருத்தமான) துணைவியாக இருக்கும்படிக்கு ஏவாள் ஆதாமுக்காகக் கொடுக்கப்பட்டாள். இதில் எதுவும் ஏவாளை, ஆதாம் அடிமையாக நடத்திடுவதற்கு அல்லது அவளிடத்தில் கொடுமையாய்க் காணப்படுவதற்கு அல்லது அவளைப் புண்படுத்திடுவதற்கு அல்லது அவளிடத்தில் அன்பற்று இருப்பதற்கு, ஆதாமிடம் உரிமையிருப்பதாக விழுந்துபோன சந்ததியில் சிலர் கற்பனைபண்ணிக்கொள்வது போன்று ஏதுமில்லை. முற்றிலும் நேர்மாறாக ஆதாம் ஓர் உண்மையான மனுஷனாகக் காணப்பட்டு ஏவாளை தன் "சொந்தச் சரீரமெனப் பாவித்து," அவளை அன்புகூர்ந்து,

அவளுக்காகத் திட்டங்கள்பண்ணி மற்றும் அவளுக்காக அக்கறைக்கொண்டிருந்தார். தேவன் பிரித்தபோது ஒருவர் இன்னொருவருடைய தேவைகளுக்குப் பொருத்தமானவர்களாய் இருக்கும்படிக்குப் பார்த்துக்கொண்டார். சரீர ரீதியிலும், மனரீதியிலும் பலமானவராய்க் காணப்பட்ட ஆதாம், தன்னுடைய பராமரிப்பு மற்றும் அன்பின் தேவையில் உள்ள ஒரு துணைவியைப் பெற்றிருப்பதில் மகிழ்ந்தார். "வலுக்குறைந்த பாத்திரமாகிய" ஏவாள் சரீர ரீதியிலும், மனரீதியிலும், பாங்கிலும் மென்மையானவளாக இருந்தபடியினால், அவள் தனது கணவனாகிய இராஜாவினுடைய கனிவான மற்றும் உயர்தரமான உணர்வுகளைத் தன்பால் ஈர்க்கப்பெற்றவளானாள் மற்றும் ஆதாமும் தன் ஆட்சிக்குட்பட்ட ஆசீர்வாதங்கள் மற்றும் கனங்கள் அனைத்திலும் இராணியென, அவளுக்கு ஒரு பங்கினைக் கொடுத்திட பிரியமாய் இருந்தார்.

ஆனால் அவர்கள் இருவரல்ல, மாறாக ஒருவரே ஆவர் மற்றும் அந்த ஒருவருக்கு ஆதாம் தலையாக இருந்தார். அவர்களைக் கையாளும்போது தேவன் தனித்தனியே பார்க்காமல் ஒருவராகவே பார்த்தார். ஆதாம் தன்னுடைய சொந்த ஆள்துவத்தை மாத்திரம் அல்லாமல், தன் மனைவியின் ஆள்துவத்தையும் அடையாளப்படுத்துகின்றவராகவே இருந்தார்; ஏனெனில் அவள் ஆதாமின் சொந்தச் சரீரமாய் இருந்தாள் மற்றும் ஆதாமின் எலும்பில் எலும்பும், மாம்சத்தில் மாம்சமுமாய் இருந்தாள் - அவள் ஆதாமின் ஒரு பாகமாவாள்.

ஆகையாலே "ஆதாமுக்குள் எல்லோரும் மரிக்கின்றார்கள்" என்று எழுதப்பட்டுள்ளது. இப்படியாகவே ஏவாளின் அடையாளம் ஆதாமுடன் இணைக்கப்பட்டிருந்தது; விலக்கப்பட்ட கனியைப் புசிக்கும் பாவத்தில் ஒருவேளை அவள் பங்கெடுக்காமல் இருந்தாலும், அவள் ஆதாமின் ஒரு பாகமென, அவரது துணைவியென அவரது தண்டனையாகிய மரணத்தில் பங்கடைந்திருப்பாள். அதுபோல மீறுதலில் ஏவாளே முதலாவதாக உட்பட்டிருந்தபோதிலும், அவளுடைய செய்கையானது சந்ததியினை அபாயத்திற்குள்ளாக்கவில்லை; ஏனெனில் சந்ததியானது அவளுக்குள் இல்லாமல் ஆதாமுக்குள்ளே இருந்தது (1 கொரிந்தியர் 15:22). "இப்படியாக, ஒரே மனுஷனாலே பாவமும் பாவத்தினாலே மரணமும் உலகத்திலே பிரவேசித்ததுபோலவும், எல்லா மனுஷரும் பாவஞ்செய்தபடியால், மரணம் எல்லாருக்கும் வந்ததுபோலவும் இதுவுமாயிற்று" (உரோமர் 5:12-19).

இன்னுமாகப் பொறுப்பானது குடும்பத்தின் தலைவனாகிய ஆதாமினிடத்தில் காணப்படுவதினால் ஏவாள் அடைந்த ஏமாற்றமும், அவளுடைய மீறுதலும் அவள் மீது மரணத்தைக் கொண்டுவந்தாக வேண்டும் என்ற அவசியமும் கண்டிப்பாய் இல்லை; அவள் அநேகமாகச் சிட்சிக்கப்பட்டிருந்திருப்பாள். இந்த ஒரு கொள்கையானது, இதே சிருஷ்டிகரினால் வடிவமைக்கப்பட்ட நியாயப்பிரமாண உடன்படிக்கையின் கீழ்க்கர்த்தரினால் சுட்டிக்காண்பிக்கப்பட்டுள்ளது - இதுவும் கணவன் மற்றும் தகப்பனையுமே எல்லாவற்றிலும் குடும்பத்தினுடைய தலையாகவும், பிரதிநிதியாகவும் அங்கீகரித்தது மற்றும் இந்த ஏற்பாட்டினையே முன்வைக்கவும் செய்தது. உதாரணத்திற்கு எந்தவொரு மனுஷனும் கர்த்தருக்கு ஒரு வாக்குறுதியைக் கொடுத்திருந்தால், அதினின்று அவனால் தப்பிக்க இயலாது; ஆனால் ஒருவேளை ஒரு மனைவியோ அல்லது மகளோ கர்த்தருக்கென்று ஒரு வாக்குறுதியைக் கொடுத்திருந்தால், அது கணவனால் அல்லது தகப்பனால் ஒப்புதல் அளிக்கப்பட்டிருந்தால் தவிர மற்றபடி அது செல்லாததாகிவிடுகின்றது (எண்ணாகமம் 30:2, 5, 8, 13, 16). வேறுவார்த்தைகளில் சொல்ல வேண்டுமெனில் மனுஷனைக் குடும்பத்தின் தலைவனாகச் செயல்பட வைப்பதை மற்றும் ஸ்திரீயானவளை அவரது துணைவியாக வைப்பதை இயற்கையின் விதிகள் மூலம் இப்படியாகக் குடும்ப உறவுகளைத் தேவன் நிறுவினதோடல்லாமல், "கனமிக்கதும்," "நீதியானதும்," "நன்மையானதுமாக"

இஸ்ரயேலுக்குக் கொடுக்கப்பட்ட நியாயப்பிரமாணங்களிலும்கூட மேற்கூறிய காரியத்தினை அவர் தெளிவாய் வெளிப்படுத்தியுள்ளார் (உரோமர் 7:12).

திவ்விய ஏற்பாடுகளினுடைய இந்தக் காரியங்களை நாம் பார்க்கையில் ஏவாள் ஆதாமின் ஒரு பாகமாக மாத்திரம் கர்த்தரினால் அடையாளம் கண்டுகொள்ளப்பட்டாள் என்பதை நம்மால் தெளிவாகப் பார்க்க முடிகின்றது; ஆகையால் இதினிமித்தம் அவள் ஆதாமின் மீறுதலில் மாத்திரமல்ல, அதன் விளைவாகிய தண்டனையாகிய மரணத்திலும் அவளைச் சம்பந்தப்படுத்தியது என்று நம்மால் பார்க்கமுடிகின்றது. இன்னுமாக ஆதாமின் மீட்பு என்பது ஆதாமின் பாகமாகிய, "அவரது சரீரமாகிய" ஏவாளின் மீட்பையும் சுட்டிக்காட்டுகின்றதாய் இருக்கின்றது. திவ்விய ஒழுங்கில் கணவன் மனைவிக்கு இடையிலான இந்த நெருக்கமான உறவானது அப்போஸ்தலனாகிய பவுலினால் மிகத்தெளிவாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது (எபேசியர் 5:22-33).

* * *

இப்பொழுது அநேக திருமணங்கள் திவ்விய மாதிரியின்படியாக இருப்பதில்லை. மனரீதியிலும், ஒழுக்க ரீதியிலும், சரீர ரீதியிலும் மனுஷஜாதியினுடைய விழுகையானது அதன் பல்வேறு அங்கத்தினர்களை - சிலரை அதிகமாகவும் மற்றும் சிலரைக் குறைவாகவும் பாதித்துள்ளது. ஆதியில் பூரண பொருத்தத்துடன் காணப்பட்ட ஜோடி பெற்றிருந்த உயர்க்குணலட்சணங்களை அனைத்துப் புருஷர்களும், அனைத்து ஸ்திரீகளும் ஏறக்குறைய இழந்துவிட்டனர். ஆகையால் பொருத்தமற்றச் ஜோடிகள் அநேகர் இக்காலங்களில் இணைவதும் மற்றும் இதன் விளைவாக மகிழ்ச்சியற்ற நிலைமை ஏற்பட்டிருப்பதைக் காண்கையில் - அதுவும் விசேஷமாகப் பொருத்தத்தின் விஷயத்தில் திவ்விய ஒழுங்கானது அடையாளம் கண்டுகொள்ளப்படாமல் இருப்பதைக் காண்கையில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை. திவ்விய மாதிரியின்படி ஒரு மனுஷன் தன்னைவிட மேம்பட்டவளாக ஒரு ஸ்திரீயையும், அதேசமயம் தன்னைவிட கீழ்ப்பட்டவளாக இருக்கும் ஒரு ஸ்திரீயையும் திருமணம்பண்ணிடுவதைத் தவிர்த்துக்கொள்ள வேண்டும்; ஏனெனில் தன்னைவிட கீழ்ப்பட்ட ஒரு ஸ்தீரி எனும்போது ஜீவியத்தில் அவள் பொருத்தமற்றத் துணைவியாக இருப்பதினால், அவனால் அவளிடம் உண்மையான ஐக்கியத்தினைக்கொண்டிருக்க முடியாது; தன்னைவிட மேம்பட்ட ஸ்திரீயினுடைய விஷயத்தில் மேம்பட்ட ஒருவளுக்குத் தலையாக அல்லது கணவனாக இருக்கும் ஸ்தானத்தினை நிறைவேற்றிடுவதற்கு அவன் இயலாதவனாக இருப்பதினால், தொடர்ந்து போராட்டமே நிலவிடும். அதுபோலவே ஸ்திரீயும் தன்னைவிட கீழ்ப்பட்ட ஒரு புருஷனை, அதாவது "மனைவிகளே, கர்த்தருக்குக் கீழ்ப்படிகிறதுபோல, உங்கள் சொந்தப் புருஷருக்குக் கீழ்ப்படியுங்கள். கிறிஸ்து சபைக்குத் தலையாயிருக்கிறதுபோல, புருஷனும் மனைவிக்குத் தலையாயிருக்கிறான்; அவரே சரீரத்திற்கும் இரட்சகராயிருக்கிறார்" (எபேசியர் 5:22-23) என்ற திவ்விய கட்டளைக்கு ஏற்ப குடும்பத்தின் தலைவனாகவும், பொருத்தமான கணவனாகவும் தன்னால் பார்க்க முடியாத ஒரு நபரைத் திருமணம்பண்ணிக்கொள்ளாதபடிக்கு விசேஷமாய் எச்சரிக்கையாய் இருக்க வேண்டும்.

மனுஷன் நாகரிகமற்ற நிலைமைக்குள் மூழ்கினபோது, ஸ்திரீயும் அவனோடேகூட மூழ்கினாள்; மனுஷன் நாகரிகமான நிலைக்கு உயர்ந்ததுபோல, ஸ்திரீயும் அவனேடாடேகூட உயர்ந்தாள்; இதுபோலவே மனிதன் சீரழிவிற்குப்போனபோது அல்லது சீரடைந்தபோது, இதற்கேற்ப அவன் கீழுள்ள விலங்கு ஜீவராசிகளும், தாவரங்களும் சபிக்கப்பட்டன அல்லது ஆசீர்வதிக்கப்பட்டன. இது திவ்விய பிரமாணத்தினுடைய செயல்பாடாகும். சிறுவர்களுக்கான பள்ளிகளுடைய ஏற்பாடு போலவே, சிறுமிகளுக்கான பள்ளிக்கூடங்களும், பயிற்சிக் கல்லூரிகளும், புருஷர்களாலேயே ஏற்பாடு

பண்ணப்பட்டன. வளர்ந்துவரும் நாகரிகத்திற்கு ஏற்ப படிப்படியாக மாறிவரும் சட்டங்களானது புருஷர்களுடைய, அதே சமயம் ஸ்திரீகளுடைய உயர்ந்துவரும் நிலைமைகளையும் கவனத்தில் எடுத்துக்கொள்கின்றது; எனினும் இந்தச் சட்டங்களானது புருஷர்களாலேயே இயற்றப்படுகின்றது.

மனித சட்டங்களும், திவ்விய சட்டங்களைப் போலவே கணவன் மற்றும் தகப்பனையே - இவரில் பாகமாய் இருக்கும் இவரது மனைவிக்கு மாத்திரமல்லாமல், இவரது சிறு வயதுள்ள பிள்ளைகளுக்கும், பொதுவான நலனுக்கடுத்த காரியங்களில் பிரதிநிதியாகக் கருத்தில் எடுத்துக்கொள்கின்றது - அதாவது இஸ்ரயேலில் அடையாளம் கண்டுகொள்ளப்பட்டது போலவும், ஏதேனுக்குள் பாவம் பிரவேசிப்பதற்கு முன்பு அடையாளம் கண்டுகொள்ளப்பட்டது போலவுமாகும். நவீன காலங்களில் குடும்பத்தின் ஒற்றுமையை அழித்துப்போடுவதற்கும், ஒருவராய் இருந்த கணவன் மனைவியினை இருவர் ஆக்கிடுவதற்குமான பிரயாசங்களானது - தற்கால தீமைகளுக்கான தீர்வாயிருக்கும் என்ற நம்பிக்கையில் மனுக்குலமானது பற்றிக்கொண்டிருக்கும், மற்ற வஞ்சனைகள் போன்றதொரு வஞ்சனையே ஆகும். தங்கள் கணவன்மார்களுடனும், மகன்களுடனும் இணக்கமாயிராத தாய்மார்களும் மற்றும் தங்கள் சகோதரர்களுடனும், தகப்பன்மார்களுடனும் இணக்கமாயிராத சகோதரிகளும் இதினிமித்தம் உரிமைக்கோர அபாத்திரர்களாகத் தங்களை நிரூபித்துக்கொள்கிறவர்களாக இருக்கின்றார்கள். ஆனாலும் இணக்கமாய் இருப்பவர்களுக்கு உரிமைக்கோர அவசியமில்லை, காரணம் இவர்கள் தேவன் ஏற்படுத்தியுள்ள ஒழுங்குடன் இசைவாக இருந்து, அதை உணர்ந்தவர்களாகவும் இருக்கின்றனர்.

---

R797 [தெரிந்தெடுக்கப்பட்ட பத்திகள்]

## குடும்ப ஜெபம்

குறிப்பாய்த் தெரிவிக்கப்படவில்லை என்றாலும், கணவனும், மனைவியும் தேவனைத் தொழுதுகொள்ளும் விஷயத்திலும், திவ்விய சித்தத்திற்குப் பணியும் விஷயத்திலும்… தங்கள் இருதயங்களை ஒருங்கிணைப்பதும், தங்கள் முழங்கால்களை முடக்கிடுவதும் எத்துணை ஏற்ற காரியமாய் இருக்கும். இது எவ்வளவாய் அந்த இருதயங்களையும், ஜீவியங்களையும் ஒன்றிணையப்பண்ணிட வேண்டும். இத்தகைய முன்மாதிரியானது குழந்தைகளுக்கு எத்துணை ஆசீர்வாதமாய் இருக்கும். சடங்காச்சாரமான, நீண்ட ஜெபங்கள் மூலமாய் இல்லாமல், கர்த்தர் ஜெபம்பண்ணினதுபோன்று எளிமையான, உண்மையான, விசுவாசமுள்ள ஜெபங்களின் வாயிலாய்ப் பெற்றோர்கள் நன்மையான ஒவ்வொரு ஈவுகளை அருளுகிறவர்பாலுள்ள தங்கள் அன்பையும், விசுவாசத்தையும் வெளிப்படுத்துவதன் காரணமாய் - இந்தச் சிறு ஒலிவ கிளைகளானது/ பிள்ளைகள் தங்களது வாலிப நாட்களில் சிருஷ்டிகரை நோக்கிப் பார்ப்பதற்குப் பயிற்றுவிக்கப்படுவது எத்துணை அருமையான காரியமாய் இருக்கும். பெற்றோர்கள் தங்கள் பரலோக பிதாவினுடைய உன்னதமான சித்தத்திற்கும், ஞானத்திற்கும் தலைவணங்கிடுவதையும், அதை அடையாளங்கண்டுகொள்வதையும் பிள்ளைகள் காணும்போது, தங்கள் சிருஷ்டிகரைப்பற்றி அறிந்துகொள்வதற்கும், அவரைத் தொழுதுகொள்வதற்கும் கற்றுக்கொண்டு வருகையில், பெற்றோரின் அதிகாரத்திற்குக் கீழ்ப்படிவது மற்றும் கீழ்ப்பட்டிருப்பதுபற்றிய பாடங்களையும் முன்மாதிரியிலிருந்து கற்றுக்கொள்வார்கள்.

பிள்ளைகள் சிந்தித்துச் செயல்படும் வயதிற்கு வருகையில் தினந்தோறும் உள்ள குடும்ப ஜெபமானது, அது காலையிலோ அல்லது மாலையிலோ செய்யப்படுவதாக இருப்பினும் . . . அதைத் தேவன்

நமக்கு முன் (ஜெபம் ஏறெடுத்தல் எப்படி இருக்க வேண்டுமென்று) எப்படி முன்வைத்தாரோ, அப்படியே பிள்ளைகளின் பார்வையிலும் காணப்பட வேண்டும்; அதாவது கட்டாயத்தின்பேரில் இல்லாமல், மாறாக விருப்பமுள்ள மனதினால், நன்றியுள்ள, அன்புள்ள இருதயங்களினால் ஏறெடுக்கப்பட வேண்டும். இத்தகைய செல்வாக்கும், முன்மாதிரியும் பிள்ளைகளுடைய எதிர்க்கால வாழ்க்கையில் . . . இல்லத்தையும், பெற்றோர்களையும், பரிசுத்தமான காரியங்களையும் . . . அவர்களுக்கு அருமையானவைகளாக்கிடும். தேவனை உண்மையாய்த் தொழுதுகொள்வது என்பது தற்கால மற்றும் எதிர்க்கால ஜீவியத்திற்கும் நன்மை பயக்கின்றதாயிருக்கும்.

---

R4977 [தெரிந்தெடுக்கப்பட்ட பத்திகள்]

# நீதியான கண்டித்தல் மற்றும் தவறை மன்னித்தல்

"நீதிமான் என்னைத் தயவாய்க்குட்டி, என்னைக் கடிந்துகொள்ளட்டும்; அது என் தலைக்கு எண்ணெய்யைப்போல் இருக்கும்; அது என் தலையை நொறுக்கிப் போடுவதில்லை."
(சங்கீதம் 141:5; சரியான மொழியாக்கம்)

வேதவாக்கியங்களில் நீதிமான் என்ற வார்த்தையானது இரண்டு விதங்களில் பயன்படுத்தப்பட்டுள்ளது. ஒரு விதத்தில் அது முற்றும் முழுமையான நீதியான நிலையைக் குறிக்கின்றதாய் இருக்கின்றது; உதாரணத்திற்கு, "அந்தப்படியே நீதிமான் ஒருவனாகிலும் இல்லை." நம்முடைய ஆதார வசனத்தில், நமது கர்த்தர் இயேசு குட்டுகிற நீதிமானாகக் குறிப்பிடப்பட்டுள்ளார். இப்படியான விதத்தில் பார்க்கும்போது, சிட்சைகள் என்பது நமது கர்த்தரிடத்திலிருந்து வருகின்றதாய் இருக்கின்றது; மற்றும் சிட்சையைப் பெற்றுக்கொள்கின்றவன், இப்படியான கண்டித்தலிலுள்ள தேவனுடைய ஞானம், நீதி மற்றும் அன்பை அறிந்தவனாக, அதை உணர்ந்துகொண்டுள்ள நிலையில் ஏற்றுக்கொள்வான். ஆனால் இன்னொரு விதத்தில் நீதிமான் என்ற வார்த்தையானது, மனுக்குலத்திற்குப் பொருந்தும் வகையிலும் பயன்படுத்தப்படுகின்றது. வேதவாக்கியங்களில் பல்வேறு நபர்கள் நீதிமான்கள் என்று குறிப்பிடப்படுகின்றனர்; காரணம் அவர்கள் பூரணமானவர்கள் என்பதினால் இராமல், மாறாக அவர்கள் சரியான நோக்கமும், சரியான சித்தமும் உடையவர்களாய் இருந்து, தங்கள் நடக்கையில் தேவனுடைய ஆவியை, நீதியின் ஆவியை வெளிப்படுத்தினதினாலேயே ஆகும்.

இப்படியாக நீதிமான் என்ற இந்த வார்த்தையை, ஆதார வசனத்தில் பொருத்திப் பார்க்கும்போது, அது கர்த்தருடைய ஜனங்களாய் இருப்பவர்கள் அனைவரும் யாரை திருத்திட முயற்சிக்கின்றார்களோ, அவர்களுக்கு உதவியாகவும், அவர்களுடைய நன்மைக்காகவும் இருக்கும் வகையில், நீதியாய்க் கண்டித்தலையும், நெறிப்படுத்துதலையும் செய்யமுடிகின்றவர்களாய்க் காணப்பட வேண்டும்; அதுவும் ஆறுதலையும், ஆசீர்வாதத்தையும், புத்துணர்வையும் கொண்டுவரும் விதத்தில் செய்ய முடிகின்றவர்களாய்க் காணப்பட வேண்டும்; அதுவும் நீண்ட காலம் நிலைத்திருக்கும் நறுமணம் கொண்டுள்ள நறுமண எண்ணெய் போன்று இருக்கும் விதத்தில் செய்யமுடிகின்றவர்களாய்க் காணப்பட வேண்டும் என்பதைச் சுட்டிக்காட்டுகின்றதாய் இருக்கின்றது. இந்தக் கருத்துக்களை நம்முடைய மனங்களுக்கு முன்பாகக் கொண்டிருக்கும்போது, இதில் நமக்கு விலையேறப்பெற்ற படிப்பினைகள் கிடைக்கின்றதாய் இருக்கும். முதலாவதாக நாம் கர்த்தரிடமிருந்து வரும் சரிப்படுத்துதல்களை ஏற்றுக்கொள்பவர்களில் அடங்குகின்றவர்களாக இருத்தல் வேண்டும் மற்றும் ஏதேனும் காரியத்தில் நாம் தவறு செய்திருந்தால், அதனை சரிசெய்துகொள்வதில் மகிழ்ச்சியாய் இருப்பவர்களாக இருத்தல்

வேண்டும்; அடுத்தப்படியாகக் கண்டித்தல் வழங்கப்படுவது ஏற்றதாக இருக்குமென்றால், அது பாதிப்பை ஏற்படுத்துகிற விதமாய் இராமல், மாறாக ஆவிக்குரியதாகவும், தூக்கிவிடுவதாகவும், புத்துணர்வு ஊட்டுவதாகவும் காணப்பட வேண்டும் என்பதை நாம் உணர்ந்துகொண்டவர்களாக இருத்தல் வேண்டும்.

இப்படியாகக் காணப்பட வேண்டுமெனில், கண்டித்தல் என்பது அனுதாபத்துடன்/ இரக்கத்துடன் கூடிய ஒன்றாகக் காணப்பட வேண்டும். கர்த்தருடைய ஜனங்கள் அனைவரும் மாம்சத்தில் விழுந்துபோனவர்களாகவும், ஆனால் கிறிஸ்துவில் புதுச்சிருஷ்டிகளாகவும் காணப்படுகின்றனர் என்றும், அவர்கள் கிறிஸ்துவுக்குள் புதிய சிருஷ்டிகள் என்றால் அவர்கள் கர்த்தருடைய மனதையும், அவரை மகிமைப்படுத்த வேண்டும் என்ற விருப்பத்தையும் கொண்டிருப்பார்கள் என்றும் நாம் நினைவில் கொண்டிருத்தல் வேண்டும். இந்த ஒரு கண்ணோட்டத்திலிருந்து கண்டித்தலை வழங்கக்கூடிய எந்த ஒரு சகோதரரும், தான் யாரைக் கண்டிக்கின்றாரோ அந்நபர் தீமையான நோக்கம் கொண்டிருக்கவில்லை என்பதை அடையாளம் கண்டுகொண்டு, முடிந்தமட்டும் தயவாயும், இரக்கமாயும், உண்மை விவரங்களை விளக்கிக்கொடுப்பவராய்க் காணப்படுவார். இம்மாதிரியான கண்டித்தலானது திடீரென்று கொடுக்கப்படக்கூடாது; மற்றும் கண்டித்தலை வழங்கும் நபர், வழங்கப்படவேண்டிய தண்டனை மற்றும் அதற்கான ஏற்றவேளை முதலானவைகள் கர்த்தருக்குரியது என்பதையும் நிதானித்துக்கொள்ள வேண்டும். இப்படியாகவே நீதிமானாய்க் காணப்படும் யாவரும், மற்றவரைக் கண்டிக்கும்போது காணப்பட வேண்டும். ஜாக்கிரதையாய்க் கருதிக்கொண்டும், ஜெபத்தில் வைத்த பிற்பாடும்தான், கண்டித்தல் பண்ண வேண்டும் மற்றும் இப்படிக் கண்டிப்பதே ஒரு சகோதரனுக்கு (அ) சகோதரிக்கு உதவி செய்வதற்கு இருப்பதிலேயே மிகச் சிறந்த வழியாய் இருக்கும் என்ற முடிவிற்கு வந்த பிற்பாடே கண்டிக்க வேண்டும். இப்படியான நிலைமையில் கண்டிப்புகள் யாவும் கொடுக்கப்பட்டால், இது சாதாரணமாய் வழங்கப்படும் கண்டிப்புகளைக் காட்டிலும், மிகவும் உதவிகரமானதாகக் காணப்படும் என்று நம் அனைவராலும் ஒத்துக்கொள்ள முடியும்.

## நொறுக்கும் விதமான கண்டித்தல் என்பது அநீதியானதாகும்

ஆதார வசனத்தில் இடம்பெறும் "அது என் தலையை நொறுக்கிப்போடுவதில்லை" என்பதான வார்த்தைகளானது, கண்டித்தல் துன்பத்தைக்கொடுக்கிறதாகவோ, நொறுக்கிப்போடுகிறதாகவோ காணப்படாமல், ஆசீர்வாதமாய்க் காணப்பட வேண்டும் என்பதைக் குறிக்கின்றதாய் இருக்கின்றது. ஒருவருடைய தலையை நொறுக்கிப்போடுதல் என்பது, அந்நபரைக் கொன்றுபோடுவதான காரியமாகும். மற்றவர்களுக்குப் பாதகம் ஏற்படுத்துவதற்கான (அ) மற்றவர்களுக்குப் பாதிப்பை ஏற்படுத்துவதற்கான நோக்கத்திற்காக நீதிமான்கள் உலகத்தில் காணப்படாமல், மாறாக உலகத்தில் நன்மை புரிவதற்கான நோக்கத்திற்காகவே காணப்படுகின்றனர். மற்றவர்களுக்குப் பாதிப்பை ஏற்படுத்துகின்றவர்கள், இப்படிச் செய்ததற்கு ஏற்ப அநீதிமான்களாய் இருப்பார்கள். தங்களால் கண்டிக்கப்படுபவர்களை நொறுக்கிப்போடத்தக்கதாக தங்களது விமர்சனங்களையும்/ குற்றஞ்சாட்டுதல்களையும் மற்றும் கண்டனங்களையும் பயன்படுத்துகின்றவர்கள் நீதிமான்கள் அல்ல. இப்படிப்பட்டவர்கள் குற்றங்களைச் சரியாய் எப்படிச் சுட்டிக்காட்ட வேண்டும் என்பதைக் கற்றுக்கொள்ள வேண்டும். இப்படிப்பட்டவர்கள் அப்போஸ்தலனின், "கடிந்துகொள்ளுதல்," "கண்டனம்பண்ணுதல்" முதலான வார்த்தைகள், தேவனுடைய ஜனங்கள் அனைவரிடமும் கூறப்படாமல், மாறாக மூப்பனாகிய தீமோத்தேயுவிடம் கூறப்பட்டதை அறிந்துகொள்ள வேண்டும். இதனால்தான் சாந்தகுணமுள்ள மனிதர்களாகவும், வளர்ச்சியடைந்துள்ள மனிதர்களாகவும், தங்களது சொந்த ஜீவியங்களையும், சொந்த நாவுகளையும் கட்டுப்படுத்தியுள்ள மனிதர்களாகவும் இருப்பவர்கள் மாத்திரமே மூப்பர்களாகத் தெரிந்தெடுக்கப்பட

வேண்டும்; இதினிமித்தம் இவர்கள் மற்றவர்களை நொறுக்கிப்போடுகின்றவர்களாய் இராமல், மாறாக இவர்களது கடிந்துகொள்ளுதலானது, மற்றவரைக் கர்த்தரிடம் நெருக்கமாய்க் கொண்டுவருவதற்கு நோக்கமாயும் மற்றும் இதற்கு உதவியாயும் மற்றும் உற்சாகமூட்டுகிறதாயும் மற்றும் துணைப்புரிகின்றதாயும் காணப்படும்.

## முதிர்வயதுள்ளவரைக் கடிந்துகொள்ளாமல்

முதிர்வயதுள்ளவரைக் கடிந்துகொள்ளாமல், அவரைத் தகப்பனைப்போன்று பாவிக்கும்படிக்கு, பரிசுத்தவனாகிய பவுல், தீமோத்தேயுவுக்குப் புத்திமதி கூறினபோது, அப்போஸ்தலன் இங்குச் சபையிலுள்ள மூப்பரைக் குறித்துக் குறிப்பிடாமல், மாறாக ஒரு நபரைக்காட்டிலும் வயதில் முதிர்ந்தவராய் இருப்பவரைக் குறித்துக் குறிப்பிடுகின்றார். உன்னைக்காட்டிலும் வயதில் முதிர்ந்தவரைக் கடிந்துகொள்ளாதே என்றும், அவரைத் தகப்பன்போன்று பாவிக்க வேண்டும் என்றும், இதுபோலவே முதிர்வயதுள்ள ஸ்திரீகளைத் தாய்களைப்போலவும், பாலிய புருஷர்களைச் சகோதரர்கள்போலவும், பாலிய ஸ்திரீகளைச் சகோதரிகள்போலவும், நடத்தவேண்டும் என்றும் உள்ள விதத்தில் அப்போஸ்தலன் குறிப்பிட்டுள்ளார். வேறு வார்த்தைகளில் சொல்லவேண்டுமெனில், மற்றவர்களுடைய சுயாதீனங்களை நசுக்கிடுவதற்கோ (அ) மற்றவர்களை அச்சுறுத்துவதற்கென்றோ, சபையில் மூப்பர்கள் நியமிக்கப்படவில்லை. தயவு, காருண்யம் முதலானவைகளின் ஆவியே பரிசுத்த ஆவியாய் இருக்கின்றது. இவைகள் அல்லாத வேறே ஆவியில் ஒரு மூப்பர் கடிந்துகொள்வாரானால், அவர் தன்னால் கடிந்துகொள்ளப்படும் நபர் ஒரு குழந்தை அல்ல என்பதையும், அந்நபர் குழந்தை போன்று நடத்தப்படக்கூடாது என்பதையும், அந்நபர் கடிந்து கொள்ளப்படவோ (அ) தாக்கிப்பேசப்படவோ (அ) "இவைகள் அனைத்துமே தவறு!" என்று கூறப்படவோ கூடாது என்பதை நினைவில் கொண்டிருக்க வேண்டும். ஞானமற்ற விதங்களில் வழங்கப்படும் கடிந்துகொள்ளுதலானது, பிரச்சனைக்கான பலமான காரணமாய் அமைகின்றது. வயதில் முதிர்ந்த ஒருவர், ஒரு காரியத்தை அறிந்துகொள்ள வேண்டியுள்ளது என்று, வயதில் குறைந்த ஒரு நபர் எண்ணி, "இவைகளையெல்லாம் நீங்கள் அறிய வேண்டியிருக்கிறது, நான் உங்களுக்குப் பாடம் புகட்டுகிறேன்" என்று வயதில் குறைந்தவர் கூறுவதும், பொறுமையை இழந்துபோவதும், ஞானமுள்ள காரியமாகவோ (அ) இரக்கமுள்ள காரியமாகவோ (அ) தயவுள்ள காரியமாகவோ இருந்திடாது. இம்மாதிரியான ஆவியானது, அநேக இடங்களில் பிரச்சனையை ஏற்படுத்தியுள்ளது. இம்மாதிரியான நடக்கைகளுக்கு எதிர்மாறாகவே அப்போஸ்தலனுடைய புத்திமதி காணப்படுகின்றது மற்றும் அவர் இரக்கத்தையும், தயவையும், வயதை கருத்தில்கொள்ளும் தன்மையையும் மற்றும் இது விஷயத்தில் தேவையான அனைத்தையும் அறிவுறுத்துகின்றவராய்க் காணப்படுகின்றார். அநேக வேதவாக்கியங்களைப் பார்க்கும்போது, நம் நாட்களில் நாம் காணமுடியாத அளவு, முற்காலங்களில் குடும்பத்தின் மீதான ஓர் அனுதாபம் காணப்பட்டுள்ளது என்பது நிச்சயமே; இதுவே அப்போஸ்தலனின் பின்வரும் வார்த்தைகளிலும் வெளிப்படுகின்றது. "முதிர்வயதுள்ளவனைக் கடிந்துகொள்ளாமல், அவனைத் தகப்பனைப்போலவும், பாலிய புருஷரைச் சகோதரரைப்போலவும், முதிர்வயதுள்ள ஸ்திரீகளைத் தாய்களைப்போலவும், பாலிய ஸ்திரீகளை எல்லாக் கற்புடன் சகோதரிகளைப்போலவும் பாவித்து, புத்திசொல்லு" (1 தீமோத்தேயு 5:1-2).

இன்றைய நாட்களில் அந்நியர்களிடம் மிகவும் பரிவுடன்/பண்பட்ட விதத்தில் நடந்துகொள்வதும், ஒருவருடைய சொந்தக் குடும்பத்தாரிடம் மிகவும் பரிவற்ற/பண்பற்ற விதத்தில் நடந்துகொள்வதும் வழக்கமாய்க் காணப்படுகின்றது; சிலர் வெளியாட்களிடம் மிகவும் பரிவுடன்/பண்பட்ட விதத்தில்

நடந்துகொள்வார்கள், ஆனால் தாங்கள் யாருக்கு இரக்கமும், உதவியும் மற்றும் அனுதாபமும் காண்பிக்க வேண்டுமோ அத்தகையவர்களிடம் மிகவும் பரிவற்று/பண்பற்று நடந்துகொள்வார்கள். இதே கருத்தே, "சகோதர சிநேகமுள்ளவர்களாய் இருங்கள்" என்ற புத்திமதியில் வெளிப்படுகின்றது. ஆனால் இன்றைய நாட்களில் நீங்கள் உண்மையான நண்பர்களைத் தேடுகையில், நீங்கள் நண்பர்களுக்காக சொந்தக் குடும்பத்திற்குள் பெரும்பாலும் தேடிடுவதில்லை. இந்த விஷயத்தில் நம்முடைய வளர்ச்சி என்பது பரிணாம வகையாய் நிச்சயமாய்க் காணப்படுவதில்லை. தகப்பன், தாய், சகோதரர்கள் மற்றும் சகோதரிகள் அக்கறையுடனும், இரக்கத்துடனும், அன்புடனும் நடத்தப்பட வேண்டும். மேலும் இந்தக் கொள்கையானது விசுவாச வீட்டாரிடத்தில் செயல்படுத்தப்பட வேண்டும்.

## அன்பானது பிறனுக்குப் பொல்லாங்குச் செய்யாது

2 தீமோத்தேயு 4:2-ஆம் வசனத்தில், தேவனுடைய கிருபையின் ஊழியக்காரனாக அப்போஸ்தலன், சுவிசேஷம் அறிவிக்கப்படும் விஷயத்தில் அடங்கும் மூன்று அம்சங்களை அதாவது: (1) கண்டனம்பண்ணுதல்; (2) கடிந்துகொள்ளுதல்; (3) புத்திசொல்லுதல் எனும் அம்சங்களைக் குறித்து விவரிக்கின்றார். ஆனால் முதல் இரண்டு அம்சங்களைத் தாராளமாய்ப் பயன்படுத்தும் விஷயத்திற்கு எதிராக, கர்த்தருடைய ஜனங்கள் அனைவரும் எச்சரிக்கப்படுவது பாதுகாப்பானதாகும். சரியாய்க் கண்டனம் பண்ண வேண்டுமெனில் இருதயமானது, அன்பினாலும், அனுதாபத்தினாலும் மிகவும் நிரம்பிக் காணப்பட வேண்டும்; இல்லையேல் கண்டனங்களும், கடிந்துகொள்ளுதல்களும் கூர்மையுடன் கடந்துவருகின்றதாய் இருந்து, நன்மையைப் பார்க்கிலும், பாதகத்தையே உண்டுபண்ணுகிறதாய் இருக்கும். இருதயம் முழுக்க அன்பினால் நிரம்பி இருந்தாலும், யாருக்கு உண்மையில் அவசியப்படுகின்றதோ, அப்படிப்பட்டவர்களுடைய நன்மைக்கு ஏதுவாக கடிந்துகொள்ளுதல்களையும், கண்டித்தல்களையும் பயன்படுத்த முடிகின்றதான மிகுந்த சீரான தலையும்கூட அவசியமாய் உள்ளது. இதில் தேவனுடைய ஜனங்கள், "சர்ப்பங்களைப்போல வினாவுள்ளவர்களாகவும், புறாக்களைப்போலக் கபடற்றவர்களாகவும்" காணப்பட வேண்டும். "புத்திசொல்லும்" வகை ஊழியமானது, பெரும்பான்மையான கர்த்தருடைய ஜனங்களினால் நன்கு பயன்படுத்தப்படலாம். இந்த வகை பிரயாசங்களும், மற்ற வகை பிரயாசங்களும், பொறுமையுடனும், நீடிய பொறுமையுடனும், சகோதர சிநேகத்துடனும் கையாளப்பட வேண்டும்.

## எப்போது மன்னிப்பு ஏற்றதாய் இருக்கும்?

"உங்களைக்குறித்து எச்சரிக்கையாயிருங்கள். உன் சகோதரன் உனக்கு விரோதமாய்க் குற்றஞ்செய்தால், அவனைக் கடிந்துகொள்; அவன் மனஸ்தாபப்பட்டால், அவனுக்கு மன்னிப்பாயாக. அவன் ஒருநாளில் ஏழுதரம் உனக்கு விரோதமாய்க் குற்றஞ்செய்து, ஏழுதரமும் உன்னிடத்தில் வந்து: நான் மனஸ்தாபப்படுகிறேன் என்று சொன்னால், அவனுக்கு மன்னிப்பாயாக" (லூக்கா17:3-4). நாம் நமது பாவங்களை ஒப்புக்கொண்டு, தேவனிடம் மன்னிப்புக் கேட்காதது வரையிலும், அவர் நம்முடைய பாவங்களை மன்னிப்பதில்லை. நமக்கு விரோதமாய்க் குற்றஞ்செய்திருப்பவர்கள் விஷயத்தில், நாம் நமது முழுமையான மன்னிப்பை வெளிப்படுத்துவதற்கு முன்னதாக, அவர்கள் தங்கள் தவறைக் கொஞ்சம் ஒப்புக்கொள்ள வேண்டுமென எதிர்ப்பார்ப்பது ஏற்புடையதென நமது கர்த்தர் தெளிவாய்த் தெரிவிக்கின்றார். "ஏழுதரமும் உன்னிடத்தில் வந்து: நான் மனஸ்தாபப்படுகிறேன் என்று சொன்னால், அவனுக்கு மன்னிப்பாயாக."

நாம் தெய்வீகக் கட்டளையினுடைய ஒரு பாகத்தை ஏற்றுக்கொண்டு, மற்றொரு பாகத்தைப் புறக்கணிக்கிறவர்களாகக் காணப்படக்கூடாது. "அவனுக்கு மன்னிப்பாயாக" என்று கர்த்தர்

கூறினபோது, அவர் மன்னிக்க வேண்டும் என்று அர்த்தம் கொண்டிருந்தார் என்றும், "அவனைக் கடிந்துகொள்; அவன் மனஸ்தாபப்பட்டால், அவனுக்கு மன்னிப்பாயாக" என்று கர்த்தர் கூறினபோது, அவர் மன்னிக்க வேண்டும் என்று அர்த்தங்கொள்ளவில்லை என்றும் நாம் கூறக்கூடாது. தவறுசெய்கின்றவர்கள் மனஸ்தாபப்படுவது, அவர்களுக்கான கடமையாய் இருக்கின்றபடியால், பெரும்பான்மையான ஜனங்களின் விஷயத்தில் மனஸ்தாபப்படுவது ஏற்புடையது என்று வலியுறுத்திக் கொண்டிருப்பது அவசியமற்றதாய் உள்ளது. தங்களிடம் மன்னிப்புக் கேட்பது வரையிலும், மன்னிப்பு வழங்குவதற்கும் பெரும்பான்மையான ஜனங்கள் விருப்பமற்றுக் காணப்படுகின்றனர்.

## நாம் அற்பத்தனங்களுக்கு அப்பாற்பட்டு ஜீவிக்க வேண்டும்

இன்னொரு பக்கத்தில் ஜாக்கிரதையும் அவசியமாய் உள்ளது. கிறிஸ்தவன் என்பவன் அன்பான, பெருந்தன்மையுடன் கூடிய இருதயதன்மையை உடையவனாகவும், பரம பிதாவினுடைய பண்புகளின் சாயலாகவும் காணப்பட வேண்டும். அறிந்து செய்யாமலும் மற்றும் துணிகரம் இல்லாமலும் இருக்கும் பட்சத்தில், எப்படித் தேவன் கிறிஸ்துவின் நிமித்தமாக நம்மைக் கையாளுகின்றாரோ அதுபோலவே மற்றவர்களின் சிறு தவறுகளைக் கிறிஸ்தவனும் கவனியாமல் விட்டுவிடத்தக்கதாக அவன், முக்கியத்துவம் இல்லாதவைகளின் விஷயத்தில் மிகவும் அனுதாபமும், அன்பும் கொண்டவனாக இருக்கவேண்டும். இப்படியான கொள்கை கிறிஸ்தவர்கள் மத்தியில் காணப்படுமானால், அதாவது வேண்டுமென்றே செய்யப்படாத எதையும் குற்றமென அடையாளம் கண்டுகொள்ளக் கூடாது என்ற உறுதியான தீர்மானம் காணப்படுமானால், இது அனைவருக்கும் மாபெரும் ஆசீர்வாதமாய்க் காணப்படும் மற்றும் தேவனுக்கொத்த நடக்கையாகவும் காணப்படும். நமது கர்த்தரால் அவ்வசனத்தில் குறிப்பிடப்படும் பாவங்களானது, முக்கியத்துவமில்லாத காரியங்களாகவோ, பின்விளைவுகள் உண்டுபண்ணாத காரியங்களாகவோ, கற்பனைகளாகவோ (அ) பொல்லாத அனுமானங்களாகவோ, கற்பனைபண்ணப்பட்ட அவமதிப்புகளாகவோ இராமல், நமக்கு எதிராய்ச் செய்யப்படும் உண்மையான தவறுகளாய் இருக்கின்றது; இப்பாவங்கள் ஏற்கத்தக்க நிரூபணங்களை உடையவைகளாய் இருப்பதினால், இதன் காரணமாக நாம் தவறை அடையாளம் கண்டுகொண்டுள்ளோம் என்றும், அது நம்மைத் துன்பப்படுத்தியுள்ளது என்றும், நமக்கு வலியுண்டாக்கியுள்ளது என்றும் கொஞ்சம் சுட்டிக்காட்டும் வண்ணம், கொஞ்சம் ஏற்றவிதமான கடிந்துகொள்ளுதலை ஞானமாயும், அன்பாயும், இரக்கமாயும் வழங்குவது நமக்கான கடமையாய்க் காணப்படுகின்றது. கடிந்துகொள்ளுதல் வழங்கப்படுவதற்கான ஒரே ஓர் ஏற்ற வழிமுறை குறித்ததான திவ்விய பிரமாணமானது, நமது கர்த்தரினால் கொடுக்கப்பட்டுள்ளது (மத்தேயு18:15-17) மற்றும் இதைக்குறித்து விவரமாய் நம்முடைய வெளியீடுகளில் பார்த்திருக்கின்றோம். நமது கர்த்தருடைய கட்டளைகளுக்குக் கீழ்ப்படியாமல் காணப்படுவது என்பது, சீஷத்துவத்திலுள்ள குறைப்பாட்டிற்கான ஆதாரமாகுகின்றதாகக் கர்த்தர் சுட்டிக்காட்டுகின்றார். கர்த்தர் வெகு சில குறிப்பிட்ட கட்டளைகளைக் கொடுத்திருந்தபோதிலும், மனக்குறைகளைச் சரிச் செய்துகொள்வதற்கான ஒரே ஒரு வழியென, அவர் இந்த ஒரு கட்டளையைக் கவனமாய்க் கொடுத்திருக்க, இது அநேக வளர்ந்துள்ள கிறிஸ்தவர்களினால் முற்றிலும் புறக்கணிக்கப்பட்டுள்ளதாகவும் இருக்கின்றது.

## கிறிஸ்து உங்களுக்கு மன்னித்ததுபோல

மன்னிப்பதற்கான மனப்பாங்கு எப்போதும் நம்மிடத்தில் காணப்பட வேண்டும் மற்றும் அது அனைத்து நேரங்களிலும் நம்மால் வெளிப்படுத்தவும் படவேண்டும். நம்முடைய அன்புடன்கூடிய பெருந்தன்மையும், இரக்கமும், கொஞ்சமும் தீங்குநினைக்க விரும்பாத தன்மையும், நம்முடைய வார்த்தைகள் மற்றும் ஜீவியத்தின் கிரியைகள் அனைத்திலும் வெளிப்படுத்தப்பட வேண்டும். இது

தேவனுக்கொத்த நடக்கையாகக் காணப்படும். நாம் பாவிகளாகவே இருந்தபோதிலும், தேவன் நம்மிடத்தில் இரக்கமுள்ள, பரந்த மனப்பான்மையுள்ள பெருந்தன்மையுடன்கூடிய உணர்வினையே கொண்டிருந்தார். பாவிகள் மன்னிப்புக் கேட்க வேண்டுமென்று அவர் காத்திருக்கவுமில்லை, மாறாக இசைவிற்குள்ளாக வந்திடுவதற்கான தமது விருப்பத்தையும், மன்னிப்பதற்கான தமது ஆயத்தத்தையும் உடனடியாக வெளிப்படுத்தினவராகவே காணப்பட்டார். இதற்கு இசைவான ஒட்டுமொத்த சுவிசேஷத்தின் செய்தியானது, "தேவனோடே ஒப்புரவாகுங்கள்" என்பதாகும். நம்முடைய முகங்களானது, கடினமான பார்வையைக் கொண்டிராத அளவுக்கு, நம்முடைய வார்த்தைகளில், கடுமையான வலிக்கொடுக்கும் கண்டித்தல் காணப்படாத அளவுக்கு, நம்முடைய இருதயங்களானது மன்னிக்கும் இந்த மனப்பாங்கை முழுக்கக் கொண்டிருக்க வேண்டும். நம்முடைய முகங்களும், வார்த்தைகளும், அனைத்துச் சமயங்களிலும் நம்முடைய இருதயங்களில் நாம் பெற்றிருக்க வேண்டிய, அன்புடன்கூடிய மன்னிப்பை வெளிப்படுத்திட வேண்டும்.

இதமான வார்த்தைகளுடன்கூடிய வெளித்தோற்றமான மற்றும் சம்பிரதாயமான மன்னிப்பிற்கும், இருதயத்திலிருந்து கடந்துவரும் உண்மையான மன்னிப்பிற்கும் இடையிலான வித்தியாசத்திற்கு நேராக நமது கர்த்தர் குறிப்பாய் நமது கவனத்தைத் திருப்புகின்றார். வெளித்தோற்றமான மன்னிப்பு என்பது, உதட்டளவு மாத்திரமானதாகவும், மற்றும் உள்ளுக்குள் எரிச்சல் காணப்படுவதையும், மன்னிப்பு வழங்காத ஆவி காணப்படுவதையும் மற்றும் அடக்கிவைக்கப்பட்டதான குரோதம் மற்றும் பகைமையின் உணர்வுகளானது, இன்னும் கொஞ்சம் காலத்திற்குள்ளாக அவதூறு வார்த்தைகளாக வெளிப்படும் என்பதையும் அர்த்தப்படுத்துகிறதாகவும் இருக்கும். தேவன் இருதயத்தைப் பார்க்கின்றவர் ஆவார் மற்றும் உதட்டளவிலான அறிக்கைகள் என்னவாக இருப்பினும், அவ்வார்த்தைகளுடன் இருதயமும், ஜீவியமும் இசைவாய்க் காணப்படாதது வரையிலும், அவர் அதைக் கருத்தில் எடுத்துக்கொள்வதில்லை. ஆகையால் "என் சகோதரனை நான் அன்புகூருகின்றேன்" என்று ஒருவர் கூறிக்கொண்டு, மற்றும் அதே வேளையில், வார்த்தையினாலோ அல்லது கிரியையினாலோ சகோதரனுக்குப் பாதிப்புண்டாக்க நாடும்போது, அவ்வார்த்தைகள் வீணானதேயாகும். தீமை பேசுதல், குரோதம், பகைமை, பொறாமை, வாக்குவாதம்/சண்டை ஆகிய அனைத்தும், இருதயத்திலுள்ள பொல்லாப்பிடமிருந்தே கடந்துவருகின்றது; ஆகையால் கர்த்தருடைய சரீரமாக இருப்பதற்கு விரும்புகின்றவர்கள் அனைவரும், கிறிஸ்துவின் சரீரத்தில், அதாவது புளிப்பில்லாத அப்பத்தில் அங்கத்தினர்களாகத்தக்கதாக, "துர்க்குணம் எனும் புளித்தமாவை" அப்புறப்படுத்துவது அவசியமாய் உள்ளது.

"உங்கள் இருதயங்களில்" மன்னித்தல் என்பது, எப்போதும் நீங்கள் அடையப்பெற வேண்டிய ஒரு நிலையாகும். மற்றவர்கள் நமக்கு எதிராக எவ்வளவு கடுமையாகக் குற்றம் புரிந்திருந்தாலும், நாம் அனைவருக்குமான நல்லெண்ணத்தையும், மன்னிப்பையுமே நம் இருதயங்களில் கொண்டிருக்க வேண்டுமே ஒழிய, வேறு எந்த எண்ணங்களுக்கும் நாம் புகலிடம் கொடுக்கக்கூடாது. இப்படியாக இருக்கும் பட்சத்தில், மனந்திரும்புகிறவர்களை நாம் வெளிப்படையாய் மன்னிப்பதற்கும் மற்றும் அதை வெளிப்படுத்துவதற்கும், நாம் ஆவலும், ஏக்கமும் உள்ளவர்களாய்க் காணப்படுவோம். ஆகையால் தவறுக்காக மனம் வருந்துபவரின் சார்பிலிருந்து மிகவும் விளக்கமான அறிக்கையினை வற்புறுத்திக் கேட்பதற்கு நாம் நாடுகின்றவர்களாய் இருக்க மாட்டோம்; மாறாக கெட்டக் குமாரனுடைய தந்தையைப்போன்று நாமும், மனம் வருந்துகிறவர் தாழ்மையான மனநிலையோடு வருகிறதைக் காண்கையில், நாம் இருதயங்கள் தொடப்பட்டவர்களாக இருந்து, நாமும் பாதித் தூரம் சந்திக்கச் செல்லத்தக்கதாகவும், அவரை மன்னிக்கத்தக்கதாகவும், அவரை அன்போடு வரவேற்கத்தக்கதாகவும் மற்றும் முழுமையான ஐக்கியம் மற்றும் சகோதரத்துவத்தின் வஸ்திரத்தை உடுத்துவிக்கத்தக்கதாகவும் தூண்டப்படுகிறவர்களாக இருப்போம்.

"மனுஷருடைய தப்பிதங்களை நீங்கள் அவர்களுக்கு மன்னியாதிருந்தால், உங்கள் பிதா உங்கள் தப்பிதங்களையும் மன்னியாதிருப்பார்" (மத்தேயு 6:15).

## பாவத்தை வெறுத்துவிடுங்கள், பாவியையல்ல

"காயப்படுத்தாதே" எனும் வார்த்தையானது, நாம் சரீரப்பிரகாரமாக நமது சத்துருக்களைக் கொல்லவோ (அ) காயப்படுத்தவோ கூடாது என்பதைக் குறிப்பதாக நாம் முற்காலங்களில் அர்த்தம் எடுத்துக்கொண்டோம்; ஆனால் போதகரை நாம் பார்க்கும்போதும், அவரது வார்த்தைகளுக்குச் செவிக்கொடுக்கும்போதும், அவர் "என்னிடத்தில் கற்றுக்கொள்ளுங்கள்" என்று கூறுவதைக் கேட்கின்றோம் மற்றும் அவர் பாவம் எதுவும் செய்யாமலும், அவருடைய வாயிலே வஞ்சனை காணப்படாமலும் இருந்தபோதிலும், "அவர் வையப்படும்போது பதில் வையாமலும், பாடுபடும்போது பயமுறுத்தாமலும், நியாயமாய்த் தீர்ப்புச்செய்கிறவருக்குத் தம்மை ஒப்புவித்தார்" (1 பேதுரு 2:22-23) என்று அப்போஸ்தலரோடுகூட நாமும் கவனிக்கின்றோம்.

நாம் உண்மையுள்ள மாணாக்கர்களாகக் காணப்படுவோமானால், இருதயத்தினுடைய எண்ணங்களையும், நோக்கங்களையும் பகுத்தறியத்தக்கதாக, கிறிஸ்துவின் பிரமாணத்தை, சுயாதீனத்தின் பூரண பிரமாணத்தைப் பெற்றிருக்கத்தக்கதாக நாம் பார்த்துக்கொள்வோம் மற்றும் நாம் பாவம் அனைத்தையும் வெறுக்க வேண்டியவர்களாயிருக்க, நாம் எந்தப் பாவியையும் வெறுக்க முடியாதவர்களாகக் காணப்பட்டு, தேவ அன்பு நம்முடைய இருதயங்களில் பூரணப்பட்டிருக்க நாம் பார்த்துக்கொள்வோம். நம்முடைய சத்துருக்களை நாம் பழிக்குப் பழி வாங்கவும் மற்றும் தூஷிக்கவும் கூடாது என்பது மாத்திரமல்லாமல், இப்படியாகச் செய்வதற்கு நாம் விரும்பவும் கூடாது. தீமையான விருப்பங்கள் ஜெயங்கொள்ளப்பட வேண்டும் மற்றும் இம்மாதிரியான விருப்பங்களைக் கொடுத்திட்டதான சுயநலமான நிலைமைகளும், முற்றிலுமாய் அழிக்கப்பட்டு மற்றும் அவைகளுக்குப் பதிலாக அன்பு, அதாவது கிறிஸ்துவின் ஆவி நிரப்பப்பட வேண்டும்.

## தேவனுடைய அன்பின் குமாரனைப் பின்பற்றுதல்

யோவான் ஸ்நானன் மற்றும் நமது கர்த்தராகிய இயேசு ஆகிய இரண்டு முக்கியத்துவம் வாய்ந்த பாத்திரங்களில் ஒவ்வொருவரும், தெய்வீக ஏற்பாட்டிற்கு ஏற்ப தங்களுக்கான பணிகளை நிறைவேற்றினார்கள். ஆனாலும், அவர்களுக்கு வெவ்வேறு பணிகள் இருந்தது எனும் உண்மையிலிருந்து, நாம் ஒரு பாடத்தைக் கற்றுக்கொள்ளலாம். யோவானுடைய பணி என்பது பிரதானமாகக் கண்டிப்பவராகவும், சீர்த்திருத்தவாதியாகவும் இருப்பதேயாகும் மற்றும் அவர் மேற்கொண்டுள்ள பணி தொடர்புடைய பல்வேறு அம்சங்கள் பற்றின காரியங்களில், அவர் தீர்க்கத்தரிசியாக, இயற்கைக்கு அப்பாற்பட்ட விதத்தில் வழிநடத்தப்பட்டார் என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும். ஆனால் நமது கர்த்தருடைய பணியோ, வேறுபட்ட ஒன்றாகும்; யோவானுடைய ஊழியமானது யாரிடத்தில் நீதியையும் மற்றும் கர்த்தருடைய சித்தத்தை அறிவதற்கும், அதைச் செய்வதற்குமான வைராக்கியத்தையும் தூண்டினதோ, அத்தகையவர்களைத் தம்மிடமாய்ச் சேர்த்துக்கொள்வதே கர்த்தருடைய பணியாய்க் காணப்பட்டது.

கிறிஸ்துவினுடைய சரீரமாயிருப்பதற்கும் மற்றும் அவரைப் பின்பற்றுவதற்குமென்று அழைக்கப்பட்டுள்ள நாம், மேற்கூறிய விஷயத்திலிருந்து, நமக்கான சரியான நடக்கை தொடர்புடைய பாடம் ஒன்றினைக் கற்றுக்கொள்ளலாம். வனாந்தரத்தில் தங்குவதற்கும் மற்றும் ஜீவிப்பதற்கும் மற்றும் விநோதமாய் வஸ்திரம் உடுத்திக்கொள்வதற்கும் மற்றும் அனைத்தையும் மற்றும் அனைவரையும் பற்றி

வெளிப்படையாய்க் கண்டனம் பண்ணுவதற்கும் மற்றும் குறைகளைச் சுட்டிக்காட்டுவதற்கும் என்று நாம் யோவான் போன்று அனுப்பிவைக்கப்படவில்லை. இம்மாதிரியான பணிகள் விசேஷமானவைகளாகவும், மிகவும் அபூர்வமானதாகவும் காணப்படுகின்றன என்று கர்த்தருடைய அருமையான சில ஜனங்கள் கவனிக்கத் தவறிவிடுகின்றனர் மற்றும் சில சமயங்களில் தங்களுக்குரியதல்லாத மாதிரியைப் பின்பற்றுவதன் மூலம், இவர்கள் கர்த்தருடைய காரணங்கள் மீது திட்டமிடாமலேயே அவதூறைக் கொண்டுவருகின்றனர்.

தேவனுடைய அன்பின் குமாரனாகிய நமது கர்த்தரையே நாம் பின்பற்றுகிறவர்களாய்க் காணப்பட வேண்டும் மற்றும் நாம் யோவான் ஸ்நானனைப் பின்பற்றுகிறவர்களாய்க் காணப்படக்கூடாது. மற்ற ஜனங்களுடைய காரியங்களில் தலையிடுவதற்கு முயல்வதின் மூலமாகவோ, இந்த உலகத்தின் காரியங்கள் அனைத்தையும் ஒழுங்குபடுத்துவதற்கு நாடுவதின் மூலமாகவோ, சக்கரவர்த்திகள், இராஜாக்கள், அதிபதிகள் முதலானவர்களைக் கண்டிக்க முற்படுவதன் மூலமாகவோ நாம் சண்டைகளைத் தூண்டிவிடக்கூடாது; மாறாக அனுமதிக்கப்படுவதற்குப் பாத்திரமானவைகள் எவைகள் என்று தேவன் காண்கின்றாரோ, அவைகள் சகிக்கப்படுவதற்கும் பாத்திரமானவைகள் என்பதாக நாமும் காணலாம் என்பதை நினைவுகூருவதற்கு, அப்போஸ்தலனால் நாம் அறிவுறுத்தப்படுகின்றோம். நம்மால் அங்கீகரிக்க முடியாத அநேகக் காரியங்கள் இருந்திட்டாலும், அவைகள் அனைத்தையும் அதிலும் விசேஷமாகக் கர்த்தருடைய வார்த்தைகளை நிறைவேற்றும் விஷயங்களில் எவ்விதமான பாதிப்பையும் ஏற்படுத்தாதவைகளை, விசேஷித்த விதத்தில் வெளிப்படையாய்க் கண்டிப்பதிலிருந்து தவிர்த்துக்கொள்வதற்கும் வாய்ப்புள்ளது. "கூடுமானால் உங்களாலானமட்டும் எல்லா மனுஷரோடும் சமாதானமாயிருங்கள்" (உரோமர் 12:18) என்று கூறி, அப்போஸ்தலன் சரியான நிலையைக் குறித்துச் சுட்டிக்காட்டுகின்றார். "சமாதானம்பண்ணுகிறவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் தேவனுடைய புத்திரர் என்னப்படுவார்கள்" (மத்தேயு 5:9) என்று நமது கர்த்தர் கூறி, இதே கருத்தை வலியுறுத்தினவராகக் காணப்படுகின்றார்.

## ஞானமற்ற நடக்கை

மேற்கூறப்பட்டுள்ள காரியம் தொடர்புடைய விஷயத்தில், தங்கள் சொந்தக் குடும்பத்தின் காரியத்தில் கர்த்தருடைய ஜனங்களிலேயே பரிசுத்தமானவர்களாய்க் காணப்படும் சிலர் தவறு செய்தவர்களாகிப்போய், தேவையற்ற தப்பான அபிப்பிராயங்களையும், எதிர்ப்புகளையும் உருவாக்கிக் கொண்டு, பரிசுத்தத்திற்குரிய நியமங்களின் அளவுக்கும், சிலுவை சுமத்தலுக்குரிய அளவுக்கும் உயர்வானதாய் இராத காரியங்களிலும், அதே வேளையில் இயல்பில் பொல்லாங்கானதாகவோ (அ) நல்லொழுக்கமற்றதாகவோ காணப்படாத காரியங்களிலும் தொடர்ந்து குறைக் கண்டுபிடித்துக் கொண்டிருப்பவர்களாய்க் காணப்பட்டு, தங்கள் இல்லங்களை மகிழ்ச்சியற்றதாக ஆக்கிவிடுகின்றனர். ஒழுக்கக்கேடுகள் முதலானவைகள் தொடர்புடைய விருப்பங்கள் அனைத்திற்கும் எதிராக, பெற்றோர்களும், பாதுகாவலர்களும் நிச்சயமாய்ப் பாதுகாத்திடவே வேண்டும், ஆனால் தாங்கள் அன்புகூருகின்றவர்கள் பெயர்க்கிறிஸ்தவர்களாகக் காணப்படுகின்றார்கள் என்பதினாலும் மற்றும் உலகப்பிரகாரமான ஆவியைப் பெற்றிருக்கின்றார்கள் என்பதினாலும், அவர்களிடத்தில் குற்றங்கண்டுபிடிப்பது என்பது நிச்சயமாய் ஞானமற்ற காரியமாகவே காணப்படும். பரிசுத்த ஆவிக்குள்ளான சந்தோஷத்தினாலும், சமாதானத்தினாலுமான ஜீவியம் ஜீவித்தல் என்பதே கர்த்தருடைய ஜனங்கள் கொடுக்க முடிந்த, உலகப்பிரகாரமான ஜீவித்தலுக்கு எதிரான மிகச் சிறந்த கண்டனமாகவும், அவர்கள் அறிக்கைப்பண்ணுகின்றதான மகிமையான சுவிசேஷத்திற்கான மிகச் சிறந்த சிபாரிசாகவும் காணப்படுகின்றது. இந்த நிருபமே வாசிக்கப்படும் மற்றும் இதுவே இருளைக் கண்டிக்கிறதான ஒளியாகவும் காணப்படும்.

வேறு வார்த்தைகளில் சொல்ல வேண்டுமெனில், நம்மிடமுள்ள சுயத்தை வெறுத்தலுக்கான அம்சங்களை நாம் அர்ப்பணம்பண்ணாதவர்களிடம் எதிர்ப்பார்க்கவும் முடியாது மற்றும் அதை அவர்களிடத்தில் திணிக்கவும் நாம் முற்படக்கூடாது. முழுமையான அர்ப்பணிப்பு என்பது, அவர்கள் செலுத்தக்கூடிய "புத்தியுள்ள ஆராதனை" என்று அவர்கள் கண்டுகொண்டு, அவர்கள் தங்கள் சரீரங்களை, தேவனுக்கான ஜீவப்பலிகளாக ஒப்புக்கொடுப்பது வரையிலும் நாம் காத்திருக்க வேண்டும். பரிசுத்தம் மற்றும் அர்ப்பணிப்பிற்கான அளவுகோல்களைக் குறைத்துப் போடத்தக்கதாக அநேக செல்வாக்குகள் தொடர்ச்சியாகச் செயலாக்கத்தில் காணப்படுகின்றன என்பதை உணர்ந்த நிலையில், மேய்ப்பர்களும், போதகர்களும், கர்த்தருடைய அர்ப்பணம்பண்ணியுள்ளதான "மந்தைக்கு" முன்னதாக, தொடர்ந்து உயர்ப்பட்ச வேதவாக்கியங்களின் அளவுகோல்களை வைத்திடுவதற்கு நாடிட வேண்டும்.

## நீங்கள் எப்படிப்பட்டவர்களாய் இருக்க வேண்டும்?

சுவிசேஷ யுகத்தைச் சேர்ந்தவர்களாகிய நாம், இந்த யுகத்திற்கான சிலாக்கியங்களையும் மற்றும் வாய்ப்புகளையும் உயர்வாய் மதித்தவர்களாக, "நம் அழைப்பையும், தெரிந்துகொள்ளுதலையும் உறுதிப்படுத்திக் கொள்வதற்கு" நாடிட வேண்டும் (2 பேதுரு 1:4-11). "பணிவிடை வீட்டாராகும்படிக்கு," பூமிக்குரிய அழைப்பைப் பெற்றுக்கொண்டுள்ளவர்கள், (உதாரணத்திற்கு யோவான் ஸ்நானன் போன்று) கர்த்தருடைய வேலையில் வைராக்கியமாய் ஈடுபட்டதின் வாயிலாக, ஒரு புத்தியுள்ள ஆராதனையைச் செலுத்தி உண்மையுள்ளவர்களாய்க் காணப்பட்டார்களானால், மிகவும் அதிகமாய்த் தயைப் பாராட்டப்பட்டவர்களாகிய நாம், எத்தனை அதிகமான வைராக்கியத்தையும், ஆற்றலையும் வெளிப்படுத்திட வேண்டும்? "நீங்கள் எப்படிப்பட்ட பரிசுத்த நடக்கையும் தேவபக்தியும் உள்ளவர்களாயிருக்க வேண்டும்" (2 பேதுரு 3:11).

இந்தப் "பரம அழைப்பானது," இராஜ்யத்தில் நமது கர்த்தருடன் உடன் சுதந்தரர்களாகும்படிக்கான இந்தப் "பரலோக அழைப்பானது," மிகவும் விசேஷமானது என்பதையும், மிகவும் வரையறைக்குட்பட்ட அழைப்பு என்பதையும், சீக்கிரத்தில் முடிந்துவிடும் என்பதையும், தெய்வீக வெளிப்படுத்தல்களின்படி, இனி மீண்டுமாக அழைப்பு வராது என்பதையும் நாம் நினைவில் கொள்வோமாக. இப்படியான கண்ணோட்டத்தைக் கொண்டவர்களாக, "மேகம் போன்ற இத்தனை திரளான சாட்சிகள் நம்மைச் சூழ்ந்துகொண்டிருக்க, பாரமான யாவற்றையும், நம்மைச் சுற்றி நெருக்கி நிற்கிற பாவத்தையும் தள்ளிவிட்டு, விசுவாசத்தைத் துவக்குகிறவரும் முடிக்கிறவருமாயிருக்கிற இயேசுவை நோக்கி, நமக்கு நியமித்திருக்கிற ஓட்டத்தில் பொறுமையோடே ஓடக்கடவோம்" (எபிரெயர் 12:1).

---

R5905 [தெரிந்தெடுக்கப்பட்ட பத்திகள்]

# பரத்துக்குரியவைகள்பால் நமது நாட்டங்களைப் பயிற்றுவித்தல்

"பூமியிலுள்ளவைகளையல்ல, மேலானவைகளையே நாடுங்கள்." (கொலோசெயர் 3:2)

நம்மால் பகுத்தறியவோ அல்லது விவரிக்கவோ முடியாதபோதிலும், மனுக்குலத்தினுடைய இயல்பான அமைப்பியலில், நம் அனைவராலும் மனதினுடைய சீர்க்குலைவு என்று அடையாளம் கண்டுகொள்ளப்படும் ஒருவகையான மனப்பாங்கு காணப்படுகின்றது. நாம் மனுஷர்களாகவும், ஸ்திரீகளாகவும் காணப்படுவதினால் நமக்கு மற்றச் சிருஷ்டிகள்மீது, மற்றப் பொருட்கள்மீது ஈர்க்கப்படும் நாட்டத்தின் சில ஈர்ப்புகள், சில ஆற்றல்கள் காணப்படுகின்றன; அவைகள் எதன்மீது ஈர்க்கப்படுகின்றது

என்பதைப் பார்த்துக்கொள்வது மிகவும் முக்கியமான காரியமாகும்; இல்லையேல் அவை விக்கிரக ஆராதனைக்கு வழிநடத்திவிடும். திராட்சச்செடியின் சிறு கொடிகள் அதன் அருகில் உள்ள எதன்மேலும் படர்ந்து பற்றிக்கொண்டிருப்பது போன்று, நம்முடைய ஆர்வங்களும்/நாட்டங்களும் பல்வேறு பூமிக்குரிய காரியங்கள்மீது பற்றிக்கொள்கின்றன; மேலும் எப்படித் திராட்சக்கொடிகளுக்கு அவசியப்படுகின்றதோ, அப்படியே நம்முடைய நாட்டங்களும்கூடக் கிள்ளிவிடப்பட வேண்டும் மற்றும் பயிற்றுவிக்கப்பட வேண்டும். உங்கள் திராட்சச்செடியை ஒரு குறிப்பிட்ட திசையில் வளர்த்திட நீங்கள் விரும்புவீர்களானால், அதை நீங்கள் சரியான திசையில் திருப்பிவிடுவீர்கள்; தேவைப்பட்டால் கட்டிவைப்பீர்கள் மற்றும் அதன் தளிர் இலைகள் சரியான கம்புகளைப் பற்றிக்கொள்ளத்தக்கதாகப் பார்த்துக்கொள்வீர்கள்.

## பல்வேறு உலகம் சார்ந்த நாட்டங்கள்

இப்படியாகவே நம் ஒவ்வொருவரின் விஷயத்திலும் காணப்படுகின்றது. இந்த நாட்டங்கள் தகுதியானவைகளாகவும், நல்லவைகளாகவும் இருக்கின்றன; ஆனால் அவைகள் வழிகாட்டப்பட வேண்டும், பயிற்றுவிக்கப்பட வேண்டும். ஒருவேளை இந்த நாட்டங்கள் நமக்கு இல்லையெனில், நம்மால் தேவனை அன்புகூரமுடியாது. சமச்சீரான குணலட்சண நிலைமையினை அடைவதற்கு நமக்கு அவை அவசியமாகும். இந்த நாட்டங்கள் இல்லையெனில் நம்மால் ஒன்றிணைந்து வாழமுடியாது. ஒரு பெண்மணி தனது பாசத்தினை/நாட்டத்தினை ஒரு சிறு நாய்க்குட்டியின்மீது பெற்றிருந்து, அதற்கு அதிக நேரம் செலவிடுவதையும், அதிக கவனம் அதன்மீது செலுத்துகிறதையும், தெரிவுசெய்து கவனமாய் உணவுகொடுக்கிறதையும் நாம் காண்கையில், நாட்டங்களுக்கான சரியான வழிகாட்டுதலின் அவசியத்தினைக் காணலாம். சில ஐசுவரியவான்கள் பூடில்வகை நாய்கள்மீதும், புல்வகை நாய்கள்மீதும், வேட்டை நாய்கள்மீதும் அல்லது அங்கோரா பூனைகள்மீதும் தங்கள் நாட்டத்தினைப் பெற்றிருக்கின்றனர். சிலர் கேனரி பறவைகள், முயல்கள், வெள்ளை எலிகள் முதலானவைகளைச் செல்லப் பிராணியாக வைத்துக்கொள்கின்றனர். இவர்கள் மற்ற விதங்களில் சிறப்பாய்ச் செலவிடப்பட வேண்டிய மிகவும் விலையேறப்பெற்ற நேரத்தையும், சிந்தனையையும், பராமரிப்பையும் இந்தச் செல்லப்பிராணிகளுக்காய்க் கொடுக்கின்றனர் . . . ஏதோ அப்பிராணிகளைக் குழந்தைகள்போன்று பெரும்பாலும் நடத்துகின்றனர் மற்றும் ஏதோ அவைகளை மனுஷர்போன்று நினைத்து, அவைகள்மீது அதிகப்படியான பாசத்தினைக் குவிக்கின்றனர். சிலர் இப்படியாக மலர்களிடம் செய்கின்றனர்.

வாய்ப்பேசாத பிராணிகள்மீது எங்களுக்கு அன்பான உணர்வுகள் இருக்கின்றபோதிலும் . . . மலர்களை நாங்கள் வெகுவாய் இரசிக்கின்றபோதிலும் . . . கர்த்தருடைய ஜனங்களாகிய நாம் இவைகளில் எதையும், ஏதோ அவைகளை மனித ஜீவிகள்போன்ற விதத்தில் நடத்திடக்கூடாது என்றும், நமக்குப் பாதகமான விதத்திலும், மிகவும் முக்கியமான காரியங்களைப் புறக்கணித்துவிடும் விதத்திலும் அவைகள்மீது நாம் நாட்டம் வைத்திடக்கூடாது என்றும் நாங்கள் கருத்துப் பெற்றிருக்கின்றோம். பராமரிக்கப்படுவதற்கு அநேகம் பிள்ளைகள் இருக்கின்றனர்; மற்றும் இவர்களுடைய இடத்தில் நாம் மலர்களை, நாய்களை, விளையாட்டுப்பொருட்களை வைத்துவிடக்கூடாது. இவைகளை எல்லாம் நம்முடைய சந்தோஷத்திற்காகக் கொடுத்த நமது பரம பிதா எவ்வளவு நல்லவர் என்று நாம் சிந்திப்பது சரியே; எனினும் அவைகள்மீது நமது நாட்டங்களை வைத்துவிடாதளவுக்கும், அவைகளுக்கு நம்முடைய இருதயங்களில் மிக அதிகமான இடம்கொடுத்துவிடாதளவுக்கும் நாம் ஜாக்கிரதையாய் இருக்க வேண்டும். இப்படி ஜனங்கள் எங்கு இடம் கொடுத்துவிடுவார்களோ, அங்கு விலையேறப்பெற்ற ஏதோ ஒன்றினை அவர்களுடைய ஜீவியங்களில் அவர்கள் தொலைத்திருப்பார்கள். ஒருவேளை இப்படிச் செய்பவர்கள் வளர்ந்தவர்களாய் இருப்பார்களானால், இவர்கள் தங்கள் அன்பினை நாய்கள், பூனைகள்மீது வைத்து, அவைகளுக்காக விலையேறப்பெற்ற நேரத்தினை வீணடிப்பதற்குப் பதிலாக, இவர்கள் பிள்ளைகள் பெற்றுக்கொள்வது நலமாயிருக்கும்.

மனுக்குலத்தின் உலகத்தை நாம் பார்க்கையில் சிலர் மற்றச் சிலரைக்காட்டிலும் சீரான மனநிலை உடையவர்களாய் இருக்கின்றனர் என்பதை நாம் காண்கின்றோம். நாங்கள் உலகத்திற்காக அனுதாபம்கொள்கின்றோம்; ஏனெனில் பெரும்பாலானோர் கர்த்தரை அறியார்கள். அவர்கள் கிறிஸ்தவர்கள் அல்ல. அவர்களில் அநேகர் ஏழைகளாகவும், தங்கள் இருதயங்களை நிரப்பிடுவதற்கும், தங்கள் மனதின் எல்லையை விரிவாக்கிடுவதற்கும், மனதினைப் பிரகாசிப்பிப்பதற்கும் கொஞ்சமே உள்ள, பற்றாக்குறைவுள்ள ஜீவியமே ஜீவிப்பவர்களாகவும் இருக்கின்றனர். செல்லப்பிராணிகளுடன் கொஞ்சம் நேரம் செலவிடுபவர்கள் அல்லது இவைகளுடன் நேரம் செலவிடாதவர்கள் - தங்கள் நாட்டங்களையும், எண்ணங்களையும் வீட்டின்மீது பெற்றிருக்கின்றனர். "எனக்கென்று நல்லதொரு வீடு உள்ளது" என்று கூறுவதில் இவர்கள் பெரும் மகிழ்ச்சிக்கொள்கின்றனர். வீட்டிற்கான இந்த ஏக்கம் என்பது மனித ஜீவிகளுக்கு இயல்பான ஓர் ஆசைதான். இந்த இயல்பான பண்பினை மண்டையோட்டின் வெளி அமைப்புமூலம் ஒருவருடைய பண்புகளை ஆராயும் நிபுணர்கள்/phrenologists . . . குடியிருப்பிற்கான ஆசை என்கின்றனர். ஆனால் இதன்மீதுகூட நம்முடைய நாட்டங்களை நாம் மையங்கொள்ளச் செய்திடக்கூடாது. தேவனுடைய பிள்ளைகளாயிருக்கும் நாம் உலகம்கொண்டிருப்பதைக் காட்டிலும் மிக மேலான இலட்சியங்களைக்கொண்டிருக்க வேண்டும்.

வங்கிக்கணக்கில் அதிகமான பணம் வைத்திருக்க வேண்டும் என்று அநேகர் தங்களுடைய இருதயங்களில் இலட்சியம்கொண்டிருக்கின்றனர். வங்கிக்கணக்கில் கணிசமாகப் பணம் காணப்படத்தக்கதாக எதையும் செய்துவிடும் அளவுக்குச் சீரற்ற மனநிலையினை உடைய ஜனங்களை நாம் அறிந்தவர்களாய் இருக்கின்றோம். இந்த இலட்சியம் நிறைவேறினாலும், அவர்கள் இன்னும் திருப்தியடைகிறதில்லை. தங்கள் ஆசையைப் பூர்த்திச் செய்யும்வண்ணமாய் இவர்கள் தொடர்ந்து பணத்தைப் பெருக்கிக்கொண்டே இருப்பார்கள் மற்றும் இதற்காக நேர்மையற்ற முறைகளையும் கையாளுவார்கள். இத்தகையவர்கள் மனரீதியிலும், ஒழுக்க ரீதியிலும் ஒழுங்கற்றவர்களாய்/ தாறுமாறானவர்களாய் இருப்பார்கள். மனிதக் குடும்பமானது, விழுந்துபோன நிலைமையில் ஏறக்குறைய ஒழுங்கற்ற நிலையிலேயே இருப்பார்கள் என்பதை நாம் நினைவில்கொள்ள வேண்டும். முற்றும் முழுமையான மற்றும் தீவிரமான சீர்த்திருத்தமே இவ்விடர்பாட்டினை மாற்றிட முடியும். முழு மனித சந்ததியையும் பாதித்துள்ள நோயினைக் கர்த்தரினால் மாத்திரமே குணப்படுத்திட முடியும்.

## நியாயமான அன்பு/நாட்டங்கள்கூட விபரீதமாகிடலாம்

சரியாய்ப் பயிற்றுவிக்கப்பட்டு, வழிகாட்டப்படவில்லையெனில் மிகவும் அபாயகரமாகிவிடும் என்று நாம் மேலே பட்டியலிட்டவைகளைக் காட்டிலும், இன்னும் மேலான அன்புகள்/நாட்டங்கள் காணப்படுகின்றன. அவை மனுஷன் ஸ்திரீக்காகவும், ஸ்திரீ மனுஷனுக்காகவும், மனுஷன் மனுஷனுக்காகவும், ஸ்திரீ ஸ்திரீக்காகவும் கொண்டிருக்கும் அன்புகள்/நாட்டங்கள் ஆகும். இவை அனைத்தும் தகுதியானவைகளே; ஆனாலும் நாம் அளவுக்கு மீறின நாட்டங்களைத் தவிர்த்துக்கொள்ள வேண்டும் மற்றும் சாதாரண - அதாவது நியாயமான, தகுதியான/உரிய நாட்டங்களை/அன்புகளை மாத்திரமே பெற்றிருக்க வேண்டும். மிதமிஞ்சி செல்லாதபடிக்கு நாம் எச்சரிக்கையாய் இருக்க வேண்டும். தேவன் தம்முடைய வார்த்தைகளில் தம்முடைய பிள்ளைகளுக்கான முறையான நடக்கைக்குரிய வரையறைகளைக் கொடுத்திருக்கின்றார் மற்றும் இவைகளை நாம் அவரது வழிகாட்டுதல்களைக் கற்கும்போது மாத்திரமே அறிந்துகொள்ள முடியும். இல்லையேல் நிச்சயமாய் நாம் தவறான வழிமுறையைப் பின்பற்றிடுவோம். "பூமியிலுள்ளவைகள்மேல் அன்புகூராதிருங்கள்."

கணவன்மார்களும், மனைவிமார்களும்கூட ஒருவர் ஒருவரின்மீது மிக அதிகமாய்த் தங்கள் நாட்டங்களை/பற்றாசைகளை வைத்துக்கொள்ளக்கூடாது என்பது தேவ ஏற்பாடாய் இருக்கின்றது.

ஆகையாலே அப்போஸ்தலனாகிய பவுல்: "இனி வரும் காலம் குறுகினதானபடியால், மனைவிகளுள்ளவர்கள் மனைவிகளில்லாதவர்கள்போலவும் இருக்க வேண்டும்" என்கிறார் (1 கொரிந்தியர் 7:29). நாம் நமது பூமிக்குரிய உறவுகளை அனைத்திலும் சிறந்ததெனவும், உயர்ந்ததெனவும் கருதிடக்கூடாது என்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஜீவியத்தின் சோதனைகள் மற்றும் பிரச்சனைகளில் ஒருவர் இன்னொருவருடைய ஆதரவைப் பெற்றிருப்பது பெரிய காரியமே. இந்தப் பாக்கியமான (விவாக) பந்தத்தினைப் பெலவீனப்படுத்திவிடும் எதையும் சொல்லிவிடுவதற்கு நாங்கள் விரும்புகிறதில்லை. ஆனாலும் அது தேவ வசனத்திற்கு இசைவாகவும், தேவ வசனம் பற்றின அறிவின்படியும் காணப்பட வேண்டும். அது எவ்விதத்திலும் பரலோக ஓட்டப்பந்தயத்தில் நாம் வெற்றிகரமாய் ஓடிடுவதற்குத் தடையாய் இருக்கத்தக்கதாக நாம் அனுமதித்துவிடக்கூடாது. அது பிதாவின் முகத்தையும், அங்கீகரிப்பையும் நமக்கு மறைத்திடும் பூமிக்குரிய மேகத் திரையாகிடக்கூடாது.

---

R2590 [தெரிந்தெடுக்கப்பட்ட பத்திகள்]

# இயேசு அவனை நோக்கி, எனக்குப் பின்சென்று வா என்றார்

## மாற்கு 2:13-22

## அர்ப்பணிக்கப்பட்ட இல்லம் கனப்படுத்தப்பட்டது

மத்தேயு செல்வாக்குடைய மனுஷனாய் இருந்தார்; அவர் கர்த்தருடைய அழைப்பை ஏற்றுக்கொண்டு தன்னையும், தனக்குள்ள யாவற்றையும் அர்ப்பணித்ததின் மூலம் அவ்வழைப்புக்குச் செவிச்சாய்த்து, மற்றவர்களை, இரட்சகரிடம் இழுக்கத்தக்கதாக, தனது செல்வாக்கைப் பயன்படுத்த முடிவெடுத்தார். மற்றவர்களை ஆதாயப்படுத்தத்தக்கதாக, தான் எவ்வாறு இரட்சகரிடத்தில் ஈடுபாடு அடைந்தார் என்பதைப் பறைசாற்ற முடிவெடுத்தார். இந்நோக்கத்தை முன்னிட்டு, மத்தேயு தனது வீட்டில், கர்த்தருக்கும், அவருடைய சீஷர்களுக்கும் ஒரு விருந்தை ஆயத்தம்பண்ணினார்; மேலும் இவ்விருந்தில் தன்னுடைய நண்பர்கள் மற்றும் தொழில் ரீதியிலான கூட்டாளிகள் பலருக்கு மத்தேயு அழைப்புக் கொடுத்திருந்தார். இந்த அவருடைய நண்பர்கள், நம்முடைய பாடத்தில் "அநேக ஆயக்காரர் மற்றும் பாவிகள்" என்று அழைக்கப்படுகின்றனர் (மாற்கு 2:15).

பரிசேயர்களும், வேதபாரகர்களும், ஆயக்காரர்களைச் சமுதாயத்திலிருந்து விலக்கப்பட்டவர்களாக கருதுவதற்கான காரணம், அவர்கள் பொல்லாதவர்கள் என்பதினால் அல்லாமல், மாறாக ஆயக்காரருடைய தொழில் அவமதிப்புடையதாய் இருந்தது என்பதினாலேயே ஆகும் என்பதை நாம் பார்த்தோம்; மேலும் ஆயக்காரர்கள் இவ்விதம் சமுதயாத்திலிருந்து விலக்கி வைக்கப்பட்டவர்களாகவும், மிகவும் பக்தியுள்ள ஜனங்களிடமிருந்து துண்டிக்கப்பட்டவர்களாகவும் இருக்கின்றபடியால், இவர்கள் "பாவிகள்" என்று அழைக்கப்படுகின்ற பக்தியற்ற ஜனங்களிடமே தங்களுடைய பெரும்பான்மையான சம்பாஷணைகளையும், உறவுகளையும் வைத்துக் கொள்ளும்படிக்குரிய நிர்ப்பந்தமான நிலையில் காணப்படுகின்றனர். "பாவிகள்" என்ற வார்த்தையை முன்னிட்டு, இப்படி அழைக்கப்படுபவர்களைப் பொல்லாங்குச் செய்கைக்காரர்கள் என்றும், பயங்கரமானவர்கள் என்றும் நாம் எண்ணிவிடக்கூடாது; மாறாக பரிசேயர்கள் சொல்லிக்கொள்ளும் விதமாக பரிசுத்தம் உடையவர்கள் என்று தங்களைக்குறித்து அறிக்கைப் பண்ணாதவர்களும், பரிசுத்தமாய் இருப்பதற்கு முயற்சிக்காதவர்களுமே இந்தப் "பாவிகள்" ஆவர்; அதாவது தெய்வீக நியாயப்பிரமாணத்தை அப்படியே கைக்கொள்ளுகின்றோம் என்று தங்களைக்

குறித்து அறிக்கைப் பண்ணாதவர்களே, இந்த "பாவிகள்" ஆவர்; அதாவது இந்தப் "பாவிகள்" என்பவர்கள், பாத்திரத்தின் வெளிப்புறத்தை முற்றிலும் சுத்தமாக வைத்திருக்கின்றோம் என்று அறிக்கைப் பண்ணாதவர்கள் ஆவார்கள் என்ற போதிலும் அநேக தருணங்களில், பூரணமான பரிசுத்தத்துடன் இருக்கின்றோம் என்று அறிக்கையிடுகின்ற பரிசேயருடைய இருதயங்களைக் காட்டிலும் இந்தப் பாவிகள் எனப்படுபவர்களின் உள்புறம் சுத்தமானதாகவே அல்லது அதிகம் சுத்தமானதாகவே காணப்படுகின்றது. இதைக்குறித்து நமது கர்த்தரே பல தருணங்களில் குறிப்பிட்டுள்ளார். ஆகவே நமது கர்த்தர், ஆயக்காரர்கள் மற்றும் பாவிகளுடைய நண்பர்கள் என்று நாம் வசனங்களில் வாசிக்கும்போது, கர்த்தர் ரவுடிகளுடன் அல்லது அவருடைய நாட்களில் காணப்பட்ட ஒழுக்க விஷயத்தில் குஷ்டரோகிகளாக இருப்பவர்களுடன் தோழமை வைத்து இருந்தார் என்று நாம் எண்ணிவிடக்கூடாது. மாறாக அக்காலக்கட்டத்தில் யூதர்களில் ஒரு வகுப்பார், பரிசுத்தமான ஜனங்கள் (பரிசேயர்) என்று அழைக்கப்படுவதும், மற்றொரு வகுப்பார் தங்களை முழுமையாய்ப் பரிசுத்தமுள்ளவர்கள் என்று அறிக்கைப் பண்ணாததினால் பாவிகள் என்று அழைக்கப்படுவதும் வழக்கத்தில் இருந்தது என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும்.

மத்தேயு தனது நண்பர்களையும், தனது கூட்டாளிகளையும் கர்த்தரிடமும், அவருடைய போதனைகளிடமும் அறிமுகப்படுத்துவதற்கென எடுத்துக்கொண்ட பிரயாசம், பாராட்டப்பட வேண்டியதாகும். இன்னுமாக இக்கிரியைகள், கர்த்தருடைய மந்தைக்குள் பிரவேசிக்கும் ஒவ்வொருவரும், என்ன என்ன செய்ய வேண்டும் என்பதற்கான நல்ல மாதிரியாகவும் அமைகின்றது. ஒவ்வொருவனும் தன்னுடைய செல்வாக்கு எவ்விடத்தில் அதிகமாய்க் காணப்படுகின்றதோ, அவ்விடத்தில் அதைச் செலுத்துவதற்கு நாட வேண்டும்; அதாவது நமக்கு அறிமுகமானவர்கள் மத்தியிலும், நாம் அறிமுகமாய்க் காணப்படுபவர்கள் மத்தியிலும், நம்முடைய கடந்த கால வாழ்க்கையில் ஏற்பட்டுள்ள தீவிரமான மாற்றத்தை எளிதில் உணரவும், புரிந்துகொள்ளக் கூடியவர்கள் மத்தியிலும் நாம் நமது செல்வாக்கைப் பயன்படுத்த நாட வேண்டும். இங்குக் காணப்படும் மற்றுமொரு பாடம் என்னவெனில், சத்தியத்தைப் பிரகடனப்படுத்துவதற்காக, விருந்தோம்பல் பண்பைக் கருவியாகப் பயன்படுத்துவதாகும்; அதாவது யார் தங்களைக் கர்த்தருக்கென்று அர்ப்பணித்துள்ளார்களோ, அவர்களுடைய இல்லங்களும் கூட அர்ப்பணிக்கப்பட்ட இல்லங்களாகக் காணப்பட வேண்டும், மேலும் அது ஆண்டவருக்கு ஊழியம் செய்வதில் பயன்படுத்தப்பட வேண்டும் என்பது முதன்மை நோக்கமாகவும் இருக்க வேண்டும். இன்னுமாக நம்முடைய நண்பர்களும் கூடக் கர்த்தரால் போதிக்கப்படத்தக்கதாகவும், அவர்களைக் கர்த்தரிடத்தில் இழுக்கத்தக்கதாகவும், நம் அர்ப்பணிக்கப்பட்ட இல்லங்களின் மூலம் உண்டாகும் செல்வாக்குக் காணப்பட வேண்டும். ஆனால் பெரும்பாலும் இல்லங்கள் அர்ப்பணிக்கப்படுகின்ற விஷயங்கள், கவனத்தில் எடுத்துக்கொள்ளப்பட தவறப்படுகின்றது; மேலும் இல்லத்திற்குள் எதிர்ப்புகள் அளிக்கும் நபர்களின் செல்வாக்குகள் மேலோங்க அனுமதிக்கப்படுவதின் காரணமாக, அந்த அர்ப்பணிக்கப்பட்ட நபர்களின் இல்லங்களில் கர்த்தரும் சரி, கர்த்தருடைய ஜனங்களும் சரி வரவேற்கப்படாமலும், கர்த்தருடைய நோக்கங்களுக்காக இவர்களுடைய இல்லங்கள் பயன்படுத்தப்படாமலும் இருக்கின்றன. இப்படிப்பட்ட இல்லமும், இல்லத்தாரும் ஒரு மாபெரும் ஆசீர்வாதத்தை இழந்து வருகின்றனர்; மேலும் இப்படிப்பட்ட நிலையில் காணப்படும் இல்லத்தின் தலைவர், தான் ஜெயங்கொள்ளுகிறேனா அல்லது இல்லையா என்று நிதானித்துக்கொள்ள வேண்டும்; அல்லது தான் எதிர்ப்பின் செல்வாக்குகளினால் மேற்கொள்ளப்படுகின்றேனோ என்று நிதானித்துக்கொள்ள வேண்டும். "ஜெயங்கொள்ளுகிறவர்களுக்கு" மாத்திரமே பரிசு வாக்களிக்கப்பட்டுள்ளது.

கர்த்தர் தைரியமுள்ள ஜனங்களையே விரும்புகின்றார், அதாவது தம் மீது முழுமையான விசுவாசமும், தம் மீதும், தம்முடைவர்கள் மீதும் அன்பும் கொண்டு, மேலும் இதன் காரணமாக நீதியான

விஷயங்களின் பொருட்டு எதிர்ப்பாய் உள்ள செல்வாக்குகளை ஜெயங்கொள்ளுகிறவர்களாய் இருப்பவர்களையே கர்த்தர் விரும்புகின்றார். ஒருவேளை மத்தேயு, கர்த்தரிடம் பின்வரும் காரியங்களைக் கூறியிருப்பாரானால், நாம் மத்தேயு குறித்து என்னவெல்லாம் எண்ணியிருப்போம்: "ஆண்டவரே என்னுடைய வீட்டில் ஒரு விருந்தை ஆயத்தம் பண்ணி, அவ்விருந்தில் என்னுடைய நண்பர்களில் சிலரை வரவேற்று, உம்மை அவர்களுக்கு அறிமுகப்படுத்தி, அவர்களும் சத்தியத்தின் தாக்கம் அடைவதற்கான சூழ்நிலையை ஏற்படுத்திக் கொடுக்க விரும்புகின்றேன்; ஆனால் இவைகளைச் செய்வதற்கு என்னுடைய சொந்த வீட்டிலேயே எனக்கு (இப்பொழுது) உரிமை இல்லை; நான் இப்படி விருந்து பண்ணினால், என்னுடைய மனைவி ஒரு நிமிடம் கூடப் பொறுத்துக்கொள்ள மாட்டாள்; ஏற்கெனவே மிகுந்த பணவருமானம் தரும் என்னுடைய தொழிலை நான் விடப்போகிறதினால் என்னுடைய பிள்ளைகள் மிகவும் கோபமடைந்தவர்களாகவும், என்னுடைய இந்த முடிவின் காரணமாக முன்பிருந்த அந்தஸ்தில் அல்லது தாராளமாய்ச் செலவுகள் செய்யும் நிலையில் அவர்களால் இனி இருக்க முடியாது என அச்சம் அடைந்தவர்களாகவும் இருக்க, உம்மைக் கனப்படுத்தும் வண்ணமாக நான் இல்லத்தில் விருந்து ஆயத்தம் பண்ணப்போகின்றேன் என்று நான் சொல்லிவிட்டாலே, அவர்கள் மிகுந்த இடஞ்சல்களை ஏற்படுத்திவிடுவார்கள்; இன்னுமாக என் பிள்ளைகள் மிகவும் ஒழுக்கமற்றவர்களாயும், பெற்றோருக்குரிய மரியாதையை எனக்கு தராதவர்களாயும் இருப்பதினால், நான் விருந்து ஆயத்தம் பண்ணினால் தொந்தரவு பண்ணுகிறவர்களாகவும் இருப்பார்கள்."

இப்படி மத்தேயு கூறியிருந்திருப்பாரானால், இவர் அப்போஸ்தலன் ஆகுவதற்கோ, அல்லது அப்போஸ்தலர் பவுல் ஏற்படுத்தின நிபந்தனைகளுக்கு ஏற்ப சபையில் மூப்பர் (அ) உதவியாளன் ஸ்தானத்திற்குக் கூட மிகவும் பாத்திரமற்ற நபர் என்றே நாம் கருதியிருப்போம் (1 தீமோத்தேயு 3:4-5). மேலும் இவர் சபையில் எந்த ஒரு பொறுப்புள்ள ஸ்தானத்திற்கும் தகுதியற்றவர் என்றே நாம் எண்ணியிருப்போம்; இன்னுமாக இவர் ஜெயங்கொள்ளுகிறவர்களுக்கு அவசியமான பண்புகளில் மிகவும் குறைவுடன் காணப்படுகின்றார் என்றும், இவர் தனது பண்புகளைச் சீர்த்திருத்திக்கொள்ளவில்லை என்றால் இவர் பரிசை இழந்து போவதற்கான மிகுந்த அபாயத்தில் இருக்கின்றார் என்றும் நாம் எண்ணியிருந்திருப்போம். ஆனால் மத்தேயுவின் விஷயம் முற்றிலும் மாறுபட்டதாகவும், அவர் தைரியமுள்ள பாத்திரமாகவும் காணப்படுகின்றார். ஆண்டவரின் அடிச்சுவடுகளைப் பின்பற்றுவதற்கு ஏதுவான பண்புகள் இவரிடத்தில் இல்லையெனில், இவரிடம், "எனக்கு பின் சென்று வா" என்று நமது கர்த்தர் கூறுவார் என்று நாம் எதிர்ப்பார்க்க முடியாது. ஏனெனில் நமது கர்த்தர் இயேசு இரக்கமுள்ளவராகவும், மென்மையானவராகவும், அன்புள்ளவராகவும் இருந்தாலும் கூட அவர் ஒருபோதும் குணலட்சணங்களில் குறைப்பாடு உடையவராகவோ அல்லது கோழையாகவோ (தைரியமற்றவராகவோ) இருந்ததில்லை.

இன்னுமாக, மத்தேயுவின் மனைவியும், குடும்பத்தினரும் விருந்து ஆயத்தம் பண்ணுவதற்கு மறுப்புத் தெரிவித்திருப்பார்களானால், இவரது மனைவியையும், குடும்பத்தாரையும் குறித்து நாம் என்ன எண்ணியிருந்திருப்போம்? பரிசுத்தவான்கள் ஆகுவதற்கான வாய்ப்புகள் அவர்களுக்கு இல்லை என்றும், மனைவியானவள் புருஷனுக்கு உதவியாக இருக்க வேண்டும் என்ற மனைவிக்குரிய முதல் அம்சத்தையே இவரது மனைவி கற்றுக்கொள்ளவில்லை என்றும், அவள் உதவியாக இருப்பதற்குப் பதிலாக மத்தேயுவுக்கு தடையாக இருந்தாள் என்றும் புரிந்துகொண்டிருப்போம். நல்லபடி இவர்களெல்லாரும் இருந்திருப்பார்களானால் கர்த்தர் அவ்வில்லத்திற்குள் வந்தபோது, அவரோடு கூட ஒரு விசேஷித்த ஆசீர்வாதம் கடந்து வந்திருக்கும் என நாம் நம்புகின்றோம்.

---

R5245 [தெரிந்தெடுக்கப்பட்ட பத்தி]

## பூரண அன்பு பயத்தைப் புறந்தள்ளும்

"பூரண அன்பு பயத்தைப் புறந்தள்ளும்" எனும் கொள்கையானது, கணவன்-மனைவிக்கு இடையிலும், பெற்றோர்-பிள்ளைகளுக்கு இடையிலும் செயல்பட வேண்டும். ஒருவேளை பூரண அன்பிருந்தால் எப்படி மகிழ்ச்சி இருக்குமோ, அதுபோலக் கணவனைக் கண்டு அஞ்சும் மனைவியினால் மகிழ்ச்சியாய் இருக்க முடியாது; இதுபோலவே பெற்றோரில் யாரேனும் ஒருவரையோ அல்லது இருவரையோ கண்டு பெரிதும் பயப்படும் பிள்ளைகளாலும்கூடப் பெற்றோர் மீதான உண்மையான பாசத்தோடு, அவர்களை அன்புகூர்ந்திட முடியாது. ஒருவரையொருவர் காயப்படுத்திடக்கூடாது அல்லது புண்படுத்திடக்கூடாது என்று ஒவ்வொருவரும் அச்சங்கொள்ள வேண்டும் மற்றும் தம் அறிவுள்ள சிருஷ்டிகள் யாவும் காண்பிக்கும்படியாகத் தேவன் பிரியப்படுகின்றதான அந்தப் பூரண அன்பினை அடைய நாடிட வேண்டும்.

---

R3805 [தெரிந்தெடுக்கப்பட்ட பத்திகள்]

## ஆண்டவரே ஜெபம்பண்ண எங்களுக்குப் போதித்தருளும்

**லூக்கா** 11:1-13

வேதவாக்கியங்களில் குடும்ப ஜெபமானது குறிப்பாய்ப் போதிக்கப்படாவிட்டாலும், அது தகுதியான ஒன்றே என்பதில் நமக்கு ஐயமில்லை. உண்மைதான் மாம்சீகக் குடும்பம் என்பது கர்த்தருடைய குடும்பத்திலிருந்து வேறுபட்ட ஒன்றாகும்; ஆனாலும் எங்கு மாம்சீக குடும்பமானது "கர்த்தருக்கேற்ற சிட்சையிலும், போதனையிலும்" வளர்க்கப்பட்டு வருகின்றதோ, அங்குச் சிருஷ்டிகரைத் தொழுதுகொள்ளும் விஷயத்தில் தங்கள் பெற்றோரோடுகூடத் தலைவணங்கிடுவதில் இன்பம் கொள்ள முடியாத அளவுக்கு, மிகவும் பயபக்தி இல்லாமல் காணப்படும் சிறுபள்ளைகளின் நிலைமை அபூர்வமாகவே இருக்கும். ஒருவேளை பிள்ளைகள் தாங்களாகவே முடிவெடுத்துக்கொள்ளும் அளவுக்கு வளர்ந்தவர்களாய் இருந்து, தொழுதுகொள்வதில் பங்கெடுக்க விருப்பமற்றுக் காணப்படுகையில், அவர்கள் வற்புறுத்தப்படாமல் விடப்படுவதில் கர்த்தர் பிரியம்கொள்வார் என்பது நமது எண்ணமாகும்; ஏனெனில் தம்மை ஆவியோடும், உண்மையோடும் தொழுதுகொள்பவர்களையே கர்த்தர் தேடுகின்றார். கணவனோ அல்லது மனைவியோ தேவனுடைய பிள்ளையாய் இராமல், ஆவியினால் ஜெநிப்பிக்கப்படாதவர்களாய் இருக்கும் பட்சத்தில் அவன் அல்லது அவள் கிருபையின் சிங்காசனத்தை நோக்கி ஜெபம் ஏறெடுக்கையில், தொழுதுகொள்கையில், ஜெபத்தினை வழிநடத்திடுவது தகுதியாய் இராது. இது விஷயத்தில் திவ்விய வரையறைகளை நாம் அதிகமதிகமாய்க் கண்டுகொள்கையில் நாமும், நம்மோடு தொடர்பில் இருப்பவர்களும் ஜெபம் என்பது ஒரு மாபெரும் சிலாக்கியம் என்று அதிகமதிகமாய் உணர்ந்துகொள்வோம்; மேலும் ஜெபமானது உண்மையுள்ள இருதயங்களுடன் யேகோவா தேவனை நம் பிதா என்று அழைக்க முடிபவர்களுக்கு மாத்திரமே உரியது என்றும், இப்படிப்பட்டவர்கள் மாத்திரமே கர்த்தர் இயேசுவைத் தங்கள் இரட்சகர் என்று ஏற்றுக்கொண்டவர்களாய் இருப்பார்கள், காரணம் "என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வாரன்" என்று இயேசு கூறியிருக்கின்றார் (யோவான் 14:6) என்றும் அதிகமதிகமாய் உணர்ந்துகொள்வோம்.

நிழலில் ஆசாரியர்கள் மாத்திரமே கர்த்தருக்குத் தூபம் ஏறெடுத்ததுபோல, இராஜரிக ஆசாரியகூட்டத்தாராகிய, கிறிஸ்துவினுடைய சரீரத்தின் அங்கத்தினர்கள் மாத்திரமே, தற்காலத்தில் ஜெபம் என்னும் இச்சிலாக்கியத்தினை உடையவர்களாய் இருக்கின்றனர். எனினும் கர்த்தருக்கு உண்மையாய் இருக்க வேண்டும் அல்லது வேண்டாம் என்று தீர்மானிக்கும் கட்டத்தினை இதுவரையிலும் எட்டிடாத விசுவாசிகளினுடைய பிள்ளைகள், அர்ப்பணம்பண்ணியுள்ளதான தங்கள் பெற்றோரின் உறவுமுறை மூலமாய்க் கிருபையின் சிங்காசனத்தினை அணுகிடும் சிலாக்கியம் உடையவர்களாய் இருப்பார்கள் என்று நாம் அனுமானிப்பது நியாயமான கருத்தேயாகும். நீதிமானாக்கப்பட்ட விசுவாசிகள், ஆனால் கர்த்தருக்குத் தங்களையே அர்ப்பணித்திடும் கட்டத்தினை இன்னமும் எட்டாதவர்களாய் இருப்பவர்கள்கூட ஜெபத்தினை மீட்பரை நோக்கி ஏறெடுக்க சிலாக்கியம், உரிமைப் பெற்றிருக்கின்றார்கள் என்றுகூட நாம் அனுமானிக்கலாம்; எனினும் அர்ப்பணம்பண்ணாத விசுவாசி - கிருபையின் சிங்காசனத்திற்கு முன்பு ஏற்றுக்கொள்ளப்படுவான் என்றோ அல்லது "பரலோகத்தில் இருக்கும் எங்கள் பிதாவே" என்று ஜெபம்பண்ணுகையில், பிதாவை நோக்கி அழைக்க முடிகிறவர்களுக்கு இருப்பது போன்ற தகுதியினைப் பிதாவின் முன்னிலையில் பெற்றிருப்பான் என்றோ உறுதியாகவோ அல்லது மறைமுகமாகவோ தெரிவித்திடும் எந்த வேதவாக்கியத்தினையும் நாங்கள் அறியோம்.

---

R3204 [தெரிந்தெடுக்கப்பட்ட பத்தி]

# தேவன் ஆச்சரியமான விதத்தில் செயல்படுவார்

## அப்போஸ்தலர் 27:33-44

"தங்கள் ஆபத்திலே கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டார்கள், அவர்கள் இக்கட்டுகளிலிருந்து அவர்களை விடுவித்தார்." (சங்கீதம் 107:6)

"பவுலே, பயப்படாதே, நீ இராயனுக்கு முன்பாக நிற்க வேண்டும், இதோ உன்னுடனேகூட யாத்திரைபண்ணுகிற யாவரையும் தேவன் உனக்குத் தயவுபண்ணினார்" எனும் வார்த்தைகள் மிகவும் அர்த்தமுள்ளவைகளாகும் (அப்போஸ்தலர்27:24). இது சோதோமிற்கான ஆபிரகாமினுடைய ஜெபத்தினை நமக்கு நினைப்பூட்டுகின்றதாய் இருக்கின்றது - ஒருவேளை சோதோமில் ஐந்து நீதிமான்கள்கூட இருப்பார்களானால், அப்பட்டணத்தைக் காப்பாற்றிடுவதற்குத் தேவன் ஒப்புக்கொண்டிருந்தார். இந்த வார்த்தைகளில் - சிறந்த நோக்கமுடையவர்கள் அநேகரால் இக்காலங்களில் கொடுக்கப்பட்டுக்கொண்டிருக்கும் தவறான போதனையாகிய . . . "தேவனுடைய தகப்பன்துவமும் மற்றும் மனுஷருடைய சகோதரத்துவமும்" குறித்துத் தெரிவித்திடும் எதுவும் இல்லை. மாறாக அவ்வசனத்தினுடைய வார்த்தைகளில், தேவனுடன் தனிப்பட்ட உறவுகொண்டிருக்கும் நிலைமையில் ஒரே ஒரு மனுஷன்தான் அந்தக் கப்பலில் காணப்பட்டதாகத் தெரிகின்றது. கப்பலில் இருந்த மற்றவர்கள் எப்படிப்பட்டதான இயல்பான குணங்களை உடையவர்களாக இருப்பினும், அவர்கள் ஒருபோதும் பிதாவுடன் தனிப்பட்ட உறவுக்குள் வராதவர்கள் ஆவர். இவ்வசனத்தின் மற்றுமொரு கருத்து என்னவெனில் . . . பரிசுத்தவான்களோடு கடந்துவரும் திவ்விய பராமரிப்பானது, அவர்களோடுகூட இருப்பவர்களுக்கு . . . இப்பாடத்தின் சந்தர்ப்பத்தில் காணப்படுவது போன்று, கூடஇருப்பவர்கள் உலகத்தாராகவும், மறுபடி ஜெநிப்பிக்கப்படாதவர்களாகவும் இருப்பினும் . . . அவர்களுக்கும் ஒரு மாபெரும் ஆசீர்வாதமாய்க் காணப்படும். இக்கருத்தானது தேவனுடைய ஜனங்களின் பூமிக்குரிய குடும்பங்கள்

விஷயத்தில் குறிப்பாய்ப் பொருந்துகின்றதாய் இருக்கின்றது. விசுவாசிக்கும் அர்ப்பணம்பண்ணியுள்ள தகப்பன் அல்லது தாய் நேரடியாய்த் திவ்விய பராமரிப்பின் கீழ்க் காணப்படுபவர்களாய் இருக்கின்றனர்; ஏனெனில் தேவதூதர்களைக் குறித்து, "இரட்சிப்பைச் சுதந்தரிக்கப்போகிறவர்களினிமித்தமாக ஊழியஞ்செய்யும்படிக்கு அவர்களெல்லாரும் அனுப்பப்படும் பணிவிடை ஆவிகளாயிருக்கிறார்களல்லவா?" (எபிரெயர் 1:14) என்று எழுதப்பட்டுள்ளது மற்றும் இவர்களுக்குப் பணிவிடைச் செய்கையில், கர்த்தரோடு முழுமையான உறவிற்குள் வராத இவர்களது குடும்பங்களும் ஒரு குறிப்பிட்ட அளவு, பாதுகாக்கும் பராமரிப்பின் கீழ் வருகின்றனர் என்று நாம் பொதுவாய் அனுமானிக்கின்றோம். வேறொரு இடத்தில் சில விதங்களில் விசுவாசியான மனைவி, தன் கணவன் மீது ஓர் ஆசீர்வாதமான செல்வாக்கினைக் கொண்டிருக்கிறாள் அல்லது விசுவாசியான கணவன், பிள்ளைகள் தொடர்புடைய விஷயத்தில் மனைவி மீது ஓர் அனுகூலமான செல்வாக்கினைப் பெற்றிருக்கின்றார், இல்லையேல் பிள்ளைகள் அசுத்தமானவர்களாய்க் கருதப்பட்டிருப்பார்கள் என்று அப்போஸ்தலன் சுட்டிக்காட்டுகின்றார் (1 கொரிந்தியர் 7:14). இதுவும் திவ்விய பராமரிப்பானது விசேஷமாய்ப் பரிசுத்தவான்களுக்கு உரியது என்றாலும், அது எல்லா வகையான அவர்களது நலனுக்கடுத்தவைகளையும் உள்ளடக்கிடும் என்னும் அதே படிப்பினைக்கான மற்றுமொரு உதாரணமாகும். இது பூமிக்குரிய ஐசுவரியம், ஆஸ்தி அருளுவதையோ, பவுலின் சம்பவத்தைப் போன்று விபத்துக்கள், கப்பல் சேதங்கள் முதலானவைகளிலிருந்து காப்பாற்றுவதையோ கண்டிப்பாய் உள்ளடக்கிடும் என்றில்லை; ஆனாலும் அது சில விதங்களில், சில அளவுகளில் ஓர் அனுகூலத்தினை எப்போதும் உள்ளடக்குகின்றதாக இருக்கும். இக்கருத்திலிருந்து நம்மால் முடிந்த அளவுக்கு ஆறுதல் அனைத்தையும் எடுத்துக்கொள்வோமாக. பரிசுத்தவான்களுக்குச் சகலமும் நன்மைக்கேதுவாய் நடந்தேறும் மற்றும் இந்தப் பரிசுத்தவான்களுக்கு நெருக்கமானவர்களாகவும், அருமையானவர்களாகவும் இருப்பவர்களும்கூட நிச்சயமாய்ப் பரிசுத்தவான்களுக்குரிய திவ்விய பராமரிப்பிலும், அவர்களது நலனுக்கடுத்தவைகளிலும் சில அளவுகளில்/விதங்களில் பங்கெடுப்பவர்களாய் இருப்பார்கள்.

---

R2345 [தெரிந்தெடுக்கப்பட்ட பத்திகள்]

## எலிசா திரும்பக்கொடுத்தலின் வேலையைச் செய்தல்

### 2 இராஜாக்கள் 4:25-37

இப்பொழுது நாம் இப்பாடத்தினுடைய ஒரு குறிப்பிட்ட நிகழ்விற்கு வருகின்றோம் . . . அதாவது சூனேமியாளையும், அவள் குமாரனையும் குறித்ததாகும் மற்றும் இந்நிகழ்வும்கூட மரித்தோரை உயிர்த்தெழுப்பிடும் மாபெரும் திரும்பக்கொடுத்தலின் ஆசீர்வாதத்தைக்குறித்த கருத்தைத் தெரிவிக்கிறதாய் இருக்கின்றது. இந்தச் சூனேமியாள் வேதவாக்கியங்களில் "கனம்பொருந்திய" ஒரு ஸ்திரீ என்று பதிவு செய்யப்பட்டிருக்கின்றது. அவளும், அவளது கணவனும் ஜீவியத்தில் சௌகரியமான நிலைமையில் காணப்பட்டார்கள் என்பதாகத் தெரிகின்றது; அநேகமாகக் கனம் பொருந்தியவள் என்று குறிப்பிடப்பட்டிருக்கிற காரியம் கொஞ்சம் அவளது ஆஸ்தி தொடர்புடையது என்பது உறுதியே, எனினும் பதிவுகளில் சுட்டிக்காண்பிக்கப்பட்டுள்ளது போன்று அவள் வேறு விஷயங்களிலும் மற்றச் சாதாரண ஸ்திரீகளைக் காட்டிலும் மேம்பட்டவளாக இருந்திருக்கிறாள் என்பதும் உறுதியே. பதிவுகள் சுட்டிக்காண்பிப்பது போன்று அறிவின் விஷயத்தில் அவள் தனது கணவனைக் காட்டிலும் மேம்பட்டவளாகக்

காணப்பட்டிருந்திருக்க வேண்டும். நன்மையானவைகளை அடையாளங்கண்டுகொள்கிறதும், கர்த்தரையும், அவருக்குரியவர்களையும் பயபக்தியோடு மதிக்கிறதுமான கனம் பொருந்திய நிலைமையினை அவள் பெற்றிருந்தாள். தீர்க்கத்தரிசி அவள் வசிக்கும் இடத்தின் வழியாய் அடிக்கடி தீர்க்கத்தரிசிகளினுடைய பள்ளிகளுக்குக் கடந்து போவதை அவள் கண்டபோது, தங்களோடு அவர் இரவு உணவு எடுத்துக்கொள்ளுமாறு உபசரணையோடு வருந்தி அழைத்தாள். ஆகையால் அவ்வழியே கடந்துபோகும் ஒவ்வொரு முறையும் அவளது உபசரிப்பில் அவர் பங்கெடுத்தார். கர்த்தருடைய தீர்க்கத்தரிசியைக்குறித்து அதிகமதிகமாய் இந்தக் கனம்பொருந்திய ஸ்திரீ கண்டு உணர்ந்துகொண்டபோது, அவரைத் தன் வீட்டில் அழைத்துக்கொள்வதைத் தனக்கான சிலாக்கியமாக அதிகமதிகமாய் உணர்ந்துகொண்டவளாகி, அவள் தன் கணவனை நோக்கி: "இதோ, நம்மிடத்தில் எப்போதும் வந்துபோகிற தேவனுடைய மனுஷனாகிய இவர் பரிசுத்தவான் என்று காண்கிறேன். நாம் மெத்தையின்மேல் ஒரு சிறிய அறைவீட்டைக் கட்டி, அதில் அவருக்கு ஒரு கட்டிலையும், மேஜையையும், நாற்காலியையும், குத்துவிளக்கையும் வைப்போம்; அவர் நம்மிடத்தில் வரும்போது அங்கே தங்கலாம் என்றாள்" (2 இராஜாக்கள்4:9-10). தன் மனைவியைக் காட்டிலும் இக்கணவன் மதத்திற்கடுத்த விஷயத்தில் சற்றுக் குறைவுபட்டவராக இருப்பினும், மற்றச் சில காரியங்களிலும் "கனம்பொருந்திய" நிலையில், குறைவுபட்டு இருப்பினும், மனைவிக்குரிய விதத்திலும், தகுதியான விதத்திலும் கேட்கப்பட்ட மரியாதையுடன் கூடிய அவளது இந்த வேண்டுகோளானது கணவனை இணங்கச் செய்தது மற்றும் அதை நிறைவேற்றவும் செய்தார். இந்த ஸ்திரீயின் "கனம்பொருந்திய" நிலைமையானது தன் சொந்தக் கணவனுடன் அவள் நடந்துகொண்ட விஷயத்தில் வெளிப்பட்டது என்று நாம் சொல்லலாம். ஒருவேளை கணவன் மற்றும் மனைவியாகிய இருவரில் மனைவி தன்னைக் கனம்பொருந்தியவளாக உணர்வாளானால் . . . இப்படிப்பட்ட ஸ்திரீகளில் எத்தனைபேர், திவ்விய நியமனத்தின்படி, குடும்பத்தின் தலைவனாய் இருக்கும் கணவனுடன் மதத்திற்கடுத்த வேலைகளிலும், அன்பு பாராட்டுகிற வேலையிலும் - கணவனிடம் அதிகாரத்துடன் கேட்டுக்கொள்வதற்குப் பதிலாக, அவருடன் கலந்து ஆலோசிப்பதும், ஒத்துழைப்புக் கொடுக்கும்படியாக அவரிடம் வேண்டிக்கொள்வதும் ஏற்றகாரியங்கள் என்பதை முற்றிலும் மறந்துபோய் விடுகின்றனர். தன்னடக்கம் மற்றும் தாழ்மை என்பவைகளே புருஷன் மற்றும் ஸ்திரீயாகிய இருவரிலும் கனம்பொருந்திய நிலைமை, காணப்படுவதற்கான உண்மையான அடையாளங்களாகும்.

அந்தக் காலங்களில் தங்குவதற்கான விடுதிகளும், தங்குவதற்கான இல்லங்களும், உணவகங்களுமாகிய ஏற்பாடுகள் காணப்படவில்லை மற்றும் இதனால் இன்றைய நாட்களைக் காட்டிலும் அப்போது விருந்தோம்பலானது அதிகமாய் நடைமுறையில் இருந்தது. பழக்க வழக்கங்களினுடைய மாற்றங்களின் காரணமாய்ச் சில விஷயங்களில் நாம் அதிக இழப்பிற்குள்ளாகியுள்ளோம்; ஏனெனில் விருந்தோம்பலின் ஆவியானது முற்காலங்களைக் காட்டிலும் இப்பொழுது மிகவும் குறைவுபட்டுள்ளது. ஒவ்வொரு கிறிஸ்தவக் குடும்பமும் கூடுமானமட்டும் ஒருவேளை அவர்களது வாய்ப்புகள் அனுமதிக்கும் பட்சத்தில் தங்கள் வழியே கடந்துபோய் வரும் கர்த்தருடைய ஊழியக்காரர்களை உபசரிப்பதற்கென வீட்டில் ஓர் அறையை ஒதுக்கி வைத்துக்கொள்வது நலமாய் இருக்கும் என்று நாங்கள் நம்புகின்றோம். கர்த்தருடைய ஊழியக்காரர்களையும், பொதுவாய் விசுவாச வீட்டாரையும் வாய்ப்புக்கிடைப்பதற்கு ஏற்ப உபசரிப்பதில், இரக்கத்தின், அன்பின், அன்புடன்கூடிய தயவின் இந்த ஆவியினை வளர்த்தி, விருத்தியாக்கிட நாடிடும் அனைவருக்கும் பூலோக வகையாக இல்லையென்றாலும், ஆவிக்குரிய வகையான ஓர் ஆசீர்வாதம் கடந்துவருமென்று நாங்கள் நம்புகின்றோம்.

R4834 [தெரிந்தெடுக்கப்பட்ட பத்திகள்]

## தேவனுக்கு ஏற்புடையதாயிருத்தல்

"துன்மார்க்கருடைய ஆலோசனையில் நடவாமலும், பாவிகளுடைய வழியில் நில்லாமலும், பரியாசக்காரர் உட்காரும் இடத்தில் உட்காராமலும், கர்த்தருடைய வேதத்தில் பிரியமாயிருந்து, இரவும் பகலும் அவருடைய வேதத்தில் தியானமாயிருக்கிற மனுஷன் பாக்கியவான். அவன் நீர்க்கால்களின் ஓரமாய் நடப்பட்டு, தன் காலத்தில் தன் கனியைத் தந்து, இலையுதிராதிருக்கிற மரத்தைப் போலிருப்பான்; அவன் செய்வதெல்லாம் வாய்க்கும்" (சங்கீதம் 1:1-3). தேவனுடைய வார்த்தைகளைத் தொடர்ச்சியாய் நம் தியானத்திற்கான பாடப்பொருளாய்க் கொண்டிருப்போமானால், அதன் கொள்கைகளானது சீக்கிரமாய் நம்மிடத்தில் ஒன்றிப்போய், நம்முடைய மனதினுடைய அமைப்பின் பாகமாகிவிடும் மற்றும் நம் குணங்களை மிகவும் அழகாக்கிடும் மற்றும் தேவனுடைய, நம் சக மனிதர்களுடைய பாராட்டுதலுக்கு ஏதுவாகிடும்; மேலும் மனதினுடைய இந்த வழக்கத்தினால், ஜீவியத்தினுடைய கிரியைகள் பேசுகின்றதாய் இருக்கும்.

தூய்மையாக்கப்பட்ட நீரூற்றானது, முன்பைக் காட்டிலும் தித்திப்பான தண்ணீர்களைக் கொணர்ந்து, அதனிடத்திற்கு வரும் அனைவருக்குமே புத்துணர்வும், மகிழ்ச்சியும் கொடுக்கின்றதாய் இருக்கும். இது - சந்தோஷமான இல்லங்களை உருவாக்கிடும் - சிறந்த கணவன்மார்களை, சிறந்த மனைவிமார்களை மற்றும் சிறந்த பிள்ளைகளை உருவாக்கிடும். இது மனநிலையினை இனிமையானதாக்குகின்றது, தொனியை மென்மையானதாக்குகின்றது, மொழியினைப் பெருந்தன்மையுள்ளதாக்குகின்றது, நற்பழக்கவழக்கங்களை வளர்த்துகின்றது, உணர்வுகளைக் கண்ணியப்படுத்துகின்றது மற்றும் அழகான அலங்கரிப்பினை ஒவ்வொரு எளிமையான கடமை விஷயத்திலும் கொடுக்கின்றதாய் இருக்கின்றது. இது அன்பின் கொள்கையை உள்ளே கொண்டுவந்து, சுயநலத்தின் சச்சரவான அம்சங்களைப் புறம்பே தள்ளிடும். இப்படியாய் இது இல்லத்தைத் தோட்டமாக மாற்றுகின்றது; இங்கே ஒவ்வொரு பண்பும், ஒவ்வொரு இயல்பும் - வளர்வதற்கும், விருத்தியாகுவதற்கும் தாராளமான வாய்ப்புகள் இருக்கும்.

இது தனிப்பட்ட நபரையும், இல்லத்திலுள்ள அவனது ஜீவியத்தையும் மாத்திரம் அனுகூலமாய்த் தாக்கத்திற்குள்ளாக்காமல், இது வியாபாரத்தின் விஷயத்திலும்கூடத் தாக்கத்தை ஏற்படுத்துகின்றதாய் இருக்கும்; உண்மையும், நியாயமான கையாளுதலும் அனைத்து வியாபார விஷயங்களிலும் காணப்படும்; இப்படியாகத் தேவனுடைய நாமத்தைத் தரித்துக்கொண்டிருப்பவர்களாலும், அவரது பாக்கியமான ஆவியைப் பெற்றிருப்பவர்களாலும், தேவன் கனப்படுத்தப்படுவார்.

---

R4917 [தெரிந்தெடுக்கப்பட்ட பத்திகள்]

## அன்பைக் குறித்துச் சுயபரிசோதனை

"தற்பொழிவை நாடாத" சுயநலமற்ற அன்பு என்னிடத்தில் உள்ளதா? அதாவது என்னுடைய சுய விஷயங்களுக்காக நாடாத சுயநலமற்ற அன்பு என்னிடத்தில் உள்ளதா? அதாவது மற்றவரின் நலம் கருதி என்னுடைய சில உரிமைகளையே பலி செலுத்தும் அன்பு என்னிடத்தில் உள்ளதா? அல்லது ஒவ்வொரு தருணத்திலும் என் உரிமைகளை நாட்ட விரும்பும் சுயநலம், என்னிடத்தில் காணப்படுகின்றதா? அல்லது மற்றவரின் நலம், உரிமை மற்றும் வசதிகளைக் கருதாமல், என் உரிமைகளை நாட்ட விரும்பும் சுயநலம்

என்னிடத்தில் காணப்படுகின்றதா? இவ்வகையான அன்பினைப் பெற்றிருப்போமானால் மற்றவர்களுக்குக் கேடுவிளைவிக்கும் விதத்தில் அநீதியாய் நடந்துகொள்வதிலிருந்து நம்மை நாம் காத்துக்கொள்வதில் விழிப்பாயிருப்போம், மேலும் தவறுசெய்வதைவிட தீங்கு அனுபவிக்க விரும்பிடுவோம்; அநீதி செய்வதைக்காட்டிலும் அநீதி அனுபவிக்க விரும்பிடுவோம்.

### அன்பு வீட்டில் ஆரம்பிக்கின்றது

மற்றவர்களுக்கு நாம் நன்மை செய்ய வேண்டும் என்பதற்காக, மாம்சத்தின்படி தேவைகளுக்கு நம்மைச் சார்ந்திருக்கும் நபர்களின் பராமரிப்பை நாம் புறக்கணிக்க வேண்டும் என்பதாக இல்லை. எல்லாக் கோணங்களிலும் பார்க்கும் போது, அன்பு வீட்டிலேயே ஆரம்பிக்கின்றது. பூரண அன்பின் ஆவியை உடைய புருஷனும், ஸ்திரீயும் ஜீவியத்தின் எந்த விஷயங்களிலும் தங்களுடைய சொந்த நலன்களை மாத்திரமே சிந்தித்துக்கொண்டிருக்கமாட்டார்கள் என்று நாங்கள் புரிந்துகொள்கின்றோம். இவ்விதமான அன்பு செயல்முறைப்படுத்தப்படும்போது, ஜீவியத்தின் அனைத்து விஷயங்களிலும், அதாவது வீட்டிற்குள்ளும், குடும்பத்திற்கு வெளியேயும் அதிக செல்வாக்குப் பெற்றிருக்கும்.

---

R5954 [தெரிந்தெடுக்கப்பட்ட பத்திகள்]

# சுவாரசியமான கடிதங்கள்

## எப்போது விவாகரத்துப் பெற்றுக்கொண்டவர்கள் திருமணம் பண்ணிடுவதற்குச் சுதந்தரமாய் இருக்கின்றனர்?

அன்புக்குரிய சகோதரர் ரசல் அவர்களே:-

வேதாகம பாடங்களுடைய 6-ஆம் தொகுதியானது, ஒவ்வொரு அனுபவங்கள், சிரமங்கள் மற்றும் புதுச்சிருஷ்டியாகிய கர்த்தருடைய ஜனங்களுக்கான சரியான வழிமுறைகள் குறித்துத் தெரிவிக்கின்றது என நான் நன்கு அறிவேன்; எனினும் ஒரு குறிப்பிட்ட கேள்வியானது எழும்பி, எங்களது சபையில் சில குழப்பங்களை உருவாக்கிக்கொண்டிருக்கின்றது மற்றும் பிரிவினையை உண்டுபண்ணிவிடும்போன்று தோன்றுகின்றது. எங்கள் சபையின் அங்கத்தினர்களாகிய ஒரு சகோதரனும், ஒரு சகோதரியும் எங்கள் ஐக்கியத்தினை அனுபவித்து வந்தனர்; ஆனால் அச்சகோதரிக்கு முன்பும் ஒரு திருமணம் நடந்திருக்கின்றது என்றும், அவளது முதலாம் கணவன் இன்னமும் ஜீவனோடு காணப்படுகின்றார் மற்றும் மறுமணம் செய்துகொண்டுள்ளார் என்றும் எங்களுக்குத் தெரியவந்தது.

எங்கள் சபையாரில் சிலர் இந்தச் சகோதரனையும், சகோதரியையும், கூடுகைகளில் கலந்து கொள்வதற்குத் தடைப்பண்ணிட வேண்டுமென்று விரும்புகின்றனர். மத்தேயு 19:9-ஆம் வசனத்தில் இடம்பெறும் இயேசுவின் பின்வரும் வார்த்தைகளின் அடிப்படையிலேயே முக்கியப் பிரச்சனை ஏற்பட்டுள்ளது - "எவனாகிலும் தன் மனைவி வேசித்தனஞ் செய்ததினிமித்தமேயன்றி, அவளைத் தள்ளிவிட்டு வேறொருத்தியை விவாகம்பண்ணினால், அவன் விபசாரஞ்செய்கிறவனாயிருப்பான் தள்ளிவிடப்பட்டவளை விவாகம் பண்ணுகிறவனும் விபசாரஞ்செய்கிறவனாயிருப்பான்." இவ்விஷயத்தில் அச்சகோதரியுடைய முதலாம் கணவன் வேசித்தனம் குற்றத்தைப் புரிந்துள்ளார் என்று

வலியுறுத்தப்படுகின்றது; ஆனால் இது அவள் மறுமணம் செய்துகொள்வதற்கு அவளை விடுவித்துவிடுகிறதில்லை என்று மற்றவர்கள் வலியுறுத்துகின்றனர்; ஏனெனில் (முறையே விவாகரத்துப்பண்ணியோ அல்லது இல்லாமலோ இருக்கும்) விவாகரத்தான ஸ்திரீயைத் திருமணம் பண்ணும் எவனும், வேசித்தனம் புரிந்தவனாய் இருப்பான் என்று இயேசு கூறியிருக்கின்றார். இது விஷயமாக எங்களுக்குக் கொஞ்சம் அதிகமான வெளிச்சத்தினைத் தயவாய்க் கொடுத்தருளவும்.

உங்கள், உண்மையுள்ள சகோ ........................................................................

[பதில்:- இக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள இக்காரியமானது பிரிவினையை அல்லது குழப்பத்தை உண்டுபண்ண அனுமதிப்பதில் சபையார் நிச்சயமாகவே தவறே செய்கின்றனர். எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் கூடுகையில் கலந்துகொள்வதற்குத் தடைப்பண்ண அவர்களுக்கு எந்த முகாந்தரமும் இல்லை. அதிகப்பட்சமாக சபையாரால், சம்மந்தப்பட்டவர்களுக்கு ஐக்கியத்தினை மறுப்பதும் மற்றும் சம்மந்தப்பட்டவர்களின் இல்லங்களுக்குச் செல்வதற்கு அல்லது சபையாரின் இல்லங்களில் அவர்களை வரவேற்பதற்கு மறுப்பதும் மற்றும் அச்சகோதரனை மூப்பர் அல்லது உதவிக்காரன் ஊழியத்திற்கு நியமிப்பதற்குச் சபையார் மறுப்பதும் கூடும். ஆனால் பொதுக்கூடுகைகளில் கலந்துகொள்ளும் சிலாக்கியங்களை அவர்களுக்கு மறுப்பது என்பது மிகவும் முரண்பாடான காரியமாய் இருக்கின்றது; ஏனெனில் எல்லா வகையான பாவங்களில் வாழும் அனைத்து வகையான ஜனங்களும் கூடுகைகளுக்கு அவ்வப்போது வந்து கொண்டிருக்கின்றனர் மற்றும் இப்படியாக வருகையில் அவர்கள் பிரயோஜனமடைந்து, குணமடைவார்கள் என்று நாம் நம்புகின்றோம்.

இவ்விஷயத்தில் வேசித்தனமே விவாகரத்திற்கான அடிப்படையாக இருக்கின்றது என்றும், தவறு கணவனிடத்தில்தான் இருந்துள்ளது என்றும் ஒப்புக்கொள்ளப்படுகின்றபடியால், இவ்விஷயமானது "வேசித்தனஞ் செய்ததினிமித்தமேயன்றி" என்று நமது கர்த்தரினால் குறிப்பிடுகின்ற விதிவிலக்கிற்குள்ளாகவே வந்துள்ளது. அன்றியும் ஒருவேளை இது உண்மையிலேயே பிரிதலுக்கான காரணமாய் இல்லாமல் இருப்பினும், முன்னாள் கணவன் மறுதிருமணம் செய்துள்ள காரியமானது, அவர் திருமண பந்தம் முறிக்கப்பட்டதாகக் கருதியுள்ளதைச் சுட்டிக்காட்டுகின்றது; ஆகையால் அவனது முதல் மனைவி, அதன் கடமைகளினின்று விடுதலைப்பண்ணப்பட்டுள்ளாள். இக்கடிதத்தில் நீங்கள் குறிப்பிட்டுள்ள சகோதரியானவள் அவள் பக்கத்தில் இந்த இரண்டு நிரூபணங்களையும் பெற்றிருக்கின்றாள் மற்றும் மறுமணம் செய்வது ஞானமான மற்றும் சரியான காரியமாய் இருக்குமென அவள் எண்ணும்பட்சத்தில், மறுமணம் செய்வதற்குரிய எல்லா உரிமையையும் உடையவளாய் இருக்கின்றாள்.

கணவன் மற்றும் மனைவியின் இடையிலான ஒரு பிரிவினையை மாத்திரமே நமது கர்த்தர் குறிப்பிட்டார் என்று எண்ணிக்கொள்ள முடியாது; ஏனெனில் ஒருவேளை அவிசுவாசி பிரிந்துபோனால், பிரிந்துபோகட்டும் - அதைத் துன்பமாகக் கருதாமல், அதை ஓர் ஆசீர்வாதமாய்க் கருதுங்கள் என்று பரிசுத்த பவுலடிகளார் ஆலோசனை கூறுகின்றார். கணவனோ அல்லது மனைவியோ இப்படிப் பிரிந்து போவது, விவாகரத்தாகுவதாகும் என்று அவர் கூறவில்லை. விவாகரத்து என்பது உண்மையான திருமண ஒப்பந்தத்தை முழுமையாய் முறித்துப் போடுவதாகும். திருமண பந்தத்தை மிகவும் அக்கறையற்ற விதத்தில் கையாளப்படுவதை இயேசு குறையாய்க் கூறி, கண்டனம் பண்ணினார். வேசித்தனத்தினால் மாத்திரமே தவிர மற்றப்படி திருமண ஒப்பந்தமானது முழுமையாய் முறிக்கப்பட முடியாது.

நம்முடைய நாட்களில் இக்காரியங்களானது நீதிமன்றங்களினால் நடத்தப்படுகின்றது. இதோடுகூட வேதமாணவர்கள் தேவவசனத்தினால் தங்களைச் சரிப்படுத்திக்கொள்கின்றனர். ஆண்டவரால்

குறிப்பிடப்பட்டுள்ள ஒரே காரணம் காணப்படும் பட்சத்தில் மாத்திரமே தவிர, மற்றப்படி நீதிமன்றமானது விவாகரத்து அளிக்கும் காரியமானது, திருமண ஒப்பந்தத்திலிருந்து விடுதலையாக்குவதாக ஒரு வேதமாணவனால் கருதப்படக்கூடாது. ஆனால் வேசித்தனத்தின் காரணமான நீதிமன்ற விவாகரத்தானது அல்லது பிரிந்திருப்பவரின் இரண்டாம் திருமணம் காரணமான நீதிமன்ற விவாகரத்தானது மதிக்கப்பட வேண்டும்].

---

R4019 [தெரிந்தெடுக்கப்பட்ட பத்திகள்]

# மற்றவர்களுக்கான நமது கடமைகள்

## யாத்திராகமம் 20:12-17

"உன்னில் நீ அன்புகூருவதுபோல் பிறனிலும் அன்புகூருவாயாக." (லேவியராகமம் 19:18)

## களவு செய்யாதிருப்பாயாக

மற்றவர்களுடைய உரிமைகள், மற்றவர்களுடைய உடைமைகள் குறித்தச் சரியான அடையாளம் கண்டுகொள்ளுதல் குறித்து இங்குப் போதிக்கப்பட்டுள்ளது. இதில் சுபாவத்தின்படியான மனுஷனோ, உலக ஞானியோ வரையறைகளைக் கண்டுப்பிடிப்பதில்லை; இது பின்வருமாறு: "நீங்கள் கண்டுபிடிக்கப்படுவதற்குரிய, பிடிபடுவதற்குரிய, தண்டிக்கப்படுவதற்குரிய வாய்ப்பானது கொஞ்சமேனும் இருக்குமானால் களவு செய்யாதிருங்கள்"; "கொஞ்சம் பணத்திற்காகக் களவு செய்யாதிருங்கள்; ஏனெனில் கொஞ்சம் பணத்திற்காகக் களவு செய்து பிடிப்படும் பெரிய அபாயத்தினை எடுத்துக்கொள்ள வேண்டாம்; உங்களால் முடியுமானால் எளிதில் கண்டுபிடிக்கமுடியாத அளவிற்கு அல்லது ஒருவேளை கண்டுபிடிக்கப்பட்டாலும் சட்டப்படி செய்தது என்ற தோற்றத்தில் மூடி மறைக்கப்படத்தக்கதாகக் கொஞ்சம் சட்டப்பூர்வமான விதங்களில் செய்யுங்கள்" என்று கூறிடவில்லை. இக்கட்டளையானது ஒவ்வொரு யூதனும், மற்ற ஒவ்வொரு யூதனுடைய உரிமைகளையும், உடைமைகளையும், நலன்களையும் அடையாளம் கண்டுகொள்ள வேண்டும் என்றும், இவைகளை அபகரித்தல் கூடாது என்றும் எளிமையாகவும், தெளிவாகவும் தெரிவிக்கின்றது. இந்தக் கட்டளையானது பொதுப்படையான மற்றும் தனிப்பட்ட எல்லா வகையான களவுகளையும் பற்றியே தெரிவிக்கின்றது; ஏனெனில் களவுகள் அனைத்திலும் மிகமோசமான களவுகளாக நாம் பார்ப்பவைப் பொதுப்படையான களவுகளாகும்; இந்தக் களவுகளானது சட்டப்பூர்வமானது என்ற போலி தோற்றத்தின்கீழ், பொதுச் சொத்துக்களை அபகரிக்கின்றது அல்லது சட்டத்தின் மொழியில் குறிப்பிட வேண்டுமெனில் நியாயமான பங்கு கொடுக்கப்படாமல் "பறிமுதல்" செய்யப்படுதல் ஆகும்.

இந்தக் கட்டளையானது பொதுவாய் நீதி சம்பந்தப்பட்டதாய் இருக்கின்றது; பிள்ளையினுடைய உரிமைகளையும் பெற்றோர் அடையாளம் கண்டுகொள்ள தவறுவதின் மூலமும், பெற்றோரெனத் தனக்கிருக்கும் கடமைகளை அடையாளம் கண்டுகொள்ள தவறுவதின் மூலமும் பெற்றோர் தன் பிள்ளையிடமிருந்து களவு செய்யக்கூடும். உதாரணத்திற்கு ஜீவியத்தின் கடமைகளுக்குப் பிள்ளைகள் ஆயத்தமாகத்தக்கதாக அவர்களுக்கு ஒரு சராசரி/பொதுக்கல்வியையாகிலும் கூடுமானால் பெற்றோர்கள் வழங்குவது பெற்றோருடைய நியாயமான கடமையாக இருக்கின்றது; ஆனால் காரணம் இல்லாமல் தன் பிள்ளையினிடமிருந்து இக்காரியத்தினைப் பறிக்கிறவன், பிள்ளையிடமிருந்து களவு

செய்கிறவனாய் இருப்பான் மற்றும் பிள்ளைக்கு உரிமையான இவைகளை, பொதுவான இவைகளை, நியாயமான இவைகளை அவர்களிடமிருந்து பறிக்கிறவனாய் இருப்பான். பிள்ளைகளும்கூடத் தங்கள் பெற்றோரிடத்திலும் மற்றும் தங்களுக்குள் ஒருவர் இன்னொருவரிடத்திலும் உள்ள கடமையினை அடையாளம் கண்டுகொள்ள வேண்டும்; என்னுடையவை மற்றும் உன்னுடையவைகள் என்பவை ஒவ்வொரு இல்லத்திலும் ஒழுங்கின் அடிப்படையாகவும், நீதியின் அஸ்திபாரமாகவும் அடையாளம் கண்டுகொள்ளப்பட வேண்டும்; குடும்பங்களில் ஒருவர் மற்றவருடைய உரிமைகளைப் புறக்கணிப்பது - ஒருவர் இன்னொருவரைச் சாதகமாகப் பயன்படுத்துவது - வேறு வார்த்தைகளில் சொல்ல வேண்டுமெனில் ஒருவர் இன்னொருவரிடமிருந்து, அதாவது சாதாரணமான காரியங்களைக் களவு செய்வது என்பவைகள் குடும்பங்களில் ஏற்படுத்திவிடும் சண்டை சச்சரவுகள் தவிர, மற்றபடி வேறு எதுவும் சண்டை சச்சரவுகளைக் கொண்டுவருவதாக நாம் அறிந்திருக்கிறதில்லை. முக்கியத்துவமில்லாத காரியங்களில் மனசாட்சியும், நீதியும் புறக்கணிக்கப்படுதல் என்பது மனச்சாட்சியினை நோய்க்குள்ளாக்குகின்றது - பின்னர் இறுதியில் மற்றவர்களுடைய உரிமைகளை அலட்சியம்பண்ணுவதற்கும் வழிநடத்திவிடுகின்றது - அபாயமும், தண்டனையும் மிக அதிகமாய்க் காணப்படும் எக்காரியத்தையும் மற்றும் அனைத்தையும் தன் சொந்தப் பயன்பாட்டிற்கு எனச் சுயநலமாய் அபகரித்திடுவதற்கு வழிநடத்திவிடுகின்றதாய் இருக்கும்.

புதுச்சிருஷ்டியைப் பொறுத்தமட்டில் அவனது மனம் மற்றும் இருதயத்தின் சாராம்சமாய் இருக்கும் அவனது அன்பின் பிரமாணமானது களவு செய்வதற்கு எதிராய் இருக்கும்; அன்பானது கொடுப்பதற்கும், உதவுவதற்கும் ஏவுகின்றதாய் இருக்கும்; நன்மையானவைகளைச் செய்வதிலும், நன்மையானவைகளைப் பேசுவதிலும், நன்மையானவைகளைக் கொடுப்பதிலும் சந்தோஷம்கொள்கின்றது. சத்தியத்தை மற்றவர்களுக்குக் கொடுப்பதில் மாத்திரம் அவன் பிரியம்கொள்ளாமல், மாறாக கர்த்தருடைய ஆவியானது அவனுடைய இருதயத்தையும், அவனுடைய ஜீவியத்தையும் நிரப்பியிருக்கும் அளவிற்கும், ஊடுருவியிருக்கும் அளவிற்கும் ஏற்ப அவன் தேவையில் இருப்பவர்கள் அனைவருக்கும், பூமிக்குரிய நன்மைகளைக் கொடுப்பதிலும் பிரியமுள்ளவனாய் இருப்பான். அன்பின் ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்ட புதிய இருதயத்தின், புதிய மனதின், புதிய மனநிலையின் அம்சமாய்த் தயாள குணம் காணப்படுகின்றது. எனினும் பொதுவாய் நிலவிவரும் ஒழுங்கின்மையில் பழக்கப்பட்டிருப்பதினாலும், வீட்டிலும், தொழிலிலும் சிறுசிறு அநியாயங்களை நடைமுறைப்படுத்தியிருப்பதினாலும், இவைகள் அனைத்தும் அன்பிற்கு இசைவற்றதாய் இருக்கின்றன என்று கண்டுபிடிப்பதற்குப் புதுச்சிருஷ்டிக்குச் சில காலங்கள் எடுத்துக்கொள்ளும்; எனினும் எந்தளவிற்குப் பரிசுத்த ஆவியானது அவன் இருதயத்தில் பொங்கி வழிகின்றதோ அவன் அந்தளவிற்குத் தன் வார்த்தைகளையும், கிரியைகளையும், ஆம் தன் எண்ணங்களையும் கவனிப்பான்; மேலும் தேவனுடைய சிங்காசனத்தின் அஸ்திபாரமாய் இருக்கும் நீதியானது, ஜீவியத்தில் மற்றவர்களிடத்திலுள்ள தன் நடத்தைகள் அனைத்திற்கும் அஸ்திபாரமாகக் காணப்படுகின்றதா என்று பார்த்துக்கொள்வான் - நீதிக்குக் குறைவான எதையும் தான் மற்றவர்களுக்குச் செய்யாதபடிக்குப் பார்த்துக்கொள்வான்.

அடுத்ததாக அவன் நீதிக்கும் அதிகமாய்ச் செய்திடுவதற்கு எதிர்ப்பார்க்கப்படும் தருணங்களில், அதுவும் பாதகமாய்க் காணப்படாத தருணங்களில், அன்பானது எப்படி நீதிக்கும் அதிகமாய்ச் செய்திடும் என்பவைகளில் கவனம்கொள்வான்; மேலும் மற்றவர்கள் தன்னிடம் நடந்துகொள்ளும் விஷயத்தில், தனக்கு முழுமையாய் நீதியோடு காரியங்கள் செய்யப்பட வேண்டும் என்று கேட்கவோ அல்லது எதிர்ப்பார்க்கவோ செய்யாதளவுக்கு, விழுந்துபோன நிலைமையிலுள்ள பொதுவான மனுக்குலத்தின்மீது முழுக்க அனுதாபம்கொண்டிருப்பான். மனுக்குலத்தினுடைய விழுந்துபோன நிலைமைக்குறித்த அவனது அறிவானது, அவனால் கையாளப்படுபவர்களிடத்தில் அவனை அனுதாபம்கொண்டிருக்க செய்திடும்.

அவனது இவ்வன்பும், தயாளமும் அவன் பொறுப்பின் கீழுள்ள அவனது சொந்தக் குடும்பத்தாருக்குப் பாதகம் செய்யாதப்படிக்கு, இதுவிஷயத்தில் அவன் தனக்கு வேகத்தடையிட்டுக்கொள்வதும் கூட அவசியமாயிருக்கும். கர்த்தருடைய ஜனங்களில் குடும்பங்களுடைய தலையானவர்களாய்க் காணப்படும் சிலர் . . . ஒருவேளை ஒவ்வொரு விஷயத்திலும் தனக்குக் காரியங்கள் நீதியாய்ச் செய்யப்பட வேண்டும் என்று வலியுறுத்தாதிருந்தாலும், குடும்பத்தினுடைய பல்வேறு அங்கத்தினர்களிடையே காரியங்கள் நீதியாய்ச் செய்யப்படத்தக்கதாக அன்போடும், தயவோடும், அதேசமயம் உறுதியோடும் அவர்களிடம் வலியுறுத்திடுவதற்குக் கற்றுக்கொள்ள வேண்டும்.

---

R1275 [தெரிந்தெடுக்கப்பட்ட பத்திகள்]

## அன்பு மற்றும் நீதியின் இணைந்த கோரிக்கைகள்

ஒவ்வொரு கிறிஸ்தவனுடைய ஜீவியத்திலும், கண்டிப்பான நீதியானது வெளிப்பட வேண்டும். அவன் எந்த ஒரு பொருளையும் மதிப்பிடும் விஷயத்தில் நியாயமாய்க் காணப்பட வேண்டும்; ஒருவேளை ஒரு பொருளை வாங்குவானானால், அதற்கே உரிய நீதியான, சமமான தொகையைச் செலுத்த விரும்பிட வேண்டும்; தான் பெற்றுக்கொள்ளும் சம்பளத்திற்குத் தக்கதாகத் தன்னை வேலையமர்த்தியவருக்கு நியாயமான, சமமான உழைப்பினைக் கொடுத்திட வேண்டும். ஒருவேளை வியாபாரத்தில் அவன் மற்றவர்களுடன் போட்டியிடுகிறவனாய் இருப்பானானால், அவனது பொருட்களைத் தன் சக வியாபாரியைப் பார்க்கிலும் மிகக் குறைந்த விலையில், உரிய விலைக்குக் குறைவான விலையில் விற்க நாடிடக்கூடாது. ஒருவேளை பெற்றோனாய் இருப்பானானால், அவனது ஆண்பிள்ளையானாலும், பெண்பிள்ளையானாலும் சரி, அவர்கள் முதிர்ச்சி/பக்குவ வயதை எட்டுகையில், அவர்களுக்கான தனிப்பட்ட உரிமைகளை அடையாளம் கண்டுகொள்ள வேண்டும். பிள்ளைகளுக்கு இத்தகைய பருவம் அடைவதுவரையிலும் பெற்றோரின் கட்டுப்பாடு அவசியமே; ஆனாலும் இவ்வயதைத் தாண்டியும் செயல்முறைப்படுத்தப்படுமானால், அது அநீதியாய் இருக்கும்; ஒருவேளை அவ்வயதைத் தாண்டியும் செயல்முறைப்படுத்தப்பட்டால், அது எதிர்க்காலத்தில் பிள்ளைப் பயனுள்ள பாத்திரமாய் இருப்பதைத் தடைப்பண்ணிடும் மற்றும் தேவனிடமுள்ள அவர்களது தனிப்பட்ட உறவையும், பொறுப்பையும் குறுக்கிடுகிறதாயும் இருக்கும்.

பெற்றோர்களில் உள்ள நீதியானது, பக்குவமடைந்துள்ள குமாரன், குடும்பத்தை விட்டுச் செல்வதற்கும், தனக்கான எதிர்க்காலத்தினைத் தானே பார்த்துக்கொள்வதற்கும் பெற்றிருக்கும் உரிமையினை அடையாளம் கண்டுகொள்ளும்; இப்படியே பெண் பிள்ளைகள் விஷயத்திலுமாகும். பிள்ளைகளில் காணப்படும் நீதியும்கூட - (பெற்றோருக்குக் காட்டப்படவேண்டிய) பாசக் கடமைகளின் உரிமைக்கோரல்களை, மரியாதை காண்பிக்கப்படவேண்டும் என்ற உரிமைக்கோரல்களை, அன்பு பாராட்டப்படுவதற்கான உரிமைக்கோரல்களை, பெற்றோர்களின் முதிர்ச்சியான ஞானம் வரவேற்கப்பட வேண்டும் எனும் உரிமைக்கோரல்களை, பெற்றோர்கள் வயதாகையில், பலவீனமடைகையில், வாழ்க்கையின் கடைசி காலங்களில் அவர்கள் அன்போடு பராமரிக்கப்பட வேண்டும் என்பதற்கான உரிமைக்கோரல்களை அடையாளம் கண்டுகொள்கின்றது.

---

R940 [தெரிந்தெடுக்கப்பட்ட பத்திகள்]

# இவைகளுக்கும் அதிகமாகவா?

"என்னால் என்ன செய்யமுடியும்? என்னுடைய ஜீவியம் மிகவும் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளதாய் இருக்கின்றது; மேலும் சத்தியத்திற்காய்ச் சாட்சிபகர்வதற்கும், அவருடைய மந்தைக்குப் போஷிப்பதில் ஆண்டவருக்கும், அவரது வார்த்தைக்கும் பாடுபடுவதற்குமான எனது வாய்ப்புகள் மிகவும் குறைவாய் இருக்கின்றபடியினால் பலி செலுத்துகிறவர்களில் ஒருவனாக நான் இல்லவே இல்லையென்று அஞ்சுகின்றேன். இப்படியாக இருக்குமோ?" என்று சிலர் கேட்கலாம். அன்புக்குரிய சகோதரரே உங்கள் சூழ்நிலை என்னவென்று எங்களுக்குத் தெரிவியுங்கள் என்று நாங்கள் கேட்கின்றோம். நீங்கள் பின்வருமாறு: "நான் ஒரு சுரங்கத் தொழிலாளி; என் குடும்பத்தில் நான் மாத்திரம் வேலை செய்கின்றேன்; ஞாயிற்றுக்கிழமைகளையும் மற்றும் சாயங்கால வேளைகளையும் மாத்திரமே ஓய்வாக நான் பெற்றிருக்கின்றேன்; என்னுடைய அயலார்கள் அறியாமையில் காணப்படுகிறவர்களாகவும், அஞ்ஞானிகளாகவும் காணப்படுகின்றனர்" என்று கூறுகின்றீர்கள். எங்கள் பதில் பின்வருமாறு: "சரி, நீங்கள் பெற்றிருப்பதான வாய்ப்புகளைப் பயன்படுத்துவதின் மூலம் துவங்குங்கள்; போகப்போக பிரயோஜனத்திற்கேதுவான பெரிய மற்றும் அகலமான கதவுகளை உங்கள் முன்னே திறப்பார் என்று தேவனிடத்தில் விசுவாசங்கொள்ளுங்கள். முதலாவதாக மகா சந்தோஷத்தின் நற்செய்தியைக்குறித்து நீங்களே சிந்தித்துப்பாருங்கள்; அது உங்கள் சொந்த இருதயத்தில் நிரம்பி, பொங்கி வழிந்தோடுவதாக. பிற்பாடு நீங்கள் பெற்றிருப்பதான சமாதானமும், சந்தோஷமும் உங்களது சக மனிதர்களுக்கு எத்தகைய நன்மைகளைச் செய்திடும் என்பதைச் சிந்தித்துப்பாருங்கள். அது அவர்களுக்கு எவ்வளவு தேவை என்றும், அது அவர்களது ஜீவியங்களின் எதிர்காலத்தினை எத்தனை இலகுவாக்கிடும் மற்றும் இன்பமாக்கிடும் என்றும் சிந்தித்துப்பாருங்கள். பாவத்திற்காகக் கொடுக்கப்பட்ட மாபெரும் ஈடுபலி விலைக்கிரயம் குறித்தும், ஏற்படுத்தப்பட்ட முழுப்பாவ நிவாரணம்குறித்தும், அதைப் பின்தொடரும் பிரம்மாண்டமான பின்விளைவுகள்குறித்தும், தேவனுடைய தூதுவர்களென உங்களது அயலார்களிடம் சொல்வதற்கும், இக்காரியங்களைக்குறித்து ஆராயவும், ஏற்றுக்கொள்ளவும் மற்றும் தேவனோடு ஒப்புரவாகவும் நீங்கள் வலியுறுத்திடுவதற்குமான சிலாக்கியம்குறித்துச் சிந்தித்துப்பாருங்கள். பின்னர் தேவன் உங்களுக்குக் கொடுத்துள்ளதான சிலாக்கியத்தினைப் பயன்படுத்திடுவதற்கான ஞானத்திற்காகத் தேவனிடம் ஜெபம்பண்ணிடுங்கள். இத்தருணத்தில் தேவனுடைய பிரதிநிதியென உங்கள் வேலையில் உங்கள் இருதயமானது அன்பினாலும், அனலினாலும், வைராக்கியத்தினாலும் முழுக்க நிறைந்திருக்கும்; மேலும் பயமும், வெட்கமும் உங்கள் இருதயத்திலிருந்து வெளியேறிடும். படிப்படியாக வேத ஆராய்ச்சியின்மூலமாகவும், கவனமாய் இருப்பதின்மூலமாகவும் சத்தியத்தை முன்வைத்திடும் விஷயத்தில் நீங்கள் சர்ப்பத்தைப்போல வினா உள்ளவர்களாகவும், புறாவைப்போலக் கபடற்றவர்களாகவும் இருப்பதற்குக் கற்றுக்கொள்வீர்கள்; உங்கள் ஊழியமானது அங்கீகரிக்கத்தக்கதாய்க் காணப்படுகின்றது என்பதற்கான நிரூபணத்தைச் சீக்கிரத்தில் உங்கள் ஊழியத்தினால் உண்டாகும் பலன்களில் கண்டுகொள்வீர்கள். சிலர் சுவாரசியமடைந்து நீங்கள் கூறுவதை மகிழ்ச்சியோடு கேட்பார்கள்; ஆனால் அநேகர் உங்களை நிந்தித்துச் சத்தியத்தின் நிமித்தமாக உங்களுக்கு எதிராய்ப் பல்வேறு விதங்களில் தீமையாய்ப் பேசிடுவார்கள்; ஏனெனில் உலகம் அவரை அறியாததுபோல உங்களையும் அறிந்திடாது (1 யோவான் 3:1). உங்களது உண்மைக்கான இந்தச் சாட்சிகளுக்காகவும், வாக்களிக்கப்பட்ட இந்தத் தற்காலத்துப் பலன்களுக்காகவும் களிகூர்ந்து சந்தோஷப்பட்டு மகிழுங்கள்; ஏனெனில் பரலோகத்தில் உங்கள் பலன் மிகுதியாய் இருக்கும். தகுதியற்ற நேரத்தில் ஞானமற்ற விதமாய் உங்கள் செய்தியைக்கொண்டு திணிக்காதீர்கள், சாதுரியமில்லாமல் கடுமையாய்ப் பேசிடாதீர்கள்,

கடினமான வார்த்தைகளில் பேசிடாதீர்கள். மாறாக உங்கள் வார்த்தைகள் கிருபையினால் சாரமேறின ஞானமான வார்த்தைகளாய் இருப்பதாக.”

ஒருவேளை பெரிய குடும்பத்தைப் பெற்ற நிலையிலும் வறுமையான சூழ்நிலைமையிலும் காணப்படும் தாயானவள் பின்வருமாறு கேட்கலாம்: "என்னால் என்ன செய்யமுடியும்? கர்த்தருடைய ஊழியத்தில் பலி செலுத்துகிறதற்கான எந்த வாய்ப்பினையும் என்னால் காணமுடியவில்லை. என்னுடைய இல்லத்தையும், பிள்ளைகளையும் - அதாவது அவர்களது ஒழுக்கத் தேவைகளையும், சரீரத் தேவைகளையும் பராமரிப்பதிலேயே என்னுடைய முழு நேரமும் போய்விடுகின்றது” என்று சொல்லலாம். ஆ! சகோதரியே எப்படி நீங்கள் பலி செலுத்துகின்றீர்கள் மற்றும் யாருக்காகப் பலி செலுத்துகிறீர்கள் என்பது பெரிதும் முக்கியத்துவமானது ஆகும். பலி செலுத்துதல் என்றால் என்ன என்பது குறித்துப் பெரும்பான்மையான தாய்மார்கள் நன்கு அறிவார்கள். ஒரு குடும்பத்தை முறையாய் வளர்த்துவது என்பது எவ்வளவுக்குச் சுயத்தைப் பலி செலுத்துதலை உள்ளடக்கும் என்பதை ஒவ்வொரு நல்லத் தாயும் அறிவாள். நீங்கள் உங்கள் ஆரோக்கியத்தையும், சௌகரியத்தையும், உங்கள் நேரத்தையும், இரவும் பகலுமாகச் சுகவாழ்க்கைகளையும் பலி செலுத்துகின்றீர்கள். இப்படியாகவே அர்ப்பணம்பண்ணின அல்லது அர்ப்பணம்பண்ணாத அனைத்து நல்லத் தாய்மார்களும் காணப்படுவார்கள். ஆனால் பின்வரும் வித்தியாசம் ஒன்று இருக்கின்றது: பெரும்பான்மையானவர்கள் இப்படியாகப் பெருமை மற்றும் சுயநலமான நோக்கத்தின் நிமித்தம், தங்களுடைய பிள்ளைகளுடைய கனம், மற்றும் ஆடம்பரத்தில் கனமடைவதற்கான ஆசையில் செய்கிறவர்களாக மாத்திரம் காணப்படுகின்றனர். ஆனால் அர்ப்பணிக்கப்பட்ட தாயானவளோ காரியத்தினைப் பின்வருமாறு சிந்தித்திட வேண்டும்: "நான் என்னையும், என் குடும்பத்தையும் தற்காலத்திலும், எதிர்காலத்திலும் தேவனுக்காகக் கொடுத்திருக்கின்றேன்; அவருடைய மகிமைக்காக என்னுடைய கணிப்பின்படி இந்த அநேகமான தாலந்துகளைப் பயன்படுத்துகிறதற்காகவும், செயல்படுத்திடுவதற்காகவும் ஒரு பொறுப்பினை அவர் என்னிடத்தில் கொடுத்திருக்கின்றார்; என் பிள்ளைகள்மீதே என் முதலாம் பொறுப்புக் காணப்படுகின்றது என்று அவரது வார்த்தைகள் எனக்குத் தெளிவாய்ப் போதிக்கின்றது: மேலும் பிள்ளைகளுடைய மற்றும் சமுதாயத்துடைய பிரயோஜனத்திற்காக பிள்ளைகளை என்னால் முயன்றமட்டும் நான் பயிற்றுவிப்பது தேவனுடைய சித்தமாக இருக்கின்றது” என்பதேயாகும். தேவனுக்கு ஏறெடுக்கப்படும் உங்களது பலியினுடைய இப்பாகமானது - அர்ப்பணிப்பு அல்ல, எனினும் உங்கள் விஷயத்தில் அது நீங்கள் உங்கள் தாலந்துகளைக் கர்த்தருக்கு உண்மையில் பலிசெலுத்தினதாகவும், இதை நீங்கள் அவருக்கே நேரடியாய்ச் செய்தது போலவும் இருக்கும். இது நீங்கள் வெளியே புறப்பட்டுச் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கச் செல்கையில் உங்கள் சிறுபிள்ளைகளைக் களைகள்போன்று வளரவிடுவதைக் காட்டிலும் கர்த்தருக்கு மிகவும் அங்கீகரிக்கத்தக்கதாய் இருக்கும்.

ஒருவேளை உங்கள் பிள்ளைகளுக்காய் நீங்கள் செய்யும் அனைத்திற்குமான பின்னணியில் சுயநலத்துடன்கூடிய பெருமையிராமல், அர்ப்பணிப்பின் ஆவிதான் காணப்படுமானால் பின்வருமாறு காரியங்கள் காணப்படும்: அவர்களது மேலான நன்மைக்கடுத்த விஷயங்களில் நீங்கள் அக்கறையும், கவனமும் கொண்டிருக்கும்போது உங்கள் விஷயத்தில் இருப்பதுபோலவே உங்களது பிள்ளைகளுடைய வஸ்திரங்கள் முதலானவைகள் விஷயத்திலும், பெருமையைத் திருப்தி செய்வதற்குரிய உரிமை உங்களுக்கு இல்லை என்று நீங்கள் நினைவில்கொள்வீர்கள்; உங்கள் பிள்ளைகளைச் சுத்தமாக நீங்கள் வைத்திருப்பினும், உங்களது அயலாரில் சிலர் பெருமையினாலும், ஆடம்பரத்தினாலும் தங்கள் பிள்ளைகளைக் கவனித்துக்கொள்வதுபோன்று உங்கள் பிள்ளைகள் ஆடம்பரமாய் வஸ்திரம் அணியாதவர்களாகக் காணப்பட வேண்டும் என்றும் நீங்கள் நினைவில்கொள்வீர்கள். உங்கள்

விஷயத்திலும் சரி, உங்கள் பிள்ளைகள் விஷயத்திலும் சரி வஸ்திரங்களுடைய காரியங்களில் கர்த்தருடைய பணத்தையும், நேரத்தையும் சிக்கனப்படுத்திக்கொள்ள நாடுவீர்கள்; மேலும் உங்களுடைய அர்ப்பணிப்பானது உங்களை வழிநடத்திடுவதுபோன்று உங்கள் பிள்ளைகளும் இவைகளையெல்லாம் பெற்றுக்கொள்ள வேண்டும் என்று இயல்பாகவே எப்போதும் விரும்பமாட்டீர்கள். நீங்கள் பின்வருமாறு: "இவை கர்த்தருடைய நேரமாகவும், பணமாகவும் இருக்கின்றது; அது வீணடிக்கப்படக்கூடாது. என் பிள்ளைகளை நான் பராமரிக்கும்படிக்கு அவர் விரும்புகின்றார்; மாறாக அவர்களை அறிவற்றவர்களாக்கிடக்கூடாது; அவர்களில் பெருமையினை விதைத்திடக்கூடாது. அவர்களது பண்புகளைக் கெடுத்தும், தற்காலத்திலும்சரி, எதிர்காலத்திலும்சரி மெய்யான சந்தோஷத்தை அனுபவிப்பதற்கும், பிரயோஜனம் உள்ளவர்களாகக் காணப்படுவதற்கும் தகுதியற்றவர்களாக்கிடவும் கூடாது" என்று உங்களுக்குள்ளே சொல்லிக்கொள்வீர்கள். இப்படியாக அனைத்தையும் கர்த்தருக்குச் செய்வதுபோல் செய்கையில் சத்தியத்திற்கு மிகவும் நேரடியாய் ஊழியம் செய்வதற்குப் பயனாகும் விதத்தில் நேரம் முதலானவைகளை உங்களால் மிச்சப்படுத்த முடிகிறதைக்குறித்துச் சீக்கிரத்தில் கண்டுகொள்வீர்கள்; உங்களால் சிந்திக்கும் அயலானிடம் பேசுவதற்கு அல்லது நண்பருக்குச் செய்தி எழுதிடுவதற்கு, கிருபை பொருந்தின வார்த்தைகளுள்ள கட்டுரைகளைக் கொடுப்பதற்கு அல்லது அனுப்பிவைப்பதற்கு நேரமும், விருப்பமும் உடையவர்களாக உங்களைக் கண்டுகொள்வீர்கள். இப்படியாகத் திரளான ஜனங்களுக்குப் பொதுவில் பிரசங்கிப்பதற்கென ஒவ்வொரு நாளையும் செலவிடும் ஒரு நபர்போலவே, உங்கள் ஜீவியமும் உண்மையாய் அர்ப்பணிக்கப்பட்டதாகவும், கிறிஸ்துவுக்குள் தேவனால் ஏற்றுக்கொள்ளப்பட்டதாகவும் காணப்படும். ஆகையால் இம்மாதிரியான சந்தர்ப்பங்களில் நாம் வைக்கப்பட்டாலும் - நாம் பெற்றிருப்பதான வாய்ப்புகளை, ஆண்டவருக்கு மகிமை சேர்க்க வேண்டும் என்ற ஒரே நோக்கத்தில், மிகவும் பிரயோஜனமாய்க் காணப்படும் என்ற நமது சிறந்த கணிப்புகளின் அடிப்படையில் பயன்படுத்துவோமானால், நம் காரியம் - மாபெரும் வாய்ப்புகளைப் பெற்றிருப்பவர்களின் உண்மைதன்மையையும், மாபெரும் விளைவுகளையும் ஆண்டவர் அங்கீகரிப்பது போலவே, அங்கீகரிக்கப்படும். உண்மையுள்ள ஒவ்வொருவனும் தன் வாய்ப்புகளையும், ஊழியங்களையும் பெருக்கிக்கொள்ள முடிகிறவனாய் இருப்பான் மற்றும் இப்படியாகத் தன் சந்தோஷங்களையும் பெருக்கிக்கொள்வான் (1 கொரிந்தியர் 7:20-22).

---

R934

## நான் என்ன செய்யத் சித்தமாயிருக்கிறீர்

### அப்போஸ்தலர் 9:6

ஆண்டவரில் உண்மையாய் அன்புகொண்டிருக்கும் இருதயத்தினால் - அவரது வார்த்தையின்மூலமாய் அவரது ஆவியில் பங்குகொண்டிருக்கும் இருதயத்தினால் அலட்சியமாகவோ, சோம்பலாகவோ இருக்க முடியாது; மேலும் அவரது மாபெரும் வேலையின் அளவானது, ஊழியம்புரிவதற்குத் தொடர்ச்சியான உந்துதலாய் இருக்கும். இத்தகைய ஒருவரின் ஜெபமானது, "ஆண்டவரே நான் என்ன செய்ய சித்தமாயிருக்கிறீர்?" என்பதாகவே இருக்கும். சரியான வைராக்கியம் என்பது ஏனோதானோ என்று வேலையில் ஈடுபடாமல், கர்த்தருடைய திட்டங்கள் மற்றும் வழிமுறைகள் குறித்துக் கருத்தாய் ஆராய்ந்திடும்.

"ஆகையால் நமக்குக் கிடைக்கும் சமயத்திற்குத்தக்கதாக, யாவருக்கும், விசேஷமாக விசுவாச குடும்பத்தார்களுக்கும், நன்மைசெய்யக்கடவோம்" (கலாத்தியர் 6:10) என்று பவுலடிகளார் கூறியுள்ளார்.

இப்பாடத்தில் மூன்று காரியங்களானது விசேஷமாய்ப் பார்க்கப்படவிருக்கின்றது. முதலாவதாக நமது கடமைகளினால் நமக்கான வாய்ப்புகள் வரையறுக்கப்படுகின்றது. இரண்டாவதாக நமது சிறந்த ஆற்றல்கள் அனைத்தும் கூடுமானமட்டும் விசுவாச வீட்டாருக்கென்று பிரயோகிக்கப்பட வேண்டும்; அதேசமயம் விசேஷமானதாகவும், பிரதான முக்கியத்துவம்கொண்டதாகவும் காணப்படும் வேலைகளில் குறுக்கிடாத அளவிற்குள்ள, உலகத்திற்கு நன்மைசெய்யும் வாய்ப்புகள்கூடப் பயன்படுத்தப்படலாம். மூன்றாவதாக விசுவாச வீட்டாருக்கு நன்மைசெய்வதற்கான எந்த வாய்ப்புகளையும் நம்மால் கண்டுகொள்ள முடியவில்லையெனில், நமது ஆற்றல்கள் அனைத்தும் மற்றவர்களுக்காய்ப் பிரயோகிக்கப்பட வேண்டும்.

பவுல் அடிகளார் வாயிலான இந்தப் போதனையானது, ஒருவனது தாலந்துகளானது எவ்வளவுதான் மங்கலாகத் தெரிகின்றதாய் அல்லது எவ்வளவுதான் வரையறுக்கப்பட்டதாய் இருப்பினும், ஒவ்வொருவருக்கும் வேலையிருப்பதைச் சுட்டிக்காட்டுகின்றதாய் இருக்கின்றது. பெரிய குடும்பத்திற்கு அவசியமான அநேகம் பராமரிப்புகளுக்கடுத்த காரியங்களினால் சூழப்பட்டிருக்கும் ஒரு தாயாக நீங்கள் இருக்கலாம்; அல்லது குடும்பத்தின் தேவைகளைத் தொடர்ந்து சந்திப்பதற்கென்று கடினமான மற்றும் நீண்டநேர உழைப்பினால் அடையும் சிறு சம்பாத்தியத்தையுடைய ஒரு தகப்பனாய் நீங்கள் இருக்கலாம். உங்களுக்கான பரம அழைப்பினையும், வேலையும் குறித்து உணர்ந்துகொள்வதற்கு முன்னதாகவே இந்தப் பராமரிப்புகளுக்கடுத்த காரியங்களானது உங்களைக் கிட்டத்தட்ட திணறடிக்கும் அளவிற்கு உங்கள்மீது காணப்பட்டிருந்திருக்கலாம்; மேலும் இவைகள் இப்பொழுது புறந்தள்ளப்படமுடியாது, புறந்தள்ளப்படவும்கூடாது; ஆகையால் இவைகள் இப்பொழுது உங்கள் கடமையின் ஒரு பாகமாக இருக்கின்றன; மேலும் கர்த்தருக்குச் செய்வதுபோல் அவைகள் உண்மையாய் நிறைவேற்றப்பட்டால், அது உங்களது அன்பு மற்றும் அர்ப்பணிப்புக்கான சான்றுகளாய் அவரால் ஏற்றுக்கொள்ளப்படும்.

சில தாய்மார்கள் தங்கள் இல்லங்களிலேயே எப்போதும் வேலையில் ஈடுபட்டுள்ளவர்களாகவும், அவசியம் இப்படி ஈடுபட்டிருக்க வேண்டியவர்களாகவும் இருக்கையில், வெளியில் போய் ஊழியம்புரிவதற்கு வாய்ப்பில்லாதவர்களாய் இருப்பார்கள்; எனினும் இதேபோன்ற நிலைமையில் காணப்படும் அயலார்களிடம் இத்தாய்மார்கள் அடிக்கடி பேசிடலாம். ஆகையால் இங்கும், உங்கள் சொந்த இல்லத்திலும் உங்களுக்கான வேலையிருக்கின்றது. அநேகமாக இத்தகைய அயலார்களில் யாரும் விசுவாச வீட்டாராய் இருப்பதில்லை மற்றும் அவர்களிடம் இத்தகைய காரியங்கள் குறித்தும் பேசுவதினால் பயனில்லை என்றும், அவர்கள் கவனம் செலுத்தமாட்டார்கள் என்றும், என்னை விநோதமானவளாக மாத்திரம் எண்ணிக்கொள்வார்கள் என்றும் நீங்கள் சொல்லலாம். ஆனால் இவ்விஷயமானது அவர்களை நீங்கள் எப்படி ஞானமாய்க் கையாளுகின்றீர்கள் என்பதைச் சார்ந்துள்ளது. ஆவிக்குரிய காரியங்களில் ஆர்வம் அற்றவர்களிடம், ஆவிக்குரிய காரியங்களைக்குறித்துப் பேசுவது ஞானமற்றக் காரியமாய் இருக்கும்; ஏனெனில் சுபாவத்தின்படியான மனுஷன் ஆவிக்குரிய காரியங்களை ஏற்றுக்கொள்ளான், அவனால் ஏற்றுக்கொள்ளவும் முடியாது, காரணம் அவைகள் ஆவியில் நிதானிக்கப்படுகிற காரியங்களாகும். ஆனால் இத்தகையவர்களினால் சுபாவத்தின்படியான காரியங்களைப் புரிந்துகொள்ள முடியும், உதாரணத்திற்குச் சுபாவத்தின்படியான மனுஷனுக்குரிய திரும்பக்கொடுத்தலின் காரியங்கள் பற்றியாகும். உங்கள் சிறுபிள்ளைகளாலும்கூட இதற்கும் அதிகமாய்ப் புரிந்துகொள்ள முடியாது. ஏனெனில் அவர்கள் சுபாவ மனுஷனுக்குரிய தளத்தில் காணப்படுகின்றனர்; ஆனால் அவர்கள்

இப்பொழுது பெற்றுக்கொள்ளும் அறிவுரை அல்லது பயிற்சி எதுவும் அவர்களை இறுதியில் பரிபூரணத்திற்குக் கொண்டுவரப்போகின்ற, பொதுவான அந்தப் படிப்பித்தல்களில் ஒரு பாகமாகக் காணப்படும். உங்கள் வேலையினை மரணமானது குறுக்கிட்டாலும், உங்கள் வேலை நஷ்டத்திற்குள்ளாகுவதில்லை. ஒருவேளை அது இந்த யுகத்தில் மிகப்பெரியளவில் பலனுக்குரிய தோற்றத்தினைக் காண்பித்திடவில்லை என்றாலும், அது அடுத்த யுகத்தில் தெரிந்துவிடும்.

களைப்புற்ற தகப்பனுடைய மாலைவேளைகளானது, தனது குடும்பத்திலும், அயலார்கள் மத்தியிலும் ஆற்றப்படும் இந்த மேற்கூறிய சந்தோஷகரமான மற்றும் பாக்கியமான வேலைகளுக்கு உதவுவதில் பயன்படுத்தப்படலாம்; ஒருவேளை ஆண்டவரைக் கனப்படுத்துவதற்கான ஒவ்வொரு வாய்ப்புகளுக்காகவும் இவர் விழித்திருப்பாரெனில், இவர் விசுவாச வீட்டாரிலுள்ள சிலருக்கு அல்லது அன்றாடம் தன்னுடன் தொடர்புக்குள் வரும் உலகத்தாரில் சிலருக்குச் சில சத்தியங்களைச் சொல்லமுடிகிறவராய் இருப்பார் அல்லது நிலையான கிறிஸ்தவ குணலட்சணத்தின் வெளிச்சத்தினை இவர்கள்முன் பிரகாசிப்பிக்கப்பண்ண முடிகிறவராகவாவது இருப்பார்.

இந்த வாய்ப்புகளோடுகூட இவர் தொலை தூரத்திலிருக்கும் நண்பர்களுக்கு, மகிமையான செய்தியின் சிறுபாகம் உள்ளடக்கப்பட்ட கடிதங்களை எழுதிடலாம். இப்படியாகத் திறமையற்றவர்கள் அநேகரும், மிகக் குறுகலான வட்டத்திற்குள் அடைக்கப்பட்டவர்களுமானவர்கள் நற்செய்தியினைப் பரப்பிடுவதற்கான சில வாய்ப்புகளைக் கண்டடையலாம். மேலும் இத்தகையவர்கள் பாடுகள் மத்தியில் பொறுமையுடன்கூடிய தங்களது சகிப்பினாலும், அசைவுறாத தங்களது விசுவாசத்தினாலும், மேலும் தேவைகளுக்காய் வேலைபுரிவோருக்கு ஆலோசனையான மற்றும் உற்சாகமூட்டும் வார்த்தைகளைப் பேசுவதின்மூலம் அடிக்கடி தேவனை மகிமைப்படுத்திடமுடியும். நமது வெளிச்சத்தினைப் பிரகாசிக்கப்பண்ணிடுவதற்கான வழிகளை நாம் எண்ணிப்பார்க்கையில் ஓ! வெளிச்சத்தைப் பிரகாசிப்பதற்கு எத்தனை அநேகம் வழிகள் இருக்கின்றன! வெளிச்சத்தை மரக்காலின்கீழ், மூடிவைத்திடுவதற்கும்கூட அநேகம் வழிகள் இருக்கின்றன. நீங்கள் பிரயோஜனமாய்க் காணப்படுவதற்கான வாய்ப்புகளைப் பெருக்கிக்கொள்வதற்குக் காணப்படும் மற்ற அநேகம் வழிகளைக்குறித்துச் சிந்தித்துக்கொள்ளலாம். பெரிதளவிலான பலன்களை அடைவதற்கு வேண்டி, நம்முடைய தாலந்துகளை எப்படிப் பயன்படுத்துவது என்று ஆராய்ந்து அறிந்துகொள்வது என்பது நம்முடைய சிலாக்கியம் மற்றும் கடமையின் பாகமாய் இருக்கின்றது. இந்தக் கடமையானது தாலந்து உவமைகளில் தெளிவாய் முன்வைக்கப்பட்டுள்ளது; பணத்தினை இலாபம் ஈட்டுவதற்காக நாம் முதலீடு செய்வதுபோலத் தாலந்துகளைக் கர்த்தருக்காய் முதலீடு செய்வதும் அவசியமாகும் (மத்தேயு 25:14-30).

நாம் மேலே குறிப்பிட்டுள்ளதான வகுப்பார், மிகவும் வரையறுக்கப்பட்ட வாய்ப்புகளை உடையவர்கள் ஆவர்; இவர்கள் கர்த்தருக்காய்க் கொண்டிருக்கும் பக்தியானது உறுதியானதாகக் காணப்பட்டு, இவர்கள் தங்களுடைய ஒன்று அல்லது இரண்டு தாலந்துகளைச் சிறந்த விதத்தில் பயன்படுத்துவார்களெனில், இவர்களில் சிலர் அதிகமான தாலந்துகளையும், வாய்ப்புகளையும் பெற்றுக்கொள்ளலாம். சிலருக்குச் சிறிய குடும்பத்தினர் அல்லது வளர்ந்தவர்களை உள்ளடக்கின குடும்பம் காணப்படலாம் அல்லது குடும்பம் இல்லாமல் இருக்கலாம்; இவர்கள் நேரத்தையும், ஏற்பாடுகளையும் ஒழுங்குப்படுத்திக்கொள்வார்களானால், வெளியில் சென்று ஊழியம்புரிந்திடுவதற்குரிய அநேகம் மணி நேரங்களைப் பெற்றிருப்பார்கள். உங்கள் சமுகத்தின் மக்கள் அனைவரும் சபை பிரிவுணர்ச்சிக்குள் பிணைக்கப்பட்டிருப்பதினால், நீங்கள் பிரயாசம் எடுப்பதற்கு முன்னதாகவே, உங்களது பிரயாசத்திற்குப் பலனிராது என்று நீங்கள் எண்ணிடலாம். ஆனால் உண்மையில் அப்படித்தானா? இக்காரியத்தினை நீங்கள் சோதித்துப் பார்த்திருக்கின்றீர்களா? உங்கள் பட்டணத்தில்

அல்லது கிராமத்தில் அல்லது உங்கள் தொடர்புக்குள் காணப்படுபவர்களில் ஒருவர்கூட உண்மையான விசுவாச வீட்டாராய் இல்லை என்று சந்தேகத்திற்கு இடமின்றி சோதித்துப் பார்த்துவிட்டீர்களா? ஞானமாய் இக்காரியத்தினை நீங்கள் சோதித்துப் பார்த்திருக்கின்றீர்களா?

இப்படிச் செய்திருப்பீர்களானால், நீங்கள் உங்கள் பாகத்தையாகிலும் உண்மையாய்ச் செய்தவர்களாய் இருப்பீர்கள்; மேலும் இந்த உண்மையானது ஆண்டவரின் கவனத்திலிருந்து தப்பிடுவதில்லை; இதைக்குறித்து உறுதியாயிருங்கள். ஆனாலும் ஒருவேளை இப்படித்தான் சூழ்நிலை இருப்பினும், அந்த அயலார்கள் மத்தியில் இன்னமும் உங்களால் பிரயோஜனம் உண்டாகும் களம் இருக்கவே செய்கின்றது. உலகத்தின் பிள்ளைகளில் சிலர் அநேகமாக மிக ஏழைகளாக, அநேகமாக மிக அறியாமையில் உள்ளவர்களாக அல்லது சீரழிந்தவர்களாக அங்குக் காணப்படலாம். இத்தகையவர்கள்மீது கவனம் செலுத்துவதற்கோ அல்லது இவர்கள்மீது அக்கறைக்கொள்வதற்கோ யாருமே எண்ணியிருந்திருக்க மாட்டார்கள். ஒருவேளை பலரால் மதிக்கப்படுகின்ற நீங்கள் இத்தகையவர்களை, தொண்டு ஆற்றுகின்றோம் எனும் தோற்றத்தில் இல்லாமல், உண்மையாய் நண்பர்கள் அல்லது அயலார்கள் என்று அழைப்பீர்களானால், இது இத்தகையவர்களின் பாலைவன ஜீவியத்தில் எத்தகையதொரு பாலைவனச் சோலையாய்க் காணப்படும்!

இத்தகையவர்கள் அநேகர் நமது ஆண்டவருக்குச் சந்தோஷமாய்ச் செவிக்கொடுத்திருக்கின்றனர். இத்தகையவர்கள் உங்களுக்கு மகிழ்ச்சியோடு செவிக்கொடுத்திடுவதற்கு வாய்ப்புண்டு. சில இடங்களில் கோதுமைகள் அனைத்துமே பெயர்ச்சபையிலிருந்து கூட்டிச்சேர்க்கப்படுவார்கள்; மேலும் அவ்விடங்களில் உங்கள் ஊழியங்களுக்குப் பலனையோ அல்லது மேலும் வாய்ப்புகளையோ காணமுடியாது, காரணம் அவர்கள் உங்களுக்குச் செவிக்கொடுக்கக்கூடாது என்று தீர்மானமாயிருப்பார்கள்; அதிலும் சிலர் கொஞ்சம் காலம் எதிர்ப்பவர்களாய் இருப்பினும், அவர்கள் நம் நிலைப்பாட்டினுடைய உறுதி என்ன என்று காணமாத்திரமே அப்படிச் செய்கிறவர்களாய் இருப்பார்கள். அப்படியானால் அதை அவர்கள் காண அனுமதித்து, தேவனை மகிமைப்படுத்துங்கள். மிகவும் தாமதமாக வருவதாக இருப்பினும், ஏற்றவேளையில் கனி வெளிப்படும். இவ்வுலகத்தின் ஏழைகளையாகிலும், நீங்கள் எப்போதும் உங்களுடன் பெற்றிருப்பீர்கள். இங்குச் சத்தியத்தைத் துணிந்து தள்ளின குருடரான யூதர்கள் சிலருக்கான பவுலினுடைய வார்த்தைகளை நாம் நினைப்பூட்டுகின்றோம். "அப்பொழுது பவுலும் பர்னபாவும் தைரியங்கொண்டு அவர்களை நோக்கி: முதலாவது உங்களுக்கே (தேவனுடைய ஏற்பாட்டின் ஒரு பாகமாக) தேவவசனத்தைச் சொல்லவேண்டியதாயிருந்தது; நீங்களோ அதைத் தள்ளி, உங்களை நித்திய ஜீவனுக்கு அபாத்திரராகத் தீர்த்துக்கொள்ளுகிறபடியினால், இதோ நாங்கள் புறஜாதியாரிடத்தில் போகிறோம். நீர் பூமியின் கடைசிபரியந்தமும் இரட்சிப்பாயிருக்கும்படி உம்மை ஜாதிகளுக்கு ஒளியாக வைத்தேன் என்கிற வேதவாக்கியத்தின்படி கர்த்தர் எங்களுக்குக் கட்டளையிட்டிருக்கிறபடியினால் இப்படிச் செய்கிறோம் என்றார்கள்" (அப்போஸ்தலர் 13:46-47).

அபிஷேகம்பண்ணப்பட்டவர்கள் உலகம் அனைத்திற்கும் வெளிச்சமாக வைக்கப்பட்டுள்ளனர். அது இப்பொழுது கூடுமானமட்டும் அதிகமாய்ப் பிரகாசிப்பதாக. விசுவாச வீட்டார் என்று தங்களைக்குறித்துக் கூறிக்கொள்பவர்கள் ஒருவேளை சத்தியத்தை மறுப்பார்களானால், உங்கள் வெளிச்சத்தை, உங்களைச் சுற்றியுள்ள உலகத்தின்மேல் திருப்பிடுவது உங்களுக்கான சிலாக்கியமாகும். எங்குப் பயன்படுவதற்கான அநேகம் வழிகள் திறந்திருக்கின்றதோ, எங்கு ஊழியம்புரிவதற்குரிய அவசியம் மிகுதியாய்க் காணப்படுகின்றதோ, அங்கு அர்ப்பணம்பண்ணியுள்ளவன் ஒருவேளை தனது அழைப்பை மறந்துபோய், அனலுமின்றி குளிருமின்றி ஆகிப்போய், அலட்சியம்பண்ணுகிறவனாய் மாறிப்போனால் தவிர, மற்றப்படி உண்மையாய் அர்ப்பணம்பண்ணியுள்ளவனால் ஒன்றுஞ்செய்யாமல் இருக்கமுடியாது.

இப்படிச் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கச் செல்வது என்பது உங்களது முற்காலத்து நண்பர்கள் அநேகரிடமிருந்து நிந்தனையை உங்கள்மீது சுமத்திடும். நிந்தனை வரும் என்று நீங்கள் அறிவீர்கள்; ஆனால் இதைக்குறித்து - நீங்கள் உங்கள் அனைத்தையும் பலிபீடத்தில் வைத்தபோதே - நீண்ட காலங்களுக்கு முன்னதாகவே சிந்தித்து, யோசித்துவிட்டீர்கள். அதைக்குறித்து இப்பொழுது மீண்டும் சிந்தித்து யோசித்துக்கொண்டிராதீர்கள். "கலப்பையின்மேல் தன் கையை வைத்துப் பின்னிட்டுப்பார்க்கிற எவனும் தேவனுடைய இராஜ்யத்துக்குத் தகுதியுள்ளவன் அல்ல" (லூக்கா 9:62). ஒருவேளை வன்முறையான எதிர்ப்புகளாக இல்லையென்றாலும், நீங்கள் அநேகம் புறக்கணிப்புகளை எதிர்க்கொள்வீர்கள்; ஆனாலும் நற்செய்தியினைப் பரப்புவது என்பது உங்களது பிரதான மற்றும் ஒரே நோக்கமாக இருக்குமானால், இந்தப் புறக்கணிப்புகளை இலேசானவைகளாகக் கருதிடுவீர்கள். உங்கள் பிரயாசங்களுக்குப் பலன்கள் இல்லாததுபோன்று தோன்றினால், சோர்வடையாதீர்கள்; ஏனெனில் "அள்ளித்தூவும் விதையைச் சுமக்கிறவன் (குருடாக்கப்பட்டவர்களின் மற்றும் பாடுகள் படுகிறவர்களின் மீதான அனுதாபத்தினால்) அழுதுகொண்டு போகிறான்; ஆனாலும் தான் அறுத்த அரிகளைச் சுமந்துகொண்டு கெம்பீரத்தோடே திரும்பிவருவான்." (சங்கீதம் 126:6)

- திருமதி C. T. ரசல்.

---

R5186

## தேவாலயத்தில் கொண்டிருக்க வேண்டிய நல்லொழுக்கம்

"நீ தேவாலயத்துக்குப் போகும்போது உன் நடையைக் காத்துக்கொள்; மூடர் பலியிடுவதுபோலப் பலியிடுவதைப்பார்க்கிலும் செவிகொடுக்கச் சேர்வதே நலம். தாங்கள் செய்கிறது தீமையென்று அறியாதிருக்கிறார்கள்." (பிரசங்கி 5:1)

ஞானி சொல்லர்த்தமான பாதங்களையோ அல்லது சொல்லர்த்தமான நடைகளையோ குறித்துப் பேசவில்லை என்பதிலும், மாறாக தான் பேசுவதைக் கேட்டுக்கொண்டிருப்பவர்கள் நாம் ஏற்றுக்கொள்வது போன்று, ஏற்றுக்கொள்ளத்தக்கதாக, ஞானமுள்ள ஆலோசனை சிலவற்றைக் கொடுக்கின்றார் என்பதிலும் ஐயமில்லை. தங்களுடைய அன்றாட ஜீவியத்தில் தாங்கள் ஜாக்கிரதையாய்க் காணப்பட வேண்டும் என்று அவர் கூறுவதாக, அவர் பேசுவதைக் கேட்டுக்கொண்டிருந்தவர்கள் புரிந்து கொண்டனர்.

"உன் நடையைக் காத்துக் கொள்." நீ போய்க்கொண்டிருக்கிற இடத்தைக் கவனி. சந்தைக்கோ அல்லது கேளிக்கை இடங்களுக்கோ செல்வது போன்று, நீ தேவாலயத்திற்குச் செல்லாதே. தேவன் தம்முடைய ஜனங்களைச் சந்திக்கிற இடத்திற்குச் செல்வது போன்று அங்குச் செல்வாயாக. மேலும் தொடர்ந்து தேவாலயத்தில் என்ன கேட்கும் என்று ஞானி கற்பனைப்பண்ணுகின்றார். "மூடர் பலியிடுவதுபோலப் பலியிடுவதற்கு" ஆயத்தமாய் இராதே என்று அவர் கூறுகின்றார். இது நகைப்பை, விளையாட்டு தன்மையை, புத்தியீனமான பேச்சை மற்றும் பரியாசத்தைக் குறிக்கின்றதாய் இருக்கின்றது.

இந்த வேதவாக்கியமானது, தற்காலத்திலுள்ள தேவஜனங்கள் யாவருடைய இருதயத்திற்குள்ளும் எடுத்துக்கொள்ளப்பட வேண்டிய ஒன்றாய் இருக்கின்றது. பயபக்தி என்பது மிகவும் தகுதியானதாகும். தேவன் நம்மை நித்தியமான சித்திரவதைக்குள் தள்ளிடுவார் என்ற பயம் நமக்கு இப்போதில்லை. இப்படிப்பட்ட தீமையான நோக்கத்தினை அவர் தம்முடைய சிருஷ்டிகள் யாதொன்றின் மீதாகிலும் கொண்டிருக்கின்றார் என்று ஊகிப்பதைப்பார்க்கிலும், நம்முடைய பரம பிதாவைக் குறித்து நாம்

நன்றாகவே தெரிந்து வைத்திருக்கின்றோம். ஆனாலும் சந்தைக்குப் போவதுபோன்று, நாம் தேவாலயத்திற்குச் செல்லக்கூடாது. தேவனைத் தொழுதுகொள்ளும் எல்லா இடங்களிலும் நல்லொழுக்கம் அவசியமாய் இருக்கின்றது என்ற உண்மையினைக் கர்த்தருடைய ஜனங்களில் அநேகர் புரிந்துகொள்வதில்லை.

நிழலான ஆலயத்தில் தேவன் காணப்படாத ஒரு விதத்தில், நாம் தேவனைச் சபையில் பெற்றிருப்பதை உணர்ந்துகொள்ள வேண்டியவர்களாய் இருக்கின்றோம். சபையின் அங்கத்தினர்கள் எங்கெல்லாம் கூடுகின்றார்களோ, அங்குத் தாம் காணப்படுவதாகக் கர்த்தர் உரைத்துள்ளார். சொல்லர்த்தமான கற்களினாலான ஆலயத்தைப் போலவே, ஜீவனுள்ள கற்களினாலான தேவனுடைய ஆலயமும் முழுக்க பயபக்தியுடன் பார்க்கப்பட வேண்டும்.

நாம் அறையிலோ அல்லது சபையிலோ அல்லது கொட்டகையிலோ கூடினாலும் சரி, தேவனுடைய ஜனங்கள் அங்குக் கூடியுள்ள காரியமானது, அக்கட்டடத்தினைப் பரிசுத்த இடமாக்குகின்றது. ஆகையால் அங்குக் கூடுவதற்கு வரும் எவரும், தன் நடையினைக் காத்துக்கொள்ள வேண்டும். ஒருவர் வரும்போது, தான் இருக்கும் இடம் யாது என்று உணர்ந்தவராய் இருக்க வேண்டும் மற்றும் கேட்பதற்கு - செவிக்கொடுப்பதற்கு ஆயத்தமாய் இருக்க வேண்டுமே ஒழிய, ஆரவாரம் பண்ணுவதற்கல்ல. சம்பாஷணைகள் யாவும், ஆவிக்குரிய காரியங்களின் அடிப்படையில், கட்டியெழுப்பும் - பக்திவிருத்தி உண்டுபண்ணும் விதத்தில் காணப்பட வேண்டும். இப்படியாகப் பேசமுடியவில்லையெனில், தேவ செய்தியினைக் கேட்டுவிட்டு, கூடிப்பாடி, கலைந்து செல்வது நலமாயிருக்கும்.

என்ன உரையாடல் காணப்பட்டாலும், அவ்விடத்திற்காக மாத்திரமல்லாமல், அத்தருணத்திற்காகவும் என்றுள்ள பயப்பக்தியுடன் உரையாடப்பட வேண்டும். இங்குமங்குமாக திரும்பிப் பார்த்து, "இந்தச் சகோதரர், அந்தச் சகோதரர், இந்தச் சகோதரி, அந்தச் சகோதரி வருகின்றார்; அவர்கள் பாடுவதை நாங்கள் கேட்கின்றோம்" என்று சொல்லக்கூடாது. இத்தகைய நடத்தை என்பது மிகவும் தகுதியற்றதாகும்.

பயபக்தியைவிடக் கர்த்தருடைய ஜனங்கள் கற்றுக்கொள்வதற்கு அவசியமாய் இருக்கும் வேறு எந்தப் பாடத்தையும் நாம் அறியோம். பயபக்தி இல்லாத எவரையும் கர்த்தர் அழைக்கிறதில்லை மற்றும் அந்தப் பண்பானது, பலமடைய அவர் விருப்பமுள்ளவராய் இருக்கின்றார். ஆனால் பயம் துரத்தப்படும்போது, பயபக்தி குறைவு ஏற்பட வாய்ப்பாகுகின்றது. இந்த விஷயத்திற்கு - நாம் தேவாலயத்திற்கோ அல்லது திவ்விய ஆராதனை நடைப்பெறும் எந்த ஓர் இடத்திற்கோ செல்லுகையில் - விசேஷித்த கவனம் செலுத்த வேண்டியவர்களாய் இருக்கின்றோம்.

## மற்றவர்களுடைய உரிமைகளைக் கருத்தில் கொள்ளுதல்

தேவாலயத்திற்குச் செல்லுகையில் நம்முடைய நடையை நாம் கவனித்துக்கொள்வது மாத்திரமல்லாமல், நாம் நம்மோடு எடுத்துச் செல்பவைகளைக் குறித்தும், நாம் கவனிக்க வேண்டும். நாம் அங்குச் சுத்தமாய்ச் செல்வதற்குக் கவனிக்க வேண்டும்; நம்முடைய வஸ்திரங்களில் பூச்சிகளைக் கொண்டுபோகாதபடிக்குக் கவனிக்க வேண்டும்; நம்மிடமிருந்து கெட்ட வாசனைகள் வராதபடிக்குக் கவனிக்க வேண்டும். சரிவர பயிற்சியளிக்கப்படாத பிள்ளைகளை அங்குக் கூட்டிச் செல்லாதபடிக்கு நாம் கவனிக்க வேண்டும். இப்படிச் செய்வோமானால், மற்றவர்களுக்குத் தொந்தரவாய் இருக்கும் அபாயத்திற்குள்ளாகாதிருப்போம்.

பிள்ளைகளைத் தனியே வீட்டில் விட்டுவரும் வாய்ப்புகள் இருக்கலாம். இப்படிச் செய்ய முடியாவிட்டால், கூடுகைகளுக்கு வரும் விஷயத்தில், பெற்றோர்கள் சுழற்சி முறையில் வருவது

நலமாயிருக்கும். பிள்ளைகள் கூடுகைகளில் கலந்துகொள்வது என்பது மற்றவர்களுடைய ஆவிக்குரிய நலன்களுக்குத் தீங்கு விளைவிப்பதாய் இருக்கும் பட்சத்தில், அத்தகைய பிள்ளைகளைக் கூடுகைகளுக்குக் கொண்டுவருவதற்கு எவருக்கும் உரிமை இல்லை. வகுப்பிற்குத் தொந்தரவு உண்டுபண்ணாத வயதை அடைவது வரையிலும், அவர்களை வீட்டில் விட்டுவருவதற்கு வழி ஒன்று ஏற்பாடு பண்ணப்பட வேண்டும் என்று நாம் எண்ணுகின்றோம். பெரும்பான்மையான பெற்றோர்கள் தங்களது பிள்ளைகளுடைய வழக்கங்களுக்குப் பழகிப்போனவர்களாய் இருப்பதினால், குழந்தையினுடைய ஒவ்வொரு சலனங்களினாலும் அநேகமாக மற்றவர்கள் தொந்தரவிற்குள்ளாகுகையில், பெற்றோர்கள் இதனை உணரமுடியாதவர்களாய் இருக்கின்றனர். நம்மால் உண்டாகும் இத்தகைய சோதனைகள் தவிர, மற்றப்படி மற்றவர்களுக்கு அவர்களது பொறுமையினைச் சோதனைக்குள்ளாக்கும் சொந்தச் சோதனைகளும் காணப்படவே செய்கின்றது.

## காலந்தவறாமை குணலட்சணத்திற்கான ஒரு சான்று

சிலர் தங்களது நடையை மாத்திரமல்லாமல், தங்கள் கைக்கடிகாரத்தினையும் கவனிப்பது அவசியமாய் இருக்கின்றது. கூடுகைக்குக் காலதாமதமாக வருதல் என்பது நீதி மற்றும் அன்பு, இரண்டின் கொள்கைகளுக்கும் முரணானவையாகும். கூடுகையில் கலந்துகொள்பவர்கள் யாவரும், மற்றவர்களுக்கு நீதியாய்க் காணப்படும் வகையில், தாங்கள் சரியான நேரத்திற்கு வரத்தக்கதாகப் பார்த்துக்கொள்ள வேண்டும். நியமிக்கப்பட்ட நேரத்திற்குக் கூடுகைக்குத் தாங்கள் தாமதமின்றி வரத்தக்கதாக, தங்கள் அலுவல்களை ஒழுங்குப்படுத்திக்கொள்ள வேண்டும்.

காலந்தவறாமல் காணப்படுவதற்கும் மற்றும் மற்றவர்களுக்குத் தொந்தரவளிக்காமல் இருப்பதற்குமான நம்முடைய பிரயாசங்களானது, கர்த்தரினால் கிறிஸ்தவ குணலட்சணத்தினுடைய வளர்ச்சிக்கான சான்றுகளாகச் சந்தேகத்திற்கிடமின்றி பார்க்கப்படும் மற்றும் இவைகள் அவரால் அங்கீகரிக்கப்படும் மற்றும் இவைகள் இராஜ்யத்திற்கு நாம் ஆயத்தமாகுவதற்கு உதவுகிறதாக இருக்கும். மற்றவர்களுடைய உரிமைகளின் விஷயத்தில் அலட்சியமாய் இருப்பவன், தான் அன்பின் ஆவியில், கிறிஸ்துவின் ஆவியில் குறைவுப்பட்டிருப்பதை வெளிப்படுத்துபவனாய் இருப்பான். கிறிஸ்துவின் ஆவியில்லாமல், நன்கு வளர்ச்சியடையாமல் இருப்பவன் எவனும், இராஜ்யத்தில் இடம் பெறான்.

ஆகையால் இவ்விஷயங்கள் - அதாவது ஒழுங்கற்ற பிள்ளைகள், கூடுகைகளுக்குத் தாமதமாய் வருதல் முதலானவைகள் - இராஜ்யத்தில் இடம்பெறுவதற்குரிய நம் தகுதி நிலையினைப் பாதிப்பவைகளாய் இருக்கின்றன. இதனிமித்தம் நம்முடைய கிரியைகளின் அடிப்படையில் நாம் நியாயந்தீர்க்கப்படுகின்றோம் அல்லது மற்றவர்களை அவர்களது கிரியைகளின் அடிப்படையில் நியாயந்தீர்ப்பதற்கு நாம் உரிமை பெற்றிருக்கின்றோம் என்ற அர்த்தத்தில் நாம் சொல்லுகின்றோம் என்பதாகாது. "குற்றவாளிகளென்று தீர்க்காதிருங்கள்" என்று கர்த்தர் கூறியுள்ளார். கர்த்தருடைய சித்தத்தைச் செய்திடுவதற்கான நம்முடைய பிரயாசங்களானது, நம்முடைய இருதயங்களுடைய விருப்பங்களுக்குச் சமமாய் இருக்கின்றது என்பதை நாம் காட்ட வேண்டும். இப்படியாக ஜீவிப்பதற்கான தீர்மானங்களைச் செயல்படுத்துவோமானால், உயிர்த்தெழுதலில் நம்முடைய மறுரூபமடைதலை நாம் அனுபவிக்கும்போது நாம் மகிழ்ச்சியடைபவர்களாய் இருப்போம்.

R2688 [தெரிந்தெடுக்கப்பட்ட பத்திகள்]

# அவைகளை நீங்களும் அவர்களுக்குச் செய்யுங்கள்

"ஆதலால், மனுஷர் உங்களுக்கு எவைகளைச்செய்ய விரும்புகிறீர்களோ, அவைகளை நீங்களும் அவர்களுக்குச் செய்யுங்கள்; இதுவே நியாயப்பிரமாணமும் தீர்க்கதரிசனங்களுமாம்." (மத்தேயு 7:12)

என்ன பரீட்சைகளை நாம் மேற்கொண்டாலும், மற்றவைகள் அனைத்தையும் காட்டிலும் இயேசு மற்றும் அவரது போதனைகளே மேலோங்கி நிற்கின்றதைக் காணமுடிகின்றது. உதாரணத்திற்குப் பொன்னான பிரமாணமானது கண்பூசியஸ் அவர்களின் எழுத்துகளிலும், புதிய ஏற்பாட்டிலும் காணப்படுகின்றது என்றும், இதுவே கண்பூசியஸ் அவர்கள் இயேசுவுக்கு நிகரானவராகவும், தேவனால் அனுப்பப்பட்டவராகவும், காணப்படுகின்றார் என்பதற்கு ஆதாரம் என்றும் நம்மிடம் அடிக்கடி தெரிவிக்கப்படுகின்றது. இப்படியான கூற்றினைத் தெரிவிப்பவர்களில் அநேகர் நேர்மையான எண்ணங்களுடன்தான் இப்படித் தெரிவிக்கின்றனர் என்பதில் எந்த ஐயமுமில்லை; உண்மை என்னவெனில் இயேசுவினால் கொடுக்கப்பட்டதான பொன்னான பிரமாணத்தினுடைய ஆழத்தையும், அகலத்தையும் அநேகம் கிறிஸ்தவர்கள் ஒருபோதும் கண்டுணர்ந்ததில்லை மற்றும் கண்பூசியசால் எழுதப்பட்ட பழமொழியானது/கொள்கையானது பொன்னான பிரமாணத்திற்கு ஒத்திருப்பதுபோன்று தோன்றுவதினால், இரண்டும் ஒன்றே என்று தவறாய்ப் புரிந்துகொள்ளப்பட்டுள்ளது. பெருமளவில் வித்தியாசம் உள்ளன; மேலும் ஒப்பிட்டுப்பார்க்கும்போது, கண்பூசியசின் வார்த்தைகள் ஆணவமான/ Brazen சட்டமெனச் சொல்லப்படலாம். கண்பூசியஸ் அவர்களின் பழமொழியாவது: "மற்றவர்கள் உங்களுக்கு என்ன செய்யக்கூடாது என்று எண்ணுகின்றீர்களோ, அதை நீங்களும் மற்றவர்களுக்குச் செய்யாதிருங்கள்." இதுவே நமது கர்த்தரினால் கொடுக்கப்பட்டதான பொன்னான பிரமாணத்தில் பெரும்பான்மையான கிறிஸ்தவர்களால் பார்க்கப்படுகின்றது என்று நாம் மீண்டுமாகக் கூறுகின்றோம்.

கண்பூசியஸ் அவர்களின் பழமொழியானது முழு உலகத்திலுள்ள ஒவ்வொரு சிருஷ்டியினாலும் ஏற்றுக்கொள்ளப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தால், அதைக் காண்பதில் நாம் மகிழ்ச்சியடைந்திருப்போம்; மேலும் இப்படிச் செய்யப்பட்டிருக்குமானால் சந்தேகத்திற்கிடமின்றிப் பலனானது மனுக்குலத்திற்கு மாபெரும் ஆசீர்வாதமாகவே காணப்பட்டிருக்கும் - தற்போதைய நிலைமைகளில் மாபெரும் முன்னேற்றங்கள் சம்பவித்திருந்திருக்கும்; மேலும் கர்த்தருடைய அடிச்சுவடுகளில் தொடர்ந்து நடப்பதற்கு நாடிக்கொண்டிருப்பவர்களாகிய பரிசுத்தவான்களைத் தவிர மற்றப்படி கிட்டத்தட்ட அனைவருமே தினந்தோறும், தங்கள் அயலார் தங்களுக்கு எவைகளைச் செய்யக்கூடாது என்று விரும்புகின்றார்களோ, அதை மற்றவர்கள் விஷயத்தில் செய்யாதவர்களாய்க் காணப்பட்டிருப்பார்கள். இப்படிப் பெரிய அளவில் சீர்த்திருத்தங்கள் கொண்டுவரப்பட வாய்ப்பிருப்பினும், இன்னமும் குறைவுகள் காணப்படவே செய்திருக்கும்; "உம்முடைய சித்தம் பரமண்டலத்தில் செய்யப்படுவது போன்று பூலோகத்திலும் செய்யப்படுவதாக" என்ற நமது கர்த்தருடைய ஜெபமானது தெரிவித்திடும் நிலைமையில் உலகமானது காணப்படாமலே இருந்திருக்கும். ஏனெனில் மனுஷர்கள் கொள்கைகள் அல்லது ஏதேனும் மற்றக் காரணங்களின் நிமித்தம் ஒருவரோடொருவர் நீதியுடன் நடந்துகொண்டிருப்பார்கள் மற்றும் மற்றவர்கள் தங்களுக்குச் செய்யக்கூடாது என்று அவர்கள் கருதிடும் காரியங்களை மற்றவர்களுக்குச் செய்யாதவர்களாய்க் காணப்பட்டிருப்பார்கள் மற்றும் அவர்கள் அனைவரின் இருதயங்களும் முழுக்க சுயநலத்தினாலும், குறுகிய மனப்பான்மையினாலும், பேராசை முதலியவையினாலும் நிரம்பியிருந்திருக்கும் மற்றும் அன்பினின்று தூரமாயிருந்திருக்கும்.

ஆனால் நமது கர்த்தருடைய பொன்னான பிரமாணத்தினுடைய பரந்த தன்மையினை நாம் கவனிக்கையில், இது முற்றிலும் ஓர் அன்பின் பிரமாணம் என்றும், இதில் கூட்டவோ, குறைக்கவோ எதுவுமில்லை, இது முழுமையானதொரு பிரமாணம் என்றும் நாம் கண்டுகொள்கின்றோம். இது "தீமைச் செய்யாதே" என்று சொல்லுகிற எதிர்மறை (negative) பிரமாணமாய்க் காணப்படாமல், "நன்மை செய்வாயாக; உன் அயலான் உனக்குச் செய்ய வேண்டுமென்று நீ விரும்புகின்றதான நன்மை யாவற்றையும், இரக்கம் யாவற்றையும், ஊழியம் யாவற்றையும், அவனுக்குச் செய்வாயாக" என்று சொல்லுகிற ஆக்கப்பூர்வமான (positive) பிரமாணமாய்க் காணப்படுகின்றது. "சுயாதீன பிரமாணம்" என்று அப்போஸ்தலனால் அழைக்கப்படும் இந்தப் பிரமாணத்திற்கு, இந்தப் பூரண பிரமாணத்திற்கு, ஜீவியத்திற்கான இந்தப் பொன்னான பிரமாணத்திற்கு, இணையான ஒரு பிரமாணமானது எங்குமில்லை, எவருடைய எழுத்துகளிலும் இல்லை மற்றும் இதற்கும் மேலாய்ப் பிரமாண்டமாய் வெளிப்படுத்தப்படவும் முடியாது. ஆனால் எத்தனை சொற்பமானவர்கள் இந்தப் பிரமாணத்தினைச் சரியாய்ப் புரிந்துகொண்டவர்களாகவும், இதனை விரும்புபவர்களாகவும் மற்றும் தங்களது சொந்த நடவடிக்கையினை அளந்துபார்த்திட இதனை தினந்தோறும் பயன்படுத்துகின்றவர்களாகவும் காணப்படுகின்றனர்! ஏற்கெனவே தெரிவித்திருந்ததுபோல பெரும்பான்மையானவர்கள், உலகத்திலுள்ள நல்ல ஜனங்கள்கூட, பெரும்பான்மையான கிறிஸ்தவர்கள்கூட இப்பிரமாணத்தினுடைய அகலங்களையும், நீளங்களையும் கவனிக்கத்தவறிப்போனவர்களாகக் காணப்பட்டு, மற்றவர்களுக்குப் பாதகம் செய்யக்கூடாது என்று சொல்லும் கட்டளையாக மாத்திரமே இதனை கண்நோக்குகின்றனர். அப்படியானால் எத்தனை சொற்பமானவர்கள் மாத்திரம் இதன் அம்சங்களைச் சந்தோஷத்தோடும், உணர்வோடும் கிரகித்துக்கொண்டவர்களாக, தங்கள் ஜீவியங்களை இப்பிரமாணத்திற்கு இசைவாகப் பெற்றிருக்கத்தக்கதாக இருதயத்திலிருந்து நாடுகின்றவர்களாய்க் காணப்படுவார்கள்! வேறுயாருமல்ல பரிசுத்தவான்களே, வேறுயாருமல்ல "தெரிந்துகொள்ளப்பட்டவர்களே" தங்கள் பரம பிதாவினுடைய அன்பின் பிரமாணத்தினுடைய ஆவிக்கும், சாரத்திற்கும் இசைவான இருதய நிலைமையில் காணப்படுவார்கள்.

மற்றவர்களிடத்தில் அளவு மீறின தயாளம் காட்டியும், தங்கள் விஷயத்தில் போதுமாய் ஜாக்கிரதையாய் இல்லாமலும் இருப்பதன் வாயிலாகக் கர்த்தருடைய ஜனங்களில் சிலர் இந்தப் பிரமாணத்தினைத் தவறாயும், தங்களுக்குப் பாதகமான நிலைமையிலும் பயன்படுத்திவிடும் அபாயமும் உள்ளது; ஆனால் இம்மாதிரியான சம்பவங்கள் மிகவும் அபூர்வமாகவே காணப்படும், ஏனெனில் நம்முடைய ஒட்டுமொத்த சந்ததியார் விஷயத்திலும், விழுகையானது அன்பையும், தயாளத்தினையும் இல்லாமலாக்கிப்போட்டு, நம்மைச் சுயநலத்தினால் நிரப்பிப்போட்டது. இப்படியாகச் சூழ்நிலையாகிப் போனதாலேயே, "சுயத்தைப் பாதுகாப்பதே வாழ்க்கையின் முதல் சட்டமாகும்" எனும் பழமொழி உலகத்தில் காணப்படுகின்றது; சுயம் எப்போதும் முதலாவதாகக் காணப்பட வேண்டும் என்றும், மற்றவர்களைக் குறித்துக் கவனத்தில் எடுத்துக்கொள்ளப்படுவதற்கு முன்னதாக, நம்மைக் குறித்தே நாம் அக்கறைக்கொள்ள வேண்டும் என்றும் கருத்துக் காணப்படுகின்றது.

பரிசுத்த ஆவியினால் புதுச்சிருஷ்டிகளென நாம் ஜெநிப்பிக்கப்பட்ட பிற்பாடும்கூட, நம்முடைய மனங்கள் புதிதாகத் தொடங்கின பிற்பாடும்கூட, பழைய சுபாவத்தினுடைய சுயநலத் தன்மையானது, மிகவும் ஆழமாய் விதைக்கப்பட்டுக் காணப்படுகின்றபடியால், அது நம் ஜீவிதத்தின் முடிவுபரியந்தமும் நம்மீதான அதன் பிடியினைக் கொண்டிருக்கின்றது என்பதை அனுபவத்தின் வாயிலாக நாம் அனைவருமே அறிந்திருப்போம். கர்த்தருடைய சித்தத்திற்கு முழு இசைவுடன் காணப்பட வேண்டும் என்ற வாஞ்சையில் சிலர் இந்தப் பொன்னான பிரமாணத்தினை மிதமிஞ்சின கண்ணோட்டத்தில்

எடுத்துக்கொண்டு, "உன் அயலான், அவனுக்கு நீ என்ன செய்ய வேண்டும் என்று விரும்புகின்றானோ, அதையே நீ உந்தன் அயலானுக்குச் செய்வாயாக" என்று பொன்னான பிரமாணம் தெரிவிப்பதாக எடுத்துக்கொள்கின்றனர்; மேலும் இப்படியாகப் பிரமாணத்தினை எடுத்துக்கொள்வது என்பது முற்றிலும் வேறுபட்ட பிரமாணமாய் இருக்கும் என்பதையும், எல்லா விதத்திலும் பாதகமாகவே காணப்படக்கூடும் என்பதையும் கவனிக்கத் தவறிவிடுகின்றனர். இப்படியாகச் சிலர்தான் தவறு செய்யும் அபாயம் இருப்பினும், அநேகர் இக்காரியத்தினை இக்கண்ணோட்டத்தில் சிந்தித்தவர்களாகப் பின்வருமாறு கூறுகின்றனர்: "இந்தப் பொன்னான பிரமாணத்தினை ஜீவியத்தின் அன்றாட காரியங்களில் எங்களால் கடைப்பிடித்திட முடியாது; உதாரணத்திற்கு என் அயலான் எனக்கு என்ன செய்ய நான் விரும்புவேனோ, அதையே நானும் என் அயலானுக்குச் செய்ய வேண்டுமெனில்... அப்படியானால் ஐந்து டாலர் மதிப்புள்ள ஒரு ஜோடி செருப்பினை நான் அயலானுக்கு ஒரு டாலருக்குக் கொடுக்க வேண்டியிருக்கும்... அல்லது இருபது டாலர் மதிப்புள்ள உடைகளை, ஐந்து டாலருக்குக் கொடுக்க வேண்டியிருக்கும்... அல்லது கோதுமையை அல்லது ஓட்ஸை பாதி விலைக்குக் கொடுக்க வேண்டியிருக்கும். ஒருவேளை இப்படியான ஒரு பிரமாணத்தை நான் ஒருவர் விஷயத்தில் கடைப்பிடித்தேனாகில், நான் அனைவருக்குமே அதைக் கடைப்பிடிக்க வேண்டியிருக்கும் மற்றும் இப்படியே தொடர்ந்தால் சீக்கிரத்தில் என்னுடைய தொழிலானது நஷ்டத்தைச் சந்திக்கும்; ஆகையால் பொன்னான பிரமாணமானது தற்காலத்தில் மனுஷன் சம்பந்தப்பட்ட காரியங்களில் கடைப்பிடிக்கப்படவே முடியாது."

ஆனால் இது பொன்னான பிரமாணம் குறித்த தவறான கண்ணோட்டமாயிருக்கின்றது என்றும், இதைக் குறித்து நிதானித்துப் பார்த்தாலே ஒருவனுடைய சொந்த இருதயத்தில் காணப்படும் சுயநலமே பிரச்சனை என்பதைக் கண்டுகொள்ளலாம் என்றும் நாங்கள் பதிலளிக்கின்றோம். மேலே குறிப்பிடப்பட்டுள்ள கருத்துக்களைத் தெரிவித்து இருப்பவர், தனது அயலான் தன்னிடம் வாங்கும் பொருட்களை அதற்கேயுரியதான விலைக்குக் குறைவான விலையில் அவருக்குக் கொடுக்கப்பட வேண்டும் என்று தன்னிடம் எதிர்ப்பார்ப்பான், காரணம் தானும் தன்னுடைய அயலானிடம் பொருட்களை வாங்கும்போது அதற்கேயுரிய விலைக்குக் குறைவான விலையில் தனக்குத் தரப்பட வேண்டும் என்ற எதிர்ப்பார்ப்பைக் கொண்டிருப்பான் என்ற சிந்தனை உடையவராய் இருக்கின்றார். பொன்னான பிரமாணத்தைக் கடைப்பிடிக்கும் காரியமானது இவருக்கு, இவரது பிரச்சனையைச் சுட்டிக்காண்பித்திடும்; இவர் செருப்பு வாங்கும்படியாக தனது அயலானிடம் செல்கையில், தனது அயலான் இவருக்கு என்ன செய்ய வேண்டும் என்று இவர் விரும்புவாரோ அதையே இவரும் அயலானுக்குச் செய்திட வேண்டும் என்றும், செருப்புகளுக்காக அயலானுக்கு நியாயமானதொரு விலையினை, ஜீவிப்பதற்கு நியாயமானதொரு இலாபத்தினை, தான் செலுத்திட வேண்டும் என்றும் உள்ள படிப்பினையைக் கற்றுக்கொடுத்திடும். மேலும் இப்படியே எல்லாப் பரிவர்த்தனைகளிலும் செய்திட வேண்டும். ஒருவேளை நாம் உற்பத்தியாளராய் இருந்து, பொருள்களை விற்கையில், நமக்கு என்ன செய்யப்பட வேண்டுமென்று விரும்புவோமோ அப்படிபோலவே - விவசாயினுடைய விளைச்சலுக்கு உரிய விலையைச் செலுத்திடுவதற்கும், உற்பத்தியாளருடைய பொருட்களுக்குரிய விலையினைச் செலுத்திடுவதற்கும் நாம் விருப்பம் உள்ளவர்களாய் இருக்க வேண்டுமென்று பொன்னான பிரமாணமானது நமக்குக் கற்றுத் தருகின்றதாய் இருக்கின்றது. இதுபோலவே ஒருவேளை நாம் விற்கிறவர்களாய் இருக்கையில் நம்முடைய வாடிக்கையாளர்களிடமிருந்து அதிக இலாபம் ஈட்டும் விதத்தில் விலை சொல்வதற்கு நாம் எண்ணிவிடக்கூடாது, அதாவது அவர்கள் ஒருவேளை விற்கிறவர்களாகவும், நாம் வாடிக்கையாளர்களாகவும் இருக்கும் பட்சத்தில் அவர்களிடம் நாம் எதிர்ப்பார்ப்பதையே நாமும்

அவர்களுக்குச் செய்திட வேண்டும். ஆகையால் கர்த்தருடைய ஜனங்கள் மத்தியில் யாரெல்லாம் ஜீவியத்தின் காரியங்கள் அனைத்திலும் இந்தப் பொன்னான பிரமாணத்தைப் பயன்படுத்துவதில் நன்கு பழக்கமடைந்திருப்பார்களோ அவர்கள் நீதி, நியாயம், நேர்மை பற்றின தங்களது புரிந்துகொள்ளுதலானது இதினிமித்தம் அதிகமடைந்திருப்பதைக் கண்டுகொள்வார்கள்; மேலும் தேவனுக்கொத்த இந்தச் சாயல்களானது - அதாவது அவர்கள் ஆண்டவருடைய பொன்னான பிரமாணத்திற்கு இசைந்திருப்பதின் காரணத்திற்காக மாத்திரம் அல்லாமல், அவற்றின் உண்மையான அழகையும், பிரமாண்டத்தையும் அவர்கள் அடையாளம் கண்டுகொள்ளும் காரணத்தினாலும், அவற்றோடு அவர்களின் இருதயங்கள் இசைந்திருப்பதின் காரணத்தினாலும், அவற்றிற்கு அவர்கள் கீழ்ப்படியும் நிலையை அடைவது வரையிலும் தேவனுக்கொத்த இந்தச் சாயல்களானது - அவர்களது குணலட்சணங்களில் ஒரு பாகமென அவர்களில் அதிகமதிகமாய் வளர்ச்சியடையும்.

நீதியை மனதில் ஆழப் பதியவைத்திடும் இந்தப் பிரமாணமானது, இதையும் தாண்டி கருணையையும்கூட மனதில் பதியவைக்கின்றது; அதாவது நாம் ஒருவேளை தேவையில் இருப்பவர்களாகக் காணப்படும் பட்சத்தில், மற்றவர்களிடத்தில் நாம் எதிர்ப்பார்த்திடும் கருணையினை நம் மனதில் பதியச் செய்திடும். ஓ! கர்த்தருடைய உண்மையான பரிசுத்தவான்கள் இந்தப் பொன்னான பிரமாணத்தினுடைய செல்வாக்கின் கீழ் வருகையில் அவர்கள் ஆவிக்குரிய குணலட்சணத்தில் எத்துணை முழுமையடைந்தவர்களாக இருப்பார்கள்! இது ஜீவியத்தின் கிரியைகளை மாற்றி அவர்கள் அவர்களோடு கொடுக்கல் வாங்கலில் ஈடுபட்டிருக்கும் அனைவரிடத்திலும் நீதியோடு காணப்படச் செய்து, பின்னர் அவர்களது உதவிக்கான தேவையில் காணப்படுபவர்கள் யாவருக்கும், தங்களால் முடிந்த உதவியினை யாருக்கும் பாதகமில்லாமல் செய்யத்தக்கதான கருணையுடையவராகவும் இருக்கச் செய்திடும் - மேலும் இது அவர்களிடத்திலிருந்து புறப்படும் ஒவ்வொரு வார்த்தைகளின் விஷயங்களிலும்கூட அதன் தாக்கத்தைக் கொண்டிருக்கும். இந்தப் பொன்னான அளவுகோலினுடைய வழிநடத்துதலின் கீழ், கசப்பான அல்லது கோபமான அல்லது பழித்தூற்றுதலான வார்த்தைகள் குறைந்துவிடும்; ஏனெனில் இம்மாதிரியாகத் தங்களிடத்தில் கோபமாகவும், கசப்பாகவும் மற்றும் குரோதமாகவும் உள்ள வார்த்தைகள் பேசப்படுவதையோ அல்லது தங்களைக் குறித்துப் புறங்கூறப்படுவதையோ யாரும் விரும்புவதில்லை. கிறிஸ்துவைத் தரித்துக்கொண்டிருப்பவர்கள் கோபம், பகைமை, குரோதம், வாக்குவாதம், பொறமை, தூஷணங்கள் முதலானவைகளைக் களைந்துபோட வேண்டும் என்று அப்போஸ்தலன் நம்மிடத்தில் கூறியதில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை. இன்னுமாக இந்தப் பொன்னான பிரமாணமானது அன்பான வார்த்தைகளை, கனிவான செயல்பாடுகளை, தாழ்மையான நடக்கையைக் கொண்டிருப்பதற்கும்கூட நம்மை வழிநடத்தும்; ஏனெனில் யார்தான் இப்படியெல்லாம் தனது அயலான் நடக்கக்கூடாது என்று எண்ணம்கொள்வார்கள்? அப்போஸ்தலர் மறுபடியும் சொல்வது போன்று சாந்தம், பொறுமை, தயவு, நீடியபொறுமை, சகோதர சிநேகம், அன்பு முதலான கிறிஸ்தவ குணங்களை நாம் தரித்துக்கொள்ள வேண்டும் (கொலோசெயர் 3:8-10, 12-15).

வெளியரங்கமான கிரியைகளின் விஷயத்தில் துவங்கி, பின்னர் நம்முடைய வார்த்தைகளின் விஷயங்களையும் தாக்கத்திற்குள்ளாக்கும் இந்தப் பொன்னான பிரமாணமானது சீக்கிரமாய் நம்முடைய எண்ணங்கள் விஷயங்களிலும்கூட அதன் தாக்கத்தைக் கொண்டிருக்கும்; மற்றவர்கள் நம்மைக் குறித்து அற்பமாய் எண்ணுவதையோ, நம்முடைய வாழ்க்கையின் ஒவ்வொரு கிரியைகளைக் குறித்தும் தவறாகக் கற்பனை பண்ணிக்கொள்வதையோ நாம் விரும்புவதில்லை. மாறாக நம்முடைய வார்த்தைகளையும்,

நம்முடைய கிரியைகளையும், அன்போடும், இரக்கத்தோடும் கண்ணோக்க நாம் விரும்புவோம்; ஆகையால் இந்தப் பொன்னான பிரமாணத்தினுடைய செல்வாக்கின் கீழ் மற்றவர்களைக் குறித்த நமது எண்ணங்கள் மிகவும் கருணையோடும், மிகவும் பரந்த மனப்பான்மையோடும், சந்தேகிக்கும் தன்மை இல்லாமலும் காணப்படும்.

இந்தப் பொன்னான பிரமாணமே, நம்முடைய அருமை மீட்பர் வேறொரு தருணத்தின்போது, "உன்னை நீ அன்புகூருவதுபோல உன் அயலானையும் அன்புகூருவாயாக" என்று கூறி வேறு வார்த்தைகளில் வெளிப்படுத்திட்ட திவ்விய பிரமாணமாகும் என்பதில் உறுதியே. ஆகையால் ஒரு பிரமாணமானது, மற்றப் பிரமாணத்தினை விளக்குகின்றது என்றும், நாம் நம்மை அன்புகூருவதுபோன்று நம் அயலானை அன்புகூருவது என்பது, நம் அயலான் எவ்விதம் நம்மை அன்புகூரவும், நமக்கு எவற்றைச் செய்யவும் நாம் விரும்புகின்றோமோ, அவ்விதமே நாமும் நம் அயலானை அன்புகூர வேண்டும் மற்றும் அயலானுக்காய் நாம் காரியங்களைச் செய்ய வேண்டும் என்பதைக் குறிக்கின்றதாய் இருக்கும் என்றும் நாம் எடுத்துக்கொள்ளலாம். இதைவிட மேலான அர்த்தம் இருக்கும் என்று நாம் எடுத்துக்கொள்ள முடியாது. சட்ட ரீதியாகவோ அல்லது இரத்தபந்தத்தின் வாயிலாகவோ நாம் பொறுப்பைப் பெற்றிருப்பவர்களுக்காகவும் - நமது குடும்பத்தினர், நமது உறவினர்களுக்காகவும் மற்றும் நமக்காகவும் உள்ள நியாயமான தேவைகளைச் சந்திக்கும்படி தேவன் நம்மிடம் எதிர்ப்பார்க்கின்றார் என்று அப்போஸ்தலன் கூறியுள்ளார் -" ஒருவன் தன் சொந்த ஜனங்களையும் விசேஷமாகத் தன் வீட்டாரையும் விசாரியாமற்போனால், அவன் விசுவாசத்தை மறுதலித்தவனும், அவிசுவாசியிலும் கெட்டவனுமாயிருப்பான்." (1 தீமோத்தேயு 5:8)

ஆகையால் நம்முடைய அயலாருக்கு நாம் எதையாகிலும் செய்வதற்கு முன்பதாக, நமது சொந்த வீட்டாரைக் குறித்தே நாம் முதலாவதாக அக்கறைக் கொள்ள வேண்டும், பொறுப்பேற்க வேண்டும் மற்றும் நியாயமான கவனம் செலுத்திட வேண்டும். இதினிமித்தம் நமது அயலாருக்கும், நமக்கும் இடையேயும், நமது அயலார் குடும்பத்திற்கும், நம்முடைய சொந்தக் குடும்பத்திற்கும் இடையேயும் வித்தியாசம் காணவேண்டும்; எனினும் இக்காரியமானது பொன்னான பிரமாணத்தினால் நன்கு சீர்ப்படுத்தப்படுகின்றது; நமது அயலான் தேவையின் சூழ்நிலையில் காணப்படுகையில் - நாம் ஒருவேளை அயலானின் சூழ்நிலைமையிலும், அவர் நம் நிலைமையிலும் காணப்பட்டால் அவர் நமக்கு என்ன செய்திட வேண்டும் என்று நாம் விரும்புவோமோ, அதையே நம்முடைய அயலான் தேவையின் சூழ்நிலையில் காணப்படுகையில் - நாம் அவருக்குச் செய்திட வேண்டும் என்று பொன்னான பிரமாணம் நம்மிடம் எதிர்ப்பார்க்கின்றது என்று பிரமாணம் குறித்துச் சரியாய்ப் புரிந்துகொள்ளப்பட்டால், நாம் தெரிந்துகொள்ளலாம். மேலும் நம்முடைய மனங்களானது, நீதியின் தளத்துடன் சமநிலையில் காணப்படுவதினால், நாம் பெருந்துயரத்தில் காணப்படுகையில், நம் அயலான் முதலாவதாக தன் சொந்தக் குடும்பத்திற்கு நியாயமான தேவைகளைப் பூர்த்திச் செய்ய வேண்டும் என்றும், அவரைச் சார்ந்திருப்பவர்களுக்கு எதுவும் இல்லாமல் போகத்தக்கதாக அல்லது அவர்களுக்குப் பாதகம் உண்டாக்கத்தக்கதாக நமக்குக் கொடுத்து உதவிடக்கூடாது என்றும் நாம் எண்ணம் கொண்டிட வேண்டும்.

R4093 [தெரிந்தெடுக்கப்பட்ட பத்திகள்]

# சில சுவாரசியமான கடிதங்கள்

## அறம் இல்லத்திலேயே துவங்குகின்றது

அன்புக்குரிய சகோதரர் ரசல் அவர்களே:-

எனக்கு விசேஷித்த விதத்தில் தாங்கள் பாஸ்டராக இருக்கின்றபடியாலும், அனைவர் மீதும், இன்னுமாக அறுவடை சத்தியத்தினைக் கொஞ்சமே அறிந்துள்ளவர்கள் மீதுமான தங்களுடைய ஆழமான அக்கறைக் குறித்து நான் அறிந்திருப்பதினாலும், என் மனதில் நீண்டகாலமாய்க் காணப்பட்டுவரும் ஒரு காரியத்தினைக் குறித்து உங்களுக்கு இப்பொழுது எழுதுகின்றேன்.

இதைச் சொல்வதற்கு நான் வேதனைப்படுகின்றேன், மிகவும் வேதனைப்படுகின்றேன்; சத்தியத்தில் காணப்படுபவர்களும், முழுமையான அர்ப்பணம்பண்ணியுள்ளதாகத் தங்களைக்குறித்து அறிக்கைப்பண்ணிக்கொள்கின்றவர்களுமான சகோதரர்களுடன் நெருக்கமாய் நான் பழகுகையில், சத்தியத்தின் விஷயத்தில் இவர்கள் தங்கள் குடும்பத்தினரை மிகவும் மோசமாய்ப் புறக்கணித்துள்ளதை அநேகந்தரம் கண்டிருக்கின்றேன். தங்கள் நண்பர்கள் மற்றும் அயலகத்தார் மத்தியில் சத்தியத்தினைப் பரப்பிடுவதற்கு ஆவலாய்க் காணப்படும் இச்சகோதரர்கள், தங்கள் மனைவிமார்கள் கூட்டங்களில் கலந்துகொள்ள முடியத்தக்கதாக எந்த ஏற்பாடுகளும் செய்கிறதில்லை மற்றும் சத்தியமானது தங்கள் மனைவிகள் மற்றும் குழந்தைகளுக்குரியதல்ல எனும் எண்ணத்தைப் பதியவிடும் விதமாகக் குடும்பத்தின் முன்னிலையிலுள்ள இவர்களது சம்பாஷணைகளும் கூடக் காணப்படுகின்றது.

சத்தியத்தினைப் புரிந்துகொள்வதற்குப் போதுமான அறிவுத்திறனைப் பெற்றிருந்தும் மற்றும் வேதாகமப் பாடங்களினுடைய ஆறு தொகுதிகள் மற்றும் வாட்ச் டவர் கட்டுரைகளைப் (ரீப்பிரிண்ட்ஸ்) படித்த பிற்பாடும், எப்படி ஒரு மனுஷனால் இப்படிப் பேசமுடியும் அல்லது பேசுகின்றார், செய்யமுடியும் அல்லது செய்கின்றார் என்பதை என்னால் புரிந்துகொள்ளவே முடியவில்லை!

அநேகமாக அதிகம் பெலனில்லாத மனைவியினிடத்தில் குடும்பத்திற்கடுத்த காரியங்கள் மற்றும் பிள்ளைகளினுடைய பராமரிப்பிற்கடுத்த பராமரிப்பு அனைத்தையும் கணவன் விட்டுச் செல்கின்றார் மற்றும் தன் ஓய்வு நேரம் முழுவதையும் வீட்டில் இருக்கையில், சத்தியம் படிப்பதற்கெனச் செலவிடுகின்றார்; ஞாயிற்றுக்கிழமை காலையில் தன் மனைவிக்கு உதவுவதற்கும், அவளை ஊக்குவிப்பதற்கும் பதிலாக, கணவன் விழித்துக்கொள்கின்றார், உணவு உட்க்கொள்கின்றார், துணிகள் மாற்றிக்கொள்கின்றார் மற்றும் புறப்பட்டுச் செல்கின்றார் மற்றும் கூட்டத்திலிருந்து திரும்பிவருகையில் சூடான மாலை உணவினை எதிர்ப்பார்ப்பதாக மனைவியை அறியப்பண்ணுகின்றார் மற்றும் இப்படி இருந்தால் அவளால் எப்படிக் கூட்டத்திற்குப்போக முடியும். இது நியாயமாக நிச்சயமாய் எனக்குத் தோன்றவில்லை. இதைக்காட்டிலும் பெயர்ச்சபை ஜனங்கள்கூட நன்றாய்ச் செய்கின்றனர்.

சத்தியத்தினைப் பெற்றவராகவும், தன் பிள்ளைகளைப் பெயர்ச்சபை ஞாயிறு பள்ளியில் கலந்துகொள்வதற்குத் தடைப்பண்ணுகிறவராகவும், ஆனால் தன் பிள்ளைகளுக்குப் போதிப்பதற்கென்று எந்தப் பிரயாசமும் எடுக்காதவராகவும் காணப்படும் மனுஷனை என் இருதயத்தில் நான் பரிதாபமாகவே பார்க்கின்றேன்; மேலும் மூப்பர்களோ அல்லது தொகுதி விநியோகிப்பவரோ (colporteurs) இல்லத்தில் வருகையில், இவர்களால் ஜெபம்பண்ணிட கேட்டுக்கொண்டால் தவிர மற்றப்படி குடும்ப

ஜெபமேபண்ணாத மனுஷனை என் இருதயத்தில் நான் பரிதாபமாகவே பார்க்கின்றேன். இப்படியாகத்தான் காரியங்கள் இருக்கின்றன.

சபையாருடைய ஐக்கியத்திற்கென உண்மையில் வாஞ்சிக்கிற நிலையிலும் மற்றும் தன்னால் புரிந்துகொள்ள முடிந்த சத்தியம் அனைத்தையும் விசுவாசித்த நிலையிலும் மனைவி காணப்படுகையில், கணவன் ஒவ்வொரு ஞாயிறுக் கூட்டத்திலும் கலந்துகொண்டிருக்க, கணவனே மனைவியைத் தடைப்பண்ணிடும் உண்மையான காரணியாக இருந்துள்ள அநேகம் சந்தர்ப்பங்கள் என் தனிப்பட்ட கவனத்திற்கு வந்துள்ளது. இது விஷயத்தில் உங்கள் எழுத்துக்களின் ஒரு விசேஷித்த மற்றும் குறிப்பான கட்டுரை வருமானால், அது அநேகருக்கு நன்மை பயக்கின்றதாயிருக்குமென நான் நம்புகின்றேன்.

இராஜாவினுடைய ஊழியத்தில் தங்கள்

------------------------------ , Tenn நாடு

---

R4115 [தெரிந்தெடுக்கப்பட்ட பத்திகள்]

# கர்த்தருடைய சம்பத்தைக் கண்டுபிடித்தல்

## முதலாவது தனது சகோதரனைக் கண்டு

யோவான் ஸ்நானன் சொன்னதைக் கேட்டு, இயேசுவைப் பின்தொடர்ந்தவர்களில் ஒருவர் சீமோன் பேதுருவின் சகோதரனாகிய அந்திரேயா ஆவார். ஒரு வேதாகம மொழியாக்கத்தில் இரண்டு சீஷர்களுமே தங்களது சகோதரர்களைச் சந்திக்க தேடினார்கள் என்றும், அந்திரேயாதான் முதலாவதாக தனது சகோதரனைக் கண்டடைந்தார் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. இங்கு நமக்கு ஒரு பாடம் உள்ளது, அதென்னவெனில், சத்தியத்தின் சேவையை ஆரம்பித்த ஆரம்பக்கட்டத்தில், இந்தச் சீஷர்கள் தங்களுடைய சொந்தச் சகோதரரிடத்திற்கு முதலாவது சென்றார்கள். இது அவர்களுடைய இருதயத்தில் சகோதர சிநேகம் இருந்ததைக் காட்டுகின்றது. மேலும், இயேசுவின் சீஷர்களாக இருப்பதற்குப் பாத்திரவானாக இருக்கும் யாவரிடமும் இது காணப்பட வேண்டும். மேலும், இது மத ரீதியிலான விஷயங்களில் அவர்களுடைய சகோதரர்கள் மீது அவர்களுக்கு இருந்த செல்வாக்கையும் காட்டுகின்றது. ஆகவே, நாமும் முதலாவது நமக்குச் செல்வாக்கு இருக்கும் சொந்தமானவர்கள் மத்தியில் நற்செய்தியை அறிவிப்போமாக. ஒருவேளை சாதகமான நிலைகள் ஏற்படாவிட்டாலும் நாம் சோர்ந்து போக வேண்டாம். கர்த்தர் தம்முடைய சீஷர்களாகத் தெரிந்துகொண்டவர்களில் அநேகர் கனமும், செல்வாக்கும் உடையவர்களாயிராமல், இழிவானவர்களாகவே இருக்கிறார்கள் என்று அப்போஸ்தலர் உறுதியளித்துள்ளதை நாம் நினைவில்கொள்ள வேண்டும்.

கர்த்தரோடு ஐக்கியங்கொள்வதற்கான சிலாக்கியத்தை அவர் நமக்கு அருளியுள்ளதான காரியமோ, அவர் நம்மில் வெறுக்க முடியாத ஏதோ ஒன்றை நாம் பெற்றிருக்கின்றோம் என்றும், அதை அவர் தமது சத்தியம் மற்றும் கிருபையினால் வனைய விரும்பினதால், நம்மை எடுத்துக் கொண்டார் என்றும், இறுதியில் அதை முதலாம் உயிர்த்தெழுதலின் மகிமையான மாற்றத்தின் மூலம், பிதாவின் முன்பு அருமையானதாகவும், குற்றமற்றதாகவும் ஒப்புவிப்பார் என்றதுமான நிச்சயத்தை அருளுகின்றது.

மீண்டுமாக நமக்குச் சொந்தமானவர்கள் மத்தியில் அன்பு செலுத்தி, நம்மால் முடிந்த மட்டும் அவர்கள் சத்தியத்திற்குள் நடத்தப்பட உதவுவதற்குரிய கடமையை நாம் நினைப்பூட்டுகின்றோம். இது சகோதர சகோதரிகள் மத்தியில் காணப்படுகின்ற ஒழுங்காய் இருக்கிறதுபோல, கணவன் மனைவிக்கு இடையேயும், பெற்றோருக்கும், குழந்தைகளுக்கும் இடையேயும் காணப்பட வேண்டும். ஒருவேளை மனைவியானவள் சத்தியத்தைப் பெற்றுக்கொண்டிருந்தால், கூடுமானமட்டும் அதைத் தனது கணவனின் கவனத்திற்குக் கொண்டுவருவதே அவளுடைய முதல் மகிழ்ச்சியாயிருக்க வேண்டும். ஒருவேளை கணவனானவன் சத்தியத்தைப் பெற்றுக்கொண்டிருந்தால், அதை அவன் தனது மனைவியின் கவனத்திற்குக் கொண்டு வருவதையே அவன் தனது முதல் சந்தோஷமாகவும், சிலாக்கியமாகவும் கருத வேண்டும். இப்படியே பெற்றோருக்கும், குழந்தைகளுக்கும் இடையேயும் இருக்க வேண்டும். ஆனால், தற்கால சத்தியத்தின் வெளிச்சத்திற்குள் வந்தவர்கள் மத்தியிலும் கூட நேர்த்தியான, இயல்பான இவ்வழிமுறை கடைபிடிக்கப்படாததைக் குறித்து நாம் ஆச்சரியமடைந்ததை தெரிவிக்கின்றோம்.

கணவனானவன் மனைவியின் நலன் கருதி, அவளுக்குச் சத்தியம் கற்றுக்கொள்ள நேரம் கிடைக்கத்தக்கதாக, வீட்டுக் காரியங்களை ஒழுங்குப்படுத்துவதில் அவளுக்கு உதவி செய்வானாக. சத்தியத்திற்குள் மனைவி வந்திருந்தால், அவளது கணவனும் கூடச் சத்தியத்தைக் கற்றுக்கொள்ளும் சிலாக்கியம் மற்றும் ஆசீர்வாதங்கள் முதலியவைகளில் பங்கடையத்தக்கதாக, கணவனுக்குச் சாதகமாய் அமையத்தக்கதாகக் காரியங்களை ஒழுங்குச் செய்வதில் மிகவும் கவனம் செலுத்துவாளாக. "புருஷர்களே உங்கள் மனைவிகளில் அன்புகூருங்கள்." அதாவது, அவர்கள் ஆசீர்வதிக்கப்படத்தக்கதாக, அதிலும் விசேஷமாக அவர்களின் மேலான ஆவிக்குரிய நலன் கருதி, எல்லாவற்றிற்கும் மேலான சந்தோஷத்திற்குள் அவர்களும் கொண்டு வரப்படத்தக்கதாக, உங்களால் முடிந்த அனைத்தையும் செய்யுங்கள். "மனைவிகளே உங்கள் புருஷர்களைக் கனம் பண்ணுங்கள்." அதாவது, அவர்களைப் புரிந்துக்கொண்டவர்களாக இருந்து, அவர்களுக்கும் அனைத்து நன்மையானவைகளும் கிடைக்க வேண்டும் என்று விரும்பி, அவர்களுக்கு உதவி செய்வதற்காக உங்கள் சிறப்பான செல்வாக்கைப் பயன்படுத்துங்கள்.

---

R4199 [தெரிந்தெடுக்கப்பட்ட பத்திகள்]

# நன்றி மறத்தல் எனும் பாவம்

## 1 சாமுயேல் 12:1-25

"நீங்கள் எப்படியும் கர்த்தருக்குப் பயந்து, உங்கள் முழு இருதயத்தோடும் உண்மையாய் அவரைச் சேவிக்கக்கடவீர்கள்; அவர் உங்களிடத்தில் எவ்வளவு மகிமையான காரியங்களைச் செய்தார் என்பதைச் சிந்தித்துப்பாருங்கள்." (24-ஆம் வசனம்)

சாமுயேல் தனது சொந்தக் கணக்கை ஜனங்கள் முன்பாக ஒப்புவிப்பதற்கென, சவுலின் முடிச்சூட்டு விழாவைத் தெரிந்தெடுத்துக்கொண்டார். தேவனுடைய ஊழியக்காரனாக, சாமுயேல் அந்த ஜனத்திற்குப் பிரதானமான நியாயாதிபதி ஸ்தானத்தை வகுத்துவந்தார், ஆனால் இராஜா தேர்ந்தெடுக்கப்பட்டதின் காரணமாக அரசியல் சம்பந்தமான செல்வாக்குச் செலுத்துவதிலிருந்தும், பொறுப்பிலிருந்தும் தீர்க்கதரிசியான சாமுயேல் விடுவிக்கப்பட்டார். பரிதானமாக (இலஞ்சமாக), அதாவது ஏதேனும் விதத்தில் ஜனங்கள் தொடர்பான காரியத்தில், தான் எடுத்த முடிவு அல்லது செலுத்தின தீர்ப்புக்குமேல்

செல்வாக்குக் கொள்ளும்விதத்தில், தான் ஜனங்களிடத்தில் எதையாகிலும் வாங்கியுள்ளாரா அல்லது இல்லையா என்று சொல்லும்படிக்குச் சாமுயேல் அனைத்து ஜனங்களிடமும் கேட்டார். சாமுயேல் உண்மையுள்ளவராகக் காணப்பட்டார் என்று ஜனங்கள் ஏகமாய்க் கூறினார்கள்; பின்னர்த் தனக்கு எதிராக எதிர்காலத்தில் எப்போதாவது ஒருவேளை ஏதேனும் சொல்லப்படாதப்படிக்கு, ஜனங்கள் கொடுத்த இந்தச் சாட்சிக்கு இராஜாவும், சர்வவல்லமையுள்ள தேவனும் சாட்சியாய் இருக்கின்றார்கள் என்றும் சாமுயேல் கூறினார்.

தைரியத்திற்கும் மற்றும் தேவனிடத்திலும், ஜனங்களிடத்திலுமான உண்மைக்கும் மோசே மற்றும் சாமுயேலின் ஆட்சித் திறமையானது, மேன்மையான உதாரணங்களாக வரலாற்றின் பக்கங்களில் காணப்படுகின்றது. இந்தச் சுவிசேஷயுகத்திலுள்ள தேவனுடைய பரிசுத்தவான்களில் மிகச் சொற்பமானவர்களே ஒருவேளை, விசேஷித்த அரசியல் செல்வாக்குள்ள ஸ்தானங்களில் காணப்பட்டிருந்தாலும் அல்லது காணப்பட்டு வந்தாலுங்கூட, இங்கு முன்வைக்கப்பட்டுள்ள கொள்கையானது அனைத்து விதமான சூழ்நிலைகளிலும் காணப்படும் தேவனுடைய பரிசுத்தவான்கள் அனைவராலும் உணர்ந்துகொள்ளப்பட வேண்டும். இதே கொள்கை, வீட்டிலும், குடும்பத்திலும்கூடப் பொருந்துகின்றது. ஒவ்வொரு தகப்பனும் தன்னுடைய குடும்பத்தைக் கையாளும் காரியத்தில் உள்ள மேன்மை தாங்கின தன்மை மற்றும் உயர்ந்த குணம் தொடர்புடைய விஷயத்தில் (சாமுயேலைப்போன்று) தனது குடும்பத்தாரின் கவனத்தைக் கவரமுடிகின்றவராகக் காணப்பட வேண்டும். தகப்பன் எவ்விதத்திலும் சுயத்தை நாடுகிறவராக இல்லை என்றும், அவர் ஒரு கணவனுக்குரிய, ஒரு தகப்பனுக்குரிய தனது பொறுப்பில் உண்மையுள்ளவராய் இருந்து, தெய்வீக ஏற்பாட்டின்படி தனக்குரியதாய்க் காணப்படும் பொறுப்புகளையும், வாய்ப்புகளையும் ஞானமாய்ப் பயன்படுத்துவதற்கென நாடுபவராய்க் காணப்படுகின்றார் என்றும், தனது பொறுப்பின்கீழ் இருப்பவர்களைப் பராமரிக்கின்றார் என்றும், குடும்பத்தாரின் நலனுக்காக, போதுமான அளவுக்கு தனது ஜீவியத்தைச் செலவிடுகின்றார் என்றும், ஒருபோதும் குடும்பத்தாரின் நன்மைகளுக்கு எதிராக அவர் செயல்படுவதில்லை என்றும் தகப்பனைக்குறித்துக் குடும்பத்தார் சாட்சி சொல்வதற்கு முடிகின்றவர்களாகக் காணப்பட வேண்டும். குடும்பத்தில் உள்ள ஒவ்வொரு தாயாரும், ஒவ்வொரு மகனும், ஒவ்வொரு மகளும்கூடத் தங்களது உண்மைத்தன்மையை, தங்களது நேர்மைத் தன்மையைக் குறித்து, தங்களது குடும்பத்தின் அங்கத்தினர் சாட்சிபகரத்தக்க நிலைமையில் காணப்பட வேண்டும். குடும்பத்திற்கு உண்மையாய் இருப்பவர்தான், பெரிய குடும்பமாகக் காணப்படும் தனது தேசத்தாருக்கு நேர்மையாய்க் காணப்பட முடியும். சாமுயேலுக்குக் குமாரர்கள் காணப்பட்டாலும்கூட, அவர் தனது குமாரர்களை அரசியல் பதவிகளில் அமர்த்த நாடவில்லை. இஸ்ரயேலின் நலனுக்கடுத்த விஷயங்களில் சாமுயேல் காண்பித்த உண்மை என்பது தேவனிடத்தில் அவர் கொண்டிருந்த உண்மையைக் குறிக்கின்றதாக இருக்கின்றது. இப்படியாகவே தேவனுடைய ஜனங்கள் விஷயத்திலும் உள்ளது. தேவனுடைய ஜனங்கள் தங்களது சொந்தக் குடும்பத்தாருக்குப் பணிவிடைகள் செய்யும் விஷயத்தில் மாத்திரம் இல்லாமல், எல்லாவற்றிலும் தங்களுடைய சொந்தக் கணிப்பை நம்பாதவர்களாய்க் காணப்பட வேண்டும். அவர்கள் பரத்திலிருந்துவரும் ஞானத்தை நாட வேண்டும்; அதாவது ஜெபம் பண்ண வேண்டும், வேதவாக்கியங்களின் போதனைகளை ஆராய்ச்சி செய்ய வேண்டும்.

R5093 [தெரிந்தெடுக்கப்பட்ட பத்தி]

## பரிசுத்த ஆவியினுடைய மறுரூபப்படுத்தும் தாக்கம்

கர்த்தருடைய இந்த ஆவியானது நமக்கு என்ன கொண்டுவந்தது என்பதை அப்போஸ்தலன் நமக்குத் தெரிவிக்கின்றார். அது ஒரு வல்லமையின், பெலத்தின் ஆவியாய் இருக்கின்றது. ஆவியின்படி நடக்க விரும்பி, கர்த்தருடைய அன்பைக்குறித்த அறிவைப் பெற்றுக்கொள்வதற்கு நாடுகின்றவர்கள் அனைவரையும் அவர் கைவிடாமல், அவர்களைத் தீமையினின்று விடுவிப்பார். இவர்கள் இந்த வல்லமையின் ஆவியிடமிருந்து வரும் தைரியத்தின் ஆவியினை அல்லது மனதின் மீதான ஒரு தாக்கத்தினைப் பெற்றுக்கொள்கின்றனர். இது இவர்கள் மற்றப்படி செய்ய முடிகிறதைக் காட்டிலும் அதிகமாய்ச் செய்யத்தக்கதாக அத்தகையதொரு சக்தியை இவர்களுக்குக் கொடுக்கின்றதாய் இருக்கின்றது. இது இவர்களையே ஆச்சரியத்திற்குள்ளாக்குகின்றது. பிதாவுடைய தயவுள்ள சித்தத்தை விரும்பவும், செய்யவுந்தக்கதாக, தேவசமாதானத்தை இவர்கள் பெற்றிருக்கின்றார்கள் (பிலிப்பியர் 2:13). சத்தியத்தினை ஏற்றுக்கொண்டுள்ளவர்கள், தாங்கள் அதன் ஆவியைப் பெற்றுக்கொள்வதற்கு முன்பு இருந்த நிலைமையிலிருந்து மிகவும் வேறுப்பட்டவர்களாகுகின்றனர்; இவர்களுடைய மாற்றத்தினை அயலகத்தாரும், நண்பர்களும் உணர்ந்துகொள்வார்கள். மனைவியானவள் சத்திய அறிவிற்குள்ளாக வருகையில், சரியான விஷயங்கள் அனைத்திலும் அவள் எவ்வளவு அதிகமான உறுதியினைக் கொண்டிருக்கின்றாள் என்பதைக் காண்கையில், கணவன் பெரும்பாலும் ஆச்சரியமடைகின்றான். இந்த உறுதி என்பது கர்வத்தினுடைய ஆவியாய் இராமல், மாறாக தேவன் நன்மைக்கேதுவாய் அனைத்தையும் செய்துமுடிக்க விருப்பமும், வல்லமையுமுள்ளவராக இருக்கின்றார் என்ற நம்பிக்கையின் ஆவியாய் இருக்கின்றது. இது கணவன் விஷயத்திலும் பொருந்தும். அநேகம் மனைவிகள் சத்தியமானது எவ்வளவாய்த் தங்கள் கணவன்மார்களைப் பலப்படுத்தியுள்ளது என்று கண்டுள்ளனர். இந்த மாற்றமானது, கர்த்தர் தம்முடைய ஜனங்களுக்கென்று கொடுத்துள்ள வல்லமையின் ஆவியினாலாகும். எந்தளவுக்கு இந்த ஆவியினைப் பெற்றிருக்கின்றோமோ, அவ்வளவாய் இந்த வல்லமையையும் பெற்றுக்கொள்வோம். உண்மைதான் சிலர் இயல்பாகவே வலுவானவர்களாய் இருக்கின்றனர்; மேலும் சத்தியமும் இவர்களைப் பலமுள்ளவர்களாக்குகின்றது. இயல்பாகவே பெலவீனர்களாய் இருப்பவர்கள், இவர்களுடைய நண்பர்களும், அயலகத்தாரும் ஆச்சரியத்திற்குள்ளாகும் வகையில் மிக அதிகமாய்ப் பலமுள்ளவர்களாக்கப்படுகின்றனர்.

---

R5555 [தெரிந்தெடுக்கப்பட்ட பத்திகள்]

## இராஜரிக அன்பின் பிரமாணம்

"அன்றியும், பலமுள்ளவர்களாகிய நாம் நமக்கே பிரியமாய் நடவாமல், பலவீனருடைய பலவீனங்களைத் தாங்கவேண்டும். நம்மில் ஒவ்வொருவனும் பிறனுடைய பக்திவிருத்திக்கேதுவான நன்மையுண்டாகும்படி அவனுக்குப் பிரியமாய் நடக்கக்கடவன். கிறிஸ்துவும் தமக்கே பிரியமாய் நடவாமல்: உம்மை நிந்திக்கிறவர்களுடைய நிந்தைகள் என்மேல் விழுந்தது என்று எழுதியிருக்கிறபடியே நடந்தார்." (உரோமர் 15:1-3)

"மனவலிமை கொண்டவர்களாகிய நாம் வலுவற்றவர்களின் குறைபாடுகளைத் தாங்கிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறோம்; நமக்கு உகந்ததையே தேடலாகாது. அடுத்தவருடைய நன்மைக்காகவும் வளர்ச்சிக்காகவும் செயல்பட்டு அவர்களுக்கு உகந்தவர்களாக வாழுங்கள். கிறிஸ்துவும் தமக்கு உகந்ததைத் தேடவில்லை." (திருவிவிலியம்)

### நம் சகோதர சகோதரிகள் நெருக்கமான விதத்தில், நமக்குப் பிறன் ஆவர்

அப்போஸ்தலனுடைய வார்த்தையின் வெளிச்சத்தில் பார்க்கையில், பரிசுத்த பவுல் அடிகளாரால்

பயன்படுத்தப்பட்டுள்ள "பிறன்" என்னும் வார்த்தைக்கான பிரதான அர்த்தம் "நமக்கு நெருக்கமானவர்கள்" என்பதே ஆகும் என்று நம் எண்ணம் காணப்படுகின்றது; அதாவது கிறிஸ்துவின் சபையில், நம் சகோதர சகோதரிகளே நம் அயலார்கள் ஆவர்; இவர்கள் நம் இருதயங்களுக்கு நெருக்கமானவர்களாகவும், அருமையானவர்களாகவும் காணப்படுகின்றனர். தேவ பிள்ளைகள் அனைவரும் நமது சகோதர சகோதரிகள் ஆவர்; இவர்கள் குறிப்பாய் நம்முடைய பிறனாய் இருக்கின்றனர்; காரணம் இவர்கள் நம் தளத்திலேயே காணப்படுகின்றனர். இவர்களுடைய பக்திவிருத்திக்கு ஏதுவாய் இவர்களைப் பிரியப்படுத்திடுவதற்கு நாம் விசேஷமாய் நாடிட வேண்டும். ஆனால் அதற்கென்று இவர்களை மாம்சத்தின்படி பிரியப்படுத்திட வேண்டும் என்று அர்த்தமாகாது; ஏனெனில் மாம்சத்தில் பிரியப்படுத்துவது என்பது பக்திவிருத்திக்கு நேர்மாறாகவே அநேகம் சந்தர்ப்பங்களில் இருந்துள்ளது. நாம் சரியாய்ச் சகோதர சகோதரிகளைப் பிரியப்படுத்தினோமானால், அன்பிற்கும், விசுவாசத்திற்கும், வைராக்கியத்திற்கும், நற்கிரியைகளுக்கும் நாம் அவர்களின் ஆவிக்குரிய மனங்களை - "அவர்களின் தூய்மையான மனங்களை ஏவுகின்றவர்களாய்" இருப்போம். இது "பிரியப்படுத்துதல்" எனும் வார்த்தையானது அவ்வசனத்தில் எல்லைக்குட்பட்ட விதத்திலேயே பயன்படுத்தப்பட்டுள்ளது என்று சுட்டிக்காட்டுகின்றதாய் இருக்கின்றது.

நாம் அனைத்து ஜனங்களுக்கும் உகந்தவர்களாய் வாழ்வது என்பது கூடாத காரியமாகும். நமக்குக் கிடைக்கும் வாய்ப்புகளுக்கேற்ப ஜனங்களுக்கு நன்மை உண்டாகத்தக்கதாக நம் ஆற்றல்கள் பிரயோகிக்கப்பட வேண்டும். உலக ஜனங்கள் பரிசுத்தவான்களாய் இல்லை என்றாலும், நம்மால் கூடுமட்டும் "அன்பிற்கும், நற்கிரியைகளுக்கும்" நாம் அவர்களை ஏவுகிறவர்களாக/ தூண்டிவிடுபவர்களாகக் காணப்பட வேண்டும்; மற்றும் கோபங்கொள்ளவோ, துர்க்குணங்கொள்ளவோ அல்லது பாவஞ்செய்யவோ அல்லது அபாத்திரமான எதையாகிலும் செய்திடுவதற்கோ நாம் அவர்களை ஏவிட/தூண்டிடக் கூடாது. உலக ஜனங்களுக்குப் பிரயோஜனம் உண்டுபண்ணி, அவர்களுக்கு உகந்தவர்களாய் வாழ்ந்திடும் நம் பிரயாசத்தில் நாம் எப்போதும் வெற்றிக் காணமுடியாது. சில சமயங்களில் சகோதர சகோதரிகள்கூட அவர்களுக்கு ஊழியம்புரியும் நம் பிரயாசங்களில் பிரியம் அடைவதற்குப் பதிலாய் மனக்குறைக்கொள்கின்றனர். தெளிந்த புத்தியுள்ள ஆவியினைச் செயல்படுத்தி நாம் மற்றவர்களுக்கான பக்திவிருத்திக்கென நாடி, நாம் அவர்களைப் பிரியப்படுத்த முற்பட்டால், ஒருவேளை அது மற்றவர்களுடைய - சகோதர சகோதரிகளுடைய அங்கீகரிப்பைப் பெற்றுத்தருகிறதோ இல்லையோ, அது நமது நடத்தைக்குக் கர்த்தருடைய அங்கீகரிப்பையும், ஆசீர்வாதத்தையும் பெற்றுத்தரும் என்று நாங்கள் எண்ணுகின்றோம்.

ஆகையால் நம்மில் ஒவ்வொருவனும் "பிறனுடைய பக்திவிருத்திக்கேதுவான நன்மையுண்டாகும்படி அவனுக்குப் பிரியமாய் நடக்க" முயற்சிப்போமாக. பிறன் என்ற நெருங்கிய நிலைமையில், சபைக்கு அடுத்ததாக நம் சொந்தக் குடும்பங்கள் வருகின்றனர். ஆம் பூமிக்குரிய கடமைகள் மற்றும் பூமிக்குரிய தேவைகள் விஷயத்தில் நம் குடும்பமானது முதலாவது வருகின்றது மற்றும் இவர்கள் நம் பிறனாகவும், மாம்சத்தில் மிகவும் நெருக்கமானவர்களாகவும் காணப்படுகின்றனர். இவர்களுக்கு நன்மை உண்டாகும்படி, இவர்களுக்கு உகந்தவர்களாய் வாழ்ந்திட இவர்களுக்கு நன்மை செய்திட நாம் நாடிட வேண்டும். இதே கொள்கையானது இறைச்சிக் கடைக்காரன் விஷயத்திலும், ரொட்டி சுடுகிறவன், ஐஸ்கிரீம் கடைக்காரன் முதலானவர்கள் விஷயத்திலும் பொருந்தும். இவர்களுக்குப் பாதகம் ஏற்படும் விதத்திலோ அல்லது இவர்களுக்குப் பிரயோஜனமாய் இராத ஏதேனும் விதத்திலோ நாம் இவர்களுக்குப் பிரியமாய் நடத்தல்கூடாது. நாம் உலக வழிமுறைகளைச் செயல்படுத்த இறங்கிடக்கூடாது. நன்மையும்,

தூய்மையும் இல்லாத கதைகளை இவர்கள் நமக்குச் சொல்ல விரும்புவார்களானால், நாம் இவர்களோடு இணைந்துகொள்ளக்கூடாது. நன்மையானவைகள் மூலம் நாம் இவர்களுக்கு உகந்தவர்களாய் இருக்க முடியவில்லையெனில், அவசியமற்ற நட்புகளை நாம் தவிர்த்துக்கொள்ள வேண்டும். நாம் நன்மை செய்கிறவர்களாகவும், (வளர்ச்சி உண்டு பண்ணுகிறவர்களாகவும்) பக்திவிருத்தி பண்ணுகிறவர்களாகவும் மாத்திரம்தான் காணப்பட வேண்டும்.

## உலகம் நல்லவைகளை அடையாளம் காணும்

நம்முடைய பிறன்கள் அனைவருக்கும் கூடுமானமட்டும் உகந்தவர்களாய் நாம் இருப்பதற்குப் பிரயாசம் எடுத்திட வேண்டும். ஒருவேளை நாம் மரியாதையின்றி கடிந்துகொள்வோமானால், அது அவர்களுக்குப் பிரியமாய் இராது மற்றும் அவர்களுடைய பிரயோஜனத்திற்கும் ஏதுவாயிராது. உலகப்பிரகாரமான ஜனங்களைக் கடிந்துகொள்வதற்கும் ஒரு சரியான வழி இருக்கின்றது. ஒழுக்கம் மற்றும் மத விஷயத்தில் உலகமானது அது அங்கீகரித்திட விரும்பிடும் அளவிற்கும் அதிகமான ஓர் உயர்வான நிலைப்பாட்டினைக் கொண்டிருக்கின்றது. வெளிப்புறமாய் அவர்கள் முகம் சுளித்தாலும், தங்கள் இருதயத்தில் நல்லவைகளை அவர்கள் அங்கீகரிக்கவே செய்கின்றனர். தங்கள் சொந்த ஜீவியங்களில் தூய்மையற்றுக் காணப்படும் ஜனங்கள், தூய்மையான ஜனங்களின் சகவாசத்தினை விரும்புவதை நாம் அடிக்கடி கண்டிருக்கின்றோம். அசுசியானவர்களாகவும், தாங்கள் தொடும் எதையும் அசுசிப்படுத்துகிறவர்களாகவும் காணப்படுபவர்களும்கூட, நலமானவைகள் குறித்துக் கொஞ்சம் மதிக்கிறவர்களாய்க் காணப்படுகின்றனர்.

உலகப்பிரகாரமான ஜனங்களுக்கு நம்மால் அதிகமான நன்மைகளைச் செய்திட முடியும் என்று நாம் எண்ணங்கள் கொண்டிருப்பது சரியல்ல; ஓரளவுக்கு தற்போது நாம் உலகப்பிரகாரமான ஜனங்களுக்கு செய்திடலாம். தேவனுக்கு நேர்மையாயும், சத்தியம் அனுமதிக்கிற அளவிலும் நம்மால் கூடுமானமட்டும் நாம் உகந்தவர்களாய்/பிரியப்படுத்துகிறவர்களாய்க் காணப்பட வேண்டும் என்பதே எப்போதும் நம் நோக்கமாய் இருக்கவேண்டும். நாம் "எரிச்சலடைகிறவர்களாகவும்," எப்போதும் உலகத்தில் சண்டையிடுகிறவர்களாகவும் காணப்படக்கூடாது. மாறாக நம் நற்கிரியைகளை மற்றவர்கள் காணவும், இப்படியாக "தங்களுடைய சந்திப்பின் நாளில் தேவனை மகிமைப்படுத்தவும்" தக்கதாக நாம் நம் வெளிச்சத்தினைப் பிரகாசிக்கப்பண்ண வேண்டும். சத்தியத்தின் ஆற்றலை நாம் இப்பொழுது உலகத்திற்கு இனிமையான மற்றும் இரக்கமான ஆவியின் மூலம் வெளிப்படுத்திட முடியும். எல்லா மனுஷரிடத்திலும் - அதிலும் விசேஷமாகச் சபையிடத்திலும், நம் தொடர்புக்குள் வரும் அனைவரிடத்திலும், கர்த்தருடைய ஜனங்களாகிய நாம் இரக்கத்துடன் காணப்பட வேண்டும்.

## எச்சரிப்பின் ஒரு வார்த்தை

சத்தியத்திற்கு இசைவாய் வராத நிலைமையிலுள்ள அல்லது அநேகமாக சத்தியத்திற்கு இசைவாக வந்தும், கர்த்தருக்கு முழுமையாய் அர்ப்பணம்பண்ணாத நிலைமையிலுள்ள கணவனையோ அல்லது மனைவியையோ உடைய கர்த்தருடைய ஜனங்களில் சிலர் தவறு செய்பவர்களாகவும், தங்களுடைய நடத்தையின் வாயிலாக தங்கள் ஜீவித துணையினிடத்தில் ஆர்வம் வளர்வதைத் தடுத்துப்போடுகிறவர்களாகவும் காணப்படுகின்றனர் என்று நாங்கள் அஞ்சுவதை இங்கே பதிவு செய்கின்றோம். உதாரணத்திற்குக் கணவன் முழுமையாய் அர்ப்பணம்பண்ணினவராகவும், இவர் மனைவி அர்ப்பணம்பண்ணாதவளாகவும் இருக்கையில், சத்தியத்திற்கான தன் வைராக்கியமானது - மனைவி மீது அழுத்திக்கொண்டிருக்கின்றதான வீட்டுப்பராமரிப்பிற்கடுத்த பாரங்களைச் சுமப்பதில் அவளுக்கு உதவிடும் தனது கடமையினைப் புறக்கணித்துப் போடுவதற்குத் தன்னை

வழிநடத்திவிடாதபடிக்குக் கணவன் மிகுந்த கவனம் செலுத்த வேண்டும். தன் மனைவிக்கான உண்மையான தேவைகள் அல்லது ஆறுதல்களைச் சந்தித்திடும் மிகவும் விசேஷித்த கடமை தனக்கு இருக்கின்றது என்னும் காரியத்தினைக் காணத் தவறுமளவுக்கு, கர்த்தருக்கடுத்த தன்னார்வ பணிகள், கூட்டங்கள் முதலானவைகள் கணவனின் ஓய்வு நேரத்தினை மிக முழுமையாய் ஆக்கிரமித்துக்கொண்டு காணப்படக்கூடாது.

கர்த்தருக்கு முழுமையாய் அர்ப்பணம்பண்ணியுள்ளதாக அறிக்கைப் பண்ணிக்கொண்டிருக்கும் ஜீவித துணையினிடத்தில் அன்புடன்கூடிய, அக்கறையுடன் கூடிய பரிவு இல்லாமைக் காரணமாய்ச் சிலர் கசப்படைந்து, சத்தியத்தினை முழுமையாய் ஏற்றுக்கொள்வதிலிருந்து தடைப்பட்டுள்ளனர் அல்லது எதிர்ப்புத் தெரிவிக்க வழிநடத்தப்பட்டுள்ளனர் என்று நாங்கள் அஞ்சுகின்றோம். ஒருவேளை நாம் உண்மையில் கர்த்தருக்கு முழுமையாய் உரியவர்களாய் இருப்போமானால், இது நிரூபிக்கப்பட வேண்டிய முதலிடம் நம் இல்லமேயாகும். நம் இல்லங்களுக்கு வெளியில் சத்தியத்திற்கடுத்த ஊழியங்களில் நாம் கொண்டிருக்கும் எந்தளவிலான வைராக்கியமும், நம்முடைய குடும்பங்களுக்கு நாம் கடமைப்பட்டுள்ளதும், அவர்கள் நம்மிடம் எதிர்ப்பார்த்திடுவதற்கு உரிமைப் பெற்றிருக்கின்றதுமான கடமைகளினின்று நம்மை விடுவித்துக்கொள்ளமுடியாது. நம்முடைய கடமைகளை நாம் நிறைவேற்றுதல் என்பது, சத்தியத்திற்கான உண்மையான ஊழியமாகும் மற்றும் இதுவே பெரும்பாலும் ஆற்றல்மிக்க ஒன்றும்கூட. கணவன் மனைவிக்கு வேண்டி தண்ணீரையோ அல்லது நிலக்கரியையோ அல்லது மரத்துண்டுகளையோ சுமக்க வேண்டியதிருந்தால் அல்லது மனைவிக்குக் கணவன் செய்ய முடிகின்ற அல்லது செய்ய வேண்டிய வேறு ஏதேனும் வேலைகள் இருக்குமானால், இவைகள் மற்ற ஊழியங்களுக்காகப் புறக்கணிக்கப்படக்கூடாது. ஒருவேளை கூட்டங்கள் எவற்றிலாகிலும் கலந்துகொள்ள அவள் விரும்புவாளானால், அவளைத் தன்னோடு அழைத்துச் செல்ல விரும்புவதையும், அவள் கலந்துகொள்ள தான் விரும்புவதையும் கணவன் வெளிப்படுத்திடுவாராக.

இதே விஷயம் அர்ப்பணம்பண்ணியுள்ள மனைவிக்கும் பொருந்தும். நேரம் செலவிடப்படுவதும், தனிப்பட்ட சேவைகள் செய்யப்படுவதும்தான் கணவனுடைய நியாயமான எதிர்ப்பார்ப்புகளாய் இருக்கும்; மேலும் இது விஷயத்தில் மனைவியானவள் நீதியின், அன்பின் மற்றும் தெளிந்த மனதின் ஆவியினைச் செயல்படுத்திட வேண்டும் மற்றும் மனைவிக்குப் புதிய விஷயங்கள் மீது கவனம் திரும்பியுள்ளதால், மனைவியினால் கணவன் மறக்கப்பட்டுள்ளார், அன்புகூரப்படவில்லை மற்றும் கவனிக்கப்படவில்லை என்று கணவன் எண்ணத்தக்கதாக மனைவி நடந்துகொள்ளக்கூடாது. கணவனே இல்லத்தின் உரிமையுள்ள தலைவன் ஆவார். தேவ பிள்ளைகள் ஒவ்வொருவருக்கும் கடமைகளாக இருக்கும் பொறுப்புகள் இருக்கின்றன மற்றும் இவற்றைப் புறக்கணிப்பது அல்லது அசட்டைப்பண்ணுவது என்பது கணக்கிடமுடியாத பாதகத்திற்குக் காரணமாகிடும். நாம் நம்மையே கர்த்தருக்கென்று கொடுத்துவிடும்போது, கணவனுடைய அல்லது மனைவியுடைய அல்லது பெற்றோருடைய அல்லது பிள்ளையினுடைய உண்மையான கடமைகளானது ஒருபோதும் இரத்து ஆகிறதில்லை. தேவனை மகிமைப்படுத்தும் வண்ணமாக "ஜீவனுள்ள நிருபங்களாக" நாம் காணப்படத்தக்கதாகவும், அவரது காரணகாரியங்கள் மீதோ, கிறிஸ்தவனென நம் சொந்த அறிக்கைகள் மீதோ நிந்தையை நாம் கொண்டுவராமல் இருக்கத்தக்கதாகவும், அர்ப்பணம்பண்ணியுள்ள ஒவ்வொரு பரிசுத்தவானும் - ஜெபம் மூலமாயும், திவ்விய வசனம் மற்றும் நம் ஜீவியங்களிலுள்ள திவ்விய வழிநடத்துதல்களை ஆராய்வதன் மூலமாயும் நம்மைக்குறித்தக் கர்த்தருடைய சித்தத்தினை அறிந்துகொள்ள நாடிடுவானாக.

R5229 [தெரிந்தெடுக்கப்பட்ட பத்திகள்]

# ஒருமித்து வாசம்பண்ணுதல்

"இதோ, சகோதரர் ஒருமித்து வாசம்பண்ணுகிறது எத்தனை நன்மையும் எத்தனை இன்பமுமானது?" (சங்கீதம் 133:1)

பூமியிலுள்ள சில குடும்பங்களில், ஒற்றுமை அதிகமாகவே காணப்படுகின்றது. அத்தகையவர்களைக் குறித்து நாம் சில சமயங்களில், "இந்தக் குடும்பத்தினர் நன்கு ஒற்றுமையுடன் இருக்கின்றனர்" என்று கூறுவதுண்டு. சில குடும்பங்களில் பிரிவினையே காணப்படுகின்றது. கணவனும், மனைவியும், சகோதரர்களும், சகோதரிகளும் ஒருவருக்கொருவர் உதவிச்செய்திட நாடிடும்போது, "இந்தக் குடும்பத்தில் அதிகமாய் அன்பு நிலவுகின்றது" என்று நாம் சொல்லிடுவோம்; அதாவது பூமிக்குரிய அன்பாகும் - அதாவது சுபாவ அன்பாகும். இத்தன்மை சரியானதேயாகும். நம்முடைய நெருக்கமான உறவுகள் விஷயத்தில் நமக்குப் பொறுப்பு ஒன்று, விசேஷித்த கடமை ஒன்று இருக்கின்றது என்று வேதாகமம் சுட்டிக்காட்டுகின்றதாய் இருக்கின்றது. ஒரு மனுஷன் தன் வீட்டாரைப் புறக்கணிக்கக்கூடாது என்றும், தன் சொந்த வீட்டாரை ஆதரியாதவன் அவிசுவாசியிலும் கேடானவன் என்றும் வேதவாக்கியங்கள் தெரிவிக்கின்றன (1 தீமோத்தேயு 5:8).

ஆதியில் மனுஷன் தேவனுடைய சாயலில் சிருஷ்டிக்கப்பட்டிருந்தான் மற்றும் திவ்விய அன்பினை தன் ஜீவியத்தில் இயக்கும் சக்தியாய்ப் பெற்றிருந்தான். இந்த அன்பானது பாவத்தின் பிரதிநிதியாகிய சுயநலத்தினால் பெரிதும் அகற்றப்பட்டுள்ளதாய் இருக்கின்றது. எந்தளவுக்கு ஜனங்கள் வீழ்ந்திருப்பார்களோ, அவ்வளவாய் அவர்கள் சுயநலமானவர்களாய் இருப்பார்கள். சிலர் தங்கள் சொந்தக் குடும்பத்தின் அங்கத்தினர்களிடம் இரக்கமாகவும், தயவாயும் காணப்படுகின்றனர் மற்றும் ஒருவருக்கொருவர் உதவிச் செய்திடும் விஷயத்தில் ஒத்துழைத்திடுவதற்கு நாடுகின்றவர்களாய் இருக்கின்றனர். மற்றவருக்குப் பாதகமாய் இராமல், தன் சொந்த வீட்டாருக்காய் நன்மையானவைகளைச் செய்ய நாடுவது என்பதை நாம் சரியற்ற கொள்கையெனச் சொல்லிவிட முடியாது. சகோதரர்களும், சகோதரிகளும் ஒருவர் மீது ஒருவர் அனுதாபம் கொண்டிருக்க வேண்டும் மற்றும் ஒருவருக்கொருர் உதவிடும் ஆவியையும் தங்களில் பெற்றிருக்க வேண்டும். எங்கெல்லாம் குடும்பத்தில் இத்தகைய ஆவியினை நாம் காணுவோமோ அப்போது, "அது ஒரு சந்தோஷமான குடும்பம்" என்று நாம் கூறிடுவோம்.

சில குடும்பங்களில் தனிப்பட்ட காரியங்களில் சுயநலம் காணப்படுகின்றது மற்றும் சகோதர பாசமும் இருப்பதே இல்லை. இத்தகைய குடும்பங்களில் தங்கள் சொந்த வீட்டாருக்குச் செய்வதைப் பார்க்கிலும், வெளியாட்களுக்கே அதிகமாய்ச் செய்திடுவதற்கான விருப்பம் காணப்படும். குடும்பத்தின் அங்கத்தினர்கள் தங்கள் சொந்த வீட்டாரிடத்திலேயே அதிகம் குறைவுகளைக் காணுகின்றவர்களாய் இருப்பார்கள். இம்மாதிரியான நிலைமைகளை, நீதி இல்லாமை என்றே நாம் சொல்லிடுவோம். எப்போதெல்லாம் நீதியின் கொள்கையானது ஒதுக்கப்படுகின்றதோ, அப்போது அன்பிற்குப் பதிலாகப் பகைமையின் ஆவி உருவாகிடும் மற்றும் இத்தகையச் சூழ்நிலைகளில் ஒற்றுமைக்கு வாய்ப்புமிராது.

R4871

## ஜீவியத்தின் கடமைகள் விஷயத்தில் கிறிஸ்தவனின் மனோநிலை

'Not slothful in business; fervent in spirit; serving the Lord.“ (Romans 12:11)

"வேலையில் அசதியாயிராமல், ஜாக்கிரதையாயிருங்கள்; ஆவியிலே அனலாயிருங்கள்; கர்த்தருக்கு ஊழியஞ்செய்யுங்கள்." (உரோமர் 12:11)

இவ்வசனத்தில் இடம்பெறும் "business"/வேலை என்ற வார்த்தை மிகவும் ஆழமான அர்த்தமுடையதாகும். எதைச் செய்தாலும் நாம் அனைத்தையும் கர்த்தருக்கென்று செய்திட வேண்டும்; நாம் எதைச் செய்தாலும், அதைக் கர்த்தருக்கென்று முழுவதுமாய்ச் செய்திட வேண்டும். கிறிஸ்தவனைப் பொறுத்தமட்டில், ஜீவியத்தில் அவனுடைய பிரதான வேலை . . . தேவனை மகிமைப்படுத்துவதாகும், கர்த்தர் சுட்டிக்காண்பித்துள்ளது போன்று தேவனுக்கு ஊழியஞ்செய்வதாகும், சகோதர சகோதரிகளுக்கென்று ஊழியஞ்செய்வதாகும், சத்தியத்திற்காக ஊழியஞ்செய்வதாகும், நீதிக்கு ஊழியஞ்செய்வதாகும், "கிடைக்கும் சமயத்திற்குத் தக்கதாய் அனைத்து மனுஷருக்கும், அதிலும் விசேஷமாக விசுவாச வீட்டாருக்கும்" ஊழியஞ்செய்வதாகும். நம்முடைய ஆதார வசனத்தில் இடம்பெறும் தொழில் எனும் வார்த்தையானது கர்த்தரால் அங்கீகரிக்கப்படும் எந்த ஒரு மற்றும் எவ்வகையான தொழிலையும் உள்ளடக்குகின்றதாய் இருக்கும். மதுபான தொழிலில், புகையிலைத் தொழிலில் அசதியாய் இராமல் ஜாக்கிரதையாய் இருக்கும்படிக்குச் சொல்லப்பட்டிருக்கின்றது என்று நாம் எடுத்துக்கொள்ளக் கூடாது; ஏனெனில் கர்த்தருடைய அங்கீகரிப்பிற்குப் பாத்திரமானது என்று நாம் நம்பிடும் அத்தகைய தொழில்களுக்கு மாத்திரமே நாம் கவனம் செலுத்திட வேண்டும்.

"அசதியாயிராமல் ஜாக்கிரதையாய் இருங்கள்" எனும் வார்த்தையானது, சோம்பேறியாய், சுறுசுறுப்பற்றவர்களாய் இராதேயுங்கள் என்று சொல்வதற்குச் சமமாகும். ஒருவர் செய்யக் கடமைப்பட்டுள்ள அல்லது செய்யும்படிக்குச் சிலாக்கியம் பெற்றுள்ளதான எந்த ஒரு தகுதியான வேலைக்கும் சிறந்த மற்றும் விழிப்புள்ள கவனம் கொடுக்கப்பட வேண்டும் என்பதே அப்போஸ்தலனின் கருத்தாய் இருக்கின்றது. செய்வதற்குப் பாத்திரமான எதுவும், வைராக்கியத்தோடு செய்யப்பட வேண்டும். முதலாவதாக நம்முடைய வேலை/தொழில் பாத்திரமானதாவென்று பார்த்துக்கொள்ளப்பட வேண்டும் மற்றும் இரண்டாவதாக அவ்வேலையினை உண்மையோடு செய்திட வேண்டும் என்பதே அப்போஸ்தலனின் கருத்தாகும். தனிப்பட்ட தேவைகளுக்காயினும் அல்லது கர்த்தருடைய வேலைக்காயினும் பணம் தேவையெனில், பணம் தரும் அந்தத் தொழிலினை ஊக்கமாயும், உற்சாகமாயும், கர்த்தருக்குச் செய்வதுபோன்று செய்வதற்குரிய சிலாக்கியமென உணர்ந்தவர்களாயும் நாம் செய்திட வேண்டும். நாம் எந்த விதத்திலும் அசதியாயோ, அஜாக்கிரதையாயோ காணப்படக்கூடாது.

நம்முடைய பூமிக்கடுத்த தேவைகளுக்காய்க் கொஞ்சம் ஏற்பாடுகள் பண்ணிடுவது அவசியமாகும். இதற்கு எத்தனை நேரம் செலவிடப்பட வேண்டும் என்பது, அவனவன் தனக்காய்த் தீர்மானித்துக்கொள்ள வேண்டிய காரியமாகும். கர்த்தருக்காகவும், அவரது ஊழியத்திற்கென நம் ஜீவியங்களைக் கொடுத்துவிடுவதற்காகவும் நாம் அர்ப்பணம்பண்ணின பிற்பாடு, வெகு சொற்ப நேரமே கொடுப்பதற்குக் காணப்படுகின்றது. சத்தியத்தைப் பிரகடனப்படுத்தும் விசேஷித்த ஊழியத்திற்கென்று அதிகம் நேரம் கிடைக்கத்தக்கதாக, நியாயமாய்க் கூடுமானமட்டும் இந்த ஜீவியத்தினுடைய காரியங்களிலிருந்து நாம் நேரத்தை மீட்டுக்கொள்ளத்தக்கதாக பார்த்துக்கொள்ள வேண்டும். ஆனால் அதற்கென்று இது, நமது குடும்பத்தார், தங்கள் தேவைகளுக்கென்று மற்றவர்கள் மீது சார்ந்து இருக்கத்தக்கதாக நாம் விட்டுவிட

வேண்டும் என்று குறிப்பதாகாது. நமக்கான தகுதியான நலன்களுக்கடுத்த காரியங்களை நாம் பார்த்துக்கொள்ள வேண்டும். நாம் சுமையினால் பாரமடைந்து அமிழ்ந்துபோகக்கூடாது, மாறாக நம்மைச் சார்ந்து இருப்பவர்களைச் சரியாய் நாம் பார்த்துக்கொள்கின்றவர்களாக இருக்க வேண்டும். நம்முடைய சொந்தத் தேவையைப் பொறுத்தமட்டில், உண்ணவும், உடுக்கவும் இருந்தால், அதிலே நாம் திருப்தியாகிட வேண்டும் மற்றும் நீண்ட காலத்திற்காய்க் குவித்துக்கொள்கிறவர்களாய் இருத்தல்கூடாது.

"அனலாயிருத்தல்" என்னும் வார்த்தையின் அர்த்தம் மிகவும் சூடாய் இருப்பதை, வேகுவதைக் குறிக்கின்றதாய் இருக்கும். நாம் எதைச் செய்திட்டாலும், அதை நாம் கர்த்தருக்கென்று இருதயப் பூர்வமாயும், முழுப்பலத்தோடும் செய்திட வேண்டும் என்ற கருத்தையே அப்போஸ்தலன் தெரிவிக்கின்றார். தான் செய்கிற எந்தக் காரியத்தையும் அசதியாய்ச் செய்பவன், அசதியாய் இருக்கும் பழக்கத்தினை உருவாக்கப் பெற்றிருப்பான் மற்றும் இது ஜீவியம் முழுவதும் அவன் மீது காணப்படும். நாம் எதைச் செய்திட்டாலும், அன்போடு/அனலாய்ச் செய்திட வேண்டும். நாம் கர்த்தருக்குரியவர்கள் மற்றும் நாம் செய்யும் எந்த வேலையும் அவருடையதேயாகும். நம்முடைய காரியங்களில் நாம் அனலாய்க் காணப்படுவதில் கர்த்தர் பிரியப்படுகின்றார். தன் மனசாட்சியினை மீறின நிலையில் ஒருவன் ஒரு தொழிலில் காணப்படுவானானால், அவன் அதனின்று விலகி, உலகில் ஏதேனும் நன்மை செய்ய முடிகின்ற வேலைக்குள் வருவானாக.

### கவலைப்பட்டுப் பாரமடையாதீர்கள்

நாளைய தினத்தைக்குறித்துக் கர்த்தருடைய ஜனங்கள் கவலைப்படக்கூடாது. எனினும் தேவையில் காணப்படும் அயலார்களுக்கும், நண்பர்களுக்குமென்று ஏதேனும் செய்ய முடியத்தக்கதாய் நாம் காணப்படுவதற்கு வேண்டி நாம் கவனமாயும், முன்னேற்பாடுள்ளவர்களாயும் இருந்து, சேர்த்து வைக்க வேண்டும் என்றும் வேதவாக்கியங்கள் தெரிவிக்கின்றன. சேமித்து வைக்கப்படும் பணமானது, பல நாட்களினுடைய உழைப்பின் சேமிப்பாய் இருக்கின்றது. தற்கால உடனடி தேவைக்கென்று நமது பணங்கள் அனைத்தையும் நாம் செலவழித்திடக்கூடாது, மாறாக எதிர்க்காலத்தில் நல்லப் பலன்கள் உண்டாகத்தக்கதாக, நாம் சுயக்கட்டுபாட்டுடன் காணப்பட வேண்டும். இந்த விஷயம் உணவு மற்றும் உடையின் விஷயத்திலும்கூடப் பொருந்தும். ஒருவேளை நம்முடைய கையிருப்புக் குறைவாக இருக்குமானால், எப்படி அடுத்து வஸ்திரங்கள் வரும் என்று எண்ணாதிருங்கள். ஒருவேளை நாம் அடுத்துத் துணிகளைப் பெற்றுக்கொண்டால், ஒருவேளை அது திருடப்பட்டுப்போகலாம்.

---

R5498

## எப்படி மற்றும் எங்கு நான் ஊழியம் புரிந்திடலாம்?

"சகோதரரே, அவனவன் தான் அழைக்கப்பட்ட நிலைமையிலே தேவனுக்கு முன்பாக நிலைத்திருக்கக்கடவன்." (1 கொரிந்தியர் 7:24)

இந்த ஓர் அதிகாரத்தில் அப்போஸ்தலன் விவாகம் குறித்தும், அதன் பொறுப்புகள் குறித்தும் கருத்துகள் தெரிவித்துள்ளார். அவர் அடிமைகள் குறித்தும், அவர்கள் நிலைமைக் குறித்தும்கூடக் கருத்துகள் தெரிவித்துள்ளார். "அடிமையாய் நீ அழைக்கப்பட்டிருந்தால், விடுதலைப்பண்ணப்படும்படிக்கு நாடாதே" என்று கூறுகின்றார். இன்னுமாக ஒருவேளை அடிமைக்குச் சுதந்தரம் வருமானால், சுதந்தரவாளியென அதிகளவில் ஊழியம்புரிவதற்கான வாய்ப்பினைப் பயன்படுத்திடுவதில் அவன் மகிழ்ச்சிக்கொள்ள வேண்டும் என்றும் கூறியுள்ளார். ஆனால் அடிமையானவன் தன் எஜமானை நோக்கி:

"நான் தேவனுடைய பிள்ளையாகியுள்ளேன்; ஆகையால் உம் கட்டுப்பாடுகள் எனக்குப் பொருட்டில்லை; இனிமேலும் நீர் என்னை உமது அடிமையாக வைத்துக்கொள்ள முடியாது" என்று சொல்லிவிடக்கூடாது.

கர்த்தருடைய ஜனங்கள் தாங்கள் அழைக்கப்பட்ட நிலைமையினின்று உடனே மாற்றம் வேண்டுமென்றிருக்கக்கூடாது எனும் கருத்தினை அப்போஸ்தலன் கொடுத்துள்ளார். "நீங்கள் இப்பொழுது செய்துகொண்டிருப்பவைகளை விட்டு விலகிட வேண்டும் என்று நீங்கள் எண்ணங்கொள்ள வேண்டாம்" என்பது அவர் கருத்தாய் இருக்கின்றது. உங்கள் தொழில் நிலைமையானது ஒரு வேலைக்கார நிலைமையாகவோ அல்லது ஓர் அடிமை நிலைமையாகக் காணப்படலாம்; இதிலேயே நிலைத்திருங்கள் - மன அமைதியோடு அதில் காணப்படுங்கள். ஒருவேளை கர்த்தர் கதவைத் திறப்பாரானால், பின்னர் அதை நாடித்தேடுங்கள். ஒருவேளை உங்கள் நிலைமையானது மிகவும் கடுமையான நிலைமைகளின் கீழுள்ள ஒன்றாய் இருக்குமானால் . . . நிலைமையை இலகுவாக்கிட ஒருவேளை கர்த்தர் சித்தங்கொண்டால், தம்முடைய ஏற்றவேளையில் அதை இலகுவாக்கிடும்படியாகக் கர்த்தரிடத்தில் வேண்டிக்கொள்வது சரியே. ஒவ்வொரு சோதனையிலும், நாம் அவைகளைத் தாங்கிக்கொள்ளத்தக்கதாகத் தப்பித்துக்கொள்ளும் போக்கினை அருளுவதாக அல்லது அவ்வகையில் காரியங்களை வழிநடத்திடுவார் என்பதாக அவர் நமக்கு வாக்களித்துள்ளார் (1 கொரிந்தியர் 10:13). இது நம்முடைய தொழில்- உறவினர்களுக்கும் - அனைத்திற்குமே பொருந்திடும்.

ஒருவன் விவாகமாகாதவனாய் இருப்பானானால், கூடுதல் பொறுப்பினை எடுத்துக்கொள்ளும் காரியத்தினை அவன் மிகவும் கவனமாய்ச் சிந்தித்துக்கொள்ள வேண்டும். "நான் விவாகமாகாதவனாய்க் காணப்பட்டபோது அழைக்கப்பட்டேன். நான் விவாகம்பண்ணிட கர்த்தர் விரும்புகின்றாரா?" என்று அவன் சிந்தித்துக்கொள்ள வேண்டும். ஒருவேளை விவாகம்பண்ணிட கர்த்தர் விரும்புகின்றார் என்ற முடிவிற்கு அவன் வருவானானால், "கர்த்தருக்குள் மாத்திரமே" எனும் அப்போஸ்தலனுடைய கட்டளையினை அவன் நினைவில்கொண்டிருக்க வேண்டும். ஒருவேளை அவன் அழைக்கப்பட்டபோது அவன் விவாகமானவனாய் இருந்தால், அவன்: "நான் விவாகம்பண்ணாமல் இருந்தால் நலமாயிருந்திருக்கும். ஒருவேளை விவாகம்பண்ணாமல் இருந்திருப்பேனாகில், என்னால் மிக நன்றாயும், மிக அதிகமாயும் செய்திருக்கமுடியும்" என்று சொல்லக்கூடாது. அவன் அழைக்கப்பட்டபோது, அவன் விவாகமானவனாய் இருந்தான்; ஆகையால் அவனுடைய நேரம் ஓர் அடைமானத்தில் உள்ளது. இந்த அடைமானத்தினை அல்லது ஒப்பந்தத்தினை அவன் கருத்தில் எடுத்துக்கொள்ளவே வேண்டும்.

## திறந்திருக்கும் கதவுகள் வழியாய் உட்பிரவேசியுங்கள்; ஆனால் கதவுகள் திறக்கும்படி பலவந்தம்பண்ணாதீர்கள்

எனினும் ஒருவேளை அவிசுவாசியான கணவனோ மனைவியோ விட்டுப் பிரிந்துபோனால், அவர்கள் பிரிந்து போகட்டும் என்று இதே அதிகாரத்திலுள்ள முந்தைய வசனங்களில் அப்போஸ்தலன் சுட்டிக்காட்டுகின்றார். அவர்கள் விட்டுப்பிரிந்துபோக மனதாய் இருந்தார்களானால் அவர்கள் அப்படிப் பிரிந்து போவதற்கு மறுப்புத் தெரிவிக்க வேண்டாம் என்று கூறுகின்றார். கர்த்தர் உங்கள் காரியங்களைப் பார்த்துக்கொள்வதற்கு வல்லவராய் இருக்கின்றார். மேலும் ஒருவேளை இதுதான் உங்களுக்கான கர்த்தருடைய ஏற்பாடாய் இருக்குமாயின் அதை ஏற்றுக்கொள்ளுங்கள். நம்முடைய தொழிலைவிட்டுத் தொகுதி விநியோகிக்கும் வேலைக்கோ அல்லது பயண ஊழியர் வேலைக்கோ அல்லது புதிய சபை உருவாக்கும் வேலைக்கோ அல்லது வேறு ஏதோ வேலைக்கோ செல்லும் காரியமாக நாம் சிந்தித்துக்கொண்டிருக்கையில் . . . "கர்த்தர்தான் இக்கதவைத் திறந்துள்ளரா?" என்று நாம் சிந்தித்துக்கொள்வது சரியான காரியமாய் இருக்கும். ஒருவேளை இந்த விதத்தில் ஊழியத்திற்கான

சிறந்த வாய்ப்பு நமக்கு வருகிறதையோ, அறுவடைக் களத்தில் ஊழியம்புரிவதற்கான பெரிய வாய்ப்பு நமக்கு வருகிறதையோ, கதவு திறந்திருப்பதையோ நாம் காண்போமானால், பின்னர் நாம் களிகூர்ந்து உட்பிரவேசித்திட வேண்டும்.

ஒருவேளை திறந்த கதவை நாம் காணவில்லையெனில், அத்தகைய ஊழியங்களுக்குள் பிரவேசிக்கத்தக்கதாகச் சரியான சில கொள்கைகளை மீறியே நாம் கதவைப் பலவந்தமாய்த் திறக்கிறவர்களாய் இருப்போம். நாம் கொள்கைகளுக்காக நின்றிட வேண்டும். கர்த்தருடைய ஊழியத்தில் இறங்கிடுவதற்காகச் சரியான கொள்கை எதையேனும், நாம் ஒருபோதும் எதிர்த்து மீறிடக்கூடாது; ஊழியஞ்செய்வதற்கு எப்போதுமே ஏதோ ஒரு வழியிருக்கும். அப்போஸ்தலன் இவ்வார்த்தைகளைச் சகோதரர்களுக்கே பேசுகின்றார் மற்றும் கனவீனமான தொழில்களில் காணப்படும் யார் ஒருவரையுங்குறித்து அவருடைய வார்த்தைகள் குறிப்பிடுவதில்லை.

## அவமதிப்புக்குரிய தொழிலில் எந்தச் சகோதரனும் காணப்படக்கூடாது

சத்தியத்தைப் பெற்றுக்கொள்வதற்கு முன்பு ஒரு மனுஷன் சூதாட்ட விடுதியை நடத்தினவராகவோ அல்லது அவமதிப்புக்குரிய ஏதேனும் தொழிலை நடத்தினவராகவோ இருக்கிறார் என்று வைத்துக்கொள்ளுங்கள்; மதுபான கடைக்காரராய் இருந்திருக்கிறார் என்று வைத்துக்கொள்ளுங்கள் [அநேகச் சகோதரர்கள் இந்தத் தொழிலிலிருந்து வந்தவர்களாகவே இருந்திருக்கின்றனர்]. இவர் சத்தியத்தைப் பெற்றுக்கொண்ட பிற்பாடு, "இதோ நான் என்ன செய்துகொண்டு வருகிறேன்? மனுஷர்களுக்குப் பாதகமானதையா நான் அவர்களுக்கு வழங்கிக்கொண்டிருக்கின்றேன்? இதை நான் நிறுத்த வேண்டும்!" என்பான். ஆகையால் அவன் தேவனுடைய பிள்ளையாகுவதற்கு முன்பாக, மதுபான தொழிலிலிருந்து அவன் வெளியே வரவேண்டும்; தேவபிள்ளையாகுவதற்கு முன்னதாகவே, கொள்கைகளற்ற மனநிலையிலிருந்து அவன் வெளிவர வேண்டும். "சகோதரரே அவனவன் தான் அழைக்கப்பட்ட நிலைமையிலேயே நிலைத்திருக்கக்கடவன்" எனும் அப்போஸ்தலனின் வார்த்தைகள் சகோதரர்களுக்குச் சொல்லப்பட்ட வார்த்தைகளாகும். தன் மனசாட்சிக்கு எதிரானதாகவும், தன் சக சிருஷ்டிக்குப் பாதகமானதுமாய்க் காணப்படும் தொழில் ஒன்றில் ஒருவன் காணப்படுகையில், அவன் கிறிஸ்துவுக்குள்ளான சகோதரனாய் இரான்.

இந்தக் காரியங்கள் அனைத்தும் அப்போஸ்தலனின் நாட்களிலுள்ள வேலைக்காரர்கள் யாவருக்கும், ஆற்றல் மிக்கவைகளாக இருந்தன. அந்தக் காலங்களிலும் மற்றும் எல்லாக் காலங்களிலும் தாழ்மையுள்ள வகுப்பார், வேலைக்கார வகுப்பார், அடிமைகள் வகுப்பார் சுவிசேஷ செய்தியை ஏற்றுக்கொள்வதற்கு ஆயத்தமாய் இருந்திருக்கின்றனர். ஐசுவரியவான் வகுப்பாரை நோக்கி, "ஐசுவரியவான்களே உங்களுக்கு ஐயோ!" என்று நமது கர்த்தர் கூறினார். மேலும் தரித்திரரை நோக்கி: "வருத்தப்பட்டுப் பாரம் சுமக்கிறவர்களே எல்லோரும் என்னிடத்தில் வாருங்கள்" என்று கூறினார். வெளிச்சத்திற்குள் வந்தவர்களில் ஞானிகள் அநேகரில்லை என்றும், ஐசுவரியவான்கள் அநேகர் இல்லையென்றும், பிரபுக்கள் அநேகர் இல்லையென்றும் நாம் காண்கின்றோம்.

## கடுங்காவல் தண்டனை விடுதிகளில் சகோதரர்கள்

கடுங்காவல் தண்டனை விடுதிகளில் கைதியாக இருப்பவன் தனக்குள்ளாக, "சிறைச்சாலையில் நான் இருக்கையில் தேவனுடைய வழிநடத்துதலின்படி இந்தச் சுவிசேஷ செய்தியானது என்னை வந்தடைந்துள்ளது. அநேகமாக நான் இங்கு வந்திருக்கவில்லையெனில் சத்தியத்தினை அடைந்திருக்கவே மாட்டேன்" என்று சொல்லுவான். ஒருவேளை இத்தகைய நிலைமையில் காணப்படும்

ஒரு நபராக நாம் இருப்போமானால் விடுதலை வேண்டி மனுத்தாக்கல் கடிதத்தினை அனுப்பி வைத்துக் கதவுகளைத் திறப்பதற்கான பிரயாசங்களில் துரிதப்படுவதற்கு முன்னதாக, அத்தகைய மனுத்தாக்கலை ஆயத்தம்பண்ணுவதற்கு முன்பாக நன்கு சிந்தித்துப்பார்ப்பவர்களாக நாம் இருக்க வேண்டும். "சக கைதிகள் மத்தியில் கர்த்தருக்காய் ஊழியம்புரியும் வாய்ப்புகள் எனக்குக் கிடைக்கலாம். அவர்களுக்குப் பிரசங்கித்திடுவதற்கான வாய்ப்பு எனக்குக் கிடைக்கலாம்" என்று நாம் எண்ணிட வேண்டும். அல்லது ஒருவேளை விடுதலைக்கான மனுத்தாக்கல் நம்மால் செய்யப்பட்டும், அந்த மனு நிராகரிக்கப்படும்போது, இந்த நிராகரிப்பை இது விஷயத்திலுள்ள கர்த்தருடைய வார்த்தையென்று நாம் தலை வணங்கிட வேண்டும். நாம் முழுமையாகத் திருப்தி கொண்டவர்களாகவும், முழுமையாக மகிழ்ச்சிக் கொண்டவர்களாகவும் இருக்க முயற்சித்து, "இருளிலிருந்து என்னைத் தம்முடைய ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு வரவழைத்தவருடைய புண்ணியங்களை அறிவிக்க நாடிடுவேன்" என்று சொல்லிட வேண்டும். யாருக்குத் தெரியும்? இந்நிலையில் காணப்படும் மனுஷன், வேறு இடங்களில் கிடைக்கப்பெறுவது போலவே, இங்கும் ஊழியம்புரிவதற்கான நல்வாய்ப்புகளைப் பெற்றுக்கொள்வான். தம் உண்மையுள்ளவர்கள் யாவருக்கும் கர்த்தர் சிறந்தவைகளையே கொடுத்தருளுவார்.

---

R2665 [தெரிந்தெடுக்கப்பட்ட பத்திகள்]

# எங்கள் கடனாளிகளுக்கு நாங்கள் மன்னிக்கிறதுபோல, எங்கள் கடன்களை எங்களுக்கு மன்னியும்

### மத்தேயு 18:21-35

இந்தப் பாடமானது கர்த்தருடைய சிறியவர்களை இடறச் செய்வதற்கு எதிராய் விழிப்பாய் இருக்க வேண்டியதன் அவசியம் குறித்த இயேசுவின் முந்தின போதகத்தினுடைய தொடர்ச்சியாகவே இருக்குமெனத் தோன்றுகின்றது. முந்திய பகுதியினுடைய அறிவுரைகளை அப்போஸ்தலனாகிய பேதுரு உடனடியாகச் செயல்முறைப்படுத்திட முயற்சித்ததாகத் தெரிகின்றது மற்றும் மனம்திரும்பி வரும் சகோதரனை எத்தனை தரம் மன்னிப்பது தன்னுடைய கடமையாக இருக்கும் என்ற அவரது கேள்வியே. . . மன்னிப்புக்குறித்தப் பாடம் ஒன்றினைக் கொடுத்திடுவதற்கு நமது கர்த்தருக்கு வாய்ப்பினை அருளினதாய் இருந்தது.

மன்னிப்பின் விஷயத்தில் யூத ரபீக்களுடைய போதனைகளானது... தவறு செய்தவன், தன் பொல்லாத வார்த்தைகள் அல்லது கிரியைகளுக்காய் மனம்வருந்தி, தவறு யாருக்குச் செய்யப்பட்டதோ, அவரிடத்தில் வந்து, தன் தவற்றை ஒப்புக்கொண்டு, மன்னிப்புக் கேட்டுக்கொண்டால், மூன்று முறைகள் உடனடியே மன்னிப்புக் கொடுக்கப்பட வேண்டும் என்பதாகக் காணப்பட்டது. இவர்களது இந்தப் போதனைகளானது யோபு 33:29-ஆம் வசனம் மற்றும் ஆமோஸ் 2:4-ஆம் வசனத்தின் அடிப்படையிலாகும். இது விஷயமான கர்த்தருடைய போதனையானது அநேகம் விதங்களில் இவர்களுடைய போதனைக்கு நேர்மாறாகவே இருந்தது மற்றும் யாருக்கு எதிராய்த் தவறு செய்யப்பட்டதோ, அவரே காரியம்குறித்து விசாரித்திட குற்றம் புரிந்தவரிடம் சென்று அவன் தவற்றை அவனுக்குச் சுட்டிக்காண்பித்துவிட வேண்டும். யாருக்குக் குற்றம் புரியப்பட்டதோ, அவர் இப்படிச் செய்திடுவதற்கு மிகுந்த தாழ்மை அவசியமாகிடும், காரணம் நமது கர்த்தர் கொடுத்துள்ள கட்டளையின்படி குற்றம் புரிந்தவரிடம் செல்வதைக் காட்டிலும், கோபங்கொள்வதும், குற்றம் புரிந்தவரைத்

தவிர்த்துக்கொள்வதும் மிகவும் சுலபமானதாயிருக்கும். இது விஷயத்தில் கர்த்தருடைய கட்டளையானது வேறுபடுகின்றது என்றும், மிகவும் பெருந்தன்மையாய்க் காணப்பட்டு மன்னிப்பானது அநேகந்தரம் கொடுக்கப்பட வேண்டும் என்றுமுள்ள அந்தக் கருத்தை அப்போஸ்தலனாகிய பேதுரு கிரகித்துக்கொண்டதாகத் தெரிகின்றது; ஆகையால் ஆமோசினால் குறிப்பிடப்பட்டுள்ள மூன்று, நான்கு முறைகளைக் கூட்டி, ஒட்டுமொத்தமாக ஏழுதரமாக்கி, கர்த்தர் தம் பின்னடியார்கள் பெருந்தன்மையுடன் காணப்பட்டு, அவர்களுக்கு விரோதமாய்த் தப்பிதம் செய்தவர்களை ஏழுமுறைகள் மன்னிக்க வேண்டும் என்று கர்த்தர் விரும்புகின்றாரா என்று அப்போஸ்தலராகிய பேதுரு கேட்கின்றார். மன்னிப்பு என்பது நடைமுறையில் எண்ணிக்கை இல்லாமல் - ஏழெழுபது தரமட்டும் அருளப்பட வேண்டும் என்று கர்த்தர் கூறினதைக் கேட்டபோது, பேதுருவும், அப்போஸ்தலர் அனைவரும் எப்படி ஆச்சரியமடைந்திருக்க வேண்டும்.

கர்த்தருடைய ஜனங்களாகிடுபவர்கள், அவரது ஆவியில், அன்பின் ஆவியில் பங்கடைபவர்கள் . . . அந்த ஆவியினால் நிரப்பப்படும் மற்றும் அந்த ஆவியினால் வழிநடத்தப்படும் அளவிற்கேற்ப, மிகவும் தயவுள்ளவர்களாகவும், மிகவும் பெருந்தன்மையுள்ளவர்களாகவும், மிகவும் அன்புள்ளவர்களாகவும் காணப்பட்டு, இதனால் அவர்கள் மனம்வருந்தும் சகோதரனை மன்னிப்பதற்கு விரும்ப மாத்திரம் செய்யாமல், மன்னிப்பதிலும் மகிழ்ச்சியும் கொள்வார்கள் - ஒலிவ கிளையை முதலாவது நீட்டிடுவதிலும், கூடுமானமட்டும் சீர்ப்பொருந்துவதற்கும், இணக்கமடைவதற்குமான வழியினை தடைகளற்றதாக்கிடுவதிலும் மகிழ்ச்சிக்கொள்வார்கள் என்பதுதான் கருத்தாகும். முழுக்கப் பெருமையினாலும், பொறாமையினாலும், துர்க்குணத்தினாலும், சுயநலத்தின் ஆவி மற்றும் பாவத்தின் மற்ற அம்சங்களினாலும் நிரம்பின நிலைமையிலும், மேலே தயவு மற்றும் கருணையின் மேல்பூச்சு மாத்திரம் காணப்படும் நிலைமையிலுமுள்ள இருதயங்களிலிருந்து, மன்னிப்பின் ஆவியினை மொண்டு எடுக்கையில், அதனோடுகூடக் கொஞ்சம் கசப்பு மற்றும் பகைமையும் கூடவே வரும் மற்றும் இந்தக் கலப்பு மன்னிப்பைக்கூட, மறுரூபப்படாத இருதயத்தினால் மிகவும் தாராளமாய்க் கொடுத்திட முடியாது. ஆனால் துர்க்குணம், பகைமை மற்றும் பொறாமை அற்ற நிலைமையிலும், சகோதர சிநேகம், சாந்தம், பொறுமை, தயவு, சகிப்புத்தன்மை, அன்பு ஆகியவற்றினால் நிரம்பின நிலைமையிலுமுள்ள இருதயத்திலிருந்து, நம்மால் ஒவ்வொரு முறையும் மற்றும் தேவைப்படும் போதெல்லாம் பாத்திரத்தில் மன்னிப்பினை மொண்டு எடுக்க முடியும் மற்றும் அது பொல்லாப்பு, கசப்பு, ஏளனம் முதலிய கலப்பு இல்லாததும், மாறாக தூய்மையான, கலப்பிடமில்லாத, தயவுள்ள, அன்புள்ளதுமான மன்னிப்பாயிருக்கும்.

நம்முடைய பூமிக்குரிய மண்பாண்டங்களில் நாம் பெற்றிருக்கின்ற இந்தப் பரிசுத்த ஆவியானது, ஆரம்பம் துவங்கியே அங்குப் பொங்கி வழிந்திடவில்லை; மாறாக அது மேலோட்டமாக மாத்திரம், வளர்த்தி பெருக்கிடுவதற்கான துவக்கமாக மாத்திரம் இருந்தது என்பதை நாம் நினைவில்கொள்ள வேண்டும். படிப்படியாகப் பரிசுத்த ஆவியானது நம் இருதயங்களில் பெருகி வழிந்தபோது, அது தவறான ஆவியினை வெளியேற்றினது; ஆகையால் தங்கள் இருதயங்களிலிருந்து திரும்பத்திரும்ப மன்னிப்பினை, அதுவும் தீமையின் கலப்படம் இல்லாத மன்னிப்பினைப் பாத்திரத்தில் மொண்டுகொள்ள முடிகிறவர்கள்... அவர்கள் இயேசுவோடுகூட இருந்தவர்கள் மற்றும் அவரால் போதிக்கப்பட்டவர்கள் என்பதற்கும், அவரது ஆவியினை ஆழமாய்ப் பருகியிருக்கின்றனர் என்பதற்கும், அவர்கள் துர்க்குணம் எனும் புளித்தமாவு நீங்க சுத்தீகரிக்கப்பட்டவர்களாய், சத்தியத்தினால் பரிசுத்தமாக்கப்பட்டவர்களாய், ஒளியிலுள்ள பரிசுத்தவான்களின் சுதந்தரத்திற்குத் தகுதியடைந்தவர்களாய் இருக்கின்றனர் என்பதற்கும் சான்று பகருகின்றனர். கிருபையிலுள்ள இந்த வளர்ச்சியானது, நம்முடைய அர்ப்பணிப்பின் வாக்குறுதியோடு அதன் துவக்கத்தினை உறுதியாய்க் கொண்டிருந்தும், இது ஒரு படிப்படியான வேலை என்றும், இதற்கு

நற்கிரியைகளைத் தொடர்ந்து செய்வதும், பழைய சுபாவமும், அதன் தீயப் பண்புகள் தொடர்ந்து சாகடிக்கப்படுவதும், கொல்லப்படுவதும் அவசியம் என்றும், இப்படியாய் நாம் தினந்தோறும் வளர வேண்டியதான சத்திய ஆவியினுடைய மறுரூபமாக்கும் வல்லமையின் கீழ் நம் மனங்கள் புதுப்பிக்கப்படும் என்றும் நாம் நினைவில்கொள்ள வேண்டும்.

நமது கர்த்தரினால் குறிப்பிடப்பட்டுள்ளதான "ஏழெழுபதுதரம்" என்பது ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கையைக் குறிப்பதாக நாம் புரிந்துகொள்ளக்கூடாது, மாறாக எண்ணற்ற அளவைக் குறிப்பதாகவே - அதாவது கர்த்தருடைய ஆவியை உடையவர்கள் எத்தனைதரமும் தீமை செய்கிறவர்களின் மனம்வருந்துதலைக் காண்பதில் மகிழ்ச்சிக்கொண்டு, அவர்களுக்கு மன்னிப்பை அருளிட மகிழ்ச்சியாய் இருப்பார்கள் என்பதாகவே புரிந்துகொள்ளப்பட வேண்டும். ஆனால் அதற்கென்று மன்னிப்புடன் எந்தத் தண்டனைகளும் காணப்படாது என்று அர்த்தப்படாது; உதாரணத்திற்குக் குழந்தையைப் பெற்றோர் கையாளுகையில், குழந்தையினுடைய ஒழுக்கக்கேடானது மன்னிக்கப்படலாம் மற்றும் குழந்தையினுடைய கீழ்ப்படியாமை அல்லது தவறான நடத்தை நிமித்தமான பெற்றோரின் கோபமானது உடனடியே கடந்துபோய்விடலாம் . . . எனினும் அவ்வப்போது குற்றம் புரிந்துள்ள பிள்ளைக்குச் சில தண்டனைக்கொடுப்பதும் சரியே. பெற்றோருடைய வெறுப்பானது மன்னிப்பை அருளப்பண்ணவிடவில்லை என்பதாக இல்லாமல், மாறாக பெற்றோருடைய விசேஷித்த கடமையானது, குணலட்சணம் உருவாகிடும் விஷயத்தில் குழந்தைக்கு உதவியாக இருக்கும் பாடம் ஒன்றினைப் புகட்டிட அவசியமாக்கியுள்ளது என்று ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் பிள்ளையானவன் தெளிவாய்ப் புரிந்துகொள்ள வேண்டும். அம்மாதிரியான தருணங்களில் பெற்றோரின் அன்பானது தயவுள்ளதாகவும், பரிவுள்ளதாகவும் இருந்து, குழந்தைக்குப் பிரயோஜனமாயிருக்கும் விதத்தில் மாத்திரமே - அதாவது கோபத்தினால் இல்லாமல் நீதியைப் படிப்பிக்குதலுக்கு மாத்திரம் தண்டனை வழங்குதல் காணப்படத்தக்கதாகக் கவனமுள்ளதாகவும் இருத்தல் வேண்டும். எனினும் இப்படியான திருத்தங்கள் செய்வது என்பது பெற்றோர்கள் மற்றும் பாதுகாவலர்களுக்கடுத்த காரியம் மாத்திரமே ஒழிய, கர்த்தருடைய குடும்பத்திலுள்ள சகோதரர்கள் மற்றும் சகோதரிகள் விஷயத்தில் அல்ல; சகோதர சகோதரிகள் ஒருவரையொருவர் நியாயந்தீர்க்கவோ, தண்டிக்கவோ கட்டளையிடப்படாமல், ஒருவருக்கொருவர் உதவிடும்படியாகக் கட்டளையிடப்பட்டுள்ளனர் - "காலத்துக்கு முன்னே யாதொன்றைக்குறித்தும் தீர்ப்புச் சொல்லாதிருங்கள்" என்றும், "பிரியமானவர்களே, பழிவாங்குதல் எனக்குரியது, நானே பதிற்செய்வேன், என்று கர்த்தர் சொல்லுகிறார் என்று எழுதியிருக்கிறபடியால், நீங்கள் பழிவாங்காமல், கோபாக்கினைக்கு இடங்கொடுங்கள்" என்ற இவர்களுக்கான ஆண்டவருடைய வார்த்தைகள் மிக உறுதியாகவும், அழுத்தமாகவும் காணப்படுகின்றது (உரோமர் 12:19).

தேவனுடைய குடும்பத்தில் பரிசுத்தவான்களாகிய, பரிசுத்த ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்டுள்ளவர்கள் அனைவரும் சகோதர சகோதரிகளாக அடையாளம் கண்டுகொள்ளப்பட வேண்டும் மற்றும் இப்படியாகவே நடத்தவும்பட வேண்டும். பழைய சிருஷ்டியல்ல, புதுச்சிருஷ்டியே கிறிஸ்துவுக்குள் சகோதரன் ஆவார்; ஆகையால் நாம் புதுச்சிருஷ்டியை அன்புகூர்ந்திடுவோம் மற்றும் சில விதங்களில் பழைய சிருஷ்டியை மிகவும் விரும்பாதவர்களாய் இருப்போம் - அதாவது அழிந்துபோகும் மாம்சத்தினுடைய பலவீனங்கள் மற்றும் அபூரணங்கள் குறித்து அனைவரும் உணர்ந்துகொள்கையிலும், புதுச்சிருஷ்டிகளெனத் திவ்விய சாயலில் வளர்ந்திடும் அளவிற்கேற்பவும், அனைவருமே தங்கள் சொந்த மாம்சத்தில் காணப்படும் குறிப்பிட்ட குறைவுகளின் நிமித்தம், அதன்மீது மரியாதைக் குறைவு கொண்டிருப்போம். ஆகையால் நமக்கு விரோதமாய் ஒரு சகோதரன் எதையேனும் செய்வாரெனில்... அந்தத் தவறான செய்கையானது கிறிஸ்துவுக்குள்ளான புதுச்சிருஷ்டியாகிய சகோதரனால் செய்யப்படவில்லை, மாறாக அவனது அழிவுக்குரிய மாம்சமே அத்தருணத்தில் அதிகாரத்தினைக்

கைப்பற்றி, ஒரு சில விதங்களில் அவனைக் குருடாக்கிவிட்டது என்பதே நம் முதலாம் எண்ணமாய் இருக்க வேண்டும். ஆகையால் சகோதரனிடம் கோபங்கொள்வதற்குப் பதிலாக, நாம் அனுதாபங்கொள்ள வேண்டும் மற்றும் நம் இருதயங்களானது அவனுக்காய்ப் பரிவுகொள்ள வேண்டும் மற்றும் அவனுக்கு நன்மை செய்திடவும், அவனது பூமிக்குரிய பாண்டத்தினுடைய பெலவீனங்களை அவன் மேற்கொள்வதற்கு அவனுக்கு நாம் உதவிடவும் வேண்டும் என்று நம் விருப்பமானது பலமாய்க் காணப்பட வேண்டும்.

இந்தக் கருத்தின் அடிப்படையிலேயே . . . குற்றம் யாருக்குப் புரியப்பட்டிருக்கின்றதோ அவர் யாரிடமும் எதையும் சொல்லிடாமல், அமைதலாய்த் தனக்குக் குற்றம்புரிந்து கொண்டிருப்பவரிடத்திற்குச் சென்று, அன்பாய்ச் சம்பாஷணை மேற்கொண்டு, சம்பந்தப்பட்ட காரியத்தின் நிறை, குறைகளைச் சுட்டிக்காண்பித்திட நாடிட வேண்டும் என்பதும், கூடுமானால் சகோதரனை ஐக்கியத்திற்குள்ளும், நீதியான நிலைக்குள்ளும், கர்த்தருடன் இசைவான நிலைக்குள்ளும் கொண்டு வந்து ஆதாயப்படுத்திட வேண்டும் என்பதும் சரியான நடவடிக்கையாய் இருக்குமென்று நமது கர்த்தர் தெரிவிக்கின்றார். ஒருவேளை இதில் பயன் உண்டாகவில்லையெனில், அடுத்தக் கட்டமாக எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கையும் இரகசியமான ஒன்றேயாகும் - அதாவது நல் இருதயமுடையவர்கள் என்றும், அதிகமான அனுபவம் பெற்றவர்கள் என்றும் கருதப்படும் இரண்டு அல்லது மூன்று சகோதரர்களை அழைத்துச்சென்று, அதுவும் அவர்கள் மனங்களில் (யார் மீதும்) தவறான அபிப்பிராயங்களை (முன்கூட்டியே) ஏற்படுத்திட நாம் முற்படாமல், அவர்கள் வழக்கைக் கேட்கவும், யார் தவறு செய்துள்ளனர் என்று ஆலோசனை வழங்கவும் கேட்டுக்கொள்ளப்பட வேண்டும். இருவரில் தவறு செய்துள்ளவராகக் காணப்படும் எந்தச் சகோதரனும், வேதவாக்கியங்கள் மற்றும் அன்பின் ஆவியினுடைய அடிப்படையில் சம்பாஷணைப்பண்ணிடும் தனது சக பரிசுத்தவானால் தெளிவுப்படுத்தப்பட வேண்டும்; ஆனாலும் ஒருவேளை இருவருக்கும் இடையில் கருத்து வேறுபாடானது தொடர்ந்து நிலைத்திருந்ததானால் மற்றும் இசைவான நிலைக்குள் கொண்டுவரப்பட முடியாமல் இருக்குமானால், கடைசி ஒரே பிரயாசமாகக் காரியமானது அர்ப்பணிக்கப்பட்டவர்களாகிய சபையார் முன்னிலையில் கொண்டுவரப்பட வேண்டும் மற்றும் சபையாரால் விசாரிக்கப்பட்ட பிற்பாடு, சபை வழங்கியுள்ள தீர்மானமானது இறுதியான தீர்மானமாகக் கருதப்பட்டு, அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும். ஒருவேளை இக்காரியத்தில் தான் நீதியான தீர்ப்பினைப் பெற்றுள்ளாரா என இருவரில் யாரேனும் சந்தேகித்தால்... ஒருவேளை சகோதர சகோதரிகள் தங்கள் கணிப்பின்படியான தீர்ப்பைக் கொடுத்திருந்தப்போதிலும், ஒருவேளை இவர் அதிகப்படியான தற்பெருமையின் காரணமாய்... தன் பக்கவாதமே சரி என்று எண்ணம் கொண்டிருந்தாலும்... இவர் கர்த்தருடைய ஏற்பாடுகளுக்கு முழுமையாகவும், இருதயப்பூர்வமாகவும் இணங்குவதன் மூலம் தனக்கு நிச்சயமாய் ஆசீர்வாதம் ஒன்று கிடைக்கப்பெறும் என்ற எண்ணத்தினைக்கொண்டு, தன்னை ஆறுதல்படுத்திக்கொள்ளலாம்.

இப்படியாகச் சபையாருடைய தீர்மானத்திற்குக் கீழ்ப்படியும்படிக்குத் தன்னைத் தாழ்த்திக்கொள்ளும் யார் ஒருவரும் ஆசீர்வாதத்தினைப் பெற்றுக்கொள்வார் மற்றும் இது விஷயத்திலுள்ள சபையாருடைய தீர்மானமானது ஆவியினால் வழிநடத்தப்பட்டிருக்கும் என்றும், சத்தியமும், நீதியும் ஜெயங்கொள்ளும் என்றும் அவர் எண்ணலாம் என்று நாம் புரிந்துகொள்கின்றோம். ஆனால் கர்த்தருடைய ஜனங்கள் மத்தியில் இது உயர்வான தீர்ப்பு என்றும், சகோதரனால் எவ்வளவுதான் தீமை இழைக்கப்பட்டாலும், அவர் சகோதரனோடுகூட உலகத்தின் நீதிமன்றங்களுக்குச் சென்றிடக்கூடாது என்றும் நாம் மறந்துவிடாமல் இருப்போமாக; ஒருவேளை அவனிடத்தில் மன்னிக்கும் ஆவி இருக்குமானால், அவன் கர்த்தர் வழிகாட்டுகிறபடி காரியத்தினை நிச்சயமாய் அமைதலாய் விட்டுவிடுபவனாய் இருப்பான், அதுவும் எவ்வகையான இரக்கமற்ற அல்லது தயவற்ற உணர்வுகளை

உள்ளுக்குள் வைத்துக்கொள்ளாமலேயே விட்டுவிடுபவனாய் இருப்பான். இதுவே பரிசுத்தத்தின் ஆவி, அன்பின் ஆவி குடியிருப்பதற்கான விளைவாய் இருக்கும்.

மன்னிக்கும் விஷயத்தில் விசுவாசியான கணவன்கள், அவிசுவாசியான மனைவிகளைக் கையாளுவதை அல்லது விசுவாசியான மனைவிகள், அவிசுவாசியான கணவன்களைக் கையாளுவதை அல்லது விசுவாசியான நபர் தொழில் விஷயங்களில் அவிசுவாசியான நபரைக் கையாளுவதைக்குறித்துப் பார்த்திடலாம்; அதே அன்பின், தயவின், மன்னிப்பின் ஆவிதான் இந்த அனைவரின் விஷயத்திலும் செயல்படும், ஆனாலும் ஒரே மாதிரியல்ல. விசுவாசி, அவிசுவாசியினிடத்தில் தயவோடு காணப்பட வேண்டும் - அவிசுவாசியினிடத்தில் தயவினை எதிர்ப்பார்ப்பதைவிட, அவனே அதிகப்படியான தயவை வெளிப்படுத்துகிறவனாய்க் காணப்பட வேண்டும்; ஏனெனில் அவிசுவாசியானவன் ஒருபோதும் பெற்றிராத பாடங்களையும், அனுபவங்களையும் விசுவாசியானவன் கிறிஸ்துவின் பள்ளிக்கூடத்தில் பெற்றுக்கொள்கின்றவனாய் இருக்கின்றான்; அவிசுவாசியானவன் என்னவென்று அறிந்திடாத புதிய மனதினை விசுவாசியானவனே பெற்றவனாய் இருக்கின்றான். ஆகையால் விசுவாசியானவன் தன் நடவடிக்கைகளில் நீதியோடு காணப்படுவது மாத்திரமல்லாமல், கூடவே அவனால் கூடுகிறமட்டும் அவன் கருணை, தயவு பாராட்டுகிறவனாகவும், மன்னிக்கிறவனாகவும், மிகவும் எதிர்ப்பார்க்காதவனாகவும் காணப்பட வேண்டும்.

எனினும் ஒருவேளை அவிசுவாசியான கூட்டாளி, ஏமாற்றிடுவதற்கு முற்பட்டால், விசுவாசியான கூட்டாளியோ அவனிடத்தில் தயவின் ஆவியைக் கொண்டிருந்து, ஒருவேளை ஏமாற்றும் வேலை துணிகரமாய்ச் செய்யப்பட்டதாகத் தெரிகையில், குற்றவாளியை இவர் உலகத்தின் நீதிமன்றங்களிடத்தில் ஒப்புக்கொடுத்துவிட வேண்டும்; அதுவும் இதைக் கோபத்தின் அல்லது துர்க்குணத்தின் அல்லது பகைமையின் ஆவியில் செய்யாமல், மாறாக கிறிஸ்தவனின் பார்வைக்கு உலகத்தின் சட்டங்களும், ஏற்பாடுகளும் நியாயமானதாகத் தோன்றுவதற்கு ஏற்ப, தீமை செய்பவர்களை ஒழித்துக்கட்டுகிற விஷயத்தில் சமுதாயத்திற்கான தனது கடமையை நிறைவேற்றுதல் எனும் விதத்தில் செய்கிறவனாய் இருப்பான். ஒருவேளை விசுவாசியானவன் குற்றம் புரிந்தவனை முழுமையாய் மன்னித்தும், குற்றவாளியினை உலக நீதிமன்றங்களினுடைய நீதிபதிகளிடத்தில் ஒப்புக்கொடுத்திடுவதற்கு அவசியமாக்கிடாத அளவு குற்றத்திற்கான பொறுப்புக் குறைவாய் இருப்பதாகத் தெரியும் சந்தர்ப்பங்கள் உள்ளன என்று விசுவாசியானவன் எண்ணுவானானால், குற்றம் புரிந்தவனுடன், அதாவது தனது நம்பிக்கைக்குப் பாத்திரமற்ற அவனுடன் மேலும் எவ்விதமான தொழிலும் செய்யக்கூடாது என்று முடிவெடுப்பதும் அவனது கடமையாய் இருக்கின்றது என்று எண்ணிட வேண்டும். இப்படிச் செய்வது என்பது மன்னிப்பில் குறைவு ஏற்பட்டுள்ளதைக் குறிக்காமல், மாறாக நியாயமான மற்றும் பாராட்டத்தகுந்த விவேகமாக மாத்திரம் இருந்திடும்.

தேவனுடைய அர்ப்பணிக்கப்பட்ட ஜனங்கள் அவிசுவாசிகளுடன் அந்நிய நுகத்தில் பிணைக்கப்படக்கூடாது என்று அப்போஸ்தலனால் எச்சரிக்கப்பட்டிருப்பது உண்மையே மற்றும் இது திருமண விஷயத்தில் மாத்திரமல்லாமல், தொழில் கூட்டணிகளுக்கும் பொருந்தும். இதுபோலவே அவிசுவாசியான கணவனோ அல்லது மனைவியோ, விசுவாசியிடமிருந்து பிரிந்து செல்ல முடிவெடுத்தால் . . . இதை விசுவாசியானவன் நல்வாய்ப்பாகவும், அந்நிய நுகத்தில் பிணைக்கப்பட்டிருப்பதிலிருந்துள்ள தனக்கான விடுதலையாகவும் முடிவு செய்துகொள்ளலாம்; அப்போஸ்தலர் சொல்வது போன்று "ஆகிலும் அவிசுவாசி பிரிந்துபோனால்," அவன் விரும்பும்பட்சத்தில் விவாக ஒப்பந்தத்தை இரத்துச் செய்திட அவனை அனுமதித்திடுங்கள்.

---

R5353

# விவாகம் கனமுள்ளதாகும்

மற்ற ஜனங்கள் எதையெல்லாம் சொன்னாலும் அல்லது செய்தாலும் சரி, கர்த்தருடைய ஜனங்களிலுள்ள ஒவ்வொருவனும் காரியங்களை நிதானிக்கும் விஷயத்தில் வேதாகமமாகிய தேவனுடைய வார்த்தையிலுள்ள எழுத்துக்களினாலும், ஆவியினாலும் வழிக்காட்டப்பட வேண்டும். "விவாகம் யாவருக்குள்ளும் கனமுள்ளதாயும், விவாகமஞ்சம் அசுசிப்படாததாயுமிருப்பதாக" என்று வேதம் தெரிவிக்கின்றதாய் இருக்கின்றது (எபிரெயர் 13:4). கர்த்தருடைய ஜனங்களில் யார் திவ்விய ஊழியத்திற்கென்று தங்களை முழுமையாய்க் கொடுத்துவிட விரும்புவார்களோ, அவர்கள் திருமணமாகாமல் இருந்துவிடுவதன் வாயிலாய்ச் சந்தேகத்திற்கிடமின்றி சந்தோஷமாகத் தங்கள் பலியினை நிறைவேற்றி முடிக்க முடிகின்றவர்களாக இருப்பார்களெனப் பரிசுத்த பவுல் அடிகளார் பரிந்துரைத்துள்ளார். தன்னுடைய இக்கருத்திற்கான காரணத்தையும் அவர் தெரிவிக்கின்றார்; ஆனாலும் திருமணமாகும் நிலை என்பது பரிசுத்தமற்றது என்றோ, தூய்மையற்றது என்றோ, ஏதேனும் விதத்தில் தேவ பிரமாணத்திற்கு முரணானது என்றோ அவர் கூறிடவில்லை. திருமணமான புருஷன் இயல்பாகவே தன் மனைவியைப் பிரியப்படுத்திட நாடுவான் என்றும், திருமணமான ஸ்திரீ தன் கணவனை இயல்பாகவே பிரியப்படுத்திட நாடுவாள் என்றும், இது முறையானது என்றும் மாத்திரமே கூறியுள்ளார்.

ஒருவனைச் சரீரத்திலும், ஆவியிலும் தேவனுக்கு ஊழியம்புரிய வைத்திடுவதற்கு ஏதுவான ஒருமுகமான நோக்கத்தினின்று ஏறக்குறைய திசைத்திருப்புகின்றதாய், இந்தத் திருமணமான நிலைமைக் காணப்படும் (1 கொரிந்தியர் 7:32-35). துணைவியைப் பராமரிப்பதிலும், துணைவியாருக்குச் செய்ய வேண்டிய கடமைகளைச் செய்வதிலும் ஈடுபட்டிருக்கையில் தன்னால் ஒருவேளை செய்ய முடிவதைக் காட்டிலும், தனித்திருக்கையில், மணமாகாத நிலையில் இருக்கையில் தன்னால் அதிக ஊழியங்களை நிறைவேற்ற முடிகின்றது என்றும், மணமாகாத நிலைமையே அனுகூலமாய் உள்ளது என்றும் தான் கண்டறிந்ததாகப் பரிசுத்த பவுல் அடிகளார் சபைக்கு நினைப்பூட்டுகின்றார்.

ஆனால் கர்த்தருக்குள்ளான சகோதரர்கள் மற்றும் சகோதரிகள் ஒருவேளை தங்கள் கணிப்பில், தங்களுக்குத் திருமணம் அவசியம் என்று காண்பார்களானால் அல்லது அதை விரும்புவார்களானால் - ஒருவேளை திருமணமான நிலைமையிலேயே தங்கள் அர்ப்பணிப்பின் வாக்குறுதிகளை நன்கு நிறைவேற்ற முடியும் என்று நம்புவார்களானால்... அவர்களுக்குத் தடை விதிக்கும் எந்தத் தேவ பிரமாணமும் இல்லையெனப் பரிசுத்த பவுல் அடிகளார் தெளிவாய்ச் சுட்டிக்காட்டுகின்றார்.

இதை நாம் இங்குக் குறிப்பிடுவதற்கான காரணம் என்னவெனில்... சில சந்தர்ப்பங்களில் திருமணமாகாதவர்களுக்கு ஆலோசனை வழங்கிடும் சகோதர சகோதரிகள், எழுதப்பட்டவைகளுக்கு மிஞ்சிபோய், திருமணம் செய்துகொள்வது என்பது நமது பரம அழைப்பிற்கான பரிசினை இழக்கச் செய்திடும் என்று கூறுவதன் மூலம், கர்த்தர் ஒருபோதும் சொல்லிடாத பாரங்களை, ஆலோசனைக் கேட்பவர்கள் மீது சுமத்திவிடுகின்றனர். நல் நோக்கங்கள் என்று கூறி இப்படியான நடத்தைகளை நியாயப்படுத்திட முடியாது.

சமீபத்தில் சிறு குழந்தை ஒன்றைப் பெற்றிருக்கிறவர்களும், அக்குழந்தையை மிகவும் நேசிக்கிறவர்களுமான ஓர் அருமையான தம்பதிகளிடமிருந்துகூட நாம் சில காரியங்களைத் தகவலாக அறிந்தோம். சீக்கிரத்தில் சம்பவிக்க இருக்குமென நாம் எதிர்ப்பார்த்திருக்கும் மாபெரும் மாற்றங்களுடைய கண்ணோட்டத்தில் சில சகோதரிகள் அத்தாயாரிடம்... ஒரு தாயாக இருப்பது என்பது கனவீனமாய்க் கருதப்பட வேண்டும் என்று கூறிய காரியமானது அத்தாயாரை அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளது.

இந்த அருமையான சகோதரிகள் தவறு செய்துள்ளனர் என்று நாம் நம்புகின்றோம். இவர்கள் தங்களுக்காகச் சிந்தித்துக்கொள்வதற்கும், கர்த்தருடைய சித்தம் குறித்த தங்களது சிறந்த கணிப்புகளுக்கு ஏற்ப, தங்கள் ஜீவியத்தின் காரியங்களை வனைந்துகொள்வதற்கும் உரிமை பெற்றிருக்கின்றார்கள் என்பது உண்மைதான். ஆனாலும் இது விஷயத்தில் மற்றவர்கள் வேறுபட்ட கண்ணோட்டம் கொண்டிருப்பதினால், அவர்களைக் கண்டனம் பண்ணிடுவதற்கு இச்சகோதரிகளுக்கு உரிமை இல்லை. ஒவ்வொரு ஊழியக்காரனும் நின்றாலும், விழுந்தாலும், அவனுடைய எஜமானுக்கே அவன் உத்தரவாதி. தகப்பன் ஸ்தானத்தையோ அல்லது தாய்மையையோ வேதாகமம் அவமதித்து ஏதும் கூறுகிறதில்லை; இதற்கு மாறாகவே கூறுகின்றது.

ஒருவேளை அப்போஸ்தலன் கருத்துரைத்திருப்பது போன்று கர்த்தருடைய ஜனங்களில் சிலர் துறவற ஜீவியம் ஜீவிப்பதற்குப் பரஸ்பரமாய் முடிவெடுப்பார்களானால், அது அவர்களுடைய சொந்தக் காரியமாகும். தேவனுக்கடுத்த ஊழியங்களில் செலவிடத்தக்கதாக அதிகம் வாய்ப்புகளும், ஆற்றல்களும், வழிவகைகளும் தங்களுக்குக் கிடைக்கத்தக்கதாக, கர்த்தருக்காக அண்ணகர்களாய் வாழ்வதற்கு அவர்கள் இப்படியாய் முடிவெடுப்பார்களானால், இது அவர்களது தெரிவின்/விருப்பத்தின்படியான அவர்களது பலியாகும் மற்றும் கர்த்தர் நலமென்று காணும் பலன்களுக்காய், அவர்கள் கர்த்தரை நோக்கிப்பார்க்க வேண்டும். அவர்களது தெரிவு இதுவாக இருந்தால், அவர்கள் இதற்கான பலனை அடைவார்கள்; நாமோ மற்றவர்களுக்கும்கூட அவர்களுக்கான விருப்பத்தெரிவு இருக்கின்றது என்றும், ஒருவேளை அவர்கள் சரியாய்ச் சிந்தித்து வேறுவழியைத் தெரிவு செய்வார்களானால், அவர்களை நாம் கண்டனம்பண்ணக்கூடாது என்றும், அவர்களது சமூக உரிமைகள் மற்றும் சிலாக்கியங்கள் விஷயத்தில் குறுக்கிடுவதற்கு நமக்கு உரிமை இருக்கின்றதென நாம் எண்ணிடக்கூடாது என்றும் நினைவில்கொள்ள வேண்டும்.

சகோதர சகோதரிகளைக் கையாளும் விஷயத்திலும், உலகத்தைக் கையாளும் விஷயத்திலும், பொன்னான பிரமாணமானது நமக்கு மிகவும் உதவிகரமாய் இருக்கும். மற்றவர்கள் நமக்கு என்ன செய்ய வேண்டும் என்று நாம் விரும்புவோமோ, அதையே நாம் மற்றவர்களுக்கும் செய்திட வேண்டும். நமக்குத் தகுந்தது என்று நாம் கருதிடும் அதே சுயாதீனங்களை நாம் மற்றவர்களுக்கும் அருளிட வேண்டும்.

இது விஷயமான வேதாகமப் பாடங்களினுடைய ஆறாம் தொகுதியின், ஏழாம் அத்தியாயத்திற்கு நம் வாசகர்களில் சிலர் போதுமான கவனம் கொடுக்கவில்லை என்று நாம் அஞ்சுகின்றோம்.

---

R5900

## விவாகம் மீதான மேய்ப்பரது சில ஆலோசனைகள்

நமது ஆதிபெற்றோராகிய ஆதாம் மற்றும் ஏவாளை ஒன்றிணைத்து, எளிமையான முறையில் தேவன்தாமே முதலாம் திருமண நிகழ்ச்சியினை நடத்திவைத்தார். தாயாகிய ஏவாள் ஏற்கெனவே ஆதாமின் எலும்பின் எலும்பாகவும், மாம்சத்தின் மாம்சமாக இருந்தபோதிலும், அவர்கள் இருவரும் தனித்தனி நபர்களாகத் தேவனாலேயே பிரித்துவைக்கப்பட்டிருந்தனர். அவர்கள் சரீரத்தில் இருவராக இருந்தனர், ஆனால் இருதயத்திலோ ஒன்றாக இருந்தனர்; ஏனெனில் முழு மனுக்குலமும் இந்த ஒரு ஜோடியிடமிருந்து பிறப்பிக்கப்பட வேண்டும் என்று தேவன் நோக்கம்கொண்டிருந்தார்; இப்படி இருக்கையில் பாவமானது உட்பிரவேசித்து, முழு மனுஷஜாதியையும் உட்படுத்திக் காணப்படுகையில், முழு மனுக்குலத்தையும் மீட்பதற்கு ஒரு நபருடைய மரணம் போதுமானதாய்க் காணப்படும். "மனுஷனால்

மரணம் உண்டானபடியால், மனுஷனால் மரித்தோரின் உயிர்த்தெழுதலும் உண்டாயிற்று" (1 கொரிந்தியர் 15:21; உரோமர் 5:12, 19).

உலகத்தைச் சீர்ப்பொருந்தப்பண்ணுவதோடு தேவனுடைய மகா திட்டமானது நிறைவு பெறுகையில், இந்தச் சீர்ப்பொருந்துதலானது ஸ்திரீயானவள் ஆதாமிடமிருந்து பிரிக்கப்படுவதற்கு முன்பு ஆதாம் இருந்த நிலைமைக்கு மனுக்குலத்தினைக் கொண்டுவந்திடும் என்று வேதாகமம் தெளிவாய்ப் போதிக்கின்றதாய் இருக்கின்றது. ஆகையால் "மறுமையையும் மரித்தோரிலிருந்தெழுந்திருக்குதலையும் அடையப் பாத்திரராக எண்ணப்படுகிறவர்களோ பெண் கொள்வதுமில்லை பெண் கொடுப்பதுமில்லை... தேவதூதருக்கு ஒப்பானவர்களுமாய் இருப்பார்கள்" (லூக்கா 20:35) என்று இயேசு கூறியுள்ளார். வேறு வார்த்தைகளில் சொல்ல வேண்டுமெனில் திரும்பக்கொடுத்தலின் காலங்களில் ஆண்கள் மற்றும் பெண்கள் அனைவரும் தங்களது வேறுபடுத்தும் அம்சங்களை இழந்துபோய், ஆதியில் ஆதாம் இருந்ததுபோன்று மீண்டும் ஆகிடுவார்கள் - அதாவது பூமியானது ஜனங்களினால் நிரப்பப்பட்டிருக்கும் போது, ஒவ்வொருவனும் தன்னில் முழுமையானவனாகக் காணப்படுவான். பூமியானது அளவுக்கு மீறி நிரப்பப்படுவதற்குத் திட்டமிடாமல், மாறாக அதை நிரப்ப மாத்திரமே தேவன் திட்டமிட்டுள்ளார்.

புருஷன் மற்றும் ஸ்திரீயின் ஒன்றிணைதலானது, அவர்களுக்கிடையே உள்ள அன்பின் காரியமாக இருப்பினும், சட்டமானது முன்னேறிவந்து, எதிர்க்காலத்தில் பிரச்சனைகளைத் தவிர்க்கத்தக்கதாகச் சாட்சிகள் முன்னிலையில் இவர்களது ஒன்றிணைதலை அதிகாரப்பூர்வமானதாக்கிட, பொருத்தமான விதிமுறைகளும், சில ஒழுங்குமுறைகளும் அவசியமென வலியுறுத்துகின்றது. ஆகையாலே உரிமம் (licenses) முதலானவைகள் தொடர்புடைய சில திட்டவிவரங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன மற்றும் இவை மிக ஏற்றவை என்றும் நாம் நம்புகின்றோம்.

## விவாகத்திலுள்ள ஒரு விசேஷித்த அர்த்தம்

தேவ வசனத்தைப் பெற்றிருக்கும் கிறிஸ்தவ ஜனங்களாகவும், அந்த வசனத்தைக் குறித்த சில புரிந்துகொள்ளுதலுக்குள் வந்துள்ள வேத மாணவர்களுமாகிய நாம்... விவாகமுறையைத் தேவன் நிறுவினபோது அவர் அதில் கொண்டிருந்த ஒரு விசேஷித்த அர்த்தத்தினை காண்கின்றோம். புருஷன் மற்றும் ஸ்திரீக்கு இடையிலான விவாகமானது, கிறிஸ்து மற்றும் சபைக்கு இடையில் நடைபெறவிருக்கும் ஒன்றிணைதலுக்கான ஓர் அடையாளம் அல்லது மாதிரியாகும்; மற்றும் இப்படியாக இருக்கும்படிக்குத் தேவன் ஏற்படுத்தியுள்ளார். விவாகத்தினை ஓர் அடையாளமெனக் குறிப்பிட்டவராக அப்போஸ்தலன் தொடர்ந்து, கிறிஸ்து எப்படிச் சபையை அன்புகூர்ந்து, சபைக்காய்த் தம்மையே கொடுத்தாரோ, அப்படிப்போலவே புருஷர்களும் தங்கள் மனைவிகளைத் தங்களது சொந்தச் சரீரமாக பாவித்து, அன்புகூர வேண்டும் என்று கூறினார் (எபேசியர் 5:25-32).

ஒரு புருஷன் தனக்கு என்ன செய்திடுவானோ அதைத் தன் மனைவிக்கும் செய்திட வேண்டும் என்பது எத்துணை மகா அன்பாகும்! இப்படியே கிறிஸ்துவும் எல்லாவற்றையும் தம் சரீரமாகிய சபைக்காகச் செய்திட்டார். இதைக்காட்டிலும் அதிகமாகவே அவர் செய்திட்டார் - அவர் நமக்காய்த் தம் ஜீவனையே கொடுத்திட்டார். இது புருஷன்மார்களும் தங்கள் மனைவிகளுக்காய்த் தங்கள் ஜீவியங்களைக் கொடுத்திட வேண்டும்; மேலும் அவளுக்கு உணவு, உடைகள் கொடுப்பது மாத்திரமல்லாமல், அவளது மனம் மற்றும் ஒழுக்கம் சார்ந்த விஷயங்களுடைய நலனுக்கடுத்தவைகளுக்கும் கவனம் செலுத்திட வேண்டும் என்றும் சுட்டிக்காட்டுகின்றதாயிருக்கின்றது. இவை அனைத்தும் புருஷனால் பார்க்கப்பட வேண்டும் மற்றும் ஒரு நல்லப் புருஷன் தன் மனைவியானவள் நன்கு கவனிக்கப்படுகிறாளா என்று

பார்த்துக்கொள்ள வேண்டும், அதுவும் இது - தேவைப்படும் பட்சத்தில் அவனுக்கானவைகளில் சிலவற்றை அவன் தியாகம் செய்தும், அவனால் நிறைவேற்றப்படவும் வேண்டும்.

இப்பொழுது மறுபக்கத்திற்கு வருகையில், சபையானவள் எப்படிக் கிறிஸ்துவினிடத்தில் பயபக்திக்கொண்டிருக்கிறாளோ, அப்படிப்போலவே மனைவிகளும் தங்கள் புருஷன்மார்களிடத்தில் பயபக்திக்கொண்டிருக்கும்படிக்கு அப்போஸ்தலன் கூறுகின்றார். எந்தளவிற்கு இந்தத் தெய்வீகப் பாடத்திலுள்ள கருத்தினை மனுக்குலமானது கிரகித்துக்கொண்டுள்ளதோ, அந்தளவின்படியே அவர்களால் ஜீவியத்திலிருந்து சிறந்த நன்மைகளை எவ்வாறு பெற்றுக்கொள்வது என்பதைப் புரிந்துகொள்ள முடிகிறவர்களாக இருப்பார்கள். திருமண விஷயத்தில் கர்த்தருடைய ஏற்பாடுகளை கவனமாய்க் கைக்கொள்பவர்கள் திருமண உறவிலிருந்து சிறந்த நன்மைகளை அடைபவர்களாய் இருப்பார்கள். அவ்வப்போது தன் சொந்த விருப்பங்களையும் புறக்கணித்தவனாய் தன் மனைவியை அன்புகூரும் புருஷன் மிகுதியான பாராட்டிற்கு ஏதுவானவனாக இருப்பான் மற்றும் தன் கணவனுடைய நலனுக்கடுத்த காரியங்களுக்காக தன்னால் செய்ய முடிந்தவைகளைச் செய்பவளும், புருஷனுக்கு முழுவதும் சமர்ப்பிக்கப்பட்டவளாக இருப்பவளுமாகிய மனைவியானவள் - கர்த்தருக்குச் சபையால் செய்யப்படும் காரியங்களுக்கு உதாரணமாய் இருப்பாள்.

இப்படியாக நாம் கூறுகையில், "இப்படியிருக்க, விவாகம் பண்ணுகிறவனும் நன்மைசெய்கிறான்; விவாகம் பண்ணாதிருக்கிறவனும் அதிக நன்மை செய்கிறான்" (1 கொரிந்தியர் 7:38) என்ற அப்போஸ்தலனின் வார்த்தைகளுக்கு முரணாக விவாதிக்க நாம் முற்படவில்லை. இவ்வார்த்தைகளை அப்போஸ்தலன் உலகத்தாரிடம் பேசாமல், மாறாக தங்கள் ஜீவியங்களைக் கர்த்தருக்கு அர்ப்பணம்பண்ணியுள்ளவர்களுக்கே பேசுகின்றார். ஒருவேளை இவர்களது விவாகமானது, கர்த்தருக்கான இவர்களது அர்ப்பணிப்பிற்கு இடையூறாக இல்லாதிருக்குமானால் இவர்கள் விவாகம் செய்திடலாம். ஒருவேளை இவர்களது அர்ப்பணத்திற்கு இடையூறாகக் காணப்படும் பட்சத்தில் இவர்கள் விவாகம்பண்ணிக்கொள்ளுதல் என்பது இவர்களது ஜீவியங்களை அபாயத்திற்குள்ளாக்கிடுவதாய் இருக்கும் (அடமானம் வைத்துக்கொள்வது போலிருக்கும்). ஆனாலும் சகோதரர்களும் சரி, சகோதரிகளும் சரி - இருவருமே தனிப்பட்ட விஷயத்தில் மாத்திரமல்லாமல், கர்த்தருடனும், மற்றவர்களுடனுமான தங்களுடைய உறவிலும் விவாகத்தின் வாயிலாய் நன்மைகள் அடைந்துள்ள சந்தர்ப்பங்கள் இருக்கின்றன.

விவாகம்பண்ணுகிறவர்கள் கர்த்தருக்கெதிராகச் செயல்படுகின்றனர் என்று நாங்கள் கூறுவதாகப் புரிந்துகொள்ளப்படக்கூடாது. கர்த்தரைப் பிரியப்படுத்த விரும்பிடும் யாவரும் இம்மாதிரியான காரியத்தில் மிகவும் ஜாக்கிரதையாகக் காணப்பட வேண்டும் மற்றும் விவாகம்பண்ணிக்கொள்கிறவர்களை மற்றவர்கள் விமர்சிக்கவும் முற்படக்கூடாது. இது தேவன் நமக்களித்த சுயாதீனமாகும் மற்றும் இந்தச் சுயாதீனத்தை நாம் நமக்காகவும் பயன்படுத்திக்கொள்ள வேண்டும், மற்றவர்களுக்கும் அருளிட வேண்டும்.

## நல்லதோ கெட்டதோ

விவாகம்பண்ணுகிறவர்கள் தாங்கள் பூரணநிலையிலுள்ள நபரை விவாகம்பண்ண வாய்ப்பில்லை என்ற உண்மையினைப் புரிந்திருக்க வேண்டும்; ஏனெனில் "பூரணமானவன் ஒருவனாகிலுமில்லை" என்று வேதம் நமக்குத் தெரிவிக்கின்றது. ஒருவனாகிலும் பரிபூரணன் அல்ல மற்றும் ஒருவரும் பரிபூரணராய் இல்லாதிருக்கையில் அல்லது பரிபூரணமாய் இருக்கமுடியாது என்றிருக்கையில் அபூரணமான ஒருவர், மற்றவர் பரிபூரணராய் இருக்கும்படிக்குக் கேட்டுக்கொள்வது என்பது தவறாய்

இருக்கும். எனினும் ஒவ்வொருவரும் தன்தன் சொந்தப் பலவீனங்களைத் திரையிட்டு மூடி அடக்கி வைப்பதற்கு முயற்சித்திட வேண்டும். இந்த விஷயத்தில் ஞானமற்றவர்களாய் இருப்பவர்களும் உண்டு. நம்முடைய மனங்கள் பூரணமாய் இருக்கின்றபடியால், மனதின் அந்த உயர் தரநிலைக்குத்தக்கதாக நம்மால் முடிந்தமட்டும் நாம் ஜீவித்திட வேண்டும். இடையூறு இராதவண்ணம் ஒவ்வொரு குறைவையும் விரைவாய் நாம் மூடி அடக்கிப்போட வேண்டும். ஒருவன் விவாகம்பண்ணுகையில், அவன் பூரணனாய் இருக்கும் நபரை விவாகம்பண்ணுவதாக எண்ணிக்கொள்வது தவறாக இருக்கும். அவன் தன்னுடைய பெலவீனங்களை அவளிடமிருந்து மூடி அடக்கிவைத்திருக்கின்றான் மற்றும் அவளும் அவளது பெலவீனங்களை அவனிடமிருந்து மூடி அடக்கிவைத்திருக்கின்றாள்; இவர்கள் தங்கள் தங்கள் பெலவீனங்களை ஜீவியம் முழுவதும் திரையிட்டு மூடி அடக்கிவைத்திருப்பது நலமாயிருக்கும்.

விவாகம்பண்ணுகிறவர்கள் ஒருவருக்கொருவர், ஒருவர் இன்னொருவருடைய கடந்தகால காரியங்களைக்குறித்து விசாரித்திடக்கூடாது; ஏனெனில் விவாகத்தின்போது ஒருவர் இன்னொருவரை நல்லவரோ கெட்டவரோ அவரை ஏற்றுக்கொள்கின்றார்; திரும்பிப்பார்த்தல் கூடாது. இப்படியாகவே கர்த்தர் நம்மை ஏற்றுக்கொண்டபோதும் காணப்பட்டது; அவர் பழைய வாழ்க்கையைக்குறித்து விசாரணை செய்துகொண்டிருப்பதில்லை. நாமும் அப்படிச் செய்யக்கூடாது. விவாகமான தம்பதிகளுக்கிடையே பிரச்சனைகள் ஏற்படுகையில் அவர்களது பிரச்சனைகளை அவர்களுக்காகச் சரி செய்யும்படிக்கு மற்றவர்கள் பிரயாசம் எடுப்பதன்மூலம் அவர்களுக்கிடையே குறுக்கிடுவதற்கு, அவர்கள் யாரையும் அனுமதித்திடக்கூடாது; ஏனெனில் இம்மாதிரியான முயற்சிகள் அனைத்தும் பிரச்சனையையே உண்டுபண்ணிடும். தேவன் ஒன்றாய் இணைத்துள்ளவர்களுக்கிடையே குறுக்கிடுவதற்கு யாரும் முயற்சி செய்யாதிருப்பார்களாக. விவாக உறவில் ஏற்படும் பிரச்சனைகள், எப்பொழுதும் அநேகம் பேச்சு வார்த்தைகளுக்கு வழிநடத்துகின்றது; ஆகையால் இதை அறிந்தவர்களாக மற்றவர்களுடைய ஜீவியங்களில் பிரச்சனைகளை அதிகரித்திடும் யாதொன்றையும் செய்துவிடாதபடிக்கு நாம் விழிப்பாய் இருக்க வேண்டும். இப்பிரச்சனைகளின் விஷயத்தில் நாம் அனுதாபங்கூடப் பாராட்டிடக்கூடாது. அவர்களை நாம் தனியே விட்டுவிட வேண்டும். அவர்கள் எப்போதெல்லாம் ஆலோசனை கேட்கிறார்களே, அப்போதெல்லாம் ஆலோசனை கொடுங்கள், ஆனால் குறுக்கிடாதீர்கள். அவர்கள் விவாகம்பண்ணின பிற்பாடு, வாழுங்காலமெல்லாம் நல்லதோ கெட்டதோ அதை அவர்களே பார்த்துக்கொள்ள வேண்டும்.

ஆகையால் விவாகமென்பது தீவிரக் கவனம் செலுத்தப்பட வேண்டிய ஒரு காரியமாகும் மற்றும் தீவிரமாய்ச் சிந்தித்தப் பிற்பாடு மாத்திரமே மேற்கொள்ளப்பட வேண்டும். அது மிகப் புனிதமானதொரு பொறுப்பாகும். விவாகம்பண்ணும் இருவரும் ஜீவியகாலம் முழுவதற்கும் தங்களை ஒப்பந்தம் பண்ணிக்கொள்கிறார்கள். இக்கருத்தானது முழுமையாகப் புரிந்துகொள்ளப்பட்டு, கைக்கொள்ளப்பட்டால் விவாகங்கள் அனைத்துமே அதிகம் திருப்திகரமாகக் காணப்படும்.

---

R3786 [தெரிந்தெடுக்கப்பட்ட பத்திகள்]

# வெற்றிக்கு இன்றியமையாதது விசுவாசம்

## மாற்கு 7:24-30

"உன் விசுவாசம் பெரியது; நீ விரும்புகிறபடி உனக்கு ஆகக்கடவது." (மத்தேயு 15:28).

விசுவாசம் பற்றின இப்பாடத்தினை நாம் அதிகம் தியானிக்கையில், தேவனுடைய பார்வையில் விசுவாசம் என்பது இன்றியமையாதது மாத்திரமல்ல, அது மிகவும் விலையேறப்பெற்றது என்றும்கூட நாம்

அதிகமாய் அறிந்துகொள்கின்றோம். விசுவாசம் இல்லாமல் நம்மால் தேவனிடத்தில் வரமுடியாது; விசுவாசமில்லாமல், நம்மால் அவர் அன்பில் நிலைத்திருக்க முடியாது; அவரது வாக்குத்தத்தங்கள் மீதான விசுவாசமில்லாமல், நம்மால் தினந்தோறும் அவரது இரக்கங்களையும், ஆசீர்வாதங்களையும், வழிநடத்துதல்களையும் பெற்றுக்கொள்ள முடியாது. நாம் தேவனுடைய பிள்ளைகளாக இருக்கின்றோம், பரிசுத்த ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்டிருக்கின்றோம், தேவனுடைய சுதந்தரர்களாக, நமது கர்த்தராம் இயேசு கிறிஸ்துவோடுகூட உடன் சுதந்தரர்களாக இருக்கின்றோம் என்பதை, இது விஷயம் குறித்த அவரது வாக்குத்தத்த வசனங்கள் மீதான விசுவாசமில்லாமல் நம்மால் உணர்ந்துகொள்ளவும் முடியாது. நாம் தரிசித்து நடவாமல், விசுவாசித்து நடப்பதற்கு விருப்பம் இல்லாமல், நம்மால் தினந்தோறும் கர்த்தரைப் பின்பற்றிச் செல்லவும் முடியாது, ஏனெனில் இதையே பரீட்சையாக அவர் தம் பின்னடியார்களுக்கு வைக்கின்றார். நமக்கு மிகவும் நாசகரமாய்த் தோன்றிடும் உலகம், மாம்சம் மற்றும் பிசாசின் எதிர்ப்புகளானது, ஆசீர்வாதங்களாகக் காணப்படும் என்றுள்ள தேவனுடைய வாக்குத்தத்தங்கள் மீதான விசுவாசம் நமக்கில்லையெனில், இதைக்குறித்து நம்மால் இப்படிக் காணமுடியாது. இப்பொழுது விசுவாசம் வைப்பதன் மூலம், கிறிஸ்துவின் பள்ளிக்கூடத்தில் நமக்குக் கொடுக்கப்படுகின்றதான பல்வேறு பாடங்களினால் நன்மை அடையாமல், நாம் பரலோக இராஜ்யத்திற்கும், அதன் மகிமைகள், ஆசீர்வாதங்கள் மற்றும் சிலாக்கியங்களுக்காகவும் ஆயத்தமாகக் காணப்பட முடியாது.

## கர்த்தருக்காய்ப் பொறுமையோடு காத்திரு

இது விஷயமாகச் சம்பவம் ஒன்று நமக்கு ஞாபகம் வருகின்றது. அலிகெனியிலிருந்து வெகுதொலைத்தூரத்தில் வாழ்ந்துகொண்டிருக்கும் சத்தியத்தில் ஆழ்ந்த விருப்பம் காட்டும் சகோதரி ஒருவர் எங்களிடம், அவள் தன் கணவனுக்குக் கர்த்தர் கிருபையாய்ப் புரிந்துகொள்ளுதலின் கண்களைத் திறந்தருளும்படிக்கு ஊக்கமாய் ஜெபம்பண்ணிக்கொண்டிருப்பதாகத் தெரிவித்தாள். சகோதரியின் கணவனுடன் எங்களுக்குக் கொஞ்சம் பழக்கம் இருந்ததினால், அவர் சத்தியத்திற்குள் வரவாய்ப்பில்லை என்பது எங்கள் அபிப்பிராயமாய் இருந்தது. அவர் மோசமான மனிதரல்ல, மாறாக அவர் முற்றிலும் உலகப்பிரகாரமானவராகவும், தொழிலிலும், வேட்டையாடுவதிலும், (lodge) வாடகை விடுதியிலுள்ள வேலை முதலியவற்றிலும் முழுக்க மூழ்கினவராகவும் காணப்படுபவர் ஆவார். ஆகையால் இது விஷயத்தில் மிகுந்த ஏமாற்றம் அடைவதிலிருந்து அச்சகோதரியைத் தடைப்பண்ண வேண்டும் என்று நாங்கள் அச்சகோதரியை நோக்கி: "அருமையான சகோதரியே, தம்முடைய ஆவிக்குரிய மணவாட்டி வகுப்பாரின் அங்கத்தினர்கள் விஷயத்தில், கர்த்தர் தம்முடைய சொந்தத் தெரிந்துகொள்ளுதலைச் செய்துகொண்டு இருக்கின்றார் என்பதை நீங்கள் நினைவில்கொண்டிருக்க வேண்டும். ஜெபத்தில் கர்த்தருக்குக் கட்டளையிடுவதோ அல்லது அவர் யாரை தேர்ந்தெடுக்க வேண்டும் என்று கட்டளையிடுவதோ நமக்கடுத்த காரியமல்ல; அவருடைய வழிநடத்துதலினால் சத்தியம் நம் செவிகளுக்கு எட்டி, திருமண விருந்தில் பங்குகொள்வதற்கான அழைப்பாகிய ஆசீர்வாதத்தினை நமக்குக்கொண்டுவந்துள்ளதற்காய் நாம் நன்றியோடு இருப்பதே நமக்கடுத்த காரியமாய் இருக்கின்றது. உங்கள் கணவன் சத்தியத்தினை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்ற எண்ணத்தினை வளர்த்திக்கொண்டிராதீர்கள் மற்றும் இப்படியாக நீங்கள் குறிப்பாய் ஜெபம்பண்ணிக்கொண்டிருக்காதீர்கள்; மாறாக நீங்கள் அறிந்திருப்பது போன்று அவர் ஒரு நல்ல மனிதனாக இருப்பதினால் அதற்காய்க் கர்த்தருக்கு நன்றி ஏறெடுங்கள் மற்றும் உங்கள் சொந்த ஜீவியத்தின் மூலமாக, உங்கள் சொந்த நடத்தையின் மூலமாக மற்றும் நீதி என்றால் என்ன என்றும், கிறிஸ்துவின் சீஷி என்றால் என்ன என்றும் சகல விதத்தில் உங்கள் முன்மாதிரி மூலமாக, கூடுமானமட்டும் உங்கள் கணவனுக்கு நல் உதாரணமாய் விளங்குங்கள் - அதாவது கர்த்தருக்கும், அவரது ஊழியத்திற்கென்றும் உங்கள் கணவன் தன்னை ஒருபோதும் அர்ப்பணம்பண்ணாதவராய் இருப்பினும், அவருக்குத் தற்கால ஜீவியத்திலும், எதிர்கால

ஜீவியத்திலும்கூட நன்மையாய்க் காணப்படும் என்ற நம்பிக்கையில் இப்படி நல் உதாரணமாய் விளங்குங்கள்" என்று கூறினோம்.

**அச்சகோதரியினுடைய பதில் பின்வருமாறு இருந்தது:**

"இவை அனைத்தையும் சகோதரர் ரசல் அவர்களே, நான் செய்வதற்கு முயன்று கொண்டிருக்கின்றேன்; ஆனால் என் கணவனாகிய ஜான் மீது ஒரு விசேஷித்த ஆசீர்வாதத்தினை அருள நான் கேட்டுக்கொள்வதில் - என் கணவனுடைய புரிந்துகொள்ளுதலின் கண்களைத் தயவாய்த் திறந்தருள நான் கேட்டுக்கொள்வதில் - கர்த்தர் சினங்கொள்ளமாட்டார் என்று நான் இன்னமும் எண்ணுகின்றேன். என் கணவனுடைய சித்தத்திற்கு எதிர்மாறாக அவரை மாற்றத்தக்கதாக அவரிடத்தில் அற்புதம் ஒன்று நிகழ்த்தப்பட நான் வேண்டிக்கொள்ளவில்லை; மாறாக கர்த்தர் தம்முடைய வழிநடத்துதலில் என் கணவனுக்குத் தயவுப்பாராட்டிடவும், திவ்விய ஞானத்திற்கு இசைவாக, கணவனுக்கு முன்பாக வழியினை எளிமையாக்கிடவும் நான் வேண்டிக்கொள்கின்றேன்" என்று கூறினாள். அவளின் மனைவிக்குரிய பக்தியையும் கர்த்தருடைய தயவின் மீதான விசுவாசத்தினையும் நாங்கள் மதித்தும், அதேவேளையில் நாட்கள், வருஷங்கள் கடந்து செல்கையில் எவ்வளவாய் இந்தப் பாவப்பட்ட ஸ்திரீ ஏமாற்றம் அடையப்போகிறாளோ என்று எங்களுக்குள்ளாய் எண்ணி, மறுக்கும் சில வார்த்தைகளைக் கூறினோம். நாங்கள் பெரிதும் ஆச்சரியமடையும் விதத்தில் ஒரு வருடத்திற்குப் பின்னர் . . . அவளுடைய கணவன் சத்தியத்தின் மீது ஆர்வம் அடைந்தார் மற்றும் அந்த ஆர்வத்தினால் கர்த்தருக்கும், அவர் ஊழியத்திற்கும் என்று தன் இருதயத்தையும், ஜீவியத்தையும் முழுமையாய் அர்ப்பணித்தார். அதிலிருந்து நாங்கள் ஒரு படிப்பினையை, இக்கட்டுரையில் இருந்து நாம் கற்றுக்கொண்ட படிப்பினைக்கு ஒத்த நிலைமையில் கற்றுக்கொண்டோம். தேவனுடைய தயவின் மீதான விசுவாசத்தினை, நம்பிக்கையினைத் தேவன் பெரிதும் மதிக்கின்றார் என்பதும், தம்முடைய திட்டம் குறுக்கிடப்படாமல், கூடுமானமட்டும் விடாப்பிடியான விசுவாசத்தில் ஏறெடுக்கப்படும் சில விண்ணப்பங்களுக்குப் பதிலளிக்கின்றார் என்பதும்தான் படிப்பினைகளாய் இருக்கின்றன. ஆவியின் இந்த முக்கியமான கனியினை வளர்த்தி, விருத்தியாக்கிடுவதற்கு நாம் ஒவ்வொருவரும் அதிகமதிகமாய் முயற்சிப்போமாக மற்றும் இதற்கேற்ப நாம் அன்பிலும், சந்தோஷத்திலும், சமாதானத்திலும், ஊழியத்திலும், "உன் விசுவாசத்தின்படி உனக்கு ஆகக்கடவது" என்று கூறுபவரிடமிருந்து வரும் ஆசீர்வாதங்களிலும் பெருகுகின்றவர்களாய் இருப்போம்.

---

R5523 [தெரிந்தெடுக்கப்பட்ட பத்திகள்]

## யுரேக்கா டிராமா

இந்தப் போட்டோ டிராமா பணியினைச் சிறந்த தொகுதி விநியோகிப்பாளர்கள் (colporteurs) செய்திடுவதற்கு நாம் பரிந்துரைப்பதில்லை. தொகுதி விநியோகிப்பவர்கள் ஏற்கெனவே சிறந்த முறையில் சத்தியத்திற்கு ஊழியம்புரிகின்றனர் மற்றும் பசியோடுள்ள ஆடுகளைப் போஷிக்கின்றனர்.

புதிய வகுப்புகளை உருவாக்கும் வேலையில் இதுவரை ஈடுபடாத சகோதரர்களுக்கு இந்தப் பணியில் வாய்ப்பு உள்ளது. இவர்களது மனைவிகளுக்கும், மாம்சத்தின்படியான சகோதரிகளுக்கும்கூட இப்பணியில் வாய்ப்பு உள்ளது. ஒருவேளை திருமணமாகாத சகோதரிகள் இப்பணிகளில் ஈடுபடுகின்றார்களானால் ஒழுக்கம்/நடத்தையில் கவனமும், தகுதியான கிறிஸ்தவ பண்புகளுடன்கூடிய

நடக்கையும் எப்போதும் காணப்படத்தக்கதாக மிகவும் அதிகமான ஜாக்கிரதைக்கொண்டிருக்க வேண்டும். தேவனுக்கு முழுமையாய் அர்ப்பணம்பண்ணியுள்ளதாகவும், வாக்குறுதி எடுத்துக்கொண்டவர்களாகவும் காணப்படுபவர்கள் மாத்திரமே இப்பணியில் பங்காற்ற விரும்பப்படுகின்றது.

---

R4776 [தெரிந்தெடுக்கப்பட்ட பத்திகள்]

# தன் பேரப்பிள்ளைகளைக் கொன்றாள்

## 2 இராஜாக்கள் 11:1-20

"அவருடைய சாட்சிகளைக் கைக்கொண்டு, அவரை முழு இருதயத்தோடும் தேடுகிறவர்கள் பாக்கியவான்கள்." (சங்கீதம் 119:2)

யேசபேலின் மகளாகிய அத்தாலியாள் தன் கணவன் மரித்தபோது, கணவனுடைய மரணம் காரணமாய் யூதேயாவின் இராஜ்யத்தினுடைய இராணியானாள் மற்றும் இவள் மகன் அகசியா இராஜாவானான். சீனாவில் போலக் கிழக்கத்திய தேசங்களில் இராஜாவின் தாய்க்கே இன்றும் இராஜ்யத்தில் உயர்ந்த அதிகாரம் காணப்படுகின்றது. இதுவே யூதர்களின் வழக்கமாகும். கணவனின் மரணம் காரணமாய் இராணியான அத்தாலியாள் உண்மை தேவனுக்கும், அவரைத் தொழுதுகொள்ளும் காரியத்திற்கும் எதிராகவும் மற்றும் பாகாலைத் தொழுதுகொள்ளும் காரியத்திற்கு ஆதரவாகவும் ஆற்றல்மிக்க மற்றும் நாசகரமான செல்வாக்கினைச் செயல்படுத்தினாள். இஸ்ரயேலின் இராஜாக்கள் அந்நிய இராஜ்யங்களின் குமாரத்திகளைக் கலப்புத் திருமணம் பண்ணிக்கொண்டதின் விளைவாய் மகாபாதகம் கொண்டுவரப்பட்டதற்கு இச்சம்பவம் ஒரே ஒரு உதாரணமல்ல. இவள் தாயாகிய யேசபேல் மற்றுமொரு குறிப்பிடத்தக்க உதாரணமாவாள். சாலொமோனுடைய அந்நிய மனைவிகளே அவரைக் கண்ணிக்குள்ளாக்கினார்கள் என்பதையும் நாம் நினைவுகூருகின்றோம்.

இவைகள் எல்லாவற்றையும் நாம் காண்கையில், யூதர்கள் மற்றத் தேசத்தாரோடு கலப்புத் திருமணம் செய்யக்கூடாது என்று, யூதர்கள்அனைவருக்கும் கொடுக்கப்பட்டுள்ள திவ்விய கட்டளையை நாம் நினைவுகூருகின்றோம். திவ்விய பிரமாணத்தினின்றுள்ள ஒவ்வொரு மீறுதலும், அதன் கடுமையான தண்டனைகளைக் கொண்டுவந்ததாய் இருந்தது. இவ்விஷயங்களானது அந்த ஒரு ஜாதியாருக்கான தேவனுடைய ஏற்பாடு மாத்திரமே; இவர்கள் அவருடைய விசேஷித்த சொந்த ஜனங்கள் ஆவார்கள்; மற்ற ஜாதியார் அவருடைய சொந்த ஜனங்களல்ல மற்றும் அவருடைய நியாயப்பிரமாணங்களுக்கு அவருடைய ஜனங்கள் கீழ்ப்படிவார்களானால், அது அவர்களுக்கு ஆசீர்வாதங்களைக் கொண்டுவந்திடும் மற்றும் கீழ்ப்படியாமை என்பது துன்பங்களைக் கொண்டுவந்திடும். இந்தப் பிரமாணமும் இன்னமும் யூதர்கள் மீது காணப்படுகின்றது; ஆனால் மற்றவர்கள் மீதல்ல.

யூதருடைய இந்த நியாயப்பிரமாணத்தினுடைய நிஜம் அல்லது ஆவிக்குரிய அர்த்தமானது அனைவராலும் கைக்கொள்ளப்பட வேண்டும்; அது திவ்விய கண்ணோட்டத்தில் "பரிசுத்த, விசேஷித்த ஜனங்களாய்க்" காணப்படும் கிறிஸ்தவர்களுக்குப் பொருந்தும். கிறிஸ்தவர்கள் அந்நிய நுகத்தில் அவிசுவாசிகளுடன் பிணைக்கப்படக்கூடாது. கிறிஸ்தவர்கள் உலகத்தைவிட்டு வெளியே வந்து, பிரிந்திருக்க வேண்டும். ஆனால் இது பெயர்க்கிறிஸ்தவர்களுக்குப் பொருந்துகிறதில்லை; மாறாக தங்களைக் கர்த்தருக்கு முழுமையாய் அர்ப்பணம் பண்ணியுள்ளதான ஆவியில் ஜெநிப்பிக்கப்பட்ட

வகுப்பாருக்கு மாத்திரமே பொருந்துகின்றதாக இருக்கும். இவர்கள் "கர்த்தருக்குள் மாத்திரமே" - அர்ப்பணிக்கப்பட்டவர்களை மாத்திரமே விவாகம் பண்ணிடுவதற்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளனர். இந்தத் திவ்விய கட்டளையினை மீறுபவர்கள், தங்கள் சொந்த ஆவிக்குரிய வளர்ச்சியினைப் பாழாக்கிடும் அபாயத்திற்குள்ளாகுகின்றனர் மற்றும் தங்கள் சொந்தச் சந்தோஷத்தையும், தாங்கள் பிணைக்கப்பட்டுள்ளதான உலகப்பிரகாரமான நபரின் சந்தோஷத்தையும் பாழாக்கிடும் அபாயத்திற்குள்ளாகுகின்றனர்.

---

R2068 [தெரிந்தெடுக்கப்பட்ட பத்திகள்]

# சாலொமோனின் பாவங்கள்
## 1 இராஜாக்கள் 11:4-13

"இப்படியிருக்க, தன்னை நிற்கிறவனென்று எண்ணுகிறவன் விழாதபடிக்கு எச்சரிக்கையாயிருக்கக்கடவன்." (1 கொரிந்தியர் 10:12)

சாலொமோனுடைய வீழ்ச்சி பற்றின கவலைக்கிடமான பாடத்திலிருந்து, ஜீவியத்தினை ஞானமாக, தேவனுக்கு இசைவான நிலைமையில் துவங்கிடுவது மாத்திரம் முக்கியமானதாய் இராமல், அதனை அப்படியே தொடர்வதும், அப்படியே முடித்துக்கொள்வதும் அவசியமானதாகக் காணப்படுகின்றது என்று பார்க்கின்றோம். ஜீவியத்தின் சோதனைகளும், பரீட்சைகளும் வாலிபர்கள்மீது மாத்திரம் கடந்துவராமல், நாமும் ஜீவியத்தில் வளர்ந்து காணப்படுகையில் நம்மீதும் பலமான சோதனைகள் வரவாய்ப்புள்ளது; மற்றும் இவைகளுக்காக, நன்கு நாம் துவங்கின குணலட்சணத்தினை, வளர்த்தி, விருத்தியாக்கி, அனுபவங்களினாலும், சகிப்புத்தன்மையினாலும் வலுப்படுத்திடும் ஆயத்தம் அவசியமாகும்.

நாம் கற்றுக்கொள்ளும் மற்றுமொரு பாடம் திருமணம் பற்றியதாகும் மற்றும் விவாகம் கனமுள்ளதாக இருப்பினும், அது "கர்த்தருக்குள்ளாக மாத்திரம் காணப்பட வேண்டும் என்ற அப்போஸ்தலனுடைய வார்த்தைகளுக்கு முழு இசைவாகக் காணப்படுகின்றது. இந்த அறிவுரையினை அலட்சியம்பண்ணியுள்ள யார் ஒருவனும், தன் அலட்சியம்குறித்து வருந்துகிறவனாய் இருப்பான் அல்லது இதன் காரணமாய் மிகவும் வழித்தவறிப் போனவனாகி, தேவபக்தியினின்றுள்ள தன் வீழ்ச்சியினை உணரமுடியாதவனாய் இருப்பான். தேவையின்போது உதவிசெய்யும் கிருபை உண்டு என்ற கர்த்தருடைய வாக்குத்தத்தத்தினை ஒவ்வொரு கிறிஸ்தவனும் பெற்றிருந்தாலும், வெளியிலிருந்து வரும் சோதனைகளுக்குள் அவன் தானாய்ச் சிக்கிக்கொள்வது ஒருபக்கமிருக்க, அவனது சொந்த அவயங்களிலேயே எதிர்த்துப் போராடிடுவதற்குரிய நிறைய கீழான சுபாவங்களை உடையவனாய் இருப்பான். ஒருவேளை கர்த்தருடைய அறிவுரையை அசட்டைப்பண்ணி, கர்த்தருக்குள் இல்லாத ஒரு கணவனையோ அல்லது மனைவியையோ விவாகம்பண்ணி, ஒருவன் கூடுதலான கீழான சுபாவங்களினால் தன்னைச் சூழப்பண்ணிடுவானானால் - தேவனுடைய இராஜ்யத்தினைப் பிரதானமாய் நாடாமல், பரத்திற்கடுத்தவைகள் மீது தன் கவனத்தை வைக்காமல், பூமிக்கடுத்தவைகள் மீது கவனம் வைத்தானானால் - அவன் இவைகள் தனக்கு மிகவும் பாதகமாய் இருப்பதை நிச்சயமாய்க் கண்டுகொள்ளுவான் - அதாவது இஸ்ரயேலுடைய காணியாட்சிக்கும், திவ்விய வாக்குத்தத்தங்களுக்கும் மற்றும் ஆசீர்வாதங்களுக்கும் அந்நியர்களாய்க் காணப்பட்ட அந்நிய ஸ்திரீகளை மனைவிகளாக்கிக்கொண்ட சாலொமோனுக்குப் பாதகமாய் இருந்தது போல் பாதகமாய் இருப்பதைக் கண்டுகொள்ளுவான்.

---

R5223 [தெரிந்தெடுக்கப்பட்ட பத்திகள்]

## சிலுவை சுமத்தலே வளருவதற்கான வழி

"தன் சிலுவையைச் சுமந்துகொண்டு எனக்குப் பின்செல்லாதவன் எனக்குச் சீஷனாயிருக்கமாட்டான்." (லூக்கா 14:27)

சீஷன் என்பவன் போதகரைப் பின்பற்றிடும் மாணவன் ஆவான். கர்த்தர் தம் சீஷர்களுக்குச் சில மாபெரும் ஆசீர்வாதங்களை வாக்களித்துள்ளார். அவர்கள் கீழ்ப்படிந்திருந்தார்களானால், அவர்கள் நித்தியமான ஜீவனினால் பெரிதும் ஆசீர்வதிக்கப்பட்டு, அவரோடுகூட அவர் சிங்காசனத்தில் உட்கார்ந்து, அவர் இருக்கும் இடத்தில், அவரோடுகூடக் காணப்படுவார்கள்.

ஆகையால் சீஷயத்துவத்தில் என்னென்ன செய்யப்பட வேண்டும் என்பது முக்கியமான கேள்வியாய் இருக்கின்றது. அது சுலபமான காரியமா அல்லது சிரமமான காரியமா? கிறிஸ்துவின் பள்ளிக்கூடத்திற்குள் நாம் எப்படிப் பிரவேசிப்பது? இவ்வசனத்திலும், வேறு வசனங்களிலும் கர்த்தர் நமக்கு நிபந்தனைகளைத் தெரிவித்துள்ளார். இன்னொரு வசனத்தில் அவர்: "ஒருவன் என்னைப் பின்பற்றி வர விரும்பினால், அவன் தன்னைத் தான் வெறுத்து, தன் சிலுவையை எடுத்துக்கொண்டு என்னைப் பின்பற்றக்கடவன்;" "தன் சிலுவையைச் சுமந்துகொண்டு எனக்குப் பின்செல்லாதவன் எனக்குச் சீஷனாயிருக்கமாட்டான்" (மத்தேயு 16:24; லூக்கா 14:27) என்று கூறியுள்ளார்.

ஆகையால் இது விஷயத்தில் ஒரு வழிமுறை நிச்சயமாகவே இருக்கின்றது. முதலாவதாக சீஷயத்துவம் என்றால் என்ன என்றும், சிலுவை என்றால் என்ன என்றும் ஒருவன் கண்டுகொள்ள வேண்டும். சிலர் மற்றவரைக் காட்டிலும் ஏறக்குறைய தெளிவாய் உணர்ந்துகொள்ளலாம். சிலுவை சுமத்தல் என்பது சிலருக்கு மிகவும் கடினமான காரியமாகத் தோன்றிடலாம். சிலர் உய்த்துணர்வின் வாயிலாகவும், சிலர் அனுபவத்தின் வாயிலாகவும் காரியத்தினுடைய பாரப்பளுவினை நிதானித்துக்கொள்பவர்களாய் இருப்பார்கள்.

முடிவுவரை தொடர்ந்துபோக வேண்டும் என்று தீர்மானம் எடுத்துக்கொள்ளாதது வரையிலும், சிலுவையை எடுத்துக்கொள்ளாமல் இருப்பது நலமென நமது கர்த்தர் கூறியுள்ளார். இதை "கலப்பையின்மேல் தன் கையை வைத்துப் பின்னிட்டுப்பார்க்கிற எவனும் தேவனுடைய இராஜ்யத்துக்குத் தகுதியுள்ளவன் அல்ல" (லூக்கா 9:62) என்ற வார்த்தைகள் மூலம் தெரிவிக்கின்றார்.

சிலுவை எதைக் குறிக்கின்றதாயிருக்குமெனக் கர்த்தர் தம் சீஷர்களாகப் போகிறவர்களுக்கு மிகத் தெளிவாய்ச் சொல்லியிருந்தார். தம் சீஷர்களாக இருப்பவர்கள் துன்பப்படுவார்களென அவர் கூறியுள்ளார். சிலுவையைச் சுமத்தல் என்பது ஜாக்கிரதையாய்க் கவனிக்க வேண்டிய விஷயமாகும் என்று அவர் நம்மை எச்சரித்துள்ளார். ஆகையால் "என் சீஷனாக வேண்டும் என்று நீ விரும்புகின்றாயானால், உட்கார்ந்து செல்லும் செலவைக் கணக்குப் பார். நீ சிலுவையை எடுத்துள்ளாயானால், அதைத் தூக்க மாத்திரம் செய்யாமல், அது மரணப்பரியந்தம் உண்மையாய்ச் சுமக்கப்பட வேண்டும்" என்று நம்மிடம் கூறுகின்றார்.

### சிலுவை சுமத்தல் என்றால் என்ன?

ஆகையால் நாம் சத்திய அறிவிற்குள்ளாக வந்த பிறகே சிலுவையை எடுத்துச் சுமக்கின்றவர்களாய் இருக்கின்றோம். உலகம் சிலுவையைச் சுமப்பதில்லை; தங்கள் சொந்தச் சித்தங்களினால் தொடர்ந்து குறுக்கிடப்படுபவர்களும்கூடச் சிலுவை சுமப்பதில்லை. அநேகம் புருஷர்கள் சொல்வதென்னவெனில்:

"நான் திருமணமானது முதற்கொண்டு, என் மனைவியை எனது சிலுவையாக நான் பெற்றிருக்கின்றேன்;" மேலும் அநேகம் மனைவிகள் கூறுவதென்னவெனில்: "என் கணவன் எனது சிலுவையாய் இருக்கின்றார்" என்பதேயாகும். ஆனால் இது கிறிஸ்துவின் சிலுவையல்ல - இவர்களின் பிரச்சனை இவர்கள் திருமண விஷயத்தில் தவறாய் முடிவெடுத்ததேயாகும். தம்பதிகள் தவறாய் ஒன்றுசேர்க்கப்பட்டுள்ளனர்.

எனினும் இத்தகைய நிலைமையானது சிலுவை சுமத்தலாக மாறிடலாம். ஒருவேளை கணவன் அல்லது மனைவியினுடைய எதிர்ப்பானது, கர்த்தருக்கான உண்மையின் நிமித்தம் ஏற்படுமாயின், இதனை சகித்துக்கொள்ளுதல் என்பது சிலுவை சுமத்தலாகும்; ஏனெனில் இது கிறிஸ்துவின் நிமித்தமாக, சத்தியத்தின் நிமித்தமாகச் சகிக்கப்படுகின்றதாய் இருக்கின்றது. கிறிஸ்துவின் நிமித்தமான உண்மையின் காரணமாய் ஒருவேளை தொழிலில் நம்முடன் போட்டிப்போடுகிறவர்களின் எதிர்ப்பைச் சகித்தால், அது சிலுவை சுமத்தலின் பாகமாய் இருக்கும். அனைத்து நேரங்களிலும் எது சிலுவையாக இருக்கின்றது என்று நாம் காணாமல் இருப்பது அநேகமாக நமக்கு நலமானதேயாகும்.

"எங்களுக்கு வர என்ன காத்திருக்கின்றது என்று நாங்கள் அறியோம்,
தேவன் இரக்கமாய் எங்கள் கண்களுக்கு அவற்றை மறைத்துவிட்டாரே,
போகிற வழிதனிலுள்ள ஒவ்வொரு அடியிலும்
அவர் புது நிகழ்வுகள் நிகழப்பண்ணுகின்றாரே."

சிலுவை என்றால் என்ன என்று அறிந்தும், அந்தச் சிலுவையைச் சுமக்க விரும்பி, கிறிஸ்துவின் சீஷனாகுவது வரை, நம்மால் சிலுவையினை எடுத்திட முடியாது. சிலுவையை எடுத்துக்கொண்ட பின்னர், அது சுமக்கப்பட வேண்டும் என்றும் நமது கர்த்தர் கூறுகின்றார். சிலுவையைச் சுமத்தல் என்பது, அதினிடத்தினின்று விலகி நாம் ஓடிவிடுவதையோ அல்லது அதுகுறித்து அதிர்ச்சியடைவதையோ குறிக்கிறதில்லை. சிலுவையைச் சுமத்தல் என்பது, அதைச் சகித்தலாகும். இதுவிஷயத்தில் அவர் அறிவுரையினை நாம் பின்பற்றிட வேண்டும்.

---

R3107 [தெரிந்தெடுக்கப்பட்ட பத்திகள்]

# என் உடன்படிக்கையை மீறாமல் இருப்பேன்

கர்த்தருடைய ஜனங்கள் மத்தியில் சில சமயம் கொஞ்சம் சிரமம் கொடுக்கும் காரியம் திருமண நிச்சயதார்த்தம் (engagement) குறித்தாகும். "நிச்சயதார்த்தம்" விஷயத்தில் எவ்வளவுக்குப் பொறுப்புக் காணப்படுகின்றது என்பது தொடர்புடைய விஷயத்தில் சில குழப்பமான எண்ணங்கள் காணப்படுகின்றன. யூதருடைய ஏற்பாட்டில் (betrothal) நிச்சயதார்த்தமானது, விவாக விழாவிற்கு ஒரு வருடத்திற்கு முன்னதாகவே நடைபெறும்; மேலும் இவர்களது இந்த நிச்சயதார்த்தம் (betrothal) என்பது உண்மையான திருமணம்போன்று காணப்பட்டது. மணமகன் மற்றும் மணமகளுடைய நண்பர்களினால் சாதக பாதகங்களானது கலந்துரையாடப்பட்டு... விவரங்கள் அனைத்தும் எழுதப்பட்டு, கையெழுத்திடப்படுகின்றது. நிச்சயதார்த்த வாக்குறுதிகளுக்கான மணமகள் சார்பிலான உண்மையின்மையானது, நியாயப்பிரமாணத்தின்கீழ்த் தண்டிக்கப்படும் அளவுக்கு அந்த நிச்சயதார்த்தமானது மிகவும் பொறுப்புகளுடையதாயிருந்தது. இந்த யூத வழக்கமானது சுவிசேஷயுக சபையானவள், கிறிஸ்துவாகிய அவளது பரலோக மணவாளனுடன் நிச்சயம் பண்ணப்பட்டிருக்கும் காரியத்திற்கு நிழலாய் இருக்கும்படிக்குத் திட்டமிட்டு ஏற்படுத்தப்பட்டுள்ளது. அவர் சார்பிலான மற்றும்

நம் சார்பிலான - கர்த்தருடனான நம்முடைய ஒன்றிணைதலின் ஒப்பந்தமானது, சுவிசேஷயுகமாகிய இப்பொழுது காணப்படுகின்றது. ஆனால் உண்மையான ஒன்றிணைதலானது அல்லது "திருமண விழாவானது," அவரது இரண்டாம் வருகையில், முழு மணவாட்டி வகுப்பாரும் திரைக்கு அப்பால் மாற்றம் அடைந்து, அவளது கர்த்தருடைய சந்தோஷங்களுக்குள் பிரவேசிப்பதுவரையிலும் நடைப்பெறுவதில்லை. ஆனால் நம் மத்தியில் இன்றைய நாட்களில் நிலவிவருகின்றதான திருமண (engagement) "நிச்சயதார்த்தங்களானது," யூதர்களுடைய (betrothal) நிச்சயதார்த்தங்களிலிருந்து முற்றிலும் வேறுபட்டவையாகும்.

நம்முடைய வழக்கத்தின்படி அதிகாரிகள் முன்னிலையிலோ அல்லது சுவிசேஷஊழியக்காரனால் ஆற்றப்படும் திருமண விழாவிலோ, சட்டப்பூர்வமான விதத்தில் விவாக உடன்படிக்கைக்குள் பிரவேசிக்கப்படுகின்றது. இதுதான் விவாக உடன்படிக்கையாகும்; இதுவே ஒப்பந்தமாகும்; இது மாற்றப்பட முடியாது; இது முறிக்கப்படக்கூடாது; இதில் ஏறெடுக்கப்படும் உறுதிமொழிகளானது எழுத்திலும், ஆவியிலும் கைக்கொள்ளப்பட வேண்டும். ஆனால் திருமண உடன்படிக்கைக்குச் சில வாரங்கள், மாதங்கள் அல்லது வருஷங்களுக்கு முன்னதாகப்பண்ணப்படும் "நிச்சயதார்த்தங்களானது," (engagements) உண்மையில் உடன்படிக்கைகளே அல்ல. அது ஒன்றிணைவதற்கெனத் திருமண உடன்படிக்கையினையும், திருமண விழாவையும் எதிர்நோக்கியிருக்கும் இருதரப்பினர்களுக்கு இடையிலான முன்னேற்பாடான ஏற்பாடுகளாக மாத்திரமே காணப்படுகின்றது - ஆகையால் "நிச்சயதார்த்தத்தை" (engagement) ஒன்றிணைதலாகக் கருதுவது என்பது சட்டப்பூர்வமற்றதாகும், சட்டவிரோதமாகும். வாக்குறுதிகளை இரண்டு நபர்களால் ஊழியக்காரன் இல்லாமல் அல்லது விழா எடுக்காமல் ஜீவியம் முழுவதுமான ஒப்பந்தமாக, ஏறெடுத்திட முடியும் என்பது உண்மைதான்; எனினும் இது வழக்கத்திற்கு மாறானதும், மிகவும் அபூர்வமானதாகவும் காணப்படும் மற்றும் இது பொதுவான நலனுக்கு எதிரானது என்று நாட்டின் சட்டங்களால் தடைப்பண்ணப்பட்டுள்ளது.

ஆகையால் திருமண "நிச்சயதார்த்தமானது," திருமணத்திற்குத் தகுதியானவர்களாய்க் காணப்படும் ஒரு புருஷனுக்கும், ஸ்திரீக்கும் இடையில் ஒரு முன்னேற்பாடான ஒப்புதல் மாத்திரமே - அதாவது திருமணத்தின் கண்ணோட்டத்தில் ஒருவருக்கொருவர் சகவாசம் கொண்டிருப்பதற்கு - அதாவது திருமண உடன்படிக்கைக்குள் பிரவேசிப்பதற்கான விருப்பம் ஏற்படத்தக்கதாகக் காரியங்களைக் கணித்திடுவதற்குரிய நியாயமான வாய்ப்புகள் கிடைப்பதற்கு ஏதுவாய் ஒருவர் இன்னொருவரின் குணங்கள், பண்புகள், காரியங்கள் முதலானவைகளை நன்கு அறிவதற்குரிய கண்ணோட்டத்தில் சகவாசம்கொண்டிருப்பதற்கான ஒப்புதல் மாத்திரமேயாகும் என்று சரியாய்ப் புரிந்துகொள்ளப்படலாம். இன்னுமாக இது அவன் அல்லது அவள் கணிப்பில் ஒருவருக்கொருவர் திருமணம் பண்ணிடுவது விரும்பத்தக்கதல்ல என்று உணருகையில், திருமணம்பண்ணிட வேண்டாம் எனும் தீர்மானத்தை எடுப்பதற்கான வாய்ப்பையும், உரிமையும்கூடத் தருகின்றதாய் இருக்கின்றது. திருமணத்திற்கான "நிச்சயதார்த்தத்தினை"/engagement அல்லது சாதாரணமான ஒப்புதலை முறிக்கையில், இதில் கனவீனமோ அல்லது உடன்படிக்கையினை முறித்துப்போடுதல் போன்ற எதுவுமே இருப்பதில்லை - மாறாக நியாயமானதாகவும், சரியானதாகவும், ஏற்றதாகவுமே இருந்திடும். இருதரப்பினருடைய நலனின் அடிப்படையிலேயே காரியங்கள் இப்படியாக இருக்க வேண்டும். ஒருவேளை இருதரப்பினரில் ஒருவர் "நிச்சயதார்த்தத்தை" இரத்துச் செய்திட விரும்புகையில், மறுதரப்பினர் திருமண உடன்படிக்கையோடு ஒன்றிணைந்திட வேண்டும் என்று சுயநலமாய் வற்புறுத்துவது என்பது நிச்சயமாகவே ஞானமற்றதாகவும், அநீதியாகவும் காணப்படும்; ஏனெனில் ஒன்றாயிருப்பவர்களுக்கு மாத்திரமே திருமணம் உரியதாகும் மற்றும் இருதரப்பினரில் யாரேனும் ஒருவர் இதற்கு எதிராய் எண்ணம் கொண்டிருந்திருப்பார்களானால், அதுவே அவர்கள் இருவரும் தங்கள் விருப்பங்கள், பிரியங்கள்,

விருப்பத்தேர்வுகள் முதலானவைகளில் ஒன்றாய் இல்லை என்று முடிவெடுப்பதற்குரிய மிகச் சிறந்த காரணமாய்க் காணப்படும்.

சத்தியம் தங்களை வந்தடைகிற காலத்தில் திருமணம்பண்ணிக்கொள்ளும்படிக்கு நிச்சயதார்த்தம் செய்து காணப்படும் நபர்களிடமிருந்து இது விஷயமான கேள்விகள் அடிக்கடி எங்களுக்கு வருகின்றபடியாலே, இக்காரியத்தினை இங்கு நாம் குறிப்பாய்த் தெரிவிக்கின்றோம். (இவர்களுக்குச் சத்தியம் வந்தடைகையில்) இவர்கள் காரியங்களைப் புதிய வெளிச்சத்தில் காண்கின்றனர்; சத்தியத்தினுடைய வெளிச்சத்தின்கீழ் ஜீவியமானது இவர்களுக்குப் புது அர்த்தம் உடையதாகுகின்றது; மேலும் திருமண விஷயமானது புது அழுத்தம்கொண்டதாய் இருக்கின்றது; ஜீவியத்தின் துணை சம்பந்தமாகத் தீர்மானிக்கும் காரியமானது, கர்த்தருடைய சித்தத்தைப் பெரிதும் அடையாளம் கண்டுகொள்ள வேண்டிய காரியமாயிருக்கின்றது. ஆனால் மறுதரப்பினரோ பொதுவாக நிலைமைகளின் மாற்றத்தினைக் காணத் தவறுகின்றனர்; மேலும் அநேகமாய்ச் சத்தியம் பெற்றுக்கொண்டவருக்குச் சத்தியமானது குணலட்சணத்திற்குச் சேர்த்திடும் அழகின் காரணமாய் நிச்சயதார்த்தம்பண்ணப்பட்ட இவரைப் பெரிதும் மறுதரப்பினர் மதிப்பவர்களாகுகின்றனர். ஜெநிப்பிக்கப்படாத இந்த மறுதரப்பினர் அநேகமாய் ஒரு கிறிஸ்தவர் "நிச்சயதார்த்தத்தினை" (engagement) முறித்திடுவது என்பது தவறாய் இருக்கும் என்று வலியுறுத்துகிறவர்களாகவும், வற்புறுத்துகிறவர்களாகவும் காணப்படலாம். இப்படியான கருத்து முற்றிலும் பகுத்தறிவற்றது மற்றும் முற்றிலும் தவறானதாகும்; மேலும் இப்படிக் கருத்துக்கொண்டிருப்பவர்கள் இதை முழுமையாய்ப் புரிந்தவர்களாகவும் பொதுவாய்க் காணப்படுவார்கள்; இது எல்லா விதத்திலும் தங்கள் கடமைகளை நிறைவேற்றிடுவதற்கு ஆவலாய் இருக்கும் சிலரின் மனசாட்சிக்கு மகா பிரச்சனையைக்கொண்டுவருவதற்குப் போதுமானதாகும்.

---

R4716 [தெரிந்தெடுக்கப்பட்ட பத்திகள்]

## சில சுவாரசியமான கேள்விகள்
## விவாகம் யாவருக்குள்ளும் கனமானதாகும்

கர்த்தருக்குள்ளான எங்களது அன்புக்குரிய பாஸ்டர் அவர்களே:--

இந்தக் கடைசி காலங்களில், தங்களை முழுமையாய் அர்ப்பணம்பண்ணினவர்களெனக் கூறுபவர்கள் விஷயத்தில், திருமணம்குறித்து நீங்கள் என்ன நினைக்கின்றீர்கள்? திருமணத்தினுடைய ஏற்புடைமைக்குறித்துக் காவல்கோபுர கட்டுரை ஒன்று வந்தால், மிகவும் நன்மைக்கேதுவாயிருக்கும் என்று நான் எண்ணுகின்றேன். தங்களுக்கு இருக்கும் மிகச் சிறியவைகளைப் பலி செலுத்திடுவதற்குரிய தங்கள் சிலாக்கியம்குறித்து அநேகர் புரிந்துகொள்ளாததாகத் தெரிகின்றது.

--------------------------------------------------------------------------------

கர்த்தருக்குள் உங்கள்,

-----------------------------

பதில்:-- காலம் சமீபமாயுள்ளது என்றும், அர்ப்பணம்பண்ணியுள்ளவர்கள் அனைவருக்கும் இராஜாவின் ஊழியத்திற்கெனவும், அவருக்கான தங்களது அன்பு மற்றும் நேர்மையை நிரூபிப்பதற்கெனவும் அனைத்துத் தாலந்து மற்றும் அனைத்து நேரமும் தேவையாய் இருக்கின்றது

என்றும் அன்புக்குரிய சகோதரரே உங்கள் உணர்வுகளை நாங்களும் ஒத்துக்கொள்கின்றோம். அநேகம் திருமணங்களானது ஆவிக்குரியவற்றிற்குப் பாதகமாய்ப் போனதை நாங்களும் முற்றிலும் ஒப்புக்கொள்கின்றோம். அனைத்துத் திருமணங்களும் இப்படியாகத்தான் கடந்துபோனதா என்று எங்களுக்குத் தெரியாது.

எனினும் இவ்விஷயத்தில் எந்த விருப்பத்தேர்வுகளும்/முடிவுகளும் எங்களுக்கு இல்லை. திருமணமானது யாவருக்குள்ளும் கனமானது என்று கர்த்தருடைய வார்த்தைத் தெளிவாய்ச் சுட்டிக்காட்டுகின்றது. ஆகையால் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ திருமணத்தினைத் தடைப்பண்ணிடுவது என்பது யாருக்கடுத்த காரியமுமல்ல. அநேகம் தருணங்களில் நமக்கு ஆசீர்வாதத்தினைக் கொண்டுவந்திட்டதான அறிவுரைகளைக் கொடுத்த சபையின் திவ்விய போதகனாகிய பரிசுத்த பவுல் அடிகளாரின் வார்த்தைகளைக் கவனத்திற்குக் கொண்டுவருவதே எங்களுக்கான சிலாக்கியமாய்க் காணப்படுகின்றது. "விவாகம்பண்ணுகிறவன் நன்மைசெய்கிறான்; விவாகம்பண்ணாதிருக்கிறவன் அதிக நன்மைசெய்கிறான்" என்று அவர் கூறுகின்றார்.

அப்போஸ்தலனின் அறிவுரைச் சுட்டிக்காட்டுவதில் திருப்திக்கொண்டும், சிலர் விஷயத்தில் இந்தப் பொதுவான விதி பொருந்தாது என்பதை மறவாமலும், இக்காரியத்தில் முடிவெடுக்கும் விஷயத்தினை அருமை நண்பர்களின் கரங்களிலேயே நாங்கள் விட்டுவிடுகின்றோம். கர்த்தருடைய ஜனங்களிலுள்ள ஒவ்வொருவரும் இவ்விஷயத்தில் அவனது அல்லது அவளது கணிப்புகள் மற்றும் நிதானிப்புகளுக்கு இசைவாக முடிவெடுத்துக்கொள்வார்களாக. "இப்படியிருக்க, நாம் இனிமேல் ஒருவரையொருவர் குற்றவாளிகளென்று தீர்க்காதிருப்போமாக. ஒருவனும் தன் சகோதரனுக்கு முன்பாகத் தடுக்கலையும் இடறலையும் போடலாகாதென்றே தீர்மானித்துக்கொள்ளுங்கள்" (உரோமர் 14:13).

---

R4959

## விவாகம் பண்ணவேண்டுமா அல்லது விவாகம் பண்ணவேண்டாமா?

விவாகம் குறித்துச் சிந்தித்துக்கொண்டிருக்கும் சிலருக்கு, விவாகம் குறித்துக் கீழ் இடம்பெறும் கடிதமானது பிரயோஜனமாய் இருக்கும் என்று நம்பப்படுவதினால், இக்கடிதத்தினை வெளியிடுவதற்கு நாங்கள் கேட்டுக்கொள்ளப்பட்டோம்; இதோ பின்வருமாறு:-

அன்புக்குரிய சகோதரி:

சகோதரியே நீங்கள் என்னிடம் முன்புபோல் நடந்துகொள்ளாததினாலும், வேண்டுமென்றே எனக்கு மரியாதைக் கொடுப்பதைத் தவிர்த்துவிட்டு என் அருகே கடந்துபோவதினாலும், நான் என் நிலைப்பாட்டினை எடுத்துக்கொண்டதன் காரணமாக அல்லது நான் சொன்ன ஏதோ ஒன்றின் காரணமாக, ஏதோ சில அன்பற்ற உணர்வுகளைத் தாங்கள் என்னிடத்தில் கொண்டிருக்கின்றீர்கள் என்று நான் நினைக்கின்றேன். உங்களுக்கு நான் ஏதேனும் தவறு செய்திருப்பேனாகில், உங்களிடம் நான் மன்னிப்புக் கேட்டுக்கொள்கின்றேன்.

உங்கள் மீது என்னால் அனுதாபங்கொள்ள முடிகின்றது; ஏனெனில் நானும்கூட விழுந்துபோன மாம்சத்துடன் போராடிக்கொண்டுதான் இருக்கின்றேன் மற்றும் அறுவடைக் காலத்தினுடைய இந்த ஒரு கடைசி காலக்கட்டத்தில் விவாகம் பற்றின காரியத்தினை நான் எவ்வாறு பார்க்கின்றேன் மற்றும் எவ்வாறு

கருதுகின்றேன் என்பதையும், கர்த்தருடைய கிருபையினால் எப்படி நான் பெலன் அடைகின்றேன் என்பதையும் நான் உங்களுக்கு இங்கு எழுதுகின்றேன்.

இந்தக் காரியமானது நம்மால் புதிய மனதினுடைய கண்ணோட்டத்தின் அடிப்படையில் மாத்திரமே பார்க்கப்பட வேண்டும் மற்றும் அவ்வாறு கண்ணோக்கும்போது மாம்சத்தின் அடிப்படையில் மாம்சமானது என் மீது அதிகாரம் செலுத்தாதபடிக்கு அடக்கி வைத்துக்கொள்வதற்கு நான் பெரிதும் உதவப்படுகின்றேன்.

நம்முடையதும், மற்றவர்களுடையதுமான ஆவிக்குரிய நலன்களை எப்போதுமே நம்மனதில் பிரத்தியேகமாகத் தொடர்ந்து நாம் பெற்றிருத்தல் வேண்டும் மற்றும் நான் என்னிடமே கேட்டுக்கொள்வதாவது:- "மாம்சத்தில் ஒன்றிணைவதன் மூலம் எப்படி ஆவிக்குரிய விஷயத்தில் என்னால் ஒரு சகோதரிக்கு உதவிட முடியும்? மேலும் ஒன்றிணைவதன் மூலம் பரத்திற்குரியவைகள் மீது மனதினை வைத்திடும் விஷயத்தில் எப்படிச் சகோதரியோ அல்லது நானோ உதவப்பட முடியும்? சகோதரியின் ஐக்கியத்தினையா நான் விரும்புகின்றேன்? அப்படியானால், விவாகம் பண்ணாமலேயே அத்தகைய ஐக்கியத்தினை என்னால் பெற்றுக்கொள்ள முடியாதா? நேரடியாக இல்லை என்றாலும் கடிதங்கள் எழுதுவதன் மூலம் சகோதரிக்கு ஆவிக்குரியவற்றில் உதவவும், சகோதரியை ஊக்குவிக்கவும், இப்படியாகக் குணலட்சணம் வளர்த்திடவும் என்னால் முடியாதா?" என்பதாகும்.

சுயநலமான ஆசைகளாய்க் காணப்படும் விழுந்துபோன மாம்சத்தினுடைய மனப்பான்மைகளை நாம் சிலுவையில் அறைந்திட வேண்டும் மற்றும் சரீரத்தைக் கீழ்ப்படித்திட வேண்டுமே ஒழிய, அதற்கு இணங்கிடக்கூடாது; ஏனெனில் நாம் புதிய ஜீவியத்தில் நடந்துகொண்டிருக்கின்றோம் மற்றும் மாம்சத்தின்படியாக இல்லாமல், ஆவியின்படி சகோதரர்களை அறிகிறவர்களாக இருக்கின்றோம் - "ஆணென்றும் பெண்ணென்றுமில்லை, நீங்களெல்லாரும் கிறிஸ்து இயேசுவுக்குள் ஒன்றாயிருக்கிறீர்கள்." நம்முடைய அன்பு, தூய்மையானதாக, பரிசுத்தமானதாக, சகோதர சிநேகமானதாக இருப்பதாக.

"பிதாவினிடத்தில் ஒரு வாக்குறுதி" என்பது எனக்கு மிகவும் உதவியாய் இருக்கின்றது; அதிலும் விசேஷமாக "அழிவுக்குரிய என் சரீரத்தில் உம் சித்தம் நிறைவேற்றப்படுவதாக" எனும் வாக்கியம் மிகவும் உதவியாய் இருக்கின்றது. கர்த்தருடைய சித்தம் என்ன? ஏன் இந்தப் பாலின வித்தியாசம் கொடுக்கப்பட்டுள்ளது? அது பூமியை நிரப்புவதற்காகவும், ஜனத்தொகை உண்டாகுவதற்காகவும் என்று நான் எண்ணுகின்றேன் மற்றும் இது நிறைவேறின பின்பு, பாலின வேறுபாடு இருக்காது என்று காண்கின்றோம்.

தேவதூதர்கள் மத்தியில் பாலின வேறுபாடு இல்லை என்றும், இப்படித்தான் மனுக்குலத்தின் எதிர்க்கால நிலைமைக்கூடக் காணப்படும் என்றும் உணர்கையில், "நம்முடைய ஓட்டத்தின் நிறைவு காலங்களில் நான் விவாகம்பண்ணிட வேண்டுமா அல்லது பரத்திற்குரியவைகள் மீது என் மனதை வைத்துப் புதிய மனதை வளர்த்துவதன் மூலமாக மாத்திரமில்லாமல், என் மாம்ச சரீரத்தினுடைய ஆசைகளைக் கீழ்ப்படுத்திப் போடுவதன் மூலமாகவும் நமது எதிர்க்கால நிலைமைக்கு நேரான குணலட்சணங்களை என்னில் நான் இப்பொழுது வளர்த்தினால் நான் கர்த்தருக்கு மிகவும் பிரியமுள்ளவனாய் இருப்பேனா?" என்று என்னிடமே நான் கேட்டுக்கொள்கின்றேன்.

இந்த மாம்சீக சரீரங்களானது, திரைக்கு இப்பக்கத்தில் நாம் இருக்கையில் நமக்கு ஊழியம்புரிய வேண்டியதாயினும், அவைகள் பாவத்திற்கும், விழுந்துபோன தன்மைகளுக்குமென்று நமக்கு ஊழியம்புரியும்படிக்குப் பயன்படுத்தப்படக்கூடாது.

விவாகம்பண்ணுவதன் மூலம் நாம் பாவம் ஏதும் செய்கிறதில்லை என்று அப்போஸ்தலன் கூறியுள்ளார்; விவாகம் என்பது பிதாவின் சித்தம் செய்யும் கடமையையும், நம்முடைய சரீரத்தின் செயல்பாடுகளை முறையாய்க் காத்துக்கொள்வதையும் அல்லது விலகியிருக்கும் காரியத்தையும்கூட உள்ளடக்குகின்றதாய் இருக்கின்றது மற்றும் இது இந்த அனுபவங்களுக்குள் கடந்து போயுள்ளவர்களால் சாட்சி பகிரப்பட்டுள்ளது போன்று விழுந்துபோன மற்றும் சீரழிந்துபோன மாம்சத்தின் காரணமாய்ச் செய்யப்படமுடியாது.

பெலனையும், கிருபையையும் கேட்டுக்கொள்வதும் மற்றும் "அவனவன் தான் அழைக்கப்பட்ட நிலைமையில் நிலைத்திருக்கக்கடவன்" என்று பரிசுத்த பவுல் அடிகளால் நமக்குக் கொடுக்கப்பட்ட அறிவுரைக்கு உண்மையாய் இருப்பதும் சிறந்த வழியாகும்; மேலும் இப்படிச் செய்வதன் மூலம் நிச்சயமாய் நாம் ஓர் ஆசீர்வாதத்தினைப் பெற்றுக்கொள்வோம்; அநேகமாய் நாம் சிந்திப்பதைக் காட்டிலும் மாபெரும் ஆசீர்வாதத்தினைப் பெற்றுக்கொள்பவர்களாய் இருப்போம்; இப்படிச் செய்வது நமக்குக் கிரீடத்தை வென்று தரக்கூடும் மற்றும் இப்படிச் செய்வதைப் புறக்கணிப்பது என்பது கிரீடத்தை அடைவதிலிருந்து நம்மைத் தவிர்க்கவும் செய்திடலாம் மற்றும் இதனால் திரள்கூட்டத்தினுடைய அங்கத்தினர்களாகவும் ஒருவேளை ஆகக்கூடும்.

திருமணமாகாதவர் தன்னை அர்ப்பணிக்கையில், திருமணமானவரால் முடிகிறதைக் காட்டிலும் அதிகமான நேரத்தினைக் கர்த்தருக்குக் கொடுக்க ஒப்புக்கொள்கின்றார். இதை உணர்கையில் கர்த்தருக்கு நான் கொடுத்துவிட்ட நேரத்தில் கொஞ்சம் நேரத்தைத் திரும்ப எடுத்து, வேறொருவருக்குக் கொடுப்பது எனக்குச் சரியான காரியமாய் இருக்குமா? அப்படி நான் செய்தால், நான் கர்த்தருக்குப் பிரியமானவனாக இருப்பேனா? என்று என்னிடமே கேட்டுக்கொள்கின்றேன்.

திருமணத்தில் ஒன்றிணைந்ததன் மூலம் ஆவிக்குரிய காரியத்தில் நன்மை அடைந்திட்ட ஒரு சகோதரன் அல்லது சகோதரி பற்றி நான் அறிந்துள்ளேனா? அநேகமாகச் சொற்பமானவர்களே காணப்படுவார்கள்; ஆனாலும் பரிசுத்த பவுல் அடிகளார் கூறியுள்ளது போன்று, "நீங்கள் கவலையற்றவர்களாயிருக்க விரும்புகிறேன். விவாகமில்லாதவன் கர்த்தருக்கு எப்படிப் பிரியமாயிருக்கலாமென்று, கர்த்தருக்குரியவைகளுக்காகக் கவலைப்படுகிறான். விவாகம்பண்ணினவன் தன் மனைவிக்கு எப்படிப் பிரியமாயிருக்கலாமென்று, உலகத்துக்குரியவைகளுக்காகக் கவலைப்படுகிறான்" (1 கொரிந்தியர் 7:32, 33;).

"அநேகமாக என்னைப் பூரணமாக்கிடுவதற்கு மாம்சத்தில் எனக்கு அத்தகைய அனுபவங்களும், அத்தகைய பிரச்சனைகளும் அவசியப்படலாம்" என்ற எண்ணம் எனக்குள் தோன்றலாம். இத்தகைய எண்ணங்களுக்கு நான் எனக்கே கூறிக்கொள்ளும் பதிலானது: "அப்படி அவசியம் என்றால், எனக்குத் துன்பங்களை நானே கொடுத்துக்கொள்வதன் மூலம் கர்த்தருக்கு நான் உதவிச் செய்யாமலேயே, கர்த்தர் அவைகளை எனக்குக் கொடுக்கத்தக்கதாக, காரியங்களை நான் கர்த்தர் கரங்களில் விட்டுவிட்டுவேன்; ஏனெனில் எனக்கு என்ன தேவை என்பதை அவர் நன்கு அறிவார்; மேலும் 'பலியைப் பார்க்கிலும் கீழ்ப்படிதல் நல்லது' என்பதை நினைவுகூர்ந்து, நான் அவரைப் பிரியப்படுத்திட நாடிடுவேன்" என்பதேயாகும்.

"நம்முடைய பாதங்களுக்கு வழியைச் செவ்வையாக்கும்படிக்கு" நமக்குச் சொல்லப்பட்டிருக்கின்றது மற்றும் குறைவான பாரப்பளு இருக்கையில் எப்படிச் சுபாவ மனுஷனால் நன்கு ஓடிட முடியுமோ, அப்படியே ஆவிக்குரிய மனுஷனுடைய விஷயத்திலும் காணப்படும். நான் ஓட வேண்டியிருக்க என்னை நானே தடைப்பண்ணிடும் விதத்தில் ஏன் நான் என்னுடைய வழியில் கூடுதல் கற்களையும், தடைக்கற்களையும் போட்டுக்கொள்ள வேண்டும்?

என்னுடைய தனிப்பட்ட கண்ணோட்டத்தில் பார்ப்பவனாக, என்னிடமே நான் கேட்டுக்கொள்கிறதாவது: “இந்தத் திருமண ஒண்றிணைதலானது இருவரையும் வேலைக்குள் பிரவேசிக்கப்பண்ணுமா? அல்லது இப்பொழுதோ, எதிர்க்காலத்திலோ நானோ அல்லது சகோதரியோ அல்லது இருவருமே வேலைக்குள் பிரவேசியாமல் தடைப்பண்ணப்படும் விதத்தில் இருவரையுமே வேலையினின்று வெளியே எடுத்திடுமா?” என்பதேயாகும்.

தற்போது என்னைச் சார்ந்திருப்பவர்கள் விஷயத்திலுள்ள கடமைகளினால் நான் கட்டப்பட்டு, தொகுதி விநியோகிக்கும் வேலைக்குள் பிரவேசிக்க முடியாமல் இருக்கையில், நான் என்னிடமே கேட்டுக்கொள்கிறதாவது: "என்னுடைய பொறுப்புகளினுடைய பாரப்பளுவினை நான் இன்னும் அதிகமாக்கிட வேண்டுமா மற்றும் ஒரு சகோதரியின் மீதும்கூடப் பொறுப்பினைக் கட்டிக்கொண்டு, இப்போதோ அல்லது எதிர்க்காலத்திலோ அவள் ஊழியம்புரிவதைத் தடைப்பண்ணி, அவளது அர்ப்பணிக்கப்பட்ட நேரத்தினை என் மாம்ச சரீரத்திற்குச் சேவைச் செய்வதற்கு அவளை நான் ஆக்கிவிட வேண்டுமா?” என்பதேயாகும். "நீங்கள் கிரயத்துக்குக்கொள்ளப்பட்டீர்கள் மனுஷருக்கு அடிமைகளாகாதிருங்கள்” (1 கொரிந்தியர் 7:23).

ஒருவேளை திருமணம் பண்ணி, ஆனால் பொறுப்புகளினால் கட்டுப்படுத்தப்பட்டவனாக இராமல், கர்த்தர் என்னைப் பொறுப்புகளிலிருந்து விடுபட்டவனாக இருக்க சித்தம் கொண்டிருப்பாரானால், இந்தக் கண்ணோட்டத்தின்படி நான் என்னிடமே கேட்டுக்கொள்ள வேண்டியதாவது: "எங்கள் இருவருடைய அன்றாட தேவைகளைப் பூர்த்திச்செய்திடும் பண வசதி என்னிடத்தில் உள்ளதா அல்லது ஒருவேளை சகோதரியால் உதவிசெய்ய முடியாமல் போனால், சகோதரியின் உதவி இல்லாமலேயே வேலை செய்து என்னால் போதிய அளவு சம்பாதிக்க முடியுமா அல்லது எனக்கு வேலை இல்லாமல் போனால், சகோதரியால் தேவ வேலையைத் தொடர முடியுமா அல்லது எங்கள் இருவராலும் இவைகள் அனைத்தையும் சமாளிக்க முடியுமா அல்லது நாங்கள் இருவருமே தேவ ஊழியத்தினின்று வெளியேறும் அவசியம் ஏற்பட்டு, மற்றவர்களைப்போன்று நானும் வேறு ஏதேனும் வேலைக்குச் செல்ல வேண்டியிருந்து, இதன் நிமித்தம் நான் ஆசீர்வாதங்களையும், சிலாக்கியங்களையும் இழப்பது மாத்திரமல்லாமல், சகோதரியும் இழந்துபோக நான் காரணமாகிடுவேனா?”

நாங்கள் இருவருமே சோதனையினுடைய இந்தக் கடைசி தருணத்தின்போது நிலைநிற்போம் என்பதை நான் எப்படி அறிவேன்? ஒரே ஒரு தருணத்தின்போதே விவாகத்தில் ஒன்றிணைக்கப் பட்டுள்ளவர்களில் ஒருவர் தப்பறையினால் மேற்கொள்ளப்பட்ட சம்பவத்தில் . . . ஜீவித துணை வீழ்ந்துபோகையில், மற்றத் துணைக் கர்த்தருக்குத் தொடர்ந்து உண்மையாய்க் காணப்பட்டதை நான் அறிந்திருக்கின்றேன்; மற்றபடியுள்ள எல்லாச் சந்தர்ப்பங்களிலும், நான் அறிந்திருக்கிறவரை திருமணமாகியுள்ள இருவருமே வீழ்ந்துபோயுள்ளனர். இதன் காரணமாக இப்படி முயற்சி எடுத்து என்னுடைய அல்லது ஒரு சகோதரியினுடைய கிறிஸ்தவ நலனுக்கடுத்த காரியங்களை அபாயத்திற்குள்ளாக்குவது தகுதியான காரியமென இருக்கும் என்று எனக்குத் தோன்றவில்லை. இது ஒருவேளை என் அழைப்பையும், தெரிந்துகொள்ளுதலையும் நான் நிறைவேற்றுவதிலிருந்து என்னைத் தடைப்பண்ணிடுவதற்கான வாய்ப்பாக இருக்குமானால், கர்த்தருடைய கிருபை மற்றும் பலத்தினால், “இதைச் செய்யாதே” என்று நான் என்னிடமே கூறிக்கொள்வேன்.

இது விஷயங்களில் அதிகமான சாக்குப்போக்குகளை நமக்குச் சாத்தான் கொடுத்திடுவதற்கு எப்போதும் ஆயத்தமாயிருக்கின்றான் என்பதை நாம் அறிவோம் மற்றும் ஒருவேளை

சாக்குப்போக்குகளைத் தேடிக்கொண்டிருப்போமானால், நாம் ஏற்றுக்கொள்ளும் வண்ணமான சாக்குப்போக்குகளைச் (ஒரு சகோதரன் அல்லது சகோதரி மூலமாகக்கூட) சாத்தான் நமக்குக் கொடுக்க முடிகிறவனாய் இருக்கின்றான்.

"சில விஷயங்கள் தொடர்பான ஆலோசனைகளை நாம் நாடிக்கொண்டிருந்து, அவ்வாலோசனைகளை, சிறுமந்தையினருக்கு ஆலோசனைக்கொடுக்க முடியாத சிலரிடமிருந்து - அதாவது திரள்கூட்டத்தாரின் அங்கத்தினர்களிடமிருந்து பெற்றுக்கொள்கின்றவர்களாய் இருப்போம்" என்று ஒரு சகோதரன் கூறியுள்ளார்.

ஒவ்வொரு எண்ணங்களையும், வார்த்தைகளையும், கிரியைகளையும் கூர்ந்து ஆராய்ந்துபார்ப்பதன் வாயிலாக, சுயநலமான எண்ணங்கள் நம்மில் இடங்கொள்ளக்கூடாது என்று பார்க்கின்றேன் மற்றும் தவறான எண்ணங்களுக்கு நாம் ஒருவேளை இடம்கொடுக்கவில்லையெனில், தவறான செயல்களும் நடைப்பெறாது.

காலம் வெகு குறைவாய் உள்ளது! வருஷங்களை எண்ணிக்கொண்டிருக்காமல், வாரங்களையும், நாட்களையும் வைத்து நாம் காலங்களை எண்ணிக்கொண்டிருக்கின்றோம்; சிறு மந்தையினுடைய கடைசி அங்கத்தினன் இரண்டாம் திரையைக் கடந்து செல்வதற்குச் சில காலங்களே உள்ளன மற்றும் அதிலும் சில காலங்கள் கடந்துபோயுள்ளது.

இந்த வார்த்தைகள் புதிய மனதிற்கோ அல்லது அவர் சித்தத்திற்கோ முழு இசைவுடன் இல்லாதிருந்தால், இவ்வார்த்தைகளைக் கர்த்தர் நன்மைக்கு ஏதுவாய் மாற்றிடுவாராக என்று நான் ஜெபம்பண்ணுகின்றேன்.

நான் ஜெயங்கொள்பவனாகத்தக்கதாக, ஆம்! முற்றிலும் ஜெயங்கொள்பவனாகத்தக்கதாக அருமையான சகோதரியே எனக்காக ஜெபம்பண்ணிடுங்கள்.

மிகுந்த கிறிஸ்தவ அன்புடன் இடுக்கமான வழியில் உங்களோடுகூட ஓடுபவனுமாகிய உங்கள் சகோதரன் ..................................................................

* * * * *

மேல்இடம்பெறும் கடிதத்தில் நல்வாதங்கள் காணப்படுகின்றபோதிலும், அப்போஸ்தலனால் முன்வைக்கப்படும் மறுபக்கக் காரியத்தினையும் நாம் மறந்துவிடக்கூடாது. விவாகம்பண்ண வேண்டுமா அல்லது விவாகம்பண்ண வேண்டாமா எனும் விஷயத்திலுள்ள தீர்மானத்தினுடைய பொறுப்பானது தனிப்பட்ட ஒவ்வொருவரின் மீதே காணப்படுகின்றது. சிலருக்கு இக்காரியமானது நிச்சயமாகவே மேல் இடம்பெறும் கடிதத்தில் இருப்பதுபோன்று காணப்படும், மேலும் இவர்களைப்போன்றே கவனத்துடன் காணப்படும் மற்றவர்களுக்கு இக்காரியமானது வேறுபட்டுக் காணப்படலாம். ஒவ்வொருவரும் தன் மனதில் திட்டவட்டமாய் முடிவெடுத்துக்கொள்வார்களாக.

இது விஷயத்தில் முழுமையாய்த் தீர்மானிக்க முடியாமலும், முடிவான நிலைப்பாட்டினை எடுத்து, விவாகம் வேண்டாம் என்று தீர்மானிக்க முடியாமலும் இருப்பவர்கள், மறுபக்க நிலைப்பாட்டினை எடுத்துக்கொண்டு, விவாகம்பண்ணிடுவார்களாக. தீர்மானமில்லாமல் இருத்தல், ஊசலாட்டம், வெதுவெதுப்பாய் இருத்தல் என்பவற்றைக்காட்டிலும், வேறு எதுவும் ஆவிக்குரிய ஜீவியத்திற்கு மிகவும் பாதகமாய் இருக்கமுடியாது. உங்கள் பூமிக்குரிய உணர்வுகளின் விஷயத்தில் அல்லது மற்றவர்களுடைய

உணர்வுகளின் விஷயத்தில் பொறுப்பற்ற விதத்தில் செயல்பட்டு விளையாடாதீர்கள். கர்த்தருக்கு மகிமையாகவும் - திவ்விய சித்தத்திற்கு இசைவாகவும் இருக்கும் என்று நீங்கள் கருதுகின்ற விதத்தில் உறுதியாயும், உடனேயும் காரியங்களை முடிவுப்பண்ணிடுங்கள். கர்த்தருக்கு உங்களிடத்தில் இருக்கும் சிறந்ததைக் கொடுக்கத்தக்கதாக, இந்த உங்கள் தீர்மானத்தின்படி செயல்படுங்கள் மற்றும் இதற்கு முரணான யாவற்றையும் தூரப்படுத்திடுவீர்களாக. தீர்மானம், உறுதியாயிருத்தல் என்பவை குணலட்சணம் வளர்வதற்கு உதவியாயிருக்கும். பொறுப்பற்று/விளையாட்டாய்ச் செயல்படுதல் என்பது உண்மை குணலட்சணத்தினைச் சிதைக்கின்றது.

---

R4823

## சிறுபிள்ளைகள் என்னிடத்தில் வருகிறதற்கு இடங்கொடுங்கள்

தங்கள் பிள்ளைகள் குறித்தும் மற்றும் அவர்களைத் தாங்கள் கர்த்தருக்கு அர்ப்பணித்துள்ளதை ஏதேனும் விதத்தில் எப்படிக் காண்பித்திடலாம் என்பது குறித்தும் பல்வேறு தருணங்களில் பெற்றோர்கள் விசாரித்ததுண்டு. சிறு குழந்தைகளுக்கு ஞானஸ்நானம் கொடுப்பதற்கு நாங்கள் மறுப்புத் தெரிவிப்போம், ஏனெனில் அப்படிக் கொடுப்பது என்பது தேவ வார்த்தைக்கு எதிரானதாய் இருக்கும் - ஏனெனில் ஞானஸ்நானமானது விசுவாசிகளுக்குரியதென்றும், கர்த்தருக்கு ஊழியம்புரிவதற்கு மரணபரியந்தமான அவர்களின் அர்ப்பணிப்பிற்கும், இப்படிச் செய்வதன் மூலம் கர்த்தரோடு அவரது உயிர்த்தெழுதலின் சாயலில் பங்கடைவார்களென்ற அவர்களுடைய விசுவாசத்திற்குமான அடையாளமாய் இருக்கின்றது என்றும் தேவவசனம் தெரிவிக்கின்றதாய் இருக்கின்றது.

எனினும் எப்படிச் சாமுயேல் குழந்தையாயிருக்கையில் கர்த்தருக்கென அர்ப்பணம் பண்ணப்பட்டார் என்றும், நம்மைக் குழந்தையிலேயே கர்த்தருக்காகவும், அவரது ஊழியத்திற்காகவும் என்று அர்ப்பணித்துள்ளதாக எப்படி நம் பெற்றோர்கள் நம்மிடம் தெரிவித்திருந்தார்கள் என்றும், எப்படி அனைத்து யூத சிறுவர்கள் கர்த்தருடைய சித்தத்திற்கு இசைவாக ஒருவிதத்தில் கர்த்தருக்கென்று ஒப்புக்கொடுக்கப்பட்டனர் என்றும் நாங்கள் நினைவுகூர்ந்தோம். குழந்தைகளை இயேசு ஆசீர்வதிப்பதற்காக அல்லது அவர்கள் ஆசீர்வதிக்கப்படத்தக்கதாய், அவர்களுக்காக ஜெபிக்கத்தக்கதாக எப்படிப் பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளை இயேசுவினிடத்தில் கொண்டுவந்தார்கள் என்றும்கூட நாங்கள் நினைவுகூர்ந்தோம். ஆண்டவர் செய்திடுவதற்கு இது ஒரு முக்கியமற்ற வேலை என்று சீஷர்கள் எண்ணி, குழந்தைகளைத் தடைபண்ணினபோதோ, "சிறுபிள்ளைகள் என்னிடத்தில் வருகிறதற்கு இடங்கொடுங்கள்; அவர்களைத் தடைபண்ணாதிருங்கள்; தேவனுடைய இராஜ்யம் அப்படிப்பட்டவர்களுடையது" (மாற்கு 10:14) என்று இயேசு கூறினதையும் நாங்கள் நினைவுகூர்ந்தோம். இனிமேல் நாங்கள் பூரூக்கிலின் சபையில் காணப்படும் ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமை மாலையன்று குழந்தைகளை ஆசீர்வதிக்கும் நிகழ்வைப் பெற்றிருப்போம் என்று நாங்கள் அறிவிப்புக் கொடுத்தோம். ஏதேனும் சபைகளை நாம் சந்திக்க வரும் தருணங்களில், அதுவும் அது பொதுக்கூட்டங்களாக இல்லாத தருணங்களில், இச்சேவை விரும்பப்படுகிற பட்சத்தில் நிறைவேற்றவும் படலாம்.

இந்த ஒரு நிகழ்வானது பெற்றோர்கள் மீதும், குழந்தைகள் மீதும் அனுகூலமான தாக்கத்தைப் பெற்றிருக்கும் என்பதும், பெற்றோர்களிடத்தில் அவர்களது பொறுப்புகளைப் பதியபண்ணுகிறதாகவும்

இருக்கும் என்பதும் எங்களுடைய அபிப்பிராயமாக இருக்கின்றது. குழந்தைகள் இப்படித் தேவனுக்குப் பொதுப்படையாக எல்லார் முன்னிலையிலும் முறையாய் அர்ப்பணிக்கப்பட்டிருக்கின்றனர் எனும் உண்மையானது, பெற்றோர் தங்கள் கடமைகளை நிறைவேற்றிடுவதற்கு உதவிடும் மற்றும் பிள்ளைகள் தாங்கள் இப்படியாகத் தங்களுடைய பெற்றோர்களினால் திவ்விய பராமரிப்பினிடத்திற்கு ஒப்புக்கொடுக்கப்பட்டிருக்கின்றனர் என்ற உண்மை பற்றின அறிவிற்கு வருகையில், இது பிள்ளைகளுக்கும் உதவியாய் இருக்கும்.

இப்படிச் செய்வது/இந்நிகழ்வானது ஒரு சட்டமாகும் என்றோ, கடமையாகும் என்றோ, மரபு வழக்கம் என்றோ புரிந்துகொள்ளப்படக்கூடாது. இப்படிச் செய்ய விரும்புபவர்களுக்கான சௌகரியத்திற்கு மாத்திரமே இது ஒழுங்குப்படுத்தப்பட்டுள்ளது. இச்சேவையானது ஒரே நபரால் மாத்திரம்கூடச் செய்யப்பட வேண்டியதில்லை. சத்தியத்தின் எந்த ஓர் ஊழியக்காரனும், குழந்தையினுடைய பெற்றோரின் வேண்டுகோளுக்கு இணங்க, காரியங்களை அனைவர் முன்னிலையிலும் அறிவித்து, திவ்விய ஆசீர்வாதத்திற்காக வேண்டிடுவது தகுதியானதே.

---

R5613 [தெரிந்தெடுக்கப்பட்ட பத்திகள்]

# தாவீது இராஜாவின் கொள்ளுப்பாட்டி
## ரூத்

"உம்முடைய ஜனம் என்னுடைய ஜனம்; உம்முடைய தேவன் என்னுடைய தேவன்." (ரூத் 1:16)

பெத்லகேம் என்னும் தாவீதின் ஊரில்தான் கதை ஆரம்பமாகிறது. இங்குதான் நூற்றாண்டுகள் தாண்டி தாவீதின் குமாரனும், தாவீதின் ஆண்டவருமான இயேசு பிறக்கின்றார். இந்தக் குடும்பத்தின் மத உணர்வு அவர்களது பெயர்களின் உட்பொருளிலிருந்து விளங்குகின்றது. புருஷனுடைய பெயரான எலிமலேக் என்பது, "என் தேவன் ஓர் இராஜா" என்று பொருள்படும். அவனுடைய மனைவியின் பெயரான நகோமி என்பது, "யேகோவாவுக்குப் பிரியமுள்ள" என்று பொருள்படும். இவர்களுடைய இரண்டு குமாரர்களின் பெயரானது, மக்லோன் (இளைத்துப்போகிறது) மற்றும் கிலியோன் (இளைத்துப்போகிறான்) ஆகும்.

எதிரியின் படையெடுப்பு மற்றும் தாங்கள் உழைத்த உழைப்பிற்கான பலனை அடிக்கடி இழந்துநின்ற நிலையில், கடுமையான வறட்சியைத் தொடர்ந்துவந்த பஞ்சத்தினிமித்தம் மிகவும் சோர்வடைந்ததால், இவர்கள் தங்கள் வீட்டைவிட்டு யோர்தானைக் கடந்து, மோவாப் தேசத்திற்குப்போய், அங்குப் பத்து வருஷங்கள் குடியிருந்தார்கள். அங்கு இவர்களுடைய இரண்டு குமாரர்களும் திருமணம் செய்துகொண்டார்கள். இரண்டு குமாரர்களும் மரித்ததால், அவர்களின் மனைவிகள் விதவைகள் ஆனார்கள். எலிமலேக்கும் மரித்துப்போனார். தன்னுடைய சொந்தத் தேசத்திற்குத் திரும்பிச்செல்ல நகோமி முடிவு செய்தபோது, அவளிடத்தில் ஒன்றும் காணப்படவில்லை. மேலும் இதிலிருந்து, வாக்குத்தத்தம் மற்றும் உடன்படிக்கையின் தேசத்தைவிட்டு விக்கிரக ஆராதனை செய்பவர்களும், தேவனுடன் எவ்விதத்திலும் உடன்படிக்கையின் உறவு இல்லாதவர்களுமான ஜனங்கள் மத்தியில் வாழச்சென்றதில் இந்தக் குடும்பத்திற்கு எந்த ஓர் ஆதாயமும் இருக்கவில்லை என்று தெரிகின்றது.

பூமிக்குரிய காரியங்களுக்காக, நம்முடைய தேவன் சார்ந்த காரியங்களைத் தியாகம் செய்வது என்பது, ஒருபோதும் நல்ல நடத்தையாய் இருக்காது என்ற ஒரு பாடத்தை இங்கு நாம் கற்றுக்கொள்வது

பயனுள்ளதாய் இருக்கும். "தேவனுக்குதான் முதன்மை" என்ற மேற்கோளிட்ட வாசகமே எல்லாக் கிறிஸ்தவர்களிடம் காணப்பட வேண்டும். மோவாபியர்கள் லோத்தின் சந்ததியாய் இருப்பதின்மூலம், இஸ்ரயேலர்களோடு தொடர்புள்ளவர்களாகக் காணப்பட்டிருந்தாலும், கிட்டத்தட்ட ஒரே மொழியில் பேசுகிறவர்களாக இருந்தாலும், தேவனுடைய உடன்படிக்கை என்பது, ஆபிரகாமின் சந்ததியோடு மாத்திரம் இருப்பதால், மற்றப் புறஜாதிகள்போல, மோவாபியர்களும் இஸ்ரயேலின் காணியாட்சிக்கு அயல்நாட்டாராக, வெளிநாட்டாராக மற்றும் அந்நியர்களாக உள்ளதால், இவர்கள் மத்தியில் ஊழியஞ்சார்ந்த வேலைகளைச் செய்யத்தான் இந்தக் குடும்பம் மோவாபுக்குச் சென்றது என்று சொல்லவும் முடியாது. "பூமியின் எல்லா வம்சங்களுக்குள்ளும் உங்களை மாத்திரம் அறிந்துகொண்டேன்" (ஆமோஸ் 3:2) என்று நாம் வாசிக்கிறபடி, இஸ்ரயேலை அல்லாமல் தேவன் மோவாபியர்களை அழைக்கவில்லை. ஆகையால், மோவாபியர்களை மதக்கொள்கையில் மாற்ற முயற்சிப்பது என்பதுகூடச் சரியானதாய் இருக்காது.

இந்தக் குடும்பம் செய்த தவறைப்போன்றே, அநேக கிறிஸ்தவர்கள் செய்கின்றார்கள். கிறிஸ்தவர்கள் தேவனுடன் மேலான ஓர் உறவு வைத்திருப்பதால், கிறிஸ்தவர்களுக்கே அதிக பொறுப்பு உள்ளது. மேலும் அவருடைய சித்தம் மற்றும் "தெளிந்த புத்தியுள்ள ஆவி" பற்றி அதிகமாகவும், தெளிவாகவும் அறிவு பெற்றிருக்க வேண்டும். தங்களுடைய இரண்டு குமாரர்களும் யேகோவா தேவனிடம் உண்மையாயிருப்பதைப் பாதுகாக்கும்வண்ணமாக, இவர்களால் ஒவ்வொரு சரியான செல்வாக்கும் பிரயோகிக்கப்பட்டிருக்க வேண்டுமே அல்லாமல், கறைப்படும் வாய்ப்புள்ள கடவுள் நம்பிக்கையற்ற தேசத்தில் இந்த இரண்டு குமாரர்களைக் கொண்டுசென்றது ஞானமற்ற காரியம் ஆகும்.

"கர்த்தருடைய கை எனக்கு விரோதமாயிருக்கிறதினால், உங்கள் நிமித்தம் எனக்கு மிகுந்த விசனம் இருக்கிறது" (ரூத் 1:13) என்று சொல்வதிலிருந்து, நகோமி இந்தக் காரியங்களை எல்லாம் உணர்ந்துகொண்டாள் என்பதில் சந்தேகமில்லை. அவளுக்கு விரோதமாக இருந்த கர்த்தருடைய கரமானது, உண்மையாகவே அவளுக்குச் சாதகமாகவே இருந்தது. மேலும் அது சரியான விதத்தில் அவளிடத்தில் செயல்பட்டு, வாக்குத்தத்தத்தின் தேசத்திற்கு அவளை திரும்பிவரச்செய்தது.

---

R4697 [தெரிந்தெடுக்கப்பட்ட பத்திகள்]

# வாட்ச் டவரிலிருந்து ஒரு பார்வை

## செலவில்லாத மற்றும் சிறந்த ஆயுள் காப்பீடு

ஆம்! கர்த்தருடைய அர்ப்பணம்பண்ணியுள்ள ஜனங்கள் பாதுகாத்திடுவதற்கெனத் தங்களுக்கு எந்தப் பூமிக்குரிய ஜீவனும் இல்லை என்றும், தங்கள் பூமிக்குரிய ஜீவனானது, கர்த்தருக்கும், அவருடைய நோக்கங்களுக்கும் அடுத்த ஊழியங்களுக்கென்று மரணபரியந்தம் அர்ப்பணம்பண்ணப்பட்டுள்ளது என்றும் அறிந்திருக்கின்றனர். இந்தக் கண்ணோட்டத்தின்படி பார்க்கையில் செலவில்லாத மற்றும் சிறந்த காப்பீட்டுப் பத்திரம், கிறிஸ்துவின் மரணத்திற்குள்ளான ஞானஸ்நானத்தின் முழுமையான அர்ப்பணிப்பாகும் மற்றும் நம்முடைய சுதந்தரத்தின் அச்சாரமாகிய பரிசுத்த ஆவியினுடைய ஜெநிப்பித்தலே நமக்குக் கர்த்தர் அளிக்கும் இரசீதாய் இருக்கின்றது. இத்தகையவர்கள் பொதுவாகக் கள்ளச்சகோதரர்களிடமிருந்து புறங்கூறுதலையும், தூஷணங்களையும், துன்புறுத்தல்களையும் வட்டியாக

அவ்வப்போது பெற்றுக்கொள்வார்களென இவர்கள் வேதவாக்கியங்களினால் வாக்குறுதியளிக்கப் பட்டுள்ளனர். இந்த அனுபவங்களானது அவர்களுக்கு விசேஷித்த ஆசீர்வாதத்திற்கு ஏதுவானது என்றும், அவர்களோடு திவ்விய தயவு தொடர்ந்து காணப்படுகின்றது என்பதற்கான உறுதியாய் இருக்கும் என்றும் உறுதியளிக்கப்பட்டுள்ளது.

ஆனால் இப்போதோ, பூமிக்கடுத்த ஆதரவுகளுக்காய்த் தங்களைச் சார்ந்திருப்பவர்களின் நலனுக்கடுத்த விஷயங்களில் தங்கள் பூமிக்குரிய ஜீவியங்களைக் கொடுப்பது தொடர்புடைய விஷயத்திலுள்ள சிலருடைய கேள்விகளுக்குப் பதிலளிக்க எண்ணம்கொண்டுள்ளோம். இதுவரையிலும் இதழாசிரியர் எவ்வகையான ஜீவ காப்பீடுகளையும் கொண்டிருக்கவில்லை மற்றும் கொண்டிருக்க விரும்பவுமில்லை. எனினும் அனைவருக்கும் சூழ்நிலை ஒன்றுபோல் இருப்பதில்லை. எங்களுடைய புரிந்துகொள்ளுதலின்படி, தன்னைச் சார்ந்திருக்கும் மனைவியையும், பிள்ளைகளையும் பெற்றிருக்கும் ஒரு தகப்பன், ஒருவேளை பிள்ளைகள் சிறு பிள்ளைகளாகவும், தொழில்பண்ண முடியாதவர்களாகவும் இருக்கையில், இவர்களுக்கான சில பொறுப்புகளை உடையவராய் இருப்பார்; "ஒருவன் தன் சொந்த ஜனங்களையும், விசேஷமாகத் தன் வீட்டாரையும் விசாரியாமற்போனால், அவன் விசுவாசத்தை மறுதலித்தவனும், அவிசுவாசியிலும் கெட்டவனுமாயிருப்பான்" (1 தீமோத்தேயு 5:8) என்று அப்போஸ்தலன் கூறியுள்ளார். இவ்வார்த்தைகளானது அப்போஸ்தலனுடைய நாட்களில், வாழ்க்கைக்கான காப்பீட்டுத் திட்டங்களுக்குப் பொருந்தாது என்றும், அது ஒரு மனுஷன் தன் கடன்களைக் கட்டித் தீர்ப்பவனாகவும், தன் குடும்பத்தினை நியாயமான சௌகரிய நிலையில் வைத்துக்கொள்பவனாகவும் மற்றும் கூடுமானால், வீட்டையோ அல்லது தான் ஒருவேளை மரித்துப்போகும் காலங்களில் தன் குடும்பத்தாருக்கு உதவியாக இருக்கும் ஏதோ ஒன்றினை சிறிய முன்னேற்பாடாக ஏற்பாடுபண்ணுகிறவனுமாகவும் இருக்க வேண்டும் என்று குறிக்கின்றதாய் இருக்கும் என்று காரணம் காட்டப்படலாம். ஆனால் ஒருவேளை இப்படி அவரால் செய்ய முடியவில்லையெனில், ஜீவ காப்பீட்டுத் திட்டத்தின் வாயிலாகத் தனது கடமையினை இக்காலங்களில் அவர் செய்திடலாம்.

சீக்கிரத்தில் காப்பீட்டு நிறுவனங்களும், நமது சமுதாயத்தின் தற்போதுள்ள மற்ற ஏற்பாடுகளும், (தானியேல் 12:1) தானியேல் தீர்க்கதரிசியினால் முன்னுரைக்கப்பட்டுள்ள மகா உபத்திரவ காலங்களில் சீர்குலைந்துபோய்விடும் என்று நாங்கள் நம்புவதாகக் கூறினது உண்மைதான் மற்றும் அதைத்தான் தொடர்ந்து சொல்லிக்கொண்டும் இருக்கின்றோம்.

---

R4752 [தெரிந்தெடுக்கப்பட்ட பத்திகள்]

# வாட்ச் டவரிலிருந்து ஒரு பார்வை

## அறுவைசிகிச்சை மூலம் சீர்த்திருத்தம்

"அறுவைசிகிச்சையினால் நிகழும் அற்புதங்களானது, தொடர்ந்து பெருகிக்கொண்டு வருகின்றது மற்றும் அறுவைசிகிச்சைகளானது மனரீதியான மற்றும் ஒழுக்க ரீதியான குணமாக்குதலைக் கொண்டுவந்துள்ளது போன்ற உபகாரத்தினை, அறிவியலானது வேறு எங்கும் கொண்டுவரவில்லை. தலையில் அறுவைசிகிச்சைப்பண்ணி மூளை அமைப்பிலுள்ள சில சிறு பள்ளங்களை/புடைப்புகளை நீக்குதல் அல்லது மண்டை ஓட்டினைத் திறப்பதன் வாயிலாக மூளைக்கு விரிவான இடம் உண்டாக்கிக்

கொடுத்தல் - என்பவைகளினால் மந்த நிலைமையிலும், துன்மார்க்க நிலைமையிலுமுள்ள சிறுவர்கள், இயல்பான மனம் மற்றும் ஒழுக்க நிலைமைகளை அடைந்து, வாழ்க்கையில் மீண்டும் நல்வாய்ப்பினை அடைந்துள்ளதான அநேகம் சந்தர்ப்பங்கள் பற்றின தகவல்கள் அவ்வப்போது வந்துகொண்டு இருக்கின்றது.

எட்வட் இ. கிறிமெல் என்பவன், 14-வயதுள்ளவனாக இருக்கையில், கம்பினால் தலையில் அடிவாங்கியுள்ளான் மற்றும் இதனால் மண்டைஓட்டில் முறிவு ஏற்பட்டு, பள்ளம்/புடைப்பு ஒன்றும் ஏற்பட்டுள்ளது. அவனது பெற்றோர்கள் இதற்கு எந்தக் கவனமும் காட்டிடவில்லை; ஆனால் சிறுவன் வளர்ந்தபோது அவ்வப்போது பாதகம்பண்ணும் குணங்களை (criminal tendencies) வெளிப்படுத்திக் கொண்டிருந்தான். அவன் பள்ளியில் அவ்வளவாய்ப் படிப்பில் நாட்டம் காட்டவில்லை மற்றும் தீமைச் செய்பவனாய் இருந்துவந்தான் மற்றும் அடிக்கடி காவல்துறையின் கவனத்திற்கு வந்தவனாய் இருந்தான். சிறைச்சாலையில் மூன்று வருஷங்கள் இருந்துவந்த பின்னரும், அவன் கைதுச் செய்யப்பட்டான் மற்றும் மோசடி புரிந்ததாக விசாரிக்கப்பட்டான். தவறு செய்தது எதையும் அவன் மறுக்கவில்லை மற்றும் அவனை விசாரித்தவர்கள், குற்றம்புரிவதற்கான அவனது மன உணர்வுகள், தலையில் அவனுக்கு ஏற்பட்ட காயங்களுடைய விளைவே என்று நம்பினார்கள்.

## மூளையின் மீதான அழுத்தத்தை விடுவித்தபோது, மனுஷனுடைய நடத்தை மாறினது

அவன் சார்பில் விசாரித்தவர்களால் முன்வைக்கப்பட்ட இக்கூற்றுகள் மீது நீதிபதி நம்பிக்கை வைக்காமல், அவனைக் கைத்தேர்ந்த குற்றவாளியாகவும், சமுகத்திற்கு ஆபத்தானவனாகவும் கருதி, டென்மோராவிலுள்ள சிறைச்சாலையில் தண்டனை அனுபவிக்கும்படிக்குத் தீர்ப்பிட்டார். தான் ஒரு நல்ல வாழ்க்கை வாழ விரும்புவதாகவும் மற்றும் தனக்குத் தவறு செய்யச் சந்தர்ப்பங்கள் கிடைக்குமானால், தன்னால் தவறு செய்திடுவதற்கான வாய்ப்பினைத் தவிர்த்திட முடியவில்லை என்பதாகவும் கூறி, தனக்கு அறுவைசிகிச்சைப் பண்ணித்தரவும் வேண்டி, அவன் சிறைச்சாலை அறுவைசிகிச்சை நிபுணரிடம் கெஞ்சினான். தொடர்ந்து குற்றமே செய்துகொண்டிருப்பதற்குப் பதிலாக, மரணத்தை விரும்புவதாகவும், தான் மரணத்திற்குப் பாத்திரவானாக இருப்பதையும் தெரிவித்தான். இறுதியாக அவன் போஸ்டன் நாட்டின் பிரசித்திப்பெற்ற அறுவைசிகிச்சை நிபுணரின் கவனத்தை ஈர்க்கப்பெற்றான் மற்றும் அவர் அறுவைசிகிச்சைப்பண்ணி, மூளை மீதிருந்த அழுத்தங்களை விடுவித்து, அம்மனுஷனுடைய எண்ணங்கள் மற்றும் செயல்பாடுகளுக்கான முழு இயல்பையும் மாற்றிப் போட்டார் மற்றும் அறுவைசிகிச்சைக்கு முன்னதாகக் காணப்பட்ட மிகவும் கபடுள்ள மற்றும் குற்றம்புரியும் இயல்புகளிலிருந்து விடுபட்டு, அவன் அனைவருக்கும் முன்பாக அதுமுதற்கொண்டு, உயர்பண்புணர்வுகளுள்ள, நல்லொழுக்கமுள்ள மனுஷனாக மாறிக் காணப்பட்டான்.

மூக்கிலிருந்தும், தொண்டையிலிருந்தும் சதைகளையும், மற்ற வளர்ச்சிகளையும் அறுவைசிகிச்சையின் மூலம் அப்புறப்படுத்துவதினால் சரியாய்ச் சுவாசிக்க முடியும் நிலைமை உண்டாகும் காரணத்தினால், மந்தமான அநேகம் பிள்ளைகள், சுறுசுறுப்பான, அறிவுள்ள பிள்ளைகளாக மாறியுள்ளனர். இயல்புக்கு மாறான சரீர அமைப்புகள் வாயிலாகவே பொதுவாகக் குற்றம்புரிதல் நிகழ்கின்றது; இயல்புக்கு மாறான நிலைமைகள் இருப்பதை அறியாமல் இருப்பதன் விளைவே, அநேகமாக மந்தத் தன்மையாகும்" - *Plattsburg Sentinel* (செய்திதாள்)

* * * *

ஒருவேளை மண்டையோட்டில் ஏற்படும் விபத்துக்கள் நல்லொழுக்க சீர்க்கேடுகளை உண்டுபண்ண முடியுமானால், மூளையினுடைய வடிவமானது பெரிதும் முன்னோர் வழியினால் (heredity) - அதிலும் குறிப்பாகத் தாயினால் பெரிதும் தாக்கத்திற்குள்ளாகும் என்பதை யார்தான் மறுக்க முடியும்? இது "இதோ, நான் துர்க்குணத்தில் உருவானேன்; என் தாய் என்னைப் பாவத்தில் கர்ப்பந்தரித்தாள்" (சங்கீதம் 51:5) என்னும் வேதவாக்கிய வார்த்தைக்கு இசைவாகவே உள்ளது.

அப்படியானால் குழந்தையினுடைய சரீர பலத்திற்கும், ஆற்றலுக்கும் அடுத்த விஷயங்களில் தகப்பனுக்கு அதிக பங்குள்ளது என்பதை யார்தான் மறுக்கக்கூடும்? இன்னுமாகத் தகப்பனானவர் கர்ப்பக்காலப்பகுதிகளில், தாயானவளின் சுற்றுச் சூழ்நிலைமைகள் மற்றும் மனதினுடைய நிலைமைகளின் விஷயத்தில் பெரிதும் பொறுப்புடையவராய் இருக்கின்றார். அம்மாதிரியான காலங்களில் யார் ஒருவரிடமிருந்தும் அநியாயமான, கடுமையான, கொடுமையான வார்த்தைகள் வருவது என்பது, அதுவும் குறிப்பாகக் கணவனிடமிருந்து வருவது என்பது தாயினுடைய மனதில் - அவள் சுமக்கும் குழந்தையினிடத்தில் பதியும் அளவுக்குள்ள வருத்தமுள்ள எண்ணங்கள், சோகமுள்ள எண்ணங்கள், கோபம், பகைமை முதலானவைகள் எழும்பிவிடும்.

பெலவீனர்களையும், மனுஷீகத்தினுடைய தீய ஒழுக்கங்களையும் காண்கையில், மற்ற எல்லாரையும்விடப் பெற்றோர்களே அதிகம் தயவாய்க் காணப்பட வேண்டும்; அனைவருமே கொஞ்சம் அனுதாபம் கொண்டிருக்க வேண்டும். சட்டங்களையும், ஒழுங்குமுறைகளையும் அமல்படுத்துகையில், ஒட்டுமொத்த மனுக்குலத்தினுடைய குடும்பத்தில், பாவம் மற்றும் மரணத்தினுடைய ஆளுகை தொடர்ந்துகொண்டிருக்கின்றது என்பதை நினைவில்கொள்வோமாக. நீதியைச் கட்டிக்காப்பதற்கும் மற்றும் மேல்கூறப்பட்டுள்ள விஷயத்தில் நம்மைக் காட்டிலும் அதிகம் சிரமத்திற்குள் காணப்படுகிறவர்களுக்கு உதவிச் செய்வதற்கும் நம்மால் முடிந்த அனைத்தையும் அனுதாபத்தோடு செய்வோமாக.

---

R3607 [தெரிந்தெடுக்கப்பட்ட பத்திகள்]

## ஒரு துன்மார்க்கத் தகப்பனுடைய நல்ல குமாரன்

### 2 நாளாகமம் 34:1-13

"நீ உன் வாலிபப்பிராயத்திலே உன் சிருஷ்டிகரை நினை." (பிரசங்கி 12:1)

அரியணைக்கு எட்டு வயதில் வந்தமர்ந்தவுடன், தன் மனம் மற்றும் இருதயத்தை மதியீனமானவைகள்மீது மற்றும் தற்பெருமைக்கு அடுத்தவைகள்மீது செலுத்திடுவதற்குப் பதிலாக, யோசியா, தனது பதினாறாவது வயதில் சரியான இராஜாவாக தான் ஆண்டுவந்த இராஜ்யம் தொடர்புடைய விஷயத்தில் தேவனுடைய சித்தத்தை அறியவும், அதைச் செய்யவும் ஊக்கமாய் நாடத்துவங்கினது குறிப்பிடத்தக்க காரியமாகும். இவரது இருபதாவது வயதில், இவரது தீர்மானங்கள்/நம்பிக்கைகள் ஸ்திரமடைந்தது மற்றும் யூதேயா இராஜ்யத்தில் இவர் முழுமையான சீர்த்திருத்தத்தைக் கொண்டுவரத்துவங்கினார் மற்றும் இதே சீர்த்திருத்தத்தை தன் இராஜ்யபாரத்திற்கும் தாண்டி, மனாசே, எப்பிராயீம், சிமியோன் மற்றும் நப்தலியின் பாகங்களிலும் செய்திட்டார். விக்கிரகங்களையும், அதனோடு உள்ள மற்ற பல்வேறு உடைமைகளையும் அழித்துப்போட இவர் கட்டளையிட்டதோடு மாத்திரமல்லாமல், இவரே நேரில் சென்றும் இக்காரியங்களை மேற்பார்வையிட்டார் -

இதற்குரிய பொறுப்பினை இவர் ஒப்படைத்திருந்ததான அதிகாரிகளோடுகூட இவரும், விக்கிரகங்கள் முற்றும் முழுமையாக அழிக்கப்படுகின்றதா என்று நேரில் சென்று பார்வையிட்டார். இவரின் இந்தச் சீர்த்திருத்த வேலையைக்குறித்தும், பெத்தேலில் இவர் பாகாலின் பலிபீடத்தில் பாகாலுடைய ஆசாரியர்களின் எலும்புகளைச் சுட்டெரித்துப்போடுவது குறித்தும் பல வருடங்களுக்கு முன்னதாகவே தீர்க்கத்தரிசனம் உரைக்கப்பட்டிருந்தது (1 இராஜாக்கள் 13:1-3; 2 இராஜாக்கள் 23:15-17).

யோசியாவின் மற்றும் யூத யுகத்தினுடைய மற்றச் சீர்த்திருத்தவாதிகளினுடைய செய்கைகளானது - அதாவது பல்லாயிரம் பாகாலின் ஆசாரியர்களை வெட்டிப்போட வைத்திட்டதான எலியாவின் செய்கைகளானது, அநேகம் உண்மையுள்ள கிறிஸ்தவர்களுடைய மனங்களைக் குழப்பத்திற்குள்ளாக்கி, பொதுப்படையான அல்லது தனிப்பட்ட விஷயத்தில் வன்முறை செயல்களில் இறங்க ஏதுவாக்கிற்று; ஆனால் இது இந்தச் சுவிசேஷயுகத்தினுடைய ஆவிக்கு முற்றிலும் எதிர்மாறானதாகும். இது விஷயத்தில் சரியான புரிந்துகொள்ளுதலைப் பெற்றுக்கொள்வதற்கு - யூத தேசமானது திவ்விய ஏற்பாட்டின்படி, உலகத்திலுள்ள தேவனுடைய நியாயத்தீர்ப்பினை அடையாளப்படுத்துகிறதாய் இருப்பதை நாம் நினைவில்கொள்வது அவசியமாகும்; நியாயப்பிரமாணத்தின் கீழ் இஸ்ரயேலின் ஒவ்வொரு இராஜா மீதும், அந்தத் தேசத்தின்மீதும், தனிநபர்கள் மீதும்கூடச் சில விதங்களில் வன்மையாக விக்கிரக ஆராதனையை எதிர்ப்பதற்குரிய ஒரு குறிப்பிட்ட பொறுப்புக் காணப்பட்டது, காரணம் அந்த இராஜ்யபாரமானது தேவனையும், அவரது நீதியுள்ள ஆளுகையையும் அடையாளப்படுத்தினதாய் இருப்பதை நாம் நினைவில்கொள்வது அவசியமாகும். யூத யுகத்தினுடைய முடிவில், மாம்சீக இஸ்ரயேலர்கள் ஒரு ஜாதியாராகத் தெய்வீகத் தயவினின்று அறுபுண்டுப்போனபோது, மேற்கூறப்பட்டுள்ள விஷயங்களை நிர்வகிக்கத்தக்கதாக அந்த ஜனங்களுக்குக் கொடுக்கப்பட்டதான அனைத்துப் பிரமாணங்களும், சட்டங்களும் முடிவிற்கு வந்தது, இரத்துச் செய்யப்பட்டது, செல்லுபடியாகாமல் போனது. இது, அவர்களை நோக்கி நமது கர்த்தர்: "உங்கள் வீடு உங்களுக்குப் பாழாக்கிவிடப்படும்" என்று கூறினதுபோன்று ஆயிற்று (மத்தேயு 23:38).

பெந்தெகொஸ்தே நாளில் ஆவிக்குரிய இஸ்ரயேலர் ஏற்படுத்தப்பட்டதோடுகூட, ஒரு புதிய உடன்படிக்கை, ஒரு புதிய உறவு, புதிய சட்டதிட்டங்கள் செயலாக்கத்தில் வந்தது. ஆவிக்குரிய இஸ்ரயேலர்கள் பூலோக ஆயுதங்கள்கொண்டு யுத்தம்பண்ணிடக்கூடாது. அவர்களுடைய யுத்தம் அவரவர் சொந்த இருதயத்திற்குள்ளாகக் காணப்பட வேண்டும் . . . மாம்சத்தின் ஆசைகள், எதிராளியானவனின் தந்திரங்கள் மற்றும் உலகத்தினுடைய ஆவிக்கு எதிராய் விசுவாசத்தின் நல்லப் போராட்டத்தினைப் போராடிட வேண்டும். ஒவ்வொரு இருதயத்திற்கும் கைப்பற்றிடுவதற்குரிய சொந்த இடங்கள் உண்டு, அப்புறப்படுத்திடுவதற்கு விக்கிரகங்கள் உண்டு; ஒவ்வொரு இருதயமும், மாம்ச சரீரத்தினுடைய எல்லைகள் அனைத்திலும், நமது தேவனாகிய கர்த்தருக்கான தொழுதுகொள்ளுதலை, ஆராதனையை, சேவித்தலை நிலைநாட்டிடுவதற்கு எதிர்ப்பார்க்கப்படுகின்றது. உலகத்தின் காரியங்களைப் பொறுத்தமட்டில், அவர்களோடு நமக்கு எந்தத் தொடர்பும் இல்லை என்று நமக்குத் தெளிவாகச் சுட்டிக்காண்பிக்கப்பட்டுள்ளது. "நான் உலகத்தானல்லாததுபோல, அவர்களும் உலகத்தாரல்ல" (யோவான் 17:16). உலகம் தற்போது புறஜாதிகளினுடைய கரங்களில் காணப்படுகின்றது மற்றும் இது தெய்வீக அனுமதியின் பேரிலேயே ஆகும். புதுச்சிருஷ்டிகள், ஆவிக்குரிய இஸ்ரயேலர்கள் தங்களை உலகத்திடமிருந்து பிரித்து வைத்துக்கொள்ள வேண்டும் மற்றும் இவர்களது மனசாட்சியானது இவர்களை அனுமதித்திடும் அளவிற்கு, இவர்கள் அதிகாரங்களுக்குக் கீழ்ப்பட்டிருக்க வேண்டும்.

ஏனெனில் இந்த அதிகாரங்கள் தேவனாலே அனுமதிக்கப்பட்டவைகளேயாகும். ஆனால் அதற்கென்று இவர்கள் தங்கள் இருதயத்திலுள்ள அதிகாரங்களினுடைய செய்கைகள் அனைத்திற்கும் இணங்கிட வேண்டும் என்று அர்த்தமாகாது - ஒருவேளை இணங்கிடுவார்களானால், இவர்கள் மிகவும் துக்கம் அடைபவர்களாய் இருப்பார்கள்; ஆனாலும் இவர்கள் அனுபவித்திடும் துக்கம் அல்லது எதிர்ப்பு அல்லது பாடுகள் அல்லது பொறுமை மற்றும் விசுவாசத்திற்கான சோதனைகள் எதுவாயினும், அது - இவர்களை எதிர்கால இராஜ்யத்தினுடைய நிலைமைகளுக்கு ஆயத்தம்பண்ணுவதற்குரிய கர்த்தருடைய மெருகூட்டிடும், தகுதிப்படுத்திடும் செயல்முறையாகவும் கருதப்பட வேண்டும்; மேலும் அது - இவர்களைத் தமக்கும், நீதிக்கும் அதிகமதிகமாய் நேர்மையுள்ளவர்களாகவும் மற்றும் தாழ்மையுள்ளவர்களாகவும், பொறுமையுள்ளவர்களாகவும் ஆக்கிடத்தக்கதாகவும், எதிர்காலத்தில் கர்த்தருடைய செம்மையான வழிகளில் உலகினை ஆசீர்வதிப்பதும், ஆளுகைச்செய்வதும், நியாயந்தீர்ப்பதும், சீர்த்தூக்கிவிடுவதும், ஊக்குவிப்பதுமான மகா வேலைக்கு, இவர்கள் நன்கு தகுதியடைந்தவர்களாகக் காணப்படத்தக்கதாகவும் ஆக்கிடும் அவரது செயல்முறையாகவும் கருதப்பட வேண்டும்.

## தாயின் செல்வாக்கு

வேறொரு பாடத்தில் எப்படி ஒரு நல்லத் தகப்பன், ஒரு துன்மார்க்கமான குமாரனைப் பெற்றிருந்தார் என்பதையும், மேலும் அது அந்தத் தகப்பன் மற்றக் காரியங்களில் எல்லாம் எவ்வளவுதான் வைராக்கியமும், உண்மையுள்ளவராக இருப்பினும், பெற்றோருக்குரிய தாலந்துகளில் தனக்கிருக்கும் குறைபாடு குறித்து என்னதான் காரணங்கள் காட்டினாலும், அவர் தகப்பனுக்குரிய தன் கடமைகளில் உண்மையற்று இருந்ததை, கடமை தவறியதைச் சுட்டிக்காட்டினது என்பதையும் பார்த்தோம். நம்முடைய இன்றைய பாடம் நேர்மாறானதாகக் காணப்பட்டு. . . துன்மார்க்கமான தகப்பன் ஒருவனுடைய நல்லக் குமாரனைக்குறித்துக் காண்பித்துத் தருகின்றதாய் இருக்கும்; மேலும் இது ஒரு நல்லத் தாயார் இருந்துள்ளதைச் சுட்டிக்காட்டுகின்றது என்று அனுமானிப்பது முற்றிலும் நியாயமானதாக எங்களுக்குத் தோன்றுகின்றது. ஏனெனில் துன்மார்க்கமான ஒரு தகப்பனும், துன்மார்க்கமான ஒரு தாயும், ஒரு நல்லக் குமாரனை வளர்த்து உருவாக்கினார்கள் என்பது முற்றிலும் சாத்தியமற்றதாகும். ஆகையால் யோசியாவின் தாயார், ஒரு தேவபக்தியுள்ள ஸ்திரீ என்று எடுத்துக்கொள்வது நியாயமானதென நாங்கள் எண்ணுகின்றோம்.

தாய் மனம் வைத்தால், அவள் தன்முன் கொண்டிருக்கும் உயர்ந்த கொள்கைகளுக்கேற்ப தன் பிள்ளைகளைப் பயிற்றுவித்து வளர்ப்பதில் தன் சக்தியினைப் பிரயோகிக்கத்தக்கதாக, மனித குடும்பத்திலுள்ள தாய்மார்களைத் தொழில் மற்றும் அரசியலுடைய சண்டைச்சச்சரவுகளினின்றும், சுயநலத்தினிடமிருந்தும் அதிகளவில் பிரித்து வைத்துள்ளதான தெய்வீக ஏற்பாடானது, மனுஷஜாதிக்குப் பல்வேறு வழிகளில் மாபெரும் ஆசீர்வாதமாகவே இருந்துள்ளது என்பதில் ஐயமில்லை. ஐயத்திற்கிடமின்றி இது எல்லை மீறின சுயநலம் மற்றும் பாவத்திற்குள் வேகமாய்ச் சீரழிந்து போவதையும் தடுத்திருக்கின்றது மற்றும் எங்கெல்லாம் இயற்கையான இந்த ஏற்பாடு குறுக்கிடப்பட்டுள்ளதோ, அது அங்குக் குழந்தைகளுக்கு ஏறக்குறைய பாதகமாகவே இருந்துள்ளது என்பதிலும் உறுதியே.

ஓ! உலகத்தின் தாய்மார்கள் கர்த்தரினால் தங்களது கரங்களில் வைக்கப்பட்டுள்ள நன்மைக்கேதுவான மகா வல்லமையினை அறிந்துகொள்வார்களாக! தொட்டில் ஆட்டும் கைகள்தான், உலகத்தை ஆளும் கைகளாகும் என்பதை அவர்கள் உணர்ந்துகொள்வார்களாக! இதை உணர்ந்துகொள்வதும், தங்கள் கைகளில் தேவனால் இவ்விதம் வைக்கப்பட்டுள்ள வாய்ப்பினைப் பயன்படுத்திடுவதும், தெய்வீக ஏற்பாட்டிற்கு முறையாய் இணங்குவதாக இருக்கும் மற்றும் இது அரசியல்,

தொழில் முதலானவைகளில் பங்குபெறுவதற்கான இலட்சியங்களை இவர்களிடத்திலிருந்து முற்றிலும் எடுத்துப்போட்டுவிடும். மற்றப் பாடப்பொருள் விஷயத்தில் போலவே, இந்த ஒரு பாடப்பொருள் மீதான கர்த்தருடைய வார்த்தைகளிலுள்ள ஆலோசனைகளும், தெய்வீக வழிநடத்துதலினுடைய ஏற்பாடுகளும் கவனிக்கப்படாமல் போவதே பிரச்சனையாய் இருக்கின்றது. பாவப்பட்ட உலகமானது தனக்குத் தெரிந்ததற்கேற்ப அநேகமாகச் செய்துகொண்டுவருகின்றது; அதுவும் இயற்கையான சுபாவ உள்ளுணர்வை அங்கீகரித்து, அது நேர்மையாய் நடைமுறைப்படுத்தப்படுவதற்கு ஏற்ப, சிலர் சிறப்பாகவும், சிலர் மோசமாகவும் செய்துகொண்டுவருகின்றனர்.

கிறிஸ்தவ தாய்மார்கள், அதிலும் விசேஷமாகத் தெய்வீகக் குணலட்சணம் மற்றும் திட்டம் குறித்து அதிகம் புரிந்துகொள்ளத்தக்கதாகத் தங்கள் புரிந்துகொள்ளுதலின் கண்களைத் திறக்கப்பெற்றவர்கள், தங்கள் பிள்ளைகளைப் பயிற்றுவிப்பதிலுள்ள தங்களுக்கான சிலாக்கியங்களைத் தங்களுக்கான பொறுப்புகளைப் பயன்படுத்திடுவதில் துரிதமாய்க் காணப்பட வேண்டும். இவ்வேலையானது சிறியது என்றோ, முக்கியத்துவமற்றது என்றோ, ஆற்றலற்றது என்றோ யாரும் எண்ணிட வேண்டாம். தேவனுக்கும், அவரது வார்த்தைகளுக்கும், தங்கள் பெற்றோர்களுக்கும், பென்னான பிரமாணத்திற்கும், அதாவது தங்கள் விளையாட்டு நண்பர்கள், அயலார்களிடத்தில் நடந்துகொள்ளும் விஷயத்தில் பொன்னான பிரமாணத்திற்கும் கீழ்ப்படியவும், மரியாதைக்கொண்டிருக்கவும் மற்றும் ஒழுங்காய் இருக்கவும், கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டு இருக்கவும், காலந்தவறாமல் இருக்கவும், ஒழுக்கமாக இருக்கவும், உண்மையாய் இருக்கவும் முறையாய்ப் பயிற்றுவிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு குமாரனும், ஒவ்வொரு குமாரத்தியும் . . . ஜீவியத்தில் அவன் மற்றும் அவளது சொந்த ஆசீர்வாதத்திற்கு ஆயத்தமாக்கப்பட்டவர்களாய் மாத்திரம் இராமல், இன்னுமாக மற்றச் சிறுவர்களுக்கும், சிறுமிகளுக்கும், புருஷருக்கும், ஸ்திரீக்கும் முன்மாதிரியாகவும், ஆசீர்வாதமாகவும் இருப்பதற்கும்கூட ஆயத்தமாய் இருப்பார்கள். இப்படியாக ஒவ்வொரு தாயினுடைய செல்வாக்கானது நாட்கள் செல்லச்செல்ல விரிவடைகின்றது மற்றும் பெருகுகின்றது.

ஒருவேளை இத்தகைய விரும்பத்தக்கச் செல்வாக்குகளானது குடும்ப வட்டாரத்தைத் தாண்டி வெளியே உள்ளவர்களுக்காய்ச் செயல்படுத்தப்படவில்லை என்றாலும், குழந்தைகளை முறையே பயிற்றுவிப்பது என்பது, குடும்பத்திற்கு மிகவும் அவசியமானதாகும் - குடும்பத்தின் பொதுவான சமாதானத்திற்கும், சௌகரியத்திற்கும், அன்பிற்கும் மிகவும் அவசியமானதாகும். தகப்பன் குடும்பத்தின் தலைவனெனத் தன் பொறுப்பினைத் தட்டிக்கழிக்காதவராகவும், இவரோடுகூட உடன்வேலையாளாகவும், வாழ்க்கைத் துணையாகவும் தாயானவள் ஊக்கமாய் ஒத்துழைத்தாலும் . . . குடும்பத்தின் தேவைகளைச் சந்திப்பதற்கென உழைக்கும் தகப்பன் குழந்தைகளுடன் அதிகம் தொடர்பில் இராததால், குழந்தைகளைப் பயிற்றுவிப்பதிலுள்ள பொறுப்பினுடைய பெரும்பகுதி தாய் மேலேயே காணப்படுகின்றது. ஒருவேளை தாயானவள் மாத்திரம் கிருபையின் பிள்ளையாக இருக்கும் பட்சத்தில், அவள் கணவன் அனுமதிக்கும் அளவுக்குத்தக்கதாக இந்த முழுப்பொறுப்பும் அவள் தோள்கள்மீதே காணப்படும் மற்றும் அவளுக்கு இருக்கும் ஒரே உதவியும், வழிநடத்துதலும் கர்த்தர் அருளிடும் உதவியும், வழிநடத்துதலும் மாத்திரமேயாகும். அந்தோ பரிதாபம்! ஒழுங்கும், கட்டுப்பாடும் இல்லாத அநேகம் குடும்பங்கள், உண்மையில் குடும்பங்களே அல்ல. அன்பு மற்றும் செல்லம் காட்டுதல்குறித்த தவறான அபிப்பிராயங்கள் உடைய அநேகம் பெற்றோர்கள் - தேவனுக்கும், பெற்றோருக்கும், மற்றவர்களுடைய நலன்கள், உரிமைகளுக்குமான உரிய மரியாதை காட்டாத விதங்களில் பிள்ளைகள் வளருவதற்கு அனுமதித்துவிடுகின்றனர். இதுவே உலகமெங்கிலும் வெளிப்படும் ஒழுங்கின்மையினுடைய அதிகரிப்பிற்கும், கட்டுபாடற்ற ஜீவியத்திற்குமான இரகசியமாகும். உண்மையில் ஆச்சரியம் என்னவெனில் . . . விதிமுறைகளும், ஒழுங்கும், அன்பும், இரக்கமும் இல்லாத குடும்பங்களையுடைய

உலகமானது, அது இருக்க வேண்டிய மோசமான நிலைமையைக் காட்டிலும், இப்பொழுது குறைந்த மோசமான நிலைமையிலேயே காணப்படுகின்றது.

## உன் வாலிபப் பிராயத்தில்

நம்முடைய பாடத்தினுடைய ஆதார வசனமானது, ஒவ்வொரு குடும்பங்களிலும் முக்கியமானதாய்க் கருதப்பட வேண்டும். தன் சிருஷ்டிகரை நினைவுகூருவதற்கும், மதிப்பதற்கும் கற்றுக்கொண்டுள்ள பிள்ளை - தன் சொந்த அபூரணங்களைக்குறித்து, இது எவ்வாறு வந்தது என்பது குறித்தும், தன்மீதும், உலகம் அனைத்தின்மீதும் காணப்படும் மரணத் தண்டனையானது பூமிக்குரிய வளங்கள்/நம்பிக்கைகள் அனைத்தையும் அழித்துப்போட்டது என்பது குறித்தும் அறிந்துகொண்டுள்ள பிள்ளை - சாபத்தினின்றுள்ள இரட்சிப்பைக்குறித்த செய்தியை ஏற்றுக்கொள்வதற்கும், தேவன் எப்படித் தம்முடைய அன்பினால் இயேசுவை மாபெரும் மீட்பராகக் கொடுத்தருளியுள்ளார் என்பதையும், இவரது மரணம் பெற்றுத் தந்ததான விடுதலையானது, மனித குடும்பத்தினுடைய ஒவ்வொரு அங்கத்தினன்மீதும் சீக்கிரமாய்க் கடந்துவரும் என்பதையும் ஏற்றுக்கொள்வதற்கும் ஆயத்தமாயிருப்பான். தேவனுக்கு மரியாதைக்கொண்டிருப்பதன் இயல்பான விளைவுதான், பெற்றோருக்கு மரியாதைக் கொண்டிருப்பதாகும்.

இந்தப் பத்திரிக்கையினுடைய இதழாசிரியர் (சகோதரர் ரசல் தன்னைக்குறித்துப் பதிவு செய்கின்றார்) கிறிஸ்தவ பெற்றோர்களுக்குப் பிறப்பதற்கும், கிறிஸ்தவ செல்வாக்கின் கீழ்ப்பேணி வளர்க்கப்படுவதற்குமுரிய நற்சிலாக்கியம் பெற்றவராய் இருந்தார் மற்றும் இப்படியாகத் தேவனுடைய வழிநடத்துதலினால் ஜீவியத்தின் ஆரம்பக்காலங்களிலேயே கர்த்தருக்கு அர்ப்பணம்பண்ணிடுவதற்கான சிலாக்கியத்தினையும், ஆசீர்வாதத்தினையும் காணும்படிக்கு வழிநடத்தப்பட்டார். இப்படியாக அவர் தப்புவிக்கப்பட்டதான அநேகம் படுகுழிகளையும், கண்ணிகளையும் வேதனையான அனுபவங்களையும் மற்றும் இப்படியாக அவர் அடைந்திட்டதான மாபெரும் ஆசீர்வாதங்களையும் மிகத் தெளிவாய் அவரால் இப்பொழுது ஜீவியத்தைத் திரும்பிப்பார்க்கையில் காணமுடிகின்றது. தேவனுடைய கிருபையினால் பாவத்தினின்று விலகியோடி, மாபெரும் ஜீவன் கொடுப்பவரைப் பற்றிப்பிடித்து, அவர் கரத்தை உறுதியாய்ப் பிடித்து, அவர் அடிச்சுவட்டில் நடக்க நாடிடும் அனைவரின்மீதும் இதழாசிரியரின் அனுதாபங்கள் காணப்படுகின்றது. இத்தகையவர்கள் அனைவரோடுகூட இதழாசிரியர் களிகூருகின்றார்; எனினும் பொல்லாத நாட்கள் வருமுன்னும் . . . இளமைப் பருவத்துக்குரிய இன்பக் களியாட்டங்களில் மூழ்கி, பின்னர்க் கசப்பான அனுபவங்களை அனுபவிப்பதற்கு முன்னும் . . . ஜீவியத்தினுடைய ஆரம்பக்காலங்களிலேயே கர்த்தரை நாடித்தேடுகிறவர்கள்மீது இதழாசிரியர் விசேஷமாய் அக்கறைக்கொண்டுள்ளார். இந்தப் பத்திரிக்கையினுடைய வாலிப வாசகர்கள் அனைவரிடத்திலும் . . . அதிலும் விசேஷமாகத் தேவனுடைய அன்பு தங்கள் இருதயங்களைக் கட்டி இழுப்பதை உணர்ந்தவர்களாகவும், அந்த இழுக்கும் வல்லமைக்கு இணங்கி, நம்முடைய இரட்சிப்பின் அதிபதியினுடைய அடிச்சுவடுகளில் - அதாவது சுயத்தை வெறுத்தல் எனும் அடிச்சுவட்டில், சுயத்தை பலிசெலுத்துதல் எனும் அடிச்சுவட்டில், மகிமையின்மேல் மகிமைக்கு வழிநடத்துகின்ற அடிச்சுவட்டில் - நடப்பதற்கென்று தங்களை முழுமையாய் அர்ப்பணம் பண்ணியுள்ளவர்களாகிய வாலிபர்கள் அனைவரிடத்திலும் நாம் ஆழமான அக்கறைக்கொண்டிருக்கின்றோம். அத்தகையவர்கள் அனைவருக்கும் நாம் கர்த்தருக்குள் உற்சாகமான வாழ்த்துதல்களைத் தெரிவிக்கின்றோம் - ஏற்கெனவே அடியெடுத்து நடந்துவந்துள்ள அடிகளுக்காய்ப் பாராட்டுத் தெரிவிக்கின்றோம் மற்றும் இனிமேலும் அடியெடுத்து நடக்கவேண்டியவைகளுக்காய் வாழ்த்துச் சொல்கின்றோம்.

R3110 [தெரிந்தெடுக்கப்பட்ட பத்திகள்]

# உம்முடைய ஜனம், என்னுடைய ஜனம்

## ரூத் 1:16-22

"சகோதரசிநேகத்திலே ஒருவர்மேலொருவர் பட்சமாயிருங்கள்." (உரோமர் 12:10)

கர்த்தர் தம்முடைய ஜனங்கள் தமக்கும், தங்களுடைய உடன்படிக்கைக்கும் உண்மையற்றுப் போனதற்கான அவருடைய நியாயத்தீர்ப்பாக, கிதியோனுடைய நாட்களில் காணப்பட்ட பற்றாக்குறையானது - பாலஸ்தீனியாவில் பஞ்சமாக மாறிப்போன காலக்கட்டத்தில், நகோமியினுடைய கணவன் சவக்கடலுக்கு மறுபக்கத்தில் - மோவாப் தேசத்தில் தன் குடும்பத்தோடு குடியேறுவதற்குத் தீர்மானம்பண்ணினார். மோவாபியர்கள் லோத்தினுடைய சந்ததியினராய் இருந்தனர் மற்றும் இவர்கள் ஆபிரகாமின் பிள்ளைகளாகக் கருதப்படக்கூடாது என்றும், இவர்கள் ஆபிரகாமுக்குப் பண்ணப்பட்ட வாக்குத்தத்தத்தைச் சுதந்தரிக்கப்போகிறவர்களோடு பங்காளிகளல்ல என்றும், இதனால் இவர்கள் இஸ்ரயேலர்கள் போன்று விசேஷித்த வழிநடத்துதல்களுக்கும், சிட்சித்தல்களுக்கும், வழிகாட்டப்படுதலுக்கும் கீழ்ப்பட்டவர்களல்ல என்றும் கர்த்தர் தம் ஜனங்களாகிய இஸ்ரயேலர்களுக்குத் தெரிவித்திருந்தார். நகோமியும், அவளது இரண்டு குமாரர்களும் எவ்வித வருத்தமும் இல்லாமல், குடும்பத்திற்கு நல்ல வளம் உண்டாக்க வேண்டும் என்ற நம்பிக்கையில் தன் கணவனோடு சென்றாள். எனினும் தாங்கள் கர்த்தருடைய விசேஷித்த பாதுகாப்பு மற்றும் வழிநடத்துதலின் கீழ்க்காணப்படுகையில், இப்படியாகத் தங்கள் சொந்தக் குடும்பக்காரியங்களைத் தாங்கள் வழிநடத்த முற்பட்டது தவறு என்று அவள் பிற்பாடு உணர்ந்துகொண்டாள்.

இஸ்ரயேலர்களென அவர்கள் திவ்விய வாக்குத்தத்தங்களை மிகவும் உயர்வாய்க் கருதி இருந்து, வாக்குத்தத்தத்தின் தேசத்தையும், வாக்குத்தத்தத்தின் ஜனங்களையும் விட்டு, இந்த வாக்குத்தத்தத்திற்கு அந்நியர்களாகவும், ஏறக்குறைய விக்கிர ஆராதனைக்காரராகவும் காணப்படுபவர்களோடு போய்க் கலந்திருக்கக்கூடாது. பூமிக்குரிய ஐசுவரியங்களைப் பார்க்கிலும் கர்த்தர் பக்கத்தில், அவர் ஜனங்கள் மத்தியில் காணப்படுவதையே மிக முக்கியமானதாகக் கருதியிருக்க வேண்டும். இது விஷயத்தில் நகோமி மீது குற்றஞ்சாட்டிட முடியாது; பொறுப்பு அவள் கணவன் மீதே காணப்பட்டது மற்றும் அவள் இருதயமானது இந்தக் குடிபெயரும் விஷயத்திற்கு முழுச் சம்மதத்தோடு இருக்கவில்லை என்பது உறுதியே; ஏனெனில் பத்து வருஷங்களுக்குப் பின்பு, அவளது கணவனும், அவள் இரண்டு குமாரர்களும் மரித்துப்போன பிற்பாடு, அவள் உடனே கர்த்தருடைய ஜனங்களிடத்திற்கும், அவர் அவர்களுக்குக் கொடுத்திருந்த தேசத்தினிடத்திற்கும் திரும்பிடுவதற்கு முடிவெடுத்தாள்.

மனித சுபாவம் இப்படியாகவே எங்கும் மற்றும் எப்போதும் காணப்படுகின்றது. எத்தனை பேர்கள் தங்கள் மேலான நன்மைகளை அலட்சியம்பண்ணினவர்களாகவும், கர்த்தருடைய வாக்குத்தத்தத்தையும், அவரோடு உடன்படிக்கைப்பண்ணினதன் மூலம் அவரோடு கொண்டிருக்கும் உறவினையும் அலட்சியம்பண்ணினவர்களாகவும் காணப்பட்டு, தற்கால ஜீவியத்திற்கான திட்டங்களைத் தீட்டிட தவறுதலாய் நாடிச்செல்கின்றனர்! தம்மோடு உடன்படிக்கைப்பண்ணியுள்ள ஜனங்கள் அனைவரின் காரியங்களைக் கர்த்தர் பார்த்துக்கொள்வார் என்பதும், சகலத்தையும் அவர்களது நன்மைக்கேதுவாய் நடக்கப்பண்ணிடுவார் என்பதும்தான், உடன்படிக்கைப்பண்ணியுள்ள ஜனங்களுக்கான கர்த்தருடைய ஏற்பாடாய் இருக்கின்றது என்பதை எத்தனை பேர் மறந்து போய்விடுகின்றனர்! பூமிக்கடுத்த நலன்களைப்

பிரதானமாய்க் கவனத்தில் கொள்வதற்குப் பதிலாக, நகோமியின் கணவன் தனக்கான மற்றும் தன் குடும்பத்திற்கான மத விஷயத்திற்கடுத்த நலன்களையே பிரதானமாய்க் கவனத்தில் கொண்டிருந்து, ஒருவேளை தான் மோவாபிய தேசத்தில் மகா செழிப்பில் வாழ்ந்துகொண்டிருந்தாலும், தான் கர்த்தருடைய ஜனங்கள் காணப்படும் வாக்குத்தத்தத்தின் தேசத்திற்குச் செல்வது என்பது தனது பூமிக்குரிய நன்மைகளில் சிலவற்றை இல்லாமலாக்கிப் போடுவதாக இருப்பினும், வாக்குத்தத்தத்தின் தேசத்திற்குச் செல்வதற்கு விருப்பமாய் இருந்திருக்க வேண்டும்.

ஆவிக்குரிய நன்மைகளுக்கடுத்த காரியங்களுக்கே எப்போதும் முன்னுரிமைக்கொடுக்கப்பட வேண்டும் என்றும், நித்தியமான நன்மையின் கண்ணோட்டத்திலேயே - ஆவிக்குரிய வளர்ச்சி, விருத்தி மற்றும் வளமையின் கண்ணோட்டத்திலேயே - தங்கள் குழந்தைகளுக்கான மேலான நன்மைகள் மற்றும் செல்வாக்குகளின் கண்ணோட்டத்திலேயே - பூமிக்கடுத்த காரியங்கள் ஒழுங்குப்படுத்தப்பட வேண்டும் மற்றும் நிர்வகிக்கப்பட வேண்டும் என்றும் உள்ள இந்தக் கருத்தினை ஆவிக்குரிய இஸ்ரயேலர்களாகிய கர்த்தருடைய ஜனங்கள் தொடர்ந்து மனதில் கொண்டிருப்பது நலம். தங்களையும், தங்கள் குடும்பங்களையும் சாதகமற்ற, தேவபக்தியற்ற சூழ்நிலைக்குள் எடுத்துச் செல்லுவதற்குரிய எந்த ஆலோசனைகளைப் பின்பற்றிடுவதற்கும் இவர்கள் தயக்கம் கொள்ள வேண்டும் என்பது மாத்திரமல்லாமல், எதன் நிமித்தமும் அத்தகைய ஆலோசனைகளின்படி நடக்கமாட்டோம் என்று தீர்மானமாய்க் காணப்பட வேண்டும்; இன்னுமாகக் கர்த்தருடைய ஜனங்களையே இவர்களின் ஜனமாகக் கொண்டிருப்பது என்பது இந்தத் தற்கால ஜீவியத்தினுடைய சௌகரியங்களை, ஆடம்பரங்களைக் குறைவுபடுத்துவதாய் இருப்பினும், இப்படிக் கொண்டிருக்கவே தீர்மானமாய்க் காணப்பட வேண்டும்; மேலும் இது மகா ஆவிக்குரிய ஆசீர்வாதங்களையும், தற்காலத்திற்குத் தயவுகளையும் கொணர்கின்றதாய் இருக்கும் மற்றும் இப்படியே தொடர்ந்தால் . . . தங்கள் வீடுகள், நிலங்கள், உறவினர்கள் முதலானவைகளைக் காட்டிலும் கர்த்தரை அன்புகூருகிறவர்களுக்கு அவர் வாக்களித்துள்ளதான மகிமையான பலனை அடைவதற்கு ஏதுவாகும்.

---

R2782 [தெரிந்தெடுக்கப்பட்ட பத்திகள்]

# சுவாரசியமான கேள்விகளுக்குப் பதில்

கேள்வி: -- மார்ச் 1-ஆம் தேதி, 1900 வருஷத்தின் வாட்ச் டவர் கட்டுரையில் "அர்ப்பணிக்கப்பட்ட இல்லம் கனப்படுத்தப்பட்டது" எனும் தலைப்பின் கீழ்க் குடும்பத்தின் தலைவனென ஒரு கணவன் மற்றும் தகப்பன் கொண்டிருக்கும் பொறுப்புகள் தொடர்புடைய உங்கள் கருத்தினை நான் வாசித்தேன். அந்தக் கட்டுரையில், தங்கள் குடும்பங்களினுடைய தலை ஸ்தானத்தினை நிறைவேற்றாதவர்கள் . . . தாங்கள் ஜெயம்கொண்டவர்களாக இருக்கின்றார்களா அல்லது இல்லையா முதலியவைக்குறித்துத் தங்களிடமே கேள்வி கேட்டுக்கொள்ள காரணமுண்டு என்று நீங்கள் தெரிவித்திருந்தீர்கள். தங்கள் சொந்தக் குடும்பங்களில் கொஞ்சமே செல்வாக்கு அல்லது கட்டுப்பாட்டினைக்கொண்டிருக்கும் அநேக சகோதரர்களை நான் அறிந்திருக்கின்றபடியால், அக்கேள்வியானது மிகவும் முக்கியமான ஒன்றாக எனக்குத் தோன்றுகின்றது. ஆகையால் நம்முடைய வீட்டார் யாவரும் அர்ப்பணிக்கப்பட நாம் எந்தமட்டும் எதிர்ப்பார்ப்பது நியாயமானதாக இருக்கும் என்று கேட்கின்றேன்?

பதில்: -- நீங்கள் எங்களுடைய கருத்தினை முழுமையாகக் கிரகித்துக்கொள்ளவில்லை . . . குடும்பத்தின் அங்கத்தினர்கள் யாவரும் அர்ப்பணிக்கப்பட வேண்டும் என்றல்ல, மாறாக குடும்பத்தின் தலை அர்ப்பணிக்கப்பட்டவராகவும், வீட்டின் தலைவனென அவர் கடமைகளையும், உரிமைகளையும் நிறைவேற்றி வருபவராகவும் இருப்பாரானால், இல்லமும், அதன் நிலைமைகளும் அர்ப்பணிக்கப்பட்டிருக்க வேண்டும். ஒருவேளை குடும்பத்தினுடைய அங்கத்தினர்கள் அனைவருமே கிறிஸ்துவுக்குப் புறம்பேயும், கணவன் மற்றும் குடும்பத்தின் தகப்பனுடைய மத கண்ணோட்டங்களுக்கு இசைவற்றும் இருப்பினும் . . . இவரது பரிவுடன், அன்புடன்கூடிய, அதேசமயம் தன் வீட்டார் விஷயத்தில் வேதவாக்கியங்களின் அடிப்படையிலுள்ள இவரது உறுதியான நடக்கையினிமித்தம் - குடும்பத்தினுடைய அங்கத்தினர்கள் யாவரும் இவரது விருப்பங்களுக்கு எதிர்ப்புத் தெரிவிக்காதளவுக்கும், ஒத்துழைப்பதில் பிரியங்கொள்ளும் அளவுக்கும், இவர் தனது குடும்பத்தின் அங்கத்தினர்கள் யாவரிடமிருந்து அத்தகையதொரு மரியாதையினைச் சம்பாதித்து வைக்கின்றவராய் இருக்க வேண்டும். ஆகையால் ஒருவேளை கர்த்தரோ அல்லது சகோதரரில் ஒருவரோ, அவரது பிரதிநிதிகளோ வீட்டின் வழியே கடந்து செல்வாரானால் மற்றும் குடும்பத்தின் கணவரும், தகப்பனுமானவர் அவரை உபசரிக்க எண்ணினாரெனில், முறையே ஒழுங்குக்குள் காணப்படும் வீடானது தகப்பனாருடைய அர்ப்பணிக்கப்பட்ட மனதினுடைய கட்டுப்பாட்டின் கீழ்க் காணப்படுகையில் அது இவர் வரவேற்க விரும்பிடும் யாவரையும் மிகவும் வரவேற்று, இருதயப்பூர்வமாய் உபசரித்திடும் வீடாயிருக்கும். ஒருவேளை (மனைவியின் சார்பில்) ஏதேனும் அதிருப்தி அடைந்து, எதிர்ப்புத் தெரிவிப்பது என்பது குடும்பத்தினுடைய தெய்வீக நிறுவுதலுக்கு எதிரான குற்றமாய் இருக்கும்; ஏனெனில் எபேசியர் 5:23, 24, 29, 33-ஆம் வசனங்களில் அப்போஸ்தலன் கூறியுள்ளதுபோன்று சபைக்குக் கிறிஸ்து தலையாயிருப்பது போன்று, கணவனும், தகப்பனுமானவரே குடும்பத்தின் தலைவராய் இருக்கின்றார்.

இதில் எதுவும் கணவனும், தகப்பனுமானவரின் சார்பில் தன்னிச்சையாய் நடந்துகொள்வதைக் குறிப்பதாகாது; மாறாக கூடுமானமட்டும் அவர் குடும்பத்தின் நலனுக்கடுத்த காரியங்களைக் கவனத்தில் எடுத்துக்கொள்ளவும் மற்றும் குடும்பத்தினுடைய ஒவ்வொரு அங்கத்தினனுக்கும் மகிழ்ச்சியினைக் கொடுத்திடவும் அவர் விரும்புவதையே குறிக்கின்றதாயிருக்கும். எனினும் தேவனுடைய பிள்ளையென இவர் தனது குடும்பத்தினருடைய விருப்பங்களுக்கு மேலாக, கர்த்தருடைய விருப்பங்களை வைத்திடுவது, இவரது கடமையாகும் மற்றும் இதனால் இவர் கர்த்தருக்கான தனது மரியாதை மற்றும் அன்பிற்கான வெளிப்பாடாகக் கர்த்தரை அல்லது அவரது சகோதரரை தனது இல்லத்திற்கு உடனே வரவேற்பவராய் இருப்பார். மேலும் இந்த விஷயத்தில் தன் குடும்பத்தார் ஒத்துழைக்கும்படிக்கு அவர்களிடம் கேட்டுக்கொள்கையில், அவர்களால் புரிந்துகொள்ளப்படுகின்றதோ இல்லையோ, தான் அவர்கள் மீது ஆசீர்வாதம் ஒன்றைக்கொண்டு வருவதை இவர் உணர்ந்துகொள்வார்; மேலும் இப்படி நடந்துகொள்ள தவறுவது என்பது, இவர் கர்த்தருடைய மற்றும் தன்னுடைய விருப்பங்களுக்கு மேலாக தன் குடும்பத்திற்கும், அவர்களது விருப்பங்களுக்கும் முக்கியத்துவம் கொடுப்பதாகிடும் மற்றும் இப்படிச் செய்திடுவதற்கு எந்த ஒரு "ஜெயங்கொள்பவனும்" ஒரு கணம்கூடச் சிந்திக்கமாட்டான். எனினும் அனைத்தும் வற்புறுத்தல் மற்றும் கட்டாயம் முதலியவற்றின் அடிப்படையில் செய்யப்படாமல், கூடுமானமட்டும் அன்பின் அடிப்படையில் செய்யப்படுவதாக. அனைத்து விதங்களிலும் உங்கள் அன்பு வெளிப்படுவதைக் குடும்பத்தார் காண்பார்களாக மற்றும் கர்த்தருக்கான உண்மை அல்லது கொள்கை சம்பந்தப்பட்ட ஒவ்வொரு விஷயத்திலும், குணலட்சணத்திலுள்ள உங்களது உறுதியினையும்கூட அறிந்துகொள்வார்களாக.

ஆனால் அதற்கென்று விருந்தாளிகளுக்காய் மனைவியும், குடும்பத்தாரும் கட்டாயப்படுத்தப்பட வேண்டும் மற்றும் நீண்ட நேரம் வேலை செய்ய வைக்கப்பட வேண்டும் என்று அர்த்தமாகாது; மாறாக அவர்களைப் பராமரிப்பதும், அவர்களது சௌகரியமும்தான் கணவனுடைய முதலாம் காரியமாகும். குடும்பத்தின் தலைவன் தன்னை, தன் சௌகரியங்களை, சுகங்களைக் குடும்பத்தைப் பராமரிப்பதற்கெனப் பலிசெலுத்திட முடிகிற அளவுக்கு, தன் பராமரிப்பின் கீழ்க் காணப்படுபவர்களுடைய நலனுக்கடுத்த காரியங்கள் குறித்துக் கவனிக்கிறவராக இருக்க வேண்டும். ஆனால் தன்னுடைய புருஷத்துவத்தையே விட்டுக்கொடுத்துவிட்டு, குடும்பத்தில் சமாதானத்தை அடைய நாடுவது என்பது தவறாகும் மற்றும் இது சரியான பாதையில் தான் யாரை நடத்த நாடுகின்றாரோ, அவர்களில் தவறான ஆவியினை அவர் ஊக்குவித்துவிடுகிறதாக இருந்திடும்.

எனினும் எங்கு மேல்கூறப்பட்டுள்ள சரியான வழிப் பார்க்கப்படாமல் தவறான வழிப்பார்க்கப்பட்டு, அதுவே பழகிப்போய் வழக்கமாகியுள்ளதோ, அங்குச் சரியான வழியை மிகவும் கொடுமையான விதத்தில் கையில் எடுக்க நாடாமல், மாறாக மிகவும் தயவோடு நாடுவதும், மேலும் தாழ்மையாயும், பொறுமையாயும், தயவாயும் இருப்பதற்கும் - அன்பு, ஆம் அன்பு மாத்திரமே கட்டுப்பாட்டின் கடிவாளங்களைப் பிடிப்பதற்கும் வேண்டி ஜெபத்தோடு நாடுவதும் ஞானமான காரியமாய் இருக்கும்.

---

R5903/R4399 [தெரிந்தெடுக்கப்பட்ட பத்திகள்]

## மக்கெதோனியனின் வேண்டுகோள்

### அப்போஸ்தலர் 16:6-15

அந்த ஜெபக்கூட்டத்தில் காணப்பட்ட அநேகம்பேரில் அல்லது கொஞ்சம்பேரில், ஒருவளுடைய இருதயமானது செய்தியை ஏற்றுக்கொள்வதற்குரிய சரியான நிலைமையில் இருந்தது. அவள் லீதியாள் எனும் பெயருள்ள ஸ்திரீயாவாள்; அவள் இரத்தாம்பரம் விற்கிறவளாய் இருந்தாள். அப்போஸ்தலன் பிரவேசிப்பதற்கும், போதிப்பதற்கும் அனுமதிக்கப்படாத ஆசியா மைனரிலுள்ள தியத்தீரா ஊராளாயிருந்தாள். அநேகமாக அவள் பிலிப்பி பட்டணத்தில் தற்காலிகமாய்த் தங்கியிருந்து, அநேகமாக இரத்தாம்பரம் சாயம் அல்லது இரத்தாம்பரம் தோய்த்த துணியினை விற்பனைப்பண்ணிக் கொண்டிருந்திருக்க வேண்டும். இன்றைய காலங்களைக்காட்டிலும் முந்தைய காலங்களிலேயே சாயங்கள் மிகவும் விலையுயர்ந்தவைகளாக இருந்தன மற்றும் அவைகளை எப்படித் தயாரித்திடுவது என்பது இரகசியமானதாய் இருந்தபடியால், அது வருமானம் ஈட்டித் தந்தது. ஆகையால் லீதியாள் நல்ல நிதிநிலைமையுடன் இருந்தாளென அனுமானிக்கப்படுகின்றது. சத்தியம் அவளது இருதயத்தைத் திறந்து, அவளது புரிந்துகொள்ளுதலின் கண்களைப் பிரகாசிப்பிக்கப் பண்ணினது மாத்திரமல்லாமல், "அவளும், அவள் வீட்டாரும்" முழுமையான அர்ப்பணம்பண்ணவும், அந்த அர்ப்பணத்தினைத் தண்ணீர் ஞானஸ்நானத்தின் வாயிலாய் அடையாளப்படுத்திடவும் முற்பட்டு, சத்தியத்திற்கு உடனே கீழ்ப்படிந்தாள்.

தேவபக்தியுள்ள பெற்றோர்கள், இப்படியான தேவபக்தியின் நாட்டமுள்ள பிள்ளைகளைப் பெற்றவர்களாக எப்போதும் காணப்படுவதில்லை. இம்மாதிரியான அநேகம் உதாரணங்கள் வேதவாக்கியங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. கர்த்தருக்கு உண்மையாய் அர்ப்பணம் பண்ணியுள்ளவர்களும், அவரது வார்த்தையினால் வழிநடத்தப்படுகிறவர்களுமான பெற்றோர் பொதுவாகவே, அவருடன் ஜீவிப்பவர்கள்மீதும், அவரது பராமரிப்பின்கீழ்க் காணப்படுபவர்கள்மீதும், நல்லச் செல்வாக்குடையவராய்

இருப்பார் என்று நமது தனிப்பட்ட அனுபவங்கள்கூட நமக்குக் கற்றுத் தந்துள்ளது. இத்தகைய செல்வாக்கானது ஒவ்வொரு பெற்றோராலும் விரும்பப்பட வேண்டும், இதற்காய் ஜெபிக்கப்பட வேண்டும், அடைய நாடப்பட வேண்டும். ஆனால் இந்தச் செல்வாக்கானது கவனமுள்ள, எச்சரிக்கையுள்ள வார்த்தை மற்றும் செய்கையின்மூலமாக மாத்திரமே அடையப்படமுடியும். வார்த்தைகள் மற்றும் செய்கைகளானது கட்டுப்பாட்டின்கீழ்க் காணப்படுதல் என்பது, இருதயத்தினுடைய ஒவ்வொரு எண்ணங்களும், தேவ சித்தத்திற்குச் சிறைப்படுத்தப்பட்டிருப்பதைக் குறிக்கின்றதாய் இருக்கும்.

எனினும் பிள்ளைகள் பெற்றோரின் அறிவுரையைக் கேட்டு வளரும் வயதைத் தாண்டும்வரையிலும் சத்தியத்தைப் புரிந்துகொள்ளாதவர்களாகவும், தங்கள் பொறுப்புகளை அடையாளம் கண்டுகொள்ளாதவர்களாகவும் காணப்பட்ட பெற்றோர்கள், ஒருவேளை பிள்ளைகள் தங்களையும், தங்களது மத நம்பிக்கைகளையும் மதிக்காதவர்களாய் இருக்கையில், இதனிமித்தம் தங்களையே மிகவும் கடினமாய்க் கடிந்துகொள்ளக்கூடாது. மாறாக கர்த்தருக்குச் சூழ்நிலைகள் என்னவென்று தெரியும் எனவும், அவரைத் தாங்கள் அறிய வந்த பிற்பாடு - தங்கள் ஜீவியங்கள் குறித்தும், கர்த்தருக்கேற்ற சிட்சையிலும், போதனையிலும் பிள்ளைகளைப் பயிற்றுவிப்பது குறித்தும், அவரது வார்த்தைகளில் காணப்படும் அறிவுரைகளைப் புரிந்துகொள்வதற்கான வாய்ப்பினைப் பெற்றப் பிற்பாடு - அவர்கள் செய்த அல்லது செய்யத் தவறின விஷயங்களுக்கு அவர்களைக் கர்த்தர் பொறுப்பாளியாய்ப் பார்ப்பார் எனவும் இந்தப் பெற்றோர்கள் நினைவில்கொண்டிருக்க வேண்டும் (எபேசியர் 6:4).

---

R5859 [தெரிந்தெடுக்கப்பட்ட பத்திகள்]

# முழுமையான சீர்க்கேடு எனும் உபதேசம் வேதவாக்கியங்களுக்கு முரணானது

இப்பொழுது நாம் ஆரம்பக்கால சீர்த்திருத்தவாதிகளினால் முழுமையான ஒழுக்கக்கேடு/சீர்க்கேடு எனும் உபதேசம் பரப்பிவிடப்பட்டபோது, அவர்களில் சிலருடைய மனங்களில் காணப்பட்டதும், தற்காலத்தில் அநேகரினால் கோட்பாடாக ஆதரிக்கப்படுகிறதும், நாம் மறுத்துக் கருத்துத் தெரிவிக்கிறதுமான கருத்திற்கு வருகின்றோம். ஆதாமின் மீறுதல் காரணமாய்ப் பரவலாய் மனுஷகுடும்பத்தின் ஒவ்வொரு அங்கத்தினனையும் பாதிப்பிற்குள்ளாக்கும் விதத்தில் பரவலாய்ச் சீர்க்கேடு உண்டானது என்றும், இதனால் "நீதிமான் ஒருவனாகிலும் இல்லை" என்றும் வேதவாக்கியங்களோடுகூட நாமும் முன்வைக்கின்றோம். "எல்லாரும் வழிவிலகி, ஏகமாய்க் கெட்டுப்போனார்கள்; நன்மை செய்கிறவன் இல்லை, ஒருவனாகிலும் இல்லை" (சங்கீதம் 14:3). "அந்தப்படியே நீதிமான் ஒருவனாகிலும் இல்லை" (உரோமர் 3:10). ஆனால் இந்தச் சீர்க்கேடானது முழுமையானது என்பதை நாம் மறுக்கின்றோம்; மனித குடும்பத்திலுள்ள எந்த ஒரு நபரும் முற்றும் முழுமையாக, அனைத்திலும், எந்த ஒரு நல்லவைகள் அல்லது பாராட்டத்தகுந்தவைகள் இல்லாமல் சீர்க்கெட்டுப் போய்விட்டனர் என்பதை நாம் மறுக்கின்றோம். முழுமையாய்ச் சீர்க்கெட்டுப்போனவர் என்று நாம் அறிந்திருக்கும் ஒரே நபர் - பொய்க்கும், சகல பொல்லாப்புகளுக்கும் பிதாவாகிய சாத்தானேயாவார்.

பரவலான சீர்க்கேடும் மோசந்தான்; மிகவும் பரவலாய் இருக்கின்றபடியால், எந்த மனுஷனும் அவன் தன்னில் சுதந்தரித்துக்கொண்டதும், வளர்த்துக்கொண்டதுமான சீர்க்கேட்டினைக் கண்டுகொள்வதற்கும், தன் சக மனுஷர்களிடத்திலுள்ளவைகளைக் கண்டுகொள்வதற்கும் சிரமப்படுகிறதில்லை. சிலர் வேறு

சிலரைக்காட்டிலும் அதிகமாய்ச் சீர்க்கெட்டிருப்பார்கள்; சிலர் தங்களுடைய சுபாவத்திலும், குணலட்சணத்திலும் தேவனுடைய ஆதி சாயலைக் கொஞ்சம் மங்கலடையப்பெற்றவர்களாகவும், அழிக்கப்பெற்றவர்களாகவும் காணப்படுகின்றனர். நாம் "துர்க்குணத்தில் உருவானோம்" என்றும், "எல்லாவற்றைப்பார்க்கிலும் மனிதனுடைய இருதயமே திருக்குள்ளதும், மகா கேடுள்ளதுமாயிருக்கிறது" என்றுமுள்ள வேதவாக்கியங்களின் அறிக்கைகளுக்கு இசைவாகப் பார்க்கப்படுகையில், சீர்க்கேட்டினை அடையாளம் கண்டுகொள்வதற்குத் தங்கள் கண்களைத் திறக்கப்பெற்ற ஒவ்வொரு சிந்திக்கும் நபரினாலும், அந்தச் சீர்க்கேட்டினை எங்கும் கவனிக்கமுடியும்; சிறுபிள்ளைகளிடத்திலும்கூடக் கவனிக்கமுடியும். சுயசித்தம், மூர்க்கத்தனமான பிடிவாதம், கோபம் ஆகியவை பிறந்து சில வரங்களே ஆன குழந்தைகளிடம் அடிக்கடி பார்க்கமுடிகின்றது. திருத்திடுவதை அவசியமாக்கிடும் இந்தத் தன்மைகளானது, பெற்றோரிடமிருந்தே குழந்தைகளுக்கு வந்துள்ளது என்பதைப் பெற்றோர் நினைவுகூருகையில், இது பெற்றோர் குழந்தைகளைத் திருத்த முற்படுகையில் அவர்களை மிகவும் பொறுமைகொள்ளவும், அதேசமயம் திருத்தம் செய்யும் விஷயத்தில் மிகவும் அக்கறையாயும் உறுதியாயும்/விழிப்பாயும் இருக்கச் செய்யும். இவ்வாறாகக் கிறிஸ்தவ பெற்றோர் தன் பிள்ளையைப் பயிற்றுவிக்க வேண்டிய விதத்தில் பயிற்றுவிப்பதில் மிகவும் உறுதியாய் இருப்பது மாத்திரமல்லாமல், இந்தப் பயிற்சியினையும், திருத்தம் செய்தலையும் வழங்குவதில் மிகவும் இரக்கத்தோடும், அன்போடும், பொறுமையோடும் காணப்பட வேண்டும்.

---

R5650 [தெரிந்தெடுக்கப்பட்ட பத்திகள்]

# நாம் நம்மையே நியாயந்தீர்க்கக்கடவோம்

தேவனுடைய பிள்ளையானவன் ஒருவேளை, தன்னைக்குறித்து, தான் கவனமற்று இருந்துள்ளதை உணருவானேயாகில், அவன், "இனியும்/இதற்குமேல் நான் என்மேல் பொறுமையாய் இருக்கமாட்டேன். என் விஷயத்தை நான் கையில் எடுத்துக்கொண்டு, என்னுடைய குணலட்சணத்தைப் பெலவீனமாக்குவதற்கும், அநேகமாக மற்றவருக்கு அமைதியின்மையும், வேதனையும் ஏற்படுத்துவதற்கும் ஏதுவாக, நான் கொஞ்சம் அனுமதித்திட்ட இந்தப் பெலவீனத்தை நான் மேற்கொள்வேன். இதை உதவியற்ற என்னுடைய சொந்தப் பலத்தினால் என்னால் செய்ய இயலாது, மாறாக கர்த்தருடைய கிருபையினால், இக்காரியத்தை மேற்கொள்ள நான் முடிவு எடுத்துள்ளேன்" என்று கூறவேண்டும்.

பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளைக் கையாளும் விஷயத்தில் அதிகமான பொறுமையைக்/சகிப்புத்தன்மையைக் கொண்டிருப்பது அவசியம். பொறுமையின் எல்லையானது, பிள்ளைகளுக்கு ஏற்ப வித்தியாசப்படலாம். ஆகவே ஒவ்வொரு பிள்ளையும் எந்தளவுக்குச் சரியான காரியத்தைச் செய்கின்றது எனவும், எந்தளவுக்குப் பிள்ளையானது அறிவுரைகளைப் பெற்றுக்கொண்டு, நன்மையடைந்து உள்ளது எனவும் ஞானமுள்ள பெற்றோர்கள் நிதானித்துக்கொள்வார்கள். ஒருவேளை ஒருவன் தனது பிள்ளை, வேண்டுமென்றே தவறு செய்கின்றது என்பதைக் கண்டுபிடிப்பானானால், அவன் பொறுமையாய்த் தொடர்ந்து காணப்படக்கூடாது, பிரம்பைப் பயன்படுத்த வேண்டும். இப்படிச்செய்வது என்பது பெற்றோர் பொறுமையாய் இருப்பதை நிறுத்திவிட்டார்கள் என்பதாகாது. அடுத்த நாள் அவன் அப்பிள்ளையிடம் பொறுமையுடன் இருக்கும் சூழ்நிலை வரலாம், அடுத்தும்கூடப் பிரம்பைப் பயன்படுத்துவதற்குரிய

நிலைமை திரும்பவுங்கூட ஏற்படலாம். பொறுமையற்றவர்களாகவும், அனுதாபம் அற்றவர்களாகவும் நாம் காணப்படாமல், நாம் மிகுந்த பொறுமைசாலிகளாகவும், மிகுந்த அனுதாபம் உடையவர்களாகவும் காணப்பட வேண்டும். நம்முடைய பெலவீனங்களை உணர்ந்தவர்களாக, நாம் நமது பெலவீனங்களை மேற்கொள்வதற்கு நாடுவதுபோன்று, தங்களுடைய பெலவீனங்களை மேற்கொள்வதற்கு என்று நாடுகின்ற மற்றவர்களிடத்திலும் நாம் பொறுமையைக் காண்பிக்க வேண்டும். இந்த ஒரு பொறுமை, சகிப்புத்தன்மையானது, நம்மீதும் காண்பிக்கப்பட வேண்டிய அவசியத்திலேயே நாம் அனைவரும் காணப்படுகின்றோம்.

---

R5700

# நன்றியற்ற கலகவாதியான அப்சலோம்

## 2 சாமுயேல் 18:1-15

"பிள்ளைகளே, உங்கள் பெற்றோருக்குக் கர்த்தருக்குள் கீழ்ப்படியுங்கள், இது நியாயம்."
(எபேசியர் 6:1)

"நன்றியற்ற பிள்ளையைப் பெற்றிருப்பது என்பது பாம்பின்
பல்லினும் எத்துணைக் கூர்மையானது!"

இன்றைய நமது பாடமானது, அப்சலோமின் மரணத்தினைப் பற்றினதாகும். இக்காரியமானது விளக்கம் தர வேண்டிய நிலை இல்லாதளவுக்கு விளக்கமாய்த் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த இளம் இளவரசனின் ஜீவியத்தைத் திரும்பிப்பார்ப்பதும், இவருடைய தோல்விகள் சிலவற்றைக் கவனிப்பதும் நமக்குப் பிரயோஜனமாயிருக்கும். முதலாவது விஷயம் என்னவெனில் . . . இவர் நற்பிறப்புடையவரல்ல. இவரது தாயும், இராஜாவாகிய தாவீதின் மனைவியுமானவள், அருகாமையிலுள்ள ஒரு புறஜாதி இராஜாவின் மகளாவாள். அப்சலோமின் தாய் அழகானவராக இருந்திருக்கக்கூடும்; ஏனெனில் அப்சலோம் அழகான ஆண்மகனாக, அழகான வாலிபனாக, பண்புடனும், மரியாதையுடனும் நடந்துகொள்பவனாக, பிரபலமானவனாக வேத வாக்கியங்களில் தெரிவிக்கப்பட்டிருக்கின்றார். இராஜ குடும்பத்தின் அங்கத்தினனாய் இருந்ததும், வேர்வை சிந்தி உழைக்க வேண்டிய அவசியம் இல்லாமல் இருந்ததும், இவருக்குப் பாதகமாகவே இருந்தது.

தன் சகோதரிக்காய்ப் பழிவாங்கும்படிக்குத் தனது ஒன்றுவிட்ட சகோதரனாகிய அம்னோனைக் கொன்றுபோடுவதன்மூலம், அப்சலோம் முதலாவதாக நமது கவனத்திற்குப் பிரத்தியட்சயமாய்க் கொண்டுவரப்படுகின்றார். இதினிமித்தம் தன் தாத்தாவினுடைய பாதுகாப்பின்கீழ்த் தஞ்சம்புக ஓடுகின்றார். இப்படியாக இவரது தகப்பனுடனும், உண்மையான மதத்துடனும் இருக்கையில் உண்டாகும் நல்தாக்கங்களிலிருந்து இவர் இன்னும் விலகினவரானார். இப்படிப் பல வருடங்களாக இவர் காணாமல் போயிருக்க, இவர்மீது தொடர்ந்து அன்புகொண்டிருந்து, இவருக்காய்த் துக்கித்துக்கொண்டிருந்த இவரது தகப்பனார், அப்சலோமை எருசலேமுக்குத் திரும்பிவரச் சொல்ல ஏவப்பட்டார் - ஆனாலும் தன் குமாரன் தன் முன்னிலையில் வருவதற்கு இரண்டு வருடங்கள் தகப்பனார் மறுத்தார். இதன் தாக்கங்கள் அனைத்துமே இந்த இளைஞனுக்குப் பாதகமாகவே இருந்தது; எனினும் இந்தக் காரணங்கள் எதுவும்

இவர் தன் தகப்பனாகிய, இஸ்ரயேலின் இராஜாவுக்குப் பண்ணின துரோகத்திற்கான பழியினை இவர் மேலிருந்து விலக்குவதற்குரிய காரணங்களாகாது.

## அப்சலோமின் சதித்திட்டம்

சாதாரணமான பிரச்சனைகளுக்குத் தீர்வு காண்பதற்கு இஸ்ரயேல் தேசம் எங்கும் நியாயாதிபதிகள் காணப்பட்டனர்; ஆனால் இவர்களால் அளிக்கப்படும் தீர்ப்பில் அதிருப்தி ஏற்படுகையில், உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீடு பண்ணப்படுவதுபோல, இராஜாவினிடத்தில் மேல்முறையீடு செய்யப்படுகின்றது. ஆலயம் கட்டுவதற்குத் தேவையான பொருட்களை ஆயத்தம்பண்ணுவதில் இராஜாவாகிய தாவீது மிகவும் விறுவிறுப்பாய் ஈடுபட்டிருந்தார்; இந்த ஆலயமானது இவரது மரணம்வரையிலும் கட்டப்படவில்லை. இதினிமித்தம் மேலான நியாயாதிபதியென ஜனங்களுக்கு ஆற்றிடும் தன் பணியினைத் தாவீது இராஜா சிலவிதங்களில் செய்ய முடியாதவராயிருந்திருக்கலாம் . . . ஆகையால் ஒவ்வொரு உச்சநீதிமன்றங்களில் நடைபெறுவது போன்று ஜனங்களுடைய வழக்குகளில் சிலவற்றின் விசாரணை தாமதப்படுத்தப்பட்டது - இது முடிவுகளுக்காய்ப் பொறுமையற்றுக் காணப்படுவோருக்குச் சோர்வை உண்டாக்கிற்று.

நீதி வழங்கும் விஷயத்தில், இராஜாவாகிய தாவீதின் சார்பில் ஏதேனும் குறைவு இருந்ததாவென நம்மால் உறுதியாய்க் கூறமுடியவில்லை. இவரது தந்திரமுள்ள மகனாகிய அப்சலோம் தன்னையே மிகவும் பிரபலமாக்கிக்கொண்டான் என்று மாத்திரமே அறிவோம். அப்சலோம் ஜனங்களிடத்தில் மிகவும் தயவு பாராட்டினவனாகவும், ஜனங்களுடன் நன்கு பழகினவனாகவும், அவர்களுடைய புகார்களைக் கேட்பதற்கு எப்போதுமே ஆயத்தமாயிருப்பவனாகவும் இருந்தான்; மேலும் ஜனங்களுடைய விசாரணை விஷயத்தில் ஏற்படும் தாமதத்திற்காய் மனவருத்தத்தினைத் தெரிவித்து, "நான் இராஜாவாக இருந்திருப்பேனாகில், சூழ்நிலைமைகள் வேறுமாதிரி இருந்திருக்கும்!" என்று கூறி தந்திரமாய்ப் பதிலளித்தான். இப்படியாக வஞ்சனையினாலும், சூழ்ச்சியினாலும், பொய்யுரைத்தும் தந்தையிடமிருந்து ஜனங்களுடைய இருதயங்களைத் தன்பால் கவர்ந்துகொண்டான் என்று நாம் வாசிக்கின்றோம். இப்படியான ஒரு மனுஷனை இராஜாவாகப் பெற்றிருந்தால், எவ்வளவு நலமாயிருக்குமென ஜனங்களும் உண்மையில் சிந்திக்கத் துவங்கினார்கள். தேவன்தான் இஸ்ரயேலின் இராஜா என்றும், வேதாகமம் சொல்வது போன்று இராஜாவாகிய தாவீது கர்த்தருடைய சிங்காசனத்தில் உட்கார்ந்து மாத்திரம் இருந்தார் என்றும் உள்ள உண்மையினை ஜனங்கள் முழுவதும் பார்க்கத் தவறினதாகத் தெரிகின்றது (1 நாளாகமம் 29:23).

அப்சலோம் கண்கவரும் அழகான இராஜகுமாரனாக, அலையலையான நீண்ட மயிரை உடையவனாய் இருந்தார். இவர் தன் இரதத்தில் செல்வார் மற்றும் இவருக்கு முன்னே வேகமாய் ஓடும் ஐம்பது வீரர்கள் செல்வதுண்டு. சிந்திக்காத ஜனங்கள் இவைகளினால் கவரப்பட்டார்கள்; ஆனாலும் இந்த மினுக்கின் மயக்க நோயினால் ஒரு ஞானவான் கூடத் தாக்கப்பட்டதாகத் தெரியவில்லை.

அப்சலோம் தன் தகப்பனுடைய மத உணர்வுகளை அறிந்திருந்தார் மற்றும் அவ்வுணர்வுகளை அப்சலோம் பெற்றிருக்கவில்லை. தந்தைக்குப்பின் தான் இராஜாவாகக் காணப்படுவது, தகப்பனுடைய விருப்பமாயிராது என்றும், தாவீது இராஜா வயதாகிக்கொண்டிருப்பதால், புதிய இராஜா ஏற்படுத்தப்படுவதற்குரிய தருணம் வெகு தொலைவில் இல்லை என்றும் அப்சலோம் உணர்ந்தார். பேராசைகொள்ளுதல் மற்றும் தேவனுக்குத் துரோகம் செய்தல் எனும் சாத்தானின் வழியினை அப்சலோம் பின்பற்றினவராகி, தன் தகப்பனுக்குத் துரோகம் புரிந்தார். இவர் ஒரு படையைத் திரட்டி, தன்னை இராஜாவென அறிவித்தார்; மேலும் இராஜாவாகிய தாவீதும், அவரது வழக்கமான சேனையும், அவருக்கு

உண்மையாய் இருந்தவர்களும் தங்கள் ஜீவனைத் தப்பிக்க ஓடும் கட்டாயம் ஏற்படுமளவுக்கு, அப்சலோம் தன்னால் கவரப்பட்ட அநேகம் ஜனங்களுடைய ஆதரவுடன், காரியங்களை மிக வேகமாகவும், மிக நேர்த்தியாகவும் செய்துமுடித்தார். அப்சலோமின் பெரிய சேனைக்கும், இராஜாவாகிய தாவீதின் சிறிய சேனை, ஆனால் நன்கு பயிற்சியளிக்கப்பட்ட போர்வீரர்களைப் பெற்றிருந்த சேனைக்கும் இடையில் யுத்தம் நடந்தது. தாவீது இராஜாவிற்கே வெற்றிக் கிடைத்தது. தன் குமாரனாகிய இளைஞன் அப்சலோமினைக் கொன்று போடக்கூடாது என்று தாவீது தன் போர்வீரர்களிடம் கேட்டுக்கொண்ட போதிலும், அப்சலோம் கொல்லப்பட்டார்.

இங்குத் தேவனுடைய இருதயத்திற்கு ஏற்ற மனுஷனுக்கும், தன் தகப்பனைக் கொல்வதற்கு நாடினவனும், கலகக்காரனும், சதித்திட்டம் போட்டவனும், சூழ்ச்சிக்காரனும், பேராசைக்கொண்டவனும், பகட்டானவனும், ஆடம்பரமானவனும், ஜனங்களால் விரும்பப்பட்டவனுமான மனுஷனுக்கும் இடையில் எத்தகையதொரு வித்தியாசம் காணப்படுகின்றது! தேவனுடைய மனுஷன், தான் அறிக்கைப்பண்ணி, மனந்திரும்பிக் காணப்பட்ட அந்தப் பெலவீனங்களுக்கு அப்பாற்பட்டு, தேவனுடைய மனுஷன் தேவனிடத்தில் உண்மையுள்ள இருதயத்தினைப் பெற்றிருந்தார்; "என் மகனாகிய அப்சலோமே, என் மகனே, என் மகனாகிய அப்சலோமே நான் உனக்குப் பதிலாகச் செத்தேனானால் நலமாயிருக்கும்" எனும் புலம்பலின் வார்த்தைகளில் தன் குமாரனுக்காய் அவர் பெற்றிருந்த அனுதாப அன்பும் வெளிப்படுகின்றது.

## ஒரு மிக முக்கியமான கொள்கை

மனித சித்தம் என்பது அருமையானதாகும், ஆகையாலேயே ஒவ்வொருவனும் தன்தன் எதிர்க்காலத்திற்குப் பொறுப்பாளியாகுகின்றான். ஆகையால் தன் முயற்சியினாலுயர்ந்த மனிதன் எனும் கூற்றுக் கிட்டத்தட்ட உண்மையே.

எனினும் இது - ஓரளவுக்குத் திறமையுள்ளவர்களாகவும், வெளிப்புற அழகுடன் மாத்திரமல்லாமல், தேவனுக்கும், நீதியின் கொள்கைகளுக்கும் நேர்மையுள்ள, நீதியுள்ள, மனசாட்சியுள்ள நல்லப் பிள்ளைகளை உலகில் கொண்டுவரத்தக்கதாகப் பார்த்துக்கொள்ள வேண்டிய பெற்றோரின் கடமையினின்று பெற்றோரை விலக்கிடாது. மேலும் இது - வாழ்க்கைக்குறித்த சரியான புரிந்துகொள்ளுதலையும், முறையான அறிவுரைகளையும் பிள்ளைகளுக்குக் கொடுத்திடும் பெற்றோரின் கடமையினின்று பெற்றோரை விலக்கிடாது; ஏனெனில், "பிள்ளையானவன் நடக்க வேண்டிய வழியிலே அவனை நடத்து; அவன் முதிர் வயதிலும் அதை விடாதிருப்பான்" (நீதிமொழிகள் 22:6) என்று வேதவாக்கியங்கள் தெரிவிக்கின்றது.

பல நூற்றாண்டு காலங்களாகப் பிரசங்கிக்கப்பட்ட, போதிக்கப்பட்ட பின்னரும்கூட, வெகு சில பெற்றோர்களே உலகத்தில் தங்களால் கொண்டுவரப்படுகின்றதான பிள்ளைகள் விஷயத்திலுள்ள தங்கள் கடமைகளை உணர்ந்திருப்பதைக் காண்பது உண்மையில் பரிதாபத்திற்குரியதாக இருக்கின்றது. வெகு சில தகப்பன்மார்களே தங்கள் மனைவிகள் மற்றும் தங்கள் குழந்தைகளுக்கான பாதுகாவலர்களாக, பராமரிப்பவர்களாகத் தாங்கள் இருப்பதை உணர்ந்திருக்கின்றனர்; மேலும் வெகு சில தகப்பன்மார்களே குடும்பத்தின் தாயானவளாய் இருக்கும்படிக்கு, உயர்குணம் உள்ள மற்றும் மனசாட்சிக்குக்கட்டுப்பட்டு நடக்கும் மனைவியைத் தெரிந்துகொள்வது மாத்திரம் தங்களது கடமையாகவும், சிலாக்கியமாகவும் இராமல், தங்கள் குழந்தைகள் உயர்பண்புகள் பதியப்பெற்றவர்களாகவும், பாவத்தினால் குறைவாய்ப் பதியப்பெற்றவர்களாகவும் பிறக்கத்தக்கதாக கர்ப்பக்காலத்தில் தாயானவளை நல்ல/அனுகூலமான சூழ்நிலைகளின்கீழ் வைத்துக்கொள்வதும், அவளது மனமும், இருதயமும் -

தூய்மையாகவும், அன்பானதாகவும், பெருந்தன்மையுடையதாகவும் மற்றும் தேவனுக்கும், நீதியின் கொள்கைகளுக்கும் உண்மையாகவும் காணப்பட அவளுக்கு உதவுவதும் தங்கள் கடமையாக இருக்கின்றது என்று உணர்ந்திருக்கின்றனர். ஜனங்கள் அறிவில்லாமையினால் சங்காரமாகிறார்கள் என்று வேதவாக்கியங்கள் சரியாகவே சொல்லியிருக்கின்றன (ஓசியா 4:6).

இனமேம்பாடு கோட்பாடானது எத்திசையிலும் நம் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டுக் கொண்டிருக்கின்றது என்பது உண்மையே; ஆனால் எதற்காக? ஆரோக்கியம் மற்றும் ஏற்ற வாழ்கைத் துணையைத் தெரிவுசெய்தல் எனும் விதத்தில் இக்கோட்பாட்டின் அறிவுரைகளானது முக்கியமானதாய் இருப்பினும், நம்மால் பார்க்கப்பட்டுவரும் கொள்கையுடன் ஒப்பிட்டுப் பார்க்கையில், அதாவது கர்ப்பக்காலங்களில் தாயானவளின் மனமானது, அவளது குழந்தையினுடைய குணங்களை நல்லதாகவோ, கெட்டதாகவோ பதியபண்ணுகின்றது எனும் கொள்கையுடன் ஒப்பிட்டுப்பார்க்கையில் இனமேம்பாடு கொள்கையானது முக்கியமற்றதாகுகின்றது. தாயானவளால் பூரணமான குழந்தையைப் பெற்றெடுக்க முடியாதுதான்; எனினும் அவள் தன் சொந்தக் குறிக்கோள்களை உயர்வானதாகவும், உண்மையானதாகவும், அசைவுறாததாகவும், தூய்மையானவைகள், சிறந்தவைகள் மற்றும் நன்மையானவைகள்மீது பதியபெற்றதாகவும் கொண்டிருப்பாளானால், சந்தேகத்திற்கிடமின்றி, அவளது குழந்தையானது, சரீர ரீதியிலும், அறிவு ரீதியிலும், நல்லொழுக்க ரீதியிலும்கூட வெகு அனுகூலமடையும். போட்டோ டிராமா ஆப் கிரியேஷனில் (Photo-Drama of creation) நாம் ஏற்கெனவே சுட்டிக்காண்பித்துள்ளது போன்று, பூரண தாயாகிய ஏவாளினால் தன் குமாரனாகிய காயீனிடத்தில் பொறாமை, சந்தோஷமின்மை எனும் பண்புகளைப் பதியவைக்க முடியும் மற்றும் பதியவைத்தாள் மற்றும் இதன் காரணமாகவே காயீன் தன் சகோதரனைக் கொன்றுபோட்டார்.

---

R5612 [தெரிந்தெடுக்கப்பட்ட பத்திகள்]

# சிம்சோனின் சோகம்

## நியாயாதிபதிகள் 13:8-16, 24, 25

"ஆதலால் நீ திராட்சரசமும் மதுபானமும் குடியாதபடிக்கும், தீட்டானது ஒன்றும் புசியாதபடிக்கும் எச்சரிக்கையாயிரு." (நியாயாதிபதிகள் 13:4)

ஒரு குறிப்பிட்ட விரதத்தை மேற்கொண்ட யூதன், நசரேயன் என்று அழைக்கப்படுகின்றான். இவர்களையும், நாசரேத்து ஊரின் ஜனங்களையும் ஒன்று என்று குழப்பிக்கொள்ளக்கூடாது. இயேசு நாசரேத்து ஊரானாவார்; ஆனால் அவர் நசரேய விரதம் மேற்கொண்டவரல்ல. நசரேய விரதம் என்பது, ஒருவன் எந்த விதத்திலும் காணப்படும் மதுபானத்தைத் தவிர்த்துக்கொள்பவனாகவும், தன் தலைமயிரைக் கத்தரிக்காதவனாகவும் இருப்பதாகும். சிம்சோன் தன் பிறப்பு முதற்கொண்டு இந்த விரதத்தில் காணப்பட்டார்; இது கர்த்தருடைய தூதனின் கட்டளையின்படி, அவரது பெற்றோரால் அவருக்குச் செய்யப்பட்டு வந்தது. சில விதங்களில் இந்த விரதமானது, தேவனுக்கும், அவரது ஊழியத்திற்கும் ஒரு நபர் முற்றும் முழுமையான அர்ப்பணிப்பை மேற்கொள்வதை அடையாளப்படுத்துகின்றதாய் இருக்கின்றது.

சிம்சோனுடைய பிறப்பிற்கு முன்பு இருமுறை கர்த்தருடைய தூதனானவர் தோன்றி - தாயினுடைய மனதில் விசேஷமாய் மிதமான உணவு பழக்கத்தின் முக்கியத்துவமானது பதியவைக்கப்பட வேண்டும் என்றும், இவ்விதமாய் அவளது குழந்தை அனுகூலமான சூழ்நிலைமையின்கீழ்ப் பிறக்க வேண்டும் என்றுமுள்ள நோக்கத்தில், சிம்சோனின் பெற்றோர்களைத் தொடர்புகொண்டார். எந்தளவுக்குப் பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளுக்கு மனபலத்தையும், சரீர பலத்தையும் கொடுக்கமுடியும் என்பதையும், தங்கள் பிள்ளைகளுக்கு அனுகூலமான ஆற்றல்களைக் கொடுப்பதில் பெற்றோர்கள் எவ்வளவு விழித்திருக்க வேண்டும் என்பதையும் சிம்சோனின் பெற்றோர்கள் உணர்ந்துகொண்டார்கள் என்பதில் ஐயமில்லை.

ஜீவன், சத்துவமானது தகப்பனிடமிருந்து வருகையில், குணலட்சணத்தைப் பதியபண்ணுவதில் தாயானவள் பெரும் பங்குவகிக்கின்றாள். குழந்தைப் பிறப்பதற்கு முன்புள்ள தாயானவளுடைய கர்ப்பக்காலத்தின் பெலவீனமான நிலைமையில், தகப்பனார் சூழ்நிலையை உணரமுடியும் மற்றும் உணர வேண்டும்; மேலும் சிறந்த அறிவிற்குரிய ஆவிக்குரிய செல்வாக்குகளினால்/தாக்கங்களினால் தாயானவளைச் சூழப்பண்ணச் செய்வதற்குரிய தன் சிலாக்கியத்தினை உணர்ந்திட வேண்டும். இப்படியாகத் தகப்பன், தாயானவளின் சிந்தனைகளை வனைந்து, அவைகளைப் பிரயோஜனமான திசைகளுக்கு வழிநடத்துகின்றார்; மேலும் இந்த உயர்ந்த, சிறந்த எண்ணங்களை - குழந்தையானது நல்லக் குழந்தையாகவும், குடும்பத்திற்குப் புகழ் சேர்க்கிற, தன் சமுதாயத்திற்கு ஆசீர்வாதமாயிருக்கிற, எல்லாவற்றிற்கும் மேலாக தேவனுடைய ஊழியக்காரனாகுவதற்குத் தகுதியடைகிற குழந்தையாகவும் காணப்படத்தக்கதாக - தாயானவள் தன் குழந்தையினிடத்தில் பதியபண்ணுகிறாள்.

## கிறிஸ்தவனுக்கான பாடங்கள்

சிம்சோனின் அனுபவங்களிலிருந்து நம்மால் கற்றுக்கொள்ளப்படுகிற ஒரு பாடம் . . . வாழ்க்கையில் நோக்கம் ஒன்றினைப் பெற்றிருப்பதன் முக்கியத்துவமாகும். தன்முன் நோக்கம் ஒன்றினைக் கொண்டிராத எவனாலும் மிகச் சிறந்த விதத்தில் வாழ்க்கை வாழமுடியாது. தங்களுக்குத் தகுதியாயிராத, தங்களுக்குத் தகுதியில்லாத காரியங்களுக்காக ஆசைக்கொள்ளும்படிக்குப் பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளை ஊக்குவியாமல், மாறாக அவர்கள் வாழ்க்கையில் எதற்குத் தகுதியாய் இருக்கின்றார்களோ, அவற்றின்மீதே ஆசைக்கொள்ள ஊக்குவித்திட வேண்டும்.

பன்னிரண்டுமுதல் பதினாறு வயது வரையிலுள்ள சிறுவன், சிறுமியினிடத்தில் மனவெழுச்சிகள் காணப்படும்; மேலும் இவைகள் சரியாய் வழிக்காட்டப்பட்டால், அவர்களைச் சிறந்த ஆணாகவும், சிறந்த பெண்மணியாகவும் ஆக்கிடும்; ஆனால் இவைகள் தவறான திசைகளுக்குப் புரட்டப்படும்போது, அவர்களைப் பொல்லாதவர்களாக்கிடும்; அல்லது இவைகள் முற்றிலுமாக அசட்டைப்பண்ணப்பட்டால், அவர்களை ஒன்றுமில்லாதவர்களாக்கிடும். இந்த உண்மைகளை ஒவ்வொரு பெற்றோரும், ஒவ்வொரு பாதுகாவலரும் உணர்ந்துகொண்டு, இதற்கேற்ப தன் பராமரிப்பின் கீழ்க்காணப்படும் சிறுபிள்ளைகளைக் கையாள பழகிக்கொள்ள வேண்டும்.

இது மாத்திரமல்ல, ஒவ்வொரு இளைஞனிலும் உயர்பண்பு அடைந்திடுவதற்கான ஒரு நாடுதலும், வாழ்க்கை மிக விலையேறப்பெற்றது, அது ஒருமுறையே பயன்படுத்தப்படமுடியும் மற்றும் வாழ்க்கை துவங்கும் திசையினையே, விளைவுகள் பெரிதும் சார்ந்துள்ளது என்றுள்ள ஓர் உணர்ந்துகொள்ளுதலும் காணப்படுகின்றது. அத்தருணத்தின் போது உண்மையுள்ள பெற்றோர் அல்லது பாதுகாவலர்,

இளைஞனின் பிரகாசம் அடைந்துவரும் மனதிற்கு முன்னதாக இளைஞர்கள் சிருஷ்டிகரிடத்தில் பெற்றிருக்கும் நியாயமான கடமை குறித்தும், தவற்றிற்கு எதிராய் நீதியின் பக்கமும், தப்பறைக்கு எதிராய்ச் சத்தியத்தின் பக்கமும் ஜீவனையே ஒப்புக்கொடுத்துவிடுவதற்குரிய பாக்கியமான சிலாக்கியம் குறித்தும் வெற்றிகரமாய் முன்வைத்திடலாம். இந்தக் காரியங்களெல்லாம் முழுமையாய்ப் புரிந்துகொள்ளப்படும் போது, உலகில் நல்லொழுக்கமுள்ள நாயகர்கள் அதிகமாய்க் காணப்படுவார்கள்.

---

R5571 [தெரிந்தெடுக்கப்பட்ட பத்திகள்]

## விவேகி ஆபத்தைக்கண்டு மறைந்துகொள்ளுகிறான்

பூமியைச் சூழ்ந்து மூடிக்கொண்டுவரும் மகா உபத்திரவ காலத்தின் சோதனைகளிலிருந்தும், இன்னல்களிலிருந்தும் தப்பித்துக்கொள்ளலாம் என்று ஒருவரும் எண்ணிக்கொள்ள வேண்டாம். "முதலாவது சுத்தமுள்ளதாயும், பின்பு சமாதானமாயும், இணக்கமுள்ளதாயும், இரக்கத்தாலும், நற்கனிகளாலும் நிறைந்ததாயும்" பரத்திலிருந்து வரும் ஞானம் என்று அப்போஸ்தலனால் தெரிவிக்கப்படும் ஞானத்தினைப் பயன்படுத்துவதன் வாயிலாக, சூழ்நிலைகளை நல்லதாக்க முற்படுவதே சிறந்த வழியாகும். ஒருவன் எந்தளவுக்குப் பரம ஞானத்தின் இந்தப் பரிந்துரைகளைக் கைக்கொள்கின்றானோ, அவ்வளவாய் அவன் தேவ தயவைப் பெற்றுக்கொள்வான் என்பதில் நமக்கு நிச்சயமே. அந்தத் தயவானது, அவனுக்குச் "சகலமும் நன்மைக்கு ஏதுவாய் நடக்கும்" என்று உறுதிபடுத்துகின்றதாய் இருக்கின்றது.

தன் வழிகாட்டுதலுக்குக் கீழ்க்காணப்படுபவர்களுக்கு எந்தவொரு பெற்றோராலும் அல்லது ஆலோசகராலும் கொடுக்க முடியும் மிகவும் விலையேறப்பெற்றப் படிப்பினைகள் - முதலாவதாகப் பொன்னான பிரமாணம் பற்றியதாகவே இருக்கும் - முற்றும் முழுமையான நீதியினை மனதில் ஆழப்பதிய வைப்பதேயாகும் - இதற்குக் குறைவான எதையுமல்ல; இரண்டாவதாகப் பொன்னான பிரமாணத்தினால் அடையாளப்படுத்தப்படும் நீதியோடுகூட, இரக்கம், மனதுருக்கம், அனுதாபம், உதவிபுரியும் ஆவி தொடர்பான படிப்பினைகளாகும். இது விஷயத்தில் மூன்றாம் பாடம் சாந்தம், தயவு, பொறுமை, நீடிய பொறுமை தொடர்பாக இருக்க வேண்டும். நான்காம் பாடம் அனைத்திலும் சிக்கனமாய் இருத்தல் ஆகும் - வீணாக்குவதைத் தவிர்ப்பதாகும் - தனக்கு அவசியப்படாத ஒன்று வேறொருவருக்கு அவசியப்படலாம் என்ற உணர்ந்துகொள்ளுதலாகும்.

இப்படிப்பினைகளைக்குறித்துக் குறிப்பிடுகையில், நமது வாசகர்கள்கூட ஆவிக்குரிய, பரம உணவு காணப்படும் கர்த்தருடைய பந்தியில் போஷிக்கும் தேவப் பிள்ளைகளாகக் காணப்படுகின்றனர், மேலும் இவர்கள் தங்கள் குடும்பங்களைக் கர்த்தருடைய வார்த்தைகளுக்கு இசைவாகப் பயிற்றுவிப்பதன் மூலம் தங்கள் குடும்பங்களை ஆசீர்வதிக்க நாடுகின்றவர்களாய் இருக்கின்றனர் என்று எண்ணி நாங்கள் கூறுகின்றோம்.

நெருங்கிக்கொண்டிருப்பதாக நாம் பார்த்துவரும் கொடிய துன்பகாலத்தில் குணலட்சண விஷயத்திலுள்ள இத்தகைய ஆயத்தமானது எந்த ஒரு பெற்றோராலும் தன் பிள்ளைக்குக் கொடுக்க முடிந்திட்ட சிறந்த சொத்தாய் இருக்கும். பங்கு சந்தைகளும், கடன்பத்திரங்களும் உணவு அளிக்காமல் போகலாம்; வங்கிக்கணக்குகள் விஷயத்தில் சீர்க்குலைவு ஏற்படலாம்; பணத்தை வைத்திருப்பது என்பது திருடுவதற்கும், கொலைச் செய்திடுவதற்கும் பொல்லாத ஜனங்களுக்குச் சோதனையாய் அமைந்திடலாம்; ஆனால் நல்லக் குணலட்சணம் என்பது திருடப்படமுடியாது. நல்லக் குணலட்சணத்தைப்

பெற்றிருப்பதின் வாயிலாக அது ஒருவிதமான சமாதானத்தையும், பாதுகாப்பையும், நம்பிக்கையையும் கர்த்தருக்குள் கொடுத்திடும் - இவை எல்லாவற்றிற்கும் மேலாக விலையேறப்பெற்றதாகும்.

கர்த்தருக்கும், அவர் ஊழியத்திற்கும் தங்கள் இருதயங்களையும், தங்கள் ஜீவியங்களையும், தங்கள் அனைத்தையும் முழுமையாய் அர்ப்பணம்பண்ணிடுவதற்கு யாரும் அதிகமாய் வற்புறுத்தப்பட வேண்டாம் என்று நாங்கள் கூறுகின்றோம். தேவ ஜனங்களுடைய ஜீவியங்களானது எல்லாவிதத்திலும், "சகல மனுஷராலும் - விசேஷமாகச் சொந்தக் குடும்பங்களினால் அறிந்து வாசிக்கப்பட்டும் இருக்கிற ஜீவனுள்ள நிருபங்களாக" இருக்க வேண்டும். இத்தகைய ஜீவியங்களானது கர்த்தருக்குப்பண்ணின அர்ப்பணிப்பின் முழுமையை மாத்திரம் இல்லாமல், இதன் விளைவான சமாதானத்தையும், சந்தோஷத்தையும், ஆறுதலையுங்கூடச் சாட்சி பகர்ந்திட வேண்டும். "தேவசமாதானம் உங்கள் இருதயங்களில் ஆளக்கடவது" (கொலேசெயர் 3:15). ஒரு புத்திமதியின் வார்த்தையைக்கூட வாயினால் சொல்லாமல், உங்கள் ஜீவியங்கள் ஜீவனுள்ள நிருபமாக இருப்பதின் வாயிலாக வரும் படிப்பினைகள், உங்கள் செல்வாக்கின்கீழ் நேரடியாகக் காணப்படுபவர்கள் அனைவருக்கும் ஆற்றல்மிக்க படிப்பினைகளாய் இருக்கும். மேலும் ஏற்றகாலங்களில் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவையும், அவரது திருவசனத்தின் செய்தியையும் முழுமையாய் ஏற்றுக்கொண்டதின் வாயிலாக நீங்கள் பெற்றுக்கொண்ட ஆறுதலையும், சந்தோஷத்தையும், சமாதானத்தையும், ஆசீர்வாதத்தையும் குறித்தும், இதுபோலவே உங்களது அன்புக்குரியவர்களும் ஆசீர்வதிக்கப்படுவதை, ஆறுதல்படுத்தப்படுவதை, ஆவிக்குரிய குணமாகுதல் அடைவதுமாகியவைகளைக் காண்பதில் உங்களுக்கு எத்தகைய மகிழ்ச்சியிருக்குமென்பது குறித்தும் உங்கள் குடும்பத்தாரிடம், நண்பர்களிடம் மற்றும் அயலகத்தார்களிடம் நீங்கள் தெரிவிப்பது ஏற்றதாய் இருக்கும்.

எனினும் வெறும் மாய்மாலமாகக் காணப்படும் விதத்தில் கர்த்தருக்கு அர்ப்பணம் பண்ணியுள்ளதாக அறிக்கை மாத்திரம்பண்ணிக்கொள்ளும் காரியங்களைச் செய்வதை உங்கள் பிள்ளைகளும், நண்பர்களும் தவிர்த்துக்கொள்வது நலமாய் இருக்கும். மாய்மாலமான அறிக்கை செய்பவர்கள் அநேகர் ஏற்கெனவே இருக்கின்றனர். இத்தகையவர்கள் கிறிஸ்துவின் நோக்கங்களுக்கும், அதைப்போல் தங்களுக்கும் ஊறுவிளைவிக்கின்றவர்களாய் இருக்கின்றனர்; ஏனெனில் மாய்மாலம் என்பது, விசேஷமாய்க் கர்த்தரை அவமதிக்கும் காரியமாகும் மற்றும் அது மாய்மாலக்காரனாலேயே ஜெயிக்கமுடியாத அளவிற்கு அவனுக்கு இடையூறின் சுவராய்க் காணப்படும். ஆகையால் பணம் மற்றும் சமூக விஷயங்களில் மாத்திரமில்லாமல், தேவன் மற்றும் மதம்/பக்தி விஷயத்திலும் குறிப்பாக நம்முடைய செல்வாக்கானது நேர்மையின் அடிப்படையில் உண்டானதாய்/ நேர்மையின் பக்கமாக இருக்க வேண்டும்.

## யோக்கியமாயும் செய்ய நாடுங்கள்

தேவ ஜனங்கள் தங்கள் சொந்தக் குடும்பத்தாருக்கு அவர்களுடைய தேவைகளைச் சந்தித்திட வேண்டும் என்று அப்போஸ்தலன் வலியுறுத்துகின்றார் மற்றும் அப்படிச் சந்தித்திடும் காரியமானது யோக்கியமாய்ச் செய்யப்பட வேண்டும் என்று அப்போஸ்தலன் வலியுறுத்துகின்றார் - யோக்கியமாய் இல்லையெனில் செய்யப்படக்கூடாது. இன்னுமாக தேவையில் இருக்கும் மற்றவருக்குக் கொடுக்கத்தக்கதாகக் கர்த்தருடைய ஜனங்கள் தங்கள் சொந்தக் கைகளினால் உழைக்க வேண்டும் என்றும் அவர் புத்திகூறுகின்றார். இந்த அறிவுரைகளானது பூமிக்குரிய பொக்கிஷங்களை - பூமிக்குரிய சொத்தைச் சேர்க்க வேண்டும் என்பதற்கான பரிந்துரைகளாகப் புரிந்துகொள்ளப்படக்கூடாது. கர்த்தருடைய ஜனங்கள் தங்கள் விசுவாசத்திற்கு இசைவாக ஜீவித்திட வேண்டும் - பரலோகத்தில் தங்கள் பொக்கிஷங்களைச் சேர்த்துவைக்க வேண்டும். ஆகையால் தற்காலிகப் பூமிக்குரிய தேவைகள் சம்பந்தப்பட்ட இந்த யோசனைகளானது சொத்துக்களைக் குவித்துக்கொள்வதற்கான பரிந்துரைகளாய்

இராமல் மாறாக, "உலகச் செல்வத்தில் தகாதவிதமாய் ஈடுபடாமல் அதைப் பயன்படுத்திட வேண்டும்" என்பதற்கான பரிந்துரைகள் மாத்திரமே.

இந்தக் கட்டுரையினுடைய ஆதார வசனத்திற்கு இசைவாகவும், எதிர்காலத்தில் சம்பவிக்கப் போகிறவைகள் குறித்த நமது கண்ணோட்டங்களுக்கு இசைவாகவும், நம்முடைய வாசகர்களுக்கு நாம் சிலவற்றைப் பரிந்துரைக்க விரும்புகின்றோம். கர்த்தருடைய நாளின் பெருந்துன்பங்கள் அனைத்துமே, அடுத்துவரும் பதினொரு மாத காலங்களுக்கு உள்ளாக, பூமியின்மீது காணப்படும் என்பது குறித்து நமக்கு உறுதியாகத் தெரியாவிட்டாலும், அந்தக் காலத்தினுடைய துன்பங்கள் நிமித்தமாய் - நம்முடைய குடும்பங்கள், நம்முடைய நண்பர்கள் மற்றும் நம் அயலகத்தாரின் நலன் கருதி சில ஏற்பாடுகளை நாம் செய்திடுவது ஏற்றதாய் இருக்கும்.

உலர்ந்த, சுத்தமான கிடங்குகள் அல்லது இதற்குப் பொருத்தமான, நல்லக் காற்றோட்டமுள்ள இடங்கள் வைத்திருப்பவர்களுக்கு, உணவுகளைச் சேகரித்து வைப்பதற்குப் பரிந்துரைக்கின்றோம்; உதாரணத்திற்குப் பெருமளவில் நிலக்கரி, அரிசி, உலர்ந்த பட்டாணிகள், உலர்ந்த பயிர்கள், புல்லரிசிகள் (Oats), கோதுமைகள், வாற்கோதுமைகள், சர்க்கரை, கருப்புக்கட்டிகள், உலர்ந்த மீன்கள் முதலியவைகளை வைத்துக்கொள்ளலாம். சேமித்து வைக்கும் உணவுகளின் அளவுகளையும், ஊட்டச்சத்துகளையும் மனதில் வைத்துச் சேர்த்துவையுங்கள் - ரசம் (soup) என்பது ஊட்டச்சத்து நிறைந்ததும், விலைக்குறைந்ததுமாகும் எனும் காரியத்தினை மனதில் வைத்துக்கொள்ளுங்கள். அடுத்தக் கோடை காலம் துவங்குவது வரையிலும் இவ்வளவு அதிகமான பொருட்களை வைத்திருக்க வேண்டுமே என்றும், கெட்டுப்போவதைத் தவிர்ப்பதற்காக, நஷ்டத்திற்கு அவற்றை விற்க வேண்டிய அவசியம் ஏற்படுமே என்றும் கவலைப்படாதீர்கள். "புசிப்பதற்கான இந்த உணவு சேமிப்பைச் சுயநலத்துடன் நீங்கள் கருதிடாமல், மாறாக குறைச்சலுள்ளவர்களுக்குக் கொடுக்கத்தக்கதாக உங்களுக்கு உண்டாய் இருக்கும்" ஏற்பாடாக - அதாவது தேவையில் இருப்பவர்களுக்காகவும், கர்த்தருடைய வழிகாட்டுதலின்பேரில் உங்களிடத்திற்கு வருபவர்களுக்காகவும் உள்ள ஏற்பாடாகக் கருதிக்கொள்ளுங்கள் (எபேசியர் 4:28).

உங்களுடைய இந்த முன்ஏற்பாடுகள், நோக்கங்கள் முதலியவைகள் குறித்து தாரை ஊதிக்கொண்டு திரியாதீர்கள். "உனக்கு விசுவாசமிருந்தால் அது தேவனுக்கு முன்பாக உன் மட்டும் இருக்கட்டும்." இந்த உணவு சேமிப்புக்குறித்து உங்கள் குடும்பத்தினர் மாத்திரம் தெரிந்திருக்க வேண்டும் மற்றும் அதை அவர்கள் மற்றவருக்குத் தெரிவியாதபடிக்குக் கண்டிப்புடன் அறிவுறுத்துங்கள். புயல்கள், சண்டைச்சச்சரவுகள் முதலியவைகள் ஏற்பட வாய்ப்புள்ளது என்ற கண்ணோட்டத்தின் அடிப்படையில், கூடுமானமட்டும் குளிர்காலத்திற்கென்று சில முக்கிய உணவுகளைச் சேகரித்துவைப்பது ஞானமாய் இருக்குமென்று உங்கள் நண்பர்களிடம் அல்லது அயலகத்தாரிடம் யோசனையாய்த் தெரியுவியுங்கள். மகா உபத்திரவகாலம் குறித்து விவரங்கள் அதிகம் கொடுப்பதற்கு முற்படாதிருங்கள்; ஏனெனில் அநேகர் இவ்விஷயத்திற்குக் குருடர்களாகவும், செவிடர்களாகவும் இருக்கின்றனர்.

ஒருவேளை உங்களிடம் பணமில்லையெனில் கடன்வாங்கி இப்பொருட்களை வாங்காதிருங்கள். காரியத்தை விட்டுவிட்டு மிகுந்த விசுவாசம்கொண்டிருங்கள்; பொன்னான பிரமாணம் என்பது கர்த்தருடைய ஜனங்களினால் அங்கீகரிக்கப்படும் மிகவும் lowest standard/கீழ்த்தள நியமமே/அடிப்படையான நியமமே என்பதையும் மற்றும் இது எவ்வகையான அன்பு/அறம் காண்பிக்கப்படுவதற்கு முன்னதாகவே நடப்பிக்கப்பட வேண்டும் என்பதையும் நினைவில் கொள்ளுங்கள்.

R5475 [தெரிந்தெடுக்கப்பட்ட பத்திகள்]

# சித்தத்தில் சுயாதீனம்

## தனித்தன்மை தக்கவைக்கப்பட வேண்டும்

தேவ ஜனங்கள், தேவனுக்குச் சித்தத்தை முழுமையாய் ஒப்புக்கொடுப்பதின் வாயிலாக மாத்திரமே அவருடன் உறவிற்குள் வரமுடியும் என்று புரிந்துகொள்ள வேண்டும். கர்த்தருக்குத் தவிர மற்றபடி வேறு யாருக்காகிலும் இப்படிச் சித்தத்தை ஒப்புக்கொடுத்திடும் காரியம் ஞானமற்றதாய் இருக்கும்; மேலும் சிறுபிள்ளைகள் விஷயத்தில் அவர்கள் தங்கள் பெற்றோர்களுக்கு அல்லது ஆசிரியர்களுக்குச் சித்தங்களை ஒப்புக்கொடுத்திடலாம்.

பிள்ளையானவன் சரியாகப் பின்வருமாறு: "எனக்கென்று சொந்தச் சித்தம் ஒன்று உள்ளது, ஆனாலும் நான் அதைப் புறக்கணித்து என் பெற்றோரின் சித்தத்தைச் செய்திடுவேன்"என்று சிந்திக்கலாம். இதுவே நல்ல மற்றும் அறிவுள்ள பெற்றோர்களின் கரங்களில் காணப்படும் பிள்ளைக்கான தகுதியான மனப்பாங்காகும். பிள்ளையானவனுக்கு அவனுடைய சித்தம் பயிற்றுவிக்கப்படவில்லையென்றும், ஆகையால் அவன் தனது பெற்றோர்களுக்குத் தன்னை முழுமையாக ஒப்புக்கொடுத்து வழிக்காட்டுதலுக்காகவும், வழிநடத்துதலுக்காகவும் பெற்றோர்களை நோக்கிட வேண்டும் என்றும் உணரத்தக்கதாகக் கற்றுக்கொடுக்கப்பட வேண்டும். பிள்ளையைக் கண்காணிக்கும் தன் பொறுப்பினை அடையாளம் கண்டுகொள்ளும் ஒவ்வொரு பெற்றோரும், பிள்ளையை அவனுடைய சுயாதீனத்தின் கண்ணோட்டத்தின்படியே கையாண்டிட/நடத்த வேண்டும்; மேலும் காரியங்கள் ஏன் இன்னின்னபடியாகச் செய்யப்படுகின்றது என்பதற்கான காரணத்தைப் பிள்ளைக்குக் காண்பிக்க நாடி, கூடுமானமட்டும் பிள்ளையினுடைய சொந்தச் சித்தத்தை அறிவுள்ள விதத்தில் பிள்ளையைக்கொண்டு செயல்படவைத்தே, பிள்ளையைக் கட்டுப்படுத்திட நாடிட வேண்டும்.

---

R5487 [தெரிந்தெடுக்கப்பட்ட பத்திகள்]

# சுயக்கட்டுப்பாட்டின் அவசியம்

"தன் ஆவியை அடக்காத மனுஷன் மதிலிடிந்த பாழான பட்டணம்போலிருக்கிறான்."
(நீதிமொழிகள் 25:28)

## பலமான குணலட்சணத்தை அடைவது எப்படி?

தன் சொந்த ஆவியைக் கட்டுப்படுத்துவதைக் கிறிஸ்தவனால் எந்த விதத்தில் வளர்த்திடமுடியும்? ஆரம்பத்தில் ஒரு நபர் எல்லாவற்றிலும் தன்னைக் கட்டுப்படுத்திடும் ஆற்றல் அற்று இருப்பான்; ஆனால் சிறு காரியங்களில் சுயத்தைக் கட்டுப்படுத்திட அவன் கற்றுக்கொள்கையில் . . . இப்படிச் சிந்தையிலும், வார்த்தையிலும், கிரியையிலும் அவன் அதிகமதிகமாய்ச் செய்துவருகையில் குணலட்சணத்தில் அவன் பலம் அடைவான். தன் தசைகளை வளர்த்திட விரும்பின மனுஷடைய கதையினை நாம் நினைவில்கொள்ள வேண்டும்; தசைகளை வளர்த்திடுவதற்கு வேண்டி அவன் ஒவ்வொரு நாளும் ஒரு கன்றுக்குட்டியைத் தூக்கிப் பயிற்சிக்கத் துவங்கினான். கன்று மிகவும் குட்டியாக இருக்கும்போது இப்படிப் பயிற்சியைத் துவங்கினான் மற்றும் இப்படித் தினந்தோறும் வாரக்கணக்காகவும், மாதக்கணக்காகவும் தூக்கிப் பயிற்சி செய்தான். குறிப்பிட்ட காலத்தில் கன்றுக்குட்டி எருதுமாடு ஆனது மற்றும் அவன்

எருதைத் தூக்கமுடிகிறவனுமானான். அவனது அன்றாட பயிற்சியானது படிப்படியாக அவன் தசைகளை வலுப்படுத்தினது; அவன் முழுவளர்ச்சியடைந்த எருதைத் தூக்குவதற்குப் பலம் உள்ளவனாகும்வரை ... விலங்கினுடைய எடை அதிகரித்து வர, அவன் தசைகளின் பலமும் அதிகரித்து வந்தது.

இப்படியாகவே கிறிஸ்தவனுக்கும், அவனது குணலட்சணத்தினுடைய வளர்ச்சியின் விஷயத்திலுமாகும். நாம் தினந்தோறும் சுயக்கட்டுப்பாட்டினைப் பயிற்சி செய்துவந்தால் இது விஷயத்தில் நாம் படிப்படியாக பலமான குணத்தையடைவோம்; மேலும் இது நம்முடைய கிறிஸ்தவ போராட்டத்தில் சொல்லிமுடியாத அளவிற்கு நன்மையாகக் காணப்படும். சுயக்கட்டுப்பாட்டின் வளர்ச்சி என்பது, ஒருவர் பிறப்பதற்கு முன்னாகவே - ஆம் கருத்தருத்தலின் காலத்தின்போதே துவங்குவது ஏற்றதாக இருக்கும். தாயானவள் இதுவரை பிறக்காத தன் பிள்ளையின் மனதில் சுயக்கட்டுப்பாடு எனும் பண்பினைப் பதிய வைத்திடவும், இப்படியாகக் குழந்தைப் பிறந்து உலகத்திற்கு வருகையில் அவன் சுயக்கட்டுப்பாட்டு விஷயத்தில் மிக அதிக அனுகூலமான நிலைமையில் காணப்படவும் வேண்டி, தாயானவள் (கர்ப்பக்காலத்தில்) சுயக்கட்டுப்பாட்டினைப் பயிற்சி செய்திட வேண்டும். மேலும் குழந்தைப் பிறந்த பிற்பாடு, சுயக்கட்டுப்பாட்டின் இந்த ஆவியானது பெற்றோரின் முறையான பயிற்சியின் கீழ்ப் பிள்ளையினிடத்தில் வளரும்; மேலும் இப்படியாகப் பிள்ளை, புருஷன் நிலையை அடைகையில் அவன் இயல்பாகவே அதிகம் சுயக்கட்டுப்பாட்டைப் பிரயோகிக்க முடிகிறவனாய் இருப்பான். இப்படிப்பட்டவன் தேவ பிள்ளையாகிடும்போது உண்மையில் அவன் மிகச் சிறந்த கிறிஸ்தவனாய் இருப்பான்; அவன் கர்த்தரில் பலமுள்ளவனாகவும், மற்றவருக்கு உதவிசெய்ய முடிகிறவனாகவும் இருப்பான். ஆனால் அனைவருக்குமே இப்படியாக இந்த இயல்பான அனுகூலம் இருப்பது இல்லை; மேலும் இதன் காரணமாய் மிகவும் உறுதியாகப் போராட வேண்டியவர்களாய் இருக்கின்றனர்.

---

R4839 [தெரிந்தெடுக்கப்பட்ட பத்திகள்]

# திவ்விய நீதி மற்றும் இரக்கம்

## 2 நாளாகமம் 33:1-20

இந்த ஆராய்ச்சியினுடைய மைய நபராகிய மனாசே நல்ல இராஜாவாகிய எசேக்கியாவின் குமாரனாவார். மனாசே தன்னுடைய பன்னிரண்டாவது வயதில் யூதேயாவின் சிங்காசனத்தினிடத்திற்கு வந்தார் - இவர் நல்லதொரு தந்தையினுடைய கெட்ட குமாரனாவார். நல்லத் தகப்பன்மார்களுக்குப் பொல்லாத குமாரர்கள் காணப்படுவதும் மற்றும் பொல்லாத தகப்பன்மார்களுக்கு நல்லக் குமாரர்கள் காணப்படுவதும் அநேகமாகத் தாய்மார்களினுடைய நல்ல அல்லது பொல்லாத குணங்களின் காரணத்தினாலும், நாட்டினுடைய காரியங்களில் மூழ்கிக்கிடந்த இராஜாக்களினால் தங்கள் சொந்தப் பிள்ளைகளில் குணங்களை வளர்த்திடும் விஷயத்தில் உரிய கவனம் கொடுக்க முடியாத காரணத்தினாலும் ஆகும். இதில் சில விதிவிலக்குண்டு என்பதில் ஐயமில்லை; எனினும் ஒவ்வொரு உதவாக்கரைப் பிள்ளையினுடைய விஷயத்திலும், பெற்றோருக்குப் பங்கு உண்டு என்பதை மறுக்க முடியாது.

## எத்தனை சொற்பமானவர்களே பெற்றோருக்குரிய பொறுப்பினுடைய புனிதத்தன்மையினை அடையாளம் கண்டுகொள்கின்றனர்

பெற்றோருக்குரிய நிலைமை என்பது மனுஷீக ஜீவியத்தினுடைய உயர்வான மற்றும் மிக முக்கியமான வேலையாய் இருக்கின்றது. எனினும் வெகு சிலரே பெற்றோருக்குரிய பொறுப்பினுடைய

புனிதத் தன்மையினை உணருகின்றவர்களாய் இருக்கின்றனர்! "அசுத்தமானதிலிருந்து சுத்தமானதைப் பிறப்பிக்கத்தக்கவன் உண்டோ? ஒருவனுமில்லை" (யோபு 14:4) என்று தீர்க்கத்தரிசி கேட்கின்றார். நம் இனத்திலுள்ள எவரும் பூரணமாய் இருக்க முடியாது என்பதை ஒத்துக்கொண்டாலும், தங்களுடைய பிள்ளைகளின் நற்பண்புகள் அல்லது பொல்லாப்புகள் விஷயத்தில் பெற்றோர்களிடத்தில் மகா பொறுப்புக் காணப்படவே செய்கின்றது என்பதையும் நாம் ஒப்புக்கொண்டிட வேண்டும். இந்தப் பொறுப்பானது திருமணத்திற்கு முன்னதாகவே உணரப்பட வேண்டும். இனப்பெருக்கத்தின் அடிப்படையில் திருமணத்தினைப் பார்ப்பதற்கும், நேர்த்தியான மனவுணர்வுகளை அலட்சியம்பண்ணுவதற்கும் நாங்கள் வலியுறுத்துகிறதில்லை; மாறாக தம்பதிகளினுடைய இலக்கினையும், மகிழ்ச்சியையும் மாத்திரமல்லாமல், அவர்களுடைய குழந்தைகளுடையவற்றையும் தாக்கத்திற்குள்ளாக்கும் ஜீவியத்தினுடைய அந்த முக்கிய ஒப்பந்தத்தினுடைய விஷயத்தில் தெளிந்த புத்தியின் ஆவியுடன் நாட வேண்டும் என்று நாம் வலியுறுத்துகின்றோம்.

உச்சிதமான கனிகளையும், மலர்களையும், காய்கறிகளையும் பெற்றுக்கொள்வதற்கென அறிவியல் சார்ந்த தோட்டக்காரனினாலும், பூந்தோட்டக்காரனினாலும் செலுத்தப்படும் மிகுந்த கவனத்தைக் குறித்து அறியவரும் ஒருவர், மனித இனத்தில் உயரிய கொள்கைகளை விதைத்திடுவதற்குக் காண்பிக்கப்படும் மிகக் குறைந்த கவனத்தின் நிமித்தம் வெட்கமே அடைவார் - உண்மைதான் பெரும்பான்மையானவர்களிடத்தில் எவ்விதமான கொள்கையும் இருப்பதில்லை; கண்மூடித்தனமான, முரட்டுத்தனமான உணர்வுகள் மாத்திரமே காணப்படுகின்றது.

உயர்தரமான குதிரைகள், நாய்கள், கால்நடைகள் முதலானவைகளை இனவிருத்திப் பண்ணுகிறவன், இனப்பெருக்கத்தின் காலத்தில் தாய் விலங்கினிடத்தில் தான் எவ்வளவு ஜாக்கிரதையாய் இருப்பான் என்று விவரிப்பான் - அதன் ஆரோக்கியம், அதன் சுற்றுச்சூழல் அனைத்துமே கவனிக்கப்படுகின்றது; ஏனெனில் இவை அனைத்தும் தாயின் குட்டியைப் பாதிக்கின்றதாய் இருக்கும்; எனினும் கால்நடைகள், குதிரைகள், கோழிகள் முதலானவைகளை இனப்பெருக்கம் பண்ணுபவர்கள் தங்களுடைய சொந்தக் குழந்தைகளுக்கான தாயாகிய, தங்கள் மனைவியினுடைய நிலைமைகளுக்கு, அவளது கர்ப்பக்காலத்தில் கவனம் செலுத்துகிறதில்லை. ஓடிக்கொண்டிருக்கும் குதிரைகளினுடைய படங்களையும், குதிரைகள் பந்தயத்தில் ஓடுவதையும் இனப்பெருக்கம் பண்ணிடும் பெண்குதிரைப் பார்ப்பதினால், நன்மைப் பெறுகின்றது என்றும், இதன் காரணமாக அதன் குட்டி மிகவும் வேகமாய் ஓடுகின்றதாகவும், மிகவும் உயர்தரமானதாகவும் காணப்படும் என்றும் உணர்ந்துகொள்ளும் குதிரை-பிரியன் . . . இந்தக் கொள்கையினைத் தன் மனைவி விஷயத்தில் செயல்படுத்தத் தவறுவது எத்துணை விநோதமாய் இருக்கின்றது!

தாயானவள் கருவைச் சுமந்துகொண்டிருக்கையில் அவள் பல்லாயிரம் வழிகளில் அமைதியற்றும், தொல்லைப்படுத்தப்பட்டும் இருக்கையில், அவள் பிள்ளைகள் பலவீனமானவர்களாக/கோழைகளாக மற்றும் சிடுசிடுப்பானவர்களாகப் பிறப்பதில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லையே. கோபமுள்ள, எரிச்சலுள்ள, இச்சையுள்ள குழந்தைகளெனப் பிறந்தவர்கள் விஷயத்தில், இவர்களில் இதைப் பதியவைத்திட்டதான இவர்களுடைய தாய்மார்களுடைய அனுபவங்களைக் குறித்து நாம் சிந்தித்துப் பார்க்கையில், இவர்கள் இப்படிப் பிறந்ததில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லையே. நியாயமாய்ச் சிந்தித்திடும் பெற்றோர்கள் அனைவரும், இந்தக் காரியங்களைப் புரிந்துகொள்கையில், நிச்சயமாகவே தங்கள் பிள்ளைகளில் சரியான அஸ்திபாரங்களைப் போடுகின்றவர்களாய் இருப்பார்கள் - இந்த அஸ்திபாரத்தினுடைய அடிப்படையில்தான் பிற்பாடு பெற்றோர் - நீதியின் உயர் கொள்கைகள், பரிசுத்த அலங்காரம் மற்றும் சிருஷ்டிகருக்கான நேர்மை ஆகியவற்றிற்கு இசைவாகப் பொறுமையோடும், ஜாக்கிரதையோடும், அன்போடும் தங்கள் பிள்ளைகளை வளர்த்துகின்றவர்களாய் இருப்பார்கள்!

---

R5250 [தெரிந்தெடுக்கப்பட்ட பத்திகள்]

# அழகுள்ள பிள்ளையாகிய மோசே

## யாத்திராகமம் 1:22-2:10

இம்மாதிரியான சூழ்நிலையில்தான் மோசே பிறந்தார். மோசேயின் பெற்றோர்கள் இருவரும் பயபக்தியுள்ளவர்களெனப் பதிவானது சுட்டிக்காட்டுகின்றது; ஆகையால் மோசே அழகுள்ள பிள்ளையாக இருந்தார் என்ற பதிவில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை. வெகுசில பெற்றோர்களே தங்கள் பிள்ளைகள் அழகிற்கு நேர்மாறாய் இருக்கையில் - அதாவது ரூபத்திலும், குணத்திலும், எழிலுள்ளவர்களாய் இருப்பதற்கு நேர்மாறாய் இருக்கையில், குறைபாடுகளுக்கான பொறுப்பானது பெற்றோர்களாகிய தங்கள்மீதே இருப்பதை உணர்ந்துகொள்வதாகத் தெரிகின்றது. ஆனால் அதற்கென்று எந்த ஒரு மனித ஜோடியினாலும் முழுமையாய்ப் பூரணக் குழந்தையைக் கொணர்வது சாத்தியம் என்று நாங்கள் சொல்லுகிறோம் என்று அர்த்தமாகாது. "அசுத்தமானதிலிருந்து சுத்தமானதைப் பிறப்பிக்கத்தக்கவன் உண்டோ? ஒருவனுமில்லை" (யோபு 14:4).

ஆனால் நாங்கள் சொல்ல விரும்புவது என்னவெனில் கவனமுள்ள இனப்பெருக்கமானது விலங்குகளின் ரூபத்தையும், சாயலையும், குணத்தையும் தாக்கத்திற்குள்ளாக்குகின்றது மற்றும் கனிகளையும், மலர்களையும்கூட மேம்படுத்துகின்றது . . . இதே ஆற்றல் மனுக்குலத்தின் விஷயத்திலும்கூடக் காணப்படும். ஆம் இதனிலும் மேலாய்க் காணப்படும்; ஏனெனில் பெற்றோரும் சரி, அரசாங்கமும் சரி மனுஷதிருமணத்தில் துணைவியைத் தெரிவு செய்யும் விஷயத்தைப் புறக்கணிக்கின்றது இல்லை என்றாலும், உலகிலேயே அறியப்பட்டிருக்கும் மிகவும் ஆச்சரியமான ஆற்றலை, திருமணமானவர்கள் தங்கள் கட்டுப்பாட்டில் கொண்டிருக்கின்றனர்; இந்த ஆற்றல் மூலம் குழந்தைப் பிறப்பதற்கு முன்னதாகவே குழந்தையினுடைய குணலட்சணம் மற்றும் சாயல் விஷயத்தில் தாக்கம் ஏற்படுத்த முடிகிறவர்களாக இருக்கின்றனர் மற்றும் பிள்ளைப் பிறந்த பிற்பாடும் இந்த ஆற்றலானது - அதாவது மனதின் ஆற்றலானது புறக்கணிக்கப்படக்கூடாது.

இந்த இயற்கையின் சட்டமானது அறிவுள்ள, கடமை உணர்ச்சியுள்ள ஜனங்களினால் தெளிவாய் அடையாளம் கண்டுணரப்படுமானால், எத்தனை சீக்கிரமாய் மாற்றங்கள் உண்டாகும்! இப்படி உணரும் பெற்றோர்கள் பிள்ளைகளைச் சாயலிலும், ரூபத்திலும், குணலட்சணத்திலும் அழகுள்ளவர்களாக உலகத்திற்குள் கொண்டுவருவதற்கு மாத்திரம் விரும்பிடாமல், இன்னுமாக இது விஷயத்தில் தங்களால் செய்யமுடிந்த அனைத்தையும் செய்யாமலிருப்பதைக் குற்றமாகவும் உணர்வார்கள் என்று நாங்கள் எண்ணுகின்றோம்.

ஒவ்வொரு தாயும் தனது கர்ப்பக்காலத்தில் தன்னுடைய மனநிலையானது (mental moods) தன் பிள்ளைக்கு ஒன்றில் ஆசீர்வாதமாகவோ அல்லது சாபமாகவோ இருக்கும் என்று உணர்வாளானால், தீயமனநிலைகளையும், சண்டைகளையும் எதிர்ப்பதில் அவள் எத்துணை விடாமுயற்சியுடன் காணப்படுவாள்! தான் வாசிப்பவைகள் விஷயத்திலும், தனது தோழமையின் விஷயத்திலும், தனது மனப்பான்மையின் விஷயத்திலும் எத்துணை ஜாக்கிரதையாய் இருப்பாள்! "உண்மையுள்ளவைகளெவைகளோ, ஒழுக்கமுள்ளவைகளெவைகளோ, நீதியுள்ளவைகளெவைகளோ, கற்புள்ளவைகளெவைகளோ, அன்புள்ளவைகளெவைகளோ, நற்கீர்த்தியுள்ளவைகளெவைகளோ, புண்ணியம் எதுவோ, புகழ் எதுவோ அவைகளையே சிந்தித்துக்கொண்டிருங்கள்" எனும் அப்போஸ்தலனின் அறிவுரைகளை நடைமுறைப்படுத்துவதிலும், இப்படியாகத் தன்னால் சிந்திக்கமுடிந்த உயர்ந்த, சிறந்த கருத்துக்களைத் தன் பிள்ளையினிடத்தில் பதியவைத்திடவும் எத்தனை உண்மையாய் நாடிடுவாள்! (பிலிப்பியர் 4:8).

தகப்பன் தன் பொறுப்பினை உணர்வாரானால் தன் முழுக்கடமையினையும் நிறைவேற்றுவதில் - அதாவது தகப்பனாகவும், ஜீவன் அளிப்பவராகவும் மாத்திரமல்லாமல், தாயானவளுக்குப் பாதுகாவலனாகவும், பராமரிக்கிறவனாகவும் இருந்து மனித ஜீவியத்தின் மிக முக்கியமான இப்பணியின்போதும், அவளது மிகுந்த தேவையின்போதும் தன்னால் முடிந்த உதவியினை அவளுக்கு அளிப்பதில் எத்துணைக் கவனமாய் இருப்பார். கர்ப்பக்காலத்தில் விசேஷமாகத் தாயானவள் நலமானவைகளையும், மகத்துவமானவைகளையும், சிறந்தவைகளையும், தூய்மையானவைகளையும், அறிவுள்ளவைகளையும், கலைநயங்களையும் முன்வைத்திடும் காரியங்களினால் சூழப்பட்டிருக்க வேண்டும். தகப்பன் விசேஷமாய்ப் பரிவுகொண்டவராகவும், தாயினுடைய மனதைக் கவலையின்றி வைத்துக்கொள்வதற்கு முயற்சிக்கிறவராகவும் இருக்க வேண்டும். ஒருவேளை சௌகரியங்கள், ஓவிய படங்கள், கலைகள் முதலியவைகளை வைத்துக்கொள்ள முடியாத அளவிற்கு மிகுந்த தரித்திரம் இருக்குமானால், இவைகளுக்குப் பதிலாகத் தாயிடம் உயர்ந்த, மேன்மையான காரியங்களைச் சம்பாஷிக்க வேண்டும் அல்லது இவைகள் குறித்து அவள் கேட்கும்படிக்குத் தகப்பன் வாசித்துக்கொடுக்கலாம். ஆ! தங்களுடைய வேகமாய் ஓடும் குதிரைகளையும், ஆடம்பரமான நாய்களையும், புறாக்களையும், பன்றிகளையும், இனப்பெருக்கம் செய்வதில் செலுத்தப்படும் அதே அக்கறையானது, தங்கள் சொந்தக் குடும்பங்களின் விஷயத்திலும் அதிக வெற்றிகரமாய்ச் செயல்படுத்தப்படலாம் என்று நாகரிகமான ஜனங்கள் என்றுதான் கற்றுக்கொள்வார்களோ? அப்படிக் கற்றுக்கொண்டால் ஆச்சரியமான விளைவுகள் காணப்படும் என்பதில் யாருக்கேனும் சந்தேகம் வருமோ?

---

R4837

## தேவபக்தியுள்ள ஒரு வாலிப இராஜா

### 2 நாளாகமம் 34:1-13

"நீ உன் வாலிபப்பிராயத்திலே உன் சிருஷ்டிகரை நினை." (பிரசங்கி 12:1)

இராஜாவாகிய மனாசே, ஆமோன் என்னும் பொல்லாத குமாரனை உடையவனாய் இருந்தார்; ஆமோன் இரண்டு வருஷங்கள் மாத்திரமே அரசாண்டு, தன் சொந்த அரண்மனையிலுள்ள தன் ஊழியர்களால் கொல்லப்பட்டார். இவரது குமாரனும், நம்முடைய இப்பாடத்தின் மையமுமான யோசியா, தன்னுடைய எட்டாவது வயதில் இராஜாவானார். இவரது பதினாறாம் வயதில் இவர் இருதயம் சர்வவல்லமையுள்ள தேவனைத் தேடவும், அவருக்கென்று சேவிக்க விரும்பவும் துவங்கினது. இவரது இருபதாம் வயதில் மதத்தின் விஷயத்திலுள்ள இவரது காரியங்கள் ஆழமாகவும், உறுதியாகவும் இருந்தது மற்றும் இராஜாவாக இவர் தன் கையில் பெற்றிருந்த அதிகாரத்தினால், சீர்த்திருத்தத்தின் வேலையினைத் துவங்கிட இவர் துணிந்தார். விக்கிரகங்களும், அவைகளின் கோவில்களும், அவைகள் தொழுதுகொள்ளப்படுவதற்கான மேடைகளும் அழிக்கப்பட்டன. முன்பே சொல்லப்பட்டது போன்று இன்னோம் பள்ளத்தாக்கானது அவமதிக்கப்பட்டு, எருசலேமின் குப்பைகளைப் போடும் இடமாக்கப்பட்டது.

கர்த்தருடைய ஆலயமானது பழுதுபார்க்கப்பட்டது மற்றும் விக்கிரக அசுசிகள் அனைத்தினின்றும் அது சுத்திகரிக்கப்பட்டது மற்றும் அங்கு மீண்டுமாகச் சர்வவல்லவரைத் துதிப்பதும், தொழுதுகொள்வதும் கொண்டுவரப்பட்டது. இதற்கும்மேலாக இராஜா தன் செல்வாக்கினைப் பயன்படுத்தி, ஒரு காலத்தில்

தன்னுடைய இராஜ்ய பாரத்தின் வடக்குப் பகுதியின் இரண்டு கோத்திரங்களின் இடமாகக் காணப்பட்ட இடத்திலுள்ள விக்கிரகங்களையும் அழித்துப்போட்டுவிட்டார்.

## இளமைப் பருவத்துக்குரிய இன்பக் களியாட்டங்களில் மூழ்கிட வேண்டும் என்று எண்ணுவது தவறு

"உன் வாலிபப் பிராயத்தில் உன் சிருஷ்டிகரை நினை" எனும் நம்முடைய ஆதார வசனத்தில் எத்தகைய ஓர் ஆற்றல் காணப்படுகின்றது! தங்கள் பிள்ளைகள் நீதியைப் புரிந்துகொண்டு, அதன் ஊழியர்களாகிட ஆயத்தமாகிடுவதற்கு முன்னதாக, "இளமைப் பருவத்துக்குரிய இன்பக் களியாட்டங்களில் மூழ்கும்" அனுபவம் வேண்டும் என்று சில பெற்றோர்கள் எண்ணிடுவது எத்தனை மாபெரும் தவறாய் இருக்கின்றது! இவர்களின் இந்த எண்ணங்களானது வாலிப ஆண்கள் மற்றும் பெண்களின் மனதிலும்கூடக் காணப்படுகின்றன; அபூர்வமாகவே பிள்ளைகளிடத்தில் பெற்றோர்கள் அல்லது பாதுகாவலர்கள் எதிர்ப்பார்த்திடுவதற்கும் அதிகமாய், உயர்கொள்கைகளின் அடிப்படையில் ஜீவித்திடுவதற்குப் பிள்ளைகள் நாடுகின்றனர். பரிசுத்தவான்களாய்க் காணப்படும் சில தாய்மார்கள் தாங்கள்கூட நடக்கமாட்டாத உலகத்தினுடைய வழிகளுக்குள், வேண்டும் என்று இல்லாமலேயே தங்கள் பிள்ளைகளை அறிமுகப்படுத்துவதன் வாயிலாய்த் தங்கள் பிள்ளைகளின் பாதங்களுக்குக் கண்ணி வைத்துவிட்டதை நாங்கள் அறிவோம். இவர்களின் வார்த்தைகள் பின்வருமாறு காணப்பட்டது: "இந்தக் குழந்தைகள் மீது நான் சிலுவையினுடைய பாரப்பளுவினைச் சுமத்திவிடக்கூடாது; அவர்கள் பரிசுத்தவான்களாகிட நான் எதிர்ப்பார்த்திடக்கூடாது; ஒருவேளை எப்போதேனும் பிள்ளைகள் தேவனுக்கு உண்மையுள்ள, அர்ப்பணிக்கப்பட்ட பரிசுத்தவான்களாவார்களானால் . . . அப்போது அவர்கள் 'இடுக்கமான வழியினுடைய' சோதனைகளை அறிந்துகொள்வார்கள் மற்றும் அப்போது அவற்றை நிறைய அனுபவிக்கட்டும்" என்பதேயாகும்.

அந்தோ பரிதாபம்! இத்தகைய கிறிஸ்தவ தாய்மார்கள் சூழ்நிலையினைக் கிரகித்திட தவறினவர்களாய் இருந்துள்ளனர். தற்காலத்தில் "இடுக்கமான வழியினைத் தவிர" மற்றபடி உலகத்தில் உண்மையான சந்தோஷம் என்ற எதுவுமில்லை என்பதை இத்தாய்மார்கள் உணர்ந்துகொள்ளத் தவறியுள்ளனர். சுயத்தைத் திருப்திப்படுத்திடுவதற்கான, பெருமைக்கான, இச்சைக்கான, பாவத்திற்கான, சுயநலத்திற்கான "விசாலமான பாதை" தூரத்திலிருந்து பார்க்கையில் உண்மையாகவே அருமையான காட்சியாகவேதான் இருக்கும்; ஆனால் அக்காட்சியானது, மாயத்தோற்றமே/கானல் நீரேயாகும் - அது ஒருபோதும் சென்று அடையப்பட முடியாது - அது ஒரு மாயத்தோற்றம். சுயநலம், பெருமை முதலானவற்றின் விசாலமான வழியில் கூட்டமாய் நெருக்கிக்கொண்டு செல்லும் இலட்சக்கணக்கானோர் அனைவருமே இன்பத்திற்குத் தலைவணங்கி, அதைத் தங்கள் முழுப்பலத்தில் நாடிக்கொண்டிருக்கின்றனர்; ஆனால் இவ்வழியில் போய்க்கொண்டிருக்கும் இந்த இலட்சக்கணக்கானவர்களில் எத்தனை பேர்தான் இன்பத்தைக் கண்டடைந்துள்ளனர்? இவர்கள் இன்பத்தைத் தேடுபவர்கள் மாத்திரமே, மாறாக இன்பத்தைக் கண்டடைபவர்களல்ல என்று நாங்கள் கருதுகின்றோம்; சுயத்தைப் பலிசெலுத்திடும் இடுக்கமான வழியில்தான் - மாபெரும் போதகரின் அடிச்சுவடுகளில்தான் - அவரைப் பின்பற்றும்படிக்குச் சிலுவையை எடுத்துச்செல்வதில்தான் - அவர் தம் ஜீவனை ஒப்புக்கொடுத்தது போன்று, நாம் ஜீவனை ஒப்புக்கொடுப்பதில்தான் - "அவரோடு ஆளுகை செய்யத்தக்கதாக, அவரோடுகூடப் பாடுபடுவதில்தான்" - "அவரோடுகூடப் பிழைத்திருக்கத்தக்கதாக, அவரோடுகூட மரிப்பதில்தான்" - உலகத்தில் அந்த ஒரே உண்மையான இன்பமும், மெய்யான சந்தோஷமும் கண்டடையப்பட முடியும் என்று நாங்கள் கருதுகின்றோம்.

விசாலமான வழியில் பிரவேசித்துள்ளவர்களில் வெகு சிலரே இடுக்கமான வழிக்குத் திரும்புகின்றனர். விசாலமான வழி என்பது சந்தோஷம் மற்றும் மகிழ்ச்சியான ஒன்று என்ற தவறான அபிப்பிராயத்தினைப் பிள்ளைகளுக்குப் பெற்றோர்களும், நண்பர்களும், கிறிஸ்தவர்களும் கொடுத்திருக்கின்றனர். ஆனால் விசாலமான வழியோ, சந்தோஷமானதல்ல என்று பிள்ளைகள் கண்டுபிடிக்கையில், அவர்கள் இயல்பாகவே இடுக்கமான வழியும்கூட மிகவும் மகிழ்ச்சியற்றதாக இருக்கக்கூடும் மற்றும் அதிகம் விரும்பத்தகாததாக இருக்கக்கூடும் என்று எண்ணிவிடுகின்றனர்.

## ஒவ்வொரு குழந்தையினுடைய மனதிலும் ஓரளவுக்கு எளிமையும், நேர்மையும் காணப்படும்

விசாலமான வழியில் நடந்த பிற்பாடு, இடுக்கமான வழியினைக் கண்டடைந்த சிலர்: "ஓ! கர்த்தருடைய வழியினை, சத்தியத்தின், சந்தோஷத்தின், சமாதானத்தின் மற்றும் மகிழ்ச்சியின் வழியினை, ஏன் நான் ஆரம்பக் காலங்களிலேயே கண்டுகொள்ளவில்லை!" என்று புலம்பியுள்ளனர்.

அனைவருமே சீரழிந்த நிலையில்தான் பிறந்திருப்பினும், ஒவ்வொரு குழந்தையினுடைய மனதிலும் ஓரளவுக்கு எளிமையும், நேர்மையும் காணப்படவே செய்கின்றது. இந்தக் கொள்கையே ஆசிரியர்களாலும், பொதுவான உதவியாளர்களினாலும் பயன்படுத்தப்பட வேண்டும்; ஒருவேளை குழந்தைச் சரியான பாதையில் வழிநடத்தப்பட்டால், குழந்தையானவன் மிகவும் சீக்கிரமாக தன் சிருஷ்டிகருடன் ஓர் உறவினையும், இணக்கத்தையும் அடைந்துவிடுவான்; ஆசிரியர் வேண்டும் என்ற அவசியம் எப்போதும் இருப்பதில்லை. சிலசமயங்களில் தேவனுடைய வழிநடத்துதலின்படி, உன்னதத்திலிருந்து வரும் செய்தியானது இருதயத்தைச் சென்றடைந்து, எதிர்ப்பு ஏதுமின்றி இருதயத்தினை இழுத்துவிடுகின்றதாய் இருக்கின்றது. பிள்ளையினால் ஜீவியத்தின் மாயம் புரிந்து கொள்ளப்படுகின்றது - பரத்திலிருந்து வரும் ஞானத்தினுடைய அவசியம் அடையாளம் கண்டுகொள்ளப்படுகின்றது மற்றும் அநேகமாக ஊழியக்காரன் வாயிலாகவோ, அநேகமாகப் பெற்றோருடைய அறிவுரையின் வாயிலாகவோ, அநேகமாக ஒரு நண்பனுடைய ஆலோசனைகள் வாயிலாகவோ, அநேகமாக ஒரு கைப்பிரதி அல்லது புத்தகம் வாயிலாகவோ வாலிபனுடைய இருதயத்திற்கு ஞானத்தின் பாதைச் சுட்டிக்காண்பிக்கப்படுகின்றது மற்றும் கர்த்தரிடத்திற்கும், இடுக்கமான வழியினிடத்திற்கும் சுட்டிக்காண்பிக்கப்படுவான்.

தெய்வீக வழிக்காட்டுதலின்கீழ், சித்தமே நம்முடைய எதிர்க்காலத்திற்கான உண்மையான வழிக்காட்டியாக இருக்கின்றது என்றும், சித்தத்தைச் சரியாய் வழிக்காட்டப்பட்ட நிலையிலும், சித்தத்தை ஸ்திரமாகவும் பெற்றிருப்பதே மிக முக்கியமான காரியம் என்றும் நாம் நினைவில்கொள்ள வேண்டும். பாவம் மற்றும் சுயநலத்தின் விசாலமான பாதையிலும் மற்றும் இன்று தேவனிடமிருந்து தூர நிலையிலும் உள்ள அநேகரில் சிலர், தன் ஜீவியத்தின் நடத்தைக்கும், நிலைமைக்கும் முற்றிலும் முரண்படும் அநேகம் நல் இயல்புகளை, தன் மனதினுடைய அமைப்பில் பெற்றவர்களாய் இருப்பார்கள்; ஆனால் வழிநடத்துவதற்கும், வழிக்காட்டுவதற்கும் சித்தம் இல்லாமல், அவன் கீழ்நோக்கிப் போகிறவனாகவே இருப்பான். இதுபோலவே முன்னோர் வழிவந்த சரீர, மன, ஒழுக்க ரீதியிலான அநேகம் பெலவீனங்கள் காரணமாய்த் தொடர்ந்து விசாலமான வழியில் இழுக்கப்படும் நிலையில் சிலர் இடுக்கமான வழியில் காணப்படுவர்; ஆனாலும் இவர்கள் கர்த்தரினால் இடுக்கமான வழியில் தக்கவைக்கப்படுவர் - அதுவும் மாம்சத்தினுடைய சுயசித்தத்தினால் இல்லாமல், மாறாக புதிதாக்கப்பட்ட சித்தத்தினுடைய வல்லமையினால் ஆகும். அப்படியானால் வாலிபப் பிராயத்திலேயே நம் சித்தங்களைச் சரியாய் வழிக்காட்டப்பெற்றும், ஸ்திரப்படுத்தி வைப்பதும் எத்துணை முக்கியமானதாக இருக்கின்றது! இப்படிச் செய்வோமானால் தற்கால ஜீவியத்தில் நாம் எத்துணை மகா ஆசீர்வாதங்களை அனுபவிப்பவர்களாய்

இருப்போம் மற்றும் இதனால் எதிர்க்கால ஜீவியத்திற்கென்று எத்தனை அதிகமாக ஆயத்தங்களை நாம் பெற்றவர்களாய் இருப்போம்!

யோசியா இராஜா குறித்த இன்றைய பாடமானது, ஒவ்வொரு வாலிபனும் எடுத்துக்கொள்ள வேண்டிய சரியான பாதைக்கான உதாரணமாகும். பொல்லாத நாட்களும், தீமையான அனுபவங்களும் வருவதற்கு முன்னதாக, விரட்டியடிப்பதற்கு மீதமுள்ள ஜீவிதக் காலம்கூடப் போதாமல் போகுமளவுக்கு மிக அதிகமான தீமைகளை ஒருவன் கற்றுக்கொள்வதற்கு முன்னதாக, வாலிப நாட்களில் இருதயமானது முதலாவதாகக் கர்த்தருக்குக் கொடுக்கப்பட வேண்டும். அப்போது யோசியா போன்று நீதிக்கு ஊழியம் புரிவதற்கான வாய்ப்புகளைக் காலமானது நமக்குக் கொண்டுவருகையில், சரியானவற்றிற்கு ஆதரவாய் இருப்பதிலும், தவற்றை எதிர்ப்பதிலும் முழு இருதயத்தோடு இருப்போமாக மற்றும் "தேவனுக்கே முதலிடம்" எனும் குறிக்கோளுடன் எல்லாவற்றிலும் நமது தேவனுக்குத் துதிகள் சாற்றிடுவோமாக.

---

R5287 [தெரிந்தெடுக்கப்பட்ட பத்திகள்]

# எனக்குப் பிறன் யார்?

### யாத்திராகமம் 20:12-21

"உன்னிடத்தில் அன்புகூருவதுபோலப் பிறனிடத்திலும் அன்புகூருவாயாக." (லூக்கா 10:27)

## தகப்பனையும், தாயையும் கனம்பண்ணுவாயாக

எவ்வளவுதான் வயதானவர்களாகவோ, அறியாமையிலுள்ளவர்களாகவோ, புத்தியீனர்களாகவோ, பொல்லாதவர்களாகவோ பெற்றோர்கள் இருப்பினும், அவர்கள் தங்கள் பிள்ளைகளிடமிருந்து மரியாதையினைப் பெற்றுக்கொள்வதற்குப் பாத்திரமானவர்களாய் இருப்பார்கள். எனினும் மரியாதையினுடைய வகையானது அல்லது அளவானது சிலவிதங்களில் பெற்றோரின் குணலட்சணத்தைச் சார்ந்திருக்க வேண்டும். பெற்றோருக்குக் கீழ்ப்படியாமல் போவது என்பது எங்கும் பரவலாய்க் காணப்படுகையில், அதுவிஷயம் நாங்கள் சொல்லப்போகிற காரியம் கடினமானதாக இருப்பினும், அது உண்மை என்று நாங்கள் நம்புகின்றோம் . . . அது என்னவெனில், கீழ்ப்படியாமை என்பது பிள்ளையினுடைய பெற்றோரினால் அல்லது பாதுகாவலரினால் உண்டானதே ஆகும்.

குழந்தை நல்லப்பிள்ளையாகப் பிறந்திருக்காது. கர்ப்பக்காலத்தில் தாயின் மனதில் காணப்பட்ட அதிருப்தியும், கலகமும் பிள்ளைப் பிறப்பதற்கு முன்பாகவே பிள்ளையினிடத்தில் பதிந்து போய்விடுகிறபடியினால், எவ்வளவு பயிற்சி கொடுக்கப்பட்டாலும், பிள்ளையினால் அவைகளினின்று முழுமையாய் மீண்டுவரமுடியாது. இம்மாதிரியான சந்தர்ப்பங்களில் பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளிடத்திலுள்ள சந்தோஷமற்றப் பண்புகளிலும், கீழ்ப்படியாத பண்புகளிலும் பொறுமையாகவும், நீடிய பொறுமையாகவும் இருப்பது நல்லது.

அநேகமாக இதில் பழி, பெற்றோர்கள்மீது பகுதியாகவே காணப்படும்; அநேகமாக அவர்களுடைய சபை ஊழியக்காரர்கள் தேவனுடைய பிரமாணங்கள் குறித்தும், அதை மனுஷர்கள் செயல்படுத்துவது குறித்தும், அவைகளை மீறுகையில் வரும் தண்டனைகள் குறித்தும் போதிக்கவில்லை; இன்னுமாக மனித சுபாவத்தின் பலவீனங்களைப் புரிந்துகொள்வதற்கும், அதனோடு எதிர்த்துப் போராடுவதற்கு உதவிடும்

தன்மையிலுள்ள அல்லது ஆவிக்குரிய தன்மையிலுள்ள உணவுகளை வழங்குவதற்குப்பதிலாகப் பிரயோஜனமில்லாத சொற்பொழிவுகளை ஆற்றியிருந்திருக்க வேண்டும். அநேகமாக முழுத்தவறும் தாயிடமுமில்லை. தன் பிள்ளையின் விஷயத்தில் தனக்கும்கூட ஒரு கடமையிருக்கின்றது என்று தகப்பன் மறந்து போயிருக்கலாம் - அதாவது இரக்கமுள்ள, நற்குணமுள்ள, தலைச்சிறந்த எண்ணங்களை அந்த முக்கியமான காலப்பகுதியில் மனைவியைச் சிந்திக்க வைக்க உதவிடும் தன் கடமையினைத் தகப்பன் மறந்து போயிருக்கலாம்.

எப்படியேனும் மனச்சாட்சிக்குக் கட்டுப்பட்டு நடக்கும் பெற்றோர்கள், தங்கள் மாறுபாடுள்ள பிள்ளைகளைக் கர்த்தருக்கேற்ற சிட்சையிலும், போதனையிலும் பயிற்றுவிக்கும் அருமையான வேலையை உடையவர்களாய் இருக்கின்றனர். இப்படியாக உண்மையாய் முயற்சித்திடும் பெற்றோர்கள் பாராட்டப்பட வேண்டும், ஊக்குவிக்கப்பட வேண்டும்; மேலும் நாம் அறியவரும் ஒவ்வொரு தலைச்சிறந்த புருஷன் மற்றும் ஸ்திரீயின் பெற்றோர்களைக்குறித்து நாம் அதிகமதிகமாய் உயர்வாய் எண்ணிட வேண்டும். அந்நியர்களாகிய நாமே அப்பெற்றோர்களைப் பாராட்டுவோமானால், இதைக்காட்டிலும் அதிகமாய்ப் பிள்ளைகள் செய்திட வேண்டும்.

## ஞாயிறு பள்ளியின் பாதிப்பு

நவீன கால ஆற்றல்மிக்க, செல்வாக்குமிக்க எழுத்தாளர் ஒருவர் ஞாயிறு பாடச் சாலைகளானது ஒரு விதத்தில் நன்மையைக் கொணர்ந்திட்டாலும், இன்னொரு விதத்தில் அதிகமான தீங்கைச் செய்துள்ளது - அதாவது பெற்றோருக்கான பிள்ளையின் மரியாதையினைப் பலவீனப்படுத்தியுள்ளது என்றும், தங்கள் பிள்ளைகளிடத்தில் பெற்றோர்கள் கொண்டுள்ள பொறுப்புக்குறித்த உணர்ந்துகொள்ளுதலிலிருந்து விலகச்செய்துள்ளது என்றும் தெரிவித்திருக்கின்றார். பெற்றோர்களானவர்கள் திவ்விய ஏற்பாட்டின்படி தங்கள் குழந்தைகளின் விஷயத்தில் குறிப்பாகத் தேவனுடைய ஆசாரியர்களாக இருக்கின்றனர். எந்தளவிற்கு இந்தப் பொறுப்பிலிருந்து பின்வாங்கப்படுகின்றதோ அல்லது எந்தளவிற்கு இந்த ஸ்தானத்தினுடைய கனமானது புறக்கணிக்கப்படுகின்றதோ, அவ்வளவிற்குக் குழந்தைகள்மீதான செல்வாக்கானது தொலைந்து போயிருக்கும்; மேலும் ஞாயிறு பாடச்சாலையினுடைய வாரம் ஒன்றிற்கு நடைபெறும் ஒருமணிநேர வகுப்பானது, ஒருபோதும் பெற்றோரின் தொடர்ச்சியான மேற்பார்வையின் இடத்தினை எடுத்திட முடியாது.

மிகவும் ஆபத்தான குற்றவாளிகளில் மூன்றில் ஒரு பகுதியினர் பதினாறு முதல் இருபது வயதுவரையிலான ஆண்பிள்ளைகளை உள்ளடக்குகின்றது என்றும், இவர்களுடைய எண்ணிக்கை அதிகரித்துக்கொண்டுவருகிறது என்றும் புள்ளிவிவரங்கள் தெரியப்படுத்துகின்றன. ஆகையால் வளர்ந்துவரும் தலைமுறையினரைச் சரியாய்ப் பயிற்றுவிப்பதில், நல்லுள்ளம்கொண்ட ஜனங்கள் அனைவரும் விழிப்பாய் இருந்திட வேண்டும். பெற்றோருக்குரிய அதிகாரத்தையும், அவர்களுக்குக் கீழ்ப்படிவதையுங்குறித்து வலியுறுத்துவதன், செயல்படுத்துவதன் மூலம், திவ்விய கட்டளையுடன் அனைவரும் விசேஷமாய் ஒத்துழைத்திட வேண்டும். நீண்ட ஆயுள்காலமும், வளமையுமாகிய பலன்களானது இந்த ஒரு கட்டளையின்கீழ் யூதர்களுக்கு வாக்களிக்கப்பட்டிருந்தது.

R5214 [தெரிந்தெடுக்கப்பட்ட பத்தி]

## முகாந்தரமில்லாமல் பகைக்கப்பட்டார்

எளிமையான பதிவுகளில், அருமையாய்க் காணப்படுகின்றதான யோசேப்பு மற்றும் அவரது சகோதரர்கள் பற்றின கதையானது, மிகவும் சுவாரஸ்யமாகவும், பல்வேறு கோணங்களில் பாடம் கற்பிக்கின்றதாகவும் காணப்படுகின்றது. மற்றப் பிள்ளைகளைக் காட்டிலும் ஒரு பிள்ளைக்கு மிகவும் அதிகமான முன்னுரிமைக்கொடுத்து, இப்படியாகப் பிள்ளைகள் மத்தியில் பொறாமையின் ஆவியை வளர்த்திவிடும் விஷயத்திலுள்ள பெற்றோருடைய ஞானமின்மையைப் பற்றியதாக ஒரு பாடம் காணப்படுகின்றது. யோசேப்பு தனது சொப்பனங்களை, தனது சகோதரர்களிடத்தில் தெரிவித்ததுபோல, நம்முடைய சொப்பனங்களை நாம் இரக்கமற்ற செவிகளை உடையவர்களிடத்தில் சொல்லுவதிலுள்ள ஞானமின்மை தொடர்புடையதான இன்னொரு பாடம் காணப்படுகின்றது. ஒரு சொப்பனத்தில் பதினொரு அரிக்கட்டுகள், தன்னுடைய கட்டிற்கு முன்பு வணங்கி நின்றதாக யோசேப்பு கண்டார். மற்றொரு சொப்பனத்தில் சூரியனும், சந்திரனும், பதினொரு நட்சத்திரங்களும் தன்னை வணங்குவதாக யோசேப்பு கண்டார்.

---

R4521 [தெரிந்தெடுக்கப்பட்ட பத்திகள்]

## காவல் கோபுரத்திலிருந்து கண்ணோட்டங்கள்

### வளர்ந்துவரும் தலைமுறையினர்

இந்த யுகத்தின் முடிவில் நிலவும் நிலைமைகள் என அப்போஸ்தலனால் சுட்டிக்காட்டப்பட்டவைகளில் பின்வருபவைகளும் இடம்பெறுகின்றன; அவை - தாய் தகப்பன்மாருக்குக் கீழ்ப்படியாத நிலைமை, அடங்காததன்மை, சுகபோகப்பிரியம், துஷ்டத்தனம் முதலியவையாகும். இத்தருணத்தில் ஏனென்று ஆழமாய் ஆராய்ச்சி நாம் செய்யாமல், இந்த முன்னுரைத்தல்களில் அநேகம் நம் கண்களுக்கு முன்பாக நிறைவேறியுள்ளது என்ற உண்மையினை மாத்திரம் அடையாளம் கண்டுகொள்கிறோம். பெற்றோருக்கான பயபக்தியின்மை என்பது தேவனுக்கும்சரி, மனிதனுக்கும்சரி பயப்படாத அஜாக்கிரதையான நிலைமைக்கு, அதன் சுயநலமான, ஒழுக்கமற்றப் போக்கில் வழிநடத்துகின்றது.

The Philadelphia Public அட்டவணையானது, பட்டணங்களில் தெருக்கலவரங்களில் சமீபக்காலங்களில் பங்கெடுத்தவர்களின் புகைப்படங்களானது பதினைந்துமுதல் இருபத்தொரு வயதிற்குள்ளான ஆண்பிள்ளைகளின் புகைப்படங்களாகப் பிரதானமாய்க் காணப்படுகின்றது என்ற உண்மையினைக் கவனத்திற்குக் கொண்டுவந்துள்ளது. இதைப்போன்று Springfield/ஸ்பிரிங்பீல்டிலும், இரண்டு வருடங்களுக்கு முன்பு இரஷ்யாவிலும், சமீபத்தில் ஸ்பெயினிலும் நடந்த கலகங்களின் பதிவானது காணப்படுகின்றது.

இந்த ஆண்பிள்ளைகள் தவறாக கற்பிக்கப்பட்டிருக்கின்றனர் அல்லது நீதி, மற்றவர்களுடைய உரிமைகள் முதலியவைகள் குறித்துக் கற்பிக்கவே படவில்லை என்பதே பாடமாகும். உலகமானது சுயாதீனம் குறித்த புரிந்துகொள்ளுதலில் மங்கிக்கொண்டு போகின்றது என்று நாம் அஞ்சுகின்றோம். குரங்கிலிருந்து அல்லது ஜீவ அணுவிலிருந்து/ புரோட்டோபிளாசத்திலிருந்து மனிதன் பரிணாமித்தான் என்று போதிப்பதற்கு அதிகநேரம் எடுத்துக்கொள்ளப்படுகின்றது; மேலும் இளைஞர்களுக்கு அவர்களது

சொந்த உரிமைகள், மற்றவர்களது உரிமைகள், சட்டம் மற்றும் ஒழுங்கின் அவசியம் முதலியவைகள் குறித்து அறிவுறுத்துவதற்குப் போதுமான நேரம் செலவிடப்படுகிறதில்லை.

திவ்விய வழிநடத்துதலின்படி நம்மில் பள்ளிக்கூட ஆசிரியர்களாய் இருப்பவர்களைத் தவிர மற்றபடி நம்மீதோ, நம் வாசகர்கள்மீதோ பள்ளிக்கூடப் பொறுப்பானது காணப்படுகிறதில்லை. எங்கெல்லாம் நமக்குச் செல்வாக்கு இருக்கின்றதோ அச்செல்வாக்கானது நீதியின், நியாயத்தின், நேர்மையின், இரக்கத்தின் சார்பாகப் பயன்படுத்தப்பட வேண்டும். ஆனால் நம்முடைய சொந்த இல்லங்களிலும் மற்றும் குடும்பங்களிலும் நம் ஒவ்வொருவருக்கும் மற்றும் அனைவருக்கும் இருபாலின வாலிபப் பிள்ளைகளிடத்தில் முக்கியமான கடமைகளைப் பெற்றிருக்கின்றோம். ஒவ்வொரு பெற்றோர்மீதும் தனது பிள்ளையைப் பராமரிக்கும் காரியமானது தலையாயக் கடமையாகவும், பொறுப்பாகவும் காணப்படுகின்றது. இந்த மாபெரும் பொறுப்பினைச் சரியாய் ஆற்றிடுவதற்கு ஜாக்கிரதையோடும், ஜெபத்தோடும் நாடப்பட வேண்டும் மற்றும் மகா ஞானத்தோடு செயல்படுத்தப்பட வேண்டும். ஒரு குழந்தையை உலகத்தில் கொண்டுவருகையில் பெற்றோர்கள் மாபெரும் பொறுப்பினை ஏற்றுக்கொள்கின்றனர். மேலும் இப்பொறுப்பினை ஒருவன் அலட்சியம்பண்ணுவானானால் "ஜெயங்கொள்ளுகிறவன்" ஆகிட அவன் எப்படி எதிர்பார்த்திடக்கூடும். ஒருவேளை நம்மால் செய்யமுடிந்த அனைத்தையும் நன்றாய்ச் செய்த பின்னரும்கூடப் பிள்ளையானவன் தவறான பாதைக்குச் சறுக்கிடுவானானால் அது மிகவும் வருத்தப்படத்தக்க மற்றும் ஜெபம் ஏறெடுக்கத்தக்கக் காரியமாகும். ஆனால் ஒருவேளை பெற்றோரின் சரியான அறிவுரைகள் இல்லாமையின் காரணமாகப் பிள்ளையானவன் தவறான பாதையில் போவானானால் . . . இந்தத் துன்பமானது நம்மைக் கண்ணீர் சிந்தவும், வேதனைப்படவும், தெய்வீக மன்னிப்புக்காக ஜெபங்கள் ஏறெடுக்கவும் நம்மை நடத்திட வேண்டும்.

காலை உணவை உண்ண மேஜையில் இருக்கையில் பரலோக மன்னாவை தினந்தோறும் பயன்படுத்திடவும், பிதாவாகிய தேவனிடத்தில் ஏறெடுக்கும் வாக்குறுதியை வாசித்திடவும் மீண்டுமாகக் காவல் கோபுர வாசகர்கள் அனைவருக்கும் நாங்கள் வலியுறுத்துகின்றோம்; ஒவ்வொரு நாளையும் துதியுடனும், ஜெபத்துடனும் துவங்கிடவும் நாம் வலியுறுத்துகின்றோம். இன்னுமாக ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமைகளிலும் பிள்ளைகளுக்குப் பெற்றோர்கள் ஆவிக்குரியவற்றைப் போதிக்கவும் நாங்கள் வலியுறுத்துகின்றோம்.

---

R4090 [தெரிந்தெடுக்கப்பட்ட பத்திகள்]

# கர்த்தாவே சொல்லும், அடியேன் கேட்கிறேன்

## 1 சாமுயேல் 3:6-14

தீர்க்கத்தரிசியாகிய சாமுயேல் பழைய ஏற்பாட்டின் காலங்களில் காணப்பட்ட அருமையான, வலுவான கதாபாத்திரங்களில் ஒருவர் ஆவார். சிறுவயது முதலே கர்த்தருக்காக இவர் கொண்டிருந்த அர்ப்பணிப்பும், கீழ்ப்படிதலும், சோர்ந்துபோகாமல் நற்கிரியைச் செய்ததும், கிறிஸ்தவ வாலிபர்களுக்கு மாத்திரமல்லாமல், பெரியவர்களுக்கும், பெற்றோர்களுக்கும்கூட அருமையான பாடங்களைக் கொண்டிருக்கின்றது. ரூத்தினுடைய வாழ்க்கை பதிவானது இஸ்ரயேலர்களின் அக்காலத்தினுடைய வாழ்க்கையின் கணநேர கண்ணோட்டத்தினைப் போர் மற்றும் பிரச்சனைகள் குறித்த பதிவுகளுக்கிடையே நமக்குக் கொடுத்திடுவது போன்றே, சாமுயேலின் வாழ்க்கையும் காணப்படுகின்றது. கர்த்தருக்கு ஏற்கெனவே அர்ப்பணிக்கப்பட்டவர்களும், அவரால் ஏற்றுக்கொள்ளப்பட்டவர்களுமான

லேவி கோத்திரத்தினைச் சாமுயேல் சார்ந்தவராவார். இவரின் பெற்றோர்களுடைய ஆழமான பக்திக் குறித்த காரியங்களானது அப்புத்தகத்தினுடைய முதலாம் அதிகாரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. கர்த்தருக்கான பயபக்தி மற்றும் ஜெபங்களின் இத்தகைய சூழ்நிலைமைகளின் கீழ்ப்பிறந்த ஒரு குழந்தையானது, இயற்கை சட்டங்களின்படி உயர் மனமும், பக்தி நாட்டமும் இல்லாமல் இருக்க முடியாது. இக்கருத்தினைப் பெற்றோர்களாகிடும் கிறிஸ்தவர்கள் அனைவரிடத்திலும் - கருத்தரித்தலின் தருணம் முதற்கொண்டு அவர்களது பிள்ளைகள் கர்த்தருக்கு அர்ப்பணிக்கப்படத்தக்கதாக மனதில் பதிய வைத்திட நாங்கள் விரும்புகின்றோம்; மேலும் கர்ப்பக்காலத்தின்போதான செல்வாக்குகள் அனைத்தும் குழந்தையினுடைய உயர் மனநிலைக்கடுத்த, ஒழுக்க நிலைக்கடுத்த மற்றும் சரீர நிலைக்கடுத்த நலன்களுக்குச் சாதகமாய் இருக்கத்தக்கதாகப் பிரயாசம் எடுக்கப்படுவதாக மற்றும் தினந்தோறும் ஜெபம் ஏறெடுக்கப்படுவதாக. "அசுத்தமானதிலிருந்து சுத்தமானதைப் பிறப்பிக்கத்தக்கவன் உண்டோ" என்று தீர்க்கத்தரிசி கேள்வி எழுப்பி, "ஒருவனுமில்லை" என்று அவரே பதிலளிக்கின்றார். ஆகையால் பரிசுத்தவான்களுடைய பிள்ளைகள்கூட முழுக்கப் பூரணமாய்ப் பிறப்பார்கள் என்று நமது எதிர்ப்பார்ப்புக் காணப்படக்கூடாது; மாறாக கர்த்தர் இருதயத்தை, நோக்கத்தை, சித்தத்தை ஏற்றுக்கொள்கின்றார் என்றும், அவர் சுபாவத்தினை ஒழுங்குப்பண்ணியிருக்கும் முறைப்படி, பெற்றோர்களின் மனம், நோக்கம், சித்தமானது, அவர்களது குழந்தைகளில் வெளிப்படுகின்றதாயிருக்கும் என்றும் நாம் நினைவில்கொள்ள வேண்டும். உண்மைதான் அபூரண மனதினால் பூரணமானவைகளைக் கிரகிக்கவோ அல்லது கற்பனைப்பண்ணிப் பார்க்கவோ முடியாது; ஆனால் அபூரண மனதினால் அவற்றிற்குக் கிட்டத்தட்ட ஒத்திருக்கப்பண்ண முடியும் மற்றும் தான் ஒத்திருக்கும் அளவிற்கேற்ப, ஒத்திருக்கும் அக்குணலட்சணங்களைப் பெற்றோர்கள் குழந்தையிலும் பதியபண்ணிட முடியும்.

## அந்நிய நுகத்தில் பிணைக்கப்பட்டிருக்கும் பெற்றோர்கள்

"இரத்தம் சொல்லிடும்" . . . எனும் ஒரு பழங்கால முதுமொழி உண்டு . . . அதென்னவெனில் கலாச்சாரமும், நல் இனப்பெருக்கமும் குழந்தையின்மூலம் கண்டுபிடிக்கப்படலாம் என்பதேயாகும். குணலட்சணம் காண்பித்துக்கொடுக்கும் என்பது நிச்சயமாய் உண்மையே. கர்த்தருக்கு முழுமையாய் அர்ப்பணம்பண்ணியுள்ளவர்களாகவும், திவ்விய சித்தத்தை அறிய தினந்தோறும் நாடுகிறவர்களாகவும், அதன்படி செய்கிறவர்களாகவும், கிறிஸ்துவின் பள்ளிக்கூடத்தில் பரிசுத்த ஆவியினுடைய அறிவுரையின்கீழ்க் காணப்படுபவர்களாகவும், கிருபையிலும், சத்திய அறிவிலும் கொஞ்சம் வளர்ந்தவர்களாகவும், பரிசுத்த ஆவியினுடைய புதிதாக்குதலினால் மனங்களை மறுரூபமடையப் பெற்றவர்களாகவும், தங்கள் நாட்டங்களைப் பரத்திற்கடுத்தவைகள்மீது வைத்தவர்களாகவும் காணப்படும் கிறிஸ்தவர்கள், தங்கள் சொந்த இருதயத்தின் ஆவிக்குரிய பண்புகளை, தங்கள் பிள்ளைகளிடத்தில் (கர்ப்பக்காலத்தில்) நிச்சயமாய்ப் பதியபண்ணிடுவார்கள். கரு தரிக்கப்பட்டது முதற்கொண்டு கர்த்தருக்கு அர்ப்பணிக்கப்பட்டவர்களாகவும், நற்பிறப்புள்ளவர்களாகவும் காணப்படும் இப்பிள்ளைகள், நிச்சயமாய்க் குழந்தைப் பருவத்தில் அதே பெற்றோர்களினால், கர்த்தருடைய வழிகளிலும், நீதி, நியாயம், சத்தியம் மற்றும் அன்பின் வழிகளிலும் பயிற்றுவிக்கப்படுவார்கள். இப்படியாகப் பெற்றெடுக்கப்பட்டு, இப்படியாகப் பயிற்றுவிக்கப்பட்டுள்ள பிள்ளைகள் பிற்காலங்களில் கர்த்தருடைய வழியிலிருந்து விலகுவதோ அல்லது சோதனையினால் தற்காலிகமாகத் தவறாய் வழிநடத்தப்பட்ட போதிலும், அவர்கள் நிரந்தரமாகவே மீறுதல்காரர்களாய் இருந்துவிடுவதோ சாத்தியமற்ற காரியங்களாகவே இருக்கும்.

கர்த்தர் தம்முடைய ஜனங்களானவர்கள் அவிசுவாசிகளுடனே அந்நிய நுகத்தில் பிணைக்கப்படக்கூடாது என்று கட்டளையிட்டிருந்தபோதிலும், இவர்கள் கர்த்தருடன் உடன்படிக்கைப்

பண்ணிடுவதற்கு முன்னதாகவே திருமணம்பண்ணினவர்களாய் இருப்பார்களானால், இவர்களது திருமணத்தின் பலனாகிய இவர்களது பிள்ளைகளானவர்கள், அர்ப்பணிக்கப்பட்ட பெற்றோர் வாயிலாகக் கர்த்தருடையவர்களெனக் கருதப்படுவதற்குக் கர்த்தர் ஏற்பாடுபண்ணியுள்ளார்; மேலும் பிள்ளையின் பெற்றோரில் ஒருவர் அவிசுவாசியாக இருப்பினும், அதைப் பொருட்படுத்தாது, கர்த்தருடைய ஆசீர்வாதமானது அர்ப்பணிக்கப்பட்ட குழந்தையின்மீது காணப்படும். இதை 1 கொரிந்தியர் 7:14-ஆம் வசனத்தில் அப்போஸ்தலன் தெளிவாய்த் தெரிவித்துள்ளார்.

குடும்ப உறவு என்பது கனவீனமானது அல்லது பாவக்கரமானது என்று எண்ணம்கொள்வது கடுமையான தவறாகும் மற்றும் இதில் கிறிஸ்தவர்கள் சிலர் வீழ்ந்துமுள்ளனர்; இன்னுமாக "ஆதிபாவமானது" இவ்வகையாகத்தான் இருந்தது என்றுகூடச் சிலர் வலியுறுத்திக் கொண்டிருக்கின்றனர். வேதவாக்கியங்களோ இதற்கு முற்றிலும் நேர்மாறாக, "விவாகம் யாவருக்குள்ளும் கனமுள்ளதாயும், விவாகமஞ்சம் அசுசிப்படாததாயுமிருப்பதாக" (எபிரெயர் 13:4) என்று தெரிவிக்கின்றது. மேலும் இனப்பெருக்கத்திற்கான திவ்விய திட்டமும், பலுகிபெருகி பூமியை நிரப்புவதற்குமான கட்டளையும், பாவம் உலகத்திற்குள் பிரவேசிப்பதற்கு முன்னதாகவே - ஏதேனில் கீழ்ப்படியாமைச் சம்பவிப்பதற்கு முன்னதாகவே ஏற்பாடுபண்ணப்பட்டிருந்தது, கட்டளையிடப்பட்டிருந்தது என்பதையும் நாம் நினைவில்கொள்ள வேண்டும். "விவாகம்பண்ண" தடைப்பண்ணுகிறவர்களை அப்போஸ்தலன் கடுமையாய்க் கடிந்துகொண்டு, தீமோத்தேயுவுக்கு அவர் எழுதின நிருபத்தில் "ஆகையால் இளவயதுள்ள விதவைகள் விவாகம்பண்ணவும், பிள்ளைகளைப் பெறவும், வீட்டை நடத்தவும், விரோதியானவன் நிந்திக்கிறதற்கு இடமுண்டாக்கமலிருக்கவும் வேண்டுமென்றிருக்கிறேன்" (1 தீமோத்தேயு 5:14) என்று தெளிவாய்க் கூறுகின்றார்.

இது "விவாகம்பண்ணுகிறவனும் நன்மை செய்கிறான்; விவாகம்பண்ணாதிருக்கிறவனும் அதிக நன்மை செய்கிறான்" என்று அப்போஸ்தலன் 1 கொரிந்தியர் 7-ஆம் அதிகாரத்தில் பேசியுள்ளவைகளுக்கும் முரண்படுகிறதில்லை. தீமோத்தேயுவுக்கு அவர் நிருபம் எழுதுகையில், அவர் சபையிலுள்ள இளைஞர்களைக்குறித்துப் பேசியுள்ளார்; கொரிந்தியருக்கான அவரது அறிவுரையானது, சபையில் கர்த்தருக்கென்று தங்களை முழுமையாய் அர்ப்பணம்பண்ணியுள்ளவர்களாகவும், பரிசிற்காக இலக்கை நோக்கி ஓட்டப்பந்தயத்தில் ஓடிடுவதற்கு நாடுகின்றவர்களாகவும் காணப்படும் இத்தகைய அங்கத்தினர்களுக்கு உரைக்கப்பட்டதாகும். இது விஷயத்தில் மற்றவர்களுக்கான நம்முடைய அறிவுரையானது, பரிசுத்த ஆவியின் ஏவுதலினால் அப்போஸ்தலன் எழுதியுள்ள இந்த வார்த்தைகளின் அடிப்படையில் மாத்திரமே காணப்படும். விவாகம்பண்ணாதிருப்பதற்கான அறிவுரையானது - கர்த்தருக்குத் தங்களை முழுமையாய் அர்ப்பணம்பண்ணியுள்ளவர்களாகவும், பூமிக்குரிய கடமைகளற்று இருந்தால் மற்றும் இருதயம் பங்குபோடப்படாமல் இருந்தால் தங்களால் அதிகமாய்க் கர்த்தருடைய ஊழியங்களில் ஆற்றிடமுடியும் என்று காண்கின்றவர்களாகவும் இருப்பவர்களுக்குப் பொதுவாய் உதவிகரமாய் இருக்கும். ஆனால் புதுச்சிருஷ்டிகள் அல்லாத மற்றவர்களுக்கோ, அவர்கள் ஒழுக்கமுள்ளவர்களாகவும், நற்குணசாலிகளாகவும் இருப்பினும், அவர்களுக்கு திவ்விய ஏற்பாட்டின்படி விவாகம்பண்ணுதல் என்பது ஜீவியத்தில் நியாயமான மற்றும் தகுதியான காரியமாயிருக்கும்; இதற்குத் தடைப்பண்ணப்படக்கூடாது; கூடுமான மட்டும் ஞானமாய் அறிவுறுத்தப்பட வேண்டும்.

## நம்முடைய பிள்ளைகளை அர்ப்பணித்தல்

சாமுயேலினுடைய அர்ப்பணிக்கப்பட்ட பெற்றோர்கள், ஒரு குமாரனுக்காக அவர்களால் ஏறெடுக்கப்பட்ட ஜெபத்தின் காரியத்திற்கும் மற்றும் தற்காலத்திலுள்ள அர்ப்பணிக்கப்பட்ட ஜனங்களின்

முறையான ஜெபத்தின் காரியத்திற்கும் இடையிலுள்ள வித்தியாசத்தினை நாம் அடையாளம் கண்டுகொள்ள வேண்டும். பெந்தெகொஸ்தே முதற்கொண்டுதான் கர்த்தருடைய ஜனங்கள் ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்டு, "கிறிஸ்து இயேசுவில் புதுச்சிருஷ்டிகளாகிடுவதற்குரிய" சிலாக்கியம் பெற்றிருக்கின்றனர்; மேலும் இவர்கள் சுபாவத்தின்படியானவர்களைப் பார்க்கிலும் ஆவிக்குரியவற்றை நாடுகிறவர்களாகவும், இதற்காகவே ஜெபிக்கிறவர்களாகவும் மற்றும் இதைத் தங்கள் ஆண்டவர் செய்வதுபோன்று தங்கள் ஜீவியங்களைச் செலவழிப்பதன் மூலமும், முதலாம் ஆதாமின் பிள்ளையாகிய தங்களைத் தேவனுடைய ஆவிக்குரிய பிள்ளையாக மறுரூபமாக்கிட நாடுவதன் மூலமும் செய்கின்றனர். இந்த ஒரு கண்ணோட்டத்தின் அடிப்படையிலும், மேலும் ஆவியில் ஜெநிப்பிக்கப்பட்டவர்களிடத்தில் பேசுகையிலுமே, "விவாகம்பண்ணாதிருக்கிறவன் நன்மை செய்கிறான்" - ஏனெனில் பொதுவாய்ப் பேசுகையில் விவாகம்பண்ணாதிருக்கும் நிலைமையானது தன் புதிய இலட்சியங்களுக்கு மிகவும் சாதகமாய் இருப்பதைக் கண்டுகொள்வான் என்று அப்போஸ்தலன் கூறுகின்றார்.

ஜெபம் மற்றும் அர்ப்பணிப்பின் விளைவாகப் பிறந்த சாமுயேல் சந்தேகத்திற்கிடமின்றி குறிப்பிடத்தக்க சிறுவனாய்க் காணப்பட்டார்; மேலும் சாமுயேல் சிறுவயதிலேயே சீலோவிலுள்ள பிரதான ஆசாரியனிடத்தில் கொண்டுவரப்பட்டு, கர்த்தருடைய ஊழியத்திற்கு முறையாய் ஒப்புக்கொடுக்கப்பட்ட காரியத்திலிருந்து . . . அவரது பெற்றோர்கள் தங்கள் ஜெபத்திற்கு/பொருத்தனைக்கு உண்மையாய் இருந்தது தெரிகின்றது. பால் மறந்தப்பின் கொண்டுவிடப்பட்டார் என்று நாம் வாசிக்கின்றோம்; ஆனால் அவர் தாயிடமிருந்து பால்குடிப்பதை நிறுத்தினபோது கைக்குழந்தையாக இருக்கையில் கொண்டுவிடப்பட்டார் என்று நாம் எண்ணிடக்கூடாது; மாறாக அவ்வார்த்தையினைப் பரந்த பார்வையில் பார்த்திட வேண்டும் . . . தாயினுடைய பராமரிப்புத் தேவைப்படாமல் பிள்ளையே தன்னைப் பார்த்துக்கொள்ள முடிகிற விதத்தில் பிள்ளைப் பால்மறந்தது என்னும் விதத்தில் நாம் புரிந்துகொள்ள வேண்டும்; அநேகமாக பத்துமுதல் பன்னிரண்டு வயது இருக்கும்.

பரிசுத்த ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்டவர்களாகக் காணப்படும் கிறிஸ்தவ பெற்றோர்கள், சாமுயேலின் பெற்றோரை இயக்கின இந்த ஆவியினை அதிகம் வெளிப்படுத்தாதவர்களாய் இருப்பதைக் காண்கையில் நாங்கள் அடிக்கடி ஆச்சரியமடைகின்றோம். அர்ப்பணிக்கப்பட்ட ஜனங்களாகத் தோற்றமளிக்கும் அநேகர் தங்கள் விலையேறப்பெற்ற சொத்தாகிய தங்கள் பிள்ளைகளைக் கர்த்தருக்குக் கொடுக்காமல் வைத்துக்கொள்கின்றனர்; மேலும் பிள்ளைகளை ஜீவியத்தில் ஏதோ ஓர் உலகப்பிரகாரமான அழைப்பிற்கென்று - மருத்துவம், சட்டப்படிப்பு, தொழில்துறைக்கு என்று அர்ப்பணிக்கவும் விரும்புகின்றனர். இவர்களது இத்தகைய நடத்தைக்கான காரணம் மிக அதிகமான தாழ்மையா அல்லது மிக அதிகமான சுயநலமா என்று தீர்ப்பது நமக்கடுத்த காரியமல்ல; ஆனால் இப்பெற்றோர்கள் கர்த்தர் தங்கள் காணிக்கையை (பிள்ளைகளை) ஏற்றுக்கொள்வார் என்று நம்பிடுவதற்கு ஏதுவான விசுவாசம் பெற்றிருக்கவில்லை என்பதாகத் தெரிகின்றது அல்லது தங்கள் பிள்ளைகள் உலகப்பிரகாரமான விதத்தில் செழித்தோங்குவதைக் காண்பதற்கான ஆசையினை - இவர்கள் தங்களுக்குள் அநேகமாக தங்களையுமே கொஞ்சம் அறியாமல்/கொஞ்சம் தெரிந்தும் வளர்த்துக்கொண்டிருக்கின்றனர் என்பதாகத் தெரிகின்றது; மேலும் பிள்ளைகள் கர்த்தருக்கு அர்ப்பணிப்பது என்பது, சில விதங்களில் அவர்களது பூமிக்குரிய எதிர்க்காலத்தினைக் குலைத்துப்போடுமோ என்று பெற்றோர்கள் அஞ்சுவதாகத் தெரிகின்றது. இது எத்துணைப் பெரிய தவறாகும்! தங்களையே கர்த்தருக்குக் கொடுத்துவிடுவதும், தங்களுடைய அனைத்தையும் - தங்கள் பிள்ளைகளையும் சேர்த்து ஒப்புக்கொடுத்துவிடுவது என்பதும் தங்களுக்கான சிலாக்கியமாகும் என்று இந்தப் பெற்றோர்கள் அறிந்திருக்கவில்லையா? இன்னுமாக, "கர்த்தரின் ஆசீர்வாதமே ஐசுவரியத்தைத் தரும்; அதனோடே அவர் வேதனையைக் கூட்டார்" (நீதிமொழிகள் 10:22) என்பதையும்கூட

இப்பெற்றோர்கள் அறிந்திருக்கவில்லையா? பொல்லாதவர்களின் கூடாரங்களில் வாசம்பண்ணுகிறதைக் காட்டிலும், கர்த்தருடைய வீட்டில் வாயிற்காப்பாளனாக இருப்பது நலம் என்று இப்பெற்றோர்களால் உணர்ந்துகொள்ள முடியவில்லையா? எல்லா வகையான சொகுசுகளும் சூழ இருப்பதினால் மகிழ்ச்சி வருவதைவிட, மற்ற வழிகளில் வரும் மகிழ்ச்சியைவிட, தரித்திரமான வாழ்க்கையாக இருந்தாலும் அர்ப்பணிக்கப்பட்ட ஜீவியமாய் இருக்கையில், அதில்தானே மிகுதியான மகிழ்ச்சிக் கடந்துவருகின்றதாய் இருக்கின்றது என்பதை இப்பெற்றோர்களால் உணர்ந்துகொள்ள முடியவில்லையா? இப்படிப்பினைகளை இப்பெற்றோர்கள் தங்கள் சொந்த அனுபவங்களில் கற்றுக்கொள்ளவில்லையா? மேலும் இப்படிப்பினைகளைத் தங்கள் சொந்தப் பிள்ளைகளின் விஷயத்தில் இவர்களால் செயல்படுத்த முடியவில்லையா?

## பிள்ளையைப் பயிற்றுவி

சாமுயேல் ஏலிக்குப் பணிவிடைச் செய்தார் - அதாவது பிரதான ஆசாரியனுக்கு ஊழியஞ்செய்தார்; ஏலி கர்த்தருடைய ஊழியக்காரனாகவும், பிரதிநிதியாகவும் காணப்பட்டு, ஆசாரிப்புக்கூடாரத்திற்கு அருகாமையிலுள்ள கூடாரங்களில் சஞ்சரித்து வந்தார்; ஆலயம் அதுவரையிலும் கட்டப்படாதிருந்தது. சாமுயேலின் பெற்றோர்கள் அவரை ஜீவியத்தின் ஆரம்பக்காலங்களிலேயே ஊழியக்காரனுக்குரிய கடமைகளுக்கு இப்படியாக உட்படுத்தினபோது, அவர்கள் அவரை மிகச் சிறந்த பள்ளிக்கூடத்தில் உண்மையில் சேர்த்தவர்களாய் இருந்தனர். எங்களைப் பொறுத்தவரை ஜீவியத்தின் ஆரம்பக்காலங்களானது - அதாவது 10 முதல் 18 வயதுவரையிலான காலப்பகுதிகளானது பெரிதும் விளையாட்டுகளிலேயே செலவழிக்கப்பட வேண்டும் என்ற கருத்தானது தவறான கருத்தாகும்; சாமுயேலின் விஷயத்தில் போன்று பிள்ளைகளைச் சிறு வயதிலேயே பொறுப்புள்ள ஸ்தானங்களில் மற்றும் ஏறக்குறைய அன்றாட வேலைகளில் மற்றும் கடுமையான உழைப்புகளில் கொண்டுவந்துவிடுவது ஞானமான காரியமாயிருக்கும்; இப்படியான உதாரணத்தினை இந்நாட்களில் இந்த நம் தேசத்திலுள்ள அநேகம் முதன்மையான ஜனங்களின் விஷயத்திலும் பார்க்கலாம். உலகப் பிரசித்திப்பெற்ற திரு. கார்நீஜீ அவர்கள் தந்தி தூதுவனாகத் தன் ஜீவியத்தில் சிறுவயதிலேயே கடின உழைப்பிற்குள் பிரவேசித்தார். உலகளாவிய எலக்ட்ரீஷியனான திரு. எடிசன் அவர்கள் செய்தித்தாள் கொடுக்கும் சிறுவனாக தன் கடின உழைப்பினை ஜீவியத்தில் துவங்கினார். இப்படியாக உலகப்பிரகாரமான காரியங்களில் இன்றுள்ள அனுபவங்களுக்கு இசைவாகப் பார்க்கையில், ஏலியின் பணிவிடைக்காரனாய்ச் சாமுயேல் சிறுவயதிலேயே அர்ப்பணிக்கப்பட்ட காரியமானது, அவர் பிற்பாடு கர்த்தருடைய தீர்க்கத்தரிசியாகவும், இஸ்ரயேலின் கடைசியான மற்றும் மகாபெரும் நியாயாதிபதியாகவும் ஆனபோது, அவர் பெற்றிருந்த குணலட்சணத்தின் உறுதிக்கும், மேன்மைக்கும் அநேகமாகப் பெரிதும் காரணமாயிற்று என்று நாம் உணர்ந்துகொள்கின்றோம்.

சிறு வயதில் - அதாவது 12-ஆம் வயதில் தங்கள் பிள்ளைகளினால் மத சம்பந்தப்பட்ட காரியங்களைச் சரியாகப் புரிந்துகொள்ளவோ அல்லது உணர்ந்துகொள்ளவோ முடியாது என்று பெற்றோர்களால் அனுமானிக்கப்படும் காரியத்தைக்காட்டிலும், பெரிய தவறு பொதுவாய் இருக்கிறதில்லை என்று நாங்கள் கவனித்திருக்கின்றோம். சாமுயேலுடைய அனுபவமும், நம்முடைய சொந்த அனுபவமும், மற்ற அநேகருடைய அனுபவங்களும் - மத சம்பந்தமான சில ஆழமான உணர்வுகளானது 12 வயதுகளிலேயே உணரப்பட்டுள்ளதை நமக்கு உறுதிப்படுத்துகின்றதாய் இருக்கின்றது. இதற்காய், இந்த அறிகுறிக்காய்ப் பெற்றோர்கள் கவனித்திருக்க வேண்டும்; மேலும் இது தங்கள் தோட்டங்களிலுள்ள மென்மையான மலர்களுக்குச் செலுத்தப்படுவதைப் பார்க்கிலும் மிக அதிகமான அக்கறையுடன் பெற்றோர்களினால் வளர்க்கப்பட வேண்டும். குழந்தையின் மனதிலுள்ள பயபக்தியின், ஆன்மீகத்தின், நம்பிக்கையின், விசுவாசத்தின் மலர்களுக்கு மென்மையான பராமரிப்பு,

தண்ணீர் ஊற்றுதல், களைநீக்குதல், உதவுதல் ஆகியவை அவசியமாகும் மற்றும் இவை செய்யப்படவும் வேண்டும். இவைகளுக்குப் பெற்றோர்களானவர்கள் சுபாவத்தின் காரணமாகவும், திவ்விய கட்டளையின் காரணமாகவும் தோட்டக்காரன் போன்ற பொறுப்புள்ள ஸ்தானம் வகிக்கின்றவர்களாய் இருக்கின்றனர்; மேலும் இவர்கள் தங்கள் சொந்தக் குடும்பத்திலுள்ள இருதயங்களில் காணப்படும் மலர்களைக் கருத்தில்கொள்ள வேண்டும்; இந்தத் தன் பொறுப்பினை அவன் புறக்கணிப்பானானால், அவன் குற்றவாளியாக இருந்து, நிச்சயமாய்க் கஷ்டம் அனுபவிப்பான் - அதாவது தன் பிள்ளையினுடைய எதிர்க்காலம் சம்பந்தப்பட்ட விஷயத்தில் ஏமாற்றம் மாத்திரம் அடையாமல், தன் சொந்த இருதயத்திலும் சில ஆசீர்வாதங்களை இழந்து போய்விடுபவனாய் இருப்பான்; ஏனெனில் மற்றவர்களுக்குத் தண்ணீர் பாய்ச்சுகிற எவனுக்கும் தண்ணீர் பாய்ச்சப்படும் என்பது திவ்விய ஏற்பாட்டின் காரியமாகும்.

பொதுப்பணிகள்/பொறுப்புகள், கடமைகள், மற்றவரது குழந்தைகளைக் காப்பாற்றுதல் ஆகியவை எதுவும் தன் சொந்தப் பிள்ளையினிடத்தில் தான் பெற்றிருக்கும் பொறுப்பிலிருந்து எந்தக் கிறிஸ்தவ பெற்றோரையும் ஒருபோதும் விலக்கிடாது; அல்லது அவனுடைய பொறுப்புகளை ஞாயிறு பள்ளி ஆசிரியர்களுக்குக் கைமாற்றிடாது. தன் கடமையை அவன் புறக்கணிக்கிற காரியமானது, நிச்சயமாய் அவனுக்கும் பாதகமாயிருக்கும், அவன் பிள்ளைக்கும் பாதகமாயிருக்கும்; ஒருவேளை கடந்த காலங்களில் அவன் இவ்விஷயங்களில் அலட்சியமாய் இருந்திருப்பானாகில், அவனால் சீக்கிரமாய்க் காரியங்களைச் சரிசெய்திட முடியாது; எனினும் தன் கடந்தகால அலட்சியத்தினை ஜெயங்கொள்வதற்கு வேண்டி மிகுந்த ஞானத்திற்காக அவன் ஜெபம்பண்ண வேண்டியிருக்கும் மற்றும் மிகுந்த ஞானத்தைச் செயல்படுத்திட நாடவும் வேண்டியிருக்கும்.

## தேவனுடைய வாய்க்கருவியாகப் பன்னிரண்டு வயது சிறுவன்

சாமுயேலுக்குக் கர்த்தர் கொடுத்த முதல் தூதுபற்றின பதிவானது அதன் எளிமையில் அழகாயுள்ளது. சாமுயேலாகிய சிறுவன் பல்வேறு தருணங்களில், பல்வேறு பணிவிடைகளைச் செய்யும்படிக்கு ஏலியின் அழைப்புகளுக்குக் கீழ்ப்படியும் பழக்கமுடையவராகக் காணப்பட்டார்; மேலும் இதன் காரணமாகச் சாமுயேலின் படுக்கையறை ஏலியின் அருகாமையில் இருந்தது; ஏனெனில் ஏலி வயதானவராகக் கிட்டத்தட்ட எழுபத்தியெட்டு வயதானவராக இருந்தார். மூன்று முறை கர்த்தர் சாமுயேலை அழைத்தார் மற்றும் சாமுயேலோ ஏலியினிடத்திற்குப்போய், "இதோ இருக்கிறேன்" என்றார். மூன்றாவது முறைக்குப் பின்னரே, "கர்த்தாவே சொல்லும் அடியேன் கேட்கிறேன் என்று சொல்லும்படிக்கு அவருக்கு ஏலி கூறினார்.

கர்த்தருடைய வசனமானது அபூர்வமானதாக நீண்டகாலம் காணப்பட்டதாகப் பதிவு தெரிவிக்கின்றது. ஏலி நல்ல மனுஷனாகவும், சாமுயேலை நடத்தும் விஷயத்தில் உண்மையாயும், நேர்மையாயும், இரக்கமாயும் காணப்பட்டாலும், தன் சொந்தக் குமாரர்களைக் கையாளும் விஷயத்தில் மிகவும் தளர்வானவராய் இருந்தார்; ஏலியின் குமாரர்கள் ஆசாரியர்களாகவும், ஆசரிப்புக்கூடார பணிவிடைகளுக்கு அடுத்த விஷயங்களில் அதிகம் வேலை செய்ய வேண்டியவர்களாகவும் இருந்தார்கள்; ஆகையால் இவர்கள் எல்லாவிதத்திலும் பயபக்தியுள்ள, முன்மாதிரியுள்ள புருஷர்களாய்க் காணப்பட வேண்டும். பணவிஷயங்களில் மாத்திரமல்லாமல், ஒழுக்கம் சார்ந்த விஷயங்களிலும் ஏலியின் குமாரர்கள் பகிரங்கமாய் மீறுதலுக்குட்பட்டவர்களாகவும், சீர்க்கெட்டவர்களாகவும் இருக்கின்றார்கள் என்பது தொடர்பாகக் கர்த்தர் ஏற்கெனவே ஏலிக்கு எச்சரித்துள்ளார். ஏலி தன் பொறுப்புகளை உணர்ந்துகொண்டிருக்க வேண்டும் மற்றும் அவர்களது தவறான நடக்கைகளைக் கவனித்திருக்க வேண்டும்; மேலும் தேவைப்பட்டிருந்தால் அவர்கள் தன் சொந்தக் குமாரர்களாக இருப்பினும், அவர்களை ஆசரிப்புக்கூடாரப்பணியினின்று நீக்கியிருக்க வேண்டும்; மேலும் ஏலி எந்தளவிற்கு மனதிலும்,

சரீரத்திலும் பலவீனப்பட்டுக்கொண்டிருந்தாரோ அவ்வளவிற்கு அவர்கள் வீரியமடைந்து, அகந்தைக்கொண்டு, பயபக்தியற்றுப் போனார்கள்; மேலும் அவர்களைக் கையாளுவதற்கு அவசியமான குணலட்சணத்தின் வலுவினை இந்த முதியவர் பெற்றிராததுபோல் தெரிகின்றது. சாமுயேலுக்கு வந்த கர்த்தருடைய வசனமானது ஏலியின் குடும்பம் பற்றினதாகவும், அவர்களுடைய பாவங்களின் நிமித்தம் அவர்கள்மீது வரவிருக்கும் தண்டனை பற்றியதாகவும் இருந்தது; இவர்கள் ஜனங்களுக்கு முன்மாதிரிகளாகவும், போதகர்களாகவும் இருந்தபடியினால் இவர்களுடைய பாவங்கள் மிக அதிகமோசமானதாய்க் காணப்பட்டது.

## அன்புள்ள மற்றும் செல்லம் கொடுக்கின்ற பெற்றோர்

இரண்டுவகையான உண்மையற்ற பெற்றோர்கள் காணப்படுகின்றனர். அவர்கள் பின்வருமாறு:

(1) கொடுமையானவர்களும், கொடூரமானவர்களும், பொல்லாதவர்களுமாய்க் காணப்படுபவர்கள்; இவர்கள் தீயப்பண்புகளை இயல்பாகவே பெற்றவர்களாய் மாத்திரம் இராமல், அவற்றை வார்த்தையினாலும், மாதிரியினாலும் போதிப்பவர்களாகவும் இருப்பார்கள். ஒருவேளை பெற்றோர் இருவருமே இவ்வகையினராய் இருப்பார்களானால் தற்கால ஜீவியத்தைப் பொறுத்த விஷயத்தில் குழந்தையினுடைய நிலைமையானது கிட்டத்தட்ட நம்பிக்கையற்றதாகவே இருக்கும். ஆயிர வருஷஅரசாட்சியில் சீர்த்திருத்தும் சூழ்நிலைகளானது மேற்கூறிய மாசினை/அழுக்கினை/பாதிப்பினை மாற்றிடுவதற்கு அவசியமாய் இருக்கும். ஆனால் பெற்றோரில் ஒருவர் கர்த்தருக்குரிய வராயிருப்பாரானால் விளைவானது கர்த்தருடைய ஏற்பாட்டின்படி நேர்மாறாய் இருக்கும் - குழந்தை நல்லக் குழந்தையாகப் பிறப்பது மாத்திரமல்லாமல், தன் பெற்றோரின் நடத்தையினுடைய தீய தன்மையினைக் கண்டுகொள்வதின்மூலம், பிள்ளையானது தீய போக்கின் நின்று விலகிட ஏவப்பட்டு மாற்றுப் போக்கினை எடுத்துக்கொள்ள ஆயத்தமாகிடும்.

(2) அன்புள்ள மற்றும் செல்லம் கொடுக்கும் பெற்றோர்களில் சிலர், தங்கள் பொறுப்பில் மிகவும் உண்மையற்றவர்களாய்க் காணப்படுவார்கள். நம் இனத்தின் பரவலான பெலவீனங்களைச் சுதந்தரித்துள்ள நம் குழந்தைகளுக்கு அன்பும், செல்லமும் காண்பிக்கப்படுமானால், அது அவர்களுடைய குணலட்சணத்தில் பெருமோசமான அன்பற்ற நிலைமையை, அதாவது தேவனுடைய பார்வையிலும், அவரது வார்த்தைக்கு இசைவாய் நடப்பவர்களின் பார்வையிலும் மிகவும் கண்டனத்திற்குரியதாய்க் காணப்படும் தன்மையினை வளர்த்திடும் நச்சுக்களைகளாகக் காணப்பட்டுவிடும். "அன்பும், செல்லமும் கொடுக்கும் பெற்றோர்" எனும் இவ்வார்த்தைகளானது மிகவும் பொருத்தமற்றவிதத்தில் பயன்படுத்துவதற்கு வாய்ப்பு உள்ளது. அநேக தருணங்களில் அதை, "பெலவீனமான, தகுதியற்ற பெற்றோர்" என்று சொல்வது நயமற்று இருந்தாலும் மிகவும் உண்மையானதாய்க் காணப்படும்.

நிச்சயமாகவே நல்லப்பெற்றோர்கள் அனைவரும் திவ்விய கண்ணோட்டத்தின்படி தங்கள் பிள்ளைகளிடத்தில் அன்பாய் இருப்பார்கள்; மேலும் இப்படியானவர்கள் அனைவரும் பிள்ளைகளுக்கு நன்மையாய் இருக்கும் எல்லைமட்டும் செல்லம் கொடுப்பதிலும் மகிழ்ச்சியாயிருக்க வேண்டும் - ஆனால் எல்லைத் தாண்டியல்ல. தேவைப்படுகையில் திருத்தும்படிக்குப் பிரம்பானது தவிர்க்கப்படக்கூடாது அல்லது தேவையற்றபோது பிரம்பானது பயன்படுத்தப்படக்கூடாது அல்லது பயன்படுத்துகையில் மிகக் கடுமையாய்ப் பயன்படுத்தப்படக்கூடாது என்றாலும், எங்கு அனுமதிக்க வாய்ப்புள்ளதோ - அதாவது எங்குப் பிள்ளையினுடைய பண்புகளானது அனுமதிக்க வாய்ப்புள்ளதோ - அங்குச் சிறந்த சட்டம், அன்பின் சட்டமாக இருக்க வேண்டும். பெற்றோரின் அன்பிலும் மற்றும் ஜீவியத்தின் காரியங்கள் அனைத்திலும் தேவனுடைய ஒழுங்குமுறைகளுக்குப் பெற்றோர் காண்பிக்கும் நேர்மையிலும்,

பிள்ளையானது முழுமையான நம்பிக்கைக்கொள்ளத்தக்கதாகச் சிறுவயது முதற்கொண்டே பெற்றோரின் அன்பும், உறுதியும் பிள்ளையின் மனதினை இப்படியாக வனைந்திட வேண்டும். இத்தகைய பிள்ளைக்கு அநேக அடி கொடுப்பதைப்பார்க்கிலும், கடுமையாய்த் திட்டுவதைப்பார்க்கிலும் பெற்றோரின் முகத்தில் தெரியும் துக்கமும், வேதனையும் அல்லது துயரத்தினால் வரும் கண்ணீருமே மிகவும் பலன்கொடுக்கின்றதாயிருக்கும்.

## நியாயாதிபதியாகிய ஏலி தேவனுக்கு உண்மையற்றுப் போனார்

ஒரு பெற்றோரென நியாயாதிபதியாகிய ஏலி கொண்டிருந்த பெலவீனமானது, அவர் தேவனுக்கு உண்மையற்றுப் போகச் செய்தது. இவர் "ஜெயங்கொள்ளும்" பாத்திரங்களுக்கான உதாரணமல்ல; இவர் கிட்டத்தட்ட "திரள்கூட்டத்தாரின்" குணங்களுக்கு அடையாளமாய் இருக்கின்றார். இவர் அநேகம் நல்லப்பண்புகளைப் பெற்றிருந்தார். இவரிடத்தில் இழிவான பாவங்கள் இல்லை. இவர் அநேகம் விதங்களில் தன் தனிப்பட்ட நலன்களுக்கு மேலாகவே கர்த்தரின் காரியங்களை வைத்திருந்தார். சாமுயேலின் முன்னேற்றத்தினை எதிர்த்திடும் சுயநலமான பேராசைகள் எதுவும் இவரிடத்தில் தெரியவில்லை. இவர் சாமுயேலை நன்கு வளர்த்தியுள்ளார் என்பதும் கவனிக்க வேண்டிய, பாராட்டுதலுக்குரிய காரியமாகும். இவர் தன் குமாரர்களுடைய நடத்தையை அங்கீகரிக்கவில்லை; எனினும் வயதானவராய் இருந்தபடியால், கர்த்தருடைய வார்த்தைத் தெரிவிக்கிறதுபோல், இவர் தீவிரமாய் அவர்களது நடத்தைகளுக்குக் கண்டனம் தெரிவிக்கும் தைரியம் அற்றிருந்தார். நமது கர்த்தரின் நேரடி அறிவுரைகளுக்குக் கீழ்க் காணப்பட்ட பன்னிரண்டு அப்போஸ்தலர்களில் ஒருவன் தன் விருப்பப்படியே துரோகியானான் என்பதையும் நாம் மறந்துவிடக்கூடாது. எவ்வளவுதான் நன்கு பயிற்றுவிக்கப்பட்டாலும், மோசமானவர்களாய் மாறிப்போகிறவர்கள் - (கர்ப்பக்காலத்தில்) நல்வுணர்வுகள் பதியப்பெற்றுப் பிறக்கவில்லை என்று கருதுகின்றோம்; எனினும் பூரண சிருஷ்டிப்பையும், பூரண பயிற்சியையும் உடைய சாத்தான், தன் இலட்சியங்களினால் தொலைந்துபோனான் என்பதையும்கூட நாம் இங்கு நினைவில்கொள்ள வேண்டும்.

கீழ்ப்படியாத குமாரர்களுடனான ஏலியின் கஷ்டங்களானது, கர்த்தருடைய வழிகளிலும், நீதியின் வழிகளிலும் பிள்ளைகளைச் சிறுவயது முதற்கொண்டே பயிற்றுவிக்கும் காரியத்தினை அவர் புறக்கணித்ததன் காரணமாய் ஏலியின்மீது அவரே வரவைத்துக்கொண்டிருந்தாலும், அவரது இவ்வனுபவங்களுக்காய் நாம் அனுதாபம்கொள்கின்றோம். தனக்கு மிகப் பொறுமையாயும், கடுமையாயும் உழைத்து பணிவிடைச் செய்யும் உண்மையுள்ள சிறுவனாகிய சாமுயேலை ஏலி அடிக்கடிப்பார்த்து, தன் குமாரர்களும் இதுபோன்ற பண்புடையவர்களாய் இருக்க விரும்பியிருந்திருக்க வேண்டும் என்பதில் ஐயமில்லை; ஆனால் இப்படி ஆசைப்படுவதற்கு இப்பொழுது காலங்கள் வெகுவாய்க் கடந்துவிட்டது; அர்ப்பணிப்பின் ஆவியில் பிள்ளைகள் பெற்றெடுக்கப்பட்டு, அதற்கு இசைவாயும், கர்த்தருடைய வசனத்திற்கு இசைவாயும் பயிற்றுவிக்கப்பட்டால், பிள்ளைகள் வளருகையில், அவர்கள் இதனின்று விலகிப்போகமாட்டார்கள். இங்கும் பெற்றோர்களுக்கு ஒரு பாடம் இருக்கின்றது; அதாவது கர்த்தருடைய ஊழியமே முதலாவது முக்கியமானதாகக் கருதப்பட்டு, தங்கள் சொந்த மாம்சத்தையும், இரத்தத்தையும் இழந்தாகிலும் அதனை செய்திட வேண்டும் என்பதேயாகும்.

R3921 [தெரிந்தெடுக்கப்பட்ட பத்தி]

## தேவனுடைய சாயலில் மனுஷன் சிருஷ்டிக்கப்பட்டான்

ஒருவேளை நம்முடைய ஆதிபெற்றோர்கள் தேவனுக்கு உண்மையாய் இருந்து, சாபமில்லாமல் இருந்து, தெளிந்த புத்தியுள்ள மனதின் ஆவியினை அதிகமதிகமாய் உடையவர்களாய் இருந்திருப்பார்களானால், கர்த்தருடைய ஆசீர்வாதத்தின்கீழ், அவர்கள் குடும்பத்தினை வளர்த்திக்கொண்டுவருவது என்பது குடும்பத்திற்கு மாத்திரமல்லாமல், அவர்களுக்கும்கூட நன்மை பயக்கின்றதாய் இருந்திருக்கும். தற்போதைய விழுந்துபோன நிலைமைகளின்கீழ்க்கூட, எங்குத் தெளிந்த மனதின் ஆவியானது ஆளுகை செய்கின்றதோ, அங்கும் பிள்ளைகள் தங்களுக்கும், தங்கள் பெற்றோர்களுக்கும், தங்கள் அயலகத்தாருக்கும் தொல்லையாயிருப்பதற்குப் பதிலாய் மிகப் பெரிய அளவில் விலையேறப்பெற்ற ஆசீர்வாதங்களாகிடுவார்கள். கர்த்தருடைய வசனத்தின் கட்டளைகளுக்கு இசைவாய்ப் பிள்ளைகளுக்கு அறிவுரை வழங்குவதன்மூலம், அவர்களைக் கட்டுப்படுத்துவதன்மூலம், அவர்களுக்கு வழிகாட்டுவதன்மூலம் தன் கடமையினைச் செய்திடும் பெற்றோர், தன் பிள்ளைக்கு மாத்திரம் பெரிதளவில் நன்மைபண்ணுகிறவனாய் இராமல், இன்னுமாக தனக்கும்கூட ஐசுவரியமான அனுபவ ஆசீர்வாதத்தினைக் கொண்டுவருபவனாய் இருப்பான்; ஏனெனில் தன் பிள்ளைகளுக்குக் கர்த்தருக்கேற்ற சிட்சையிலும், போதனையிலும் வழிகாட்டியாகவும், ஆசிரியராகவும் இருக்க முற்படுவதன்மூலம் - அவன் தன் சொந்தக் குணலட்சண வளர்ச்சிக்கு உதவிகரமாயிருக்கும் மற்றும் கர்த்தருக்கொத்த குணலட்சண சாயலில் தன்னை அதிகமாய் வழிநடத்திடுவதற்கு ஏதுவாயிருக்கிறதுமான விலையேறப்பெற்ற படிப்பினைகளைத் தனக்குத் தானே கற்பித்துக் கொண்டிருப்பதை எப்போதும் கண்டுகொள்வான்.

---

R3710 [தெரிந்தெடுக்கப்பட்ட பத்திகள்]

## பரிசுத்தர், குற்றமற்றவர், பூரணர்
## பிள்ளையைப் பயிற்றுவி

அபூரண பெற்றோர்களினால், அபூரணமான குழந்தைகளை முழுக்க ஞானம் நிரம்பினவர்களாகவும், பூரணத்தின் தன்மைகள் உடையவர்களாகவும் வளர்த்திடுவதற்கு எதிர்ப்பார்த்திடலாம் என்று நாங்கள் ஊக்குவித்திட முடியாது; மாறாக பிள்ளைகள் எவ்வகையான புருஷர்களாக அல்லது ஸ்திரீகளாக உருவாகுவார்கள் என்பதும், அவர்கள் தங்கள் பெற்றோர்களுக்கு மகிழ்ச்சியையா அல்லது மகிழ்ச்சியின்மையையா, துயரத்தையா அல்லது சந்தோஷத்தையா கொண்டுவருவார்கள் என்பதும், தங்கள் பிள்ளைகளைப் பெற்றோர்கள் பயிற்றுவிக்கிறதான வழியினைப் பெரிதும் சார்ந்துள்ளது என்று பெற்றோர்களுக்கு நாங்கள் உறுதியாய்க் கூறிட முடியும். பிள்ளைகள் போகக்கூடாத திசையில் அநேக பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளைப் பயிற்றுவித்துவிடுகின்றனர் என்பதும் - அவர்களில் தவறான உணர்வுகளை விதைத்துவிடுகின்றனர் என்பதும், மேலும் இதனால் பெற்றோர்கள் அவமானத்திற்காளாகும் இயல்புகள், பிள்ளைகளிடத்தில் உருவாகின்றது என்பதும், இவ்வியல்புகளின் நிமித்தம் பிள்ளைகளைப் பெற்றோர்கள் கண்டிக்கின்றனர், கடிந்துகொள்கின்றனர் என்பதும், பிள்ளைகள் வளருகையில், அவர்கள் இவ்வியல்புகளுக்கு எதிராக ஜீவிதகாலம் முழுவதும் போராட வேண்டிய

கட்டாயத்திற்குள்ளாகுகின்றனர் என்பதும் கவலைக்குரிய உண்மையாகும். எவ்வளவு சிறுவயதிலேயே பிள்ளைகளுக்கு பயிற்சியும், ஒழுக்கம் கற்றுக்கொடுத்தலும் அவசியமெனவும் - இவை குழந்தைப் பிறப்பதற்கு முன்னதாகப் பெற்றோரில் துவங்க வேண்டுமெனவும் - உறுதியாயும், அன்பாயும் மேற்கொள்ளப்படும் ஒழுக்கப் பயிற்சியும், கீழ்ப்படிதலும் பிறந்தநாள் முதற்கொண்டு விடாமல் மனதில் ஆழப்பதிய வைக்கப்பட வேண்டுமெனவும் - பெற்றோரினால் சரியாய்ப் புரிந்துகொள்ளப்பட்டால், இது பெற்றோர்களுக்கும், குழந்தைகளுக்கும் எத்துணை ஆசீர்வாதமாய்க் காணப்படும்.

எங்கு ஒரு குழந்தை நியாயமான நல்லப் பிறப்பு அடைந்து, கிறிஸ்தவ இல்லத்தினுடைய செல்வாக்கின்கீழ் வளர்க்கப்படுகின்றதோ - அந்த இல்லத்தில் வேதாகமமானது நியமமாக/தரநிலையாக அடையாளம் கண்டுகொள்ளப்பட்டிருந்தால் - அங்கு ஒன்று அல்லது இரு பெற்றோர்களும் கர்த்தருக்கு அர்ப்பணம்பண்ணினவர்களாயிருந்தால் - அங்குக் கர்த்தர்மீதான விசுவாசத்திற்கும், அவரது பராமரிப்பின்மீதான நம்பிக்கைக்கும் பெற்றோருடைய ஜெபங்களானது தொடர்ச்சியான சாட்சியாகக் காணப்படுமானால் - அங்கு ஆவியின் கனிகளாகிய சாந்தம், தயவு, பொறுமை, நீடிய பொறுமை, சகோதர சிநேகம், அன்பை மாதிரித்துவம்படுத்திடுவதற்கு மாத்திரம் பெற்றோர்கள் நாடாமல், இவைகளைக் குழந்தைகளிலும் ஆழப்பதிய வைத்திடுவதற்கு நாடுவார்களானால் - இம்மாதிரியான அனுபவங்களின்கீழ்ப் பயிற்றுவிக்கப்பட்டுள்ளதான பிள்ளைப் பொதுவாகவே 12-ஆம் வயதில் கர்த்தருக்குத் தன்னை அர்ப்பணிக்கவும், திவ்விய வசனத்தினுடைய அறிவுரைகளை நாடவும், அதன்படி செய்யவும் ஆயத்தமாய்க் காணப்படும்.

தங்கள் இருதயங்களைக் கர்த்தருக்குச் சிறுவயதிலேயே கொடுப்பவர்களுக்கான வாக்குத்தத்தங்களானது நாம் அனைவருமே அறிந்ததாகவும், அநேகரில் அவற்றை நாம் கண்டதாகவும் இருக்கின்றது - "அதிகாலையில் என்னைத் தேடுகிறவர்கள் என்னைக் கண்டடைவார்கள். பிள்ளையானவன் நடக்க வேண்டிய வழியிலே அவனை நடத்து; அவன் முதிர்வயதிலும் அதை விடாதிருப்பான்" " those that seek me early shall find me" (நீதிமொழிகள் 8:17; 22:6). ஒரு பிள்ளை உலகில் அதன் இஷ்டப்படி காணப்படுவதற்கும், சிந்தித்துச் செயல்படாமல் காணப்படுவதற்கும், மரியாதையற்றுக் காணப்படுவதற்கும், சுயநலத்துடன் காணப்படுவதற்கும் பயிற்றுவிக்கப்பட்டால், அவன் பெரியவனாகுகையில், சுயநலமென்னும் மேடுபள்ளத்தினின்று அவனைக் கண்ணியத்தின் மற்றும் மற்றவருக்காய் அன்பு பாராட்டும் மற்றும் அக்கறைக்கொள்ளும் பெரும்வழிச் சாலைக்குத் திருப்புவது என்பது உண்மையில் மிகச் சிரமமான காரியமாய்க் காணப்படும்.

நாம் வாழும் காலங்களானது, பிள்ளைகளைச் சரியாய்ப் பேணிவளர்ப்பதற்கு மிகச் சிரமமான காலபகுதி என்பதினை நாங்கள் ஒத்துக்கொள்கின்றோம். எனினும் இக்காலத்தினுடைய இந்நிலைமையானது பெற்றோரைச் சோர்வுபடுத்திடுவதற்குப் பதிலாக அல்லது பெற்றோர் தன் கடமைகள் விஷயத்தில் அலட்சியமாய்க் காணப்படுவதற்கு ஏதுவாக்கிடுவதற்குப் பதிலாக . . . இந்நிலைமையானது நீதி, நியாயம், இரக்கம் மற்றும் சத்தியம் குறித்த புரிந்துகொள்ளுதலாகிய சிமெண்ட்டைக்கொண்டு போடப்பட்ட குணலட்சணத்திற்கான அஸ்திபாரத்தினால் குழந்தையை ஜீவிதகாலம் முழுதும் ஆசீர்வதித்திடும் தன் கடமையினைப் பெற்றோர் செய்யத்தக்கதாக, அவனை மிகுந்த ஊக்கம்கொள்ளச் செய்யவும், பரத்திலிருந்து வரும் ஞானத்தினை ஊக்கமாய் அதிகம் நாடவும் அவனை வழிநடத்துவதாய் இருத்தல் வேண்டும்.

R3598 [தெரிந்தெடுக்கப்பட்ட பத்திகள்]

# தன் தகப்பனுக்குக் கனவீனமாயிருந்தவன்

## 2 நாளாகமம் 33:1-13

"நீதி ஜனத்தை உயர்த்தும்; பாவமோ எந்த ஜனத்துக்கும் இகழ்ச்சி." (நீதிமொழிகள் 14:34)

வேறொரு பாடத்தில் எசேக்கியா அநேக விதங்களில் ஒரு முன்மாதிரியான இராஜாவாகவும் - தேவனுக்குக் கீழ்ப்படிதலுள்ளவராகவும், உண்மையுள்ளவராகவும் காணப்பட்டார் என்பதைப் பார்த்தோம். இப்பாடத்தில் நல்ல மனுஷராகவும், கர்த்தருக்கு நேர்மையானவராகவும் காணப்படுபவர்கள் சரியற்ற தகப்பன்மார்களாகவும், தங்கள் பிள்ளைகள் விஷயத்தில் தங்களுக்கிருக்கும் பொறுப்பின் விஷயத்தில் அஜாக்கிரதையாகவும் இருக்கக்கூடும் என்று எடுத்துக்காட்டுகின்றதாய் இருக்கும். அந்தோ பரிதாபம் இன்றும்கூட இப்படியாகவே இருக்கின்றது; தேவனுடைய பிள்ளைகளாகவும், பரிசுத்த ஆவியில் ஜெநிப்பிக்கப்பட்டவர்களாகவும் காணப்படுபவர்கள் மத்தியிலும்கூடச் சிலர் இவ்விஷயத்தில் தெளிந்த புத்தியுள்ள மனதின் ஆவியினை அடைய இன்னமும் தவறுகின்றவர்களாகவே காணப்படுகின்றனர்.

"பிள்ளையானவன் நடக்கவேண்டிய வழியிலே அவனை நடத்து; அவன் முதிர்வயதிலும் அதை விடாதிருப்பான்" (நீதிமொழிகள் 22:6) என்று வேதவாக்கியம் தெரிவிக்கின்றதாய் இருக்கின்றது; அதாவது பிள்ளையினுடைய வனையப்படுதலுக்கேதுவான மனமானது முறையாய்ப் பேணப்பட்டால், நீதியின்கொள்கைகளினால் முறையாய்ப் பதியவைக்கப்பட்டால், பிள்ளையானது அவ்வப்போது தற்காலிகமாய்த் தடைச்செய்யப்பட்டுள்ள பாவ வழிகளில் செல்ல முற்பட்டாலும், பதியவைக்கப்பட்ட காரியங்களானது முழுமையாய் அழிந்துபோகாது என்பதுதான் கருத்தாகும். இந்த முக்கியமான காரியமானது கர்த்தருடைய ஜனங்கள் அனைவராலும் தெளிவாய்ப் புரிந்துகொள்ளப்பட முடியுமானால் . . . உலகத்திற்குள் குழந்தையைக் கொண்டுவருகையில், முக்கியமான ஒரு பொறுப்பானது - துறக்க முடியாத ஒரு பொறுப்பானது - சரியான மனம்கொண்ட எந்த ஒரு நபராலும் தட்டிக்கழிக்க எண்ணங்கொள்ளப்படாத ஒரு பொறுப்பானது கையில் எடுக்கப்பட்டுள்ளது என்பது அனைவராலும் உணர்ந்துகொள்ளப்படமுடியும்.

இந்த ஒரு கருத்தானது சீயோன் காவல் கோபுர வெளியீட்டினுடைய வாசகர்கள் யாவரின் மனதிலும் பதியவைக்கப்பட முடியுமானால், இது நிச்சயமாய் அவர்களுக்கும், அவர்களது பிள்ளைக்கும் அதிகமாய்ப் பிரயோஜனம் உண்டாக்குகின்றதாயிருக்கும். சத்தியமானது காவல்கோபுர வெளியீட்டின் வாசகர்களுடைய ஜீவியத்திலும், அவர்களது குடும்பங்கள்மீதும்கூடப் பல்வேறு வழிகளில் பெரிதளவில் செல்வாக்குக்கொண்டிருக்கின்றது என்பதை அறிந்துகொள்வதில் நாங்கள் மகிழ்ச்சிக்கொள்கின்றோம். இது கர்த்தருடைய ஆவியின், தெளிந்த புத்தியுள்ள மனதினுடைய ஆவியின், அன்பின் ஆவியின், நீதியின் ஆவியினுடைய நடைமுறை சார்ந்த செயல்பாடுகளாகும். இவை அதிகமதிகமாய்ப் பெருகி, தற்கால ஜீவியத்தில் பிள்ளைகளுடைய நலனுக்கடுத்த காரியங்களில் மாத்திரம் வெளிப்படாமல், இதோடுகூடப் பரத்திலிருந்துவரும் ஞானமானது முதலாவது சுத்தமுள்ளதாகவும், பின்பு சமாதானமும், சாந்தமும், இணக்கமுள்ளதாகவும், இரக்கத்தாலும், நற்கனிகளாலும் நிறைந்ததாகவும் இருக்கின்றது என்பதற்கான நற்சாட்சியானது நண்பர்கள் மற்றும் அயலார்களுக்கு முன்பும் காணப்படுவதாக.

### எசேக்கியாவின் பொல்லாத குமாரன்

மனாசே பற்றின பதிவுகளானது சுருக்கமாய்ச் சொல்லப்பட்டுள்ளது மற்றும் அது கர்த்தர் பார்வையில் அருவருப்பாயிருந்தது. பன்னிரண்டு வயதுள்ள சிறுவன் சரியாய் வளர்க்கப்பட்டிருந்தால்,

நீதியின் வழிகளிலும், கர்த்தரைப்பற்றின உணர்ந்துகொள்ளுதலிலும், யூதேயாவில் கர்த்தருடைய பிரதிநியாகத் தான் காணப்படும், பொறுப்புள்ள ஸ்தானம் குறித்த உணர்ந்துகொள்ளுதலிலும் போதுமானளவுக்கு உறுதிப்பட்டிருக்கும் பகுத்துணர்வையும், புத்தியையும் ஓரளவிற்குப் பெற்றிருக்க வேண்டும். பிள்ளைகள் இருபது முதல் முப்பது வயதை அடையாதது வரையிலும் அவர்களால் பகுத்தறிவுள்ள மற்றும் விவேகமான சிந்தனைகளைச் சிந்திக்க முடியாதவர்களாய் இருப்பார்கள் என்று எண்ணி அநேகம் பெற்றோர்கள் தவறு செய்கின்றனர். மாறாக பத்து வயதை அடைவதற்கு முன்னதாகவே, ஜீவியத்தை விட்டு என்றும் நீங்கா எண்ணங்களானது மனதினால் ஏற்றுக்கொள்ளப்படுகின்றது மற்றும் இப்படிப்பினைக் கொடுக்கப்படுதலானது குழந்தை ஒருமாத குழந்தையாக இருக்கும்போதே கொடுக்க துவங்கப்பட வேண்டும் - சட்டத்திற்கும், ஒழுங்கிற்கும், சிருஷ்டிகரின் மேலான அதிகாரத்திற்கு அடையாளமாய்க் காணப்படும் பெற்றோரின் அதிகாரத்திற்கும் அன்புடன் கீழ்ப்படிவதற்கான படிப்பினைகளானது பிள்ளைகளுக்குக் கொடுக்கப்பட வேண்டும். தன் பெற்றோர்களையும், தன் இல்லத்தின் சட்டங்களையும், ஒழுங்குமுறைகளையும் மதிக்கக் கற்றுக்கொள்ளாத பிள்ளையானவன் - கர்த்தருக்கும், அவரது உடன்படிக்கையினுடைய பிரமாணங்கள் முதலியவைகளுக்கும் தனக்குக் காணப்படும் பொறுப்புகளை உணர்ந்துகொள்ளும் விஷயத்தில் சிரமத்திற்குள்ளாகுவான்.

குழந்தைப்பருவ காலங்களானது குழந்தையின் விருப்பப்படி அல்லது முக்கியத்துவமில்லாத காரியங்களில் அல்லது விளையாட்டுகளில் செலவிடப்பட வேண்டும் என்று எண்ணுவது தவறாகும். வாழ்க்கை என்பது மாபெரும் சிலாக்கியமான ஒன்று என்றும், மகா ஆசீர்வாதமான ஒன்று என்றும், ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு மணிநேரமும் ஞானமாய்ப் பயன்படுத்தப்பட வேண்டும் என்றும், வாழ்க்கையில் செய்யப்படும் காரியங்களானது தேவனுக்கு மகிமையை அல்லது நமக்கு நன்மையை அல்லது மற்றவர்களுக்கு நன்மையைக் கொண்டுவந்திட வேண்டும் என்றும் உள்ள எண்ணங்களானது . . . சிறுவயதிலேயே ஊட்டிவிடப்பட வேண்டும். நேரத்தைப் போக்குவது, நேரத்தை வீணடிப்பது, பிரயோஜனமில்லாமல் அல்லது ஏதோ நன்மையான விதத்தில் இல்லாமல் மணி நேரங்களையும், நாட்களையும் போக்குவது என்பது அவமானத்திற்குரிய காரியம் என்றும், இது பாவம் என்றும் சிறு குழந்தைப் பருவத்திலிருந்தே கற்பிக்கப்பட வேண்டும். நேரத்தை வீணடிப்பதற்கு அல்லது பிரயோஜனமற்ற, நன்மையற்ற விதங்களில் நேரத்தைப் போக்குவதற்குக் கற்றுக்கொண்டிருக்கும் குழந்தையானவன் . . . நிரந்தரமாய்ப் பாதிப்பிற்குள்ளாகுவான்; அவன் உலகில் பிரயோஜனமானவனாக இருக்க வேண்டுமானால், அவன் தன் குழந்தைப் பருவத்தில் கற்றுக்கொண்ட தவறான பாடங்களை எதிர்த்துப் போராடியே, எதிர்த்து முயற்சித்தே செய்திட முடியும்.

பிள்ளைகளுக்குச் சரியான அஸ்திபாரம் போடுவதற்கும், அவர்களது மனங்களானது ஆடம்பரமான, அறிவீனமான, முட்டாள்தனமான காரியங்களினால் நிரம்பாமல் பார்த்துக்கொள்வதற்கும், அவர்களது மணி நேரங்களும் நாட்களும் வீணடிக்கப்படாமல் பார்த்துக்கொள்ளப்படுவதற்கும், பிள்ளையானவன் வாழ்க்கையில் பிரவேசிக்கவிருக்கின்ற ஜீவியத்தின் மாபெரும் வேலைக்கு அவனை ஆயத்தமாக்கிடுவதற்கு, தகுதியாக்கிடுவதற்கு ஒவ்வொரு நிமிஷமும் விலையேறப்பெற்றது என்று அன்போடு பிள்ளையானவனுக்குப் புரிய வைக்கப்படுவதற்கும் பெற்றோர்கள் கடமைப்பட்டிருக்கின்றனர். வனையப்படுவதற்கேதுவான தன் பிள்ளையினுடைய மனதில் சுயநலமான காரியங்களை அல்ல, மாறாக மேலான எண்ணங்களை, சிறந்த இலட்சியங்களைப் பதியவைத்திடுவதற்கு ஒவ்வொரு பெற்றோரும் கடமைப்பட்டிருக்கின்றனர். எவ்விதமான வீணடித்தல்களும் குற்றஞ்சாட்டுதலுக்கு ஏதுவானவை என்றும், கஞ்சத்தனமாய்ப் பணத்தைச் சேமித்தலும்கூடப் பழிப்புக்கிடமானது என்றும், பணத்தைக்

குவித்துக்கொள்வதை மாத்திரமே பிரதானமான இலட்சியமாக வைத்திருக்கும் ஜனங்கள் இது விஷயத்தில் வெறிகொண்டவர்களாய்க் காணப்படுவார்கள் என்றும் வார்த்தையின்மூலமாயும், முன்மாதிரிமூலமாயும் அன்பான விதத்தில் பிள்ளைக்குக் கற்றுக்கொடுக்கப்பட வேண்டும்; இன்னுமாக தேவனுடைய வழிநடத்துதலின்பேரில் நமக்கு வருகின்றதான ஆசீர்வாதங்கள், சிலாக்கியங்கள், அனுகூலங்கள் மற்றும் வாய்ப்புகள் அனைத்தையும் - நம்முடைய மனரீதியான, ஒழுக்க ரீதியான, சரீர ரீதியான முன்னேற்றத்திற்காக வேண்டியும், பொன்னான பிரமாணத்திற்கு இசைவாகவும், அன்பின் பிரமாணத்திற்கு இசைவாகவும், முதலாவது தேவனை அன்புகூர்ந்து இரண்டாவது நம் அயலார்களை அன்புகூர்தல் எனும் பிரமாணத்திற்கு இசைவாகவும், நம்மால் முடிந்தளவுக்கு அனைவருக்கும் உதவியளிப்பதற்காக வேண்டியும் - பயன்படுத்திடுவது நியாயமான மற்றும் சரியான காரியமாயிருக்கும் என்றும் வார்த்தையின்மூலமாயும், முன்மாதிரிமூலமாயும் அன்பான விதத்தில் பிள்ளைக்குக் கற்றுக்கொடுக்கப்பட வேண்டும்.

---

R3462 [தெரிந்தெடுக்கப்பட்ட பத்திகள்]

# என்னைக் கனம்பண்ணுகிறவர்களை நானும் கனம்பண்ணுவேன்
## 2 நாளாகமம் 29:18-31

யூதாவின் சிங்காசனத்தில் கர்த்தருடைய பார்வையில் மிகவும் நல்ல இராஜாக்களாகக் காணப்பட்ட மூன்றுபேரில் ஒருவர் எசேக்கியாவாக இருந்தார் - தாவீது மற்றும் யோசியா இராஜாக்கள் மற்ற இருவராகக் காணப்பட்டனர் (2 இராஜாக்கள் 18:5). எசேக்கியாவின் விஷயம் மிகவும் குறிப்பிடத்தக்கதாகும். இவர் சிங்காசனத்தில் அமர்ந்துள்ள மிகவும் அருவருக்கத்தக்க இராஜாக்களில் ஒருவரான ஆகாஸ் இராஜாவின் குமாரன் ஆவார்; இந்த ஆகாஸ் இராஜா மிகவும் இழிவானவராகக் காணப்பட்டபடியால், இவர் இராஜாக்களோடுகூட அடக்கம்கூடப்பண்ணப்படவில்லை. ஆகாஸ் இராஜா மிக மோசமான அளவில் விக்கிரக ஆராதனையை ஆதரித்தவராவார் மற்றும் இவரது இராஜ்யபாரத்தின்கீழ், இராஜ்யமானது எல்லாவிதத்திலும் மிகக்கீழான நிலைமைக்குள்ளானது. எசேக்கியாவின் தகப்பன் மரித்த, தனது இருபத்தி ஐந்தாவது வயதில் எசேக்கியா அரியணைக்கு வந்தார் மற்றும் இவரது இராஜ்யபாரம் முழுவதும் சீர்த்திருத்தமான ஒன்றாகவும், கர்த்தரைப் பிரியப்படுத்திடுவதற்குரிய இருதயப்பூர்வமான வாஞ்சையினை வெளிப்படுத்தினதாகவும் இருந்தது.

தகப்பன் மற்றும் குமாரனுக்கு இடையிலுள்ள இந்த வித்தியாசத்தின் இரகசியமானது, இவரது தாயார் தேவ பக்தியுள்ள ஸ்திரீயாகக் காணப்பட்ட உண்மையில் அடங்குகின்றது மற்றும் ஐயத்திற்கிடமின்றி இக்காரணத்தினாலேயே அபியாள் என்ற அவளது பெயர் வேத வாக்கியங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. இப்பெயரின் அர்த்தம் "யேகோவா என் பிதாவாவார்" என்பதாகும்; மேலும் இது இவளது பெற்றோர்களில் ஒருவர் அல்லது இருவருமே பயபக்தியுள்ளவர்களாகவும், தேவ பயமுள்ளவர்களாகவும் இருந்திருப்பதைச் சுட்டிக்காட்டுகின்றதாய் இருக்கின்றது. இத்தனை இழிவான ஓர் இராஜாவிற்கு இவள் எப்படி மனைவியானாள் என்பது குறித்து நமக்குத் தெரியவில்லை . . . ஆனாலும் இவளது கணவனின் விக்கிரக ஆராதனையும், பயபக்தியின்மையும் இவள் மனதின்மேல் தொற்றிடும் தாக்கத்தினைக் கொண்டிருக்கவில்லை என்பது உறுதியே. இது இவளது குமாரனாகிய எசேக்கியாவிற்குச் சூட்டப்பட்டுள்ள பெயரின்மூலமும் தெரிவிக்கப்பட்டுள்ளது; எசேக்கியா என்றால்

"யேகோவா என் பெலனாவார்" என்பதாகும். இவ்விஷயத்தை "அவிசுவாசியான புருஷன் தன் மனைவியால் பரிசுத்தமாக்கப்படுகிறான்; அவிசுவாசியான மனைவியும் தன் புருஷனால் பரிசுத்தமாக்கப்படுகிறாள். இல்லாவிட்டால் உங்கள் பிள்ளைகள் அசுத்தமாயிருக்குமே, இப்பொழுதோ அவைகள் பரிசுத்தமாயிருக்கின்றன" (1 கொரிந்தியர் 7:14) என்ற அப்போஸ்தலனின் வார்த்தைகளுக்கான மற்றுமொரு உதாரணமாக நாம் பார்க்கின்றோம். பெற்றோரைப் பொறுத்த விஷயத்தில் . . . கர்த்தர் பிள்ளையை விசுவாசியாய்க் காணப்படும் நபரின் பிள்ளையாய் அடையாளம் கண்டுகொள்ள சித்தமுள்ளவராயிருக்கின்றார் என்றும், இப்படியாகப் பிள்ளையானது அதன் விசுவாசியான பெற்றோருக்கு இருப்பது போன்று, தெய்வீக வழிநடத்துதல் மற்றும் பராமரிப்பின் கீழ், பகுத்தறியும் வயதை அடைவதுவரையிலும் காணப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இங்கு நன்மைக்கேதுவான தாயினுடைய வல்லமைக்குறித்து எத்தகைய பாடம் காணப்படுகின்றது. உண்மைதான் இச்சம்பவத்தில் மனைவியென அவளால் தன் கணவனைத் தேவனிடம் பயபக்திகொள்வதற்கும், நீதியின் திசையில் திருப்பிடுவதற்கும் ஏதுவாய்ச் செல்வாக்கினைச் செயல்படுத்திட முடியவில்லை என்றாலும், அவள் தன் குமாரனுடைய குணலட்சணத்தினை உருவாக்கிடும் விஷயத்தில் வனைந்திடும், கட்டுப்படுத்திடும் செல்வாக்கினைச் செயல்படுத்தினாள் என்பது உறுதியே. மனைவி மற்றும் தாயின் செல்வாக்கானது சரியாய்ச் செயல்படுத்தப்பட்டால், மிகவும் அதிகமான பாராட்டுதலுக்கு ஏதுவாயிருக்கும்; ஆனால் இல்லத்தில் தங்களின் சிலாக்கியங்களையும், வாய்ப்புகளையும் சரியாய் மதித்திட தவறிடும் சிலர், இல்லத்தின் கடமைகளைப் புறக்கணித்தவர்களாகப் பொதுப்படையான பிரயாசங்களில் ஈடுபட்டுள்ளனர் - இது கடுமையான தவறாகும்.

---

R3325 [தெரிந்தெடுக்கப்பட்ட பத்திகள்]

# விலை அதிகமுள்ள பேரம்

## நன்மைக்கு அல்லது தீமைக்கு வழிநடத்தக்கூடிய பெற்றோரின் செல்வாக்கு

ஏரோது மீது ஏரோதியாள் கொண்டிருந்த அதிகாரமானது, அவளுடைய மகளாகிய சலோமியின் மீது அவள் கொண்டிருந்த அதிகாரத்தில் விளங்குகின்றது. இராஜாவின் தாராளமான கொடை, இளம் பெண்ணாகிய சலோமியின் மனதில் சலனத்தை ஏற்படுத்தியிருக்க வேண்டும். ஐசுவரியங்கள், அரண்மனைகள், ஆடம்பரங்கள் அவளுடைய மனதிற்கு முன்பு தோன்றியிருக்க வேண்டும்; ஆனால், அவள் தாயின் அறிவுரையின்படி வழிநடத்தப்பட்டிருக்கிறபடியால், முன்புபோல இப்பொழுதும் அவள் தாயின் ஆலோசனையை நாடி, "நான் என்ன கேட்க வேண்டும்" என்று கேட்டாள் (மாற்கு 6:24). இங்குப் பெற்றோருடைய செல்வாக்குக் குறித்துக் காட்டப்படுகின்றது. பொல்லாத ஸ்திரீயாகிய ஏரோதியாள், தனது மகளுடைய பாசத்தையும், அவளுடைய முழுமையான நம்பிக்கையையும் மற்றும் கீழ்ப்படிதலையும் தன்வசமாகக் கொண்டிருந்தாள். நன்மை (அ) தீமை வழியில் அந்த வாலிபப் பெண்ணின் மனதை வழிநடத்துவது, ஏரோதியாளின் கரங்களில் இருந்தது. இது ஓரளவுக்கு ஒவ்வொரு பெற்றோரின் விஷயத்திலும், அதிலும் விசேஷமாக ஒவ்வொரு தாய்மாருடைய விஷயத்திலும் உண்மையாகவே காணப்படுகின்றது. பிள்ளைகளின் நடத்தை/வாழ்க்கை விஷயத்தில் தாய், தகப்பன்மாருடைய பொறுப்பு எவ்வளவு அதிகமாய்க் காணப்படுகின்றது! மாம்சீக உறவுமுறை மற்றும் வாய்ப்பின் காரணமாய்க்

கர்த்தருடைய ஜனங்களில் பெற்றோருக்கு உரியதாகியுள்ள இந்த வல்லமையுள்ள செல்வாக்கை, அவர்கள் தங்களுடைய வழிநடத்துதலின் கீழிருப்பவர்களைச் சரியான பாதையில் வழிநடத்துவதற்கு ஏதுவாகப் பயன்படுத்திடுவதற்கு, அவர்களிலுள்ள தெளிந்த புத்தியின் ஆவியானது நிச்சயமாய்த் தூண்டும்.

அந்தோ பரிதாபம், கிறிஸ்தவ தாய்மார்களில் சிலர்கூட இப்படியான வாய்ப்புகளை எடுத்துக்கொண்டு, தங்களது பிள்ளைகளை, பரலோக வழிகளில் நடத்துவதற்குத் தவறிவிடுகின்றனர். இவர்கள் கர்த்தருடைய நோக்கத்திற்காகத் தங்களுடைய பூமிக்குரிய நன்மைகளைத் தியாகம் செய்திடவும் மற்றும் பரலோகத்தில் பொக்கிஷத்தைச் சேர்த்து வைக்கவும் விரும்பினாலும், இவர்களுக்குள்ளாகவே அதிகமான உலகத்தின் ஆவி இருப்பதினால், இவர்கள் ஞானத்தின் வழிகளே இனிமையான வழிகள் என்பதையும், மற்ற அனைத்துப் பாதைகளும் தற்காலத்திலும், எதிர்க்காலத்திலும் உபத்திரவத்திற்கே வழிநடத்தும் என்பதையும் உணரத் தவறிப்போய், தங்களது பிள்ளைகளையும் (இந்த ஞானமான வழிகளில்) பங்கெடுக்க வைப்பதில் விருப்பமற்றுக் காணப்படுகின்றனர். "சகோதரரே, நீங்கள் உங்கள் சரீரங்களைப் பரிசுத்தமும் தேவனுக்குப் பிரியமுமான ஜீவபலியாக ஒப்புக்கொடுக்க வேண்டுமென்று, தேவனுடைய இரக்கங்களை முன்னிட்டு உங்களை வேண்டிக்கொள்ளுகிறேன்; இதுவே நீங்கள் செய்யத்தக்க புத்தியுள்ள ஆராதனை" என்ற அப்போஸ்தலரின் வார்த்தைகளை இவர்கள் புரிந்துகொள்ள தவறிவிடுகின்றனர் (ரோமர் 12:1). மற்ற அனைத்துப் பாதைகளும் புத்தியற்றதும், ஞானமற்றதும், பகுத்தறிவில்லாததுமாக இருக்கின்றது.

---

R3148

## தேவனுடைய ஊழியத்திற்கு எதுவுமே தகுதியானவையல்ல

"அதற்கு முடம் குருடு முதலான யாதொரு பழுது இருந்தால், அதை உன் தேவனாகிய கர்த்தருக்குப் பலியிட வேண்டாம்." (உபாகமம் 15:21)

மோசேயின்கீழ்ப் பணிவிடை வீட்டாருக்காய்க் கொடுக்கப்பட்ட இத்தகைய கட்டளையானது, அநேகரால் கருதப்படுவதைப் பார்க்கிலும் கிறிஸ்துவின்கீழ்க் காணப்படும் புத்திரர் வீட்டாருக்கு அதிகம் அவசியமானதாய் இருக்கின்றது (எபிரெயர் 3:5-6). மற்ற அநேகம் விதங்களில் நன்மைக்கேதுவாய்ப் பயன்படுத்த வாய்ப்புள்ளதான சிறந்த காரியங்களைப் பலிசெலுத்துவது என்பது பரிதாபத்திற்குரியது என்று நம் கூடவே பிறந்துள்ள சுயநலமானது பொதுவாகவே யோசனை கொடுக்கின்றதாயிருக்கும். மேலும் இப்படி நம்மையும் அறியாமலேயே இன்று செய்யப்பட்டுவருவதினால், இவ்விஷயத்தைக்குறித்து - உண்மையுள்ள இருதயமுடையவர்களுக்கு இப்பிரச்சனையினின்று விடுதலைப் பெறத்தக்கதாக உதவும் கண்ணோட்டத்தில் இப்பொழுது நாம் இங்குக் கலந்துரையாடுகின்றோம். உண்மைதான் நம்முடைய இருதயங்கள் மகா திருக்குள்ளதாகவும், அவைகளின் உண்மையான நோக்கங்களைக்குறித்து, எப்போதும் கவனிக்க வேண்டியதாகவும் உள்ளது; சிலசமயங்களில் இருதயங்களானது அதன் உண்மையான நோக்கங்களை நேர்மையான இருதயங்கொண்டிருக்கும் தேவனுடைய புத்திரர்களிடமிருந்துகூட ஒளித்துவைத்துக்கொள்கின்றது.

கர்த்தரையும், அவரது நோக்கங்களையும் அன்புகூர்ந்திடும் கிறிஸ்தவ பெற்றோர்கள், கர்த்தருடைய ஊழியத்தில் சுறுசுறுப்பாய்ப் பங்கெடுப்பதற்கான தங்கள் சொந்த இயலாமைக்குறித்து அவ்வப்போது

வருந்துகிறவர்களாய் இருக்கையில் - தொகுதி விநியோகிக்கும் வேலையில் சகோதர சகோதரிகளுடைய பலிகளைக்கண்டு ஆசைப்படுகிறவர்களாகவும், அதை மதிக்கிறவர்களாகவும் இருக்கையில், தங்களுக்கே பாதகமாய் அமையும் வகையில், தங்கள் சொந்தக் குமாரர்களையும், குமாரத்திகளையும் கொடுக்க தயங்குகிறதை நாம் அடிக்கடி காணமுடிகின்றது. இப்பெற்றோர்கள் சுவிசேஷகரென, தொகுதி விநியோகிப்பவரென வேலை செய்வது என்பது கல்வியறிவு இல்லாதவர்களுக்கு அல்லது திறமையற்றவர்களுக்குரிய வேலையென எண்ணுவதாகத் தெரிகின்றது; தங்கள் பிள்ளைகள் வாழ்க்கையில் உயர்ந்த இலட்சியம்கொண்டிருக்கச் செய்கின்றனர்; இவர்கள் கர்த்தருடைய கொடைகளை ஏற்றுக்கொண்டு, அவற்றைப் பிள்ளைகள் கல்வி பெற்றுக்கொள்ளத்தக்கதாகப் பிள்ளைகளுக்காய்ச் செலவழிக்கின்றனர்; மேலும் பிள்ளைகளுக்கிருக்கும் திறமைகளுக்கும், கல்வியறிவிற்கும் மருத்துவத்துறையை அல்லது சட்டத்துறையை அல்லது இலக்கியத்துறையை அல்லது பள்ளிக்கூடத்தில் ஆசிரியத்துறையைக் கனமுள்ள மற்றும் இலாபகரமான துறைகளென அவர்களுக்குச் சுட்டிக்காண்பித்துக்கொடுக்கின்றனர்.

எவ்வளவு பெரிய தவறு! எத்துணைக் கவலைக்குரிய தவறு! இத்தகையவர்கள் ஒருவேளை எப்படியோ இராஜ்யத்திற்குள் பிரவேசித்து, தங்கள் பாதையைத் திரும்பிப்பார்ப்பார்களானால், இந்தத் தற்காலத்தில் தேவனுடன் உடன் வேலையாட்களாய் இருக்கும் அருமையான சிலாக்கியத்தினைத் தாங்கள் எத்தனை சாதாரணமாய்ப் பார்த்துள்ளனர் என்று கண்டுகொள்கையில் எவ்வளவு அவமானம் அடைவார்கள்! அக்காலங்களில் மருத்துவத்துறையின், சட்டத்துறையின், பள்ளிக்கூடங்களின், இலக்கியங்களின், திருமணத்தின் முக்கியத்துவம் குறித்த இவர்களது கண்ணோட்டங்களானது எவ்வளவாய்ப் பெரிதும் வித்தியாசப்பட்டுக் காணப்படும். நலிந்துபோனதும், ஊனமானதும், குறைவுள்ளதும் கர்த்தருக்குப் பலிசெலுத்திட போதுமானவைகள் என்று தாங்கள் எண்ணினது குறித்து - அதாவது "உலகப்பிரகாரமான வளமைக்குத்" திராணியில்லாதவர்கள் தவிர, வேறு எவருமே தொகுதி விநியோகிக்கும் ஊழியத்தைக்குறித்துச் சிந்தித்துப்பார்க்கவேகூடாது என்று தாங்கள் சிந்தித்தவைகள்குறித்து எவ்வளவு அவமானம் அடைவார்கள்.

அர்ப்பணம்பண்ணியுள்ளதான பெற்றோர்கள் தங்கள் முதற்பேறானவர்களை மாத்திரமல்லாமல், தங்கள் பிள்ளைகள் அனைவரையுமே கர்த்தருக்கென்று அர்ப்பணித்திட வேண்டும்; மேலும் திவ்விய ஊழியத்திற்கென்று கூடுமானமட்டும் அதிகளவில் தங்களை அர்ப்பணிப்பதே தேவனுடைய ஜனங்கள் அனைவருக்குமான ஏற்ற நடக்கையாய் இருக்குமெனப் பிள்ளைகளுடைய மனதிலும், இருதயத்திலும் குழந்தைப் பருவம் முதற்கொண்டு பதிய வைத்திட வேண்டும். தங்களுடைய அனைத்தையும் தங்களால் முடிந்த மட்டும் அவர் ஊழியத்தில் செலவிடும் கண்ணோட்டத்தில் ஜீவியத்தின் காரியங்கள் அனைத்தையும் பார்த்திட பிள்ளைகள் கற்பிக்கப்பட வேண்டும்; தங்கள் நேரம், திறமை, செல்வாக்கு ஆகியவற்றைக் கர்த்தர் ஏற்றுக்கொள்ளவும், இவை அனைத்தையும் அவர் ஊழியத்தில் - அதாவது கற்பனைபண்ணிப் பார்க்கமுடியாத அளவுக்கு மிகவும் கனமுள்ளவைகளாயிருக்கும் மற்றும் இறுதியில் உயர்வாய்ப் பலனளிக்கப்படப் போகின்றதுமான அவர் ஊழியத்தில் கர்த்தர் பயன்படுத்தவும் வேண்டி ஜெபிப்பதற்குப் பிள்ளைகளுக்குக் கற்பிக்கப்பட வேண்டும். திருமணம் குறித்த அப்போஸ்தலனின் போதனைகளானது (1 கொரிந்தியர் 7:27-40), திருமணத்திற்கான கண்டனமாய் இராமல், மாறாக கர்த்தருடைய ஊழியத்தில் மிக முழுமையாகப் பயன்பட வேண்டும் என்று வாஞ்சிப்பவர்களுக்குரிய முக்கியமான பலிகளில் ஒன்று என்ற கருத்தினை உடையதாய் இருக்கின்றது என்று பிள்ளைகளுடைய கவனத்திற்குக் கொண்டுவரப்பட வேண்டும்.

இதுமாத்திரமல்லாமல் தற்கால சத்தியத்தினை அறிந்துகொள்ளும் கிறிஸ்தவ பெற்றோர், மேற்கல்விக்காய் நாட வேண்டாம் என்று தன் பிள்ளையை ஊக்குவிக்கிறது மாத்திரமல்லாமல்,

இன்னுமாகப் பள்ளிப்படிப்புடன் மனநிறைவுகொள்ளவும் ஊக்குவித்திட வேண்டும்; ஏனெனில் (1) ஒரு துறைக்கென்று பிள்ளையைத் தகுதியாக்கிடுவது என்பது ஜீவியக்காலம் முழுவதும் அவனைச் சோதனைக்குள்ளாக்கும் திசையில் அவனை நிறுத்திடுவதாய் இருக்கும்; (2) கல்லூரிகள் அனைத்திலும் இன்றைய நாட்களில் வழங்கப்படுகின்றதான மேல்படிப்புகளானது அதிகமாய்ப் பரிணாமக் கோட்பாடுகளினாலும், நுட்ப பிழைக்காணும் திறனாய்வுகளினாலும் நிரம்பிக் காணப்படுவதால், பிள்ளைக் கர்த்தரிடத்தில் கொண்டிருக்கும் ஈடுபாட்டினைக் கொன்று போட்டுவிடும் சந்தேகங்களில் பிள்ளையானவன் விழுந்துபோவான்; மேலும் ஒருவேளை கனமிக்க ஸ்தானமும், நல்லச் சம்பளமும் அவனுக்கு மத ஈடுபாட்டிற்குப்பதிலாக நல்லொழுக்கத்தைக் கொடுத்தாலும், அவனை வெளித்தோற்றத்திற்காகிலும் கர்த்தருக்கு ஊழியஞ்செய்திட தூண்டிடமுடியாது.

மாறாக தற்கால சத்தியத்தினை அறியும் வாய்ப்பினால் கர்த்தரிடமிருந்து கிருபைப் பெற்றுக்கொள்ளும் ஒவ்வொருவனும், ஒவ்வொருவளும் உடனடியாக உண்மை சூழ்நிலையினைக்குறித்து உணர்ந்துகொள்ள வேண்டும்; அதாவது மிகவும் திறமிக்ககவர்களும், மிகுந்த கல்வியறிவுள்ளவர்களும் கர்த்தருடைய பலிபீடத்திற்குப் பாத்திரமற்றவர்கள் என்றும், கர்த்தருடைய ஊழியம்புரிவதற்கென ஏற்றுக்கொள்ளப்படுவதற்குப் பாத்திரமற்றவர்கள் என்றும் உணர்ந்துகொள்ள வேண்டும்; இன்னுமாக ஒவ்வொருவனும் தன்னில் பெற்றிருக்கும் சிறந்தவற்றை, தன்னால் முடிந்ததை மிகுதியாகக் கர்த்தருடைய ஊழியத்திற்கென்று தினந்தோறும், மணிநேரங்கள் தோறும் அர்ப்பணித்திட வேண்டும், அதுவும் தேவனுடன் உடன் வேலையாட்களாக இருப்பது என்பது தேவதூதர்களுக்கு அல்லது மனிதர்களுக்கு அளிக்கப்படும் மாபெரும் சிலாக்கியமென உணர்ந்து அர்ப்பணித்திட வேண்டும். இப்படியாகக் காரியத்தினைச் சரியாய் உணர்ந்துகொள்ளும் சிலர் மருத்துவத்துறையினையும், வியாபாரத்தையும், பள்ளிக்கூடங்களையும் விட்டுவிட்டு, மிகவும் பிரம்மாண்டமான, மிகவும் முக்கியமான சுவிசேஷஊழியத்தில், தொகுதி விநியோகிப்பாளரென - சுவிசேஷகர்களென ஊழியம்புரிந்திடுவதற்கு - மகா சந்தோஷத்தின் நற்செய்தியின் அச்சடிக்கப்பட்ட பக்கங்களைக் கேட்கும் செவிகளுள்ள யாவருக்கும் சுமந்துசெல்வதற்கு வேண்டி கடந்துவருகின்றனர். இவர்கள் இராஜாதி இராஜனுக்கு ஸ்தானாபதிகளென ஊழியம்புரிவதாகிய மிகவும் கனம் பொருந்தின ஊழியத்திற்குத் தங்களுக்குப் போதுமான கல்வியோ, திறமைகளோ இல்லை என்றும், ஒருவேளை தாங்கள் எதையேனும் பெற்றிருந்தார்களானால், அது அவ்வேலைக்காகவே பயன்பட வேண்டும் என்றும் சரியாய் உணர்ந்துகொண்டிருப்பவர்களாய் இருக்கின்றனர்.

ஒரு வாலிபன் அல்லது வாலிபப் பெண்மணி தற்கால சத்தியத்தினை ஏற்றுக்கொண்டு விட்டார்கள் என்பதற்காகவும், அவர்கள் தொகுதி விநியோகிக்கும் வேலைக்கு வரத் தாங்கள் வலியுறுத்துவதற்காகவும் வேண்டி, தற்கால ஜீவியத்தின் இலட்சியங்கள் மற்றும் வாய்ப்புகள் அனைத்தையும் அவன் அல்லது அவள் தவிடுபொடியாக்கிப் போட்டுவிட்டு, தொகுதி விநியோகிக்கும் வேலைக்கு வந்துவிட வேண்டுமா என்று கேட்கின்றீர்களா? நிச்சயமாக இல்லை; இத்தகைய எண்ணம் உடையவர் யாரும் இவ்வேலைக்குள் பிரவேசிக்க வேண்டாம். இத்தகையவர்களைத் தம்முடைய வேலைக்காகவும், தம் பிரதிநிதிகளாய் இருப்பதற்காகவும் கர்த்தர் நாடி தேடுவதில்லை; ஆகையால் இத்தகையவர்களை நாங்களும் அவருடைய நாமத்தில் தேடுகிறதில்லை. அவருக்கு ஊழியஞ்செய்வதை, அதுவும் எதைப் பலிசெலுத்தியும் அவருக்கு ஊழியஞ்செய்வதைச் "சந்தோஷமாகக் கருதுபவர்களையே" கர்த்தர் தேடுகின்றார். தங்களுடைய சித்தத்திற்கு மாறாக/விருப்பமில்லாமல் ஊழியத்திற்கு வருபவர்கள், சந்தேகத்திற்கிடமின்றி ஆக்கப்பூர்வமாய் வேலை செய்யாதவர்களாய் இருந்து, சீக்கிரத்தில் சத்தியத்தினின்று விழுந்துபோய்விடுபவர்களாக இருப்பார்கள்.

ஆனால் ஒருவேளை போதுமானளவுக்குச் செல்வம் உடைய மனுஷன் - உதாரணத்திற்கு ஒரு வியாபாரியாக இருப்பவன், தன் சொந்த வியாபாரத்தினை விட்டுவிட்டு, தொகுதி விநியோகிக்கும் வேலைக்குச் செல்வதை - அதுவும் தன்னுடைய பணத்திற்கான வட்டியிலோ அல்லது அசலிலோ தன் தேவைகளைச் சந்தித்து இவ்வூழியத்திற்குச் செல்வதை நீங்கள் வரவேற்பீர்களா என்று கேட்கின்றீர்களா? நிச்சயமாக! "என் பிதாவுக்கடுத்தவைகளில்/my father's business நான் இருக்க வேண்டியதென்று அறியீர்களா" என்ற நமது ஆண்டவரின் வார்த்தையில் வெளிப்படும் அவரது ஆவியினை நாம் அனைவரும் பெற்றிருக்க வேண்டுமல்லவா? கர்த்தருடைய உண்மையான பரிசுத்தவான்களுக்குச் சொந்தமாக வியாபாரம் இருக்கலாம், ஆனால் "சொந்தம்" என்று அதை உரிமைக்கொண்டாட எதுவும் அதில் இருப்பதில்லை; ஏனெனில் அவர்கள் தங்கள் அனைத்தையும் கர்த்தருக்கென்று அர்ப்பணிப்பின்போது கொடுத்துவிட்டார்கள். இவர்கள் தங்கள் வியாபாரங்களை, கர்த்தருக்கான நிர்வாகிகளென நிர்வகிக்கின்றவர்களாய் இருக்கின்றனர் - இவர்கள் தங்கள் மரணத்தின்போது வளமையான நிலைமையில் வியாபாரத்தினைப் பிள்ளைகளுக்கோ அல்லது நண்பர்களுக்கோ பாதகம் உண்டாக்கும் விதத்தில் பிள்ளைகளுக்கு அல்லது நண்பர்களுக்குக் கொடுப்பவர்களாய் இருப்பதில்லை. மரணத்திற்கு முன்னதாக இவைகள் பரிசுத்தவானால் நிர்வாகியென அவன் அறிந்திருக்கிற மட்டும் ஞானமாய்ப் பயன்படுத்தப்பட வேண்டும்; ஏனெனில் நிர்வகிக்கும் காலம் முடிவடைகையில், அவன் தன் கணக்கை ஒப்புவிக்க வேண்டியவனாய் இருப்பான் (மத்தேயு 25:14-30; லூக்கா 19:12-26). தன்னைச் சார்ந்து இருப்பவர்களுக்கு அவனால் தற்கால ஜீவியத்திற்கடுத்த சௌகரியங்களைக் கொடுக்க முடிகிறதென்றால், இதைக்காட்டிலும் அதிகமாய் அவர்களுக்கு அவன் ஏன் செய்திட வேண்டும்? அல்லது அவனுக்கு முன்பாக "இருளினின்று நம்மைத் தம்முடைய ஆச்சரியமான ஒளியினிடத்திற்குக் கொண்டுவந்தவருடைய புண்ணியங்களை அறிவித்திடும் விஷயத்திற்கான" வாய்ப்புகளானது சிறந்த விதத்தில் திறந்திருக்க, வேறு ஏதேனும் காரணங்களுக்காய் அவன் ஏன் தாமதித்துக்கொண்டிருக்க வேண்டும்? அந்தோ தங்களிடத்தில் நிர்வாகம்பண்ண கர்த்தர் கொடுத்துள்ளதை அடையாளம் கண்டுகொண்டுள்ள சொற்பமான சிலபேர்களே, அதற்கு உண்மையுள்ளவர்களாய் இருந்து, சந்தோஷத்தோடு தங்கள் கணக்கை ஒப்புவிக்க முடிகிறவர்களாகவும், "நல்லது உண்மையும், உத்தமும் உள்ள ஊழியக்காரனே!" என்று கர்த்தர் சொல்வதைக் கேட்கமுடிகிறவர்களாகவும் இருப்பார்கள்!

"அறுப்புக்காலம் சென்று, கோடைக்காலமும் முடிந்தது" என்றாகுவதற்கு முன்னதாக, அருமையான சகோதர சகோதரிகளே நம்முடைய சிலாக்கியங்களுக்கும், வாய்ப்புகளுக்கும் நாம் விழித்துக்கொண்டு, இவைகளை நன்றியோடு பயன்படுத்திடுவோமாக. நடைமுறைக்குச் சாத்தியமாகாத கடினமான காரியத்தைச் செய்யும்படிக்கு நாங்கள் கட்டளையிடுவதாகத் தவறாய்ப் புரிந்துகொள்ளப்பட வேண்டாம். தங்கள் சொந்தத் தேவைகளைச் சந்திப்பதற்கும் மேலாக அதிகமாய்ச் செய்திடுவது என்பது, அதாவது தொகுதி விநியோகிப்பாளர்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ள மிகவும் தாராளமான நிபந்தனைகளுக்கும் மேலாக அதிகமாய்ச் செய்திடுவது என்பது விதிவிலக்கான சிலரால் மாத்திரமே முடிகிற காரியமாகும்; "தன் சொந்த வீட்டாரை விசாரியாதவன் அவிசுவாசியிலும் கேடானவனாய் இருக்கிறான்" என்று அப்போஸ்தலன் கூறுகின்றார். குடும்பச் சூழ்நிலைகளினால் தடைப்பண்ணப்படுபவர்கள் தங்கள் அன்பையும், அர்ப்பணிப்பையும் வேறு ஏதேனும் விதமான பலியின்மூலம் காண்பித்திட வேண்டும்.

இந்த ஊழியத்தில் ஈடுபட்டிருக்கும் சில எளிமையான மற்றும் சிறு தாலந்துடையவர்களுக்குச் சிலவற்றைக் கூறி இங்கு நிறைவுசெய்கின்றோம். இத்தகையவர்கள் அநேகமாக நம்முடைய ஆதார வசனத்தில் ஏற்றுக்கொள்ளப்படாது என்று கூறப்படுகின்ற முடமான, பழுதுள்ள வகுப்பாரில் தாங்கள் அடங்குவதாக எண்ணிடக்கூடும். அன்புக்குரிய சகோதரரே அப்படியல்ல; இயேசு கிறிஸ்துவின்

இரத்தமானது நம்மைப் பாவங்கள் அனைத்தினின்றும் சுத்திகரித்து, நம் இயல்பான குறைகள் யாவற்றையும் மூடிப்போட்டு, நம்மைப் பிரியமானவருக்குள் தகுதியானவர்களாகவும், ஏற்றுக்கொள்ளப்படத் தக்கவர்களாகவும் ஆக்குகின்றது. பூஜ்யம் தனித்திருந்தால் அதற்கு மதிப்பில்லை; ஆனாலும் அது ஒன்று எனும் எண்ணோடுகூட வருகையில், அதற்கு வல்லமை இருக்கின்றது; இப்படியே நாமும் இயேசுவோடுகூடக் காணப்படுகையில் இருக்கும் - அவரது புண்ணியமானது அவரோடுகூட நமக்கு உறவையும், கூட்டுறவையும் கொடுக்கின்றது; மேலும் தேவனுக்காகவும், அவரது நோக்கங்களுக்காகவும் நமக்கு மதிப்பையும், செல்வாக்கையும், வல்லமையையும் கொடுக்கின்றது. "அவருக்குள் நீங்கள் பரிபூரணமுள்ளவர்களாய் இருக்கிறீர்கள்;" "பிரியமானவருக்குள் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கின்றீர்கள்."

---

R2991 [தெரிந்தெடுக்கப்பட்ட பத்திகள்]

# கேள்வி, பதில்கள்

## இல்லாவிட்டால் உங்கள் பிள்ளைகள் அசுத்தமாயிருக்குமே

கேள்வி: -- "அவிசுவாசியான புருஷன் தன் மனைவியால் பரிசுத்தமாக்கப்படுகிறான்; அவிசுவாசியான மனைவியும் தன் புருஷனால் பரிசுத்தமாக்கப்படுகிறாள். இல்லாவிட்டால் உங்கள் பிள்ளைகள் அசுத்தமாயிருக்குமே; இப்பொழுதோ அவைகள் பரிசுத்தமாயிருக்கின்றன" என்று அப்போஸ்தலன் 1 கொரிந்தியர் 7:14-ஆம் வசனத்தில் கூறியிருக்கின்றார். (1) எந்த விதத்தில் விசுவாசி, அவிசுவாசியினைப் பரிசுத்தப்படுத்துகின்றான்? சத்தியம் பரிசுத்தமாக்குகிறதல்லவா? மேலும் சத்தியம்மூலம் தேவன் பரிசுத்தமாக்குகிறாரல்லவா? கர்த்தருக்கும், அவர் ஊழியத்திற்கும் என்று நம்மைப் பிரித்தெடுக்கும் விதத்தில் அவர் நம்மைப் பரிசுத்தமாக்குகிறாரல்லவா? அப்போஸ்தலன் என்ன அர்த்தத்தில் கூறியுள்ளார்? (2) இந்த வசனத்தின்படி எந்த விதத்தில் பிள்ளைகள் பரிசுத்தமாயிருக்கின்றனர்? பரிசுத்தம் ஏதும் தரிப்பிக்க/சாற்றப்படுகின்றதா? பிள்ளைகள் தங்கள் பெற்றோர்கள்மூலமாகத் திவ்விய சுபாவத்தில் பங்குகொள்பவர்களாய் இருப்பார்கள் என்று சொல்லலாமா? அப்போஸ்தலன் என்ன அர்த்தத்தில் பேசியுள்ளார்?

பதில்: -- இவ்வசனத்தில் இடம்பெறும் "sanctify" மற்றும் "holy" (பரிசுத்தமாகுதல்) எனும் வார்த்தைகளானது, வேறு வேதவாக்கியங்களில் இடம்பெறும் இவ்வார்த்தைக்கான அதே அர்த்தத்தினை இங்குப் பெற்றிருப்பதில்லை. அப்போஸ்தலன் இவ்வசனத்தில் கர்த்தருடைய அர்ப்பணிக்கப்பட்ட ஜனங்கள் மத்தியில் சிலர் அவிசுவாசிகளுடன் அந்நிய நுகத்தில் பிணைக்கப்பட்டிருக்கும் காரியத்தினை - அதாவது சத்தியம் பெற்றுக்கொண்டு, சத்திய ஆவியின் வெளிச்சமூட்டும் செல்வாக்கின்கீழும், வசனம் வாயிலாய்ப் பரத்திலிருந்து வரும் ஆலோசனைக்கீழும் வருவதற்கு முன்னதாக அவிசுவாசிகளுடன் திருமணம்பண்ணிக் காணப்படும் கர்த்தருடைய ஜனங்களின் காரியத்தினைக்குறித்துப் பேசிக்கொண்டிருக்கின்றார்.

(விசுவாசியான மற்றும் அவிசுவாசியான) கலப்புப் பெற்றோருக்குப் பிறக்கும் பிள்ளைகளின் பரிசுத்தம்குறித்த கேள்வியே விவாதிக்கப்பட்டது. அப்படியானவர்களின் பிள்ளைகள் அவிசுவாசியான ஒரு பெற்றோரின் காரணமாய்த் தேவனுக்கும், அவரது தயவுகளுக்கும் அந்நியர்களாக, புறம்பானவர்களாகக் கருதப்படுவார்களா அல்லது விசுவாசியான ஒரு பெற்றோரின் மூலமாகப்

பிள்ளையானது தேவனிடத்தில் தயவுபெற்றிருக்கும் உறவில் காணப்படுமா? அப்போஸ்தலர்களின் நாட்களில் காணப்பட்டதுபோலவே, இன்றும் இந்த முக்கியமான கேள்வியானது தெளிவாய்ப் புரியப்பட்டுக் காணப்படுகிறதில்லை; அப்போஸ்தலரின் நாட்களில் ஜனங்கள் யூதருடைய சட்டத்திலிருந்து ஆதாமின் சந்ததியார் யாவரும், அவரின் விழுகையிலும், அவர் மூலமாய் அனைவர்மீது வந்த ஆக்கினையிலும் பங்கடைந்தார்கள் என்பதையும், அனைவருமே சுபாவத்தின்படி "கோபாக்கினையின் பிள்ளைகளாக" காணப்படுகின்றனர் என்பதையும் அறிந்திருந்தார்கள் (எபேசியர் 2:3). இஸ்ரயேல் தேசத்தார் மற்றத் தேசங்கள் மத்தியிலிருந்து ஒரு நியாயப்பிரமாண உடன்படிக்கையின் வாயிலாகத் தூக்கியெடுக்கப்பட்டனர் என்பதையும், அந்தத் தேசத்தில் பிறந்த யாவரும் அந்த உடன்படிக்கையினுடைய நிபந்தனைகளுக்குக்கீழ்ப் பிறந்தவர்களாய் இருக்கின்றனர் என்பதையும், இதற்கு வெளியே பிறந்த யாவரும் தேவனுக்கும், அவரது ஏற்பாடுகளுக்கும் அந்நியர்களாகவும், புறம்பானவர்களாகவும் காணப்பட்டனர் என்பதையும் அப்போஸ்தலரின் நாட்களில் இருந்தவர்கள் அறிந்திருந்தனர். இப்பொழுதும் ஒரு புதிய உடன்படிக்கையானது அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது என்றும், இது நியாயப்பிரமாண உடன்படிக்கையின் இடத்தினை எடுத்துள்ளது என்றும் புரிந்துகொண்டனர்; மேலும் நியாயப்பிரமாண உடன்படிக்கையின்கீழ் வந்து, அதன் தயவுகளைப் பெற்றுக்கொள்ள வேண்டுமெனில், உடன்படிக்கையின்கீழ் வருவதற்குச் சில வழிவகைத் தேவைப்பட்டது போலவே, புதிய உடன்படிக்கையின் கிருபைகளுக்குக்கீழ் வருவதற்கும்கூடச் சில வழிமுறைகள் உண்டு என்று அவர்களால் உடனே புரிந்துகொள்ள முடிந்தது. விசுவாசியான கணவன் அல்லது விசுவாசியான மனைவி புதிய உடன்படிக்கையின்கீழ்க் காணப்படுகையில், அவிசுவாசியான கணவனுக்கு அல்லது அவிசுவாசியான மனைவிக்கு இவ்விஷயத்தில் எந்தப் பங்கும், பாகமோ இருப்பதில்லை என்பதையும் அவர்களால் காணமுடிந்தது. அப்போஸ்தலர் எந்தக் கேள்விக்குப் பதில் கொடுத்துக்கொண்டிருந்தாரோ அந்தக் கேள்வியைப் பின்வருமாறு தொகுத்திடலாம்: நம் குழந்தைகள் காரியமென்ன? பிள்ளைகள் பகுத்தறியும் வயதை அடைந்து அவர்களை நாம் கர்த்தருக்கு அறிமுகப்படுத்தி, அப்போது பிள்ளைகள் அவரை ஒருவேளை ஏற்றுக்கொண்டால், பின் அவரது பாதுகாப்பின்கீழ்க் காணப்படுவார்கள் என்று நாம் பிள்ளைகளைக்குறித்துக் கருதிடும் காலத்திற்கு முன்புவரையிலும் நாம் காத்துக்கொண்டிருக்க வேண்டுமா? அல்லது புதிய உடன்படிக்கையினுடைய நிபந்தனைகளின்கீழ்ப் பிள்ளைகளைக் கொண்டுவந்திடுவதற்கு வழி ஏதேனும் உள்ளதா? அப்போஸ்தலனின் பதில் என்னவெனில்: தேவன் தமக்குச் சொந்தமாயிருக்கும் எந்த ஒரு பெற்றோரின் பிள்ளையையும் தமக்குச் சொந்தமானதாகக் கருதுகின்றார்; இப்படியாகப் பிள்ளைகள் கருதப்படுகின்றபடியால், பிள்ளைகள் அவரால் பாவிகளாய் இராமல், மாறாக பாவம் இல்லாதவர்களாக, நீதிமானாக்கப்பட்டவர்களாக எண்ணப்படும் விதத்தில் கையாளப்படுகின்றனர். அநீதிமான் நிலை என்பது பாவநிலையாக இருப்பதுபோன்று, நீதிமானாக்கப்பட்ட நிலை என்பது பாவத்தை அகற்றின அல்லது பாவத்தைமூடின அல்லது பாவம் கடந்துபோன ஒரு நிலையாக இருக்கும்; ஆகையால் தூய்மையான/பரிசுத்தமான ஒரு நிலையாக இருக்கும் - எனினும் இது ஜீவபலிகளெனக் கர்த்தருக்கு முழுமையாய் அர்ப்பணம்பண்ணுவதன்மூலம் வருமென வேதவாக்கியங்களில் தெரிவிக்கப்பட்டுள்ளதான பரிசுத்தமாகுதலல்ல. தங்களுடைய பெற்றோர்களின் நீதிமானாக்கப்படுதலில் பங்கடையும் இத்தகைய பிள்ளைகள் "விசுவாச வீட்டாரில்" அடங்குபவர்களாகக் கருதப்படலாம், எனினும் இவர்கள் எந்தவிதத்திலும் தங்களையே ஜீவபலிகளென ஒப்புக்கொடுக்கும் பரிசுத்தவான் களாகிடுவதில்லை. ஆகையால் இவர்கள் எந்த விதத்திலும் "கிறிஸ்துவினுடைய சரீரத்தின் அங்கத்தினர்களென," ஆவிக்குரிய சுபாவத்திற்குப் புத்திரசுவிகாரத்தின் ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்டவர்களெனக் கருதப்படமுடியாது.

விசுவாசியான கணவன் அல்லது விசுவாசியான மனைவி, அவிசுவாசியான கணவன் அல்லது மனைவியைப் பரிசுத்தமாக்குகிற காரியத்திற்கு வரலாம்: குழந்தையானது பாதிக் கர்த்தருடையதாகவும், பாதிக் கோபாக்கினையின் பிள்ளையாகவும் காணப்படாமல், மாறாக முழுமையாகக் கர்த்தருடையதாகவும், சிசுப்பருவம் முதற்கொண்டு பிள்ளையானது விசுவாசியான பெற்றோருக்கு இருக்கும் அதே அளவில் உள்ள அவரது பாதுகாப்பு மற்றும் பராமரிப்பின்கீழ்க் காணப்படுவதாகவும் கருதப்படத்தக்கதாக வேண்டி, இனப்பெருக்கத்தின் வல்லமைகள் செயல்படும் விஷயத்தில், கர்த்தருடைய அர்ப்பணிக்கப்பட்ட பிள்ளைமீதான அவரது கிருபையானது . . . ஜீவித துணைமீதும் கடந்துவருகின்றது.

---

R2558 [தெரிந்தெடுக்கப்பட்ட பத்திகள்]

# இயேசுவானவர் ஞானத்திலும், வளர்த்தியிலும் விருத்தியடைந்தார்

## லூக்கா 2:41-52

மரியாளும், யோசேப்பும், தேவபக்தி உள்ள ஜனங்கள் என்பதை நமது பாடத்தின் ஆதார வசனப்பகுதியின் முதல் வசனம் எடுத்துக்காட்டுகின்றது; அதாவது "அவருடைய தாய் தகப்பன்மார் வருஷந்தோறும் பஸ்கா பண்டிகையில் எருசலேமுக்குப் போவார்கள்" என்பதாகும் (வசனம்-41). பஸ்காவை இவ்விதமாக அனுசரிக்கும் - நியாயப்பிரமாணமானது, மிகவும் பக்தியுள்ள யூதர்களாலேயே தவறாமல் கடைபிடிக்கப்பட்டது. சிலர் கூறுவதுபோன்று மரியாள் பாவம் இல்லாதவள் என்றும், அற்புதவிதமாய்க் கருவுற்றாள் என்றும் நாம் எண்ணக் கூடாது. மாம்சத்தில் இயேசுவின் தாயாக, மரியாள் தெரிந்துகொள்ளப்பட்டு, எல்லா ஸ்திரீகளுக்கும் மேலாக கர்த்தர், மரியாளைக் கனப்படுத்தின விஷயமே, மரியாளின் உயர்ந்த குணலட்சணங்களையும், இருதயத்தில் கொண்டிருந்த பரிசுத்தத்திற்கும் ஆதாரமாகின்றது. உயர்ந்த குணலட்சணங்கள் இல்லாத எவரையும் கர்த்தர் விசேஷமாகக் கனப்படுத்தி, ஆசீர்வதித்து, பயன்படுத்துவார் என்றும் நாம் எண்ணிவிடக்கூடாது.

யூதர்களுடைய நியாயப்பிரமாணத்தில் குறிப்பிடப்படவில்லையெனினும், யூதர்களுடைய கலாச்சாரத்தின்படி, பன்னிரண்டு வயதை அடையும் ஒவ்வொரு சிறுவனும், "நியாயப்பிரமாணத்தின் குமாரன்" என்று கருதப்படுகின்றான். மேலும், ஒரு குறிப்பிட்ட அளவிற்கு அவன் பிரமாணத்திற்குக் கீழ்ப்படிய வேண்டியவானகவும் இருக்கின்றான். நம்முடைய பாடத்தின் சம்பவத்தில், இயேசு பன்னிரண்டு வயதை அடைந்தவராகக் காணப்படுகின்றார். இளமைப் பருவத்தில் மத விஷயங்களில் கவனம் செலுத்துவதற்கு, குழந்தை பருவத்திலேயே பயிற்சி அளிக்கப்பட வேண்டும் என்று இங்கு அனைத்துத் தேவபக்தியுள்ள பெற்றோர்களுக்கும் படிப்பினை உள்ளது. ஆரம்பக்கட்ட படிப்புகளில் தேர்ச்சிப் பெற்றுப் பன்னிரண்டு வயதை அடையும் பிள்ளைகள், உயர்க்கல்வி கற்க ஆயத்தமாயிருக்கின்றார்கள்; ஆனால், மேலான ஆவிக்குரிய மதரீதியான பாடங்களைக் கற்றுக்கொள்ள ஆயத்தமாக இல்லை என்று சில பெற்றோர்கள் கருதுகின்றனர்; இது மிகவும் தவறாகும். இந்த வயதில் குழந்தைகள் உயர்க்கல்விக்கு ஆயத்தமாக இருப்பதற்கான காரணம், அவர்கள் ஆரம்பக்கட்ட கல்வியின் விஷயத்தில் நன்கு போதிக்கப்பட்டிருப்பதினாலேயே ஆகும்; மேலும், குழந்தைகள் மத விஷயங்களில் உயர்தரமான படிப்பினைகளைக் கற்றுக்கொள்ள இவ்வயதில் ஆயத்தமாக இல்லையெனில், இதற்குக் காரணம் அவர்கள் ஆரம்பக்கட்ட ஆவிக்குரிய மத விஷயங்களினால் போதிக்கப்படாததேயாகும்; அதாவது குழந்தைகளுக்குத் தேவனால் நியமிக்கப்பட்ட போதகர்களாகிய பெற்றோர்கள் ஆரம்பக்கட்ட பயிற்சிக்

கொடுக்கத் தவறினதேயாகும். எந்தக் கிறிஸ்துவ பெற்றோரும் ஒழுக்க ரீதியிலும், மத ரீதியிலும் தங்களுடைய பிள்ளைகளைப் பயிற்றுவிக்கும் பொறுப்பை நிராகரிக்கக்கூடாது.

---

R2766 [தெரிந்தெடுக்கப்பட்ட பத்திகள்]

## சுவாரசியமான கேள்விகளுக்குப் பதிலளிக்கப்பட்டது

கேள்வி: -- பிள்ளைகள் பரம அழைப்பிற்குப் பாத்திரவான்களாயிராதப்படியால், அவர்களுக்கு விசேஷித்த மத அறிவுரைகள் ஏதும் கொடுக்கப்படாமல், பெயர்ச்சபை ஓய்வுநாள் பள்ளிக்கூடங்கள் முதலானவைகளுக்குள் போகத்தக்கதாக அவர்கள் விட்டுவிடப்பட வேண்டுமா?

பதில்: -- விசுவாசிகள் மாத்திரமே கிறிஸ்துவுடன் உடன் சுதந்தரத்துவம் அடைவதற்கான பரம அழைப்பிற்கும், அவரோடுகூடப் பாடுபடுவதற்கும் இணங்கி வருபவர்களாய் இருப்பார்கள். குழந்தைப் பருவத்தினுடைய கபடற்ற தன்மையானது வேதவாக்கியங்களில் அருமையான அடையாளமாக முன்வைக்கப்பட்டுள்ளது; மேலும் அது ஆவிக்குரிய காரியங்களில் கர்த்தருடைய ஜனங்கள் அனைவராலும் பின்பற்றப்பட வேண்டும் - கர்த்தருடைய ஜனங்கள் துர்க்குணத்தைப் பொறுத்த விஷயத்தில் குழந்தைகளாகக் காணப்பட வேண்டும்; இவர்கள் தங்கள் விசுவாசத்திலும், அன்பிலும் எளிமையானவர்களாகக் காணப்பட வேண்டும்; போலியானவர்களாக, வஞ்சகமானவர்களாக, சதி ஆலோசனைப்பண்ணுபவர்களாகக் காணப்படக்கூடாது. இப்படியான விதத்திலேயே நாம் அனைவரும் சிறுபிள்ளைகளாகிட வேண்டும், இல்லையேல் நம்மால் பரலோக இராஜ்யத்திற்குப் பிரவேசிக்கமுடியாது என்று கர்த்தர் நமக்கு உறுதிப்படுத்தியுள்ளார். ஆனால் இவ்விஷயங்களில் சிறுபிள்ளைகள் போன்று இருப்பதும், சிறுபிள்ளையாக உண்மையில் காணப்படுவதும், இரண்டுமே வெவ்வேறு காரியங்களாகும். பாலஸ்தீனியாவிலுள்ள சிறுபிள்ளைகள் யாரையும் தம்முடைய சீஷர்களாகக் கர்த்தர் ஏற்றுக்கொள்ளவும் இல்லை, பிற்காலங்களிலும் குழந்தைகள் தம்முடைய சீஷர்களாக இருக்கும்படிக்கு அவர் அழைக்கவுமில்லை.

கர்த்தரில் அறிவு பூர்வமான ஒரு விசுவாசத்தைச் செயல்படுத்திடுவதற்கும், இந்த விசுவாசத்தினைச் செயல்படுத்தின பிற்பாடு, கர்த்தருடைய ஊழியத்திற்கென்று முழுமையான அர்ப்பணிப்பின் ஓர் உடன்படிக்கைக்குள் அறிந்துணர்ந்த நிலைமையில் பிரவேசிப்பதற்குமான வயதும், காலமும் பிள்ளையினுடைய தனித்தன்மை/மனநிலை/தனிப்பட்ட விருப்பாற்றல் சார்ந்து வேறுபடும். 14-ஆம் வயதிலேயே விசுவாசிப்பதற்கும், அர்ப்பணம்பண்ணுவதற்கும் மற்றும் இரண்டையுமே செய்யமுடிகிறவர்களாகவும் காணப்பட்ட சிலரை நாங்கள் அறிந்திருக்கின்றோம்; இத்தகையவர்களிடத்தில் விசுவாசத்திற்கான சான்றுகளையும், அர்ப்பணிப்புக்குறித்த உணர்ந்துகொள்ளுதலுக்கான சான்றுகளையுமே நாம் எதிர்ப்பார்த்திட வேண்டும்.

நம்முடைய குழந்தைகள் புரிந்துகொள்ள முடியாதளவுக்குச் சிறுபிள்ளைகளாக இருந்தாலும்கூட, அவர்கள் விஷயத்தில் நமக்கு ஒரு கடமை இருக்கின்றது. அவர்கள் நம்முடைய பிள்ளைகளாகவும், நம் பராமரிப்பின்கீழ்க் காணப்படுபவர்களாகவும் இருக்கின்றனர்; மேலும் சபை பிரிவுணர்வுகளானது நமக்கு எத்தனை தீமைகளைச் செய்திருக்கின்றன என்பதை நாமே அறிந்திருக்க, நம் பிள்ளைகளின் இளம் பாதங்களை எதிராளியானவனின் கண்ணிக்குள் நாமே வேண்டுமென்றே வழிநடத்துவதும், அவர்கள் சபை பிரிவுணர்ச்சிக்குள் சிக்கிக்கொள்ள நாமே உதவுவதும், அவர்களுக்கு எதிராகவும், சத்தியத்திற்கு

எதிராகவும் நாம் செய்யும் குற்றமாயிருக்கும். தன் பிள்ளைகளுக்கான பூமிக்குரிய தேவைகளின் விஷயத்தில் மாத்திரமில்லாமல், அதேசமயம் அவர்களது மனம் மற்றும் ஒழுக்கம் சார்ந்த பயிற்சியின் விஷயத்திலும் சமமான அளவில், தங்கள் பிள்ளைகளுக்காய் முக்கியமான பொறுப்புகளைத் தான் பெற்றிருப்பதாக ஒவ்வொரு பெற்றோரும் அடையாளம் கண்டுகொள்ள வேண்டும்; மேலும் தேவனால் நியமிக்கப்பட்டுள்ள இந்தப் பொறுப்பினைச் செய்வதில் மிகவும் உண்மையோடு காணப்படும் பெற்றோர்களே, ஓட்டப்பந்தயத்தில் மிகுந்த வெற்றிகரமாய் ஓடுகிறவர்களாய் நிச்சயமாகக் காணப்படுவார்கள்; ஏனெனில் தெய்வீகத் திட்டத்தினைப் பிள்ளைக்குத் தெளிவுப்படுத்த வேண்டி ஏறெடுக்கப்படும் ஒவ்வொரு பிரயாசமும் பெற்றோரின் மனதிற்குத் தெளிவையும், ஆற்றலையும் கொண்டுவருகின்றது என்றும், கர்த்தருடைய ஆவியை, பரிசுத்தத்தின் ஆவியை, சத்தியத்தின் ஆவியைக்குறித்துக் கருத்தாய்ப் போதிப்பதான ஒவ்வொரு பிரயாசமும், பிள்ளையினுடைய இருதயத்தின்மீது மாத்திரமில்லாமல், பெற்றோருடைய இருதயத்தின்மீதும் ஓர் ஆசீர்வாதத்தினை நிச்சயமாய்க்கொண்டுவரும் என்றும் இப்பெற்றோர்கள் கண்டுகொள்வார்கள். வருஷங்கள் செல்லச்செல்ல உண்மையுள்ள பெற்றோர்கள் சந்தோஷம், சமாதானம், ஆறுதலாகிய பலன்களைத் தங்கள் பிள்ளைகள் வாயிலாக அடைவார்கள்; ஆனால் தங்கள் பிள்ளைகளை அலட்சியம்பண்ணின பெற்றோர்களோ அல்லது பிள்ளைகளை ஆவிக்குரிய காரியங்களில் தவறாய் வழிநடத்தக் கூடியவர்களிடத்தில் பிள்ளைகளை ஒப்படைத்த பெற்றோர்களோ, தாங்கள் விதைத்தவைகளுக்கேற்ப, நலிந்த அல்லது கெட்ட பலன்களை இறுதியில் நிச்சயமாய் அறுப்பார்கள்.

---

R2902 [தெரிந்தெடுக்கப்பட்ட பத்திகள்]

## அழகான குழந்தையாய் இருந்தார்
### யாத்திராகமம் 2:1-10

"பிள்ளையானவன் நடக்க வேண்டிய வழியிலே அவனை நடத்து; அவன் முதிர்வயதிலும் அதை விடாதிருப்பான்." (நீதிமொழிகள் 22:6)

எல்லாக் குழந்தைகளும் மோசே போன்று பிறப்பதில்லை மற்றும் எந்த அளவிலான பயிற்சியும்கூட எவரையும் அவருக்குச் சமமாக்குவதில்லை. ஆதார வசனத்திற்கு ஆதாரமாகவே நாம் பேசுவோமே ஒழிய, அதற்கு எதிராக அல்ல; எனினும் மகத்துவமான குணலட்சணத்திற்கான அஸ்திபாரமானது பிறப்பிற்கு முன்னதாகவே போடப்பட வேண்டும். அநேகரால் செய்யப்படும் மாபெரும் தவறு ஒன்றுள்ளது - மேலும் அது தவறான இறையியல் கண்ணோட்டத்தினால் ஏற்பட்டதாகும் - அது என்னவெனில் ஒவ்வொரு குழந்தையும் தேவனுடைய விசேஷித்த சிருஷ்டியாகும்; ஆகையால் குழந்தையானது அறிவிலியாய் இருக்குமெனில் அதற்குக் காரணம் தேவனே ஆவார்; ஒருவேளை குழந்தையானது நன்கு புத்திகூர்மையானதாகவும், மனதளவிலும் சரீரளவிலும் சீரானதாகவும் இருக்குமானால், இதற்கும் தேவனே காரணமாவார் என்பதேயாகும். இதற்கு நேர் எதிர்மாறாக வேதவாக்கியங்களின் கூற்றுக் காணப்படுகின்றது . . . அதாவது தேவனுடைய கிரியை/வேலைப்பாடு பூரணமாயிருக்கின்றது என்றும், ஆதாம் அவரது கரத்தின் கிரியையாய் இருந்தார் என்றும், நம் இனத்தின் ஒவ்வொரு அங்கத்தினர்களையும் ஏறக்குறைய பாழாக்கிட்ட அபூரணங்களுக்கும், களங்கங்களுக்கும்/ குறைபாடுகளுக்கும் தேவன் பொறுப்பாளியல்ல என்றும் வேதவாக்கியங்கள் தெரிவிக்கின்றன.

ஒருவிதத்தில் பார்க்கையில், நாம் பெற்றிருப்பவைகள் அனைத்தும், அபூரணமாய்க் காணப்பட்டாலும்கூட, அவை தேவனுடையதேயாகும்; ஏனெனில் அவரே ஜீவன் அனைத்திற்கும் ஆதாரமாயும், மறைமுகமாய் நம் சிருஷ்டிகராகவும் காணப்படுகின்றார் (யாத்திராகமம் 4:11).

நம்முடைய குறைபாடுகள் - பாவத்தின் விளைவுகள் என்றும், அதன் மரணத்தண்டனையினுடைய இயல்பான செயல்பாடுகள், மரபியல் சட்டத்தின்கீழ் (தகப்பன் தன் தன்மைகளைப் பிள்ளைகளுக்குக் கடத்தும் சட்டத்தின்கீழ்) நம் இனத்தின்மீது செயல்பட்டுவருகின்றது என்றும் வேதவாக்கியங்கள் நமக்கு விவரிக்கின்றன. நாம் அனைவரும் பாவத்தில் பிறந்தோம்; துர்க்குணத்தில் உருவானோம்; நம் தாய் நம்மைப் பாவத்தில் கர்ப்பந்தரித்தாள் (சங்கீதம் 51:5). ஆனால் நாம் அனைவரும் ஒரே அளவிலுள்ள சீரழிந்த நிலைமையில் பிறந்திடவில்லை. விழுந்துபோன பெற்றோர்களினால் பூரணமான குழந்தைகளைப் பிறப்பிக்க முடியாது என்றாலும், சிலசமயங்களில் தங்களைக் காட்டிலும் மேலான நிலையிலுள்ள பிள்ளைகளைப் பிறப்பிக்க முடியும் மற்றும் பிறப்பிக்கவும் செய்திருக்கின்றனர். இது பெற்றோர்களின் மனநிலையினை, அதிலும் விசேஷமாகக் கர்ப்பக்காலத்தில் தாயினுடைய மனநிலையினைத் தாக்கத்திற்குள்ளாக்கும் இயற்கை விதியினால் நடைபெறுகின்றது (தாயானவள் அவளது கணவனிடமிருந்துவரும் சாதகமான அல்லது பாதகமான மனம்சார்ந்த மற்றும் நன்னெறிச் சார்ந்த செல்வாக்குகளினால் எப்போதும் தாக்கத்திற்குள்ளாகுவாள்).

இந்தத் திவ்விய சட்டத்தின்படி பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளிடத்தில் காணப்படும் முக்கிய குணலட்சணத்தின் இயல்புகளுக்கு ஓரளவு பொறுப்பாளிகளாகக் காணப்படுகின்றனர். இக்காரியமானது பெற்றோர்களினால் மிகவும் முழுமையாகப் புரிந்துகொள்ளப்படுமானால், மிகவும் முழுமையாக உணர்ந்துகொள்ளப்படுமானால் பிறக்கும் பிள்ளைகளின் இயற்கையான இயல்புகளில் பெரும்முன்னேற்றம் என்பதே விளைவாக இருக்கும். உயர்ந்த எண்ணங்கள், உணர்வுகள் மற்றும் இலட்சியங்களை மனைவி கொண்டிருப்பதற்குச் சாதகமான சூழ்நிலைகளை ஏற்படுத்திடுவதற்குக் கணவன் முயற்சிப்பார்; மனைவி ஒத்துழைக்கிறவளாகவும், சிறந்த மற்றும் நல்ல மற்றும் தூய்மையான மற்றும் பெருந்தன்மையான காரியங்கள்மீது சாந்தத்தோடு தன் நாட்டங்களை வைத்திருப்பவளாக இருப்பாள்; இப்படியாக இருக்கும்பட்சத்தில் பிறக்கும் குழந்தையானது கிட்டத்தட்ட மோசேயைப்போன்று இருக்கும், அதாவது உயர்ப்பண்புகளையும், தாழ்மையையும் சேர்த்துப் பெற்றிருக்கும்.

இதில் எதுவும் இந்த "அறுவடையின் காலத்தில்" வாழ்ந்துகொண்டிருக்கும் கர்த்தருடைய அர்ப்பணிக்கப்பட்ட ஜனங்கள் குழந்தைகளைப் பெற்றெடுப்பதற்கு ஊக்கப்படுத்தும் வண்ணமாய்ச் சொல்லப்படுகிறதில்லை. மாம்சத்தில் ஜெநிப்பிக்கப்பட்டதும், பிறந்ததும் மாம்சமாயிருக்கும் மற்றும் ஆவியில் ஜெநிப்பிக்கப்பட்டதும், பிறந்ததும் ஆவிக்குரியதாயிருக்கும் (யோவான் 3:6). ஒருவேளை பரிபூரண பிள்ளைகளைப் பெற்றெடுப்பது என்பது சாத்தியமான காரியமாய் இருக்க வாய்ப்புக் காணப்பட்டாலும்கூட, இதைக் காட்டிலும் இன்னும் உயர்வான மற்றும் பிரம்மாண்டமான வேலையினைக் கிறிஸ்து இயேசுவுக்குள்ளான "புதுச்சிருஷ்டிகள்" பெற்றிருக்கின்றனர். "புதுச்சிருஷ்டிகளை," தேவனுடைய ஆவிக்குரிய குமாரர்களை வளர்த்திடுவதில் தேவனோடு ஒத்துழைத்திடும் சிலாக்கியத்தினை இவர்கள் பெற்றிருக்கின்றனர்; மேலும் நமது கர்த்தர் மற்றும் அப்போஸ்தலர்கள் போன்று இவர்களும் சிலாக்கியங்களிலேயே உயர்வான இந்தச் சிலாக்கியத்தினையே விரும்புகின்றனர். "விவாகம் யாவருக்குள்ளும் கனம்வாய்ந்தது" எனும் அப்போஸ்தலனின் வார்த்தைகளுக்கு எதிராக நாம் ஒருகணம்கூட வாதாடுகிறதில்லை; மாறாக அவரோடுகூட நாங்களும்: "விவாகம்பண்ணுகிறவன் நல்லதைச் செய்கிறான்; விவாகம்பண்ணாதிருக்கிறவனும் அதைவிட நல்லதையே செய்கிறான்" என்றே

வலியுறுத்துகின்றோம் (1 கொரிந்தியர் 7:38; எபிரெயர் 13:4). ஆகையால் சுபாவத்தின்படியான சிறந்த பிள்ளையைப் பிறப்பிக்கிறவன் நல்லதைச் செய்கின்றான்; ஆனாலும் ஆவிக்குரிய குமாரர்களுடைய ஜெநிப்பித்தலுக்காய்த் தேவனோடு ஒத்துழைக்கிறவன் அதைவிட நல்லதைச் செய்கிறவனாய் இருப்பான் என்று நாங்கள் வலியுறுத்துகின்றோம்.

மோசேயின் பிறப்பு மற்றும் குழந்தைப் பருவம் குறித்த தகவல்கள் மிகவும் சொற்பமானவையாய் இருக்கின்றது. இவரது தகப்பனின் பெயர் அம்ராம் ஆகும்; இதன் அர்த்தம் "உயர்ந்த ஜனம்" ஆகும். இவரது தாயாரின் பெயர் யோகெபெத்தாகும்; இதன் அர்த்தம் "யேகோவா மகிமையானவர்" ஆகும். இவர்கள் எபிரெயர்களாகவும், எகிப்தியர்களின் கீழ் அடிமைகளாகவும் இருப்பினும், இவர்களது பெயர்களானது, லேவி கோத்திரத்தின் இக்குடும்பத்தார் ஒழுக்கம்சார்ந்த, மதம்சார்ந்த உணர்வுகளை உடையவர்களாக - நற்குணமுள்ள ஜனங்களாகவே இருந்துள்ளதைச் சுட்டிக்காண்பிக்கின்றது. இது இவர்கள் விசுவாசத்தினால் செயல்பட்டார்கள் எனும் அப்போஸ்தலனின் அறிக்கையிலும் சுட்டிக்காண்பிக்கப்படுகின்றது (எபிரெயர் 11:23).

எபிரெயர்களின் தொகை வேகமாகப் பெருகிவரும் காரியமானது, அவர்களை அதிகாரமுள்ள சந்ததியாராக்கிடும் என்றும், அவர்கள் நம்பிவந்த பாரம்பரியத்தின்படியோ அல்லது அவர்கள் எகிப்திலிருந்து புறப்படும் காலம் குறித்தோ, தேவனுடைய வல்லமையின் குறுக்கிடுதலினால் இறுதியில் வரும் விடுதலைக்குறித்தத் தேவனுடைய வாக்குத்தத்தம் குறித்தோ அப்பாரம்பரியமானது அவர்களுக்குப் போதித்தப்படி, அவர்கள் எகிப்திலிருந்து வெளியேறிடுவதற்கு வழிநடத்திடும் என்றும் புதிய சாம்ராஜ்யத்தினுடைய எகிப்திய அதிகாரிகள் பயந்தனர். எபிரெய ஜனங்கள் தங்கள் கையைவிட்டுப்போக எகிப்தியர்கள் விரும்பிடவில்லை; ஏனெனில் அவர்கள் வேலை செய்யத் திறமிக்கவர்களாக இருந்தனர் மற்றும் வணிகத்தின் விஷயத்தில் எகிப்தியர்களுக்கு இலாபம் ஈட்டித்தருபவர்களாய் இருந்தனர். எபிரெயர்களை வெளியேற்றிடுவதற்கோ அல்லது அவர்களைக் கொன்றுபோடுவதற்கோ எகிப்தியர்கள் விரும்பிடவில்லை. எபிரெயர்கள் எண்ணிக்கையில் வேகமாய்ப் பெருகிடக்கூடாது என்று மாத்திரமே எகிப்தியர்கள் விரும்பினார்கள். இந்த அசாதாரணமான பெருக்கத்தினைத் தடைப்பண்ணிடுவதற்குப் பல்வேறு முயற்சிகள் எடுக்கப்பட்டன; எதுவுமே பலன் தரவில்லை; இறுதியாக அடக்குமுறை முயற்சியாக... எபிரெயர்களின் இனப்பெருக்கத்தினைச் சிறிதுகாலம் தடைப்பண்ணத்தக்கதாகவும், பிற்பாடு பிள்ளைகள் பிறப்பதற்கு அனுமதிக்க வேண்டும் என்பதற்காகவும் உள்ள நோக்கத்துடன் எபிரெய ஆண்பிள்ளைகள் அனைவரும் கொல்லப்படுவதற்கான கட்டளைப் பிறப்பிக்கப்பட்டது.

இந்த ஒரு காலப்பகுதியில்தான் மோசே பிறந்தார்; இம்மாதிரியான கட்டுப்பாடுகளானது இவரது மூத்த சகோதரனாகிய ஆரோன் பிறந்த காலத்தில் இருக்கவில்லை. மோசே, குடும்பத்தில் மூன்றாவது நபர் ஆவார்; இவரது சகோதரியும், இரண்டாவது பிள்ளையுமான மிரியம்தான், நம்முடைய பாடத்தில் இடம்பெறும் சிறுபெண் ஆவாள். குழந்தையாகக் காணப்பட்ட மோசே, இராஜாவின் கட்டளைக்கு மீறின நிலையிலும், தாய் சேயுடைய ஜீவன் பணயம் வைக்கப்பட்ட நிலையிலும், அவரது தாயாரினால் மூன்று மாதக்காலங்கள் ஒளித்து வைக்கப்பட்டார்; இப்படி அவள் செய்வதற்குக் காரணம், அவள் அக்குழந்தையை அழகுள்ள குழந்தையாக - அவர் உண்மையில் எதிர்க்காலத்தில் மாமனிதர் ஆனதுபோலவே, மாமனிதர் ஆவார் என்று நம்பிக்கை அளித்த குழந்தையாக இருந்தார் என்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இப்பெற்றோர்கள் விசுவாசம்கொண்டிருந்தனர் என்றும், அந்த விசுவாசம் குழந்தையினிடத்திலோ அல்லது தங்களிடத்திலோ அல்லது இராஜாவினிடத்திலோ இல்லை என்றும், தேவனிடத்தில் காணப்பட்ட விசுவாசமாக, அதாவது அக்குழந்தையைத் தேவன் ஆசீர்வதிப்பார்,

பாதுகாப்பார் என்ற விசுவாசமாக இருந்தது என்றும் அப்போஸ்தலன் தெரிவித்துள்ளார்; மேலும் இந்த விசுவாசத்தோடுகூட, கர்த்தரிடத்தில் ஜெபமும் ஏறெடுக்கப்பட்டிருந்திருக்கும் என்பதில் நமக்கு ஐயமில்லை. குழந்தைப் பிறப்பதற்கு முன்பாகக்கூட இத்தகைய விநோதமான சூழ்நிலைமைகளின்கீழ், தேவபக்தியுள்ள, உண்மையுள்ள அந்தப் பெற்றோர்கள் குழந்தையைக் கர்த்தருக்கும், அவருக்காகப் பயிற்றுவிக்கப்படுவதற்கும், தங்களால் முடிந்தமட்டும் போதிக்கப்படுவதற்கும், கர்த்தர் தங்கள் குமாரனை எந்த விதத்தில் பயன்படுத்த பிரியப்படுகிறாரோ அப்படியாகக் கர்த்தருடைய ஊழியக்காரனாய்க் குமாரன் காணப்படுவதற்கும் வேண்டி அப்பிள்ளையை அர்ப்பணித்திருந்திருப்பார்கள் என்பதிலும் நமக்கு ஐயமில்லை. இம்மாதிரியான சில நம்பிக்கைகளும், ஜெபங்களும் இல்லாதிருந்தால், அப்போஸ்தலனால் குறிப்பிடப்படும் விசுவாசமானது பொருத்தமற்றதாயிருக்கும். நம்முடைய விஷயங்களிலும், நமது பிள்ளைகள் விஷயங்களிலும், நம்முடன் சம்பந்தப்பட்டவர்கள் அனைவரின் விஷயங்களிலும் - பொதுவாகவே விசுவாசமும், ஜெபங்களும், அர்ப்பணிப்பும் சேர்ந்தே செயல்படுகின்றதாயிருக்கும்.

பிள்ளையைப் பாதுகாக்கிற விஷயத்தில் இப்பெற்றோரினால் செய்யப்பட்ட காரியமானது, மிகவும் விவேகமானதாய் இருக்கின்றது; இது ஒன்றில் திவ்விய வழிநடத்துதலையோ அல்லது மனுஷ சுபாவத்தினைப்பற்றின நல்லப் புரிதலுடன்கூடத் திட்டமிடும் ஆற்றலுள்ள மனதையோ அல்லது இவை அனைத்தையுமே சுட்டிக்காட்டுகின்றதாய் இருக்கின்றது. எகிப்தின் இளவரசி (அநேகமாய் மத சம்பிரதாயமாக) குளிக்க வருகையில் குழந்தையைக் கண்டால், அவள் இருதயம் தொடப்படும் என்றும், அப்படியாகக் காணப்படும் எந்தக் குழந்தையின்மீதும், அதுவும் மிகவும் "அழகுள்ள" ஆண் குழந்தையாக விசேஷமாகக் காணப்படுகையில், அதன்மீது இரக்கம்கொள்வாள் என்றும் மோசேயின் பெற்றோர்கள் எண்ணம்கொண்டதிலிருந்து, மனித சுபாவத்தினை அவர்கள் வாசித்தறிய முடிந்தவர்களாய் இருந்தார்கள் என்பது தெரிகின்றது. குழந்தைக் கூடையில் கண்டெடுக்கப்படும் தருணத்தில் மோசேயின் சகோதரியாகிய மிரியாம் அங்குக் காணப்பட்டதும், பிள்ளைக்குப் பாலூட்ட எபிரெய ஸ்திரீயை அழைக்கும்படிக்கு அவள் யோசனைக் கொடுத்தும், பின்னர்க் குழந்தையின் தாயையே அவள் கூட்டிக்கொண்டு வருவதும்கூடத் திட்டமிட்ட ஏற்பாடேயாகும். சந்தேகத்திற்கிடமின்றி கர்த்தருடைய கரமும், ஞானமும் இக்காரியங்கள் அனைத்திற்கும் பின்பாகக் காணப்பட்டது; ஆனாலும் இச்சம்பவமானது, தேவன் தம்முடைய நோக்கங்களை நிறைவேற்றிடும் விஷயத்தில் மனித பாத்திரங்களைப் பயன்படுத்துவதில் பிரியம்கொண்டிருந்தார் என்னும் பாடத்தையும் நமக்குக் கற்பிக்கின்றதாய் இருக்கின்றது. அப்பெற்றோர்கள் கர்த்தரில் விசுவாசம்கொண்டிருந்த அதேவேளையில், தங்கள் குழந்தையைப் பாதுகாக்கிற விஷயத்தில் தங்கள் அறிவையும் செயல்படுத்தினது சரியே. இப்படியே நம் விஷயத்திலுமாகும்; கிரியைச் செய்திடுவதற்கு மறுத்திடும் சோம்பல் வகையான விசுவாசமாய் நமது விசுவாசம் காணப்படக்கூடாது; சோம்பல் வகையான விசுவாசம் காணப்படுகையில், கர்த்தர் பயன்படுத்த சித்தம்கொண்டுள்ள வழியில் நாம் பயன்படுத்தப்பட முடியாதவர்களாகிடுவோம்; மாறாக நம்முடைய விசுவாசம் கிரியைகளினால் வெளிப்படுத்தப்பட வேண்டும். இத்தகைய விசுவாசத்திற்கே, ஆசீர்வாதம் அருளிட கர்த்தர் பிரியம்கொள்வார்.

இளவரசியானவள், ராமசேஸ் II-இன் மனைவியும், முந்தின இராஜாவின் மகளுமான நெபிராரி (Neferari) ஆவார்; எகிப்திய இராஜாக்கள் அனைவரும் பார்வோன் என்று அழைக்கப்பட்டனர். இவள் குழந்தையைத் தனது குமாரனாகத் தத்தெடுத்தாள், ஆனாலும் கொஞ்சம் காலம் குழந்தையானது எபிரெய வீட்டில் பேணி வளர்க்கப்பட விரும்பினாள்; குழந்தை ஏழு அல்லது பன்னிரண்டு வயதை அடைவதுவரையிலும் இப்படியாகக் காணப்பட விரும்பினாள் என்று அனுமானிக்கப்படுகின்றது; பிற்பாடு பிள்ளையை இராஜ அரண்மனைக்குக் கொண்டுவந்து, எதிப்தியர்களின் சகல கல்விகளிலும்,

ஞானத்திலும் கற்பிக்கப்படப்பண்ணினாள். மோசேயினுடைய விஷயத்தில் பின்வரும் கவிஞனின் வார்த்தைகள் எவ்வளவு பொருத்தமாய்க் காணப்படுகின்றது; கவிஞனின் வார்த்தைகள் பின்வருமாறு:

"தேவன் தம் அற்புதங்களை நிகழ்த்திட
விசித்திரமான வழிகளில் செயல்படுகின்றாரே!"

எகிப்தின் அடிமைத்தனத்தினின்று வந்த இஸ்ரயேலின் வழிநடத்துனன், மாபெரும் மேசியாவிற்கு நிழலானவர், கல்வியறிவுள்ள மனிதனாக அல்லது கல்விமானாக இருக்க வேண்டும் என்பது எவ்வளவு ஏற்ற காரியமாயிருக்கின்றது; எனினும் மதத்தின் அடிப்படைக்கொள்கைகளை அவர் மனதில், குழந்தைப் பருவத்தில் முதலாவதாக நன்கு பதியவைத்திடுவது என்பது இன்னும் எவ்வளவு அவசியமானதாகக் காணப்படுகின்றது; மேலும் மோசேக்கான கல்வியின் இந்த இரண்டு அம்சங்களையும் கர்த்தர் எத்துணை ஆச்சரியமான விதத்தில் ஏற்பாடுபண்ணியிருக்கின்றார். முன்னமே விசுவாசத்தினை வெளிப்படுத்திட்டதான இந்தப் பெற்றோர்கள், தாங்கள் விசுவாசித்ததான ஆபிரகாமின் வாக்குத்தத்தங்களை, அதாவது ஆபிரகாமின் சந்ததியாரெனத் தாங்கள் இறுதியில் மாபெரியவர்களாய் இருப்பார்கள் மற்றும் பூமியின் குடிகள் அனைத்தையும் ஆசிர்வதிப்பதற்கான கர்த்தருடைய கால்வாய்களாகத் தங்கள் ஜனங்கள் பயன்படுத்தப்படுவார்கள் மற்றும் ஆபிரகாமிற்கு முன்னுரைக்கப்பட்டது போன்று எகிப்தின் அடிமைத்தனத்தினின்று தம்முடைய ஜனங்களைக் கர்த்தர் பெலத்த கையுடனும், வல்லமையுள்ள ஓங்கிய புயத்துடனும் வெளிக்கொண்டுவருவதற்கான காலம் சமீபித்துள்ளது என்றும் அச்சிறுவனுக்குப் போதித்திருப்பார்கள் என்பதிலும் நமக்கு ஐயமில்லை. மோசே இஸ்ரயேலர்களுடன் கொண்டிருந்த தன் உறவுமுறைக்குறித்து முழுமையாய்த் தெரியப்படுத்தப்பட்டிருந்தார் என்பதில் ஐயமில்லை; மேலும் வாக்குத்தத்தங்கள்மீதான விசுவாசம் மாத்திரமல்லாமல், தன் ஜனங்களுக்கான தேசப்பற்றின் உணர்வுகளும்கூட அவருக்குத் தாராளமாய்ப் போதிக்கப்பட்டது; ஏனெனில் இந்தப் பண்புகளானது அவரில் முழுமையாய்ப் பதியவைக்கப்பட்டு, நெஞ்சார நேசிக்கப்பட்டதாலேயே, அவைகள் அவரது ஜீவியம் முழுவதிலும் தலைச்சிறந்து விளங்கியது.

தங்கள் சொந்தப் பிள்ளைகள் விஷயத்தில் தங்கள் கரங்களில் வைக்கப்பட்டுள்ளதான சிலாக்கியங்கள் மற்றும் பொறுப்புகள்குறித்து வெகு சிலரே உணர்ந்துகொண்டதாகத் தெரிகின்றது. வளர்ந்துவரும் குடும்பத்தினைப் பெற்றிருக்கும் கிறிஸ்தவ தாயானவள், தன் சிறுபிள்ளைகளுக்கு நீதியிலும், கர்த்தருக்கான பயபக்தியிலும் அறிவுரைகள் புகட்டிடுவதற்குத் தன் தாலந்துகளைப் பயன்படுத்துவாளானால், தன் தாலந்துகள் அனைத்தையும் பயன்படுத்திடுவதற்கான பரந்த விரிந்த வாய்ப்புகளை நிச்சயமாய்ப் பெற்றிருப்பாள். பிள்ளைகளினால் மத சம்பந்தமான கொள்கைகளைப் புரிந்திடமுடியாது, ஆகையால் அவர்களுக்கு "திருவசனத்தின் பாலாகாரம்" கூட அல்லது திவ்விய பிரமாணத்தின் அடிப்படைப் பாடங்கள்கூடக் கொடுக்கப்படக்கூடாது என்ற தவறு அடிக்கடிச் செய்யப்படுகின்றதாய் இருக்கின்றது. இதற்கு நேர்மாறாக நாங்கள் நம்புவது என்னவெனில் . . . குழந்தைகள் குறிப்பிட்ட அளவு சீரழிவுடனும், தீமை மீதான விருப்பத்துடனும் பிறந்திருந்தாலும், எனினும் அவர்களது சிறுமனங்களானது பெரிதளவில் வெறுமையான பக்கங்களை உடையதாக இருக்கின்றது; இந்த வெறுமையான பக்கங்களில் நன்மைக்கேதுவான அல்லது தீமைக்கேதுவான கொள்கைகளானது ஆழமாய் நிச்சயமாய்ப் பதிய வைக்கப்படலாம். நீதி, இரக்கம், அன்பு மற்றும் பொறுமை ஆகியவைகளுக்கு நேராகக் குழந்தைகளினுடைய மனங்களானது வழிநடத்தப்படவில்லையெனில், இவைகள் தேவனால் எதிர்ப்பார்க்கப்படுகின்றது என்றும், இவைகள் அவர்களது புத்தியுள்ள ஆராதனையாய் இருக்கும் என்றும் கற்பிக்கப்படவில்லையெனில், பிள்ளைகள் ஜீவியத்தின் பல்வேறு சீரழிக்கும் செல்வாக்குகளுடன், அதாவது உலகம், மாம்சம், பிசாசு என்பவைகளுடன் தொடர்புக்குள் வருகையில் மேற்கூறப்பட்டவைகளுக்கு

நேர் எதிர்மாறானவைகளாய் இருப்பவைகள்குறித்துப் பிள்ளைகள் நிச்சயமாய்க் கற்பிக்கப்பட்டவர்களாகிடுவார்கள். எந்தப் பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகள் ஒவ்வொருவரையும் சிறு தோட்டங்களாகக் கருதுகின்றார்களோ மற்றும் எந்தப் பெற்றோர்கள் நீதியின், அன்பின், பொறுமையின், சாந்தத்தின், தயவின் மற்றும் ஆவியின் கனிகள் அனைத்தினுடைய விதைகளை அந்தச் சிறு தோட்டத்தில் உண்மையாய்த் தங்களால் முடிந்தளவிற்கு விதைக்கின்றார்களோ, அதிலும் விசேஷமாக ஒருவேளை பிள்ளையானது கர்த்தருக்குக் குழந்தைப் பருவம்முதல் அல்லது பிறப்பதற்கு முன்னதாகவே அர்ப்பணிக்கப்பட்டிருந்தால் - கர்த்தருடைய ஆசீர்வாதத்தின்கீழ் உண்டாகும் குணலட்சணத்தின் கிருபைகளில், ஐசுவரியமான பலனை நிச்சயமாய் அடைவார்கள்.

ஆனால் இந்த இயல்புகளையும், மனரீதியான மற்றும் ஒழுக்கரீதியான மலர்களையும் கொடுத்திடும் விதைகளை விதைத்திடுவதற்கு நேரம் ஒதுக்காதவர்கள் பூமிக்குரிய தோட்டத்தின் விஷயத்தில் இருப்பதுபோலவே முதிர்ச்சியான வயது அடையும்வரையிலும், மிக்க ஏற்ற காலங்கள் வருவதுவரையிலும் இருதயம் காலியாக இருக்காது என்பதைக் கண்டுகொள்வார்கள்; இன்னுமாகத் தீமையின் இயல்புகளாகிய கெடுதியான களைகள் வளர்ந்து, செழித்து, திரும்பத்திரும்ப விதைத்தலுக்குள்ளாகக் கடந்துசென்று அந்த ஒரு குமாரனுக்கு மாத்திரமல்லாமல் பெற்றோருக்கும், சமுதாயத்திற்கும் மனவேதனையை/தொந்தரவைக் கொடுக்கும் கசப்பான பலன்களைக் கொணர்ந்துவிடும். ஆகையால் ஒவ்வொரு பெற்றோரும் தன்னால் பிறப்பிக்கப்படும் எந்தப் பிள்ளையும், உதவிகரமான கர்ப்பக்கால செல்வாக்குகள்மூலம் நல்லப்பிள்ளையாக, நல்ல அனுகூலமுள்ள பிள்ளையாகவும் காணப்படத்தக்கதாகத் தன்னால் முடிந்தமட்டும் பார்த்துக்கொள்வானாக; மேலும் பெற்றோரெனத் தான் பொறுப்பினைக் கொண்டிருப்பதினால் தன் பராமரிப்பின்கீழ்க் காணப்படும் இந்தச் சிறு தோட்டங்களில், தான் நல்ல வேலையைச் செய்யத்தக்கதாகவும், தப்பறையின் களைகளை உடனுக்குடன் பிடுங்கிப் போடத்தக்கதாகவும், நல்லவிதைகள் தாராளமாய் விதைக்கப்படத்தக்கதாகவும் பார்த்துக்கொள்வானாக.

---

R2388 [தெரிந்தெடுக்கப்பட்ட பத்திகள்]

# அதை வெறுத்துவிடு, அதன் வழியாய்ப் போகாதே; அதைவிட்டு விலகிக் கடந்து போ

### நீதிமொழிகள் 4:10-19

"என் மகனே, பாவிகள் உனக்கு நயங்காட்டினாலும் நீ சம்மதியாதே." (நீதிமொழிகள் 1:10)

சாலொமோன் தன் சொந்தப் போதனைகளின்படி நன்கு கைக்கொண்டு அல்லது கைக்கொள்ளாமல் நடந்திட்டாலும்சரி, அந்தப் போதனைகளானது அன்றும், இன்றும் ஆரோக்கியமான ஞானமென அனைவராலும் ஒத்துக்கொள்ளப்படுகின்றது. சாலொமோனால் எழுதப்பட்டவைகளானது ஆவியின் ஏவுதலினால் வேதவாக்கியங்களில் இடம்பெறும் தீர்க்கத்தரிசனங்களுக்குச் சமமானவை என்று கருதப்படாவிட்டாலும், ஞானத்திற்கான சாலொமோனின் விண்ணப்பத்தைக் கர்த்தர் கேட்டருளி விண்ணப்பத்தை அருளினார் என்ற உண்மையும், நமது கர்த்தருடைய நாட்களில் இவரது எழுத்துக்களானது திருமறை நூல்களில் ஒரு பாகமாகக் கருதப்பட்டதும், புதிய ஏற்பாட்டின் எழுத்தாளர்களால் மறுக்கப்படாததும், இந்த எழுத்தாளர்களால் அவரது எழுத்துக்கள் மேற்கோள் இடப்பட்டிருப்பதுமான உண்மையும் - இந்த நீதிமொழிகளின் ஞானமானது பரத்திலிருந்துவரும் ஞானவகையாய் இருக்கின்றது என்று நமக்கு உறுதியளித்திட போதுமானவையாகும்.

நம்முடைய பாடத்தில் நாம் பார்க்கும் வேதப்பகுதியில் ஞானி தன்னை ஒரு குமாரனுக்கு நல் ஆலோசனைக்கொடுக்கும் தகப்பன் என அடையாளம் காட்டுகின்றார்; மேலும் தகப்பன்மார்கள் வாலிபர்களோடு அடிக்கடி சம்பாஷித்து, ஜீவியத்தில் கிடைக்கப்பெற்ற தங்கள் அனுபவங்களைக்குறித்துப் பகிர்ந்துகொள்வார்களானால், அது உலகத்திலுள்ள வாலிபர்கள் அனைவருக்கும் நலமாயிருக்கும். தகப்பன்மார்கள் தங்களால் உலகத்திற்குள் கொண்டுவரப்படுபவர்களின் விஷயத்தில், உணவு, உடை முதலான பூமிக்குரிய காரியங்கள் தொடர்பாகப் பொறுப்பு ஒன்றினைத் தாங்கள் பெற்றிருப்பதாக அடையாளம் கண்டுகொள்கின்றனர். ஆனாலும் தங்களுடைய பிள்ளைகளின் இருதயங்களையும், மனங்களையும், ஞானம், நீதி, நியாயம் மற்றும் சத்தியத்தின் பாதையில் வளர்ப்பது தொடர்புடைய விஷயத்தில் தகப்பன்மார்கள் மிக அதிகமான பொறுப்பையுடையவர்களாக இருக்கின்றார்கள் அல்லவா?

நம்முடைய நாட்களில் கிறிஸ்தவ ஜனங்கள் மத்தியிலுங்கூடப் பெருகிவரும் தீமைகளில் ஒன்று பெற்றோர்களின் ஒரு விதமான மனப்பான்மையாகக் காணப்படுகின்றது; குறிப்பாகத் தாங்கள் தகப்பன்மார்கள் ஆகிட்டபோது தாங்கள் எடுத்துக்கொண்ட இந்தப் பொறுப்பினைத் தகப்பன்மார்கள் தள்ளிவிடுவதாகும். தங்கள் பிள்ளைகளுக்கு அறிவுரைக் கொடுப்பதையும், கண்டிப்பதையும், வழிக்காட்டுவதையும், ஆலோசனை வழங்குவதையும் முற்றிலுமாக மற்றவர்களிடத்தில் - அதாவது சபை ஊழியக்காரரிடத்தில், ஞாயிறு பள்ளி ஆசிரியரிடத்தில் அல்லது தாய்மார்களிடத்தில் விட்டுவிடும் மனப்பான்மை கொண்டிருக்கின்றனர். முறையான பெற்றோருக்குரிய இயல்புணர்வுகளில் இவ்வளவுக்குக் குறைவுபட்டிருக்கும் தகப்பன்மார்களின் பிள்ளைகளானவர்கள், மற்றவர்களின், விசேஷமாகத் தங்கள் தாய்மார்களின் ஆலோசனை, அறிவுரை முதலானவைகளைப் பெற்றுக்கொள்வது நலமாய் இருக்கும்; எனினும் இவைகள் அனைத்தும் தகப்பன் கொடுக்கும் ஆலோசனைக்கு ஈடாகாது; அதாவது உண்மையான விதத்தில் தகப்பனாயிருந்து, தெய்வீக ஏற்பாட்டினால் தன் பராமரிப்பிற்குக் கீழ்க்காணப்படுபவர்களின் உயர்ந்த நன்மைக்கு அடுத்தவைகளைப் பார்த்துக்கொள்ளும் தகப்பனுடைய ஆலோசனைக்கு ஈடாகாது.

தேவனால் கொடுக்கப்பட்ட பொறுப்புகளுக்குப் பெற்றோர்கள் சார்பில் காணப்படும் இத்தகைய அஜாக்கிரதையினால் பிள்ளைகள் மாத்திரம் பாதிப்பிற்குள்ளாகுகிறதில்லை; இக்காரியத்தின் விளைவுகள் பெற்றோருக்கும் பாதிப்பை ஏற்படுத்துகின்றது - கவனிக்கப்படாத பிள்ளையானது தன் மேலான நன்மைக்கடுத்த காரியங்கள் புறக்கணிக்கப்படுவதை உணர்ந்து, இதற்கேற்ப பெற்றோரைக் குறைவாய் மதித்திடுவார்கள். இதன் விளைவாகக் குடும்பத்தில் பெற்றோருக்கு மரியாதை இருக்காது மற்றும் இதனால் பெற்றோருக்குக் கீழ்ப்படிதல் இருக்காது; ஆகையால் குடும்பத்தில் ஒழுங்கின்மையே நிச்சயமாய் ஆளுகை செய்திடும் - சந்தோஷமற்றக் குடும்பமாகிடும். இம்மாதிரியான இல்லங்களில், குடும்பத்தினுடைய எந்த ஓர் அங்கத்தினனிடத்திலும் கிறிஸ்தவ இயல்புகளானது வேரூன்றுவதோ அல்லது வளர்ந்து செழிப்பதோ மிகவும் சிரமமான காரியமாகக் காணப்படும்; ஆனாலும் சிலசமயங்களில் இம்மாதிரியான இடங்களிலும்கூட வேரூன்றுகின்றது. அநேகம் பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளுடைய இருதயங்களாகிய தோட்டங்களில் சரியான கொள்கைகளை விதைத்திடத் தாங்கள் தவறிவிட்டதையும், தீய பண்புகளாகிய - அன்பின்மை, பெற்றோருக்குக் கீழ்ப்படியாமை, நன்றியின்மை முதலான களைகள் படர்ந்து அளவுக்கு மீறி தங்கள் பிள்ளைகளில் வளர தாங்கள் அனுமதித்துள்ளதையும் மிகவும் தாமதமாய் உணர்ந்துகொள்கின்றனர். பிள்ளையானவனைப் பயிற்றுவிக்க வேண்டிய விதத்தில் பயிற்றுவிப்பதற்கான அவசியத்தினைக்குறித்துக் கிறிஸ்தவ பெற்றோர்களுக்கு நாங்கள் வலியுறுத்துகின்றோம்; வார்த்தையிலும், மாதிரியிலும் தங்கள் பிள்ளைகளுக்குச் சமாதானத்தை, இரக்கத்தை, நன்றியுணர்வை, பெருந்தன்மையை, சாந்தத்தை, அன்பை அன்றாட ஜீவியத்தின் அவசியமான சட்டங்களென விளக்கிக்

கொடுப்பதற்கும் கிறிஸ்தவ பெற்றோர்களை நாங்கள் வலியுறுத்துகின்றோம். இத்தகைய பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளுக்குச் சரியான பாதையில் செல்வதற்கு நல்லதொரு துவக்கத்தினை ஏற்படுத்திக்கொடுக்கின்றவர்களாய் இருப்பார்கள்; ஜீவியம் ஆரம்பமாகுகையில் பிள்ளைகளுக்கு அவசியமானதாகவும், தங்களை ஜீவிகளாக உலகத்திற்குள் கொண்டுவந்தவர்களின் கரங்களிலிருந்து பிள்ளைகளும், சமுதாயமும் எதிர்ப்பார்ப்பதற்கு உரிமைக்கொண்டிருப்பதுமான ஒரு துவக்கத்தினை ஏற்படுத்திக்கொடுக்கின்றவர்களாய் இருப்பார்கள்.

ஞானமுள்ள தகப்பனின் நல் ஆலோசனைகளுக்குச் செவிசாய்ப்பதன் மூலமாகக் கீழ்ப்படிதலுள்ள குமாரன் தன் நாட்களை நீடிக்கப்பண்ணுகிறவனாய் இருப்பான் என்று தகப்பனாகிய சாலொமோன் தெரிவிக்கின்றார். பிள்ளைகளுக்கான அன்பையும், பிள்ளைகளின் நலனுக்கான ஆழ்ந்த அக்கறையையும், பெற்றோரின் முழு ஜீவியமும் வெளிப்படுத்திட வேண்டும். பிள்ளையின் குழந்தைத்தனமான நம்பிக்கையானது பெற்றோர் சார்பிலான அன்பற்ற நடத்தைகளினாலும், பயமுறுத்துதல்களினாலும், பெற்றோரின் உதாசீனத்தினாலும் உடைந்து சிதறிடாததுவரையிலும், பிள்ளையானது இயல்பாகவே தன் பெற்றோர்களைக்குறித்து உயர்வாய் எண்ணம்கொண்டிருக்கும் மற்றும் பெற்றோரின் அறிவுரைகளை மதித்திடும். பிள்ளைகள் பெரும்பாலும் பெரியவர்கள் போலவே, சிலசமயம் இவர்களைக் காட்டிலும் அதிகமாகவே சரியாய்ச் சிந்திக்கிறவர்களாய் இருப்பார்கள்; பிள்ளைகள் பின்வருமாறு, அதாவது (1) பெற்றோரின் அன்பையும், தங்களுடைய நலனுக்கடுத்த விஷயங்களில் பெற்றோரின் அக்கறையையும் தாங்கள் பெற்றிருக்கின்றனர் என்றும், (2) தன் வாழ்க்கையினைச் சரியாய்த் துவக்கத்தக்கதாகப் பெற்றோரின் ஜீவித அனுபவமானது தங்களுக்கு விலையேறப்பெற்ற ஒன்றாய்க் காணப்படுகின்றது என்றுமுள்ள சான்றுகளின் அடிப்படையில் பிள்ளைகள் சிந்திக்கின்றவர்களாய் இருக்க வேண்டும். இப்படியாகப் பெற்றோரின் அறிவுரையினால் வழிகாட்டப்படும், உதவப்படும் பிள்ளையானது, ஜீவியத்தின் அநேகமான சிரமங்கள், பிரச்சனைகள், படுகுழிகளினின்று தப்புவிக்கப்படுவார்கள் மற்றும் அநேகம் நோய்கள், சரீரப்பிரகாரமான பெலவீனங்கள் முதலியவைகளிலிருந்து தப்புவித்து, நீண்ட ஆயட்காலம் பெறுவார்களே! மேலும் பிள்ளையின்மீது இப்படி அக்கறைக்கொண்டவர்களாகக் காணப்பட்டு, தன் சொந்த அனுபவங்களின் புத்தகத்திலிருந்து பிள்ளைக்குப் பாடம் கற்பிக்க நாடுகின்ற பெற்றோர் தன் ஜீவியத்தில் ஏற்பட்ட வெற்றிகள், தோல்விகள் மற்றும் தவறுகள் குறித்தும், இவைகளுக்கான காரணங்கள் குறித்தும் திரும்பிப்பார்க்கையில், இதனால் நன்மை அடைகின்றவனாய் இருப்பான். தகப்பனெனத் தன் கடமையினை நிறைவேற்றிடும் யார் ஒருவரும் தனக்கும் சரி, தன் பிள்ளைக்கும் சரி ஆசீர்வாதமாய் இருப்பான் மற்றும் தன் சொந்த ஆயுள்காலங்களையும், தன் பிள்ளையின் ஆயுள்காலங்களையும் கூட்டிக்கொள்கின்றவனாய் இருப்பான்.

நம்முடைய பாடத்தினுடைய 11-ஆம் வசனத்தின் வார்த்தைகளைத் தனது மரணப்படுக்கையில் தன் பிள்ளையை நோக்கி: "ஞானமார்க்கத்தை நான் உனக்குப் போதித்தேன்; செவ்வையான பாதைகளிலே (என்னுடைய முன்மாதிரியின் மூலமாய்) உன்னை நடத்தினேன்" என்று உண்மையாய்க் கூறமுடிகின்றதான எந்த ஒரு பெற்றோரும் எத்துணைப் பாக்கியவான்களாய் இருப்பார்கள்; மேலும் அப்பிள்ளைகளும் எத்துணைப் பாக்கியவான்களாய் இருப்பார்கள்; இப்பிள்ளைகள் மற்றவர்களைக் காட்டிலும் ஜீவியத்தின் பாதையில் சறுக்கிவிழுவதற்கு எத்தனை குறைவான வாய்ப்புகள் உடையவர்களாய் இருப்பார்கள்; இவர்கள் பரலோக பிதாவின் சத்தத்தைக் கேட்பதற்கும், அதற்குச் செவியைச் சாய்ப்பதற்கும், அவர் வழிகளில் நடப்பதற்கும், எவ்வளவுக்கு அதிகமாய் ஆயத்தமாயும் காணப்படுவார்கள்.

---

R2319 & R5135 [தெரிந்தெடுக்கப்பட்ட பத்திகள்]

# இழிவான கிறிஸ்தவர்களும், நல்ல அவிசுவாசிகளும்

## 1 கொரிந்தியர் 1:26

அவிசுவாசிகள் மத்தியிலும், கிறிஸ்தவர்கள் மத்தியிலும் உயர்பண்புள்ளவர்கள் காணப்படுகின்றனர் எனும் கூற்றினை எதிர்த்து யாரும் வாதாடுவதில்லை; அதேபோல் கிறிஸ்தவர்கள் மத்தியிலும், உலகத்தார் மத்தியிலும் இழிவான ஜனங்கள் காணப்படுகின்றனர் என்னும் கூற்றினையும்கூட அனுபவமிக்கவர் எவரும் எதிர்த்து வாதாடுவதில்லை. இதைக்குறித்து நாம் என்ன சொல்லுவது? உண்மை கிறிஸ்தவத்தின் உயர்வான கொள்கைகளானது உலகத்திலுள்ள சிறந்த மனமுள்ள யாவரையும் கவர்ந்து இழுத்திடும் என்றும், இழிவான பண்புடையோரைத் தள்ளிவிடும் என்றும் எதிர்ப்பார்ப்பது நியாயமல்லவா? கிறிஸ்துவின் உபதேசங்களும், அவரது போதனைகளின் ஆவியும், அதாவது சாந்தம், தயவு, சகோதர சிநேகம், அன்பு முதலானவைகள், இப்பண்புகளை விரும்புகிற யாவரையும், உலகில் உள்ள உயர் மனமுடையவர் யாவரையும் கவர்ந்து இழுத்திடும் என்று நாம் எதிர்ப்பார்க்கலாம் அல்லவா? மேலும் வேதவாக்கியங்களும், கர்த்தருடைய ஆவியும் - கோபம், துர்க்குணம், பகைமை, பொறாமை, சண்டை, புறங்கூறுதல், தூஷணம் பேசுதல், அசுத்தங்கள் முதலியவைகளைக் கண்டிக்கின்றதால், மாம்சம் மற்றும் பிசாசின் இத்தகைய கிரியைகளுடன் இணக்கம் கொண்டிருக்கும் அனைவரும் கிறிஸ்துவின் சுவிசேஷத்தினால் புறக்கணிக்கப்படுவார்கள் என்று நாம் எதிர்ப்பார்க்கலாம் அல்லவா? என்று கேள்விகள் கேட்கப்படலாம்.

இது விஷயத்தில் நமது மனதின் தத்துவமானது என்னவாக இருப்பினும் நிலவரங்களின் உண்மையானது, உலகத்தினுடைய சிறந்த மனமுள்ள ஜனங்களில் பெரும்பாலானோர் கர்த்தரையும், அவரது சுவிசேஷத்தையும் புறக்கணிக்கின்றனர் என்றும், உலகத்திலுள்ள இழிவான ஜனங்களில் பெரும் எண்ணிக்கையினர் கிறிஸ்துவின் சுவிசேஷத்தினை ஏற்றுக்கொள்கின்றனர் என்றும் நமக்கு நிரூபித்துத் தருகின்றதாய் இருக்கின்றது. அனைத்து மற்றும் ஒவ்வொரு எதிர்ப்பார்ப்புகளுக்கும் நேர்மாறானதாகக் காணப்படும் இந்த மிக விநோதமான சூழ்நிலைக்கான காரணம் என்ன என்ற கேள்வியானது அதிகம் சுவாரசியமான மற்றும் குழப்பமான கேள்வியாகக் காணப்படுகின்றது.

இதற்கான காரணங்களை நாம் கர்த்தருடைய வார்த்தைகளின் அடிப்படையில் தெரிவிக்கின்றோம் - அது என்னவெனில் அவர் நீதிமான்களையல்ல, பாவிகளையே மனந்திரும்பும்படிக்கு அழைக்க வந்தார் என்பதேயாகும். உண்மைதான் நீதிமான் ஒருவனாகிலும் இல்லை; அனைவரும் பாவஞ்செய்து தேவ மகிமையற்றவர்களாகிவிட்டனர்; தகப்பனாகிய ஆதாமின் வீழ்ச்சி என்பது அவரது சந்ததியிலுள்ள ஒவ்வொரு அங்கத்தினனையும் உள்ளடக்கியது; ஆகையால் அனைவரும் பாவிகளாக இருக்கின்றனர் மற்றும் தங்கள் பாவங்களுக்கான மன்னிப்பிற்காகக் கிறிஸ்துவுக்குள்ளான தேவ கிருபை அனைவருக்கும் தேவையாய் இருந்தது; ஆனால் தங்கள் அயலார்களில் சிலரைப்பார்க்கிலும் ஒழுக்க ரீதியிலும், அறிவு ரீதியிலும் குறைவான வீழ்ச்சி நிலையில் தாங்கள் காணப்படுவதாகக் கண்டுகொள்பவர்கள் தங்களைப் பரிபூரணர்கள் என்று சொல்லாவிட்டாலும், சுயநீதியின் மனப்பான்மை உடையவர்களாக இருக்கின்றனர். ஆகையால் இத்தகையவர்கள் தங்களை ஒன்றுமில்லாதவர்களாகவும், திவ்விய தயவிற்குப் பாத்திரமற்றவர்களாகவும் ஒப்புக்கொள்வதற்கும், சிலுவையின் அடிவாரத்தில் புழுதிமட்டும் தங்களைத் தாழ்த்திக்கொள்வதற்கும், தேவனுடைய கிறிஸ்து இயேசுவின் மூலமான நித்திய ஜீவனின் கொடையாகிய கிருபையுள்ள ஈவைப் பெற்றுக்கொள்வதற்கும் விருப்பம் காண்பிக்காதவர்களாய் இருப்பார்கள்.

## நல்ல மருத்துவனின் தேவை உணரப்படவில்லை

இத்தகையவர்கள் மனித சந்ததியிலுள்ள மிகவும் சீரழிந்தவர்களில் சிலருக்குத் திவ்விய அனுதாபமும், மன்னிப்பும் அவசியம் என்று உணர்கின்றனர்; மேலும் சீரழிந்தவர்களுக்குத் தேவன் மனதுருக்கம் கொண்டிருப்பதைக்குறித்தும், தேவன் இந்த இழிவானவர்களுக்கு உதவுவார் என்பதுகுறித்தும் இத்தகையவர்கள் எண்ணி மகிழ்ச்சிக்கொள்கின்றனர்; எனினும் இத்தகையவர்கள் தங்களை மூடிக்கொள்வதற்குக் கிறிஸ்துவின் நீதியினால் தரிப்பிக்கப்படும் வஸ்திரம் தங்களுக்குத் தேவையில்லையென்று எண்ணம்கொண்டிருக்கின்றனர்; இத்தகையவர்கள் தங்களை மிகவும் மதிப்பிற்குரியவர்களென எண்ணி, இதனால் தேவன் எதிர்க்கால ஜீவனை அருளுவதற்கு யாரையேனும் ஏற்றுக்கொள்வாரெனில், அவர் நிச்சயமாய்த் தங்களைத் தள்ளிவிடமாட்டார் என்று எண்ணுகின்றனர். இத்தகையவர்கள் தங்களைச் சுற்றிப்பார்த்து, தங்களைக் கிறிஸ்தவர்களுடன் ஒப்பிட்டு, அதுவும் பெருமளவிலான தற்பெருமையுடன், சரி எது, தவறு எது மற்றும் நன்னெறிகள் மற்றும் பெருந்தன்மை முதலானவைகள் குறித்த தங்கள் அபிப்பிராயங்களானது கிறிஸ்தவர்கள் என்று தங்களைக்குறித்து அறிக்கைப்பண்ணிக்கொள்கிறவர்களைக் காட்டிலும் மேலானதாக, உயர்ந்ததாக, சிறந்ததாகக் காணப்படுகின்றது என்று தங்களுக்குள் நிச்சயம்கொண்டவர்களாக இருக்கின்றனர்; மேலும் "தேவன் நீதி உள்ளவர் மற்றும் நான் பரிபூரணமானவனாக இல்லையென்றாலும், பெரும்பான்மையான கிறிஸ்தவர்களைக் காட்டிலும் மிகவும் சிறந்தவனாகக் காணப்படுகின்றேன் மற்றும் இதனால் இருதயம் மற்றும் மனதின் நற்பண்புகள் சிலவற்றில் என்னைக் காட்டிலும் குறைவுடையவர்களாய் இருக்கின்றனர் என்று நான் காணும் மற்றவர்களைத் தேவன் பராமரிப்பதைக் காட்டிலும், அவர் தம் நீதியில் என்னை அதிகமாய்ப் பராமரிப்பார்" என்று தங்களுக்குள்ளாகச் சொல்லிக்கொள்கின்றனர். பூர்வ காலத்திலுள்ள பரிசேயன் போன்று இத்தகையவர்கள், மற்ற மனுஷர்களைப் போன்று தாங்கள் காணப்படாததற்காகத் தேவனை ஸ்தோத்திரித்து, "வானத்தின்கீழ் அல்லது மனுஷர் மத்தியில் நாம் இரட்சிக்கப்படத்தக்கதாக அருளப்பட்டிருக்கும் ஒரே நாமத்தை" புறக்கணித்து விடுகின்றனர்.

நாம் விவரித்துவரும் இவ்வகுப்பார் ஒரு பெரும் வகுப்பார் ஆவர்; அநேகர் எண்ணியிருந்ததைவிட மிக பெரும் வகுப்பார் ஆவர். மேலும் இவ்வகுப்பாரில் சுவிசேஷத்தை ஒருபோதும் புரிந்திடாத, மாய்மாலக்காரர்களாய் இராத அநேகர் உள்ளடங்குகின்றனர். ஐக்கிய நாடுகளில் ஜனாதிபதிகளில் அநேகர் இவ்வகுப்பாரைச் சேர்ந்த புருஷர்களாய் இருக்கின்றனர் - மதத்தின்மீது மரியாதை கொண்டிருக்கின்றனர்; ஜீவியத்தில் நல்லொழுக்கம் உடையவர்களாய் இருக்கின்றனர். நீதியோடு நடந்துகொள்கின்றனர் - உதாரணத்திற்கு LINCOLN மற்றும் GRANT முதலானோர் ஆவர்; மேலும் இவர்களை இந்த வகுப்பாரின் உதாரணங்களாக மாத்திரம் குறிப்பிடுகின்றோம். இதுவுமல்லாமல் இவ்வகுப்பாரில் அநேகர் சபை கூட்டங்களில் கலந்துகொள்பவர்களாக அல்லது சபையின் அங்கத்தினர்களாகக் காணப்படுகின்றனர். நாகரிகத்தின் முன்னேற்றமானது கிறிஸ்தவ மார்க்கத்துடன் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ சம்பந்தப்பட்டுள்ளது எனும் உண்மையினை இவர்கள் உணர்ந்துகொள்கின்றனர்; மேலும் கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற இரத்தத்தின்மீதான விசுவாசத்தின்மூலம் பாவங்களுக்கான மன்னிப்பைத் திவ்விய கிருபையின் கரங்களினின்று இத்தகையவர்கள் ஒருபோதும் ஏற்றுக்கொண்டிராத போதிலும், பிரபலியத்தின் மற்றும் நன்னெறியின் பக்கத்தில் நிற்பதில் மகிழ்ச்சிக்கொள்கின்றனர்.

இவர்களுக்கான சிரமத்தை நாம் காண்கின்றோம் - அதாவது கண்டிப்பான நீதி மற்றும் சட்டத்தின் கொள்கையின் அடிப்படையிலேயே கர்த்தர் கையாளுகின்றார் எனும் காரியத்தினை இவ்வகுப்பார்

அடையாளம் கண்டுகொள்வதில்லை. அபூரணமான அனைத்தும் தேவனுக்கு முரணானது என்றும், ஆதியில் தேவனுடைய கிரியையானது ஆதாமில் பரிபூரணமாய் இருந்தது என்றும், அபூரணமாய்க் காணப்படும் எவற்றோடும் இணைந்துகொள்வதைத் தம்மால் ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது என்றும் திவ்விய பிரமாணமும், நீதியும் தெரிவிக்கின்றதாய் இருக்கின்றது. இந்தப் பிரமாணத்தின்கீழ்ச் சிறியவற்றில்கூடக் குற்றமுள்ளவனாய் இருப்பவன், குற்றம்புரிந்தவனாகவும், அநேகம் மற்றும் மிகக் கடுமையான குற்றங்களின் நிமித்தம் குற்றவாளியாக இருப்பவனோடுகூட ஒரே மரணத்தண்டனையின் கீழ் வருகின்றவனாகவும் இருப்பான் என்று இவ்வகுப்பார் காணத்தவறுகின்றனர். ஆகையால் அனைத்து மனுஷரும், அபூரணராக இருக்கின்றபடியால் ஒருவனும் முழுமையாய் நீதிமானாய் இராதபடியினால், ஒரு மரணத்தீர்ப்பானது மனிதக்குடும்பத்தின் அனைத்து அங்கத்தினர்களையும் பற்றிக்கொண்டது. கிறிஸ்து இயேசுவாகிய நீதிமான் தம்மையே மனுஷருக்கான மீட்பராகும்படிக்குப் பலிசெலுத்தினதின் மூலமான தேவனுடைய ஏற்பாட்டினால் தவிர மற்றப்படி மரணத்தினின்று தப்பித்துக்கொள்ளும் எவ்வழியுமில்லை; ஜீவனுக்குள் பிரவேசிப்பதற்கான வழியில்லை. ஒருவன் எவ்வளவுதான் பாவத்திற்கு எதிராய்ப் போராடினாலும் - எவ்வளவுதான் வாசலை நெருங்கினவனாகக் காணப்பட்டாலும் - வாசல்/வழி ஊடாக வரத்தவறுகிறவன் ஒருபோதும் ஜீவனை அடையான். வாசல்வழியான பிரவேசம் மாத்திரமே நித்திய ஜீவனுக்கான பிரவேசத்தினை அர்த்தப்படுத்துகின்றதாய் இருக்கும். "குமாரனிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் நித்திய ஜீவனை உடையவனாயிருக்கிறான், குமாரனை விசுவாசியாதவனோ ஜீவனைக் காண்பதில்லை, தேவனுடைய கோபம் (மரணத்தண்டனை) அவன்மேல் நிலைநிற்கும்" (யோவான் 3:36).

இப்பாடத்தின் இதே கோட்பாடானது, உலகத்தின் நற்பண்புள்ள ஜனங்களைக்காட்டிலும், இழிவான ஜனங்களே கிறிஸ்துவிடம் பெரும்பான்மையாய் ஏன் வருகின்றனர் என்பதற்கான காரணத்தையும் நமக்குச் சுட்டிக்காட்டுகின்றதாய் இருக்கின்றது. தாங்கள் பாவிகள் என்று உணர்ந்துகொள்பவர்கள் மாத்திரமே, பாவத்திலிருந்து தங்களுக்கு விடுதலை வேண்டுமென்று எண்ணுபவர்கள் மாத்திரமே, மன்னிப்பு அருளப்படுவதை ஏற்றுக்கொள்கின்றனர். தாங்கள் நோயாளிகளாக இருப்பதை உணர்ந்துகொள்ளும் நோயாளிகள் மாத்திரமே மாபெரும் வைத்தியனுக்கான தங்கள் தேவையைக்குறித்து உணர்ந்துகொள்கின்றனர். தங்கள் விழுந்துபோன, சீரழிந்த நிலைமைக்குறித்து ஓரளவிற்கு உணர்ந்துகொண்டவர்களாகவும், மற்றவர்களைக் காட்டிலும் தாங்கள் இழிவானவர்கள் என்று உணர்ந்துகொண்டவர்களாகவும்தான் அநேகர் உண்மையில் கர்த்தருடைய கிருபையைத் தேடுகின்றனர்; இத்தகைய உணர்ந்துகொள்ளுதலினால் மாத்திரமே இவர்கள் தங்கள் நிலைமைக்குறித்து விழித்தெழுகின்றதாகத் தெரிகின்றது; மேலும் இதனால் மாத்திரமே இவர்கள் "தாவீதின் குமாரனே எங்களுக்கு இரங்கும்" என்று கூக்குரலிடுவதற்கு வழிநடத்தப்படுகின்றனர். திவ்விய தயவினைப் பெற்றுக்கொள்வதற்குத் தனிப்பட்ட விதத்தில் தான் பாத்திரவானில்லை என்று உணர்ந்துகொள்ளும் மனநிலையே, தேவனுடைய தயவை, அதற்கே உரிய நிபந்தனைகளோடு ஏற்றுக்கொள்பவர்கள் அனைவருக்கும் அவசியமாயிருக்கின்றது.

நம்முடைய பாடத்திற்கான அடிப்படைக் கோட்பாட்டினை இப்படியாகக் கண்டுபிடித்துள்ளபடியால், இப்பொழுது விளைவைக்குறித்து விசாரித்தறியப் போகின்றோம். கிறிஸ்துவை ஏற்றுக்கொள்வதினால் உண்டாகும் நியாயமான விளைவென்ன? புதிய உடன்படிக்கையினுடைய நிபந்தனையின் கீழ்க் கிறிஸ்துவை முறையாய் ஏற்றுக்கொள்வதின் நிச்சயமான விளைவு, ஒழுக்கம் சார்ந்த சீர்த்திருத்துதலாய் இருக்கும் என்று நாங்கள் பதிலளிக்கின்றோம்; ஏனெனில் கடந்த காலத்தின் பாவங்கள்

மன்னிக்கப்படுவதற்கு மாத்திரம் விரும்பிடாமல், எதிர்க்காலத்திலும் பாவத்தை விட்டுவிடவும் விரும்பிட வேண்டும் எனும் நிபந்தனையின்கீழே யார் ஒருவரையும் கர்த்தர் ஏற்றுக்கொள்கின்றார். ஒழுக்கத்தின் அளவில் அவன் கீழ்நிலையில் காணப்பட்டால், மாற்றம் இறுதியில் மிகத் தீவிரமானதாய்க் காணப்படும்; ஆனாலும் அவனது மாற்றத்தினுடைய துவக்கத்தில் கிறிஸ்தவ பாதையில் அவனுக்கு முன்பிருக்கும் வார்த்தையிலும், எண்ணங்களிலும், கிரியையிலுமுள்ள சுத்திகரிக்கப்படுதலின் படிநிலைகள் அனைத்தையும் குறித்துக் குறைவாகவே உணர்ந்துகொள்பவனாய்க் காணப்படுவான். முதலாவதாக அவன் பாவத்தின் மோசமான வெளிப்பாடுகளில் சீர்த்திருந்த மாத்திரமே சிந்திப்பான்; படிப்படியாக, ஒன்றன்பின் ஒரு பாடமாகக் கொடுக்கப்பட்டு, மாபெரும் போதகரினால் அவன் போதிக்கப்படுவான்; மேலும் அவன் கிறிஸ்துவின் பள்ளியில் தொடர்வானாகில் அறிவிலும், உணர்ந்துகொள்ளுதலிலும், குணலட்சண வளர்ச்சியிலும் வளர்கின்றவனாய் இருப்பான்.

அப்போஸ்தலன் வாயிலாய் மாபெரும் போதகர் முன்வைத்திடும் எதிர்ப்பார்ப்பு என்னவெனில் . . . அவரிடத்திற்கு முழுமையான அர்ப்பணிப்பில் வருபவர்கள், விசுவாசத்தின் அடிப்படையில் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிற்பாடு, உடனடியாக "மாம்சத்திலும், ஆவியிலும் உண்டான எல்லா அசுசியும் நீங்க, சுத்திகரித்துக்கொண்டு, பரிசுத்தமாகுதலைத் தேவபயத்தோடே பூரணப்படுத்த" துவங்கிட வேண்டும் என்பதேயாகும். இதைச் செய்ய முயற்சிக்காத யார் ஒருவராலும் கிறிஸ்துவின் பள்ளிக்கூடத்தில் தொடரமுடியாது; ஏனெனில் இப்படிப்பட்டவன் அவருடைய ஆவியைப் பெற்றிருப்பதில்லை; மேலும் அவரது ஆவி இல்லாதவன் "அவருடையவன் அல்ல." (அறிந்தும், விரும்பியும்) "பாவஞ்செய்கிறவன் பிசாசினாலுண்டாயிருக்கிறான்" (1 யோவான் 3:8). பாவம் மற்றும் சுயநலத்தின் உளையான சேற்றில் மிக ஆழமாய் அமிழ்ந்துபோனவர்களும், இதன்விளைவாய் அநேகம் இழிவான இயல்புகளைப் பெற்றுக்கொண்டுள்ளவர்களுமானவர்கள் - ஓரளவிற்கு அல்லது மிக நல்ல, உயர்பண்புள்ளவர்களாகிடுவதற்கு முன்னதாக, மாபெரும் போதகருடைய பயிற்சி மற்றும் படிப்பித்தலின்கீழ் அநேகம் வருடங்கள் காணப்பட வேண்டும். குணலட்சணம் என்பது காளான் போன்றதாயிராமல், கருவாலி மரம் போன்று காணப்படும்; அது வளர்வதற்கு காலம் எடுத்துக்கொள்ளும். எனினும் கருவாலி மரமானது, கோடாரியினால் உடனடியாகக் வெட்டிப்போடப்பட முடியும்; இதுபோலவே உறுதியான குணலட்சணம்/பாத்திரம்கூட உடனடியாகப் பாவத்தினால் கெடுக்கப்பட்டு, தோற்கடிக்கப்பட்டு, வீழ்த்தப்படலாம். வேறு வார்த்தைகளில் சொல்ல வேண்டுமெனில் மேல்நோக்கின வளர்ச்சியின் வேகம் மெதுவாகவே இருக்கும்; ஆனால் கீழ்நோக்கின மன இயல்புகள், ஒருவேளை அனுமதிக்கப்பட்டால், உடனே செயலாற்றிடும். ஆகையாலே அநேகம் கிறிஸ்தவர்களானவர்கள், கிறிஸ்துவின் மதத்தினால் தாங்களும், தங்கள் நண்பர்களும் பாவத்தின் உளையான சேற்றிலிருந்து வெளியே வந்து, கன்மலையாம் கிறிஸ்து இயேசுவின்மீது நிற்பதற்கு உதவப்பட்டு, மாம்சத்தின் அசுசிகள் அநேகவற்றிலிருந்தும், அதன் இழிவான இயல்புகள் அநேகவற்றிலிருந்தும் சுத்திகரிக்கப்பட்டு, இப்படியான பயிற்சி மற்றும் விடாமுயற்சியை மேற்கொண்டவர்களாக - பத்து அல்லது இருபது அல்லது நாற்பது வருடங்கள் ஆன நிலைமையில் இருக்கையில், இவர்கள் - தங்களுக்குச் சமமான நிலைமையில் நாணயத்திலும், நியாயத்திலும் அல்லது பெருந்தன்மையிலும் காணப்படும் சில அவிசுவாசிகளைக் காண்கையில் ஆச்சரியத்திற்குள்ளாகுவார்கள்.

## மரபியல் சட்டம் சம்பந்தப்பட்டுள்ளது

இது எப்படிச் சாத்தியம்? எனும் கேள்வி எழும்புகின்றது. ஒழுக்கம் சார்ந்த சீர்க்கேடானது எப்படி மூன்று, நான்கு தலைமுறை பிள்ளைகளைப் பாதிக்கின்றதோ, அதுபோல ஒழுக்கம் சார்ந்த

முன்னேற்றங்களும்கூடப் பல தலைமுறை பிள்ளைகளைப் பாதித்திடும் என்று நாங்கள் பதிலளிக்கின்றோம். ஆகையால் நீதிமான்களாகவும், தேவனுக்குப் பயந்தவர்களாகவும், தங்களில் ஆவியின் பண்புகளை வளர்த்திடுவதற்கு முயற்சித்தவர்களாகவும் காணப்படும் பெற்றோர்கள், இதனால் தங்களுக்கு நன்மையை அடைகிறவர்களாயும், முன்பைக்காட்டிலும் பரிபூரணத்தின் பிரமாண்டமான தரநிலையைக் கிட்டத்தட்ட நெருங்குகிறவர்களாயும் மாத்திரம் இராமல், இவர்களது பிள்ளைகளும்கூட நல்ல இயல்பான பண்புகளுடனும் மற்றும் நீதிமானாகவும், உயர்பண்புள்ளவர்களாகவும் ஆகிடுவதற்குரிய அனுகூலமான சூழ்நிலையின்கீழும் பிறக்கின்றவர்களாய் இருப்பார்கள். பெற்றோர்களின் இருதயங்களில் உள்ள வளர்ச்சியானது, அவர்களது பிள்ளைகளுடைய சரீர நிலைமைகளில் வெளிப்படுகின்றதாய் இருக்கும்.

மேலும் இது தங்களைப் பக்தியுள்ளவர்களெனக் காண்பித்துக்கொள்ளும் அநேகம் பெற்றோர்கள், நாம் எண்ணினதைவிடத் தங்கள் இருதயத்தில், நற்குணத்தில் குறைவுபட்டவர்களாய் இருந்திருக்கின்றனர் என்பதை நிரூபிக்கின்றதாய் இருக்கின்றது, ஏனெனில் கருத்தரித்தல் மற்றும் கர்ப்பக்காலங்களின்போது, பெற்றோரின் எண்ணங்களும், நினைவுகளும், உணர்வுகளும் - நற்குணங்களின்/பெருந்தன்மையின், தூய்மையின், பரிசுத்தத்தின், பயபக்தியின், தயாளத்தின், நீதியின் மற்றும் அன்பின் அடிப்படையில் காணப்பட்டிருந்திருக்குமானால், இதை இவர்களது பிள்ளைகள் காண்பிப்பார்கள்; மேலும் விளைவுகளானது பிள்ளைகள் மற்றும் பெற்றோர்களாகிய இருவருக்குமே ஆசீர்வாதமாய்க் காணப்படும். பிள்ளையினுடைய இயல்பான தன்மைகளானது, அது பிறப்பதற்கு முன்னதாகவே அதற்குக் கொடுக்கப்படுகின்றது, பிரதானமாகத் தாயின் மூலமாகும்; மேலும் தாயினுடைய இலட்சியங்களானது ஒருவேளை தாயும், தகப்பனும் பொருத்தமானவர்களாய் இருக்கும் பட்சத்தில், தகப்பனுடையவைகளாகவே காணப்படும். சர்வவல்லமையுள்ளவரினால் தங்களிடத்தில் ஒப்படைக்கப்பட்ட - பிள்ளையைப் பிறப்பிக்கும் வல்லமைகளைச் செயல்படுத்திடும் விஷயத்திலுள்ள தங்கள் பொறுப்புகளுக்குக் கிறிஸ்தவ பெற்றோர்கள் விழித்துக்கொள்ள வேண்டும். மரபியல் சட்டங்களைக்குறித்து (தன் தன்மைகளைப் பிள்ளைக்குக் கடத்தும் இயற்கை நியமம்/பரம்பரை குணம் எனும் இயற்கை சட்டம்) அடையாளம் கண்டுகொண்டவர்களாகவும், தங்கள் ஆடு, மாடுகளையும், நாய்களையும், குதிரைகளையும் கவனமாய் இனப்பெருக்கம்பண்ணுகிறவர்களாகவும் காணப்படுபவர்கள் மத்தியிலும், குழந்தையின்மீதுள்ள பெற்றோருடைய மனதின் செல்வாக்கானது அடையாளம் கண்டுகொள்ளப்படாததும், நாகரிகமடைந்துள்ள நமது தேசங்களில் உள்ள அநேகர் கீழ்மக்களாகப் பிறப்பதும் அவமானத்திற்குரியதாகும். இந்தக் கருத்துக்களானது இனிமேல் பிறக்கப்போகின்ற தங்கள் பிள்ளைகள் தொடர்புடைய விஷயத்தில் பெற்றோர்களை ஜாக்கிரதையாக இருக்கப்பண்ணுவதோடு மாத்திரமல்லாமல், தற்போதுள்ள தங்கள் பிள்ளைகளிடத்தில் தாங்களே விதைக்க உதவின குணலட்சண களங்கங்களைச் சீர்ப்படுத்துவதற்கு முயற்சிக்கையில், பிள்ளைகளிடம் மிகவும் பொறுமையாயும், பாடுபட்டு முயற்சி எடுக்கிறவர்களாகவும் ஆக்கிட வேண்டும். தன்னால் முடிந்தமட்டும் பிள்ளைக்கு ஜீவியத்தைத் துவக்க, நல்ல ஒரு சாதகமான சூழ்நிலையைக்/துவக்கத்தைக் கொடுப்பதே தன் பிள்ளையினிடத்தில் பெற்றோர் கொண்டிருக்கும் முதல் கடமையாக இருக்கின்றது.

இப்படி அநுகூலமான விதத்தில் பிறப்பிக்கப்பட்டுள்ள கிறிஸ்தவ பெற்றோர்களின் பிள்ளைகளானவர்கள், ஒருவேளை கிறிஸ்தவர்களாகி, தங்கள் சொந்த இருதயங்களில் ஒழுக்கம் சார்ந்த அசுசிகள் மற்றும் பாவங்களுக்கு எதிரான, விழுந்துபோன சுபாவத்தினுடைய இழிவான மற்றும் சுயநலமான மனப்பான்மைகள் அனைத்திற்கும் எதிரான யுத்தங்களைத் துவங்கிடும்போது, தேவனுடைய கிருபையினால், மாபெரும் போதகரின் அறிவுரைகளை நடைமுறைப்படுத்துவதன் மூலமாக, தங்கள்

பெற்றோர்களால் அடையப்பெற்றதைக் காட்டிலும் அதிகமாய்/உயர்வாய் ஒழுக்க நிலைகளை அடைவார்கள். ஆனால் இங்குக் கேள்வியின் மறுபக்கத்திற்கு வருகின்றோம்; அதாவது விசுவாசிகளுடைய பிள்ளைகளை, அவர்களது பெற்றோர்களின் விசுவாசம் காரணமாய், அவர்களது மைனர் காலத்திற்கு அப்புறம் தேவன் ஏற்றுக்கொள்கிறதில்லை. ஆகையால் பிள்ளைகள் அவருடையவர்களாய் விசேஷமாய் இருக்க வேண்டுமெனில் பொறுப்புடைமையின் வயதை அடைந்தவுடன், கர்த்தருடன் ஒரு தனிப்பட்ட உடன்படிக்கையைப் பிள்ளைகள் பண்ணிட வேண்டும்; இல்லையேல் அவர்கள் உலகத்தாராகவும், அதன் ஆக்கினையின்கீழ்க் காணப்படுபவர்களாகவும், விசுவாசிகளுக்கும், அவர்களது சிறுபிள்ளைகளுக்கும் மாத்திரம் உரியதான நீதிமானாக்கப்படுதலின்கீழ் இல்லாதவர்களாகவும் கருதப்படுவார்கள் (1 கொரிந்தியர் 7:14). தம்முடைய குடும்பத்திற்குள்ளும், பள்ளிக்குள்ளும் பிரவேசிக்கும் காரியத்தினை, தம் தனிப்பட்ட காரியமாய்த் தேவன் ஆக்கியுள்ளார்.

இங்கு நாம் உலகத்தின் நற்குணசாலியான மனிதர்களில் சிலர் கர்த்தருடைய ஜனங்களாக இராததற்கான இரகசியத்தினைக் கண்டடைகின்றோம். இவர்கள் பாவத்தின் உளையான சேற்றினின்று பாதங்கள் தூக்கிவிடப்பட்டவர்கள் சிலரின் பிள்ளைகளாக இருக்கின்றனர்; இவர்கள் தங்கள் பெற்றோர்கள் மூலமாய், உலகில் கிறிஸ்துவின் போதனைகளைப் பின்பற்றுபவர்கள் மத்தியில், அவரது போதனைகள் கொண்டுவந்திட்டதான ஒழுக்க வளர்ச்சியில் ஒரு பங்கினைச் சுதந்தரித்துள்ளனர். இப்படியாகப் பார்க்கையில் நாத்திகர்கள், அவர்களது நற்குணசாலியான குமாரர்கள் விஷயத்தில் பெருமையடித்துக்கொள்வதற்கு ஒன்றுமில்லை; ஏனெனில் அவர்களது குமாரர்கள் பெற்றிருக்கின்றதான நற்குணங்களும், மகத்துவங்களும் பொதுவாய், அவர்களது மூதாதையர்களின் விசுவாசத்தின், நம்பிக்கையின்மூலம் கடந்துவந்ததாகவே இருக்கின்றது. அவிசுவாசத்தின் போக்கே பாவத்திற்கும், அதன் சீரழிவிற்கும் நேரானதாய் இருக்கும். அது ஒரு சந்ததியிலேயே கடந்துவராமல் இருக்கலாம் அல்லது வரலாம். மற்றவர்களைக் காட்டிலும் மிகவும் உயர்மனதைச் சுதந்தரித்துள்ள நற்குணசாலியான கிறிஸ்தவ பெற்றோர்களின் குமாரன் அந்த ஒரு மனதினை, ஜீவிதம் முழுவதும் ஓரளவிற்குத் தக்கவைத்துக் கொள்ளலாம்; மேலும் ஒருவேளை அவன் தன் நல்லொழுக்கத்தின் நிமித்தம் பெருமை அடைவானானால், அவன் வெளித்தோற்றத்திலாகிலும் நற்தன்மையைக் காத்துக்கொண்டு, இவற்றில் சிலவற்றை தன் சந்ததியினருக்கு மரபுவழியாகக் கடத்திடுவான். இறுதியில் சுயநலமானது நற்குணத்தினைக் கெடுத்து, அழித்துவிடும்; மேலும் கிறிஸ்துவை ஏற்றுக்கொள்பவர்கள் அனைவரிடத்திலும் நாம் முன்னேற்றத்தினை எதிர்ப்பார்ப்பதுபோல, கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளாத இத்தகையவரின் சந்ததியில் நிச்சயமாய்ச் சீர்க்கேட்டினையே நாம் எதிர்ப்பார்த்திடலாம்.

---

R2004 [தெரிந்தெடுக்கப்பட்ட பத்தி]

## நமது பிள்ளைகளுக்காய் ஜெபங்கள்

தங்களுடைய பிள்ளைகளின் விஷயத்தில், அர்ப்பணம்பண்ணியுள்ளதான பெற்றோர்கள், ஆயிர வருஷயுகத்தினுடைய விடியலின்போதாகிய இப்பொழுது, ஜெபங்களில் தங்களுக்கு விசேஷித்த சிலாக்கியங்கள் இருப்பதாக உணர்கின்றனர்; ஏனெனில் அனைத்து வகுப்பார்களில் பிள்ளைகள்வகுப்பார் மிக நிச்சயமாகவே திரும்பக்கொடுத்தலின் ஆசீர்வாதங்களுக்கான சுதந்தரவாளிகளாய் இருக்கின்றனர். விசுவாசிகள் அனைவரின் பிள்ளைகளும், அவர்களது பெற்றோர்களுடைய விசுவாசத்தின் காரணமாய், பகுத்தறிவின் வயதை அடைவதுவரையிலும்

நீதிமான்களாக்கப்பட்டிருக்கின்றனர் (1 கொரிந்தியர் 7:14). ஆகையால் இவர்கள் பூமிக்குரிய ஆசீர்வாதங்கள், திரும்பக்கொடுத்தலின் ஆசீர்வாதங்கள் முதலானவைகளின் சுதந்தரவாளிகளாய் இருக்கின்றனர். மேலும் இப்பொழுது திரும்பக்கொடுத்தலின் காலங்கள் நம் மத்தியில் கடந்துவந்திருக்க, இத்தகையவர்களுக்காய் ஆரோக்கியம், பலம் மற்றும் ஜீவனைக் கேட்டுக்கொள்வதில் நாம் மிகுந்த நம்பிக்கை உடையவர்களாய் இருக்க வேண்டும். இப்பொழுது வாழும் விசுவாசிகளின் பிள்ளைகளானவர்கள், வெளிச்சம் மற்றும் தயவிற்கு எதிரான துணிகரமான பாவத்தினால் தவிர மற்றப்படி எவருக்கும் மரணம் சம்பவியாத ஆயிர வருஷசூரிய ஒளியின் மகிமை மற்றும் ஆசீர்வாதத்தின்கீழ்க் கடந்துசெல்வார்கள் என்பதாகத் தெரிகின்றது. எனினும் நம்முடைய அனைத்து விண்ணப்பங்களில், நம் எஜமானர் போலவே "என் சித்தமல்ல, உம் சித்தம் ஆகக்கடவது" என்றே நம்மால் கேட்கமுடியுமே ஒழிய மற்றப்படியல்ல. புத்தியுள்ள ஆராதனையாய்க் காணப்படும் முழுமையான அர்ப்பணிப்பு எனும் சரியான கட்டத்திற்கு நேராக தன்னால் இயன்ற மட்டும், தன் பிள்ளையைக் கொண்டுவந்திடுவதே ஒவ்வொரு பெற்றோரின் இலட்சியமாகவும், பொறுமையுடன்கூடிய பிரயாசமாகவும் காணப்பட வேண்டும்.

---

R2073 [தெரிந்தெடுக்கப்பட்ட பத்திகள்]

## அனைத்திலும் இச்சையடக்கம் உடையவர்களாய் இருங்கள்
## நீதிமொழிகள் 23:15-25

"குடியனும் போஜனப்பிரியனும் தரித்திரராவார்கள்; தூக்கம் கந்தைகளை உடுத்துவிக்கும்." (நீதிமொழிகள் 23:21)

[வசனம் 22-23]. உண்மையான ஞானமானது முதியவர்களின் ஆலோசனையை, அதிலும் விசேஷமாகக் குழந்தையின் நலனுக்கடுத்த விஷயங்களில் அக்கறைகொண்டிருக்கும் பெற்றோர்களின் ஆலோசனையை ஒருபோதும் அசட்டை செய்யாது. இது நம்முடைய நாட்களில் காணப்படும் விநோதங்கள் மற்றும் சிரமங்களில் ஒன்றாய் இருக்கின்றது; காரணம் அறிவிலும், கல்வி வாய்ப்புகளிலும் ஏற்பட்ட திடீர் பெருக்கத்தின் காரணமாய் அநேகம் அறிவுசார்ந்த துறைகளில் இளைஞர்கள், பெரியவர்களைக் காட்டிலும் மிஞ்சிக் காணப்படுகின்றனர். இதன் விளைவான மனப்பான்மையானது பெற்றோர்கள் மற்றும் பெரியவர்களின் அறிவுரைகளுக்கும், அனுபவங்களுக்கும் மதிப்புக்கொடுக்காத மனப்பான்மையாகவும், முரட்டுத்தனமான, தலைக்கனமான, நன்றியற்றத்தனமான, பரிசுத்தமற்றத்தனமான, பெற்றோர்களுக்குக் கீழ்ப்படியாதத் தன்மையாகவும் மற்றும் நம்முடைய நாட்களின் அம்சங்களாய்க் காணப்படும் என்று அப்போஸ்தலனால் முன்னுரைக்கப்பட்டதுபோன்ற இழிவான தன்மையாகவும் காணப்படுகின்றது (2 தீமோத்தேயு 3:4-ஆம் வசனத்தைப் பார்க்கவும்). இதன் காரணமாய் இளையவர்களின் அறிவுரையாளர்கள் அனைவரின் சார்பிலும், பெற்றோர்களின் சார்பிலும் அதிகம் ஞானமும், அதிகம் பொறுமையும் அவசியமாய்க் காணப்படுகின்றது. பெற்றோரின் அறிவுரைகளை எதிர்க்கும் செல்வாக்குகளை அடையாளம் கண்டுகொண்டவர்களாகவும், பிள்ளைகள் சில விஷயங்களில் மேம்பட்டுக் காணப்படலாம் எனும் உண்மையினை அடையாளம் கண்டுகொண்டவர்களாகவும் காணப்படும் ஞானமுள்ள பெற்றோர், தங்களில் தகுதியான சிறுபிள்ளைக்குரிய தன்மையினை நல் உதாரணமாய் முன்வைத்துக் காண்பித்திட நாடிட வேண்டும்; மேலும் குழந்தையிடமிருந்தும், குழந்தையோடும்கூட அவர்களது மேம்பட்ட அனுகூலங்களின் அடிப்படையில் கற்றுக்கொள்வதற்கும்

ஆயத்தமாய் இருக்க வேண்டும்; மேலும் அறிவு பெற்றுக்கொள்வதற்கான வாய்ப்புகளின் தற்காலத்து அதிகரிப்பானது குறிப்பிடத்தக்கது என்றும், அது மனுஷனால் உண்டாயிராமல் "முடிவு காலம்" தொடர்பாகத் தீர்க்கத்தரிசிகளினால் முன்னுரைக்கப்பட்டதுபோலத் தேவனால் உண்டானது என்றும் பெற்றோர் விவரித்துக்கொடுக்க வேண்டும் (தானியேல் 12:4). இப்படிப்பட்ட ஞானமுள்ள மற்றும் நேர்மையுள்ள நடக்கையின்மூலம் பெற்றோர் தன் பிள்ளையின் நம்பிக்கையைத் தக்கவைத்துக் கொள்வான்; பிள்ளையும்கூட ஜீவியத்திலுள்ள பெற்றோரின் அனுபவங்களுடைய அடிப்படையிலும், நல்லொழுக்கத்தின் கொள்கைகள் தொடர்பாகவும், தீய ஒழுக்கத்தின் தீமைகள் தொடர்பாகவும் கற்றுக்கொள்வதற்கு நன்கு ஆயத்தமாய் இருக்கும். இப்படியாகப் பெற்றோரிடத்தில் காணப்படும் ஞானமானது, பிள்ளையினால் தெரிந்தெடுக்கப்படும் ஞானத்தின் விஷயத்திற்கு மிகவும் அவசியமானதாய்க் காணப்படுகின்றது. போதிக்கப்பட வேண்டிய பிரதானமான பாடங்களில் ஒன்று - ஜீவியத்தின் அன்றாடக் காரியங்கள் தொடர்புடைய விஷயத்திலும், மனுஷர்களுக்கிடையிலான நடவடிக்கையின் விஷயங்களிலும், ஆவிக்குரிய காரியங்களின் விஷயத்திலும், தேவன் சம்பந்தப்பட்ட விஷயத்திலும் மற்றும் தெய்வீகத் திட்டம் சம்பந்தப்பட்ட விஷயத்திலும் - அனைத்து விஷயங்களுக்கு மேலாக சத்தியமே விலையேறப்பெற்றதாய்க் காணப்பட வேண்டும் என்பதேயாகும். சத்தியம் உயர்வாய்க் கருதப்பட வேண்டும் மற்றும் சத்தியத்தை அன்புகூர்ந்து அதன்படி நடக்கிறவர்கள் - இவர்கள் மாத்திரமே உயர்வாய் மதிக்கப்பட வேண்டும்; தப்பறைகளும், போலித்தனங்களும் அவைகள் எவ்வளவுதான் பகட்டாக அல்லது ஆடம்பரமாக அல்லது கண்ணைக் கவரும் விதமாக இருப்பினும் அவை அசட்டைப்பண்ணப்பட வேண்டும் மற்றும் புறக்கணித்து விலக்கப்பட வேண்டும். இது "(தீமையினின்று அவர்களைப் பிரித்து, நன்மைக்காய்ப் பிரித்துவைத்து) உம்முடைய சத்தியத்தினாலே அவர்களைப் பரிசுத்தமாக்கும்; உம்முடைய வசனமே சத்தியம்" என்ற நமது கர்த்தருடைய ஜெபத்திற்கு இசைவாய் இருக்கின்றது (யோவான் 17:17).

[வசனம் 24-25]. இந்த வசனங்களானது வாலிபரில் உள்ள ஞானமானது, போதனையையோ, அறிவுரையையோ முற்றிலும் சார்ந்திருப்பதில்லை என்று தெரிவிக்கின்றதாய் இருக்கின்றது. அநேகமாகப் பெரும்பான்மையான ஞானமுள்ள பிள்ளைகள், ஞானமானவர்களாகவே பிறந்துள்ளனர். "ஞானமுள்ள பிள்ளையைப் பெற்றவன், அவனால் மகிழுவான்" (நீதிமொழிகள் 23:24). பெற்றோர் ஸ்தானத்தைக்குறித்தும் மற்றும் தங்கள் சொந்தக் குணங்களும், மனஉணர்வுகளும் தங்கள் பிள்ளைகளிடத்தில் தாக்கம்கொண்டிருந்து, பிள்ளைகள் பிறப்பதற்கு முன்னதாகவே நல்ல மற்றும் ஞானமுள்ள குணங்களுக்கான அஸ்திபாரங்களைப் போடுகின்றது என்பது குறித்தும் பெற்றோர்களினால் உணர்ந்துகொள்ள முடிந்ததானால், அவர்களது ஸ்தானம் மற்றும் உறவுமுறையின் பொறுப்புகளானது, அவர்களது பிள்ளைகளிடத்தில் அநுகூலமான செல்வாக்கினைக்கொண்டிருப்பது மாத்திரமல்லாமல், அவர்களிலும் உறுதியான குணங்களை வளர்த்திடுவதற்கு உதவியாய் இருந்திடும் என்று நாங்கள் நம்புகின்றோம்.

எந்த இயற்கையின் சட்டங்களுக்குக்கீழாகத் தங்கள் பிள்ளைகளைப் பெற்றெடுக்கின்றனர் என்பதைப் புரிந்துகொள்ள தவறிடும் பெற்றோர்கள், தங்களின் ஞானமின்மையையும், உறுதியற்ற குணங்களையும் பிரதிப்பலித்திடும் தங்கள் பிள்ளைகளிடத்தில், அதாவது தங்கள் பிள்ளையின் ஞானமின்மை விஷயத்தில் பொறுமைக்கொண்டிருப்பதற்கு இரட்டிப்பான காரணங்கள் பெற்றிருக்கின்றனர்; மேலும் அந்த ஞானமின்மையைச் சரிப்படுத்துவதற்கும், பிள்ளைகளைச் சரியான பாதையில் வழிநடத்திடுவதற்குமான தங்களது பிரயாசங்களில் விடாமுயற்சியுடன் காணப்படுவதற்கும் இரட்டிப்பான காரணம் கொண்டிருக்கின்றனர்.

R1963

# உபத்திரவ காலத்தின்போது நமது பிள்ளைகள்

பின்வரும் கடிதமானது, சந்தேகத்திற்கிடமின்றி அநேகருடைய உணர்வுகளின் குரலாகவே காணப்படுகின்றது.

அன்புக்குரிய நண்பரே:-- எனக்கு இப்பொழுது இரண்டு வயதுள்ள பெண் குழந்தை இருக்கின்றாள். 1910-ஆம் வருஷத்தில் அவள் பதினாறு வயதை அடைபவளாக மாத்திரம் காணப்படுவாள். கேள்வி என்னவெனில், ஒழுங்கின்மை ஏற்படும் காலப்பகுதியில் அவள் நிலைமை என்னவாக இருக்கும்? என்பதேயாகும். அவள் அநேகமாய் ஒரு வகுப்பாரைச் சார்ந்தவளாய் இருப்பாள். அநேக தேவனுடைய பிள்ளைகளுக்கு, வளர்ந்துகொண்டிருக்கும் சிறு பிள்ளைகள் இருப்பார்கள் மற்றும் இதே கேள்வி அநேகருக்கும் காணப்படும். கிறிஸ்துவின் மணவாட்டியில் அங்கமாகிடும் நம்பிக்கையிலும், உலகத்தின்மீது வரவிருக்கும் உபத்திரவ காலத்தின்போது அவரோடுகூட எடுத்துக்கொள்ளப்படுவதிலும் களிகூரும் மற்றும் உலகில் விடப்படும் தன் பிள்ளையின் நிலைமைக்குறித்துச் சிந்திக்காமல் காணப்படும் எந்த ஒரு பெற்றோரும் நிச்சயமாய்ப் பாராட்டப்பட வேண்டியவர்களே. சங்கீதம் 37:25, 26; 102:28 மற்றும் நீதிமொழிகள் 11:21 ஆகிய வாக்குத்தத்தங்களை நான் காண்கின்றேன்; ஆனாலும் இவை வழிவகைகளைப் பயன்படுத்துதல் குறித்துத் தவிர்க்கிறதில்லை. நீதிமான்களின் பிள்ளைகள் ஒருவேளை "உபத்திரவ காலத்தில்" காப்பாற்றப்படுவார்களானால், இது அவர்களது பாதுகாப்பிற்காய் ஏற்பாடுபண்ணப்பட்டுள்ள வழிவகைகளைப் பயன்படுத்துவதன் மூலமேயாகும் என்பதாக எனக்குத் தோன்றுகின்றது; பயன்படுத்தப்பட வேண்டிய வழிவகைகளைக்குறித்து அவர்களது பெற்றோர்களும், பாதுகாவலர்களும்தானே சிந்திக்க வேண்டும்?

நான் புரிந்திருக்கிறபடி ஒழுங்கின்மை நிலைமையானது (1) வர்த்தகத்தை முழுமையாய் அழித்துவிடும், இரயில்கள் இயங்காது, அஞ்சல் சேவை இயங்காது, தந்தி சேவைகள் திறந்திருக்காது; (2) வியாபாரத்தை முழுமையாய் அழித்துவிடும் - உற்பத்தி நடைபெறாது, வர்த்தகம் நடைபெறாது, அதுவும் வர்த்தகம் பண்டைய கால விதங்களில், குறுகிய வரம்பு நிலைகளுக்குள்ளாக மட்டும் நடைபெறுமே தவிர மற்றப்படியல்ல; (3) அரசாங்கத்தை முழுமையாய் அழித்துவிடும் - தனி நபர்கள் தங்கள் சொந்தப் பலத்தினால் மாத்திரமே தங்களைப் பாதுகாத்துக்கொள்ள வேண்டுமே ஒழிய, மற்றப்படி தனி நபர்களுக்கு அரசாங்கம் பாதுகாப்புத் தராது. நாடுகளானது கொள்ளையர் கூட்டத்தாரினால் நிரம்பி இருக்கும்; மேலும் ஜனங்கள் மத்தியிலுள்ள சமாதான குணமுள்ளவர்களும், நல்லொழுக்கமுள்ளவர்களும் தற்காப்பிற்காகவும், பாதுகாப்பிற்காகவும் வேண்டி சிறுசிறு கூட்டத்தாராய் இணைந்துகொள்ளும் கட்டாயத்திற்குள்ளாவார்கள். உணவிற்காகவும், உடைக்காகவும் இவர்கள் தங்களால் உண்டுபண்ண முடிந்தவைகள்மீதும், கொள்ளையர்களிடமிருந்து பாதுகாத்துக்கொண்டவைகள்மீதும் சார்ந்திருக்கும் கட்டாயத்திற்குள்ளாகுவார்கள்.

பட்டணங்களும், நகரங்களும் சுட்டெரிக்கப்படும் அல்லது சஞ்சரிப்பு இல்லாமல் பாழாய்ப்போம், அழிக்கப்பட்டுப்போம்; உற்பத்திக்கான இயந்திரங்கள் பயன்பாடில்லாமலும், பழுதடைந்து போனதினாலும் அழிக்கப்படும் அல்லது பிரயோஜனமற்றதாகக் கருதப்படும்; இதனால் ஒழுங்கின்மைக் காலத்திற்குப் பிற்பாடு, உலகமானது மீண்டுமாகப் புதிதாய்த் துவங்க வேண்டியதற்கான கட்டாயத்திற்குள்ளாய்க் காணப்படும்.

நாட்டினுடைய இந்நிலைமைப் பற்றின கேள்வியையும், தாங்கள் கருத்தில் எடுக்க நான் விரும்புகின்றேன்; அநேகமாக நான் இங்கு விவரித்துள்ள அளவுக்கு மிகவும் மோசமாக இருக்காது;

ஐக்கிய நாடுகளிலும், இங்கிலாந்திலாகிலும் அவ்வளவுக்கு மோசமாக இருக்காது. இந்த இரண்டு நாடுகளும் சுவிசேஷயுகத்தின்போது விசேஷித்த தயவுகளைப் பெற்றிருக்கின்றன; அநேகமாக இந்த இரண்டு நாடுகள் உபத்திரவ காலங்களிலும்கூட இன்னும் தயவு பெற்றிடலாம். இந்நாடுகளின் உயர்தர அறிவும், ஒழுங்கிற்கான பெரிதான விருப்பமும், சத்தியம் பற்றின பெரிதான அறிவும் - இந்நாடுகளைப் புதிய ஒழுங்குகளுக்கு விரைவாய் இசைவிற்குக்கொண்டுவர உதவிடலாம்; மேலும் மீதியுள்ள உலகத்தார்மீது வரும் கடுமையான தண்டனைக்களவுள்ள மிகக்கடுமையான தண்டனைகளை இந்நாடுகள்மீது கொண்டுவராமல் இருக்கலாம். மேலும் தீர்க்கத்தரிசனங்களானது குறிப்பாய் உரோம சாம்ராஜ்யத்தைச் சுட்டிக்காட்டுகிறதல்லவா? ஐக்கிய நாடுகளும், இங்கிலாந்தும் அநேகமாக உரோம சாம்ராஜ்யத்தின் பாகமாய் நிச்சயமாக இருப்பதில்லை.

அக்காலத்தினுடைய ஆபத்துகளிலிருந்து தப்பித்துக்கொள்வதற்கு ஏதுவாய் யார் மிகவும் தயவு பெற்ற நிலைமையில் காணப்படுகின்றனர் என்று நாம் பார்க்கையில், பட்டணங்களும், நகரங்களும்தான் மிகுந்த பாதிப்பிற்குள்ளாகும் என்பது நிச்சயமே. பட்டணங்கள் மற்றும் நகரங்களிலிருந்தும், பயணம்பண்ணுவதற்கான முக்கிய பாதைகளிலிருந்தும் தொலைத்தூரத்தில் காணப்படுபவர்களும், பழங்கால முறைமையின்படி வாழ்பவர்களும், தங்களைச் சுற்றியுள்ள நிலங்களில் வேலை செய்வதன்மூலம் தங்கள் தேவைகளைச் சந்தித்துக்கொள்பவர்களும், தங்கள் தேவைகள் சந்திக்கப்படுவதற்காய் வர்த்தகத்தைச் சார்ந்திராதவர்களுமானவர்களே அவ்வளவுக்குச் சிரமத்திற்குள்ளாகதவர்களாய் இருப்பார்கள்; நகரங்களிலிருந்தும், பிரயாண பாதைகளிலிருந்தும் மிகத் தொலைத்தூரத்தில் காணப்படுபவர்கள், கொள்ளையர் கூட்டத்தாரிடமிருந்து தங்களைப் பாதுகாப்பாய் வைக்க முடிந்தவர்களாய் இருப்பார்கள். இத்தகையவர்கள் இருக்கும் இடங்கள் பெரும்பாலும் மலைப்பகுதிகளாக இருக்கும்; மேலும் மலைப்பகுதிகள் மிக எளிதாகப் பாதுகாக்கப்படலாம் மற்றும் தாக்குதலிலிருந்து காக்கப்படலாம். இது யூதேயாவிலிருக்கும் கிறிஸ்தவர்கள் யூதருக்கான உபத்திரவ காலம் நெருங்குவதைக் காண்கையில், "மலைக்கு ஓடிப்போங்கள்" என்று கூறி கிறிஸ்து எச்சரித்ததை நமக்கு நினைப்பூட்டுகின்றது. யூதர்மீது வந்த உபத்திரவ காலமானது, வரவிருக்கும் உபத்திரவ காலத்திற்கான நிழலாய்க் காணப்பட்டது. நாம் எச்சரிக்கப்படுவதற்கும் மற்றும் ஒழுங்கின்மை ஆரம்பிக்கையில் உலகில் காணப்படப்போகும் நமது குடும்பங்களுக்காகவும், நண்பர்களுக்காகவுமான அடைக்கலமாயிருக்கும் இடங்களை நாம் ஏற்பாடுபண்ணிடுவதற்கும் வேண்டி, அவர் அந்த எச்சரிப்பைக்கொடுப்பதில் நோக்கம்கொண்டிருந்திருக்கலாம் அல்லவா?

சகோதரர் ரசல் அவர்களின் பதில்:-- வரவிருக்கும் உபத்திரவம் குறித்து மேலே இடம்பெறும் கருத்துகளானது, மிகவும் மிதமான ஒன்று என்று நாங்கள் நம்புகின்றோம். எருசலேமுடைய வீழ்ச்சியின்போது, அதன்மீது வந்திருந்த உபத்திரவம்குறித்த பதிவுகளானது, மிக அதிகமாய் அச்சம் தரக்கூடியதாகும்; அப்படியே ஒரு நூற்றாண்டிற்கு முன்னதாகப் பிரான்ஸ் நாட்டில் நடந்த பயங்கரமான ஆட்சி பற்றின பதிவும் காணப்படுகின்றது. இந்த இரண்டு மாபெரும் நிகழ்வுகளும் வேதவாக்கியங்களில், வரவிருக்கும் பொதுவான உபத்திரவத்திற்கான மாதிரிகளாகக் குறிப்பிடப்பட்டுள்ளது; மேலும் வரவிருக்கும் உபத்திரவமானது இந்த இரண்டு உபத்திரவங்களைக் காட்டிலும் மோசமாய் இருக்கும் என்றும் - "யாதொரு ஜாதியாரும் தோன்றினதுமுதல் அக்காலமட்டும் உண்டாயிராத ஆபத்துக்காலம் வரும்" என்றும் தெளிவாய்த் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 18 நூற்றாண்டுகளினுடைய தீர்க்கத்தரிசன சரித்திரத்தில் உரோம சாம்ராஜ்யமானது முக்கிய இடம் வகிக்கின்றது என்றபோதிலும், "கர்த்தருடைய நாளை" குறிப்பிடும் மகா உபத்திரவங்களானது,

அடையாளமான பாபிலோனால் - குழப்பமான பெயர்க்கிறிஸ்தவ மண்டலத்தினால் அடையாளப்படுத்தப்பட்டுள்ளது என்றும், இது நிச்சயமாய் இங்கிலாந்தையும், ஐக்கிய நாடுகளையும் உள்ளடக்கிடும் என்றும் நாம் நினைவில்கொள்ள வேண்டும். கர்த்தருடைய முதலாம் வருகையின்போது, மாபெரும் ஒளியைக் கண்டு, அவரைப் புறக்கணித்தவர்கள் மீதே கடுமையான உபத்திரவங்கள் வந்ததுபோன்று, ஆங்கில மொழி பேசும் ஜனங்களால் அனுபவிக்கப்பட்ட மகா சிலாக்கியங்களும், ஆசீர்வாதங்களும், அவர்கள்மீது மாபெரும் பொறுப்புகளைக் கொண்டுவந்துள்ளது என்றும், கடுமையான உபத்திரவங்களையும் கொண்டுவரும் என்றும் நாங்கள் அஞ்சுகின்றோம்.

புயல் வருகையில், அனைவருடைய மனப்பான்மையும் மகா பர்வதங்களுக்குக் கீழும் (இராஜ்யங்கள் கீழும்), (பிரயோஜனமான அமைப்புகளாகிய) சமுதாயம் எனும் கல்மலைகளிலும் மூடலையும், பாதுகாப்பையும் நாடுவதாகக் காணப்படும் (வெளிப்படுத்தல் 6:15-17); மேலும் அநேகர் நாடுகளிலிருந்து நகரங்களுக்கு ஓடிடுவார்கள். "உலகத்தின்மீது வரவிருக்கும் யாவற்றிலிருந்தும் தப்பித்துக்கொள்ளும்" "ஜெயங்கொள்பவர்கள்" பர்வதத்திற்கு - கர்த்தருடைய இராஜ்யத்திற்கு ஓடிடுவார்கள் மற்றும் மற்ற ஒருவராலும் அடையமுடியாத பாதுகாப்பில் காணப்படுவார்கள் (லூக்கா 21:36); "யார் கர்த்தருடைய பர்வதத்தில் ஏறுவான்? யார் அவருடைய பரிசுத்த ஸ்தலத்தில் நிலைத்திருப்பான்? கைகளில் சுத்தமுள்ளவனும் இருதயத்தில் மாசில்லாதவனுமாயிருந்து, தன் ஆத்துமாவை மாயைக்கு ஒப்புக்கொடாமலும், கபடாய் ஆணையிடாமலும் இருக்கிறவனே." (சங்கீதம் 24:3-6).

ஆட்டுக்குட்டியானவருடைய கோபத்தின் மகா நாளில், அவருடைய கோபத்திலிருந்து தங்களை மறைத்துக்கொள்வதற்கான மனுஷர்களின் பிரயாசங்கள் அனைத்தும் விருதாவாகிடுவதைக் காண்கையில், பரிசுத்தவான்கள் தங்கள் பிள்ளைகளை மறைத்துக்கொள்வதற்கான பிரயாசங்கள் எடுப்பது என்பது அறிவீனமாய் இருக்கும் என்று அறிந்தவர்களாக, இத்தகைய பிரயாசங்கள் எடுக்காமல் இருப்பது நலமாகும். உபத்திரவமானது பாவத்தையும், அனைத்துப் போலி அமைப்புகளையும், காரியங்களையும் கவிழ்த்துப்போடும்படிக்கு வருகின்றது; அது கொண்டுவரும் படிப்பினைகளானது பொதுவான மனுக்குலத்திற்குப் பிரயோஜனமாய்க் காணப்பட்டு, அவர்களது விக்கிரகங்களை நொறுக்கிப்போட்டு, அவர்களது இருதயங்களைச் சுத்திகரித்திடும். நம் பிள்ளைகளுக்கும், நண்பர்களுக்கும் சுத்திகரிப்பு வேண்டுமெனில், அவர்கள் அதிலிருந்து தப்பிக்க வேண்டும் என்று நாம் எண்ணிடக்கூடாது. அவர்களுக்கு அது தேவையில்லையெனில், கர்த்தர் தமது சரீரமாகிய, தமது சபையின் மகிமையடைந்த அங்கத்தினர்கள் - உபத்திரவ காலத்தின்போது தங்கள் பிள்ளைகளையும், நண்பர்களையும் பராமரிப்பதற்கும், அவர்களுக்கு நன்மையாயிராத அனைத்திலிருந்தும் அவர்களுக்கு உதவியளித்திடுவதற்கும் அனுமதித்திடுவார் என்ற நம்பிக்கையில் நாம் இளைப்பாறலாம். மாம்சத்தில் பிள்ளைகளோடு இருந்து செய்வதைக்காட்டிலும், மகிமையில் பிள்ளைகளுக்கு உதவிசெய்ய நன்கு முடிகிற மற்றும் உதவிடும் பாதுகாவலர்களாக நாம் காணப்படுவோம்; இதைவிட நாம் வேறு எதை எதிர்ப்பார்த்திட வேண்டும்.

தங்கள் பிள்ளைகளுக்குப் பெற்றோர்களால் முடிந்த சிறந்த ஏற்பாடு, வார்த்தையின் மூலமாயும், மாதிரியின் மூலமாயும் நீதியில் உண்மையுள்ள அறிவுரைகளைக் கொடுப்பதேயாகும். "கர்த்தருக்குப் பயப்படுதலே ஞானத்தின் ஆரம்பம்" என்பதை நினைவில்கொள்ளுங்கள். ஆகையால் இரட்சிப்பின் திட்டத்திலும், யுகங்களுக்கடுத்தத் திட்டங்களிலும் அவர்களுக்குப் போதிக்கத் துவங்குங்கள். அவர்கள் தேவனுடைய ஞானம், நீதி மற்றும் அன்புகுறித்த உண்மையான புரிந்துகொள்ளுதலுக்குள் வருகையில், இது அவர்களுக்குத் தங்கள் சொந்த நடக்கைத் தொடர்புடைய விஷயத்திலும், சக சிருஷ்டிகளுடன்

நடந்துகொள்ளும் விஷயத்திலும், நீதி மற்றும் அன்புகுறித்த ஆழமான மற்றும் உண்மையான கண்ணோட்டங்களைக் கொடுத்திடும். சாந்தம், தாழ்மைகுறித்தும், பெருமை மற்றும் அகங்காரத்தின் அறிவீனம்குறித்தும் கற்றுக்கொடுங்கள். சிந்தையில் பெருந்தன்மை கொண்டிருப்பதுகுறித்தும், "போதுமென்கிற மனதுடனேகூடிய தேவபக்தியே உண்மையான ஐசுவரியம்" என்பதை அடிக்கடி நினைப்பூட்டி, கொஞ்சத்தில் சந்தோஷமாய் இருப்பதுகுறித்தும் கற்றுக்கொடுங்கள். "தேசத்திலுள்ள சிறுமையானவர்களே, கர்த்தருடைய நியாயத்தை நடப்பிக்கிறவர்களே, அவரைத் தேடுங்கள்; நீதியைத் தேடுங்கள், மனத்தாழ்மையைத் தேடுங்கள்; அப்பொழுது ஒருவேளை கர்த்தருடைய கோபத்தின் நாளிலே மறைக்கப்படுவீர்கள்" (செப்பனியா 2:3) எனும் கர்த்தருடைய வார்த்தைகளை அவர்களுக்கு நினைப்பூட்டுங்கள். உலகத்தின் நிரந்தரமற்ற ஐசுவரியங்களில் ஐசுவரியவான்களாய்க் காணப்படுபவர்களும், தரித்திரராகவோ அல்லது ஐசுவரியவான்களாகவோ காணப்படும் பெருமையுள்ளவர்களும், பொல்லாத செய்கைக்காரர் அனைவரும் விசேஷமாய் உபத்திரவத்திற்குள்ளாகுவார்கள். (மல்கியா 4:1; யாக்கோபு 5:1-6-ஆம்வசனங்களை ஒப்பிட்டுப்பார்க்கவும்).

உபத்திரவ காலத்தின்போது, உலகத்தின் சரித்திரத்திலேயே முதன்முறையாகத் தாழ்மைக்கும், பொறுமைக்கும், அன்பிற்கும், தயவிற்கும், நற்குணத்திற்கும் மதிப்புக் காணப்படும். (எனினும் இத்தகைய உபத்திரவ கட்டம் வருவதற்கு முன்னதாக, பாபிலோன் விழுவதற்கு முன்னதாக, ஜெயங்கொள்ளாதவர்களாகிய "திரள்கூட்டத்தார்" மீது வேறொரு உபத்திரவம் காணப்படும்; இவர்கள் கொஞ்ச காலம் வல்லமையில் உயர்ந்திருக்கும் பாபிலோனால் கடுமையாய்க் குட்டப்படுவார்கள். மேற்கூறிய கருத்துக்கள், மகா உபத்திரவம் வாயிலாகக் கடந்துவரும் இந்தத் திரள்கூட்டம் வகுப்பாருக்குப் பொருந்திடாது. ஏழைகளுக்கும், மனதிலும், சரீரத்திலும் துன்பப்படுபவர்களுக்கும் சேவைச் செய்வது என்பது மாபெரும் சிலாக்கியமாய் இருக்கின்றபடியால், உபத்திரவ காலம் வருகையில் நம் பிள்ளைகள் மற்றவர்களுக்கு நீதியில் ஆலோசனைக் கொடுக்கமுடிகிறவர்களாக மற்றும் கொடுக்க விரும்புகிறவர்களாகக் காணப்படத்தக்கதாகவும், மாம்சத்தில் யுத்தம்பண்ணுவதைத் தவிர்க்கக்கூடியவர்களாக மற்றும் தங்கள் சொந்தப் பாதுகாப்பைக்குறித்து மாத்திரம் சுயநலமாய்ச் சிந்திக்காதவர்களாகக் காணப்படத்தக்கதாகவும், நாம் பிள்ளைகளை இப்படியாகப் பயிற்றுவிக்க பிரயாசப்பட வேண்டும். பிள்ளைகள் எவ்விதமான மனஅழுத்தமான சூழ்நிலைகளிலும் உயர்பட்ச பெருந்தன்மை எண்ணங்களுடன்/ கண்ணியத்துடன் செயல்படத்தக்கதாக, அவர்கள் குணலட்சணத்தில் உறுதியாயும், கூடவே தேவனிடத்தில் விசுவாசம்கொண்டிருக்கவும் ஊக்குவிக்கப்பட வேண்டும்.)

---

R1142

## பிள்ளைகளுக்கான காவல் கோபுரங்கள்

"பிள்ளைகளுக்கு உதவியாய் இருக்கும் ஏதேனும் புத்தகங்கள் இருக்கின்றதா? பிள்ளைகளால் புரிந்துகொள்ளமுடிகிற காவல்கோபுர வெளியீடு ஒன்று காணப்பட வேண்டும் என்று நான் வாஞ்சிக்கின்றேன்" என்று சிலர் கேட்கின்றனர், சிலர் கூறுகின்றனர்.

பிள்ளைகள் வாசிப்பதற்கென்று தயாரிக்கப்பட்ட கட்டுரைகள் எதுவும் நம்மிடம் இல்லை; மேலும் பிள்ளைகளுக்குப் புரியும் விதத்தில் தேவனுடைய திட்டத்தை முன்வைத்திடும் எந்த ஒரு புத்தகத்தையோ

அல்லது பக்கங்களையோ நாங்கள் உங்களுக்குப் பரிந்துரைத்திட முடியாது. இப்படிச் செய்வதும் சாத்தியமாகாத காரியமாகும். பிள்ளைகளுடைய மனங்களானது, தவறான அபிப்பிராயங்கள் அற்றதும், சத்தியத்திற்கு விசேஷமாய் இணங்குகின்றதாய் இருப்பினும்; இன்னுமாக அவர்கள் இயேசுவையும், அவரது அன்பையும், அவரது மீட்பின் வேலையையும், திரும்பக்கொடுத்தலின் வேலையையும் குறித்த அருமையான கதையை விரும்பி உள்வாங்கிக்கொள்கின்றவர்களாய் இருப்பினும் . . . எனினும் பிள்ளைகளுக்குத் தனிப்பட்ட போதித்தல்களும், ஜீவனுள்ள முன்மாதிரியும் அவசியமாயிருக்கின்றது. நீங்கள் தெய்வீகத் திட்டத்தைப் படித்து, அதை அதிகமதிகமாய்ப் புரிந்துகொள்ளும் நிலைக்கு வருகையில், உங்கள் ஒவ்வொரு பிள்ளைகளுக்கும் புரியத்தக்கதாக அதன்படி ஜீவியுங்கள் மற்றும் படிப்படியாக அதை எளிமையாகவும் மற்றும் மிதமாகவும் கற்பியுங்கள் - உங்கள் சின்னஞ்சிறு குழந்தையினுடைய கண்கள்கூட - அதாவது ஆயிர வருஷஅரசாட்சியின் திரும்பக்கொடுத்தலின் ஆசீர்வாதங்கள்குறித்த பிரம்மாண்டமான காரியங்கள் பற்றிக் கேள்வி எழுப்புகையில் குழந்தையினுடைய கண்கள்கூட வியப்பில் அகலமாய் விரியும்.

தெய்வீகச் சித்தத்தினுடைய கொள்கைகளைக் கற்றுக்கொண்டு, அவற்றை உங்கள் வார்த்தை மற்றும் முன்மாதிரியின் மூலமாய், எப்படி ஜீவியத்தின் அன்றாட காரியங்கள் ஒவ்வொன்றிலும் செயல்படுத்திடலாம் என்று பிள்ளைகளுக்குக் காண்பித்துக்கொடுங்கள். பெற்றோர்களே பிள்ளைகளுக்கான மிகச் சிறந்த ஆசிரியர்களாய்க் காணப்படுகின்றனர்; மேலும் மதசம்பந்தமான பயிற்சி அளிக்கப்படத்தக்கதாகப் பிள்ளைகளை ஞாயிறு பள்ளிகளினிடத்தில் ஒப்புக்கொடுப்பது என்பது மிகவும் தவறாய்ப் புரிந்துகொள்ளப்பட்ட கருத்தாகும்; இந்த ஞாயிறு பள்ளிகளில் பிள்ளைகள் உண்மையில் கொஞ்சமே நன்மை அடைகின்றனர், மாறாக பெருமையையும், விளம்பரமாகிடுவதற்கான விருப்பத்தையும் தோற்றுவிப்பதற்கும், வளர்த்துவதற்கும்தான் மிக அதிகமாய் ஏதுவாகுகின்றனர்.

குழந்தைகளுக்கான சில புத்தகங்களும், கட்டுரைகளும் இருக்கின்றன, மேலும் அவை கவனமாய்த் தெரிந்தெடுக்கப்பட்டால், ஒழுக்கம் வளர்வதற்கு உதவியாகக் காணப்படலாம். பொதுவாகவே வாசிப்பதற்கான விருப்பம் உருவாகுவதுவரையிலும், பிரயோஜனமான, உபயோகமான புத்தகங்களைப் பிள்ளைகளால் புரிந்துகொள்ளமுடியாது எனும் அனுமானத்தினால், நலமானதையும், ஆரோக்கியமானதையும் தவிர்த்த நிலையில், எளிமையான புத்தகங்களானது பிள்ளைகளுடைய கரங்களில் கொடுக்கப்படுகின்றது. அவர்களால் நன்கு படித்து வாசிக்க முடிகிறபோது, அவர்கள் பிரயோஜமான/வாசிப்பதற்குத் தகுதியான புத்தகங்களைப் புரிந்துகொள்ள முடிகின்றவர்களாய் இருப்பார்கள்.

ஆகையால் பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளுக்கு பலத்தின் கோபுரங்களாகவும், ஒழுக்கம் மற்றும் தேவன்பற்றிக் கற்றுக்கொடுக்கும் விஷயத்தில் பிள்ளைகளுக்கு ஆசிரியர்களாகவும் இருப்பார்களாக; மேலும் தேவனும் உங்களது உண்மையான பிரயாசங்களுக்குத் தமது ஆசீர்வாதத்தினை அருளுவார். உங்கள் பிள்ளைகள் மாத்திரம் ஆசீர்வதிக்கப்படாமல், நீங்களும்கூட இவ்விஷயத்திலுள்ள உண்மையின் நிமித்தமும் ஆசீர்வதிக்கப்படுவீர்கள். உங்கள் பிள்ளைகளிடத்தில் நீங்கள் பெற்றிருக்கின்றதும், அவர்களைத் தேவ வசனத்தின் ஆவிக்கு இசைவாக உபதேசத்திலும், நடைமுறையிலும் பயிற்றுவிப்பதுமாகிய பொறுப்புகளை ஒரு ஞாயிறு பள்ளி ஆசிரியர்மீதோ அல்லது வேறு யார்மீதோ நீங்கள் மாற்றிவிட முடியாது. நீங்கள் உலகத்திற்குள்ளாய் பிள்ளைகளைக் கொண்டுவந்திருக்கின்றீர்களானால், அவர்கள் பகுத்தறிவின் வயதை அடைவது வரையிலும் தேவன் முன்னிலையில், அவர்கள் விஷயத்தில் நீங்கள் கடமை ஒன்றினைப் பெற்றிருக்கின்றீர்கள்; பெரியவர்களாகிய மற்றவர்களுக்குச் சத்தியத்தைப்

போதிக்கும் மற்றும் பிரசங்கிக்கும் மகிமையான மற்றும் முக்கியமான வேலையில் பங்கெடுப்பதற்காகக்கூட, மேற்கூறிய கடமையானது ஒதுக்கிவைக்கப்படக்கூடாது.

சமீபத்தில் ஒரு சகோதரன் பின்வருமாறு கவலையுடன் தெரிவித்ததாவது: யுகங்களுக்கடுத்த தேவனுடைய திட்டம் குறித்த சத்தியத்தினைக் கண்டுகொள்வதற்கு முன்னதாக, அவர் தனது ஞாயிற்றுக்கிழமையைச் சபை வேலைகளிலும், YMCA வேலைகளிலும் காலைமுதல் இரவுவரை செலவிடுவாராம்; மற்ற வேலைகள் அனைத்தையும்விட முதலாவதாகத் தன்னால் நிறைவேற்றப்பட வேண்டிய கடமையாகிய - தன் சொந்தக் குடும்பத்தின் ஆவிக்குரிய காரியங்களைப் பார்த்துக்கொள்ளும் காரியத்திற்கு எவ்விதமான கவனமும் காட்டாமல் இருந்தாராம். இதில் மற்றவர்களைப்போல இவரும் தவறான இறையியல் கோட்பாடுகளினால் தவறாய் வழிநடத்தப்பட்டிருந்திருக்கின்றார்; அதாவது நித்திய சித்திரவதையினின்று "ஆத்துமாக்களைக் காத்துக்கொள்ளும்படிக்கு" தேவன் தன்னை அனுப்பியுள்ளார் எனும் தவறான கருத்தினால் வழிநடத்தப்பட்டிருந்திருக்கின்றார்.

இப்பொழுதும் வைராக்கியத்துடன் காணப்படும் இச்சகோதரன், தவறான அபிப்பிராயங்கள் ஏதும் இல்லாமல், தேவ வசனத்தின்மீது பண்ணின ஆராய்ச்சியின் விளைவாய்ப் பெற்றுக்கொண்ட "தெளிந்த மனதின் ஆவியினால்" மிகவும் சரியாய் வழிக்காட்டப்பட்டுள்ளார். இப்பொழுது கிறிஸ்துவின் மரணமானது அனைவரையும் மரணத்திலிருந்து மீட்டுள்ளது என்பதையும், தேவனுடைய "ஏற்ற காலத்தில்" - ஆயிர வருஷயுகத்தில் --

"சாபங்களை அகற்ற தம் ஆசீர்வாதங்கள்தனை
புரண்டோடப்பண்ண வருகின்றார்"

என்பதையும் அச்சகோதரன் காண்கின்றார்.

கிறிஸ்துவைக் கண்டுகொண்டு, அவரது தயவுகளைச் சுவைத்துள்ள தான், இந்த நற்செய்திகளைக் கேட்கும் செவிகள் உடையவருக்கு - தன் சொந்த வீட்டாருக்கு முதலாவதாகச் சொல்லும் சிலாக்கியம் தனக்கு இப்பொழுது இருக்கின்றது என்று அச்சகோதரனால் காணமுடிந்தது; மேலும் நற்செய்திக்குக் கேட்கும் செவிகள் பெற்றிராதவர்களைப் பொறுத்தமட்டில், இவர்களுக்காய்த் தான் துக்கப்பட வேண்டியதில்லை, காரணம் இவர்கள் அனைவரும் தம்முடைய தயவு குறித்தும், இவர்களுக்கான தம்முடைய அநேகம் ஏற்பாடுகள் குறித்துமான சத்திய அறிவிற்குள்ளாக வர வேண்டும் என்றும், அனைவரும் இரட்சிக்கப்பட வேண்டும் என்றும், சித்திரவதைகளிலிருந்து அல்ல, மாறாக இரண்டாம் மரணத்தினின்று - அழிவினின்று தப்பி நித்திய ஜீவினைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்றும் தேவன் ஏற்கெனவே ஏற்பாடுபண்ணியுள்ளர் என்று அச்சகோரனால் இப்பொழுது காணமுடிகிறது. அச்சகோதரன் இப்பொழுது நல்லத் தேவனுடைய நல்ல வார்த்தைகளினுடைய நியாயமான போதனைகளின் அடிப்படையில் நியாயமான சந்தோஷம், சமாதானத்தையும் கொண்டவராகவும், புத்தியுள்ள ஆராதனை ஏறெடுக்கின்றவராகவும் காணப்படுகின்றார்.

தேவன் அன்பு குழந்தைகளை ஆசீர்வதிப்பாராக; அர்ப்பணம்பண்ணியுள்ள பெற்றோர்களானவர்கள் தேவனால் போதிக்கப்பட்டவர்களாகவும், பக்குவமாக்கப்பட்டவர்களாகவும் காணப்படுவார்களாக; பிள்ளைகள் பகுத்தறிவின் வயதை அடைவதுவரையிலும், தங்கள் பிள்ளைகள்மீது நீதியான, அன்பினால் ஏவப்பட்ட அதிகாராம் கொண்டிருப்பார்களாக; பிள்ளைகளுக்கான பெலத்தின் கோபுரங்களாக இருப்பார்களாக; தங்கள் பிள்ளைகள் தங்கள் வாயிலாக ஆண்டவரின் மாபெரும் வேலையில்

பங்கெடுக்கத்தக்கதாகப் பலமுள்ள இருதயங்களையும், ஆயத்தமான கரங்களையும், அர்ப்பணிக்கப்பட்ட சித்தங்களையும் உடைய இளைஞனாகவும், வாலிபப் பெண்ணாகவும் வளர்ந்து வருவதுவரையிலும், பிள்ளைகளைக் கர்த்தருக்கேற்ற சிட்சையிலும், போதனையிலும் வளர்ப்பார்களாக.

பரிசுத்தவான்களின் பிள்ளைகள் சத்தியத்தினை ஏற்றுக்கொண்டு வருகின்றனர் என்றும், அதன் ஆவியினைக் கிரகித்துக்கொண்டு வருகின்றனர் என்றும், பத்து, பன்னிரண்டு வயதுள்ள சில பிள்ளைகள் அவர்களால் இயன்றமட்டும் சுறுசுறுப்பான missionaries/ஊழியக்காரர்களாய்க் காணப்படுகின்றனர் என்றும் அநேகம் திசைகளிலிருந்து கேள்விப்பட்டதில் நாங்கள் மகிழ்ச்சியடைகின்றோம். வேறு ஒரு காவல்கோபுர கட்டுரையில் எவ்விதங்களில் பிள்ளைகள் அறுவடை வேலையைப்பண்ணிடலாம் என்பதற்கான யோசனைகளை நீங்கள் காணலாம்; இப்படியாகப் பிள்ளைகள்/பதிலாள்கள் மூலம், நேரம் இல்லாத (busy) தாய்மார்கள் சில அறுவடைப் பணிகளையும் பண்ணிடலாம்.

- திருமதி C. T. ரசல்.

---

R5908 [தெரிந்தெடுக்கப்பட்ட பத்தி]

## கடைசியாக, சகோதரரே… சிந்தித்துக்கொண்டிருங்கள்
## பிலிப்பியர் 4:8

மனதினுடைய மகா வல்லமையைக்குறித்தும், நமது ஜீவியத்தின் காரியங்கள் அனைத்தின் மீதான அதன் ஆற்றல்மிக்கச் செல்வாக்குக்குறித்தும் உணர்ந்துள்ளவர்களாகக் கல்விமான்களிலும், விஞ்ஞானிகளிலும்கூட வெகுசிலரே காணப்படுகின்றனர். கருநிலையில் இருக்கும் தங்கள் குழந்தைகளில், பண்பு உருவாகும் விஷயத்தில், தங்கள் சிந்தனைகளானது பெரும் பங்கு வகிக்கின்றது என்றும், ஒன்றில் உதவிகரமான அல்லது பாதகமான இயல்புகளைக் கொணர்கிறதாய் இருக்கும் என்றும் ஒரு சில தாய்மார்களே உணர்ந்திருக்கிறார்கள். இதைக்குறித்து உணர்ந்தவர்களாக அல்லது கர்ப்பக்காலத்தின்போது, தங்களது மனைவிமார்களின் மனங்களை உயர் எண்ணங்களினாலும், உயர் குறிக்கோள்களினாலும், உயர் இலட்சியங்களினாலும், அழகான, கலைநயமிக்க, எழில் மிக்க, தூய்மையான, பயபக்திக்குரிய, ஆவிக்குரிய காரியங்களுக்கடுத்த எண்ணங்களினாலும் எழுச்சியுற செய்வதன் மூலமாய் நற்குணமுள்ள பிள்ளைகளைக்கொணர்வதில் தங்கள் மனைவிமார்களோடு ஒத்துழைக்க நாடுபவர்களாக ஒரு சில தகப்பன்மார்களே காணப்படுகின்றனர். தங்கள் பிள்ளைகள் விஷயத்தில் நன்மைக்கேதுவான அல்லது தீமைக்கேதுவான தாயினுடைய மனதின் ஆற்றலைக்குறித்து ஜனங்கள் அறிய வருகையில், இது அநேகம் குடும்பங்களில் அபார மாற்றத்தினைக் கொண்டுவந்திடும் என்பதில் ஐயமில்லை; ஏனெனில் பெரும்பான்மையான ஜனங்கள் தவறு செய்வதைத் காட்டிலும், சரியானதையே செய்ய விரும்புவார்கள் என்பதும், இவர்களுக்கான பிரதான சிரமங்களிலும், இடர்பாடுகளிலும் ஒன்று அறியாமை என்பதும், எங்களது நம்பிக்கையாய் இருக்கின்றது.

---

R3267 [தெரிந்தெடுக்கப்பட்ட பத்திகள்]

## என் மகனாகிய அப்சலோமே, என் மகனே
### 2 சாமுயேல் 18:24-33

"மூடபுத்திரன் தன் பிதாவுக்குச் சலிப்பும், தன்னைப் பெற்றவர்களுக்குக் கசப்புமானவன்." (நீதிமொழிகள் 17:25)

தன் மகனுக்காக இராஜாகொண்டிருந்த அன்பானது, சரியான நேரத்தில் எடுக்க வேண்டிய மிக ஏற்ற நடைமுறை வழியினை எடுத்துக்கொள்ளாமல் இருந்தது என்பது வருந்தத்தக்க காரியமாகும். இவர் ஞானமுள்ள தகப்பனாய் இருப்பதைவிட செல்லங்கொடுக்கும் தகப்பனாய் இருந்துவிட்டார். இந்த இளைஞனின் இயல்பான திறமைகளின் மினுக்கும், பகட்டும் ஜனங்களை மாத்திரம் வசீகரிக்காமல், அவரது தகப்பனையும் வசீகரித்துள்ளது என்பது உறுதியே . . . இதனால் அவன் விரும்பின அனைத்தையும் பெற்றுக்கொண்டவனாய் இருந்தான்; மேலும் கர்த்தருக்குப் பயப்படுதலே ஞானத்தின் ஆரம்பம் என்றும், ஞானம் சுட்டிக்காண்பித்திடும் இப்பாதையில் மாத்திரமே உண்மையான ஐசுவரியம் கண்டடையப்படமுடியும் என்றும், தான் கற்றுக்கொண்ட விலையேறப்பெற்ற படிப்பினைகளை இராஜா தன் குமாரனுடைய விஷயத்தில் செயல்படுத்திட தவறிவிட்டார். தன் குமாரனுக்காய் இவர் பெற்றிருந்த ஞானமற்ற அன்பானது தன் குமாரன் தான்தோன்றித்தனமாக/கட்டுப்பாடற்று வாழட்டும் என்றும், அதிகம் கட்டுப்படுத்தப்பட வேண்டாம் என்றும் எண்ணங்கொள்ள இராஜாவை வழிநடத்திற்று; மேலும் இப்பொழுது அவர் பின்விளைவைக் கண்டபோது அவருடைய இருதயம் துக்கத்தினால் துடிதுடித்தது. இப்படியாகவே அநேகம் தகப்பன்மார்களும், அநேகம் தாய்மார்களும் காணப்படுகின்றனர் - இவர்கள் கர்த்தருக்குரியவர்களாக உண்மையில் இருப்பினும், வேதனையான அனுபவங்கள் வாயிலாகக் கர்த்தர் தங்களுக்குக் கற்பித்துத் தந்ததான படிப்பினைகளைத் தங்கள் பிள்ளைகள் விஷயத்தில் செயல்படுத்த தவறிப் போகின்றவர்களாக இருக்கின்றனர். இத்தகைய அன்பின் ஞானமின்மைக்குறித்து விமர்சனம் தெரிவிப்பதற்கும், இதில் கிறிஸ்தவ பெற்றோர்களுக்குக் காணப்படும் படிப்பினைகளை நாம் சுட்டிக்காட்டுவதற்கும் அவசியமில்லை; அதுவே சுட்டிக்காண்பிக்கின்றது; மேலும் இதனை நமது பாடத்தினுடைய ஆதாரவசனத்தின் வார்த்தைகளாகிய, "மூடபுத்திரன் தன் பிதாவுக்குச் சலிப்பும், தன்னைப் பெற்றவர்களுக்குக் கசப்புமானவன்" என்று ஞானமுள்ள குமாரனாகிய சாலொமோன் பேசுகையில், கனிவாக வெளிப்படுத்திட்டார்; மேலும் "பிரம்பைக் கையாடாதவன் தன் மகனைப் பகைக்கிறான்" எனும் வார்த்தைகளையும் கவனியுங்கள். நடைமுறைச் சார்ந்த கண்ணோட்டத்தின்படி பார்க்கையில், மேலோட்டமாய்க் கவனிக்கிறவனுக்குக் காரியமானது எப்படித்தான் காட்சியளித்திட்டாலும், ஞானத்தின் சாரமானது "பிள்ளையானவன் நடக்க வேண்டிய வழியிலே அவனை நடத்து; அவன் முதிர்வயதிலும் அதை விடாதிருப்பான்" (நீதிமொழிகள் 22:6) எனும் அவரின் கண்டுபிடிப்பிலேயே அடங்கியுள்ளது. தங்கள் பிள்ளைகளை ஒன்றில் சரியான வழியில் அல்லது தவறான வழியில் நடப்பிப்பவர்கள் எதிர்க்காலத்திற்கான சந்தோஷங்களை அல்லது வருத்தங்களைத் தங்களுக்காகவே வித்திட்டுக்கொள்கின்றனர் எனும் உண்மையானது பெற்றோர்களினால் முழுமையாகப் புரிந்துகொள்ளப்படாததாகத் தெரிகின்றது.

தன் குமாரன் குறித்து "பிள்ளையாண்டான் சுகமாய் இருக்கிறானா?" எனும் இராஜாவாகிய தாவீதின் கேள்வியானது தங்கள் குமாரர்கள் மற்றும் தங்கள் குமாரத்திகள் தொடர்புடைய விஷயத்தில் ஒவ்வொரு தகப்பனுடைய, ஒவ்வொரு தாயினுடைய கேள்வியாக இருந்திட வேண்டும்; ஆனாலும் தாவீது

செய்ததுபோன்று செய்யாமல் இருப்பார்களாக - அதாவது பாவமானது முளைவிட்டுப் பூப்பூத்துத் தீமையின் கனிகளைக் கொணர்வதுவரையிலும் காத்துக்கொண்டு இருக்காமல் இருப்பார்களாக. தங்கள் பிள்ளைகள் விஷயத்திலிருக்கும் தங்கள் கடமைகளை உணர்ந்தவர்களாகக் குழந்தைப்பருவம் முதற்கொண்டே இதை நிறைவேற்றத் துவங்குவார்களாக. தங்கள் பிள்ளைகள் விஷயத்தில் கிறிஸ்தவ பெற்றோர்கள் பெற்றிருக்கும் கடமையானது, கர்த்தருக்கு அவர்கள் பெற்றிருக்கும் தங்கள் கடமைக்கு அடுத்தப்படியானதாகும்; பரிசுத்தவான்களுடைய பூமிக்குரிய கடமைகள் அனைத்தின் மத்தியிலும் பெற்றோருக்குரிய கடமையானது முதலாவதாக இருக்கும்படிக்குக் கர்த்தர் சுட்டிக்காண்பித்துள்ளார் என்பது உண்மையே.

---

R2279 [தெரிந்தெடுக்கப்பட்ட பத்திகள்]

# யோவான்ஸ்நானன் மற்றும் அவரது கொலையாளிகள்

## மத்தேயு 14:1-12

இந்த ஒரு பதிவும்கூடத் தவறான மனங்கொண்டுள்ள ஒரு ஸ்திரீயினால் எத்தனை மாபெரும் செல்வாக்கினைச் செயல்படுத்தமுடியும் என்பதைக் காண்பிக்கின்றது. (ஏரோதியாளாகிய) இந்தப் பொல்லாத ஸ்திரீக்கு இடம் கொடுக்கத்தக்கதாக தனது சட்டப்பூர்வமான மனைவியை ஏரோது தள்ளிவிடும் அளவிற்கு, ஏரோது அவளது செல்வாக்கின் கீழ்க்காணப்பட்டான்; தன் தாயினுடைய பொல்லாத விருப்பத்தினை நிறைவேற்றுவதற்கு வேண்டி ஏரோதினுடைய இராஜ்யத்தின் பாதியைப் பெற்றுக்கொள்ளும் ஆசையைத் துறந்துவிடும் அளவிற்கு ஏரோதியாளின் மகளும் அவளது செல்வாக்கின் கீழ்க்காணப்பட்டாள். இங்கு நமக்கு முன்புள்ள ஒரு பாடம் என்னவெனில், . . . ஸ்திரீகள் இயல்பாகவே ஆண்களைக் காட்டிலும் உணர்ச்சிப் பூர்வமானவர்களாகவும், அநுகூலமான சந்தர்ப்பங்களில் நல் உணர்வுகளினால் கட்டுப்படுத்தப்பட்டவர்களாகவும் இருப்பினும், ஒருவேளை அவர்கள் தீய மனமுள்ளவர்களாகவும், பொல்லாதவர்களாகவும் மாறிப்போனால், இதற்கேற்ப தங்கள் சகோதரர்களைக் காட்டிலும் பொல்லாப்பின் உச்ச எல்லைகளுக்கும்கூடச் சென்றுவிடும் தன்மையுடையவர்களாய் இருப்பார்கள். பாவம் மற்றும் சுயநலத்தின் தீமையான ஆவி இல்லாதவர்களாக மாத்திரம் இராமல், கிறிஸ்துவின் ஆவியினால், பரிசுத்த ஆவியினால் நிரம்பிக் காணப்படுவதும் ஆண்களுக்கு மிக முக்கியமானதாகும்; இப்படியே நன்மை அல்லது தீமைக்கேதுவான உணர்ச்சிகரமான இயல்பை அதிகமாய்ப் பெற்றிருக்கும் ஸ்திரீகளுக்கும் மிக அதிக முக்கியமாய்க் காணப்படும்.

தங்கள் குமாரத்திகள் விஷயத்தில் நன்மைக்கு அல்லது தீமைக்கு ஏதுவாக வல்லமை பெற்றிருக்கும் தாய்மார்களுக்கு எத்துணை ஆலோசனை தரும் படிப்பினை இங்குக் காணப்படுகின்றது. வேதவாக்கியங்களில் சொல்லப்பட்டது போன்று ஸ்திரீகளின் செல்வாக்குச் செயல்படுத்தப்படுவதற்கான சரியான எல்லை இல்லத்திலே ஆகும் என்று இங்கு நாங்கள் குறிப்பிடுகின்றோம். ஓர் உண்மையான, தூய்மையான, நற்குணமுள்ள, விவேகமான தாயானவள் தன் கணவன் விஷயத்திலும், குமாரர்கள் விஷயத்திலும், தன் குமாரத்திகள் விஷயத்திலும் நன்மைக்கேதுவாய் அல்லது தீமைக்கேதுவாய்க் கிட்டத்தட்ட சொல்லமுடியாத அளவிற்குள்ள செல்வாக்கினைப் பெற்றிருப்பாள். சில நல்ல நோக்கமுள்ள ஆனால் வேதவாக்கியங்களின்படி வழிநடத்தப்படாத தாய்மார்கள் தெய்வீக ஏற்பாட்டினால் தங்கள் கைகளில் வைக்கப்பட்டுள்ளதான குடும்பச் சிலாக்கியங்கள், வாய்ப்புகள் மற்றும் கடமைகளை

விட்டுவிட்டு உலகத்தைச் சீர்த்திருத்தம்பண்ணும்படிக்கு உலகத்திற்குள் கடந்து செல்பவர்கள், எத்தனை மாபெரும் தவறு செய்கின்றவர்களாய் இருக்கின்றனர். பெண் சீர்த்திருத்தவாதிகள் மற்றும் மகளீர் வாக்குரிமைக்காகப் போராடும் பெண்களின் குடும்பங்கள் எவ்வளவாய்ப் புறக்கணிக்கப்பட்டுக் காணப்பட்டு, இதன் தீமையான பின்விளைவுகள் கணவன்மார்கள்மீதும், பிள்ளைகள்மீதும் காணப்படுவதை நாம் பார்க்கின்றோம். ஒவ்வொரு தாயானவளும் தன் சொந்தக் குடும்பத்திலும், குடும்ப வட்டாரங்களிலும், கர்த்தருடைய குடும்பமாகிய சபையில் அவளுக்குத் திறக்கப்படும் வாய்ப்புகளிலும், அவள் தனது ஒவ்வொரு தாலந்தையும், வரத்தையும் திவ்விய வசனத்திற்கும், பரத்திலிருந்து வரும் ஞானத்திற்கும் இசைவாகச் செயல்படுத்துவதற்கான திரளான வாய்ப்பினைப் பெற்றிருக்கின்றாள் என்பதை உணர்ந்துகொள்வாளாக.

---

R5296 [தெரிந்தெடுக்கப்பட்ட பத்திகள்]

# ஏலியின் வாழ்க்கையிலிருந்த நடைமுறை பாடங்கள்

## 1 சாமுயேல் 3:18

ஏலியின் வீட்டில் துன்பத்தின் சம்பவம் வரப்போகின்றது என்று தெரிவிக்கும் ஒரு செய்தியை, கர்த்தர் சாமுயேலின் வழியாக ஏலிக்கு அனுப்பினார். கர்த்தர் அனுமதிக்க சித்தம் கொண்டுள்ள பெருந்துன்பத்தைப்பற்றிக் கேட்ட மாத்திரத்தில்தான், நமது பாடத்தின் ஆதார வசனத்தினுடைய வார்த்தைகளை ஏலி பேசுகின்றார்; இன்னுமாக பெருந்துன்பம் வந்த பிற்பாடு என்று இல்லாமல், பெருந்துன்பம் வருவதற்கு முன்னதாகவே ஏலி, அதற்குக் கீழ்ப்படிந்து தன்னை ஒப்புக்கொடுப்பதையும் இவ்வசனத்தின் வார்த்தைகள் சுட்டிக்காட்டுகின்றது. ஆகவே இவ்வசனத்தின் வார்த்தைகளானது, ஏலியிடம் வெளிப்படும் தாழ்மையைக் காண்பிக்கின்றதாய் இருக்கின்றது.

ஏலி அநேக வருடங்களாக, இஸ்ரயேலில் நியாயாதிபதியாக இருந்திருக்கின்றார்; இன்னுமாக பதிவுகளை வைத்துப்பார்க்கையில், இவர் பின்பற்றத் தகுந்த மாதிரியாகவே, அதாவது தனது சகல செயல்களிலும் நீதியுடன்தான் காணப்பட்டிருந்திருக்கின்றார். ஆனால் இவருடைய குமாரர்கள் "பேலியாளின் மக்கள்" என்று அழைக்கப்பட்டிருந்தனர்; இவர்கள் பல்வேறு வழிகளில் பொல்லாதவர்களாகக் காணப்பட்டார்கள். ஏலியிடமிருந்து வெளிப்பட்ட செல்வாக்கானது, இஸ்ரயேல் ஜனங்களுக்கு நன்மை பயப்பிக்கின்றதாய் இருக்க, ஏலியின் பராமரிப்பின் கீழிலும், அவருடைய ஒப்புதலின்கீழிலும் இன்னொரு முரண்பாடான செல்வாக்கும் உதித்து வளர்ந்தது. ஒருவேளை இந்தப் பொல்லாத செய்கைக்காரர்கள், ஏலியின் சொந்தக் குடும்பத்தாராக இல்லாதிருந்திருப்பார்களானால், சந்தேகத்திற்கு இடமின்றி ஏலி, நியாதிபதி எனும் தனக்குரிய அதிகாரத்தின்படி இவர்களிடத்தில் செயல்பட்டிருந்திருப்பார். இங்குத் தேவபக்தியாய் இருந்தும், தனது குடும்பத்திற்குரிய தலைவன் என்ற நிலையில் குறைவுடன் இருக்கும் மனிதனைப் பார்க்கின்றோம். இவர் இவருடைய வீட்டின் தலைவனாக, தனது பிள்ளைகளை நடத்த வேண்டிய வழியில் பயிற்றுவித்திருக்க வேண்டும்; அவர்களை இவர் நீதியில் பயிற்றுவித்திருக்க வேண்டும். இல்லையேல் இவர்கள் இவருடைய குடும்பத்தின் அங்கத்தினர்களிலிருந்து தள்ளப்பட்டு, நியாயம் வழங்குபவராகிய இவரால் செயல்படுத்த முடிகின்ற குறிப்பிட்ட கட்டுப்பாட்டுகளுக்குள் இவர்கள் கொண்டுவரப்பட்டிருக்க வேண்டும்.

## ஏலியின் குணலட்சணத்தில் காணப்பட்ட வழு/தவறு

இச்சம்பவத்திலிருந்து, தேவன் நம்மிடத்திலும், நம்முடைய குடும்பத்திலிருந்தும் எதிர்ப்பார்க்கின்றவைகள் தொடர்பான ஒரு பாடத்தை நாம் எடுத்துக்கொள்ளலாம். ஒருவேளை ஒரு பிள்ளை திருடுகிறதாய், ஒழுக்கம்கெட்டதாய், தேவையின்றிக் குறுக்கிடுகின்றதாய் அல்லது பாதகம் ஏற்படுத்துகின்றதாய் இருக்குமாயின், கிறிஸ்தவ பெற்றோர் இப்படியாகத் தொடர அனுமதிக்கக்கூடாது. இதை எப்படியேனும் முடிவுக்குக் கொண்டுவருவதற்குக் கிறிஸ்தவ பெற்றோர்கள் கடமைப்பட்டிருக்கின்றனர். எனினும் தேவனுக்கான பயபக்தி தொடர்புடைய விஷயத்தில் நாம் கொண்டிருக்கும் கருத்திலிருந்து பிள்ளையானது வித்தியாசமான கருத்துக்கொண்டிருக்குமானால், நாம் பிள்ளையைக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவந்தாக வேண்டும் என்று எண்ணிவிடக்கூடாது.

பெருந்துன்பம் பற்றின இச்செய்தியானது, சிறுவனாகிய சாமுயேல்மூலம் ஏலிக்கு வந்ததை நாம் நினைவில்கொள்ள வேண்டும். அக்காலத்தில் தீர்க்கதரிசிகளுக்கு நடப்பதுபோன்று கர்த்தர் தன்னை அழைக்கும் குரலைச் சாமுயேல் கேட்டார். ஏலியின் குரல் என்று சாமுயேல் எண்ணிக்கொண்டு, ஏலியினிடத்திற்குப்போய், நான் என்ன செய்ய வேண்டும்? என்று கேட்டார். ஏலி தான் அழைக்கவில்லை என்றும், திரும்பிப்போய்ப் படுத்துக்கொள்ளுமாறும் சாமுயேலிடம் கூறினார். இப்படியாக மூன்றுதரம் நடந்தது; கர்த்தர் பிள்ளையை அழைப்பதாக ஏலி புரிந்துகொண்டார். ஆகவே சாமுயேலை மீண்டும் போய்ப் படுத்துக்கொள்ளுமாறும், ஒருவேளை மீண்டும் அழைக்கும் குரல் கேட்குமானால், "கர்த்தாவே சொல்லும், அடியேன் கேட்கிறேன்" என்று சொல்லி, சாமுயேல் கர்த்தருக்கு ஊழியஞ்செய்யக் கொண்டிருக்கும் தனது ஆயத்தத்தைக் காண்பிக்குமாறும் ஏலி சாமுயேலிடம் கூறினார். சாமுயேல் தனக்குச் சொன்னபடியே செய்தார், மேலும் ஏலி தனது குடும்பம் சார்ந்த விஷயத்தில் கொண்டிருந்த அஜாக்கிரதையின் காரணமாக, அவர்கள் ஆசாரியத்துவத்திலிருந்து அறுப்புண்டுப் போவார்கள் என்று கர்த்தர் சாமுயேலிடம் கூறினார்.

## ஏலியின் அருமையான கீழ்ப்படிதல்

கர்த்தர் பயன்படுத்தின சாமுயேலாகிய கால்வாய்க்கு எதிராக ஏலி எவ்விதமான கோபத்தையும் வெளிக்காட்டாத விஷயம் குறிப்பிடத்தக்கக் காரியமாகும்! சாமுயேலின் பெற்றோர்கள், சாமுயேலை அர்ப்பணித்ததுமுதல், ஏலி சாமுயேலைத் தனது குடும்பத்திற்குள் ஏற்றுக்கொண்டிருந்தார். பிள்ளையாகிய சாமுயேல் வழியாகத் தேவன் தன்னிடம் பேசுவதன்மூலம், தேவன் தன்னைப் புறக்கணிக்கின்றார் என்று புரிந்துகொண்ட காரியமானது கோபத்தை மூட்டுவதற்குரிய பெருமையின் ஆவியைத் தூண்டிவிடுவதற்குப் போதுமான காரணமாக இருந்திருக்கும். ஆனால் ஏலியின் நடத்தையோ, அவருடைய இருதயம் மென்மையாய் இருப்பதைக் காட்டுகின்றது. கர்த்தர் தன்னிடம் தெரிவித்ததைச் சாமுயேல் தெரிவித்தபோது, ஏலி: "அவர் கர்த்தர். அவர் தமது பார்வைக்கு நலமானதைச் செய்வாராக, இது கர்த்தருடைய நியாயத்தீர்ப்பு. இது நிச்சயமாகச் சரியானதும்! நிச்சயமாக நல்லதும்தான். கர்த்தர் தம்முடைய பார்வைக்கு நலமானதைச் செய்வாராக, ஒருவேளை என்னுடைய சொந்தக் குடும்பத்திற்கு அழிவு வருவதாகவும், ஒருவேளை ஆசாரியத்துவத்திலிருந்து என்னுடைய குடும்பம் தள்ளப்படுவதாகவும் இருப்பினும், கர்த்தர் தம்முடைய பார்வைக்கு நலமானதைச் செய்வாராக" என்றும் கூறினார்.

ஆசாரியத்துவத்திலிருந்து ஏலியின் குமாரர்கள் தள்ளப்படுவது என்பது ஏலியின் குமாரர்கள் மரித்துப்போவதைக் குறிக்கின்றது, ஏனெனில் ஏலியின் குமாரர்கள் ஆரோனின் ஆசாரியத்துவத்தில் ஆசாரியர்களாக வரும் வரிசையில் காணப்பட்டார்கள். ஏலியின் இவ்வார்த்தைகள் முழுமையாகக்

கீழ்ப்படிந்து ஒப்புக்கொடுப்பதற்கு ஓர் அருமையான உதாரணமாகக் காணப்படுகின்றது. ஏலி ஒருவேளை சில விஷயங்களில் பெலவீனராய்க் காணப்பட்டாலுங்கூட, வேறு விஷயங்களில் பலமாய்க் காணப்படுகின்றார், அதாவது அவருடைய தாழ்மையிலும், கீழ்ப்படிந்து ஒப்புக்கொடுப்பதிலிலும் பலமாய்க் காணப்படுகின்றார். யாரெல்லாம் சாந்தத்துடனும், கற்பிக்கத்தக்க நிலையிலும் தங்கள் விஷயத்தில் காணப்படுகின்றார்களோ, இவர்கள் பெரும்பாலும் இவர்களுடைய கட்டுப்பாட்டின்கீழ்க் காணப்படும் மற்றவர்களைக் கையாளும் விஷயத்தில் போதுமான அளவுக்கு உறுதியுடன் காணப்படுவதில் மிகவும் சிரமப்படுகின்றனர். இவர்களைக் கர்த்தரிடத்தில் கீழ்ப்படியச் செய்கிறதும், சாந்தமாய் இருக்கச் செய்கிறதுமான பண்பானது, இவர்களை மற்றவர்களிடத்தில் இரக்கத்துடனும், கடினமில்லாமலும் இருக்கச் செய்கின்றது. ஆனால் கர்த்தர் மற்றும் அவருடைய வழிநடத்துதல்கள் மற்றும் ஏற்பாடுகள் தொடர்புடைய விஷயத்தில் சாந்தத்துடனும், கீழ்ப்படிந்து ஒப்புக்கொடுத்தலுடனும் நாம் காணப்படும் அதேவேளையில், மற்றவர்கள் தொடர்புடைய விஷயத்திலும் கர்த்தருடைய சித்தத்தை உறுதியாகச்/நிலையாகச் செயல்படுத்த முடியக்கூடிய நிலையில் நாம் காணப்படுவது நல்லதாகும்.

---

R4942 [தெரிந்தெடுக்கப்பட்ட பத்திகள்]

# ஆலயத்தில் அர்ப்பணிப்பு

இயேசு பிறந்து, நாற்பது நாட்கள் ஆனவுடன், யோசேப்பும், மரியாளும் அவரை ஆலயத்தில் அர்ப்பணிக்கும் பொருட்டாக, எருசலேமுக்குக் கொண்டு வந்தார்கள். ஒவ்வொரு குடும்பத்திலும் உள்ள முதற்பிறப்பிற்குச் செய்ய வேண்டிய வழக்கத்தின்படி அவருக்கும் செய்யப்பட்டது. முழுத் தேசத்திலும் உள்ள முதற்பேறானவர்கள் எகிப்திலிருந்து விடுவிக்கப்பட்டபோது முதற்பேறானவர்கள், தேவனுடைய பணிக்கென்று விசேஷமாக அர்ப்பணிக்கப்பட்டுள்ள ஒரு கோத்திரமாகிய லேவியர்களுக்கு அடையாளமாக இருப்பதினால், இந்த முறைமை ஒவ்வொரு தாய்க்குப் பிறக்கும் தலைச்சன் பிள்ளைக்கும் பொருந்தும். முதற்பேறான பிள்ளை தேவனுக்கும், அவருடைய பணிகளுக்கும் விசேஷமாக அர்ப்பணிக்கப்பட வேண்டும்.

இந்த முக்கியத்துவம், இந்தச் சுவிசேஷ யுகத்தில் சேர்க்கப்படும் தெரிந்துகொள்ளப்பட்ட சபையானது, முதற்பேறானவர்களின் சபை என்று அழைக்கப்படுவதிலிருந்து விளங்குகின்றது. மேலும் நம்மைக் குறித்துத் "தம்முடைய சிருஷ்டிகளில் நாம் முதற்பேறானவர்கள்" என்று பரிசுத்தவானாகிய யாக்கோபு கூறுகின்றார் (யாக்கோபு 1:18). சபை முதலாம் உயிர்த்தெழுதலின் வல்லமையினால் பரலோக மகிமைக்குள் சேர்த்துக் கொள்ளப்பட்ட பின்னர், திரும்பக்கொடுத்தலின் முறை மூலம், பூமியின் குடிகள் அனைத்தையும் ஆசீர்வதித்து, பூமிக்குரிய தளத்தில் தேவனுடைய புத்திரர்களாகும் வாய்ப்பை மனுக்குலத்திற்கு அளிக்கக் கூடிய இராஜ்யம் ஸ்தாபிக்கப்படும் (அப்போஸ்தலர் 3:19-21).

விசுவாசிகளின் முன்னிலையில், சில பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளைத் தேவனுக்கு அர்ப்பணிக்கும் வழக்கத்தை நாம் பார்த்திருக்கின்றோம். இப்படிச் செய்வதினால், பிள்ளைகள் மேல் நன்மைக்கு ஏதுவான செல்வாக்கே காணப்படும். அதாவது, பிள்ளைகள் எதிர்க்காலத்தில் தங்கள் பெற்றோர்கள் கர்த்தருக்கு மிகச் சிறந்ததை அர்ப்பணித்ததின் மூலம் வெளிப்பட்ட அவர்களின் பராமரிப்பு, அன்பு மற்றும் பக்தியை எதிர்க்காலத்தில் உணர்ந்துகொள்வார்கள். இப்படியாகப் பிள்ளைகள் கர்த்தருக்குத் தங்களை அர்ப்பணிப்பது தொடர்புடைய விஷயத்தில் அனுகூலமான தாக்கத்தினை அடையப் பெற்றிருப்பார்கள்.

மேலும் தங்களிடத்திலுள்ள சிறந்ததை கர்த்தருக்கு அர்ப்பணிக்கும் பெற்றோர்களும், மிகப்பெரிய ஆசீர்வாதத்தைத் தங்களுக்கு வருவித்துக் கொள்கின்றார்கள். சோதனைகளும், போராட்டங்களும் நிச்சயமாக வரும். ஆனால், அதன் மத்தியிலும், அவர்களுடைய பிள்ளைகள் தேவனுக்கு உரியவர்களே ஆவார்கள். மேலும் இவர்கள், உம் சித்தமே ஆகக்கடவது என்று ஜெபம் பண்ணினால், மற்றவர்களால் அறிந்துகொள்ள முடியாத சமாதானத்தையும், ஆவியில் சந்தோஷத்தையும் பெற்றுக்கொள்வார்கள். இது பிள்ளைகள் பகுத்தறிவு மற்றும் தீர்மானம் பண்ணக்கூடிய வயதை அடையும்போது, அவர்களுடைய தனிப்பட்ட அர்ப்பணிப்பிற்கு அவர்களைத் தகுதியாக்கிடாது என்றாலும், பெற்றோர்களுடைய ஆசீர்வாதமான செல்வாக்கானது, பிள்ளைகள் வயதில் முதிர்ச்சியடைகையில் சத்தியம் மற்றும் நீதியின் விஷயத்தில், தேவனுக்குள் சரியான தீர்மானங்கள் எடுப்பதற்கு உதவியாகக் காணப்படும் என்று நாம் நம்புகின்றோம்.

---

R3593 [தெரிந்தெடுக்கப்பட்ட பத்திகள்]

## நம்முடைய அன்றாட ஜீவியத்திற்கான சில உதவிபுரியும் கோட்பாடுகள்

நாம் நம்மிடத்திலும், நம்முடைய பெலவீனத்திலும் பொறுமையாய் இருப்பதைக்காட்டிலும், மற்றவரிடத்திலும், அவர்களுடைய குற்றங்குறைகளைக் காணும்போதும் மிகுந்த பொறுமையுடன் காணப்பட வேண்டும்.

விழுகையின் காரணமாக முழு உலகமும் சரீர பிரகாரமாகவும், ஒழுக்கரீதியிலும், மனரீதியிலும் ஆரோக்கியமற்றவர்கள் என்பதை நாம் நினைவுகூருகையில், அவர்களுடைய பெலவீனங்களுக்காக நாம் அனுதாபம் கொள்ளவேண்டும். கர்த்தர் தமது விலையேறப்பெற்ற இரத்தத்தின் புண்ணியத்தினால் நமது கறைகளை, கிருபையுடன் மறைக்கச் சித்தமுள்ளவராய் இருக்கையில், நம்மைக் காட்டிலும் மற்றவர்களுடைய பெலவீனங்கள் குறைவாகவோ அல்லது அதிகமாகவோ இருந்தாலும் நாம் அவர்களிடத்தில் அனுதாபமும், உருக்கமான இரக்கமுமே கொள்ளவேண்டும். இக்கோட்பாடு விசேஷமாக உங்கள் குழந்தைகளுக்குப் பொருந்தும். உங்கள் பிள்ளைகளிடத்தில் காணப்படும் பெலவீனங்கள், உங்களிடத்திலிருந்து அல்லது உங்கள் வாயிலாகவே அவர்களுக்குக் கொஞ்சம் வந்துள்ளதால், அவர்களுடைய தப்பிதங்களை கையாளும்போது, நீங்கள் உங்கள் சொந்தத் தவறுகளை எவ்வாறு கையாளுவீர்களோ, அப்படியே அவர்களிடத்திலும் நீதியாய்க் கையாள வேண்டும், . . . அவர்களை நீதியின்படி சரிசெய்ய உண்மையுடனும், கண்டிப்புடனும் கையாள வேண்டும், அதேசமயம் இதை அனுதாபத்துடனும், இரக்கத்துடனும், அன்புடனும் செய்யவேண்டும்.

---

R5832 [தெரிந்தெடுக்கப்பட்ட பத்தி]

## கர்த்தாவே ஜெபம்பண்ணக் கற்றுத்தாரும்

“இடைவிடாமல் ஜெபம்பண்ணுங்கள். எல்லாவற்றிலேயும் ஸ்தோத்திரஞ்செய்யுங்கள்.”

(1 தெசலோனிக்கேயர் 5:17-18)

முழுமையாய் அர்ப்பணம்பண்ணுவதன்மூலம் கிறிஸ்துவின் சீஷனாகியுள்ளவன் தவிர மற்றப்படி வேறு யாருக்கும் தன் ஜெபத்திற்கான பதிலை எதிர்ப்பார்த்திடும் உரிமை இல்லை. அவர் வாயிலாகப்

பிதாவினிடத்தில் வருகிறவர்கள் புறந்தள்ளப்படுவதில்லை (யோவான் 6:37). இவ்விதிக்கு ஒரு விதிவிலக்கு உள்ளது; அது சிறுபிள்ளைகள் வகுப்பார் ஆவர்; அதாவது பொறுப்பாய் நடந்துகொள்வதற்கும், இக்காரியத்தினைப் புரிந்துகொள்வதற்கும் உரிய வயதை அடையாதவர்களாகவும், கிறிஸ்துவின் சீஷர்களாகப் பெற்றோர்களில் ஒருவரை அல்லது பெற்றோர்கள் இருவரையும் பெற்றிருப்பவர்களாகவும் உள்ள குழந்தைகள் ஆவர். பொறுப்புணர்வுள்ள வயது வேறுபடலாம் - சிலருக்கு அது பன்னிரண்டுமுதல் பதினைந்து வயதிற்குள் வரலாம்; சிலருக்கு இதைவிட தாமதமாயும் வரலாம். ஆனால் முழுமையாய்ப் புரிந்துகொள்ளும் மற்றும் பொறுப்புணர்வுடன் நடந்துகொள்ளும் வயதை அடைந்தும், தன்னைக் கர்த்தருக்கு அர்ப்பணம்பண்ணிடாத ஒருவன் ஜெபத்தின் சிலாக்கியத்தினை இழந்துபோவான். ஆனால் அவன் பெற்றோர்களில் ஒருவரை அர்ப்பணம்பண்ணின பெற்றோராய்ப் பெற்றிருக்கும் சிறு பிள்ளையாய் இருக்கையில், அவன் தேவனிடம் ஏறெடுக்கப்பட்ட தன் ஜெபத்திற்கான பதிலை எதிர்ப்பார்த்திடுவதற்கான உரிமையை உடையவனாய் இருப்பான்.

---

R4192 [தெரிந்தெடுக்கப்பட்ட பத்தி]

## இஸ்ரயேலின் தவறான நடத்தை

## 1 சாமுயேல் 8:10-22

## நற்குணசாலியாகப் பிறந்த சாமுயேல்

சாமுயேலின் பயிற்சியானது ஏலியுடன் காணப்பட்டது என்பதையும், ஏலியின் குமாரர்களோ இலஞ்சம் வாங்குகிறவர்களாகவும், திவ்விய சட்டம் மற்றும் நீதிக்குத் தங்களது தவறான உதாரணத்தினால் இழிவு கொண்டுவந்தவர்களாகவும் ஆகிப்போனார்கள் என்பதையும் நாம் மறந்துவிடக்கூடாது. ஆகையால் சாமுயேலின் குணலட்சணத்தினுடைய பிரம்மாண்டத்திற்கும், கொள்கைக்கான அவரது உண்மைக்கும் காரணம் - சாமுயேல் சிறந்த சூழ்நிலைகளின்கீழும், சிறந்த ஆசிரியர்களின்கீழும் காணப்பட்டார் என்று ஆகாது. நாம் இன்னும் திரும்பிப்பார்க்கையில் இவரது பெற்றோர்கள் இவர் சிறு பிள்ளையாய் இருக்கும்போது மாத்திரமல்ல, இவரது பிறப்பிற்கு முன்னதாகவே இவரைக் கர்த்தருக்கு அர்ப்பணித்தார்கள் என்றும், இந்த அநுகூலமான செல்வாக்கினாலேயே கர்த்தருக்குப் பயபக்திகொண்டவராக இவர் பிறந்தார் என்றுமுள்ள காரியத்திலிருந்து உண்மையைக் கண்டுபிடிக்கின்றோம். பெற்றோர்களின் எண்ணங்கள், விசேஷமாகத் தாயின் எண்ணங்களானது, கர்ப்பக்காலத்தின் போது, பிள்ளையினுடைய மனப்பண்புகள் விஷயத்தில் பெரும் செல்வாக்குக் கொண்டிருக்கும் என்பதில் ஐயமில்லை. ஒவ்வொரு பிள்ளையும் தேவனுக்கான, நீதிக்கான, சத்தியத்திற்கான, நன்மைக்கான பெரிதளவிலுள்ள பயபக்தியுடன் பிறந்திட வேண்டும். இப்படியாகப் பிறப்பது என்பது தற்காலத்தினுடைய சூழ்நிலைமைகளின்கீழ் நீதியின் பாதையில் பயணிக்க அனுகூலமான துவக்கத்தினைப் பெற்றிருப்பதாக இருக்கும். இப்படியாகக் கருத்தரிக்கப்பட்டு, பிறந்த குழந்தையாகிய சாமுயேல், கர்த்தருடைய ஊழியத்திற்கென்று ஏலியின்கீழ் ஒப்படைக்கப்படும் காலம்வரையிலும் நன்கு பயிற்றுவிக்கப்பட்டிருப்பார் என்பதிலும் நமக்கு நிச்சயமே. இங்கும் ஒரு பிள்ளை நடக்க வேண்டிய வழியிலே நடத்தப்பட்டால், அவன் அதை விடாதிருப்பான் எனும் உண்மைக்கான சாட்சியினை நாம் பெற்றிருக்கின்றோம். தங்கள் பிள்ளைகளைப் பயிற்றுவித்திடும் விஷயத்தில், அதுவும் கற்றுக்கொடுக்கப்படும் படிப்பினைகள் மிக ஆழமாய் மனதில் பதிந்திடும் அவர்களது அந்த வருஷங்களில் அவர்களைப் பயிற்றுவித்திடும் விஷயத்தில் தங்கள் கைகளில் எத்தகைய பொறுப்புக் காணப்படுகின்றது என்பதைக் கிறிஸ்தவ பெற்றோர்கள் உணர்ந்துகொள்வார்களானால், அது ஓ! எத்துணை நலமாயிருக்கும்.

---

R3393 [தெரிந்தெடுக்கப்பட்ட பத்திகள்]

# ஒரு நல்ல இராஜாவின் தவறு

**2 நாளாகமம் 19:1-11**

"நீங்கள் திடமனதாயிருந்து காரியங்களை நடத்துங்கள், உத்தமனுக்குக் கர்த்தர் துணை."

(2 நாளாகமம் 19:11)

யூதாவின் சரித்திரத்தில் யோசபாத் சிறந்த இராஜாக்களில் ஒருவராகக் காணப்பட்டார். இவர் ஆசாவின் குமாரனாவார். இப்பாடத்தில் பார்க்கப்படும் சம்பவங்கள் நடைபெற்ற காலத்தில் இவர் இருபது வருஷங்கள் அரசாண்டவராகக் காணப்பட்டார். இவர் தன் தகப்பனாகிய ஆசாவைக்காட்டிலும் மிகவும் ஆற்றல்மிக்க சீர்த்திருத்தவாதியாகக் காணப்பட்டார் - இவர் விக்கிரக ஆராதனைச் செய்யப்பட்டிருந்த தோப்புகள் அனைத்தையும் முழுமையாய் அழித்துப்போட்டார்; இவ்விஷயம் இத்தோப்புகளில் சில அழிக்கப்படாமல் காணப்படும்படியாக இவர் தகப்பனார் அனுமதித்திருந்ததைச் சுட்டிக்காட்டுகின்றது. இன்னுமாக இவர் தம்முடைய இராஜ்யம் எங்கும் உண்மை தெய்வ வணக்கத்தை ஸ்தாபித்தார் மற்றும் எல்லா விதத்திலும் நீதிக்காய் வைராக்கியம்கொண்டிருந்தார். இவரைக்குறித்தப் பதிவானது மிகவும் அநுகூலமான வெளிச்சத்தில் இவரது ஆளுகையை எடுத்துக் காட்டுகின்றது.

இவர் பேராசையின் காரணமாய்த் தவற்றிற்குள் விழுந்தார். பத்துக் கோத்திரங்களாகிய இஸ்ரயேலின்மீது காணப்பட்ட ஆகாப் மற்றும் யேசபேலின் மகளோடு இவர் தன் குமாரனுக்குத் திருமண ஒப்பந்தம்பண்ணிக்கொண்டார். இந்த ஒன்றிணைதலின் வாயிலாக இறுதியில் இந்த இரண்டு தேசத்தாரும், தன் குமாரனின் கீழ் மறுபடியுமாய் ஒன்றாக இணைந்துகொள்வார்கள் என்பது இவரது ஆசையாகக் காணப்பட்டது என்பதில் ஐயமில்லை. அந்தோ பரிதாபம்! எத்தனை நல்லப் புருஷர்களும், நல்ல ஸ்திரீகளும் பேராசையினாலும், வேகத்தினாலும் பாதிப்பிற்குள்ளாகியுள்ளனர். பிள்ளைகளுடைய உண்மையான சந்தோஷம் மற்றும் ஆவிக்குரிய வளமையைவிட, பிள்ளைகளுடைய பூமிக்குரிய வளமைகள்குறித்து அதிகம் சிந்திப்பவர்களாக எத்தனை பெற்றோர்கள் காணப்படுகின்றனர்! இத்தகைய பெற்றோர்கள் எவ்வளவு நல்லவர்களாகவும், சிறந்தவர்களாகவும், உயர் நோக்கமுடையவர்களாகவும் காணப்பட்டாலும்கூட, இம்மாதிரியான காரியங்களிலுள்ள இவர்களது நடத்தையானது, இவர்கள் தேவனிடத்தில் கொண்டிருக்கும் விசுவாசமின்மையைச் சுட்டிக்காட்டுகின்றதாய் இருக்கின்றது; அல்லது அவரது ஏற்பாடுகளுக்கு உண்மையாய் இணங்கிச் செயல்பட்டால், அது மற்ற அனைத்தையும் காட்டிலும் மகா ஆசீர்வாதத்தைக்கொண்டுவரும் என்று உணராமல், இவர்கள் அவர் சித்தத்திற்குக் கீழ்ப்படிந்து ஒப்புக்கொடுக்காததைச் சுட்டிக்காட்டுகின்றதாய் இருக்கின்றது.

## தீமையுடன் கூட்டணி என்பது அபாயகரமானதாகும்

இஸ்ரயேலின் இராஜ குடும்பத்தினரோடு கலப்புத் திருமணம்பண்ணிடுவதற்கு வழிநடத்தின பேராசையானது, இரண்டு இராஜ குடும்பங்களுக்கிடையே ஐக்கியமும், தோழமையும் ஏற்படுவதற்கும் வழிநடத்தினதாய் இருந்தது; மேலும் இதன் விளைவு எதிர்ப்பார்க்கப்பட்டது போலப் பொல்லாப்பானதாகவே காணப்பட்டது. "ஆகாத சம்பாஷணைகள் நல்லொழுக்கங்களைக் கெடுக்கும்" என்று அப்போஸ்தலன் கூறுகின்றார். ஒருமுறை மகன் ஒருவன் தன் தாயிடம், ஏன் அயலகத்தார்

மத்தியிலுள்ள சில சிறுவர்களுடன் விளையாடிடுவதற்குத் தன்னை அவள் அனுமதித்திடவில்லை? என்று கேட்டான். அச்சிறுவர்களுடைய செல்வாக்கானது அவன்மீது தீமைக்கேதுவானதாய்க் காணப்படும் என்று அஞ்சுவதாக அத்தாய்ப் பதிலளித்தாள். அச்சிறுவர்களின் மாதிரியானது தன்மீது சாதகமற்றச் செல்வாக்கினைக்கொண்டிருக்கும் என்பதைவிட, தன்னுடைய நல் உதாரணமானது, அயலகத்தார் மத்தியில் காணப்படும் அச்சிறுவர்கள்மீது நல்தாக்கம்கொண்டிருக்குமே என்று ஏன் அவள் எதிர்ப்பார்த்திடவில்லை என்று கேட்டான். தனது கருத்தினை விவரிக்கும்படியாக, தனக்குச் சுத்தமான தண்ணீருள்ள டம்ளர்/tumbler ஒன்றையும், மை/ink உள்ள குப்பியையும், பேனாவையும் கொண்டுவரும்படியாகத் தன் குமாரனிடத்தில் கேட்டுக்கொண்டாள். அவன் இவைகளைக் கொண்டுவந்தபோது, மையில் ஒரு துளியைத் தண்ணீருள்ள டம்பளரில் போடும்படியாகக் கூறினாள். அவனும் செய்தான்; ஒரு துளி மையினால் உண்டாகும் விளைவினைக் கவனிக்கும்படியாகக் கூறினாள்; பின்னர் ஒரு துளி தண்ணீரை எடுத்து, மைக்குப்பியில் போடவும், அதில் எவ்வித மாற்றமும் ஏற்படாததைக் கவனிக்கவும் கூறினாள். இப்படிப்பினை அருமையானதாகும்; தீமையில் சீரழிக்கும் வல்லமையும், நீதியைப் பொருட்படுத்தாத எதிர்மறையான கீழ்நோக்கிய தன்மையுமே காணப்படுகின்றது.

நமக்கான பாடம் என்னவெனில், "நாம் உலகத்தால் கறைப்படாதபடிக்கு நம்மை நாம் காத்துக்கொள்ள வேண்டும்;" இன்னுமாக இப்படிச் செய்கையில் தேவ வசனத்தினுடைய அறிவுரைகளுக்கு, ஊக்குவித்தல்களுக்கு, கடிந்துகொள்ளுதல்களுக்கு மற்றும் புத்திமதிகளுக்கு நம்மை இசைவாய்க்கொண்டு வந்திடுவதற்குத் தெய்வீக உதவியை நாம் நாடிட வேண்டும் என்பவைகளேயாகும். பாவத்தின் சிறு புளிப்பினால் ஒட்டுமொத்த சமுதாயத்தினையே பாதித்திட முடியும்; பாவமானது விழுந்துபோன மனித சுபாவத்தில் சுயமாய்/தானாகவே வளர்ந்திடும் ஆற்றல் பெற்றதாகும்; ஆனால் இப்படித் தானாகவே வளரும் இயல்பினை நீதியானது பெற்றிருப்பதில்லை. இதை நாம் அதிகமதிகமாய் உணருகையில், உலகத்திற்கு அவசியமானதாய்க் காணப்படும் மாபெரும் சகாயத்திற்காய் நாம் கர்த்தரை ஏறெடுத்துப்பார்க்கின்றவர்களாய் இருப்போம்; கர்த்தருடைய இராஜ்யம் வருவதாக என்றும், இந்த இராஜ்யத்தின் வாயிலாக உலகில் நீதி ஸ்தாபிக்கப்படவும், பரலோகத்தில் செய்யப்படுவதுபோல இறுதியில் பூமியிலும் தெய்வீகச் சித்தம் செய்யப்படுவதாக என்றும் நாம் அதிகமதிகமாய் ஜெபம்பண்ணுகிறவர்களாகவும், ஊழியம்பண்ணுகிறவர்களாகவும் காணப்படுவோம்.

யூதாவின் இராஜாவுக்கும், இஸ்ரயேலின் இராஜாவுக்கும் இடையிலான தோழமையின் காரணமாக, யூதாவின் இராஜா, இஸ்ரயேலின் இராஜாவைச் சந்தித்தார் மற்றும் இம்மாதிரியான தருணத்தில், இஸ்ரயேலுக்கு ஒருகாலத்தில் சொந்தமாயிருந்த ஒரு குறிப்பிட்ட பட்டணத்தை, சீரியா இராஜாவின் கையிலிருந்து கைப்பற்றிட தான் முயற்சிக்கப்போவதாக இஸ்ரயேலின் இராஜா தெரிவித்தார். மேலும் வெற்றிகரமாய் முடியும் என்று எதிர்ப்பார்க்கப்படுகின்றதான யுத்தத்தில் தன்னோடுகூட யூதாவின் இராஜா வரும்படியாக வேண்டிக்கொண்டான். மரியாதையின் நிமித்தமாகவும், ஆகாபின் நட்பை வளர்த்திட வேண்டும் என்ற விருப்பத்தின் நிமித்தமாகவும், யோசபாத் ஒத்துக்கொண்டு, அவனோடு யுத்தத்திற்குப் போனார்; அந்த யுத்தம் மோசமாகிப் போக, யூதாவின் இராஜா எப்படியோ தப்பித்துக்கொள்கின்றார். யூதாவின் இராஜா யுத்தத்திலிருந்து திரும்பி வருகையில் கர்த்தர் தீர்க்கத்தரிசியாகிய யெகூ மூலமாய்க் கூறினதாவது: "துன்மார்க்கனுக்குத் துணைநின்று, கர்த்தரைப் பகைக்கிறவர்களை நீர் சிநேகிக்கலாமா? இதினிமித்தம் கர்த்தருடைய கடுங்கோபம் உம்மேல் வர இருந்தது" (2 நாளாகமம் 19:2) - இது தேவனுடன் இசைவில் காணப்படுவதுவரையிலும் யூதாவின் இராஜாக்களோடு காணப்படும் என்று விசேஷமாய் வாக்களிக்கப்பட்டிருந்த தெய்வீகத் தயவிற்கான எந்த நிரூபணம் இல்லாமல் அவமானத்தோடே இராஜா திரும்பி வந்ததில் சுட்டிக்காட்டப்படுகின்றது.

## விட்டுப்பிரிந்திருங்கள் என்கிறார் ஆண்டவர்

இந்த முழுக்காரியமும் கர்த்தருடைய ஜனங்களுக்கு ஒரு முக்கியமான பாடத்தைக் கற்றுக்கொடுக்கின்றது; அதென்னவெனில்: எல்லாக் காரியங்களில் முதலாவதாகக் கர்த்தருடைய சித்தத்தை நாடுவதும், நம் காரியங்கள் மற்றும் நலனுக்கடுத்த விஷயங்களை அவர் வழிநடத்திடும்படியாக விட்டுவிடுவதும் நமது காரியமாகும். துன்மார்க்கருடன் ஒன்றிணைவதற்கு எதிராய் நாம் விசேஷமாய் விழிப்புள்ளவர்களாய் இருக்க வேண்டும் - அவர்களுக்கும், நமக்கும், நம் குடும்பங்களுக்கும் இடையில் ஐக்கியங்கள், விவாக ஒப்பந்தங்கள் முதலானவைகள் ஏற்படுத்தப்படுவதற்கு எதிராய் நாம் விழிப்புள்ளவர்களாய் இருக்க வேண்டும். யூதாவின் இராஜாக்களில் சிறந்தவர்களாய் இருப்பவர்களில் ஒருவர் இப்படியான தவறு செய்துவிட்டாரே என்று மிக அதிகமாய் எண்ணிக்கொண்டிருக்க வேண்டாம்; ஆனாலும் இராஜரிக ஆசாரியக்கூட்டத்தின் அங்கத்தினர்கள், பரிசுத்த ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்டவர்கள் . . . கர்த்தரிடத்திலுள்ள அவர்களது உறவின் விஷயத்திலும், தங்களுடைய மற்றும் தங்கள் பிள்ளைகளின் காரியங்களிலுள்ள பொறுப்பின் விஷயத்திலும் மிகவும் அலட்சியம்கொண்டிருந்து, ஏதேனும் விதத்தில் யோசபாத்தின் நடக்கையைப் பின்பற்றிடுவார்களானால், அதைக்குறித்தே நாம் ஆச்சரியப்பட வேண்டும்; எனினும் இப்படியாகத் தங்கள் காரியங்களையும், தங்களுடைய பிள்ளைகளின் காரியங்களையும் வழிநடத்திடும் விஷயத்தினைத் தங்கள் சொந்தக் கைகளில் எடுத்துக்கொள்ள முயற்சித்து, இவ்விஷயத்தில் கர்த்தரைப் புறக்கணிப்பவர்களாய் இருப்பவர்கள் அநேகர் இருக்கின்றனர் என்பதை நாங்கள் நன்கு அறிவோம். நாம் கிருபையிலும், அறிவிலும் வளர்கையில், சிலசமயங்களில் நம்முடைய தவறுகள் வாயிலாக நாம் சிலவற்றைக் கற்றுக்கொள்கின்றோம்; நாம் தவறுகளிலிருந்து அதிகமதிகமாய் விடுதலையடைந்து, அதிகமதிகமாய்க் கர்த்தருக்குப் பிரியமாகிட வேண்டும்.

---

R3093 [தெரிந்தெடுக்கப்பட்ட பத்தி]

## யாரைச் சேவிப்பீர்கள் என்று இன்று தெரிந்துகொள்ளுங்கள்

விழுகையின் காரணமான நம்முடைய பெலவீனங்கள் காரணமாகவும், எதிராளியானவன் மற்றும் உலகத்தினுடைய மயக்கங்கள் காரணமாகவும், நாம் கர்த்தரிலும், அவரது சத்துவத்தின் வல்லமையிலும் பெலமுள்ளவர்களாய்க் காணப்படத்தக்கதாக, நாம் புதுச்சிருஷ்டியையும், அதன் நல்லத் தீர்மானங்களையும் வேலியடைத்துக் காத்துக்கொள்ள வேண்டும். ஒவ்வொரு உண்மையுள்ள இஸ்ரயேலனும் யோசுவாவைப் போன்று, "நானும் என் வீட்டாருமோ, கர்த்தரையே சேவிப்போம்" என்போமாக; மேலும் இது ஒருவனுடைய தனிப்பட்ட காரியத்தில் சாதாரணமான காரியமாய் இராததுபோன்று, அவனது வீட்டாருடைய விஷயத்திலும் இது சாதாரணமான காரியமல்ல; இது அவனுடைய பிள்ளைகள் கர்த்தருக்கேற்ற சிட்சையிலும், போதனையிலும் பயிற்றுவிக்கப்பட வேண்டும் என்பதைச் சுட்டிக்காட்டுகின்றதாய் இருக்கின்றது; மேலும் இது சிறுபிள்ளைகள் வீட்டை ஆளும்படிக்கு அனுமதிக்கப்படக்கூடாது என்பதையும், வீட்டிற்கு வெளியே பெற்றோரை அவமதித்திடும் விதத்தில் நடந்திடக்கூடாது என்பதையும் சுட்டிக்காட்டுகின்றதாயிருக்கின்றது; இன்னுமாக தயவோடும், அன்போடும், உறுதியோடும் செயல்படுத்தப்படும் பெற்றோரின் செல்வாக்கானது, ஒவ்வொரு குடும்பத்திலுள்ள பிள்ளைகளைக் கூடுமான மட்டும் கர்த்தருடன் உடன்படிக்கை உறவிற்குள்

கொண்டுவருவதற்கும், வார்த்தை மற்றும் முன்மாதிரியின் வாயிலாகக் கர்த்தருடைய வழியில் அவர்களைப் போதிப்பதற்கும் நாடிட வேண்டும்.

---

R2337 [தெரிந்தெடுக்கப்பட்ட பத்திகள்]

## சுவாரசியமான கேள்விகள்

கேள்வி:-- இந்த யுகத்தில் நீதிமானாக்கப்பட்ட பெற்றோர்களுக்குப் பிறக்கும் குழந்தைகள் இறக்கையில், ஜீவனுக்கு உயிர்த்தெழும்போது ஆவிக்குரிய (தூதர்) சுபாவத்தினைப் பெற்றுக்கொள்வார்களா? இல்லையெனில் இக்குழந்தைகளுக்கும், இறந்துபோயுள்ள மற்றக் குழந்தைகளுக்கும் வித்தியாசம் என்ன? ஜூன் 15-ஆம் தேதி பக்கம் 181-இல் இடம்பெறும் காவல் கோபுர கட்டுரையை வாசித்ததின் அடிப்படையில் இக்கேள்வி எழும்புகின்றது.

பதில்:-- "மாம்சத்தினால் பிறப்பது மாம்சமாயிருக்கும்." நீங்கள் குறிப்பிடும் குழந்தைகளானவர்கள் ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்டவர்கள் அல்ல, ஆகையால் ஆவிக்குரிய ஜீவிகளாக இருப்பதில்லை. இவர்கள் அடையப்போகும் பூரணமானது மாம்ச சுபாவத்திலிருக்கும் மற்றும் இது (மீதமான உலகத்தாரோடுகூட) திரும்பக்கொடுத்தலின் வழிமுறையின்மூலம் திரும்பக்கொடுத்தலின் காலங்களில் - அதாவது ஆயிர வருஷயுகத்தின்போது அடையப்படும். இந்தக் குழந்தைகளுக்கும், உலகத்திலுள்ள மீதமானவர்களுக்கும் (அவிசுவாசியான பெற்றோர்களது பிள்ளைகளுக்கும்) ஆயிர வருஷயுகத்தின் போது எவ்வித வித்தியாசமும் காணப்படுவதில்லை; காணப்படும் ஒரு வித்தியாசம் என்னவெனில் விசுவாசியின் பிள்ளைகளானவர்கள் பெற்றோர் வாயிலான நற்பிறப்பின் காரணமாய்த் தங்கள் மாம்சத்தில் மற்றவர்களைவிடக் குறைவான சீர்க்கேட்டினை உடையவர்களாய் இருப்பார்கள். அப்போஸ்தலனால் (1 கொரிந்தியர் 7:14) குறிப்பிடப்படும் மற்றும் ஜூன் 15-ஆம் தேதி, பக்கம் 181-இல் காவற்கோபுர கட்டுரையில் எங்களால் குறிப்பிடப்பட்டுள்ளதுமான நீதிமானாக்கப்படுதலின் அம்சமானது தற்கால யுகத்திற்கும் மற்றும் பகுத்தறிவின், தனிப்பட்ட பொறுப்புணர்வின் வயதை அடைவதற்கு முன்புள்ள குழந்தைகளுக்கும் மாத்திரமே பொருந்துகின்றதாயிருக்கும். அது விசுவாசியான பெற்றோர்களின் பிள்ளைகளும், அவர்களது பெற்றோர்களும் தற்கால ஜீவியத்தின்போது - அதாவது பிள்ளைகள் பகுத்தறிவின் வயதை அடைவதுவரையிலும் தெய்வீகப் பராமரிப்பிற்குக் கீழ்ப்பட்டவர்களாய் இருப்பார்கள் என்று மாத்திரம் தெரிவிக்கின்றதாய் இருக்கின்றது; அப்பிள்ளைகள் முதிர்ச்சி அடைகையில் அவர்கள் தானாய் முன்வந்து தேவனுக்குக் கீழ்ப்படிதலுள்ள பிள்ளைகளாய்க் காணப்படுவதற்கு அவர்களை நன்கு ஆயத்தமாக்கும் நோக்கத்தில், அப்பிள்ளைகள் பகுத்தறிவின் வயதை அடைவதுவரையிலும் தெய்வீக வழிநடத்தல் மற்றும் பராமரிப்பின்கீழ்க் காணப்படுகின்றனர் என்று மாத்திரம் தெரிவிக்கின்றதாய் இருக்கின்றது. மனுக்குலத்தார் அனைவரும் இறுதியில் சரீர ரீதியிலும், மனரீதியிலும், ஒழுக்க ரீதியிலும் அனுகூலமான நிலைமைகளுக்குக் கடந்துவருவார்கள். இது அடுத்த யுகத்தில் விசுவாசிகளின் பிள்ளைகளுக்குச் சாதகமற்றச் சூழ்நிலைகள் இருக்குமென்றும், மற்றவர்களுக்கு மிகவும் சாதகமான சூழ்நிலைகள் இருக்கும் என்றும் சுட்டிக்காட்டுகின்றதென எடுத்துக்கொள்ளப்படக்கூடாது.

---

R1882 [தெரிந்தெடுக்கப்பட்ட பத்திகள்]

# குழந்தையாகிய சாமுயேல்

## 1 சாமுயேல் 3:1-13

"கர்த்தாவே சொல்லும்; அடியேன் கேட்கிறேன்." (1 சாமுயேல் 3:9)

குழந்தைக்கான கல்வி புகட்டுதலானது அது பிறப்பதற்கு நூறு வருடங்களுக்கு முன்னதாகவே துவங்கப்பட வேண்டும் என்று கூறப்பட்டிருப்பது சரியே. குணலட்சணம் உருவாகும் விஷயத்தில் பெற்றோர்களின் ஆரோக்கியமான செல்வாக்குகளானது ஆற்றல்மிக்கக் காரணியாக இருக்கின்றது. சாமுயேல் தேவபக்தியுள்ள பெற்றோர்களின் குமாரனாய்க் காணப்பட்டார்; அதாவது குழந்தை வேண்டுமென்று கர்த்தரிடத்தில் விண்ணப்பஞ்செய்து பிறந்தவராவார்; ஒருவேளை குழந்தையருளப்பட்டால், குழந்தையானவன் சிறுபிராயம் முதற்கொண்டு கர்த்தருக்கு அர்ப்பணிக்கப்படுவான் என்ற புனிதமான வாக்குறுதியும், இவர்களின் விண்ணப்பத்தோடுகூடச் செய்யப்பட்டது. இப்படியாகப் பயபக்தியுள்ள பெற்றோர்களினால் மாத்திரமே கொடுக்கமுடிகிற சொத்தோடுகூட - அதாவது தேவன் மற்றும் நீதியின்பால் விருப்பங்கொள்ளும் மனதோடுகூட ஐசுவரியமாய் உலகத்தில் சாமுயேல் பிறந்தார்.

கூடுமானமட்டும் சீக்கிரமாய் அன்னாள் தன் குமாரனைக் கூடாரத்திற்குக் கூட்டிக்கொண்டுவந்து அங்கே கர்த்தருக்கு உண்மையுள்ள ஊழியக்காரனாய்க் காணப்பட்ட பிரதான ஆசாரியனாகிய ஏலியினுடைய பராமரிப்பின்கீழ்ப் பயிற்றுவிக்கப்படுவதற்கும், கர்த்தருடைய ஊழியத்தில் பயன்படுத்தப்படுவதற்கும் வேண்டி விட்டுச்சென்றாள். சாமுயேலின் இருதயமானது சரியானதாகவும், நற்தன்மையுள்ளதாகவும் காணப்பட்டபடியால், அவர் சுறுசுறுப்பானவராகவும், கீழ்ப்படிதல் உள்ளவராகவும், கற்பிக்கப்படத்தக்கவராகவும், சரியான வழியில் எளிதில் வழிநடத்தப்பட முடிகிறவராகவும் காணப்பட்டார் என்கிற காரியமானது, ஏலி அழைத்ததாகச் சாமுயேல் எண்ணி அவ்வழைப்புகளுக்குக் கீழ்ப்படியும்படிக்கு அவர் கொண்டிருந்த ஆயத்தத்தன்மையில் வெளிப்படுகின்றது.

இந்த நற்பண்புள்ள குழந்தையைச் சிறுப்பிராயம் முதற்கொண்டு, புருஷன் ஆகிடுவதுவரையிலும், நீதியின் பாதையில் காத்துக்கொள்வதற்கேதுவான, மனுஷீகப் பயிற்சியையும், கட்டுப்பாட்டையும் சாமுயேலுக்குக் கொடுத்திடுவதற்கு ஏலியின் சாந்தகுணமும், கனிவான அணுகுமுறையும், இவரது நீதியுள்ள ஜீவியமும், போதித்தல்களும் போதுமானதாய் இருந்தன. இவரது செல்வாக்கின்கீழ்க் குழந்தையானது சிறந்த மற்றும் நீதியான குணங்களில் வளர்ந்து பலமடைந்தது மற்றும் கர்த்தருடைய ஊழியத்தில் சுறுசுறுப்பாயும், விடாமுயற்சியுடனும் காணப்பட்டது. ஆனால் ஏலியினுடைய சொந்தக் குடும்பத்தின் விஷயத்தில் காரியங்கள் இப்படியாக இருக்கவில்லை. இவரது சொந்தக் குமாரர்கள் ஒழுக்கமற்றவர்களாகவும், கீழ்ப்படியாதவர்களாகவும், நன்றியற்றவர்களாகவும், பரிசுத்தமற்றவர்களாகவும், சீர்க்கெட்டவர்களாகவும் காணப்பட்டனர். ஏலி தன் சுபாவத்தற்கே உரியதான சாந்தமான வழிமுறைகளில் அவர்களது இந்த ஒழுக்கமற்றத் தன்மையைச் சரிச்செய்திடுவதற்கு நாடினார்; ஆனாலும் தன்னுடைய இந்தப் பிரயாசங்கள் தோல்வியடைந்தபோது, தன் பிள்ளைகள் விஷயத்தில் மிகவும் அவசியமாயிருந்த கடுமையான பிரயாசங்களினால் அவர்களைக் கட்டுப்படுத்திட அவர் முயற்சித்திடவில்லை; இப்படியாக அவர்கள் தங்கள் தகப்பனுக்கும், பிரதான ஆசாரியனென அவரால் பிரதிநிதித்துவப்படுத்தப்பட்ட தேவனுடைய நோக்கங்கள்மீதும் நிந்தையைத் தொடர்ந்து கொண்டுவந்தார்கள்.

இந்தக் கவனக்குறைவானது குற்றஞ்சாட்டப்படுவதற்கு ஏதுவானதாய் இருந்தது மற்றும் அது கர்த்தருக்கும் பிரியமற்றதாய் இருந்தது. ஆகையாலே குழந்தையாகிய சாமுயேல் வாயிலாக ஏலிக்கு

வந்ததாக 11-13 வரையுள்ள வசனங்களில் பதிவு செய்யப்பட்டுள்ளதான எச்சரிப்புகளை நாம் பார்க்கின்றோம்.

கர்த்தருடைய சினம் குறித்தும், தன் குமாரர்களுடைய ஒழுக்கமற்ற நிலைக் குறித்தும், தன் சொந்த உண்மையற்ற நிலைக் குறித்தும், குற்றஞ்சாட்டப்படத்தக்கதான தனது கவனக்குறைவு குறித்தும் எண்ணிப்பார்ப்பதற்கு ஏலிக்குக் கடினமாகவே இருந்தது; ஆனாலும் சாந்தத்தோடும், தாழ்மையோடும் கடிந்துகொள்ளுதலை ஏற்றுக்கொண்டவராக, "அவர் கர்த்தர், அவர் தன் பார்வைக்கு நலமானதைச் செய்வாராக" என்று கூறினார். இந்த முன்னுரைக்கப்பட்ட தீர்ப்பின் நிறைவேறுதல் குறித்தச் செய்திவந்தபோது - அதாவது பெலிஸ்தர்களுக்கு முன்பாக இஸ்ரயேலர்களின் தோல்விகுறித்தும், யுத்தத்தில் தனது இரண்டு குமாரர்களின் மரணம் குறித்துமான செய்தி வந்தபோது, அது கடுமையான அடியாக இருந்தது; ஆனாலும் கர்த்தருடைய பெட்டியானது சத்துருக்களின் கரங்களை எட்டியது என்ற செய்தியை அவர் கேட்டபோது, அவருடைய ஆழ்ந்த துக்கம் அவரை நிலைகுலையச் செய்தது, மற்றுமவர் இருக்கையிலிருந்து பின்னாக விழுந்து, பிடரி முறிந்து செத்துப்போனார் (அதிகாரம் 4:18). இவருக்குப் பெலவீனங்கள் காணப்பட்டபோதிலும், இவரது இருதயமானது எப்போதும் தேவனுக்கு நேர்மையாயும், உண்மையாயும் காணப்பட்டது மற்றும் தேவனுடைய நோக்கங்களானது இவருக்கு அருமையானவைகளாகவும் காணப்பட்டது; இரக்கமுள்ளவராகவும் கிருபையுள்ளவராகவும், கோபங்கொள்வதில் தாமதிக்கிறவராகவும் காணப்படும் தேவன், ஏலியை அவரது கவனக்குறைவின் காரணமாகக் கடுமையாகத் தண்டித்திட்டாலும், அவர் இயேசு கிறிஸ்துவின் வாயிலாய் மனுஷர்களுடைய இரகசியங்களை நியாயந்தீர்த்திடும் நாளில் இரக்கத்திலும், மன்னிப்பிலும் தம்முடைய இந்த வேலைக்காரனை நினைவுகூர்ந்திடுவார் என்பதில் ஐயமில்லை (உரோமர் 2:16).

இச்சம்பவமானது குணலட்சணத்தினுடைய பலத்திற்குக் கர்த்தரால் கொடுக்கப்படும் முக்கியத்துவம் குறித்து ஆற்றல்மிக்க விதத்தில் நம்முடைய கவனத்திற்குக் கொண்டுவருகின்றது. நீதியின் வழிகளைக்குறித்துப் போதுமான அளவுக்குக் கற்பித்துக்கொடுத்த பிற்பாடு, பலமான குணலட்சணங்களைக் கர்த்தர் எதிர்ப்பார்த்திடுவார் மற்றும் எதிர்ப்பார்த்திடுவதற்குமான உரிமையையும் அவர் பெற்றிருக்கின்றார். "கர்த்தரிலும் அவருடைய சத்துவத்தின் வல்லமையிலும் பலப்படுங்கள்" (எபேசியர் 6:10). "விழித்திருங்கள், விசுவாசத்திலே நிலைத்திருங்கள், புருஷராயிருங்கள், திடன்கொள்ளுங்கள்" (1 கொரிந்தியர் 16:13). நாம் விசுவாசத்திலும் பலமுள்ளவர்களாய் இருக்க வேண்டும், குணலட்சணத்திலும் பலமுள்ளவர்களாய் இருக்க வேண்டும்; இப்படியே நாம் தேவனுக்குப் பிரியமானவர்களாகவும், அவரால் ஏற்றுக்கொள்ளப்படத்தக்கவர்களாகவும் காணப்படுவோம். ஒருவேளை பெலவீனமும், இருமனமும் நம் இயல்பான குறைபாடாக இருப்பினும், இவைகளுக்கு எதிராய் நாம் போராடாமல் இருந்தால், அது நாம் சாக்குச் சொல்வதற்கு ஏதுவானதல்ல. தலைச்சிறந்த பாத்திரங்களில் சிலர் சுதந்தரிக்கப்பட்ட பலவீனங்களுக்கு எதிராக உண்மையாய்ப் போராடி சாதித்தவர்கள் ஆவார்கள். நாம் தேவனுடைய உதவியை வேண்டினால், அவர் நம் பிரயாசங்களோடுகூடத் தம் பலத்தை அருளுவதற்கு எப்போதும் ஆயத்தமாயிருக்கின்றார்.

இன்னொரு பாடம் கர்த்தருக்குரிய பயபக்தியிலும், அறிவிலும் பிள்ளையைப் பயிற்றுவிப்பதிலுள்ள பெற்றோரின் பொறுப்புக்குறித்த தேவனுடைய கண்ணோட்டம் பற்றியதாகும். கடமையானது வீட்டைத்தாண்டியும் செயலாக்கம்கொண்டிருப்பினும், அது வீட்டில்தானே துவங்குகின்றது எனும்

உண்மையினை இங்கு நாம் வலியுறுத்துகின்றோம். வெளியில் உள்ளவர்கள் மத்தியில் வைராக்கியம் கொண்டிருப்பதைக் காட்டிலும், தங்கள் சொந்தக் குடும்பத்தில் சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பதிலும், அதை மாதிரிப்படுத்துவதிலும் குறைவான வைராக்கியம் கொண்டிருப்பதன்மூலம் சிலர் தவறு செய்கின்றனர். (அன்பு, பராமரிப்பு, பெருந்தன்மை) அறம் இல்லத்திலேயே துவங்கிட வேண்டும் மற்றும் அங்கிருந்தே தொடர்ந்திட வேண்டும். மற்ற அனைத்தையும்விட இக்களத்திலேயே (இல்லத்திலேயே), அதுவும் மற்றவைகளைக் காட்டிலும் இக்களம் பலன்கொடுப்பதில் தாமதமாய்க் காணப்பட்டாலும், இக்களத்திலேயே ஜெபத்துடனும், பொறுமையுடன் வேலை செய்யப்பட வேண்டும்.

---

R4911 [தெரிந்தெடுக்கப்பட்ட பத்தி]

## மாபெரும் சீர்த்திருத்தவாதி

### எஸ்றா 8:15-36

கிறிஸ்தவர்களுக்கு, இந்தப் பிரமாணத்திற்கு இணையானதாகக் காணப்படும் அப்போஸ்தலனின் கட்டளையானது, கிறிஸ்துவின் அர்ப்பணிக்கப்பட்ட பின்னடியார்கள் உலகத்தாரோடு கலப்புத் திருமணம் செய்துகொள்ளாமல், "கர்த்தருக்குள் மாத்திரமே" செய்துகொள்ள வேண்டும் என்பதேயாகும் (2 கொரிந்தியர் 6:14). இந்தக் கட்டளையில் திவ்விய ஞானம் உள்ளது, ஆனாலும் இது ஒரு பிரமாணமல்ல; மேலும் அர்ப்பணம்பண்ணிடாத நபர்களைத் திருமணம்பண்ணியுள்ள கிறிஸ்தவர்கள், அவர்களை விட்டுப்பிரிந்திடாமல், தங்கள் விவாக உடன்படிக்கையினை நிறைவேற்ற வேண்டியவர்களாய் இருக்கின்றனர்.

---

R2365 [தெரிந்தெடுக்கப்பட்ட பத்திகள்]

## யோசபாத்தின் நல்ல இராஜ்யபாரம்

"உன் வழிகளிலெல்லாம் அவரை நினைத்துக்கொள்; அப்பொழுது அவர் உன் பாதைகளைச் செவ்வைப்படுத்துவார்." (நீதிமொழிகள் 3:6)

தன் மகனுக்கும், ஆகாப் மற்றும் யேசபேலின் குமாரத்திக்கும் இடையில் திருமணத்தினை ஏற்பாடுபண்ணினதே யோசபாத்தின் மூன்றாம் தவறாகும். இத்திருமணத்தின் வாயிலாகத் தன் குமாரனுடைய கரங்களில் பிரிந்திருந்த இராஜ்யத்தை இணைக்க வேண்டும் என்பதே இவரது எண்ணமாக இருந்தது என்பதில் ஐயமில்லை. கர்த்தருக்குத் தேவை என்றால், அவரே இராஜ்யத்தினை இணைத்திட மிகவும் வல்லவராய் இருக்கின்றார் என்பதையும், மேலும் கர்த்தருடைய அங்கீகரிப்பில்லாமல் காணப்படும் எந்த ஓர் ஒன்றிணைதலும் பாதகமாகவே காணப்படும் என்பதையும் இவர் மறந்துபோனதாகத் தெரிகின்றது. யூதாவின் இராணியாகிட்ட யேசபேலின் மகளோ பொல்லாதவளாய்க் காணப்பட்டு, தன் தாயைப் போன்றே செயல்பட்டாள்; மேலும் தாழ்மையும், தேவபக்தியுமுள்ள ஸ்திரீயினால் எத்தனை நன்மையான செல்வாக்கினைச் செயல்படுத்திட முடியும் என்பதற்கு நாம் அநேகம் உதாரணங்களைப்

பெற்றிருப்பதுபோலவே, இச்சம்பவமும்கூடப் பேராசையுள்ள மற்றும் பொல்லாத ஸ்திரீயினால் எத்தனை பொல்லாப்பான செல்வாக்கினைச் செயல்படுத்திட முடியும் என்பதற்கான இன்னுமொரு உதாரணமாய்க் காணப்படுகின்றது.

துன்மார்க்கரோடு பிணைக்கப்பட்டு, திருமணம் செய்து கொடுப்பதன் வாயிலாகத் தங்களுடைய பிள்ளைகளுடைய நலனுக்கடுத்த காரியங்களில் முன்னேற்றம் காண்பதற்கு ஆவிக்குரிய இஸ்ரயேலர்கள் நாடிடக்கூடாது என்று அவர்கள் அனைவருக்கும் இச்சம்பவத்தில் ஒரு படிப்பினை இருக்கின்றது. எத்தனை கிறிஸ்தவ பெற்றோர்கள் தங்கள் சொந்த அனுபவங்களிலிருந்து பெற்றுக்கொள்ளும் படிப்பினைகளைச் செயல்படுத்தாமல் புறந்தள்ளி, தங்கள் பிள்ளைகள் அர்ப்பணிக்கப்படாதவர்களைத் திருமணம்பண்ணிடுவதற்குத் தாங்கள் ஒப்புக்கொள்ளும் அளவுக்கும், திருமணத்திற்கு உதவும் அளவுக்கும் பிள்ளைகளுக்கான தங்களது அறிவுரைகளானது பெருமையினால், பேராசையினால், சுயநலத்தால் ஏவப்படுவதற்கு அனுமதித்துவிடுகின்றவர்களாய் இருக்கின்றனர். இப்படி நடந்துகொண்டவர்களில் எத்தனை பேர்கள் பிற்பாடு தங்கள் தலையணைகளிலும், தங்களுடைய பிள்ளைகளின் தலையணைகளிலும் முட்களை விதைத்துள்ளார்களெனக் கண்டுகொள்கின்றனர். பிரச்சனை பின்வரும் ஒரு அல்லது இரு காரியமாகக் காணப்படலாம்: (1) அவர்கள் ஒன்றில் கர்த்தருக்கு முழுமையாயும், உண்மையாயும் அர்ப்பணம்பண்ணாதவர்களாய் இருக்கலாம் மற்றும் தங்கள் காரியங்கள் அனைத்தையும் வழிநடத்திடுவதற்கான அவரது ஞானத்திலும், வல்லமையிலும் முழுமையாயும், உண்மையாயும் விசுவாசம் இல்லாதவர்களாய் இருக்கலாம்; ஆகையால் தங்கள் காரியங்களைத் தாங்களே பார்த்துக்கொள்ள முற்படுகின்றனர்; அல்லது (2) நம்முடைய ஜீவியத்தின் ஒவ்வொரு காரியத்தையும் நாம் கர்த்தருடைய சித்தத்தின்படி ஒழுங்குபண்ண வேண்டியிருக்க, அந்தச் சித்தத்தை அவரது வார்த்தைகளில் கண்டுகொள்ளலாம் என்றும், அது அப்படியே பின்பற்றப்பட்டு, விளைவுகள் அனைத்தும் அவரது வழிநடத்துதல்களிடத்தில், அவரது ஞானம், அன்பு, வல்லமைமீதான முற்றும் முழுமையான நம்பிக்கையில் விடப்பட வேண்டும் என்றும் அவர்கள் கற்றுக்கொள்ளவில்லை. கர்த்தருடைய ஜனங்களைப் பொறுத்தமட்டில், அவரை அன்பு கூருகிறவர்களுக்குச் சகலமும் திவ்விய வழிநடத்துதலின்கீழ் நன்மைக்கேதுவாய் நடக்கும் என்று நம்பி முதலாவது பரலோக இராஜ்யத்தையும், அதன் நீதியையும் நாடுவதே, அனைத்துக் காரியங்களிலுமுள்ள ஜீவியத்தின் சட்டமாகும்.

---

R2847 [தெரிந்தெடுக்கப்பட்ட பத்திகள்]

# ஆபிரகாம் மற்றும் லோத்தின் பரீட்சைகள்

## ஆதியாகமம் 13:1-18

லோத் தன் மாமாவைக் காட்டிலும் மிகக்குறைவான விசுவாசம் உடையவராகவும், மிகக்குறைவான குணமுடையவராகவும் காணப்பட்டார்; எனினும் அவர் நல்ல மனிதனாவார்; மேலும் யோர்தான் நாட்டை தன் குடியிருப்பாகத் தெரிந்துகொண்ட இவரது தீர்மானமானது இவர் சோதோமியர்களுடன் ஐக்கியம்கொண்டிருந்தார் என்று குறிப்பதாகாது. மாறாக அந்த ஜனங்களின் நடத்தையானது "நீதியுள்ள அவரது இருதயத்தை வாதித்தது" என்றே பதிவு காணப்படுகின்றது (2 பேதுரு 2:8). இன்றுள்ள அநேகம் கர்த்தருடைய ஜனங்கள் ஏமாறுவதுபோன்று இவரும் உலக ஐசுவரியத்திற்காய்த் தீமையான

செல்வாக்குகளுடன் இணைந்திட ஏமாற்றப்பட்டுள்ளார் என்பது உறுதியே. இவர் தன்னால் சோதோமின் தீமைகளினின்று விலகி வாழ்ந்திட முடியும் என்றும், அநீதியானவர்கள்மீது நல்லொழுக்கத்தின் செல்வாக்கினைக்கூடச் செயல்படுத்திட முடியும் என்றும் இவர் இவரையே சாந்தப்படுத்தியிருக்க வேண்டும் என்பதில் ஐயமில்லை. இவருக்குப் பிற்பாடு சம்பவித்தவைகளின் வெளிச்சத்தில் பார்க்கப்படுகையில், இவரது நடத்தை எத்தனை ஞானமற்றதாகவும், மிகவும் ஞானமற்றதாகவும் காணப்படுகின்றது. இவருக்கு முற்றிலும் வேறுப்பட்ட நிலைமையில் ஆபிரகாமின் ஞானம் காணப்படுகின்றது; மேலும் பரம நகரத்தை நாடிக்கொண்டிருக்கும் மற்றும் உம்முடைய இராஜ்யம் வருவதாக என்று ஜெபம்பண்ணிக்கொண்டிருக்கும் அனைவருக்கும், இவ்விருவரின் அனுபவங்களும் விலையேறப்பெற்ற படிப்பினைகளைக் கொடுக்கின்றதாய் இருக்கின்றது. ஆபிரகாமின் நடக்கையானது, "முதலாவது தேவனுடைய இராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள், அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக்கூடக் கொடுக்கப்படும்" (மத்தேயு 6:33) எனும் நமது கர்த்தருடைய வார்த்தைகளுக்கு உதாரணமாய் இருக்கின்றது. லோத்தின் நடக்கையோ, "மனுஷன் உலகம் முழுவதையும் ஆதாயப்படுத்திக்கொண்டாலும், தன் ஜீவனை நஷ்டப்படுத்தினால் அவனுக்கு இலாபம் என்ன?" (மாற்கு 8:36) எனும் கர்த்தருடைய வார்த்தைகளுக்கு உதாரணமாய் இருக்கின்றது. ஆஸ்தியை லோத்து நாடினபோது, அது ஐசுவரியங்களைக்கொணர்ந்தது; இவர் சோதோமில் ஆஸ்தியுள்ள மற்றும் செல்வாக்குமிக்க மனிதனானார்; ஆனால் இவரது ஆஸ்திக்கும், செல்வாக்கிற்கும் மிக அதிகமான விலையினை இவர் கொடுக்க வேண்டியிருந்தது; முதலாவதாக இவர் மனச்சமாதானத்தினை விலையாகக் கொடுத்து இழந்துபோனார், ஏனெனில் "இவரது நீதியுள்ள இருதயம் வாதிக்கப்பட்டது;" இவருக்கு உண்மையான சந்தோஷம் ஏதுமில்லாதிருந்தது. இரண்டாவதாக இவரது பிள்ளைகளை இவர் விலையாகக் கொடுக்க வேண்டியிருந்தது; பிள்ளைகளில் இருவர் திருமணமாகாமல் இருந்தனர், மேலும் அவர்களும் தீமையான உதாரணங்ளைப் பார்த்துவந்ததின்மூலம் கறைப்பட்டிருந்தனர். இவரது மனைவியையும் இவர் விலையாகக் கொடுக்க வேண்டியிருந்தது; இவள் கர்த்தரிலும், நீதியிலும் கொண்டிருந்த அக்கறையைவிட, தன் பிள்ளைகள்மீது அதிகம் அக்கறை கொண்டிருந்தாள். இன்னுமாக இறுதியில் இவரது மந்தைகள், ஆடுமாடுகள், ஆஸ்திகள் அனைத்தும் விலையாக இவரால் கொடுக்கப்பட்டது; அவை அனைத்தும் பட்டணத்தை அழிக்கும்படிக்கு, பரலோகத்திலிருந்து வந்த நெருப்பில் அழிந்துபோயின.

இதில் நம் அனைவருக்கும், அதிலும் விசேஷமாக நீதியை விரும்புகிறவர்களாகவும், பிள்ளைகளைப் பராமரிக்கும் பொறுப்பைப் பெற்றவர்களாகவும் இருப்பவர்களுக்கு மாபெரும் பாடங்கள் உள்ளன; இவர்கள் பூமிக்குரிய அநுகூலங்கள், சமுதாய காரியங்கள், அரசியல் காரியங்கள் மற்றும் பணக்காரியங்களைக்குறித்துக் குறைவாய்ச் சிந்திக்கின்றவர்களாகவும், மேலும் உலகில் காணப்படும் தீமையினின்று விலகுவதன் வாயிலாக அடையப்பெறும் ஒழுக்க ரீதியிலான, ஆவிக்குரிய ரீதியிலான செல்வாக்குகள் மற்றும் அநுகூலங்கள்/சாதகங்கள்குறித்து அதிகமதிகமாய்ச் சிந்திக்கின்றவர்களாகவும் காணப்பட வேண்டும் - கூடுமானமட்டும் "(பாவத்தின் களங்கத்தினால்) முடமாயிருக்கிறது (நீதியின் பாதையினின்று) பிசகிப்போகாமல் சொஸ்தமாகும்படிக்கு, உங்கள் பாதங்களுக்கு வழிகளைச் செவ்வைப்படுத்துங்கள்" (எபிரெயர் 12:13).

R1671

## உன் வாலிபப்பிராயத்தில்

"தீங்குநாட்கள் வராததற்கு முன்னும், எனக்குப் பிரியமானவைகளல்ல என்று நீ சொல்லும் வருஷங்கள் சேராததற்குமுன்னும் . . . நீ உன் வாலிபப்பிராயத்திலே உன் சிருஷ்டிகரை நினை."
(பிரசங்கி 12:1)

கர்த்தருடைய பிள்ளைகளில் யாரெல்லாம் தங்கள் இருதயங்களை அவரிடம் சிறுபிராயத்திலேயே கொடுத்து, தங்கள் வழிகளை அவரது வழிநடத்துதலுக்கு ஒப்படைத்தார்களோ, அவர்கள் அனைவருமே, தாங்கள் சரியான பாதையில் சிறு பிராயம்முதல் பிரயாணித்ததன் வாயிலாகக் கிடைக்கப்பெற்ற எண்ணற்ற ஆசீர்வாதங்களுக்குச் சாட்சி பகிர முடிகிறவர்களாய் இருப்பார்கள். நம் மத்தியில் மிகவும் இளையவர்களாய்க் காணப்படும் சிலர் ஜீவியத்தின் பாதைகளில் முதலாம் அடியை எடுத்து வைப்பதைக் காண்கையில் நாங்கள் மகிழ்ச்சியடைகின்றோம். அத்தகைய இளைய யாத்திரீகர்கள் அனைவரிடமும் நாங்கள் சொல்வதாவது: "தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக! நீங்கள் சிலுவையின் இளம் வீரர்களெனப் புறப்படுகின்றீர்கள்; நீங்கள் தைரியமுள்ள, உண்மையுள்ள போர்ச்சேவகர்களாகக் காணப்பட வேண்டும் என்றும், போர்ச்சேவகனுடைய முதலாம் கடமை என்பது தளபதியாகிய இயேசு கிறிஸ்துவிற்குக் கீழ்ப்படிவதாகும் என்பதை நீங்கள் நினைவில்கொள்ள வேண்டும் என்றும் நாங்கள் விரும்புகின்றோம். நீங்கள் என்ன செய்ய அவர் விரும்புகின்றார் என்பதைக் கூர்ந்து கவனித்து, புரிந்துகொள்ள முயற்சியுங்கள்; பின்னர் உங்களால் அவரது வழிகாட்டுதல்களிலுள்ள ஞானத்தினைப் புரிந்துகொள்ள முடிகிறதோ இல்லையோ, அந்த வழிகாட்டுதல்களுக்குக் உடனடியாகக் கீழ்ப்படியுங்கள்" என்பதேயாகும்.

ஒரு குழந்தையானது எத்தனை சிறு பிராயத்தில் தன் இருதயத்தைத் தேவனுக்குக் கொடுத்து, அவருக்கு முழுமையாய் அர்ப்பணம்பண்ணிடலாம் என்றுள்ள கேள்வி அநேகரிடம் காணப்படுகின்றது. ஆனால் அவர்கள் பிறப்பதற்கு முன்னதாகவே அல்லது கருத்தரிப்பதற்கு முன்னதாகவே, அவர்களது பெற்றோர்கள் அவர்களைக் கர்த்தருக்கு அர்ப்பணித்திடலாம் மற்றும் அர்ப்பணித்திட வேண்டும் என்று வேதவாக்கியங்கள் மிகத் தெளிவாய்த் தெரிவிக்கின்றதாய் இருக்கின்றது. இப்படியாகப் பிள்ளைப் பிறப்பதற்கு முன்பதாக அதன் மீது செயல்படும் பெற்றோரின் செல்வாக்குகளானது, தேவபக்திக்கு நேரான மனவிருப்பத்தினையும், ஆவிக்குரிய சொத்தையும் பிள்ளைகளுக்கு அளித்திடும். மேலும் அறிவு வளர்கையில் இந்த இயல்பானது/மனப்பான்மையானது வளர்ந்து, பெருகி உயிருள்ள பக்தியாகிடும் . . . ஆகையால் மிகச் சிறுவயதிலேயே சிறுபிள்ளையானது தேவனுக்கான முழுமையான அர்ப்பணமாகிய பெற்றோரின் உடன்படிக்கையினைப் புரிந்த நிலையில் ஒப்புக்கொண்டிடும். இப்படி எதிர்ப்பார்க்கப்பட வேண்டும் மற்றும் இப்படியாகக் கூடுமானமட்டும் சீக்கிரமாகச் செய்திட வழிநடத்தப்பட வேண்டும்.

கர்த்தருக்குச் சிறுபிராயத்திலேயே அர்ப்பணம்பண்ணினவர்கள் குறித்த அநேகம் குறிப்பிடத்தக்க உதாரணங்கள் வேதவாக்கியங்களில் நமக்கு இருக்கின்றன. யோவான் ஸ்நானனைக் குறித்துப்பார்க்கையில், அவரது பெற்றோர்கள், "அவர்கள் இருவரும் கர்த்தரிட்ட சகல கற்பனைகளின்படியேயும் நியமங்களின்படியேயும் குற்றமற்றவர்களாய் நடந்து, தேவனுக்கு முன்பாக நீதியுள்ளவர்களாயிருந்தார்கள்" (லூக்கா 1:6) என்றும், ஜெபங்களுக்குப் பதிலாய் இவர், "தன் தாயின் வயிற்றிலிருக்கும்போதே பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டு" (லூக்கா 1:15) கொடுக்கப்பட்டார் என்றும் சொல்லப்பட்டுள்ளது (லூக்கா 1:6, 15, 44, 66, 80). இதுபோலவே பவுலும் அவரது பிறப்பு முதற்கொண்டு

ஒப்புக்கொடுக்கப்பட்டிருந்தார் (கலாத்தியர் 1:15; அப்போஸ்தலர் 26:4-5) மற்றும் யூத மார்க்கத்திலிருந்து இவர் கிறிஸ்தவ மார்க்கத்திற்கு மாறிடுவதற்கு நீண்ட காலத்திற்கு முன்னதாகவே தேவனுக்கு வைராக்கியமாய்க் காணப்பட்டார் (அப்போஸ்தலர் 22:3-4). இப்படியாகவே தீமோத்தேயுவின் காரியமும் (2 தீமோத்தேயு 1:5; 3:15), சாமுயேலின் காரியமும் (1 சாமுயேல் 1:11, 24-28; 2:11, 18-19), மோசேயின் காரியமும் காணப்பட்டது (யாத்திராகமம் 2:1).

இப்படிச் சிறுபிராயத்திலேயே கர்த்தருக்கு அர்ப்பணிக்கப்பட்டவர்கள், பிற்காலங்களில் அநேகருக்கு இன்னலையும், சிரமத்தையும் கொண்டுவந்திட்டதான அநேகமான கண்ணிகளிலிருந்து, அநேகமான சிக்கல்களிலிருந்து தப்பிடுவார்கள். மனம்போன போக்கில் ஜீவிப்பதன் காரணமாய் எப்போதும் வரும் கசப்பான அறுவடையினை இத்தகையவர்கள் அறுத்திட வேண்டியதில்லை; இவர்கள் தேவபக்தியான ஜீவியங்களை ஜீவிப்பது என்பதைத் தங்கள் சுபாவ இயல்பிற்கு மிகவும் எதிரான ஒன்றாக உணர்வதில்லை; மேலும் பிற்காலங்களில் இவர்கள் தொடர்ச்சியான சுயக்கட்டுப்பாட்டின் காரணமாகவும், சுயஅடக்குதலின் காரணமாகவும் பலமான குணலட்சணத்தைப் பெற்றிருப்பார்கள்; மேலும் நீண்ட காலமாய்த் தேவனுடன் நெருங்கிக் காணப்பட்டதின் ஆசீர்வாதமான அநுகூலங்கள் மற்றும் அவரது வார்த்தைகள் மற்றும் அவரது கிருபையான ஏற்பாடுகளின் வழிநடத்துதலின் ஆசீர்வாதமான அநுகூலங்கள் அனைத்தையும் அடைவார்கள்.

"தீங்கு நாட்கள் வராததற்குமுன்பு... உன் வாலிபப்பிராயத்தில் உன் சிருஷ்டிகரை நினை" என்ற அறிவுரை எவ்வளவு ஞானமுள்ளதாய்க் காணப்படுகின்றது. வாலிபப்பிராயத்திலேயே தங்கள் வழிகளைக் கர்த்தருக்கு ஒப்புவித்து, தங்கள் பாதைகளை அவர் வழிநடத்தும்படியாக அவரை நம்பினவர்களுக்குக் கசப்பான ஏமாற்றம் மற்றும் விரக்தியின் அந்தப் பொல்லாத நாட்கள் ஒருபோதும் வருவதில்லை. கர்த்தருடைய வழிகள் இன்பமான வழிகள் மற்றும் அவரது பாதைகள் சமாதானமானவைகள் ஆகும். கர்த்தருடைய வழிகள் எவ்விதத்திலும் சுலபமான, எளிமையான வழிகளல்ல, ஆனாலும் அவை எப்போதும் இன்பமானவைகளும், சமாதானமானவைகளுமாகும்; ஏனெனில் "நான் உன்னைவிட்டு விலகுவதுமில்லை, உன்னைக் கைவிடுவதுமில்லை" (எபிரெயர் 13:5) என்று சொன்னவர் ஆறுதல்படுத்துவதற்கும், ஆசீர்வதிப்பதற்கும் எப்போதும் கூடவே காணப்படுகின்றார்; அவரை அன்புகூருகிறவர்களும் - அவரது நோக்கத்தின்படி அழைக்கப்பட்டவர்களுமானவர்களுக்குச் சகலத்தையும் நன்மைக்கேதுவாய்ச் செய்யப்பண்ணிடுவதற்கு எப்போதும் கூடவே காணப்படுகின்றார்.

அர்ப்பணம்பண்ணியுள்ளவர்களாகக் காணப்பட்டு, தங்கள் பராமரிப்பின்கீழ்க் குழந்தைகளையும், வாலிபர்களையும் பெற்றிருப்பவர்கள் - தங்கள் சொந்த அர்ப்பணிக்கப்பட்ட ஜீவியங்களின் செல்வாக்குகள் பிள்ளைகளைச் சுற்றிக் காணப்படச் செய்வதன்மூலமும், தாங்கள் அறிந்திருக்கும் சத்தியத்தினாலும், தங்கள் அனுபவங்களினாலும், கணிப்பினாலும் கொடுக்க முடிகிற அத்தகைய அறிவுரைகளைக் கொடுப்பதன்மூலமும், அவர்களது நடத்தையை வனைந்திடும் விஷயத்திலும், அவர்களைக் கிறிஸ்துவுக்கு நேராய் வழிநடத்திடும் விஷயத்திலும் அதிகம் செய்ய வேண்டியவர்களாய் இருக்கின்றனர். இத்தகையப் பிரயாசங்களானது சரியாய்ச் செய்யப்பட்டால், இது வாலிபர்களில் வீணாய்ப் போய்விடுவதில்லை.

உங்களது முன்மாதிரி மற்றும் போதனைகள் மூலம், அர்ப்பணிக்கப்பட்ட விசுவாசிகளுக்கும், உலகத்தாருக்கும் இடையில் எத்தனை தெளிவாய் வரையறை உள்ளதென்பதையும் - உலகத்தோடு எந்த இணைந்துபோகுதலும் இல்லை என்பதையும் - அதாவது கிறிஸ்துவைப் பின்பற்றுவது என்பது உலகத்தையும், அதன் ஆசைகளையும், அதன் களியாட்டங்களையும், அதன் இன்பங்களையும்,

தோழமையையும் துறந்துவிடுவதாயிருக்கும் என்பதையும் பிள்ளைகள் காண்பார்களாக. உலகப்பிரகாரமான இன்பங்களில் ஒன்றுமே இல்லை என்பதை அவர்கள் காண்பார்களாக; மேலும் மாய்மாலங்களை நாடித்தேடித் செல்கிறவர்கள் அடையும் அதிருப்தி மற்றும் அமைதியின்மை குறித்தும், கிறிஸ்துவைப் பின்பற்றும்படிக்கு உலகை விட்டுவந்தவர்களின் சந்தோஷமும், சமாதானமும் குறித்தும் பிள்ளைகளுடைய கவனத்திற்குக் கொண்டுவருவதற்கு வாய்ப்புகளைப் பயன்படுத்திக்கொள்ளுங்கள். கர்த்தர் நம்மை எப்படிக் கிருபையாய் வழிநடத்தினார் என்பது குறித்தும், நம் ஜீவியத்தினுடைய பல்வேறு திருப்புமுனைகளில் எங்கெல்லாம் நல்ல மேய்ப்பனுடைய அன்பான கோலானது தவறான பாதைகளில் அலைந்து திரிவதிலிருந்து நம்மைக் காத்துக்கொண்டது என்பதுகுறித்தும், ஒரு காலத்தில் எப்படி நாம் இப்படி அலைந்து திரிந்துகொண்டிருந்தபோது, அவரது இரக்கமானது பரிவோடு நம்மைத் தேடிவந்து, நம்மைத் திரும்பவும் மந்தைக்குள் கூட்டிக்கொண்டுவந்தது என்பது குறித்தும், எப்படி அவர் நம்மைத் தீமையினின்று பாதுகாத்தார், எப்படித் துன்பத்தில் நம்மை ஆறுதல்படுத்தினார், அவரது இரட்சிப்பின் சந்தோஷங்களினால் தாகம்கொண்ட நம் ஆத்துமாக்களைத் திருப்திப்படுத்தினார், அவரோடுகூட நம்மைப் பரலோக ஸ்தலங்களில் உட்காரப்பண்ணினார் என்பதுகுறித்தும் மற்றவர்களிடம் கூறிடுவதும் உதவிகரமாய் இருக்கும்.

இந்த உலகத்தின் அற்பத்தனமான காரியங்களினால் மனமானது கவரப்படுவதற்கு முன்னதாக, அது எளிமையாக ஞானமுள்ள, அன்புள்ள இருதயங்களினால் வழிநடத்தப்பட முடியும்; மேலும் சில வருடங்களுக்குப் பின்னர் ஆண்டவருக்குத் துதி உண்டாகும் அளவுக்கு ஐசுவரியமான அறுவடையைக் கொண்டுவந்திடும், இத்தகைய விலையேறப்பெற்ற வாய்ப்புகளானது யாராலும் தொலைத்துப் போடப்படக்கூடாது. எனினும் வளர்ந்துவரும் சந்ததியினருக்கு அறிவுரை வழங்கிடும் குறைவான முக்கியத்துவம் உடைய இந்த வேலையைச் செய்வதற்காக என்று, இந்த யுகத்தில் முதிர்ந்த கோதுமை மணிகளை அறுவடைப்பண்ணிடும் மகா பெரும் வேலையிலிருந்து பரிசுத்தவான்களை விலகப்பண்ணிடுவது எங்களது நோக்கமல்ல; மாறாக அநேகரால் கவனிக்கப்படத் தவறும் வழியோர சிலாக்கியங்களைச் சுட்டிக்காட்டுவதே எங்கள் நோக்கமாகும். அநேகம் அர்ப்பணிக்கப்பட்ட பெற்றோர்கள் இந்தச் சிலாக்கியங்களைத் தினந்தோறும் பெற்றுக்கொண்டவர்களாய் இருக்கின்றனர்; வாலிபர்கள் புரிந்துகொள்வார்கள் என்று எதிர்ப்பார்த்திட முடியாது அல்லது அவர்கள் ஆவிக்குரிய நாட்டங்கள் எதுவும் கொண்டிருக்கமாட்டார்கள் எனும் தவறான எண்ணத்தின் காரணமாக, அநேகர் தங்களோடு தொடர்புக்குள் வரும் வாலிபர்கள் முன் தங்கள் வெளிச்சத்தைப் பிரகாசிக்க மறந்துபோய்விடுகின்றவர்களாய் இருக்கின்றனர்.

முதலாவதாக வாலிபர்கள் உலகத்தோடுகூடப் பெருமை, பேராசை, அற்பத்தனங்கள், அறிவீனமான காரியங்களிலுள்ள பந்தயத்தில் ஓடிட வேண்டும், பின்னர் அவர்கள் தேவனிடத்திற்கு மனமாற்றப்பட வேண்டும் என்று எண்ணிடுவது மகா தவறாகும். வாலிபர்களைத் தங்களது பராமரிப்பின்கீழ்ப் பெற்றிருப்பவர்களின் கடமையாவது, இத்தகைய செல்வாக்குகளிலிருந்து கூடுமானமட்டும் பாதுகாத்திட முற்படுவதும், உலகமானது அதன் கவர்ச்சிகரமான கண்ணிகளை இவர்களுக்கு முன் விரித்திடுவதற்கு முன்னதாக, இவர்களது நாட்டங்களையும், நம்பிக்கைகளையும் தேவனில் மையம்கொள்ளச் செய்திட இவர்களுக்கு உதவிடுவதும் ஆகும்.

தங்கள் இருதயங்களைத் தேவனுக்குக் கொடுத்தவர்களும், தினந்தோறும் இயேசுவைப் பின்பற்றிட நாடுகின்றவர்களுமான அருமையான சிறுபிள்ளைகள் மற்றும் வாலிபர்கள் அனைவருக்கும் காவல்கோபுரத்திலிருந்து நாங்கள் வாழ்த்துதல் சொல்லி அனுப்புகின்றோம். இயேசுவை அன்புகூருகிறவர்களாகவும், இயேசுவை அன்புகூராத அல்லது அவரைப் பிரியப்படுத்த முயற்சித்திடாத

மற்றப் பிள்ளைகள் மத்தியில் இயேசுவிற்காய் நிற்பதற்கு வெட்கப்படாதவர்களாகவும், இராஜ்யத்தின் நற்செய்தியினைத் தங்கள் சக மாணவர்களிடம் கூறுகையில், அவர்களால் விநோதமானவர்களாகக் கருதப்பட்டப்போதிலும், அவர்களால் நகைக்கப்பட்டப்போதிலும் தைரியமாகவும், தேவனுக்கு உண்மையாயும் காணப்பட்டவர்களாகவும் இருக்கும் மிகச் சிறுபிள்ளைகள் சிலரை நாங்கள் அறிந்திருக்கின்றோம். உலகையும் அதன் ஆசைகள், இன்பங்களைத் தைரியமாய்த் துறந்தவர்களாக இருந்து, கர்த்தருக்கென்று தங்கள் ஜீவியங்களை அர்ப்பணம்பண்ணியுள்ள மிக உண்மையுள்ளவர்கள் மத்தியில் காணப்படும் சில வாலிபர்களைக் கண்டு நாங்கள் களிகூர்ந்திருக்கின்றோம். எங்களுடைய அலுவலகத்தில் உதவிசெய்கிற சிலரும், வெற்றிகரமாய் ஊழியம்புரியும் தொகுதி விநியோகிப்பாளர்களில் அநேகரும் வயதில் இளையவர்களாகவே காணப்படுகின்றனர்.

நல்ல வேலையானது ஆழமாகவும், விரிவாகவும் தொடர்வதாக. கர்த்தருடைய ஊழியங்களில் பெரிதும் உதவப்படுகிற வாய்ப்புகளிலும், நீண்ட ஆயுள்காலங்களிலும் வாலிபர்கள் களிகூருவார்களாக; வயதுவந்தவர்கள் இந்தப் பகற்காலத்தில் தைரியமாயும், ஞானமாயும், கர்த்தருடைய சேனையில் தனித்திறனுள்ள போர் வீரரென வீரமாய் வேலை செய்வார்களாக; வயதான யாத்திரீகர்கள் திவ்விய சத்தியம் எனும் கோலின்மீது சாய்ந்து, அதன் உறுதியில் களிகூர்ந்து, மற்றவர்களுக்கு வெளிச்சமாக நிற்பார்களாக; மேலும் ஓட்டத்தின் இறுதியில் "நல்லதொரு போராட்டம் போராடினேன்; விசுவாசத்தினைக் காத்துக்கொண்டேன்" என்று சொல்ல முடிகிறவர்களாக இருப்பார்களாக.

---

R2895 [தெரிந்தெடுக்கப்பட்ட பத்திகள்]

## சிறந்த ஒரு மனுஷனுடைய வாழ்க்கையின் முடிவு

### ஆதியாகமம் 50:15-26

"நாங்கள் ஞான இருதயமுள்ளவர்களாகும்படி, எங்கள் நாட்களை எண்ணும் அறிவை எங்களுக்குப் போதித்தருளும்." (சங்கீதம் 90:12)

எகிப்திலுள்ள யோசேப்பினுடைய மகத்துவம் பற்றின தகவல்களுடன், யாக்கோபின் குமாரர்கள் திரும்பி வந்தபோது, யாக்கோபுக்கு நூற்றி முப்பது வயதாயிருந்தது. தன்னுடைய குமாரன் இன்னும் உயிரோடிருக்கின்றார் என்றும், மகத்தான ஸ்தானத்தில் காணப்படுகின்றார் என்றும், கேள்விப்பட்டதில் அவருக்கு ஏற்பட்ட சந்தோஷத்தை, அவருடைய முதிர்வயதிற்குரிய இயல்பான பெலவீனங்களினால் தாங்கிக்கொள்ள முடியவில்லை. ஆகையால் யாக்கோபினுடைய குமாரர்கள், எவ்வாறு தாங்கள் யோசேப்பை அடிமைத்தனத்திற்குள் விற்றுப்போட்டார்கள் என்றும், எப்படி யாக்கோபை ஏமாற்றத்தக்கதாக, இருபத்திரண்டு வருடங்களுக்கு முன்னதாக யோசேப்பினுடைய மேலங்கியில் இரத்தத்தைப் பூசினார்கள் என்றும் விவரம் அறிந்தபோதுங்கூட, யாக்கோபினால் காரியங்களை நம்பமுடியவில்லை. யாக்கோபின் குமாரர்கள் கொடுத்திட்ட தகவல்களுக்கு அத்தாட்சியாக, யோசேப்பு தந்தைக்கென அனுப்பி வைத்திட்ட இராஜரிகமான அன்பளிப்புகளும், மற்றும் யாக்கோபையும், குடும்பத்தாரையும் சௌகரியமாகப் பிரயாணத்தில் சுமந்துவரத்தக்கதாக அனுப்பப்பட்டு, வந்திருந்த எகிப்திய வண்டிகளும் காணப்பட்டன. இந்த வண்டிகள் என்பது, அந்நாட்களில் காணப்பட்ட வாகனங்களாய் இருந்தது. யாக்கோபு இணங்க வைக்கப்பட்டார் மற்றும் பிரயாணத்தை மேற்கொண்டார்; அப்போதுதான் அநேகமாக யாக்கோபு தன் மனதில் சில கேள்விகளைக்கொண்டிருந்து, தேவனுக்குப்

பலிசெலுத்தினார்; அதாவது வாக்களிக்கப்பட்ட தேசத்தை இப்படியாக விட்டுச்செல்வது ஞானமான காரியமாக இருக்குமா என்றும் இப்படி, தான் விட்டுச்செல்லும் காரியமானது, தன்னுடைய சிறு பிராயம் முதற்கொண்டு, தன்னுடைய ஜீவியத்தில் மையம் கொண்டுள்ளதும், வழிநடத்தியுள்ளதுமான ஆசீர்வாதங்களை, தான் உதறித்தள்ளிவிட்டதாக அல்லது தனது விசுவாசத்தை, தான் கைவிட்டுவிட்டதாக, தேவனால் கருதப்படுமோ என்றுமுள்ள கேள்விகளை மனதில் கொண்டவராக, யாக்கோபு பலிசெலுத்தினார்.

யாக்கோபினுடைய கேள்விக்கும், பலிக்கும் (அநேகமாகச் சொப்பனத்தின் வாயிலாக) தேவன் பதிலளித்து, யாக்கோபு எகிப்துக்குப் போகும் காரியம் சரியானது என்றும், இறுதியில் யாக்கோபின் சந்ததியார் மீண்டும் "வாக்களிக்கப்பட்ட தேசத்திற்கு" திரும்ப வருவார்கள் என்றும் யாக்கோபுக்கு வாக்களித்தார். இப்படியாகவே ஆவிக்குரிய இஸ்ரயேலர்களும் அனைத்துச் சூழ்நிலைகளிலும் காணப்பட வேண்டும்; ஆவிக்குரிய இஸ்ரயேலன் பண்ணியுள்ள உடன்படிக்கையாகிய ஆபிரகாமின் உடன்படிக்கையும், அதிலுள்ள அவனது பங்கும், அவனது ஜீவியத்தின், அவனது இலட்சியங்களின், அவனது எதிர்பார்ப்புகளின், அவனது நம்பிக்கைகளின் மையமாகக் காணப்பட வேண்டும். உலக ஐசுவரியங்கள் மற்றும் உலக தயவுகளின் விஷயத்தில், எதிராளியானவனின் வஞ்சனை காணப்படுகின்றதா என ஆவிக்குரிய இஸ்ரயேலன் விழிப்புடன் காணப்பட வேண்டும். இவ்விதமான அபாயமானது உலகப்பிரகாரமான வளமையின் காற்று நம் திசையில் அதிகம் வீசும்போது அதிகமாய்க் காணப்படுகின்றது. இந்த அபாயமானது நாம் கஷ்டமான (அ) உபத்திரவமான நிலைமைகளுக்குள் கடந்துபோகையில், குறைவாகவே உள்ளது. இப்படியான (வளமையின் காற்று நம் பக்கத்தில் வீசும்) தருணங்களிளெல்லாம், நாம் கர்த்தரிடத்தில் அடிக்கடிச் செல்ல வேண்டுமென்றும், அவருடைய சித்தத்தை அறிந்துகொள்ளத்தக்கதாக முற்றும் முழுமையாக நாட வேண்டுமென்றும், நம்முடைய பூமிக்குரிய காரியங்கள் அனைத்திற்கும் மேலாக, நமது உடன்படிக்கையையும், அதன் முக்கியத்துவத்தையும் மனதில் கொண்டுவர வேண்டும் என்றும் நாம் நினைவில் கொள்வோமாக. மேலும் கர்த்தருக்கு உண்மையான பலியை ஏறெடுப்போமாக, அதாவது நமது ஏற்றுக்கொள்ளப்படுதலுக்கு ஆதாரமாய்க் காணப்படும் நமது அருமை மீட்பருடைய பலியின் புண்ணியங்களை முன்வைத்து, நமது இருதயங்களுடைய முழுமையான அர்ப்பணிப்பைத் திரும்பவும் கூறி, நமது உடன்படிக்கையைப் புதுப்பித்துக்கொள்வோமாக. இதுவே இந்த யாத்திரையில் நமக்கான ஒரே பாதுகாப்பான வழியாகும்.

---

R5167 [தெரிந்தெடுக்கப்பட்ட பத்திகள்]

# சொந்த அலுவல்களைப் பார்த்தல்

"நாங்கள் உங்களுக்குக் கட்டளையிட்டபடியே, அமைதலுள்ளவர்களாயிருக்கும்படி நாடவும், உங்கள் சொந்த அலுவல்களைப் பார்க்கவும், உங்கள் சொந்தக் கைகளினாலே வேலை செய்யவும்வேண்டுமென்று உங்களுக்குப் புத்திசொல்லுகிறோம்." (1 தெசலோனிக்கேயர் 4:12)

வீண் அலுவற்காரர் என்பவர், தனக்குச் சம்பந்தமில்லாத மற்றவர்களுடைய காரியங்களில் தலையிடுபவர் ஆவார். இத்தகையவன் மற்றவர்களுக்கு ஆலோசனை வழங்கிடுவதும், அவர்களை விமர்சிப்பதும், விசாரணைச் செய்வதும், கண்டிப்பதும், கடிந்துகொள்வதும் தன் கடமை என்று கற்பனைப்பண்ணிக்கொள்கின்றான். எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் ஒருவரின் கடமை என்ன என்பதைத்

தீர்மானிப்பதற்குப் பொன்னான பிரமாணமானது மிகவும் உதவிக்கரமாய் இருக்கின்றது. கர்த்தருடைய இக்கட்டளையானது வீண் அலுவல் சம்பந்தப்பட்ட அனைத்தையும் தடைப்பண்ணுகின்றதாய் இருக்கின்றது. சகோதர அன்பிற்கும், வீண் அலுவலுக்கும் இடையிலுள்ள வித்தயாசத்தினைக் கண்டுகொள்ளத்தக்கதாகப் புதுச்சிருஷ்டியிலுள்ள ஒவ்வொரு அங்கத்தினனும் தன் மனசாட்சியினைப் பயிற்றுவிக்க வேண்டும் மற்றும் தன் ஒவ்வொரு வார்த்தை, கிரியை மற்றும் சிந்தையினுடைய விஷயத்தில் நீதி மற்றும் அன்பினுடைய பிரமாணங்களைச் செயல்படுத்திடுவதற்குக் கற்றுக்கொள்ள வேண்டும்.

ஒரு காரியத்தில், நாம் தனிப்பட்ட விதத்தில் சம்பந்தப்பட்டவர்களாய் இருந்து, அதில் நாம் உரிய கவனம் செலுத்துவோமானால், மற்ற ஜனங்களுடைய காரியங்களில் நாம் தலையிடாமல், நம் சொந்த அலுவலைப் பார்த்துக்கொள்பவர்களாக இருப்போம். ஆனால் கண்டிப்பதும் தலையிட்டுச் சரி செய்வதும் தகுதியானது என்று வேதாகமம் சுட்டிக்காண்பித்திடும் நேரங்களும், இடங்களும், சூழ்நிலைகளும் உள்ளன. பெற்றோர் பிள்ளையைத் திருத்திடலாம்; ஆசிரியர் மாணவனைத் திருத்திடலாம். வீட்டில் நடந்துகொண்டிருக்கும் காரியம் அனைத்தையும் குறித்துப் பெற்றோர் அறிந்துகொள்வது என்பது தலையிடும் காரியமாய் இராது; பள்ளிக்கூடத்தின் காரியங்களை ஆசிரியை அறிவது என்பது தலையிடுதலாய் இராது. எனினும் குடும்பத்தின் அல்லது பள்ளிக்கூடத்தின் அங்கத்தினர்களுடைய தனிப்பட்ட உரிமைகளானது ஒருபோதும் கவனிக்கத் தவறப்படக்கூடாது. பெற்றோர்-பிள்ளை மற்றும் ஆசிரியர்-மாணவன் போன்று, வீட்டின் உரிமையாளரும், வீட்டிற்குக் காரியங்களைச் செய்பவரும் அதே பிரமாணத்தின் கீழ் வருபவர்களாய் இருக்கின்றனர்.

மற்றவர்களைத் திருத்திடுவதற்கு அதிகமான நேரத்தினைச் செலவிடுபவன், அதிலும் இத் திருத்தங்களைச் சரியாயும், நேர்த்தியாயும் செய்பவனாக இருந்தாலுங்கூட, இத்தகையவன் தன்னைக் குறித்து மறந்துபோய்விடுபவனாக இருப்பான் என்பதே கற்றுக்கொள்ள வேண்டிய ஜீவியத்தின் மகா படிப்பினைகளில் ஒன்றாகும். ஒருவன் தன்னைத் திவ்விய ஏற்பாடுகளுக்கு இசைவாகக் கொண்டுவருவதும், அதிலே தன்னைத் தக்கவைத்துக் காத்துக்கொள்வதும்தான், அவனுடைய முதலாம் கடமையாகும்.

## வீண் அலுவல் என்பது அவிசுவாசத்திற்கான சான்றாகும்

தேவனுடைய அன்பில் நம்மைக் காத்துக்கொள்ள வேண்டுமெனில், நாம் பரிசுத்த ஆவியினுடைய கனிகளையும், கிருபைகளையும் வளர்த்தி, விருத்தியாக்கிட வேண்டும். இப்பண்புகள் குறித்துக் கற்றறிந்து, தேவ செய்திக்கொடுக்க முடிபவர்களாய் இருந்தும், தங்களுடைய இந்த அறிவை அன்றாட ஜீவியத்தின் காரியங்களில் சரியாய்ச் செயல்படுத்திட முடியாதவர்களாய் இருப்பவர்கள் அநேகர். சாந்தமும், தயவும், அன்பும் தங்களுடைய சொந்தக் காரியங்களில் எதிலே காண்பிக்கப்பட வேண்டும் என்று உணர்ந்துகொள்ள முடியாதவர்களாய் இருக்கின்றனர். வார்த்தைகள் மூலமாய் என்பதைவிட மாதிரியின் மூலமாய் நம்மால் சில விஷயங்களை மற்றவருக்கு நன்கு போதிக்க முடியும். ஒருவேளை நீதி மற்றும் அன்பின் கொள்கைகளினால் நாம் ஆளப்படுகின்றோம் என்பதை ஜீவியத்தினுடைய சிறு காரியங்களிலேயே நாம் காண்பிப்போமானால் மற்றும் ஒருவேளை சோதனையின் வேளையில் சாந்தம், தயவு மற்றும் ஆவியின் மற்றக் கனிகளை நாம் வெளிப்படுத்துவோமானால், நன்மைக்கேதுவான நம் செல்வாக்கானது மிகவும் பெரிதாகிடும்.

வாழ்க்கையில் கவனித்ததை வைத்துப்பார்க்கையில் உலகில் பாதிப்பேர் வீண் அலுவல்காரர்களாகவே இருக்கின்றனர் மற்றும் இந்தப் பலவீனத்தின் காரணமாகவே இவர்களுடைய சோதனைகளில்

பெரும்பாலானவைகள் வந்துள்ளன. கிட்டத்தட்ட ஒவ்வொரு குடும்பத்திலும் யாரோ ஒருவர் இப்படியாக இருப்பார்; ஒருவேளை கணவன், ஒருவேளை மனைவி, ஒருவேளை பிள்ளை மற்றவர்களுடைய பரிவையும், பெருந்தன்மையையும் சாதகமாக்கிக் கொண்டு, வீட்டை ஆளுகிறவராக இருப்பார். பொதுவாகவே இம்மாதிரியான சந்தர்ப்பங்களில் அதிகமான அநீதி செய்யப்படுகின்றது. இந்த நிலைப்பாட்டினை எடுத்துக்கொள்பவர்கள், "ஒருவேளை அதிகாரத்தினை நான் கையில் எடுக்காவிட்டால், காரியங்கள் சரியாய் நடக்காது" என்று கூறி, தங்கள் நடத்தையினை நியாயப்படுத்திட பெரும்பாலும் முற்படுகின்றனர். இத்தகையவர்கள் தாங்கள் வீண் அலுவலர்களாய் இருக்கின்றனர் என்பதை உணராதவர்களாய் இருக்கின்றனர்.

இத்தகைய நடத்தையானது, தேவனிடத்தில் விசுவாசமின்மையை விவரிக்கின்றதாய் இருக்கின்றது. நாம் நமது கடமையினைச் செய்திட வேண்டும் மற்றும் மீதியைக் கர்த்தரிடத்தில் விட்டுவிட வேண்டும். திவ்விய ஏற்பாடுகளுக்குத் தாங்கள் கீழ்ப்பட்டிருக்காததால் தாங்கள் பெரும் காரியங்களை இழந்துள்ளனர் என்று பிற்காலங்களில் ஜனங்கள் உணர்ந்துகொள்வார்கள். இப்படியாக அநீதியினைச் செயல்படுத்திடும் கர்த்தருடைய ஜனங்களில் உள்ள யார் ஒருவரும், புதுச்சிருஷ்டியென வளர்ச்சிக் காண்பிக்காதவர்கள் ஆவர். மற்றவர்களுடைய உரிமைகளைப் புறக்கணித்துப்போட்டு, தாங்கள் விரும்பினதைச் செய்வதற்குத் தங்கள் அதிகாரத்தினைப் பயன்படுத்துவது கணவனாகவோ, மனைவியாகவோ அல்லது பிள்ளையாகவோ இருந்தால், அத்தகைய நடத்தையானது திவ்வியப்பிரமாணத்திற்கும், அன்பின் ஆவிக்கும் முரணானதாக இருக்கும். தாங்கள் பெரிய தவறைச் செய்துள்ளதை இவர்கள் என்றோ ஒருநாள் உணர்ந்துகொள்வார்கள். (கொலோசெயர் 3:18-21).

குடும்பத்தின், இல்லத்தின் தலைவன் தான் பெற்றிருக்கின்றதான பொறுப்பினை அடையாளம் கண்டுகொண்டவராய்க் காணப்பட வேண்டும் மற்றும் அப்பொறுப்பினை நிறைவேற்றிடுவது அவரது கடமையாக இருக்கின்றது. தன்னால் வழிகாட்டப்படுபவர்களுடைய நலன்களையும், விருப்பங்களையும் கருத்தில்கொண்டவராக அன்புடன்கூடிய அக்கறையில் காரியங்களை அவர் செய்திட வேண்டும். இல்லத்தில் கணவனுடைய கடமை என்பது திவ்வியப்பிரமாணம் இவர்மேல் வைத்திட்ட கடமையாக இருக்கின்றது மற்றும் இக்கடமையினை நிறைவேற்றிடுவதற்கு இவர் தன் குடும்பத்தினுடைய நலன் கருதி, தன் சொந்த நேரத்தையும், விருப்பங்களையும் தியாகம் செய்வதற்குப் பெரும்பாலும் எதிர்ப்பார்க்கப்படுகின்றார். இந்தப் பொறுப்பினை நிறைவேற்றிடுவது என்பது இவருடைய கடமையாக இருக்கின்றது (எபேசியர் 5:25-33; 6:4).

குடும்பத்தில் தாயினுடைய ஸ்தானம் குறித்தும் வேதவாக்கியங்களானது விவரிக்கின்றதாய் இருக்கின்றது. இந்த ஸ்தானம் உயர்ந்த ஒரு ஸ்தானமாகும். ஆனால் இல்லத்தில் தலைவனுடைய ஸ்தானத்தின் உரிமையினைப் பறித்துக்கொள்ளும் ஒவ்வொரு ஸ்திரீயும், ஒருவேளை அவளது இத்தகைய தவறான நடக்கையில் சிலகாலம் செழித்தோங்கினாலும்கூட, இப்படிச் செய்வது என்பது அவளுக்கும், அவள் குடும்பத்தினுடைய மேலான நன்மைகளுக்கும் ஊறுவிளைவிக்கின்றதாய் நிச்சயமாயிருக்கும் (1 பேதுரு 3:1-6).

தங்கள் சொந்தக் குடும்பத்தினுடைய அங்கத்தினர்களைக் கையாளும் விஷயத்தில் அநேகர் பொறுமையற்றும், இரக்கமற்றும் காணப்படுகின்றனர்; ஆனால் வெளியாட்களுக்கு ஒழுக்கத்திற்கு மாதிரிகளாகத் தோற்றமளிக்கின்றனர். இவர்கள் மனரீதியான, சரீர ரீதியான விஷயத்தில் தங்கள் குடும்பத்தாரிடத்தில் குறிப்பிட்ட பொறுப்பு ஒன்றினைப் பெற்றிருக்கின்றனர் என்று நாம் இவர்களுக்கு

விசேஷமாய் நினைப்பூட்டிடும்போது, இவர்கள் தங்கள் நடத்தைக்கு நியாயம் கற்பித்திடும் விதத்தினைக் காண்பதற்கே நமக்கு வருத்தமாயுள்ளது. தேவனுடைய அங்கீகரிப்பினைப் பெற நாடிக்கொண்டிருக்கும் ஒவ்வொருவனும் - உலகத்தார் மற்றும் சகோதரர்கள் விஷயத்தில் மாத்திரமல்லாமல், தங்கள் சொந்தக் குடும்பத்தினுடைய அங்கத்தினர்கள் விஷயத்திலும் . . . தாங்கள் எல்லா விதத்திலும் தங்கள் சொந்த அலுவல்களைத்தான் பார்த்துக்கொண்டிருக்கின்றார்கள் என்பதில் உறுதிக்கொள்ளத்தக்கதாக, தன் நடத்தையினைக் கவனித்துக்கொள்வானாக.

---

R2880 [தெரிந்தெடுக்கப்பட்ட பத்திகள்]

# முகாந்தரமில்லாமல் பகைக்கப்பட்டார்

## ஆதியாகமம் 37:12-36

"அந்தக் கோத்திரப்பிதாக்கள் பொறாமைகொண்டு யோசேப்பை எகிப்துக்குக் கொண்டுபோகும்படியாக விற்றுப்போட்டார்கள். தேவனோ அவனுடனேகூட இருந்தார்." (அப்போஸ்தலர் 7:9, 10)

யாக்கோபினுடைய மிகுந்த பிரியத்திற்குரிய மனைவியாகிய ராகேல் மரித்துப்போய்விட்டாள், அவளுடைய முதல் பிறப்பாகிய யோசேப்பே, மற்றப் பத்து ஒன்றுவிட்ட உடன் பிறந்த சகோதரர்களைக்காட்டிலும் யாக்கோபினுடைய பிரியத்திற்குரியவராகக் காணப்பட்டார். பதிவை வைத்துப் பார்க்கும்போது, இந்த அன்பானது, யோசேப்பினுடைய தாயினிமித்தமாக மாத்திரமல்லாமல், யோசேப்புக்கொண்டிருந்த பரிவும், உயரிய குணலட்சணங்களும் விசேஷமாய் அவரது தகப்பனாருடைய கவனத்தை ஈர்த்தது மற்றும் தகப்பனுடைய பாசத்தையும் வென்றது என்றும் நாம் எடுத்துக்கொள்வது நியாயமானதே. யோசேப்பு யாக்கோபினுடைய முதிர்வயதின் குமாரனாக இருந்தபடியினால், யாக்கோபு யோசேப்பிற்கு அநேக விதங்களில் தயவு பாராட்டிட விருப்பமுள்ளவராகக் காணப்பட்டார் மற்றும் குமாரர்கள் அனைவரின் மத்தியிலும் யோசேப்பிற்கு விலையுயர்ந்த வஸ்திரத்தை/அங்கியைப் பெரிதும் முயன்று வாங்கிக்கொடுத்தார்; இந்த வஸ்திரமானது அக்காலக்கட்டத்தில் சிறந்த ஒன்றாயிருந்தது மற்றும் இதைப்போன்ற வஸ்திரமானது பென்னி-காசனின் எகிப்திலுள்ள கல்லறையில், சமீபத்தில் கண்டுபிடிக்கப்பட்டது; அது "பல்வேறு நிறங்களிலுள்ள சிறுசிறு துண்டுபகுதிகள் ஒன்றாய் இணைத்துத் தைக்கப்பட்டுள்ள, பல வருணங்களும், சித்திரங்களும் உடைய நீண்டதும், அதிகமான சித்திர தையல்கள் உள்ளதுமான வஸ்திரங்களாய் இருந்தன." எகிப்தினுடைய இராஜாவினால் அன்பளிப்பாக அனுப்பப்பட்ட இத்தகைய அங்கி ஒன்றைக் குறித்து ஹெரோட்டஸ் அவர்கள் பின்வருமாறு விவரிக்கின்றார், "பல்வேறு விலங்குகளின் உருவங்கள் துணியில் பொன்னினால் சித்திரத்தையலிடப்பட்டிருந்தது."

தன்னுடைய இந்தப் பாரபட்சமானது, எந்த அளவுக்குத் தன்னுடைய மற்றக் குமாரர்களிடத்தில், யோசேப்பிற்கு எதிராகப் பொறாமை மற்றும் பகைமையின் எண்ணத்தை உண்டுபண்ணிக்கொண்டிருந்தது என்பதை அநேகமாக யாக்கோபு உணர்ந்துகொள்ளவில்லை; இன்னுமாகக் குணலட்சணங்கள் வளருதல் தொடர்புடைய விஷயத்தில், இம்மாதிரியான (பாரபட்சம் காணப்பட்ட) சூழ்நிலைகளின் கீழ், யோசேப்பு வீட்டிலேயே தங்கியிருந்த காரியமானது, யோசேப்பிற்கு நன்மையாக இருந்திருக்குமோ என்று நமக்குக் கேள்வி எழும்பலாம்; ஏனெனில் மிகுதியான பாரபட்சத்தினாலும், செல்லமான வளர்ப்பினாலும்

பேரப்பிள்ளைகள், பாட்டி, தாத்தாவினால் கெடுக்கப்படுவதற்கும், பாரபட்சம் காட்டப்படும் பிள்ளையினிடத்தில், பெருமையின் சிந்தை வளர்த்திடுவதற்கும் மற்றும் இந்தச் சிந்தை பிள்ளையை ஜீவியம் முழுவதும் பாதிப்பிற்குள்ளாக்குவதற்கும் வாய்ப்புள்ளது என்பதினால், யோசேப்பும் இப்படியாகச் சீரழிக்கப்பட்டிருப்பாரோ என்று நமக்குக் கேள்வி எழும்பலாம்.

---

R2885 [தெரிந்தெடுக்கப்பட்ட பத்திகள்]

# துன்பம் எனும் பள்ளிக்கூடத்தில்...

## ஆதியாகமம் 39:20-40:15

எகிப்திற்கு வந்தபோதும், கர்த்தருடைய ஆசீர்வாதமானது யோசேப்பின் மீது குறிப்பிடத்தக்க விதத்தில் இருந்தது, அதாவது யோசேப்பு ஐசுவரியமுள்ள எஜமானிடத்திற்கு அடிமையாக விற்கப்பட்ட விதத்தில் கர்த்தருடைய ஆசீர்வாதமானது யோசேப்பின் மீது காணப்பட்டது. யோசேப்பினுடைய கடந்த கால வாழ்க்கை பற்றிக் குறைவான விவரங்களே இருக்கின்றது; ஆனால் பதினேழு வயதையுடையவராக யோசேப்பு போத்திபாரின் வீட்டில் பிரவேசித்தபோது, அவர் சிறந்த/கவனத்தை ஈர்க்கின்ற வாலிபனாகக் காணப்பட்டதாகத் தெரிகின்றது. யோசேப்பினுடைய மனஉறுதியும், நிதானமும், கடமையின் விஷயத்திலான உண்மையும், அறிவுக்கூர்மையும், யோசேப்பினுடைய பிறப்பை ஆவலாய் விரும்பினவரும், யோசேப்பின் பிறப்பை வேண்டுதலுக்கான பதிலாகப் பெற்றுக்கொண்டவருமான யாக்கோபிடமிருந்து யோசேப்பு சுதந்தரித்துக்கொண்ட நல்லப் பண்புகளாகும். யோசேப்பு, தன்னுடைய தகப்பனுடைய விசுவாசத்தையும், பரந்த மனப்பான்மையையும், காரியங்களைச் செயல்படுத்துவதற்குரிய திறமையையும் கொஞ்சம் சுதந்தரித்தவராக இருந்தார் மற்றும் இதன் காரணமாக யோசேப்பு போத்திபாரின் வீட்டில் மாபெரும் பொறுப்புடைய ஸ்தானத்திற்கு, அதாவது தனது எஜமானுடைய காரியங்கள் அனைத்தின்மீதும் பொறுப்பைப் பெறும் ஸ்தானத்திற்கு உயர்த்தப்பட்டார். வாலிபனாகிய யோசேப்பின் மனமானது அடிக்கடி தனது தகப்பனிடத்திற்கும், சகோதரர்களிடத்திற்கும், தன்னுடைய சொப்பனங்களினிடத்திற்கும் மற்றும் ஆபிரகாமின் உடன்படிக்கையினிடத்திற்கும் திரும்பிக்கொண்டிருந்திருக்க வேண்டும் என்பதில் நமக்கு ஐயமில்லை. யோசேப்பு அந்த வாக்குத்தத்தங்களில் நம்பிக்கைக்கொண்டிருந்தார் என்பதில் ஐயமில்லை மற்றும் அந்த வாக்குத்தத்தங்கள் எவ்வாறு நிறைவேற்றப்படும் என்றும், தன்னுடைய காரியங்களில் தெய்வீக வழிநடத்துதல்கள் எப்படியாகக் காணப்படும் என்றும் யோசேப்பு யோசனைப் பண்ணிக்கொண்டிருந்திருப்பார் என்பதிலும் ஐயமில்லை. அவருடைய வாழ்க்கை திடீரெனக் கானானுடைய வயல்வெளிகளிலிருந்து, அக்காலத்தில் மாபெரும் பட்டணங்களில் ஒன்றாகவும், அந்நாட்களின் புகழ் பெற்ற தேசத்தின் தலைநகரமாகவும் விளங்கின பட்டணங்களுடைய பாவங்கள், களியாட்டுகள், சுகபோகங்கள் மற்றும் விறுவிறுப்பான சூழ்நிலைகளுக்குள் மாற்றப்பட்டபோது, தேவன் மீதான அவரது விசுவாசமும், வாக்குத்தத்தங்கள் மீதான அவரது நம்பிக்கையும், அவரைச் சூழ்ந்த தீமையான தாக்கங்களிலிருந்து, அவர் தன்னை விலக்கிக்கொள்ள உதவினது.

இப்படியாகவே அனைவருடைய வாழ்க்கையின் விஷயத்திலும் காணப்படுகின்றது; தற்கால தீமையின் உலகத்தினுடைய பலவிதமான காற்றுகளின் மத்தியில் ஜீவியத்தைக் காத்துக்கொள்வதற்கும், ஜீவியம் சீராய் இருப்பதற்கும் ஒரு கொள்கை, ஒரு நம்பிக்கை, ஒரு நல் குறிக்கோள் அவசியமாய் இருக்கின்றது. தேவபக்தியுள்ள பெற்றோர்களினால் பயிற்றுவிக்கப்பட்டுள்ள, அதிலும் விசேஷமாக

நம்முன் வைக்கப்பட்டுள்ள சுவிசேஷத்தின் நம்பிக்கைகள் தொடர்புடைய விஷயத்தில் பயிற்றுவிக்கப்பட்டுள்ள வாலிபனோ (அ) வாலிபப் பெண்ணோ, மற்ற வாலிபர்களைக் காட்டிலும் அனைத்து விதங்களிலும் அனுகூலம் உடையவர்களாய் இருப்பார்கள்; இந்த மற்ற வாலிபர்களோ எவ்வித விசேஷித்த நோக்கமும், இலக்கும் ஜீவியத்தில் பெற்றிராதவர்களாகவும், வாழ்க்கையைச் சமநிலையில் கொண்டிருப்பதற்கான பாரமாகிய தெய்வீக வாக்குத்தத்தங்களைப் பெற்றிராதவர்களாகவும், பொதுவாக அறிவீனமான காரியங்களுக்கு நேராகவும், அடிக்கடி பாவத்திற்கு நேராகவும், அனைவரும் இச்சிக்கும் திருப்திகளை நாடுவதற்கு நேராகவும், மாறிமாறி வீசும் காலம் எனும் காற்றினால் இங்கும் அங்குமாக அலைக்கழிக்கப்படுகின்றார்கள். தங்கள் பிள்ளைகளிடத்திலான கடமையில் கவனமற்றுக் காணப்படுகின்ற பெற்றோர்கள், தங்கள் பிள்ளைகளின் தவறுகளை உடனடியாகச் சரி செய்ய முடியாது மற்றும் உண்மையான சமாதானத்தையும், சந்தோஷத்தையும், திருப்தியையும், ஜீவியத்தின் புயல்களின் மத்தியில் தேவையான சமநிலையையும் கொண்டுவருகின்ற காரியங்கள் மீது பிள்ளைகளின் மனதை பதிய வைத்திடுவதற்கு உதவிட உடனடியாகவும் முடியாது.

---

R3971 [தெரிந்தெடுக்கப்பட்ட பத்தி]

## இவனைக் கொல்லுவோம் வாருங்கள்

உண்மைகள் பற்றின விவரம்/புகார் தெரிவித்ததிலுள்ள யோசேப்பினுடைய உண்மைத் தன்மையானது, அவரை யாக்கோபு மேற்பார்வையாளராக ஏற்படுத்துவதற்கு ஏதுவாக வழிநடத்தினது மற்றும் இதன் காரணமாகவே யோசேப்பு, மூன்று நாள் பயணமாக, தன்னுடைய சகோதரர்களுக்கு சில வீட்டு உணவுகளை எடுத்துச் செல்வதற்கும், அவர்களது நிலவரங்களைப் பற்றியும், மந்தைகளினுடைய வளமை பற்றியும், மேய்ச்சல் நிலவரங்கள் முதலியவைகள் பற்றியுமான மறு செய்தியினை யாக்கோபினிடத்திற்குக் கொண்டுவருவதற்குமெனச் சீகேமுக்கு யாக்கோபினால் அனுப்பி வைக்கப்பட்டார். சீகேமிலே தன்னுடைய சகோதரர்களைக் காணமுடியாததினாலே, யோசேப்பு தோத்தானுக்குப் போனார்; மற்றும் இவைகள் அனைத்திலும் யோசேப்பு தைரியத்தையும், தன்னம்பிக்கையையும் உடையவராகவும், அக்கால வழக்கத்தின்படி இரவு வேளைகளில் திறந்த வெளியில் உறங்கினவராகவும், வழியிலுள்ள அபாயங்களை மனத்துணிவுடன் சந்தித்தவராகவும் காணப்பட்டது வெளிப்படுகின்றது. இதுவுங்கூட, யாக்கோபு தன்னுடைய நேசகுமாரனிடத்தில் கொண்டிருந்த அன்பானது, அவர் யோசேப்பை முற்றிலுமாகச் சீரழித்துப்போடுவதற்கு வழிநடத்தவில்லை என்பதையும், யோசேப்பு தன்னைத்தான் பராமரித்துக்கொள்ள முடிகின்றவராக யாக்கோபினால் நம்பப்பட்டார் என்பதையும் நமக்குத் தெரிவிக்கின்றதாய் இருக்கின்றது. இன்றைய காலங்களில் அநேகமாக பெற்றோர்கள் ஞானமற்றவர்களாக நடந்துகொண்டு, தங்களின் அதிகப் பிரியத்திற்குரிய பிள்ளைகளிடத்தில் தைரியத்தையும், உறுதியையும் வளர்த்திவிடுவதற்குத் தவறிப்போய்விடுகின்றனர் மற்றும் பிற்காலங்களில் பிள்ளைகளுக்கு மிகவும் பாதகமாய்க் காணப்படத்தக்கதாக, சில சமயங்களில் பிள்ளைகளைச் சில சிரமங்களிலிருந்து மூடி மறைத்துக் காத்துவிடுகின்றனர்.

---

R4401 [தெரிந்தெடுக்கப்பட்ட பத்திகள்]

# பகலிலே நடக்கிறவர்கள்போலச் சீராய் நடக்கக்கடவோம்

## உரோமர் 13:8-13

"கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவைத் தரித்துக்கொள்ளுங்கள்." (உரோமர் 13:14)

## பகலிலே நடக்கிறவர்கள்போலச் சீராய்

சீராய்/Honesty என்று மொழிப்பெயர்க்கப்பட்டுள்ளதான வார்த்தையானது becomingly/ பொருத்தமாய்/ மாறுதல் என்று இன்னும் சரியாய் மொழிப்பெயர்க்கப்படலாம்; அதாவது நம்முடைய விசுவாசத்திற்கு, நம்முடைய நம்பிக்கைக்கு, கர்த்தரைப்பற்றின நம்முடைய புரிந்துகொள்ளுதலுக்கு, பகலின் வெளிச்சம்பற்றின நம்முடைய புரிந்துகொள்ளுதலுக்கு இசைவாக நாம் பொருந்துதல்/ மாறிக்கொள்வதாகும். வேறுபடுத்திக் காண்பிக்கும்பொருட்டு, இரவுக்குரிய சில விஷயங்களைக்குறிப்பிடுகின்றார்; இவைகள் இதன் கீழ்த்தரமான தோற்றத்தில் மாத்திரமல்லாமல், இதன் மிகுந்த நாகரிகமான தோற்றத்திலும்கூட நமக்குத் தகுதியற்றதாகுகின்றது. மதுகொண்டு வெறியில் காணப்பட வேண்டாம். நிச்சயமாய் எந்த ஒரு பரிசுத்தவானும் விருந்துகளிலோ (அ) விழாக்களிலோ/களியாட்டுகளிலோ சொல்லர்த்தமாய் மதுபான வெறிக்கொள்ளமாட்டான். ஆனால் மிகுந்த நாகரிகமான தோற்றத்திலுள்ள வெறிகொள்ளுதலும் மற்றும் களியாட்டுகளும் நிச்சயமாய் இருக்கின்றன. ஏதோ ஒரு வகையான இன்பக் களியாட்டுகளில், மோட்டார் வண்டிகளில், குழிப்பந்தாட்டங்களில் (Golf), கிரிக்கெட்/பந்து விளையாட்டுகளில் (cricket) அல்லது விறுவிறுப்பான சமூக கேளிக்கைகளில்/குழுக்களில் (social whirl) ஒருவர் வெறிக்கொள்ளலாம். இவைகள் அனைத்தும் உண்மை கிறிஸ்தவன், புதிய யுகத்தினுடைய காலைக்குரியவைகளல்ல என்றும், தற்கால சத்தியத்தினுடைய வெளிச்சத்திற்கு இசைவற்றது என்றும் அடையாளங்கண்டுகொள்ள வேண்டும்; இந்தத் தற்கால சத்தியத்தின் வெளிச்சமானது - புதிய யுகத்தினுடைய துவக்கத்தில் நாம் எங்கே நிற்கின்றோம் என்பதையும், தற்கால ஜீவியத்தைப் பலி செலுத்திடுவதற்கும் மற்றும் இராஜ்யத்தின் மகிமைகளைப் பெற்றுக்கொள்வதற்கும் எத்தனை அருமையான வாய்ப்புகள் காணப்படுகின்றது என்பதையும் நமக்குக் காண்பிக்கின்றதாய் இருக்கின்றது.

கிறிஸ்தவர்களென நாம் வேசித்தனத்திலும் (முறையற்ற தொடர்பிலும்), காமவிகாரத்திலும் (சுயத்தைத் திருப்திசெய்தலிலும்) நடக்கக் (ஜீவிக்க) கூடாது. இந்த அனுபவங்கள் சிலருக்கு இவைகளினுடைய கீழ்த்தரமான விதத்திலும்/தோற்றத்திலும், ஆனால் மற்றவர்களுக்கு நிச்சயமாய் மிகுந்த நாகரிகமான விதத்திலும்/தோற்றத்திலும் வரும். எந்த ஒரு தளத்திலும் ஒளிக்கும், இருளுக்கும் எந்த ஐக்கியமோ (அ) உறவோ இருப்பதில்லை; காரணம் இரண்டுமே எதிர் எதிரானவைகளாகும். ஆகையால் இருளின் காரியங்களோடு, பாவத்தின் காரியங்களோடு, மாயமந்திரங்களின் காரியங்களோடு, கர்த்தருடன் முழு இசைவில்லாமல் காணப்படும் காரியங்களோடுள்ள எந்தச் சம்பந்தமும் - முறையற்ற மற்றும் நியாயமற்ற தொடர்பாகும் (அ) ஐக்கியமாயிருக்கும். இதுபோலவே காமவிகாரத்தின் (சுயநலத்தின்) விஷயமும் - நாகரிக வகையான சுயநலத்திற்கும் (சுய திருப்திக்கு), வேட்கைகளுக்கு அளவுக்கு அதிகமாகச் சலுகைக்காட்டுதலுக்கும் பொருத்தப்படலாம்; மற்றும் கர்த்தருக்காய், சத்தியத்திற்காய், சகோதர சகோதரிகளுக்காய் ஊழியம் புரிவதற்கு அல்லது நம்முடன் தொடர்புக்குள் வருகிற யாவருக்கும் வாய்ப்பிற்கேற்ப நன்மை செய்வதற்குமான நம்முடைய அர்ப்பணிப்பின் வாக்குறுதிக்கு இசைவாக, பூமிக்குரிய இன்பங்களைப் பலிசெலுத்திட தவறிடுவதற்குப் பொருத்தப்படலாம்.

கிறிஸ்தவன் வாக்குவாதத்திலும், பொறாமையிலும் ஜீவிக்கக் (நடக்க) கூடாது. இதிலும்கூடக் கீழ்த்தரமான தோற்றமும், நாகரிகமான தோற்றமும்/விதமும் உண்டு. உலகத்தைப் பொறுத்தமட்டில் வாக்குவாதத்தினுடைய கீழ்த்தரமான தோற்றம் என்பது, குத்துச்சண்டையாகவும், சரீரப்பிரகாரமான எதிர்ப்பாகவும் புரிந்துகொள்ளப்படலாம் மற்றும் கடுமையான பொறாமையானது உண்மையிலோ (அ) இருதயத்திலோ பொல்லாப்பான செய்கைகளுக்கும் மற்றும் கொலைப்பாதகங்களுக்கும் வழிநடத்துவதாய் இருக்கும் என்று புரிந்துகொள்ளப்படலாம்; இல்லையேல் இந்த எச்சரிப்புகளானது மிகுந்த நாகரிகமான விதத்தில் பரிசுத்தவான்களுக்கு, பின்வரும் புத்திமதியாகப் பொருத்திப்பார்க்கப்படலாம்: நம்முடைய ஜீவியங்கள் சண்டைத்தனமாக இருக்கக்கூடாது; நாம் சமாதானத்தைப் பின்பற்றி, சமாதானத்திற்கு ஏதுவானவைகளை எங்கும் - நம்முடைய சொந்தக் குடும்பத்தில், நம்முடைய அயலகத்தாரிடத்தில், அருகாமையிலும், தொலைவிலும் காணப்படும் கர்த்தருடைய ஜனங்கள் மத்தியில் - ஆதரித்திட நாடிட வேண்டும். "யாவரோடும் சமாதானமாயிருக்கவும், பரிசுத்தமுள்ளவர்களாயிருக்கவும் நாடுங்கள்; பரிசுத்தமில்லாமல் ஒருவனும் கர்த்தரைத் தரிசிப்பதில்லையே." பொறாமையானது, நாகரிகமான தோற்றத்தில் கிட்டத்தட்ட மனுக்குலம் முழுவதிலுமே காணப்படும். பொறாமையே, கிறிஸ்துவின் சரீரமாகிய சபையில் பெரும் பாதிப்புகள் ஏற்பட்டுள்ளதற்கான முக்கியக் காரணமாய்க் காணப்படுகின்றது; இது புதிய சிருஷ்டியால் பெரும்பாலும் அடையாளம் கண்டுகொள்ளப்படாமல் இருக்கின்றது. பொறாமை எனும் தீய பண்பே நமக்கும் சரி, மற்றவர்களுக்கும் சரி அதிகமான பாதகம் ஏற்படுத்துமே ஒழிய, மற்றபடி வேறு எதுவுமல்ல. நாம் இவைகளைக் களைந்துபோட்டுவிட வேண்டும்.

---

R5318 [தெரிந்தெடுக்கப்பட்ட பத்திகள்]

# யுகத்தினுடைய ஓட்டப்பந்தயமும்--அதன் மேகம்போன்ற திரளான சாட்சிகளும்

### எபிரெயர் 12:1

"ஆகையால், மேகம்போன்ற இத்தனை திரளான சாட்சிகள் நம்மைச் சூழ்ந்துகொண்டிருக்க, பாரமான யாவற்றையும், நம்மைச் சுற்றி நெருக்கிநிற்கிற பாவத்தையும் தள்ளிவிட்டு, விசுவாசத்தைத் துவக்குகிறவரும் முடிக்கிறவருமாயிருக்கிற இயேசுவை நோக்கி, நமக்கு நியமித்திருக்கிற ஓட்டத்தில் பொறுமையோடே ஓடக்கடவோம்."

## பாரங்கள் எவை எவைகள்?

ஒதுக்கித்தள்ள வேண்டிய பாரங்களானது/சுமைகளானது ஒவ்வொரு நபர்களிடத்திலும் வித்தியாசப்படும். சுதந்தரித்துக்கொண்டுள்ள பட்டப்பெயர்களை, கனங்களை, ஸ்தானங்களை ஒருவர் பெற்றவராய்க் காணப்படலாம். இப்படியானவர்களில் ஒருவர் பரிசுத்தவனாகிய பவுல் ஆவார். அவர் உரோம குடிமகனாகப் பிறந்தவராவார்; இது அவருடைய நாட்களில் மிகவும் தனிச்சிறப்பியல்புள்ள கனமாகும். இந்தச் சிறப்புரிமையை இவர், கிறிஸ்தவ ஓட்டப்பந்தயத்திற்குள் நுழையும்போது ஒதுக்கித்தள்ளியவராய்க் காணப்பட்டார். அவரது உரோமக் குடியுரிமையைப் பற்றிக் குறிப்பிடுவது என்பது சத்தியத்தின் காரியங்களுக்குப் பயனுள்ளதாய்க் காணப்பட்டதாலேயே, அதை அவர் குறிப்பிட்டவரானார். எனினும் அவர் ஒருபோதும் இரு நிலைகளை எடுத்துக்கொள்ள நாடவில்லை . . . அதாவது ஒரு பக்கத்தில் தானும் பயனடைந்து, உலகப்பிரகாரமானவர்களைத் திருப்திப்படுத்தியும் மற்றும் மற்ற நேரங்களில்

கர்த்தருடைய ஜனங்களுடன் ஐக்கியம்கொண்டும் காணப்படவில்லை. அவர் ஒன்றையே செய்தார், அதை அவர் பின்வரும் வார்த்தைகள் மூலம் நமக்குத் தெரிவிக்கின்றார், அதென்னவெனில்: "சகோதரரே அதைப் பிடித்துக்கொண்டேனென்று நான் எண்ணுகிறதில்லை; ஒன்று செய்கிறேன், பின்னானவைகளை மறந்து, முன்னானவைகளை நாடி, கிறிஸ்து இயேசுவுக்குள் தேவன் அழைத்த பரம அழைப்பின் பந்தயப்பொருளுக்காக இலக்கை நோக்கித் தொடருகிறேன்" (பிலிப்பியர் 3:13-14).

மற்றுமொரு பாரம் ஐசுவரியமாகும். அதிகம் பணம் உடைய ஒருவர் கர்த்தருடைய ஜனங்களின் கூடுகைகளில் கலந்துகொண்டிருக்கலாம், ஆனால் பெரிய வீடுகொண்டிருக்க வேண்டும், அநேக வேலைக்காரர்களைப் பெற்றிருக்க வேண்டும், உயர்மட்ட நிலையில் காணப்படும் மற்றவர்களைப்போன்று தானும் ஜீவிக்க வேண்டும் என்ற எண்ணங்களை மனதில் வைத்து வளர்த்துக்கொண்டிருப்பதன் காரணமாக அவர் ஓட்டத்தில் தடைப்பண்ணப்படலாம். இன்னொருவருக்கு ஏதோ ஒரு விதமான தாலந்து, சுமையாகக் காணப்படலாம். இன்னொருவருக்கு மனுஷனுடைய அங்கீகரிப்பு வேண்டும் என்பதான விருப்பம் முதலியவை சுமையாகக் காணப்படலாம்.

மகிமை மற்றும் நித்தியமான கனத்திற்கான ஓட்டத்தில் ஜெயங்கொள்வதற்கு விரும்புகிறவன், அனைத்துச் சுமைகளையும், இன்னுமாகச் சுமைகள் போன்றது என்று அவன் அடையாளங்காணும் மற்ற அனைத்தையும் தள்ளிவிட வேண்டும்; இல்லையேல் அவனால் நன்கு ஓட முடியாத அளவுக்கு மிகவும் ஊனமுற்றவனாகி/முட்டுக்கட்டைகள் உடையவனாகிப்போவான். சில ஓட்டப்பந்தய வீரர்கள் முற்றிலும் ஜெயங்கொண்டவர்களாகி, பரிசைப் பெற்றுக்கொள்வார்கள். சிலர் தப்பி, இரட்சிக்க மாத்திரமே படுவார்கள், காரணம் ஊனமாகும்/முட்டுக்கட்டையாகும் மற்றும் இவர்கள் தாழ்வான ஸ்தானங்களைப் பெற்றுக்கொள்பவர்களாகுவார்கள்.

இந்தப் பூமிக்குரிய உடைமைகளை, அதாவது இலட்சியங்கள், கனங்கள் முதலியவைகளை, தான் எவ்வளவாக மதித்தார் என்பதை பரிசுத்தவானாகிய பவுல் நமக்குக் கூறுகின்றார். அவர் இவைகளைக் கிறிஸ்துவுக்குள்ளான தேவனுடைய பரம அழைப்பின் பரிசுடன் ஒப்பிட்டு, மதிப்பிட்டார். பூமிக்குரிய இந்தக் கனங்களானது, அவரது கணிப்பில் குப்பையும், தூசியுமாய்க் காணப்பட்டது. ஆகையால் இவைகளை அவர் தூக்கி எறிந்துவிட்டார்.

பூமிக்குரிய காரியங்கள் மீதான தங்களது பற்றுதலைத் தக்கவைத்துக் கொண்டிருப்பவர்களைக் குறித்து கர்த்தர் கூறுவதாவது, "ஐசுவரியமுள்ளவர்கள் தேவனுடைய இராஜ்யத்தில் பிரவேசிப்பது எவ்வளவு அரிதாய் இருக்கிறது?" இந்த ஐசுவரியங்கள் என்பது பொன்னாய் மாத்திரம் இராமல், கனம், ஸ்தானம், அதிகாரம், மனுஷீக அங்கீகாரம் முதலியவைகளையும்கூட உள்ளடக்குகின்றதாய் இருக்கின்றது. இம்மாதிரியான விஷயங்கள் அனைத்தும், பரிசைப் பெற்றுக்கொள்ளத்தக்கதாக, நாம் அழைக்கப்பட்டதான ஓட்டத்திற்கு இடையூறாக இருக்கக்கூடியவைகள் ஆகும்.

முற்காலங்களிலுள்ள உண்மையான சாட்சிகளை நாம் திரும்பிப்பார்க்கையில், அவர்கள் தங்களோடு வெகு சொற்ப சுமைகளைச் சுமந்துகொண்டு சென்றுள்ளார்கள் என்பதாக நாம் காண்கின்றோம். அவர்கள் தங்கள் சுமைகளைத் தள்ளிவிட்டு, தங்களுக்கு முன்பாக ஓட்டத்தில் பொறுமையுடன் ஓடினவர்களாய் இருந்தார்கள்.

எனினும் அனைத்துச் சுமைகளும், முட்டுக்கட்டைகளும் தள்ளிவிடப்படக்கூடாது. மனைவியுடனும், பிள்ளைகளுடனும் இந்த ஓட்டத்திற்குள் பிரவேசிக்கும் ஒரு மனுஷன், இச்சுமைகளைத்

தள்ளிவிடக்கூடாது. ஒருவேளை அவனது தோளில், அவன் ஒரு குழந்தையைப் பெற்றிருப்பானானால், அப்போது, அவன் அவர்களோடே ஓட வேண்டும். ஒருவேளை ஒருவன் இந்த ஓட்டத்திற்குள் பிரவேசிப்பதற்கு எண்ணிக்கொண்டிருக்கையில், அவன் திருமணமாகாதவனாக இருந்தால், அவன் தனது ஒவ்வொரு தோளிலும் எத்தனை குழந்தைகளைச் சுமக்க வேண்டும் அல்லது அவன் தனது தோள்களில் மனைவியைச் சுமக்க வேண்டுமா அல்லது இல்லையா என்பதை ஜாக்கிரதையாய்ச் சிந்தித்துக்கொள்ள வேண்டும். சிலர் மனைவியை உடையவர்களாய் இருப்பதன் காரணமாக இடையூறுக்குள்ளாகுகிறார்கள் மற்றும் இன்னும் சிலர் மனைவி இல்லாததன் காரணமாக இடையூறுக்குள்ளாகுகிறார்கள். அவரவர் தங்களுக்குச் சிறந்தது என்ன என்பதை தீர்மானித்துக்கொள்ள வேண்டும். விதிகள் போடுவதற்கு நாங்கள் முயற்சிக்கவில்லை.

---

R1096

# தேவபக்தியுள்ளவர்களென்று சொல்லிக்கொள்ளுகிற ஸ்திரீகளுக்கு ஏற்றபடியே

### பாகம் - 3

## தாயாக இருக்கும் கிறிஸ்தவ ஸ்திரீகள்

பரிசுத்தவான்களாக அழைக்கப்பட்டிருக்கும் பெரும்பாலான ஸ்திரீகள், ஏற்கெனவே குடும்பத்தினுடைய பாரங்களைச் சுமக்கிறவர்களாய் இருக்கிறதினாலும், மேலும் தேவனும் அவர்களை அந்தப் பொறுப்புகளிலிருந்தும், கடமைகளிலிருந்தும் எந்த விதத்திலும் விடுவித்துவிடுகிறதில்லை என்பதாலும், அப்படிபட்ட ஸ்திரீகள் தெய்வீக வழிநடத்துதலுக்கு ஏற்ப அந்தப் பொறுப்புகளையும், கடமைகளையும் சிறந்த முறையில் எப்படி நிறைவேற்ற வேண்டும் என்பதைக் குறித்துக் கவனமாய் ஆராய்வது, அவர்களுடைய கடமையாய் இருக்கிறது.

வேதவாக்கியங்களை ஆராய்ந்து பார்க்கும்பொழுது பிள்ளைகளை வளர்க்கும் வழிமுறைகள் மற்றும் திட்டங்களுக்கான முழு வழிக்காட்டுதல் எதையும் நம்மால் அதில் காணமுடிவதில்லை; ஆனாலும் நாம் கவனத்தோடு தியானித்து, செயல்முறைப்படுத்த வேண்டிய சில கோட்பாடுகள் அதில் இருப்பதை நம்மால் காணமுடியும். மேலும் அப்படி அவைகளைச் செய்யும்போது, நாம் விரும்புகிற பலன்களை அது ஏற்றகாலத்தில் கொண்டுவரும் என்றும் நாம் உறுதிப்படுத்திக் கொள்ளலாம். சாலொமோன் சொன்னதாவது, "பிள்ளையானவன் நடக்கவேண்டிய வழியிலே அவனை நடத்து அவன் முதிர்வயதிலும் அதை விடாதிருப்பான்" (நீதி. 22:6). பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளைக் கோபமூட்டாமல் இருக்கும்படிக்கும், ஆனாலும் அவசியம் இருக்கும் பட்சத்தில் அவர்களைக் கண்டித்தும், தண்டித்தும் கர்த்தருக்கேற்ற சிட்சையிலும், போதனையிலும் அவர்களை வளர்க்கும்படிக்கும் அறிவுறுத்தப்படுகிறார்கள். மேலும், நாம் கற்றுக்கொள்வதற்கும், பின்பற்றுவதற்கும் ஏதுவாக நம்முடைய பரலோக பிதாவினுடைய முன்மாதிரியும்கூட நமக்கு முன்பாக வைக்கப்பட்டிருக்கிறது. இப்படிப்பட்டதான எளிமையான கோட்பாடுகளின்மீது நாம் கவனத்தைச் செலுத்தி, இதோடுகூட ஒருவரைப் பயிற்றுவிக்கவும், ஒழுங்குபடுத்தவும் தேவன் கையாளுகிற முறைகளையும் நாம் கூர்ந்து கவனித்தால், இந்தப் பாடத்திற்குத் தேவையான அனைத்து ஆலோசனைகளையும் பெற்றுக்கொள்வோம்.

நாம் மற்றவர்களை நிர்வகிக்க வேண்டுமானால், முதலாவதாகத் தேவனைப்போல நாம் நம்மையே அடக்கியாள வேண்டும். நம்முடைய தனிப்பட்ட முன்மாதிரியான ஜீவியம் மிகவும் ஆற்றல்மிக்கப் பாடங்களைக் கொடுக்கும் என்பதை எப்பொழுதும் நினைவில் வைத்துக்கொண்டு, நாம் நீதியுள்ளவர்களாகவும், இரக்கமுள்ளவர்களாகவும், பரிவுள்ளவர்களாகவும், நன்றியுள்ளவர்களாகவும், பொறுமையுள்ளவர்களாகவும், அன்புள்ளவர்களாகவும் இருக்கவேண்டும். நீங்கள் வெறும் வார்த்தைகளினால் மாத்திரம் போதிப்பீர்களானால், நீங்கள் தொடர்ந்து உங்களையே குற்றப்படுத்துகிறவர்களாகவும் மற்றும் உங்கள் பலவீனங்களை நீங்களே சுட்டிக்காட்டுகிறவர்களாகவும் இருப்பீர்கள்; மேலும் நீங்கள் போதிப்பவைகளை முதலாவது நீங்கள்தான் செய்யவேண்டும் என்று குழந்தைகளிலுள்ள அவர்கள் பருவத்திற்கேவுரிய வேகமான கிரகிக்கும் தன்மையானது, துரிதமாக அனுமானித்துவிடும்; அதனால் நீங்கள் அவைகளைச் செய்யாதவரையில், உங்களுடைய எல்லாப் போதனைகளும் வீணாயிருக்கும். ஆகையால் இங்கேதான், கிறிஸ்தவ பெற்றோர்களுக்கான முதலாம் கோட்பாட்டைப் பார்க்கின்றோம் - உங்கள் பிள்ளைகள் எப்படி இருக்கவேண்டும் என்று நினைக்கிறீர்களோ, அப்படியே முடிந்த அளவுக்கு நீங்களும் இருக்கவேண்டும்; நீங்கள் ஒரு போதகர் என்பதையும், காலை முதல் இரவு வரையில் உங்கள் பிள்ளைகளால் நீங்கள் கவனிக்கப்பட்டும், பின்பற்றப்பட்டும் (studied & copied) வருகிறீர்கள் என்பதையும் ஒரு கணம்கூட மறந்துவிடக்கூடாது. நீங்கள் சீறி விழுகிறவர்களாகவும், சிடுசிடுப்பாகவும், முறையிடுகிறவர்களாகவும், ஜீவியத்தின் கடமைகளைச் செய்வதில் விருப்பம் இல்லாதவர்களாகவும், கடமைகளை அசட்டைச் செய்கிறவர்களாவும், உங்களுக்கு வரும் வேலைகள் வசதியான (இலகுவான) விதத்தில் வரவேண்டும் என்று விரும்புகிறவர்களாகவும், உங்கள் அயலகத்தாரர்களின் ஆஸ்திகளையோ அல்லது ஆரோக்கியத்தையோ அல்லது சொகுசுகள் முதலானவைகளையோ . . . பார்த்து இச்சிக்கிறவர்களாகவும் நீங்கள் இருந்துகொண்டு, இதேமாதிரியான மனநிலைகள் உங்கள் பிள்ளைகளிடத்தில் முளைத்தெழும்புவதை நீங்கள் பார்க்கும்பொழுது அதிர்ச்சியடைய வேண்டாம். மேலும் இப்படிப்பட்ட மனநிலைகள் பிள்ளைகளிடத்தில் முளைத்தெழும்பி, வீட்டினுடைய கடமைகளுக்கடுத்தவைகளில் தொடர்ந்து பிரச்சனை உண்டுபண்ணி, குறுக்கிட்டுக்கொண்டிருக்குமானால், நீங்கள் உங்கள் பிள்ளைகளைப் பலவந்தம்பண்ணவும், அவர்களிடத்தில் முழுப்பலத்தைப் பிரயோகிக்கவும், அவர்களை அச்சுறுத்தவும், தண்டிக்கவும் கட்டாயமாகிடும்; இப்படியாக உங்கள் சுமைகளும், கவலைகளும் பெரிதளவில் அதிகரித்திடும்.

ஒருவேளை அநேகரால் வீட்டுவேலைதானே என்று சாதரணமாகப் பார்க்கப்படுகிற வாழ்க்கையினுடைய இந்தக் கடமைகளைக் குறித்து, அதுவே உங்களுடைய மிகப்பெரிய மனமகிழ்ச்சி என்று நீங்கள் சந்தோஷத்தோடும், மகிழ்ச்சியோடும் இருப்பீர்களானால் - இவ்வாழ்க்கையில் இப்படிப்பட்ட கடமைகள் உங்களுக்குக் கிடைத்திருப்பதற்காக நீங்கள் நன்றியுள்ளவர்களாக இருப்பீர்களானால் - கஷ்டங்களில் இருக்கும் உங்கள் அண்டை வீட்டுக்காரர்களின் கவலைகளைத் தணியச்செய்வதிலும், அவர்களுடைய பாரங்களை இலகுவாக்கிவிடுவதிலும் ஆர்வமாகவும் உதவிகரமாகவும் இருப்பீர்களானால் - உங்களோடுள்ள சின்னஞ் சிறுசுகளும் உங்களுடைய சந்தோஷம், நன்றியுணர்வு, உற்சாகம், உதவி மனப்பான்மை போன்ற ஆவியைச் சீக்கிரமாகக் கிரகித்துக்கொண்டு, அதைப் பற்றிக்கொள்வார்கள்; இப்படியாக வீட்டில் கொடுக்கப்படும் பயிற்சியின் (home training) விஷயத்தில், பாதி ஜெயத்தை அடைந்துவிடலாம்.

அன்பான தாய்மார்களே, "எனக்குப் பாத்திரங்களைக் கழுவ வெறுப்பாக இருக்கிறது," அல்லது "எனக்குச் சமைக்க வெறுப்பாக இருக்கிறது," அல்லது இப்போது உங்கள் மேல் இருக்கும் எந்த ஒரு கடமையையும் செய்கிறதற்கு உங்களுக்கு வெறுப்பாக இருக்கிறது என்று நீங்கள் சொல்வதை உங்கள் பிள்ளைகள் கேட்காத அளவிற்கு நடந்துகொள்ளுங்கள். மேலும், அவர்களிடமிருந்தும் அதுபோன்ற வார்த்தைகள் வரும்பொழுது அதைக் கடிந்துகொள்ளாமலும் விடக்கூடாது. மாறாக அவர்களிடம், "என் அன்பான பிள்ளைகளே, நீங்கள் யோசித்துப்பார்த்தால், தேவன் இவ்வளவு தாராளமாய் உங்கள் உணவு தட்டுகளை (plates) நிரப்பியிருந்தும் அவருக்கு நீங்கள் மிகவும் நன்றியறிவற்றவர்களாகவும், அவர் அந்த தட்டுகளை மறுபடியும் நிரப்பத்தக்கதாக அதை நீங்கள் கழுவிவைப்பதில் மிகவும் சோம்பேறிகளாகவும் இருக்கிறதை நீங்களே காண்பீர்கள்" என்று சொல்லுங்கள். ஒருவேளை நாம் இப்படி நன்றியறிதல் இல்லாதவர்களாக இருப்பதைத் தொடர்வோமானால், நம்மை நம்முடைய உணர்வுக்குக் கொண்டுவந்து, நாம் எவ்வளவு அற்பத்தனமாக இருக்கிறோம் என்பதை நமக்குக் காண்பிக்கும் பொருட்டும், சில சமயங்களில் அந்த உணவு தட்டுகளை நிரப்புவதற்குத் தேவன் மறுத்துவிடலாம் என்று சொல்லிக்கொடுங்கள். கடமையைச் செய்வதில் இருக்கிற சந்தோஷத்தை விட, சந்தோஷத்தை வேறெங்காவதுதான் தேடவேண்டும் என்ற எண்ணத்தை, உங்கள் வார்த்தையின் மூலமாகவோ அல்லது பார்வையின் மூலமாகவோ ஒருபோதும் உங்களுடைய பிள்ளைகளுக்குக் கொடுக்காதீர்கள். இப்படியெல்லாம் அவர்களைப் பயிற்சித்து வந்தால், நாள் முழுவதும் கடினமான வேலைகளில் ஆர்வமே இல்லாமல் வேலை செய்து, இந்தச் சலிப்பைப்போக்க வேண்டி, அந்த நாளின் முடிவிலோ அல்லது வாரத்தின் முடிவிலோ சிறிய பொழுதுபோக்குகளுக்காக அல்லது விளையாட்டுகளுக்காக, அவர்கள் பொறுமையற்றுக் காத்திருப்பதற்குப் பதிலாக, அன்பு மற்றும் கடமையினுடைய கனிவான வேலைகளின் மூலமாக, நாள் முழுவதும் சந்தோஷத்தைக் கண்டடைய நீங்கள் அவர்களை ஆயத்தம்பண்ணலாம். சந்தோஷத்தோடு செய்யும் கடமைகளில்தான் மிக உயர்ந்தபட்ச மகிழ்ச்சி இருக்கின்றது; இந்த மகிழ்ச்சியோடுகூட எந்த ஒரு மாலை நேர பொழுதுபோக்குகள், சுற்றுலாக்கள் (picnic) போன்றவைகள் . . . ஒப்பிடுவதற்குத் தகுதியற்றதாய் இருக்கிறது. எனினும், இதுபோன்ற (மாலை நேர பொழுதுபோக்கு, சுற்றுலா போன்ற) குற்றமற்றச் சந்தோஷங்களானது விசேஷமாகத் தேடப்படாமல் வரும்பொழுது... வாழ்க்கையினுடைய பிரதான காரியமாகக் கருதி தேடப்படாமல், அதற்காக ஏக்கங்கொள்ளாமல் இருக்கையில், எதிர்ப்பாராமல் வரும்பொழுது... இவைகள் இனிமையாகவும், ஆரோக்கியமாகவும், சந்தோஷகரமான நிகழ்வுகளாகவும் காணப்படும்; அதுவும் இவை குறிப்பாக அடிக்கடி வராமல், அன்புள்ள பெற்றோர்கள் அல்லது நண்பர்களிடமிருந்து வந்த இன்ப அதிர்ச்சிகளாகக் காணப்படுகையில், இவை விசேஷமாகச் சிறுவர்களுக்கு அதிகப்படியான சந்தோஷத்தைக் கொடுக்கிறதாய் இருந்திடும். பிள்ளைகள் வேலை செய்ததற்காய்ப் பணம் கொடுக்கும் சிலருடைய பழக்கமானது, பிள்ளைகள் வீட்டு வேலைகளுக்கடுத்த விஷயங்களில் பெற்றிருக்கும் கடமை உணர்வினை அவர்களிடத்திலிருந்து அகற்றிப்போட்டு, அதற்குப் பதிலாகச் சுயநலம் மற்றும் தன்னிச்சையான மனப்பான்மையை உருவாக்கிவிடுகின்றது. பரிசு (gift) என்பது, இலாபத்தை எதிர்ப்பார்ப்பதிலிருந்து முற்றிலும் வேறுபட்டது என்று பிள்ளைகளைப் புரிந்துகொள்ளச் செய்வது மிகவும் நல்லது.

நம்முடைய இரண்டாவது கோட்பாடு என்னவென்றால், சோம்பலை வார்த்தையின் மூலமாகவோ அல்லது உதாரணத்தின் மூலமாகவோ ஒருபோதும் ஊக்குவித்திடக்கூடாது. சோம்பல் என்பது தீய பழக்கத்திற்குத் தாயாக இருக்கிறது. மேலும், சோம்பல் எல்லா விதமான தீமையையும் உண்டுபண்ணுகிற

மூலக்காரணமாகவும் இருக்கிறது. ஏனென்றால், சாத்தான் சோம்பலாய் இருக்கிற கைகள் செய்வதற்கென்றே சில பொல்லாங்குகளை இன்றைக்கும் வைத்திருக்கிறான். சோம்பலாய் இருப்பது எந்த ஓர் ஆரோக்கியமான மனிதனின் இயல்பான நிலை அல்ல என்று இயற்கையே நமக்குப் போதிக்கின்றது. ஒன்றுமே செய்யாமல் வெறுமனே (சும்மா) உட்கார வைப்பதைப்போன்று வேறொரு கொடுமையான தண்டனையை ஒரு பிள்ளைக்குக் கொடுக்க முடியாது. தூங்கும் நேரத்தைத் தவிர்த்து மனித மனம்/சிந்தை ஒருபோதும் சும்மா (idle) இருப்பதில்லை, சில சமயங்களில் தூங்கும் போதும்கூடச் சும்மா இருப்பதில்லை. நோயினால் செயல் இழந்தாலொழிய மனிதனுடைய சரீரம் செயல்படாமல் இருப்பது என்பது இயலாதது.

அதினால், கடமையின் பிடியிலிருந்து ஒரு பிள்ளைக்குக் கொஞ்சம் விடுப்புக் (release) கொடுக்க வேண்டும் என்பது, அவனைச் சும்மா இருக்கச்செய்ய வேண்டும் என்று ஒருபோதும் அர்த்தமாகாது. அவன் மேல் எந்த ஒரு கடமையும், பொறுப்பும் இல்லாவிட்டால், அவன் நேரத்தையும், அவனுடைய முயற்சிகளையும் தன் இஷ்டப்படி செலவழிப்பான்; மேலும் அவன் முரண்பாடான மற்றும் பயிற்றுவிக்கப்படாத பிள்ளைகளிடத்திலிருந்து சில காரியங்களைக் கற்றுக்கொள்வதற்கும் வேண்டி நேரத்தைச் செலவழிப்பான்; மேலும் அவன் கற்றுக்கொண்ட இவைகளைப் பின்நாட்களில் நீங்கள் அடியோடு அழிக்கவோ, முற்றிலுமாக தடைசெய்யவோ முயற்சித்தாலும் கூடாமல் போய்விடும். பிள்ளைகளுக்குக் கூடுமானமட்டும் சில பொறுப்புகளும், சில கடமைகளும் கொடுக்கப்பட வேண்டும், எனினும் அவர்கள் மேல் அதிகமான பாரத்தைச் சுமத்திவிடக்கூடாது. அவர்களுடைய சொந்த யோசனைகளைச் (original ideas) செயல்படுத்துவதற்கான நேரமும், வாய்ப்பும் கிடைத்தால் அவர்கள் மிகச் சிறப்பாக முன்னேறுவார்கள். ஆண் பிள்ளைகள் தச்சு வேலை (carpenting) செய்யும் பொருட்களிலும் மற்றும் ஆக்கப்பூர்வமான (constructive) கருவிகளிலும் நன்றாகவும், சந்தோஷமாகவும் தங்களை ஈடுபடுத்திக் கொள்வார்கள்; மேலும், பெண்பிள்ளைகள் பொம்மைகள், ஊசிகள், குண்டூசிகள் போன்றவைகளில் தங்களை ஈடுபடுத்திக் கொள்வார்கள். ஆனபோதிலும், அவர்களுக்கு அதிகமான பொருட்களையும் அல்லது அந்த விளையாட்டுப் பொருட்கள் அனைத்தையும் (full set) கொடுக்க வேண்டாம்; இப்படி இல்லையென்றால், நீங்கள் அவர்களுடைய புத்திகூர்மைக்கு இடம்கொடுக்காமல் போய்விடக்கூடும். கேத்தி (Katie - பெண் பெயர்) அவளாகச் செய்த கந்தையான பொம்மையும், ஜானி (ஆண் பெயர்) அவனே பென்சிலால் வரைந்த வரைபடமும் நீங்கள் வெளியே வாங்குபவைகளைவிட எப்போதுமே மிகவும் விலையேறப்பெற்றதாய் இருக்கும். மிருதுவாக இருக்கும் கிறிஸ்துமஸ் பொம்மைகளை மிகப் பத்திரமாக வைத்துக்கொள்ள கற்றுக்கொடுக்கிறதின் மூலம், நீங்கள் அவர்களுக்குச் சிக்கனத்தையும், கவனத்தையும் கற்றுக்கொடுக்கலாம். மேலும், அவர்கள் திறமைகளை வளர்த்துக்கொள்ளும்போது, பயனுள்ள காரியங்களில் அவைகளை உபயோகப்படுத்த வையுங்கள். அந்தத் திறமைகளைப் பயன்படுத்துவதற்கு ஏதுவாக நீங்கள் அவர்களுக்குச் சில உரிமைகளைக் கொடுக்கிறதின் மூலமாக அவர்களுடைய திறமைகளை நீங்கள் பாராட்டுகிறீர்கள் என்பதை அவர்கள் உணரும்படி செய்யுங்கள். விளையாட்டு என்பது எப்போதும் உண்மையான வேலைக்கு (real service) அடுத்தப்படியாக (secondary) இருக்கவேண்டும். நிஜமான குழந்தையின் அழுகைச் சத்தம் கேட்ட உடனே, குழந்தையைக் கவனிப்பதற்கு வேண்டி நெலி (Nellie – பெண் பெயர்) தன் பொம்மையை உடனடியாகக் கீழே வைத்துவிட்டுப்போக வேண்டும்; மேலும் எடுபிடி வேலை செய்யும்படிக்கு ஜானி அழைக்கப்படும்போது, அவன் தன் சுவாரசியமான சுத்தியலையும், ஆணியையும் கீழே வைத்துவிட்டுப்

போக வேண்டும். குழந்தைப் பருவத்திலேயே இவ்விதமாக அவர்களுக்கு கற்றுக்கொடுக்கப்பட்டால் இந்தப் பழக்கங்கள் நிச்சயமாக வளரும். மேலும், அவர்கள் அப்படிச் செய்வதில் சந்தோஷமுள்ளவர்களாகவும், பயனுள்ளவர்களாகவும் இருப்பார்கள்.

திரும்பத்திரும்ப வேலையைச் செய்யும்படி கட்டாயப்படுத்தி அல்ல, மாறாக வேலையைச் சுட்டிக்காட்டுவதின் மூலமாகவும், அதைச் செய்யாதபோது சில விதங்களில் அவர்களைத் தண்டிப்பதின் மூலமாகவும் அவர்களிடமிருந்து உடனடியான, சந்தோஷமான மற்றும் அன்பான கீழ்ப்படிதல் எதிர்ப்பார்க்கப்பட்டு வலியுறுத்தப்படவேண்டும். கீழ்ப்படியாத பிள்ளையை எப்போதும் கடிந்துகொண்டும், வேலை செய்யாததின் நிமித்தம் அவர்களை வற்புறுத்திக்கொண்டும் இருப்பதன் மூலம் உங்களுக்குள்ளாகவே ஒரு பதட்டத்தை உண்டாக்கிக்கொண்டு, குடும்பத்திலுள்ள மீதமுள்ளவர்களின் சமாதானத்தையும் குலைத்துப்போட்டு, இப்படியாக உங்களுடைய தன்மானத்தை/மதிப்பை நீங்களே குறைத்துக்கொள்ள வேண்டாம். மாறாக, அந்த வேலையைச் செய்யும் சிலாக்கியத்தை மற்றப் பிள்ளைக்குக் கொடுங்கள் (அப்படிக் கொடுப்பதின் மூலம் அந்த வேலையைக்குறித்து அவர்களைக் கவனிக்க வையுங்கள்); மேலும், கீழ்ப்படியாத பிள்ளையோ அந்த வேலையைச் செய்யும் சிலாக்கியத்தையும், அதோடுகூட வருகின்ற அங்கீகரிப்பையும் தான் இழந்துபோனதைக்குறித்து உணர்ந்துகொள்ளட்டும்.

மேலும், இது மற்றுமொரு ஆலோசனையை நமக்குக் கொடுக்கின்றது; அதாவது தேவனுடைய அங்கீகரிப்பிற்கும், பெற்றோர்களுடைய அங்கீகரிப்பிற்கும் மற்றும் தங்களுடைய சொந்த மனசாட்சியின் அங்கீகரிப்பிற்கும் கவனம் உடையவர்களாக இருக்கும்படி நாம் பிள்ளைகளைப் பயிற்றுவிக்க வேண்டும் என்பதேயாகும். ஒருவேளை அவர்கள் தங்கள் மனசாட்சிக்குச் செவிகொடாமலும், தேவனை அறியாமலும் அல்லது அவரை அன்புகூராமலும் இருந்து, பெற்றோர்களை வேலைக்காரர்களைப்போல எண்ணினால், கடினமான முறையிலேயே (Brute force) அவர்களை அதிகாரத்திற்குக் கீழ்ப்படியப்பண்ணிடுவது அவசியமாகிடும்; அப்படிப்பட்ட கீழ்ப்படிதல் இழிவானதாக, அதுவும் தற்காலிகமானதாகத்தான் இருக்கும். இதை எப்படிச் சரிப்படுத்துவது? இதை ஒரே நாளில் செய்திட முடியாது; மேலும், கருத்தில்லாத, கவனமற்ற பெற்றோர்கள் இதை ஒருபோதும் செய்யவே முடியாது. இது மிகவும் நுணுக்கமான காரியமாகும்; இதற்குத் திறமையும் புத்திகூர்மையும் தேவையானது. உங்கள் பிள்ளைக்கு அறிவுரை கொடுக்கும்படிக்கும், அவனை ஈர்க்கும்படிக்கும் உங்கள் பிள்ளையினுடைய மனநிலையை நீங்கள் நன்றாய் ஆராய வேண்டும்; அதற்கான சரியான சந்தர்ப்பங்களைக் கவனித்து, அப்படிப்பட்ட சந்தர்ப்பங்கள் ஒன்றையும் தவறவிடக் கூடாது. அவனிடத்தில் இருக்கும் நல்லக் காரியங்களுக்காக உங்களது பாசமான அங்கீகரிப்பை வெளிப்படுத்துவதற்காகவும் (தக்கச் சமயத்தில்தான் அப்படி வெளிப்படுத்த வேண்டும், மாறாக எப்போதும் அல்ல, இல்லையென்றால் அது அகந்தையை வளர்த்துவிடும்), மேலும் அவனுடைய பிழைகளுக்காகவும், தவறுகளுக்காகவும் உங்களுக்கு இருக்கும் வலியையும் மனக்குறைவையும் வெளிப்படுத்துவதற்காகவும் அவனுடைய நடக்கையில் இருக்கும் சின்ன சின்ன காரியங்களையும் நீங்கள் கவனிக்க வேண்டும். நம்மீது தேவனுடைய பார்வை இருக்கிறதை நாம் எப்படி உணர்கிறோமோ, அப்படியே நம்முடைய பார்வையும், தேவனுடைய பார்வையும் எப்போதும் அவன் மீது இருக்கிறது என்பதை அவனும் உணரும்படி செய்யுங்கள். (2 நாளாகமம் 16:9; சங்கீதம் 34:15; I பேதுரு 3:12; நீதிமொழிகள் 15:3). சாப்பிடும் மேஜையில் பிள்ளை உங்கள் பக்கத்தில் உட்கார்ந்து, கத்தி மற்றும் முட்கரண்டியைப் (knife & fork) பயன்படுத்தத் தெரியாத ஓர்

அநாகரிகமான பிள்ளையைப்போலச் சாப்பிடுவதற்கு நீங்கள் அனுமதிக்கக்கூடாது; அவன் எல்லாவற்றிலும் சிறந்ததைத் தனக்காக எடுத்துக்கொண்டு, மற்றவர்களுடைய தேவைகளுக்குச் சற்றும் கவனமில்லாமல், அற்பத்தனமாய் நடந்துகொள்வதற்கு நீங்கள் அவனை அனுமதிக்காதீர்கள்; பிள்ளைகள் தாராள மனமுடையவர்களாக இருக்கவும், ஒருவருக்கு ஒருவர் விட்டுக்கொடுக்கவும், ஒருவர் இன்னொருவருடைய விருப்பங்களுக்குக் கவனம் கொடுக்கவும் அவர்களுக்குச் சொல்லிக்கொடுங்கள்; மேஜையில் உணவு எவ்வளவுதான் எளிமையாக இருந்தாலும், சாப்பிடுவதற்கு மேஜையில் உட்காருகையிலேயே, இப்படிப்பட்டதான பாடங்களை அவர்கள் மனதில் பதியவைப்பதற்கான மிகச்சிறந்த சந்தர்ப்பமாக இருக்கும். இப்படிப்பட்ட நேரங்களில் நல்லப் பழக்கங்கள் மற்றும் நல்லக் கொள்கைகள் பற்றியே அடிக்கடி சம்பாஷணைப்பண்ணப்படுவதாக. உண்மையில் சொல்லப்போனால் இதைப்போல் வேறெந்த சந்தர்ப்பமும் இவ்வளவு சாதகமாகவும், இவ்வளவு அடிக்கடியும் கிடைக்காது; அவைகள் எல்லாவற்றையும் நன்றாகப் பயன்படுத்துங்கள்; பயன்படுத்தக் கற்றும்கொள்ளுங்கள். உங்கள் பிள்ளைகள் எதைப் பற்றியும் ஒன்றும் அறியாதவர்களாகவே இந்த உலகத்திற்குள் வந்தார்கள் என்பதையும், சாதாரணமான நல்லொழுக்கங்கள் கூட அவர்களுக்கு வார்த்தையின் மூலமாகவும், முன்னுதாரணத்தின் மூலமாகவும்தான் கற்றுக்கொடுக்கப்பட வேண்டும் என்பதையும் நீங்கள் நினைவுகூரவேண்டும். ஆதலால் நன்மையைக்குறித்தும், தீமையை எதிர்ப்பதைக்குறித்தும் அவர்களுக்குக் கற்றுக்கொடுக்கும்போது நீங்கள் பொறுமையாகவும், ஜாக்கிரதையாகவும், கவனமாகவும், ஞானமாகவும் இருக்க வேண்டும்.

உங்கள் பிள்ளைகளுடன் பழகுங்கள்; அவர்களுடன் நட்புகொண்டிருங்கள்; அவர்களும் உங்கள் தோழமையை அனுபவிப்பார்களாக. பிள்ளைகளோடு பிள்ளைகளாக இருங்கள், ஆனாலும் உங்கள் அனுபவ வயதிற்கேற்ப நடந்துகொள்ளுங்கள்; அற்பத்தனமாகவோ அல்லது மதியீனமாகவோ நடந்துகொண்டு உங்கள் மரியாதையைக் குறைத்துக்கொள்ளாதீர்கள். உங்களுடைய சொந்த நிலைப்பாட்டைப் பற்றிக்கொண்டிருங்கள்; ஆனாலும் அவர்களுடைய நிலைப்பாட்டைக் குறித்தும் அனுதாபம் கொள்ளுங்கள்; அவர்களுடைய வயதில் நீங்கள் காணப்பட்டபோது உங்களுக்கு இருந்த உணர்வுகளையும், அனுபவங்களையும் மறக்க வேண்டாம். அவர்களுடைய நம்பிக்கையைப் பெற்றுக்கொள்ளுங்கள்; அவர்களுடைய பிரச்சனைகளைக்குறித்து ஒருபோதும் பரியாசம் பண்ணாதீர்கள்; மாறாக உங்களுடைய அன்பும் அனுபவமும் நீங்கள் எவ்விதத்தில் செய்யவேண்டும் என்று உங்களை ஏவுகிறதோ அப்படியே அவர்களுக்கு ஆறுதலளித்து அறிவுரை கூறுங்கள். ஒருவரைப் பற்றி மரியாதைக்குறைவாக இன்னொருவருடன் ஒருபோதும் பேசவேண்டாம்; அல்லது பிள்ளைகள் அப்படிப் பேசினால், அதைத் திருத்தாமல் விட்டுவிடாதீர்கள்.

அவர்களிடம் தவறான கொள்கைகள் முளைத்தெழும்புவதை நீங்கள் நன்றாகக் கவனித்து அதைக் குறித்து அவர்களிடம் ஜாக்கிரதையாகப் பேசுங்கள். சில, மிகச் சிறிய கிரியைகளில் இருக்கும் இழிவான கொள்கையையும், அப்படிப்பட்ட கிரியைகள் இன்னும் கொஞ்சம் வளரும்போது அது கொண்டு வரும் துயரம் மிகுந்த கனிகள் (விளைவுகள்) என்ன என்பதையும் அவர்களுக்குக் காட்டுங்கள். பிள்ளைகளிடத்தில் நேரடியாய் இல்லாமல், மாறாக அவர்கள் பார்க்கிறவிதத்தில், மற்றவர்களுடைய தேவைகள், கஷ்டங்கள் மற்றும் சோதனைகளைக்குறித்துப் பேசுங்கள்; மேலும் அப்படிப்பட்டவர்களுடைய கஷ்டங்களிலிருந்து கூடுமானவரை அவர்களை விடுவிப்பதற்காக நீங்கள் திட்டமிட்டு அவைகளைச் செயல்படுத்துகிற விதங்களையெல்லாம் உங்கள் பிள்ளைகள் கவனிக்கட்டும். அன்பு மற்றும் இரக்கத்தின்

காரணமான பிரயாணங்களுக்கு அவர்களை அனுப்பிவையுங்கள் அல்லது உங்களுடன் கூட்டிச்செல்லுங்கள்; மேலும் சந்தோஷம் மிகுந்த (கொண்டாட்டமான) வீடுகளுக்குச் செல்வதைக் காட்டிலும், துக்கமும், துயரமும் மிகுந்த வீடுகளுக்குச் சென்று அங்கே அழுகிறவர்களை ஆறுதல்படுத்துவதையே நீங்கள் நாடுகிறீர்கள் என்று உங்கள் பிள்ளைகள் பார்க்கட்டும்.

உங்களுக்கென்று கஷ்டங்கள் இருந்தாலும், அல்லது மற்றவர்களுடைய கஷ்டங்களில் நீங்களும் அவர்களோடுகூடப் பரிதாபங்கொண்டிருந்தாலும், நீங்கள் சந்தோஷமாகத்தான் இருக்கவேண்டும்; மாறாக சோர்ந்துபோன முகத்தை வைத்திருக்கவேண்டாம். கிறிஸ்தவ சந்தோஷம் மற்றும் சமாதானம் என்னும் கதிரொளி எல்லா நேரத்திலும் உங்களின் முகத்தை ஒளிரச் செய்யட்டும். மேலும் அந்தக் கதிரொளியை உங்கள் சொந்த வீட்டிற்குள் மாத்திரம் அல்ல, நீங்கள் பிரவேசிக்கும் மற்ற எல்லாருடைய வீட்டிற்குள்ளும் கொண்டு செல்லலாம்.

நீங்கள் எவ்வளவுதான் ஏழையாக இருந்தாலும், தாராள மனதுடையவர்களாய் இருங்கள். மேலும், இந்தத் தாராள மனப்பான்மையைக் குறித்து உங்கள் பிள்ளைகளிடம் பேசி, அவர்களுக்குக் கற்றுக்கொடுத்து, அதைச் சிக்கனமாக இருப்பதன் மூலம் எவ்வாறு சமாளித்துக் கொள்ள முடியும் என்பதை வார்த்தையின் மூலமாகவும், கிரியைகளின் மூலமாகவும் அவர்களுக்குக் காண்பியுங்கள். மேலும் இந்தத் தாராள மனப்பான்மையையும், சிக்கனத்தையும் சரியான முறையில் சமநிலைப்படுத்தவில்லை (balance) என்றால், இவை இரண்டுமே எந்த உச்சத்திற்கும், போகும் என்பதையும் கற்றுக்கொடுங்கள்.

நல்லப் புத்தகங்களை உங்கள் பிள்ளைகள் பெற்றுக்கொள்ளத்தக்கதாகப் பார்த்துக்கொள்ளுங்கள்; மேலும் தகவல்களுக்காக அவைகளை அவர்கள் வாசிப்பதற்கும், வாசித்ததைக் குறித்து உங்களிடம் சொல்லும்படிக்கும் ஊக்குவியுங்கள். பரந்து விரிந்த ஆலோசனைகளை (broad ideas) அவர்களுக்குக் கொடுக்கும்படி பெருமுயற்சி செய்யுங்கள். சிறிய குடும்ப வட்டாரமும், அவர்களுடைய நெருங்கிய நண்பர்கள் மற்றும் உறவினர்களும்தான் உலகத்திலேயே மிகப்பெரிய மற்றும் மிக முக்கியமான பாகம் என்று அவர்கள் நினைப்பதற்கு இடம் கொடுக்காதீர்கள். மனுக்குலம் என்பது ஒரே பெரிய குடும்பம் என்றும், ஒரே தகப்பன் மற்றும் ஒரே தாயின் பிள்ளைகள் என்றும், அதனால் அவர்களைச் சகோதரர் மற்றும் சகோதரிகளைப் போல் பாவித்து ஒருவர் மீது ஒருவர் அன்பு செலுத்த வேண்டும் என்றும், மரித்தோரும் மற்றும் உயிருள்ளோரும் இந்த ஒரே குடும்பத்தின் அங்கங்கள் என்றும், அவர்கள் எப்படி வாழ்ந்தார்கள் என்பதையும், அவர்கள் எதையெல்லாம் சாதித்தார்கள் என்பதையும், ஒரு சிலர் எப்படி நல்லவர்களாகவும் பெரியவர்களாகவும் இருந்தார்கள் என்பதையும், ஒரு சிலர் எப்படித் துன்மார்க்கராக இருந்தார்கள் என்பதையும் சரித்திரம் காட்டுகிறது என்றும் உங்கள் பிள்ளைகளுக்குச் சுட்டிக்காண்பியுங்கள். இது அதிக அறிவு சார்ந்த விஷயங்களை வாசிக்கும்படியாக அவர்களுடைய ஆர்வத்தைத் தூண்டுவதற்கும், மேலும் இன்னும் இந்த மனுக்குலத்தினுடைய எதிர்கால முடிவை வெளிப்படுத்தும் தீர்க்கத்தரிசனங்களினால் அவர்கள் போதிக்கப்படுவதற்கு ஏதுவாய் அவர்கள் வழியை ஆயத்தப்படுத்துவதற்கும் உதவியாக இருக்கும். பல்வேறு விதமான அறிவு சார்ந்த புத்தகங்களைப் பிள்ளைகள் வாசிக்க நேரம் செலவாகுகையில், கெட்ட தொடர்புகளும், அதோடுகூட இணைந்திருக்கும் தீமைகளும் தவிர்க்கப்படும்.

இந்த ஆலோசனைகளோடு கீழ்க்கண்ட பயனுள்ள குறிப்புகளையும் நாங்கள் இணைக்கின்றோம் - ஒருவர் அதை இவ்வாறாகச் சொல்லுகிறார்:

## குழந்தை வளர்ப்புப் பற்றிய அறிவியலின் ஒரு சிறு தொகுப்பு

1. நீங்கள் ஒப்புக்கொண்டால் சந்தோஷமாக ஒப்புக்கொள்ளுங்கள்.
2. நீங்கள் மறுத்தால் இறுதிவரை மறுத்துவிடுங்கள்.
3. அடிக்கடி பாராட்டுங்கள்.
4. ஒருபோதும் திட்டாதீர்கள்.
5. உங்கள் பிள்ளைகளோடு எந்த ஒரு விவாதத்தையும் செய்வதில் ஜாக்கிரதையாய் இருங்கள்; ஆனால் ஒரு விவாதம் செய்யும் நிர்ப்பந்தம் ஆகுகையில், விவாதித்து முடிவிற்கு வாருங்கள். கோதி (Goethe) என்பவர் சொல்லுகிறதாவது.... விவாதத்தின் விஷயத்தில்... பெரியவர்களிடத்தில் எப்படியோ அப்படியே பிள்ளைகளிடத்திலும் உள்ளது, அதில் சிலர் முடிவெடுக்கின்றனர், ஆனால் பெரும்பாலானோர் ஆதாரங்கள் காட்டப்பட்டு இணங்க வைக்கப்படுகின்றனர்.

வேறு வார்த்தைகளில் சொல்ல வேண்டுமானால், உங்கள் பிள்ளையை அடக்க முயற்சிப்பதற்கு முன்பாக உங்களை நீங்களே அடக்கி ஆண்டுகொள்ளுங்கள்.

இப்படிப்பட்டதான நல்ல மற்றும் ஞானமுள்ள எல்லாக் குறிப்புகளையும் உலகப்பிரகாரமான பெற்றோர்கள் கையாண்டு, அதன் மூலம் நன்மையும் அடைந்திருக்கிறார்கள்; மேலும் மத சம்பந்தப்பட்ட அதிகாரமும் மற்றும் கட்டுபாடுகளும் இல்லாதிருந்தாலும்கூட இவர்கள் தங்கள் பிள்ளைகளைக் கனமிக்க நிலைமைக்கு உயர்த்தியிருக்கிறார்கள்; மேலும் அவர்களது ஒடுங்கிப்போகும் வருஷங்களில் அவர்களைப் பிள்ளைகள் ஆறுதல்படுத்தவும் செய்கின்றார்கள். எனினும் ஞானமும், ஜாக்கிரதையுமான வளர்ப்பில் இதுபோல எல்லாச் சிறந்ததும் நல்லதுமான காரியங்கள் இருந்தாலும், அதோடுகூட, திட்டமிடப்பட்ட மத ரீதியிலான பயிற்சியில்தான் இவை எல்லாவற்றைக் காட்டிலும் ஒரு பலமான வலிமை இருக்கிறது. தாங்கள் அனுபவிக்கும் எல்லா ஆசீர்வாதத்தையும் ஞானமாகவும், அன்பாகவும் வழங்குபவர் தேவன்தான் என்றும், நீதிக்கு அவரே பலன் கொடுப்பவர் என்றும், தீமை செய்பவர்களை அவரே தண்டிக்கிறவர் (எப்போதும் உடனே அல்ல, ஆனால் அவருடைய ஏற்ற வேளையில்) என்றும் கூறி, குழந்தைப் பருவத்திலிருந்தே தேவனை இதுபோல அவர்கள் அறியவும் நேசிக்கவும் பிள்ளைகளுக்குக் கற்றுக்கொடுக்கப்பட்டால், சின்ன சின்ன கஷ்டங்களை உதவிக்காகவும், இரக்கத்திற்காகவும் தேவனிடம் எடுத்து வரவும், அதே போல அவர்களுடைய சின்ன சின்ன சந்தோஷங்களையும் ஆசீர்வாதங்களையும் நன்றியோடும், துதியோடும் அவரிடம் கொண்டு வரவும் அவர்களுக்கு ஆரம்பத்திலிருந்தே கற்றுக்கொடுக்கப்பட்டால், அவர்கள் கிரகித்துக் கொள்ளும் அளவிற்குத் தேவனுடைய திட்டத்தையும், அதனுடைய அவசியத்தையும் அவர்கள் கற்றுக்கொள்ளும்படி செய்தால், பச்சை மரம் போன்ற இந்தக் குழந்தைப் பருவத்தில் அவர்கள் பெற்றுக்கொள்கிற இதுபோன்ற அறிவுரைகள் ஒருபோதும் மங்கிப்போகாது. "பிள்ளையானவனை நடத்த வேண்டிய விதத்தில் அவனை நடத்து அவன் முதிர்வயதிலும் அதை விடாதிருப்பான்." ஒருவேளை அவன் தன் வாலிபப் பருவத்தில் அதை விட்டுவிட்டுத் திரியலாம், ஆனால் மெல்ல மெல்ல தேவனுடைய கண்டிக்கிற கரத்தின்கீழ் (தேவன் அவனை விட்டுவிடமாட்டார். ஏனென்றால், உங்கள் நிமித்தம் அவன் மேல் கவனமுள்ளவராக இருப்பார்) தாயினுடைய ஜெபங்களும், அறிவுரைகளும் மற்றும் அன்பும் புதுப்பொலிவுடன் நிச்சயமாக அவனால் திரும்பவும் நினைவுகூரப்பட்டுக் கவனிக்கப்படும்... ஒருவேளை தாய் இளைப்பாறுதலுக்குள் சென்று, அநேக நாட்களுக்குப் பிறகும் அது நடக்கலாம்.

பிள்ளைகளுடைய சரீரம், மனம் மற்றும் பண்பு சார்ந்த தேவைகளின் விஷயங்களில், இப்படிப்பட்ட ஜாக்கிரதையும், விழிப்பும், தொடர்ச்சியான கவனமும் ஏறக்குறைய தாயினுடைய எல்லா நேரத்தையும், பலத்தையும் எடுத்துக்கொள்ளும். சில சமயங்களில் அவளால் முடிகிறதற்கும் அதிகமாகவே அவள் கொடுக்கவேண்டியிருக்கும்; தாய்மையினுடைய ஆரம்பக் காலத்தில் குடும்ப வட்டத்திற்கு அப்பாற்பட்ட காரியங்களில், அவளிடமிருந்து குறைவானதையே எதிர்பார்க்க முடியும். ஆதலால், பிள்ளையை வளர்க்கும் இந்த விஷயத்தில் அவள் கொண்டிருக்கும் உண்மைத்தன்மையானது, பெரிய பெரிய வேலைகளில் (ஆவிக்குரிய வேலைகளில்) உண்மையாக இருக்கவேண்டும் என்கிற அவளுடைய ஆவல் மற்றும் விருப்பத்தினுடைய அளவைக் காட்டுகின்றது; மேலும், உண்மையாகவே எஜமானரின் அங்கீகரிப்பிலோ அல்லது தன் குடும்பத்தாரின் அன்பு மற்றும் மதிப்பு மரியாதையிலோ, தனக்கான பலனை அவள் நிச்சயமாக இழந்து போகமாட்டாள். இயற்கையாகவே சில பிள்ளைகள் பார்ப்பதற்குத் தாறுமாறாகவும், சிந்தனையற்றவர்களாகவும் சிலகாலம் இருந்தாலும் கூட நிச்சயமாகப் போகப்போக அவர்களும் உயர எழுந்து, அவளைப் பாக்கியவதி என்பார்கள்.

கிறிஸ்தவ பெற்றோர்கள் தங்களுடைய பிள்ளைகளுக்காக இப்போது செய்து கொண்டிருக்கும் வேலையை, தற்காலத்தில் விடிந்து கொண்டிருக்கும் யுகத்தினுடைய மகா திரும்பக்கொடுத்தலின் வேலையின் ஒரு பகுதி என்று அவர்கள் கருத வேண்டும். தேவனுடைய திட்டத்தையும், மேலும் மகா உபத்திரவ காலத்தின் போதும் அதற்குப் பிற்பாடும் அவர் செய்துமுடிக்கவிருக்கிற அந்தப் பெரிய வேலைகளைக் குறித்தும் பரிசுத்தவான்களுடைய பிள்ளைகளுக்கு கவனமாகக் கற்றுக்கொடுக்கப்பட்டு அறிவுறுத்தப்பட்டிருந்தால், மனிதர்களுக்கு, அவர்களுடைய அனைத்துத் துயரங்களுக்கும் உண்மையான மற்றும் ஒரே தீர்வைச் சுட்டிக்காட்டும்படிக்கு விசேஷமான விதத்தில் பரிசுத்தவான்களின் பிள்ளைகளை உலகத்தின் அறிவுரையாளர்களாக (Instructors) எடுத்துப் பயன்படுத்துவதற்குத் தேவன் விருப்பமுள்ளவராக இருப்பார் என்பதில் சந்தேகமில்லை.

பிரியமான கிறிஸ்தவ தாய்மார்களே, இப்படிப்பட்ட முடிவை மனதில் வைத்துக்கொண்டு வேலை செய்யுங்கள், கர்த்தருக்குள்ளான உங்களுடைய பிரயாசம் வீண்போகவில்லை என்பதை ஏற்றகாலத்தில் தேவன் உங்களுக்குக் காண்பிப்பார். நீங்கள் பார்ப்பதற்கு எளிமையாகவும், அறியப்படாதவர்களாகவும் இருந்தாலும், நீங்கள் நிறைவேற்ற வேண்டிய ஆசீர்வாதமான ஒரு பணி உங்களுக்கு இருக்கிறது. தேவன் உங்கள் அனைவரையும் ஆசீர்வதித்து, உங்களுடைய பங்கை நீங்கள் சிறந்த முறையில் செய்வதற்கு எல்லாவிதத்திலும் போதுமான ஞானத்தையும், பொறுமையையும், உறுதியையும், புத்திகூர்மையையும், விசுவாசத்தையும், நம்பிக்கையையும், அன்பையும் மற்றும் கிருபையையும் கொடுப்பாராக. அதேசமயத்தில், உங்களுக்காகவும், உங்கள் நிமித்தமாக விசேஷமாக உங்களுடையவர்களுக்காகவும் அவர் அக்கறை கொண்டுள்ளார் என்பதை அறிந்து, உங்கள் கவலைகளையெல்லாம் அவர்மீது வைத்துவிட்டு, தேவனோடு தாழ்மையுடன் நடந்துகொள்ளுங்கள்.

- திருமதி. C.T.R.

R4268 [தெரிந்தெடுக்கப்பட்ட பத்திகள்]

# அன்புடன்கூடிய இரக்கம், ஓ! எத்துணை மகத்துவமாய் உள்ளது!

"ஒருவருக்கொருவர் தயவாயும் மனஉருக்கமாயும் இருந்து, கிறிஸ்துவுக்குள் தேவன் உங்களுக்கு மன்னித்ததுபோல, நீங்களும் ஒருவருக்கொருவர் மன்னியுங்கள்." (எபேசியர் 4:32)

"என்னைச் சிநேகிக்கிறவர்களை நான் சிநேகிக்கிறேன்; அதிகாலையில்/ஆரம்பத்திலேயே என்னைத் தேடுகிறவர்கள் என்னைக் கண்டடைவார்கள்." (நீதிமொழிகள் 8:17)

## நமது இரண்டாம் ஆதார வசனம்

ஓய்வுநாள் பாடசாலையின் குழு, இந்த நாளின் தியதியினை உலகம் முழுவதிலுமுள்ள ஓய்வுநாள் பள்ளியில் உள்ள ஜனங்களினால் தேவனுக்கு விசேஷித்த ஜெபத்தினை ஏறெடுக்கும்படியாக நியமித்துள்ளது. மேலே நாம் பார்த்துவரும் பாடத்திற்கும், இவ்விஷயத்திற்கும் தொடர்பு இல்லை என்றாலும், "என்னைச் சிநேகிக்கிறவர்களை நான் சிநேகிக்கிறேன்; அதிகாலையில்/ஆரம்பத்திலேயே என்னைத் தேடுகிறவர்கள் என்னைக் கண்டடைவார்கள்" என்ற நமது இரண்டாம் ஆதார வசனம் மிகவும் பொருத்தமானதாய்க் காணப்படுகின்றது. இது ஞானம் தொடர்பாகப் பேசப்பட்டுள்ளது, தேவன்தாமே ஞானத்தின் உருவமாய் இருக்கின்றார்; ஆகையால் இது தேவனுக்குப் பொருந்தும். இதுபோலவே தேவனுடைய கிருபையைக்குறித்துக் கேள்விப்படுவதற்கான சிலாக்கியம் பெற்றிருப்பவர்களுக்கு, கிறிஸ்து ஞானமாய் இருப்பார். அப்போஸ்தலர் கூறுகிறதுபோல நீதியுள்ளவர்கள், அவரை முறையாய் ஏற்றுக்கொள்பவர்கள் அனைவருக்கும் "கிறிஸ்துவே தேவனால் நமக்கு ஞானமுமானார்."

சுவிசேஷஅழைப்பானது விசேஷமாய்ப் பிள்ளைகளுக்கென்று விடுக்கப்பட்டது என்றோ, நமது கர்த்தருடைய போதனைகள் விசேஷமாய்க் குழந்தைகளினுடைய மனதிற்கு ஏற்றது என்றோ, அவர் பிள்ளைகளுக்குப் போதித்தார் என்றோ, அவரோ அல்லது அப்போஸ்தலர்களோ ஞாயிறு பள்ளிகளை நிறுவினார்கள் என்றோ நம்முடைய கருத்துக்கள் காணப்படுகிறது இல்லை. (ஆறாம் தொகுதியில் ஞாயிறு பள்ளி வேலைகள்குறித்த நமது விளக்கங்களைப் பார்க்கவும்). எனினும் முப்பது வயதை அடைவதுவரையிலும் சத்தியத்தின் ஊழியக்காரர்களாகிட முடியாத அளவுக்கு கிறிஸ்துவையும், அப்போஸ்தலர்களையும் யூதருடைய நியாயப்பிரமாணத்திலுள்ள வரையறைகள் தடைப்பண்ணினாலும், அத்தகைய வரையறைகள் இப்பொழுது செயலாக்கத்தில் இல்லை, ஆகையால் எவ்வளவுதான் வயதானவராக இருப்பினும், எவ்வளவுதான் சிறியவராக இருப்பினும் "கேட்க செவியுள்ளவன் கேட்கக்கடவன்" என்று நாம் கூறுவது சரியே.

தங்கள் பிள்ளைகள் மிகச் சிறந்த விதத்தில் மதத்தின் அடிப்படையிலுள்ள போதனைகளையும், அன்றாட ஜீவியத்தில் பெற்றோரின் முன்மாதிரியையும் பெற்றுக்கொள்ளத்தக்கதாகப் பார்த்துக்கொள்ளும்படிக்கு எங்கும் காணப்படும் சத்தியத்திலுள்ள அருமையான சகோதர சகோதரிகளை நாம் ஊக்குவிக்கின்றோம். இல்லத்தில் ஒரே ஒரு குழந்தைதான் இருப்பினும் ஒவ்வொரு இல்லமும் அதன் ஞாயிறு பள்ளி வகுப்பினைப் பெற்றிருக்கவேண்டும். ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமைகளிலும் பெற்றோர்கள் மற்றும் பிள்ளைகளினால் பங்கெடுக்கப்படும் ஐக்கியத்தின், உறவின் மற்றும் துதித்தலின் அமைதியான, புனிதமான மணி நேரங்கள் காணப்பட வேண்டும். சந்தோஷத்திலும், அன்பிலும் மற்றும் சத்தியத்திலும் காணப்படும் சிலரின் குடும்பங்களில் முறையான குடும்ப ஜீவியத்தினுடைய செல்வாக்கினை கவனிப்பதற்கு அருமையாய் உள்ளது. அனைவரும் இப்படியாகத் தீர்மானித்தவர்களாகி, தேவகிருபையினால்நிறைவேற்றினார்களானால் அது என்னமாயிருக்கும்!

குழந்தைப்பருவத்தில் ஓர் அருமையான நிலை உள்ளது - அதன் கள்ளங்கபடற்ற நிலைமை, அதன் விசுவாசம் அருமையானதாகும்; குழந்தையின் மனமானது சத்தியத்திற்கும், அதன் ஆவிக்கும்கூட, அர்ப்பணிப்பின் ஆவிக்கும் ஆச்சரியப்படும் விதத்தில் இணங்குகின்றது. நம்முடைய பிள்ளைகள்

அனைவருக்கும் சிறுவயது முதற்கொண்டு - சகல ஈவுகளையும் அருளுகிறவரென ஆண்டவரை அன்புகூர்ந்திடுவதற்கும், அவர் சித்தத்தை கவனத்தில் எடுத்துக்கொள்வதற்கும், தங்களுடைய சின்னஞ்சிறியவைகள் அனைத்தையும் அவருக்கு அர்ப்பணித்திடுவதற்கும் கற்றுக்கொடுக்கப்பட்டால், அது எத்துணை ஆசீர்வாதமாய்க் காணப்படும்! இப்படியாகப் போதிக்கப்படும் பிள்ளைகள் பெறும்பாலும் அவர்களது பெற்றோர்களுக்குப் போதிப்பவர்களாகி, அர்ப்பணிப்பின் உண்மையான ஆவியினை வெளிப்படுத்துகிறவர்களாய் இருப்பார்கள். நாங்கள் இங்கும் அங்குமாகப் பல பிரயாணங்களில் கடந்துசெல்கையில், இப்படியாகச் சிறுவயதிலேயே கர்த்தருக்கு ஒப்புக்கொடுக்கப்பட்ட மற்றும் அவரது சித்தத்திற்கு இசைவாகப் பயிற்றுவிக்கப்பட்டுள்ள சிறியவர்கள் நமக்கு அறிமுகப்படுத்தப்படுகின்றனர். இத்தகைய பிள்ளைகளில் சிலர் தங்களுக்குக் கிடைக்கும் எந்தக் காசுகளையும் மிட்டாய்கள் வாங்குவதற்குப் பயன்படுத்திடுவதற்குப் பதிலாக, அப்பணமானது கர்த்தருக்காகக் கொடுக்கப்படவேண்டிய பணமாகவும், ஜனங்கள் வேதத்தைப் புரிந்துகொள்வதற்கும், தேவன் அன்புள்ளவராய் இருக்கின்றார் என்று புரிந்துகொள்வதற்கும் உதவப்படும்படிக்கு கைப்பிரதிகளை அச்சிடும்படி அவ்வப்போது சகோதரர் ரசல் அவர்களுக்கு அனுப்பிவைக்கவேண்டிய பணமாகவும் இவர்களால் சேமித்து வைக்குமளவுக்கு, மிகப் பலமாய் வளர்ச்சிப்பெற்றுள்ள அர்ப்பணிப்பின் ஆவியினை உடையவர்களாய் இருக்கின்றனர். இந்த அருமையான குழந்தைகளுடைய காசுகளை நாம் நாடாமல், மாறாக இவர்களுடைய நலன்குறித்தும், இவர்கள் ஜீவியத்தில் கடந்துவரும் மாபெரும் ஆவிக்குரிய ஆசீர்வாதங்கள்குறித்தும், இவர்களது ஆறுதலுக்காகவும், இவர்களது சந்தோஷத்திற்காகவும், வரவிருக்கிற நாட்களில் இவர்களோடுகூட நிச்சயமாய்க் கடந்துவரும் அந்த மாபெரும் ஆசீர்வாதங்கள் குறித்தும்தான் நாங்கள் நோக்கமாய் இருக்கின்றோம். இத்தனை சிறுவயதிலேயே தேவனுக்குக் கொடுக்கப்பட்ட சிறிய அன்புள்ள இருதயங்களானது நிச்சயமாக ஓர் ஆசீர்வாதத்தினையும், உலகத்திலுள்ள மிகுதியான தீமைகளிடமிருந்து ஒரு பாதுகாப்பையும் கண்டடையும்.

இப்படியாகச் சூழ்நிலையை முழுமையாகச் சரியாய்க் கிரகித்துப் புரிந்துகொள்வதற்கு முன்னதாகவே அர்ப்பணிப்பின் ஜீவியத்தையும், சத்தியத்திற்காய்ச் சுயத்தை வெறுத்த ஜீவியத்தையும் துவங்கியுள்ள சிறுபிள்ளைகளில் அநேகர் இப்பொழுது மிகவும் குறிப்பிடத்தக்க விதத்தில் முதிர்ச்சியடைந்திருக்கின்றனர்; மேலும் பன்னிரண்டு மற்றும் பதிமூன்றாம் வயதுகளை அடைந்தபோது தங்களுடைய அர்ப்பணிப்பை அடையாளப்படுத்திடுவதற்கான வாய்ப்பைக்குறித்து வேண்டிக்கொண்டவர்களாக இருக்கின்றனர்; மேலும் சுவிசேஷத்தினுடைய அடிப்படைகளைக்குறித்த விரிவான அறிவைப் பெற்றிருப்பதற்கான தெளிவான சான்றையும், கர்த்தருக்கு ஒப்படைக்கப்படும் பலியைக்குறித்த இருதயப்பூர்வமான உணர்ந்து கொள்ளுதலுக்கான தெளிவான சான்றையும் வெளிப்படுத்தியுள்ளனர்.

"உலகத்துக்காக வேண்டிக்கொள்ளாமல், நீர் எனக்குத் தந்தவர்களுக்காக வேண்டிக்கொள்ளுகிறேன்" என்று நமது கர்த்தர் கூறியுள்ளார். இதுபோலவே உலகத்தாரை ஆசீர்வதிப்பதற்கென்று ஆயிரவருட இராஜ்யமும், அதன் வாய்ப்புகளும் ஏற்பாடுபண்ணப்பட்டுள்ளபடியினால் நம்முடைய ஜெபங்கள் உலகத்தாருக்காக ஏறெடுக்கப்படவேண்டாம்; மாறாக அவருக்கு அர்ப்பணம்பண்ணியுள்ளவர்கள், கிறிஸ்துவுக்குள்ளான நமது சகோதர சகோதரிகள் சார்பாக நமது விண்ணப்பங்கள் ஏறெடுக்கப்படுவதாக; மேலும் இது அர்ப்பணம்பண்ணியுள்ளவர்களில் வயதானவர்களையும், இளையவர்களையும் உள்ளடக்கிடும். நம்முடைய பராமரிப்பு மற்றும் அறிவுரையின் கீழ்ப் பிதாவினால் நம்மிடம் ஒப்படைக்கப்பட்டவர்களையும்கூடப் பொதுவான விதத்தில் நாம் ஜெபத்தில் உள்ளடக்கிக்கொள்ளலாம்; அவர்களது மேலான நன்மைக்கென்றுள்ள தேவனுடைய இந்த அனுகூலமான ஏற்பாடுகளுக்காகவும் நாம் ஜெபிக்கலாம், மேலும் இவர்களுக்குக் கர்த்தருடைய செய்தியைச் சிறந்த விதத்தில் முன்வைத்திடுவதற்கும், நம்முடைய அன்றாட நடத்தையிலும் மற்றும் நம்முடைய பிள்ளைகளை நாம் நடத்தும் விஷயத்திலும் இச்செய்தியினுடைய சாரத்திற்கு நாம் உதாரணங்களாகக் காணப்படுவதற்கும் தேவையான ஞானத்தையும், கிருபையையும் நமக்காகக் கேட்டுக்கொள்ளலாம்.

R4277 [தெரிந்தெடுக்கப்பட்ட பத்தி]

# துரோகம் புரிந்தவரிடத்தில் அன்பு பாராட்டப்பட்டது

### 2 சாமுயேல் 18:24-33; நீதிமொழிகள் 17:25

தன் குமாரனுக்காக தாவீது கொண்டிருக்கும் அன்பினை நாம் பாக்கும்போது, அப்சலோம் நாடு கடத்தப்பட்ட அந்நிய தேசத்திலிருந்து திரும்பிவருவதற்கு அனுமதிக்கப்பட்ட பின்னர், இரண்டுவருட காலங்களாக தாவீது தன் இருதயத்தினுடைய அன்பின் உணர்வுகளைத் தன் மகனாகிய அப்சலோமிடத்தில் சரியாக வெளிப்படுத்தவில்லை என்று நாம் அனுமானித்துக்கொள்ளலாம். அந்த இரண்டுவருட காலங்களில் அப்சலோமைச் சந்திக்க இராஜா மறுப்புத் தெரிவித்திருந்தார் மற்றும் இப்படியாக அப்சலோமினுடைய எதிர்ப்பையும், பகைமையையும் அவரில் வளரத்தக்கதான சூழ்நிலை உண்டாகுவதற்கு ஏதுவாக்கிவிட்டார். இதை நாம் குறிப்பிடுவதற்கான காரணம், இதில் அநேகம் பெற்றோர்களுக்கு ஒரு படிப்பினை இருக்கின்றது என்று நாங்கள் நம்புவதினாலேயே ஆகும். ஏதோ சில காரணங்களுக்காகப் பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளை இயல்புக்கும் அதிகமாகக் கடினமாய் நடத்திடும் தன்மையுடையவர்களாய் இருக்கின்றனர் என்றும், இப்படியாகத் தங்கள் இருதயத்தினுடைய உண்மையான பாசத்தினைக்குறித்துத் தங்கள் பிள்ளைகளுக்குத் தவறான அபிப்ராயம் கொடுக்கின்றனர் என்றும் எங்களுக்கு அடிக்கடி தோன்றுகின்றது. பிள்ளைகளைக் கையாளும் விஷயத்தில் எவ்வளவுதான் கடினம் அல்லது கடுமை அவசியமாய் இருப்பினும், எவ்வளவுதான் சிட்சைகள் அவசியமாய் இருப்பினும், அனைத்துமே பிள்ளைகளுக்குப் பெற்றோரினுடைய அன்பைக்குறித்த முழு உறுதியினைக் கொடுக்கும் விதத்தில் காணப்படவேண்டும்; மேலும் கொடுக்கப்படும் தண்டனைகளானது கடமை கண்ணோட்டத்திலும், பிள்ளைகளினுடைய நலனுக்காகவும் கொடுக்கப்பட்டுள்ளது எனும் விதத்தில் செய்யப்படவேண்டும். நீதி அருமையானதே, ஞானம் விலையேறப்பெற்றதே, தண்டனைகள் அவசியமானதே, ஆனால் எல்லாவற்றையும்விட "அன்பே பிரதானமானதாய்" காணப்படவேண்டும். ஆகையால் இந்தத் திவ்விய தரநிலைக்கு இசைவாக நம்மை - நமது கிரியைகளை, நமது வார்த்தைகளை, நமது ஒவ்வொரு சிந்தனைகளை நிதானித்துக்கொள்வோமாக. தூய்மையான அன்பினால் முழுமையாய் நிர்வகிக்கப்படாத எந்தக் கிரியைகளும், வார்த்தைகளும் அல்லது சிந்தனைகளும், நமக்கும் சரி, நாம் யார் விஷயத்தில் செயல்படுத்துகிறோமோ அவர்களுக்கும் சரி பாதகமானதாகவே இருக்கும்.

# பாஸ்டர் ரசல் அவர்களின் பதில்கள்

**1. (Q54:1) பிள்ளைகள் - உபத்திரவ காலத்தின்போது பிள்ளைகள்மீது மேற்பார்வை**

கேள்வி (1906)-1- அர்ப்பணம்பண்ணியுள்ள பெற்றோர்களை உடையவர்களாகவும், உபத்திரவ காலத்திற்குள் பிரவேசிக்கப்போகிறவர்களாகவும், பொறுப்பாய் நடந்துகொள்ளும் வயதை அடையாதவர்களுமான பிள்ளைகள் விஷயத்தில், தேவ வசனத்தில் ஏதேனும் அறிவுரையாகவும், ஆறுதலாகவும் விசேஷமாகக் காணப்படுகின்றதா?

பதில் - இத்தகைய பிள்ளைகளைக்குறித்து நேரடியாய்ப் பேசப்பட்டுள்ள எவ்வார்த்தைகளையும் நாங்கள் அறியோம் என்றபோதிலும், நாம் பின்வருபவற்றை அறிவோம்: அதாவது கர்த்தருடைய கண்ணோட்டத்தில் அவருடைய ஜனங்கள் அனைவரும் விலையேறப்பெற்றவர்கள் ஆவார்கள்; அவர்களுடைய நலனுக்கடுத்தவைகள் அனைத்தும் விலையேறப்பெற்றவையாகும்; இவர்கள் மாத்திரமல்லாமல், இவர்களது சிறுபிள்ளைகளும், இவர்கள் சம்பந்தப்பட்ட அனைத்துமே கர்த்தருடைய பார்வையில் நிச்சயமாய் விலையேறப்பெற்றதாகக் காணப்படும். இது நிதரிசனமான உண்மை மற்றும் இதற்கான வேத ஆதாரங்கள் ஏதும் உண்மையில் அவசியப்படுகிறதில்லை. விசுவாசிகளினுடைய பிள்ளைகள் அனைவரும், பிள்ளைகள் தனிப்பட்ட பொறுப்புணர்வினை அடைவதுவரையிலும், அதாவது தங்களுக்கென்று பொறுப்பினைப் பெற்றவர்களாகுவதுவரையிலும் கர்த்தருடைய விசேஷித்த பாதுகாப்பு மற்றும் பராமரிப்பின்கீழ்க் காணப்படுகின்றனர் என்று நான் சொல்லிடுவேன்; இப்படியான சிறுபிள்ளைகள் அனைவரும் கர்த்தருடைய தூதனின் விசேஷித்த மேற்பார்வையின்கீழ்க் காணப்படுவார்கள் என்று நாம் நிச்சயமாய் எண்ணிக்கொள்ளலாம்.

**2. (Q54:2) பிள்ளைகள் - நடக்க வேண்டிய வழியில் நடத்தப்படுதல்**

கேள்வி (1907)-2- "பிள்ளையானவன் நடக்கவேண்டிய வழியிலே அவனை நடத்து; அவன் முதிர்வயதிலும் அதை விடாதிருப்பான்." பிள்ளைகள் ஏன் அடிக்கடி சரியான வழியினின்று விலகுகின்றனர்?

பதில் - அவர்கள் நடக்க வேண்டிய வழியில் நடத்தப்படவில்லை என்பதே பிரதான காரணம் என்று நான் எண்ணுகின்றேன். சத்தியத்திலுள்ள ஜனங்களுக்குப் பிள்ளைகளைப் பயிற்றுவித்தல் விஷயத்தில் சிறு படிப்பினை அவசியம் என்று நான் எண்ணுகின்றேன். அநேகமாக இவ்விஷயத்தில் சில சாதகமின்மைகள் நமக்குக் காணப்படவே செய்யும். உங்கள் இருதயமானது எவ்வளவுக்கு அதிகம் பெரிதாகியும், மன்னிக்கிறதாகியும், தயவுள்ளதாகியும் உள்ளதோ, அவ்வளவுக்கு அதிகமாய் உங்கள் நண்பர்களையும், உங்கள் பிள்ளைகளையும் மன்னிக்கிறவர்களாகுவீர்கள்; ஆனாலும் உங்கள் பிள்ளைகளைக் கையாளும்போது, நீங்கள் அவர்களை மற்ற ஒரு புருஷனையோ அல்லது ஸ்திரீயையோ கையாளுகிறதுபோல கையாளக்கூடாது என்பதை நீங்கள் நினைவில்கொள்ள வேண்டும்; நீங்கள் உருவாகிவரும் குணலட்சணத்தைக் கண்நோக்க வேண்டும் மற்றும் கர்த்தருடைய ஒழுங்குகளுக்கு இசைவாக, கர்த்தர் நடத்தப் பிரியப்படும் வழியில் அக்குணலட்சணத்தை வனையத்தக்கதாகப் பயிற்றுவித்திட வேண்டும். ஒருவேளை குணமானது, வளைந்த சிறு கிளையாக இருக்குமானால், வளைந்துள்ள பகுதிகளில் (splint) கட்டைகளை நீங்கள் கட்டி, அது நிமிரத்தக்கதாக உதவிட வேண்டும்; ஏனெனில் இவ்வளைந்த கிளைகளுடன் அதைப் பெரிய மரமாக வளர்வதற்கு நீங்கள் விட்டுவிடுவீர்களானால், பிற்பாடு அது நேராய் நிமிரத்தக்கதாக உங்களால் ஒருபோதும் அதற்குச் கட்டைகளைக் கட்டிட முடியாது. நண்பர்களில் சிலர் பிரம்பினைத் தவிர்த்து, வேதவாக்கியங்கள் கூறுவதைக் கவனிக்கத் தவறிவிடுகின்றனர் என்று நான் எண்ணுகின்றேன். பிரம்பு தேவைப்படும்போது, அதை நாம் தவிர்த்திடக்கூடாது. இவ்விஷயத்தில் நாம் தேவனுடைய வழிமுறையினைப் பின்பற்றிட

வேண்டும். உங்கள் விஷயத்தில் பிரம்பு தேவைப்படுகையில், அதைத் தேவன் தவிர்த்துக்கொள்கின்றாரா? இல்லவேயில்லை. "உமது கோலும், உமது தடியும் என்னைத் தேற்றும்." தேவன் தம் ஜனங்களுக்காக ஒரு கோலையும், ஒரு தடியையும் வைத்திருப்பதற்காக நான் மகிழ்கின்றேன்; நாம் திருத்தப்பட வேண்டியபோது, நம்மைத் திருத்தாமல் அப்படியே அவர் நம்மை விட்டுவிடாமல் இருப்பதற்காய் நான் மகிழ்கின்றேன். ஆனால் இது விஷயத்தில் சரியான ஆவியை உடையவர்களாய் இருப்போமானால் . . . சிட்சையைப் பெற்றுக்கொள்வதற்குப் பதிலாக, சிட்சைக்கான அவசியம் நமக்கு ஏற்படுவதைக்குறித்தே நாம் மிகவும் வருத்தம் அடைகிறவர்களாய் இருப்போம். "நான் சிட்சிக்கப்பட அவசியம் ஏற்பட்டுள்ளபடியாலும், நான் என்னைத் தானே சரிப்பண்ணிக்கொள்ளாததினாலும் அல்லது என்னை நான் சரியான கட்டுப்பாட்டில் வைத்துக்கொள்ளாததினாலும் நான் மிகவும் வருந்துகின்றேன்" என்பதே பிரம்பின் காரியமாகும். இதைத்தான் நீங்களும் பிள்ளையினிடத்தில் வளர்த்திட வேண்டும் - பிள்ளையானவன் சில அடிகள் பெற்றுக்கொள்வதல்ல, மாறாக தேவனுடைய பிள்ளையென நீங்கள் (அடிக்கொடுப்பதை) இதைச் செய்வதை உங்களது கடமையாகவும், பொறுப்பாகவும் பெற்றிருக்கின்றீர்கள் மற்றும் நீங்கள் உங்கள் பிள்ளைக்கு அடிக்கொடுத்தாக வேண்டும். என்னுடைய ஜீவியத்தில் என் கைகளில் நான் எத்தனை அடிகள் வாங்கினேன் என்று என்னால் சொல்லமுடியும்; ஐந்து முறை அடிகள் வாங்கியிருக்கின்றேன்; மேலும் அவற்றையும், அந்தச் சம்பவங்களையும் நினைவில் வைத்திருக்கின்றேன். மூன்று அடிகளை என் தாயாரிடமிருந்து பெற்றுக்கொண்டேன். அவைகளில் ஒன்றைக்குறித்துச் சொல்ல விரும்புகின்றேன். எனக்கு அப்போது ஐந்து வயதிருக்கும். நான் மிகச் சிறுபிள்ளையாக இருந்தபோது, இடுப்பின்கீழ், அதாவது பிட்டத்தில் சில அடிகள் பெற்றிருந்திருப்பேன், எனக்கு அதுகுறித்து ஞாபகமில்லை; ஆனால் ஐந்து வயது இருக்கையில், நான் அடி வாங்கினது எனக்கு ஞாபகம் இருக்கின்றது. என் தாயார், அவர்களால் முடிந்தவரை என்னைப் பயிற்றுவித்தார்கள். என் தாயார் ஒரு ஜோடி கோலிகுண்டு முனைகளை உடைய தோல் சாட்டையை பெற்றிருந்தார்கள்; அதன் முனைகள் வலியை உண்டாக்கும், ஆனாலும் உண்மையான சேதம் ஏதும் செய்யாது. அவைகளுக்குக் கிட்டத்தட்ட ஆறு அல்லது எட்டு வால் பகுதிகள் உண்டு - "அவைகளின் வால் முனைகளே வலியை உண்டாக்கும்." "சார்லஸ் (ரசல்), தோல் சாட்டையை எடுத்துக்கொண்டு மாடிக்குவா" என்று என் தாயார் கூறினார்கள். நானும் தோல் சாட்டையை எடுத்துக்கொண்டு மாடிக்குச் சென்றேன். தாயார் என்னை நோக்கி: "இங்கே உட்காரு; நான் உனக்கு வேதத்திலிருந்து சிலவற்றை வாசிக்க வேண்டும்" என்றார்கள். நான் அச்சம்பவத்தில் ஓர் உண்மையைப் புரட்டினதாக அல்லது திரித்துப் பேசினதாக என் தாயார் எண்ணினார்கள்; நான் முழுப்பொய்ப் பேசினேன் என்றல்ல, மாறாக உண்மையினைக் கொஞ்சம் திரித்துப் பேசினதாக அவர்கள் எண்ணினார்கள்; அதாவது விசேஷமாக ஒருவேளை பிள்ளைப் பேசுவதைக் கேட்டு சில வயதானவர்கள் சிரிக்கவும், பேசினது புத்திசாலித்தனமானது (smart) என்று எண்ணுவதற்கும் வாய்ப்புள்ள தருணங்களில், பெரும்பான்மையான பிள்ளைகள் இப்படி உண்மையைக் கொஞ்சம் திரித்துப் பேசுவது போன்று நான் பேசினதாக எண்ணினார்கள்; ஆனால் அப்படியாக நான் எண்ணி ஒருவேளை பேசியிருந்தாலும், பேசுவதைக் கேட்டுச் சிரிப்பதற்கும், பேசினது புத்திசாலித்தனமானது என்று எண்ணுவதற்கும் அங்கு யாரும் இருக்கவில்லை. இப்படியாகச் செய்யக்கூடாது என்று நான் கற்றிருந்தேன். நான் இப்படிப் பேசினதாக என் தாயார் எண்ணினப்படியால், வெளிப்படுத்தின விசேஷத்திலிருந்து, பொய்ப்பேசுபவர்கள் அக்கினியிலும், கந்தகத்திலும் எரிக்கப்படுவார்கள் என்று காணப்படும் வசனங்களை எனக்கு வாசித்துக் காண்பித்துவிட்டு, "சார்லஸ் (ரசல்), அக்கினியிலும், கந்தகத்திலும் சுட்டெரிக்கப்படப் போகிறவர்களோடுகூட நீயும் காணப்பட நான் விரும்பவில்லை; மேலும் உன் தாயென உன்னைச் சிட்சிப்பது என் கடமையாக இருக்கின்றது மற்றும் நான் இதைச் செய்தாக வேண்டும். உன்னைச் சாட்டையினால் அடிக்க எனக்கு விருப்பமில்லை, ஆனாலும் உன்னுடைய நன்மைக்காக இதை நான்

**செய்தாக வேண்டும். இதுவே கர்த்தருடைய வசனத்தின் போதனையாகும் மற்றும் நீ ஒருவேளை வளர்ந்து பொய்யனாய்க் காணப்பட்டாயானால், ஒருவேளை வளர்ந்து பொல்லாத மனுஷனாய்க் காணப்பட்டாயானால் இப்படியே சம்பவிக்கும்" என்று கூறினார்கள். வேதவாக்கியங்களிலிருந்துள்ள சிறுசிறு அந்த அறிவுரைகளானது என் மனதில் அதிகமாய்த் தாக்கத்தினை ஏற்படுத்தினது. ஒருவேளை காரியங்கள்குறித்து என் தாயார் புரிந்திருப்பார்களானால், அவர்கள் அப்படியாக அவ்வசனங்களைப் பொருத்திக் கூறியிருந்திருக்க மாட்டார்கள்; மாறாக அதற்கொத்த ஆற்றலுள்ள மற்றும் மிக அதிக ஆற்றலுள்ள வேறு ஏதேனும் வேதவாக்கியத்தினைக் கண்டுபிடித்து, எடுத்துக் கூறியிருந்திருப்பார்கள். தேவன் பொய்யர்களைப் பயன்படுத்துவதில்லை எனும் உண்மையானது மிகச் சுலபமாகப் பிள்ளையினுடைய மனதில் பதியவைக்கப்படலாம்.**

**3. (Q55:1) பிள்ளைகளுக்கான ஆயிர வருஷகாலத்தின் ஆசீர்வாதங்கள்**

**கேள்வி (1909)-1- ஆயிர வருஷயுகத்தின்போது பிள்ளைகள் எந்த ஸ்தானங்களில் காணப்படுவார்கள் மற்றும் அவர்கள் என்ன ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்வார்கள்?**

**பதில் - பிள்ளைகள் மிகவும் சிறியவர்களாய் இருப்பார்களானால் அவர்கள் மடியில் காணப்படுவார்கள் என்று நான் எண்ணுகின்றேன். ஒருவேளை அர்ப்பணிக்கப்பட்டவர்கள் யாரேனும் பிள்ளைகள் உடையவர்களாய் இருப்பார்களானால், அவர்களின் பிள்ளைகளின் நிலைமை என்ன என்று கேட்கின்றீர்கள் என்று நான் எண்ணுகின்றேன். ஐயத்திற்கிடமின்றி அப்போது அநேகம் அன்புள்ள இருதயம்கொண்ட ஜனங்கள் ஜீவிப்பார்கள்; மேலும் இப்பிள்ளைகள் மகிமையடைந்து போனவர்களின் பிள்ளைகள் என்று இவர்கள் அறிகையில், அப்பிள்ளைகளைப் பராமரித்திடுவதில் இவர்கள் மகிழ்வார்கள். இன்னுமாகத் திரைக்கு அப்பக்கத்தில் காணப்படும் பெற்றோர்கள், தங்கள் பிள்ளைகளை இப்பக்கத்தில் இங்கு இருந்து பராமரிப்பதைப் பார்க்கிலும், மிக அதிகமாய்ப் பராமரிக்க முடிபவர்களாய் இருப்பார்கள் என்பதிலும் நமக்கு நிச்சயமே.**

**பிள்ளைகள் என்ன ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்வார்கள்? கிறிஸ்து யாருக்காக மரித்து, தேவன் தம்மைக்குறித்து அறியப்பண்ணுவதற்காய் யாருக்காக திரளான ஏற்பாடுகள்பண்ணினாரோ, அந்தப் பூமியின் குடிகளிலுள்ள மீதமானவர்களோடுகூட, இந்தப் பிள்ளைகளும் ஒரே ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்வார்கள்.**

**4. (Q55:2) காலம் குறைவாயிருக்கையில் பிள்ளைகளுக்குக் கொடுக்கப்பட வேண்டிய கல்வியின் அளவு**

**கேள்வி (1910)-2- இக்காலத்திற்கும், உபத்திரவ காலத்திற்கும் இடையிலான காலம் குறைவாய் இருக்கின்றது என்பதை அறிந்திருக்கும் நிலைமையிலும், இன்னுமாக எந்தவிதமான மேற்கல்வியிலும் தேவன்மீது நம்பிக்கையின்மை ஏற்படுவதற்கு, வேதத்தின்மீது சந்தேகம் ஏற்படுவதற்கு, எதிர்ப்பதற்கு ஏதுவான இயல்பு உருவாகிவிடும் நிலைமையிலும் - சத்தியத்திலுள்ள ஜனங்கள், அதாவது வேத மாணவர்கள் எந்தமட்டிலும் தங்கள் பிள்ளைகளைக் கல்வி கற்க வைக்க வேண்டும்? இசைக்கலையின் அடிப்படைகளைக் கற்பிப்பதற்கு நீங்கள் பரிந்துரைப்பீர்களா?**

**பதில் - என் அருமையான நண்பர்களே, பெரும்பான்மையான பிள்ளைகள் பொதுக்கல்வி படிப்பைத் தாண்டி அல்லது இதற்கும் அதிகமாய்த் தாண்டிச் செல்லாமல் இருந்தால் நலமாயிருக்கும் என்பது என் கருத்தாய் இருக்கின்றது. உண்மையில் ஏதேனும் நன்மையினை உண்டுபண்ணும் விதத்திலுள்ள எந்த ஒரு கல்லூரியையும் நான் அறியேன். இந்தியாவிலிருந்து வந்திருந்த ஓர் இளைஞனைக்குறித்து நான் உங்களுக்குக்கூற வேண்டும். அந்த இளைஞனின் தகப்பன் இந்தியாவைச் சேர்ந்தவரும், கிறிஸ்தவத்தை**

நேசித்தவருமாவார்; மேலும் அந்த இளைஞனுடைய வாக்கின்படி, அவரது தந்தை ஓர் உண்மையுள்ள கிறிஸ்தவன் ஆவார்; மேலும் இந்த இளைஞன் அமெரிக்காவிற்கு வந்து, தனது படிப்பைப் படிக்க மிகவும் ஆசைக்கொண்டிருந்தான். அவரது தந்தைக்கு இந்தியாவிலுள்ள மெத்தடிஸ்ட் சபை மிஷனுடன் தொடர்பு இருந்தது. அந்த இளைஞன் இங்குள்ள மெத்தடிஸ்ட் கல்லூரியில் சேர்ந்தார். படிப்பைப் படித்துக்கொண்டிருந்த நான்கு வருஷங்களில் அந்த இளைஞன் தனது கிறிஸ்தவத்தின் ஒவ்வொரு காரியத்தையும் இழந்துபோனான்; வேதத்தின்மீதான தன் ஒவ்வொரு விசுவாசத்தையும் இழந்துபோனான்; மெத்தடிஸ்ட் கல்லூரியில் படிப்பை முடித்த போதோ வேதத்தைச் சந்தேகிக்கிறவனாய், முற்றிலும் ஓர் அவிசுவாசியாய் வெளியேறினான். பிற்பாடு ஒருமுறை இந்த இளைஞனை வேத மாணவர்களில் ஒருவர் சந்தித்தார் மற்றும் வேத மாநாடுகள் ஒன்றில் கலந்துகொள்ளுமாறு இளைஞன் அழைக்கப்பட்டான். தன்னிடம் பணம் இல்லை என்று இளைஞன் கூறியுள்ளான். அச்சகோதரர்கள் இளைஞனின் (மாநாட்டிற்கு வருவதற்கான பயண) செலவுக்குப் பணம் கொடுத்திருக்கின்றனர். இளைஞன் மாநாட்டில் கலந்துகொண்டான் மற்றும் மிகவும் கவரப்பட்டிருக்கின்றான் . . . ஆனாலும் இளைஞன் முழுமையாய்த் திருப்தியாகிடவில்லை, காரணம் அந்தளவுக்குத் தன் விசுவாசத்தினை இளைஞன் இழந்துபோயிருந்தான். இளைஞன் இன்னுமாகப் படிக்க வேண்டும் என்றும், வேதாகமப் பாடங்களினுடைய ஆறு தொகுதிகளையும் வாசித்திட வேண்டும் என்றும் பரிந்துரைக்கப்பட்டது. இளைஞன் ஆறு தொகுதிகளையும் வாசித்தான் மற்றும் வாசித்து முடிக்கையில், தான் மறுபடியுமாகத் தேவனையும், வேதாகமத்தையும் கண்டுபிடித்ததற்காகவும், கர்த்தராம் இயேசு கிறிஸ்துவை, தன் இரட்சகராகப் பெற்றதற்காகவும் களிகூருவதாகத் தெரிவித்தான். இளைஞன் இந்தியாவிற்குத் திரும்பிப்போய், அங்குக் கிறிஸ்துவைப் பிரசங்கித்துக்கொண்டிருக்கின்றான்; உண்மையான கண்ணோட்டத்திலிருந்து அவரைக்குறித்துப் பிரசங்கித்துக்கொண்டிருக்கின்றான். இப்பொழுதும் நான் அன்புகூர்ந்திடும் எந்தப் பிள்ளையையும் இழக்க நான் தயாராக இல்லை - என்னுடைய எந்தப் பிள்ளையையும் நான் அன்புகூர்ந்திடுவேன்; ஒவ்வொரு பெற்றோரும் தன் பிள்ளையை அன்புகூர்ந்திட வேண்டும் - பிள்ளைப் பெற்றிருக்கும் சிறந்த காரியமாகிய அவனது விசுவாசத்தை இழந்துபோகச் செய்திடும் எதையும் பிள்ளைக்குச் செய்திட நான் விரும்பமாட்டேன். என்னுடைய பிள்ளை உயர்நிலை பள்ளிக்குக்கூடச் செல்வதற்கு நான் சம்மதம் தெரிவிக்கமாட்டேன்; ஏனெனில் கல்லூரிகளில் மாத்திரம் இல்லாமல், சாதாரண உயர்நிலைப் பள்ளிகளிலும்கூட இப்பொழுதுதெல்லாம் வேத விமர்சனங்கள் காணப்படுகின்றது. மனுஷன் குரங்காய் இருந்தான், பின்னர் அவனுக்கு வால் போய்விட்டது என்பது போன்றவைகள் அறிவியல் பாட நூல்கள் என்று அழைக்கப்படும் புத்தகங்களில் காணப்படுகின்றது.

இசைக் கற்கும் விஷயமானது பெற்றோரின் சூழ்நிலையினையும், பிள்ளையினுடைய திறமையையும் சார்ந்துள்ளது என்று நான் எண்ணிடுவேன். பிள்ளைக்கு இசைக்கடுத்த திறமை இல்லையெனில், அப்பிள்ளையை இசைக் கற்க வைக்க முயற்சிப்பது என்பது நேரத்தை வீணடிப்பதாக இருக்கும்; ஆனால் ஒருவேளை பிள்ளைக்கு இசைக்கடுத்த விஷயங்களில் நல்ல திறமைகள் இருக்குமானால் . . . மேலாக இசை விஷயத்தில் அதிகம் கற்றுக்கொடுப்பது தகுதியாய் இருக்குமா அல்லது இல்லையா என்று நீங்கள் சிந்தித்துக்கொண்டிருந்தாலும், திறமையிருக்கும் காரியமானது, பிள்ளைக்கு இசைக்கடுத்த அடிப்படைகளையாகிலும் கற்றுக்கொடுப்பதற்கு ஏற்றக் காரணமாய் இருக்கும். ஆனால் ஒருவேளை பிள்ளைக்கு இசையில் உண்மையாய்த் திறமையிருக்குமானால் மற்றும் நீங்களும் அடிப்படைகளைக் கற்றுக்கொடுத்திருக்கின்றீர்கள் என்றால் . . . பிள்ளையின் திறமையானது மீதியைப் பார்த்துக்கொள்ளும். அநேகம் ஜனங்களின் பிரச்சனை என்னவெனில், அவர்களிடம் தாலந்து/திறமை ஏதும் இருப்பதில்லை; மேலும் திறமையை உற்பத்திச் செய்வது என்பது மிகவும் பயிற்சி

எடுக்கப்பட வேண்டிய காரியமாய் இருக்கும் மற்றும் இப்படிப் பயிற்சி எடுப்பது பெரும்பாலும் அயலார்களுக்கு மிகவும் தொந்தரவாயும் இருக்கும்.

### 5. (Q57:1) பிள்ளைகள் - கல்வி

கேள்வி (1910)-1- இந்த யுகத்தில் தங்கள் பிள்ளைகள் பூமிக்குரிய ஸ்தானங்களை அடையமுடியாது என்பதை பரிசுத்தவான்கள் அறிந்திருக்கிற நிலைமையில், இந்தக் காலங்களில் தங்கள் பிள்ளைகளைப் பூமிக்குரிய ஸ்தானங்களுக்கென்று முயன்று, படிக்கவைக்க வேண்டுமா? இத்தகைய (கல்லூரியிலோ அல்லது பல்கலைக்கழகத்திலோ பெறப்படும்) கல்விக்கு, ஆயிர வருஷயுகத்தில் மதிப்பு ஏதேனும் இருக்குமா?

பதில் - கல்வி என்பது மிகவும் அருமையான காரியம் என்று நான் பதிலளிக்கின்றேன்; மேலும் மேசியாவினுடைய இராஜ்யத்தின்போது சந்தேகத்திற்கிடமின்றி ஒட்டுமொத்த உலகத்திற்கும் அருமையான கல்வி வசதிகள் அருளப்பட்டிருக்கும்; ஆனால் அந்தக் கல்வி ஏற்பாடுகளானது வேறே மேற்பார்வையின்கீழ்க் காணப்படும் மற்றும் இப்பொழுது கொடுக்கப்படுகின்றதான கல்வியிலிருந்து அநேகம் விதங்களில் மிகவும் வேறுபட்டிருக்கும்.

கிறிஸ்தவர்கள் அனைவரும் தங்கள் பிள்ளைகளைக் கல்லூரிகளுக்கு அல்லது பல்கலைக் கழகங்களுக்கு அனுப்ப வேண்டாம் என்றுள்ள எனது அறிவுரையானது வாட்ச் டவர் பத்திரிக்கைமூலம் தெரிவிக்கப்படுகின்றது; ஏனெனில் பிள்ளைகளை அனுப்பி வைப்பார்களானால், அது பெருமளவில் பிள்ளைகளுக்கு அவநம்பிக்கையையும், நாத்திகத்தையும் கொண்டுவந்திடும் மற்றும் அது பிள்ளைகளுக்கு நிச்சயமாய்ப் பாதிப்பை ஏற்படுத்திடும்.

ஐந்து வருஷங்களுக்கு முன்னதாக தன் மகளைப் பெண்கள் கல்லூரிக்கு அனுப்புவது தொடர்பாக என்னிடம் விசாரித்த ஓர் அருமையான கிறிஸ்தவ சகோதரன்குறித்து எனக்கு ஞாபகம் வருகின்றது. மகளோ வேதத்தின்மீதான அவளது விசுவாசத்தினை அநேகமாக இழக்க நேரிடும் என்று நான் எதிர்மறையாய் அறிவுரை வழங்கினேன். தகப்பனோ நல்லதொரு கல்லூரியைத் தெரிவு செய்ய வேண்டும் என்று எண்ணி, சிறந்த ஒன்றைத் தெரிவு செய்தார். அது ஒரு மத ஸ்தாபனமாகவும், சபை பிரிவு சார்ந்த கல்லூரியாகவும் இருந்தது. கொஞ்சம் காலத்திற்குப் பிற்பாடு அவர் என்னிடம் தன் மகள் கல்வி பெற்றுக்கொண்டாள் என்றார்; ஆனால் அந்த மகளோ கிறிஸ்தவமார்க்கமற்றவளாகவும், வேதத்தின்மீதோ அல்லது இயேசு கிறிஸ்துவின்மீதோ விசுவாசமற்றவளாகவும் போய்விட்டாள்; தேவன்மீது கொஞ்சமாகிலும் அவளுக்கு விசுவாசம் இருக்கின்றதா என்பது உண்மையில் சந்தேகமே.

இந்தியாவிலிருந்து இந்த நாட்டிற்கு வந்த ஓர் இளைஞன்குறித்த மற்றுமொரு சம்பவம் வாட்ச் டவர் பத்திரிக்கையில் சமீபத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது. அந்த இளைஞன் முன்னிலை வகிக்கும் பல்கலைக்கழகங்கள் ஒன்றில் பயின்று, நாத்திகனாகவும், அவிசுவாசியாகவும் வெளியே வந்தான். வேதாகமப் பாடங்களினுடைய ஆறு தொகுதிகளையும் வாசித்ததன்மூலம் தன் அவநம்பிக்கையிலிருந்து மீண்டுவந்த அந்த இளைஞன் இப்பொழுது இந்தியாவில் காணப்படுகின்றார் மற்றும் இப்பொழுது வேதத்தை முழுமையாய் விசுவாசிக்கும் விசுவாசியாகக் காணப்படுகின்றார். ஆகையால் உங்கள் பிள்ளைகளுக்குத் தொடக்கப்பள்ளி கல்வியைக் கொடுங்கள் . . . அவர்களை உயர்நிலைப் பள்ளிக்கூடத்திற்குக்கூட எடுத்துச்செல்ல முயற்சிக்காதீர்கள் என்பதே என் அறிவுரையாகும்; ஏனெனில் உயர்நிலை பள்ளிகளில் பிள்ளைகளுக்கு அவநம்பிக்கைகள் அநேகம் கற்றுக்கொடுக்கப்படுகின்றன மற்றும் சீக்கிரத்தில் இப்படியாகத் தொடக்கப்பள்ளிகளிலும்கூடக் கற்றுக்கொடுக்கப்படும்.

## 6. (Q58:1) பிள்ளைகளுக்கான உயிர்த்தெழுதலின் தளம்

கேள்வி (1911)-1- பொறுப்புணர்வு வரும் வயதை அடைவதற்கு முன்னதாக மரித்துப்போகும் அர்ப்பணிக்கப்பட்ட பெற்றோரின் பிள்ளைகளானவர்கள், முற்பிதாக்கள் வரும் அதே தளத்திற்கு வருவார்களா . . . அதாவது உடனேயே பரிபூரணத்திற்கு வருவார்களா?

பதில் - இல்லவே இல்லை. முற்பிதாக்கள் இருக்கப்போகிற தளத்திற்கு முற்பிதாக்கள் வருவதற்கு அநேகம் அனுபவங்கள் வாயிலாகவே கடந்துவருவார்கள். ஆபிரகாமின் விஷயத்தில், அது அவரது விசுவாசத்திற்கான பரீட்சையாக, அவரது நேர்மையினை நிரூபிப்பதற்கான அனுபவமாய் இருந்தது! தீர்க்கதரிசிகளுக்கு அவ்வனுபவங்கள் என்னவாக இருந்தது மற்றும் இதற்காய் எத்தனை பாடுபட்டார்கள் என்று சிந்தித்துப்பாருங்கள்! ஆபிரகாம், ஈசாக், யாக்கோபு மற்றும் அனைத்துத் தீர்க்கதரிசிகள் மற்றும் இராஜ்யத்தின் பூலோக பிரதிநிதிகளுடன், மனித பூரணத்தில் பங்கடைவதற்குப் பாத்திரவான்களாய்க் கருதப்படத்தக்கதாக, உங்கள் பிள்ளைகள் எந்த அனுபவங்களுக்குள்ளும் கடந்து செல்லவில்லை. குழந்தைக் குற்றமற்று (innocent) இருக்கும் காரியம் மிகவும் நலமே, ஆனால் இது பிள்ளைகளுக்குப் பலனாக எந்த ஒரு ஸ்தானத்தையும் கொடுத்திடாது. பிள்ளை ஏதேனும் பலன் அடைய வேண்டுமெனில், அது குணலட்சணத்தினை வளர்த்திடுவது அவசியமாகும். சிறுமந்தைக்குள் வருபவர்கள் குணலட்சணத்தினுடைய வளர்ச்சியின் விளைவாகவே அங்கு வருவார்கள். முற்பிதாக்கள் வகுப்பாரில் இடம்பெறுபவர்கள், குணலட்சணத்தினுடைய வளர்ச்சியின் காரணமாகவே அந்த வகுப்பில் காணப்படுவார்கள். அப்படியானால் விசுவாசிகளினுடைய பிள்ளைகளின் நிலைமை என்ன? விசுவாசிகளினுடைய பிள்ளைகள் விசேஷித்த தெய்வீகப் பராமரிப்பின்கீழ்க் காணப்படுகின்றனர் என்று வேதவாக்கியங்கள் தெளிவாய்ச் சுட்டிக்காட்டுகின்றன என்று நான் பதிலளிக்கின்றேன். அது எப்படியிருக்கும் என்று என்னால் உங்களுக்குச் சொல்லமுடியாது. நான் அதை நம்புகின்றேன், காரணம் தேவ வசனமானது அப்படியாகச் சொல்கின்றது. இதோ அப்போஸ்தலனாகிய பவுலின் வார்த்தைகளை உங்களுக்கு மேற்கோளிடுகின்றேன்: "அவிசுவாசியான மனைவி தன் விசுவாசியான புருஷனால் பரிசுத்தமாக்கப்படுகின்றாள்" - அதாவது திவ்விய மேற்பார்வையின்கீழ்க் காணப்படுவதற்கென்று பிள்ளையின் பெற்றோர் இருவரும் கர்த்தருக்குள் காணப்பட வேண்டும் என்று அவசியமில்லை. பெற்றோரில் ஒருவர் கர்த்தருக்கு அர்ப்பணம்பண்ணியிருந்தால், பிள்ளையானது அந்த அர்ப்பணம்பண்ணின பெற்றோருடையதாகக் கருதப்படுகின்றது மற்றும் தேவ ஆசீர்வாதமும் கடந்துவரும். இதுபோலவே அவிசுவாசியான கணவனும், விசுவாசியான மனைவியினால் பரிசுத்தமாக்கப்படுகின்றான்; இல்லையேல் உங்கள் பிள்ளைகள் அசுத்தமாய் இருப்பார்கள். ஆனால் அதற்கென்று பிள்ளைகளைக் கர்த்தர் பரலோகத்திற்கு எடுத்துச்செல்வார் என்பதாகாது. பிள்ளைகள் வளர்கையில், அவர்கள் சிறுமந்தைக்குள் அடங்கத்தக்கதாகக் கர்த்தர் பார்த்துக்கொள்வார் என்றாகாது. பிள்ளைகளுடைய ஜீவியத்தின் காரியங்களானது, அவர்களுடைய நன்மைக்கு ஏதுவாக நடத்தப்படும் எனும் விதத்தில் தயவு பாராட்டப்படுவார்கள், ஆனாலும் பிள்ளையினுடைய சித்தமானது குறுக்கிடப்படுகிறதில்லை. தேவன் தம்முடைய எந்த ஒரு சிருஷ்டிகளினுடைய சித்தங்களையும் ஒருபோதும் வஞ்சிப்பதில்லை/ அத்துமீறுதல்பண்ணுகிறதில்லை. அந்தப் பிள்ளை சித்தம் இல்லாமல் இருப்பதுவரையிலும், பகுத்தறிவில் முதிர்ச்சியடையாமல் இருப்பதுவரையிலும் திவ்விய மேற்பார்வையின்கீழ்க் காணப்படும். இதையே நான் - யாதொரு ஜாதியாரும் தோன்றினதுமுதல் உண்டாயிராத உபத்திரவ காலம் வருவதை வேதாகமம் நமக்குக் கூறுவதைக்குறித்துக் கொஞ்சம் பயத்துடன் காணப்படும் பெற்றோர்களுக்குச் சொல்ல விரும்புகின்றேன். நீங்கள் ஒருவேளை உங்கள் பிள்ளைகளோடு காணப்பட்டால் உங்களால் அவர்களைப் பராமரித்துக்கொள்ளுகிறதைக் காட்டிலும் கர்த்தர் அவர்களைப் பராமரிக்க முடிகிறவராக இருக்கின்றார் என்ற முழு நம்பிக்கையுடன் அந்தப் பிள்ளைகளைக் கர்த்தரிடத்தில் ஒப்படைத்துவிடுங்கள்.

**7. (Q59:1) அர்ப்பணம்பண்ணியுள்ள பெற்றோர்களின் பிள்ளைகள் ஆவிக்குரிய சுபாவம் அடைதல் என்பது தொடர்பாக**

கேள்வி (1911)-1- அர்ப்பணம்பண்ணியுள்ளதான ஜனங்களின் பிள்ளைகள் இறுதியில் ஆவிக்குரிய சுபாவத்தினை அடைவார்கள் என்பது உங்கள் கருத்தாக இருக்கின்றதா?

பதில் - இல்லை; அவிசுவாசியான கணவன் விசுவாசியான மனைவியினால் பரிசுத்தமாக்கப் படுகின்றான், அவிசுவாசியான மனைவி, விசுவாசியான கணவனால் பரிசுத்தமாக்கப்படுகின்றாள், இல்லையேல் அவர்கள் பிள்ளைகள் அசுத்தமாய் இருப்பார்கள்; ஆனால் அவர்கள் இப்பொழுது சுத்தமாயிருக்கின்றார்கள் என்று அப்போஸ்தலன் பேசுகையில், அவர் ஆவிக்குரிய சுபாவத்தைக் குறித்துப் பேசிடாமல், மாறாக பெற்றோரினால் தன் பிள்ளைக்குக் கொடுக்கமுடிகிற அந்தக் காரியத்தைக்குறித்து மாத்திரமே குறிப்பிடுகின்றார் - அதாவது பிள்ளையானவன் சிந்திக்கும் பருவமடைந்து, தானாய்ச் செயல்படும் வயதை அடைவதுவரையிலும், தற்காலிகமாய் நீதிமானாக்கப்பட்டுத் தேவனுடன் பெற்றிருக்கும் உறவுகுறித்து மாத்திரமே குறிப்பிடுகின்றார். ஆகையால் அர்ப்பணம்பண்ணாதவர்களின் பிள்ளைகள் பெற்றிராத விசேஷித்த மேற்பார்வையினையும், திவ்விய பராமரிப்பினையும், விசுவாசிகளான பெற்றோர்களின் பிள்ளைகள் அனைவரும் பெற்றிருப்பார்கள். ஆனால் இது பிள்ளைகள் ஆவியினால் ஜெநிப்பிக்கப்படுவதாகாது. தேவனால் நியமிக்கப்பட்ட படிகள்மூலமே அல்லாமல், மற்றப்படி ஒருவராலும் ஆவியினால் ஜெநிப்பித்தலை அடையமுடியாது; மேலும் அந்தப் படிகள் பலியின் படிகளாக, உங்கள் சரீரங்களைப் பரிசுத்தமும், தேவனுக்குப் பிரியமுமான ஜீவபலிகளாக ஏறெடுப்பதாகும். அனுக்கிரக காலங்கள் முடிவடைவதற்கு முன்னதாகத் தங்களையே இப்படியாக இயேசுவின் நாமத்தில் அல்லது புண்ணியத்தில் பலியாகச் சமர்பிக்கும் பிள்ளைகள் அனைவரும் - ஒருவேளை அவர்கள் தங்களையே இப்படி அர்ப்பணிப்பதற்குப் போதுமான வயதுள்ளவர்களாய் இருப்பார்களானால், அவர்கள் ஆவியினால் ஜெநிப்பிக்கப்படுவார்கள். தான் என்ன செய்கின்றான் என்பதை முழுமையாய் அறிந்துகொள்ள முடிவதற்குரிய போதுமான வயதில் பிள்ளைக் காணப்படுவானானால், அப்பிள்ளையைத் தேவன் மறுப்பார் என்ற எண்ணம் எங்களுக்கில்லை.

**8. (Q59:2) பிள்ளைகள் - முற்பிதாக்கள் மற்றும் உருவெடுத்துவரும் பிசாசுகள்**

கேள்வி (1911)-2- முற்பிதாக்கள் உயிர்த்தெழுந்துவிட்டார்கள் என்றும், அவர்கள் உருவெடுத்துவரும் பிசாசுகள் அல்ல என்றும் எப்போது, நம் பிள்ளைகள் நிச்சயம் அடைவார்கள்?

பதில் - இக்கேள்விக்கு என்னால் பதிலளிக்கமுடியாது என்று நான் எண்ணுகின்றேன். இது சம்பந்தமாக நான் சிலவற்றைச் சொல்லுவேன், ஆனாலும் அது இக்கேள்விக்கான துல்லியமான பதிலாய் இராது. என்னுடைய புரிந்துகொள்ளுதலின்படி இங்குக் குறிப்பிடப்பட்டிருக்கும் வகுப்பாராகிய - பூரண மனுஷர்களென உயிர்த்தெழும்பிடும் முற்பிதாக்கள் வாயிலான திவ்விய வல்லமையின் வெளிப்பாடானது, மிகவும் முழுமையானதாக இருக்கும் . . . திவ்விய வல்லமையின் மிகவும் அற்புதகரமான வெளிப்படுத்துதலாக இருக்கும் என்பதினால், இது கர்த்தருடன் இசைவிற்குள் காணப்படும் அனைவருக்கும் போதுமான நிரூபணத்தினைக் கொடுத்திடும்; குறிப்பாக யூதர்கள் அவர்களை அடையாளம் கண்டுகொள்வார்கள். இப்படியே இக்கேள்விக்கு நான் பதிலளிக்கின்றேன்.

**9. (Q459:2) விசுவாசிகளுக்கு - திருமணத்தின் ஏற்புடைமை**

கேள்வி (1909)-2- மில்லினியல் டாண் பத்திரிக்கையில் விசுவாசிகளுக்கு திருமண உறவின் ஏற்புடைமை என்பது பற்றின உங்களது கண்ணோட்டம் என்ன?

பதில் - அருமையான நண்பர்களே இதில் நாம் எந்த ஒரு நிலைப்பாட்டினையும்

எடுத்துக்கொள்கிறதில்லை. இக்காரியமானது மற்றவர்கள் முடிவெடுக்கும் காரியமாய் இராமல், மாறாக தனிப்பட்ட நபர்கள் முடிவெடுக்க வேண்டிய காரியமாயிருக்கின்றது. நீங்கள் திருமணம்பண்ணிட வேண்டும் என்றோ, நீங்கள் திருமணம்பண்ணிக் கொள்ளக்கூடாது என்றோ சொல்லிடுவதற்கான உரிமை எனக்கில்லை; அது உங்கள் காரியமாகும்; அது என் காரியமுமில்லை, வேறு யாருடைய காரியமுமல்ல. மில்லினியல் டாண் பத்திரிக்கையானது அப்போஸ்தலனாகிய பவுலினால் 18-நூற்றாண்டுகளுக்கு முன்னதாகச் சொல்லப்பட்டவைகளை மாத்திரமே சொல்லுகின்றது: அதாவது "விவாகம்பண்ணுகிறவன் நன்மை செய்கின்றான்; விவாகம்பண்ணாதவனும் அதிக நன்மை செய்கிறான்" என்று கூறுகின்றது. ஒருவேளை இப்பொழுது இரா முழுக்க நான் பேசிட்டாலும், அப்போஸ்தலன் கூறியவைகளோடுகூடச் சேர்த்துக் கூறிடுவதற்கு நான் எண்ணுகிறதில்லை; அப்படிச் செய்வதற்கு எனக்கு உரிமை இல்லை அல்லது அவர் பேசினதை மாற்றிக்கூறிட எனக்கு விருப்பமும் இல்லை. மற்றவர்களுடைய இந்த விஷயத்தில் உங்களுக்கோ, எனக்கோ தலையிடுவதற்கு உரிமையும் இல்லை. ஒருவேளை அவர்கள் நம்முடைய சிறுபிள்ளைகளாக இருப்பார்களானால், அப்போது அறிவுரை வழங்கிடுவதற்கான உரிமையினை நாம் பெற்றிருப்போம். ஒருவேளை அவர்கள் சிறுபிள்ளைகளாக இருப்பார்களானால், அவர்கள் வளர்வதுவரையிலும் அவர்களுக்கு நாம் வழிகாட்டிடுவோம் என்று அவர்களிடம் சொல்லிடுவதற்கான உரிமையினை நாம் பெற்றிருப்போம்; ஆனால் அவர்கள் வயது வந்தவர்களாகுகையில், பெற்றோர்கள் அறிவுரைக்கூறி அவர்களைக் குறுக்கிட்டுக்கொண்டிருக்கக் கூடாது. இந்த விஷயத்தில் அநாவசியமாய்த் தலையிடுவதற்கு முயலும் யார் ஒருவனும், தனக்குத்தானே, பிரச்சனையை மாத்திரம் கொண்டுவருகின்றவனாய் இருப்பான். தேவன் விட்டுவிடுவதுபோன்று, நாமும் காரியத்தினை அவர்களிடத்திலேயே விட்டுவிடுவோமாக.

**10. (Q541:1) ஜெபம் - நம்முடைய ஜெபங்கள் இல்லாமல் மற்றவர்களுக்கு ஆசீர்வாதங்கள் இல்லை என்பது தொடர்பாக**

கேள்வி (1913)-1- மற்றவர்களுடைய ஜெபங்கள்மூலமே ஒழிய, மற்றப்படி நம்மால் பெற்றுக்கொள்ள முடியாது என்றுள்ள ஆசீர்வாதங்கள் காணப்படுகின்றன என்று வேதம் போதிக்கின்றதா?

பதில் - கர்த்தர் தம்மிடத்தில் அநேகம் ஆசீர்வாதங்ளை அருளுவதற்கென்று வைத்திருக்கின்றார்; மேலும் ஜெபத்திற்கு விடையாகவே சில ஆசீர்வாதங்களை அருளிடுவதற்கு அவர் சித்தமாயிருக்கின்றார் என்று சில வேதவாக்கியங்களிலிருந்து நாம் புரிந்துகொள்ளலாம். ஆகையால் அப்போஸ்தலன் அவர் நாட்களில் காணப்பட்ட சிலரிடம் "சகோதரரே, எங்களுக்காக வேண்டிக்கொள்ளுங்கள்" என்று கூறினார். அவர் தனக்காக தான் ஜெபம்பண்ணிக் கொள்ளமுடியவில்லை என்ற அர்த்தத்தில் சொல்லவில்லை; மற்ற அப்போஸ்தலர்களினால் தங்களுக்குத் தாங்களே ஜெபம்பண்ணிக்கொள்ள முடியவில்லை என்ற அர்த்தத்தில் அவர் சொல்லவில்லை; அவர்கள் ஒருவருக்கொருவர் ஜெபம்பண்ணிக்கொள்ள முடியவில்லை என்ற அர்த்தத்தில் சொல்லவில்லை; பிதாவுடனான ஐக்கியத்தினை இழந்துவிட்டார் மற்றும் பிதா அவரின் ஜெபத்தினைக் கேட்பதில்லை என்ற அர்த்தத்தில் சொல்லவில்லை; மாறாக கிறிஸ்துவின் சுவிசேஷத்தினைப் பரப்பிடுவதற்கான வாய்ப்புக் கிடைக்கத்தக்கதாக எங்களுக்கு ஒரு கதவு திறக்கப்படும்படியாகச் சகோதரரே ஜெபம்பண்ணிடுங்கள் என்றே அப்போஸ்தலன் கூறினார். அப்போஸ்தலன் வெறும் மேல்பூச்சாக (formality) பேசினார் என்றும், வெறும் சம்பிரதாயமாக எங்களுக்காக ஜெபம்பண்ணுங்கள், எங்களுக்காக ஜெபம்பண்ணுங்கள் என்று மாத்திரம் கூறினார் என்றும் நீங்கள் எண்ணுகின்றீர்களா? இல்லை, அப்போஸ்தலன் சம்பிரதாயமாக மாத்திரம் இப்படிக் கூறினார் என்று எடுத்துக்கொள்வதற்கு நாங்கள் விரும்பவில்லை; மாறாக ஒரு குறிப்பிட்ட பாடத்தினை

அவர் போதித்துக்கொண்டிருக்கின்றார் என்று, அதாவது அப்போஸ்தலர்களை ஜெபத்தில் நினைவுகூருவதன்மூலம் ஒரு குறிப்பிட்ட ஆசீர்வாதம் வருமெனப் போதித்துக்கொண்டிருக்கின்றார் என்று எடுத்துக்கொள்ள நாங்கள் விரும்புகின்றோம். இரக்கத்தில் ஐசுவரியமுள்ளவராகவும், அருளிடுவதற்கு அநேகம் ஆசீர்வாதங்களை உடையவராகவும் காணப்படும் தேவன், தம் ஜனங்களை ஜெபிப்பதற்கு ஊக்கமூட்டிடுவதில் பிரியமாயிருக்கின்றார் - நம்மை ஜெபிக்கப்பண்ணுவதில் பிரியமாயிருக்கின்றார் என்று நான் எண்ணுகின்றேன். உங்களை ஜெபிக்கப்பண்ணுவதில் தேவன் ஏன் பிரியமாயிருக்கின்றார்? சிறியவர்களாகிய நீங்கள் அல்லது சிறியவனாகிய நான் முழங்கால்படியிட்டு ஜெபிக்கிறோமா அல்லது இல்லை என்று தேவன் அங்கு அமர்ந்திருந்து பார்த்துக்கொண்டிருக்கின்றாரா? ஓ! இல்லை, இது கருத்தல்ல! ஜெபத்தின் விஷயத்தில் ஒருவேளை நீங்கள் விசுவாசம் வைத்தால், அது உங்களுக்கு மிகுந்த நன்மைபயக்கும் என்றும், ஜெபத்தில் நான் ஒருவேளை விசுவாசம் வைத்தால், அது எனக்கு மிகுந்த நன்மைபயக்கும் என்றும் தேவன் காண்கின்றார். ஆகையால் அவர் நமக்குச் செய்ய விரும்புபவைகளைக்குறித்து நீங்களும், நானும் அவரிடம் கேட்பதன்மூலம் நீங்களும், நானும் அவரால் ஆசீர்வதிக்கப்படும் வழிவகையினை ஒரு பாகமாக ஏற்படுத்தியிருக்கின்றார். இப்படியாக ஜெபம்பண்ணிடுவதற்கு நம்மை ஊக்குவிக்கின்றார். உதாரணத்திற்குப் பரிசுத்த பேதுரு சிறையில் காணப்பட்டு, கர்த்தருடைய தூதனானவர் அவரிடத்தில் வந்து, அவரை விழித்தெழப்பண்ணினபோது, பேதுரு ஜெபம்பண்ணிக்கொண்டிருக்கவில்லை. தேவதூதன் பேதுருவின் கரங்களினின்று சங்கிலிகளை உடையப்பண்ணினார் மற்றும் கதவுகள் பேதுரு முன் திறக்கப்பட்டு, காவல்காரர்கள் தூங்கிக்கொண்டிருக்கையில், அவரை வெளியே கொண்டுவந்து, அவர் வழியே சந்தோஷமாய்ப் போகும்படிக்குத் தேவதூதனானவர் அனுப்பிவைத்தார்; கனவா நினைவா என்று உணர்ந்துகொள்ள முடியாமல் காணப்பட்ட பேதுரு தெருவின் வழியே நடந்துபோனார்; அவருக்கு அந்தத் தெருவை நன்றாய்த் தெரியும்; மேலும் கூட்டம் நடைபெறுகிற இடத்தின் கதவண்டைக்கு வந்தார்; அது நள்ளிரவாய் இருந்தது, ஆனாலும் கூட்டம் நடைபெற்றுக்கொண்டிருந்தது; அவர்கள் பேதுருவுக்காய் ஜெபம்பண்ணிக்கொண்டிருந்து, "ஓ! ஆண்டவரே! அப்போஸ்தலனாகிய யாக்கோபும் கொல்லப்பட்டுவிட்டார்; இப்போதும் அதிகாரிகள் எங்கள் அன்புக்குரிய சகோதரனாகிய பேதுருவுக்கும் அச்சுறுத்தல் கொடுத்துக்கொண்டிருக்கின்றனர். அப்போஸ்தலர்கள் அனைவரும் எங்களிடமிருந்து எடுக்கப்பட்டு, கொல்லப்பட்டார்களானால், நாங்கள் என்ன செய்வோம்" என்று கூறிக்கொண்டிருந்தனர். அவர்கள் முழு இரவு ஜெபக்கூட்டத்தினைக் கொண்டிருந்தார்கள். பரிசுத்த பேதுரு கதவண்டைக்கு வந்து, தட்டினபோது, திறக்கும்படிக்கு வந்த சிறுபெண் பரிசுத்த பேதுருவைக் கண்டு, தான் ஆவியைப் பார்த்தாளோ என்று ஐயப்பட்டாள். அவள் நிச்சயமாகவே பேய்களைக்குறித்துக் கேள்விப்பட்டிருக்கின்றாள்; மேலும் அவள் பரிசுத்த பேதுரு கதவண்டையில் நிற்கின்றார் என்பதைச் சொல்லும்படிக்கு ஓடிச்சென்றாள். இது எப்படியாகும்! பேதுரு சிறையில் அல்லவா இருக்கின்றார்! என்று அவர்கள் சொல்லியிருக்க வேண்டும். அவர்களுடைய ஜெபங்களுக்குப் பதிலளிக்கப்பட்டுள்ளது. அவர்களின் ஜெபத்திற்கு விடையாகத் தேவன் அவர்களுக்கு ஒரு மாபெரும் ஆசீர்வாதத்தினைக் கொடுத்திருக்கின்றார் என்று உங்களால் உணரமுடிகின்றதா? ஒருவேளை அவர்கள் ஜெபிக்கவில்லை என்றால், இவ்வளவான ஆசீர்வாதத்தினை அடைந்திருப்பார்களா என்று யோசிக்கின்றீர்களா? (அவர்கள் ஜெபம்பண்ணவில்லை என்றாலும்) கர்த்தர் பரிசுத்த பேதுருவை விடுதலைப்பண்ணியிருந்திருப்பார், ஆனாலும் ஜெபத்திற்கான விடையாக இது சம்பவித்திருக்கும் காரியம் என்பது, அந்த அருமையான சீஷர்களுக்கு அத்தகையதொரு ஆசீர்வாதமாய் இருந்திருக்கும், அவர்களது விசுவாசத்திற்கு அத்தகையதொரு பலப்படுத்துதலாக இருந்திருக்கும் மற்றும் அத்தகையதொரு சந்தோஷமாகவும், ஆசீர்வாதமாகவும் அவர்களுக்கு இருந்திருக்கும். ஆகையால்

கர்த்தருடைய ஒழுங்குகளுக்கு இசைவாகக் காணப்பட்டு, பல்வேறு இடங்களிலுள்ள கர்த்தருடைய வேலைகளைக்குறித்து ஜெபித்து, நினைவுகூருகிறவன், தன் சொந்த இருதயத்தில் ஓர் ஆசீர்வாதத்தினைப் பெற்றுக்கொள்கின்றவனாய் இருப்பான் மற்றும் இது சில தாக்கத்தினைக் கொண்டிருக்கும் என்று கர்த்தர் சுட்டிக்காட்டுகின்றார். என்னால் இதனுடைய கோட்பாட்டினைப் புரிந்துகொள்ள முடியவில்லை மற்றும் புரிந்துகொண்டதாகவும் நான் காண்பித்துக்கொள்கிறதில்லை; ஆனாலும் உங்களுடைய, என்னுடைய ஜெபங்களுக்காகத் தேவன் தம் திட்டத்தினை மாற்றுவதில் பிரியங்கொள்ளார் என்பது நமக்குப் புரியவைக்கப்பட்டிருக்கின்றது -- இல்லை, இல்லை, நமக்குப் பொருத்தமாய் இருக்கத்தக்கதாகத் தேவன் அண்டசராசரத்தை மாற்றப்போவதில்லை; அவர் என்ன செய்ய வேண்டும் என்று நம்முடைய ஜெபங்களில் அவருக்குக் கூறுமளவுக்கு நாம் ஞானவான்களல்ல; மாறாக நம் ஜெபங்களைக் கேட்டு, நமக்கு ஆசீர்வாதங்கள் வழங்குமளவுக்கு அவர் ஞானமுள்ளவராய் இருக்கின்றார். ஜெபம்பண்ணிடுவதில் நாம் கொண்டிருக்கும் உண்மை, விசுவாசம் முதலியவைகளின் அளவிற்கேற்ப அவர் காரியங்களை ஒழுங்கு பண்ணியுள்ளார். ஜெபத்தின் வல்லமைக்குறித்து அறிந்திடாத கர்த்தருடைய ஜனங்கள், பெலவீனமான கிறிஸ்தவர்கள் ஆவார்கள். ஆகையால் கர்த்தருடைய ஜனங்கள் எப்போதும் ஜெபம்பண்ணும்படிக்கும் ஜெப சிந்தையில், ஜெப மனநிலையில் எல்லா வேளைகளிலும் காணப்படுவதற்கும், தேவனுக்கு முழுக்க நன்றி ஏறெடுத்துக் காணப்படுவதற்கும் வேதவாக்கியங்கள் அவர்களை ஊக்குவிக்கின்றதாய் இருக்கின்றது.

இக்கருத்துச் சரியானது என்று நான் எண்ணுகையில், தினந்தோறும் ஜெபம் ஏறெடுக்கப்படாத எந்த வீடும், சரியான இல்லம் அல்ல - இப்படியாக உங்கள் இல்லமோ, என் இல்லமோ காணப்படக்கூடாது என்னும் கருத்தைத் தெரிவிப்பதற்கும் இவ்வாய்ப்பினை நான் இங்குப் பயன்படுத்திக்கொள்கின்றேன். எங்கு நீங்கள் ஜீவித்தாலும், எங்கு நான் ஜீவித்தாலும், எங்கெல்லாம் கர்த்தருடைய அர்ப்பணிக்கப்பட்ட ஜனங்களிலுள்ள யாரொருவரும் ஜீவித்தாலும், அங்குக் குடும்ப ஜெபம் காணப்பட வேண்டும் - எப்படித் தினந்தோறும் காலை உணவு பரிமாறப்படுகின்றதோ, அதுபோலத் தினந்தோறும் குடும்பமாகக் குடும்ப ஜெபம் ஏறெடுக்கப்பட வேண்டும். ஆனால் அதற்கென்று நீங்கள் உங்களது வளர்ந்த பிள்ளைகள், அவர்கள் மதித்து உணர்ந்திடாத தொழுதுகொள்ளுதலில் பங்கெடுக்கும்படிக்கு அவர்களை நீங்கள் வற்புறுத்த வேண்டும் என்றாகாது; அல்லது ஒருவேளை உங்கள் கணவன் அல்லது மனைவி இதில் விருப்பமற்றும், இசைவில்லாமலும் காணப்படுகையில், குடும்ப ஜெபத்தைப் பெற்றுக்கொள்வதற்காக வேண்டி நீங்கள் வற்புறுத்திச் சண்டைச் சச்சரவை எழுப்ப வேண்டும் என்றும் ஆகாது; ஏனெனில் இம்மாதிரியான நிலைகளில் தேவன் பிரியங்கொள்வதில்லை. மாறாக தேவனுடைய பிள்ளையானவன் எப்படியாவது ஜெபம்பண்ணிட வேண்டும் என்று தன் இருதயமானது எப்போதும் விரும்புமளவுக்கு ஜெப சிந்தையில் காணப்பட வேண்டும்; மேலும் ஏற்றவேளையில் மனைவியானவள் ஜெபத்தில் இணைந்துகொள்ள விரும்புகின்றாளா என்று மனைவியிடம் அமைதியாய்க் கேட்டுக்கொள்ளப்படுவதாக. கூடுமானமட்டும் நுட்பமான விதத்தில் கேட்கப்படுவதாக. ஒருவேளை கணவன் இசைவில்லாதவராக இருப்பாரானால், மனைவி அவரை அணுகி, "கணவனே, நம்முடைய இல்லத்தில் நாம் குடும்ப ஜெபத்தைப் பெற்றிருந்து, நம்முடைய சிருஷ்டிகரையும், நம்முடைய இரட்சகரையும் கனப்படுத்தினால் அது மிகவும் அருமையாய் இருக்கும் என்று எண்ணுகின்றீர்களா?" என்று கேட்கலாம். அநேகம் உலகப்பிரகாரமான கணவன்மார்கள்: "ஆம்! அது நல்லது என்று எண்ணுகின்றேன்" என்று கூறிடுவார். மேலும் ஒருவேளை கிறிஸ்தவ மனைவியானவள் இப்படியாக யோசனையை முன்வைக்கவில்லையெனில், உலகப்பிரகாரமான கணவனோ: "என் மனைவியைப் போன்று நான் ஒரு கிறிஸ்தவனாக என்னை அறிக்கைப் பண்ணிக்கொள்வேனாகில், என் இல்லத்தில் குடும்ப ஜெபத்தைப் பெற்றுக்கொள்ள நான்

விரும்பியிருப்பேன் என்று நான் எண்ணுகின்றேன்'' என்று அநேகமாகச் சொல்லிட வாய்ப்புண்டு. இதுபோலவே ஒருவேளை கிறிஸ்தவ கணவன் இப்படியான யோசனையை முன்வைக்கவில்லையெனில், உலகப்பிரகாரமான மனைவியானவளோ: ''ஒருவேளை நான் என் கணவனுடைய இடத்தில் காணப்பட்டு, கிறிஸ்தவன் என்று என்னைக்குறித்து அறிக்கைப்பண்ணுகிறவளாய் இருந்திருப்பேனாகில், இல்லத்தில் குடும்ப ஜெபத்தினைப் பெற்றிருக்க நான் விரும்பியிருந்திருப்பேன்'' என்று சொல்வதற்கு வாய்ப்புண்டு. ஆனாலும் உலகப்பிரகாரமான மனைவி இப்படி வெளிப்படையாய்ச் சொல்ல விரும்பமாட்டாள்; உலகப்பிரகாரமான கணவனும் இப்படி வெளிப்படையாகச் சொல்ல விரும்பமாட்டார். ஆகையால் ஜெபத்தின் மதிப்பை உணர்ந்திருப்பவரே முதல் முயற்சியை மேற்கொள்ள வேண்டும்; அதுவும் அமைதியான விதத்தில் மேற்கொள்ள வேண்டும்; சாதகமற்றத் தருணத்தில் இல்லாமல், நல்ல வாய்ப்பாய்க் காணப்படும் தருணங்களில் மேற்கொள்ள வேண்டும் - வேறு ஏதாகிலும் காரியங்கள் விறுவிறுப்பாய்ப் போய்க்கொண்டிருக்கும்போது மற்றும் கருத்தில் எடுத்துக்கொள்வதற்கு நேரம் இல்லாதளவுக்கு வேறு ஏதோ காரியங்கள் போய்க்கொண்டிருக்கும் போதல்ல, மாறாக கருத்தில் எடுத்துக்கொள்வதற்கு நேரம் இருக்கும்போது இப்படி முயற்சி மேற்கொள்ளப்பட வேண்டும். கணவனிடத்தில் அல்லது மனைவியினிடத்தில் அல்லது பிள்ளைகளிடத்தில் எப்படி நாம் காரியத்தினை முன்வைப்பதற்கென்றுள்ள ஞானத்தினை நாடிடுவோமாக. இதை ஞானமான விதத்தில் செய்திடுங்கள் - சர்ப்பத்தைப்போன்று ஞானமுள்ளவர்களாய் நடந்துகொள்ளுங்கள். ஒவ்வொரு தருணத்திலும் ஞானத்தினைப் பயன்படுத்துங்கள் மற்றும் உங்கள் ஜீவியம் அல்லது உங்களது குடும்பம் தொடர்புடைய விஷயத்தில் எப்படி எந்த ஒரு முக்கியமான முயற்சியை எடுப்பதுகுறித்தும் தேவனிடம் ஜெபம்பண்ணுங்கள். நீங்கள் உங்கள் கணவனிடம் அல்லது மனைவியிடம் ஒத்துழைப்பிற்காகக் கேட்பதற்கு முன்பு, உங்கள் இல்லத்தில் குடும்ப ஜெபத்தைப் பெற்றுக்கொள்வதைக்குறித்துத் தேவனிடம் கேட்டுக்கொள்ளுங்கள். பின்னர் ஒருவேளை உங்கள் மனைவி மறுப்புத் தெரிவித்து, ''இல்லை, இந்த இல்லத்தில் கர்த்தருக்கான எந்த ஜெபத்தையும் பெற்றிருக்க நான் விரும்பவில்லை'' என்று சொல்வாள் என வைத்துக்கொள்ளுங்கள்; இப்படியாக அநேகர் கூறிடமாட்டார்கள். மேலும் காரியத்தினை முன்வைத்திடுவதற்கு நல்லதொரு வழிமுறை இருக்கின்றது. நீங்கள்: ''மனைவியே, நான் பார்க்கிற விதமாய் நீ காரியங்களைப் பார்க்கவில்லை என்பதை நான் அறிவேன்; ஆனால் என்னைப் போன்று நீயும் மாபெரும் சிருஷ்டிகரில் நம்பிக்கை வைத்திருக்கின்றாய்; மேலும் சிருஷ்டிகரைத் தொழுதுகொள்வது என்பது ஒவ்வொரு சிருஷ்டிக்கும் தகுதியான காரியமாகும்; மேலும் நாம் பிள்ளைகளைப் பெற்றிருக்க, தேவனைத் தொழுதுகொள்வதற்கான முன்மாதிரியினை அவர்கள் முன்னிலையில் வைப்பதும், நம் இல்லத்தை முன்மாதிரியான இல்லமாகப் பெற்றிருப்பதும் நலமாயிருக்குமென நான் யோசனை தெரிவிக்கின்றேன். மனைவியே இதுகுறித்து நீ என்ன நினைக்கின்றாய்? நாம் ஆரம்பிக்கலாமா? ஒவ்வொரு காலை வேளையிலும் குறைந்தபட்சம் மூன்று நிமிஷமாகிலும் நாம் தேவனை அணுகிடலாமே அல்லது கூடுமானால் ஐந்து நிமிஷங்களோ அல்லது இதற்கும் அதிகமான நிமிஷங்களோ அல்லது காலவரையறையை நிர்ணயிக்காமல் தேவனை அணுகிடலாமே; ஒருவேளை ஜெபம் ஏறெடுக்கப்படுவதற்கு முன்னதாகத் துதி கீர்த்தனை ஒன்றைக்கூடப் பாடிடலாமே'' என்று கேட்கலாம். ஆனால் இதற்கு ஏதேனும் மறுப்புத் தெரிவிக்கப்படுமானால் . . . ''வெறும் மூன்று நிமிஷங்கள் ஜெபம்பண்ணப்படுவதற்கு மறுப்புத் தெரிவிப்பாயா? மூன்று நிமிஷ ஜெபத்திற்கு நீ ஒத்துழைப்பாயா?'' என்று நீங்கள் கேட்டுக்கொள்ளலாம். நானாக இருந்தால் ''மறுப்புத் தெரிவிப்பாயா?'' என்று கேட்கமாட்டேன். இதற்கு மறுப்புத் தெரிவிக்கப்படாது என்று நான் அனுமானிக்கின்றேன். நானாக இருந்தால்: ''இந்த இல்லத்தில் கர்த்தருக்காய்ச் சிறு குடும்ப ஜெபத்தை நாம் ஏற்படுத்துவோமானால், ஜெபத்தில் இணைந்துகொள்ளும் விதத்தில் ஒத்துழைப்பதற்கு விரும்புவாயா? இது நம் இருவருக்கும்

மற்றும் பிள்ளைகளுக்கும் ஆசீர்வாதமாய் இருக்குமென்று நம்புகின்றேன். இப்படியாக நம் இருதயங்களானது நன்கு தேவனிடத்திற்கு நெருங்கிடும் மற்றும் நம் குடும்பத்தின்மீது அவர் ஆசீர்வாதத்தை அதிகமாய்ப் பெற்றுக்கொள்வோமென்று நம்புகின்றேன்" என்று கூறிடுவேன். இது நன்கு வேலைசெய்யும் என்று நான் எண்ணுகின்றேன். ஓ! என் கணவனிடத்தில் அல்லது என் மனைவியினிடத்தில் கேட்பதில் பிரயோஜனமேயில்லை, அவர்கள் ஜெபத்திற்கு எதிராய்க் கசப்புக்கொண்டிருக்கின்றனர் என்று சிலர் எண்ணிடுவீர்கள் என்பதை நான் அறிவேன். அநேகமாகக் காரியத்தை முன்வைப்பதில் ஞானமாய் நடந்துகொள்ளாததே சில சமயங்களில் கசப்பு அநேகமாக ஏற்படுவதற்குக் காரணமாகும். வெகு சில ஜனங்கள்தான் உண்மையில் தேவனுக்கு எதிராய்க் கசப்புக்கொண்டிருப்பார்கள். பொதுவாக ஜனங்கள் சிருஷ்டிகரை மதிப்பார்கள் மற்றும் அதிலும் விசேஷமாக நாம் பரிவாகவும், தயவாகவும், அன்பாகவும் இருப்பதற்கு நாடுவதற்கு ஏற்பவும், நாம் அவர்களுடைய நலனுக்கடுத்த காரியங்களிலும், அவர்களின் உரிமைக்கடுத்த காரியங்களிலும் நாம் அக்கறையாய்க் காணப்படுவதையும், குடும்பத்தை நாம் நீதியாய்க் கையாளுவதையும் அவர்கள் காண்பதற்கு ஏற்பவும், அவர்கள் நம் மதத்தை மதிக்கிறவர்களாகவும், நம் தேவனை மதிக்கிறவர்களாகவும், நம் தொழுதுகொள்ளுதலை மதிக்கிறவர்களாகவும் காணப்படுவார்கள். ஆனால் அவர்கள் ஒருவேளை மறுப்புத் தெரிவித்து . . . "இல்லை இதற்கும் எனக்கும் சம்பந்தமில்லை" என்பார்களானால், நீங்களோ: "அப்படியானால் இத்தகைய ஏற்பாட்டினை நான் எனக்காகப் பெற்றிருப்பதற்கு மறுப்புத் தெரிவிக்கமாட்டீர்கள் என்று எண்ணுகின்றேன்; நான் பிள்ளைகளிடத்திலும் கேட்டுக்கொள்கின்றேன். முதலாவது உங்களிடத்தில் தெரிவித்துக்கொள்ளலாம் என்று எண்ணினேன். ஒருவேளை பிற்பாடு இதைக்குறித்து நீங்கள் சிந்தித்து, எங்களோடுகூட ஜெபத்தில் இணைந்துகொள்வீர்களானால், அது மிகவும் அருமையாய் இருக்கும்" என்று சொல்லிடலாம். பின்னர் நீங்கள் காரியங்களை நடப்பியுங்கள். தடை இருப்பதுபோல் அல்லது தடை ஏற்படுவதுபோல் எண்ணாதிருங்கள். நாம் நமது மனசாட்சியையும், நமது உரிமைகளையும் செயல்படுத்தி நடக்க வேண்டும் என்று பகுத்தறிவுள்ள ஜனங்கள் அனைவரும் விரும்பிடுவார்கள். ஆனால் அதற்கென்று நீங்கள் காலையில் எழுந்து, ஜெபம்பண்ணிக் கொண்டிருக்கையில், உங்கள் கணவன் எழுந்து, அவருக்கான காலை உணவைத் தயாரித்துக்கொள்ள வேண்டும் என்று அர்த்தமாகாது; இது சரியான காரியமாகவே இராது; இது நம் மார்க்கத்தின்மீது அவமதிப்பைக் கொண்டுவருகின்றதாயிருக்கும்; மாறாக கணவன் மற்றும் மனைவியென உங்கள் கடமைகள் மற்றும் பொறுப்புகள் அனைத்தையும் ஜாக்கிரதையாய் நிறைவேற்றுகிறவர்களாக இருந்து, ஜெபம்பண்ணிடுங்கள்; ஞானமாய்ச் செய்யுங்கள்.

இப்பொழுது பிள்ளைகளுக்கு வரலாம்; ஒருவேளை பிள்ளைகள் வளர்ந்தவர்களாக இருப்பார்களானால், அவர்கள் வித்தியாசமாய் அணுகப்பட வேண்டும். தங்கள் பிள்ளைகள் வளருவதை மறந்துபோவதன்மூலம் அநேகம் பெற்றோர்கள் மாபெரும் தவறு செய்கின்றனர் என்று நான் எண்ணுகின்றேன். இவர்கள் எப்போதும் தங்கள் பிள்ளைகளைச் "சிறிய ஆனி (annie-பெயர்)" என்று எண்ணுகின்றனர்; ஆனி உயர உயரமாய் வளருகின்றாள், ஆனால் அவள் பெரிய மனுஷி ஆகுவதற்கு முன்புவரையிலும் "குட்டி ஆனியாகவே" இருப்பதாகப் பார்க்கப்படுகின்றாள். இப்படியே "குட்டி ஹேரியும்" பார்க்கப்படுகின்றான். இவர்களிடம் பெற்றோர்கள் பிள்ளைகளெனப் பேசிய காலங்களையே பெற்றோர்கள் நினைத்துக்கொண்டிருக்கின்றனர். குழந்தைப்போல் நடத்தப்படுவதை எந்தப் பிள்ளையும் விரும்புகிறதில்லை. சீரான மனநிலைமையுடைய ஒவ்வொரு பிள்ளையும் குட்டி மனுஷனாக அல்லது குட்டிப்பெண்மணியாக நடத்தப்பட வேண்டும்; மேலும் இதைப் பெற்றோரினால் செய்திட முடியும்; மேலும் இதை முகஸ்துதியாய்ச் செய்திடாமல், மிகவும் சரியான விதத்தில் பண்ணிட வேண்டும். பெற்றோர்கள்

பிள்ளைகளை நோக்கி: "இப்போது ஹேரி அல்லது மேரி, நீ ஒரு முன்மாதிரியான குட்டி மனுஷனாக/ஜென்டில்மேனாக அல்லது பெண்மணியாகக் காணப்பட வேண்டும் என்று விரும்புகின்றேன். மற்றச் சிறுவர்களும், சிறுமிகளும் எவ்வளவுதான் அநாகரிகமானவர்களாய்க் காணப்பட்டாலும், நீ எப்போதுமே ஒரு குட்டி ஜென்டில்மேனாக அல்லது பெண்மணியாகக் காணப்பட வேண்டும் என்று விரும்புகின்றேன்" என்று கூறிடலாம். பிள்ளைகளுக்கு இது பிடிக்கும். பிடிக்காததுபோன்று அவர்கள் காண்பித்துக்கொள்ளலாம், ஆனாலும் ஆழ்மனதில் பிள்ளைகளுக்கு இது பிடிக்கும்.

"மற்றச் சிறுவர்களுடன் நான் விளையாட வேண்டும்" என்று பிள்ளைகள் கூறுவார்கள்.

அதற்கு நீங்கள்: "என் அருமை மகனே, அந்தச் சிறுவர்களில் சிலர் எத்தனை அநாகரிகமாக நடந்துகொள்கின்றனர்; உன்னையும் நான் அப்படியாக எண்ணிக்கொள்ள நீ விரும்பமாட்டாயே - பார் அச்சிறுவர்கள் எத்தனை அநாகரிகமாய் விளையாடுகின்றனர். பார் அந்தச் சிறுமிகள் சிலர் கும்மாளம் அடித்துக்கொண்டிருக்கின்றனர் - அது உனக்கும் பிடிக்காதே. நீ நல்நடக்கையை வளர்த்துக்கொள்; நல்ல விதத்தில் வளர்ந்து குட்டி ஜென்டில்மேனாக அல்லது குட்டிப் பெண்மணியாகிடு அல்லது நீ வளர்ந்து, அநாகரிகமுள்ளவனாகவும் ஆகிடலாம். நீ நல்லபடியாக வளரவில்லையெனில், நீ நல்ல சமுதாயத்திற்குப் பொருத்தமற்றவனாய் இருப்பாய். இந்தச் சுற்றுவட்டாரத்திலேயே உன்னை மிகவும் நல்நடக்கையுள்ள சிறுவனாக அல்லது சிறுமியாகக் காண விரும்புகின்றேன், ஆகையால் நீ போகும் இடமெல்லாம் ஜனங்கள் 'அந்தச் சிறுவனைப் பாருங்கள்!' 'அந்தச் சிறுமியைப் பாருங்கள்!' என்று சொல்வார்கள். இப்பொழுதும் என் குழந்தையே, இப்படியாக நீ வளர வேண்டும். நீ பெருமிதம் கொண்டு சுற்றித்திரியத்தக்கதாக, உன்னில் பெருமையினை நிரப்பிடுவதற்கு நான் முயற்சிக்கவில்லை. பெருமைக்கொண்டுள்ள சிறுவனும், பெருமைக்கொண்டுள்ள சிறுமியும் தங்கள் சக விளையாட்டு தோழர்களின் வெறுப்பினைச் சம்பாதித்துக்கொள்வார்கள். நீ பெருமைக்கொள்ளக்கூடாது, மாறாக பரிவாயும், தயவாயும், காணப்பட வேண்டும்; மேலும் சுத்தமாகவும், நேர்த்தியாகவும் காணப்பட வேண்டும்; உன் வஸ்திரங்கள் எவ்வளவு ஏழ்மையானதாக இருப்பினும், உன்னால் அதை எப்போதும் சுத்தமாய் வைத்துக்கொள்ள முடியும்; நீ எங்கேபோனாலும், உன் உடைகள் மண்ணினாலும், அழுக்கினாலும் அழுக்காகாதப்படிக்குப் பார்த்துக்கொள். உன்னை யாரேனும் பெருமைக்கொண்டவன் என்று அல்லது பெருமைக்கொண்டவனாய்த் தோன்றுகிறாய் என்று சொல்வார்களானால், அதைக்குறித்து வெட்கப்பட்டு; நீ எப்போதும் சிறு பெண்மணி அல்லது ஜென்டில்மேன்/கண்ணியவான் போன்றுதான் காணப்படுகின்றாயா என்பதைப் பார்த்துக்கொள்" என்று கூறிடுங்கள். பிள்ளைகளுக்கு இப்படிக் கூறினால் பிடிக்கும்; ஒருவேளை பெற்றோர்கள் இப்படியாகக் காணப்பட்டு, பிள்ளைகளின் விஷயத்தில் அவர்களின் தகப்பன் மற்றும் தாயே மிகவும் அக்கறைக்கொண்டவர்களாய் இருக்கின்றார்கள் என்று பிள்ளைகளை எண்ணும்படியாகச் செய்வார்களானால், பிள்ளைகள் இதை வளரும்போது நினைவில்கொள்வார்கள். பிள்ளையை நடத்த வேண்டிய வழியிலே நடத்து, அப்போது முதிர்வயதாகுகையிலும், அவன் அவ்வழியினின்று விலகமாட்டான். பெரும்பாலான ஜனங்கள் உணர்ந்திருப்பதாகத் தோன்றும் செல்வாக்கைக்காட்டிலும் அதிகம் செல்வாக்கு இதற்கு இருக்கும். உலகில் பிள்ளைகள் விஷயத்தைப்பார்க்கும்போது, வெட்கமே பட வேண்டும். பிள்ளைகள் ஏதோ பெற்றோருடைய வளர்ப்பைப் பெறாதவர்கள் போன்று மிகவும் அநாகரிகமாகத் தென்படுகின்றனர். இப்படியான நிலைமையிலுள்ள பிள்ளையைவிட, சத்தியத்திலுள்ள யார் ஒருவரும் சிறந்த விதத்தில் பிள்ளைகளைப் பெற்றிருக்க அறிந்திருக்க வேண்டும். நான் பெனின்சிலேவேனியாவில் காணப்பட்டபோது, அங்கு ஒரு சகோதரனோடுகூட இரா உணவு உண்டேன். அவர் அந்நாட்டிலுள்ள ஜெர்மானியன் ஆவார்; இரா உணவு முடிந்து, கூட்டத்திற்குப் போவதற்கு முன்னதாக, நாங்கள் அறைக்குச் சென்றுகொண்டிருக்கையில், அவர் என்னிடம்: "சகோதரர் ரசல் அவர்களே, உணவு மேஜையில் எனது மகன்களையும், மகள்களையும் பார்த்தீர்களே" என்றார்.

நானோ: "ஆம் பார்த்தேன். அவர்கள் மிகவும் அருமையாயும், மரியாதையோடும், அமைதியாயும் காணப்பட்டார்கள்; அநாகரிகமான எதுவும் அவர்களிடத்தில் இல்லை; அதைக் கண்டு மகிழ்ந்தேன்" என்றேன்.

அதற்கு அவர் பிரதியுத்தரமாக: "சகோதரர் ரசல் அவர்களே, என் மகன்கள் மற்றும் மகள்கள்குறித்து நான் பெருமிதம்கொள்கின்றேன்; சராசரியான பிள்ளைகளைவிட அவர்கள் மேலான நிலைமையில் காணப்படுகின்றனர் என்று நான் உணர்கின்றேன், ஆனாலும் அவர்கள் சிறு குழந்தைகளாக இருக்கும்போதே ஒருவேளை நான் ஆறாம் தொகுதியினைப் பெற்றிருந்தேனாகில், அவர்கள் எப்படி இருந்திருப்பார்களோ, அப்படியாக இப்பொழுது இல்லை என்று உணர்கின்றேன். மரம் வளருகையில் அதன் வளைவுகளை நிமிர்த்துங்கள் என்று நீங்கள் சொல்வதுபோன்று, என்னால் முடிந்தமட்டும் நிமிரச்செய்துள்ளேன். இதற்கும்மேலாக பிரச்சனை ஏற்படாத விதமாய்ப் பார்த்து என்னால் எதுவும் செய்யமுடியாது மற்றும் பிரச்சனைப்பண்ணி செய்வது ஞானமாயும் இராது என்று நான் அறிவேன்; நாம் ஞானமாய்ச் செயல்பட வேண்டியுள்ளது. ஆகையால் அவர்கள் நல்ல பிள்ளைகளாக இருக்கின்றனர், எனினும் சகோதரனே நீங்கள் சொல்லியுள்ளதுபோன்று தொட்டில் முதற்கொண்டு அல்லது அவர்கள் பிறப்பதற்கு முன்னர் இருந்தே, அவர்களைப் பயிற்றுவிப்பது எப்படி என்று நான் அறிந்திருப்பேனாகில் மற்றும் அப்படி அறிந்து ஒருவேளை வளர்த்தியிருக்கும்போது, அவர்கள் எப்படி இருந்திருப்பார்களோ, அப்படி நல்லவர்களாக இப்பொழுது இல்லை" என்று கூறினார்.

பிள்ளைகள் பிறப்பதற்கு முன்னதாகவே, கொடுக்கப்பட வேண்டிய பயிற்சியினை மறவாதீர்கள் . . . இது பயிற்சியிலேயே மிகவும் முக்கியமானதாகும்; இதற்கு அடுத்தப்படியாக அவர்கள் கைக்குழந்தைகளாக இருக்கும்போதே பயிற்சியானது துவங்கப்பட்டு, தொடர்ந்து மேற்கொள்ளப்பட வேண்டும். உங்கள் பிள்ளைகளைக்குறித்து ஒருபோதும் ஏளனம் செய்து நகைக்காதீர்கள். பிள்ளைகளைப்பார்த்து இப்படி நகைப்பதன் மூலம் அநேகம் பெற்றோர்கள் தங்கள் செல்வாக்குகளைப் பாதிக்கப்பண்ணுகின்றனர். பிள்ளையானது மென்மையாய்க் காணப்படும், அது வேதனைக்குள்ளாகும். "என் தந்தையிடம் நான் ஏதாகிலும் கூறினால், அவர் என்னை நகைப்பார் . . . ஆகையால் இனிமேல் அவரிடம் நான் எதையும் சொல்லமாட்டேன்" என்று பிள்ளை எண்ணிடும். உங்கள் மகன் மற்றும் மகளுடைய நம்பிக்கையை நீங்கள் பெற்றவர்களாய் இருக்க வேண்டும் . . . இதனால் அவர்கள் வயதுவந்தவர்களாய் இருக்கையிலும், அவர்கள் எதிர்ப்பாலின நண்பர்கள் முதலானவைகளைப் பெற்றிருக்கையில், அவர்கள் தந்தை மற்றும் தாயிடம் "எனக்கு ஓர் எதிர்ப்பாலின தோழமை (காதலர்) இருக்கின்றது" என்று சொல்லிடுவதற்கும் விரும்பிடுவார்கள். பொதுவாக இப்படிச் சொல்லிக்கொள்ள விரும்பமாட்டார்கள், ஆனாலும் சொல்லும் அளவுக்குக் காணப்பட வேண்டும். பெற்றோர்களாகிய உங்களை அவர்கள் அன்புகூருவதாலும், உங்களிடமிருந்து காரியங்களை மறைக்க விரும்பாததாலும், "எனக்கு ஓர் எதிர்ப்பாலின தோழமை (காதல்) இருக்கின்றது. அந்நபரைக்குறித்து நீங்கள் என்ன நினைக்கின்றீர்கள்?" என்று கேட்கும் அளவுக்கு அவர்கள்மீதாக உங்கள் செல்வாக்குக் காணப்பட வேண்டும். எதிர்ப்பாலின தோழர்மீதான உங்களது அபிப்பிராயத்தினைக் கேட்டுக்கொள்ள விரும்புவார்கள். தங்களுக்குப் பொருத்தமான துணை என்று தகப்பனும், தாயாரும் சொல்லுகிறவரைத் தவிர வேறு எவரையும் திருமணம் செய்திடுவதற்கு எண்ணவே மாட்டார்கள்; காரணம் அத்தகைய ஒரு நம்பிக்கையினைப் பெற்றோராகிய உங்களின் கணிப்பின்மீது பிள்ளைகள் பெற்றிருப்பார்கள். ஆனால் இத்தகைய செல்வாக்கினைப் பெற்றுக்கொள்வதற்கு, பெற்றோர்களாகிய நீங்கள் சர்ப்பங்களைப்போன்று ஞானமுள்ளவர்களாய்க் காணப்பட வேண்டும் மற்றும் கர்த்தருடைய வார்த்தைகளின் அறிவுரைகளைப் பின்பற்றிட வேண்டும். ஒருவேளை மீண்டும் வாழுவதற்கு ஜீவியம் கிடைக்கப்பெற்றால் அல்லது நூறு வயதாகும்வரை ஒருவேளை ஜீவித்தால், இது விஷயத்தில் நமக்கு ஏதாகிலும் தெரிய வாய்ப்பிருக்கும்;

ஆனால் இப்பொழுது நமக்குக் கிடைக்கப்பெற்றிருக்கும் வெளிச்சத்திற்காகவும், அறிவிற்காகவும் நன்றியுள்ளவர்களாக நாம் காணப்பட்டு, அறிவு வருகையில், அதை நன்கு பயன்படுத்திக்கொள்வோமாக; ஒருவேளை தவறுகள் செய்துள்ளீர்களானால், உங்களால் முடிந்ததைச் செய்யுங்கள். ஒருவேளை நீங்கள் கர்த்தரை அறிந்து, அவரது வார்த்தைகளைப் புரிந்துகொள்வதற்கு முன்னதாகப் பிள்ளைகளைப் பெற்றிருந்து, அவர்கள் காட்டுக்களைகள்போன்று வளர்ந்துள்ளார்களானால், நீங்கள் வருத்தப்படக் காரணங்கள் உண்டு, ஆனாலும் உங்களால் ஒன்றுஞ்செய்ய முடியாது. பரிவுடனும், பொறுமையுடனும் இருங்கள், தயவாய் இருங்கள்; கூடுமானமட்டும் உதவுங்கள்; உண்மையான தகப்பனாகவும், தாயாகவும் இருங்கள்; பிள்ளைகளிடம் காணப்படும் குறைவுகளானது, உங்களால் அவர்களுக்குக் கொடுக்கப்பட்டவையாகும் என்பதை நினைவில்கொள்ளுங்கள்; பிள்ளைகள் தங்கள் பெலவீனங்களை மேற்கொள்வதற்கு என்று அதிகமான நேரமும்/அவகாசமும், உதவியும் பிள்ளைகளுக்கு அளித்திடும் விதத்தில், அவர்களின் அந்தக் குறைவுகள் விஷயத்தில் மிக அதிகமாய்ப் பரிவுகொண்டிருங்கள்.

**11. (Q685:1) ஞாயிறு பள்ளிகளில் சகோதரிகள் போதிக்கலாமா?**

கேள்வி (1911 - Z. 4797)-1- ஞாயிறு பள்ளி வகுப்புகளில் சகோதரிகள் போதிக்கலாமா?

பதில் - பொதுவாகவே சகோதரர்களைக் காட்டிலும், சகோதரிகள் இளம் வயதினருக்கு நன்கு போதிப்பவர்களாய்க் காணப்படுகின்றனர். இத்தகைய வகுப்பாருக்கு இவர்கள் போதிப்பதற்கு வேத வாக்கியங்களில் எதுவும் மறுப்புத் தெரிவிக்கிறதில்லை. "உபதேசம்பண்ணவும், புருஷன்மேல் அதிகாரம் செலுத்தவும் ஸ்திரீயானவளுக்கு நான் உத்தரவு கொடுக்கிறது இல்லை," என்பது அப்போஸ்தலனின் வார்த்தைகளாய் இருக்கின்றது. அவரது வார்த்தைகள் விசேஷமாய்ச் சபைக்குப் பொருந்துகின்றதாய் இருக்கின்றது.

ஞாயிறு பள்ளிகள் தொடர்புடைய விஷயத்தில், வேதாகமப் பாடங்களின் ஆறாம் தொகுதிகளில் நாம் எழுதியிருப்பவைகளிலிருந்து நம்முடைய கணிப்பு மாறவில்லை.

தங்களுடைய பிள்ளைகள் ஆவிக்குரியவற்றைக் கற்றுக்கொள்ளும் விஷயத்தில், கிறிஸ்தவ பெற்றோர்களே பொறுப்பாளிகளாகத் தேவனால் கருதப்படுகின்றனர் என்றும், இதை அவர்கள் செய்கையில் அவர்கள் விசேஷித்த ஆசீர்வாதத்தினைப் பெற்றுக்கொள்வார்கள் என்றும் இன்னமும் நம்பிவருகின்றோம். ஒருவேளை ஞாயிறு பள்ளிகளில் தேவை ஏற்படுமாயின், அது அனாதைப் பிள்ளைகளுக்கு அல்லது உலகப் பிள்ளைகளுக்கு அல்லது இல்லத்தில் ஏற்கெனவே கற்பிக்கப்படும் பிள்ளைகளுக்கு மாத்திரமே அத்தேவைக் காணப்படும் என்று நாம் நம்புகின்றோம்.

**12. (Q685:3) ஞாயிறு பள்ளி - சூழ்நிலைகள் வேறுபடலாம்**

கேள்வி (1914)-3- நம்முடைய சொந்த கண்கள் சத்தியத்திற்குத் திறக்கப்பெற்றிருக்க, சத்தியத்திற்கு முரணாய்ப் போதித்துக்கொடுக்கப்படும் ஞாயிறு பள்ளிகளில், நம்முடைய பிள்ளைகள் கலந்துகொள்வதைத் தொடருவதற்கு நாம் அனுமதிப்பது சரியா?

பதில் - சூழ்நிலைகள் வேறுபடலாம். சிலசமயங்களில் கணவன் சத்தியத்தில் காணப்படுபவராய் இருக்கலாம்; மற்றும் மனைவி உண்மையானவளாயும், ஆனால் சத்தியத்தினைக் கண்டுகொள்ளாதவளாயும் இருக்கலாம்; மேலும் இம்மாதிரியான சந்தர்ப்பங்களில் கணவன் தன் பிள்ளைகள் யுகங்களுக்கடுத்த தெய்வீகத் திட்டத்தினைக்குறித்துப் போதிக்கப்படுவதை விரும்புவார் மற்றும் மனைவியும் பிள்ளைகள் வேறு விஷயத்தினால் போதிக்கப்படுவதை விரும்புவாள். இம்மாதிரியான சந்தர்ப்பத்தில் கொஞ்சம்

விட்டுக்கொடுத்துப் போவதே நலமாயிருக்கும் என்றும், உங்களுக்கு உங்கள் துணைவியார் என்ன செய்ய வேண்டும் என்று விரும்புவீர்களோ, அதையே நீங்களும் உங்கள் துணைவியாருக்குச் செய்வது நலம் என்றும் நான் எண்ணுகின்றேன். ஏனெனில் கணவன் குடும்பத்தின் தலைவனெனத் தன் அதிகாரத்தைச் செயல்படுத்தி, பிள்ளை ஞாயிறு பள்ளிக்கூடத்திற்குப் போகக்கூடாது என்று சொல்வது, மனைவியை முற்றிலுமாகப் புறக்கணிப்பதாக இருக்கும். சிலர் இப்படிச் செய்வது சரி என்று சொல்லலாம். இப்படிச் செய்வது ஞானமாய் இருக்காது என்று நான் எண்ணுகின்றேன். ஞானமாய்ப் பின்வருமாறு செயல்படலாம்: "என் அன்பே, நீ நன்மையாய் இருக்கும் என்று எண்ணுவதினால், பிள்ளைகள் ஞாயிறு பள்ளிக்குப் போவதற்கு நான் ஒத்துக்கொள்கின்றேன்; ஆனாலும் பிள்ளைகளுக்கான என் கடமையினை நான் நிறைவேற்றத்தக்கதாக, ஞாயிறுதோறும் நானும் ஒரு ஞாயிறு பள்ளி வகுப்பினை நடத்திடுவேன் . . . இப்படியாகப் பிள்ளைகள் ஞாயிறு பள்ளியில் இரண்டு வாய்ப்புகளைப் பெற்றுக்கொள்வார்கள் மற்றும் அது இரட்டிப்பான ஆசீர்வாதமாகவும் இருக்குமென நாம் நம்புவோம். பிள்ளைகள் கற்க வேண்டும் என்று நீ விரும்புபவைகளையும் அவர்கள் கற்றுக்கொள்வார்கள் மற்றும் என்னால் கற்பிக்க முடிந்ததையும், கூடுமானமட்டும் நானும் கற்பித்துக்கொடுப்பேன்" என்பதேயாகும். கணவன் கரிசனையாக இருப்பதை மனைவி பார்ப்பாள் மற்றும் இதற்கு எப்போதும் நல்லச் செல்வாக்கு உண்டு. மாபெரும் வித்தியாசம் காணப்படும்; ஆனாலும் பெரும்பான்மையான சந்தர்ப்பங்களில் பிள்ளைகள் நன்மை அடையாவிட்டாலும் தீங்கு ஏதும் அடைவதில்லை.

### 13. (Q685:2) ஞாயிறு பள்ளிகள் - தேவனால் அங்கீகரிக்கப்பட்டவையா?

கேள்வி (1912)-2- ஏதேனும் காரணங்களைக்கொண்டு ஞாயிறு பள்ளியின் கோட்பாடானது நியாயப்படுத்தப்படலாம் என்று நீங்கள் எண்ணுகின்றீர்களா?

பதில் - சகோதர சகோதரிகளே என் கருத்துப் பின்வருமாறு: ஞாயிறு பள்ளிக்கு எதிராகப் போராடும்படிக்குக் கர்த்தர் என்னிடம் கூறவில்லை. நான் சுவிசேஷத்தையே பிரசங்கிக்க வேண்டும். எனினும் ஞாயிறு பள்ளிகளானது கர்த்தர் இயேசுவினாலோ அல்லது அப்போஸ்தலர்களினாலோ ஏற்பாடுபண்ணப்படவில்லை என்று நான் சொல்லிடுவேன். முதலாம் ஞாயிறு பள்ளியானது இலண்டனில், தரித்திர கோலத்தில் காணப்படும் பிள்ளைகளுக்கென்றும், தெருக்களில் காணப்படும் அநாதைப் பிள்ளைகளுக்கென்றும் ஏற்பாடுபண்ணப்பட்டது. இந்தப் பள்ளிகள் தையல் தைப்பதற்கு, நெசவு பின்னல்பண்ணுவதற்கு, எழுதுவதற்கு மற்றும் இதுபோன்றவற்றைக் கற்றுக்கொடுத்தன. இப்படியானவைகளைக் கற்றுக்கொடுப்பதற்கு நாம் இன்று சிறப்பான பள்ளிக்கூடங்களைப் பெற்றிருக்கின்றோம். ஆரம்பத்தில் இந்தப் பள்ளிகளானது ஞாயிற்றுக்கிழமைகளில் நடத்தப்பட்டன; காரணம் ஆசிரியர்களுக்கு மற்ற நாட்களில் நேரமில்லாமல் இருந்தது; ஆனால் இவ்வகையான பள்ளிகளை இன்று நாம் எல்லா நாட்களிலும் பெற்றிருக்கின்றோம் மற்றும் இவை மாநிலம் மற்றும் அரசாங்கத்தின் கீழ்ச்சிறப்பாய் இயக்கப்பட்டும் வருகின்றது. தங்கள் பிள்ளைகளுக்குப் போதித்திடும் விஷயத்தில், தேவன் பொறுப்பினைப் பெற்றோர்கள்மீதே வைத்திருக்கின்றார் என்று நாம் வேதாகமப் பாடங்களிலிருந்து சுட்டிக்காட்டியிருக்கின்றோம். இது விஷயத்தில் கர்த்தருக்கு ஏதேனும் சுட்டிக்காண்பித்திட நான் நோக்கம்கொண்டிருக்கவில்லை. நான் மறுபடியுமாகச் சொல்லுகின்றேன், எவ்விதமான ஞாயிறு பள்ளிகளும் கர்த்தரினாலோ அல்லது அவரது அப்போஸ்தலர்களினாலோ ஏற்படுத்தப்படவில்லை. அவைகளைப் பெற்றிருப்பதற்கு நலமான காரணங்களை நீங்கள் பெற்றிருக்கலாம், ஆனால் இது என் காரியமல்ல. ஒருவேளை ஞாயிறு பள்ளியைப் பெற்றிருப்பதற்கு நற்காரணங்கள் உண்டு என்று நீங்கள் எண்ணுவீர்களானால், சகோதரர் ரசலாகிய நானும் இதற்கு மறுப்புத் தெரிவிக்கும் எதையும் தேடுவதில்லை என்றே கூறுவேன். தேவன் நம்மிடம் பரந்த மனப்பான்மையுடன் நடந்துகொள்கின்றார்

மற்றும் நாம் தேவ வசனத்தின் வழிகாட்டுதலுக்கு இசைவாக தெரிவு செய்வதற்குரிய சுதந்தரத்தைப் பெற்றிருக்கின்றோம். வேதவாக்கியங்களில் கொள்கைகள் காணப்படுகின்றன. அவற்றை உங்கள் விருப்பப்படி தளர்வாகவோ அல்லது நெருக்கமாகவோ பின்பற்றிடுங்கள். கர்த்தர் அந்தச் சுயாதீனத்தைக் கொடுத்திருக்கின்றார்; மேலும் கட்டுப்பாடுகள் இல்லாத காரியங்களில் கட்டுப்பாடுகள்பண்ண யாருக்கு உரிமை உண்டு?

**14. (Q648:2) துணிகரமான பாவம் - திருத்தப்பட்டன, மன்னிக்கப்பட்டன, மறக்கப்பட்டன**

கேள்வி (1909)-2- துணிகரமான பாவங்கள் என்றால் என்ன என்று தயவாய் விவரியுங்கள் மற்றும் அவை எப்படித் திருத்தப்பட அல்லது மன்னிக்கப்பட அல்லது மறக்கப்பட முடியும்?

பதில் - ------------------------------------------------------------------------------------------------------------------------------------------------------------------------------------

[தெரிந்தெடுக்கப்பட்ட பத்தி]

மற்றுமொரு கருத்து: இந்தப் பாவங்களை நாம் கர்த்தரிடம் ஜெபத்தில் கொண்டுசெல்கையில், எந்தமட்டும் இவைகள் மன்னிக்கப்படுகின்றன; அவர் எப்படி இவைகளை மன்னிக்கின்றார்; மேலும் ஒருவேளை மன்னிக்கின்றாரானால், ஏன் அதிகமான சிட்சை, மன்னிப்பைப் பின்தொடர்ந்து வருகின்றது? இரண்டு காரியங்களும் இசைவாகவே இருக்கின்றது என்று நான் பதிலளிக்கின்றேன். பின்வருமாறு அதை விளக்கிடலாம்: நீங்கள் உங்கள் பிள்ளையிடம்: "நீ தவறு செய்திருக்கின்றாய் மற்றும் நான் உன்னைத் தண்டித்தாக வேண்டும்; தண்டனை என்னவெனில் இரவு உணவில் உனக்கு இனிப்பு/மிட்டாய் வழங்கப்படாது" என்று சொல்லுகின்றீர்கள். ஒருவேளை பிள்ளையானது சரியான மனநிலைமையில் காணப்பட்டால் மற்றும் பயிற்றுவிக்கப்பட வேண்டிய விதத்தில் முறையாய்ப் பயிற்றுவிக்கப்பட்டிருந்தால் . . . பிள்ளையானது இனிப்பு மறுக்கப்பட்டதைவிட, பெற்றோருடைய மறுப்பைக்குறித்தே வருந்திடும். இனிப்புப்பண்டம் மறுக்கப்பட்டதே உண்மையான தண்டனையாக இருக்க, முறையாய்ப் பயிற்றுவிக்கப்பட்ட பிள்ளையானது, இனிப்புப்பண்டம் கிடைக்காத விஷயத்தைவிட, பெற்றோரின் கோபத்தைக்குறித்தே அதிகமாய் உணர்ந்துகொள்ளும். இதனால் பிள்ளை, "என்னை மன்னித்துவிடுங்கள்" என்று கூறிடும். பெற்றோர் பிரதியுத்தரமாக: "உன்னை நான் மன்னித்தாலும், உனக்கு இனிப்புப்பண்டம் கிடையாது" என்று கூறிடலாம்; பிள்ளையோ பிரதியுத்தரமாக: "நான் பண்டம்குறித்து எண்ணவில்லை; மாறாக நான் உங்களை எவ்வளவு கஷ்டப்படுத்திவிட்டேன் என்றுதான் எண்ணிக்கொண்டிருக்கின்றேன்" என்று கூறிடும். நீங்களோ தயவு பாராட்டும் முகப்பாவனையுடன்: "சரி என் அன்புக்குரிய பிள்ளையே; நீ முற்றிலும் மன்னிக்கப்பட்டுவிட்டாய்" என்று கூறிடலாம்; நீங்கள் அங்கீகரிப்பின் முத்தத்தைப் பிள்ளைக்குக் கொடுத்திடலாம்; ஆனாலும் பிள்ளையானது இனிப்புப்பண்டத்தைப் பெற்றுக்கொள்வதில்லை என்று கூறிடுவீர்கள்: பிள்ளையும் "சரி" என்று கூறிடும். இதுவே கர்த்தருடைய ஜனங்களுக்குப் பரம பிதாவுடன் காணப்படும் உறவிற்கான விளக்கமாகும்.

**15. (Q803:2; Q825:2) திருமணம் - அவிசுவாசி விசுவாசியினால் பரிசுத்தமாக்கப்படுதல்**

கேள்வி - "என்னத்தினாலெனில், அவிசுவாசியான புருஷன் தன் மனைவியால் பரிசுத்தமாக்கப்படுகிறான்; அவிசுவாசியான மனைவியும் தன் புருஷனால் பரிசுத்தமாக்கப்படுகிறாள். இல்லாவிட்டால் உங்கள் பிள்ளைகள் அசுத்தமாயிருக்குமே; இப்பொழுதோ அவைகள் பரிசுத்தமாயிருக்கின்றன" (1 கொரிந்தியர் 7:14) எனும் அப்போஸ்தலன் பவுலினுடைய வார்த்தைகளை விவரிக்க முடியுமா?

பதில் - ஆதாம் மற்றும் ஏவாளின் கீழ்ப்படியாமையும், பரம பிதாவிடமிருந்துள்ள இவர்களது

விலகிப்போகுதலும், அவர்கள் பிள்ளைகள் அனைவரையும் விலகிப்போகப்பண்ணினபடியால், மகாபெரும் பாவநிவாரணத்தின் புண்ணியத்தின் வாயிலாய் உண்டாகும் "கர்த்தருடைய ஜனங்களின்" ஒப்புரவாகுதலானது, அவர்களை மீண்டும் தேவனுடன் இசைவுக்குள் கொண்டுவருவது மாத்திரம் இல்லாமல், அவர்களின் பிள்ளைகளும் பகுத்தறிந்து முடிவெடுக்கும் வயதை அடைவதற்கு முன்புவரையிலும் தங்களின் பெற்றோர்கள் வாயிலாக நீதிமானாக்கப்பட்டதாகக் கருதப்படுகின்றனர். பெற்றோரில் ஒருவர் கர்த்தருடைய பிள்ளையாகவும், மற்றவர் தேவனுக்கு அந்நியராகவும், புறம்பானவராகவும் காணப்பட்டால் எப்படி என்கிறபோதே கேள்வி சற்றுக் கடினமாகுகின்றது; ஆனால் இப்படியான சூழ்நிலைமையில், தேவன் குழந்தையைக் கர்த்தருடைய சீஷனாய்க் காணப்படும் பெற்றோர்மூலமாகத் - தம்முடையதாகக் கருதுகின்றார். குழந்தையினுடைய விஷயத்தில் பெற்றோர்களில் விசுவாசியாய்க் காணப்படும் ஒரு பெற்றோரின் நிலைமையானது, அர்ப்பணம்பண்ணாத பெற்றோரின் நிலைமையை ஈடுகட்டுகின்றது.

**16. (Q129:6) தொகுதி விநியோகிக்கும் வேலையை, நம்மைச் சார்ந்திருக்கும் குடும்பத்தை வைத்துக்கொண்டு எப்படிச் செய்வது?**

கேள்வி (1906)-6- ஒருவர்மீது குடும்பத்தினர் சார்ந்திருக்க, அவர் ஒருவேளை இதற்கு ஏற்பாடுகள் பண்ணமுடியுமானால், அவர் தொகுதி விநியோகிக்கும் வேலைக்குச் செல்வது சரியாய் இருக்குமா?

பதில் - ஒரு மனைவி தன் வீட்டையும், கணவனையும் கவனிக்காமல் விட்டுவிட்டு இவ்வேலைக்குச் செல்வது சரியாயிருக்கும் என்று நான் எண்ணுவதில்லை. அவள் தன் கணவனுக்கும், தன் வீட்டிற்கும் மனைவிக்குரிய கடமைகளைப் பெற்றிருக்கின்றாள். ஆனால் ஒருவேளை அவள் கணவனும் சத்தியத்தில் காணப்பட்டு, இதற்கு இணங்குவாரானால், சரி. ஒருவேளை அவள் கணவன் உலகப்பிரகாரமான கணவனாய் இருப்பாரானால், தன் இல்லம் பராமரிக்கப்படும்படிக்குக் கேட்டுக்கொள்வதற்குரிய உரிமையினை அவர் உடையவராய் இருப்பார்; இது மனைவி (திருமணத்தில்) பண்ணின ஒப்பந்தத்தின் ஒரு பாகமாகும், மேலும் அதை அவள் மீறக்கூடாது என்று நான் எண்ணுகின்றேன்.

**17. (Q130:1) தொகுதி விநியோகிக்கும் வேலை - திருமணம் பண்ணியுள்ளதான உடன் துணையைக் கவனத்தில் எடுத்துக்கொள்ளுங்கள்**

கேள்வி (1906)-1- கணவன் ஒருவேளை உலகப்பிரகாரமான மனுஷனாக இருந்தும், தன் மனைவி இவ்வேலைக்கென்று வெளியே செல்வதற்கு இணக்கம் தெரிவிப்பாரானால், என்ன செய்யலாம்?

பதில் - கணவன் விரும்பினால் சரி சகோதரியே; ஆனாலும் இம்மட்டிலுமாக நான் பதிலை நிறுத்துகிறதில்லை. எப்போதுமே உங்கள் ஜீவித துணையானவரையும், அவரது நலனுக்கடுத்த காரியங்களையும், அவரால் நியாயமாய்க் கேட்கப்படும் அல்லது எதிர்ப்பார்க்கப்படும் காரியங்களையும் கவனத்தில் எடுத்துக்கொள்ளுங்கள்.

**18. (Q459:1) விவாகம் - கணவனின் பணத்தைச் செலவு செய்தல்**

கேள்வி (1909)-1- மனைவியானவள் தனக்குச் சொந்தமாயிருக்கும் பணத்தை, அவளது கணவனுடைய விருப்பங்களுக்கு மாறாக பயன்படுத்தும் உரிமை பெற்றிருக்கின்றாளா?

பதில் - ஒருவேளை கணவன் கர்த்தருடனான உறவில் நிறைவாயும், முழுமையாயும் காணப்பட்டு, மனைவியும் இப்படியாகவே காணப்படுவாளானால், அப்பொழுது பிரச்சனை இருப்பதில்லை மற்றும் இங்கு எழும்பியுள்ளதான இக்கேள்வியானது எழும்புவதுமில்லை. ஆனால் காரியங்கள் எப்போதும் இப்படியாக

இருப்பதில்லை; மேலும் எனது எண்ணம் பின்வருமாறு: சட்டங்கள் மற்றும் பொதுவாய் நிலவிவரும் வழக்கத்தின்படி ஒரு கணவன், மனைவியை விவாகம்பண்ணுகையில், அவளைத் தனது பங்காளியாக நடத்த ஒப்பந்தம்பண்ணுகின்றார்; மேலும் கணவனானவன், மனைவியின் உரிமையின் கீழ்க்காணப்படும் சொத்துக்கள் விஷயத்தில் ஏதேனும் விசேஷித்த ஒப்பந்தம் இருந்தால் தவிர மற்றப்படி சொத்துக்களைப் பொருட்படுத்தாமலேயே, அவளை இப்படி நடத்த ஒப்பந்தம்பண்ணுகின்றார். இப்படியான சொத்து ஒப்பந்தம் எதுவும் இல்லை என்றாலும், புருஷன் அவளைத் தன் துணைவியாக எடுத்துக்கொண்டுள்ளார்; அதுவும் அவள் வசத்தில் காணப்படும் சொத்துகள் எதையும் பொருட்படுத்தாமல் அவளைப் பராமரிப்பதற்குரிய பொறுப்பாளியாகுகின்றார் என்று புரிந்துகொள்ளலாம். இது கணவன் மற்றும் மனைவிக்கிடையே நியாயமான ஒப்பந்தங்களும் நிலவுவதையும்கூட அர்த்தப்படுத்துகின்றதாய் இருக்கும்; ஒருவேளை கணவன் வியாதிப்பட்டால், குடும்பத்தின் தேவைகளை மனைவி ஒருவேளை சந்திக்க வேண்டுமெனில், மனைவியானவள் தன் வழிவகைகளைப் பயன்படுத்துவது மாத்திரமல்லாமல், ஒருவேளை அவளுக்கென்று குடும்பம் இல்லாமல் இருக்கையில், தன்னைப் பாதுகாக்க வேண்டிய கணவனும் சரீர ரீதியில் பெலவீனப்பட்டு இருக்கையில், கணவனுக்காக எவ்வகையான தேவைகளுக்குமென்று பணிவிடைச் செய்வதற்கும் அவள் தன் ஜீவியத்தையே ஒப்புக்கொடுத்து விடுவதும் அவளுக்குரிய சிலாக்கியமாகும்.

ஆனால் இப்படியான தேவை ஏதுமில்லையெனில், மேலும் கணவன் தனக்கும், மனைவிக்குமெனத் தேவைகளைத் திரளாய்ச் சந்திக்க முடிகிறவராய் இருப்பாரெனில், மனைவியின் உரிமையினுடைய கீழ்க்காணப்படும் எதுவும் அவருக்கு அவசியமில்லையெனில் . . . மனைவிக்குத் தனிப்பட்ட விதத்தில் வந்துள்ளதான அந்தப் பணத்திற்கு, தான் உக்கிராணக்காரியாக இருப்பதாக மனைவி எண்ண வேண்டும் என்றும், கர்த்தரிடத்திலும் அவள் பொறுப்பு ஒன்றினைப் பெற்றிருக்கின்றாள் என அவள் உணர வேண்டும் என்றும், அவள் கணவன் அவளோடு ஒத்துழைக்க வேண்டும் என்றும் நான் எண்ணுகின்றேன்.

### 19. (Q483:2) கூட்டங்களின் எண்ணிக்கை

கேள்வி (1916)-2- Los Angeles-இன் சபையினுடைய ஞாயிற்றுக்கிழமைக் கூட்டங்கள் பின்வருமாறு:

10.30 AM - Sunday School lesson in the Watch Tower

1.30 PM - The Watch Tower Study Article

3.00 PM - Lecture

7.00 PM - Berean Study sixth volume

சிலர் இன்னும் அதிகமாய்க் கூட்டங்களைப் பெற்றிருக்க வேண்டும் என்று கூறுகின்றனர்; சிலர் நாம் மிக அதிகமாய் இப்போது கூட்டங்களைப் பெற்றிருக்கின்றோம் என்று கூறுகின்றனர்; சிலர் ஒரு தூதிற்குப் பதிலாக நாம் இரண்டு தேவதூதுகளைப் பெற்றிருக்க வேண்டுமென்று கூறுகின்றனர். இது விஷயத்தில் சபையாருடைய சிறந்த நலனுக்கடுத்தவைகள் தொடர்பான உங்களது கருத்தென்ன?

பதில் - ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் ஒவ்வொரு சபையாரும் தங்களுக்கெனத் தீர்மானித்துக்கொள்ள வேண்டும். இச்சந்தர்ப்பத்தில் மிக அதிகமாய்க் கூட்டங்களைக் கொண்டிருப்பதாக எனக்குத் தோன்றுகின்றது. இந்த ஒரு சந்தர்ப்பத்தில், ஏற்கெனவே நடத்தப்பட்டு வரும் கூட்டங்களின் எண்ணிக்கையினைக் கூட்டிடுவதற்கு நாம் விருப்பங்கொள்ளக்கூடாது. ஒருவேளை நான் அவ்விடத்தில் காணப்பட்டு, இவ்விஷயம் தொடர்பாக வாக்களித்திருப்பேனாகில் (vote), ஐந்திற்குப் பதிலாக மூன்று கூட்டங்களைப் பெற்றிருப்பதற்கு நான் விருப்பம்கொண்டிருப்பேன். உங்களால்

முடியுமானால் நான்கைக் கொண்டிருக்கலாம். ஒவ்வொருவருக்கும் வேறுபட்டுக் காணப்படும் என்றாலும், கர்த்தருடைய ஜனங்களில் அநேகர் சத்தியத்தில் இல்லாத தங்கள் கணவன், மனைவி அல்லது பிள்ளைகளுக்கான பூலோக கடமைகளைப் பெற்றிருக்கின்றனர் மற்றும் இளைப்பாறுதலுக்கும், மாற்றத்திற்கும் வேண்டி பிரித்துக் கொடுக்கப்பட்டுள்ளதான இந்த ஒரு நாளில் கர்த்தருடைய ஜனங்கள், சத்தியத்தில் இல்லாத தங்கள் கணவன், மனைவி அல்லது குழந்தைகளுக்கு எதையாகிலும் செய்யக் கடமைப்பட்டவர்களாய்க் காணப்படுவார்கள்.

சத்தியத்தில் இல்லாதவராகவும், ஞாயிற்றுக்கிழமை மாத்திரமே இல்லத்தில் காணப்படுபவராகவும் காணப்படும் கணவன், தனது மனைவி அந்த நாளில் மிகவும் வெளியே ஆக்கிரமிக்கப்பட்டுக் காணப்படுவதைக் காண்கையில், அவள் அவரைப் புறக்கணிக்கின்றது போன்று அவருக்குத் தோன்றிடும் மற்றும் நீங்களும் இதைப் போன்ற சந்தர்ப்பங்களில், இதே பார்வையினைக் கொண்டிருப்பீர்கள்; மேலும் சத்தியத்தில் காணப்படாத மனைவி ஞாயிற்றுக்கிழமைகளிலும்கூடத் தனது கணவனை அவ்வளவுக்குக் காணமுடியாத அளவுக்கு, அவர் நாள் முழுவதும் கூட்டங்களிலேயே காணப்படுவாரெனில் அவள், அவருடனான எந்த ஐக்கியத்தினையும் பெற்றிருக்க முடியாது. நிச்சயமாகவே இது சரியாய் இருக்காது. நம்முடைய கணவன்மார்களிடத்தில் அல்லது நம்முடைய மனைவிமார்களிடத்தில் நமக்குப் பூமிக்குரிய வகையான பூலோக கடமைகள் காணப்படுகின்றது மற்றும் இவைகளை நாம் கவனியாமல் காணப்படக்கூடாது.

ஒருவேளை சபையார் ஞாயிற்றுக்கிழமைகளில் மிக அதிகமான எண்ணிக்கையில் கூட்டங்களைப் பெற்றிருப்பார்களானால், சில சமயங்களில் ஒரு நபர் எல்லாக் கூட்டங்களிலும் கலந்து கொள்ளாமல் காணப்படுவது ஞானமான காரியமாய் இருக்கும். தன்னால் தனது முழுநாளினையும் கர்த்தருக்கென்று கொடுக்க முடியும் நபர் விஷயத்திலும்கூடத் தனது நேரத்தினை, தான் எவ்வாறு செலவழிக்க வேண்டும் என்ற காரியமானது, அந்நபரின் கரங்களிலேயே காணப்படுகின்றது. அவன் தனது நாளில் ஒரு பகுதியைத் தன்னார்வ ஊழியத்திற்கென்றும் மற்றும் இன்னொரு பகுதியை வேறொரு வேலையினுடைய ஒரு பாகத்திற்கென்றும் மற்றும் கொஞ்சம் பகுதியைப் பெரோயா ஆராய்ச்சிக்கென்றும், கொஞ்சம் பகுதியைப் பிரசங்கிப்பதற்கென்றும் செலவிட விரும்புகின்றவனாய்க் காணப்படுவான். இது விஷயத்தில் அவன் தனது சொந்தப் பகுத்தறிதலை முடிந்தமட்டும் பயன்படுத்திட வேண்டும். ஒருவேளை சபையார் நான்கு கூட்டங்களுக்கு அதிகமான கூட்டங்களைப் பெற்றிருப்பார்களானால், அது ஞானமாய்க் காணப்படாது; மற்றும் ஒருவேளை இந்தக் கூட்டங்கள் அனைத்திற்கும், அனைவரும் வரமுடியும் என்றாலும், "உங்கள் சாந்தகுணம் எல்லா மனுஷருக்கும் தெரிந்திருப்பதாக" எனும் அப்போஸ்தலனின் வார்த்தைகளை நாம் நினைவில்கொண்டிருக்க வேண்டும். பக்திவிருத்திக்கு ஏதுவான கூட்டங்கள் விஷயத்திலும், மற்றக் காரியங்கள் விஷயத்திலும் மிதமாய்க் காணப்பட வேண்டும். நம்முடைய பலம் எல்லைக்குட்பட்டது என்று நாம் நினைவில் கொண்டிட வேண்டும்; மற்றும் நம்மைச் சார்ந்திருப்பவர்களுக்கு - நம்முடைய கணவன், நம்முடைய மனைவி, நம்முடைய பிள்ளை, நம்முடைய அயலார்கள், நம்முடைய உறவினர்களுக்கு நாம் கவனம் செலுத்த வேண்டியவர்களாய் இருக்கின்றோம். அனைவருக்குமென்று நாம் சில கடமைகளைப் பெற்றவர்களாகக் காணப்படுவோம்; அதிலும் பிரதானமாய் விசுவாச வீட்டாருக்கும் மற்றும் நம்முடைய குடும்பத்தாருக்கும் என்று கடமைகளைச் செய்ய வேண்டியவர்களாய் இருக்கின்றோம்; ஏனெனில் இவர்களே முதலாவதாகக் காணப்படுகின்றனர்.

**20. (Q497:2) பணம் - எப்படி முதலீடு செய்வது?**

கேள்வி (1912)-2- சீக்கிரம் எதிர்க்காலத்தில் வங்கிகள் அனைத்தும் சீர்க்குலைவிற்குள்ளாகிப் போகும் என்பதை அறிந்திருக்கிற நிலைமையிலும், அதேசமயம் நமக்கும், நம்மைச்

சார்ந்திருப்பவர்களுக்குமான தேவைகளை நாம் சந்தித்தாக வேண்டிய நமது பொறுப்பை நாம் உணர்ந்திருக்கும் நிலைமையிலும், மூன்று மாதத்திற்குள்ளாக திரும்ப எடுக்க முடியாத விதத்தில், பணத்தை முதலீடு செய்வதற்கான ஞானமான வழிமுறை என்று நீங்கள் கருதுவது என்ன மற்றும் நாம் பெற்றிருப்பவைகளுக்கு நாம் நல்ல உக்கிராணக்காரர்களாய்க் காணப்படத்தக்கதாக இந்தப் பணத்தை எப்படிப் பயன்படுத்துவது என்பது குறித்து ஏதேனும் யோசனைகள் கூற முடியுமா?

பதில் - நீங்கள் பெற்றிருக்கும் எல்லாப் பணத்தையும் எப்படிப் பயன்படுத்துவது என்பது குறித்துச் சொல்லவேண்டுமா? அதுதான் கேள்வியா? நீங்கள் பெற்றிருக்கும் அல்லது பெற்றிருக்கப்போகும் பணம் அனைத்தையும் எப்படிப் பயன்படுத்துவது என்பதைவிட அதிகமாய் என்னால் சொல்லமுடியும், ஆனால் அவற்றை நான் சொல்லப்போவதில்லை. இக்கேள்வியிலும் ஒரு நல்ல கருத்துக் காணப்படவே செய்கின்றது. ஒருவேளை குடும்பத்தின் தகப்பன் அல்லது குடும்பத்தின் தாய் சத்தியத்தில் இல்லை என்று வைத்துக்கொள்ளுங்கள் . . . குடும்பத்தின் இந்தக் கடமைகள் தொடர்புடைய விஷயத்தில் அவனது கடமை மற்றும் அவனது நடத்தை எப்படியாக இருக்க வேண்டும்? இப்பொழுது முதற்கொண்டும், இனிமேலும் வீட்டின் நிலக்கரி சேமிப்புக் கிடங்கில் தனக்கிருக்கும் கொஞ்சம் பணத்தைக்கொண்டு நிலக்கரியைத் தேவைக்காய் நிரப்பி வைத்துக்கொள்ள பார்த்துக்கொள்ளுங்கள் என்பது என் அறிவுரையாகும். இப்படிச் சேமித்து வைப்பது என்பது பெலவீனமான விசுவாசத்திற்கான வெளிப்பாடாய் இராதா என்று நீங்கள் கேட்கலாம்; இல்லை என்றே நான் சொல்லுவேன்; ஏனெனில் நாம் நம்முடைய பங்கினைச் செய்தாக வேண்டும். தற்கால சூழ்நிலைகளின்கீழ்க் கெட்டுப்போகாத வகையிலுள்ள சில வகையான உணவுகளைப் போதுமான அளவுகள் சேமித்துவைத்துக் கொள்வது தவறாய் இருக்காது. Tin/தகரப்பெட்டியில் அடைக்கப்பட்டுள்ள இறைச்சிகள், தகரப்பெட்டியில் அடைக்கப்பட்டுள்ள பழங்கள் மற்றும் இன்னும் இதுபோலச் சிலவற்றைக் கையிருப்பில் வைத்துக்கொள்ளுங்கள் என்று நான் யோசனைக்கூறுகின்றேன். பயறு வகைகள் சிலவற்றையும் கையிருப்பில் வைத்துக்கொள்ளலாம். உங்களுக்குக் கையிருப்பில் வைத்துக்கொள்வதற்குத் தோன்றிடும் பொருட்களை, அதிகமாய்ச் சேமித்து வைக்கத்தக்கதாகப் பார்த்துக்கொள்ளுங்கள்: இப்படிக் கையிருப்பில் பொருட்களை வைத்துக்கொள்வது என்பது எவ்விதத்திலும் தேவன் நம்மை எப்போதேனும் மறந்துபோய்விடுவார் எனும் அச்சத்தையோ அல்லது சந்தேகத்தையோ நாம் பெற்றிருக்கின்றோம் என்பதாகாது. பணம் மற்றும் சொத்துக்களைப் பொறுத்தமட்டில், ஒருவேளை நல்ல அயலகத்தார் மத்தியில் சிறுவீடு ஒன்றைப் பெற்றிருப்பேனாகில், அதை வைத்துக்கொள்வதற்கும் ஏதுவான சூழ்நிலைமை இருக்குமாகில், சத்தியத்தில் இல்லாத மனைவிக்கும், குடும்பத்திற்கும் வேண்டி, அந்த வீட்டை நான் வைத்துக்கொள்வதினால், என் நோக்கங்கள் எப்போதும் நன்மைக்கேதுவானதாகவே இருந்தது என்று என் மரணத்திற்குப் பின்னர்க் காணப்படும் என் குடும்பத்தாருக்கு வெளிப்படும். வரவிருக்கும் உபத்திரவ காலத்தில் சூறையாடப்படும் பெரிய வீடுகளுக்குப் பதிலாகச் சிறு வீட்டினைப் பெற்றிருங்கள். உங்களுக்கு வழிகாட்டுதலாய் இருக்குமென்று இத்தகைய குறிப்புகளை (hint) நாங்கள் கொடுக்கின்றோம்.

### 21. (Q144:1) அர்ப்பணிப்பு - சொத்துக்கள் மற்றும் பிள்ளைகள்

கேள்வி (1909)-1- அர்ப்பணம்பண்ணியுள்ள ஒருவர் தன்னால் அர்ப்பணிக்கப்பட்டுள்ள சொத்தினுடைய எந்த ஒரு பாகத்தையேனும் பிள்ளைகளுக்கோ அல்லது சுதந்தரவாளிகளுக்கோ உரிமையாகக் கொடுக்கும் உரிமை பெற்றிருக்கின்றாரா?

பதில் - தன் பிள்ளைகளுக்குக் கொடுப்பது என்பது ஒவ்வொரு பெற்றோருடைய கடமையாக இருக்கின்றது என்று நான் எண்ணுகின்றேன். உதாரணத்திற்கு உங்களுக்கு ஆறு பிள்ளைகள் இருக்கின்றனர் என்று வைத்துக்கொள்ளுங்கள் மற்றும் பிள்ளைகளில் சிலர் மிகவும் சிறு பிள்ளைகளாய்

இருக்கின்றனர் என்று வைத்துக்கொள்ளுங்கள் . . . அவர்களிடத்தில் பெற்றோர்களென நீங்கள் கடமை ஒன்றினைப் பெற்றிருக்கின்றீர்கள். நீங்களே அவர்களை உலகத்திற்குள்ளாகக் கொண்டுவந்தீர்கள், மேலும் அவர்களின் விஷயத்தில் சில பொறுப்புகளை, அதிலும் விசேஷமாக அவர்கள் தங்கள் தங்கள் தேவையைச் சந்தித்துக்கொள்ள முடியாத வயதுள்ள காலங்களின்போது சில பொறுப்புகளை நீங்கள் பெற்றிருக்கின்றீர்கள்; ஒருவேளை நான் ஏதேனும் பிள்ளைக்குத் தகப்பனாய் இருந்தேனாகில், என் பராமரிப்பின்கீழ் நான் சம்பாதித்துப் பெற்றிருக்கும் சொத்தில் சில பங்கினைப் பிள்ளைகளுக்குக் கொடுப்பது சரியே என்று எண்ணுவேன். ஒருவேளை பத்து வருடங்களுக்குப் பிற்பாடு சொத்திற்கு எந்த மதிப்பும் இல்லாமல் போகும் என்பதில் எனக்கு உறுதி இருப்பினும், ஒரு குறிப்பிட்ட பங்கைத் தனியே ஒதுக்கி வைத்துக்கொள்வது சரி என்று எண்ணிடுவேன். என்னை நான் இயக்கிடும் அதே கண்ணோட்டத்தில் அவர்களை நான் நடத்தாமல், மாறாக அவர்களை அவர்களுடைய கண்ணோட்டத்தின்படியே நடத்திடுவேன்.

இவ்வளவுதான் கேள்வி என்று நான் எண்ணுகிறதில்லை. ஒருவேளை ஒரு தகப்பன் அதிகமான பணம் வைத்திருந்தாரானால், அவை தன்னுடைய பிள்ளைகளுக்குரியது என்றும், அவர்களுக்குப் பங்கிட்டுக்கொடுத்துவிட வேண்டும் என்றும் எண்ணிட வேண்டுமா? இது வேறே விதமான கேள்வியாகும். தங்களுடைய தேவைகளைச் சந்திக்க முடியாதவர்களுக்குத் தேவைகளைச் சந்திப்பது என்பது ஒரு காரியமாகவும், பணத்தைக் கொடுத்துவிடுவது வேறொரு காரியமாகவும் இருக்கின்றது. நாம் தேவனுக்கே கணக்குக் கொடுக்க வேண்டுமே ஒழிய, நம் பிள்ளைகளுக்கல்ல. இவை இரண்டு வெவ்வேறு காரியங்களாகும். உங்கள் பிள்ளைகளுக்குப் பராமரிப்புத் தேவையாய் இருக்கும் காலப்பகுதியில் உங்கள் பிள்ளைகளுக்கான பொறுப்பாளியாகத் தேவன் உங்களை ஆக்கியிருந்தார் மற்றும் நீங்கள் அவர்களுக்காகச் சில ஏற்பாடுகள் பண்ணிடவும் அவர் நோக்கம் கொண்டுள்ளார்.

### 22. (Q661:2) சகோதரிகள் - உணவு அருந்தும் மேஜையில் காணப்படுகையில் ஆசீர்வாதத்திற்காய் ஜெபித்தல்

கேள்வி (1910)-2- உணவு அருந்தும் மேஜையில், வீட்டில் இருக்கையில் என்ன செய்வது? தகப்பன் ஆசீர்வாதத்திற்காய் ஜெபிக்கும் எண்ணமே இல்லாதவராய் இருக்கின்றபடியால், மனைவியாகிய நான்தான் இதற்காய் ஜெபிக்கும் வழக்கம்கொண்டிருந்தேன். ஆசீர்வாதத்திற்கு ஜெபிக்க இனிமேலும் நான் தொடர வேண்டுமா?

பதில் - கணவன் சம்மதம் தெரிவிப்பாரானால், அவர் இதற்கு ஒப்புதல் உள்ளவராய் இருப்பாரானால், நீங்கள் தொடர வேண்டும். ஆகையால் கணவனை நோக்கி: "உணவிற்காய் நான் ஆசீர்வாத ஜெபம் ஏறெடுக்கலாமா? இதில் உங்களுக்குச் சம்மதமா?" என்று கேட்க வேண்டும். ஒருவேளை கணவன் கிறிஸ்தவன் இல்லை என்றாலும், அவரே தொடர்ந்து குடும்பத்தின் தலையாக அடையாளம் கண்டுகொள்ளப்பட வேண்டும்; மேலும் கணவனை நோக்கி: "நான் ஆசீர்வாதத்திற்காய் ஜெபம் ஏறெடுக்கின்றேன்; இதைப்பற்றி நீங்கள் எதுவும் சொல்லக்கூடாது" என்று மனைவி கூறுவதற்குப்பதிலாக, "கணவனே, இதில் உங்களுக்கு மறுப்பு ஏதேனும் உள்ளதா?" என்று கேட்பது சிறந்ததாயிருக்கும். ஒருவேளை அவர் சம்மதம் தெரிவிப்பாரானால், பின்னர் அதைச் செய்வதற்கான அதிகாரம் உங்களுக்கு இருக்கின்றது; மேலும் நீங்களும் எந்த விதத்திலும் அதிகாரத்தைப் பறித்தெடுக்காதவர்களாய் இருப்பீர்கள்.

### 23. (Q673:2) உக்கிராணத்துவம் - கடமை மற்றும் சொத்து

கேள்வி (1910)-2- ஒருவேளை 5000 டாலர் மதிப்புள்ள சொத்து என்னிடம் இருக்கின்றது என்று வைத்துக்கொள்ளுங்கள். என்னுடைய தொழிலில் நான் தொடர்ந்து நிலைத்திருப்பதற்காக, அந்தச்

சொத்தை விற்று, வாடகைக்குப் பணம்கொடுக்கும் அவசியமிருக்க, ஞானமுள்ள உக்கிராணக்காரனென நான் இந்தப் பணத்தை அறுவடை வேலைக்கென்று கொடுத்துவிட கர்த்தர் எதிர்ப்பார்ப்பாரா?

பதில் - இப்பொழுதும் இக்கேள்வியை எழுதியுள்ள அன்பு சகோதரனே, இதைத் தீர்மானிப்பதற்குரிய உரிமையுடையவர் ஆவார். அவர் என்ன செய்ய வேண்டும் என்று நான் தீர்மானித்திட முடியாது; ஏனெனில் அவருடைய சூழ்நிலைமைகள் அனைத்தும் எனக்குத் தெரியாது; ஒருவேளை அவர் சூழ்நிலைமைகள் அனைத்தையும் நான் அறிந்திருந்தாலும்கூட, அவர் என்ன செய்ய வேண்டும் என்று நான் சொல்வது எனக்கடுத்த காரியமல்ல. எதைச் செய்தாலும், அதை அவராகவே மனமுவந்து செய்திட வேண்டும் மற்றும் அவரது பகுத்தறிவே பயன்படுத்தப்பட வேண்டும். ஒரு மனுஷன் அவன் மனைவியின், பிள்ளைகளின் மற்றும் அவனுடன் நெருக்கமான உறவுகொண்டிருந்து, ஆதரவிற்காய் அவனைச் சார்ந்து இருக்கும் மற்றவர்களின் தேவைகளைச் சந்திக்க வேண்டும் என்றும், அவனோ அல்லது அவனைச் சார்ந்திருப்பவர்களோ மற்றவர்களின் உதவியை நாடும் அபாயத்திற்குள்ளாகாதபடிக்குத் தன் சொத்தினை அகற்றிப்போடக்கூடாது என்றுமுள்ள என் கருத்தினை நான் ஏற்கெனவே தெரிவித்திருக்கின்றேன். இதைவிட இக்காரியத்தை இன்னும் தெளிவாய் எப்படிக் கூறுவது என்று எனக்குத் தெரியவில்லை. மேலும் பிரச்சனை இல்லையெனில் சகோதரன் தன் சொத்தை விற்பதும், ஒரு கடையை வாடகைக்கு எடுப்பதும் ஞானமான காரியமாய் இருக்கலாம். ஒரு சொத்தை சொந்தமாகப் பெற்றிருப்பது என்பது எப்போதும் அநுகூலமான காரியமாய் இராது. சிலசமயம் வாடகைக் கடையைப் பெற்றிருப்பதும் நலமாயிருக்கும். இதை அவர்தான் தீர்மானித்திட வேண்டும்.

## 24. (Q673:3) உக்கிராணத்துவத்தில் எதிர்ப்பார்க்கப்படுபவைகள்

கேள்வி (1910)-3- உண்மையுள்ள உக்கிராணக்காரனாய் இருப்பதற்கும், அர்ப்பணிப்பை நிறைவேற்றிடுவதற்கும் வேண்டி, ஒருவர் தன் வீட்டை விற்கும்படிக்குக் கர்த்தர் எதிர்ப்பார்ப்பார் என்று நீங்கள் எண்ணுகின்றீர்களா அல்லது எப்படி மற்றும் எப்போது செய்திட வேண்டும் என்று கர்த்தர் தம் உண்மையுள்ள உக்கிராணக்காரனுக்குக் காண்பித்திடுவாரா?

பதில் - இக்கேள்வியானது எழுதப்பட்டுள்ள விதத்தைப்பார்க்கையில், இதற்குப் பதிலளிப்பது கொஞ்சம் சிரமமே; ஆகையால் இதற்குப் பதிலளிக்க நான் முற்படுவதில்லை; மாறாக இது விஷயத்திலுள்ள என்னுடைய கருத்தினைப் பொதுவான விதத்தில் சொல்லிடுவேன். கர்த்தர் உங்களுக்குச் சில தாலந்துகளையும், அதிகாரங்களையும் கொடுத்திருக்கின்றார் மற்றும் இதில் பணமும் அடங்குகின்றது; மேலும் நீங்கள் அந்தப் பணத்தைப் பயன்படுத்தும்படிக்குக் கர்த்தர் எதிர்ப்பார்க்கின்றார். நீங்கள் உங்களையும், உங்களிடத்திலுள்ள அனைத்தையும் கர்த்தருக்குக் கொடுத்துவிட்டபோது, உங்கள் பணம் அனைத்தையும் நீங்கள் அவருக்கென்று அர்ப்பணித்துவிட்டீர்கள். இது உங்களிடத்திலுள்ள ஒவ்வொரு பைசாவையும் உள்ளடக்குகின்றது; மேலும் அவற்றை அவர் உங்களிடத்திற்குத் திருப்பித் தருகையில் அவர்: "உன்னை நான் உக்கிராணக்காரனாக்குகின்றேன்; இதை எப்படிப் பயன்படுத்தப் போகின்றாய் என்று நான் பார்க்கப் போகின்றேன்; மேலும் இதை வைத்து, அதாவது உன் கரத்தில் காணப்படும் இந்தச் சிறிய தொகையைப் பயன்படுத்துவதிலுள்ள உன் உண்மையினை வைத்து, உன்னை நம்பி எதிர்க்காலத்தில் எவ்வளவு காரியங்களை ஒப்படைத்திடலாம் என்று நான் கணிக்கப்போகின்றேன்" என்று கூறுகின்றார். ஒருவேளை என்னிடத்தில் ஐந்து டாலர்கள் பணம் மாத்திரம்தான் இருக்கின்றது என்றாலும் - எனக்கு வீடு இருக்கின்றதோ இல்லையோ, அந்த ஐந்து டாலர்கள் பணத்திற்கு நான் உக்கிராணக்காரனாய் இருப்பேன்; ஒருவேளை 5000 டாலர்கள் என்னிடத்தில் இருக்குமானால், அதற்கும் நான் உக்கிராணக்காரனாய் இருப்பேன்; ஒருவேளை ஐந்து மில்லியன் டாலர்கள் என்னிடத்தில் இருக்குமானால், அதற்கும் நான் உக்கிராணக்காரனாவேன்; மேலும் எனக்குக் கிடைக்கும் வாய்ப்பிற்கு

ஏற்பவும், என்மீது காணப்படும் பொறுப்புகளுக்கு ஏற்பவும், நான் கர்த்தருக்குப் பிரியமாய் இருக்கும் என்று எண்ணுகிற விதத்தில் அவற்றைப் பயன்படுத்திட விரும்புவேன். ஒருவேளை எனக்கு ஒரு குடும்பம் இருந்து, அவர்கள் தேவைகளுக்காய் என்னைச் சார்ந்திருக்கையில் மற்றும் பிள்ளைகள் மிகவும் சிறியவர்களாய் இருக்கையில் . . . இப்பிள்ளைக்குரிய தேவைகளுக்கான நியாயமான ஏற்பாடுகளை நான் பண்ணிடுவது என்பது தேவ சித்தமாக இருக்கும் மற்றும் நானும் நல்ல உக்கிராணக்காரனாய்ச் செயல்படுகிறவனாயும் இருப்பேன் - ஆனால் அதற்கென்று ஒருவேளை என்னிடத்தில் ஐந்து மில்லியன் டாலர்கள் இருக்கையில், பிள்ளைகள் அனைவரும் ஐசுவரியவான்களாகவும், ஆள் ஒன்றிற்கு ஒரு மில்லியன் டாலர் வீதம் பெற்றுக்கொள்ள வேண்டும் என்பதாகவும் புரிந்துகொள்ளப்படக்கூடாது. இப்படியாக நான் புரிந்துகொள்ள மாட்டேன்; மாறாக பிள்ளைகள் அதிகம் பணம் பெற்றுக்கொள்ளாமல் இருந்தால், அது அவர்களுக்கு மிகவும் நலமாயிருக்கும், கர்த்தருக்கும் மகிமை சேர்க்கின்றதாயிருக்கும். எனினும் என்னிடம் ஐம்பது டாலர்கள் அல்லது ஐயாயிரம் டாலர்கள் மாத்திரமே இருந்திருக்குமானால் நான் என் மகன்கள் மற்றும் மகள்களுக்குக் கொடுத்திருப்பதைக் காட்டிலும், ஒருவேளை நான் ஐந்து மில்லியன் டாலர்களைப் பெற்றிருக்கையில் அவர்களுக்கு அதிகமாகக் கொடுக்க வேண்டும் என்று எண்ணிடுவேன். இப்படி எண்ணுவதை நியாயமானதாகக் கருதி, நான் ஐந்து மில்லியன் டாலர்களை ஒருவேளை பெற்றிருக்கையில், அவர்களுக்கு ஆளுக்கு ஐம்பதினாயிரம் டாலர்கள் கொடுக்க எண்ணிடுவேன். இந்தமட்டும் நான் தாராளமாய் இருக்க வேண்டும் என்று எண்ணிடுவேன். இதற்கும் அதிகமாய் நான் தாராளமாய் இருக்கக்கூடாது என்று எண்ணுகின்றேன். மகன்கள் மற்றும் மகள்களில் யாரேனும் இவ்வளவு அதிகமாய்ப் பங்கு கொடுக்கப்படுவதின் நிமித்தம் விசேஷமாய்ப் பாதகத்திற்குள்ளாகுவார்களானால், பங்கை நான் இன்னும் குறைத்துவிடுவேன். ஆனாலும் எல்லா விஷயத்திலும் உங்கள் கடமையே உங்கள் முன்னிலையில் காணப்பட வேண்டும் - நீங்கள் என்ன செய்ய வேண்டும் என்று தேவன் விரும்புகின்றார்? என்பதே உங்கள் முன்னிலையில் காணப்பட வேண்டும். கர்த்தருக்குப் பிரியமாய் எப்படிக் காணப்படும் என்று எண்ணுகின்றீர்களோ, அதன்படி செய்யுங்கள். இது உங்களுடைய உக்கிராணத்துவம், என்னுடையதல்ல. உங்கள் உக்கிராணத்துவத்தின் விஷயத்தில், நீங்கள் கர்த்தருடைய பிள்ளைகளையும், கர்த்தருடைய வேலையையும் குறித்துச் சிந்திப்பதைவிட, உங்கள் பிள்ளைகளைக்குறித்து அதிகமாய்ச் சிந்திக்கின்றீர்கள் என்றால், இது நீங்கள் அவருக்கும், அவரது வேலைக்கும் உரிய மதிப்புக்கொண்டிருக்கவில்லை என்பதை சுட்டிக்காட்டுகின்றது என்பதை நினைவில்கொள்ளுங்கள். ஆகையால் உங்கள் கரங்களில் காணப்படுபவைகளை எப்படிப் பயன்படுத்தலாம் என்று நீங்கள் தீர்மானிப்பதற்கு முன்பாக, இக்கருத்துகள் அனைத்தையும் கவனத்தில் எடுத்துக்கொள்ளுங்கள். ஒருவேளை எனக்கு மனைவியும், குடும்பமும் இருப்பார்களானால், ஒருவேளை மிக நல்ல வீடு அதிகம் அவசியமில்லாமல் காணப்பட்டால் தவிர மற்றப்படி, வீட்டை விற்பதற்கு நிச்சயமாய் எண்ணமாட்டேன். மாறாக என் குடும்பத்திற்காக வீட்டை வைத்துக்கொள்வதற்கே நிச்சயமாய் எண்ணிடுவேன்; இவ்விதத்தில் தேவையைச் சந்திப்பது என்பது ஒரு தகப்பனாக மற்றும் கணவனாக உள்ள எனக்குரிய கடமையின் ஒரு பாகமாயுள்ளது என்று எண்ணிடுவேன். தேவனுடைய ஜனங்கள் அனைவரும் வீடுகள் பெற்றிருக்க விரும்புகின்றேன் - ஆடம்பரமான வீடுகளல்ல, பெரிய வீடுகள் அல்ல, மாறாக இல்லம் என்று அவர்களால் அழைக்க முடிகின்ற சிறு இடங்களைப் பெற்றிருக்க நான் விரும்புகின்றேன். உண்மைதான் இயேசு தமக்கெனச் சொந்தமாய் வீட்டைப் பெற்றிருக்கவில்லை; எனினும் இயேசு மரிக்கையில், அவர் தம் தாயாகிய மரியாளைத் தாம் அன்புகூர்ந்த சீஷனிடத்தில் ஒப்படைத்த காரியத்தை வாசிக்கையில், அவரது சீஷனாகிய யோவான் வீட்டைப் பெற்றிருந்தார் என்பதும் உண்மையே. இயேசு அன்புகூர்ந்த அந்தச் சீஷன் மரியாளை தன் வீட்டில் சேர்த்துக்கொண்டான். அவருக்கு ஒரு வீடு இருந்தது.

## OVERLAND MONTHLY

**OV 212** [தெரிந்தெடுக்கப்பட்ட பத்திகள்]

# நீ அழாதபடிக்கு உன் சத்தத்தை அடக்கி, நீ கண்ணீர்விடாதபடிக்கு உன் கண்களைக் காத்துக்கொள்

"ராமாவிலே புலம்பலும் கசப்பான அழுகையுமாகிய கூக்குரல் கேட்கப்பட்டது; ராகேல் தன் பிள்ளைகளுக்காக அழுது, தன் பிள்ளைகள் இல்லாதபடியால் அவைகளினிமித்தம் ஆறுதல் அடையாதிருக்கிறாள் என்று கர்த்தர் சொல்லுகிறார். நீ அழாதபடிக்கு உன் சத்தத்தை அடக்கி, நீ கண்ணீர்விடாதபடிக்கு உன் கண்களைக் காத்துக்கொள் என்று கர்த்தர் சொல்லுகிறார்; உன் கிரியைக்குப் பலனுண்டென்று கர்த்தர் சொல்லுகிறார்; அவர்கள் சத்துருவின் தேசத்திலிருந்து திரும்பிவருவார்கள். உன் முடிவைப்பற்றி உனக்கு நம்பிக்கையுண்டு; உன் பிள்ளைகள் தங்கள் தேசத்துக்குத் திரும்பிவருவார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்."

(எரேமியா 31:15-17)

கர்த்தர் எரேமியா தீர்க்கத்தரிசி வாயிலாக, அவரை விசுவாசிக்கும் மற்றும் இறப்பினால் உண்டாகும் துக்கத்தில் காணப்படும் ஒவ்வொரு பெற்றோரின் இருதயங்களுக்கு ஆறுதலின் செய்தியை அனுப்பிவைக்கின்றார். "ராமாவிலே புலம்பலும் கசப்பான அழுகையுமாகிய கூக்குரல் கேட்கப்பட்டது; ராகேல் தன் பிள்ளைகளுக்காக அழுது, தன் பிள்ளைகள் இல்லாதபடியால் அவைகளினிமித்தம் ஆறுதல் அடையாதிருக்கிறாள் என்று கர்த்தர் சொல்லுகிறார். நீ அழாதபடிக்கு உன் சத்தத்தை அடக்கி, நீ கண்ணீர்விடாதபடிக்கு உன் கண்களைக் காத்துக்கொள் என்று கர்த்தர் சொல்லுகிறார்; உன் கிரியைக்குப் பலனுண்டென்று கர்த்தர் சொல்லுகிறார்; அவர்கள் சத்துருவின் தேசத்திலிருந்து திரும்பிவருவார்கள். உன் முடிவைப்பற்றி உனக்கு நம்பிக்கையுண்டு; உன் பிள்ளைகள் தங்கள் தேசத்துக்குத் திரும்பிவருவார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்" (எரேமியா 31:15-17) என்று நாம் வாசிக்கின்றோம்.

இவ்வசனத்தின்மூலம் ஐந்து காரியங்கள் நம் கவனத்திற்கு வருகின்றன:-

**முதலாவது:** உலகம் முழுவதும் மரணத்தின் நிமித்தமான துக்கம் காணப்படுகின்றது; அப்போஸ்தலன் கூறுவதுபோன்று, "ஆகையால் நமக்குத் தெரிந்திருக்கிறபடி, இதுவரைக்கும் சர்வ சிருஷ்டியும் ஏகமாய்த் தவித்துப் பிரசவவேதனைப்படுகிறது" (உரோமர் 8:22).

**இரண்டாவது:** ஆறுதலின் விதமானது விவரிக்கப்பட்டுள்ளது - அது உயிர்த்தெழுதலின் நம்பிக்கையாகும், மரித்தவர்கள் உயிரடைவதன் நம்பிக்கையாகும் - "மரித்தவர்கள் மீண்டும் வருவார்கள்;" அவர்கள் மீண்டும் ஜீவனுக்குள் வருவார்கள்.

**மூன்றாவது:** மரணத்தில் நம் அன்புக்குரியவர்கள் சத்துருக்களின் தேசத்தில் காணப்படுகின்றனர்; அதாவது "பரிகரிக்கப்படுங்கடைசிச் சத்துரு மரணம்" (1 கொரிந்தியர் 15:26) என்று அப்போஸ்தலன் கூறியுள்ளது போன்றதாகும்.

**நான்காவது:** தங்கள் பிள்ளைகளைச் சரியாய் வளர்த்திடுவதற்கான பெற்றோர்களின் பிரயாசங்களானது, பலனற்றுப்போவதில்லை;"உன் கிரியைக்குப் பலனுண்டு."

ஐந்தாவது: இவ்வசனத்தின் கடைசி அம்சம், ஆனாலும் முக்கியத்துவம் வாய்ந்த அம்சமானது, இது கர்த்தருடைய வார்த்தை என்பதாகும்; இது முறிக்கப்படமுடியாது - இவ்வார்த்தைகளானது இவ்விஷயம் தொடர்பான மனுஷருடைய வார்த்தைகளினின்று எவ்வளவுதான் வித்தியாசமாக இருப்பினும், இது நிச்சயமாய் நிறைவேறித் தீரும்.

------------------------------------------------------------------------------------------------------------------------

------------------------------------------------------------------------------------------------------------------------

இப்பொழுது இறுதியாக நம் சந்ததி அனைத்திற்குமான கர்த்தருடைய வார்த்தைகளுக்கும், குறிப்பாகப் பெற்றோர்களுக்கான அவரது வார்த்தைகளுக்கும் . . . "உன் கிரியைக்குப் பலனுண்டு" என்ற அவரது வார்த்தைக்கும் வரலாம். இது எத்தகைய ஓர் ஆசீர்வாதம் மற்றும் ஆறுதல் ஆகும்! இந்த வார்த்தைகளில், தங்கள் பிள்ளைகளை நடத்த வேண்டிய வழியில் பயிற்றுவிக்க நாடிக்கொண்டிருக்கும் பெற்றோர்கள், அவர்கள் மிகவும் அன்புகூர்ந்த பிள்ளைகளை மரணத்தின் அம்புகள் தாக்கினபோது, மிகவும் காயமடைந்து, சோர்ந்துபோய்க் காணப்படுகையில், இத்தகைய பெற்றோர்களுக்கு எத்தகைய ஆறுதலும், ஊக்கமூட்டுதலும் காணப்படுகின்றது. இப்படி மரணத்தில் பறிக்கொடுத்திட்ட பெற்றோர்கள் "ஆ! என் அன்பும், என் அறிவுரைகளும், எனது தாய்க்குரிய பராமரிப்பும், எனது தகப்பனுக்குரிய பராமரிப்பும்/பிரயாசமும் வீணாகிவிட்டது" என்று சொல்லுவதற்கு ஏதுவாய் ஆரம்பத்தில் காணப்படுவார்கள். ஆனால் கர்த்தரோ: "இல்லை; உன் கிரியைக்குப் பலனுண்டு" என்று கூறுகின்றார்.

உங்கள் பிரயாசங்களினுடைய பலனை நீங்கள் எதிர்க்காலத்தில் காண்பீர்கள்; அப்பொழுது நாம் அறியப்பட்டிருக்கிறபடியே அறிந்துகொள்ளலாம். நமது அன்புக்குரியவர்கள் நம்மோடுகூடக் காணப்படுவார்கள்; மேலும் இக்காலத்தில் பிள்ளைகளை நீதியின், சத்தியத்தின், நேர்மையின், பயபக்தியின் அடிப்படையில் வனைந்திடுவதற்குச் செலவிடப்படும் நேரமும், எடுக்கப்படும் பிரயாசமும் நிச்சயமாய் வீணாகாது. இந்தப் பிரயாசங்களுக்கு ஏற்ப, பிள்ளைகள் உயிர்த்தெழுந்து வருகையில் மனம் மற்றும் ஒழுக்கத்தின் வளர்ச்சியில் மிகவும் மேம்பட்டு உயிர்த்தெழுந்துவருவார்கள்; மேலும் இதற்கேற்ப அக்காலத்தில் கர்த்தர் பிள்ளைக்கு முன்பாக வைத்திடும் பிரம்மாண்டமான உயர்ந்த கொள்கைகளை மிக எளிமையாக அடைந்துவிடுவார்கள்.

## எப்படிப் பலனளிக்கப்படும்?

இன்னொரு பக்கத்தில் தன் பிள்ளைகளைக்குறித்து அக்கறையற்றவர்களாகவும், பெற்றோரெனத் தன் சிலாக்கியங்கள் மற்றும் கடமைகளைப் புறக்கணித்தவர்களாகவும் காணப்பட்ட பெற்றோர், தன் பிள்ளைக்குத், தன்னால் எவைகளையெல்லாம் செய்திருக்க முடியும், ஆனால் தான் செய்யாமல் போயுள்ளதைக்குறித்து எதிர்க்காலத்தில் காண்கையில், தன் அசட்டைக்கான பலனைச் சந்தேகத்திற்கிடமின்றி அடைவான்.

மேலும் திவ்விய பிரமாணத்தின்படி, பெற்றோரெனத் தன் கடமையினை உண்மையாய் நிறைவேற்றியுள்ள ஒவ்வொரு பெற்றோரும், தன் கிரியைக்கான பலனைத் தன்னிலே அடைவான் என்றும், தனக்குரிய இந்தக் கடமையினை அசட்டைப்பண்ணியுள்ளதான ஒவ்வொரு பெற்றோரும், தன் கிரியைக்கான பலனைத் தன்னில் அடைவான் என்றும் உள்ளது. பிள்ளையை நடத்த வேண்டிய வழியில் பயிற்றுவிப்பதற்கும், கர்த்தருக்கான பயபக்தியிலும், கர்த்தருக்கேற்ற போதனையிலும் வளர்ப்பதற்கும் வேண்டி பிரயாசம் எடுப்பதன் வாயிலாகத் தன்னைத்தான் வளர்த்துக்கொள்வதற்காகப் பெற்றோருக்கு

வரும் வாய்ப்பினைப் போன்று, வேறு மகா சிலாக்கியமோ அல்லது வாய்ப்போ இல்லை என்று யார்தான் உணராமல் இருந்திருப்பார்கள்!

## குணலட்சணத்தின் வளர்ச்சியும் இடம்பெறுகின்றது

மற்றவர்களுக்கு நன்மை செய்வதற்கான ஒவ்வொரு பிரயாசத்திற்கும், அதிலும் விசேஷமாக உங்கள் சொந்த பிள்ளைகளுக்காக எடுக்கப்படும் ஒவ்வொரு பிரயாசத்திற்கும் ஈடாக ஆசீர்வாதங்கள் உங்கள் சொந்த இருதயங்களில் உண்டாகும் என்பது சந்தேகத்திற்கு இடமின்றி உண்மையே. வருஷங்கள் கடந்து செல்லச்செல்ல இந்த ஆசீர்வாதம் ஆழமாகுவதாக.

**OV 229** [தெரிந்தெடுக்கப்பட்ட பத்திகள்]

# பொன்னான பிரமாணம்

"ஆதலால், மனுஷர் உங்களுக்கு எவைகளைச் செய்ய விரும்புகிறீர்களோ,
அவைகளை நீங்களும் அவர்களுக்குச் செய்யுங்கள்; இதுவே நியாயப்பிரமாணமும்,
தீர்க்கத்தரிசனங்களுமாம்." (மத்தேயு 7:12)

தேவனைப் பற்றியதான நம்முடைய புரிந்துகொள்ளுதலானது, நம்முடைய உயர்ந்த கொள்கைகளையும், கோட்பாடுகளையும் படம்பிடித்துத் தருகின்றதாயிருக்கும். சர்வ வல்லவரைக் குறித்துக் கீழான அல்லது அரைக்குறையான புரிந்துகொள்ளுதலைக்கொண்டிருக்கும் யார் ஒருவனும், அவனது ஜீவயத்தின் நடத்தைகளில் ஏறக்குறைய கீழ்த்தரமானவனாகவும் மற்றும் கவனக்குறைவான வனாகவுந்தான் காணப்படுவான்; ஏனெனில் ஒவ்வொரு மனுஷி அல்லது மனுஷன் தனது சொந்த கொள்கைகளையே பின்பற்றுகிறவனாகக் கொஞ்சம் காணப்படுவான். மேலும் இது "பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவைப்போன்று பூரணசற்குணராயிருக்கக்கடவீர்கள்" என்ற நமது மீட்பருடைய வார்த்தையினால் உறுதிப்படுத்தவும் பட்டுள்ளது. இருண்ட யுகங்களில் வாழ்ந்திட்டதான நம்முடைய முன்னோர்கள் ஒருவரையொருவர் கழுமரத்தில் கட்டி எரித்தார்கள் மற்றும் ஒருவரையொருவர் சித்திரவதைப் பண்ணினார்கள்; காரணம் தேவனுடைய குணலட்சணம் குறித்த அவர்களது தவறான புரிந்துகொள்ளுதலேயாகும். காரணம் அவர்களது கொள்கை மிகவும் கீழ்த்தரமானதாய்க் காணப்பட்டது. அவர்கள் உருவாக்கி, நமக்கும் கையளித்ததான விசுவாசப் பிரமாணங்களை உண்மையிலேயே நம்பினவர்களாக அவர்கள் காணப்பட்டனர்; அதாவது தற்காலத்தில் பரலோக நிலைக்கென்று கொஞ்சம் பரிசுத்தவான்களை மனுஷர் மத்தியிலிருந்து தேவன் கூட்டிச் சேர்த்துக்கொண்டிருக்கிறார் என்றும், மீதமானவர்களை - அதாவது ஆவியின்படி நடவாமல், மாம்சத்தின்படி நடக்கின்ற யாவரையும் - பேய்களின் கரங்களில் நித்திய காலத்திற்குமான சித்திரவதைக்கென்று தேவன் ஒப்புக்கொடுத்துவிடுவார் என்றும் அவர்கள் உண்மையிலேயே நம்பினவர்களாகக் காணப்பட்டனர்.

வேதாகமப் போதனைகளின் விஷயங்களில் இத்தகைய தவறான கருத்துக்களைத் தங்கள் மனதுக்கு முன்பாகக் கொண்டிருந்து, அந்தத் தவறான கருத்துக்களை அப்படியே பின்பற்றினவர்களாக மாத்திரம் காணப்பட்டனர். இருண்ட யுகங்களின் நியமங்களுக்கு அப்பால், நாகரிகமடைந்துள்ள மனிதர்கள் கடந்துவந்துள்ளார்கள் என்பது பாராட்டத்தகுந்த காரியமேயாகும். எனினும் தப்பறையினின்றுள்ள அவர்களது விடுதலையானது, அது கொண்டுவர வேண்டியதான ஆசீர்வாதங்கள் அனைத்தையும் அவர்களுக்குக் கொண்டுவரவில்லை என்பது வருத்தம் தரும் காரியமாகவே உள்ளது.

இவர்கள் - வேதாகமத்தைப் புறக்கணிப்பதன் மூலமும், அதன் தவறிழைக்காத் தன்மையினை மறுதலிப்பதன் மூலமும், வேதாகமப் போதனைகளுக்கு முரண்பாடாய் உள்ள தங்கள் சொந்த கணிப்புகளையும், கருத்துக்களையும் ஏற்றுக்கொள்வதன் மூலமும் - உயர் நிலைகளைப் பெருமளவில் எட்டியுள்ளனர். வேதாகமம் திவ்விய ஏவுதலின்படியான தேவனுடைய வெளிப்படுத்தல் என்பதை இன்றுள்ள கிறிஸ்தவ மண்டலத்தின் உயர் சிந்தையுள்ள பெருபான்மையானவர்கள் மறுத்து, வேதாகமம் அறியாமையில் காணப்பட்ட நல்ல நோக்கமுடைய புருஷர்களின் படைப்பு மாத்திரமே என்று அவர்கள் கருதுவதும், வேதத்தை எழுதினவர்களைக்காட்டிலும் இன்றைய காலத்தின் இறையியல் வல்லுனர்கள் எல்லாவிதத்திலும் வல்லவர்களாகவும், வேதாகமத்தைவிட மேலான காரியங்களைத் தங்கள் சொந்தத்திலிருந்து எழுத வல்லவர்களாகவும் இருக்கின்றனர் என்று அவர்கள் கருதுவதும் எத்துணை வருத்தமான காரியமாக உள்ளது.

## தேவனுடைய சிங்காசனத்தின் ஆதாரம்

தேவனுடைய இராஜ்யத்திற்கு அல்லது சிங்காசனத்திற்கு நீதி ஆதாரமாய்க் காணப்படுகின்றது என்ற வேதாகமத்தின் கருத்தானது, தேவனுடைய குணலட்சணங்களின் ஒவ்வொரு அம்சத்திற்கும், நீதியுடன்கூடத் தொடர்பு இருக்கின்றது எனும் விதத்தில், நீதியின் முக்கியத்துவத்தினைக் குறித்த ஒரு புரிந்துகொள்ளுதலை மனதிற்குக் கொடுக்கின்றதாயிருக்கின்றது. "தயாளமாய் இருக்கிறதற்கு முன்னே முதலாவதாக நீதியாயிரு" என்பது மனுஷர் மத்தியில் காணப்படும் பழமொழியாகக் காணப்படுகின்றது மற்றும் இது தேவனுடைய குணலட்சணம் குறித்து வேதவாக்கியங்கள் தெரிவிக்கும் காரியங்களுக்கு முழு இசைவாகவே காணப்படுகின்றது. அவர் முதலாவது நீதியுள்ளவராகக் காணப்படுகின்றார் - நீதியில் குறைவுப்பட்ட நிலைமையில் அவர் எதிலும் காணப்படுகிறதில்லை. அவரது ஞானம், அவரது வல்லமை, அவரது அன்பு யாவும், நீதி எனும் இப்பண்புடன் இணங்கி மற்றும் இதனை ஆதாரமாய்க் கொண்டுசெயல்பட வேண்டும். இப்படியாகவே இந்தக் குணலட்சணத்தினைப் பின்பற்றுகிற யாவருடைய விஷயத்திலும் காணப்பட வேண்டும். அவர்களும் முதலாவதாக நீதியுள்ளவர்களாகக் காணப்பட வேண்டும். நீதி எனும் இந்த அம்சத்தினை எவ்வளவேனும் புறந்தள்ளின நிலையில், எந்தவொரு அஸ்திபாரத்தின் மீதும் கட்டியெழுப்பப்படுகின்றதான குணலட்சணமானது, தவறானதாக, தகாததாக, பாவமானதாகக் காணப்படும். தேவனுடைய சாயலிலும், ரூபத்திலும் படைக்கப்பட்ட முதல் மனுஷன் நீதியைத் தனது குணலட்சணத்திற்கான அஸ்திபாரமாகப் பெற்றிருந்திருக்க வேண்டும். முதல் மனிதனின் சந்ததியினர் யாவரும் இப்பண்பினைப் பல்வேறு அளவுகளில் பெற்றிருப்பினும், இன்னமும் அதைப் பெற்றிருக்கவே செய்கின்றனர். அதைத்தான் நாம் மனசாட்சியென்றும், நீதி நியாயம் என்றும் அழைப்பதுண்டு. சிலரிடம் இப்பண்பானது மிகவும் பலன்குன்றிக் காணப்படுவதினால் பாராட்டு விரும்புதல், முதலான மனதின் பலமான பண்புகளினால் எளிதில் மேற்கொள்ளப்படுகின்றது. இதன் காரணமாகத்தான் மனித மனங்களின் பலமான பண்புகள் யாவும் கட்டுப்படுத்தப்படுவதற்கும், அவர்களது மனசாட்சியினையும், நீதி நியாயம் குறித்த அவர்களது உணர்வுகளையும் ஊக்குவிப்பதற்கும் என்று சிறைச்சாலைகள் அவசியமாய் இருக்கின்றன. நீதியின் இந்தக் கொள்கைகளானது, ஆரம்பம் துவங்கி திவ்விய கொள்கைகளாகக் கருதப்பட்டும், மதிக்கப்பட்டும் வருகின்றன மற்றும் நாத்திகர்களைத் தவிர மற்றவர்களால் இதுவரையிலும் அப்படியாகவே கருதப்பட்டும் வருகின்றன.

## பொன்னான பிரமாணம் சபைக்கானதாகும்

பொன்னான பிரமாணம் அல்லது வேதவாக்கியங்களின் ஏதேனும் செய்தியானது மனுக்குலத்தின் உலகத்திற்காகக் கொடுக்கப்பட்டவை என்று அனுமானிப்பவர்கள் மாபெரும் தவறு செய்தவர்களாய்

இருக்கின்றனர். இல்லை; அவை சபைக்கு மாத்திரமே உரியனவாகும் மற்றும் இதற்கான ஆதாரமானது நமது கர்த்தருடைய வார்த்தைகள் அவருடைய சீஷர்களுக்குப் பேசப்பட்டவையாய் இருக்கின்றன என்பதில் விளங்குகின்றன; இதுவுமல்லாமல் அப்போஸ்தலர்களின் நிருபங்கள்கூடப் பரிசுத்தவான்களுக்கென்றும், விசுவாச வீட்டாருக்கும் என்றும்தான் எழுதப்பட்டிருக்கின்றன எனும் காரியத்திலும் விளங்குகின்றன. மற்றவர்களால் அவற்றைச் சரியாகப் பார்க்க, புரிந்துகொள்ள, உணர்ந்துகொள்ள முடியாது. உலகப்பிரகாரமான மனதினால் "நேர்மையே சிறந்த கொள்கை" எனும் கூற்றினைப் புரிந்துகொள்ள முடியும் மற்றும் புரிந்துகொண்டிருக்கின்றனர். அதுவும் பல மாற்றங்களுக்குப் பிற்பாடே இப்படியாக இறுதியில் புரிந்திருக்கின்றனர்; ஆனாலும் இக்கூற்றினை ஒரு கொள்கையெனவும், ஜீவியத்திற்கான சட்டம் எனவும் ஏற்றுக்கொள்வதற்கு விரும்பும்விதத்தில், நம்முடைய ஆதார வசனத்தின் காரியத்தினை அவர்களால் புரிந்துகொள்ள முடியாது.

இந்தக் கருத்துக்கு இசைவாக நம்முடைய ஆதார வசனத்தின் முக்கியத்துவத்தினை - பிதாவினால் ஆசீர்வதிக்கப்பட்டவர்களுக்கு, கிறிஸ்து இயேசுவுக்குள் இழுக்கப்பட்டு, அழைக்கப்பட்டு, பரிசுத்தமாக்கப்பட்டவர்களுக்கு மற்றும் திவ்விய குணலட்சணத்தின் ஆதாரமாய் நீதி காணப்படுகின்றது என்று ஓரளவிற்குப் பார்த்தவர்களுக்கு மாத்திரமே வலியுறுத்த விரும்புகின்றோம். பொன்னான பிரமாணம் என்பது, கிறிஸ்தவனுடைய கடமை அனைத்தையும் உள்ளடக்கினதல்ல; இப்பிரமாணத்தினுடைய காரியங்களையும் தாண்டி அவன் நடத்தையிலும், குணலட்சணத்தின் வளர்ச்சியிலும் வளரவேண்டும் என்று அவனிடத்தில் எதிர்ப்பார்க்கப்படுகின்றது. அவன் இப்படிக் கூடுதலாய் வளர்ந்து முன்னேறுவது என்பது அன்பிலுள்ள அவனது வளர்ச்சியினைச் சுட்டிக்காட்டுகின்றதாய் இருக்கும். பொன்னான பிரமாணம் என்பது அளவுகோலில், அடிப்படையான/கீழ்த்தள/lowest standard அளவாகும் மற்றும் இது சபையிலும் உலகத்திலுமுள்ள மற்றவர்களுடனான நம்முடைய கையாளுதலுக்கான - நீதிக்கான அளவுகோலாகும். சுருக்கமாகச் சொல்ல வேண்டுமெனில், நம்முடைய ஆதார வசனமானது, மனுஷர்களுடைய சாதாரண காரியங்களுக்கு அப்பாற்பட்டதாயினும், அது கிறிஸ்துவினுடைய ஒவ்வொரு பின்னடியாராலும் ஒவ்வொரு நாளும் மற்றும் ஒவ்வொரு மணி நேரமும் பயன்படுத்தப்பட வேண்டும். "மனுஷர் உங்களுக்கு எவைகளைச் செய்ய விரும்புகிறீர்களோ, அவைகளை நீங்களும் அவர்களுக்குச் செய்யுங்கள்." இந்தவொரு பிரமாணத்தினை நமது கர்த்தர் ஒரு சுவிசேஷநியமமாக மற்றும் அன்பின் நியமமாகக் கொடுக்கவில்லை என்பது, இதைக் கூறியதோடுகூட அவர், "இதுவே நியாயப்பிரமாணமும், தீர்க்கத்தரிசனங்களுமாம்" என்று கூறின வார்த்தைகளில் விளங்குகின்றது; அதாவது இதுவே நீதியினைச் செய்திட நாடிடும் யாவரிடமும் - நியாயப்பிரமாணமும், தீர்க்கத்தரிசனங்களும் எதிர்ப்பார்க்கின்றன என்ற விதத்தில் கூறினார்.

பொன்னான பிரமாணம் எனும் அளவுகோலைத் தாண்டி, மேலாய் நாம் அன்பில் அடையும் எந்தவொரு வளர்ச்சியும்தான், கிறிஸ்துவில் புதுச்சிருஷ்டிகளென உள்ள நம்முடைய வளர்ச்சியாய்க் காணப்படும். மற்றவர்கள் நமக்கு என்ன செய்ய வேண்டும் என்று நாம் எண்ணுகிறோமோ, அதையே நாமும் மற்றவர்களுக்குச் செய்ய வேண்டும் என்று நீதியானது எதிர்ப்பார்க்கின்றதாய் இருக்கின்றது. அன்போ: "நான் எந்தக் கோரிக்கையும் வைக்கிறதில்லை; ஆனால் திவ்விய அன்பின் நீளங்களையும், உயரங்களையும், ஆழங்களையும் உனக்குக் காண்பித்துத் தந்து, அதை நீ உணர்ந்துகொள்வதைக் காண்பதற்கும் மற்றும் உங்களுக்காகத் தம் ஜீவனையே தந்தவரான தேவனுடைய அன்பின் குமாரனுடைய சாயலாகிடுவதற்கு எப்படி நீ நாடுகின்றாய் என்பதைக் காண்பதற்கும் காத்திருப்பேன்" என்று கூறுகின்றதாய் இருக்கின்றது. சீஷனாய் இருப்பதற்கென்றும், கர்த்தருடைய அடிச்சுவடுகளில் நடப்பதற்கென்றும் அர்ப்பணம் பண்ணினவர்களிடம், "இயேசுவின் மாதிரிக்கேற்ப - நாமும்

சகோதரருக்காக ஜீவனைக்கொடுக்கக் கடனாளிகளாய் இருக்கிறோம்" என்று பரிசுத்த பவுல் அடிகளார் கூறுகின்றார்.

## அன்பானது பொல்லாங்குச் செய்யாது

கர்த்தருடைய ஜனங்கள் யாவரும் அவரையும், சகோதரர்களையும், தங்கள் சத்துருக்களையும்கூட அன்புகூர்ந்திட வேண்டும். எனினும் தற்போது அன்பைக்குறித்துப் பார்ப்பதை இத்தோடு நிறுத்திவிட்டு, நம்முடைய நடவடிக்கைகளின் விஷயத்தில் பொன்னான பிரமாணத்தின் எளிமையான நீதியானது எப்படிக் காணப்பட வேண்டும் என்பதை மாத்திரம் பார்த்திடலாம். முற்றிலும் அன்பிற்கு அப்பாற்பட்டதும், முற்றிலும் நீதி சம்பந்தப்பட்டதுமான இந்தப் பொன்னான பிரமாணத்திற்கு இசைவாக நம்முடைய அன்றாட ஜீவியங்கள் எப்படிக் காணப்படுகின்றன? ஒருவேளை நீங்கள் எஜமானராக இருப்பீர்களானால், இந்தப் பிரமாணத்திற்கு இசைவாக உங்களின் கீழ் வேலை பார்ப்பவனை நடத்துகின்றீர்களா மற்றும் ஒருவேளை நீங்கள் வேலைக்காரனாகவும், அவன் எஜமானாகவும் இருந்திருந்தானானால், அவன் உங்களுக்கு என்ன செய்ய வேண்டும் என்று நீங்கள் விரும்புவீர்களோ, அதைத்தான் இப்போது நீங்கள் எஜமானாய் இருக்கையில், அவனுக்குச் செய்கின்றீர்களா?

நீங்கள் எஜமானாய்க் காணப்படுவீர்களானால், பின்வருமாறு உங்களிடத்திலேயே கேட்டுக்கொள்ளுங்கள்: "ஒருவேளை எங்கள் ஸ்தானம் மாறியிருந்து நான் வேலைக்காரனாகவும், அவன் எஜமானாகவும் இருந்திருந்தால், அவன் என்னையும், என் காரியத்தையும் எப்படிக் கையாள வேண்டும் என்று விரும்பியிருந்திருப்பேனோ, அப்படித்தான் நான் என் வேலைக்காரரையும், அவன் காரியங்களையும் கையாளுகின்றேனா? ஒருவேளை உங்கள் ஸ்தானங்கள் மாறியிருந்து, எப்படி உங்கள் கறிக்கடைக்காரனும், உங்கள் ரொட்டிக்கடைக்காரனும், உங்கள் காய்கறிக்கடைக்காரனும் உங்களைக் கையாள வேண்டும் என்று விரும்பியிருந்திருப்பீர்களோ, அப்படித்தான் உங்கள் கறிக்கடைக்காரனையும், உங்கள் ரொட்டிக்கடைக்காரனையும், உங்கள் காய்கறிக்கடைக்காரனையும் தாங்கள் கையாளுகின்றீர்களா? அவர்களிடத்தில் தாங்கள் மரியாதையாய் நடந்துகொள்ளுகின்றீர்களா மற்றும் அவர்களுக்குத் தேவையற்ற பிரச்சனை கொடுக்க விருப்பமற்றவர்களாய் இருக்கின்றீர்களா? அவர்களுக்கான பணத்தினை உடனடியாகக் கட்டிவிடுகின்றீர்களா? அல்லது தாங்கள் ஒருவேளை வாடிக்கையாளர் நிலைமையில் காணப்பட்டிருந்தால், உங்களை வியாபாரி எப்படி நடத்த வேண்டும் என்று விரும்புவீர்களோ, அப்படித்தான் நீங்கள் வியாபாரியாகக் காணப்படுகையில், உங்கள் வாடிக்கையாளர்களை நடத்துகின்றீர்களா?

அவர்களிடத்தில் நியாயமான விலையினைத்தான் தெரிவிக்கின்றீர்களா? அவர்களுக்குப் பொருட்களைச் சரியான எடை அளவில்தான் கொடுக்கின்றீர்களா? உங்களுக்கு நல்ல பொருட்கள் கொடுக்கப்பட வேண்டும் என்று நீங்கள் விரும்புவதுபோன்று, நீங்களும் உங்கள் வாடிக்கையாளர்களுக்கு நல்ல பொருட்களைக் கொடுக்கின்றீர்களா? நீங்கள் நல்ல ஓர் அயலானாய் இருக்கின்றீர்களா? உங்கள் பிள்ளைகள் மற்றவர்களுக்குத் தொந்தரவாய் இராதபடிக்குப் பார்த்துக் கொள்கின்றீர்களா? உங்கள் வீட்டுக் கோழிகள் உங்கள் அயலார்களின் தோட்டங்களை நாசமாக்காதபடிக்குப் பார்த்துக்கொள்கின்றீர்களா? உங்கள் வீட்டு நாய் ஆக்ரோஷமானதாய் இல்லாமலும், அதன் குரைப்புச் சத்தத்தினால் அயலார்களின் தூக்கத்திற்கு இடைஞ்சல் இல்லாமலும் பார்த்துக்கொள்கின்றீர்களா? சுருக்கமாய்ச் சொல்ல வேண்டுமெனில் பொன்னான பிரமாணத்தின்படி நீதியாய் உங்கள் அயலானை நடத்துகின்றீர்களா? அதாவது உங்கள் அயலான் உங்களுக்கு என்ன செய்ய வேண்டுமென்று விரும்புவீர்களோ, அதைத்தான் நீங்களும் உங்கள் அயலானுக்குச் செய்கின்றீர்களா? அடிக்கடி இக்கேள்வியினை உங்களிடத்தில் கேட்டுக்கொள்ளுங்கள்.

இப்பொழுது நாம் வீட்டின் காரியங்களுக்குத் திரும்பி, அவைகளைப் பொன்னான பிரமாணத்தின்படி அளவிட்டுப் பார்க்கலாம். புருஷர்களாகிய நீங்கள், உங்கள் மனைவிகளை எப்படி நடத்துகின்றீர்கள்? மனைவிகளாகிய நீங்கள், உங்கள் புருஷர்களை எப்படி நடத்துகின்றீர்கள்? ஒருவருக்கொருவர் உங்கள் வார்த்தைகளில், உங்கள் நடத்தைகளில், உங்கள் எதிர்ப்பார்ப்புகளில் பொன்னான பிரமாணத்தினைச் செயல்படுத்துகின்றீர்களா? இல்லையேல் மற்றவர் சகித்திருக்கும் எல்லை மட்டும் அற்பத்தனமாய், சுயநலமாய் நடந்து, வாய்ப்பை உங்களுக்குச் சாதகமாய்ப் பயன்படுத்திக்கொள்கின்றீர்களா? பொன்னான பிரமாணத்தின்படித்தான் உங்கள் குழந்தைகளைக் கையாளுகின்றீர்களா? பெற்றோராய்ப் பிள்ளைகளுக்குச் செய்ய வேண்டிய கடமை குறித்ததான உங்களது மேலான கொள்கையின்படி செயல்பட்டு, ஒரு முன்மாதிரியான பெற்றோராய் நடந்துகொள்கின்றீர்களா? அவர்களைப் பயிற்றுவிக்கும் விஷயத்தில் உங்களுக்குப் பொறுப்புக் காணப்படுகின்றது என்றும், சூழ்நிலைகள் அனுமதிப்பதற்கேற்ப, அவர்களுக்கு நல்ல சூழ்நிலைகளையும், மகிழ்ச்சியையும், கல்வியறிவையும் கொடுப்பதிலும், நல்வாழ்க்கையை அடைய ஆயத்தப்படுத்துவதிலும் உங்களுக்குப் பொறுப்புக் காணப்படுகின்றது என்றும் உங்களுக்கு ஞாபகம் இருக்கின்றதா? அல்லது அவர்களது நலனுக்கடுத்தவைகளில் தாங்கள் அலட்சியமானவர்களாய்க் காணப்படுகின்றீர்களா? உங்கள் பொறுப்புகளைக் குறித்து அலட்சியமாய்க் காணப்படுகின்றீர்களா? உங்கள் பிள்ளைகளுக்கு சில உரிமைகள் காணப்படுகின்றது என்றும், அவர்கள் முதிர்ச்சியடைகையில்/வளர்கையில் அவ்வுரிமைகளும் அதிகரிக்கின்றது என்றும் நீங்கள் கண்டுகொண்டுள்ளீர்களா? அல்லது இவைகளைக் குறித்து மறந்தவர்களாகவும், பிள்ளைகளைக் குழந்தைப் பருவத்தில் வைத்திருந்தது போன்று கட்டுப்பாட்டில் வைப்பதற்கு முற்பட்டு, அவர்கள் தங்களுக்கு அநீதி செய்யப்படுகின்றது என்று கோபம் கொண்டு, குடும்பப்பிரச்சனை உண்டாகும் அளவுக்கு அவர்களது பண்புகளைக் கடுகடுப்பானவைகளாக்கி, அவர்களை மகிழ்ச்சியற்றவர்களாக்குகின்றீர்களா? ஒருவேளை நீங்கள் பிள்ளைகளானால், நீங்கள் உங்கள் பெற்றோரைக் குறித்தும், அவர்களுடைய நலனுக்கடுத்தவைகளைக் குறித்தும், அவர்களுடைய விருப்பங்கள் குறித்தும், அவர்களது மகிழ்ச்சிக் குறித்தும் சிந்திக்கின்றீகளா? உங்கள் பிள்ளைகள் உங்களிடத்தில் கரிசனையாய் இருக்க வேண்டும் என்று விரும்புவதுபோன்று, உங்கள் பெற்றோர்கள் விஷயத்தில் கரிசனையாய் இருக்கின்றீர்களா? நீங்கள் சிறுபிள்ளையாய் இருக்கையில், உங்களுக்காக உங்கள் பெற்றோர்கள் பாடுபட்ட, கஷ்டப்பட்ட, பெலவீனப்பட்ட அந்த மணி நேரங்களையும், வாரங்களையும் நினைவில் வைத்திருக்கின்றீர்களா? மேலும் அந்த அன்பிற்குக் கைமாறு செய்ய நாடிக்கொண்டிருக்கின்றீர்களா? மற்றும் அவர்களது கடைசி நாட்களை, அவர்களது ஜீவியங்களிலேயே உள்ள சந்தோஷமான நாட்களாக்குகின்றீர்களா? உங்கள் பெற்றோர்கள் விஷயத்தில் பொன்னான பிரமாணத்தினைக் கடைப்பிடிக்கின்றீர்களா? உங்கள் உடன்பிறந்த சகோதரர்கள் மற்றும் சகோதரிகள் விஷயத்தில் அதைக் கடைபிடிக்கின்றீர்களா? அவர்கள் உங்கள் பொருள்களைக் கடனாக வாங்கிச் சென்று திருப்பித்தராதபோது, நீங்கள் அவர்களது பொருட்களைக் கடனாக வாங்கிச் சென்று திருப்பிக்கொடுக்காமல் பழித்தீர்த்துக்கொண்டு, குடும்பத்தில் தொடர்ந்து, அமைதியின்மையினை உண்டுபண்ணிக்கொண்டிருக்கின்றீர்களா? அல்லது நீங்கள் நீதியின் பொன்னான பிரமாணத்தினைக் கடைப்பிடித்து, உங்களுக்கோ அல்லது உங்கள் உடைமைகளுக்கோ எவைகள் செய்யப்படக்கூடாது என்று நீங்கள் விரும்புகின்றீர்களோ, அதை நீங்கள் உங்கள் உடன்பிறந்த சகோதரனுக்கும், சகோதரிக்கும் அல்லது அவர்களது உடைமைகளுக்கும் செய்யாமல் இருக்கின்றீர்களா?

## HARVEST GLEANINGS

**1HG 650** [தெரிந்தெடுக்கப்பட்ட பத்திகள்]

# குற்றத்தன்மைக்கான பிரதான காரணம்

"இதோ, நான் துர்க்குணத்தில் உருவானேன்; என் தாய் என்னைப் பாவத்தில் கர்ப்பந்தரித்தாள்."
(சங்கீதம் 51:5)

நோய்க் கண்டறிதல் என்பது எந்த ஒரு நோயையும் குணமாக்குவதற்கு ஏறெடுக்கப்படும் முயற்சியில் மிக முக்கியமானதாகக் காணப்படுகின்றது. இது நோய் விஷயத்திலும், துர்நடத்தை விஷயத்திலும், மனுக்குலத்தின் எவ்வகையான மற்ற வியாதிகள் விஷயத்திலும் உண்மையாகவே காணப்படுகின்றது. பாவத்தின் ஆரம்பத்தையும், நம் மத்தியிலும், மற்றவர்கள் மத்தியிலும் பாவத்தின் செயல்பாட்டினுடைய வழிமுறையையும் நாம் நன்கு புரிந்துகொள்கையில், அதை நாம் நன்கு எதிர்த்துப் போராடுகிறவர்களாக இருக்கமுடியும். இந்த வியாதியை அதிகரிக்கப்பண்ணுவது எது என்றும், எவை இந்த வியாதியை அழித்திடும் என்றும் நாம் அறிந்துகொள்ள வேண்டும்.

நம்முடைய முன்னோர்கள் "முழுமையான சீர்க்கேடு" ஏற்பட்டுவிட்டது என்று கூறி தவறு செய்துவிட்டனர். முற்றிலுமாகச் சீர்க்கெட்டுப்போன மற்றும் நீதி மற்றும் உண்மைமீதான விருப்பம் முற்றிலும் இல்லாத மற்றும் அனைத்து நல்செல்வாக்குகளுக்கும் உணர்வற்றுப்போன எந்த ஒரு மனுஷனையும் நாம் யாருமே சந்தித்ததில்லை. "நீதிமான் ஒருவனாகிலும் இல்லை" - அனைவரும் பாவிகளாய் இருக்கின்றனர் என்னும் வேதவாக்கிய அறிக்கைக்கு நம் அனுபவங்களும்கூடச் சாட்சி பகர்கின்றது. எனினும் வேதாகமமானது இக்காரியத்தினுடைய அடிவேர்வரையிலும் தெரிவிக்கின்றது; மேலும் பாவத்தின்மீதான மனப்பற்றுதலுடன், பாவ நிலைமையிலேயே நாமும், மனுக்குலம் அனைவரும் பிறந்துள்ளோம் எனும் நம்முடைய ஆதார வசனத்தினுடைய அறிக்கைக்கு, அனுபவமானது சான்றுபகர்கின்றது.

எனினும் தேவன் நம்மைப் பாவிகளாக்கிட்டார் என்றும் நாம் முடிவுபண்ணிடக்கூடாது; ஏனெனில் இக்கருத்திற்கு எதிராகவே வேதத்தின் கருத்துக் காணப்படுகின்றது; மேலும் "அவர் கிரியை உத்தமமானது/நிறைவானது" என்று வேதம் நமக்கு உறுதிப்படுத்துகின்றதாய் இருக்கின்றது (உபாகமம் 32:4; KJV/திருவிவிலியம்). வேதத்தின்படி நாம் நம்முடைய ஜீவன்களை நம்முடைய பெற்றோர்களிடமிருந்து பெற்றுக்கொண்டோம்; நம் பெற்றோர்கள் அவர்கள் பெற்றோர்களிடமிருந்து பெற்றுக்கொண்டார்கள்; முதலாவதாகத் தகப்பனாகிய ஆதாமிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்டது. நம் முதலாம் பெற்றோர்கள் பாவஞ்செய்து, திவ்விய தண்டனையாகிய மரணத்தின்கீழ் வந்தார்கள் என்று வேதம் நமக்குத் தெரிவிக்கின்றதாய் இருக்கின்றது; மேலும் இது மனதளவில், ஒழுக்க விஷயத்தில் மற்றும் சரீர அளவில் சீரழிவைச் சுட்டிக்காட்டுகின்றதாய் இருக்கின்றது. "இப்படியாக, ஒரே மனுஷனாலே பாவமும் பாவத்தினாலே மரணமும் உலகத்தில் பிரவேசித்ததுபோலவும், எல்லா மனுஷரும் பாவஞ்செய்தபடியால், மரணம் எல்லாருக்கும் வந்ததுபோலவும் இதுவுமாயிற்று" (உரோமர் 5:12) என்று அப்போஸ்தலன் தெரிவிக்கின்றார்.

நம் சந்ததியின்மீது கடந்துவந்திட்டதான இந்த மரணசாபமும், அது பிறப்புமுதற்கொண்டு நம்மைப் பாதிக்கும் காரியமும் மிகமோசமான நோயாகும். இது நித்திய சித்திரவதையென்னும் சாபமென்று

தவறுதலான விசுவாசப்பிரமாணங்களினால் தெரிவிக்கப்பட்ட சாபத்தைவிட மிகவும் நியாயமான சாபமாக இருப்பினும், தேவனுடைய இந்தச் சாபமானது மிகவும் பயங்கரமானதாகவும், உலகம் முழுவதும் காணப்படுகின்றது. "நித்திய சித்திரவதையில் நீ ஜீவிப்பாய்" என்று ஒருவேளை இருந்திருந்தால் இருக்கும் பயங்கரத்தைவிட, "சாகவே சாவாய்" எனும் தண்டனையானது குறைவான பயங்கரமுடையதாய் இருக்கின்றது.

ஆகையால் நம்மிலும், மற்றவர்களிலும் ஒழுக்கமற்றத் தன்மைகளையும், பாவகரமான தன்மைகளையும் நாம் காண்கையில், இவைகள் விழுகை மற்றும் சாபத்திற்கான சாட்சிகள் என்று புரிந்துகொள்கின்றோம்; மேலும் இத்தகைய செல்வாக்குகளின்கீழ்க் காணப்படும் அனைவர்மீதும் அனுதாபங்கொள்ளப்பட வேண்டும். உண்மை அனுதாபமானது பாவத்திற்காக அனுதாபங்கொள்ளாமல், மாறாக பாவநிலையினால் முடமாகியுள்ள பாவியின்மீது அனுதாபங்கொள்கிறது. பாவியின் விடுதலைக்காக வேண்டி, பாவத்தை ஒழிக்கத் தீவிர பிரயாசங்கள் அவசியமாகும்; எனினும் பாவம் மற்றும் மற்றவர்களின் விஷயத்தில் நம்மால் ஏறெடுக்கப்படும் நம்முடைய சிறந்த பிரயாசங்களானது, உண்மைகள்பற்றின அறிவின்மூலமாகவும், தகுதியான அனுதாபம் பாராட்டுதல்மூலமாகவும் பலனடையமுடியும். அனுதாபம் அல்லது மனதுருக்கமில்லாமல் வழங்கப்படும் ஈவிரக்கமற்ற நீதியினால் உதவப்படாமல், மாறாக அனுதாப உதவியில்லாமையின் காரணமாகவே அநேகம் ஜனங்கள் அநேகமாகப் பாதிப்படைந்துள்ளனர். இந்தப் படிப்பினையை நாம் மிகத் தாமதமாகக் கற்றுவருகின்றோம்.

## பெற்றோரின் அனுதாபம் அவசியம்

மனுஷீக அனுதாபமானது காரியங்களினுடைய உண்மைப்பற்றின அறிவின் வாயிலாக விரிவடைகையில் சந்தேகத்திற்கிடமின்றி அந்தறிவு பெருக்கத்தினால் பெற்றோர்கள் மற்றும் பிள்ளைகள் இருவருமே ஆசீர்வதிக்கப்படுவார்கள். சரி அல்லது தவறின்மீதான தங்களது பற்றுகள் மற்றும் தங்கள் சொந்த மனநிலைகளானது தங்கள் பிள்ளைகளிடத்தில் ஒன்றில் சாதகமாகவோ அல்லது பாதகமாகவோ, அவர்களது பிறப்பில் இயல்புகளைப் பதியப்பண்ணிட உதவிடும் என்று பெற்றோர்கள் கற்றுக்கொள்வது அவசியம். பொல்லாத பிள்ளைகளுடைய பெற்றோர்கள் பிள்ளைகளினுடைய இந்தப் பொல்லாப்பிற்குத் தாங்களே அதிகக் காரணம் என்று உணர்ந்துகொள்ள வேண்டும். முறையாய்த் தகவல் அறிந்த நிலையிலும், சரியாய் விருப்பங்கொண்டிருந்த நிலையிலும் இருந்திருப்பார்களானால் பெற்றோர்கள் மிக அதிக அநுகூலமுள்ள மனநிலையுடன் உள்ள பிள்ளைகளைப் பெற்றிருந்திருக்கமுடியும். பிள்ளையின் பிறப்பில் அதனிடம் பதியவைக்கப்பட்டிருக்கும் இயற்கையான இயல்புகளைச் சரிப்படுத்துவதற்கு அதிகளவிலான பயிற்றுவித்தல் அவசியம். உண்மையில் அந்தச் சரிப்படுத்தப்படவேண்டிய இயல்பில் மிகச் சிறுபாகம் மாத்திரமே இந்த ஜீவியத்தில் ஒழிக்கப்படமுடியும்.

"அசுத்தமானதிலிருந்து சுத்தமானதைப் பிறப்பிக்கத்தக்கவன் உண்டோ? ஒருவனுமில்லை" (யோபு 14:4) எனும் வேதவாக்கியத்தினை நாங்கள் மறந்துபோகவில்லை. இதை நாங்கள் நினைவில்கொண்டிருக்கின்றோம். மேலும் அபூரணப்பாவியும், துர்க்குணத்தில் உருவாகி, பாவத்தில் கர்ப்பம் தரிக்கப்பட்டதுமான பிள்ளையானது கொஞ்சமோ, அதிகமோ பாவகரமான இயல்புகளைப் பெற்றிருக்கக்கூடும் என்று மாத்திரமே நாம் கூறுகின்றோம். பிள்ளைப் பிறப்பதற்கு முன்னதாகச் செயல்படுத்தப்படும் செல்வாக்குகளின் விஷயத்திலும், பிள்ளைகள் பிறந்த பிற்பாடு அவர்கள் விஷயத்திலுள்ள பெற்றோருக்குரிய கடமைகள் விஷயத்திலும், பாரமான பொறுப்பானது பெற்றோர்கள்மீது காணப்படுகின்றது என்று நாம் தெரிவிக்கின்றோம்.

குழந்தையைப் பிறப்பித்திடும் ஆற்றல்களானது எத்தகைய ஜாக்கிரதையுடனும், தேவன் மற்றும் நீதிக்கான எத்தகைய உண்மையுடனும், இருதயத்தின் தூய்மையும், அருமையான குணலட்சணமும் தக்கவைக்கப்படுவதற்கான எத்தகைய வாஞ்சையுடனும் செயல்முறைப்படுத்தப்பட வேண்டும்! கர்ப்பக்காலத்தின்போது தாயானவளின் மனஅமைதிக்கு, சந்தோஷத்திற்கு, சமாதானத்திற்கு, நீதிக்கு, பயபக்திக்கு, அன்பிற்கு உதவிகரமாய் இருக்கும் நல்செல்வாக்குகளினால் தாயானவளைச் சூழ்ந்திருக்கப்பண்ணுவதில் தகப்பன் எத்துணை ஜாக்கிரதையாகக் காணப்பட வேண்டும்! இப்படிச் செய்தால், உலகமானது இன்னமும் அபூரண நிலையிலும், பாவத்தினால் கறைப்பட்ட நிலையில் தொடர்ந்து இருக்கின்ற நிலையிலும்கூட எத்தகைய நற்குணமுள்ள மனுஷர்கள் பிறப்பிக்கப்படுவார்கள்! ஒருவேளை பெற்றோர்கள் இந்தக் கொள்கைகளை அடையாளம் கண்டுகொண்டும், தங்கள் பொறுப்புகளை உணர்ந்துகொண்டும், அவைகளுக்கிசைவாய் ஜீவித்தும் இருப்பார்களானால், இப்பொழுது நாம் எத்தகைய வேறுபட்ட ஓர் உலகத்தில் ஜீவித்துக்கொண்டிருந்திருப்போம்! மரணமானது எல்லா வாய்ப்புகளுக்கும் முற்றுப்புள்ளி வைக்காததற்காய்த் தேவனுக்கு நன்றி! இக்காலத்தில் ஏமாற்றங்கள் மற்றும் கண்ணீர்கள் வாயிலாகக் கற்றுக்கொள்ளப்படும் படிப்பினைகளானது அநேக விதத்தில் எதிர்காலத்தில் பிரயோஜனமாய் இருக்கும் என்று நாங்கள் நம்புகின்றோம்.

**2HG 226** [தெரிந்தெடுக்கப்பட்ட பத்தி]

கர்த்தருடைய ஜனங்களில், குடும்பங்களின் தலைவர்களாகக் காணப்படுபவர்கள், தங்கள் குடும்பங்களில் தாங்கள் கர்த்தருடைய பிரதிநிதிகளாக அல்லது ஆசாரியர்களாக இருக்கின்றனர் என்றும், தினந்தோறும் குடும்ப ஜெபத்தில் தூபவர்க்கம் ஏறெடுப்பதற்குச் சிலாக்கியம் பெற்றிருக்கின்றனர் என்றும், ஜெபம் ஏற்றுக்கொள்ளப்பட்டதை உணரவும், ஜெபத்தின் சுகந்த வாசனையை இயேசுவின் புண்ணியத்தினால் தேவன் முன்னிலையில் எழும்பப்பண்ணுவது மாத்திரமல்லாமல், இப்படியாகக் குடும்பத்தின் அங்கத்தினர்களுக்கும் முன்னிலையில் தாங்கள் குடும்பத்தின் இயற்கையான தலைவர்களாய் இருக்கின்றனர் எனச் சாட்சி பகிரவும் சிலாக்கியம் பெற்றிருக்கின்றனர் என்றும் நினைவில்கொள்ள வேண்டும்; இன்னுமாகக் கர்த்தர் இவர்களின் தலையாய் இருக்கின்றார் மற்றும் கர்த்தரின் ஞானமும், மேற்பார்வையுமே ஜீவியத்தின் அனைத்துக் காரியங்களிலும் - பூமிக்கடுத்த மற்றும் ஆவிக்கடுத்த காரியங்களிலும் நாடப்படுகின்றது என முன்வைக்கவும் சிலாக்கியம் பெற்றிருக்கின்றனர் என்றும் நினைவில்கொள்ள வேண்டும். பெற்றோர் தங்களது சிலாக்கியங்களையும், வாய்ப்புகளையும் இப்படியாகப் பயன்படுத்துதலின்மூலம் ஆசீர்வாதமானது பெற்றோர்மீது மாத்திரம் கடந்துவராமல், இன்னுமாக ஒருவேளை திவ்விய ஆளுகையானது அங்கீகரிக்கப்பட்டு, அதற்கு அடிபணியப்படும்போது வீட்டாரின் அங்கத்தினர்களுக்கும் பிரதி ஆசீர்வாதமானது கடந்துவருகின்றது. இத்தகைய குடும்பங்களில் ஒழுங்கின்மையின் ஆவியானது மிகமிகக் குறைவாகக் காணப்படும் - அதாவது திவ்வியத் தலைமைத்துவமும், ஆளுகையும் அங்கீகரிக்கப்படாத குடும்பங்களில் காணப்படும் ஒழுங்கின்மையின் ஆவியானது இங்கு மிகமிகக் குறைவாகக் காணப்படும்.

**2HG 765** [தெரிந்தெடுக்கப்பட்ட பத்திகள்]

நம்முடைய சக மனிதர்களை நாம் கையாளும் விஷயம் அனைத்திலும், நீதி அவசியமென்பது பகுத்தறிவுள்ள மனங்கள் யாவருக்கும் ஏற்புடையதாயிருக்கும். அது தேவனுடைய நியாயப்பிரமாணம் முழுவதையும் உள்ளடக்குகின்றதாய் இருக்கின்றது. அந்த நியாயப்பிரமாணத்தின் சுருக்கமாய்க் காணப்பட்டு, நமது கர்த்தரின் அங்கீகரிப்பைப் பெற்ற அந்த வார்த்தைகள், "உன் தேவனாகிய

கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும் உன் முழு ஆத்துமாவோடும் உன் முழுப் பலத்தோடும் உன் முழுச்சிந்தையோடும் அன்புகூர்ந்து, உன்னிடத்தில் அன்புகூருவதுபோலப் பிறனிடத்திலும் அன்புகூருவாயாக" (லூக்கா 10:27) என்பதேயாகும். இந்த இரண்டு கோரிக்கைகளிலும் நியாயப்பிரமாணமும், தீர்க்கத்தரிசிகளும் முழுமையாய் உள்ளடங்குகிறது. முதலாவதாக நமது சிருஷ்டிகரை நாம் அடையாளம் கண்டுகொள்ள வேண்டும்; நமக்கு ஜீவனையும், அதன் ஆசீர்வாதங்கள் யாவையும் கொடுத்தவரை நாம் மகிமைப்படுத்திட வேண்டும்; நமக்கும், மற்றவர்களுக்கும் மகிழ்ச்சியினை உண்டுபண்ணும் அவரது நீதியான கோரிக்கைகளுக்கு நாம் கீழ்ப்படிதல் உள்ளவர்களாய் இருக்க வேண்டும். மற்றவர்கள் நம் உரிமைகளை அடையாளம் கண்டுகொள்ள வேண்டுமென நாம் விரும்புவது போன்று, நாம் மற்றவர்களுடைய உரிமைகளையும் அடையாளம் கண்டுகொள்வது சரியே. பொன்னான பிரமாணம் என்பது வெறும் நீதியே ஆகும். "நியாயஞ்செய்யுங்கள்" எனும் நமது ஆதார வசனத்தில் இடம்பெறும் வார்த்தை முன்வைக்கும் காரியங்களுக்குக் குறைவானதைச் செய்யும்படிக்கு நாம் கொஞ்சம்கூட அனுமதிக்கப்படுகிறதில்லை. வாருங்கள் சேர்ந்து காரியங்களை நிதானித்துப்பார்க்கலாம். நம்மில் எத்தனை பேர்கள் ஜீவியத்தின் காரியங்கள் அனைத்திலும், நமது தேவன் மற்றும் நமது அயலார்கள் விஷயத்தில் - நீதி செய்திருக்கின்றோம்?

குடும்பத்திலிருந்து துவங்கலாம். ஒவ்வொருவனும் தன் பெற்றோர்களிடத்தில், தன் குழந்தைகளிடத்தில், தன் சகோதரரிடத்தில், தன் சகோதரிகளிடத்தில், தன் கணவனிடத்தில், தன் மனைவியினிடத்தில் தன்னால் பேசப்பட்ட வார்த்தைகளையும், தன்னால் செய்யப்பட்ட கிரியைகளையும் ஆராய்ந்துபார்ப்பானாக. ஜீவியத்தில் நமது உறவுகள் அனைவரின் விஷயத்திலும், இப்படி நமக்கு மிக நெருக்கமானவர்களாகவும், மிக அருமையானவர்களாகவும் காணப்படுபவர்களை நாம் நீதியினுடைய கொள்கைகளுக்கு ஏற்ப, பொன்னான பிரமாணத்திற்கு ஏற்ப நடத்துகின்றோமா? அவர்கள் நமக்குச் செய்ய வேண்டுமென்று நாம் விரும்புபவைகளை, நாம் அவர்களுக்கும் செய்கின்றோமா? ஒருவேளை இல்லையெனில், கர்த்தரோடு உறவுகொள்ள துவங்கின பிற்பாடு, அவருக்குக் கனத்தைக் கொடுக்கவும், அவருக்குக் கீழ்ப்படியவும் நாடினபிற்பாடு, குடும்பத்திலும், ஜீவிதத்திலும் உள்ள ஒவ்வொரு வார்த்தைகளையும், ஒவ்வொரு கிரியைகளையும் நாம் கூர்ந்து கவனிப்போமாக மற்றும் எந்தளவுக்கு அவைகள் சரிசெய்யப்படலாம் மற்றும் நீதியாய்க் காணப்படத்தக்கதாகக் கொண்டுவரப்படலாம் என்று பார்ப்போமாக. பெரும்பான்மையான ஜனங்கள் மாம்ச உறவுகளில் மிகவும் நெருக்கமானவர்களிடத்திலும், அருமையானவர்களிடத்திலும் தாங்கள் எவ்வளவு அநீதியாய் நடந்திருக்கின்றனர் என்று கண்டுபிடிக்கும் போது அதிர்ச்சியடைவார்கள் என்பதில் உறுதியே.

இதோடுகூட உங்கள் அயலார்களின் விஷயங்களில், உங்கள் கூட்டாளிகளின் விஷயங்களில் அன்றாட ஜீவியத்தில் உங்கள் வார்த்தைகள் மற்றும் கிரியைகள் நீதியாய் அல்லது அநீதியாய் இருந்துள்ளதாவெனக் கவனியுங்கள். ஒருவேளை அவர்கள் உங்கள் ஸ்தானத்திலும், நீங்கள் அவர்கள் ஸ்தானத்திலும் இருந்திருந்தால், அவர்கள் பேசியிருப்பது சரி என்று ஒருவேளை உங்களால் அங்கீகரிக்கப்படக்கூடிய அதே வார்த்தைகளை, அதே தொனியில் மற்றும் பாவனையில், நீங்கள் அவர்களிடம் பேசுகின்றீர்களா? தொழில் விஷயத்தில் மற்றவர்கள் உங்களிடம் செய்திட்ட எந்தளவுக்கான பேரம் நீதியானது என்று உங்களால் கருதப்படுமோ, அந்தப் பேரத்தைத்தான் நீங்கள் அவர்களிடம் பண்ணுகின்றீர்களா? இல்லையேல் ஒருவேளை நீங்கள் பொருள் வாங்குபவராகவும், அவர்கள் பொருள் விற்பவராகவும் இருந்தால், பொருட்கள் மற்றும் வேலைகளுக்குமான நீதியான கூலியென்று அவர்கள் கேட்க வேண்டுமென உங்களால் கருதப்படும் கூலியினைத்தான் நீங்கள் அவர்களிடத்தில் கேட்கின்றீர்களா அல்லது அதிகமான விலையினைச் சொல்கின்றீர்களா? ஒருவேளை உங்களுக்குத்

தோட்டம் ஒன்றிருந்தால், அதில் அயலானின் கோழி வந்து நாசம் செய்யாதபடிக்கு அவன் கவனமாயிருக்க வேண்டுமென்று நீங்கள் விரும்புவதுபோன்று, நீங்களும் உங்கள் கோழிகள் உங்கள் அயலானின் தோட்டத்தில் நாசம் செய்யாதபடிக்குக் கவனமாய்க் கவனித்துக்கொள்கின்றீர்களா? உங்கள் அயலான் உங்கள் முகத்தின் முன் புகையினை ஊதக்கூடாது என்று நீங்கள் விரும்புவது போன்று, நீங்களும் அயலானின் முகத்தில் புகை ஊதவே கூடாது என்றிருக்கின்றீர்களா? உங்கள் இல்லத்தில் அயலான் பிரவேசிக்கையில், அவன் காலைத் துடைத்துக்கொண்டு வரவேண்டும் என்று நீங்கள் விரும்புவது போன்று, நீங்களும் அயலானின் இல்லத்தில் பிரவேசிக்கையில் காலைத் துடைத்துக் கொண்டு செல்கின்றீர்களா? சகல மனுஷர்களையும், ஸ்திரீகளையும், பிள்ளைகளையும் மற்றும் விலங்குகளையும் அன்பாயும், கனிவாயும் நடத்துகின்றீர்களா? அதாவது அவர்கள் உங்கள் ஸ்தானத்திலும், நீங்கள் அவர்கள் ஸ்தானத்திலும் இருந்தால், அவர்கள் எப்படி உங்களை நடத்துவது நீதியாய், நியாயமாய் இருக்குமென நீங்கள் கருதிடும் தகுதியான விதங்களில், அவர்களை நீங்களும் நடத்துகின்றீர்களா? உங்கள் அயலான் உங்களைக் குறித்து இரக்கமாய்ப் பேசவேண்டும் என்று நீங்கள் விரும்புவது போன்று, நீங்களும் உங்கள் அயலானைக்குறித்து இரக்கமாய்ப் பேசுகின்றீர்களா? அல்லது உங்கள் குறைகளைக் குறித்து அயலான் ஏளனமாய்ப் பேசக்கூடாது என்று நீங்கள் விரும்புவது போன்று, நீங்களும் உங்கள் அயலானின் குறைவுகளைக் குறித்து ஏளனமாய்ப் பேசாமல் இருக்கின்றீர்களா? ஒருவேளை நீங்கள் உங்களது அயலானின் ஸ்தானத்திலும், அயலான் உங்கள் ஸ்தானத்திலும் காணப்பட்டிருந்தால், உங்களைக் குறித்து அயலான் எக்காரியங்களைப் பேசுவது தகுதியானது என்று நீங்கள் கருதுவீர்களோ, அக்காரியங்களையே உங்கள் அயலானின் விஷயத்திலும் நீங்கள் பேசத்தக்கதாக உங்கள் நாவுகளின் மீது கவனமாய் இருக்கின்றீர்களா?

**3HG 824** [தெரிந்தெடுக்கப்பட்ட பத்திகள்]

## இயற்கை விதியானது ஆவிக்குரிய தளத்தில் சம்பந்தப்படுத்தப்பட்டுள்ளது

"பின்னும் நான் சொல்லுகிறதென்னவெனில், சிறுக விதைக்கிறவன் சிறுக அறுப்பான், பெருக விதைக்கிறவன் பெருக அறுப்பான்." (2 கொரிந்தியர் 9:6)

பொதுவாகவே இந்த வசனமானது எல்லோருக்கும் பொதுவான விதத்தில் பொருத்திப் பார்க்கப்படுகின்றது, எனினும் இது கிறிஸ்தவர்களுக்கு மட்டும் குறிப்பாய்ப் பொருந்துகின்றதாய் இருக்கும். எல்லோருமே தாங்கள் விதைப்பதற்கேற்ப அறுப்பார்கள் என்றாலும், தேவனுக்குத் தங்களை முழுமையாய் அர்ப்பணம்பண்ணியுள்ளவர்களாகவும், பரிசுத்த ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்டவர்களாகவும் காணப்படும் கிறிஸ்தவர்கள் மாத்திரமே ஆவியில் விதைக்க முடிகிறவர்களாய் இருப்பார்கள்; மேலும் இவர்கள் மாத்திரமே இப்பொழுது நித்திய ஜீவனா அல்லது மரணமா எனும் பரீட்சையில் காணப்படுகின்றனர். வெகுசிலர் மாத்திரமே ஆவிக்குரிய விதத்தில் விதைப்பவர்களாகக் காணப்பட்டு, ஆவிக்குரிய அறுவடைகளை அறுக்கின்றவர்களாய் இருக்கின்றனர்; பெரும்பான்மையான ஜனங்கள் மாம்சத்தின் அடிப்படையில் விதைக்கின்றனர்; மேலும் விதை நல்லதாகவோ அல்லது தீமையாகவோ இருப்பதற்கு ஏற்ப அறுவடையை அறுப்பார்கள் - சிலர் நற்பண்புகளையும், சிலர் இழிவான பண்புகளையும் அறுவடையாய் அறுப்பார்கள்.

ஆதாம் சிருஷ்டிக்கப்பட்ட நிலைமையினின்று மனுஷன் இவ்வளவாய் விழுந்துபோயுள்ளான்; ஆகையால் "அந்தப்படியே: நீதிமான் ஒருவனாகிலும் இல்லை; உணர்வுள்ளவன் இல்லை; தேவனைத் தேடுகிறவன் இல்லை; எல்லாரும் வழிதப்பி, ஏகமாய்க் கெட்டுப்போனார்கள்; நன்மைசெய்கிறவன் இல்லை, ஒருவனாகிலும் இல்லை" (உரோமர் 3:10-12) என்று அப்போஸ்தலன் கூறினதுபோன்று சொல்லிடலாம். பரிசுத்த ஆவியாய், பரிசுத்த மனமாய் அல்லது மனப்பான்மையாய் இருப்பதற்குப் பதிலாக, விழுந்துபோன மனுஷனுடைய மனமானது பெருமளவில் அசுத்தமானதாகவும், திருக்குள்ளதாகவும், அபூரணமாகவும் காணப்படுகின்றது. ஆனால் உலகத்தினின்று வெளியேறினவர்கள், கிறிஸ்துவின்மீதான விசுவாசம்மூலம் மற்றும் தங்களையே தேவனுக்கு ஒப்புக்கொடுத்ததன்மூலம் தேவனுடைய பிள்ளையாகியுள்ளவர்கள், அவரது பரிசுத்த ஆவியை, அவரது மனதை அல்லது மனப்பான்மையைப் பெற்றிருக்கின்றனர்; மேலும் இதை அவர்கள் எந்தளவுக்குத் தங்கள் ஆண்டவரின் அடிச்சுவடுகளைப் பின்பற்றித் தேவனுடன் நெருக்கமாய் ஜீவிக்கின்றார்களோ அந்தளவிற்குப் பெற்றுக்கொள்வார்கள்.

இந்த அளவிற்கு ஏற்ப இந்த வகுப்பார் "ஆவியில் விதைக்கிறவர்களாயிருந்து," கிறிஸ்துவின் குணலட்சணத்தை, பரிசுத்த ஆவியின் கனிகளை அறுவடை செய்வார்கள். தம்முடைய ஜனங்கள் ஆவிக்கென்று விதைப்பவர்களாய் மாத்திரம் இராமல், அதிகமாய் விதைக்க வேண்டும் என்றும் கர்த்தர் சித்தமாய் இருக்கின்றார். இது விஷயத்தில் நீதியின் ஒரு கொள்கை காணப்படுகின்றது. "நீ என்ன செய்தாலும் அதைக்குறித்து நீ கவலைப்பட வேண்டாம். நான் உன்னை மன்னித்து எல்லாவற்றையும் சரிசெய்துவிடுவேன். நீ அபூரணமானவன் என்பதை நான் அறிவேன்" என்று தேவன் சொல்லுகிறதில்லை. இல்லை! யாரெல்லாம் நல்ல விதைகளை விதைக்கிறார்களோ, அவர்கள் இதற்கேற்ப ஆசீர்வாதங்களை அறுவடை செய்வார்கள்; ஆனால் தீமையான விதைகளை விதைப்பவர்கள், இதற்கேற்ப தீமையையே அறுவடை செய்வார்கள் எனும் கொள்கைகளானது தொடர்ந்து செயல்பட்டுவருகின்றது. கிறிஸ்தவன் தன்னால் முடிந்ததைச் செய்கையில், அவனுடைய வேண்டுமென்று இல்லாத தப்பிதங்களைக் கிறிஸ்துவின் புண்ணியமானது மூடுகின்றது; ஆனால் கிறிஸ்துவின் புண்ணியமானது ஒருவன் விதைக்கிற விஷயத்தில், அவன் என்ன விதைக்கிறான் எனும் காரியத்தில் கொண்டிருக்கும் அசட்டையை, அஜாக்கிரதையை அல்லது பொறுப்பற்ற தன்மையை மூடுகிறதில்லை."மனுஷன் எதை விதைக்கிறானோ, அதையே அறுப்பான்."

## காரணமும், விளைவும் எனும் மாறா விதி

இப்பொழுது தேவனுடைய பிள்ளைகளாகியுள்ளவர்கள் தாங்கள் உலகத்தைவிட்டு வருவதற்குமுன்னதாக, விழுந்துபோன மனுஷீக சுபாவத்தினுடைய சித்தத்திற்கிசைவாகத் தாங்கள் ஜீவித்தபோது, நல்லப் பலன்களையும், சந்தோஷத்தையும் கொடுக்குமெனத் தாங்கள் எதிர்பார்த்த காரியங்களானது மோசமான பலன்களையும், எதிர்ப்பார்ப்புகளினுடைய அதிருப்தியையும் கொண்டுவந்ததைக் கண்டிருக்கின்றார்கள். இன்னுமாகத் தங்கள் சொந்த சித்தப்படி செய்வது என்பது பொதுவாகவே தீய பலன்களையே கொண்டுவந்தது என்பதையுங்கூடக் கண்டிருக்கின்றார்கள். அவர்கள் தீய எண்ணங்களை விதைத்தார்கள் மற்றும் இந்தத் தீய எண்ணங்கள் இன்னும் அதிகம் தீய எண்ணங்களையே கொணர்ந்தது. தீய எண்ணங்கள் தீய கிரியைகளைக் கொணர்ந்தது மற்றும் இது காலப்போக்கில் தீய குணமாக வளர்ந்தது. ஆரம்பத்தில் விருப்பத்தேர்வாக மாத்திரம் காணப்பட்டவைகள், பிற்பாடு உறுதியான குண இயல்புகளாகின. "சிந்தனையொன்றை விதையுங்கள், அதனால்

கிரியையொன்றை அறுப்பீர்கள்; கிரியை ஒன்றை விதையுங்கள், அதனால் பழக்கம் ஒன்றை அறுப்பீர்கள்; பழக்கம் ஒன்றை விதையுங்கள், அதனால் குணலட்சணம் ஒன்றை அறுப்பீர்கள்; குணலட்சணம் ஒன்றை விதையுங்கள், அதனால் விதியொன்றை அறுப்பீர்கள்" என்று சொன்ன மனுஷன் சரியாகவே சொல்லியிருக்கின்றார். எந்தளவிற்கு அசுத்தமான குணலட்சணம் வளர்க்கப்பட்டுள்ளதோ அந்தளவிற்கு அதை ஒழித்துக்கட்டுவதும், நீதியான குணலட்சணத்தை வளர்த்துவதும் கடினமான காரியமாய் இருக்கும். பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளுக்கு அவர்களது மனங்களுக்கு முன்பாகச் சிறுபிராயங்களிலிருந்தே தூய்மையான, சிறந்த, அன்பான எண்ணங்களை வைத்திடுவதின்மூலம், பெற்றோர்கள் பிள்ளைகளின் விஷயத்தில் தங்கள் பயிற்சியினைத் துவங்க வேண்டும். பிள்ளைகளைப் பரிபூரணர்கள் ஆக்கிடுவது என்பது கூடாத காரியமாக இருப்பினும், பெற்றோர்களால் தங்கள் பிள்ளைகளை உலகத்திலுள்ள தீமைகளினின்று அதிகம் பாதுகாத்திட முடியும். தங்கள் பிள்ளைகளுக்கு ஜீவியத்தில் சரியான துவக்கத்தினை ஏற்படுத்திக்கொடுப்பதின்மூலம் பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளுக்கு, நித்திய காலமும் பிள்ளைகளால் நன்றி ஏறெடுக்கப்படக்கூடிய சொத்தினைக் கொடுக்கின்றவர்களாய் இருப்பார்கள். தங்கள் பிள்ளைகளுடைய மனங்களை வனைந்திடும் விஷயத்தில் தங்களுக்கு எத்தகைய வல்லமையிருக்கின்றது என்று ஒருவேளை தாய்மார்களினால் அறிந்துகொள்ள முடியுமானால், அவர்கள் எத்தனை ஜாக்கிரதையாய்க் காணப்படுவார்கள்! சாபமாய் இருப்பதற்குப்பதிலாக ஆசீர்வாதமாய்க் காணப்படும் நற்குணமுள்ள, நல்லொழுக்கமுள்ள பிள்ளைகளைத் தாங்கள் உலகில் கொண்டுவரத்தக்கதாகப் பெற்றோர்கள் தங்கள் சொந்த மனநிலைகளையும், மனப்பான்மைகளையும் எத்துணை ஜாக்கிரதையாய்க் காத்துக்கொள்வார்கள்.

ஒருவேளை தாயானவளைத் தீய உணர்வுகளானது கட்டுப்படுத்திக் கொண்டிருக்குமானால், ஒருவேளை தீய எண்ணங்கள் மனதில் வைத்திருக்கப்படுமானால், பிள்ளையானது இத்தகைய தீய இயல்புகளோடுதான் பிறக்கும்; பின்னர் நற்குணத்தை வளர்த்திடுவதற்குப் பிள்ளையானவன் எவ்வளவுதான் கடினமாய் முயற்சித்தாலும், அவனுக்குக் கர்ப்பக்காலத்தின்போது பெற்றோர் வாயிலாய்க் காணப்பட்டிருந்த தகுதியற்ற செல்வாக்குகளின் விளைவுகளோடு ஜீவிதக்காலம் முழுவதும் போராட்டம் இருக்கும். இத்தகைய உண்மைகளானது நமக்கு நீண்ட காலத்திற்கு முன்னமே தெரியாமல்போனது, எத்தகைய வருந்தத்தக்கக் காரியமாகும்!

இது விஷயத்தில் தகப்பன்மார்களுக்கும், விசேஷித்தப் பொறுப்புக் காணப்படுகின்றது. நற்குணமுள்ள பிள்ளையைப் பிறப்பிக்க வேண்டுமானால், தகப்பன்மார்கள் நற்குணமுள்ளவர்களாக இருப்பது மாத்திரம் போதாது, கூடுமான மட்டும் தாயானவளுக்குத் தகுதியான ஐக்கியங்களும், நல்லச் சூழ்நிலைமைகளும், நல்லப் பராமரிப்பும், கவனிப்பும் கிடைக்கத்தக்கதாகவும் பார்த்துக்கொள்ள வேண்டும். இப்படியான விஷயங்களெல்லாம் நல்லக் குதிரைகள், நாய்கள் முதலியவைகளை இனப்பெருக்கம்பண்ணுவதில் கவனிக்கப்படுமானால், நம்முடைய பிள்ளைகளுக்கு நல்ல நிலைமையில், பெற்றோர் காணப்படத்தக்கதாகப் பார்த்துக்கொள்வது என்பது எத்தனை அதிகம் முக்கியத்துவம் உடையதாய்க் காணப்படும்!

## பிள்ளையைச் சரியாய்ப் பயிற்றுவித்தல்

சிந்திக்கிற ஜனங்கள் அனைவரும் இப்பாடத்தினால் எழுச்சியடைந்து கூடுமானமட்டும் மனரீதியிலும், ஒழுக்கரீதியிலும், சரீரரீதியிலும் மோசமான நிலையில் காணப்படும் பிள்ளைகளைப்

பிறப்பிக்காமல் இருப்பார்களாக. குழந்தையின் மனோநிலை உருவாகும் விஷயத்தில் கர்ப்பக்காலத்தின் போதான பெற்றோர்களின் தகுதியான செல்வாக்குகளின் முக்கியத்துவத்தினை நாம் பலமாய் வலியுறுத்துகின்றோம். ஆனாலும் பிள்ளையின் பிறப்போடு பெற்றோரின் பொறுப்பானது முற்றுப்பெறுகிறதில்லை. பிள்ளையின் முழு ஜீவியத்திற்கும் மேற்பார்வை தேவைப்படுகின்றது. மீண்டுமாகப் பிள்ளையானவன் சக விளையாட்டுத் தோழர்களுடனும், நாய்போன்ற பிராணிகளிடத்திலுங்கூட அநீதியாய் நடந்துகொள்ளாதபடிக்குத் தாயானவள் கவனித்துக்கொள்ள வேண்டும். சரீரத்தைச் சுத்தமாய் வைத்துக்கொள்வதும் மற்றும் மனதைச் சுத்தமாய் வைத்துக்கொள்வதும் குறித்தும் அவள் கற்பித்துக்கொடுக்க வேண்டும். ஒருவேளை இவ்விஷயங்களிலெல்லாம் அவள் அஜாக்கிரதையாய் இருப்பாளானால், தான் என்ன செய்தாலும் அதினால் ஒன்றும் இல்லை எனும் எண்ணத்தினைப் பிள்ளையானவன் பெற்றுக்கொள்வான்; இப்படியாக அநீதியாய் வாழ்வதற்கும், அசுத்தமாய் ஜீவிப்பதற்குமான வாய்ப்புப் பெரிதும் அதிகரித்திடும்.

இந்த விஷயங்கள் அனைத்திலும் விசேஷித்த விதமான பொறுப்பானது கிறிஸ்தவ பெற்றோர்களின்மீது காணப்படுகின்றது. தேவனின் நிர்வாகத்தினுடைய கொள்கைகளை நாம் காணவருகையில் நம்முடைய மனங்களானது நீதி, நியாயம், இரக்கம், அன்பின் எண்ணங்களினால் நிரம்பிட வேண்டும். இந்த எண்ணங்களானது நம்முடைய பிள்ளைகள்மீது பிரதிபலிக்கப்பட வேண்டும்; இப்படியாக அவர்கள் தேவனால் கற்பிக்கப்படுவார்கள். ஒருவேளை அவர்கள் தேவனுடைய ஆவியில் ஜெநிப்பிக்கப்பட்ட பிள்ளைகளாக ஆகாமலிருக்கலாம், எனினும் எந்தவொரு ஜீவ தளத்திலும் நித்திய ஜீவனை அடையும் அனைவருமே இந்தப் பரிசுத்த ஆவியை, மனதைப் பெற்றிருக்க வேண்டும். ஒருவேளை ஒரு பிள்ளையானவன் இயல்பாகவே சாந்தமானவனாக இல்லையென்றால், ஒருவேளை சாந்தத்தின் விஷயத்தில் கர்ப்பக்காலத்தின்போதான அதன் வளர்ச்சிப் புறக்கணிக்கப்பட்டிருந்ததானால், பிள்ளைக்குச் சாந்தத்தைக்குறித்துக் கற்பிக்கப்பட வேண்டும். முரட்டுத்தனமும், பிடிவாதமும் எவ்வளவு கேடானதாய் இருக்கின்றது என்று பிள்ளைக்குக் காண்பித்துக் கொடுக்கப்பட வேண்டும். கருணை மற்றும் இரக்கத்தின் அழகானது பிள்ளைக்கு முன்பாக எடுத்துக் காண்பிக்கப்பட வேண்டும். ஜீவியத்தினுடைய ஆரம்ப வளர்ச்சிக்குரிய வருஷங்களில்/வயதுகளில் பிள்ளையானவன் சரியாய் நடத்தப்பட்டானானால், சீக்கிரத்தில் அவன் இந்த நல்லக் கொள்கைகளைத் தன் மனதில் பதியப்பெற்றுக்கொள்வான். சாந்தம், தயவு, பொறுமை, நீடிய பொறுமை, இரக்கம், அன்பு, ஆகிய இந்தப் பண்புகளானது பெற்றோர்களால் தங்களுக்குள்ளாக ஜாக்கிரதையாய் வளர்த்திக்கொள்ள வேண்டிய பண்புகளாகும். இவைகள் தேவனுடைய ஆவியின் பண்புகளாகும். மேலும் இவற்றை தம் பிள்ளைகள் அனைவரும் ஐசுவரியமாய் வளர்த்திக்கொள்வதற்குத் தேவன் எதிர்ப்பார்க்கின்றார். ஒரு கிறிஸ்தவன் தேவனுடைய பிள்ளையாகிடுவதற்கு முன்பாக, எவ்வளவுதான் மோசமான பழக்கங்களைப் பெற்றிருந்தாலும், அவன் பிற்பாடு கூடுமானமட்டும் குணங்களில் தன்னிடத்தில் காணப்படும் விரும்பத்தகாத இயல்புகளைத் தெய்வீகக் கிருபையினால் ஒழித்துக்கட்டும்படிக்குப் பரமபிதா எதிர்ப்பார்க்கின்றார். அவன் தன் தோட்டத்திலிருந்து விஷமுள்ள களைகளைப் பிடுங்கி எடுப்பதுபோல் இந்த விரும்பத்தகாத இயல்புகளைத் தோண்டி வேரோடு பிடுங்கி எடுக்க வேண்டும். பின்னர் இவைகளுக்குப்பதிலாக அருமையானவைகளையும், கனிகொடுக்கிறவைகளையும் அவன் நட வேண்டும். சாந்தம் எத்துணை அழகான அலங்காரமாய் உள்ளது! அகங்காரமும், இறுமாப்பும் எத்தனை தகுதியற்றதாய் இருக்கின்றது!

இந்த அருமையான குணலட்சணமானது பெற்றோரினால் வெளிப்படுத்தப்படும்போது, இது - மிகச் சீக்கிரத்தில் கிரகித்துக்கொள்ள முடிகிறவர்களாகவும், பொதுவாகவே நீதியையும், நிலையான முன்மாதிரியையும் கூர்ந்து கவனிக்க முடிகிறவர்களாகவும் காணப்படும் பிள்ளைகளினால் கவனிக்கப்படும். விரைவாய்ப் பெற்றோரிலுள்ள இந்த அருமையான குணலட்சணமானது பிள்ளைகளிடத்தில் பலனைக்கொண்டுவரும் - அதாவது இது விஷயத்திலுள்ள தங்கள் பொறுப்பினைப் பெற்றோர்கள் உணர்ந்துகொள்வதற்கு முன்னதாக, பிள்ளைகளில் ஒருவேளை அதன் குணம் ஸ்திரமடையாமல் இருந்தால், பெற்றோரிலுள்ள இந்த அருமையான குணலட்சணமானது பிள்ளைகளிடத்தில் பலனைக்கொண்டுவரும். சந்தேகத்திற்கிடமின்றி இன்றைய காலங்களில் பரவலாய்க் காணப்படும் பெற்றோரை அவமதித்திடும் காரியமும், பெற்றோர்களை அவர்களது வயோதிப காலத்தில் கவனியாமல் புறக்கணிக்கும் காரியமும் . . . ஆரம்பக்காலங்களில் பெற்றோர்கள் வெளிப்படுத்தின அசட்டையின் பலனேயாகும். அநேகம் பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளை அவர்களது சிறு பிராயங்களிலேயே சரியாய்ப் பயிற்றுவிக்கத் தவறினதின் பலனையே இன்று அறுவடைப்பண்ணிக் கொண்டிருக்கின்றனர். அநேகம் சந்தர்ப்பங்களில் நல்ல விதைகளுக்குப்பதிலாக, தீமையான விதைகள் பிள்ளைகளினுடைய மனதில் விதைக்கப்படுகின்றன; இன்றைய நாட்களில் அத்தகைய விதைத்தலின் மோசமான பலனானது வெளிப்படுகின்றது. சிலரின் சந்தர்ப்பங்களில் மிகக்குறைவாய் விதைக்கப்பட்டு, அதற்கேற்ப மிகக்குறைவாகவும் அறுவடை செய்யப்படுகின்றது.

ஆமென்!!

---

## அட்டவணை


| ரீப்பிரிண்ட்ஸ் எண் | பக்கம் |
|---|---|
| 797 | 62 |
| 934 | 89 |
| 940 | 87 |
| 1096 | 245 |
| 1142 | 212 |
| 1275 | 86 |
| 1551 | 10 |
| 1554 | 1 |
| 1671 | 232 |
| 1882 | 227 |
| 1963 | 209 |
| 2004 | 206 |
| 2068 | 127 |
| 2073 | 207 |
| 2100 | 59 |
| 2279 | 217 |
| 2319 | 201 |
| 2337 | 226 |
| 2345 | 79 |
| 2365 | 229 |
| 2388 | 198 |
| 2488 | 55 |
| 2558 | 191 |
| 2590 | 74 |
| 2665 | 114 |
| 2688 | 96 |
| 2747 | 57 |
| 2766 | 192 |
| 2782 | 148 |
| 2847 | 230 |
| 2880 | 239 |
| 2885 | 240 |
| 2895 | 235 |
| 2902 | 193 |
| 2984 | 25 |
| 2991 | 189 |
| 3088 | 23 |
| 3093 | 225 |
| 3107 | 129 |
| 3110 | 147 |
| 3148 | 185 |
| 3204 | 78 |
| 3267 | 216 |
| 3325 | 184 |
| 3393 | 223 |
| 3462 | 183 |
| 3593 | 221 |
| 3598 | 181 |
| 3607 | 142 |
| 3710 | 179 |
| 3786 | 123 |
| 3805 | 77 |
| 3826 | 37 |
| 3921 | 179 |
| 3971 | 241 |
| 4019 | 84 |
| 4090 | 171 |
| 4093 | 101 |
| 4097 | 33 |
| 4115 | 102 |
| 4190 | 45 |
| 4192 | 222 |
| 4199 | 103 |
| 4268 | 254 |
| 4277 | 256 |
| 4399 | 150 |
| 4401 | 242 |
| 4458 | 54 |
| 4521 | 170 |
| 4697 | 139 |
| 4716 | 131 |
| 4749 | 31 |
| 4752 | 140 |
| 4776 | 126 |
| 4823 | 137 |
| 4834 | 81 |
| 4837 | 165 |
| 4839 | 162 |
| 4854 | 20 |
| 4871 | 110 |
| 4899 | 49 |
| 4911 | 229 |
| 4917 | 81 |
| 4942 | 220 |
| 4959 | 132 |
| 4977 | 63 |
| 5093 | 105 |
| 5135 | 201 |
| 5167 | 236 |
| 5186 | 93 |
| 5214 | 170 |
| 5223 | 128 |
| 5229 | 109 |
| 5245 | 77 |
| 5250 | 164 |
| 5287 | 168 |
| 5296 | 218 |
| 5318 | 243 |
| 5353 | 119 |
| 5475 | 161 |
| 5487 | 161 |
| 5498 | 111 |
| 5523 | 125 |
| 5555 | 105 |
| 5571 | 158 |
| 5612 | 156 |
| 5613 | 138 |
| 5650 | 152 |
| 5700 | 153 |
| 5832 | 221 |
| 5859 | 151 |
| 5900 | 120 |
| 5903 | 150 |
| 5905 | 71 |
| 5908 | 215 |
| 5954 | 82 |
| **பாஸ்டர் ரசல் அவர்களின் பதில்கள்** | |
| Q54:1 | 257 |
| Q54:2 | 257 |
| Q55:1 | 259 |
| Q55:2 | 259 |
| Q57:1 | 261 |
| Q58:1 | 262 |
| Q59:1 | 263 |
| Q59:2 | 263 |
| Q129:6 | 274 |
| Q130:1 | 274 |
| Q144:1 | 277 |
| Q459:1 | 274 |
| Q459:2 | 263 |
| Q483:2 | 275 |
| Q497:2 | 276 |
| Q541:1 | 264 |
| Q648:2 | 273 |
| Q661:2 | 278 |
| Q673:2 | 278 |
| Q673:3 | 279 |
| Q685:1 | 271 |
| Q685:2 | 272 |
| Q685:3 | 271 |
| Q803:2; Q825:2 | 273 |
| **மற்றக் கட்டுரைகள்** | |
| OV 212 | 281 |
| OV 229 | 283 |
| 1HG 650 | 288 |
| 2HG 226 | 290 |
| 2HG 765 | 290 |
| 3HG 824 | 292 |



**பிரதிகள் தேவைப்படுவோர் தொடர்புக்கு:**

**8428737474; 9442221874**


கல்வி
மனைவி
தகப்பன்
அண்ணகர்கள்
தொழில்
ஏற்றதுணை
பெற்றோர்கள்
நற்சாட்சி
முன்மாதிரி
தேவபக்தி
கொடுங்கோல்
சாமுயேல்
பொறுப்பு
நிச்சயதார்த்தம்
ஒழுக்கம்
கணவன்
பிரச்சனைகள்
விசுவாசவீட்டார்
குழந்தைகள்
யாக்கோபு
அந்நிய நுகம்
உறவினர்கள்
சொத்து
குடும்ப ஜெபம்
அடக்குமுறை
முன்னேற்பாடு
நாட்டங்கள்
பொன்னான பிரமாணம்
பயிற்சி
தலைமைத்துவம்
அவிசுவாசியான
ஊழியம்
கடமைகள்
குடும்பத்தலைவன்
புதுச்சிருஷ்டி
குடும்பம்
வாலிபர்கள்
பூமிக்குரிய நன்மைகள்
ஆவிக்குரிய நன்மைகள்
யோசபாத்
உக்கிராணத்துவம்
அண்ணகர்கள்
பராமரிப்பு
சிம்சோன்
சிட்சை
அப்சலோம்
மோசே
விவாகரத்து
கடமைகள்
அந்நிய நுகம்
உபத்திரவ காலம்
அனுதாபம்
திருமணம்
நற்பிறப்பு
பூலோக மணவாளன்
நாட்டங்கள்
விருந்தோம்பல்